T. 1347

கடவுள் துணை.

KADIRAVEL PILLAI'S

TAMIL DICTIONARY.

தமிழ்ச் சொல்லகராதி.

(மூன்றும் பாகம்).

இது,

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமான
சே. ரா. சுப்பிரமணியபக்தவிராயரால்
பரிசோதிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—அ-ஙா

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

துந்துபிஸ்ரீ மாஸிமீ கஅஉ

விலை ரூ 6-0-0.

Copyright.] 1923. [Reserved.

முகவுரை

இவ்வகராதியின் முதலிரண்டு பாகமும் வெளியிட்டபின் யாழ்ப்பாண திருவாவடுதுறை யாதீனத்திற் பல ஆண்டு தங்கியிருக்க நேர்ந்தமையாலும், மறுபடி யான் இங்குவந்து இம்மூன்றும்பாகத்தை விரைவில் வெளியிடக்கருதி அச்சிட்டுவருங்கால் 1920-ம்வரு ஜூன்மீ 20உ சங்கத்தில் நேர்ந்த தீவிபத்தில் இம்மூன்றும் பாகத்தில் தா-முதல் நகரம் வரையுள்ள அச்சிட்ட பாகந்தவிர, அச்சிடுவதற்குப் பரிசோதித்துவைத்திருந்த அசலும் நகலும் ஆகிய காகிதக்கையெழுத்துப்பிரதிகள் முழுவதையும் இழந்துவிட்டமையாலும், ப. ம. ய. வ. எனற அக்கரவர்க்கச்சொற்களடங்கிய அவ்விழந்த பாகத்தைப் புதிதாய்த்தேடிச் சேர்த்துப் பரிசோதித்து வெளியிடத்தொடங்கியபொழுது, நம், சங்க அச்சியந்திரசாலையில் வேண்டிய எழுத்துக்கள் போதுமானஅளவு வாராதிருந்தமையாலும், பின் இப்புத்தகம் அச்சிடுவதில் எனக்கு உதவியாயிருந்தவர் விலகிக்கொண்டமையால் யான் ஒருவனே சொற்களைத்தேடிப் பொருள் கண்டெழுதுதல், ஒப்புநோக்குதல், திருத்துதல், எழுதுதல் முதலிய எல்லாவேலைகளையும் கவனிக்கவேண்டியிருந்தமையாலும் இதனை வெளியிட இத்தனையாண்டு தாமதமேற்பட்டதென்பதை மிக்க விசனத்துடன் தெரிவித்துக்கொள்ளின்றேன். உலகில் வழங்குஞ் சொற்களும் பொருள்களும் அளவில்லனவாதலால், யாரெருவரும் என்சிற்றறிவுக்கியன்றவரை பதங்களும் பொருள்களுந்தெரிந்து இத்தமிழ்ச்சொல்லகராதியின் மூன்றும்புத்தகமாகிய இதனில் வெளியிட்டிருக்கின்றேன். இனிப்பேரறிவுடைய பெரியோர்கள் இன்னும் விரிவாகக் கண்டெழுதி வெளியிட்டுலகிற்குபகாரமாகச்செய்யவேண்டுமென வேண்டுகின்றேன்.

இப் பெருங்காரியத்தை இடையேநேர்ந்த இடையூறெல்லாமகற்றி நிறைவேற்றி வைத்த எல்லாம்வல்ல இறைவனை மனமொழிமெய்களால் நினைந்துவாழ்த்திவணங்குகின்றேன்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.
துன்முகிவரு மாசிமீ உஅ

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

தன்மன்—1. இயமன். 2. தருமராசன். (உ-ம்) "தன்மனையம்மனைதம்பிமா." (பாரத. வேத்திர. கூடி.) 3. திப்பிலிமூலம். (மலையக.)

தன்மாத்திகாயம்—சமணமதத்திற் சொல்லிய அசீவபதார்த்தத்தின் நான்குவகையுள் ஒன்றுடிய புற்கலத்தின்வேறும் நன்மைபயப்பதோரத்திகாயம். (சிவஞாபா.) (மணிமே.)

தன்மாத்திரை—பிருதிவியாதி பஞ்சபூதங்களுக்குக் காரணங்களாயும் அவற்றிலுஞ் சூக்மங்களாயுமிருக்கும் தத்துவங்கள்; அவை—கந்தம், இரதம், உருவம், பரிசம், சத்தமாகிய தத்துவ சமூகம். (பௌட். கூ: அ.) [அந்தந்த இந்திரியங்களுக்குத் தக்கபடி நின்று காரியப்படுகையாலும், அப்படிக் காரியப்படுத்துமிடத்துத் தத்தங்குணங்களுக்கு ஏற்றக்குறைவின்றி நிற்றலாலும், தன்மாத்திரையெனப் பெயர்பெற்றன.]

தன்மானுகிருதிலக்கணை—சிவனைச் சிவனென்றுற்போலுமோரிலக்கணை. (சி. சி. ச. உ. ஞாபப்.)

தன்மானுமானம்— பூர்வகாட்சி யதுமானம். (இதனை சி. சி. க. அளவை. கஉ-காண்க.)

தன்மி—தன்மத்தை யுடையது. (உ - ம்.) "தன்மபேதத்தாற்றன்மிபேதிக்கும்" (சி. சி. க: கூகூ. ஞாபப்.)

தன்முன்—மூத்தசோதரன். (உ-ம்.) "தன்முன்றனக்கென்றிருந்தமக-ளாம்." (திருவிளை. தண்ணீர். கூ.)

தன்முலம்—திப்பிலிமூலம். (உ-ம்.)"பத்திரதாருகமரத்த - சித்திரகந்தன்மூலம்" (தைலவ. தைலவ. உஉ.)

தன்மேம்பாட்டுரை—ஓரலங்காரம். அஃது ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து சொல்வது. (உ-ம்.)"தான்றற்புகழ்வதுதன்மேம்பாட்டுரை" (தண்டி. எ0.) இது நெடுமொழியென்பர். (பிங்கலந்தையில்.)

தன்மேம்பாடு—தற்புகழ்ச்சி.(தண்டிய.எ0.)

தன்மை—1. அழகு. (சூ. நி. கக: னகரவெ. ககூ.) 2. ஓரலங்காரம். (உ-ம்.) "எவ்வகைப் பொருளுமெய்வகைவிளக்குஞ் - சொன்முறை தொடுப்பதுதன்மையாகும்." (தண்டி. உஎ.) 3. குணம், இயல்பு. (உ-ம்.) "ஒருகால்வெம்மைத்தன்மைகுன்று - தவன்" (மரு-தி. கூ.) 4. நன்மை. 5. பெருமை. 6. மூவிடத்தொன்று. (உ-ம்.) "தன்மைமுன்னிலைபடர்க்கை மூவிடனே" (நன். உகூகூ.) (4, 5-பிங்கல. ஈகூஉஉ.)

தன்மைநிரிபெயர்—அலி.(உ-ம்.)"தன்மை நிரிபெயருறுப்பின்கிளவி" (தொல். சொல். ருகூ.)

தன்மைநவிற்சியணி—தன்மையணி.(குவல. கஈ.)

தன்மையெழுத்து—உணர்வெழுத்து,அது, செவிப்புலனுடிய வொலியெழுத்து. (பிங்கல. உ0அஎ.)

தன்மொழி—ஒருமொழி. (பி. வி. உகூ. உரை.)

தன்வசம்— } தன்னிலைமை, சுவாதீனம்.
தன்வயம்— }

தன்வந்தரி— 1. ஒரு வைத்தியசாத்திரி அவன் திருப்பாற்கடல் கடையும்போதுண்டான தேவர் மருத்துவன்; இத்தேவர் மருத்துவனே ஆயுர்வேதத்தைவெளிப்படுத்தவேண்டித் தீர்க்கதமன் புத்திரனுக அவதரித்தானென்பர். (அபிதானகோசம்.) 2. சிவன். 3. சூரியன்.

தன்வினை—1. ஊழ்வினை, தான் முற்செய் வினை. 2. எழுவாய்க்கருத்தாவின் புடை பெயர்ச்சியாய் நிகழுந்தொழில், தன்னிலையதொழில்.

தன்வேதனை— } மாறதக் காட்சி
தன்வேதனைக்காட்சி— } விசேடம் பற்றி மேம்பட்டுநிகழுஞ் சத்துவகுணமுதலியவற்றின் விளக்கமாகிய இன்பதுன்பங்கள் புருடனதறிவிற்கு விடயமாம்படி அராகமுதலிய வைந்து தத்துவங்களானும் புணர்க்கப்படுமதனையுயிரினேதுணர்வு தெரிவது. (சி. சி. அளவை. எ. சிவஞா.)

தன்னயமாதம்—சிறுகாஞ்சொறி. (மலையக.)

தன்னந்தனி— தனிமையின் மிகுதிப்பாட்டை யுணர்த்திநிற்கும் ஒரு தொடர்மொழி. (உ-ம்.) "தன்னந்தனியிருப்பார்க்கு"(அபிராமியந். கூ.)

தன்னநுமானம்—தற்பொருட்டநுமானம். (சி. சி. க: சு. ஞாபப்.)

தன்னம்—1. அற்பம். 2. பசுவின் கன்று. (க, உ. சூ. நிக. கக: ரகரவெ. உ.)

தன்னமை—1. அழகு. 2. குணம். 3. பெருமை. (பிங்கல. ஈகூஉ.) 4. தன்மையிடம். (உ-ம்.) தன்மை முன்னிலை. (நன்னூல். பெயரி. ஆ.)(1. 2. 4. சூ. நிக. கக: னகரவெ. ககூ.)

தன்னாண்காத்தல்—எண்வகை வெற்றியினொன்று. இதனை நொச்சியென்பர். (சூ. நிக. கஉ: கஉ.)

தன்னியல்பு—ஒருபொருட்கு வேற்றுப்பொருளினும் தன்சாதிப்பொருளினுஞ்செல்லாது தனக்கு மாத்திரையே யுரித்தாய் நிலை பெறுந்தன்மை. (உ-ம்.) "அந்நியசாதியுந்தன்

சாதியும்கன்றுநிற்ற - றன்னியல்பு." (சி. சி. அளவை. சு.)

தன்னிலை—சுபாவநிலை.

தன்னிறம்—மாந்தளிர்ச்சிலை. (உ-ம்.) வந்து ழிக்காண்க.

தன்னிறமாக்கி—குளவி. (வழக்.)

தன்னினழுடித்தல்— தந்திரயுத்திகளுளொன்று; அஃது-ஒன்றைச்சொல்லுமிடத்து அதற்கினமாகிய மற்றொன்றையும் அதனோடு முடித்தல். (தொல். சொல். கசு. சேநா.)

தன்னினி—வேங்கைமரம். (மலையக.)

தன்னுட்கையாறெய்திடுகிளவி — தலைவி தன்னிடத்துள்ளதுன்பத்தைப் பிறிதொன்றின்மேலேற்றிச் சொல்லுஞ்சொல். (திருக்கோவை. களவ. மூகம்.)

தன்னுண்மை—சொரூபலக்கணம். (சி. சி. க: எ0. சிவஞா.)

தன்னுதோணி— } சிறுவத்தை. (வழக்.)
தன்னுவத்தை— }

தன்னை—1. தமக்கை. (கந்தபு. மார்க்கண். சுக.) 2. தன்னுடைய சுவாமி. (புறப்பொரு.) 3. தாய். (பிங்கல. ககஉ.) 4. மூத்தோன். (உ-ம்.) "பயந்தோன்றன்னை."(அகப்பொ.ஒழி பி. சு.)

தன்னையர்—1. தமக்கையர். (உ-ம்.) "தன்னையரில்லவர்தங்கையரிலராஞேர்." (கந்தபு. மார்க்க. சுக.) 2. தமையன்மார். (உ-ம்.) "நற்றுய்தந்தைதன்னையர்க்கறத்தொடு - நிற்குமென்ப" (அகப்பொ. அகத்தி. சஅ.)

தன்னைவேட்டல்—ஒருதறை; அது-தமது வேந்தன்விசும்பைச்சேர்ந்தாஞக, வெய்யமாறு பாட்டையுடையாஞெருவீரன் உயிரை ஆஞ்சி பண்ணியது. (புறப். வெண்.)

தனகல்—உள்ளக்களிப்புறல். (உ-ம்.)"அருத்திவாழ்வொடுதனகியமனைவியுமுறவோரும்" (திருப்பு. ககக.)

தனது—1. உள்ளக்களிப்பு. 2. தெரிநிலவினைப்பகுதி.

தனதுதல்— 1. உள்ளங்களித்தல். 2. சரசஞ்செய்தல்.

தனத்தனம்—ஒருவகைச்சதிக்குறி. (உ-ம்.) "தனத்தனந்தன தனதனதன வென்சதிக்கிசைந்திடநடமிடுசெதரன்." (சிவதரு. க: ருஉ.)

தனது—1. உரிமை. (வழக்.) 2. தன்னுடையது. [தான்+அ+து.]

தனவலு—ஆச்சாமரம். (மலையக.)

தனவை— } சிறுகாஞ்சொறி. (வைத்
தனவையாதம்— } திய மூ. அகராதி.)

தலுது—தன்னுடையது. [தான்+ஆது. ஆறும்வேற்றுமையுருபு.]

தனி—1. ஒப்பின்மை. (உ-ம்.) "தனிமுதல் சடையிற்சூடும்." (நைடத. காப்பு.) 2. ஒற்றை. 3. கலப்பில்லாதது. 4. சுத்தம். (3. 4-வழக்.) 5 தனித்த இடம்.(உ-ம்.) "சுனைப்பா-லொண்டனியிருந்தோர்புலியன்பெரிதுறங்க." (கோயிற்பு. இரணிய. ஙக.) 6. தனிமை, தூனையின்மை. (உ-ம்.) "இன்னே - தனிதரும்." (திருக்கோ. கூஅ.) 7. தனிமைப்பொருள். (உ-ம்) "தன்னையொப்பாரைப்பில்லாத்தனியை நோக்கி" (திருவாச. புணர்ச்சி. எ.) 8. தெரிநிலவினைப்பகுதி.

தனிச்சொல்—1. ஒருமொழி. 2. செய்யுளில் ஒருசீராய் வந்துநிற்பது. (உ-ம்.) "சீரியவான்றனிச்சொல்லடிமூய்ச்செப்பலோசை குன்றுது." (யாப். காரிகை. செய். ஙு.)

தனிசு—கடன். (சீவகசி.)

தனித்தல் — உதவியற்றிருத்தல். (உ-ம்.) "தனித்தேங்குவாள்." (இராமா. கரன்வ. கூ.)

தனித்துருமம் — மூங்கில். (ஆவத்தியமூ. அகராதி.)

தனிநிலை—1. ஆய்தவெழுத்து. (உ-ம்.) "தனிநிலைபத்துஞ்சார்பெழுத்தாகும்." (நண். எழுத். ருு.) 2. தனித்துநிற்கை. 3. தத்துவங்களுடன்கூடாது கடந்துநிற்றல்.

தனிப்பாடு—முத்தகம், தனித்துநின்று முடிவதாகிய ஒற்றைக்கவி.

தனிப்பாடு—தனிப்பு. பாடு-தொழிற்பெயர் விகுதி. நன்னூல்-பதவியல். அன் ஆன் என்ற சூத்திரவுரை.

தனிப்பு—தனிமை.

தனிப்புடம்—ஒருருக்கை. (உ-ம்.) "தனிப்புடமண்டிலமேகபாதம்"(சிலப். வேனிற். உடு. உரை.)

தனிமை—1. உவமையின்மை. 2. ஏகாந்தம். (உ-ம்.) "தனிமைசான்றசவுகன்"(சேதுபு. இராமதீர். ச.) 3. தனிப்பு.

தனிமையாற்றல் — வணிகரெண்குணத்தொன்று. (பிங்கல. எஎக.)

தனிமொழி-1. இருவகைச்சொற்களுளொன்று; அது-சமயவாற்றலாற் பொருள்விளக்குவது. (தொல். சொல். க. சேநா.) 2. தனியேநிற்குஞ்சொல். 3. பிரணவம். (கந். நவ. கூ.)

தனியன்—தனித்தவன். (உ-ம்.) "தன்றனைத்தானுணர்ந்திடுங்காற்முன்றனியன்."(சேதுபு. இராமனரு. கசடு.)

தனியுப்பு—அமுரி. (வைத்தியபரிபா.)

தணிவல்லி— } குப்பைமேனி.
தணிவல்லிப்பெருமாள்-- } (மலையக.)
தணை—அளவு. (சூ. நிக. அ: கூக.)

தா.

தா—1. குற்றம்.(திருமூற்றந்-கூக.) 2. கேடு. (உ-ம்.) "தாவிலாவுருவாகியோர்தாஙவண்முளை த்தான்." (திருவிளை. மாயப். ச.) 3. தாண்டு தல், பாய்தல். இது, முதனிலைத்தொழிற் பெ யர். 4. தெரிநிலை வினைப்பகுதி. 5. பகை. (சூ. நிக. அ: கஉ) 6. பரப்பு. (உ-ம்.) "தவ் வென்றசைஇத்தாதுளிமறைப்ப." (நெடுநல். கஅநி.) 7. வருத்தம். (உ-ம்.) "தாவில்கொள் கைத்தக்தொழின்முடிமார்." (திருமுரு. அக.) 8. வலி. (உ-ம்.) "தாவினன்பொன்." (புறநா. கநூஉ.)

தாஅம்—பரக்கும். (ஐங்குறு. உ0அ.)
தாஅய்—பரந்து. (ஐங்குறு கூஉஅ.)
தாஅய—பரந்த. (மதுரைக்.)
தாஅயது—கடந்தது. (உ-ம்.)"தாஅயதெல் லாமொருங்கு." (வள். சுக0.)

தாஅஞட்டிந்தஞதுநிறுப்பு- எழுவகைமத த்தினொன்று; அது - தானேயொருபொருளே யெடுத்துகாட்டிவருமிடந்தோறு நிறுத்துதல். (உ-ம்.) "தாஅஞட்டித்தஞதுநிறுப்பே."(நன். கக.)

தாகீக—மோத. (ஐங்குறு.)

தாகீகணங்து—1. இலக்குமி. (உ-ம்.)"தாக் கணங்கமர்ந்தமார்பிற் றண்டுழாய்முகுந்தன்." (கூர்மபு. தக்கன்வேள். ச.) சிந்தாமணியில், எல்லாரிடத்திலுஞ்சென்று தங்குந்திரு என் மூர். 2 தீண்டவருத்துந்தெய்வம். (சிலப். அரும்பத.)

தாக்கம்—எதிர்தாக்குதல். (அம்-தொழிற் பெயர் விகுதி.)

தாக்கல்—1. எதிர்த்தல். (சூ.நிக. கு: சஎ.) 2. தாக்குதல், அடிததல். (உ-ம்.) "தண்டாயு தம்." பார். 3. வெட்டல். (உ-ம்.) "அருஞ் சமந்ததையத்தாக்கி." (புறநா. கஉசு.)

தாக்காட்டுதல்—1. எமாற்றுதல். 2. பராக் குக்காட்டுதல். (1. 2. வழக்.)

தாக்து—1. அடி. (உ-ம்.) "தாக்குபாவியர் தங்ளைத்தண்டித்தே." (சிவரக. நந்திகேசுரர் நமனு. நி.) 2. அதிர்ச்சி. 3. இடம். 4. எதிர் தாக்குதல். 5. கணம். (உ-ம்.) "தாக்குரலடி கொள்யானைத்தரணிபர்."(பாரத. நிரௌபதி. கச.) 6. தெரிநிலை வினைப்பகுதி. (உ-ம்.) "சந்திரசூரியரங்கிதாக்குகதிரினம்." (சிவரக. கணபதிகுமரன். எ.) 7. போர். (சூ. நிக. கு: சசு.) 8. வலி. 9. வேகம். (ஏனையவற்றிற்குதா ரணம் வந்துழிக்காண்க.)

தாக்குதல்—1. அடித்தல். "தண்டாயுதம்." பார். 2. எண்கூட்டிப்பெருக்கல். (உ-ம்.)"அன் றவன் சொன்னநாளி லாதிரைவரையு மெண் ணி-நின்றதோரேழிற்முக்கிநேர்படவெட்டுக்கீ ந்தால். (சோதிடவிடுகவி.) 3. கனத்தல். 4. எதிர்த்தல், எதிர்ப்படுதல். (உ-ம்.)"மன்றவெற் றுக்குதலின்." (மலைபடு. சுசு.) 5. தள்ளல். 6. பாய்தல். (உ-ம்.) (வள். சஅசு.) 7. முட் டுண்ணல். 8. மோதல். (உ-ம்.) "தலைப்பட வெழுக்களிற்றண்டிற்முக்கினர்." (கந்தபு. தரு மகோபன்வதை. உகூ.) 9. வெட்டுதல். (புற நா.)

தாககம்—சுடுதலைச்செய்வது, சுடுவது.

தாகசுரம்—ஒரு சுரம். (வழக்.)

தாகநம்—தகனம். (சி. லி. கிரியாபா. கடு. உரை.)

தாகம்—1. ஆசை. (உ-ம்.) "அங்கவடனை யிதயத்திற் - முகமொடுறநினைத்தனைசார்குவை யாயில்." (சிவரக. தாருக. கக.) 2. எருது. 3 சுடுதல். (சி. சி. க: சுகூ. ஞாநப்.) 4. நீர் வேட்கை. (உ-ம்.) "அடும்பசிதாகமுங்கொடி தாலென." (திருவிளை. நாகமெய்த. எ.)

தாகமடக்கி—புளியாரை. (மலையக.)

தாகித்தல்—தாகங்கொள்ளல். (உ-ம்.) "தா கித்த இடத்திற்முனே நீரிருக்கவுமதனை யுண் ணுது" (கூர்மபு. திருக்கல். சக. உரை.)

தாங்கல்—1. குளம். (சூ. நிக. கு: உகூ.) 2. சகித்தல். (உ-ம்.) "அசுரன்மகன்முங்கல் செல்லா - நீளாகுலத்தில்." (கந்தபு. பானுகோ பன்வதை. சo.) 3. சுமத்தல். (உ-ம்.) "தாங் கரியபெருங்கருணைத்தன்மையினல்." (கோ யிற்பு. பதஞ்சலி. எ.) 4. தாங்குக. (சிந்தா.) 5. தாங்குதல். (உ-ம்.) "ஓங்குயர்நெடுவரை யொன்றிநின்றது- தாங்கலதிருநிலந்தாழ்ந்து" (இராமா. சடாயுகாண்.கூ.)6. பிடித்தல்.(உ-ம்) "சாயவார்குழலொருகை கலையொருகையுறத் தாங்கி." (கோயிற்பு. பதஞ்சலி. கசு.) 7. விச நப்படுகை, வருந்தல். (வழக்.) (உ-ம்.) தாங்கித் தேடி-(திருவிளை. விருத்தகுமார. உகூ.)8. வில க்கிச்செல்லுதல். (உ-ம்.) "களிறுபரந்தியலக் கடுமாதாங்க." (பதிற்றுப். சகூ.)

தாங்கி—1. ஆதாரம். (உ-ம்.) "சுமைதாங்கி" (வழக்.) 2. கம்மற்பூண்டு. 3. பனிதாங்கி. 4. தடுத்தது. (புறநா.) 5. பணிகளின்கடைப்பூட்டு. 6. பூண். (சூ. நிக. எ: நக.) 7. மேலதாங்கி. 8. வருந்தி. (உ-ம்.) "தாங்கித்தேடி." (திரு

வீளை. விருத்தகுமார. உக.) (2, 3, 7- வைத்தியபரிபா.)

தாங்து—தாங்கல்.

தாங்குதல்–1. ஆதரித்தல். (வழக்.) 2. காத்தல். (உ-ம்.) (திருவாச. நீத்தல்வி. க.) 3. செஞ்சல். (வழக்.) 4. சகித்தல். (உ-ம்.) "அளப்பிலசெற்றந்- தாங்கியுயிர்ப்பொடுதக்கனிருந்தான்." (கந்தபு. திருமண. சசு.) 5. சுமத்தல். (சூ. நிக. கு: நிகு.) 6. தரித்தல். (உ-ம்.) "நீறு தாங்கியதிருநுதலானே." (சுந்தர. திருத்தினை நக. க.) 7. தாமதித்தல். (திருவால. திருவீளை.) 8. தோணிதள்ளல். (வழக்.) 9. பொறுத்தல். (உ-ம்.) "அகழ்வாரைத்தாங்குநிலம்போல." (வள்-கருநக.) 10. வருந்தல். (உ-ம்.) "தாங்கித் தேடி." (திருவீளை. விருத்தகுமார. உக.) 11. விலக்கல். (உ-ம்.) "தலைவந்த - போர்தாங்குந் தண்மை." (வள். எசுஎ.) 12. தடுத்தல். (பரிபாடல்.)

தாங்துநர்—புரப்பார். (உ-ம்.) "தண்கடல் வரைப்பிற்றாங்குநர்ப்பெறுது" (பெரும்பா.சஅ)

தாச்சா—மூந்திரிகை. (வைத்தியபரிபா.)

தாச்சி—சோனைப்புல். (மலையக.)

தாசத்துவம்—அடிமைத்தனம்.

தாசநம்பி—சாத்தாதவன். இது வைணவர் வழக்கு.

தாசநேறி—தாதமார்க்கம். (சி. சி. அ: கஅ. சுப்பிர.)

தாசபாலநம்–தயாவிருத்திபதிஞண்டிஞன்று; அஃது அடிமைகாத்தல். (தயாவிருத்திபார்.)

தாசமார்க்கம்—சரியைநெறி; அது-திருக்கோயிலினுட்டிருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பத்திரபுஷ்பமெடுத்து மாலைமுதலியகட்டுதல், தோத்திரஞ்செய்தல், திருவிளக்கேற்றுதல், நந்தவநம்வைத்தல், சிவனடியாரைக்கண்டால் வழிபடுதல் முதலியனவாம். (சி. சி. அ: ககூ. சுப்பிர.)

தாசர்—1. அடிமைகள். 2. நெய்தநிலமாக்கள். (உ-ம்.) "தாசர்தங்குலத்துக்கதிபதியளித்ததையலை." (பாரத. குருகுல. கூக.)

தாசரதி — தசரதபுத்திரனுகிய இராமன். (பி. வி.)

தாசரி–1. தாதன். (வழக்.) 2. மலைப்பாம்பு. (வைத்திய பரிபா.)

தாசன்—1. அடிமை. 2. தாதன். 3. மீன்பிடிகாரன். (பாரத. குருகுல. கூக.)

தாசா—உற்சாகம். [இந்துஸ்.]

தாசி—1. அடிமை. (வி-ணி.) 2. கழுதை. (இராசவைத்.) 3. நாடகக்கணிகை. (உ-ம்.) "ஆனவற்புதமெய்த்தவத்தாலிவராதிதாசியரையடைந்தாரென்பாள்." (சிவரக. தேவ்நாட்டியம். உ0.) 4. பரணிநாள். (பிங்கல. உசகூ.) 5. மருதோன்றி. (மலையக.)

தாசியர்—சேடியர். (சிந்தா.)

தாசூரன்—ஒருமுனிவர். (உ-ம்.) "சரலோமாவின்மைந்தன்றூசூரப்பெயர்மூனிவன்." (ஞாநவா. தாசூர. நுசு.)

தாசேகரம்— } ஒட்டகம். (சூ. நிக. கூ.
தாசேரம்— } உகூ)

தாசோகம்—நானடியேன். (சி. சி. அ: ககூ, சிவாக்.)

தாசோகம்பாவனை — நான்தாசனென்று பாவிக்கும்பாவனை. (சி. சி. கூ: எ. ஞாநப்.)

தாட்கம்—கொடிமுந்திரிகை.(வைத்தியமூ. அகராதி.)

தாட்கோரை—ஒரு புல்.

தாட்சண்ணியம்—
தாட்சணம்—
தாட்சணியம்—
தாட்சண்ணை— } கண்ணேட்டம்.

தாட்சம்—கொடிமுந்திரிகை. (மலையக.)

தாட்சாயணி—1. இருபத்தேழு நட்சத்திரப்பொது. 2. உரோகணிநாள். 3. தக்கன் மகள். (உ-ம்.) "தக்கன்றன்குமாரிதாட்சாயணி தவயோகத்தாலே," (மச்சபு. அஷ்டோ. கக.) [இது-உமையினவதாரத்தொன்று.]

தாட்டன்—ஆண்குரங்கு.(வைத்தியபரிபா.

தாட்டாந்தம்—திருட்டாந்தத்தைக் கொண்டது.

தாட்டாந்திகம்—திருட்டாந்தத்தான்முடிக்கப்படுவது. (சைவப்பி. கூஅ.)

தாட்டி—1. ஆண்மாரி, மூர்க்கமுடையவள். 2. கெட்டிக்காரி. (1. 2-வழக்.)

தாட்டிகம்—1. அசந்தை. 2. வலிமை.

தாட்டுதல்—கடத்தல். (வழக்.)

தாட்டோட்டம்—
தாட்டோட்டு— } எத்து. (வழக்.)

தாட்பாள்—கதவடைக்குந்தாள். (வழக்.)

தாடகம்—1. நீர்முள்ளி. 2. வீழி. (1. 2 மலையக.)

தாடகை—ஓரரக்கி, மாரீசன்றாய். (உ-ம்.) "தாடகையென்பதச்சழக்கிராமமே." (இராமா. பாலகா. தாடகைவதை. உசு.)

தாடங்கம்—தோடு, இது காதணி. (பிங்கல. கஎசு.)

தாடநம்—1. அடித்தல். 2. தட்டல்.

தாடபத்திரம்—ஒரு காதணி.

தாடாண்மை–முயற்சி. (தாளாண்மை என்

ரூஉ.)
ாளன்–முயற்சியுள்ளோன். (கந்தரலங்.

ம்—1. ஆசு, விரலுறை. (சிந்தா.) 2. கழுத்திற்றொங்குவது. 3. மாடுமுதலிய ன் கழுத்தாரம். 4. மீசை. (உ-ம்.) "கலை நப்பிற்கோடிக்காதளவோடுந்தாடி" (திரு மாபாத. உஉ.) 5. மோவாய். (உ-ம்.) ற்றுடிமருள்படுபூங்குழல்." (மணிமே. நம். ககசு.) 6. மோவாய்மயிர். 7. சத்தி ர. (வைத்தியபரிபா.)
டமஞ்சம் — சத்திக்கொடி. (பிங்கல.

டிமம்—1. சிற்றேலம். (மலையக.) 2. ாதளா. (பிங்கல. உஎஉ.)
டிரி—கண்டங்கத்திரி. வைத்தியபரிபா.)
டை—தாடி.
ண்டகசீசநீதம்— தாண்டகவடிமிக்குஞ் வடிமிகாதும்வரப்பெற்றசெய்யுள். (சிந்தா)
ண்டகம்—ஒரு கவி இலக்கு-இருபத்தா ழத்தின் மிக்கவடியால்வருஞ்செய்யுள். அ ற்றுண்டக முதலாகப் பலவகைப்படும். ருங்கலவிருத்தி. செய்யுளிய. கூறி.)
ண்டல்—தாண்டுதல். (பிங்கல. உகஅடு.)
ண்டவம்—1. கூத்து. (உ-ம்.) "மருவு குயிராகித் தாண்டவஞ்செய்யாண்டவ ழுத்துவோமே." (சிவரக. சுகமூகி. க.) ர்த்திய தாண்டவமுதற் பலவகைப்படு அபிதானசிந்.) 2. தாவல். 3. செலுத்தல். பிங்கல. கூசுஉச.)
ண்டவன்—சிவன்.
ண்டு—1. கடத்தல். 2. தாவுகின்ற. "தாண்டுமாஞெற்றையாழித்தேரினும்" ிலையா. திருநகரப். எஎ.) 3. தெரிநிலை பகுதி. 4. வெற்றி.
ண்டுதல்—1. ஆடுதல். 2. கடத்தல். பதல். 4. வெல்லுதல்.
ணி–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. தான (வழக்.)
ணித்தல்— } 1. தறைதல். 2. பலப்
ப்பு— } படித்தல்.
ணு—1. குற்றி. 2. சிவன். (உ-ம்.) "தா வயுனேயல்லதாணுவே. (சேதுபு. சிவதீர். 3. தாபரம், புகலிடம். (உ-ம்.) (2) பார். ாண். 5. நிலைபேறு. 6. புவர்லோகத்தி க்கும் மகேச்சுவரரின் மாநசோற்பவரான தசருத்திரரில் ஒருவர். (வி-ணி. உசஉ.) ரதிட்டாகலையிற்றன்மாத்திராதத்துவபஞ் திலிருக்கும் ஐந்து புவனங்களுளொன்று. (சி-லி. கிரியா, உக: உரை.) 8. மலை. (1, 4, 5, 8-ஞ நிக. கக: ணகரவெ. கச.)

தாணுநி–ஒரு பாலாரிஷ்டதேவதை. (வி-ணி. உகஅ.)

தாணுமதி—சுத்ததத்துவத்திலிருக்கும் ஒரு புவனம். (வி-ணி. உஎசு.)

தாணுவட்டகர்—அகங்காரதத்துவத்திலிரு க்கும் சகலண்டாதி யெண்மர். (சி. சி. அ: உ. மறை.)

தாணுயம்-கோட்டைக்குள்ளிருக்கும்படை. [இந்துஸ்.]

தாத்தாரி—நெல்லி. (மலையக.)

தாத்தி—ஆத்தி. (வைத்தியமூ-அகராதி.)

தாத்திரம்—1. கூன்வாள். 2. கோடாலி.

தாத்திரி—1. ஆடுதின்னுப்பாளை. (மலையக.) 2. சுக்கிரன் குமரன். (அபிதானசிந்தாமணி.) 3. நெல்லி. (உ-ம்.) "தாத்திரிகளுஞ்சுரசை." (தைல. தைலவ. கூஅ.) 4. பூமி. (உ-ம்.) "தாத் திரியைப்பெருந்தாழியாக்கி." (அரிச். நாட்.ச.)

தாத்தரு-1. ஆதிப்பிரமனுக்குப்பிறந்த இரு வர்மக்களுள் ஒருவன். (வி-ணி. உருஎ.) 2. துவாதசாதித்தரிலொருவன்.

தாத்துதல்—புடைத்தாற்றிக்கழித்தல்.

தாத்துநசம்—அதுபோல்வது. (சி. சி. க: கங. சிவாக்.)

தாத்துவாசம்—செவ்வியம். (வைத்தியபரி பா.)

தாத்துவிகம்—தத்துவசம்பந்தம். (உ-ம்.) "தாத்துவிகசகலபிரபஞ்சம்." (சி. சி. க: கo. ஞாநப்.)

தாத்நு—நிவர்த்திகலையிற்பிருதிவிதத்துவத் திலிருக்கும் நூற்றெட்டுப்புவநங்களுள் ஒன்று. (சி. லி. கிரியா. உக. உரை.)

தாத்நுப்பியநபகம்-உருவகவணி இரண்ட னுள் ஒன்று. அது - உபமேயத்தில் உபமாநத் தின் செய்கையை ஒற்றுமையின்றி ஆரோபித் தலால் வருவதாகியவதன்செய்கைரூபகம். (குவ ல. டு. உரை.)

தாதகி—1. ஆத்திமரம். (பிங்கல. உஎகஎ.) 2. ஒரு நாடு. (சிந்தா.) 3. பேய்க்கொம்மட்டி. (மலையக.)

தாதச்சி — தாதப்பெண், அடிமைக்காரி. (வழக்.)

தாதநம்—கரிக்குருவி. (வைத்தியபரிபா.)

தாதமார்க்கம்—தாசமார்க்கம். (உ-ம்.) "தா தமார்க்கமென்று." (சி. சி. அ: கஅ.)

தாதர்த்தியேசதுர்த்தி — கொள்வோனெவி ட்டே ஆதிகாரணகாரியம்-மிமித்தகாரணகாரியம் என்னும் இரண்டன்பின்னரும்வருங் குகர

வருபு. (பிரயோக. கசு, உரை.)

தாதரி—ஆடுதின்னுப்பாளை. (வைத்தியபரி பா.)

தாதன்—1. அடிமையாளன். 2. கொடையாளன். (வழக்.)

தாதா—1. தனக்கியன்றதொன்றை வரையாதுகொடுக்குஞ் சிறப்புடையவன். (உ-ம்.) "இரக்கத்தாலாதரவாலேதேனுமீயும் - வரத்தினன்றுதாவாவான்."(சைவச. பொது. சஉஉ.) 2. பாட்டன். [தெலுங்கு.] 3. பிதா. 4. பிரமன். (பிங்கல. கருசு.)

தாதாமீயத்திரயம்–சகசதாதாத்மிகம், பிராந்திஜதாதாத்மியம், கன்மஜதாதாத்மியம். என்பன. (உபநிட. உசா. முகம்.)

தாதாத்மீயம்— } ஒன்றுபட்டிருத்தல், நீங்-
தாதான்மியம்— } காமை.(சி. சி. உ: க. சிவ ஞான.)

தாதி—1. அடியவள். (உ-ம்.) "சிவபூசையின்பேற்றினுலாதி சந்நிதித்தாதியராயினூர்." (சிவரக. தேவிநாட்டியம். உரு.) 2. கைத்தாய். செவிலித்தாய். (உ-ம்.)"ஏந்திவளர்த்திடுந்தாதி தன்னையழைத்திடுதியென." (ஏகாதசி. உருக்குமாங்கதச். கூஉ.) 3. தாசி. 4. பரணிநட்சத்திரம். (3. 4-பிங்கல. கூசுஉரு.)

தாதிமம்—தாதுமாதுளை. (ஆசிரியநிக. சு: கக.)

தாது—1. காவிக்கல். (உ-ம்.) "சாந்துசாய் தடங்கடோறுந்தாதுராகத்திற்சார்ந்த." (இராமா. வரைக்கா. சசை.) 2. கேள்வி. [இந்துஸ்.] 3. சத்ததாது. (உ-ம்.) "பல்வகைத்தாதுவினுயிர்க்குடல்போற்பல - சொல்லாற்பொருட்கிடனுகை." (நன். பெயரி. கச.) 4. தாதுமாதுளை. (வைத்தியமூ-அகராதி) 5. தேன். (உ-ம்.) "ஒங்குவரைமருங்கினுண்டாதுறைக்கும்." (பட்டிந. கருஉ.) 6. நரம்பு. 7. நீறு. (மதுரைக். கூகூக. உரை.) 8. பஞ்சபூதம். 9. பூந்தாது. (உ-ம்.) "தாதவிழ்கடுக்கையன்." (பிரம்மோத். பஞ்சாட். கசு.) நீறு, என்பர் (மதுரைக்காஞ்சியில்.) 10. பூவிதழ். (பிங்கல. உஅகஙூ.) 11. பொன்னுதியேழு. 12. வியாழவட்டமாகிய அறுபதுவருடங்களுட் பத்தாவதாண்டு. (வருஷாதிநூல்.)(8, 11. சூ. நிக. கக: தகரவெ. உக.)

தாதுகந்தம்—கந்தகம். (வைத்தியமூ.)

தாதுகி—செங்கல். (வைத்தியபரிபா.)

தாதுசேகரம்—துருசு. (வைத்தியபரி.)

தாதுமாதுளை–பூமாதுளை. (இதற்குத் தாடிமம் என்று நிகண்டிற் பெயர்கூறுவர்.)

தாதுமாரிணி—பொரிகர்ரம். (வைத்தியபரி பா.)

தாதுரோகம்—ஒரு வியாதி.

தாதுவல்லபம்—பொரிகாரம்.

தாதுவாதம்—கலேஞானம் அறுபத்தெனன்று.

தாதுவாதி—பொன்முதலிய லோகங்பரிசோதிப்போன்.

தாதுவிருத்தி—1. ஒரு நூல். (பி. கம்-எக.)

தாதுவைரி—1. ஏலம். 2. கடுக்காய். தகம். (1, 2, 3-வைத்தியபரிபா.)

தாதி—1. அடியவள். 2. செவிலி 3. பரணி. (பிங்கலநிக-ஙூஉரு.)

தாதை—1. தந்தை. (உ-ம்.) "தாதை னில்விழுந்து." (பாரத. குருகுல. கஙூ பாட்டன். (பிங்கல. கூநி.) 3. பிரமன். ("பொன்னடிபணிந்துவல்லே- யேகியதா (கந்தபு. பிரமயாக சு.) 4. பேய்க்கொ (மலேயக)

தாதைதாதை–பாட்டன். (சூ.நிக. உ:

தாந்தம்–குரு சிட்டி. (ஒ பூடு. வைத

தாந்தன்—தவஞ்செய்தலிலுண்டாகுந் பத்தைச்சகிப்பவன்.

தாந்தி—தன்னடக்கம். (உ-ம்.) "சாந்தி திடுதாக்திமுற்குணங்கள்."(சூத. ஞாநபூ ஙூ.)

தாந்திமம்—பஞ்சேந்திரிய நிக்கிரக

தாந்திரிகம்—1. தந்திரத்திற்கடுத்தது திரத்திற்குரியது. 2. தந்திரத்திற் சொ பட்டது. (உ-ம்.) "திருவானை-கோச். தந்திரம்=ஆகமம்.

தாந்திரிகன்—தந்திரத்திற் கைவந்தவ

தாநகம்—1. கொத்துமல்லி. (வைத்தி பா.) 2. பரதத்தின் பொதுவிலக்கணங்க இருபது பேதங்களுளொன்று. (உ-ம்.)" கரகேத்திரங்கரகரணந் தாகமே சுத்த (திருவிளை. மாறியாடின. அ.)

தானசுத்தி—பஞ்சசுத்தியிலொன்று, இருக்குந்தாநத்தைச்சுத்திபண்ணல். சி விதியிலறிக. (சைவசமய. ருஙஉ)

தானத்துமணி— சுடுகாட்டுமணி. "கடலகமுடையநம்பி - தாநத்துமணியுங மிரட்டுறத்தோன்றினனே." (சிந்தா. நா ஙூருஅ.) தாநம் - சுடுகாடு.

தாநப்பொருத்தம் — செய்யுட்பொ பத்தினுளொன்று. (வெண்பாப்பாட்.சூ

தாநம்—1. இடம். (உ-ம்.) "அகஙூ நத்தடிவீழ்ந்தலற." (மருதூரந். ருு.) 2 (உ-ம்.) "மாநங்குலங்கல்விவண்மையு மை - தாநந்தவமுமயற்சிதாளாண்மை."(

கூ.) இது-இராசதகுணத்தொன்று. அறமூ றாம். (பிங்கலநி. ஈசுஈகூ.) 3. உபாயநான்கி னொன்று. (உ-ம்.) "சாமபேத-தாநதண்டமெ ஈநிருபர்தருமமுறைமையிற்புகலுந்தகுதி நோ க்கி." (பாரத. கிருட். உ.) 4. கணித எண் ணின்மூறாம். 5. செய்யுட்பொருத்தம் பத்தினு ளொன்று; அது, "குறிலேந்தும்"என்னும் வெ ண்பாப்பாட்டியல் சூ-ம் செய்யுளிற் காண்க. 6. தண்டித்தல். 7. தேவலோகம். (பிங்கல. ஈசுஈகூ.) 8. தேன். (உ-ம்.) வந்துழிக்காண்க. 9. நன்னிலை. (உ-ம்.) "தாநமழியாமைதான டங்கிவாழ்வினிதே." (இனியவை. எ.) 10. தருமம்; அது-நீதிவழியாற் பெற்றபொருளைப் பிரத்தியுபகாரங்குறியாது சற்பாத்திரருக்கன் மீபாடுகொடுத்தல். (சைவப். சுக.) இதனை உத் தமம், மத்திமம், அதமம் என மூவகையாகக் கூறுவர். (சூ. நிக. கஉ: கக. கஉ.) 11. நீராட்டு. 12. யானமதம். (உ ம்.) "செங்கையுமொழுகு வதாநநீராறு." (திருவிளை. நகர. ஈசு.) 13. வலி. (சூ. நிக. அ: உக.) 14. வேட்டல். (7. 14. பிங்கல. ஈசுஈகூ.) (10. 11. சூ. நிக. னகர வெ. ஈ)

தாநவர்—1. அசுரர். (உ-ம்.) "தருப்பொ ழிற்பயில்காலையிற்முநவர்காண." (பாரத. குரு லை. கo.) [ததுபுத்திரர், இது-தத்திதாந்த ரமம்.] 2. வித்தியாதரர். (சிந்தா.)

தாநவன்—1. அசுரன். (உ-ம்.) "தா"பார். 2. சந்திரன். (சூ. நிக. க: ருகூ.)

தாநாகம்—கொத்துமல்லி. (வைத்தியபரி.)

தாநாதிபதி—படைத்தலைவன்.

தாநாபதி—1. தூதன். 2. படைத்தலைவன்.

தாநி—1. இருப்பிடம். 2. கொத்துமல்லி. 3. தாநத்தையுடையது. (நன். உகo. உரை.)

தாநிகம்—கொத்துமல்லி. (மலையக.)

தாநிகன்-ஒருருக்கல்லது இடத்துக்கு அதி பதியாய் மேல்விசாரணைக்காரனு யிருப்பவன். (வழக்.)

தாநிகை—கொத்துமல்லி. (உ-ம்.) "சுத்தி புரிமதஞ்மிகுதாநிகைபலப்பஞ்சிங்கி." (தைல. தைலவ. கஈகூ.)

தாநியம்—1. கொத்துமல்லி. (மலையக.) 2. நெல்முதலியமணிகள். (உ-ம்.) "காயிலேதோ லூன்பலங்-கீழாழாதிவர்தானியவகை."(தைல. தைலவ. உக.)

தாநியாசன்—கோதுமை. (ஒருதேய வழ க்கு.)

தாநியவிலக்குமி—அட்டலக்குமியிலொரு த்தி.) (உ-ம்.) (அட்டலக்குமிபார்.)

தாநியாகம்-கொத்துமல்லி. (வைத்தியபரி.)

தாநியாயர்- விளக்குமுரிந்ததென்முற் போலத் உயின்பெயரதன் தாநத்திற்காவது. (நன். உகo. உரை.)

தாநை—1.ஆடை. (உ-ம்.) "குஞ்சியழகுங் கொடுந்தாநைக்கோட்டழகும்" (நாலடி. கல்வி. க.) 2. ஆயுதப்பொது. 3. காலாட்கள். (உ-ம்.) "சுலவுதாநைதொடர்தரவேட்டஞ்செய்."(அரி ச்ச. வேட்ட. க.) 4. படை. (2, 4-சூ. நிக: கக. னகரவெ-கஉ.)

தாநைமாலை—அகவலோசையிற் பிறழாது உயர்ந்தஅரசர்க்குரிய ஆசிரியப்பாவால் முன்ன ரெடுத்துச்செல்லுங் கொடிப்படையைச் சொ ல்லும் ஒரு பிரபந்தம். (உ-ம்.) "ஆசறவுணர்ந்த வரசர்பாவாற்- றூசிப்படையைச்சொல்வதுதா நைமாலையாகும்." (இலக்கணவி. அசுகூ.)

தாநையர்—சேநாவீரர். (உ-ம்.) "திருமகன் றிருமுன்னேகுந்தாநையர்தலைவன்." (திருவி ளை. மெய்க்கா. உஅ.)

தாப்பிசை— } தாப்பிசைப் பொ
தாப்பிசைப்போருள்- } ருள்கோள்(உ-ம்)
"இடைநிலைமொழியேயீனமீரிடத்தும் - நட ந்துபொருளைநண்ணுதறுப்பிசை" (நன்.சகசு)
[தாம்பு - ஊசல். இசை-சொல். ஊசல்போல் இடைநின்று இருமருங்குஞ்செல்லுஞ் சொல் லென்பது.]

தாப்பு—பொருத்தமான இடம். (வழக்)

தாபகன்—நிலைநிறுத்துபவன்.

தாபசப்பிரியை—கொடிமுந்திரி. (வைத் தியபரிபா.)

தாபசுரம்-சுரரோகம், அறுபத்துநான்கனு ளொன்று; அது-அதிகவெரிச்சல், மிகுசீதளம், நீரருந்தினும் நாவுலரல், மார்பொரிச்சல், நித்தி ரைப்பங்கம் என்னுமிவைமுதலிய குணங்களை யுண்டாக்கும். (சீவரட். சஎ.)

தாபத்திரயம்-மூவகைத்தாபங்கள்; அவை-ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவி கம் என்பன. அவற்றுள் ஆத்தியான்மிகம்-குன் மம், வாதம், அதிசாரம், சுரம், சூலை, இவைமுத லியவற்றாலும், மிருகம், பிசாசம், பறவை, சோரர், இராட்சதர்களாலும் வருந்துக்கமாகிய சரீரசம் என்றும், அருவை, அவமாநம், ஈரிவை இவைமுதலியவற்றால் வருந்துக்கமாகிய மாந சம் என்று மிருதிநப்படும். ஆதிபௌதிகம்- உட்டணம், காற்று,மழை, மின், இடியென்னு மிவைகளால்வருந் துக்கம். ஆதிதைவிகம்-கர்ப் பம், சென்மம், நரை, திரை, அஞ்ஞாநம், மர ணம், நரகம் என்னுமிவைகளால்வருந் துக்கம். (உ-ம்.) "மண்பெண்பொன்னிலைசையுந்தாபத் திரயமவையும்"(சிவரக. சிவதன். கசு. சி.சி. உ:

எசு. சிவாக்.) இவற்றைவேதாந்தசூடாமணியில் தாபத்திரயாக்கினிகளென்பர்.

தாபதநிலை—தபவொழுக்கம். (புறப்பொருள். வெ. பொதுவிய-ச.)

தாபதம்—மூநிவர்வாசம். (உ-ம்.) "தண்டமார்கரியரியிவைதாபதமதன்கட் - பண்டைவான்பகைதீர்ந்தொருதுதையினீர்பருகும்." (சேதுபு. நைமிசா. கசு.)

தாபதவாகை—தபோதனவேடத்தர் புண்ணியத்தோடுதழுவி யொழிதலுணராதநடை. (புறப்பொ. வெ.) தபவொழுக்கம்.

தாபதர்—தபவேடம்பூண்டவர். (உ-ம்.)"நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்-சிலையெடுத்து." (இராமா. சூர்ப். கoக.)

தாபதை—ஒரு பாலாரிஷ்டதேவதை. (வி-ணி. உசுஅ.)

தாபந்தம்—
தாபந்தீரியம்— } வேதநை. (வழக்.)

தாபநம்—தாபிப்பு. (உ-ம்.) "தாவிலாவாகந தாபநசங்நிதாநசங்நிரோதநந்தான்." (சிவரக. பாசமோ. கக.)

தாபநன்—சூரியன் (பிங்கல. உகo)

தாபனி—1. அதர்வணவேத உபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்டமூர் உசு. உரை.)

தாபநீயம்—உபநிடதம் மூப்பத்திரண்டிலொன்று. (கூர்மபு. அட்ட. உசு. உரை.)

தாபம் -1. உட்டணம். (சூ. நிக. அ: சுo.) 2. துக்கம். (உ-ம்.) "தாபத்திரயம்பார்."

தாபமாரி—தான்றி. (மலையக.)

தாபரம்—1. இடம். (பிங்கல. எசுக.) 2. உடல். (சூ. நிக. கக: உ.) 3. சிவலிங்கம்.(உ-ம்.) "தாபரசங்கமமங்களென்றிரண்டுருவினின்று." (சி. சி. உ: உஅ.) 4. தஞ்சம். (உ-ம்.) "மருதூரரென்றுபரமே." (மருதூரந். சுo.) 5. நிலை. (உ-ம்.) "சதுர்மறைக்குந்தாபர." (மருதூரந். சுக.) 6. நிலைத்திணைப்பொருள். (உ-ம்.)"சங்கமந் தாபரங்கடத்தங் கன்மத்துக்கேடா-வங்குரு யோகிமாறும்."(சி. சி. உ: சக.) 7. மரப்பொது. (சூ. நிக. கக: பகரவெ. உ.)

தாபரன்—கடவுள்.

தாபரித்தல்—தாங்குதல். (வழக்.)

தாபன்—சூரியனது துவாதச கலைகளாகிய மெய்காவலருளொருவன். (வி-ணி.)

தாபி—தெரிகிலவினப்பகுதி.

தாபிஞ்சம்—1. ஆமணக்கு. 2. பச்சிலைமரம். (1. 2. மலையக.)

தாபித்தல்—1. இருத்துதல், அல்லது நிலைபடச்செய்தல். (சூ. நிக. க: உஅ.) 2. பிரதிட்டைசெய்தல். (உ-ம்.) "அங்கோரிலிங்கமணலாற்கூப்பித் - தனுதியந்தனினின்றுந்தாபித்தான்பாறழைத்தவன்பாலாட்ட." (சேதுபு. கட்வள்வா. கஉ.)

தாபிதம்—1. சூடு. 2. தாபித்தல்.

தாபினி—சூரியன் துவாதசகலையிலொன்று.

தாபிநீழத்திரை—ஆவாகநமுத்திரை யதோமுகமாகச்செய்யப்படுவது. (சித்தா. சாரா. கிரி யா. உசு. உரை.)

தாம்—1. இருதிணை இருகூற்றுப் பன்மையில்வரும் ஒருபெயர். (நன். உஅஎ.) 2. ஓரசைநிலைச்சொல். (உ-ம்.)"அன்றுந்தாந்தான்றின்று நின்றசைமொழி." (நன். சசக.) 3. தானத்தைக்கருதுமோர் ஒலிக்குறிப்பு. (யாப். காரிகை. செய்யு. கூ. உரை.)

தாம்பாளம்—ஒருவகைத் தட்டம். [தெலுங்கு.]

தாம்பிர்கர்ப்பம்—தூரிசு.(வைத்தியபரிபா.)

தாம்பிரசூடம்—1. சேவல். 2. நடுவிரலுஞ் சுட்டுவிரலும் பெருவிரலுந்தம்மில் நுனியொத்துக்கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கி நிமிர்வது. (சிலப்பதி.)

தாம்பிரபர்ணி—இது மலயத்துதித்த இரு நதிகளிலொன்று. (வி-ணி. உசுஅ.)

தாம்பிரம்—செம்பு. (சூ. நிக. சு: கூ.)

தாம்பிரவன்னி—ஓரியாறு.

தாம்பிராட்சம்—குயில். தாம்பிரநிறமுள்ள கண்ணுடையது.

தாம்பு—கயிறு. (உ-ம்.) "பருத்தவாசுகித் தாம்பிழுப்பாரென." (அரிச்ச. விவாக. உகூசு.)

தாம்புலோவல்லி—மஞ்சாடி. (மலையக.)

தாம்பூரம்—மஞ்சிட்டி. (வைத்தியபரிபா.)

தாம்பூரவல்லம்—வாழை. (மலையக.)

தாம்பூலதன்—அடைப்பைக்காரன், தாம்பூலங் கொடுப்பவன்.

தாம்பூலம்—1. வெற்றிலை. (பிங்கல. கஎறுo.) 2. வெற்றிலைபாக்கு முதலிய பொருட்கள் (உ-ம்) "செருப்போடுதாம் - பூலமெண்ணெய மாதர்புணர்ப்புவிட்டி."(சேதுபு. சேதுயாத். எ

தாம்பூலவல்லி—வெற்றிலைக்கொடி. (சூ. நிக. ச: கூஎ.)

தாம்பூலி—தாம்பூலவல்லி. (சூ. நிக. ச: கூஎ.)

தாம்பூலிகன்—வெற்றிலை வாணிபன்.

தாமக்கிரநீதி—அஞ்ஞாதவாசத்திற்குநிரைப்பாகனுக வேடம்பூண்டநகுலன்பெயர்.(உ-ம்) "கிளைபடுபுரவிபுரந்நிடுந் தாமக்கிரந்தியாம் பெயர்பூணநகுலற்கு." (பாரத. நாடுகரந்துறை உசு.)

தாமசபாவங்கள்—அதர்மம், அஞ்ஞானம்

அனைசுவரியம் என்பன. (சி. லி. ஞாநபூத-கசூ. தாற்பரி.)

தாமசம்—1. இருள். 2. ஸ்ரீகண்டபரமேசுவரனுடைய சத்தி. பரிசித்தமாத்திரத்திலே பிரகிருதியிலே நின்றுமூண்டான மூன்றுகுணங்களுளொன்று. இஃது இந்திரநீலப்பிரகாசமாயிருக்கும். இதனைக்காலருத்திரர் அதிட்டித்துநின்று சங்காரகிருத்தியம் பண்ணுவர். இதில் அக்நியமம், மோகம், ஆலசியம் ஆகியமூன்று குணங்களுள. (சி. சி. உ: ருஎ. சிவாக்.) 3. தடை. (வழக்.)

தாமசன்—நான்காமது. (அபிதா.)

தாமசவேளை—தாமதவேளை. (வருஷாதி நூல்பார்.)

தாமணி—கயிறு. (சூ. நிக. கக: மகரவெ. சு.)

தாமத்தர் — திருவள்ளுவர்குறளுக்குரை செய்த பதின்மருளொருவர். (அபிதாந.)

தாமதநணம்—பேருண்டிமுதலியவற்றைச் செய்வது. (பிங்கல. கூசுச.)

தாமதநணசித்திகள்—ஆகருஷணம், அதிரிசியம், அஞ்சநம், வசியம், இரசவாதம், வயத்தம்பம், தம்பநம், மோகநம் என்பவை. (கூர்மபு. வருணச். கசை. உரை.)

தாமதம்—தாமசம்.

தாமதவகங்காரம்—அகங்காரத்தொருவகை. இதினின்று தன்மாத்திரைகளெந்துந்தோன்றும். (சித். பி-கை. கூ)

தாமதவேளை—(சோதிட) ஒவ்வொருதிநத்திலும் வரும் மூக்குணவேளைகளிலொன்று.

தாமதாத்தீதம்—பகைவருடைய கண்ணுமனமுமிருளச்செய்வதோரத்திரம். (மணிமே.)

தாமதாயிநி—சோடசகலைகளி ளொன்று. (வ்-ணி. உசசு.)

தாமதித்தல்—தாழ்த்தல். (உ-ம்.)"மாருமதிக்கநக்தேர்." (மருதூர. கசூ.)

தாமம்—1. அச்சம். 2. இடம். 3. உடல். 4. ஒழுங்கு. 5. கயிறு. 6. கிரணக்கற்றை, ஒளித்தொகுதி 7. கொன்றைமரம். 8. சோதி, (உ-ம்.) "கவுசலைகாளைநட்டதாமமாரிலிங்கமூர்த்திசந்நிதிதன்னிலெய்தி" (சேதுபு. சங்கர பா. எசை.) 9. நகரம். 10. புள்ளின்கழுத்தாரம். 11. பூ. 12. பெருமை. 13. போர்க்களம். 14. மணிக்கோவை. மூவாறுகோவையுள்ள மாதரி டையணியுமாம். 15. மலர்மாலை வெவ்வேறு பத்தியாக வைத்து வளைவின்றி நீளமாகக்கட்டுகின்ற பத்திமாலை; இது தோளிலணிவது. (பெரியபு. தடுத்தாட். உஅ. உரை.) [கோத்தமாலையென்பர் திருவிளையாடற்புராண வுரைகாரர். திருவிளை. தருமி. சு.] 16. மலை. 17. மாலை. (உ-ம்.)"தாமந்திகழ்தருமொய்ம்புபாடு." (பிரமோ. அ: கசு.) 18. மூடியுறுப்புஜந்தனுள் ஒன்று. (பிங்கல. ககசுகூ.) 19. யானை. 20. விருப்பம். 21. வீடு. (4, 5, 7, 9, 11, 13, 14, 16, 19-சூ. நிக. கக: மகரவெ-அ.) [இதில், சாந்திற்கும் பெயர்கூறுவர்]

தாமரம்—தாமரை. (மலையக.)

தாமரை—1. காசிபர்தேவி. (அபிதாநசிந்.) 2 ஓரெண். (உ-ம்.)"தாமரைக்குணத்திஞனே" (சிந்தா கனகமாலையா-கசுகூ.) 3. நீரிலுண்டாகும் ஒரு கொடி. (உ-ம்.) "தாமரைபொன்முத்துச்சவரங்கோசாசனை." (நீதிவெண். க.)

தாமரைக்கண்ணன்—விட்டுணு. (வள். கக0கூ.)

தாமரைக்கோட்டை—பொகுட்டு. (பிங்கல. கூ00கூ.)

தாமரைச்சத்துரு—ஒரு பாஷாணம்.

தாமரைச்சுருள்—தாமரைவளையம். (பிங்கல-கூ0க0.)

தாமரைநாயகன்—சூரியன். (உ-ம்.) "சகடசக்கரத்தாமரைநாயகன்." (கந்தபு. காப்பு.)

தாமரைப்பாசினி—அரிதாரம். (வைத்தியபரிபா.)

தாமரைமணி—தாமரைக்கொட்டை. (வைத்தியமூ. அகரா.)

தாமரையாள்—ஓர் மஞ்சட் பாஷாணம். (வைத்தியமூ. அகரா.)

தாமரையாள்—இலக்குமி. (உ-ம்.) "தாமரையாள்வாழ்தண்கடிமார்பா." (திருவிளை. பழியஞ்சி. கஎ.)

தாமரைவாசி—1. ஒரு பாஷாணம். 2. தாமரையாள்.

தாமலகி—கீழ்க்காய்நெல்லி. (மலையக.)

தாமலகிதளம்—தாளிசபத்திரி. (வைத்தியமூ. அகரா.)

தாமளை—புன்னை. (மலையக.)

தாமன்—சூரியன். (உ-ம்.) "தாமன்மேல்வர வரவுடைந்திடுதமமெனும்படி."(பாரத. மூசற் போர். சஉ.)

தாமிச்சிரம்—1. ஒருவகைநரகம். 2. தமோமய சிருட்டி ஐவகையில் நான்காவது. அது: திவ்யாதிவ்ய பேதமாகியசத்தாதி தசசித்தியின் பொருட்டும், அணிமாதி யட்டசித்தியின் பொருட்டும் பண்ணுஞ்சாதன வைகல்யம் வந்தகாலத்திலும் சித்தியாய் இவைகளுக்கு நாசம்வந்தகாலத்திலும் இந்தப் பதினெட்டிலும் வருந்தாபம். (சி. சி. உ: ருஅ. சிவாக்.)

தாமிசிரம்—தாமிச்சிரம். "2" பார். (உ-ம்.) "அது தமமோகம் பகலுமாமோகந் தாமிசிரம்."

(சூத. சிவமா. கo: உ.)

தாமிரகருணி—மேற்றிசை யானைக்குப் பெண் யானை. [செப்புத்தன்மையுள்ள காதையுடைய தென்றபடி.]

தாமிரசிகி—கோழி. செம்புநிறமுள்ள சிகையையுடையது.

தாமிரபருணி—1. அஞ்சனமென்னுந் திக்கு யானையின் பெண்யானை. (அபிதாந.) 2. பொருநையாறு.

தாமிரபல்லவம்—அசோகு. (வைத்தியமூ. அகரா.)

தாமிரம்—செம்பு. (சூ. நிக. சு: கூ.)

தாமிரன்—முராசுரன் மகன். இவன் கண்ணபிரானுற் கொல்லப்பட்டவன். (அபிதாந.)

தாமிரிகை—குன்றிக்கொடி. (வைத்தியமூ. அகரா.)

தாமிரை—1. செம்பு. 2. தக்கன்மகள். (அபிதாந.)

தாமை—தாம்பு.

தாமோதரன்—1. ஆமை. (வைத்தியமூ. அகரா.) 2. விட்ணு. (சூ. நிக. க: கஉ.)

தாயி—1. அண்ணன்றேவி, ஊட்டுந்தாய், குருவின்றேவி, செவிலித்தாய், தன்றேவியையீன்றுள், நற்றாய், பாராட்டுந்தாய்; தாயின் சகோதரிக்கும் பெயர்கூறுவர். 2. தாவி (உ-ம்.) "ஒல்லேதாயதிற் படர்கறிக்கருந்துணருகுப்ப." (திருவிளை. நாட். கூடு.) 3. பரக்கப்பட்டு. (பரிபாடல்.) 4. முதல். (உ-ம்.) "தாய்பிளந்துக்க காரகில். (இராமா. பாலகாண். தாடகைவதை. அ.) 5. முதன்மை.

தாயிக்கீழ்ப்பிள்ளை—எட்டிக்கன்று. (வைத்திய பரிபா.)

தாயிச்சி—தாய். (வழக்.)

தார்யை—தாவிய. (உ-ம்.) "எவ்வுலகுந் - தாயவடியினைகடன்கருத்திறைப் பிணித்தான்." (பாரத. திருட்டி-கூஎ.)

தாயசத்து—பீதரோகணி. (வைத்தியபரிபா.)

தாயத்தார்—ஞாதியர். (சூ. நிக. உ: எஎ.)

தாயபாகம்—சுதந்திரபாகம், தந்தைமுதலாயினர் பொருளை மைந்தர் முதலானோர் பிரித்துக்கொள்ளுதல். (மிருதி. கூ.)

தார்யம்—1. உடைத்தல். 2. உபகாரம். 3. உரிமை. (உ-ம்.) "மூரசுகெழுதாயத்தரசோதஞ்சம்" (புறநா. எகூ.) 4. ஒரு சூதாடுகருவி. 5. கொடை. 6. சூதாடுகருவிற்காட்டும் ஒன்றென்னுமிலக்கம். (உ-ம்.) "தாயமுற்றிடங்கொடாது தருமனைச்சதித்ததே" (பாரத. சூதுபோர். சஅஅ.) 7. பங்கு.

தாயமாடல்—1. சூதாடல். 2. தாமசஞ்செய்தல். (வழக்.)

தாயரைவர்—ஐவகைத்தாயரைக்காண்க.

தாயாதி—
தாயாதிகள்— } தாயத்தார்.

தாயான்—ஒன்பது. [ஒரு குழூஉக்குறி.]

தாயித்து—அட்சரமடைக்கிற உடு. [தெலுங்கு.]

தாயினன்—தாவியெனப்பொருள்படும் ஒரு மூற்றெச்சமுமாம். (உ-ம்.) "அவிந்தாளைத்-தாயினன்வந்திங்கிட்டயர்கின்ருன் றமியன்ருன்" (திருவிளை. பழியஞ். ககூ.) தாவினனென்னும் ஒரு மூற்றுச்சொல்லுமாம்.

தாயுமானவர்—
தாயுமானீர்— } சிரகிரியின்மேலிருக்கிற கடவுள்.

தாயைக்கொல்லி—1. குட்டியிக்கி. இது கோட்டைக்கிழங்கென்றுஞ்சிற்றரத்தையென்றுங்கூறவர். (மலையக.) 2. மாதாவைக்கொன்றவன், பரசுராமன்.

தாயைக்கொன்றான்—புல்லாரிவாழை. (மலையக.)

தார்—1. ஒரு வாத்தியம். (உ-ம்.) "பம்பைதார்முரசம்" (இராமா. பிரம்மாஸ்திர. சூ.) 2. ஒழுங்கு. (உ-ம்.) "கோட்டார்" (திருநூற். கo.) 3. கிண்கிணிமாலை. (பிங்கல. கூசுஉ.) 4. கிளியின் கழுத்திட்டவரை. (உ-ம்.) "செந்தார்ப்பசுங்கிளியார்" (சிந்தா. குணமா. கஅசு.) 5 கொடிப்படை, தூசிப்படை. (உ-ம்.) "தாரொடு பொலிந்தவினகவில்யானை" (மலைபடு. உஉஎ.) 6. சங்கிலி. (சி. சி. ஞானப்.) 7. சிங்கத்தின் கழுத்திலுள்ள சடை. (உ-ம்.) "தாரணியெருத்தின்வாரல்வள்ளுகிர்" (பதிற்று. கஉ.) 8. சேனை. (ஆசிரியநிக. உ: கசு.) 9. படைவகுப்பு. (பிங்கல. சசுoசு.) 10. பூ. (உ-ம்.) "தார்கொண்டதாளிணைகள்" (அரிச்ச. பாயிர. க.) 11. பூமாலை. (உ-ம்.) "தாரடர்ந்தபுயமும்" (அரிச்ச. நகர. கூ.) 12. மார்பின்மாலை. (பரிபாடல்.)

தார்க்கிகன்—தருக்ககாரன்.

தார்க்கியன்—கருடன். (உ-ம்.) "கத்துருவினைத்தெரிபுதார்க்கியன்கனன்றே" (சேதுபு. கத்துரு. அசு.)

தார்த்தராட்டிரர்—திருதராட்டிரன் மக்கள். (உ-ம்.) "தாண்டவெம்பரித்தேர்த்தார்த்தராட்டிரர்" (பாரத. திரௌ. கூஅ.)

தார்நிலை—தூசிப்படையைத் தடுப்பேனென அரசற்கு ஒரு வீரன்றனது தறுகண்மையைச் சொல்லியது. (புறப்பொ. வெ.)

தார்ப்பிடம்—மரமஞ்சள். (வைத்தியபரி.)

தார்மபத்தநம்—மிளகு. (வைத்தியமூ. அக.)

தார்மிகை—ஏகாதசித்திதி.

தாரகப்பிரம்மம்–பிரணவமந்திரம்.(உ-ம்.) "ஆசிரூரகப்பிரமமரீமதன்பயனுய்ந்தான்" (கந்தபு. அயனைச். புரி. கக.)

தாரகம்—1. ஆதாரம். (சி. சி. உ: ஈ0. ஞானப்.) 2. ஒரு மந்திரம், அது-பிரணவம். (உ-ம்.) "தாரகத்தொன்மறையுருவாய்" (சிவராத். கடவுள். அ.) 3. கடப்பித்தல். (த. நி. போ. ஈருசு.) 4. கன்மத்தின் திரிவிதத்திலொன்று. (சி. சி. உ: ஈக. ஞானப்.) 5. தரிக்கிறது. (சி. சி. உ: சுருு. சிவாக்.) 6. தூணை. 7. பலண்டுறுக பாஷாணம். 8. வெள்ளி. (பிங்கல. கஉஈச.)

தாரகன்–1. கடப்பிப்போன். 2. கண்ணன் தேர்ச்சாரதி. 3. தாங்குவோன்.

தாரகாரி—1. காளி. 2. குமரன். (1. 2. சூ. நிக. கக: ரகரவெ. ச0.)

தாரகை—விண்மீன். (உ-ம்.) "தாரகைக் கெலா-நாணிலாவென" (பிரமோ.சநிப்பிர.ச.)

தாரகைமாலை—ஒரு பிரபந்தம்; அது: கற்பினையுடைய மகளிர்க்குள்ள இயற்கைக்குணங்களைக் கூறுவது.(உ-ம்.)"வகுப்பாற்கற்புடைமகளிர்க்குள்ள - தகைத்திரங்கூறுதலாரகைமாலை" (இலக்கணவி. அசுஎ.)

தாரசாரம்–யசர்வேத உபநிடதத்தொன்று. (கந். ஈவ. கஅ.)

தாரசுத்திகரம்—ஈயம்.

தாரணை—வியாழவட்டமாகிய அறுபது வருடத்துட் பதினெட்டாவது வருடம்.

தாரணநட்சத்திரம் — மூலம், ஆயிலியம், கேட்டை, திருவாதிரை என்னு நட்சத்திரங்கள். (விதாந. பஞ்சா. உ0. உரை.)

தாரணம்–1. யோகம்.(தாரணயோகம்பார்.) 2. தரித்தல்.(உ-ம்.) (இலிங்கதாரணஞ்செய்தவன். வழச்.)

தாரணயோகம்—அட்டாங்கயோகத் தொன்று; அஃது, அங்கங்கேயுள்ளனவற்றை மகாவாயுவாலேபிடுங்கி எங்கே நிறுத்தவேண்டுமோ அங்கே நிறுத்தியும் பிரித்தும் பிரித்ததை எற்றுமிடங்களிலேற்றி இறக்குமிடங்களிலிறக்கிக் கூட்டுமிடங்களிற்கூட்டி யிப்படித்தரிக்கச் செய்வது. (த. நி. போ. ஈருஈ.)

தாரணி—1. சூரியன் துவாதசகலையி லொன்று. (வி-ணி.) 2. பூமி. (உ-ம்.) "தன்னிற் றீர்ந்ததனிமையின்றுயரந்தீர்த்தான்" (கந்தபு. வள்ளி. உஈச.)

தாரணை—1. சரிநிலையினிற்றல். 2. தரித்தல். (வி-ணி.) 3. தாரணயோகம். (உ-ம்.) "வயமார்பிரத்தியாகாரம் வருதாரணையே தியானமே" (சூத. ஞான. கஈ: உ.)

தாரதண்டுலம் — வெண்சோளம். (வைத்திய பரிபா.)

தாரதம்—1. கடல். 2. சிந்தூரம்.

தாரதம்மியதை–ஏற்றக்குறைவாந்தன்மை. (சி. சி. உ: நிஅ. சிவாக்.)

தாரதம்மியம்—ஏற்றத்தாழ்ச்சி.

தாரபீடம்—மரமஞ்சள். (வைத்தியபரிபா.)

தாரம்—1. அரிதாரம். (வைத்தியபரிபா.) 2. அரும்பண்டம். (உ-ம்.) "அளந்துகடையதியாவளங்கெழுதாரமொடு"(மதுரைக்கா.சுஈஎ.) 3. சிற்றரத்தை. (மலையக.) 4. தரா. 5. தேவதாரம். (பரிபாடல்.) 6. நட்சத்திரம். 7. நா. (பிங்கல. கo.சஈ.) 8. நாரத்தை. (வைத்தியமூ. அக.) 9. நீர். 10. பலபண்டம். (உ-ம்.) "பல்வேறுதாரமொடுகல்லகத்தீண்டி" (மதுரைக்கா. உகo.) 11. பாதரசம். 12. பார்வை. (சூ. நிக. கக: ரகரவெ. சு.) 13. பிரணவம். 14. மனைவி. (உ-ம்.) "பழிக்கஞ்சாத்தாரத்தினன்றுதனி" (நல்வழி. ஈக.) 15. மிதுநராசி. (சூ. உள்ளமு. ராசி. கூ.) 16. முத்து. 17. மூக்காற்பிறக்கு மிசை. (பாரத. சிறப்புப்பா. கஎ.) 18. மேன்மை. 19. வல்லிசை. 20. வீணைநரம்பிலொன்று. (உ-ம்.) "தாரத்துட்டோன்றுமுழை" (சிலப். வேனிற். ஈஉ. உரை.) 21. வெண்கலம். 22. வெள்ளி. 23. மந்தாரமென்னுந் தெய்வதரு. (சிலப்பதி.) 24. சாதிலிங்கம். (வைத்தியபரிபா.)(4. 7. 22. பிங்கல. ஈசுஉஎ.)

தாரா – 1. ஒருபுள்; அது-ஆண்டித்தாரா, கண்ணுடித்தாரா, காட்டித்தாரா, மணற்றூரா, பெருந்தாரா. எனப் பலவகைப்படும். 2. ஒரு பெயரெச்சம். (ஈறுகெட்டது.) 3. ஒரு வினைமுற்று. 4. ஒரு வினையெச்சம். 5. விண்மீன். (உ-ம்.) "தாராகணத்தொடுமைமகவன்னன்" (இராமா. பால. மிதிலைக்கா. கஎஅ.)

தாராகதம்பம்—கடம்பு.(வைத்தியபரிபா.)

தாராங்குரம்—ஆலங்கட்டி. (வைத்தியபரிபா.)

தாராட்டு—தாலாட்டு. (வழக்.)

தாராதரம்—1. மேகம். (பிங்கல. நிஅ.)

தாராபதி—1. சந்திரன். 2. வியாழன்.

தாராழக்கன்—ஒரு பாம்பு.

தாராளம்—1. உதாரம். 2. தெளிவு. 3. மிகுதி. 4. விசாலம். (1. 2. 3. 4. வழக்.)

தாரி—1. அரிதாரம். (வைத்தியபரிபா.) 2. உடையோன். 3. குணம், இசைக்குணமென்க. (உ-ம்.) (திருவிளை. விறகுவிற்ற. ஈக.) 4. தரிப்பவன். 5. வழி. (பிங்கல. சஎக.)

தாரித்தல்–தரித்தல். (உ-ம்.) "தனேயேமகவாமெனவே வயினிற்றரித்திடுமப்பாரிப் பெய

ரே" (சிவரக. கணபதிவந். அ.)

தாரித்தீரம்—தரித்திரம்.

தாரித்தீரியம்—தாரித்திரம்.

தாரிப்பு—1. தரித்தல். (உ-ம்.) (பெரியபு. இளையான். கூ.) 2. மதிப்பு. 3. மேம்படச்செய்தல். [இந்துஸ்.]

தாரு—1. தேவதாரு. (உ-ம்.) "முக்கடி"பார். 2. மரக்கொம்பு. (பிங்கல. உளகூடு.) 3. மரப்பொது. (உ-ம்.) "தாருகவரிக்கடைபண்பாடும் வேதத்தலத்திறைமுன்" (மறைசை. எகூ.)

தாருகதலி—கானவாழை. (மலையக.)

தாருகவநம்-தாருகாவனம். (உ-ம்.) "பெரிய தாருகவநமுநித்தலேவோர்" (சிவரக. தேவியுடன். க.)

தாருகற்செற்றுள்-காளி. (சூ. நிக. க: கூஅ.)

தாருகற்செற்றேன்—குமரன். (சூ. நிக. க: உகூ.)

தாருகன்—தாருகாசுரன்.

தாருகாசுரன்—தாருகன், காளியாற்கொல்லப்பட்ட ஓரசுரனும், குமரனாற்கொல்லப்பட்ட ஓரசுரனுமாம்.

தாருகாவநம்—ஒரு வனம், தாருகவநம்.

தாருசம்—செம்புளிச்சை. (மலையக.)

தாருண்ணியம்—இளம்பருவம்.

தாருணம்—அச்சம். (சூ. நிக. அ: டுடு.)

தாருணி—நத்தைச்சூரி. (மலையக.)

தாருவநம்—தாருகவநம். (உ-ம்.) "சிறை வண்டறையுந்தாருவநத்தெய்வமுநிவர் பன்னியர்தம்" (திருவி. வளையல். உ.)

தாரை—1. அபிடேகம். 2. அரதநக்குற்றமைத்தனுளொன்றுகியகீற்று. (திருவிளை. மாணிக்க. சச. உரை.) 3. கண் (உ-ம்.) "வேற்றுரையருமுடன்விளிந்தார்" (சேதுபு. அனுமகு. உஎ.) 4. கண்மணி. (சூ. நிக. உ: கூசு.) 5. குதிரைநடை. (பாரத. பழம்பொரு. ககூ.) 6. கூர்மை. (உ-ம்.) "வெறித்தாரைவேலரக்கர்" (இராமா. சூர்பநகை. கஙசு.) 7. சிறு சின்னம். (உ-ம்.) (பாரதம். கசு. போர். டுகூ.) 8. சுவடி. (பிங்கல. ஙசுஉஎ.) 9. தத்தம்பண்ணு நீர். (உ-ம்.) "தாரைவாரெனக்கௌசிகன்சாற்றிட" (அரிச்ச. சூழ்வி. எக.) 10. நேரோடல். (சூ. நிக. க: ரகரவெ. ககூ.) 11. பஞ்சகந்நியரிலொருத்தியான சுரகுருபங்நி. (உ-ம்.) "இளநிலாநகைத்தாரையைவிடுக்கலன்" (காசிகா. கடு: கஎ.) 12. மழை. (சூ. நிக. க: ரகரவெ. ககூ.) 13. வழி. (உ-ம்.) "நெறித்தாரைசெல்லாதநிருதர்" (இராமா. சூர்ப்பநகி. கஙசு.) 14. வாலியின்மனைவி. (உ-ம்.) "தூவைவருங்கிளையுஞ் சுற்றத்-தாரையைவணங்கி" (இராமா. கிட்கிந். அரசிய. டுஉ.) 15. விண்மீன். (உ-ம்.) "திங்கள் சூழ்தருதாரையின்கணமென" (பாரத. படையெழு. கக.) 16. விரைவு. (பிங்கல. உகஙச.) வைத்திய பரி பாடையிற் சின்னியென்பர்.

தால்—1. தாலாட்டு 2. நா.(சூ.நிக.உ:கூச.) 3. பிள்ளைக்கவியுறப்பிணைன்று. (உ-ம்.) "கடுங்கொலைநீக்கிக்கடவுட்காப்புச்—செங்கீரைதால் சப்பாணிமுத்தம்" (இலக்கணவி. அ0சு.)

தாலகி—கள். (வைத்தியபரி.)

தாலகேதநன்—1. பலராமன். (பிங்கல. கசஙசு.) வீட்டுமாசாரி. (பாரத. க0. போர். ஙடு.)

தாலபத்திரி—மரமஞ்சள். (மலையக.)

தாலபீசநியாயம்-(தாலவீசநியாயம் பார்.)

தாலபோதம்—ஆவிரை. (மலையக.)

தாலம்—1. அதடம். (உ-ம்.) "தாலந்தொழுத்-தருமதிதச்சன்" (விதாந. பஞ்சா. உ0.) 2. உண்கலம். (உ-ம்.) "பெருந்தோடாலம்பூசன் மேவர"(புற நா. கஉ0.) 3. உலகம். (உ-ம்.) "தாலம்பதிஞலு நடுங்கிட" (அரிச்ச. நாட்டு. கூ.) 4. ஓரளவை. (சி-லி. இரி. கடு. உரை.) 5. கூந்தற்பனை (மலையக.) 6. தாலம்பபாஷாணம். அது, ஒரு மருந்து. 7. தேன். (வைத்தியபரி பா. அஎ.) 8. நா. 9. பனை. 10. யானைச்செவி. (பிங்கல. உசஙo.) (8. 9. பிங்கல. ஙசுஙo.)

தாலம்பபாஷாணம்—ஒரு மருந்து.

தாலழலி—நிலப்பனை. (மலையக.)

தாலவட்டம்—1. தாலவிருந்தம். 2. பூமண்டலம். 3. யானைவால். (சூ. நிக. ங: சு.)

தாலவிருந்தம்—பேராலவட்டம். (பிங்கல. கஎ0உ.)

தாலவீசநியாயம்—சகத்திர நியாயங்களுளொன்று; அது-பனை காரியப்படுவதற்குக்கொட்டையும், கொட்டைகாரியப்படுவதற்குப்பனையும் காரணமாயிருத்தல்பற்றிப் பனை முந்தியதோ கொட்டைமுந்தியதோ என்பதிற்போல வழக்குரைத்தல். இதனைப்பீசாங்குரநியாய மென்பர். பீசாங்குரநியாயத்தைச் சிவப்பிரகாசம். (உ-ம்.) (சூத்திரம். கங-ம் உரையிற்காண்க.)

தாலாட்டு—ஓராட்டு. (உ-ம்.) "நாயகனைத்தாலாட்டுநலம்பலபாராட்டினார்" (பெரியபு. திருஞாந. சசு.)

தாலி—1. ஐம்படையாகியவோரணி. இது; திருமால்பஞ்சாயுதவடிவமாகச்செய்துதுழந்தைகட்கணிவது. (உ-ம்.) "தாலியைம்படைதழுவும்" (இராமா. நாட்டு. டுஅ.) 2. கீழ்க்காய் நெல்லி. (மலையக.) 3. பலகறை. "உ-ம்.) "வரிவெண்டாலிவலெசத்துவெரூஉ" (ஐங்கு மு. கசுசு.) 4. மங்கலநாண். (உ-ம்.) "தாலிகட்டையிலேதொடுத்து" (சிவப்பிர. சரித்திரம்.) 5.

மட்பாத்திரம். (உ-ம்.) "அனேயவரதனேயீவா ராரழற்றுலியொன்று- தனேயவன்பாணிநல்கி" (சேதுபு. சாத்தி. ஈஅ.)

தாலியம்—பாதிரி. (வைத்தியமூ. அகரா.)

தாலீபாகம்—நீட்சையிற்குருபகுக்குமங்கம். (சி. சி. அ: ஈ. மறை.)

தாலு—ஈா. (உ-ம்.) "தருமனுந்தம்பிமாருந் தாலுவும்புலர்ந்து" (பாரத. நச்சுப். உஉ.)

தாலுகண்ணி—வெள்ளேக்காக்கணம். (வைத்தியமூ. அகரா.)

தாவட்டம்—சிற்பநூன்முப்பத்திரண்டிலொன்று.

தாவடம்—தாழ்வடமென்பது தாவடமென ழகரங்கெடக்கூறுவர். (வழக்.)

தாவடி—1. தாவி. (உ-ம்.) "ஆயிரமக்கள் தாவடிபோயினர்" (நன். பொ. க.) 2. போர். (உ-ம்.) "தாவடியோட்டமையிலும்" (கந்தரலங். கடு.)

தாவணி—1. கண்டங்கத்திரி. (மலேயக.) 2. பெண்சளிடும் உத்தரீயம். (வழக்.) 3. மாட்டைக்கூட்டமாகக்கட்டுமிடம். (வழக்.)

தாவதாரி—முனிவர். (உ-ம்.) "தாவதார்க்கினிய காய்கிழங்குகனிதந்து"(சேதுபு. பாவநாச. ஈஈ.)

தாவநீதம்—இக்கட்டு. (வழக்.)

தாவநம்—1. சுத்திசெய்தல். (உ-ம்.) "தந்த தாவநம்" (வழக்.) 2. தாபநம்.

தாவம்—1. காட்டுத்தீ. (சூ. நிக. க: நுஉ.) 2. காடு. (உ-ம்.) "தணியாப்பலமருத்துந்தாவமு ணுந்தாவம்" (தைல. தைலவ. ஈகநு.) 3. தீ. (உ-ம்.) "2" பார். 4. வெப்பம். (உ-ம்.) "தாவமிகும்படிபரவாச்சாபங்கள்பலவிட்டார்" (கோயிற்பு. பதஞ்சலி. உஈ.)

தாவரம்—1. அசரம், நிலையியற்பொருள். (உ-ம்.) "தாவரசங்கமங்களென" (சைவவினு. பக்கம். ஈ.) 2. இடம் (வழக்.) 3. உடல். (சூ. நிக. உ: அநு.)4. நிலே. 5. பூமி. 6. மரப்பொது. (பிங்கல. உஎஈ0.) 7. மலே.

தாவரலிங்கம்—பரார்த்தலிங்கம். (சைவவி. பக்கம். நுஎ.)

தாவரன்—கடவுள்.

தாவரித்தல்—1. காப்பாற்றுதல். 2. தாங்குதல். 3. நிலேபெற்றிருத்தல். (1. 2. 3. வழக்.)

தாவல்—1. தாக்குதல், பற்றுதல். (சிவப் பிர. எ: க. உரை.) 2. தாண்டல். (பிங்கல. உகஅநு.) 3. பரத்தல். (சூ. நிக அ: ஈ.) 4. வருத்தம். (உ-ம்.) "தாவலுய்யுமோமற்றேதா வாது" (பதிற்று. சக.)

தாவளக்காரர்—தேசாந்திரவணிகர். (ஒரு தேசவழக்கு.)

தாவளம்—1. இருப்பிடம். [தெலுங்கு.] 2. மருதநிலத்தூர். (சூ. நிக. நு. சஐ.)

தாவளி—கண்டங்கத்திரி. (வைத்தியபரிபா.)

தாவளியம்—வெண்மைத்தன்மை. (பி. வி. சசு.)

தாவாது—ஒழியாது. (ஞானமி.)

தாவாரம்—தாழ்வாரம். [முகரங்கெட்டுநின் றது.] (வழக்.)

தாவு—1. உறைவிடம். 2. கேடு. 3. குற்றம். (உ-ம்.) "தாவில்கணம்புடைசூழ்" (கோயிற்பு. பதஞ்சலி. ஈ.) 4. செல்லுதல். (பிங்கல. உகஅஈ.) 5. தெரிநிலேவினேப்பகுதி. 6. பகை. 7. பாய்ச்சல். 8. வருத்தம். 9. வலி. (2, 6, 7, 8, 9-சூ. நிக. கக: வகரவெ. கஈ.) தா என்னு முதநிலேக்கே இப் பொருள் கொள்ளுவாருமுளர்.

தாவுதல்—1. அழிதல். 2. கடத்தல். (சூ. நிக. ஈ: சக.) 3. சாய்தல். 4. தாண்டல். (உ-ம்.) "தாவிச்சென்றனர்" (இராமா. கரன்வ. நுநு.) 5. பரத்தல். (நெடுநல். கஅநு. அடி. பார்.) 6. பிடித்தல்.

தாழ்—1. கதவுறுதாள். (உ-ம்.) "அன்பிற்கு முண்டோவடைக்குந்தாழ்" (வள்.எக.) 2. சீப்பு. (பிங்கல. சுகஅஈ.) 3. தெரிநிலேவினேப்பகுதி.

தாழ்க்கல்—1. தாமதிக்காதே எனப் பொருள்படும் ஒரு மூன்னிலேயே வல்வினே. 2. தாமதித்தல்.

தாழ்க்கோல்—தாழைத்திறக்குங்கோல். (நன்னூ. மெய். உஉ.)

தாழ்ச்சி—1. தவறு. 2. தாழ்வு. 3. நீட்டிப்பு, அது—செய்யுங்காலத்துச்செய்யாமை. (உ-ம்.) "சூழ்ச்சிமுடிதுணிவெய்தலத்துணிவு - தாழ்ச்சியுட்டங்குதலீறு" (கள். சுஎக.)

தாழ்த்தல்—1. இருத்தல். 2. கீழ்ப்படித்துதல். 3. குறைத்தல். 4. தாமதித்தல். (உ-ம்.) "தாழ்த்திடாமன்-மின்னிடைவெந்தீ" (சேது. சங்கர. எக.) 5. பணித்தல், தாழ்தல் என்பதற்கு பிறவினே.

தாழ்த்துதல்—தாழ்த்தல்.

தாழ்தல்—1. அமிழ்ந்துதல். (உ-ம்.) "இருநிலந்தாழ்ந்து" (இராமா. சடாயுகா. கு.) 2. ஆசை. (பிங்கல.கஅகக.) 3. ஆசைப்பெருக்கம். (சூ நிக. அ: எசு.) 4. இளகல். (உ-ம்.) "தாழ்ந்த மனத்தாள்"(இராமா.பூக்கொய். உச.) 5. குறைதல்.) 6. சரிதல், சீங்கெடுதல். (உ-ம்.) "தாழுங் காலத்துந்தாழ்வில" (இராமா. மராமரப். ஈ:) 7. சோம்பல். 8. தங்கல். (உ-ம்.) "நீடுதாழ்சுகடாழுமிஞ்சிகள்" (ஏகாதசி. உருக். நு.) 9. தாமதித்தல். (உ-ம்.) "தாழாதறஞ்செய்மின்" (கந்

தர. தேவார. கேதார. க.) 10. தொங்குதல். (உ - ம்.) "பின்முழ்குழலி" (யாப். காரிகை. செய்யு. கூ.) 11. தோற்குதல். 12. படிதல். (ஐந்திணையை.) 13. பணிதல். (உ - ம்.) "தாழ்ந்தமலரேந்தியிறைதன்றிருமுனின்றே" (திருவாத. திருப்பெரு. சச.) 14. வீழ்தல். (உ-ம்.) "சங்கரமாறவம்மோதழலினீதாழ்வாயல்லை" (சேதுபு. சங்கர. எகூ.)

தாழ்ப்பம்—தாழ்த்துதல்.

தாழ்ப்பு—1. தாழ்ச்சி. 2. தாழ்த்துதல்.

தாழ்மை—1. இளிவு. 2. எளிமை. 3. கீழ்மை. 4. பணிவு. 5. தாமதிப்பு. (1, 2, 3-பிங்கல. கூ. சூ: கூஉ.)

தாழ்வடம்-ஓரணிவடம், உருத்திராக்கமணி மாலைக்கும் பெயர்கூறுவர். (உ-ம்.) "வேட்டியுந் தாழ்வடமும்" (ஒழிவி. சரியைக். ச.)

தாழ்வரை — மலையினடிவாரம். (உ - ம்.) "கயிலைத்தாழ்வரை" (பெரிபபு. திருமலை. அ.)

தாழ்வாரம்—1. சோபனம். (சூ. நிக. நு: நுகூ.)

தாழ்வு—1. அடக்கம். (உ-ம்.) "தாழ்வின்றிக்-கொன்னேவெகுளிபெருக்கலும்" (திரிகடு. கூஅ.) 2. கீழ்மை. 3. குறைவு. (உ-ம்.) "உன்னருளா - லென்முழ்வுகெடத்தேற்றாய்" (திருவிளை. பழியஞ் கூஉ.) 4. தவறு. 5. பள்ளம். (சூ. நிக. நு: சுக.) 6. வறுமை. (வள். ககஎ.) 7. மலையடி. (சிந்தா.)

தாழ்வுறல்—வணங்கல். (உ-ம்.) "தாழ்வுற்றிடுவோருமைசங்கரனைச்-சூழ்வுற்று" (கந்தபு. தெய்வயானை. உஉ0.)

தாழக்கோல்—தாழ்கோல். (உ-ம்.) "வன்னிலைக்கதவுதாக்கித்தாழக்கோல்வலித்து"(திருவிளை. அங்கம். அ.) தாழாகிய கோல் என்பது பொருள். (நன். மெய் உஉ.)

தாழம்—தாமதம். (உ-ம்.) "தருதற்குமகிழ்ந்துவந்தேண்முழுமீங்கொழிகவென்முன்"(சூளா. கல்யாண. கசசு.)

தாழாமை — குறையாமை. தாழ்வினெதிர்மறை.

தாழி—1. அரிதாரம். 2. குடம். (உ-ம்.) "விண்ணோர்-தானந்திகழ்தாத்திரியைப்பெருந்தாழியாக்கி" (அரிச்ச. நாட்டுச். ச.) 3. சாடி. (உ-ம்.) "வியன்மலரகன்பொழிலீமத்தாழி-யகவிதாகவனீமோ" (புறநா. உடுசு.) 4. சிவதை. 5. பரணிநாள். (சூ. நிக. க: சுஎ.) 6. பாண்டம். (உ-ம்.) "கஃசுபயமுபயமுற்சுரசமிழையிட்டெலாங்கலவல்கொடுதாழியுளிட்டே" (தைல. தைலவ. எச.) (1, 4-வைத்தியவ.)

தாழிசை—கலிப்பாவுக்கு இரண்டாமுறுப்பாகித்தாழம்பட்ட ஓசையுடையதாய்த்தரவினின்றுஞ் சுருங்கிவருவது. (உ-ம்.) (யாப். காரிகை. செய். கச.)

தாழகை— } தாழ்தல்.
தாழதல்— }

தாழை—1. தழுதாழை. (உ-ம்.) "அரிக்காந்திதாழை" (தைல. தைலவ. எகூ.) 2. தாழஞ்செடி; அது: கற்முழை ஆனைக்கற்முழை செந்தாழை வெண்டாழை பேய்த்தாழை தழுதாழை எனப் பலவகைப்படும். 3. தாழைமரம். (உ-ம்.) "கமழுந்தாழைக்கானலம்பெருந்துறை" (பதிற்று. நிடு.) 4. தெங்கு. (உ-ம்.) "வாழைமுழுமுதறமியத்தாழை-யிளநீர்விழுக்குலையுதிரத்தாக்கி" (திருமுரு. கoஎ.

தாள்—1. ஆதி. (பிங்கல. உஉசஎ.) 2. உற்சாகம். (சூ. நிக. கூ: நுக.) 3. கதவுறுதாள். (உ-ம்.) "திருகுகருந்தாட்கொளுவி"(பெரியபு. திருநாவு. கூசு.) 4. கால். (உ-ம்.) "தந்தைதாளொடும்பிறவித்தாளை,நிந்து"(திருவிளை.பாயி. உஉ.) 5. சிவசத்தி. (சி. சி. அ: கூஅ. ஞாநப்.) 6 திறவுகோல். (சிந்தா.) 7. தெரிநிலைவினைப்பகுதி. 8. நெல்லரிபுல். (பிங்கல. கூசுகூக.) 9. பணிகளின் கடைப்பூட்டு. (வழக்.) 10. முயற்சி. (உ-ம்.) "மடியுளாண்மாமுகடியென்பமடியிலான் - முளுளாடாமரையிளுள்" (வள். சுகஎ.) 11. படி. (உ-ம்.) (பதிற்றுப்பத்து.)

தாள்கழவல்—பாதசுத்திபண்ணல். இது, நீத்தவர்க்குச்செய்புண்ணிய மொன்பதிலொன்று. (சூ. நிக. கஉ. கூஅ.)

தாளக்கம்— } அரிதாரம். (வைத்தியமூ.
தாளகம்— } அகராதி.)

தாளசமுத்திரம்—ஒரு தமிழ்நூல்.

தாளத்திரயம்— வலக்கைமூவிரலால் இடதுள்ளங்கையின் முத்தரந்தட்டுதல். (சைவச. பொது. உoடு. உரை.)

தாளநம்—பிளத்தல். (சீவரட். உஅo.)

தாளப்பிரமாணம் — சங்கீதசுருதிப்பிரமாணம்; அஃது-அங்கம், இலயை, கூளை, காலம், கிரகம், கிரியை, சாதி, பிரத்தாரம், மார்க்கம், யதி எனப் பத்துவகைப்படும்.

தாளம்–1. ஒருவாச்சியம். (பிங்கல.கஉசசு.) 2. கூலஞாநமறுபத்துநான்கிலொன்று. 3. சதி, இது நாற்பத்தொன்றென்பர் சிலப்பதிகாரத்தில். 4. தாளகம். 5. தாளிசம். 6. பொன்னரிதாரம். 7. மூத்து. (4, 5, 6, 7-வைத்தியபரி பா.)

தாளவகை—இது நான்கென்பர்; சிலப்பதிகாரம் உளர்காண் காதையில் அவை-கொட்டு, அசைதூக்கு, அளவு என்பனவாம்.

தாளவகையோத்து–ஒரு தமிழ்நூல். (அபி தாந.)

தாளவோற்று—சதி. (பிங்கல. கசசுசு.)

தாளாண்மை—1. ஊக்கம். (சூ. நிக. க: நுள.) 2. முயற்சி. (உ-ம்.) "தாளாண்மையில் லாதான்வேளாண்மை" (வள். சுகச.)

தாளாளர்—1. ஊக்கமுடையோர். (உ-ம்.) "வாளாடுகூத்தியர்கண்போற்றமொறுங்-தாளார்க்குண்டோதவறு" (நாலடி. தாளாண் க.) 2. வைஷியர். (உ ம்.) "தாளாளராக்கூரிற்முன்றேன்றிமாடமே" (திருவாக்கூர். தேவார. திருஞா. கூ.) (பிங்கல. எகூ.)

தாளாளன் — முயற்சியுடையன். (உ-ம்.) "தாளாளனென்பான் கடன்படாவாழ்பவன்" (திரிகடு. கஉ.)

தாளி—1. அதுடநாள். (சூ. நிக. ச: எச.) 2. ஒரு படர்கொடி; அது கம்பந்தாளி காட்டுத்தாளி குறுகுற்முளி செந்தாளி தேவதாளி சிறுதாளி நாகதாளி நெரிஞ்சித்தாளி நறுந்தாளி பெருந்தாளி எனப் பலவகைப்படும். (சூ. நிக ச: கூகூ-ஆம்பாட்டில், மஞ்சிகமென்முர்.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. சிவதை. (வைத்திய பரிபா.) 5. பூனைமரம். (பிங்கல. உஎடுடு.)

தாளிக்கம்—திடன். (வழக்.)

தாளிசபத்திரி–ஒருமருத்திலை. (தைல. தைலவ. கஉ.)

தாளிசம்—ஒரு செடி (உ-ம்.) "தாளிசந்தகரம்" (தைல. தைலவ. உகூ.)

தாளித்தல்—1. கறியைச்சமைத்துச்சுவைப்பட வாசமூட்டுதல். (உ-ம்.) "பட்டநறையாற்முளிச்தி" (பெரியபு. சிறுத்தொ. சுசு.)

தாளிதம்—தாளிப்பு.

தாளிப்பனை—சீதாளம்.

தாளிப்பு–1. தாளிதம். 2. மதர்ப்பு. (வழக்.)

தாளினி—1. சிவதை. 2. நிலவாகை. (1, 2-மலைபக.)

தாளியம்-வில்வப்பத்திரி. (வைத்தியபரிபா.)

தாளீசம்—தாளிசபத்திரி. (உ-ம்.) "தாளீசம்பச்சைதகரமசைகோட்டம்"(தைல.தைலவ. கசுடு.)

தாளுதல்—முயற்சித்தல்.

தாற்பரியம்—கருத்து.

தாற்று—மூட்கோல். (உ-ம்.) "சொற்முற்றுக்கொண்டுசெனத்தெழுதல்" (நாலடி. அவையறி. கூ.) சொல்லாகியதாற்றுக்கோல் என்பது பொருள்.

தாற்றுகீகோல்—மூட்கோல். (சிந்தா. சாந்தரு. கூ0உ. உரை.)

தாற்றுதல்–1. தரித்தல். (வழக்.) 2. புடைத்தாற்றிக்கழித்தல்.

தாறு—1. அங்குசம். 2. அளவு. (பிங்கல. கூசுகூச.) 3. இருப்புமுள். (உ-ம்.) "சாலநீடாறுகுத்தம்" (சேதுபு. கத்தரு. நிடு) 4. கழுகு வானழுமுதலியவற்றின்குலை.(பிங்கல.கூசுகூச.) 5. நூனுழி இது, நெய்வார்கருவியிலொன்று. 6. பரிக்கோல். (உ-ம்.) "தாறடுகளிற்றின்வீறு பெறவோச்சி" (சூ-பா. கடுo.) 7. விற்குதை. (4, 7-சூ நிக. கக: றகரவெ. கூ.)

தாறுகண்ணி—வெள்ளைக்காக்கணம். (மலை யக.) [தாலுசண்ணியெனச்சிலர் எழுதுவர்.]

தாறுகோல்–செலவுமூடுக்குங்கோல். அது "கோலின்-முறுகளைந்தேறென்றேற்றி" என்ப தறைற்பெறப்படும். (பொருந. கசுசு.)

தாறுபாய்ச்சல் — அரையிலுடுக்கப்பட்ட புடவையினுட்டலைப்பைக்கொடுக்குப்பாய்ச்சல் (வழக்.)

தாறுமாறு—முருட்டுத்தன்மை. (வழக்.)

தான்—1. அசைச்சொல். (உ-ம்.) "என்ன தோர்நன்மைதான்" (திருக்கோ. உசசு.) 2. இருதிணைக்கும் பொதுவாயுள்ளதோர் பெயர். (நன். உஅஉ.)

தான்றி—1. ஒருமரம். (சூ. நிக. ச: உசு.) 2. மருதோன்றி. (உ-ம்.) "தான்றிகவிர்மலிலை" (தைல. தைலவ. கஉடு.)

தான்றேன்றி — ஒருவராலுண்டாக்கப்படாதது. (உ-ம்.)"தான்முேன்றிமாடமே"(தேவார. திருவாக்கூர். திருஞா.)

தானநிலை — வலி, மெலி, சமன் என்னு மிசைக்கூறுபாடு. (சிலப்.)

தானஅனுட்டித்தனுதுநிறுப்பு—எழுவகைமதத்திலொன்று. (நன். பாயி. கக.)

தானிகம்— தானிகை— } கொத்துமல்லி. (தைலவ.)

தானியராசன்–கோதுமை. (வைத். பரிபா.)

தானுழவகை—1. அவை எழுத்து, அசை, சீர் என்பன. (சிலப்.) 2. தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம். (அபி தானசிந்.)

தானெடுத்துமொழில்–தந்திரயுத்திமுப்பத்திரண்டனுளொன்று; அது: பழைய சூத்திரத்தைத்தான் ஒரோவிடத்து எடுத்துச்சொல்லுதல். (உ-ம்.) "தானெடுத்துமொழிதல்பிறன்கோட்கூறல்" (நன். கச.)

தானைநிலை—ஒருதுறை. அது, இரண்டு சேனையுமறத்தையேச்சப் போர்க்களத்துச் சிறப்பெய்தியது. (புறப். வெண்பா.)

தானைமறம்—ஒரு துறை. அது, பொரவெதிர்ந்தவிருவகைசேனைதாம்பொருதுமடியாமை

பரிகரித்த ஆற்றலினதுயர்ச்சியைச் சொல்லியது. (புறப்-வெண்பா.)

தா.

திக்கங்கம்–அட்டபாலர்குறி; அவை: கிழக்காதிமுறையே கொடி, புகை, சீயம், நாய், இடபம், கழுதை, யானை காகம் என்பன. (சூ. நிக. கஉ: அ0.)

திக்கசம்—திக்கயம்.

திருநெடுங்களம்—ஒருதலம். (உ-ம்.) "பன்னு மேன்மைசரல் பரம்பரன்றிரு நெடுங்களமும்" (திருநாகைக்காரோ. திருநாட். நிஅ.)

திருநெல்வேலி—தென்னாட்டொருதலம்.

திருப்படைவீடு—சுப்பிரமணியர் ஆறுபடை வீட்டிற்குங்கூறுவர். (பத்துப்பா. முகவுரை.)

திருப்பணி—ஆலயங்கட்கும் பெரியோர்க்குஞ்செய்யும் பணி. (வழக்.)

திருப்பதி—1. தேவதலம். 2. விட்டுணு.

திருப்பம்—திரும்புகோடி. (வழக்.)

திருப்பரங்குன்று—மதுரைக்கருகிலுள்ள ஒரு மலை; இது சுப்பிரமணியக்கடவுளுக்கு பிரதான தலமாயுள்ளது. (உ-ம்.) "திருப்பரங்குன்றமர் சேயைப்போற்றுவாம்" (கந்தபு. கட வாழ். கூ.)

திருப்பள்ளி—1. தெய்வசயநம். 2. திருக்கோயில்.

திருப்பள்ளித்தாமம்—திருக்கோவிலுக்குச் சாத்தும்படி தொடுக்கப்படும் பூமாலை. பள்ளிகோவில்.

திருப்பள்ளியெழுச்சி—தேவர்கள் அநந்தல் விட்டெழுதல்.

திருப்பனையூர்—ஒரு தலம். (உ-ம்.) "உம்பர் சென்றெத்திநிற்குந் திருப்பனையூரனையாளை" (திருக்கோ. கஙஎ.)

திருப்பி—வட்டத்திருப்பி. (வைத்தியபரிபா.)

திருப்பு—1. தெரிநிலைவினைப்பகுதி. 2. வளைப்பு. (வழக்.)

திருப்புகழ்—திருவண்ணாமலையிலிருந்த அருணகிரிநாதராற் சுப்பிரமணியக்கடவுளைக்குறித்துச்செய்யப்பட்ட ஒருநூல்.

திருப்புதல்—1. கவிழ்த்தல். 2. மடக்கல். 3. மாற்றல். 4. மீட்குதல். 5. வளைத்தல். இத திருப்புதல் பெரும்பாலும் வழக்கில்வரும்.

திருப்பூட்டு—மங்கலியதாரணத்துக்குக் கூறும் வழக்கு. திருமங்கிலியம்.

திருபூடுதல்—மங்கலியந்தரித்தல்.

திருப்பெண்ணாகடம்—மெய்கண்டதேவர் திருவவதாரஞ்செய்த தலம். (கோயிற்பு. சந்தானகுரவர் வரலாறு.)

திரும்பல்—திரும்புதல். (உ-ம்.) "தேர்த்தேடிச் சென்று திரும்பி. (சேதுபு. வேதாள. உரு.)

திரும்பு—தெரிநிலைவினைப்பகுதி.

திரும்புதல்—1. கவிழ்த்தல். 2. பின்னிடல். 3. மடங்கல். 4. மாறல் 5 மீளல். 6. வளைதல். இவை வழக்கிற் பெரும்பாலும் வரும்.

திருமகணீனைநீதன்—மன்மதன். (பிங்கல. கசரு.)

திருமகள்—இலக்குமி. (உ-ம்.) "திருமகள் வலக்கண்ணாகின்செயிழையிடக்கண்" (திருவிளை. காண்மாட உ.)

திருமகளாடல்—பரவையென்றபெயர். (சூ. நிச. கூ. நு0.)

திருமஞ்சநம் — தெய்வ அபிடேகம். (திருவாதஇ. திருப்பெ. எ0. உரை.)

திருமண் — வைணவர் நெற்றியிலிடுவது, (வைணவர் வழக்கு.)

திருமயிலை — மயிலாப்பூர் (மரூஉ.)

திருமரம்—அரசு. (பிங்கல. உசுசுஅ.)

திருமலர்—தாமரை. (பிங்கல. கூ0எ.)

திருமலை—சிவபிரான் திருமாலிருக்கு மலை கட்குச் சிறப்பித்துக்கூறும் பெயர்.

திருமறுமார்பன்—1. அருகன். (சூ. நிகண். க: இ.) 2. திருமால். (பிங்கல.கூ0.) திருவாகிய மறுவையணிந்தமார்பன் என்பர், பரிபாடலில்.

திருமால்—விட்டுணு. (உ-ம்.) "புல்லாணித் திருமான்முன்னே" (அரிச்சபு. பாயிர. கச.)

திருமால்கோப்பூழ் — தாமரை. (பிங்கல. கூ0எ.)

திருமால்வதாரம்பத்து—விஷ்ணுவின் அவதாரம் பத்து; அவை: மச்சம், வராகம், கூர்மம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி என்பன. (பிங்கல. கஙஙு.) [சனகன், சனந்தனன், சனாதன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன் என விட்டுணுவின் அவதாரம் பதினொன்றாகவுங்கூறுவர்.] (பிங்கல. கசo.)

திருமாலாயுதமைந்து—விட்டுணுவின் ஆயுதம் ஐந்து; அவை: பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கும், சுதரிசனமென்னுஞ்சக்கரமும், சாரங்கமென்னும் வில்லும், நாந்தகமென்னும் வாளும், கௌமோதகியென்னுந் தண்டமாம். (பிங்கல. கஙஙு-முதல் கஙஅ-வரை.)

திருமாலுந்தி—தாமரை. (சூ. நிக. சo: இ.)

திருமாளிகைத்தேவர் — திருவிசைப்பாடியருளிய ஓரடியார். (சைவச.)

திருமார்பேறு—திருமால் பூமியிலே சிவனைப் பூசித்தவோரு தலம். (சி. சி. உ: கூ. உரை.)

திருழகம் — பெரியோர்வரைந்து விடுக்கு மோலைக்கு மங்கலமாகக்கூறு மொருபெயர். (நன்னூ. பெயரி. கo.)

திருழட்டு—பூசைத்தட்டுமுதலியன. (உ-ம்.) "இலங்குநற்றிருமுட்டிவை முதலியவீந்தார்" (வேதாரணியபு. மேன்மை. இஉ.)

திருழதல்—திரும்புதல்.

திருழுநகாற்றுப்படை — நக்கீரதேவராற் செய்யப்பட்ட ஒரு நூல். (பத்துப்பா.)

திருழற்றம்—1. குதிரைவையாளிவீதி. (சூ. நிக. இ: சசு.) 2. கோயிற்சந்நிதானம். (வழக்.)

திருழறை — திவ்யபுத்தகம் பன்னிரண்டு. (உ-ம்.) "திருமூறைகண்டபுராணம்" பார்.

திருழன்— } திருமுன்பு, தேவர்பெரியர்
திருழன்பு— } சந்நிதானம். (வழக்கு.)

திருழலட்டானம்—தில்லைமூலத்தானம். (கோயிற்பு. வியாக். கச. உரை.) [திருமூலஸ்தானம் திருமூலட்டானமெனமரீஇயிற்று.]

திருழெக்கு—குற்றமற்றகோமயமும்வடித்தெடுத்த சலமுங்கொண்டு கோயின்மூதலியவற்றை மெழுகல். (உ-ம்.) "பூசைத்தலம்புகுந்தேதிருமெழுக்காற்புதுக்கிடுவோர்" (சிவரக. நைமிச. உசு.)

திருவேனி — 1. குப்பைமேனி. (வைத்தியவக.) 2. திவ்யதேகம்.

திருவேனியழகி—குப்பைமேனி. (மலையக.)

திருவொழி—ஆகமம்; ஜைந (சிந்தா.)

திருவட்டி—கள்ளி. (வைத்தியமூ. அக.)

திருவடி—1. அநுமார். வைணவர் வழக்கு. (உ-ம்.) "திருவடியென்னுந்தன்மையாவர்க்குந் தெரியுமின்றன்" (இராமா. மயேந்திரப். உசு.) 2. திவ்யபாதம். (உ-ம்.) "திருவடியின்மிதியடியும்" (கோயிற்பு. பதஞ்ச. கக.)

திருவடிநிலை—பெரியோர்பாதுகைக்குப் பெயர். (வழக்.)

திருவடையாளம்—சிவபிரானுக்குரிய சிறந்த அறிகுறியாகியமாலை அது, உருத்திராக்கமாலை, கொன்றைமாலையைக்குறிக்கும்பெயர். (பெரியபு. திருஞானச. கூஉ0.) (சி. சி. காப்பு. க. உரை.)

திருவம்—குதிரைவத்தி. (வைத்திய பரிபா.)

திருவழது—திவ்யவுணவு. (வழக்.)

திருவருட்பயன்—கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த ஒரு சித்தாந்தசாத்திரம்.

திருவலது—கோவில்களிலே கொள்ளப்படும் விளக்குமாறு. (சி. சி. அ. கசு: மறை.)

திருவள்ளுவர்—திருக்குறள் என்னும் ஒரு நூல்செய்த ஆசிரியர். (உ-ம்.) "திருத்தகுதெய்வத் திருவள்ளுவர். (திருவள்ளுவமாலை. க.)

திருவன்—திருவுடையவன்.

திருவனம்—துளசி. (வைத்தியபரிபா.)

திருவாக்கு—திவ்யவாக்கு. (வழக்.)

திருவாசகம்—1. திருவாக்கு (வழக்.) 2. மாணிக்கவாசகசுவாமிகளாற்செய்யப்பட்ட ஒரு தமிழ்வேதம்.

திருவாசி—மரத்திலுலேனும் உலோகங்களிலுலேனும் வில்லாகாரமாய்ச்செய்து விக்கிரகத்தின்மேல் வைக்கப்படுவதொன்று. (உ-ம்.) "ஓங்காரமேநற்றிருவாசி" (உண்மைவிளக். கூசு.)

திருவாசிகை—திருவாசி.

திருவாடுதண்டு–திருவுருவைச்சுமக்கு மரம். ஓர் குழூஉக்குறி.

திருவாத்தி—ஒரு பூமரம்.(உ-ம்.)"திருவாத்தியணைந்தருளி. (பெரியபு. சிறுத். சகூ.)

திருவாதிரை—ஒருநாள். (பிங்கல. உசச.)

திருவாபரணம்—தெய்வாபரணம். (வழக்.)

திருவாய்மொழி — 1. திவ்வியவாக்கு. 2. வைணவரது தமிழ்வேதம்.

திருவாயில்—திருக்கோயில்வாயில். (வழக்.)

திருவாரூர்–ஒரு தலம். (உ-ம்.) "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்குமடியேன்" (திருத்தொண்டத்தொகை.)

திருவாவினன்குடி—சுப்பிரமணியக் கடவுளுடைய வீசேடத்தலங்களுளொன்று. அது, ((பழநி.) (திருமுருகாற்றுப்படை பார்.)

திருவான்கோடு--ஒரு பட்டினம்.

திருவானைக்கா– திருச்சிராப்பள்ளிக்கருகில் ஒரு தலம். (திருவானைக்காபுரா. பாயிரம்.)

திருவில்--இந்திரவில். (உ-ம்.) "திருவிலல்லதுகொலைவிலறியார்" (புறநா. உ0.) தெய்வவில் என்றபடி.

திருவிழா—உற்சவம். (உ-ம்.) (திருவானைக். திருவிழாப்பட.)

திருவிளக்கு—திவ்யதீபம். (உ-ம்.) "திருமாலைதிருவிளக்கோடி" (சிவரக.பசாசுமோசந.ஙசு)

திருவிளம்—1. சிவதை. 2. திராய். (1, 2-மலையக.)

திருவிளையாட்டு—தெய்வவிளையாட்டு.

திருவிளையாடல்—1. ஒரு புராணம். (உ-ம்.) (திருவிளையாடற்புராணம்.) 2. தெய்வவிளையாட்டு.

திருவிளை—திருமகள். (உ-ம்.) "போதிலார் திருவிளைபுகழுடைவடிவென்றும்" (சிலப். மங்கலவாழ்த்து.)

திருவுந்தியார்–பதிஞண்குசித்தாந்தசாத்திரங்களுளொன்று.

திருவுரு — திவ்யமேனியாகிய விக்கிரகம். (உ-ம்.) (கருணைதிருவுருவாகி. (கோயிற்பு. பாயிர். உ.)

திருவுளம்— திவ்யசித்தம். (உ-ம்.) "அச்சிறையிலேசேறற்குன்றன்திருவுளமறியேனென்றான்" (அரிச்ச-பு. மயாக. கசு.)

திருவூசல்—
திருவூஞ்சல்— } திவ்யவூஞ்சலாட்டு.

திருவேளூர்நல்லூர்—ஒரு தலம்.

திருவெழுச்சி–தெய்வமெழுதல்.(உ-ம்.) "எந்தைபிரான்றிருவெழுச்சியின்பமெய்த" (கோயிற்பு. திருவிழா. உடு.)

திருவெழுத்து—பஞ்சாக்கரம். (உ-ம்.) "இது திருவெழுத்தினீடே" (சிவப்பி. க0: கசு.)

திருவென்றசாரம்—காசிச்சாரம்.(வைத்திய பரிபா.)

திருவேங்கடம்—ஒரு தலம்.

திருவேடம்—1. சைவமடங்களிலுள்ள வடியார் காதணி. (குழூஉக்குறி.) 2. திவ்யவேடம்.

திருவேரகம்–சுப்பிரமணியக்கடவுளுடைய வீசேடத்தலங்களுளொன்று.திருமுருகாற்றுப்படைபார்.

திருவோற்றடை—விக்கிரகங்களுக்கு அபிடேகமானபின்னெற்றுஞ்சீலை.

திருவோற்றியூர் — சென்னைக்கருகிலுள்ள ஒரு சிவதலம்.

திருவோணம்—ஒரு நாள். (பிங்கல. உசo.)

திருவோலக்கம்—மகாதிவ்யசபை,ஓலக்கம்-சபை. (ஞானமி. சo. உரை.)

தீரேகம்—தேகம். (வழக்.)

தீரேசநீத்தி—திராய். (வைத்தியமூ. அக.)

தீரேதம்—திரேதாயுகம். (உ-ம்.) "என்னே திரேதத்திரேணுகையேகூற்றுவனுந்-தன்னேர்திரேதத்திற்சாகினியே" (நீதிவெண்பா.)

தீரேதாயுகம் — நான்குயுகங்களில் இரண்டாவதுயுகம்; அது: பன்னிரண்டு இலட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம் மனுடவருடங்கொண்ட காலம். (சி-லி. ஞாந. உச. உரை.)

தீரேந்தி—திராய். (மலையக.)

தீரை—1. அலை. (உ-ம்.) "திரைகடியிற்றுமால்" (அரிச்ச. பு நாட்டு. கூo.) 2. உடற்றிரை. (உ-ம்.) "நரைதிரைமூப்பிவைமாற்றி" (இராமா. குலமுறை. ச.) 3. கடல். (உ-ம்.) "எற்றுந்திரையினமிர்தை" (திருக்கோ.கஙச.)4. சுருள். (உ-ம்.) "கப்புரப்பசுந்திரைகதிர்செய்மாமணி" (சிந்தா. நாமக. கசுஅ.) 5. திரைச்சீலை, இதனை இடுதிரையென்பர் நிகண்டில். 6. தெரிநிலை வினைப்பகுதி. (உ-ம்.) "திரைகடலோடியுந்திரவியந்தேடி" (கொண்றைவேந்தன்.) 7. யாறு. உ-ம்.) "தெண்டிரைசேர்சடையாருந்திருவுள்ளமகிழ்ந்தருளி" (கோயிற்பு. இரணி. ருக.) 8. வெற்றிலை.(உ-ம்.)"இளிந்தகாய்கமழ்திரைவாசமீண்டி" (சிந்தா. கேம. சுஅ.) 9. வைக்கோற்புரி.

திரைத்தல்—1. சுருக்கல். 2. சுருட்டுதல். (உ-ம்.) "நிலந்திரைக்குங்கடற்றானை" (புறநா. கூஎ.)

திரைதல்— 1. உறைந்தபால் கண்விடுதல். (உ-ம்.) "திரைந்தபால்" (வழக்.) 2. சுருங்கல். 3. திரங்கல். 4. திரளல், சுருள்.

திரைந்து—சாய்ந்து. (உ-ம்.) "சில்லம்போ

தின்மேற்றிரைந்ததேனுலாம்" (சிந்தா. கோவிந்தை. ருே.)

திரைப்பு—திரைதல்.

திரையல் — 1. சுருங்கல். 2. வெற்றிலே. (உ-ம்.) "பாசிலைத்திரையலும்பளிதமும்படைத்து" (மணிமே. கச்சிமாந. உசாகூ.)

திரையன்—நெய்தனிலத்தலைவன்.

திரைவு—திரைப்பு.

திரோகிதம்—1. மறைக்கப்பட்டது. (சி. சி. உ: கூஉ. சிவாக்.) 2. மறைவு.

திரோதகம்— மறைத்தல். (உ-ம்.) "ஞாந திரோதகமென்னில்" (சி. சி. உ: அடு. சிவாக்.)

திரோதசத்தி— மாயை, கன்மம், ஆணவம், வைந்தவம் என்னும் நால்வகைப்பாசத்தினுடைய அநாதித்தன்மைநிகழ்வதற் கேதுவாயிருக்கின்ற சிவசத்தி. இது கிரமத்திலேபோன்ப மாவதாய் அந்தப்போன்பத்திற்குக் காரணமாகுஞ் சிற்றின்பத்திற்கு நிமித்தமாகிய சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவமென்கின்ற நான்கு கிருத்தியங்களே ஆரணி, செநகி, ரோசயித்திரி எண்னும் மூச்சத்திரூபமாயிருந்து பண்ணுவது. (சி. சி. கை; சி. சி. ஞாகப்.)

திரோதம்—திரோதமலம்.(உ-ம்.)"ஆசுறுதி ரோதமேவாதகலுமாசிவமுண்ணுக" (சிவப்பிர) திரோதம் - மறைப்பு.

திரோதமலம்–பஞ்சமலங்களுளொன்றுகிய திரோதாயி. (உ-ம்.) "அம்மலங்கட்கதுகூலமாய் நின்றுசெய்யுஞ்சிவசத்தி பாசசத்தியி னடங்குமாயினுந்தொழில்வேற்றுமைபற்றியுபசாரத்தாற்றிரோத மலமெனவேறுவைத் தெண்ணப்படும்" (சி. சி. உ: அள. சுப்பி.)

திரோதயம்—திரோதம்.

திரோதாநகரி — திரோதாநசத்தி. (உ-ம்.) "ஏயுமும்மலங்கடத்தந்தொழிலினையியற்றவேவுந் - தூயவன்றன்தோர்சத்திதிரோதாநகரிய தென்றும்"(சி.சி. உ: அள.)[திரோதாநத்தைச் செய்வதென்னும்பொருட்டு.]

திரோதாநசத்தி — திரோதசத்தி. (உ-ம்.) "வள்ளலாலாமெனவே, திரோதாநசத்தியதுஉண்மையும்பெற்றும். அ துபாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின்வழிநின்று மோகமுதலிய வற்றைத் தொழிற்படித்துவதாகிய சிவசங்கற்பத்திற்கேதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலகன்மமாயை திரோதாநம் மாயாகாரியமென்னுமைவகைப்பாசமுங் கண்டுகொள்க" (சிவஞாநபோ. உ: உ-ம் அதிகரணம்.சிவஞா.)ஆன்மாக்களோடு ஆணவமலம் பக்குவமாகும்படி அது மறைத்தற்கனுகூலஞ் செய்வது என்பர். (சிவப்பிர. உ: உ. உரை.)

திரோதாநம் — 1. திரோதாநசத்தி. 2. மறைபபு

திரோதாயி — திரோதாநசத்தி. (உ - ம்.) "மூயங்கிநின்றுபாகமிகவுதவு திரோதாயியொன்ற" (சிவப்பிர. உ: கச.)

திரோபவம்–1. பஞ்சகிருத்தியத்தொன்று. (சைவவி.) 2. மறைவு. (உ-ம்.) "செவ்வருட்குறியிலீசன்றிரோபவஞ்செய்தான்" (சேதுபு. சங்கரபாண். கoஉ.)

திரோபவித்தல் — திரோபவஞ்செய்தல். (சி.சி. உ: கறு. சிவஞா.)

திரோபாவம்—பாசங்களுக்குச் சாமர்த்திய முண்டாக்குதலாகிய அநுக்கிரகத்தைச்செய்து அதனுற் சேதநர்களே ஏற்றபோகங்களே வழுவாமல் உண்ணும்படிமறைத்தல். "திரோபவம்" 1 பார். (சைவப்பி. டுசூ.)

திரௌபதி — பஞ்சபாண்டவர் மனைவி. (உ-ம்.)"இன்னமுதச்-சொல்லாய்நல்லாய்மென்பூவாய்தோகாய்பாவாய்திரௌபதிபோ" (பாரத. திரௌபதிமாலை. சசு.)

தில்—1. ஆசையுங், காலமும், ஒழிந்தசொல்லுமாகிய மூன்றுபொருளைத்தருமோ ரிடைச்சொல். (உ-ம்.) "விழைவேகாலமொழியிசைதில்லே" (நன். சாகுக.) 2. ஓரசைச்சொல். (சூ. நிக. கo: கஎ.)

தில்லகம் — வெள்ளிலோத்திரம். (உ-ம்.) "மூப்பாலநறுக்குமூலங் – குட்டமகிழில்லகமூருதி" (தைல. தைலவ. எச.)

தில்லம்—காடு. (உ-ம்.) "தில்லமூம்பலதேசமுங்கடந்தவண்சென்றான்"(சேதுபு. யங்கல. எசு.)

தில்லி—டில்லிப்பட்டணம்.

தில்லியம் — 1. எட்சாட்டி, எள்ளுதிர்ந்த செடி.) 2. நல்லெண்ணெய். (உ-ம்.) "தில்லிய முழுருவினுக்கொருகரமதுரநிசிங்கி முக்கடுமுப்பலம்" (தைல. தைலவ. சு.)

தில்லை–1. ஒருமரம். (உ-ம்.) "தில்லைமுல்லை வண்ணிபுன்னை" (சிவரக. தேவர்முறை. க.) 2. சிதம்பரம். (உ-ம்.) "தில்லை–மீதிலங்திருவருடமேவியபலன்மேவும்" (சேதுபு. சேதுபல. ச.) [தில்லைமரக்காடு மிகுதியாயிருந்ததினால் இப்பெயர் வழங்கிற்று.]

தில்லைநாயகம்—ஒருநெல். முக்கூடற்பட் பிரபந்தத்திற்காண்க.

தில்லைவனம்—சிதம்பரதலம். (உ-ம்.) "தடமாடியர்தில்லைவனத்து" (கோயிற்பு. வியாக்கிர. கo.)

திலகம்—1. கலித்துறை. 2. சிந்தூரம். (பிங் கல. கஉஉ.) 3. திலோதகம், எள்ளுநீரும்.

4. நுதற்குறி. (பிங்கல. கஙூ உசா.) 5. பொட்டு. (உ-ம்.) "சிந்தூரத்திலகநுதற்சிந்தூரத்தின்மருப் பொசித்தசெங்கண்மாலே" (பாரத. கிருட்டி. கச.) 6. மஞ்சாடிமரம். (உ-ம்.) "திலகமும்வகுளமுஞ்செங்கால்வெட்சியும்" (மணிமே. மலர்வன. கசுக.) 7. மேன்மை. (உ-ம்.) "திலகமாமெந்தைநாமஞ்சேர்ந்து" (சிவரக. காயத்திரி. உஎ.) மேலாதல் என்பர் நச்சினார்க்கினியர்.

திலகலம்—செக்கு.

திலகற்கம்—திலகடம், பிண்ணாக்கு.

திலகாதுகன்—வாணியன்.

திலதண்டகன்—வாணியன்.

திலதம்—1. சுட்டி. 2. நெற்றித்திலகம்.

திலபருணி— } சந்தனம். (மலையக.)
திலபருணிகை— }

திலபவம்—எண்ணெய். (உ-ம்.) "வடித்தபடியேதிலபவம்வார்த்து"(தைல.தைலவ.உறு.)

திலபாவி—கொளுஞ்சிமரம்.

திலபாவிநி—சாதிமல்லிகை.

திலம்—1. எள். (உ-ம்.) "செவ்விளநீர்"பார். (பிங்கல. உகஎ0.) 2. மஞ்சாடிமரம். (வைத்தியமூ. அக.)

திலமயூரம்—ஒருவிதமயில். [எள்ளுப்போலும் புள்ளிகளையுடையமயில் என்றபடி.]

திலரசம்—எண்ணெய். (உ-ம்.) "திலரசமுங்கலந்து" (தைல. தைலவ. சஙூ.)

திலவகம்—வெள்ளிலோத்திரம்.(வைத்தியமூ. அக.)

திலாசா—தைரியப்படுத்தல். [பார்சி.] திலாசாப்பண்ணிவருகிறேன். (வழச்.)

திலீபன்—ஓரரசன். (உ-ம்.)"தெண்ணீர்மை மதியினையான் றிலீபனெனுந் தேர்வேந்தன்" (இரகு. அசியற். எ.)

திலோத்தமை— 1. ஓரரம்பை. (உ-ம்.) "திராரியேவலிஞல்வந்ததிலோத்தமை தன்னைக்கண்டார்" (பாரத. இந்திர.சஙூ.) 2. பதுமையின்முறு; புத்திசேனன்தாய். (சிந்தா.)

திவ்யசாதிசர்ப்பம்—சர்ப்பபேதமிரண்டனுளொன்று. அது தலைமையும் உத்தமசாதியும் கடவுட்பாம்புமாகிச் சிறப்புற்று அட்டதிக்குகளில்வாசஞ்செய்யும் வாசுகி, அநந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என எட்டப்பேதப்படும். (சீவரட். சஙூக.)

திவ்யம்—திவ்வியம். (உ-ம்.)"தொண்டருக்கிசைந்ததிவ்யவிம்பகோடியே" (சிவரக. நந்திகேசுர. கஙூ.)

திவ்யத்தோனி—தேவர்கள் அருகனுக்குச்செய்யு மெண்வகைச்சிறப்பினுள் ஒன்று. (சிந்தா.)

திவ்வியது—திவ்வியமானது.

திவ்வியநாநம்—சூரியகிரணம்பாயு மழைத்தூறலிற்படிதல்; இஃது ஏழ்வகை நாநத்தொன்று.

திவ்வியம் — 1. இனிமையானது. (வழக்.) 2. தெய்வத்தன்மை, தைவிகம். (உ-ம்.) "திவ்வியநரம்பும்" (திருவிளை. திருநகரப் படை.) 3. மேன்மையானது. (உ-ம்.) "அரவணிவேணியான்-றிருவுளஞ்செய்ததிவ்வியமென்மொழிப் பொருளும்" (அரிச்ச. பு. மயாந. சறு.)

திவ்வியழத்திரை — ஒருவகை மூத்திரை. (சைவச. பொது. கூருச. உரை.)

திவ்வியரத்தினம்—சிந்தாமணி, சூடாமணி யென்னுமிரத்தினங்கள்.

திவ்வியவுடம்—தேவவுருடம்; அது: மானிடவுருடம் முந்நூற்றறுபத்தைந்து கொண்டது.

திவ்வியலிங்கம் — அமூர்த்திசாதாக்கியம். (உ-ம்.) "மேலைத்திவ்வியலிங்கமெனவு - மூலத்தம்மமெனவுமொழிந்தனர்" (சதாசிவ. கஉ.)

திவ்வியாதிவ்வசம்பந்தம் — தேவ இருடியிடத்திருந்து மநுட இருடியிடத்துவந்த ஆகம சம்பந்தம்; இது ஐந்தாவது சம்பந்தம். (சி-லி. சரி. உ.)

திவச்சுவான்—துவாதசாதித்தரிலொருவன்.

திவசகரன்—சூரியன்.

திவசம்—நாள். (உ-ம்.) "கற்பாந்த - திவசம் பொரினும்" (பாரத. கிருட்டி. உஙூ.)

திவடல்—துவளுதல்.

திவண்ட—திரளத்த. (சிந்தா.)

திவண்டது—குழைந்தது. (சிந்தா.)

திவண்டல்—திவடல்.

திவண்டன—விளங்கின. (திருக்கோ. கூ00 உரை.)

திவம்—நாள். (உ-ம்.) "திவங்கலாற்றி - மற்றெங்கெழுந்தாலென்னசெங்கதிரே- திருச்சிற்றம்பலதேசிகர்கலம்பகம்" பார்.

திவலை—1. மழை. (சூ. நிக. க: அகூ.) 2. மழைத்துளி. (பிங்கல. சுகூ.)

திவவு—செங்கோட்டியாழுறுப்பினுளொன்று; அது: நரம்புகளைவலிபெறக்கட்டும் வார்க்கட்டு. (உ-ம்.) "தந்திரிகரத்தொடுதிவவுறுத்தியார்த்து" (சிலப். புறஞ்சேரி. கo எ.)

திவளா—1. அசைய. 2. விளங்க. (1,2 சிந்தா.)

திவளல்—1. அசைதல். (சிந்தா.) 2. சேர்தல். (உ-ம்.) "பன்மணிதிவள்கதிர்மேகலைதிளைக்குமல்குலும்" (கூர்ம.திருக்கல். உஎ.) 3. துவளல். (சிந்தா.) 4. விளங்கல். (உ-ம்.) "தார்திவளப்பதுமனிவ்விருந்தோன்"(சிந்தா.கஙூ.உகூறு.)

தீவஞ்தல்—திவளல்.
தீவா—பகல். (பிங்கல. உஉக.)
தீவாகரம்—ஒரு நிகண்டு.
தீவாகரன்—1. சூரியன். (உ-ம்.) "இலகொளி விட்டொருகோடிதிவாகரரென்ன விளங்கியிரு ப்பதுவே" (மதுரைப்பதிற்று. நுகூ.) 2. சூரிய னது துவாதசராட்சதர்களாகிய மெய்காவலர்க ளொருவன். (வி-ணி. உசநு.) 3. திவாகரஞ் செய்தவன்.
தீவி—1 சுவர்க்கலோகம். (உ-ம்.) "திவிதல போகபேதந்திளைப்பர்" (சிவதரு.சிவதரும.கக.) 2. சூரியன். (உ-ம்.) "திவிவரநாழிகைபத்தென வாயுத்திசையுறுமே" (கெவுளிசாத்திரம்.) 3. புலி. [குறுக்கல்விகாரம்.] (பிங்கல. உசகக.)
தீவிதிராட்சம் — கொடிமுந்திரிகை. (மலை யக.)
தீவிபநாமம்-கொடிவேலி.(தைல.தைலவ.)
தீளைக்தும்—அசையும். (சிந்தா.)
தீளைத்தல்–1. அசைதல். (சிந்தா.) 2. அதுப விக்தல்.(உ-ம்.)"கண்டவடிவாற்றிளைப்பதற்கு" (திருவிளை. வளை. உகூ.) 3. அழுந்தல், (உ-ம்.) " வள்ளற்றுரகலந்தன்னில்வனமுலைதிளைக்க " (நைடதம். அன்ன. கண். எ.) 4. அறுதொழுகு தல். (சிந்தா.) 5. ஒருதொழிலே யிடைவிடாது பயிறல். (சிலப். அரும்பத.) 6. நிறைதல். (சூ. நிக. கக: ளகரவெ. கூ.) 7. நெருங்கல். (ஐங் குறுநூ.) 8. பெருகுதல். (உ-ம்.) "இக்கடம் பவனத்தின்றுகண்டுவகைதிளைத்தேம்" (திரு விளை. இந்திர. எசு.)
தீளைத்தவர் — தொழிலில் இடைவிடாது பயின்றவர். (சிந்தா.)
தீளைப்ப—1. அசைய. (உ-ம்.) "திருந்து காழல்குறிளைப்பவுடீஇ" (திருமுரு. உ0ச.) 2. விளையாட. (உ-ம்.) "இளையார்திளைப்ப" (புற நா. உருஙூ.)
திறப்பட—கூறுபட. (சிந்தா.)
தீற்றி—1. இறைச்சி. (பதிற்றுப்.) 2. தின் பன. (உ-ம்.) "தேனெடுகடமான்பாலுந்திற்றி கள்பிறவுநல்கி" (கந்தபு. வள். எசு.) (மதுரைக் கா. உகக. அடி. உரை.)
திறக்ததல்—திறத்தல். (உ-ம்.)"கதவினைத் திண்ணமாகத்திறந்தருள்செய்மினே " (தே வார. திருமறை. க. திருநா.வு.)
திறத்தல்—1. திறக்குதல். (உ-ம்.) "பூட்டு" பார். 2. பிளவுபடுதல். 3. வலுத்தல்.
தீறத்தார் — பகுதியார். (உ-ம்.) "மூவிவர் விண்ணுராகியதிறத்தாரோடுமணுகுதி" (கந்த பு. பிரமயாக. சு.)
திறட்படுதல்—1. சீர்ப்படல். 2. தேறுதல். 3. பலப்படுதல்.
தீறப்பணம்–துறப்பணம், தமரூசி.(குழூஉக் குறி.)
தீறப்பு—1. காவலின்மை. 2. திறத்தல்.
தீறம்—1. அதிகம். (வழக்.) 2. அரையென் னும் ஓரிலக்கணம். (தைலவ.) 3. இடம். (மணி மே.) 4. உறுதி. (உ-ம்.) "அறைந்தவைகட் கெவ்விதத்துந்திறந்தான்மண்ணே" (வைதல. கஅ.) (பிங்கல. கo அள.) 5. ஐசுவரியம். 6. கற்பு. (சிலப்.) 7. காரணம். (பிங்கல. உஉ அகூ.) 8. குறைநரம்புள்ளவீணை. (சூ. நிக. கo: சக.) 9. சாமர்த்தியம். 10. சுற்றம். (உ-ம்.) "புனை கடிமாலைமாதர்திறத்திது மொழிந்துவிட்டார்" (சிந்தா. சுரமஞ்ச. எள.) 11. தன்மை. (மணி மே.) 12. நிலைபேறு. (பிங்கல. கஅoள.) 13. வகை. (உ-ம்.) "அறமுதனுன்குமகலிடத்தோ ரெல்லாந்திறமுறத்தேர்ந்துதெளிய" (வள்-மா. கூஅ.) கூறுபாடு. (புறநா.) 14. வரலாறு. (மணிமே.) 15. வலி. (பிங்கல. களசுக.)
திறம்பல்—1. தவறுதல். (உ-ம்.) "சிராத்த சேடத்தை முகந்துகொண்டு திறம்பிடாமல் " (ஏகாதசி. காலநிர். நுகூ.) 2. மாறுபடல் (உ-ம்.) " திரம்பாதேபணிசெய்துநிற்கையன்றே சீரடி யார்தம்முடையசெய்திதானே" (சி. சி. கூ: சக.)
தீறம்புதல்—திறம்பல்.
திறமை—1. சமர்த்து. 2. வகைமை. 3. வலிமை
திறல்—1. உபாயம். (உ-ம்.) "ஒருநிருதனை வேறற்-கிரணத்திறல்குரு வீருளிற்றரவர" (கோயிற்பு. திருவிழா. சுசு.) 2. ஒளி. (உ-ம்.) "திறல்விடுதிருமணியிலங்குமார்பின்"(பதிற்று. சசு.) 3. வலி.(உ-ம்.) "அழலெனவுயிர்க்குமஞ் சுவருகடிந்திறல்" (திருமுரு. கசக.) 4. வெற்றி. (உ-ம்.) "திறல்புனைந்துவைகினர்" (திருவிளை. வளைய. சுசு.)
திறவோன்–1. வலிமையுடையவன். (உ-ம்.) "செங்கோலறத்தின்முறையேசெலுத்துந் திற லோன்" (அரிச்சபு. மயாந. உச.) 2. நிண்ணி யன். (சூ. நிக. உ: நிo.)
திறவாளி—
திறவாள்—
} வலியன்.
திறவிது—செவ்விது. (உ-ம்.) "திருவிளை கடிமனைதிறவிதின்மொழிவாம்" (சிந்தா.நாமக. கூநு.)
திறவு—1. உளவு. (வழக்.) 2. திறந்தல், வெளிப்படை. (உ-ம்.) "திறவிலேகண்டகாட்சி யே" (திருவாச. பிடித். சு.)
திறவுகோல்—தாட்கோல். (வழக்.)

திறன் —1. சரணம். னகரம்போலி. 2. கூறுபாடு. 3. வரலாறு. (உ-ம்.) "நூலேதுவல் வோனுவலுந்திறனே"(நன். பாயி. ரூ.)4. வழி. (உ-ம்.) "அறனெனுபெயர்ந்ததிறனறிசெங்கோல்" பொருந. உரூ0.)

திறனல—நெறியல்லாதன. (சிந்தா.)

திறனில்யாழ் — நெய்தல்யாழ்த்திறம். (சூ. நிக. க0: ரூச.)

திறுதிறுத்தல்— }
திறுதிறுப்பு— } அச்சக்குறிப்பு.
திறுதிறெனல்– }

திறை–அரசிறை, திறைப்பொருள். (உ-ம்.) " ஒன்னர்திறைகொணர்ந்துபுகுவதையன்றி " (கூர்மபு. தக்கன்வமி. ரூக.)

தின்—தெரிநிலைவினைப்பகுதி.

தின்பன—திற்றி. (பிங்கல. கஉருசு.)

தின்மர் — தின்பவர். (உ-ம்.) "உண்மருந் தின்மரும்" (பதிற்றுப். உச.)

தின்மார்—தின்மர். (பதிற்றுப்.)

தின்மை—தீமை. (உ-ம்.)"தின்மைநெறிவர வேண்டா" (பழமொழிவி. ச.)

தின்றல்—உண்ணல். (சூ. நிக. க: சு)

தின்றி—தீன்.

தின்று–கடித்து. (உ ம்.)"வாளெயிறுதின்று" (கூர்மபு. தக்க. வமி. நுசு.)

தின்னல்—1. அழித்தல். (உ-ம்.) "அறத்தினைத்தின்ற" (திருவிளை. மாயப். ரூசு.) 2. கடித்தல் (உ-ம்.)"வாளெயிற்றிற்றின்னவோ" (இராமா. சூர்ப்பந. கஉக.) 3. மெல்லுதல். வெற்றிலைபாக்குத்தின்றான். (வழக்.)

தின்னி–தின்கிறவன். மிகத்தின்பவனுக்குக் கூறுவர். (வழக்.)

தின்னுகை— }
தின்னுதல்— } தின்னல்.

தினவு—சொறி. (உ-ம்.) "பகைவர்ப்பெரு மைம்யாற்றினவுறதடந்தோள்" (கூர்மபு.தக்கன் வமி. நு0.) (பிங்கல. ரூகூஅ.)

தினவெடுத்தல்—சொறிவுண்டாதல்.

தினுசு—வகை. (உ-ம்.) "தன்மூலம்"பார். (தைல. தைலவ. உஉ..)

தினை—ஒருவகைத்தானியம்; அது: வெள் ளைத்தினை, அச்சித்தினை, காட்டுத்தினை, செந் தினை, கருந்தினை, அணில்வாற்றினை எனப் பலவகைப்படும். (உ-ம்.) "மொய்வரைத்தினை மென்சோறு" (பெரியபு. கண்ணப். ரூச.)

தினைக்குருவி—ஒருசிறு குருவி.

தினைச்சாமை—ஒரு சாமை.

தினைத்தாள்—அருவி. (பிங்கல. உரூஅக.)

தினைப்பொழுது — மிகச்சிறிய பொழுது. (உ-ம்.) "தினைப்பொழுதுமவப்பொழுதாய்ச்செ லுத்தாதார்சிவகணத்தின்செய்கையோரே" (சி வரக. நந்திநமனு. கசு.)

தீ.

தீ—1. அறிவு. (உ-ம்.) "தீதாவசவநிம்லர் செல்வா" (கந்தரந். ரூக.) 2. இனிமை. (உ-ம்.) " தீயவாஞ்சுவைப்பாலாவிற்றேவராவ தி கம் " (திருவிளை. மூர்த்திவி. கக.) 3. கொடுமை. (உ-ம்.)"தீமலியிடுக்கண்டீரத்தசேவடி"(சேதுபு. சேதுச்சரு. ச.) 4. கோபம். (சிந்தா.) 5. தெரி நிலைவினைப்பகுதி. 6. நரகம். (வள். ரகூஅ.) 7. நெருப்பு. (உ-ம்.) "பகற்பெய்யார்தீயினு ணீர்" (ஆசாரக்கோவை. சு.) 8. பஞ்சபூதத் தொன்று.

தீக்கஞ்சி—ஆதிகருப்பூரம், இது: தீபமேற் றுதற்குரிய கருப்பூரம். (வைத்தியபரிபா.)

தீக்கடன்–ஈமத்திலே அக்கினியாற்செய்யுங் கடன். (உ-ம்.) "நீர்க்கடனுந்தீக்கடனுஞ்செய் விப்பீர். (பாரதவெண்பா.)

தீக்கடைகோல்—ஞெலிகோல். (பிங்கல. நு0.)

தீக்கணம்—கணப்பொருத்தவகையுளொன் று; அஃது: இடைநேராகிய புளிமாக்கனி. (இலக்கணவி. அ00. உரை.)

தீக்கணவகை–தேயு, வாயு, அந்தரம், சூரி யன், இந்நான்குகணமுந்தீது.(பிங்கல.கஙசங.)

தீக்கணைக்கிரி—ஒரு நோய். (உ-ம்.) "விட மந்தீக்கணைக்கிரி" (தைல. தைலவ. சஉரூ.)

தீக்கதர்—தீட்சதர்.

தீக்கதிக்கும்பச்சை—நாகப்பச்சை. (வைத் தியமூ. அக.)

தீக்கருமம் — 1. அக்கினிகொண்டுசெய்யுங் கருமம். (உ-ம்.) "நவையிறீக்கருமம்யாவும்"(கூர் மபு. பதிக. உநி.) 2. ஈமத்திற்செய்யும் அக்கினி காரியம். 3. தர்க்கிரியை.

தீக்கரை—மூருக்கு. (மலையக.)

தீக்கல்—தீக்காலுங்கல், அது: சூரியகாந்தக் கல்.

தீக்காரியம்—அக்கினிகருமம்.

தீக்காலி—ஓரசுரன். (பெரியபு.திருக்குறிப் புத். ரூ0.)

தீக்கிணதாராத்திரசய்யாநரகம்— ஒரு நர கம். (உ-ம்.)"மானுடமஞ்ஞான்றுதீக்கிணதாரா திரசய்யாநரகத்தடைப்பர்" (சேதுபு. நாடாரா. உஎ.)

தீக்கித்தல்—தீட்சித்தல்.

தீக்கிதர்—தீட்சிதர். (சி. சி. உ: எ கூ. மறை.)

தீக்குணம்—1. தர்க்குணம்; அது: பொய் சொல்லல், சோபித்துச்சொல்லல், கோட்சொல்லல், பயனிலசொல்லல் என்னும் வாக்கின் குணம்நான்கும்; களவுக்குப்போதல், வரிதேதொழில்செய்தல், கொலைசெய்தல் என்னும் காயத்தின் குணமூன்றும்; கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசையென்னும் மனசின் குணமூன்றும் ஆகப்பத்துவகைப்படும்.(சி. சி அ: கஉ. நிரம்ப.) 2. தீயின்குணமைந்து. பசி,சோம்பு,மைதனம், காட்சி, நீர்வேட்கை. (சிலப்ப.)

தீக்குணர்—கீழ்மக்கள். (சூ. நிக. உ: நிச.)

தீக்குதல்—தீயச்செய்தல்.

தீக்குத்தீத்தல்—ஆவேசமுதலியவற்றுற் றீப்பாய்தல். (வழக்.)

தீக்குநவி—தழல்விழுங்கி. இது மலையாள தேசத்தில் மிகுதியாயுளதென்பர். (வழக்.)

தீக்குவெறுங்துகை-சவுக்காரம். (வைத்திய பரிபா.)

தீக்குறி—தூர்க்குறி.

தீக்கூர்மை—1. இந்துப்பு. 2. திலாலகணம். (1, 2-வைத்தியபரிபா.)

தீக்கை—1. தீட்சை. (உ-ம்.) "அவன்செய் தீக்கைதகக்கொண்டு"(சைவச. பொது. கஉநி.) 2. விரதநியமம்.

தீக்கையோன்—1. அரன். 2. குரு. 3. தீட்சைபெற்றோர்.

தீக்கோள்—தூர்க்கிரகம். உள்ளமுடையான் பார்.

தீங்கனி—1. இனிமையானபழம். 2. நெல்லிக்கனி. (உ-ம்.) "கைத்தக்கடிதடுங்காஞ்சிரந் தின்பவன்றீங்கனியைத்தப்பித்து" (திருநூற். நிசு.)

தீங்கினர்—தீயோர்.

தீங்து—1. குற்றம். (உ-ம்.) "தீங்கிலாதின னங்கேட்கச்சிந்திக்கின்றேம்" (சிவரக. நந்தி மனு. கூ.) 2. கேடு. (சூ. நிக. அ: சுஎ.) 3. துன்பம். (உ-ம்.) "ஒலமிட்டுத்தீங்குணர்ந்தோ ரல்லற்றேறுய்" (திருக்கோ. களக.)

தீச்சகுநம்—தூர்ச்சகுநம்.

தீச்சடம்—அமுரி. (வைத்தியபரி.)

தீச்சணம்—மிளகு. (வைத்தியபரி.)

தீச்சலம்—கடனுரை.

தீச்சனகம்—இலுப்பை. (வைத்தியபரி.)

தீச்சுடர்—1. தீபம். (உ-ம்.) "தற்புகழ்தல்" பார். 2. வெடியுப்பு. (வைத்தியபரிபா.)

தீச்சொல்—1. சாபம். 2. சிறுசொல். (பிங் கல. உ0கஉ.) 3. பழிச்சொல்.

தீஞ்சுவை—நற்சுவை.

தீஞ்சேறு—இனியபாகு. (உ-ம்.) "அறையுறு கரும்பின்றீஞ்சேற்றியாணர்" (பதிற்று. எடு.)

தீஞ்சொல்—இனியசொல். (உ-ம்.) "மாங் குயிலினையதீஞ்சொல்" (கைடத. சுயம்வர.கஉ.)

தீட்டணபத்திரம்—1. அலரி. 2. கொத்த மல்லி. (1, 2-வைத்தியபரிபா.)

தீட்சணபுட்பம்—கராம்பு. (மலையக.)

தீட்சணம்-1. கஞ்சாங்கோரை. (மலையக.) 2. கூர்மை. 3. நஞ்சு. (வைத்தியபரிபா.) 4. நிவிர்த்திகலையிற் பிருதிவித்தத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப்புவநங்களுளொன்று. (சி-வி.கிரி. உக. உரை.) 5. மிளகு. (உ-ம்.) "மலையசந்தீட் சணம்பா-லதிலிரண்டுமிழை" (தைல. தைலவ. கூ.)

தீட்சணகண்டகம்—முள்நாவல். (மலையக.)

தீட்சணகந்தகம்—சருள்ளி. (வைத்தியமூ.)

தீட்சணகம்—வெண்கடுகு. (மலையக.)

தீட்சணசாரம்—இலுப்பை.(வைத்தியபரி.)

தீட்சணதண்டுலம்—திப்பிலி. (மலையக.)

தீட்சணபத்திரம்—அலரி. (மலையக.)

தீட்சணரசம்—வெடியுப்பு. (வைத்தியபரி பா. அக.)

தீட்சணியம்—கூர்மை.

தீட்சிதன்—சோதிட்டோமம்புரிந்தோரது பரம்பரையில் வந்தவர்க்குரிய பட்டப்பெயர். (அபிதானகோச.)

தீட்சாவரன்—தீட்சிதன்.

தீட்சித்தல்—தீட்சைசெய்தல். (சி. சி. பாயிர. கூ. ஞாநப்.)

தீட்சை—1. உபதேசம். அது: சட்சதீட்சை, பரிசதீட்சை, வாசகதீட்சை, மாநததீட்சை,சாத்திரதீட்சை, யோகதீட்சை, ஔத்திரிதீட்சை என ஏழுவகைப்படும். அவற்றுள், மச்சஞ்சினையைப்பார்த்துத்தாஞ்சருமாறுபோல ஆசாரியன் உண்மையிலே சித்தத்தைவைத்து ஞாநதிருட்டியைவிழித்து அத்துவாக்களிற் கட்டுண்டகன்மங்களைத்தெளித்து இராகுவிஞலே விடப்பட்ட சந்திரனைப்போல மலத்திரயங்களினின்று சீவனைநீக்குவது சட்சதீட்சை. பஞ்சப்பிரமசடங்குகளைச் சொரூபமாகவுடைய பஞ்சாட்சரத்தை வலக்கையிலேந்திப் பிராரத்தவாதனையை நீக்குவதுபொருட்டாகச் சீஷனுடையதலையிலே சோதிமயமாகவைத்து அந்தச் சோதிமயமான தடையை உள்ளும் புறம்பும் பரிபூரணமானதாகத் தியானித்து அந்தக்கையாலே அவனுடைய தேகத்தில் பஞ்சகலாத் தாநங்களைப் பரிசித்து வாதனையையொழிக்குமது பரிசதீட்சை. பஞ்சாக்கரத்தின் பொருளாயிருக்கிற திரிபதார்த்தங்கள் ஞாந ஒளியுடனேகூடி உபதே

சிக்குமது வாசகதீட்சை. சிஷ்னேத்தாஞ்சுப் பாவிக்குமது மாநததீட்சை. இந்த மூறைமைக ளெல்லாம் இவனுக்குச்சந்தேகங்கள்தீரச் சாத்திரங்களிலே கேட்டல், சிந்தித்தல், தெளிதல் உண்டாக்குமது சாத்திரதீட்சை. அட்டாங்க யோகங்களிஞலேமனேபாவநையைக்கெடுத்து நிட்டையிலே புரிவிக்குமது யோக தீட்சை. [இவ்வாறு தீட்சையும் பக்குவர்க்குச்செய்வது.] குண்டமண்டலத்தோடேசெய்யுமது ஔத்திரி தீட்சை. 2. சங்கற்பம்.

தீட்டணசாரம்—இருப்பை. (மலேயக.)

தீட்டணம்—கஞ்சாங்கோரை. (மலேயக.)

தீட்டல்—1. எழுதுதல். (பிங்கல. உகஉச.) 2. கோதல். (உ-ம்.) "கூந்தறீட்டி" (புறநா.சூஉ.) 3. தீட்டுதல். (உ-ம்.) "ஊட்டி" பார். 4. துலக்கல். (பிங்கல. உகசஉ.)

தீட்டு — 1 அழுக்கு. 2. ஆசௌசம். 3. எழுத்து. (உ-ம்.) "காரணமுலகுக்குதவுநின் னடியார்கையெழுத்திட்டதீட்டன்றே" (மதுரை. பதிற்று. சுஎ.) 4. சித்திரித்தல். (உ-ம்.) "தீட்டார்மதில்புடைசூழ்" (திருவாச-திருவ்ப. சு.) 5. தெரிசிலேவினேப்பகுதி. 6. பரிசித்தல், தீண்டுதல். (உ-ம்.) "ஓட்டு" பார். 7. மகளிர் சூதகம். (வழக்கு.)

தீட்டுக்கல்—சாணைக்கல்.

தீட்டுகல்—தீட்டுக்கல்.

தீட்டுதல் — 1. அரிசிதீட்டல். (வழக்.) 2. எழுதுதல். (உ-ம்.) "சயற்கூடுகண்ணிடையா காசந்தீட்டுதல்கைக்கரிதே" (மறைசை. எசூ.) 3. கட்டுதல். 4. கூராக்குதல். (வழக்.)

தீடன்—கஞ்சாங்கோரை.(வைத்தியபரிபா.)

தீண்டல்—அணுகல். (உ-ம்.) "தீண்டிலெடித் தவர்தீவினேதீர்ப்பவண்" (திருக்கோ. உசசு.) 2. தொடுதல். (பிங்கல. உகசூ.) 3 பரம்பு முதலியனதீண்டுதல். (உ-ம்.) "வாளரவந்தீண் டிடவேவீழ்ந்துமாண்டு" (சிவரக. அபுத்திபூ. உக.)

தீண்டியம்—பவளக்குறிஞ்சி. (வைத்தியபரி பாடை.)

தீண்டுகை—தீண்டுதல்.

தீண்டுதல் — 1. தீண்டல். 2. விஷந்தீண் டல்.

தீத்தட்டிக்கல்—தீக்கல், இதனுலே தீயுண் டாக்குவர். (வழக்.)

தீத்தம்—1. சிவாகமமிருபத்தெட்டி ஞெண் று. (இரண்டாவது சைவவிஞவி. தீப்தம் தீத்த மென நின்றது.) 2. தீர்த்தம், ரகரந்செட நின்றது.

தீத்தரீ—சதாசிவதத்துவத்திலிருக்கும் அணு சதாசிவர் பதின்மருளொருவர். (சி. சி. க: உடு. மறை.)

தீத்தல்—தீப்பொறிகளாக்கல். (உ-ம்.) "இமைத்தீத்தொளிர்செங்கண்" (கூர்மபு. அட் டமூர்த்த. கூ.)

தீத்தா—வட்டத்திருப்பி. (மலேயக.)

தீத்தாங்கம்—மயில். (வைத்தியபரிபா.).

தீத்தியம்—அரத்தை. (மலேயக.)

தீத்திரள்—ஊழித்தீ. (பிங்கல. சடு.)

தீத்திறம்—கொலே. (மணிமே.)

தீத்தேயவம் — அக்கினிதேவன், பாவகன் என்ற பெயர். (சூ. நிக. க: நுஉ.)

தீத்தொழில்—1. அக்கினிகருமம். 2. துர்ச் செய்கை. (உ-ம்.) "தீத்தொழில்லகன்றித்திரி தந்து. (நன்னூ. உயிரீற். நி. உரை.)

தீத்தோபலம் — சூரியகாந்தக்கல். (வைத் தியமூ.)

தீதல்—கருக்குதல்.

தீது—1. குற்றம். (உ-ம்.) "தீதகலேகாதசி தான்"(ஏகாதசி. காலநிர்ண.எ.) 2. கொடுமை.) (உ-ம்.)"புலேஞன்செய்ததீதகமுணர்ந்து" (திரு வீரே. அங்கம். கo.) 3. ஏகாள். (பிங்கல. கஅஎ.) 4. தீமையுடையது.(உ-ம்.)"அறனழீ இயல்லகைசெய்தலிற்றீதே" (வள். கஅஉ.) 5. துன்பம். (ஐங்குறு.) 6. பாவம். (உ-ம்.) "உள் ளத்தாலுள்ளலுந்தீதே" (வள். உஅஉ.) (7) மரணம். (சிந்தா.)

தீநீர்தோடை—1. நரம்பு. (உ-ம்.) "தீந்தொ டையமகரவீணைத்தெள்விளி" (சிந்தா.காந்தருவ. கசசு.) 2. யாழ். (சிந்தா.)

தீநட்பு — தீக்குணத்தாரோடுளதாயநட்பு. (வள். அஉ-ம் அதி.)

தீநம்—கேடு.

தீநர் — 1. இரப்போர். (சூ. நிக. உ: சஅ.) 2. தீமைசெய்வோர். (உ-ம்.) "சிவபத்தரல்லாத் தீநருக்கும்" (சிவரக. பசாசு. உக.)

தீநன்—1. இரப்போன். (சூ. நிக. உ: சஅ.) 2. தரித்திரன்.(சூ. நிக. உ: சக.)3.பெருந்தீநன். (வழக்.)

தீநா — கப்பற்காரர்துறைபிடிக்கக் கொழுத் தின வெளிச்சம். (பரதவர் வழக்கு.)

தீநாயி—ஒருவகை நாய். (மணிமே.)

தீநிறம்—மாந்தளிர்க்கல். (வைத்தியமூ.அக.)

தீநீர்—திராவகம். (வைத்தியமூ. அக.)

தீப்பியம்—அசமதாகம். (வைத்தியமூ.)

தீப்பிரகாசி—குங்கிலியம். (மலேயக.)

தீப்பிரியகம்—ஓமம்.(வைத்தியபரிபா.அக.)

தீப்பு—கருக்குதல்.

தீப்புட்பம்—சண்பகப்பூ. (வைத்தியமூ.)

தீப்பொறி—நெருப்புப்பொறி. (உ-ம்.) "தீப்பொறியொன்றுற்றால்" (சிவரக. அபுத்திபூருவ. ச.)

தீபக்கால்—1. விளக்குத்தண்டு. 2. விளக்கேந்துகருவி. (திருவிளை. மூர்த்திவி. உஅ.)

தீபகம்—1. ஓரலங்காரம். அஃது ஒருசொல் குணமுதலிய நான்களுள் யாதேனும் ஒன்ற னைக்குறித்து ஒருகவியிலே ஓரிடத்தினின்று பலவிடத்துஞ்சென்று பொருளைவிளக்குவது. (தண்டி. கூஅ.) [ஓரிடத்துவைக்கப்பட்ட விளக்கானது பலவிடங்களிற்சென்றுபொருளைவிளக்குதல்போல இஃது ஓரிடத்தினின்று பலவிடங்களிலுஞ்சென்று பொருள்களை விளக்குதலாலே தீபகம்எனப்பட்டது.] 2. பார்வைமிருகம். (உ-ம்.) "சகலர்க்தமும்மலமாய்த்தறுக்கப்-பாங்குறுதீபகம்போ லுருக்கொண்டு பரன்வருமே" (திருவாத. திருப்பெருந். கசு. உரை.) 3. மஞ்சள். (வைத்திய.) 4 விளக்கு.

தீபகாந்தி—வயிரக்கல்.

தீபகாந்தியோன்—தீபகாந்தி.

தீபசாலம் — சோதிவிருட்சம். (உ - ம்.) "திலோத்தமைவேர்முதற்றினையுறவிரிவன தீபசாலமும்போன்ற" (பாரத. காண்டவ. கூடு.)

தீபதிச்சம்—வாலுளுவை. (மலையக.)

தீபதைலி—ஆமணக்கு. (வைத்திலமூ.)

தீபநம்—1. ஆகாரம். (உ-ம்.) "தீபகங்கள் சென்றதினால்" (அகத். குருநாடி. உஙக.) 2. மஞ்சள். (வைத்தியபரிபா.) 3. வளரப்பிரகாசிக்கச்செய்யுங்கருவி. (சித்தா.)

தீபலி—கயா. (வைத்தியபரிபா.)

தீபபுட்பம்—சண்பகப்பூ. (மலையக.)

தீபம்—1. இரவெறிமரம் இது, சோதிவிருட்சம். (உ-ம்.) "தேக்கதிலாரநாகஞ்சிந்துரந்திலகந்தீபம்" இரகு. ஆற்று. கக.) 2. சோதிநாள். (சூ. நிக. க: எஙு.) 3. தீவு. (உ-ம்.) "பல்தீவுறு தீபத்துச்செங்கோன்மை. (திருவிளை. தருதடி. அ.) 4. விளக்கு. (பிங்கல. சசு.)

தீபமரம்—சோதிவிருட்சம். (உ-ம்.) "தீபமாமரங்களாலும். (பெரியபு. கண்ணப்ப கஙக.)

தீபாக்கிநி—ஒருசுடர்கொண்டெரியும் நெருப்பு. காடாக்கிநி, கமலாக்கிநி, தீபாக்கிநி என்னு மூவித அக்கிநியிலொன்று: அது, தீபம்போலொருசுடராகநின்றெரிவது.) ஒருவிரகுவைத் தெரிப்பது என்பர். (வைத்தியபரிபா. அக.)

தீபாந்தம்—பெருச்சாளி. (வைத்தியமூ.)

தீபாவலி—ஐப்பசிமாசத்தில் அபரபக்கச் சதுர்தசியில் உஷத்காலத்தில் நரகாசுரனைத் திருமால் கொன்றதனால் இவ்வேளை எழுந்து அப்பியங்கஸ்நானஞ்செய்துகொண்டு கோடி தரித்துப் பலகாரங்களருந்தி யுலகத்தார் மங்களங் கொண்டாடவேண்டுமென அவ்வசுரன் வேண்டுகோளால்திருமாலங்ஙனமேயாகவென் றதினமாம். இத்தினம் தைலத்தில் இலக்குமியும் வெந்நீரிற்கங்கையும் வசிக்கின்றார்கள் ஆகையால் தைலாப்யங்கஞ் செய்துகொண்டு வெந்நீரிலே ஸ்நானஞ்செய்யச் சகல தரித்திரத்தையும் ஒழிக்கின்றாரவர். ஸ்நானஞ்செய்தவுடனே அலங்காரமாய்த்தரிக்கும் ஆபரணங்களாலும் புதுவத்திரங்களிலுலும் அதிகமேன்மையான சம்பத்தையுமடைகிறார். (அபிதானசி.)

தீபாவளி—தீபாவலி.

தீபிகை—1. சாந்தியதீதகலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப்புவநங்களுளொன்று. (சிலி. கிரி. உக.) 2. பிரமரந்திரத்துக்குள்ளான ஒரு சிவகலை. (பௌட். எடுகூ.) 3. விளக்கு. (சூ. நிக. க: டுஉ.)

தீம்—இன்சுவை. (பிங்கல. கசுகூடு.)

தீம்பண்டம் — 1. இனிய பழம். (சிந்தா.) 2. நற்பணிகாரம்.

தீம்பர்—1. கீழ்மக்கள். (சூ. நிக. உ: டுசு.) 2. தீங்குசெய்வோர். (உ-ம்.) "சிவன்பொற்கோயிற் செம்பொனுங்கவர்ந்ததீம்பர்" (அருணகிரிபு. நாட்டி. உகூ.)

தீம்பாலை — திருநிவாதிமரம்.(வைத்தியமூ-அக.)

தீம்பு—1. கீழ்மை. 2. தீது. (வழக்.)

தீம்புழல்—இனியபண்ணியாரம். (உ-ம்.) "தீம்புழல்வல்சிக்கழற்கான்மள்ளர்" (மதுரை. கூகடு.) [இருப்பைப்பூவென்றுங்கூறுவர்.]

தீம்புளி — கருப்புக்கட்டிகூட்டிப்பொரித்த புளி. (உ-ம்.) "இருங்கழிச்செறுவிற்றீம்புளி வெள்ளுப்பு" (மதுரை. கூகஅ.)

தீம்பூமரம் — ஒருமரம். (உ-ம்.) "தீம்பூமரநிரந்தசுகோலமும்" (சிந்தா. விமலை. கசு.)

தீழநுகல்—ஒரு சட்சு; அது: வைப்புப்பாண மூப்பதிரண்டிஞ்ஞன்று.

தீமை—1. இனிமை. (ஐங்குறு.) 2. பிழை. (உ-ம்.) "எனது - தீமைவிழிக்கடைநோக்கி" (கோயிற்பு. பதஞ்சலி. கடு.) 3. கொடுமை. (புறநா.)

தீய—1. இனிமையான. 2. தீதான. (1, 2-புறநா.)

தீயது—1. இனியது. 2. தீங்குள்ளது.

தீயபுட்பம்—சண்பகப்பூ. (மலையக.)

தீயம்—திரிதிப்பு. [செலுங்கு.]

தீயர்—1. கீழ்மக்கள். (சூ. நிக. உ: டுசு.) 2. பொல்லாதவர்கள்.

தீயல்—தீதல்.

தீயலி—காயா. (வைத்தியமூ. அக.)

தீயன—1. இனிமையுள்ளன. 2. தீங்குள்ளன. (உ-ம்.) "சாந்தனேயுந்தீயனவேசெய்திடினும்" (மூதுரை. கூ0.)

தீயாக்கீரை—பொன்னங்காணி. (மலையக.)

தீயாடி—சிவன். (உ-ம்.) "வீயினன்ன-தீயாடி சிற்றம்பலமனையாள்தில்லையூரனுக்கு" (திருக்கோ. கூஎச.)

தீயார்—தீயோர். (உ-ம்.) "தீயாரைக்காண்பதுவுந்தீதே" (மூதுரை. க.)

தீயோர்—கீழோர். (பிங்கல. அஎஉ.)

தீர்—தெரிநிலைவினைப்பகுதி. (உ-ம்.) "தீர் வழிதேற்றமிலையேல்" (இன்னிசை. கச.)

தீர்க்ககணம்—வெண்சீரகம். (வைத்தியமூ. அக.)

தீர்க்ககந்தை—மெருகன்கிழங்கு. (தைல. தைலவ.)

தீர்க்ககாண்டம்—கோரைப்புல். (வைத்தியமூ. அக.)

தீர்க்கசத்திரமகம்—ஒருவகையாகம். (உ-ம்.) "தீர்க்கசத்திரமகமடத்தினர்" (சேதுபு. இலக்கும. எ.)

தீர்க்கசந்தி—வடமொழிப்புணர்ச்சியி னொன்று. அது: அ ஆக்களின்பின் ஆவும் இ ஈக்களின்பின் ஈயும் உ ஊக்களின்பின் ஊவும் தோன்றல். (நன். மெய்யி. கஅ. உரை.)

தீர்க்கசாலம்—ஆச்சாமரம். (வைத்தியமூ. அக.)

தீர்க்கணம்—வெண்சீரகம். (வைத்தியபரிபா.)

தீர்க்கதண்டம்—1. ஆமணக்கு. (வைத்தியமூ. அக.) 2. சாட்டாங்கதண்டம்.

தீர்க்கதமன்—ஒரு முனிவர். (உ-ம்.) "தீர்க்கதமனவன்குமரன்கேள்வான்" (சேதுபு. அகத்திய. எ.)

தீர்க்கதரிசி—முக்காலவருத்தமாகமறிவோன்.

தீர்க்கதரு—பனைமரம். (வைத்தியமூ. அக.)

தீர்க்கதாரு—நிலேப்பனை. (மலையக.)

தீர்க்ககந்தை—மெருகன்கிழங்கு. (தைலவ.)

தீர்க்ககநாசிகை—ஐம்பத்தொருருத்திரசத்திகளிலொருத்தி. (வி-ணி.)

தீர்க்கபத்திரம்—உள்ளி. (வைத்தியபரிபா.)

தீர்க்கபரிணி—வாழை. (தைலவ.)

தீர்க்கபன்னி—தீர்க்கபர்ணி. (உ-ம்.) "செங்கீரை" பார்.

தீர்க்கபாகன்—திருதராட்டிரன் குமரன். (அபிதானசி.)

தீர்க்கபாது—1. சதருத்திரரிலேவருணதிக்கினிருக்கும் சதருத்திரரிலொருவன். (வி-ணி. உஎ0.) 2. நிவிர்த்திகலேயிற்பிருதுவிதத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப்புவநங்களு ளொன்று. (சி-லி. கிரியா. உக. உரை.)

தீர்க்கபாதபம்—தென்னமரம். (மலேயக.)

தீர்க்கபுயன்—திருதராட்டிரன் குமரன். (அபிதானசி.)

தீர்க்கம்—1. ஆறுமேழாமிராசிகள். 2. நிச்சயம். (சூ. நிக. அ: சசு.) 3. நீளம். 4. நெடில். (பி. வி. நி.)

தீர்க்கழகி—ஐம்பத்தொரு உருத்திரசத்திகளி லொருத்தி. (வி-ணி. உஎசு.)

தீர்க்கழலம்—1. தொட்டாற்சுருங்கி. (வைத்தியமூ. அக.) 2. முடக்கொற்றான். (வைத்தியமூ. அக.)

தீர்க்காதம்—பன்றி. அதிகப்புணர்ச்சிசெய்வது. (வைத்தியமூ. அக.)

தீர்க்காராசிகை—மஞ்சள். (வைத்தியபரி.)

தீர்க்கலேகிதம்—தளசி. (வைத்தியபரிபா.)

தீர்க்கலோகிதம்—1. சிலிந்தி. 2. தருப்பை. (1, 2-மலேயக.)

தீர்க்கலோசநன்—திருதராட்டிரன்குமரன். (அபிதானசி.)

தீர்க்கவசன்—திருதராட்டிரன் குமரன். (அபிதானசி.)

தீர்க்காதேவி—நிருதியின்றேவி. (அபிதானசி.)

தீர்க்கவிருக்கம்—பெருமரம். (மலேயக.)

தீர்க்கவைரம்—நெடுநாளேயில் விரோதம்.

தீர்த்தகர்—சமணமுனிவர்.

தீர்த்தகரர்—
தீர்த்தங்கரர்—
} சமணகுருக்கண்மார். அவர் ஏமசந்திர, காகசந்திர, நேமிசந்திர, வஜ்சந்திர, மாகசந்திர, அருகந்த, ஆதிநாத, அசகள, பார்ஸ்வநாத, சௌகத, சருதிகீர்த்தி, ஸ்ரீமதகாமரகிதமுனிசுவாமி முதலிருபத்துநால்வர். (த. நி. போ.)

தீர்த்தம்—1. ஆகமம்; ஜை. (சிந்தா.) 2. சுத்தம். 3 திருமஞ்சநநீர். (உ-ம்.) "இன்மலர் கந்தந்தீர்த்தமிவற்றொடுமொருசாருய்ப்ப" (கந்த பு. திருக்கல். எசு.) 4. திருவிழா. 5. நீர். (4,5-சூ. நிக. கக: ரகரவெ. கசு.)

தீர்த்தர்—1. கடவுளர். 2. பரிசுத்தர். (உ-ம்.) "தீர்த்தராய்முத்தீவேட்குஞ் செல்வர்தம் மிருக்கைசொல்வாம்" (திருவிளே. நகர. அஉ.)

தீர்த்தல்—1. ஒழிதல். (உ-ம்.) "பெண்மூதலாப்பற்றதுதீர்த்தவெம்பாவைதீர்த்த" (திருநூற். அஅ.) 2. தீர்மானித்தல். 3. நீக்குதல். (உ-ம்.) "இடுக்கண்களைந்தசேவடி" (சேதுபு. சேதுச. க.)

தீர்த்தன்–1. அருகன். (உ-ம்.) "பெண்முத லாப்பற்றததிர்த்தவெம்பாவநைதீர்த்த" (திரு நூற்.அஅ.) 2. குரு. (பிங்கல.எஅஉ.)3. ஈவன். (உ-ம்.) "உலகுயிர்யாவுந்தீர்த்தன்மேனிகொள் பேரொளிநோக்கியேதியங்கி"(கந்தபு.தக்கிஉத். கசஎ.) 4. பரிசுத்தன். (உ-ம்.)"புலவன்தீர்த்தன் புண்ணியன்புராணன்"(மணிமே. மணிமேஃலா. தோன். கூஅ.)

தீர்த்தகைை—1. தீர்த்தம். (உ-ம்.) "தீர்த்தி கைச்சினைச்சிகரநண்ணினனன்" (கந்தபு. வள்ளி யம்மை. ருிக.) 2. யாறு. (பிங்கல. ருடுo.)

தீர்தல்–ஒழிதல். (உ-ம்.) "சிந்தையிலுறை பவற்குருவந்தீர்ந்ததால்" (இராமா. சுர்ப். கஉ.)

தீர்ந்தவனீர்–1. துறந்தவன் 2. தேறினவன். (மருதூரந்தாதி. உ.)

தீர்ந்தன்று—தீர்ந்தது. (புறநா.)

தீர்ப்பான்—வைத்தியன். (தைலவ.

தீர்ப்பு–1. தீர்மானம். (வழக்.) 2. நிவிர்த்தி.

தீர்பு—தீர்வு. (உ-ம்.) "பாடினமாயையாற் றீர்புரைப்பீரென" (சேது. இலக்குமு. கூ.)

தீர்மானம் — 1. தாளத்தீர்ப்பு. 2. தீர்ப்பு. (1, 2-வழக்.)

தீர்மானித்தல்—1. தாளந்தீர்த்தல். 2. நிச்ச யித்தல்.

தீர்மானிப்பு—தீர்மானம்.

தீர்வினை–வினைத்தீர்வு. (உ-ம்.)"சேவறன்மூ ழ்கிடுதீர்வினையடைந்தான்"(சேது.காசிப்.கூ.)

தீர்வு—1. தீர்தல். (உ-ம்.) "மையறீர்வுறவெ ய்தனன்" (சேதுபு. சேதுவந். கூ.) 2. பிராயச் சித்தம். (உ-ம்.)"பற்றியபழிக்குத்தீர்வு"(திரு வி. உரகுணனுக்குச்சிவ. எ.)

தீர்வை — 1. கீரி. (பிங்கல. உருஉரு.) 2. சுங்கம். (வழக்.)

தீர்வைத்துறை—ஆயத்துறை. (வழக்.)

தீர—1. நீடித்த. (உ-ம்.) "தீரகாமமுஞ்செவ் வியுமிகும்படிதினைத்தான்" (பாரத. குருகுல. அ.) 2. முற்றுக. (உ-ம்.) "இன்னந்தீரத்தேரு மின்" (திருவி. பழிய. உசு.)

தீரகாகளம்—வெற்றிச்சிந்நம். (உ-ம்.) "தீர காகளம்பெறுதலின்" (பாரத. பாயிர. கஎ.)

தீரத்துவம்—1. உறுதி. 2. தைரியம்.

தீரத்துறந்தார்—முற்றத்துறந்தார். (உ-ம்.) "தலைப்பட்டார்தீரத்துறத்தார்மயங்கி - வலைப் பட்டார்மற்றையவர்" (வள். சுசஅ.)

தீரம்–1. கரை. (உ-ம்.) "அதன்றீரத்தோர்" (பிரமோத். சு: உ.) 2. சிறுவரம்பு. (சூ. நிக. ருி: கஅ.) 3. மஞ்சள். (வைத்தியபரிபா.) 4. மகத்தைரியம். 5. வெற்றி. (உ-ம்.) "தீரகாகளம் பெறுதலின்" (பாரத. சிறப்பு. கஎ.)

தீரன்–1. சதருத்திரரில் அதோபாதத்திருக் கும் தசருத்திரரிலொருவன். (வி-ணி உஎo.) 2. திண்ணியன். (உ-ம்.) "இறையவனடியார்க் குளவன்ஞாநதீரன்" (சிவரக. சிவதன்மா. உஎ.)

தீராமை—நீங்காமை. (உ-ம்.) "திருவினைத் தீராமையார்க்குங்கயிறு" (வள். சஅஉ.)

தீவகம்—தீபகம்.

தீவகமிருகம்—ஒரு பார்வைமிருகம். (உ-ம்.) "தீவகமிருகந் - தளிருடைக்கரங்கொடெடப்பார் சிலர்தாமே" (சேதுபு. சங்கரபா. கசு.)

தீவம்—விளக்கு. (உ-ம்.) "தீவந்தோன்றிய முழைத்துணையெனத்தெறுகண்ணுர்" (இரா மா. படைகாட்சி. உசு.)

தீவர்த்தி—ஒரு விளக்கு (வழக்.)

தீவலஞ்செய்தல்—கலியாணச்சடங்கிலொ ன்று. அஃது: அக்கினிப்பிரதட்சணம்பண்ணல். (சூ. நிக. சு: ச.)

தீவாந்தரம்–தீவுகள். (உ-ம்.) "வீரிபொழிற் சாலிவேய்மிகுவிள்ளவேறுதீவாந்தரம்" (திரு விளை. நசிபரி. கoஎ.) 2. வெளி.

தீவான்—கறையான். (வைத்தியபரிபா.)

தீவி–1. ஒருபட்சி. 2. புலி. (பிங்கல.உசகக.)

தீவிகை—தீபம். (சிந்தா.)

தீவிதிராட்சம்—கொடிமுந்திரிகை. (வைத் தியமூ. அக.)

தீவிய—இனிய. (சிந்தா.)

தீவியது—இனியது.

தீவிரகந்தம்–தாளசி. (வைத்தியபரிபா.)

தீவிரதரம்—நால்வகைச்சத்திநிபாதங்களு ளொன்று. அது: தீ. இரும்பைத்தன்வலிவண மாக்குவதுபோலச் சிவம் ஆன்மாவைத்தன்வண் ணமாக்கிச் சிவானந்தம்மேலிடச்செய்துநிறுதல். (திருவாத. திருப்பெரு. கூஎ. உரை.)

தீவிரம்—1. சூரியகிரணம். (பிங்கல.உகூ.) 2. நால்வகைச்சத்திநிபாதத்துளொன்று. அஃது எள்ளின்கணெண்ணெய் இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படா நுடனிற்றல் போல ஆன்மாவின்கட் சிவம் இனிதுவிளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாதுடனிற்றல். (திருவாத. திருப்பெரு. கூஎ. உரை) 3. பிரா ரத்தமூன்றனுளொன்று. அஃது எல்லாரையும் வாதிக்குமானாலும் சிவஞானிகளே பிகுதியும் வா தியாது. (சி. சி. கo. சு: ஞானப்.)

தீவிளங்துவைரம்–மீனம்பர். (வைத்தியமூ. அக.)

தீவிளி—காய். (சூ. நிக. ச: ருக.)

தீவிழித்து—தீப்புறப்படவிழித்து. (சிந்தா.)

தீவினை—1. கொடுமை. (சூ. நிக. கக: கஅ.) 2. பாவம். அஃது இருவினையிலொன்று.

(உ-ம்.) "தீவினைக்கிடமாய்ப்பூண்டவனருந்தி" (பிரமோத். சு: ஆ.) (பிங்கல. கஅசஙு.)

தீவு—1. இனிமை. 2. கடலிடைக்குறை, இது ஏழுவகை. (சூ. நிக. கஉ: சுகூ.) (உ-ம்.) "ஆரமுதின்கடல்வேலிசெழுந்தருவாய்மணிபம் பியதீவுடே" (ஆனந்தலகரி. அ.) 3. தீதல்.

தீவேட்டல்—1. அக்கினிக்குமுன் விவாகஞ் செய்தல். (உ-ம்.) "உலகறியத்தீவேட்டானென் னுமதுவென்னேடி" (திருவா. திருச்சா. கஙு.) 3. யாகம்பண்ணல். (உ-ம்.) "முத்தீவேட்கு" மிவர்" (திருவிளை. உலவாக்கிழி. கஉ.)

தீற்றல்—உண்பித்தல். (சிந்தா.)

தீற்றி—பூசி. (சிந்தா.)

தீற்றுக்கல்—மணியாசிக்கல். (வழக்.)

தீற்றுதல்—1. சுத்தம்பண்ணுதல். 2. சுவர் முதலியமெழுகுதல். (வழக்.) 3. தின்னப்பண் ணுதல். (உ-ம்.) "நென்மாவல்சிதீற்றிப்பன் னூட்" (பெரும்பாணு. ஙசஙு.) 4 பூசுதல். (உ-ம்.) "சிறையைந்துமிடுதுமென்பார்தீற்று துஞ்சிருங்கியென்பார்" (சிந். பதுமை. கஙஉ.)

தீற்றுப்பலகை—மணியாசிப்பலகை. (வழக்.)

தீன்—உணவு.

தீன்பண்டநல்கல்—உணப்பொருளீதல். அஃது அறம் மூப்பத்திரண்டினொன்று. (சூ. நிக. கஉ: கஙுரு.)

தீனி—தீன், தின்னப்பட்டது. (உ-ம்.) "தீனி யிலாசைசெவுட்டாதுதேவர்க்கும்" (திருமந் திரம்.)

து.

து—1. ஒரு விகுதி. இவ்விகுதி அது என் றுற்போலப்பெயரிலும், குழையுதுஎன்றுற்போ லவினைக்குறிப்புமுற்றிலும், அவ்வினையாலணை யும் பெயரிலும், பாய்த்து என்றுற்போலத் தொழிற்பெயரிலும், வந்தது வந்து வருது என் பனவற்றிற்போலத் தெரிநிலைவினைமுற்றிலும், வரும். (நன்னூலிற்காண்க.) 2. ஓர்கழ்ச்சிக் குறிப்பு. (வழக்கு.) 3. சுத்தம். (உ-ம்.) "எற்ப தங்கன்றுவளர்சோமனங்கி" (மறைசை. சுஅ.)

துக்கசன்—துயரமுள்ளோன்.

துக்கசகிதர்—மாகிடர். (உ-ம்.) "சந்திர மௌலிநகைசெய்து துக்கசகிதரைத் தோற்றி டேன்யானே" (சூத. சிவமான். கo: கஙு.)

துக்கடி—துண்டுபட்டது. (வழக்.)

துக்கத்திரயம்—உடலுளாலு முயிர்த்தோற் றங்களாலும் பஞ்சபூதியங்களாலு முண்டாகு மூவகைத் துக்கம். அவை: ஆதிதைவிகம், ஆதி பௌதிகம், ஆதியாத்மிகம் என மூவகைப்படும். அவற்றுள்; கர்ப்பாசயத்திலேவரும் விதனமும் பிறக்குங்காலத்திலேவரும் விதனமும், மூப்பில் நரை திரையால்வரும் விதனமும், அஞ்ஞானத் தாலே செய்யப்பட்டிருக்கிற அளவில்லாத சங் கற்பத்தினுலேவரும்விதனமும், இயமனுயிரைக் கொண்டுபோகும்போதுவரும் விதனமும், நர கரகத்திலழுந்தும் விதனமுமுதலானவை ஆதி தைவிகம்; சீதத்தாலும் பெருமழையாலும் கொடுவெயிலாலும் பெருங்காற்றுலும் மின்னு லும் இடியாலும்வரும் விதனமும் ஆன்மாக்க ளொன்றையொன்று கட்டிவைக்கையாலும் ஒன்றையொன்று கொல்கையாலும்வரும் விதன முதலானவை ஆதிபௌதிகம்; ஆதியாத் மிகம்-தேகத்தைப்பற்றிவரும் விதனமும், மனத் தைப்பற்றிவரும் விதனமும் என இரண்டுவகை. அவற்றுள், தேகத்தைப்பற்றிவரும் விதனம்-வாதத்தாலும், பித்தத்தாலும், சேட்டுமத்தாலும் வெப்பாலும், சூலையாலும், சத்துருக்களாலும, விலங்காதிகளாலும், அழுகு தொழுநோய்களா லும், நீர்ப்பாட்டாலும், இராக்கதராலும், ஸ்திரி புருடர்கூட்டப்பிரிவினுலும், குருதெய்வங்களி னுலும், தபசினுலும், உள்ளமுயற்சியினுலும், சம்பத்தின்மிகுதியாலே அடாதனசெய்கையா லும்வரும் விதனமுதலியவாம். மனத்தைப்பற்றி வரும் விதனம்-பந்துக்கள் திரவியமுதலியவற் றைப் பிரிகையால்வருஞ்சோகம், பிறருடைய அறிவுமாக்கமுங்கண்டு பொறுமை மனத்துக்கு இழிவுவருதல் விடயத்திலிச்சை கோபம் முத லியவாம். (வி-ணி.)

துக்கம்—1. கிலேசம். (பிங்கல. கஅஅக.) 2. தன்பம். (உ-ம்.) "துக்கமாமடவிதன்னேச் சுடுங்கொடுந்தீயுமாகி" (சிவாக.உருத்திரவீணை. சுகூ.) மணிமேகலையில் துக்கம் ஆறென்பர்.

துக்கர்—துக்கமுள்ளாராகிய பாவிகள்.

துக்களம்—குங்கிலியம். (வைத்தியபரிபா.)

துக்காணி—இரண்டுதம்படிகொண்ட ஒரு செம்புநாணயம். [தெலுங்கு.] "துக்காணிபோ லொருபொட்டிட்டுநீறுதுலங்கவிட்டு" இது திருவாரூர்த்தேசிகர் தனிக்கவி.

துக்கி—துக்கத்தையுடையவன். (சி. சி. உ: ரு மறை.)

துக்கித்தல்—1. கிலேசித்தல். 2. புலம்பல்.

துக்கிதம்—துக்கம்.

துக்கிதர்—துக்கமுள்ளவர். (சி. சி. க: ருசு. சிவாச்.)

துக்கிப்பு—துக்கம்.

துக்கு—கீழ்மை. [தெலுங்கு.]

துக்குணி—அற்பம். (வழக்.) (உ-ம்.) "சீனிச் சரக்குத்துக்குணிக்கிள்ளிதாயம்மே" (குற்றாலக்

குறவஞ்சி.)

துக்ளீ—1. குற்றம். (உ-ம்.)"துகடீர்பெருஞ் செல்வம்" (நாலடி. செல்வநிலை. உ.) 2. தாது. (பரிபாடல்.) 3. புழுதி.

துகிநும்—பனி. (சூ. நிக. க: சoக.)

துகிர்—பவளம். (உ-ம்.) "துகிரிதழ்வைத்து நல்வளைகண்முழக்கின" (பாரத. கிருட்டின. உoச.)

துகிர்த்தாளி— } பவளமல்லிகை. (வைத்
துகிர்தாளி — } தியபரிபா.)

துகில்—1. சீலை. (உ-ம்.) (சூ. நிக. எ: சுக.) 2. வெண்பட்டு. (சிந்தா.)

துகிலிகை—எழுதுகோல். (சூ.நிக.எ: கச.)

துகினூல்—வெண்ணூல். (சிந்தா.)

துகைத்தல் — 1. சஞ்சரித்தல். (உ - ம்.) "வரம்பெறவாமண்மாறுகைக்குந் திருவாயிற் கோபுரம்" (மரு. தி. கஉ.) 2. நசுக்கல். (உ-ம்.) "தன்றுகடிகாவினையடிக்கொடுதுகைத்தான்" (இராமா. சுந்தரகா. பொழிலிறு. அ.) 3. வருத்தல். (சிந்தா.)

துகையல்—துகைத்தபொருள்.

துங்கபத்தினி — துங்கபத்திரை. (உ - ம்.) "துங்கபத்தினிதிம்பாலி" (திருவிளை. கலவிசே. கக.)

துங்கபத்தினை—ஒருநதி. (வி-ணி. உஉ. கூ.)

துங்கம்—1. அகலம். (பிங்கல. கூசுசஅ.) 2. உயர்ச்சி. (உ-ம்.) "துங்கமாம்விசையையோடு" (சிவரக. விசையை. கள.) 3. பெருமை. (பிங் கல. கூசுசஅ.)

துங்கரீகம்—காவிக்கல். (வைத்தியபரிபா.)

துங்கன்—மேன்மையுடையோன்.

துச்சுத்தாநு—ஆமணக்கு. (வைத்தியபரிபா.)

துச்சம்—1. கீழ்மை. 2. கொம்மட்டி. 3. நிஷ்பலம். (சி. சி. கூகூ. சிவாக்.) 4. பேய்க் கொம்மட்டி. (2, 4-வைத்தியபரிபா.)

துச்சன்—கீழ்மகன்.

துச்சாசநன்—துச்சாதநன். (உ-ம்.) "நீட்டிய துச்சாசநனுடையநெஞ்சை"(கலி.கoக.உரை.)

துச்சாதநன்—துரியோதனன்தம்பி. (உ-ம்.) "தருகதுகிலெனவெழுந்ததங்கள வன்போடு துச்சாதநன்சொலாமூன்" (பாரத. சூதுபோர். உசசு.)

துச்சாரி—காமுகன். (நாலடி. கூ: ச.)

துச்சில் — 1. ஒதுக்கிடம். (உ-ம்.) "துச்சி விருந்தவுயிர்க்கு. (திருவள். கூசo.) 2. தங்கு மிடம்.

துசபரிசம்—சிறுகாஞ்சொறிவேர். (உ-ம்.) "சதபுட்பிதுசபரிசமுண்டிவீழி" (தைல. தை லவ. எசு.)

துசதம்—சோம்மட்டிமாதுளை. (மலையக.)

துசம்—1. இருபிறப்புள்ளன. 2. குங்கிலி யம். 3. கொடி. [இது துவசமென்பதன் விகா ரம்.]

துஞ்சல்—துஞ்சுதல்பார்.

துஞ்சுதல் — 1. இறந்துபடுதல். (உ - ம்.) "பொய்த்துயிறுஞ்சும்" (கலி. எடு.) 2. உறங்கு தல். (உ-ம்.) "துஞ்சாநாய்துயிலறிந்து"(கந்தபு. வள்ளிபம்மை. கசுச.) 3. சோம்பல். 4. சோர் தல். 5. தங்குதல். (உ-ம்.)"சாபஞ்சாத்தியகணை துஞ்சுவியனகர்" (பெரும்பாண கஉக.) 6. நிலை பெறுதல். (3, 6-சூ. நிக. கக: ஞகரவெ. க.)

துஞ்சை—ஐம்பாலினுள் ஒருவகை. (சிந்தா.)

துட்கல்— } அச்சக்குறிப்பு. (உ-ம்.)"தட்
துட்குதல்— } க்கக்கடற்றட்கப்பொரும் வே லா" (திருப்பு. சஉஉ.)

துட்கெனல்—துணுக்கெனல், அச்சக்குறிப்பு. (சிந்தா.)

துட்டகம்—பொல்லாங்கு.

துட்டகன்— துட்டன். (உ-ம்.) "அவலத் துட்டகனதிதியருற" (அருணகிரி. அருந்தவ. கசுசு.)

துட்டசதுரீத்தர்—மகாபாரதத்தில் கொடுமை யிற்சிறந்த நால்வராகிய கன்னன், சகுநி, துச் சாதனன், துரியோதனன் என்பவர். (திரௌபதி மாலையிட்டசரு. சoo.)

துட்டத்தனம்—தீக்குணம்.

துட்டம்—1. அடங்காமை. 2. மரகதக்குற்றத் தொன்று. அது நீலோற்பலநிறம். (திருவிளை. மாணிக்கம்வி. சுஅ.)

துட்டி—தொடரி, புலிதொடக்கி. (வைத் தியபரிபா.)

துட்டவி—ஒருசெடி. (வைத்தியபரிபா.)

துட்டன்—1. தீயன். (உ-ம்.) "மறையோர் வேடங்கொண்டவர்க்கும்வஞ்சஞ்செய் துட்ட னுவான்" (சிவரக. கத்தரிப்பு. உஉ.) 2. தேள். (சூ. நிக. கூ: எஎ.)

துட்டு—ஒரு நாணயம். (தெலுங்கு.)

தூட்டை—தொழுத்தை. (சூ. நிக. உ: சுநி.)

துட்பதம்—சீமையானவியாசம். (உ ம்.) "கொட்பனற்சுடவிறந்தமைகேட்டலுங் குருக் கடுட்பதத்துடனழுதிலுஞ்சுயோதநன்"(பார.த. வாரணாவதச். கசுநி.)

துடக்கறுப்பான்—மூடக்கொற்றன். (மலை யக.)

துடக்கு—1. ஆரூசம். 2. பந்திப்பு. (உ-ம்.) "மாயாடன்வயிற்றிவற்றுற்றுடக்குண்டு" (சி.சி. உ: சுகூ.) 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. மகளிர் சூதகம். (உ-ம்.) "மாயவலைப்பட்டிலைத்துடக்

குழல்" (திருப்பு. நிஙக.)

துடக்கறுத்தல்—பங்தித்தல்.

துடங்கணம்—வெண்காரம். (வைத்தியபரிபா.)

துடவை—1. உழவுகொல்லை. (உ-ம்.)"தனி நகருமாளிகையும்பாழ்ந்துடவைப்படும்" (சேதுபு. இராம. நி: கசஅ.)சோலை. (சூ. நிக. ச: நிசு.) 3. தோட்டம். (உ-ம்.)"சுளையுடைப்பலவாகினி பூகமாந்துடவை" (கந்தபு.ஆற்று.கஎ.) 4. மயில். (வைத்தியபரிபா.)

துடி — 1. அகில். (வைதத்தியபரிபா.) 2. இசங்கு. (மலையக.) 3. உடுக்கை. (உ-ம்.)"துடி மருங்கிற்கொடிச்சியர்"(அரிச்சந். நாட்டு. கநி.) 4. ஏலம். 5. காலநுட்பம். அஃது தற்பரையொன்றின் நூற்றிலொருபங்கு. (சித்தாந்த சிரோமணி. கணிதாத்தியாயம். கசு.) 6. குமரனுடல். (உ-ம்.) "சூர்திரங்கடந்தோனுடியுதடியும்"(சிலப். கடலாடு. நிக.) 7. குறிஞ்சிப்பறை. (பிங்கல. நிஉ.) 8. கூசாளிச்செடி. (உ-ம்.) "தூடித்தலைப்படர்சந்தனக்குங்குமத்தொகுதி" (தணிகை.நாட்.சுசு.) 9. சத்தகந்நிலைகளாடல். 10. தெரிநிலைவினைப்பகுதி. 11. பாலைநிலப்பறை. (4, 5, 9, 11-பிங்கல. சுசுநிo.)

துடிக்கல் — துடித்தல். (உ-ம்.) "துடிக்கலுற்றதுபுருவம்"(கந்தபு.சூரதண்டஞ்செய்.சு.)

துடிக்தூறு-உடுக்கைவடிவாகச்செய்த மரக்கட்டை. (உ-ம்.) " துடிக்குறுதிருட்டியோடி " (பெரியபு. கண்ணப்ப. உச.)

துடிகமீ—தும்பை. (வைத்தியபரிபா.)

துடிசமீ—தும்பை. (மலையக.)

துடித்தல் — 1. அசைதல். 2. குதித்தல். (உ-ம்.) "தள்ளியதிரையிலாமீன்கண்டுதடித்துவீழ" (திருவிளை. நான்மா. அ.) 3. கோபம் முதலியவைகாரணமாக வாய்முதலியவற்றிலுண்டாகுங்கம்பிதம். (உ-ம்.) "செவ்வாய்துடிக்க" (திருக்கோ. சுசுசு.) 4. தள்ளுதல. பொற்பந்துபோலத்துடித்தது. (திருவிளை. மேருவைச். உசு.) 5. பதறல். (உ-ம்.) (சிவரகசி. சிவதன்மா. கஉ.)

துடிதரீ—சாக்குடமதுவந்தரத்திலுள்ள அதிதிபுத்திரராகிய பன்னிருவர். (உ-ம்.) "சாக்குடமந்வந்தரத்தினிற்றுடிதப்பெயரொடும்" (கூர்மபு. தக்கன். வமி. சுசு.)

துடிதலோகம்-(பௌத்த)தெய்வலோகங்களாறினுள்நான்காவது. (மணிமேகலை. புத்தசரித்திரம்.)

துடிதுடிக்குதல்—துட்டத்தனம்பண்ணல். 2. துடிக்குதல். (1, 2- வழக்.)

துடிதுடிப்பு—துட்டத்தனம். (வழக்.)

துடிநூல்—சரீராங்கத்துடிப்பினுல்வரும்நயநட்டஞ்சொல்லுமொருசாத்திரம்.

துடிப்பு—அசைவு.

துடியடி—யானைக்கன்று.(பிங்கல. உசகசு.)

துடியன்—1. துட்டன். (வழக்.) 2. துடிகொட்டும் புலையன். சிலப்பதி. வேட்டுவரி.

துடியாஞ்சி—இசங்கு. (வைத்தியபரிபா.)

துடுக்கன்—துட்டன். (வழக்.)

துடுக்கு–1. தீக்குணம். 2. விரைவு. (1, 2-வழக்.)

துடுப்பாமீன்—ஒரு மீன். (பரதர்வழக்கு.)

துடுப்பு—1. தடுப்புப்போலுமுகை. (உ-ம்.) "களிபட்டாங்கிலையேபோற்றடவுதுடுப்பீன்ற" (கலி. கoக.) 2. நெய்த்துடுப்புமுதலியன. (சூ. நிக. எ: ஙச.) 3. வலிதண்டு. (உ-ம்.) "நாவாயிருக்கையுமெயினர்தூண்டத்துயல்வனதுடுப்புவீசுந்துவலைகள்" (இராமா. அயோ. குக. நிசு.)

துடுப்புக்கீரை—ஒரு கீரை. (வழக்கு.)

துடுமெனல்— ஓர் ஒலிக்குறிப்பு. நன்னூ. இடையிய உ. உரை.)

துடுமை–ஒருவகைத்தோற்றக்கருவி. (உ-ம்.) "நிசாளந்துடுமைசிறுபறையடக்கம்" (சிலப் அரங்கேற்று. உஎ உரை.)

துடுவை—நெய்த்துடுப்பு. (உ-ம்.) "துடுவைபூரித்தாகுதி" (திருவிளை. குண்டோதர. கசு.)

தூடை — 1. அரசமரம் 2. விஷமூங்கில். (1, 2-வைத்தியபரிபா. 3. தெரிநிலைவினைப்பகுதி.

தூடைக்குதல்—தூடைத்தல்.

தூடைத்தல் — 1. சுவறச்செய்தல். (உ-ம்.) "படக்கடறுடைக்குஞ்சுடர்ப்படைத்திகிரி" (கூர்மபு. தக்கன்வமி. உசு.) 2. தடவுதல். (புறநானூ.) 3. நீக்குதல். (உ-ம்.) "பழியைத்தூடைத்து" (இராமா. ஆரணிய. சூர்ப்ப. கசுக.)

தூடைப்பம் — மூதேவியின் படைக்கலம். (உ-ம்.) "மூதலிமூகடிதோன்றினள். அவளே வேதசிவாகம ஒழுக்கமில்லாத பாஷண்டகளிடத்தும் பாதகரிடத்தும் மற்றையசுத்தமுள்ள இடங்களிலுமமர்வாயென. அவள் கழுதையிலேறிக் காகக்கொடிபிடித்துத் தூடைப்பமாகிய படைதாங்கித் தூப்பிரபன் என்னுங் கலிபுருடனைக் கணவனுகக்கொண்டு சொல்லியவாறுற்றனள்" (கூர்மபு. இந்திரத்துய. கஉ. உரை.) வாருகோல் என்பதுமிது. (பிங்கல. கசுஅஅ.)

தூடைப்பு—தூடைத்தல். (உ-ம்.) "தூடைப்புற்றேரை" (சேதுபு. துராசர. உஅ.)

தூடையரசு—விஷமூங்கில். (வைத்தியமூ. அக.)

துடையூஉ — துடைத்து. (உ-ம்.) "நிலம் புடைப்பன்னவார்ப்பொடுவிசும்பு துடையூஉ" (பதிற்று. சசை.)

துண்டகேரி–1. கோவைக்கொடி. 2. பருத்திச்செடி. (1, 2-வைத்தியபரிபா.)

துண்டம்—அலகு. (உ-ம்) "தண்டவெம் படையினுற்குத்தி" கூர்மபு. தக்கன்வமி. சசை.) 2. சாரைப்பாம்பு. (பிங்கல. உகூ0கூ.) 3. துண்டித்தல். 4. துண்டு. (உ-ம்.) "துண்டமாக்கினர் மூக்கெனச்சொல்லினுள்" (இராம.கரன்வதை. எ.) 5. பங்கு. (உ-ம்.) "சுடுவார்பொடிநீறும் கல்லதுண்டப்பிறைக்கீளும்" (தேவார. திருக்கேதீச். சுந்தர. உ.) 6. முகம். (பிங்கல.க0ஙசை.) 7. மூக்கு. (உ-ம்.) "கவ்வைசெய்முகனுறுதுண்டமுயிர்ப்பெழு" (சேதபு. தேவிபுர. நுஉ:)

துண்டர்—பாவிகள்.

துண்டரிக்கம்—குரூரம். [தெலுங்கு.]

துண்டன்—கொலைசெய்வோன். (உ-ம்.) "தண்டனுகியதுட்பண்ணியன்" (சேதபு. அக்கிரிதீ. சசை.)

துண்டி—1. தெரிநிலவினைப்பகுதி. 2. துண்டிவிநாயகன். (உ-ம்.) "துணிக்கையெறிந்துண்டிகேள்" (சிவரக. கணபதியுடன்கட. சு.)

துண்டித்தல்—அறுத்தல். 2. தரித்தல். (உ-ம்.) "இருபதுமமழுவாற்றுண்டித்து" சேதபு. கடவுள்வா. கஉ.)

துண்டிப்பு—துண்டித்தல்.

துண்டிவிநாயகன்—காசியில் விநாயகன். துண்டிபார்.

துண்டீரபுரம்—காஞ்சி. (உ-ம்.) "காஞ்சி துண்டீரபுரமெனப்புகலநின்றதே" (கந்தபு. திருநகர. எகூ.)

துண்டீரன்—காஞ்சியரசனுனவன். (உ-ம்.) "அரியதோர்கயிலக்கணங்களிலொருவனுனதுண்டீரன்" (கந்தபு. திருநகர. எகூ.)

துண்டு—1. தண்டம். 2. பங்கு தண்டம் பார்.

துண்ணிடுதல்—திகைத்தல்.

துண்ணெனல்—1. அச்சக்குறிப்பு. (உ-ம்.) "தூண்டகுதிரள்புயந்தளங்கத்துண்ணெனு" (இராமா. அயோத்தி. நகர்நீங். கருநி.) 2. விரைவுப்பொருட்குமோர்குறிப்பிடைச்சொல். (உ-ம்.) "துண்ணென்றுடலம்வெருக்கொள்ள" (கூர்மபு. தக்கன்வேள்வியழி. சஅ.)

துணங்கல்—கூத்து. (பிங்கல. கசசை.)

துணங்கறல்—1. இருள். 2. திருவிழா. (1, 2-பிங்கல. கூசுநுகை.)

துணங்கை—1. ஒருவகைக்கூத்து. இஃது இருகையுமுடக்கிப்பழுப்புடையொத்தியாடல். (உ-ம்.) "பழுப்புடையிருகைமுடக்கியடிக்கத் தடக்கியதடையதுதுணங்கையாகும்" (திருமுரு. நுசூ. உரை.) [இதனைச்சிங்கியென்பாருமுளர்.] இதை மதுரைக்காஞ்சியில் மகளிராடுங் கூத்தென்பர். சூடாமணிநிகண்டில் பேய்க்கூத்தென்பர். 2. திருவாதிரை. 3. திருவிழா. (2, 3-சூ. நிக. கக: ணகரவெ. கஉ.)

துணர்–1. பழக்குலை.(உ-ம்.)"சாரற்பலவின் கொழுந்துணர்நறும்பழம்" (ஐங்குறு. உகசை.) 2 பூங்கொத்து. (சூ. நிக. சை: சகூ.) 3. மலர். 4. மலர்த்தாது. (பிங்கல. உஅ0அ, உஅ0கூ.)

துணர்த்தல்—மூகைத்தல்.

துணரிய—குலைகொண்ட. (உ-ம்.) "பைம்பூகற்பழத்துணரிய" (பொருந. ககூக.)

துணவு—தும்மரம். (வைத்தியபரிபா.)

துணி–1. ஒளி. (பிங்கல ககூஙஎ.) 2. சல்லி. (சூ. நிக. சூ: ஙசை.) 3. சீலைத்துணி. (உ-ம்.) "வநமெலாந்துணிகள்" (அரிச்சமாயா. கஅ.) 4. சோதிநாள். 5. துண்டு. (உ-ம்.) "உடுத்தபாயைத்துணிபடக்கிழித்து" (திருவிளை. யானையெ. ஙஎ.) 6. தெரிநிலவினைப்பகுதி. (உ-ம்.) "மாறைவெற்பாதுணி" (வாண. கஙஅ.) 7. தெளிவு. (உ-ம்.) "துணிமழைதவழ்ந்" (சிறுபாணு. உசுநு.) 8. மரவுரி. (4, 8-பிங்கல. ஙசுநுஉ.)

துணிக்கை—துணித்தல்.

துணிகரம்—துணிவு.

துணிகை—துணிவு.

துணித்தல்—1. அறுத்தல். 2. துண்டுசெய்தல். (உ-ம்.) "வெங்கண்வாளரவைத்துணித்துவிளித்தவாறும்" (திருவிளை. நாகமெய். க.) 3. தும்பித்தல், வெட்டல் (உ-ம்.) "சுடராழிருளாலிருணீங்கச் சோதியினித்தான் றுணியாயே" (திருவாச. பிரார்த்தனை. எ.) (பிங்கல.உகசை.)

தூங்கல்—1. அழுந்தல். (உ-ம்.) "மாநகராணைவின்பந்தூங்கின" (திருவிளை. மாயப். உஉ.) [சிந்தாமணியில் செறிதலென்பர்.] 2. அனந்தர், அது கள்ளின்செருக்கு. (உ-ம்.) "தகின்முடிதூங்கலோங்குதடைப்-பெருமூதாளர்" (முல்லை. நிகு.) 3. உறங்கல. (உ-ம்.) "தூங்கிமீளமொய்ம்பினிவுளிவீழ்கின்றன" (இராமா. சுரன்ம. எக.) 4. ஆடுதல். (உ-ம்.) "குரவைதூங்க" (பெரியபு.கண்ணை.ககூ.) (சிறுபா. கசுஉ. அடி. உரை.) 5. ஒலித்தல். (உ-ம்.) "தூங்கருவி - மலையாசலத்தமிழ்தேர்வாணன்மாறைநம்மன்னவரே" (வாண. கசஎ.) 6. ஓரிசை. (திருவிளை. விறகுவிற். கூஉ.) 7. கூத்து. 8. சோம்பல். (பிங்கல. கஅகூக.) 9. சோம்பி. (வழக்.) 10. தராசு. 11. தாழ்தல். 12. காலுதல். (உ-ம்.) "தூங்குசிறைவாவல்" (சிந்தா. காந்தருவ. சு.) 13. நிரம்பாத்தூக்கம். (பிங்கல. கூசுசுசு.) 14. யானை. 15. வஞ்சிப்பாவிலேசை. [தூங்குதலையுடையது என்பது பொருள். நச்சினார்க்கினியார் அடியிற்றூங்காது சீர்தொறுந்தூங்குமோசை என்பர்.] (7, 8, 10, 11, 14-சூ. நிக. கக: ஙகரவெ. கூ.)

தூங்கல்வண்ணம்—வஞ்சியின்றுவருவது. (உ-ம்.) "தூங்கல்வண்ணம்வஞ்சியிலும்"(தொல். பொரு நிசகூ.)

தூங்கலன்—சோம்பன்.

தூங்காமை — விரைவுடைமை. (உ-ம்.) "தூங்காமைகல்விதுணிவுடைமையிம்மூன்று-நீங்காநிலனுள்பவற்கு" (வள். கூஅகூ.)

தூங்குலோசை — வஞ்சிப்பாவிலேசை. (யாப்-காரிகை. செய்யுளி. ச. உரை.)

தூங்கிசைசீசெப்பல் — இயற்சீர்வெண்டளையான்வரும் வெண்பா. (உ-ம்.) இயற்சீர்வெண்டளையான்வரும்யாப்பைத்-தூங்கிசைச்செப்பலென்மனூர்புலவர்" (காரிகை. செய்யுளி. க. உரை.)

தூங்கிசையகவல்— நிரைநிரையியற்றளையான்வருமகவல். (காரிகை. செய்யு. க. உரை.)

தூங்கிநுள்—செறிந்தவிருள். (உ-ம்.) "வரற்பாற்றன்றுதூங்கிருளே" (திருக்கோ. கஎசு.)

தூங்குதல்—1. அசைதல். 2. சொரிதல். (உ-ம்.) "மழைதூங்குகள்ளிரவில்" (திருவிளை. பலகையிட்டப. க.) 3. சோம்பாயிருத்தல். (சூ. நிக. அ: சுஎ.) 4. சோர்தல். 5. தங்குதல். (புறப்பொ-வெண்.) 6. தலைசாய்த்தல். 7. துயிலுதல். 8. காலுதல். (உ-ம்.) "மஞ்சத்தலந்தொறுந்தூங்குகின்ற"(பாரத. திரௌபதி. உஉ.) 9. நீட்டித்தல். (உ-ம்.) "தூங்குகதூங்கிச் செயற்பாலதூங்க" (வள். சுஎஉ.)

தூங்குமஞ்சம்—ஆடுமஞ்சம்.

தூசங்கொளல்—சித்திரகவிகளிலொன்று; அஃதாவது: ஒருவன் ஒரு வெண்பாச்சொன்னல் அதனீறேமுதலெழுத்தாக மற்றொரு வெண்பாப்பாடுவது.

தூசம்—யானைக்கயிறு. (உ-ம்.) "வேய்முதற்றூசங்கொண்டேறினன்" (சிந். கநக. சசு.)

தூசரி—வண்ணார். (பிங்கல. அ0உ.)

தூசறுத்தல்—ஒருசிநுமில்லாமற்செய்தல். (பார. வெ.)

தூசி—1. குதிரை. (பிங்கல. உசசக.) 2. கொடிப்படை. (உ-ம்.)"தூன்றியசெருவிற்றூசி பிளந்தே" (பாரத. பதினன். க00.) 3. படையுறப்பு. (பிங்கல கடுஅச.) 4. புழுதி. (வழக்.)

தூசிகம்—புளியாரை. (வைத்தியபரிபா.)

தூசிதாங்கி — அழுக்குத்தாங்க உடையின் மேற்சட்டித் தண்டுப்புடவை. (வழக்.)

தூசிப்படை—கொடிப்படை.

தூசியம்—கூடாரம். (ஒரு குழூஉக்குறி.)

தூசு—1. சித்திரைநாள். (சூ. நிக. க: எங.) 2. சீலை. (உ-ம்.) "எல்லாருந்தூசுசீக்கி" (இராமா. யுத்த. இந்திரசித்து. வதை. நிசு.) 3. யானைப்புரசைக்கயிறு. (பிங்கல. கசுகஉ.)

தூசுதாங்கி—தூசிதாங்கி.

தூசுப்பு—தண்ணீர்விட்டான். (வைத்திய பரிபா.

தூட்டி—சீலை. (வைத்தியபரிபா.)

தூட்டிகம்—தும்பை. (வைத்தியபரிபா.)

தூடணம்–நிந்தை. (சைவதூடணபரிகாரம்.)

தூடணன் — இராவணன்தம்பிமாரி லொருவன். (உ-ம்.) "நிருததோடினர்தூடணன்விலக்கவுநில்லார்" (இராமா. கரன்வதை. கஙசு.)

தூடணித்தல்—நிந்தித்தல்.

தூடணை—தூடணம்.

தூடித்தல்—நிந்தித்தல்.

தூடிப்பு—நிந்திப்பு.

தூண்—தம்பம். (உ-ம்.) "இந்நடுவேநின்றுநென்றுநெழ்வயிரத்தூணேபோல்" (கந்த பு. வள்ளி. கஙங.)

தூல்டல்—தூண்டுதல். (உ-ம்.) "தூண்டல் செய்யாமணிவிளக்கே" (திருக்கருவைப்பதி.எ.)

தூண்டாவிளக்கு–தானேயெரியும்விளக்கு. (உ-ம்.) "தூண்டாவிளக்கன்சுடரேனையாய்" (திருவாச. பிரார். ச)

தூண்டில்–மீன்பிடிக்குங்கருவியிலொன்று. (உ-ம்.)"மீன்கவர்தூண்டிலென்னவிண்ணிடைவிளங்கிற்றன்றே" (நைடதம். சுயம். கூ0.)

தூண்டிவிடுதல்—உந்துதல்.

தூண்டு — தூண்டுதல், தெரிநிலவினைப்பகுதி. (உ-ம்.) "தூண்டுவெம்பரித்தேர்த்துரியோதனன்" (பாரத. படையெழுச். கஙு.)

தூண்டுதல் — 1. ஏவுதல். (வழக்.) 2. செலுத்தல். (உ-ம்.) "ஐங்கதி"பார். 3. விளக்குத் தூண்டல்.

தூணம் — 1. செவ்வாய்கின்றநாண்முதல் மூலமிறுதியாக எண்ணிக்கண்ட தொகையை மூலமுதலாகக்கழிக்கஉறுநாள். (உ-ம்.) "சுடரவன்செயவனின்றநாளாதிமூலாந்தத்தொகையடைவுறமூலாதிநாட்கண்டகந்தூணம்" (விதான. குணகுண. கஎ.) 2. தூண் (உ-ம்.) "தூறுமுதல்"பார்.

தூணி—1. அம்புக்கூடு. (உ-ம்.) "கொலையெடுத்தசமனுறைவதற்குரியகூடெனத்தகையதூணியில்" (அரிச்ச. வேட்டஞ். அ.) 2. நாலுமரக்காலளவு. (உ-ம்.) "தூணிநான்கினெஞ்ஞூற்றுப் - பிறகிறுத்தெட்டியிலுமிருபடி பெய்" (தைல. தைலவ. ச.)

தூணியங்கம்—அத்திப்பிசின். (வைத்தியபரிபா.)

தூத்தியம்—தூதன்மொழி.

தூத்திரகூர்ச்சம்–ஆண்தருப்பை. (தைலவ. அருப்த.)

தூத்துக்குடி—செற்குள்ள ஒரு பட்டினம்.

தூதகம்—தருசு. (வைத்தியபரிபா.)

தூதகன்—தூதன்.

தூதநம்—மூங்கில். (வைத்தியபரிபா.)

தூதம்—நிந்தை.

தூதர்–காரியமுறைப்போர். (உ-ம்) "வெய்யகாலன்-மாதூதர்மங்களிக்கப்பொருசனினும் பெறுவன்" (பாரத. கிருட்டிண. கo.)

தூதல்—தூவுதல்.

தூதன்–1. செய்தியறிவிப்போன். 2. புதன். (பிங்கல. உகஙக.)

தூதாயி—ஒருவிதப்பூண்டு.

தூதி—1. தூதுசொல்பவள். (உ-ம்.) "நாடியதூதியானநாவிசன்றேவி" (பஞ்சதந். க: நுசு.) 2. பாம்பினச்சுப்பல்நாலிலொன்று: (சித்திராரூடத்திற்காண்க.)

தூதிகை—தூதி.

தூது—1. ஒரு பிரபந்தம்; அது: பாணன் முதலாகப் பாங்கனீறுகவிடுக்கும் உயர்திணையிருபாலினையுங்கேளா மரபினவற்றைக் கேட்பனவாகக் கூறிவிடுக்கும் அன்னமுங்கிளியும் வண்டும் மயிலுங்குயிலும் முதலாயின அஃறிணைப்பொருளையும் இளையகலாம் முதியகலாம் இவற்றின் துனிநீங்கற்கு வாயிலாகவிடுத்தலைக் கலிவெண்பாவாற்கூறுவது. (உ-ம்.) "பயிறருங்கலிவெண்பாவினுலே-யுயர்திணைப்பொருளையும்-அஃறிணைப்பொருளையுஞ் - சந்தியின்விடுத்தன் மூன்றுற தூதெனப்-பாட்டியற்புலவர்நாட்டினர் தெளிந்தே" (இலக்கணவி. அஎச.) 2. ஒருவருழையொருவரது மாற்றங்கொண்டுதவுரைக்குந்தன்மை: (உ-ம்.) "வேதமாந்தர்வேந்தரென்றிருவர்க்குந்-தூதுபோதற்றொழிலுரித்தாகும்" (அகப்பொ. அகத். எடு.) 3. காரியம். (சிந்தா.) 4. ஒருவிதபருக்கங்கல். (உ-ம்.)"தூதுணம்புறவொடு" (பட்டினப்பாலை. நுஅ.) 5. தூதன். ஆகுபெயரென்க.

தூதுணம்—புறுவின் பொதுப்பெயர். (சூ. நிக. கூ: சுசு.)

தூதுவளை—ஒருவகைப்புறு. அது, பருக்கங்கற்களோத்தின்னும்புறு.

தூதுவளை — ஒரு கொடி. (உ-ம்.) "முடக்கற்றுன்றாதுவளைபருக்குறிஞ்சி" (தைல. தைலவ. எசு.)

தூதுவன்—தூதன். (உ-ம்.) "தூதுவனெருவன்றன்னை. (இராமா. யுத்தகா. அங்கதன்றூ. உ.)

தூதுளை—தூதுவளை. (வைத்தியபரிபா.)

தூதை–1. சிறமட்கலம். (உ-ம்) "மண்டுதையாக்கியசோறு" (மணிமே. சையந்த. உடு.) 2. பாலை. (வைத்தியபரிபா.)

தூப்பு—தகாரம். (உ-ம்.)"தூப்புக்கைவரைசூழ்வடமேருவில்" (திருவிளை. விடையி. கக.)

[வவித்தல்.]

தூபக்கால் — ஒரு தூபக்கருவி. (உ - ம்.) "பெறுந்தலையதூபக்கால" (திருமுரு. மூர்த்தி வி. உஅ)

தூபம் — 1. புகை, நறும்புகை. (உ - ம்.) "அருக்கியதூபதீபங்கொடுத்து" (சிவரக. பசாசு. கூ.) 2. நீர்க்கடம்பு. (பிங்கல. ஈசுஈசுஅ)

தூபமணி — கைம்மணி. (பிங்கல. கஉசுஈ.)

தூபழட்டி — இந்தளம். (சிந்தா.) மணிமேகலையில் புகைக்கலைபமென்பர்.

தூபயோகம்–1. செவ்வாயினங்கிசாதிபதிக்கும் சந்திரலக்கினாதிபதிக்கும் ஐந்து ஒன்பதில் குருசுக்கிரனிருக்கப் பத்தாமிடத்தில் சனியுச்சமாயிருந்தால் வரும்யோகம் (சோதிடக்கட.) 2. லக்கினாதிபதிநின்ற அங்கிசாதிபதி ஐந்தாமிடத்திலிருக்கப் பஞ்சமஸ்தானத்தைச்சுக்கிரன் பார்க்கில்வருயோகம். (சோதிடக்கட.)

தூபி— }
தூபீகை– } கோவின்முதலியவற்றின்முடி.

தூபிதம் — சுடுதல். (சூ. நி. கூ: சுஐ.)

தூம்பல்—சுரை. (வைத்தியபரிபா.)

தூம்பா— தும்பை. (வைத்தியபரிபா.)

தூம்பிரகருப்பம்–துத்தபாடாணம். (வைத்தியபரிபா.)

தூம்மூர்ஷ்டகம்—ஒரு குளிகை.

தூம்பு–1. சுவம். (வைத்தியபரிபா.) 2. உட்டுளை. (உ-ம்.) "தூம்புடையெயிற்றுவாளராத்தீண்டி" (பிரமோ.காண்.உமாமகே.எ.) 3. ஏரிமதகு. (சிலதேசவழக்கு.) 4. சலதாரை (உ-ம்.) "தூமபெனத்தெரிந்தமூக்கினள்" (இராமா. கரன். க.) 5. நெடுவங்கியம். (உ-ம்) "கண்ணிடைவிடுத்தகளிற்றுயிர்த்தூம்பின்" (மலைபடு. நி.) 6. பெருவங்கியம். (உ-ம்.) "கழைவளர்தூம்பின்கண்ணிடமிடிமிர" (மலைபடு. நிகூ.) 7. மரக்கால். (பிங்கல. ஈசுஈகூ.) 8. மூங்கில். (பிங்கல. உஎநிகூ.) 9. வாயில் (பிங்கல. ஈசுஈகூ.)

தூமகாரம்—சூதபாடாணம். (வைத்தியபரிபா.)

தூமகேது — 1. அக்கினி. (பிங்கல. சசு.) 2. அக்கிதேவன். 3. வால்நட்சத்திரம்.

தூமத்துவசன் — நீ.

தூமதேவன் — அக்கினிதேவன். (உ - ம்.) "தூமதேவனும்புனிதநற்றுறவினர்" (பிரமோ. காண். கடு: கூ.)

தூமபுடம் — ஆதித்தியன் சுத்தபுடத்தை வைத்து அதிலே நாலுராசியும் பதின்மூன்று பாகையுங்கூட்டினின்றநிலை. (விதாந. குணகு. நிசு. உரை.)

தூமம்–1. ஒரு கோள். (உ-ம்.) "மைமீன் புகையினுந்தூமன்தோன்றினும்" (புறநா.சகஎ.) 2. கலஞ்சுடுஞ்சூளை. 3. தூமபுடம். (உ - ம்.) "வெங்கதிர்மேனன்கிராசியன்மூன்றுவிளங்குபாகந்தங்கிடத்தூமம்" (விதாந. குணகுண. நிசு.) 4. புகை. (சிந்தா.) 5. புளிகாரம். (வைத்தியபரிபா.)

தூமம்போக்கி—புகைக்கூண்டு. (தைலவ.)

தூமன் — சதருத்திரர்களுளொருவனுமியநிருதிக்கிலிருப்பவன். (வி-ணி. உஎ0.)

தூமாட்சி — ஓர் யோகினி. (வி-ணி. உசச.)

தூமாதிமார்க்கம் — பிதிர்கன்மங்களைத் தவறுதலுசெய்தவர்கள் பிதிர்லோகஞ்செல்லும்மார்க்கம. (அபிதா.)

தூமை–1. தூய்மை. 2.மகளிர்சூதகம்.(வழக்.)

தூமீ — தூவி. (உ - ம்.) "மன்றமுழ்மலர்தூய்வலகைதனிற்ப" (கூர்மபு. அட்டமூர்த்த. உஉ.)

தூய்தன்மை—அசுத்தம்.

தூய்தாக்கல்— சீத்தல், சுத்தமாக்குதல். (சூ. நி. கூ: கஉ.)

தூய்து–தூய்மை. (உ-ம்.) "தூய்தாகமன்னும பூபவசைப்படியோதநவர்க்கங்கள்" (சிவரக. தேவிமயம். கூ.)

தூய்மை—சுத்தம். (உ-ம்.) "தூய்மைசெய்வதுநீரலாதசொல்வின்மீவறளதோ" (அரிச்சந்திர. மயாந. கஉஎ.)

தூய்மைசெய்தல் — உவளித்தல். (பிங்கல. கஅஉகூ.)

தூயது—களங்கமில்லாதது. (உ-ம்.) "தூயதேற்பற்றிக்கோடும்" (இராமா. ஆரணியச. மாரீசன்வதைப். உகூஉ.)

தூயவரி—சுத்தமுள்ளவர். (உ-ம்.) "தூயவரல்லர்சொல்லில்" (இராமா. ஆரணிய. சடாயுவதை. நிசு.)

தூயன்—சுத்தன்.

தூயாள்—1. சரசுவதி. பிங்கலத்திற்றுய்யாளென்றுரை. 2. சுத்தமுடையவள்.

தூயினர்–சொரிந்தனர். (உ-ம்.) "விண்டுவைமுதலதேவர்தூயினர்மலர்கள்" (கூர்மபு. திருக்கல். சுகூ.)

தூர் – 1. அடிப்பக்கம். (உ-ம்.) "துனிநீக்கித்தூரிற்றின்றன்னதகைத்து" (காலடி.கல்வி.அ.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. வேர். (பிங்கல. உஅகஅ.)

தூர்க்கை—1. தூர்த்தல். 2. பூரகாள். (பிங்கல. உசகூ.)

தூர்ணகர்–கன்மேந்திரியபஞ்சகத்திலிருக்குமைந்துருத்திரரிலொருவர். (வி-ணி.உஎஉ.)

தூர்த்தத்தநம்—காமுகத்தன்மை.

தூர்த்தம்—1. ஊமத்தை. (வைத்தியபரிபா.) 2. தூர்த்தத்தநம்.

தூர்த்தர்—காமுகர். (பிங்கல. அசுவ.)

தூர்த்தல்-1. உட்செலுத்தல். (உ-ம்.) "பழுக்கும்பழத்தைத்தூர்த்து" (தைல.தைலவ.கஙசை.) 2. நிரப்புதல். (உ-ம்.) "யானைக்கவுட்குழிதூர்த்தவன்றே" (கைட்ட. சுயம்வர. கூ.)

தூர்த்தை—தூர்த்தைக்குணமுள்ளவள்.

தூர்தல்—1. அழிதல். (உ-ம்.) "தூர்ந்தொழியும்பொய்பிறந்தபோழ்தே" (நான்மணி. எசை.) 2. நிறைதல். (உ-ம்.) "தோளாமரச்செவித்தூரா வயிற்றுச்சுமடர்க்கெல்லாம்" (திருநூற்.கூ.)

தூர்ப்பு—நிரப்புதல்.

தூர்மம்-தேட்கொடுக்கி. (வைத்தியபரிபா.)

தூர்வகம்-1. சுமத்தல். 2. பொதியெருது. (பிங்கல. உசஎகூ.)

தூர்வம்—நாபி. (வைத்தியபரிபா.)

தூர்வாசி—ஓரிருடி. அவர் அத்திரிமகாமுனியின் புத்திரர். இவரைத்துருவாசரென்பர். (அபிதாந.)

தூர்வு—தூர்ப்பு. (வழக்.)

தூர்வை—1. அரக்கு. (வைத்தியபரிபா.) 2. அறுகம்புல். (பிங்கல. உகூசு.) 3. திணைத்தடைசேறு. (வழக்.)

தூர்வைத்தைலம்-ஒருவகைத்தைலம், அதனிலக்கணம். (உ-ம்.) "கணபதியணிமூலந்-தூர்வைத்தைலமீதே"என்னும் (தைல. தைலவ. கஙஉ-ம் செய்யுளிற்காண்க.)

தூர்ஷை—முசற்புல். (வைத்தியபரிபா.)

தூரகாரியம்வது — ஓரலங்காரம். தூரத்திலேநிகழுங்காரியத்தினையுடைவேது, காரியமொருவழியுங் காரணமொருவழியுமாய் நிகழ்வது என்பதுகருத்து. (உ-ம்.) "வேறெருமாதர் மேல்வேந்தனகதுதியால்-ஊறுதரவிம்மாதுயிர்வாடும்"(தண்டியல. பொருளணி. கூஉ. உரை.)

தூரசூலை—ஒழுகுசூலை. (வைத்தியபரிபா.)

தூரணம்—சீக்கிரம்.

தூரத்தான்—அந்நியன். (வழக்.)

தூரதரிசி—பண்டிதன்.

தூரதிட்டி—1. அஞ்சநபாஷாணம். (வைத்தியபரிபா.) 2. தூரபார்வை.

தூரதிட்டிக்கண்ணாடி — தூரத்திற் பொருளைச் சமீபமாகக்காட்டுமோர் கருவி.

தூரம் — 1. ஊமத்தை. (வைத்தியபரிபா.) 2. சேய்மை. (உ-ம்.) "சிவயோகியர்தாந்தூரத்தேயெதிர்ந்தாரென்சுரல்" (சிவரக. நந்திகேசு. ரர். நமனுக்கு. கஉ.) 3. புறம்பு-தூரமாயிருக்குமுள். (வழக்.) 4. நீளம். (பிங்கல. உஉகூ.)

தூரமம்-தேட்கொடுக்கி. (வைத்தியபரிபா.)

தூரல்—1. தூருதல். 2. மறைதல். (உ-ம்.) "அம்மணல்-வடித்தூரவரிப்போல்" (கலி. சக.)

தூராகி—எலிச்செவிக்கள்ளி. (உ-ம்.)"தூராகி சங்கட்சமார்க்கவம்" (தைல. தைலவ. கஉடு.)

தூராதூரம்—வெகுதூரம். (வழக்.)

தூராதீவயசீசோல்—ஆற்றெழுக்குமடிமறிமாற்றுமல்லாத "சுரையாழவம்மிமிதப்ப" நல்லபடாஅபறை முதலிய எழுவகைப்பொருள்கோளிலக்கணம்பெற்ற செய்யுட்கள். (பி-வி. உடு.)

தூரி — 1. ஊஞ்சல். (பிங்கல. கசுஎ0.) 2. எருது. அம்கெட்டுநின்றதென்பர். 3. ஒருவாத்தியம். (உ-ம்.) "கணுவை"பார். 4. தூரிக்கோல். 5. பலகறை.

தூரிக்கோல்—
தூரிகை—
தூரிகைக்கோல்—
தூரியக்கோல்—
} எழுதுகோல்.(வழக்.)

தூரியம் — 1. இசைக்கருவி. 2. உவகைப்பறை. 3. எருது, பேரெருது. 4. எழுதுகோல். 5. எதிபடைப்பொது. 6. தூரம். (கலி ககo. உரை.) 7. நல்லாடை. 8. பேரிகைமுதலிய வாத்தியப்பொது. (உ-ம்.) "நெருங்குதூரியங்களேங்க" (பெரியபு. தடுத்தா. உகூ.) 9. பொதியெருது. (பிங்கல. உசஎகூ.) (2, 3, 7-பிங்கல. கூசுஎ0.)

தூரியன்—1. கடவுள். (உ-ம்.) "தூரியனுஞ் சிவந்தோன்றும்" (சி. சி. அ: உஅ.) [வாக்குமநாதீதகோசரனென்பதுபொருள்.] 2. தூரத்திலேயுள்ளவன்.

தூரு — அடி. (உ-ம்.) "தூருகனத்தோடே யெய்தாழிற்கும்" (தைல. பாயிர. கடு.)

தூருதல்—மேவப்படுதல். (வழக்.)

தூரேத்தி—கம்பந்திராய். (வைத்தியமூ.அக.)

தூரேந்தம்—துளசி. (வைத்தியபரிபா.)

தூரோணம்—கவிழ்த்தும்பை. (வைத்தியமூ. அக.)

தூலகம்—பருத்தி. (வைத்தியமூ. அக.)

தூலகன்மம் — மநம் வாக்குக் காயங்களாற் செய்யப்படுங்கன்மம். (சி. சி. உ: கஙு. மறை.)

தூலகாலம்—லௌகிககாலம். (வி-ணி.)

தூலசகளதத்துவம் — வித்தியாதத்துவம். (சி. சி. க: சுடு. ஞாநப்.)

தூலசரீக்கரை-1. உப்பு. 2. பருத்திவிரை. (வைத்தியபரிபா.)

தூலசரீரசமட்டியபிமாநி-விராட்புருடன். (த. நி. போ. கoகூ.)

தூலசரீரம்-சாதி, குலம், பிறப்புமுதலியவைகளால் அபிமாநஞ்செய்தற்கிடனுப்பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னு மைந்து

பூதமுங்கூடிப் பரிணமித்த வுருவுடம்பு. (சைவவி.)

தூலசரீரவியட்டியபிமானி—விசுவன். (த. நி. போ. கoக.)

தூலசித்து—உயிர். (சி-சி. எ: கூ. சிவஞாந.)

தூலசிருட்டி — ததுகரண புவநபோகங்கள். (சி. பி. கை.)

தூலசிவதத்துவம்—தூலமாகிய சிவதத்துவம். (சி-சி. அ: கo. ஞாநப்.)

தூலதமம்—ஒன்றற்கொன்றேற்றமான தூலத்தன்மையுடையனபலவற்றள்ளும் மற்றவற்றுக்கேற்றமான தூலத்தன்மை. (உ-ப.) "நிவிர்த்திகலையுட்பட்ட புவநவாசிகட்குத் தூலதமமாயும்" (சி. சி. க: உசா. சிவஞாந.)

தூலதாம்—அதிகதூலம். (உ-ம்) "நிவிர்த்திகலாகற்பபுவநவாசிகளுக்குத்தூலதரமாயும்" (சி. சி. க: உசா. ஞாநப்.)

தூலதேகம்—தூலசரீரம். (சைவவி.)

தூலப்பிரவர்த்தன்—உருத்திரன். (சி-சி. க: சுடு. இராமலி.)

தூலப்பிரவிர்த்திதத்துவம்—வித்தியாதத்துவம். (சி-சி. க: சுடு. ஞாநப்.)

தூலபஞ்சகிருத்தியம்—தூலமாகிய பஞ்சகிருத்தியம். (சி-சி. க: கஅ. ஞாநப்.)

தூலபஞ்சவிஞ்சதி — சுரோத்திராதி ஞக்கசதிதாநம் பத்தும், அவஸ்தாதாகமைந்தும், பிருதிவியின் கூறென்னும் மயிர், தோல், எலும்பு, நரம்பு, மாமிசமாகிய ஐந்தும், அப்புவின் கூறென்னுஞ் சோரிமுதலைந்தும் ஆகிய இருபத்தைந்து தூலம். (த. நி. போ. கoக.) பஞ்சவிஞ்சதி-இருபத்தைந்து.

தூலபஞ்சாக்கரம்—பஞ்சாக்கர பேதத்தொன்று. மெய்கண்டசாத்திரத்திற்கூறப்படும்.

தூலபிசு—பஞ்சு (வைத்தியபரிபா.)

தூலபூதம்—புறப்பூதமாகிய ஆகாயமுதலிய வைகள். (சிவப்பிர உ: உ. உரை.)

தூலம் — 1. ஆகாயம். 2. இலவமரம். 3. கோரை. 4. சிவதேகமூன்றிலொன்று. 5. நஞ்சு. 6. நீர்முள்ளி. 7. பஞ்சு. 8. பருத்தி. 9. பருமை. (சி. சி. ஞாநப்.) (2, 3, 5, 6, 7, 8-வைத்திய பரிபா.)

தூலலிங்கம்—கோபுரம். (சைவச. மாணு. எ. உரை.)

தூலினி—இலவு. (வைத்தியபரிபா.)

தூலவீசுரதத்துவம்—சிவசத்திஞாநமேறிக் இச்சையுலறத்து இச்சாசத்திஞாபியாயிருந்தள்ளவிற்பிறக்கும் பெயர். (சி. சி. க: சுடு. ஞாநப்.)

தூலாதிகாரதத்துவம்-தூலவீசுரதத்துவம். (சி-சி. க: சுடு. ஞாநப்.)

தூலாராட்சி — மணிபூரகதாநத்தினிற்கு மோரதிதேவதை. (சி-சி. அ: உக. மறை.)

தூல்ாநந்ததீநியாயம்—மீமாஞ்சை நூலிற் சொல்லப்பட்ட சகஸ்திரஞாயங்களுளொன்று; அஃது: அருகியவடிவுடைத்தாகிய அருந்ததியைக் காட்டவேண்டின் அதற்கணித்தாயுள்ள தூலநக்ஷத்திரமொன்றைக்காட்டிக்காட்டுமாறு போல நுண்ணியவிடயத்தை எளிதினுணரத் தக்கவோர் விடயங்கொண்டு சோபாநமுறைப் படி யுணர்த்துமொரு நெறி. (சி. சி. க: உo. சிவாக்.)

தூலி — 1. எழுதுகோல். (சூ. நிகண்டில், தூலிகையெனபர். 2. பருத்தவள்.

தூலிகை—1. எழுதுகோல். (சூ.நிக.எ:கச.) 2. மெத்தை. 3. விளக்குத்திரி.

தூலித்தல்—தூளித்தல். (வழக்.)

தூலிநி—இலவு. (வைத்தியபரிபா.)

தூலப்பு—தூளிப்பு.

தூலேச்சுவரன்—தாணுவாஷ்டகரிலொருவன். (வி-ண்.)

தூலேசுரம்—பிரதிட்டாகலையில் அகங்காரதத்துவத்திலிருக்குமொருபுவனம். (சி-லி. இரி. உக. உரை.)

தூலேயம் — சிறுகாஞ்சொறி. (வைத்தியபரிபா.)

தூலை—பருத்தி. (வைத்தியபரிபா.)

தூவத்தை—வாள். (பிங்கல. கருநிகண்டு.)

தூவாம்—துவர்ப்பு. (பிங்கலத்தில் துவரம் என்பர்.)

தூவான்—அண்ணகன்.

தூவல்—1. அழித்தல். (சிந்தா.) 2. இறகு. (வழக். கோழித்தூவல் கொண்டுவா.) 3. ஒழித்தல். (சிந்தா.) 4. சிந்தல். (சூ. நிக. கு: உகூ) 5. தூரியக்கோல். 6 நீர்த்தளி (சூ.நிக.க:கூo.) 7. மழை (உ-ம்.) "தூவற்கவிழ" (மலைபடு. கசசு.) 8. மழைத்துவலை. (பிங்கல சுகூ.)

தூவழி — ஒரு பண். (உ-ம்.) "தும்பிவண்டொடுதூவழியாழ்செய்ய" (சிந்தா. குணை. ச.)

தூவாத—வெய்யசொற்கள். (உ-ம்.) "தொகச்சொல்லித்தூவாதநீக்கி" (வள். சுஅறு.)

தூவாமை—1. உண்ணுமை. (உ-ம்.) "தாயிறூவாக்குழவித்துயர்" (மணிமே. கசு: கக.) 2. இன்னாமை. (வள். சுஅறு.)

தூவானம் — காற்றினெற்சாரட்டுமழைத்திவலை. (வழக்.)

தூவி—1. அன்னச்சிறகு. (பிங்கல.உகூகசு.) 2. அன்னம். (உ-ம்.) "தூவிகள்நின்றுஞ்சாலிவளைக்குஞ்சோலைசிறக்கும்புலியூரே" (திருப்பு. நிஅ.) 3. இறகு. (சூ. நிக. கு: சுகூ.) 4. சூட்டு.

(உ-ம்.) "அண்னத் தூற்றத் துவி" (நெநெல். கஙூஉ.) மயிலின் கூட்டுமாம். 5. மயிலிறகு. (உ-ம்.) "தூவியமுந்திரிகை" (தைல. தைலவ. சூ.) 6. சொரிந்து. (சிந்தா.)

தூவிப்பொன் — கிளிச்சிறை, நால்வகைப் பொருளிலொன்று. (உ-ம்.) "தூவிப்பொன்மாட மூதூர்ச்சுபத்திரனென்னைக்கண்டே" (சிந்தா. கனக உoo.)

தூவு—1. ஊண். (பிங்கல. கஎடு.) 2. தூவுதல். 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. பகை. (பிங்கல. கஅஎo.)

தூவுதல்—1. சிந்துதல். (தனிகைப். குமரேசப். கக.) 2. தெளித்தல். (வழக்.)

தூள்—1. சூரணம். (உ-ம்.) "சிங்கித்தூளசை சர்க்கரை" (தைல. சைலவ. கஙகூ.) 2. துகள். (உ-ம்.) "தடிச்துநீர்பொழிநீலமஞ்சுகூழுமிஞ் சிகளேதாய்" (ஏகாதசி. உருக்கு. டுக.) 3. பூந்தாது. (வைத்தியபரிபா.) 4. பொடி. (பிங்கல. சுஙடு.)

தூளநம் — உத்தூளம். (உ-ம். "சொல்லரிய ஞாநசத்திவடிவாகீறுதூளநஞ்செயதிடின மயிர்த்துவாரமெல்லாம்" (சிவரக. சிவதன்மா. உகூ.)

தூளம்—தூள். அம் சாரியை.

தூளாடல்—தூளாதல். (உ-ம்.) "சேடன் முடியுங்கதிர்கொள்செண்னிவரையுந்தூளாட வடியிட்டு" (திருவிளை. மாயப். சூ.)

தூளி—1. தெரிநிலைவினைப்பகுதி 2. பராகம். (உ-ம்.) "அம்பலத்தாடிகுரைகழற்கீழ்த்தூளிநிரைத்தசுடர்முடியோய்" (திருக்கோ. கடுக.) 3. புழுதி. (உ-ம்.) "தூளியின்படலைவந்துதொடர்வுற" (இராமா. கரன். டுகூ.)

தூளிதுச்சம்—கதம்பப்பொடி. (வைத்தியபரிபா.)

தூளித்தல்-1. தூளாகுஞ்செய்தல். 2. பருத்தல்.

தூளித்துவசம்—காற்று.

தூளிதம் தூள்.

தூற்றல்—1. சிதறுதல், சிந்துதல். (வழக்.) 2. தூற்றுதல். (உ-ம்.) "காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்" (பழமொழி.) 3. பழிகூறல். (உ-ம்.) "தூற்றுதேதூரவிடல்" (நாலடி. 4. மழைத்தூற்றல்.

தூற்றி—ஆராதூரி. (வழக்.)

தூற்றித்தனம்—தூர்த்தத்தனம். (வழக்.)

தூற்றி — பழிகூறுபவன், பழிகூறுபவள். (வழக்.)

தூற்று—1. தூற்றுதல். 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. பழிப்பு.

தூற்றுதல் — 1. சிதறல். 2. நெல்முதலியவற்றைத்தூற்றுதல். (உ-ம்.) "வைதெரிந்தகற்றியாற்றிமழலியன்மனைத்தூர்நி" (பெரியபு. நாட்டு. உடு.) 3. ஒருமறியப்பரப்புதல், பழிகூறல். (உ-ம்.) "தன்னியார்குற்றமூர்தூற்றமரபினுர்" (வள். கஅஅ.)

தூற்றுமைக்கோற்றுவீ—ஒருகோடி. (வைத்தியபரிபா.)

தூற்றுவாயிக்கோற்றுன்—தூற்றுமைக் கொற்றுன். (வைத்தியபரிபா.)

தூறல் — 1. பழிசொல்லல். 2. மழை. (சூ. நிக. க: கo.) 3. மழைவிடல். (பிங்கல:எo.)

தூறவம்—நாவல். (மலையக.)

தூறன்—தூறுசொல்பவன். (வழக்.)

தூறு—1. இறும்பு. (பிங்கல. உஅடு.) 2. கூட்டம்-நெருக்குதல். (திருக்கோ. கஉசு. உரை.) 3. சிலும்பல். 4. நிறுசெடி. 5. செரிநிலைவினைப்பகுதி. 6. திராய். (வைத்தியமூல அக.) 7 தீங்கு. (உ-ம்.) "தூறளுற்றிடுகட்பண்ணியன்றனை" (சேதுபு. அகிநீர் சுகூ) 8. பழிச்சொல் 9. பற்றுகோடு. (உ-ம்.) "நூளியின்படலைவந்துதொடர்வுறமாந்தூறு ளிடையொடியுமேமாலைச" (இராமா.சுரலை.டுகூ.) 10. மஞ்சள். (வைத்தியமூ. அக.)

தூறுதுணம்—கடம்பு. (வைத்தியமூ. அக.)

தூறுட்டி—சிற்றேலம். (வைத்தியபரிபா.)

தூறுதல்—தூறல்.

தூறுதலையன்—1. பிராய் (வைத்தியபரிபா.) 2. சலும்பியமயிர்த்தலையன். (வழக்.)

தூறுபுட்பம்—1. சிலந்தி. 2. சீந்தில். (வைத்தியபரிபா.)

தூறுபுரம்-சிலந்திகாயகம்.(வைத்தியபரிபா)

தூறுவாதி—தீம்பாலை. (வைத்தியபரிபா.)

தெ

தெக்கணகைலாயம்—திருக்காளத்தி. (சீகாளதிப். தென்கை. கூ.)

தெக்கணம்—தக்கணம்.

தெக்கணயநம் — தக்கணயநம், (பொருட்டொகைநிகண்டிற் காண்க.)

தெக்கிணம்—தெற்கு. (உ-ம்.) "தெக்கிணதிக்கின்முந்நீர்த்தீரத்தில்" (சேதுபு. சக்கரதீர். டுக.) [தக்கணந்தெக்கிணம் என மருவிற்று.]

தெகிடி—ஒரு விளையாட்டு. (ஒரு குழூஉக்குறி.)

தெகிழ்தல்—வாய்விடுதல். (உ-ம்.) "தேங்கயத்தணிமலர்தெகிழ்ந்தநாற்றமும்" (சிந்தா. கேம. உக.)

தெகிள்—ஒருதொடி. (வைத்தியபரிபா.)

தெதுட்டல்—தெவிட்டல் என்பதன் மரூஉ என்பர்.

தெதுட்டி— } தேட்கொடுக்கி.(வைத்திய
தெதுட்டிகை– } பரிபா.)

தெதுளம் –நிறைவு.

தெதுளல்— } நிறைவு. (பிங்கல. உஉஅ.)
தெதுளுதல்– }

தெங்கங்காயீ—தேங்காய். (உ-ம்.) "தெங்கங்காய்போலத்திரண்டிருண்ட" (நன். பொது வி. சூஎ. உரை.)

தெங்கணம் – தேயமைம்பத்தாறிலொன்று. [தெலுங்கு.]

தெங்கநாடு — குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்குமிடையிலுள்ள நாடு. (சிலப்பதி.)

தெங்கந்தீவு— } 1.சத்ததீவிலொன்று.(சூ.
தெங்து— } நிக.கஉ:சுக.) 2. தென்ன மரம். (உ-ம்.)"காய்மாண்டதெங்கின்பழம்வீழ" (சிந்தா. நாமகள். உ.)

தெசலம்—தேமா. (வைத்தியபரிபா.)

தெசலன்—வீராகமங்கேட்ட ஒருவன். (த. நி. போ. கடுக.)

தெசவம்—மா. (வைத்தியபரிபா.)

தெசனி—1. பெருங்குரும்பை. 2. மஞ்சள். (வைத்தியபரிபா.)

தெசாகம் — இறந்த பத்தாநாள். (உ-ம்.) "காரிகையாய்தெசாகத்துண்டாமிந்து காணினன்றன்று" (செகராசசேகரமென்னுஞ்சோதிட நூல். பலவினை. சக (அபிதானகோ.)

தெட்ட—தெளிவான. (உ-ம்.) "திசைகட்டியமால்கரிதெட்டமதப் - பசைகட்டினை"(இரா மா. சரபங். அ.)

தெட்டல் — 1. அபகரித்தல். 2. எத்தல். (1, 2-வழக்.)

தெட்டவர்—தெளிந்தவர். (உ-ம்.) "உணர்வில்லார்தெட்டவரென" (இரகு. தேது. சு.)

தெட்டு – 1. எத்து. (உ-ம்.) "தெட்டிவந்துபுலிபூரின்மன்றள்வளர்பெருமாளே" (திருப்பு. குடுஅ.) 2. தெரிநிலவினைப்பகுதி. (உ-ம்) "மற்றவையாவுநூற்றெட்டே" (அழகர்கலம்பகம். உ0)

தெட்டுதல்—வஞ்சித்தல். (வழக்.)

தெட்பம் தெளிவு. (உ-ம்.) "தெட்பமார் சுமதி" (சேதுபு. பாவநா. உகு.)

தெண்டகன்—சத்திரியன் சூத்திரமாதைப் புணரப் பிறந்தபிள்ளை. (உ-ம்.) "பகர்ந்தவரையங்சூத்திரர்தம்பாவைதன்னைப்பகர்விதியாலுகந்துபுணரவுற்பவித்தான்பெயர்தெண்டகன்" (அருணகிரிபு. ஞலம்புரி. கஎ.)

தெண்டபங்கி—ஒருவகைநியாசம், இது சிவபூசையிற்செய்வது. (உ-ம்.) நித்தியகன்மநெறியிற் காண்க.

தெண்டம்—அபராதம்.
தெண்டன்—வணக்கம். } (வழக்.)
தெண்டனை—தண்டனை.

தெண்டி — 1. தண்டிபாசிரியர். 2. தெரிநிலவினைப்பகுதி.

தெண்டித்தல்—ஒறுத்தல்."தெண்டித்தார்க்கன்றொருசெயம்" (விவேகசிந்தாமணி.)

தெண்டிப்பு—கண்டிப்பு.

தெண்டிரை—சமுத்திரம். (உ-ம்.) "தெண்டிரையுடுத்தவங்கண்மாநிலம்"(நைட.அரசா.க.)

தெண்டு–1. தண்டு. 2. ததுஇரண்டுகொண்டது. (வி-ணி.)

தெண்டுதல்–1. நரம்புவலித்தல். 2. மிண்டுதல். (வழக்.)

தெண்மை—தெளிவுத்தன்மை.

தெத்தநாள்—பாபக்கிரகங்கணின்று கழிந்தநாள். (விதாக. குணகுண. கூசு. உரை.)

தெத்தநவியத்தியாதுதி–அறிவு விளங்கும்படி கொடுக்கிறவாகுதி.

தெத்து—எத்து. (வழக்.)

தெத்துதல்—தாளக்குறிப்பு.

தெத்தி—நேர்வாளம். (வைத்தியபரிபா.)

தெப்பம்—புணை. (சூ. நிக. எ: நுஉ.)

தெம்பாங்து—ஒருவகைச்சந்தம். (வழக்.)

தெம்மாடி—அறிவீனன். (வழக்.)

நெம்முனை–1. இரணகளம். 2. பகைமுகம். (உ-ம்.) "மன்னவன்றெம்முனைமேற்செல்லுமாயினும்" (திருக்கோ. கூ0சு.)

தெய்—1. கொல்லல். 2. தெய்வம். (1, 2-பிங்கல. கூசுஎஉ.)

தெய!!—ஓரசைநிலையிடைச்சொல்.(உ-ம்.) "பாலரேதெய்யவெம்மறையாரீமே" (ஐங்குறு. சுசு.) [இது தெய்யோஎனவுந்திரிந்துவரும்.]

தெய்வகனை—தெய்வம். (வழக்.)

தெய்வசுரபி—காமதேநு.

தெய்வத்தச்சன்—மயன். (மணிமே.)

தெய்வத்தரு—தேவதாரு. (உ-ம்.) "சசிபலை தெய்வத்தருசித்திரகம்" (தைல. தைலவ. கச.)

தெய்வத்தியன்–இப் பிரமமே நீயெனச் சீடனுக்கு ஆசிரியர் உபதேசிக்குமுபதேசமே தனக்குபதேசமாகப் பிரமமே தானெனனத் தெளிந்தவன். (வே-தா-சூ. கூகூ.)

தெய்வத்துவம்—தெய்வத்தன்மை.(வழக்.)

தெய்வதம் — தெய்வம். (உ-ம்.) "தெய்வதமடந்தையர்" (கந்தபு. தெய்வயா. கஅடு.)

தெய்வதயானை — 1. ஐராவதயானை. 2. தெய்வயானையம்மை. (உ-ம்.) "தெய்வதயானை கேடியசூருயிர்வவ்வியவேலினண்மினைவி யா தலால்" (கந்தபு. தெய்வயா. கஎக.)

தெய்வநாநம்—வெயிலெறிக்க மழைபெய்தலாற் கிழக்குநோக்கி இரண்டு கையையுங் குவித்து மேலேசீட்டிக் கிழக்கே யேழடி இதயமந்திரத்தாலேபோய்ப் பிறகாலே இம்மந்திரத்தால் ஏழடிமீளல். (த-பி.)

தெய்வநாயகன்—சிவன். (உ-ம்.) "தெய்வநாயகன்மருவுமேருகயிலாயத்திற்சேர்ந்தாள்" (சிவரக. தேவர்முநி. கo.)

தெய்வநாயகி — உமை. (உ-ம்.) "சென்மகோடியிற்செய்தபுண்ணியத்தினுற்றெய்வநாயகிசேரும் - பொன்மயந்தருவிமானசேவையும்பெற்றேம்" (சிவரக. தேவியிமய. உக.)

தெய்வப்பசு—காமதேநு. (பிங்கல.உசடுக.)

தெய்வப்பாவை — தெய்வத்தாற்செய்தகொல்லிப்பாவை. (உ-ம்.) "சிலத்தொழிற்சிறுதறெய்வப்பாவை" (சிந்தா. காந். ககுடு.)

தெய்வப்பெண்—அணங்கு. (பிங்கல.கஅசு.)

தெய்வம்—1. ஊழ். (உ-ம்.) "ஈந்துளார்க்குமிறச்செயலாகுமோ-தேய்ந்திடாமுறைதெய்வமுளாரையே" (சேதுபு. அக்கினிதீர். சகக.) 2. ஐவகையாகத்தொன்று. (பிங்கல. ககுடு.) 3. கடவுள். (உ-ம்.) "தெய்வந்தொழாஅள்" (வள். நுடு.) 4. தெய்வமணம். (உ-ம்.) "அறநிலையொப்பேபொருள்கோடெய்வம்" (இக்கணவி. சஅடு.உரை.) 5 வருடம். (உ-ம்.) "சில்லியிட்டொருதெய்வஞ்சென்றமுகிற்பெயர் கொணெல்லிட்டு" (தைல. தைலவ. கசுடு.)

தெய்வமணம்—1. எண்வகைமணத்தினொன்று; அது: வேள்வியாசாரியனுக்குக் கந்நியையலங்காரித்துத்தீமுன்னர்க்கொடுப்பது. (உ-ம்.) "நீளினெடுநகர்.....தெய்வமணத்தார் திறம்" (இலக்கணவி. சஅடு. உரை.) 2. திவ்வியவாசனை.

தெய்வமணி— சூதிரைகளினற்சுளியிலொன்று. (உ-ம்.) "அணிகிளர்கழுத்தில்வலஞ்சுழித்திருந்தாலறிந்தவரதனையேதெய்வ- மணியெனவிசைப்பர்" (திருவிளை. பரிநரி. ககக.)

தெய்வமந்திரி—வியாழன். (சூ.நிக.க:சுஉ.)

தெய்வயாகம்–பஞ்சமகாயஞ்ஞத்தொன்று; அஃது: ஓமம்வளர்த்தல். (வள். தென்புலத்தார் என்னுங்குரைமிலறிக.)

தெய்வயாநி–சுக்கிரன்மகளாகியஒருபெண். (உ-ம்.) "பார்க்கவன்பயந்ததெய்வயாநிக்குப்பதியாயுள்ளோன்" (இராமா. இலவணன்வதை. ஙஉ.)

தெய்வயானை–1. ஐராவதயானை. 2. தெய்வயானையம்மையர். (உ-ம்.) "கொற்றவேற்படைக்குமரற்கிந்திரன்-றெற்றெனத்தருந்தெய்வயானையை" (கந்தபு. தெய்வயா. நுஉ.)

தெய்வயானைகாந்தன்—குமரன். (சூ. நிக. க: உச.)

தெய்வவிரதன்-வீடுமாசாரி. (பிங்கல.எஙஎ.)

தெய்வவுணவு—அமுது. (பிங்கல. ஙகo.)

தெய்வவுத்தி – சீதேவியென்னுந்தலைக்கோலம். (உ - ம்.) " தெய்வவுத்தியொடுவலம்புரி " (திருமுருகாற். உங.)

தெய்வாதீநம்—தெய்வசுதந்தரம். ஆதீனம்-சுதந்திரம். (சி. சி. ங: அ. மறை.)

தெய்விகம்—1. தெய்வச்செயல். 2. தெய்வத்தன்மை. (உ - ம்.) "சென்றசென்றவெஞ் சேனைகளிளைப்பறத்தெய்விகந்தனில்வந்த"(பாரத. பதினென். சுஅ.)

தெய்வீகம் — தெய்வத்தன்மை. (உ - ம்.) "தெய்வீகமாகநீர்தா - மித்திசையில்வந்ததரனருள்தன்றே" (சிவரக. சிவடுண்டிவந. சசஉ.)

தெரிக்கல் — விரித்துச்சொல்லல். (உ-ம்.) "சைவத்திறத்தினைத்தெரிக்கலுற்றும்" (சி. சி. பாயிர. உ.)

தெரிகாரம்–பொரிகாரம். (வைத்தியபரிபா.)

தெரிகோல்—பொருள்களையாராயுந்துலாக்கோல். (புறநானூறு.)

தெரிசநம்—தரிசநம். (உ-ம்.) "தேடிராமநாதனெந்தைதெரிசநத்தினுலரோ" (சேதுபு. இராம. ச.)

தெரிசநவேதி–கண்டமாத்திரச்திலே செம்பைப்பொன்னுக்குமோரிரதசுளிகை. (உ - ம்.) "தெரிசநவேதிகண்டசீருணம்போல"(சேதுபு. வேதாள. எக.)

தெரிசநை—தரிசநம். (வழக்.)

தெரிசித்தல்—தரிசித்தல். (திருவிளை. அன்னக்குழி. கக.)

தெரித்தல்—1. எழுதல். (பிங்கல. உகஉச.) 2. கொழித்தல். 3. சொல்லல். (சூ.நிக.கo:நு.) 4. தெரிவித்தல். (உ-ம்.) "உறுபொருளெவற்றையுந்தெரித்து" (தணிகை. கடவுள். க.)

தெரிதல்—அறிதல்.

தெரிதருதேற்றவுவமையணி — உவமையணிகளுளொன்று; அஃது: ஐயுற்றதனைத்தெரிந்து துணிவது. [வ-று.] "தாமரைநாண்மலருந்தண்மதியால்வீறழியுங் - காமர்மதியுங்கறைவிரவு - மாமிதழுற் - பொன்னேமயக்கும்புனைசுணங்கினுர்முகமே-யென்னேமயக்குமிது"(தண்டி. ஙக. உரை.)

தெரிதல்–1. அறிதல். 2. ஆராய்தல். (உ-ம்.) "தெரிந்துதெளிதல்" (வள். நிக. அதி. பார்.) 3. காணல். (உ-ம்.) "இன்னதோர்தன்மைக ளெல்லாந்தெரிந்து" (கந்தபு. சூரபன். வதை. எகூ.) 4. தெள்ளுதல். (பிங்கல. சஅஙூ.) 5. விசாரித்தல். (புறப்-வெண்.)

தெரிந்து—ஆராய்ந்து. (வள். நிக. அதி.)

தெரிநிலை—விளங்கிநிற்பது.

தெரிநிலைவினை — கருத்தாவும் காரணமும் இடமும் செயலும் காலமும் செயப்படுபொரு ளுமாகிய அறுவகைப்பொருளையுந்தரும்வினை. (நன். கூஉ. உரை.)

தெரிநிலைவினைப்பெயரேச்சம்–காலமுஞ் செயலுந்தோன்றி வினைமுற்றுதற் குரியபா லொன்றுந்தோன்றுது அப்பாலுடனே செய்ப வன் கருவி நிலம் செயல் காலம் செயப்படு பொருள் என்னும் அறுவகைப்பொருட்பெயர் களும் எஞ்சிநிற்கும் வினை. (நன். கூஉ. உரை.)

தெரிநிலைவினைமுற்று — பால்காட்டும் விகு தியை யிறுதியிற்பெற்று வெளிப்படையாகக் காலத்தைக்கொண்டுமுடியும்வினை.(நன். கூஉ. உரை.)

தெரிநிலைவினைவினையெச்சம்–தொழிலுங் காலமுந்தோன்றி வினைமுற்றுதற்குவேண்டும் பாலொன்றுந்தோன்றுது அப்பாலுடனேவினை யெஞ்சிநிற்கும்வினை. (நன். கூஉ உரை.)

தெரிப்பு—1. அறிவிப்பு. 2. ஆராய்வு. 3. எழுதுதல். 4. கொழிப்பு. 5. சொல்லுதல். (தெரித்தல் தெரிப்பு, இரண்டுமொக்கும்.)

தெரிபடுதல் — 1. தெரிந்தெடுக்கப்படுதல். 2. தோன்றுதல். (வழக்.)

தெரியல்—1. ஆராய்தல். 2. காணல். 3. பூமாலை. (உ-ம்.) "கல்லிறகரிந்தவென்றித்தெரி யலன்" (திருவிளை.உக்கிரபாண்டியன்திரு.உசு)

தெரியலர்—அறிவீனர்.

தெரியவருதல்—அறிதல். (வழக்.)

தெரியற்றார்–தெரிதலையுடையமாலை.(சிந்தா)

தெரியாத்தனம்—1. அறியாமை. 2. தோன் றுமை. (1, 2-வழக்.)

தெரியாநிலைவினை —குறிப்புவினை.

தெரியாமை—அறியாமை. (வழக்.)

தெரிவிடல்—1. ஆராய்தல். 2. தெரிந்தெ டுத்தல்.

தெரிவித்தல்—1. அறிவித்தல். 2. வெளிப் படுத்தல். (உ-ம்.) "சிங்கவருமன்றனக்குத்தெரி வித்து" (கோயிற்பு. பாயிர. உசு.)

தெரிவினை —தெரிநிலைவினை.

தெரிவு—1. அறிவு. (உ-ம்.)"தெரிவுறுமீமம் விழுமியோனும்" (கோயிற்பு. கடரா. கஙு.) 2. ஆராய்வு. 3. தெரிதல். 4. தெரிந்தெடுக்கப் பட்டது; ஆகுபெயர்.

தெரிவை — 1. இருபத்தாறமுதல் முப்பத் தொருவயதிற்பெண். (சூ. நிக. உ: நுஅ.) 2. கன்னிராசி. (பிங்கல. கூசுஎகூ.) 3. பெண். (உ-ம்.) "தெரிவைநீர்மூழ்க" (அரிச்ச. விவா. உஎஉ.)

தெரு—1. வழி. (உ-ம்.) "நுஞ்சீறூர்த்தெரு வினடப்போதுவனே" (திருக்கோ. எசு.) 2. வீதி. (உ-ம்.)"தாயிலாப்பிள்ளைமுகந்தனைநோக் கித்தெருவினிடைத்தளர்வாள்" (திருவிளை. விருச்த. கூஉ.)

தெருட்சி—1. அறிவு. (பிங்கல. கஎசுசு.) 2. இருதுவாதல். (உ-ம்.) "தெருட்சிப்படலம்" (வீரசோ.) 3. தெளிவு. (உ-ம்.) "தெருட்சிசேர வைத்திசைமுகன்சபித்தநாள்"(சேதுபு.விதூம. எக.)

தெருட்டல்–1. இசைக்கரணங்களெட்டினு ளொன்று. (உ-ம்.) "தெருட்டலென்பதுசெப் புங்காலையுருட்டிவருவதொன்றேமற்ற - வொ ன்றன்பாட்டுமடையொன்ற நோக்கின்-வல் லோராய்ந்தூலேயாயினும் - வல்லோர்பயிற்று ங்கட்டுரையாயினும் - பாட்டொழிந்துலகினி லெழிந்தசெய்கையும்-வேட்டதுகொண்டுவிதி யுடனுடி" (கூர்மபு. தேவி. க. உரை.) 2. தெ ளியச்செய்தல். (ஐங்குறு.)

தெருட்டு–1. அறிவிப்பு. 2. இருது. தெருட் டுக்கலியாணம். (வழக்.) 3. தெருட்சி. 4. தெரி நிலைவினைப்பகுதி.

தெருட்டுதல் — 1. அறிவுறுத்தல். (உ-ம்.) "வார்தங்குகொங்கைதெருட்டி" (தணிகை. களவு. கூசை.) 2 மனதைத்தெளிவித்தல்.

தெருமால்—1. சுழலல். (பிங்கல. உகஅச.) 2. மனக்கவற்சி. (உ-ம்.) "செய்யார்தேவன்தெரு மால்சலிப்ப" (பொருந. கஙஅ.)

தெருமருதல்—தெருமரல். (உ-ம்.) "வெளி யின்மேனியும்மெய்ப்படுகோலமுங்- தெளிவிலா துதெருமருவார்சிலர்" (கந்தபு. ததீசியுத். சுச.)

தெருவிலழகி—குப்பைமேனி. (வைத்திய பரிபா.)

தெருவு—தெரு. (உ-ம்.) "தெருவுதோறல றிலைசெய்வதொன்றறியேனே" (திருவாச. திருச்சதக. ஙக.)

தெருள்—அறிவு. (உ-ம்.) "தெருடன்றண் குணமதாகிச்சித்தெனநிற்குஞ்சீவன்" (ஞா.உ: அறு.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. தெளிவு. (உ-ம்.) "தெருட்டருமறைகடேரு"(திருவிளை. மெய்க்கா. உக.)

தெருளல்—1. இருதுவாதல். 2. தெளிதல்.

தெருளாது—ஞானமில்லாமல். (உ-ம்.) "தெருட்டவுந்தெருளாதூடலொடுதுயல்வோர்" (மணிமே. எ: இரு.)

தெருளுதல்—தெருளல். (உ-ம்.)"தெருளுந்தானம்" (அரிச்ச. நகர. உக.)

தெல்—தெல்லு, ஒரு கொடிவித்து. இதனை மூலைக்குவமானமாகக்கூறுவர். (உ-ம்.) "தெல்லுக்கரகங்கோங்கரும்பு" (உவமானசங்கி. கக.)

தெல்லுப்பு—வேலையுப்பு. (வைத்திய பரிபா.)

தெலுகு—1. ஒரு தேசம். 2. ஒரு பாடை. அது: ஆந்தரதேயத்துமொழி. வடமொழி தென்மொழியிரண்டுங்கலந்துண்டாயது. அதனை ஆதியிலே இலக்கணஞ்செய்து செம்மைசெய்தவர் கண்ணுவமுனிவரென்ப. (அபிதா.)

தெலுங்கம்—ஒரு தேசம். (உ-ம்.)"தெலுங்கங்கலிங்கம்வங்கம்" (நன்னூல். பெயரி. கஎ. உரை.)

தெலுங்கு-தெலுகு.ஆந்திரதேசசத்தமொழி; அது: வடமொழி தென்மொழி யிரண்டுங்கலந்துண்டாய மொழி. (அபிதாந.)

தெவ்—1. கொள்ளுதல். (பிங்கல. ஈஈஎச.) 2. சத்துரு. (உ-ம்.)"தெம்முன்மழுத்-திருபபய்கயத்தன்" (மரு-தி. க.) 3. பகை. (பிங்கல. ஈஈஎச.) 4. போர். (சூ.நிக.கக:வகரவெ. கஅ.)

தெவ்வம்—தெவ்வு. (உ-ம்.) "திறைவழங்காத்தெவ்வம்பணியச்சென்றுலும்" (திருக்கோ. ஈ0ச.) [விகாரம்]

தெவ்வர் — பகைவர். (உ-ம்.) "திறந்தனை யென்றுனைக்கொன்றேதெவ்வரை வென்றுல காளச்சிந்தித்தேன்யான" (பாரத. பதின்மூன். கஈஅ.)

தெவ்விய—பகைத்த. (உ-ம்.) "தெவ்வியவுணர்க்காய்ந்து" (தணிகை. நாட்டு. எச.)

தெவ்வு — 1. கொள்ளுதல். (மதுரைக்கா. அரு. அடி உரை.) 2. சத்துரு. பகைவரையுணர்த்தலாகுபெயர். 3. பகை. (உ-ம்) "செவ்வுப்புலம்" (தொல்.சொல்.ஈசசு. சேநா.) 4. போர். உகரச்சாரியைபெற்றது.

தெவ்வுதல்—கொள்ளுதல். (உ-ம்.) "விழைவெல்லாம் - பாங்குபெறத்தெவ்வுதி யென்று" (தணிகை. அகத்தி. கo)

தெவம்—மாமரம். (ஈவத்தியமூ. அக.)

தெவிட்ட—1. ஒலிக்க. (உ-ம்.) "அவலுறுந்தேரைதெவிட்டமிசைதொறும்" (ஐங்குறு. சஙிஈ.) 2. குதட்ட. (உ-ம்.) "பலைநிலைப்புரவிபுல்லுண்ணுசெவிட்ட" (மதுரைக்கா. சுஈo.) 3. திரள. (உ-ம்.) "மரமுதற்றெவிட்ட" (சூ-பா. எஎ.)

தெவிட்டல்—1. அடைத்தல். 2. உமிழ்தல். 3. தங்குதல். (பிங்கல. ஈஈஈஈ.) 4. நிறைதல். 5. ஒலித்தல். (1, 2, 4, 5-சூ நிக. கக. வகரவெ. அ.)

தெவிட்டு—தெரிநிலைவினைப்பகுதி.

தெவிட்டுதல்—1. உமிழ்தல். (சூ நிக. கக. வகரவெ. அ.) தெவிட்டல், தெவிட்டுதல் இரண்டுமொக்கும். 2. ஒலித்தல். ஐங்குறு.சஙிஈ.) 3. தேக்கிடுதல்.(உ-ம்.)"தெவிட்டிவந்ததுபாலையுட்கொண்டிடுசெருக்கால்" (கந்த பு. ஆற்று. கச) 4. நிறைதல். (உ-ம்.) "தோள்களால்வாரிவாரியுண்டதுதெவிட்டிப்போழ்வாய்க்கடைகடோறெழுகிப்பாயும்" (இராமா. ஊர்தேடி. உகக.) 5. வெறுத்தல். (உ-ம்.) "தீதவமுதஞ்செவிநிறையத்தேக்கியிருந்துந்தெவிட்டாதால்" (சேதுபு. வேதாள. க.)

தெவிட்டும்—அசையிடும். (புறநானூறு.)

தெவிள—திரள. (உ-ம்.) "துண்ணீர்தெவிளவீங்கிப்புடைதிரண்டு" (நெடுநல். உடு.)

தெவிளல்—
தெவ்ளுதல் } திரளல். (நெடுநல்வா. உடு. அடி. உரை.)

தெவு—கொள்ளுதல். (உ-ம்.) "நீர்தெவுநிரைத்தாழுவர்" (தொல். சொல். ஈசடு. சேநா.)

தெழி—முழக்கம். (உ-ம்.) "தெழிபட்டதிக்கயத்தின்செவி" (திருவிளை.யானையெய்.உக.)

தெழித்தல் — 1. உரப்புதல், அதட்டல். (உ-ம்.) "எருமைப்போத்திஞண்மாறெத்தெழித்து"(சிந்தா.நாம.ஈo.) 2. சினத்தல்.(சிந்தா.) 3. துவைத்தல். (உ-ம்.) "நீனிறக்கரும்பகட்டினற்றெழித்துவைநீத்த" (நைடத. காட்டு. சo.) 4. நீக்குதல். (உ-ம்.) "கண்மவொப்பிற்றெழித்திடன்மலங்களெல்லாம்" (சிசி. க: ஈஎ. சிவாக்.) சிலப்பதிகாரத்தில் பிரித்தல் என்று கூறிக்குடநாட்டு வழக்கு என்பர். 5. பேரொலி செய்தல். (உ-ம்.) "மள்ளர்தெழித்திடுமார்ப்பும்" (திருவிளை.மெய்க்கா.உஎ.) பிங்கலத்தில் திரட்டோசையென்பர். (கசசஈ.)

தெழித்தான்—கோபித்தான். (சிந்தா.)

தெழித்து—1. உரப்பி. 2. கோபித்து.(1,2-சிந்தா.)

தெழிப்பு—தெழித்தல். (உ-ம்.) "பூதர்தந்தெழிப்புவிண்ணுமொழிந்திடுதிசையும்பாருமற்றன" (கந்தபு. எமகூட. உo.)

தெள்—1. தெரிநிலைவினைப்பகுதி. 2. தெளிவு. (உ-ம்.) "தெள்ளார்சலதிமறைகுதலும்" (சேதுபு. சேதுவந். ஈஎ.)

தெள்ந-1. ஒருபூச்சி. (உ-ம்.)"சிறியதென்கு துள்ளிக்-சருடனாக்குப்பறவைகற்பிப்பதென"

(அரிச்ச. பாயிர. கஉ.) 2. தெரிநிலைவினைப் பகுதி.

தெள்ளுதல்—1. தெளியவித்தல். 2. வீசுதல்.

தெள்விளி—1. இசைப்பாட்டு. (சிந்தா.) 2. ஓரிராகம்.(உ-ம்) "தெள்விழிச்சியாழ்ப்பாணர் தேம்பிழிநறவமாந்தி" (இராமா. நாட்டு. அ.) 3. தெளிக்தசொற்கள். (உ-ம்.) "வள்ளுயிர்த் தெள்விளியிடையிடைப்பயிற்றி" (சூ-பா.சஂ0.) 4. தெளிந்தவோசை. (உ-ம்.) "ஆம்பலந்தீங்குழற்றெள்ளிளியிற்ற" (சூ.பா. உஉஉ.) 5. மகிழ்ச்சியாலார்த்தல். (உ-ம்.) "பொள்ளெனப் படையொடுவருதியாலெனத்- தெள்விளியெடுத்தனன்" (கந்தபு. சதமுக. கூ.)

தெள்ளத்தெளிதல்—நன்றுய்த்தெளிதல்.

தெள்ளல்—கொழித்தல். (உ-ம்.)"கரிமருப்புத்-தெள்ளிநறவந்திசைதிசையாயுமலைக் கலம்பா" (திருக்கோ. கஉஅ.)

தெள்ளிசீசி—பூநீறு. (வைததியபரிபா.)

தெள்ளிமை—1. அறிவு. 2. தெளிவு.

தெள்ளிய—தெளிவான. (உ-ம்.) "தெள்ளியவக்கரங்கள்" (சி-சி. க: உக.)

தெள்ளியர்—அறிவுடையார். (உ-ம்.) "திருவேறுதெள்ளியராதலும்வேறு" (வள். கஎச.)

தெள்ளு—1. தெள்கெண்ணும்பூச்சி. 2. தெள்ளுதல். 3. தெரிநிலைவினைப்பகுதி.

தெள்ளுதல்—1. கொழித்தல். (சூ. நிக. கூ: உரி.) 2. தெளிதல். (உ-ம்.) "உள்ளுதலுள்ளியுரைத்தலுரைத்ததனைத்தெள்ளுதல்" (வள்-மா. கஎ.) 3. வறண்டல். (பிங்கல உகரு0.)

தெள்ளேணம்—மகளிர் விளையாட்டிலொன்று. (உ-ம்.)"ஆயிரந் திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ" (திருவாச. திருத்தெள். க.)

தெளி—1. ஒளி. (திருக்கோவையார். கசு. உரை.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. தெளிவு. (உ-ம்.) "ஞாநக்கரும்பின்றெளியை" (திருவாச. திருப்பொற். கரி.)

தெளிஞன்—அறிஞன்.

தெளித்தல்—1. ஒலித்தல். 2. கொழித்தல். 3. தெளிவாக அறியச்செய்தல். (உ-ம்.) "இவர் தொழிற்கெல்லாங்காரணமாதறெளித்தருள் கொழிக்குங்கங்கையை" (தணிகை. கடவுள். உ.) 4. நிச்சயித்தல். 5. புரோட்சித்தல். (உ-ம்.) "பனிசீரையுன்பஞ்சணை மேலள்ளியங்கார் தெளிப்பார்" (தனிப்பா. இரண்டாம். ஙகஙக.) 6. வடித்தெடுத்தல். 7. விதைத்தல். (6, 7-வழக்.)

தெளித்து—1. கரைத்து. (சிந்தா.) 2. தெளியச்செய்து. (ஐங்குறு.)

தெளிதல்—1. அறிதல். (உ-ம்.) "வீரித்தெத்துறைத்தறெளிந்துமன்னன்" (ஏகாதசி. உருக்கு. கஉ.) 2. ஆராய்தல். 3. ஒளிர்தல். 4. தெளிவாதல். 5. தேறுதல். (பிங்கல. கஅஙசு.) 6. நன்கொலித்தல்.

தெளிர்தநீர்—சற்சலம். (பிங்கல. எக.)

தெளிர்தார்—மெய்யுணர்ந்தார். (உ-ம்.) "ஐம்பத்தினீங்கித்தெளிந்தார்க்குவையத்தின் - வானநணியதுடைத்து. (வள். கருஙரு.)

தெளிந்திசின்—தெளிந்தேன். (ஐங்குறு.)

தெளிப்ப—தேற்ற. (ஐங்குறு.)

தெளிப்பான்—தெளியச்செய்வான். (ஐங்குறு.)

தெளிப்பு—1. தெரிப்பு. 2. நிச்சயம். 3. விதைப்பு. (வழக்.)

தெளிபுபாதான்—தன்னேநம்பாதான்.(உ-ம்.) "கூரை"பார்.

தெளிர்—1. உள்ளோசை. (பிங்கல.கசஙசு.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

தெளிர்தல்—உள்ளோசையாதல்.

தெளிர்ப்பு—1. ஒலிப்பு. (உ-ம். "வருநர்க்குவரையாதுபொலங்கலந்தெளிர்ப்ப" (பதிற்று. கஅ.) 2. செழிப்பு. (உ-ம்.) "வறந்தளாலந்தெளிர்ப்பவீசி" (ஐங்குறு. சருஉ.)

தெளிவித்தல்—சந்தேகந்தீர்த்தல். 2. தெளியச்செய்தல். 3. வடித்தெடுத்தல்.

தெளிவின்மை—பரவசம். (உ-ம்.) "பாடிலர் தெளிவிலர்கின்றனர்" (கோயிற்பு. பதஞ்சலி. சரி.)

தெளிவு—1. அறிவு. (பிங்கல. கஎசுசு.) 2. குணவலங்காரம்பத்திலொன்று; அது: கவியாற் கருதிய பொருள்விளங்கத்தொடுப்பது. (உ-ம்.) "தெளிவெனப்படுவதுபொருள்புலப் பாடே" (தண்டி. கசு.) 3. குறிப்பு. (பிங்கல. கஎஎச.) 4. தணிவு. (வாணன்கோ. உசு. முக.) 5. பிரகாசம். உகரம் சாரியை என்க. 6. மநந்தேறல். (பிங்கல. கஎஅஎ.)

தெளிறல்-எடுத்தலோசை.(சூ.நிக.க0:சரி.)

தெற்கு—தென்றிக்கு. (உ-ம்.) "பகற்றெற்கு நோச்சாரிராவடக்குநோக்கார் - பகற்பெய்யார்தீயினுணீர்" (ஆசாரக்கோ. சு.)

தெற்பை—தருப்பை. (உ-ம்.) "தெற்பை குண்டிகைசீரைகொண்டென்னுடன்" (சேதுபு. இராமனரு. ககஙக.) (மரூஉ.)

தெற்றல்—1. அலைத்தல். (உ-ம்.) "மூரணெங்கோடுதெற்றி" (சேதுபு. நாட்டு. உரி.) 2. இடறல். (வழக்.) 3. தடைப்படுதல். 4. பின்னல். (உ-ம்.) "தெற்றுஞ்சடிலத்திராமேசன்" (சேதுபு. பிரமகத். சசு.)

தெற்றி—1. சித்திரகூடம். (உ-ம்.) "சித்திர நிரைத்தபீடிகைமறுகுதெற்றிகள்" (திருவிளை. திருநகரங்கண். ஙுங.) 2. திண்ணை. (பிங்கல. சுஙக.) 3. பிணங்கி. (சிந்தா.) 4. வாசற்படி. (உ-ம்.) "முதலவத்தை மச்சுவமாந்தெற்றி" (வேதா-சூ. கo.ரு.)

தெற்றித்தல்—தடைப்படுதல். (உ-ம்.) "ஒருவர்ா-லில்வாழ்க்கையென்னுமியற்புடையவான் சகடஞ்-செல்லாதுதெற்றித்துகின்று" (அற நெறி.)

தெற்று — 1. தெற்றல், தெளிநிலவினைப் பகுதி. 2. பின்னல்.

தெற்றுதல்—1. அலைத்தல். 2. இடறல். (வழக்.) 3. தடைசெய்தல். (உ-ம்.) "தெற்றிடும் பூங்கொடி" (கந்தபு.நாட்டு.சுக.) 4. தெளித்தல். (பிங்கல. உகசுரி.) 5. மாறுபடல், பின்னல். தெற்றல் தெற்றுதல் இரண்டுமொன்றென்க.

தெற்றென—1. சுடுக (உ-ம்.) "தெற்றெனச் செலவுகடைக்கூட்டுதிர்" (பொருந. கஎச.) 2. தெளிய.(உ-ம்)"தெற்றெனவுணர்த்தல்போல்" (கந்தபு. சுந்திரரூப. சுங.)

தெற்றெனல்—1. தெளிதல். (உ-ம்.) "தெற்றெனப்பரிப்பிணிமருத்திவனில்லம்" (புறநா. கஎஙு.) 2. விரைவுக்குறிப்பு. (உ-ம்.) "தெற்றென்றுதெய்வந்தெளியார்" (திருஞா. திருப்பாசுரம்.)

தெறல்—1. அழித்தல், கெடுத்தல். (உ-ம்.) "ஒன்னர்த்தெறலுமுவந்தாரையாக்கலும்"(வள். உசுச.) 2. கோபித்தல். (உ-ம்.) "சினத்தீயிற் பெயர்புபொங்கத் - தெறலருங்கடுந்துப்பின்" (மதுரைக்கா. ஙுச, ஙூ.)

தெறி — 1. அணி அங்கி முதலியவற்றின் கடைப்பூட்டு. (வழக்.) 2. தெறுகை. 3. தெளிநிலவினைப்பகுதி.

தெறிக்குதல்—தெறித்தல். (வழக்.)

தெறிகீதும்—துள்ளும். (புறநானூறு.)

தெறிகெடல்—நிலைகெடுதல். (உ-ம்.) "குறிகொள்விற்கோடியிற் குறைத்துளோர்பவந் - தெறிகெடவோதெல்கண்ணி" (சேதுபு. கந்தமா. எகூ)

தெறித்தல் —1. சிந்தல். (வழக்.) 2. சண்டுதல். (உ-ம்.)"செஞ்சிலைநெடுகாண்பூட்டிச்திருவிரதெறித்துத்தாக்கி"(திருவிளை.யானையெய்.) உகூ) 3. துள்ளிவிழுதல். (உ-ம்.) "பிணத்தின்றலைதனையோர் - காட்டத்தறைந்தானறைபவசைகஞ்சித்தெறித்ததவன்முகத்தில்" (சேதுபு. வேதாள. ஙுக.) 4. பிதுக்கல். (உ-ம்.) "கண்டெறித்துயிர்சிந்திடநிதிக்கடவுளே" (கூர்மபு. தக்கன்வேள். ஙுள.) 5. முரிதல்.

தெறிப்ப—முற்ற. (புறநானூறு.)

தெறிப்பு—1. துள்ளுதல் 2. சிந்துதல். 3. சண்டுகை. 4. முரிவு. (தெறித்தல், தெறிப்பு. இரண்டுமொன்றென்க.)

தெறிவில்—சுண்டுவில். (வழக்.)

தெறு — தெறுதல். (உ-ம்.) "தெறுவலக்காலினை. (திருக்கோ. உஉஎ.) [முதனிலைத்தொழிற்பெயர்.]

தெறுக்காலி — 1. தேள். (உ-ம்.) "குலமாமதலைகொழுங்கமலக் - காலிற்தெறுக்கான்முள்ளுறுத்திக்கடவுற்றிடலும்" (சேதுபு. அநுமகூ.)2.விருச்சிகராசி.(உ-ம்.)"சேயந்துலைதெறுக்காலிற்கதிருற" (விதாந. நல்வினை. கூ.)

தெறுகட்டு — வருத்தம்வளைப்பு. (உ-ம்.) "செம்முகமாத்தெறுகட்டழிய" (திருக்கோ. ஙுகஙு)

தெறுதுவர்—அழிப்பர். (புறப்பொ-வெண்.)

தெறுத்தல்—1. அழித்தல். 2. தெளித்தல். (பிங்கல. உகசுரி.)

தெறுதல்—1. அழித்தல். (உ-ம்.) "தெறும் பாவிதரிசனத்தின்பாவந்தீர" (சிவரக. சிவதன்மா. கங.) 2. சுடுதல். (உ-ம்.) "ஒண்கதிர்தெறுதலின்" (கலி. உ.) 3. வருந்துதல். (திருக்கோ. ஙுகஙு. உரை.) 4. வெகுளுதல். (உ-ம்.) "தெறுவலக்காலினை" (திருக்கோ. உஉஎ.)

தெறுநர்—1. செலையாளர், தெறுதல்-அழித்தல். 2. மாற்றலர். (பிங்கல. ஙுசஎ.)

தெறுவது—அழிக்கப்படுவது. (ஐங்குறு.)

தெறுவி—அகப்பை. (உ-ம்.) "தெறுவியாலன்றிக்கையினுலடிசிலிடுதலேற்றருந்துதறீதா - முறைபிறழ்ந்திருப்புத்தெறுவியாலிடுவோர்மூழ்குவர்செடியபாழ்நரகின்" (காசிகா. இல்லொழு. உக.)

தெறுவு—சுடுகை. (உ-ம்.) "நீத்தெறுவிற்கவின்வாடி" பட்டினப். கo.)

தெறுவை—காட்டிலுள்ளதோர்கொடி. (புறநானூறு.)

தென் — 1. அழகு. (பிங்கல. ஙுசஎநி.) 2. இசை.(உ-ம்.)"தென்னுண்டேனிற்றீஞ்சுவை" (இராமா. மிதிலை.உகூ.) 3. ஓர்பாடல். (பிங்கல. ஙுசஎநி.) 4. கற்பு. 5. தெற்கு. 6. தென்னமரம். (4, 5, 6 சூ. நிக. கக. னகரவெ. எ.)

தென்கலை—தமிழ். (உ-ம்.) "தென்னிதின் மொழிதென்கலையேமுதல்"(கந்தபு.நகரப்.சுக.)

தென்கலையார்—விட்டுணுசமயிகளுளொரு வகையார். (வைணவர் வழக்கு.)

தென்காசி—பாண்டிநாட்டிலுளதோர்நகர்.

தென்காஞ்சி—ஓரூர். (காஞ்சிப். தழுவக்குழை. உஅஎ.) இதனைத்திருநெல்வேலி என்பர்.

தென்கால்— } தென்றற்காற்று.(பிங்கல.
தென்காற்று— } உக.)

தென்கீழ்த்திசையிறை — அக்கினிதேவன். (சூ. நிக. க: ஙெ.)

தென்சேடி–வித்தியாதரருலகின்ஒருபகுதி. (சிந்தா.)

தென்படுதல்—கிடைத்தல். (வழக்.)

தென்பாண்டி—கொடுந்தமிழ்நாட்டிலொன்று. (உ-ம்.) "தென்பாண்டிகுட்டங்குடங்கற்கா வேண்பூழி" (நன். உஎக. உரை.)

தென்பாரதம்–நவகண்டத்தொன்று; அது: பரதகண்டத்தின்தென்பாகம்.

தென்பால்விதேகம்–நவகண்டத்தொன்று. (சூ. நிக. கஉ: ஙக.)

தென்பாலிலேபதம்–நவகண்டத்தொன்று. (சூ. நிக. கஉ: ஙக.)

தென்புலத்தார்–பிதிர்கள். (உ-ம்) "தென்புலத்தார்தெய்வம்விருந்தொக்க" (வள். ஙக.)

தென்புலம் — 1. இயமலோகம். (உ-ம்.) "சீற்றவேலஞ்சன்சேரைதென்புலம்படர்கைதிண்ணம்" (பாரத. திருட்டி. கசஎ.) 2. பிதிர்கள் வாழுமிடம். (வள். ஙக.)

தென்மதுரை–1. ஆலவாய். (உ-ம்.) "தென்மதுரைமூதூருமல்லலோசிவலோகம்" (திருவாத. மண்சும. சுஎ.) 2. தலைச்சங்கமிருந்தவூர். இது முற்காலத்துக் கடல்கொள்ளப்பட்டது. (சிலப்பதி.)

தென்மலை — பொதியமலை. (உ-ம்.) "தென்மலையின்மன்மதமுஞ்சாமரையும்" (தண்டி. கஙசு. உரை.)

தென்மேற்றிசைப்பாலன்—நிருதி. (பிங்கல. கங: ஙக.)

தென்மொழி—தமிழ்ப்பாடை. (உ-ம்.)"வடமொழியைப்பாணிநிக்குவகுத்தருளியதற்கினையாத்-தொடர்புடையதென்மொழியை" (காஞ்சிப்பு. தழுவக். உசஅ)

தென்விதேகம் —தென்பால்விதேகம். (சூ. நிக. கஉ: ஙக.)

தென்றல்—தென்காற்று. (உ-ம்.) "விந்தம்பணித்தோன்மலைத்தென்றற்கன்றுயிர்க – வரவர" (மறைசை.)

தென்றல்வரை — பொதியமலை. (உ - ம்.) "பொருநைதென்றல் - வரைதருமாரமெல்லாமருங்குறவொதுக்குமாதோ" (சேதுபு. நாட்டு. உஎ.)

தென்றற்கோன் — பாண்டியன். (உ - ம்.) "தென்றற்கோன்செவிமடுத்தான்" (திருவிளை. மெய்க்கா.கஉ.) [தென்றல்தோன்றும்பொதியமலைக்குத்தலைவனென்றபடியுமாம்.]

தென்றற்றேரோன்—மன்மதன். (பிங்கல. கசஙு.).

தென்றி–தென்றற்காற்று. (சூ.நிக.கக:சஙு.)

தென்றிசைக்கிழவன்—இயமன். (பிங்கல. ககூஎ.)

தென்னம்பிள்ளை-தென்னங்கன்று.(வழக்.)

தென்னம்புலத்தீனோர்-பிதிர்; அவர்: தெற்குத்திசைக்கண் எட்டுக்கோடியோசனை தூரத்துள்ள சநலோகத்தில்வசிக்கும் ஒரு சாதியார். (உ-ம்.) "தென்னம்புலம்"பார்.

தென்னம்புலம் — தெற்கின்கண்ணுள்ள பிதிருலகம். (உ-ம்.) "தென்னம்புலத்தினோர் தெவிட்டத்துப்ப" (கூர்மபு. உச.) அம்சாரியை.

தென்னர்—1. தெற்கு. (உ-ம்.) "மூலக்குறியுளதற்குத்தென்னர்" (தேகாயிற்பு பதஞ். எக.) 2. பகைவர். 3 பாண்டியர்.(உ-ம்.)"தென்னர்பிரானதறிந்தான்" (திருவிளை. மெய்க்கா. ச.)

தென்னவன் — 1. இராவணன். (உ-ம்.) "தென்னவற்பெயரிய தன்னருந்தாய்ப்பின்" (மதுரைக்கா. சஎ.) 2. கூற்றுவன், தென்திசையோன். 3. பாண்டியன். (உ-ம்.)"வரகுணனுந்தென்னவனேத்துசிற்றம்பலத்தான்" (திருக்கோ. ஙஅசு.)

தென்னவன்பிரமராயன்—மாணிக்கவாசகசுவாமிகள் அரிமருத்தநபாண்டியனுக்கு மந்திரியராயிருந்தபோதுள்ளபெயர். (உ-ம்.) "தென்னவன்பிரமராயனென்றருள்சிறந்தநாம – மன்னவர்மதிக்கநல்கி" (திருவாத. மந்திரி. கடு.) [பாண்டியனுக்கு முதன்மந்திரி.]

தென்னன்—பாண்டியன். (உ-ம்.) "தென்னன்விக்கிரமன்புயத்து" (திருவிளை. விருத்த. உ.)

தென்னுதெனு— ஓர் பண். (சிலப்பதி. அரங்கே. உசு. உரை.)

தென்னிரேபதம்—தென்பாலிரேபதம்.(சூ. நிக. கஉ: ஙக.)

தென்னி—வாழை. (மலையக.)

தென்னுலகு—பிதிருலகம். (உ-ம்.) "தென்னுலகிற்புகுந்தனையோ"(திருவிளை.வன்னியுங்கிணறு. உக.)

தென்னை–தென்னைமரம். (பிங்கல.உஎசக.)

தெனுது–1. தெற்கின்கண்ணுள்ளது. (நன். உசுஎ. உரை.) (புறநானூறு.) 2. தெற்கு. (உ-ம்.) "வடாதுந்தெனுதும்பராசர்வகுத்தமே மி" (பாரத. பதின்மூன். அ0.)

தே.

தே—1. கடவுள். (உ-ம்.) "தேபூஞ்சசெய்யுஞ்சித்திரசாலே" (சிவரக. நைமிச. உ0.) 2. கொளற்பாடு. (பிங்கல. கூஎஎசு.)

தேக்கம்— } நிறைவு. (பிங்கல. உஉஉஅ.)
தேக்கல்— }

தேக்கிடல்— } 1. தெவிட்டல். (உ - ம்.)
தேக்கிடுதல்— } "நெருப்புத்தின்றுதேக்கிடுகின்றது" (இராமா. இலங்கையெரி. சசு.) 2. நிறைதல்.

தேக்கு — 1. ஒரு மரம்; அது: கற்றேக்கு, சிறுதேக்கு, பூந்தேக்கு, சொரித்தேக்கு, மெழுகுதேக்கு, வெண்டேக்கு எனப் பலவகைப்படும். (உ-ம்.) "அம்பட்டை" 2. பார். 2. தெவிட்டு. தெரிநிலவினைப்பகுதி. 3. நிறைவு.

தேக்குதல்—1. உண்ணுதல். (உ-ம்.) "நீடவுணருடற்புலவலகைநிறையத்தேக்கி" (சிவரா த். கடவுள். சு.) 2. தடைபண்ணுதல். (வழக்.) 3. தெவிட்டுதல். 4. நிறைத்தல்.

தேக்கெறிதல் -- 1. ஏப்பமிடல். (உ - ம்.) "உண்டுதேக்கெறிந்துலவினுமுலவுவர்" (கூர்ம பு. அட்டமூர்.சு.) 2. தெவிட்டல். 3 நிறைதல்.

தேகபந்தம்—சரீரசேர்மானம்.

தேகபாதம் -- 1. அசத்தியோநிர்வாணம். (உ - ம்.) "சாலநிகழ்தேகபாதத்தினுஞ்செத்திய நிருவாணமெனச்சாற்றுங்காலே" [தேஹாந்தத்திலே முத்தியைக்கொடுத்தலினிப்பெயர்த்து.] 2. தேகம் விழுகை. (1, 2-ஞ. சி. அ: ச. சிவாக்.)

தேகம்—சரீரம். (உ-ம்.) "உரியதோர்தேகத்தினுற்றபாவங்கள்" (சிவரக. சிவனடியார். உ0.) [ஜடமாஃ-தங்கப்படுவதென்பது.]

தேகராசம்—கரிசாலை. (உ-ம்.) "தேகராசச்சுரதம்" (தைல. தைலவ. கூக.)

தேகன் — சதருத்திராரிலே குபேரதிசையிலிருக்குந் தசருத்திராரிலொருவன். (வி-ணி. உஎ0.)

தேகனி—மஞ்சள். (மலையக.)

தேகாத்துமவாதி—சாருவாகமதஸ்தன், உலகாயதமதத்தினொருவன். இவன்கொள்கையைச்சிவஞானசித்தியார் முதற்சூத்திர வுரையிலறிக.

தேகி—1. இவ்வாயாக. (உ-ம்.) "திடகற்புளாயைந்தேகியெனச்செப்பி" (சைவச. பொது. கூசுசு.) 2. தேகத்தையுடைய ஆன்மா. (ஞ. சி. உ: உ. சிவாக்.) 3. புல்லுரி. (மலையக.)

தேங்கல்—1. அச்சக்குறிப்பு. (சூ. நிக. அ: நிசு.) 2. குலைதல். (பிங்கல. கஅநிகூ.) 3. நிறைதல். (உ-ம்.) "தேங்குபேரொளியாகியசிவமெனுநாமும்" (திருவானைக். ஞாநவுப. உச.)

தேங்காத—கெடாத. (உ-ம்.) "தேங்காதமள்ளர்திரடோளிணைசிக்கயாத்த-பூங்கச்சு" (சிந்தா. பதிக. கக.)

தேங்காய் — தெங்கங்காய். (நன் னூ. உயிரீற். கூஎ.)

தேங்காயிக்கீரை—ஒருகீரை. (வைத்தியமூ. அக.)

தேங்காயிப்பூக்கீரை— } தேங்காய்க்கீரை.
தேங்காயிப்பூநாறி— } (வைத்தியமூ.அ.)

தேங்கிட்டி—தேட்கொடுக்கி. (வைத்தியபரிபா.)

தேங்குதல்—தேங்கல்.

தேங்கொள்சுண்ணம்—ஒளியும், நாற்றமும் ஊறும் இனிமைகொண்ட சுண்ணம். (சிந்தா.)

தேசசு — 1. ஒளி. (சி. சி. க: ச. ஞாநப்.) 2. தேயு. சி. சி. க: ச. சிவாக்.)

தேசநம்—மூங்கில். (வைத்தியபரிபா.)

தேசம்—1. இடம். இப்பொருட்குத் தேயம் என வழங்குவர். 2. தேசாபுரம். (வைத்தியபரிபா.) 3. நாடு. (உ-ம்.) "சிவபூசைபுரிவார்களும் மைப்போலெத்தேசத்துங்கண்டிலேன்" (சிவரக. சிவதன். கூ0.) 4. பிரகாசம். (உ-ம்.) "தேசமலிபொதுஞாநச்செவ்வொளியும்" (கோயிற்பு. பாயிர.உ0.) 5. யோகசத்தி. (உ-ம்.) "தேசமொடுசெல்வமாகி" (சி. சி. பாயிர. உ. ஞாநப்.)

தேசமைம்பத்தாறு — அங்கம், அரிணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னுடம், காசம், காசுமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருநு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீதம், சூரசேநம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பப்பரம், பல்லவம், பாஞ்சாலம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யவநம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம் என்னும் ஐம்பத்தாறு தேசங்கள். (வைத்தியபரிபாடை, தொகையகராதியிற்காண்க.) திராவிடம்-பஞ்சதிராவிடம். பொருட்டொகை நிகண்டிலறிக.

தேசன்—ஒளியுருவானவன். (உ-ம்.) "தேசனேயம்பலவனேசெய்வதொன்றுமறியேனே" (திருவாச. திருச்சதக. நிக.)

தேசனம்—மூங்கில். (வைத்தியபரிபா.)

தேசனி—மஞ்சள். (உ-ம்.) "பொருசீரணச் சுரமூமாமதத்தேசனியாம்" (தைல. தைலவ. கச.)

தேசாட்சரி—ஓரிராகம், உச்சியிற்பாடுமிராக மென்பர்.

தேசாந்தரி—பரதேசி.(சூ நிக.கக:சகரவெ.க.)

தேசாவரம்—ஒருசெடி. (உ-ம்.) "சீரகமின் பூரூவேர்தேசாவரம" (தைல. தைலவ. க கூறி)

தேசி—1. (பரதம்.) அகமார்க்கமூன்றவகையு ளொன்று; அது: கீதத்துக்கு அடி சாரி முதலா கக் காற்சுற்றுதல் எறிதல் முதலியன. (உ-ம்.) "அகமார்க்கநிகழ்ந்திடுந்தேசியேவடுகே-யருத்த மாகியசிங்களமென மூன்றும்" (திருவிளை.நான் மா.கo.) சிந்தாமணியில் மெய்த்தொழிற்கூத்தி லொருவகையென்பர். 2. எலுமிச்சை. (மலை யக.) 3. ஒளியுடையது. (மணிமேகலை.) 4. குதிரை. (வைத்தியபரிபா.) [தெலுங்கு.]

தேசிகம்—1. அவ்வவர்நாட்டுச்சொல். 2. அழகு. 3. இயற்சொல்முதலிய நான்குசொற் கூறியசொற்பிரயோகம். (உ-ம்.) "தேசிகமென் றிவையாகினுணர்ந்து" (சிலப். அரங்கே. சள.) 4. ஒளி. 5. ஓர் கூத்து. 6. பொன். (1, 2, 4, 5, 6-பிங்கல. கூசுஎள.)

தேசிகன்—1. அழகன். (தேசிகம்-அழகு) 2. குரு. (உ-ம்.) "பற்றற்றவன்கொடுக்கும்பண்ட மனைத்தினையும் – பற்றுதலுந்தேசிகர்க்குப்பாங் கு" (சைவச. ஆசா. அஅ.) 3. தேசாந்தரி. 4. வணிகன். (3, 4 பிங்கல. கூசுஎஅ.)

தேசிசாரி—பரதத்தின் பொது இலக்கணங்க ளாகிய இருபது பேதங்களுளொன்று. (உ ம்.) "அகங்காரம்"பார்.

தேசு—1. அழகு. (உ-ம்.) "தேசுடைப்பிரம சாரியியற்கையைத்தெரித்தவாறும்" (கூர்மபு. பதிக. உசு.) 2. ஒளி. (பிங்கல. கசுஎள.) 3. கீர்த்தி. (உ-ம்.) "தேசிவன்படைக்குமேல்லை" (சேதுபு. வேதாள. சக.) 4. ஞாநம். (உ-ம்.) "தேசுறுமுண்பார்க்கென்றேதேறு" (சைவச. பொது.நிசுக.) 5. பெருமை. (புறப்பொ-வெ.) 6. விசிட்டம். (உ-ம்.) "இல்வாழ்வித்-சிறந்தார்க் குக்கேலலமேதேசு" (சைவச. பொது. சளச.)

தேசேசரி — சதாசிவதத்துவத்திலிருக்கும் அணுசதாசிவர் பதின்மரிலொருவர். (சி. சி. க: உரி. மறை.)

தேசோபத்திரவம்—தேசவியாகுலம்; அது: கடவுளால்வருவதும், மனிதரால்வருவதுமென இருவகைஅவற்றுள்;கடவுளால்வருவதுகாற்று, நெருப்பு, தண்ணீர், நோய், பஞ்சம் என்று மைந்தும், மனிதரால்வருவது கோள், திருட்டு, மாற்றரசர்கொள்ளை, வேந்தரதுபெருங்காரியக் காரர் பரிதாபம், தன்னரசினதிகபொருளாசை என்னுமைந்துமாம்.

தேசோபிந்து—தேசோவிந்து.

தேசோமந்தரம்—நெல்லி. (வைத்தியபரி.)

தேசோமயம்—1. அழகுதன்மை. 2. ஒளி மயம். (உ-ம்.) "தேசோமயாநந்தமே" (தாயுமா.)

தேசோவதி—1. அக்கினிதேவனின் இராச தானி. (அபிதா.நி.) 2. யானைத்திப்பிலி. (வைத் தியபரிபா.)

தேசோவிந்து—யசுர்வேத உபநிடதத்தொ ன்று. (கந். நவ. கஅ.)

தேட்கடை — 1. தேட்கொடுக்கு. (உ-ம்.) "வேம்பிதழிதேட்கடைபெருப்புல்" (தைல. தைலவ. எஉ.) 2. மூலகாள். (பிங்கல. உநிஎ.)

தேட்குடிச்சி—கதண்டு, ஒரு பச்சிலையாம். (வைத்தியபரிபா.)

தேட்கெண்டை—ஒருமீன். ஓர் குழுக்குறி.

தேட்கொடுக்கி — ஒரு செடி, தேங்கிட்டி. (வைத்தியபரிபா.)

தேட்டம் — 1. ஆராய்வு. 2. சோரித்த சம் பாத்தியப்பொருள். (வழக்.) 3. பேரவா. (உ-ம்.) "தேட்டந்தான்வாளெயிற்றிற்றின்ன வோ" (இராமா. சூர்ப்பணகை. கஉக.)

தேட்டாவு—தேடுதல். (அரபு - தொழிற் பெயர் விகுதி.)

தேட்டாண்மை—1. நாட்டம். 2. பொருள் தேடு முயற்சி.)

தேட்டாளன்—பொருள்சம்பாத்தியஞ்செய் பவன்.(வழக்.)

தேட்டு—1. ஆராய்வு. (உ-ம்.) "தேட்டுறவி னையவழி" (சேதுபு.) 2. சம்பாத்தியப்பொருள். 3. தேன். [தெலுங்கு.]

தேட்டை—1. ஆராய்வு. 2. சம்பாத்தியப்பொ ருள். (ஐ சாரியை.) 3. தெளிவு. [தெலுங்கு.]

தேடல்—நாடல். (பிங்கல. கஎஎஅ.)

தேடாமை—விசாரியாமை. (வழக்.)

தேடி—அதிவிடயம். (சிந்தா.)

தேடுதல்—1. உசாவுதல். (உ-ம்.) "தேடிய வயனுமாலும்" (பெரியபு. தடுத்தாட். எக.) 2. சம்பாதித்தல். (உ-ம்.) "இலகியமாணிக்கவகை தேடிவைத்தே" (சிவரக. அபுத்திபூ. கூ.) 3. விசாரித்தல். (வழக்.)

தேண்டுதல்—தேடுதல். (உ-ம்.) "வேண்டிய கலப்பையாவும்விதியுளிமரபினேடு-தேண்டின னுய்த்தி" (கந்தபு. பிரமயா. உ.)

தேணிறும்—மாந்தளிர்க்கல்.(வைத்தியபரிபா)

தேத்தடை—தேன்கூடு. (உ-ம்.) "தேத்த டைத்திரள்கிளிந்தசும்பரு" (தணிகை. நாட்டு. கச.)

தேத்து—இடத்து. (ஐங்குறு.)
தேத்தி—திசதி. [தெலுங்கு.]
தேதே—ஒரிசைக்குறிப்பு. (உ-ம்.) "வண்டுதண்டேன்பருகித்தேதேயெனுந்தில்லையோன்" (திருக்கோ. அஉ.)
தேநு—1. தெய்வப்பசு. 2 பசு. (பிங்கல. உசநுக, உசநுஅ.)
தேநுமுத்திரை—இருவிரல்களையும் ஒன்றுக்கோத்துக் கனிஷ்டாநாமிகைகளையும் மத்திமா தர்ச்சனிகளையும் பசுவின்முலைபோற் சேர்ப்பது. (சி-லி. கிரி உகூ. உரை.)
தேம் — 1. இடம். (சூ. நிக. கக: மகரவெ. எ.) 2. இனிமை. (உ-ம்.) "பூம்புறநல்லடையாளை இத்தேம்பட" (பெரும்பா. உஎஅ.) 3. வழனுருபு. (உ-ம்.) "கோடாய் தேத்து" (நன்னூ.பெயரிய.சநி.) 4. சுள். (பிங்கல.ககசசு.) 5. திசை.(உ-ம்.)"தேஎங்கொண்டெய்வநோக்கி" (நெநெல். எஎ.) 6. தேயம் (உ-ம்.) "செய்யார்தேஎந்தெருமரல்லிப்ப" (பொருந. ககூச) 7. தேன். (உ-ம்.) "தேக்கமழ்கொன்றை" (சிவரக. நந்திகேசுர. க) 8. தேனீ. (உ-ம்.) "தேப்பாய்கடாத்தொடி" (பதிற்றுநிக.) 9. நறுமணம். (ஐங்குறு.) 10. நெய். (உ-ம்.) "தேங்கலந்து-மணிநிறங்கொண்டமாயிருங்குஞ்சியின்" (சு-பா. ககக.) 11. யானைமதம்.(உ-ம்.)"சேதம்படகவுள்"(முல்லைப்பா. ஊக.)
தேம்ப—1. கெடும்படி. (உ-ம்.) "ஊடியார்நலந்தேம்ப" (சலி. சுஅ.) 2. புலர. (உ-ம்.) "புட்டேம்பப்புயன்மாறி" (பட்டினப். சஎ.)
தேம்பல்—1. இளைத்தல். (சூ. நிக. கக: சுக.) 2. தேய்தல். (உ-ம்.) "தேம்பலிடைஞெமிய" (திருக்கோ.கசுநி.) 3.பழம்பூ.(பிங்கல.உஅநி.) 4. வாடல். (உ-ம்.) "ஓம்பாதிங்ஙன்றேம்பில்" (இராமா. அயோத்தி. நகர்நீக்கு. எ0.) 5. வீம்மியழல். (உ-ம்.) "தென்பாலிற்புகுந்தனையோ வோமகளேயெனப்புலம்பித்தேம்ப லுற்றுள்" (கந்த்பு. மார்க்கண் க0உ.)
தேம்பி உலர்ந்து. (உ-ம்.) "கொழும்பதியகுடிதேம்பி" (மதுரைக். ககுள.)
தேம்பிழிதேறல்-தேனுறச்சமைத்த கட்டெளிவு. (உ-ம்.) "தேம்பிழிதேறன்மாந்திமிழ்சிறந்து" (சு-பா. கருநி.)
தேம்பு-1. தேடுதல். (உ-ம்.) "தேம்புடையலங்கண்மார்பிற்றிருமகன்றனியுறை" (சிந்தா. நாம. உ0கூ.) 2. தெரிநிலவினைப்பகுதி.
தேம்புதல்—கெடுதல். (சிந்தா.)
தேம்பும்—மெலியும். (பத்துப்பா.)
தேம்புறல்—தேடுறல்.

தேமல் — திதலை. (பிங்கல.கஎஅகூ.) படர் சுணங்கு; அஃது: அழகுதேமல், அழுக்குத் தேமல், பொங்குதேமல், மங்குதேமல் எனப் பலவகைப்படும்.
தேமா—1. இயற்சீர்வாய்பாடுகளுளொன்று. (உ-ம்.) "தேமாபுளிமாகருவிளங்கூவிளஞ்சீரகவற்-காம்" (யா-காரிகை. உறுப். ச.) 2. இத்திப்புமாமரம். தேமாங்கனிகள்சிந்தி. (சிந்தா. நாமக. உ.)
தேமாங்கனி—வஞ்சியுரிச்சீர் வாய்பாடுகளுளொன்று. (யா காரிகை. உறுப். ச. உரை.)
தேமாங்காயி—வெண்பாவுரிச்சீர் வாய்பாடுகளுளொன்று. (யா-காரிகை.உறுப்.ச. உரை.)
தேமாந்தண்ணிழல்— பொதுச்சீர்வாய்பாடுகளுளொன்று. (யா காரிகை.உறுப்.நி.உரை.)
தேமாந்தண்பூ — பொதுச்சீர்வாய்பாடுகளுளொன்று. (யா-காரிகை. உறுப். நி. உரை.)
தேமாநறுநிழல்— பொதுச்சீர்வாய்பாடுகளுளொன்று. (யா-காரிகை. உறுப். நி. உரை.)
தேமாநறும்பூ—பொதுச்சீர்வாய்ப்பாடுகளுளொன்று. (யா-காரிகை. நி. உரை.)
தேய்கடை—தேய்வானது. (வழக்.)
தேய்த்தல்—1. அழித்தல். (உ-ம்.) "செறுநர்த்தேய்த்தசெல்லுறழ்தடக்கை" (திருமுரு. நி.) 2. உரைத்தல், தேய்த்தல். (பெரியபு. மூர்த்திநா. உ0.) 3. குறைத்தல். (உ-ம்.) "அல்லற்பட்டாற்றுதழுகண்ணீரன்றே-செல்வத்தைத்தேய்க்கும்படை" (வள். நடுநி.) 4. திடைத்தல். (வழக்.)
தேயதல் — 1. உரைதல். (உ-ம்.) "தேய்ந்தொளிராரமும்" (பிரமோத். பஞ்சாட். உஎ.) 2. கழிதல். (உ-ம்.) "தேரைக்கால்பெற்றுமிகத்தேய்த்தகாலோய்ந்ததே-தோரைக்காலாளவான்கொடை" (தனிப்பா.) 3. குறைதல். (இராமா. சடாயுகாண். சு.) 4. மெலிதல். (வழக்.)
தேய்ப்பு—தேய்த்தல். (வழக்.)
தேய்பிறையிரும்பு — அறிவாள். (உ-ம்.) "மள்ளர்க-டேய்பிறையிரும்புதம்வலக்கைசேர்த்தினர்" (சிந்தா. நாம. உசு.)
நருநரெனல்—நருநருத்தல். (வழக்.)

நருமதை — விந்தியபருவதத்திற்குரும் இருநதிகளிலொன்று. (உ-ம்.) "சேமிகுநருமதைமாநதிதனைக்காணவும்பெற்றேன்" (சிவரக. நதிகள்வர. கஎ.) [இது சத்தநதிகளிலொன்று.]

நருளிகை—சத்திசாரம். (வைத்தியபரிபா.)

நரேந்திரன்—அரசன், நரர்களுக்குமேலானவன்.

நரை — 1. இடபம். (சூ. நிக. க: கச.) 2. சரை, நரைமயிர். 3. சாமரை. 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. நாரை. 6. பெருமை. (உ-ம்.) "மரந்தின்னூஉவரையுதிர்க்குநரையுருமினேறனையை"(மதுரைக்காஞ்.சுஙக.) 7. வெண்மை.(உ-ம்.)"நரைவிடையூரிராமநாதனைநண்ணினனே" (சேதுபு. சங்கரபா. அங.) (2, 3, 5-பிங்கல. கஎ0எ.)

நரைக்கொள்ளு—சீர்க்கோழிப்பூடு. (வைத்தியமூலி. அக.)

நரைக்கோம்பு—எலுப்பு. (வைத்தியபரிபா.)

நரைத்தல்—மயிர்முதலியவெளுத்தல்.

நரைமை—வெண்மை. (உ-ம்.) "நரைமையிற்றிரைதோற்றகையின்முயது" (மணி மே. உ0: சச.)

நரையல்லி-வெள்ளாம்பல்.(வைத்தியபரிபா)

நரையுந்திரையுமில்லான்—காக்கை. (வைத்தியபரிபா.)

நல்—1. நன்மைஎன்னும் பண்படி. 2. வறுமை. (உ-ம்.)"கல்குயின்றன்னவெனல்கூர்வளிமறை" (புறநா. ககசு.) [நல்குரவென்பது நல்லெனக்குறைந்து நின்றது.]

நல்கல்—1. ஈதல். (உ-ம்.) "எவையுநல்குஞ்செல்வரும்" (கந்தபு. தீசிஉத். கடுடு.) 2. உண்டுபெண்ணல். (உ-ம்.) "சிந்தையாலோர்வில்லுங்கணைகள்பலவும்விரைவொடுநல்கி"(கந்தபு. திருவி. சகு.) 3. பயன்படல். (உ-ம்.) "அயற்றேவர்நல்கார்" (திருநூற். அசு.) 4. பெறுதல். (உ-ம்.) "நல்கியதாதையைக்கொலைசெய்ததனயன்" (திருவிளை. மாபாத. க.) 5. மகிழ்தல். (புறநானூறு. அ0.)

நல்கி—கொடித்து. (புறநா.)

நல்கினும்—உவப்பினும். (புறநா.)

நல்குதல்—நல்கல்.

நல்குரவு—தரித்திரம், நுகரப்படுவனயாவுமில்லாமை. (உ-ம்.) "நல்குரவெண்ணுநசை" (வள். கஅசுசு.)

நல்கூர்தல்—தரித்திரப்படல். (உ-ம்.) "நயனுடையானல்கூர்ந்தானுதல்" (வள். உகசு.)

நல்கூர்ந்தோன்—தரித்திரன். (சூ. நிக. உ: சசு.)

நல்கூர்வேள்வியார் — சங்கப்புலவரிலொருவர். (அபிதாநசி.)

நல்லசாரம் —அத்திப்பிசின். (வைத்தியபரிபா.)

நல்லது — நன்மையானது; அது: அறம். (பரிபாடல்.)

நல்லபாம்பு—நாகப்பாம்பு. (வழக்.)

நல்லம்—கறுப்பு. (சூ. நிக. அ: உஉ.)

நல்லம்மான்பச்சரிசி—ஒரு பூண்டி. (வைத்தியபரிபா.)

நல்லமிளகு—கருமிளகு. (வைத்தியபரிபா.)

நல்லரிவஞ்சம் — போகபூயாதிஞென்று. (கூர்மபு. வருணச். உசு. உரை.)

நல்லவர் — 1. அறிஞர். நல்லவர் எனினும் நல்லோர்எனினுமொக்குமென்க.(சூ.நிக.உ:எ.) 2. உத்தமர். (உ-ம்.) "நல்லவண்வியாதனெங்கோன்"(சிவரக. வரலா. ககு.)விகுதியொருமை கருதற்க. 3. சிநேகிதர். (சூ. நிக. உ: நிஉ.) 4. மடவார். (உ-ம்.) "நல்லவர்க்காரணங்காயமார்பு" (புறநா. கச.)

நல்லவேளை—1. நல்வேளைப்பூடு. (வைத்தியபரிபா.) 2. நற்சமயம், காலம்.

நல்லவை — 1. நற்சுவை. மிகுதி, ஒப்பத்தாழ்வு என்று மூன்றனுள் முன்னிரண்டுமாம். வகையறிந்துயர்ந்தோ ரொத்தவர் தாழ்ந்தோர் மருவுமூன்றவையுமாராய்ந்து. என விநாயகபு. அரசியற். ககடு. கவியிலறிக. 2. மேன்மையுள்ளவை.

நல்லன்—நல்லவன். (வழக்.)

நல்லாதனார் – திரிகடுகமென்னுநூல்செய்த ஓராசிரியர். (அபிதாநசி.)

நல்லாபிள்ளை — பாரதம்பாடினோர். (அபிதாந.)

நல்லார்—1. அறிஞர். (சூ. நிக. உ: எ.) 2. உத்தமர். (உ-ம்) "நல்லாரைக்காண்பதுவுநன்றே" (வாக்குண். அ.) 3. மாதர். (திருவிளை. திருமணப்ப. ககக.)

நல்லாள்—1. நலமுடையவள். 2. பெண். (உ-ம்.)"மெல்லிநல்லாடோழ்சேர்"(ஆத்திசூ.டி.

நல்லி—நல்லாள். (வழக்.)

நல்லேறு–எருமையேறு. (உ-ம்) "நல்லேறு பொருஉங்கல்லென்கம்பலே" (மலைபடி.கஉடு.)

நல்லோர் — 1. அறிஞர். (உ-ம்.) "நவை பொறுக்க-நல்லோரையிரந்தேமேல்" (சோயிற்பு. பாயிர.உ எ.)2.உத்தமர். 3.மகளிர்.(ஐங்குறு.)

நல்வழி — 1. ஔவையார்செய்த ஒருநூல். (அபிதாநசி. 2. சன்மார்க்கம்.

நல்வினை—புண்ணியம். (உ ம்.) "நல்வினையுழந்து" (பிரமோத். பஞ்சா. கஅ.)

நலக்குதல்–கசங்கச்செய்தல், அல்லது வருத்தச்செய்தல் எனினுமாம்.

நலங்கல்—1. முடங்கல். (உ-ம்.) "மலைமாவினலங்கவோத்தவர்" (ம-நி. க00.) 2. வருத்தல். (உ-ம்.) "இலங்கையிற்றானலங்கவிட்ட" (இராமா. ஆரணிய. மாரீசன்வதை. டு.)

நலங்கு—தெரிநிலவினைப்பகுதி.

நலங்குதல்–வருத்தல். உ-ம்.)"உயிர்வருத்தநலங்கிவக்கு" (அரிச்சந்திரபு. வேட்டஞ். சா0.) (இராமா. ஆரணிய. மாரீசன்வ. டு.)

நலத்தது — 1. விரும்பப்படுகின்ற. (உ-ம்.) "நலத்தகுநாகநின்றிடிக்கும்" (சிந்தா. நாமக. சுகூ.) 2. அழகுதக்க. (ஐங்குறு.)

நலத்தல்—நயத்தல்.

நலத்தம்—சடாமாஞ்சி. (வைத்தியபரிபா.)

நலதம்—வெள்வெட்டிவேர். (வைத்தியபரிபா.

நலதம்பு—வேப்பமரம். (வைத்தியபரிபா.)

நலதை—சடாமாஞ்சி. (வைத்தியபரிபா.)

நலநாறி—சிவகரந்தை. (வைத்தியபரிபா.)

நலப்பாடு—மிகுநன்மை.

நலப்பு—நன்மை. பு-பண்புப்பெயர்விகுதி.

நலபாதி–பொட்டிலுப்பு.(வைத்தியபரிபா.)

நலம்–1. அழகு. (சூ.நிக.அ:உச.) 2. அன்பு. (சிந்தா.) 3. இன்பம், நன்மை. (உ-ம்.) "நலத்துடன்வன்மனேநண்ணுமெல்லியில்" (பாரத. குருகுல. சுகூ.) 4. உபகாரம். 5. சுகம். 6. செம்மைநிறம். (உ-ம்.)"நலம்பெறுகலிங்கத்துக்குறங்கின்மிசை" (திருமுரு.கo கூ.) 7. நிறம்.(உ-ம்.) "எழினலமகநலம்" (கலி. கடு.) 8. பயன். 9. மேம்பாடு (உ-ம்) "நலமருவுமிலிங்கபூசனையின்மேன்மை" (சிவரக. அபுத்திபூருவ. கூ) 10. மேம்பாடுடையவன். (உ-ம்.) "நலத்தின்கணுரின்மைதோன்றினவினைக்-குலத்தின் கணமப்படும்" (வள். கருஅ.) [ஆகுபெயர்.] 11. விருச்சிகராசி. (4, 5, 11-பிங்கல. கஎoஅ.)

நலம்பாராட்டுதல்—தெய்வப்புணர்ச்சியின்பின்னிகழ்வது. (அகப்பொ. களவிய. கூ.) புனைந்து அழகுசெய்தல் என்றும் சிலப்பதிகாரவுரையில்.

நலமாலை–அத்திப்பிசின். (வைத்தியபரிபா.)

நலவலி—நாவல். (வைத்தியபரிபா.)

நலவு—நன்மை. (வழக்.)

நலன்—நலம். இறுதிபோலியாயினது.

நலி—தெரிநிலவினைப்பகுதி.

நலிதீர்தல்—நலிவித்தல்.

நலிதல் — 1. அழிதல். (சிந்தா. அரும்பதவுரை.) 2. நெருக்கல் (புறப்பொ.) 3. மெலிதல். 4. வருந்தல். (உ-ம்.) "நாணுள்"பார்.

நலிநீருப்பு — தாமரைத்தண்டு. (வைத்தியபரிபா.)

நலிவு—1. அழிவு. 2. நெருக்குதல். (புறப்பொ.) 3. மெலிவு. 4. வருத்தம்.

நலை—சங்கையிற்சங்கமிக்கு மொருநதி. (அபிதானகோ.) நளையென்றும் பெயருண்டு.

நவ்வல்—நாவல் மரூஉ.

நவ்வி — 1. அத்தநாள். (சூ. நிக. த: எஉ.) 2. அழகு. (சூ. நிக. அ: உச.) 3. இளமை. (சூ. நிக. அ: உஎ.) 4. தோணி. (சூ. நிக. கக: வகரவெ. கச.) 5. மான். (உ-ம்.) "நவ்வியீழிச்சேயிழைமாட்டெய்தி" (பிரமோத். கூ: உo)

நவக்கிரகம்—ஆதித்தன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்பன. (உ-ம்.) "பின்னுமுளதேவர் நவக்கிரகமுடிவின்கூட்டம்" (சிவரக. சத்திய விரத. சசு.)

நவக்கிரகவாதிமதம்— நவக்கிரகங்களாலே சிருட்டிமுதலிய கிருத்தியமுண்டாமென்று வாதிப்பவன் மதம். (த. நி. போ. உஅடு.)

நவகண்டம்—ஒன்பதுகண்டம்; அவை: கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம். (சூ. நிக. கஉ: கூக.) குருவருடம், இரணியவருடம், இரமியவருடம், இளாவிரதவருடம், கேதுமால்வருடம், பத்திரவருடம், அரிவருடம், கிம்புருடவருடம், பாரதவருடம். (உ-ம்.) "நவகண்

டவெல்லையறிவன்மாதோ" (கந்தபு. அண்ட கோச உரை. கூடு.)

நவகோடிசித்தபுரம் — திருவாவடுதுறை. துறைசையந்தாதியில் நவகோடிசித்த என்னு முதற்குறிப்புள்ள செய்யுளிற்காண்க.

நவகோணத்தாள் — உமாதேவி. (உ-ம்.) "நவகோணத்தாட்கிறைகய" (சிவரக. தேவர் மூனிவர். க.)

நவச்சாரம்–ஒருமருந்து. (வைத்தியபரிபா.)

நவச்சி—எவட்சாரம். (வைத்தியபரிபா.)

நவசிராத்தம்--முதலாம் மூன்றும் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் பதினொராநாளிற்செய்யுஞ் சிராத்தம்.

நவசாரத்தான்—பொன்மணல். (வைத்திய பரிபா.)

நவசாரம்—நவச்சாரம்.

நவஞ்சம்—அசமதாகம். (மலையக)

நவட்சாரம்—நவச்சாரம்.

நவட்சி எவட்சாரம் (வைத்தியபரிபா.)

நவத்துவாரம் — ஒன்பதுவாயில்; அவை: கண்ணிரண்டு, நாக்கிரண்டு, செவியிரண்டு, வாயொன்று குதமொன்று குறியொன்று.(கூர்மபு. அரியயன். கூ. உரை)

நவதளம் — தாமரைத்தளிர். (வைத்திய பரிபா.)

நவதானியம் — ஒன்பதுதானியம்; அவை: உழுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, அவரை, துவரை, நெல்லு, பயறு என்பன. அவரை என்பது காடுபோச்சை. பயறு என்பது பாசிப்பயரை (இதனைப் பொருட்டுகைகிண்டிலறிக.

நவதாரணை — ஒன்பது தாரணை; அவை: சதுரங்கதாரணை, சத்ததாரணை, சித்திரதாரணை, நாமதாரணை, செய்யுட்டாரணை, பொருட்குறைநிறைதாரணை, மாயாதாரணை, வச்சிரதாரணை, வத்துத்தாரணை என்பன. (சூ. நிக. கஉ: க00.) பிங்கலநிகண்டிற் சிலபெயர் வேறுகூறுவர்.

நவதாளம்—ஒன்பதுவகைத்தாளம்; அவை: அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்ததாளம், படிமதாளம், விடதாளம் என்பன.(சூ. நிக. கஉ. க0உ.) பிங்கலநிகண்டில் சிலபெயர் வேறு கூறுவர்.

நவதி—1. தொண்ணூறு. 2. பொடிதூலை. (வைத்தியபரிபா.)

நவதீர்த்தம் — நவநதி, ஒன்பதுதீர்த்தம்; அவை: சங்கை யமுனை சரசுவதி நருமதை சிந்து காவேரி கோதாவரி சோணநதி துங்கபத்திரை என்பன. (உ-ம்.) "கங்கைநதியாதி நவதீர்த்தக்கரைநாட்டுள்"(சைவச.ஆசாரிய.உ.)

நவநாகம் — 1. அசமதாகம். (மலையக.) 2. ஒன்பதுநாகம்; அவை: அநந்தன் ஆதிசேடன் கார்க்கோடகன் குளிகன் சங்கபாலன் தக்கன் பதுமன் மகாபதுமன் வாசுகி யென்பன. ஆதிசேடனேநீக்கி எட்டுநாகத்திற்கு (சூ. நிக. கஉ: எஅ.) கவிபார், ஆதிசேடனுகிய அரசைச்சேர்த்து நவநாகமென்பர்.

நவநாதசித்தர்—சத்தியநாதர் சதோகநாதர் ஆதிநாதர் அநாதிநாதர் வகுளிநாதர் மதங்கநாதர் மச்சேந்திரநாதர் கடோந்திரநாதர் கோரக்கநாதர் என்னு மொன்பது சித்தர். (வேதாசூ. ககூ. உரை.)

நவநீ—மணிபூரகத்திற்குரிய பத்மதளங்கள் பத்தில் ஒன்றிலுள்ள அதிதேவதை. (சி. சி. அ. உக. மறை.)

நவநீதம்—வெண்ணெய். (சூ. நிக. கூ: உஎ.)

நவப்பிரசாபதிகள்–காசிடர் முதலான ஒன்பதின்மர்.

நவப்பிரமர்–மரீசி, பிருகு, அங்கிரா, இருது, புலகன், புலத்தியன், தக்கன், வசிட்டன், அத்திரி என்னும் ஒன்பது முனிவர். (உ-ம்.) "செருக்ஷனைதவிர்ந்தநவப்பிரமரெனச்செப்புவர்"(சூசூ. சிவமான். க0: ககூ.) [இவர்களே பிரமாவின் மனத்தினின்று சிருட்டிக்கப்பட்டவராதலால் மானசபுத்திரரென்று சொல்லப்படுவரென்றும் பிரமாவைப்போலப் படைக்குந்தொழிலுடைய வராதலால் நவப்பிரமரென்றுஞ் சொல்லப்படுவர்.]

நவப்பிரீதி—பொட்டிலுப்பு. (வைத்திய பரிபா.)

நவபண்டம்—நவதானியம். (உ-ம்.) "எல்லே தீர்நவபண்டமுமெடுத்துவாய்மடுத்தான்" (திருவிளை. குண்டோ. கடு.)

நவபுண்ணியம் — ஒன்பது புண்ணியம்; நீத்தவர்க்குச்செய்வன, அவை: அமுதமேற்தல், அருச்சித்தல், ஆசனத்திருத்தல், எதிர்கொளல், சாள்கமுவுதல், தீபங்காட்டல், தூபங்கொடுத்தல், பணிதல், புகழ்தல் என்பன. (சூ. நிக. கஉ: கூஅ.)

நவபேதம்—சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் எனச் சுத்தமாயையிலே சிவன் சொள்ளப்பட்ட ஒன்பதுவர்க்கமாகிய திருமேனிகள். (சி. சி. உ: எசு. ஞானப்.)

நவம்–1. ஒன்பது. 2. கார்காலம். 3. சேண்மை. 4. சாரணை. (மலையக.) 5. பாம்பு. (வைத்தியபரிபா.) 6. புதுமை. (உ-ம்.) "நன்னையங்

கொள்சங்கீதப்ரசங்கமுநவநவம்பெறுநாட்டியப் புங்கமும்" (சிவரக. தேவிநாட்டியம். உக.) (1, 2, 3-சூ. நிக. கஉ. வகரவெ. க.)

நவமணி — ஒன்பது இரத்தினம்; அவை: கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வயிரியம் என்பன. (உ-ம்.) "அம்பொன் நவமணிக்கலன் பொன்னுடைநல்கினுன்" (திருவிளை. மெய்க்காட். ஙசு.) (சூ. நிக. கஉ: க0ங.)

நவமணிமாலை–1. ஒன்பதுவகைமணிமாலை. 2. வெண்பாமுதலாக வேறுபட்டபாவும் பாவினமும் ஒன்பதுற அந்தாதியாகப்பாடுமோர் பிரபந்தம். (உ-ம்.)"வெண்பாமுதலா வேறோரொன்பது-நண்பாக்கூறனவமணிமாலை" (இலக்கண வி. அங.)

நவமாலி—மநோசிலை. (வைத்தியபரிபா.)

நவமி—ஒன்பதாந்திதி. (உ-ம்.) "சத்தமி" பார்.

நவரசம்—ஒன்பதுசுவை; அவை: அற்புதம், இரௌத்திரம், கருணை, குற்சை, சாந்தம், சிங்காரம், பயம், பெருநகை, வீரியம் என்பன. (சூ. நிக. கஉ: க0ச.)

நவரத்தினம்—நவமணி. (வழக்.)

நவரதம்—நவரசம். (வழக்.)

நவராத்திரி–தங்கிமாதத்தில் இலக்குமி சரசுவதி துர்க்கையாகிய சத்திகளைப்பூசிக்கும் ஒன்பது தினம். (அபிதாநசி.) பூசித்தோர் சத்துரு செயம் போகம் ஞானம் பெறுவர்.

நவரோசு — ஒரிராகம். இதனைக்காந்தார மென்னும் பண்ணேதும்போதுசேர்த்துஞ் சொல்வர்.

நவலோகம்–ஒன்பதுவகைலோகம். (வழக்.)

நவலோகாங்கம்–காந்தம்.(வைத்தியபரிபா)

நவவிதபிரபஞ்சம்—பஞ்சமகாபூத முதலாகிய நவவித சமுசாரம். (வாசுதேவ. கசஙு.)

நவவியாகரணம் — கிரந்தவிலக்கணமாகிய ஒன்பது வியாகரணம்.

நவவியூகம்–கர்ஷவியூகம், குவ்வியூகம், நாமவியூகம், ஞாநவியூகம், சித்தவியூகம், நாத்வியூகம், விந்துவியூகம், கலாவியூகம், சிவவியூகம்.

நவவிலாசசபை — அதிதூதர், சத்துவகர், ஞாநாதிக்கர், தூதர், நாதகிருத்தியர், பத்திச்சுவாலகர், பத்திராசனர், பலவத்தர், பிரதமிகர் என்னுமொன்பதுவகைச் சுத்தான்மாக்கள் கூடிய தேவசபை.

நவஷகம்—ஓமம். (வைத்தியபரிபா.)

நவாங்கிசம்—1. இராசியையொன்பதாய்ப் பகிர்தல். (வருஷாதிநூல் பார்.) 2. ஒன்பது பங்கு.

நவித்தல்—அவித்தல். (சூ. நிக. கு: உசு.)

நவியம்—1. கோடாலி. (உ-ம்.) "வடநவினவியம்" (புறநா. உங்.) 2. புதியது. 3. மழு. (சூ. நிக. எ: உ.)

நவியம்பாய்தல்—வெட்டுதல். (புறநா.)

நவிர்—1. ஆண்மயிர். 2. மருதயாழ்த்திறம். 3. வாள். (1, 2, 3- சூ. நிக. கக. வகரவெ. க0.)

நவிரம்—1. ஆண்மயிர். 2. உச்சி. 3. ஒருமலை. (உ-ம்.) "பேரிசைநவிரமேஎஉறையும்" (மலைபடி. அஉ.) 4. தலை. (உ-ம்.) "நனையுலாவனசத்தலர்வேதனுர்நவிரம்வேறு படுத்தது" (சேதுபு.காயத்திரி.ஙஎ.) 5. புன்மை. 6. மயில். 7. மலை. 8. வாள். அம் சாரியை. (1, 2, 3, 6, 7-பிங்கல. ஙஎகக.)

நவிரொழசங்து—மூட்சங்கு. (வைத்தியபரிபா.)

நவில் — தெரிநிலைவினைப்பகுதி. (உ-ம்.) "கொன்னவில்குறவர்" (கந்த.புவள்ளி.ககஙஎ.)

நவிலல்—1. கூறியடிப்படுதல். (உ-ம்.)"நல்லோர்குழீஇயநாநவிலவை பத்து" (மலைபடி. எஎ.) 2. செய்தல். (உ-ம்.) "கொன்னவில்குறவர்மாதர்குயிற்றியகோலநீங்கி" (கந்தபு.வள்ளி. ககஙஎ.) 3. சொல்லல். (உ-ம்.) "நவிலலுற்றதெனன்னையே" (சிவரக. தேவியுடன். சு.) பயிலுதலென்பர். (புறநா.) 4. பழகுதல். (புறப்பொ.)

நவிலுதல்—நவிலல்பார்.

நவிற்சி—நவிற்றல்.

நவிற்றல்—நவிறல்.

நவிற்றுதல் — 1. ஆராய்தல். (பரிபாடல்.) 2. சொல்லல்.

நவிற்றும்—தலைப்படும். (பரிபாடல்.)

நவிறல்—சொல்லல்.

நவின்றதை—நவின்றது. ஐ சாரியை. (பரிபாடல்.)

நவின்று — 1. பயின்று. (பத்துப்பா.) 2. மிக்கு. (பரிபாடல்.)

நவின்றேர்—பயின்றேர். (பரிபாடல்.)

நவின்றேர்க்கினிமை — நூலின் பத்தழகினொன்று; அது: கற்போனுக்குத்திருத்திப்படித்துகை. (நன். கஙு.)

நவீநம்—புதிது.

நவை–குற்றம். (உ-ம்.) "நாடுங்காற்றேன்று நவை" (இன்னிசை. கசு: உ.)

நவோத்திநதம்—வெண்ணெய். (வைத்தியபரிபா.)

நழக்கம்—மழுங்கல். (வழக்.)

நழக்கு—1. நழுக்கம். 2. தெரிநிலைவினைப்பகுதி.

நழக்குதல்—மழுங்கல். (வழக்.)
நழங்கல்—மழுங்கல். (வழக்.)
நழுவல்—1. வழுவுதல். (உ-ம்.) "சிக்கயவி ழுவுடைநழுவ" (கோயிற்பு. பதஞ்சலி. உஎ.) 2. விலகல். (வழக்.)
நழுவுதல்–1. வழுவுதல். 2. விலகல். (1, 2-வழக்.)
நள்–1. உச்சிப்பொழுது; இது: நடு என்பது ஆகுபெயராயுச்சிப்பொழுதை யுணர்த்திய து. 2. செறிவு. (மணிமே.) 3. நடு. (உ-ம்.) "ஆதி நள்ளந்தம்மில்லாகரும்பெருஞ் சோ தி யான்" (அ ரு ண கி ரி பு. அருணசலோதய. உக.) 4. தெரிநிலவினைப்பகுதி. 5. நள்என்னுமோசை. (பு ற நா.) 6. மிகுதிப்பொருடருமோரிடைச் சொல்.
நள்ளல்—நட்பாகப்பொருந்துதல். (உ-ம்.) "பண்பின்மகளிர்நயன் றூக்கிநள் ள ா வி டல்" (வள். கஉஉ.)
நள்ளலர் — நள்ளார், நள்ளலர் எனினும் நள்ளலார் எனினுமொக்கும்.
நள்ளார்—பகைவர். (உ-ம்.) "நள்ளார்சமர்த் தொழில்கடந்ததண்டகனும்" (க ந் த பு. தி ரு நகரப். அஎ.)
நள்ளாறு—ஒரு சிவஸ்தலம். (உ-ம்.) "கட ஞைகநள்ளாறுகாறுயில்கோளரியூர்" (க ந் த பு. கந்தவிரத. ககஅ.)
நள்ளி—1. கடையெழுவள்ளலிலொருவன். (உ - ம்.) "கொள்ளாரோட்டியநள்ளியும்" (புற நா. கநஅ.) 3. கற்கடகவிராசி. (சூ. நிக. க: சுச.) 4. நண்டு. (சூ. நிக. ச: எஎ.)
நள்ளிருணறி–இருவாட்சிப்பூ (உ-ம்.) "நரந்த நாகநள்ளிருணறி" (குறிஞ்சி. கூச.)
நள்ளிருள்–1. செறிந்தவிருள். (உ-ம்.) "நள் ளிருள் சீய்க்குஞ்செய்யநகைமணிக் கொடிஞ்சித் தேரும்" (நைட. சுயம்வர. சு.) (புறப்பொ.) 2. நடுவிரா.
நள்ளுரு—நடு. உகரஞ்சாரியை.
நள்ளுதல்—நட்புக்கொள்ளுதல்.
நள்ளுநர்—சிநேகிதர். (சூ. நிக. உ: நுஉ.)
நள்ளென்யாமம்–நள்ளென்னுமோசையை யுடைய யாமம். (உ-ம்) "நள்ளென்யாமத்துப் பள்ளிகொள்ளான்" (நெடுநல். கஅசு.)
நள்ளென்னுமோசை– அநுகரணவோசை. நிகண்டிற்கூறிய அநுகரணவோசைகள்போல் இதுவுமொன்றென்க.
நள—வியாழவட்டமாகிய அறுபதுவருடங்க ளிலே ஐம்பதாவதாண்டு. (வருஷாதிநூல்.)
நளகூபரன்—குபேரன்மகன். (அபிதாநசி.)
நளத்தம்—சடாமாஞ்சி. (மலையக.)

நளம்—1. சிற்பதூன்முப்பத்திரண்டி லொ ன்று. தாமரை. (வைத்தியபரிபா.)
நளப்பல்—வெட்பாலை. (வைத்தியபரிபா.)
நளபள்—சணல். (வைத்தியபரிபா.)
நளல்—நண்டு. (வைத்தியபரிபா.)
நளன்—1. இராமர்முதலானவர்கள் இலங் கைக்குப்போவதற்குச் சேதுவிலணை க ட் டி ய ஒரு குரங்கு. (இராமா. சேதுபந்தனப். க.) 2. நிடதநாட்டையரசாண்டவோரரசன்; இவன்: அறுவகைச்சக்கிரவர்த்திகளிலும் மு த லெ ழு வள்ளர்களிலும் ஒருவன். நைடதம்பார்.
நளி—1. குளிர்ச்சி. (உ-ம்.) "மரம்பிறங்கிய நளிச்சிலம்பு" (புறநா. கஙசு.) 2. கூட்டம். (உ - ம்.) "ஒளிதிகழ்திருந்துமணிநளியிருளகற் றும்" (புறநா. கஎஉ.) 3. செறிவு. (உ-ம்.)"நளி யிருமுன்னீர்" (புறநா. சுசு.) 4. தேள். (வைத் தியபரிபா.) 5. பெருமை. (உ-ம்.) "நளிகடல்" (புறநா. கஉசு.) 6. வெண்சாறடை. (உ-ம்.) "ஒலிவேளைநளிசங்கு" (தைல. தைலவ. எஉ.)
நளிகை–மூங்கிற்குழாய். (உ-ம்.) "நளிகைக் கழுக்குவந்தநாச மெ மன நா டி" (ஒ ளி வி ல். துறவு. எ.)
நளிதல்—செறிதல். (பதிற்றுப்.)
நளிந்து—செறிந்து. (உ-ம்.) "நளிந்துபலர் வழங்காச்செப்பம்" (மலைபடு. ககஎ.)
நளிநம்—1. இங்கிதம். (வழக்.) 2. தாமரை. (உ-ம்.)"நாளங்கொள்நளிநப்பள்ளி" (இராமா. சூர்ப்பணகை. ச.) 3. பரிகாசம். (உ - ம்.) "பயிலுமானவர்பேசனளினமே" (தே ச து பு. நாட்டு. ககநி.)
நளிநி—1. இலக்குமி, சரஸ்வதி. 2. ஒரு பாலாரிட்டதேவதை. (வி-ணி. உஙஅ.) 3. தா மரை வாவி. மீநாட்சிபிள்ளைத்தமிழ் முப்பத்து மூக்கோடிதேவர் துதியிற்காண்க.
நளிநை—இலக்குமி, சரஸ்வதி.
நளிர்—1. குளிர். 2. நண்டு. 3. நெருக்கம். 4. பெருமை. (உ - ம்.) "நளிர்புனன்மதுரை மூதூர்" (திருவிளை. நான்மா. நி.) (1, 2, 3, 4-சூ. நிக. கக: எகரவெ. கூ.)
நளுங்கு–ஒருகிளிஞ்சில். (வழக்குப்போலும்.
நளை—1. எலத்தோல். (வைத்தியபரிபா.) 2. கங்கையில்சங்கமிக்குமொருநதி. (அபிதாநசி.)
நற்கீரன்—நக்கீரன்.
நற்ற—நன்கு. (உ-ம்.) "அதுநற்கறிந்தனை யாயின்" (புறநா. கூநி.) [விகாரம்.]
நற்குணம்பத்து–மெய்யுரைத்தல், நல்வார்த் தை, இனியனகூறல், பயன்படுசொல், என் கின்ற வாக்கின்குணம்நாலும், பள்ளிவலம்வரு தல், தவம்புரிதல், தானஞ்செய்தல், என்கின்ற

காயத்தின்குணம் மூன்றும், அருணி னை வு, ஆசையறுத்தல், தவப்பற்று என்கின்ற மநதின் குணமூன்றுமாம். (சி. சி. அ: கூ. நிரம்ப.)

நற்சங்கலிதம் — ஒன்றுதொடுத்து முறையே தாநங்களேறிநிற்பது.

நற்சாங்கம்—சாலம்பபாஷாணம். (வைத்தியபரிபா.

நற்சாந்து—1. சந்தநம். 2. சுண்ணச்சாந்து.

நற்சாரி—நவச்சாரம். (வைத்தியபரிபா.)

நற்சீந்தில் — பலவகைச்சீந்திற்கொடியிலே ஒருவகைச்சீந்திற்கொடி.

நற்சீரகம் — கறிச்சீரகம். (உ-ம்.) "சுக்குவசம்பு நற்சீரகம். (தைல. தைலவ. கூகூ.)

நற்சேங்கல்—மஞ்சட்காவிக்கல். (வைத்தியபரிபா.)

நற்பரங்துன்றி—சிந்துலவணம். (வைத்தியபரிபா.)

நற்பலம்—வெட்பாலை. (மலையக.)

நற்பிரியம்—1. பற்படாம். (மலையக.) 2. மிகுபகூஷம். (வழக்.)

நற்போர் — அறத்தாற்பொருகின்றபோர். (உ-ம்.) "மூக்கோலசைநிலைகடப்பநற்போர்" (மூல்லை. கூஅ.)

நற்றமீ—பெற்றதாய். (உ-ம்.) "செவிலிநற்றாய்தோழியாகி" (அகப்பொ.அகத்திணை.கக்க.)

நற்றிணை—ஒரு நூல்.

நற்றுடி—1. நாகமரம். 2. வேர். (1, 2-பிங்கல. கூகெடு.)

நற்றுளி—1. அத்திப்பிசின். 2. அத்திமரம். (1, 2-வைத்தியபரிபா.)

நற்றூபம்—சாம்பிராணி. (உ-ம்.) "நாரொடு முக்குந்திருக்கநற்றூபம்" (தைல. தைலவ. கஙடு.)

நறம்பநப்பு—இஞ்சி. (வைத்தியபரிபா.)

நறவம்—1. அரத்தை. (உ-ம்.) "நறவந்திரி கடுசீவனிமதுரஞ்சிவசை" (தைல. தைலவ. சுஎ.) 2. அனிச்சமரம். (உ-ம்.) "தண்டளிர்நறவமெங்கும்" (பெரியபு.திருநாட்.உசு.) 3. கள். (இராமா. நாட்டுப். அ.) 4 குங்குமமரம். (மலையக. 5. ஞாழல். (மலையக.) 6. தேள். (வைத்தியபரிபா.) 7. நாறைக்கொடி. (உ-ம்) "நந்திநறவநறும்புன்னைசம்" (குறிஞ்சி. கூக.)

நறவு—1. சள். (உ-ம்.)"குறைவின்றுபருகி நறவுமகிழ்ந்து" (மலைபடு. கஎஉ.) 2. குங்குமமரம். (மலையக.) 3. தேன். (உ-ம்.) "நறவார் மந்தாரவரும்பு" (கோயிற்பு. வியாக்கிர. உக) 4. தேனுற்சமைத்தமைத்தது.(கலி.கசஎ.உரை) 5. மலரிலொருவகை. (பதிற்றுப்.)

நறவை—ஒரு பூடு; இது: சிறுநறவை, பெருநறவை, புளிநறவை என மூவகைப்படும். (வைத்தியபரிபா.)

நறு—1. கள். (உ-ம்.) "நனையினனைந்துநறு" (நான்மணிக். சஎ.) 2. தேன். 3. நறவம்பூ. (பரிபாடல்.) 4. வாசனை.(2,4-வைத்தியபரிபா.)

நறுஅ—நறவு. (உ-ம்.) "நறுஅவவிழ்ந்தன்ன வென்மெல்விரற்போதுகொண்டு" (கலி. சருி.)

நறியது—நல்லது.

நறிவிளா—நிலவிளா. (வைத்தியபரிபா.)

நறு—நறுமை. மை விகுதியின்றி வந்தது.

நறுக்கு—1. தண்டு. (வழக்.) 2. தெரிநிலை வினைப்பகுதி.

நறுக்குத்திப்பிலி — சேசாவரம் என்னுஞ் சரக்கு. (வைத்தியபரிபா.)

நறுக்குதல்—தண்டித்தல் (வழக்.)

நறுக்குழலம்—1 திப்பிலிக் கொட்டை. (தைலவ.) 2. வெட்டிவேர். (வைத்தியபரிபா.)

நறுங்கடி—நறியவூறுகாய். (உ-ம்.) "மாங்காய்நறுங்கடிகூட்டுவேம்" (கலி. கoகூ.)

நறுங்கரந்தை—ஒருகரந்தை. நாறுகரந்தையென்பர்.

நறுஞ்சுதை—நல்லசுண்ணம். (தைலவ.)

நறுந்தாளி—பசுந்தாளி.ஓர்கொடியென்றும், வாசனைத்தாளியென்றுங்கூறுவர். (வைத்தியபரிபா.)

நறுந்தொகை — அதிவீரராமபாண்டியன் செய்த ஒரு சிறிய நீதிநூல். (ஆபிதானசி.)

நறுநீரை—நறுந்தாளி (வைத்தியபரிபா.)

நறுநறுனெல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

நறுநாற்றம்—சுகந்தம். (வழக்.)

நறுநெய்—பசுநெய். (வைத்தியபரிபா.)

நறும்பலா—ஈரப்பலா. (வைத்தியபரிபா.)

நறும்பிசின் — சாதிசம் என்னும் பிசின். (வைத்தியபரிபா.)

நறும்புல்—ஒருவகைப்புல். (உ-ம்.) "நரந்தை நறும்புன்மேய்ந்தகவரி" (புறநா. கஙஉ.).

நறும்புனல்—பத்துத்துவரிலும் ஐந்துவிரையிலும் மூப்பத்திருவகை ஓமாலிகையிலும் ஊதியநீர். (கந்தபு. குமாரபுரி. சுசு. உரை.)

நறுமநப்பு—இஞ்சி. (வைத்தியபரிபா.)

நறுமாதுலம் — திப்பிப்புமாதுளை. (உ-ம்.) "கொளுஞ்சிநறுமாதுலமூட்சங்கு" (தைல. தைலவ. கஙடு)

நறுழுதல்—பற்சுடித்தல். (வழக்.)

நறுழுறுத்தல்—உறமுதல். (வழக்.) பொருமையுறுதலென்றுங்கூறுவர்.

நறுழுறைனெல்—நறமுறுத்தல். (வழக்.)

நறுமை — 1. நன்மணம். (ஐங்குறு.) 2. நன்மை. (சூ. நிக. அ: ஙஉ.)

நறுவியது—நல்லது. (வழக்.)

நறுவிலி–ஒரு மரம். (உ-ம்.) "பாசிலைமென் கொடியின்வடம்பயிலநறுவிலிபுரிந்து" (பெரிய பு. ஆனாய். கறி.)

நறை—1. இனிமை. (உ-ம்.) "நறைகொள் யாழ்தழீத்தும்புருநாரதர்பாட" (திருவிளை. வர குண. ருo.) 2. கள். (பிங்கல. ககசசு.) 3. குற்றம். (பிங்கல. கஅசுக.) 4. சந்தனம். (பரி பாடல்) 5. தேன். (உ-ம்.) "பூளைநறைவீ போல்" (திருவிளை. மாயப். எ.) 6. நறுநாற்றம். (திருமுரு. ககo. அடி. உரை.) 7. நறும்புகை. (சூ. நிக. க: ருக.) 8 நறைகொடி. (உ-ம்.) "நறை நார்த்தொடித்தவேங்கையங்கண்ணி" (புறநா. சசுஅ. 9. புகை. (உ-ம்.) "நறையொடுதுக ளென" (கலி. கoக)

நறைக்காய் — சாதிக்காய். (உ-ம்.) "பைங் கொடிநறைக்காய்" (திருமுரு. ககo.) [நறு நாற்றத்தையுடையகாய் என்பது பொருள்.]

நன்கனம்—நன்முக. (பரிபாடல்.)

நன்காடு—இடுகாடு. (நன். உசுஎ. உரை.) [இது மங்கலம்.]

நன்கு — 1. அழகு. (சூ. நிக. அ: உச.) 2. நன்மை. (உ-ம்.) "கற்புடையாடன்மணலரை விட்டிங்குறைகின்றதுநன்குறுமோ" (சிவரக. தேவியிமையம். ச) 3. மிகுதி. (உ-ம்.) "உப தேசித்தல்"பார். (பரிபாடலில். மிக என்பர்.)

நன்செய்—நெல்விளைநிலம். (வழச்.)

நன்பகல்—1. அடியொத்தகாலம். (உ-ம்.) "வளைவாய்க்கூகைநன்பகற்குழறவும்" (பட்டி னை. உசுஅ.) 2. உச்சிக்காலம். (உ-ம்.)"நன்பகல வணீத்து" (கலி. எச.) 3. எப்பொருளும்நுகர் தற்குநன்முகிய பகல். (உ-ம்.) "என்பெழுந்தி யங்குமியாக்கையர்நண்பகல்" (திருமுரு.ககo.)

நன்பகலந்தி — நன்முன உச்சிக்காலமான சந்தி. (உ-ம்.) "நன்பகலந்திநடையிடைவிலங்க வில்" (பொருந. சசு.)

நன்பன்—சணல். (மலையக.)

நன்பால்—நல்லொழுக்கம். (சிந்தா.)

நன்மை—நன்கு. (உ-ம்.) "இம்மூன்று-நன் மைபயத்தவில்" (திரிகடு. கo.) 2. மிகுதி. (உ-ம்.) "நல்லமழை-நல்லவெயில்என்பவற்றிற் போல" உலகவழக்கிற்காண்க.

நன்மைகடைப்பிடித்தல் — தயாவிருத்தி யெட்டினுளொன்று.

நன்மொழி—தேவபாணி. (உ-ம்.) "சிருடை நன்மொழிநீரொடுசிதறி" (பொருந. உச.)

நன்றி—1. செய்நன்றி. (உ-ம்.) "நன்றிமறப் பதுநன்றன்று" 2. தருமம். (வள். கூஎ.) 3. நன்மை. (உ-ம்.) "நன்றிசூழ்தருமமுதமாந்தித் தரங்கத்தில்" (சிவரக. மேரு. கக.)

நன்றியில்செல்வம்—சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாதசெல்வம். (திருக் குறள். நன்றியில்செல்வமென்னும் அதிகார வுரையிற்காண்க.)

நன்று — 1. நல்லது. 2. கல்வினை, அறம். (உ-ம்.) "சான்றோர்செய்தநன்றுண்டாயின்" (புறநா. ஙச.) 3. நன்மை. (சூ. நிக. அ: ஙக.) 4. பெரிது. (உ-ம்.) "செய்யசந்தநந்தீம்பழமாதி யா-கையவாரிநடந்தநன்றரோ" (சிந்தா. நா மச. அ.)

நன்னரி—நண்மை. (சூ. நிக. அ: ஙக.)

நன்னன்—மலபடுகடாமென்னும் பாட்டின் றலைவனதும் அவன்றந்தையினதும் நாமம். (உ-ம்.) "நன்னன்சேய்நன்னற்படர்ந்தகொள் கையொடு" (மலபடு. சுச.)

நன்னரி—1. ஒரு பாற்கொடி. 2. நன்னரி. (1, 2-வைத்தியபரிபா.)

நன்னரியுபயம் — சிறுநன்னரி, பெருநன் னரியென்னு மிருவகை நன்னரி. (உ-ம்.) "கண்டொரங்கி"பார்.

நன்னூல்—1. நல்லநூல். 2. பவணந்திமுனி வர்செய்த இலக்கணநூல்.

நன்னெறி — 1. சிவப்பிரகாசராற் செய்யப் பட்ட ஒரு நீதிநூல். 2. நல்வழி.

நனந்தம்—புன்கு. (மலையக.)

நனந்தலை — 1. அகற்சியையுடைத்தாகிய இடம். (உ-ம்.) "கழைபயினனந்தலைக்கறிவள ரடுக்கம்" (புறநா. ககசுஅ.) 2. நடு. (உ-ம்.) "நாற் றடந்தயிர்கடனனந்தலைநிலங்கீண்டு" (திருவி ளை. அந்நக்குழி. ஙக.)

நனம்—அகற்சி. (உ-ம்.) "கல்லுயர்நனஞ்சா ரற்கலந்தியலுநாடகேள்" (கலி. நுஉ.)

நனவிற்சூழ்ச்சி—சாக்கிரசுழுத்தி. (வழச்.)

நனவு — 1. சாக்கிரம், தெளிவு. (உ-ம்.) "நனவுடொருபொருளாயிருநயநஙகளு நின்முன்" (மதுரைப்பதிற்று. அச.) 2. பகல். (உ-ம்.) "நனவினுனலம்வாட" (கலி. நுஉ.) 3. மெய்ம்மை. (உ-ம்.) "நனவிற்பாடியநல்லிசை" (பதிற்று. அநு.)

நனி—1. பெருமை. (பிங்கல. உஉஉநு.) 2. மிகுதி. (பிங்கல. உஉஙஙு)

நனை—1. கள். (சூ. நிக. ரு: ஙo.) 2. தேன். (உ-ம்.) "நனைவழிவேம்பன்றேரிற்றண்டிச்சு நம்மைமெய்ன்ஞ"(திருவிளை.மாமனுகவந். ஙங.) 3. தெரிநிலவினைப்பகுதி. (உ-ம்.) "வழுத

ணங்காய்நனைபாணி" (சிவரக. அத்திப்பூ.உரு.) 6. பூமொட்டு. (உ - ம்.) "வேப்புநனையன்ன நெடுங்கட்கள்வன்" (ஐங்குறு. கூ0.)

நனைத்தல்—ஈரமாக்கல். (உ-ம்.) "புலி"பார்.

நனைதல்—ஈரமாதல். (வழக்.)

நனைப்பு—ஈரமாக்குகை. (வழக்.)

நனைய—அரும்ப. (ஐங்குறு.)

நனையாவிறட்டி — ஆகாசத்தாமரையென்றுங், கொட்டைப்பால்என்றுங் கூறுவர். (வைத்தியபரிபா.)

நனைவு—1. ஈரம். 2. நனைதல். (1, 2-வழக்.)

நா.

நா—1. மணிமுதலியவற்றினுக்கு. (உ-ம்.) "பணிநாவசைக்கும்படியென்னக்கழுத்தில்வீரமணிநாவசைப்ப" (திருவிளை. மாயப். கசு.) 2. நடு. (சூ. நிக. நி: சுசு.) 3. நாக்கு. (உ-ம்.) "தீயினுற்சுட்டபுண்ணுள்ளாறுமாருதே – நாவினுற்சுட்டவடு" (வள். கஉக.) 4. வார்த்தை. (உ-ம்.) "நம்பிநாவினுளுலகமெல்லாம்" (சிந்தா. நாமக. உஅஎ.) [ஆகுபெயர்.]

நாக்கப்பூச்சி—நாங்கூழ். இதற்குப்பூநாகம் என்றும் பெயருண்டு. (வழக்.)

நாக்கனிடுங்கூர்மை — கெந்தகலவணம். (வைத்தியபரிபா.)

நாக்கு—நா. (உ-ம்.) "கொடுநாக்கெறிந்து" (திருவிளை. மாயப் கசு.)

நாக்குப்புற்று—ஒரு நோய். (வழக்.)

நாக்குழக்கு—1. நடுவறுத்தான். 2. மூக்கிரடை. (1, 2-வைத்தியபரிபா.)

நாக்குழறல்—வாய்வெருவல். (உ-ம்.) "நாக்குழறிப்-பாடினூர்" (பாரத. இராசசூய. கசகூ.)

நாக்குழிஞ்சான்—ஒரு செடி. (வழக்.)

நாககந்நி— } நாகலோகத்துப் பெண்.
நாககன்னிகை— } (வழக்.)

நாககர்ணம்—செவ்வாமணக்கு. (வைத்தியபரிபா.)

நாக்கற்பம்—செவ்வீயம். (வைத்தியபரிபா.)

நாககேந்நி—1. நேர்வாளம். 2. வஞ்சிக்கொடி. (1, 2-வைத்தியபரிபா.)

நாககேசரம்—சிறுநாகப்பூ. (வைத்தியபரிபா)

நாகசேனி—பெருமருந்து. (வைத்தியபரிபா.)

நாகசந்தீரன் — சைநசமயத்திற் சொல்லப்படும் இருபத்துநான்கு தீர்த்தகரருளொருவன். (த. நி. பொ. உஎசு.)

நாகசம்—1. சிந்தூரம். 2. வங்கம். (1, 2-வைத்தியபரிபா.)

நாகசம்பவம்—செவ்வரம். (வைத்தியபரி.)

நாகசிதுவிகை—சிவந்தபாஷாணம். (வைத்தியபரிபா.)

நாகசிந்நம்—ஒருதுகுழல். (வழக்.)

நாகசீவநம்—தூத்தநாகம். (வைத்தியபரிபா.)

நாகணம்—1. ஒருபரிமளத்திரவியம். (தைல. தைலவ. சசு: உரை.) 2. நகம். 3. நேர்வாளம். (1, 2-வைத்தியபரிபா.)

நாகணவாய்—நாகணவாய்ப்புள். (சூ. நிக. சு: நுசு.)

நாகணை—சர்ப்பசயநம். (உ-ம்.) "நாகணைமீதுகண்டுயிலும்" (கூர்ம. தக்கயமி. உரு.) [நாகம். அ-ம் கடைக்குறை.]

நாகதகநி—ஓர் மரம். (வைத்தியபரிபா.)

நாகநந்தி–ஒரு மரம். (வைத்தியவகராதிகளிலில்லை.)

நாகதாளி—ஒரு மரம். (வைத்தியபரிபா.)

நாகதாளிக்கள்ளி—ஒரு மரம். (வைத்தியபரிபா.)

நாகதீபம்—ஐந்தலைவிளக்கு. (வழக்.)

நாகதெந்தி–நேர்வாளம். (வைத்தியபரிபா.)

நாகதெய்வம்–இந்திரப்பு. (வைத்தியபரிபா.)

நாகதேனி—பெருமருந்து. (மலையக.)

நாகநந்தி—நாகணம். (இது நேர்வாளம்.)

நாகநகரி—பவணலோகம். சைநர் வழக்கு. (சிந்தா.)

நாகணம்—சங்கு. (வைத்தியபரிபா.)

நாகப்பசிசை—ஓரிரத்திநம்.

நாகப்பூ—சிறுநாகப்பூ. (வைத்தியபரிபா.)

நாகபூச்சி—நாங்கூழ்ப்பூச்சி. (வைத்தியபரிபா.)

நாகபட்டினம்—ஓரூர். (இது கடலருகிலுள்ளது.)

நாகபடம்—1. ஒரு காதணி, மாதரணிவது. 2. பாம்பின்படம். (வழ.)

நாகபந்தம் — ஒருவகைச்சித்திரகவி; அது: இரண்டு பாம்புகள்புணர்ந்து விளையாடுவன போலத் தோன்றும்படி உபதேசமுறைப்படி சித்திரித்த அறைகளிலே எழுத்துக்களைத்தொகையிற்சுருங்கிப் பொதுவாகநிற்கும்படி அமைத்துப்பாடப்படுவது. (தண்டி. கூநி.) [நாகம்-பாம்பு. பந்தம் சிறை, ஒடுக்கம்.] அட்டநாகபந்தமுமுண்டு.

நாகபந்து—அரசமரம். (வைத்தியபரிபா.)

நாகபூலை–நாகமல்லி. (உ-ம்.) "ஆமலகி"பார். (தைல. தைலவ. கூ0.)

நாகபாசம் — 1. ஒரு மூடிச்சு. (சைவச. பொது. கசநி. உரை.) 2. பாம்புருவானவோர் படைக்கலம். (உ-ம்.) "நாகபாசப்படலம்" (இராமா.)

நாகபாடாணம்—ஒரு பாடாணம்.

நாகம் — 1. ஜீகாயம். (சூ. நிக. கஃ. ககர வெ. ச.) 2. கஞ்சாங்கோரை. 3. காரீயம். (சூ. நிக. சு: கூ.) 4. குரங்கு. (உ-ம்.) "நாகத்தை நாகம்பிடித்துக்கொண்டேயொருநாண் முழுதும்" 5. சுரபுன்னை.(உ-ம்.)"நாகநறுமலருதிர" (திருமுரு. கூ0உ.) 6. ஞாழல். 7. தத்தநாகம். 8. தேவலோகம். 9. நஞ்சு. (உ-ம்.) "ஆனைத்தீயமுதங்கண்ட-பையணலகம்போல" (சிந்தா. நாமக. கூஎச.) [ஆகுபெயர்.] 10. நற்புடவை. (உ-ம்.) "கூலம்"பார். 11. நாகப்பச்சை. [ஆகுபெயர்.] 12. நாகப்பூ. (உ-ம்.) "நரந்தநாகநள்ளிருணுறி" (கு-பா. கூச.) 13. நாகபாடாணம். 14. நாகலோகம். 15. பாம்பு. (உ-ம்.) "படத்திணற்பெரியநாகங்கடிப்பது" (அரிச்ச.மயாந. எ.) 16. புன்னைமரம். (உ-ம்.) "தண்டலை"பார். 17. மலை. (உ-ம்.) "நாகத்தனியொருவில்லியை" (இராமா. கரன்வதை. கூஎ.) 18. யானை. (உ-ம்.) "நாகத்தைநாகமணுகக்கண்டு" 19. விலாமிச்சவேர். (2, 6, 7, 19-வைத்தியபரிபா.) (4, 18-தனிப்பா. 2-ம் பாக. சடு0.)

நாகமல்லி—நாகமல்லிகை.

நாகமல்லிகை–ஒருமல்லிகை; இது: அனிச்சமென்பர். (வைத்தியபரிபா.)

நாகமம்—சுக்கு. (வைத்தியபரிபா.)

நாகமாதா—துளசி. (வைத்தியபரிபா.)

நாகர்–1. சர்ப்பசாதிகள். 2. தேவர். (உ-ம்.) "நாகம்வேட்டுறைநாகரை" (சேதுபு. சேதுச். சகு.)

நாகரகம்— } தென்னெருடை. (வைத்திய
நாகாங்கம்– } பரிபா.) (மலையக.)

நாகாபரணம்—செவ்வாமணக்கு. (வைத்தியபரிபா.)

நாகரத்தினம்—நாகமணி. (வழக்.)

நாகராம் — 1. ஒரு பாடை. 2. ஒருவண்டி. (சூ. நிக. கூ: எசு.) 3. தேன்னெருடை. 4. சுக்கு. (3, 4-வைத்தியபரிபா.)

நாகரான்—நகரத்தான்.

நாகராகம் — ஒரு பண். (சிலப். வேனிற். கூடு. உரை.)

நாகராதித்தைலம்—சுக்குத்தைலம்.(உ-ம்.) "கடத்திலிடுநாகராதித்தைலம்" (தைல. தைலவ. உ.)

நாகரி—1. குருக்கத்தி. (சூ. நிக. ச: டு.) 2. தவசிமுருங்கை. (வைத்தியபரிபா.) இதனை, நாகரிசம் என்றுங்கூறுவர்.)

நாகரிகம்-கண்ணேட்டம்.(உ-ம்.)"நயத்தக்க நாகரிகம்வேண்டுபவர்"(வள்.டுஅ0.)[நாகரீகத்திற்கு உள்ளபொருளெல்லாம் இதற்கும் வரும்.]

நாகரிகர்–நகரமுடையோர். (உ-ம்.)"காஞ்சி நாகரிகராலிவர்" (திருவிளை.மெய்க்கா. கூகூ.) நகரவாசிகள் என்பது கருத்து.

நாகரீகசெம்பு—தண்டு.(வைத்தியபரிபா.)

நாரீகம்—1.கண்ணேட்டம்.(சூ.நிக.அ:சo.) 2. சாதுரியம். (உ-ம்.)"வாகுசேர்தருவடிவினிற்குணத்தினின்மதியி–னுகரீகமாமைந்தரைப்பயந்திடுநலத்தில்" (சிவரக. தாருக. கூ.) 3. வீணைதம். (உ-ம்.) "நாகரீகந்துன்றுதுகில்வர்க்கமெல்லாம்" (சிவரக. சுகமுநி. டு.)

நாகரீகர் — 1. சதுரர். (சூ. நிக. உ: சடு.) 2. நகரத்தார்.

நாகநு—குருக்கத்தி. (வைத்தியபரிபா.)

நாகநுசம்—தேன்னெருடை. (வைத்தியபரி.)

நாகநோணு—செவியம். (வைத்தியபரிபா.)

நாகனை—ஒருபூடி. (வைத்தியபரிபா.)

நாகல் – நாவன்மரம். (வைத்தியபரிபா.)

நாகலண்டன் — குய்யாட்டகரிலொருவன். (வி-மணி. உஎக.)

நாகலதை—ஆண்குறி. (வைத்தியபரிபா.)

நாகலம் — பிரதிட்டாகலையில் வாயுதத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப்புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக.)

நாகலோகம் — 1. கீழேழுலகினொன்று. (உ-ம்.) "நீநாகலோகந்தகுவழியேசார்க" (கோயிற்பு. பதஞ்சலி. எடு.) 2. தேவலோகம்.

நாகவம்—திரகரணம் நான்கனுளொன்று; அது: அமாவாசையின்பிற்கூறு.(விதாக.பஞ்சா. உகூ. உரை.)

நாகவல்லி—1. ஓரிதழ்த்தாமரை. (வைத்தியபரிபா.) 2. வெற்றிலை. (உ-ம்.) "மாதவத்தாலித்தைலமமையினுகவல்லியிற்றேய்த்தருந்து" (தைல. தைலவ. அக.)

நாகவள்ளி–1. வள்ளிக்கிழங்கு. (வைத்திய. கருப்டொ.) 2. வெற்றிலைக்கொடி. (வைத்தியபரிபா.)

நாகவாயு—தசவாயுக்களிலொன்று; அது: விக்கல்முதலியவற்றை யுண்டாக்கும். (தத்துவவிளக்கம்.)

நாகவீதியர்—சுவர்க்கலோகத்திற்குச் செல்லும் வழியிலேயுள்ள ஒருவகைத்தேவசாதியார். (உ-ம்.) "மருந்திணுமினியநாகவீதியரென்றுரைப்பர்" (கூர்மபு.தக்கவமி.எ.) [நாகம்-சுவர்க்கலோகம்.]

நாகன்—நாகவாயு; இது: தசவாயுவிலொன்று. (பிங்கல. கூஅ.)

நாகாதிபன்–1. இந்திரன். (உ-ம்.) "நாகாதிபன்மகன்" 2. இமயமலை. (உ-ம்.) "நாகாதிபன்வண்சாரலின்" 3. ஜராவதம். (உ-ம்.) "நாகாதி

பன்வியமும்மதநாறுத்திசைபுக்கான்" 4. சேடன். (உ-ம்.) "நாகாதிபன்மகண்மைந்தனலங்கண்டி" 5. மலையரசன். (1, 2, 3, 4-பாரத. அருச். நீர்த். கo.)

நாகினி—1. வஞ்சிக்கொடி. 2. வெற்றிலே. (1, 2-வைத்தியபரிபா.)

நாது — 1. இளமை. (சூ. நிக. அ: உஎ.) 2. எருமைமரைபெற்றம் நந்து என்னுமிவற்றின் பெண். (உ-ம்.)"எருமையுமரையும்பெற்றமுநாகே"நீர்வாழ்சாதியுணக்துநாகே"(தொல்.பொருள. கூகஅ; சூக்கூ.) 3. சங்கு. (உ-ம்.) "தண்டலைநாகங்கணீரழுமீர்முகைசற்றுவிண்ட"(ம-தி.சூo.) 4. நத்தை. (சூ. நிக. ஈ: எடு.) 5. புற்று. (உ-ம்.) "எண்கெதிர்நாகுளுறைசெல்லாமால்" (தைல. தைலவ. கஉo.)

நாதலாவி—நாகதாளி. (வைத்தியபரிபா.)

நாதலி—1. அரத்தை. 2. கீரிபுரண்டான்பூடு. (1, 2-வைத்தியபரிபா.)

நாகூர்—ஓரூர். (வழக்.)

நாகேசுரம்-1. கும்பகோணத்தருகில் திருநாகேசுரம் என்னும் ஓரூர். 2. சிறுநாகப்பூ. (வைத்தியபரிபா.)

நாகை-1. நாகபட்டினம். (நாகைப்புராணத்திற்காண்க.) 2. வெற்றிலைக்கொடி. (வைத்தியபரிபா.)

நாங்கள்—நாம். (உ-ம்.) "இந்தச்கிழியிலெத்துணைப்பொன்னெடுத்துவழங்குந்தொறு நாங்கள்" (திருவிளை. உலவா. கஈ.) கள் பகுதிப்பொருள்விகுதி. (சிந்தா.)

நாங்கூழ்—நாகப்பூச்சி.(உ-ம்.)"எறும்பிடைநாங்கூழென" (திருவாச. நீத்தல்வி. உடு.)

நாசகாரி—கேடுசெய்வோன். (வழக்.)

நாசகாலம்—அழிவுகாலம். (உ-ம்.) "நாசகாலம்வரும்பொழுதாண்மையுஞாநமுங் கெடுமோ" (பாரத. கீசக. கஈ.)

நாசநட்சத்திரம்—சுக்கிரன்நின்றநாளுக்குப்பத்தாநாள். (விதாந. குணகுண. சக. உரை.)

நாசநம்—நாசம். (வழக்.)

நாசநன் — நாசஞ்செய்கிறவன். (உ-ம்.) "திமிரநாசநன்செய்யமேனியன்" (பாரத.சூது. கசக.)

நாசபொசநி—ஒருயோகினி.(வி-னி.உசக.)

நாசம்-1. அழிவு. (உ-ம்.) "நம்புபுண்ணியமியாவையுநாசமாம்" (சிவரக. நந்திகேசுரநம.எ.) 2. நாசநட்சத்திரம். (உ-ம்.) "பத்தாஞ்சினனிலைநாசம்" (விதாந. குணகுண. சக.)

நாசயோகம்-மரணயோகம்.(வருஷாதிதூ.)

நாசி — 1. மூக்கு. (உ-ம்.) "நாகாசியிற்சேர்த்தி" (அரிச்ச. வேட்டஞ்செய். சகூ.) 2. மேல்வாய்தற்படி. (உ-ம்.) "கொடிசெறிந்திடுசுளிகைதன்னுடனவுணர்தங்குழாங்கொண்டமுடிசிதைந்தனநாசிநீடலையெலாமுடிந்தன" (கந்தபு. சதமுகன்வதைப. கசo.) சிந்தாமணியில் வீட்டுறுப்பென்பர்.

நாசிரோகநாசத்தைலம்—ஒருவகைத்தைலம்; அது: நல்லெண்ணெய் பசுப்பால் இளநீர் முதலியவற்றிலிருந்து வடித்தெடுப்பது. [இதனிலக்கணம். தைல. தைலவ. ருஈ-ம் கவியிற் காண்க.]

நாசுகம்—பீர்க்கு. (வைத்தியபரிபா.)

நாஞ்சிநாடு—மலையாளம்.

நாஞ்சில்—1. கலப்பை. (உ-ம்.) "நாஞ்சிலொப்பநிலமிசைப்புரள" (புறநா. சகூ.) 2. மகிலுறுப்பு. (உ-ம்.) "மகரதோரணவாயிலுநாஞ்சிலும்" (அரிச்ச. நகர. க.)

நாட்கால் — மங்கலப்பந்தரில் முதனட்டுங்கால். (வழக்.)

நாட்கூலி— அற்றைக்கூலி. (வழக்.)

நாட்கொள்ளுதல்—முகூர்த்தநாட் கொள்ளுதல். (உ-ம்.) "தமித்தல்"பார்.

நாட்டம்-1. அழகு. (சிந்தா.) 2. ஆராய்ச்சி. (உ-ம்.)"அறம்புரிந்தன்னசெங்கோனுட்டத்து" (புறநா. கூடு.) 3. ஒரு பண். 4. கண். (உ-ம்.) "வயவர்தோளுநாட்டமுமிடந்துடிக்கின்றன" (இராமா. கரன்வ. எக.) 5. சோதிடனூல். (உ-ம்.) "சொற்பெயர்நாட்டங்கேள்வி" (பதிற்று. உக.) 6. வாள். (3, 6- சூ. நிக. கக. டகர வெ. கடு.)

நாட்டமைதி — நாட்டுச்சிறப்பிற்குடையன ஆறு; அவை: குறும்பின்மை, செங்கோல், செல்வம், செழிப்பு, நோயின்மை, விளைவு என்பன. (சூ. நிக. கஉ: சுo.)

நாட்டலல்—நாட்டுதல். (வழக்.)

நாட்டவன்—நாட்டான். (வழக்.)

நாட்டாண்மை—ஊரதிகாரம். (வழக்.)

நாட்டார்—ஊரார். (உ-ம்.) "நாட்டார்நகையாமனுமேலவீடெய்த" (திருவாசக. அம்மா.)

நாட்டியம் —1. குறிப்பு. (சூ. நிக. அ: ஈசு.) 2. கூத்து. (உ-ம்.) "நான்றவார்குழலரம்பையர்நாட்டியங்கண்டான்" (சேதுபு. விதூம. கஈ.) 3. புறநடம். (உ-ம்.) "தாண்டவம்கிருத்தம்நாட்டியமென்னும்" (சிலப். அரங். கடுஅ. உரை.)

நாட்டிலமிர்து-நாட்டிலுண்டாகியஅமிர்து; அவை: செங்நெல், சிறுபயறு, சேதாநறுநெய், கன்னல், கதலி என்பன. (சிந். மண்மக. கூ. உரை.) சேதாலவநீக்கி இளநீரைக்கூட்டி ஐக்தாகக்கூறுவர். (சூ. நிக. கஉ: சஎ.)

நாட்6–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. நிலை. (சிந்தா.)

நாட்கத்தும்–ஊருக்குள்ளதிங்கு; அவை: கள்வர், கள்ளை, தொட்டியர், பன்றி அவமழை, யானை, விட்டில் என்பன. (சூ. நிக. கஉ: எசை.)

நாட்டதல்–நிறுத்தல். (உ–ம்.) "நாட்டிஞன் குறித்துப்பாயநண்ணுமுன்" (திருவிளை. கான் மாறி. உக.)

நாட்டுப்படை—அறுவகைச் சேனைகளி லொன்று. (வள். எசுஉ. பரி.)

நாட்டுவலை — வைராசன் என்னும் பிரசா பதியின்புத்திரி. (உ–ம்.)"பொலங்கொடியனைய நாட்டுவலைதனையினிதின்வதுவைசெய்தான்" (கூர்மபு. தக்க. சபித். கூ.)

நாட்டுவெள்ளரி — ஒருவெள்ளரி. (வழக்.)

நாட்டை — ஓரிராகம்; சுத்திரசாதி: இதன் மனைவிமார் தேசாக்ஷரி, காந்தாரம், சாரங்கம். அதிதேவதை தும்புருவன். (வி–ணி. உகஞ.) 2. நாட்டையுடையாய். (உ–ம்.) "ஆடுகளங்கடுக்குமகளுட்டையே" (புறநா. உஅ.)

நாட்பறை—நாழிகைப்பறை. (சிலப். அரங். உஎ. உரை.)

நாட்பு—1. போர். 2. போர்க்களம். (உ–ம்.) "விழுமியோர்துவன்றியவன்கணைட்பின்" (பதி ற்றுப். சருி.)

நாட்பொருத்தம் — விவாகப்பொருத்தத்து ளொன்றுகிய நட்சத்திரப்பொருத்தம். [இது பெண்ணினுடைய சென்மநாளாதியாக 2, 4, 6, 8, 9, 11, 13, 15, 18, 20, 24, 26-ம் நாட் கள் புருஷநாளாகவரில் நட்டத்திரப்பொருத்த முண்டாமென்றறிவது.]

நாடகசாலை—கூத்துப்பயிலுமிடம். (வழக்.)

நாடகத்தமிழ்—நாடகவழக்குத்தமிழ்; அது: முத்தமிழிலொன்று. (நன்னூ. சிறப்புப். உரை.)

நாடகத்தி—கூத்துவிலோயாடும்பெண்.

நாடகம்–1. கதைதழுவிவருங்கூத்து; இது: சாந்திக்கூத்தின் நால்வகைகளுளொன்று. (சிலப். அரங்கேற்று. கஉ. உரை.) 2. கலைஞானமறுபத்து நான்கிலொன்று.

நாடகம்பத்து—பத்துவகைநாடகம்; அவை: வீரம், யாமிருகம், அரட்டு, சமூஸ்காரம், பா ணம், வீதி, கல்லாடம், உத்திரட்டாக்கம், விா கணம், வியாயோகம் என்பன [தண்டியலங் காரவுரைகாரர் நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவாகாரம், வீதி, அங்கம், ஹீயாமிருகம் என்னுமிவைபே பத்துவகைப்பட்ட நாடகசாதியென்பர்.]

நாடகர்—கூத்தர் (சூ. நிக. உ: கூஎ.)

நாடகவழக்கு — மூவகை வழக்கிலொன்று; அ ஃ து: இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரையாய்த் தோன்றுவது. (தண்டி. கஉ. உரை.)

நாடகாங்கம்—அவிநயம். (வழக்.)

நாடகியார்—நாடகீயர். (உ–ம்.)"நடராசன்" பார்.

நாடகீயர்—கூத்தர். (வழக்.)

நாடல்—ஆராய்தல். (உ–ம்.) "நாடல்சான்ற மைந்தினை" (புறநா. கருி.)

நாடன்—1. குறிஞ்சிநிலமுடையான். (புற நா.) 2. நாடுடையவன்.

நாடன்பருத்தி—ஒரு செடி. (வைத்தியபரி.)

நாடனை — நாட்டையுடையாய். (உ–ம்.) "கானகநாடனைநீயோ" (புறநா. கூி.)

நாடா—தூணுழி. (சூ. நிக. எ: கூஎ.)

நாடான்—சான்றூர்க்குரிய ஒரு பட்டப் பெ யர். (வழக்.)

நாடி—1. ஆராய்ந்து. (புறநா.) 2. இருபத்து நாலுநிமிடங்கொண்டது, நாழிகை. 3. தாது. வாத பித்த சிலேட்டுமமென்னு மூவகைத் தாது களாகம். 4. நரம்பு. (சூ. நிக. கக: டகரவெ. எ.) 5. மூக்கு. (உ–ம்.) "நுதல்விழிநாடிவள்ளடிநாக் களங்களினும்" (தைல. தைலவ. கூஎ.) (சிந்தா.) 5. வீட்டினுறுப்பு. (சிந்தா.)

நாடிக்கிரந்தம் — அவை பதினுன்குவகை யுள்ளன. (அபிசாரசி.)

நாடிகளிபதினுன்கு—பதினுன்குவகை நாடி கள்; அவை: சுழிமுனை, பிங்கலை, இடை, சரச் சுவதி, பூடை, வருணை, அத்திசிகுவை, யச்சு விநி, அலம்புடை, குரு, விசுவோதரை, பயச் சுவினி, சங்கினி, காந்தாரை என்பன. (உ–ம்.) "பலிதருநாடிபலவுளுஞ்சிறந்து மன்னு நாடி கள்பதினுன்கு-பொலிசுழிமுனைபிங்கலையிடை சரச்சுவதிபுரைபூடையேவருணை–மெலிவுறு மத்திசிகுவையேயச்சுவினிவிழையலம்புடைகு குவே-வலிகெழுவிசுவோதரைபயச்சுவினிசங்கி னிவயங்குகாந்தாரை" (சூத.ஞாந.கக:சு.) இவற் றுள்ளேபத்துச் சிறந்ததாகச் சித்தாந்தக்கட்ட ளைகள்கூறும்.

நாடிகேரிப்பம்—மரமஞ்சள். (வைத்திய பரி பா.)

நாடிபத்து — பத்துவகைநாடிகள்; அவை: சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி என்பன. (தத்துவக்கட்டளைபார்.)

நாடிமூன்று — மூன்றுவகையான நாடிகள்; அவை: சுழிமுனை, இடை, பிங்கலை.

நாடியுப்பு–வளையலுப்பு. (வைத்தியபரிபா.)

நாடு—1. இராச்சியம். பலவூர்களின் கூட்ட மென்பர் மணிமேகலையில். (பவத்திற. ககக. உரை.) 2. உலகின்பொது. (பிங்கல. சருஅ.) 3. கண்டம். (உ-ம்.) "அவற்றிடைநாடும்"(சோ யிற்பு. வியாக். சு.) 4. தொழிலிலவினைப்பகுதி. 5. நானிலத்துக்கும் பொதுப்பெயர். (உ - ம்.) "நாட்டிடம்பரந்துபோகிநாடுதாங்கவென்ன" (சிக். கநக. கஅருி.) 6. மென்புலம். (பரிபாடல்.)

நாடுதல்—1. தேடுதல். (உ-ம்.) "நாடினுள் கழுகும்பேயும்" (அரிச்ச.மயாந.ககூ.) 2. நினைத் தல். (உ-ம்.) "பரசிவனேக்காட்டு-நன்மார்க்கஞா நத்தைநாடி" (சி. சி. அ: உஉ.) 3. விசாரித்தல். (உண்மைவி. உசு. உரை.)

நாடுபடுதிரவியம்—நாட்டிலுண்டாகுந் திர வியம்; அவை: கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழைஎன்பன. (சூ.நிக.உ:சஎ.)

நாடுரி — நா வு ரி. (நன். கருசா. உரை.) [நாழி-உரி.] மரூஉ.

நாண்1 — 1. இழிதொழில்களின்மருஞ்செல் லாமை. (உ-ம்.) "குடிப்பிறந்துகுற்றத்தினீங்கி வடுப்பரியு-நாணுடையான்கட்டே தெளிவு" (வள். நிுoஉ.) 2. கயிறு. (சூ. நிக. எ: சுo.) 3. தொழிலிலவினைப்பகுதி. 4. பெண் ஞாண்; இஃது: ஒரு அணிவிசேடம். (உ-ம்.) "கனநா ணணிந்துபொற்கச்சறவீசி" (வாண. உகருி.) 5. மேகலை. (உ-ம்.) "கருத்துநாணன்றிக்காசு-செய்யும்பொன்மருங்குஞாணிழப்பர்" (திரு வீளை. வீளைய. நி.) 6. வின்ஞாண். (உ-ம்.) "ஆத்தநாணினருவரைவாங்கினான்" (இராமா. கரன்வ. கஎ.) 7. வெட்கம். (உ ம்.) "மண் கொள்ளாநாண்மடமச்சம்பயிர்ப்பைவலிந் தெழு லும்" (பெரியபு. தடித்தா. கசசு.)

நாண்மகிழ்நக்கை - நாளோலக்கம். (உ-ம்.) "வீயாதுசுரக்குமவனுண்மகிழிருக்கையும்"(மலை படி. எசு.)

நாண்மலர்—புதுமலர். (உ-ம்.)"விரைநாண் மலர்க்காவகத்தே" (வாண. கஎ.)

நாண்மீன் — அசுபதிமுதலிய நட்சத்திரம். (தொல். பொரு. அகத். க. உரை.)

நாண்முழவு—எழுவகைமுழவுகளுளொன்று; அது: நாட்பறை. (சிலப். அரங்கே. உள. உரை.)

நாணம் — வெட்கம்; இது: மகடூஉக்குண நான்கினுளொன்று. (சூ. நிச. சுஉ: சஎ.)

நாணாயம் —வாக்குப்பிசகாமை. (வழக்.)

நாணாவாளி—ஆண்மைசான்றவன். (வழக்.)

நாணல்—1. ஒருபுல். (பிங்கல. உகசுக) 2. நாணுதல். (உ-ம்.) "பிறர்தினைப்பேணுங்காணு ணலும்" (திரிகடு. சு.) 3. வளைதல். (உ-ம்.) "கருங்காலிக்கட்டைக்குவாய்நாணுக்கோடாலி" (தனிப். ஔவைபாடல்.)

நாணுள் — நாளுக்குநாள். (உ-ம்.) "நாணு ளாயரியபனுள்நாகங்கீழிடைத்தேடிநலிந் தே தகண்ணுற்-காணுதகாரணனே"(சிவரக. நந்திகண. க.) நாடோறும் என்பர் பரிபாடலில்.

நாணி—1. நாணமுடையாள். 2. வின்ஞாணி. (சூ. நிக. எ: சு.)

நாணுகம்—குதிரை. (வைத்தியபரிபா.)

நாணுதல் – வெட்குதல். (திருக்குறள். நாணுடைமை. க.)

நாணையம்—நாணயம். (வழக்.)

நாத்தலை —ஒருவகைக்கூத்து. (சிந்தா.)

நாத்தழும்பேறுதல்-நாவில்வடுவுண்டாதல். (உ-ம்.) "நாத்தழும்பேறவாழ்த்தி" (திருவாச. திருப்பொற். கருி.)

நாத்தனார்—கணவன் சகோதரி. (வழக்.)

நாத்தாங்கி–இலக்கள்ளி.(வைத்தியபரிபா.)

நாத்தி—1. இன்மை. (உ-ம்.) "அத்திநாத்தி யென்றெழுதி" (பெரியபு. திருஞான. அகச.) 2. கணவன்சகோதரி. (வழக்.)

நாத்திகம்—கடவுளில்லையென்னுங் கொள் கை. (உ - ம்.) "நாத்திகம்பேசிநாத்தழும்பேறி னார்" (திருவாச. போற்றி. ககஎ.)

நாத்திகமதம்—சூனியவாதம். (வழக்.)

நாத்திகர்—கடவுளும் புண்ணியமும் பாவ மும் சுவர்க்கநரகமுமில்லையென்போர். (உ-ம்.) "பொன்னுலகம்வெங்நகரம்புண்ணியபாவம் புரி வார்–நின்மலனுமுண்டேன்றுநிச்சயித்தா - ரிந் நிலைமை, யாத்திகரேயார்கண்டாரம்மைப்பல மென்பார்-நாத்திகரென்றேயுளத்துணர்வு"(சை வச. பொது. சசுஅ. உரை.)

நாத்திகன்—சூனியவாதி. (வழக்.)

நாத்திவேடம்—அரோசகம். (உ-ம்.) "விந்து நாசங்காசந்தாகநாத்திவேடம்" (தைல.தைலவ. கசo.)

நாத்தூண்—மைத்துனி, கணவனுடன்பிறந் தவள். (உ-ம்.) "தாரணியையலங்கரிப்பாடலை யவணத்தூண-நாரணிதான்.(சேதுபு.தேவிபுர. நு.) (சிலப்பதி.)

நாதகம் — வேதமோதலின்முடிவில் பிரம ராச்சியபட்டாபிடேகம்போல்வதொன்று; அது: வித்தியாஸ்நாதகம் விரதஸ்நாதகம் வித்தியா விரதஸ்நாதகம் என மூன்றுவகைப்படும். வேதத் தைமாத்திரம்முடிப்பது முதலாவதுவிரதத்தை மாத்திரம் முடிப்பது இரண்டாவது இரண்டி னையுமுடிப்பது மூன்றுவது. (பராச. நுகூ.)

நாதகலாபுவநம்–நாதகலையிற் சிவதத்துவத் திலிருக்கின்ற புவநங்கள்; அவை: இந்திகை,

தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை என ஐந்தாம். (சி-லி: ஞாந. கஉ.)

நாதகீதன்—சிவன். (உ-ம்.)"நாதகீதனென்ஞதன்மூக்கட்பிரான்" (தாயு.பொன்னே. நு0.)

நாதசாரம்—சிவசாரம். (வைத்தியபரிபா.)

நாநத்தியன் — பரிமருத்துவரிருவரிலொருவன். (கூர்மபு. தக்க. வேள்வீய. ஈக. உரை.) பரிமருத்துவர்-அசுவிநிதேவர்.

நாதத்தீரியம்—அட்சராத்மகநாதம், அநக்ஷராத்மகநாதம், நிசசப்தம் என்பன. (வி-ணி. கசுஎ.)

நாததத்துவம்—மாயைக்குமேற்பட்டவோர் தத்துவம். (சி. சி. அ: உநி. மறை.) [சில வாகமங்களிலே நாததத்துவம் லயமென்று கூறப்படும் என்பர்.]

நாதநாமக்கிரியை—ஓரிராகம். (பழக்.)

நாதபநனி—மலம். (வைத்திய. கருப்பொ.)

நாதம்—1. இந்திரியம். (வைத்திய நூல் வழக்கு.) 2. இரசம். 3. மகாரசிங்கி. 4. உமை. (சௌந்த.) அளிவிளைந்தகளிப்பெழுநாதமே. 5. உயிர் முயற்சியாலெழுகின்ற உதானவாயுவாலாவது. (வள். க. உரை. 6. ஒலி. (உண்மைவி. சநி. உரை.) 7. சத்தியிலாயிரத்தொரு கூற்றிலே அநாஹிமலமுத்தன் தோற்றுவித்துத் தாங்கொண்ட அருவத்திருமேனி. (சி. சி. உ: எச. மறை.) 8. சிவன். (சி. சி. உ: எச. சிவாக்.) [மூர்த்தி மூர்த்திமான்களுடைய அபேதோபசாரத்தால் வந்தபெயர்.] 9. சுத்ததத்துவமைந்தனுளொன்றுகிய சிவதத்துவம். (ப. வி.) 10. துவனி; அது: இரண்டு கட்டைவிரல்களாலும் இரண்டுகாதுகளையும் மூடிக்கொண்டாற் கேட்குமோசை. (சி-லி. ஞாந. கஉ. உரை.) 11. நிரோதிகலேக்குமேல் நாதாந்த கலேக்குக்கீழ் மூன்றவ்குலம் வியாபித்துநிற்குங்கலே. (சி-சி. கிரி.கூ. உரை.) 12. பிரணவமாகிய ஐந்தெழுத்துக்களுளொன்று; இது: புருடனே அதிட்டித்து நின்றுசெலுத்தும். (சி-லி. ச: ஈ. மறை.) 13. மாயை. (உ-ம்.) "நாதத்தினுபாதியென்றே" (கைவல்.சாந்தே.கஅ0.) (2, 3-வைத்தியபரிபா.)

நாதயம்—இந்துப்பு. (வைத்தியபரிபா.)

நாதாவி—சரீரக்கொழுப்பு.(வைத்தியபரிபா.)

நாதவடியுப்பு—கறியுப்பு (வைத்தியபரிபா.)

நாதவத்தம்—பெருநெருஞ்சில். (வைத்திய பரிபா.)

நாதவிந்து—1. இருக்குவேத உபநிடதங்களுளொன்று. (கந். நவ. கஎ.) 2. சிவந்தபூமியிலுள்ள சுத்தசலம். (வைத்தியபரிபா.)

நாதன் — 1. அருகன். (சூ. நிக. க: ச.) 2. எப்பொருட்குமிறைவன். (சூ. நிக. உ: கo.) 3. கடவுள், சிவன். (உ-ம்.)"நாதன்றன்னடிமநத்துட்கொண்டு" (பெரியபு. தடுத். ககு.) (பிங்கல. ஈச.)

நாதா—சிவன். (கூர்மபு.திருக்கல்.ஈ.உரை.) [இது ஞாநசத்திமாஞுய் நிற்கும்பொழுது பெறும் பெயர்.]

நாதாக்கள் — சுத்தவான்கள், பெரியோர். (சி. சி. உ: சுஞ. நிரம்ப.)

நாதாங்கி — கதவுநிலேச்சங்கிலி. (உ - ம்.) (திருமந்திரம். ரா. சுப்பிரமணியக்கவிராய ரெழுதிய நூறுபாட்டுக்குரை. நாதாங்கியில்லாமல் என்பதாலறிக.)

நாதாந்தம்—நாதகலேக்குமேல் பிரமரந்திரம் மட்டாகமூன்றங்குலம் வியாபித்துநிற்குங்கலே. வலப்புறத்தில்மாத்திரம் விந்துவையுடைய கலப்பைவடிவுள்ளது. (சி-லி. கிரி. கூ.)

நாதாந்தகன்—சிவன். (வழக்.)

நாதாந்தி — பொன்னிமிளே. (வைத்திய பரிபா.)

நாதி—1. உருத்திரனிடத்தில் விஜயாகமங் கேட்ட ஒருவன். (த. நி. போ. கநுக.) 2. ஞாதி. போலி. (வழக்.)

நாதேயம்—1. இந்துப்பு. (வைத்தியபரிபா.) 2. நீலாஞ்சனம். (உ-ம்.) "தக்கோலநாதேயம்" (தைல. தைலவ. ஈநு.)

நாதேனி—மணத்தக்காளி. (வைத்தியபரிபா)

நாந்தகம் — வாள். (உ-ம்.) "நாந்தகமனேயவுண்கண்" (கந்தபு. வள்ளி. எo.)

நாந்தி—1. ஒருவனேப்புகழ்ந்துபாடியகவி. 2. சந்தோடம். (பி-வி.) 3. நூன்முதலிலே செய்யப்படும் பிரார்த்தனை. 4. பாயிரம். (உ - ம்.) "பாயிரநாந்திபதிகமென்ப" (பி-வி. ஈ. உரை.)

நாந்திகந்தரு — மரமஞ்சள். (வைத்திய பரிபா.)

நாந்தோனி—ஓர்பூடி. (வைத்தியபரிபா.)

நாநம்—1. அறிவு. ஞகரநகரங்கள்போலி. 2. கவரிமா. 3. சுண்ணம். (உ-ம்.) "நலத்தகுநாநின்றிடிக்குநல்லவர்" (சிந்தா. நாமக. சுஞ.) [ஆகுபெயர்.] 4. தாவியெரிக்கும்புழுகு.(உ-ம்.) "நறையும்நாநமுநறும்புகைவிறகின்" (சிந். நாமக. கoஉ.) 5. நீராடல்; அஃது எட்டுவகைப்படும் அவை: மலநாநம், சலநாநம், ஆக்நேயநாநம், தெய்வநாநம், வாயவியநாநம், மந்திரநாநம், மாநதநாநம், திவ்யாநநாநம் என்பன. 6. பூசுவன. 7. நெய். (சிலப். அரும்பத.) 8. மான்மதம், கத்தூரி. (உ-ம்.) "நாகக்குழலியை" (வாண.கள.) 9. முழுகல். (வழக்.) 10. வாசனை. (உ - ம்.) "நாநவார்குழலினூர்" (திருவி ளே. சங்கப். ச.) (1, 2, 6, 9-பிங்கல. ஈஎஉ.)

நாநலம் — நாவாலுளதாகிய நலம்; அது: சொல்வன்மை. (உ-ம்.) "நாநலமென்னுநலனுடைமை" (வள். சசுக.)

நாநா—பலவகை. (உ-ம்.) "மூந்நூன்மன்றன்முத-னுநாவாஞ்சிறுவேள்" (திருவி ளை. மெய்க்கா. கo.)

நாநாத்திநிதாரி—சதருத்திரரிலே குபேரதிசையில் தசருத்திரரிலொருவர். (வி - னி. உஎo.)

நாநாவிதம்—பலவிதம். (உ-ம்.) "நாநாவிதமாய்வழிபாடுசெய்துசெய்வாய்" (பி ர-கா ண். சீமந். சுஉ.)

நாப்பண்—1. தே ர் ந டு. 2. ந டு. (உ-ம்.) "வார்திரையளக்கர்நாப்பண்" (கந்தபு. ஏம. கூ.) 3. யாழினுறப்பு. (1, 3-சூ.நிச.கக.பகரவெ.கூ.)

நாப்புண்—நாவறளை. (வழக்.)

நாபம்—நாபி. பத்நாபன், என்பதிற்காண்க.

நாபி-1. ஒருவிடமூலிகை; அது: வற்சநாபி, பச்சைநாபி, சுக்கு, அந்தணநாபி, பிரமநாபி, சத்திரியநாபி, அரசநாபி, வைசியநாபி, சூத்திரநாபி எனப் பலவகைப்படும். [அந்தணநாபி-வெண்மை; சத்திரியநாபி-சிவப்பு; வைசியநாபி-நீலம்; சூத்திரநாபி-கறுப்பு.] 2. கொ ப் பூ ழ். (சூ. நிக. உ: அகூ.)

நாபிதன் — அந்தணர்மாதையேனும் அரசமாதையேனும் நிடாதன்கூடிப் பெற்றபிள்ளை. (உ-ம்.) "அந்தணர்மாதையேனுமரசர்தம்மாதையேனு-மைந்துநிடாதன்கூடவருசேய்நாபிதனேயாவன்" (சூத. சிவமான். கஉ: உசு.) சவுரகன். சவுடியந்தப்பெண்ணுக்கும் மறையோனுக்குமுதித்தபிள்ளை. (உ-ம்.)"பேரெழிற் றவுடியந்தப்பெண்ணுக்குமறையோனுக்கு - ஈருறவுதித்தபிள்ளைநாபிதனென்னும் பேரான்" (சூத. சிவமான். கஉ: கஉ.)

நாபிரம்—விந்து. (வைத்தியபரிபா.)

நாம்—1. அ ச் ச ம். (உ - ம்.) "நாமநல்லமர் செய்ய" (புறநா. கசு.) உரிச்சொல்லென்பர். (சிலப்பதி.) 2. தன்மையில்வரும் ஓரிருதிணையிருகூற்றுப்பன்மைப்பெயர். (ந ன். உஅஎ.) [சிறுபான்மை "நாமரையாமத்தென்னேவந்து வைகிநயந்ததுவே" என முன் னி லை யி லு ம் வரும்.] (திருக்கோவையார்.)

நாம்பல்—இளைத்தல். (சூ. நிக. க: சுச.)

நாம்பு-1. தெ ரி நி லை வி னை ப் ப கு தி. 2. மெலிவு. நாம்பல் ஈறுவிகாரமாயினது.

நாம்புதல்—நாம்பல், மெலிதல். (வழக்.)

நாமகரணம்—பெயரிடுதல். (உ-ம்.) "அந்நப்பிராசனம்" பார்.

நாமகள்—சரச்சுவதி. (உ-ம்.) "நலமிகுநைமிசந்தாணுநாமகட்பொருவுமாதோ" (மச்சபு. நைமிசா. கடு.)

நாமசங்கீர்த்தை—சிற்பநூன்மூப்பத்திரண்டிலொன்று. (வழக்.)

நாமத்துவாசாவத்தியாசம்—நான் கிருட்டிணன் இராமன், என்றற்றொடக்கத்தனபோல நாமம் வாயிலாகவருமத்தியாசம். (வாசுதே. எஅ.) இப்பியை வெள்ளியென்பது அத்தியாசம்.

நாமதாது — பெயரடியாகப்பிறந்த வினை. (பி-லி. கூடு. உரை.)

நாமதாரணை-நவதாரணையிலொன்று; அது; பூரணமாய்க் கடவுளைத்தியானித்தற்குகற்பித்த நாமதியானத்திலுலச்சடவுளை யெல்லாப் படித்தல்.

நாமதேயம்—பெயர். (வழக்.)

நாமப்பொருத்தம் — பெயர்ப்பொருத்தம். வெண்பாப்பாட்டியலில், குறிலேந்தும் என்னும் வெண்பாவிலதிக.

நாமம்—1. அச்சம். (உ-ம்.) "நாமமார்தரு கீர்த்தி" (சி. சி. பர. உலோகாயதன்மறு. கo. உரை.) 2. இணக்கம் ஐயம் கோபம் நிச்சயம் நிந்தை நினைப்பு மாய்யாலமிவைகளேக்காட்டுஞ் சொல். என்ட் உதாரணமில்லை. 3. கீர்த்தி. (உ-ம்.)"வழுதியர்நாமம்"(வாண.எ.) 4. தும்பை. (வைத்தியபரிபா.) 5. நாரத்தை. 6. நிறைவு. (பரிபாடல்.) 7. பாசி. 8. புகழ். (சிலப்பதி.) 9. பெயர். (உ-ம்.) "புகல்வதெல்லாமவனுமநிமித்தம்" (சிவரக.நந்தி.நமனு. சசு.) 10. வைட்டிணவரிடநாமம். (உ - ம்.) "துதலினுயந்தான்றீட்டுவைட்டிணவர்" (ஏகாதசி. காலநிர். உஉ.) (5, 7-வைத்தியபரிபா.)

நாமமாலை — அகவலடியுங் கலியடியுமவந்து மயங்கிய வஞ்சிப்பாவால் ஆண்மகனேப்புகழ்ந்து பாடுமோர் பிரபந்தம். (உ-ம்.) "மயக்கவடிபெறு வஞ்சிப்பாவால் வியத்தகுதல்லார்விழுச்சீருரைத்தல்-புகழ்ச்சிமாலைபுரிவோர்க்குரைப்பி - னுமமாலையாமெனநவில்வர்" (இலக்கணவி. அசுசு.)

நாமவநீதம்—நெரிஞ்சில். (வைத்தியபரிபா.)

நாமவேதகுண்டம்—நாமவைகுண்டம்.

நாமவைதகுண்டம்—தும்பை. (வைத்தியபரிபா.)

நாய்—1. சுநாகிகருவி. (உ-ம்.) "பளிக்குநாய்சிவப்பத்தொட்டு" (இராமா. மிதிலை. கஎ.) (புறநா.) 2. ஞமலி. (உ-ம்.)"யாவரினுங்கடையனுய-நாயினேனுதலேயும்" (திருவாச.திருச்சத. உசு.) 3. தென்மேற்றிசைப்பாலன்குறி. (சூ. நிக. கஉ: அo.)

நாயீக்கடுது—நாய்வேளை.(வைத்தியபரிபா)
நாயீக்கரந்தை—குன்றி.(வைத்தியபரிபா.)
நாயீக்குட்டிச்சேடி—ஒருசெடி. (வைத்தியபரிபா.)
நாயீக்குருவி—இலக்கள்ளி. (வைத்தியபரிபா.)
நாயீக்கொட்டி-நீரிலுண்டாகுமொருவகைக் கொட்டி. (உ-ம்.) "வாவியுணப்க்கொட்டி" (தைல. தைலவ. கஙடு.)
நாயீகர்—செட்டிகள். (உ-ம்.) "நல்வளை தெரிந்திடுமென்றுநாய்கர்முன்" (திருவிளை. வளைய. உடு.)
நாயீகன்—செட்டி. (உ-ம்.) "கண்டநாய் கனக்கடுங்கொலைக்கிராதனேடு" (சேதுபு. விதூம. கசசு.)
நாயங்கியிலை—கள்ளி. (வைத்தியபரிபா.)
நாயீச்சிமார்—நாய்ச்சியார். (வழக்.)
நாயீச்சியார்—எசமாட்டிகள். (வழக்.)
நாயீச்சீரகம்-ஒருசீரகம். (வைத்தியபரிபா.)
நாயீத்தயிர்வேளை—ஒரு செடி. (வைத்தியபரிபா.)
நாயீத்துளசி—1. ஓர் துளசி. 2. சஞ்சாங்கோரை. (வைத்தியபரிபா.)
நாயீநாக்கி—நாய்நாக்கு. (வைத்தியபரிபா.)
நாயீநாக்கு-இலக்கள்ளி. (வைத்தியபரிபா.)
நாயீப்பயறு—ஒருபூடி.(வைத்தியபரிபா.)
நாயீப்பாகல்—ஒரு பாகல். (வழக்.)
நாயீப்புடுக்கன்—ஒருமரம். (வழக்.)
நாயீப்புடோல்—ஒருகொடி. (வழக்.)
நாயீமுள்ளி—ஒருமுள்ளி.(வைத்தியபரிபா.)
நாயீவிட்டைக்கல்-ஒருவகைச்சுண்ணாம்புக் கல். (வழக்.)
நாயீவேள்வளை—நாய்த்தயிர்வேளை. (வைத்தியபரிபா.)
நாயீவேம்பு-நாய்வேளை.(வைத்தியபரிபா.)
நாயீவேளை—ஒருபூடி. (வைத்தியபரிபா.)
நாயக்கர்—தெலுங்கருளோர்வகையார்க் குரிய பட்டப்பெயர்.) (வழக்.)
நாயகச்சி—நாயகத்தி. (வழக்.)
நாயகத்தி—தலைவி. (வழக்.)
நாயகம்—1. கிரந்திநாயகம். 2. சன்னிநாயகம். 3. சிரேட்டமானது, தலைமை. (உ-ம்.) "மிக்கசுடர்க்கெல்லாம்நாயகமானயதோர்மாலை கல்கிஞள்" (இராமா. மந்தரை. நிஉ.) 4. நாயகமணி. (உ-ம்.) "நாயகத்தைத்தொட்டுநவில்க" (சைவச.பொது.கஙகூ.) (1,2-வைத்தியபரிபா.)
நாயகன்—1. அரசன். (உ-ம்.) "நம்நாயகனுங்களைத்-தேடினனென்றுசெப்பலும்" (அரிச்ச. வேட்டஞ். நி.) 2. எசமான். (உ-ம்.)"நங்கணையகபுகலுதியென்ன" (சிவரக. ஆயுத்தேவ. சு.) 3. எப்பொருட்குமிறைவன். (சிவரகசி. காயத்திரி. சு.) 4. நடத்துவோன், தலைவன். (வழக்.) 5. புருடன், கணவன். (உ-ம்.) "என்னயகன்றன்மணிமார்பு" (அரிச்ச. மயாந. கூ0.)
நாயகி—எசமாட்டி. 2. பெருமையிற்சிறந்தவள். 3. மனைவி. (1, 2, 3-வழக்.)(3-சூ. நிக. உ: எகூ.)
நாயாஞ்சி—நாயுருவி. (வைத்தியபரிபா.)
நாயன்—1. எசமான், ஆண்டான். (பெரியபு. ஏயர்கோன்கலி. கூஅடு.) 2. கடவுள். 3. பெருமையிற்சிறந்தோன்.
நாயன்மார்—1. ஆண்டவர். 2. தலைவர். 3. பெருமையிற்சிறந்தோர். (வழக்.)
நாயனூர்-1. தந்தையர்.(சிந்தா.) 2. நாதனூர்.
நாயில்—ஞாயில், மதிலுறுப்பு. (சிந்தா.)
நாயிலை—இலக்கள்ளி. (வைத்தியபரிபா.)
நாயிறுவணங்கி—கொழிஞ்சி. (வைத்தியபரிபா.)
நாயுருவி—ஒருசெடி; அது: செந்நாயுருவி வெண்ணாயுருவியென இருவகைப்படும்.(உ-ம்.) "திண்ணாயுருவிசீவந்திபரி,புண்ணற்றுஞ்-சிந்தமந்தாரமெட்டும்" (தைல. தைலவ. கoஉ.)
நார்—1. அன்பு. (உ-ம்.) "நாரின்மை" (வள். கூடுஅ.) 2. கயிறு. (உ-ம்.) "நாருளதநுவுளாய் நானுஞ்சீதையும்" (இராமா. நகர்நீங்கு. கடுசு.) 3. கல்நார். (உ-ம்.) "சத்துநாரிவைபுடப்பொடி" (தைல. தைலவ. கஉ.) 4. தும்பு. (உ-ம்.) "தந்தி"பார். 5. பண்ணுடை. (புறநா.) 6. பனை மட்டை முதலியவற்றின் வெளிப்பக்கத்தைப் போர்த்திருக்குங்கடினமான தோல். (உ-ம்.) "இலபழம்பூதேனர்வைரங்கருத்தரும்" (மெய்கண்ட. மாயாவாதி. சங்கற்ப. கஅ.)
நார்ச்சீலை—1. மரவுரியாகிய ஆடை. 2. வலக்கோணி. (உ-ம்.) "கண்ணீருக்கும்புத்தாடைகம்பளநார்ச்சீலைகட்சி" (தைல. தைலவ. கூடு.)
நாரகர்—நரகத்தில் விழுகிறவர்கள். (சிவதரு. கo: கூக.)
நாரகீயர்—சைநசமயத்திற் சொல்லப்படும் நானுபுருஷர் மூவகையரிலொருவகையர்.(தஞ்சி. பேர். கூக.)
நாரங்கம்—1. தேன்மெழுகு. (வைத்தியபரிபா.) 2. நாரத்தை. (சூ. நிக. சு: ச.)
நாரசிங்கம்—1. அட்டாதச புபுராணத்தொன்று. 2. உபநிடதமுப்பத்திரண்டிலொன்று. 3. நரசிங்கம். (வழக்.)
நாரசிங்கன்—விட்டுணு. (சூ. நிக. க: கூக.)

நாரசிம்மம்—1. காமிகத்தின் மூவகைப்பே தங்களிலொன்று. (த. நி. போ. கருக.) 2. சர் வோத்தமென்னு மாகமம். (சி-லி. சரி. உ.) [சோமதேவரிடத்தில் நாரசிம்மன் உபதேசம் பெற்றதால்வந்தபெயர்.] 3. நரசிங்கம். (சி. சி. உ: சசா. சிவாக்.)

நாரணன் — விட்டுணு. (உ-ம்.) "கள்ளகந் தளித்தமலர்த்தலைச்சேக்குங்கடவு ளுரணன் முதலானோர்" (தனிகை. நந்தி. கூ.)

நாரணி—துர்க்கை. (உ-ம்.) "நாத்தூண்"பார்.

நாரணியவன்—சிவன் (உ-ம்.)"அக்திவண ணங் கொண்டமேனியனுநந்தனு-ரணியவன்"(ம-தி. சக.) [உமாதேவியையுடையவனென்றபடி.]

நாரத்தகசீசல் — போசனகத்தூரி. (வைத் தியபரிபா.)

நாரத்தம்—1. சடாமாஞ்சி. 2. வசம்பு. (1, 2. வைத்தியபரிபா.)

நாரத்தம்புல்—ஒரு புல். (வழக்.)

நாரத்தை—நரந்தம். (சூ. நிக. சு: சு.)

நாரதப்பிரியம்—தணிகை. (உ-ம்.) "மகதி யாழ்முனிக்குறபிரியம்-விரவியசிறப்பாரதப் பிரியம்" (தணிகை. புராணவா. கo.)

நாரதபரிவிராசகம்—அதர்வவேத உபநிடத முப்பத்தொன்றனுளொன்று. (கந். நவ. கஅ.)

நாரதம்—விட்டுணுபுராணம் நான்கனுளொ ன்று. (உ-ம்.) "காருடம்"பார்.

நாரதன்—ஒரு தேவரிருடி; இவர்: பஞ்ச பாரதீயம் என்னுமிசைத்தமிழ் நூலாசிரியர். (உ - ம்.) "வாரியும்வடித்துந்தியும்வரிசையாலு ழந்துஞ்-சீரியாழ்வல்லாரதன்புவிதனிற்சேர் ந்தான்" (கந்தபு. வள்ளி. நாகு.) இவர் சரிதம், அபிதானகோசத்திற்காண்க.

நாரதீயம்—1. அட்டாதச வுபபுராணத் தொன்று 2. பதினெண்புராணத்தொன்று. (1, 2-அபிதானகோ.)

நாரம்—1. அன்பு. அம்சாரியையென்க. 2. நாரத்தை. (உ-ம்.) "சாலவிருட்சோதகமூலந் தந்தசடநாரம்" (தைல. தைலவ. அடு.) 3. நீர். (உ-ம்.) "கண்கணாரம்பாய" (சிவரக. சணபதி வந்தனை. கக.) 4. பாசி. (மலையக.)

நாராங்கி—நாதாங்கி. (வழக்.)

நாராசம் — 1. இருப்புச்சலாகை. (உ-ம்.) "உள்ளதெறியென்பதுநாராசத்திரிவிற்-கொள் ளத்தகுவது" (மணிமே. உள: நாடு.) 2. எழுத் தாணி. (வழக்.) 3. ஓரம்பு. 4. சலாகை. (சூ. நிக. கக. லகரவெ. கச.)

நாராசமுத்திரை — பூசாமுத்திரை வகையி லொன்று. சைவவிளக்கம்பார்.

நாராயணகவுளம்—ஒரு பண். (வழக்.)

நாராயணப்பிரியன்—சிவன்.

நாராயணன்பூண்டு—சவரிக்கொத்து. (வைத்தியபரிபா.)

நாராயணம் — 1. அரசமரம். (மலையக.) 2. யசுர்வேதஉபநிடதமைம்பத்தொன்றனுளொ ன்று. (கந். நவ. கஅ.) 3. மீன்முதலிய செல சரங்கள்.

நாராயணன்—1. வருணன். 2. விட்டுணு. [நீரையிடமாகவுடையவனென்றபடி, நார ராயண: நாரம் நீர். அயந-இடம். இனிச்சிவபிரா னுக்குப்பெயரென்றும், அதற்கு நரர்தொகுதி யை யொத்து நடப்பவன் என்பது பொருளெ ன்றும் சிவஞானபோதப்பாஷ்யத்திற் கூறுவர்.

நாராயணத்தீரம்—ஒரு பாணம். (வழக்.)

நாராயணி—1. ஓரிராகம். 2. கங்காதேவி. நீரையிடமாகவுடையவளென்க. 3. சத்தமாதர் களிலொருத்தி, நாராயணனையுடையவள். 4. தண்ணீர்விட்டான்கிழங்கு. (உ-ம்.) "அதிபலை கோரைநாராயணி" (தைல. தைலவ. கூஅ.) 5. துர்க்கை, உமாதேவி. நாராயணன் என்பது சிவபிரான்திருநாமங்களுளொன்றுதலால் அவ னையுடையவளுக் நாராயணியென்று பெய ருண்டு.(சிவஞானபோதப்பாஷ்யத்திற்காண்க.)

நாராயணீதம்—கௌரிபாஷாணம். (வைத் தியபரிபா.)

நாராயணோபநிடத்து— ஒரு நூல். (த. நி. போ. (வைத்தியபரிபா.)

நாராயம்—நாராசமென்னுமத்திரம்.(உ-ம்.) "தறுகரிக்குகல்லநாராய்ங்கொளல்"(பழமொழி. அo.)

நாரி—1. கள். (பிங்கல. கூஎஉ.) 2. தேன். 3. நன்ஞரி. (உ-ம்.) "இரேணுகை"பார். 4. நாணி. (உ-ம்.) "மெய்த்துக்கண்விசித்தநாரி யோ" (சேதுபு.இராமதீர்.நூo.) 5. பண்ணுடை. (பிங்கல.உஎடுக.) 6. பார்வதி. (சூ.நிக.க:கூஉ.) 7. பெண். (உ-ம்.) "நாரியர்தஞ்சுகத்தினையுஞ் சுடச்சொல்வாரே" (சிவரக.ஞானவால.கலி. கூ.) (2-வைத்தியபரிபா.)

நாரிகேளம்—தென்னை. (மலையக.)

நாரிகை—பெண். (பரிபாடல்.)

நாரிதூடணம் — பதிவிரதாவிரதத்திற்குத் தப்பானது; அஃது: அந்நியக்கிருகசயனம், அந் நியக்கிருகப் பிரவேசம், அந்நியக்கிருகாசனம், கணவனைப்பிரிந்திருத்தல், தூர்க்கூட்டம், மது பானம் என்பன.

நாரியங்கம்—தேன்மெழுகு. (மலையக.)

நாரின்மை—முறிந்த சொற்செயலுடைமை. (உ-ம்)"காணுமைநாடாமைகாரின்மையாதொன் றும்-பேணுமைபேதைதொழில்" (வள். அகூக.)

நாரை—1. ஒரு புள்; அது: கருநாரை செங்காஞ்சிரை நத்தைகுத்திநாரை வெண்ணாரை பெருநாரை சாம்பனாரை கெய்யடிநாரை யெனப் பலவகைப்படும். (உ-ம்.) "தூவியன்னமுந் தன்னியநாரையும்" (அரிச்ச. நாட்டு. உஉ.) 2. நீராரை. (உ-ம்.) "நாரைசிறுசின்னிபற்படாம் வெள்ளறுகுவல்லாரை" (தைல.தைலவ.கஙரு.)

நால்—தொரிநிலவினைப்பகுதி.

நால்த்து—நான்கு. (உ-ம்.) "பால்புரைபுரவி நால்குடன்பூட்டி" (பொருந. கசுரு.) (சிந்தா.) [பெயர்த்திரிசொல்.]

நால்வகைக்கேள்வி — அறமுதலியநான்குங்கேட்டல். (சூ. நிக. கஉ: கசு.) பிங்கலத்தில் வேறுகூறுவர்; அது: பொருந்தாமைகாண்க.

நால்வகைச்சத்தி—பார்ப்பதி, துர்க்கை, காடுகிழாள், விட்ணு என்பவர். இது, "நால்வகைப்படநண்ணியசத்தியுண் – மாலுமாதலின்" என்னும். (கந்தபு. மகாசாத்தா. உஅ-ம் செய்யுளாற் பெறப்படும்.)

நால்வகைச்சமயமும்-புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்பன. (உ-ம்.) "சித்தியார், அறுவகைச்சமையத்தோர்" என்னுஞ் செய்யுளுரையிற் காண்க.

நால்வகைச்சரணம்—அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணமென்பன. (சிந். பதிக. க. உரை.) (சைநர் வழக்கு.)

நால்வகைச்சாந்து—கலவை, பீதம், புலி, வட்டிகையென்பன. (சூ. நிக. சு: கரு.)

நால்வகைச்சொல்—பெயர் வினை இடை உரியென்பன. (உ-ம்.) "பழுதகன்றநால்வகைச் சொன்மலரெடுத்து" (திருவிளை. பாயிர. கசு.)

நால்வகைச்சேனை — யானை, தேர், பரி, காலாள். (பிங்கல. கூளரு.)

நால்வகைத்தேவர்-(அருக) பவண, வியந்தர, சோதிட, கற்பவாசியர். (உ-ம்.) "மூவுலகத்துள்ளநால்வகைத்தேவருமன்னுவரே" (திருநூற். கக. சைநர் வழக்கு.)

நால்வகைத்தோற்றம்- நான்குவகைப் பிறப்பு; அவை: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம்என்பன. (உ-ம்.) "சிவஞானசி, அண்டசஞ் சுவேதசங்கள் என்னு முதற்குறிப் புள்ள செய்யுளிற்காண்க.

நால்வகைநடம்—தாண்டம், இலாச்சியம், அகம், புறவரியென்பன. (சிவதரு.)

நால்வகைநிலை — சரம்விடுநிலை நான்கு. (பிங்கல. கூளக.)

நால்வகைப்பக்கப்போலி — துணியும் பொருட்கிடனுகாததூஉம், துணியும் பொருட்கொருமருங்கிடனுவதூஉம், துணிந்த பொருட்கொருமருங்கிடனுகாததூஉம், துணிந்தபொருட்கொருமருங்கிடனுவதூஉம், துணிந்தபொருட்கொருமருங்கிடனுகாததூஉம் என்பன.(சி. சி. அள. கங. சிவஞா.)

நால்வகைப்புலமையர்—கவி, கமகன், வாதி, வர்க்கி. (பிங்கல. கூசுக.)

நால்வகைப்பொருள் — அறம், பொருள், இன்பம், வீடு என்பன. (சூ. நிக. கஉ. கசு.)

நால்வகைப்பொன்-நான்குவகைப்பொன். (பிங்கல. கூளச.)

நால்வகைமருந்து—சல்லியகரணி,சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி. (பிங்கல. உளஅஉ.)

நால்வகைமலர்—கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்னும் நால்வகைப்பூக்கள். (திருவிளை. பாயிர. கசு. குறிப்பு.)

நால்வகைமாயை — தநுகரணபுவநபோகமென்னும் நால்வகை மாயாகாரியங்கள்.(உ-ம்.) "நால்வகைமாயையுநடத்தி" (கோயிற்பு. இரணிய. க.)

நால்வகையரண்—மலை, காடு, மதில், நீர். (பிங்கல. எஉஉ.)

நால்வகையாழ் — பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன. (உ-ம்.)"குன்றுதநால்வகையாழுக்குநன்னரம்பு' (சிந். காந்தரு. ககசு. உரை.)

நால்வகையிழிச்சொல்—நான்குவகையிழிச்சொல். (பிங்கல. கூருசு.)

நால்வகையுணவு—உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன. (பிங்கல. கூளசு.)

நால்வகையுபாயம் — சாமம், பேதம், தானம், தண்டம். (பிங்கல. கூளஅ.)

நால்வகையூறுபாடு — குத்தல், வெட்டல், எய்தல், எறிதல். (பிங்கல. கூளஎ.)

நால்வகையெழுத்து-வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மையெழுத்து, முடிவெழுத்து. (பிங்கல. உ0அஎ.)

நால்வகையொடுக்கம்- நித்தியப்பிரளயம், நைமித்திகப்பிரளயம், பிராகிருதப் பிரளயம், ஆத்தியந்தப்பிரளயம் என்பன. (உ-ம்.) "நால்வகையொடுக்கத்துள்ளபருதிகணவின்றவாறும்" (கூர்மபு. பதிக. கூகூ.)

நால்வர்—1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்பவர். (உ-ம்.) "நாவலர்இயேசுமததாரதம்மியம்" 2. நான்குபேர்.

நால்வாய்—யானை. (உ-ம்.) "முழவதிர்சும்மையுநால்வாய்-வரம்பிலோதையும்"(திருவிளை. திருக்கைலா. கூ.)

நால்விதப்பண்—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. (பிங்கல. கருஎசு.)

நால்விதப்புண்ணியம்—தானம், கல்வி, தவம், ஒழுக்கம். (பிங்கல. கருகூ.)

நால்வேதம்—தைத்திரீயம், பௌடியம், தலவகாரம், சாமவேதம். (கலி. க.) இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பனவுமாம். (உ-ம்.) "நால்வேதமாறங்கமாஞ்சீபோற்றி" (தேவார. திருநாவு.)

நாலடி—காலடியார். (வழக்.)

நாலடியார்—ஒரு நூல்; இது: பதினெண் கீழ்க்கணக்கினுள்முதலாவது சைநமுனிவர்களாலியற்றப்பட்டது, கடவுள்வாழ்த்துள்பட நானூற்றொருசெண்பாக்களையுடையது பதுமனரென்பவர் திருக்குறளிற்போல இதன் பொருளை அறம் பொருள் இன்பம் என்னும் மூப்பாற்பகுத்தி ஒவ்வொருபொருளை வற்புறுத்துவனவாகிய பப்பத்துப்பாடல்களைத்தனித்தனியே தொகுத்து நாற்பது அதிகாரமாகப் பகுத்தனர் இதற்கு ஆப் பதுமனரும் வேறுசிலரும் உரைசெய்திருக்கின்றனர்.

நாலல்—தொங்குதல். நாலுதல்பார்.

நாலாம்பாதகன்—கொலைபாதகன். (உ-ம்.) "நன்றெனவுவந்து-நாலாம்பாதகனதற்குநேர்ந்தான்" (திருவிளை. அங்க. கஉ.)

நாலாம்பொய்யுகம்—கலியுகம். (உ-ம்.) "செம்பொன்மேனிவேழுகிநாலாம்-பொய்யுகத்தவர்க்குத்தக்கபொருந்துருவாகிமன்னும்" (திருவிளை. இரச. கo.)

நாலாம்வருணம்— } சதுர்த்தசாதி, சதுர்த்
நாலாம்வருணர்— } தவருணம். (வழக்.)

நாலாயிரப்பிரபந்தம்—ஆழ்வார்கள் பாடிய வைணவப்பிரபந்தம்.

நாலி—கார்த்திகைப்பூ. (வைத்தியபரிபா.)

நாலிகம்—1. எருமை. 2. காகம். 3. தாமரை. (1, 2, 3-வைத்தியபரிபா.)

நாலிகை—மூங்கில். (வைத்தியபரிபா.)

நாலு—நான்கு. (உ-ம்.) "நாலுமறைகளுமறியா" (சிவரக. கணப. குமர. டு.)

நாலுதல்—தொங்குதல். (உ-ம்.) "இளமேதிகளின்கடைவாயெலாம்மூத்துமாலைகணலுமே" (அரிச்ச. நாட்டு. சக.)

நாலேங்கள்ளி—இலைக்கள்ளி. (வைத்தியபரிபா.)

நாவசர்—1. சிவதொண்டர் அறுபத்துமூவரிலொருவரான திருநாவுக்கரசு நாயனர். 2. புலவர்.

நாவசனை—நாப்புற்றுகிய ஒரு வியாதி. (வழக்.)

நாவரணை—நாவரணை. (வழக்.)

நாவரையர்—திருநாவுக்கரசுநாயனர். (உ-ம்.) "தமிழின்செய்யுள்பாடி-நாவரையர்புகழ் மொழிகள்" (சேதுபு. கடவுள்வா. கூ.)

நாவலம்—1. இரக்கக்குறிப்பு. (உ-ம்.) "மாவலிக்குமடங்கலொப்பான்றனிக்-காவலிக்குத்தியர்வந்தகன்னிமீர்-நாவலிக்கணநண்ணுதிரென்றுகூய்" (கந்தபு. பாநுகோப. வதை. ககஉ.) 2. ஒருமரம்; அது: குழிநாவல் சிறுநாவல் சம்புநாவல் நிழஞ்வல் பெருநாவல் எனப் பலவகைப்படும். (உ-ம்.) "கருங்கனிநாவலிருந்துகொய்திண்ணும்" (புறநா. கஎஎ.) 3. சத்ததீவிலொன்று. (உ-ம்.) "நாவலம்பூதலத்தரசர்" (பாரத. கிருட்டி. உஎ.)

நாவலந்தீவு—சத்ததீவிலொன்று. (வழக்.)

நாவலர்—கற்றவர், புலவர். (உ-ம்.) "நல்லிய நூறெரிநாவலர்பாட". (அரிச்ச.விவாக. உசரு.)

நாவலோ—நெற்போர்தெழிக்கும் பகட்டினங்களைத்துரப்பதோர்சொல்" (நன். கoக. உரை.)

நாவழி—நாக்குவழிக்குங்கருவி. (சிந். காந்தரு. ககo. உரை.)

நாவாய்—1. இரேபதிநாள். (உ-ம்.) "இருவகைப்பூசமூன்றுத்திரநாவாய்" (விதாந. குணகுண. கo.) 2. மரக்கலம். (உ-ம்.) "இருதுறைநெறியில்வருநரைநாவாயேற்றுவலெந்தையேவலின்" (பரத. குருகுல. கூஉ.) தோணிமுதலாயுள்ள சலசரங்களென்பர். (சிலப்பதி.) ஓடம் என்பர். (புறப்-வெ.)

நாவாள்—சரச்சுவதி. (உ-ம்.) "நாவாளுடனீயெனநான்முகனே-மாவாளுடனீயெனமாதவனே" (சேதுபு. சிவதீர். சசு.)

நாவி—1. ஊமத்தை. (வைத்தியபரிபா.) 2. ஒரு மருந்து. 3. ஒருவகைமரக்கலம். (உ-ம்.) "வங்கநாவியினதன்வடக்கிழிந்தி" (மணிமே. உசு: அந்.) 4. கத்தூரி. (உ-ம்.) "சிறியதேக்குயர்நாவியிந்தைநதிலவணம்" (தைல.தைலவ. எச.) 5. கத்தூரிமிருகம். (வைத்தியபரிபா.)

நாவிகன்—கப்பற்காரன். (வழக்.)

நாவித்தண்டை—1. எருமுட்டை. (வைத்தியபரிபா.) 2. பீநாறி. (மலையக.)

நாவிதச்சி—அம்பட்டத்தி. (வழக்.)

நாவிதர்—அம்பட்டர். (சூ. நிக. கஉ: கருச.)

நாவிதன்—1. கார்த்திகைநாள். 2. நாய்கர் மகளிர்பார்ப்பாரைக் கரவிற்கூடிப் பெற்றபிள்ளை. (உ-ம்.) "எயுமம்மாதர்பார்ப்பாற்கியைதருகரவினீன்ற – சேய்பெயர்கும்பகாரன்சேருநாவிதனென்பேரும்" (சூத. சிவமான். கஉ: கo.) 3. பூரநாள். (1, 3-சூ. நிக. கo: வகரவெ. கஉ.)

நாவிநெய்—மயிர்ச்சாந்து. (வழக்.)
நாவிப்பிள்ளை—ஒரு மிருகம். (வழக்.)
நாவியம்—கார்த்திகைப்பூ.(வைத்தியபரிபா.)
நாவினுக்கரையன் — நாவரசர். (உ - ம்.) "சரணம்"பார்.
நாவு—நா. உகரச்சாரியை.
நாவுதல்—நேம்புதல். (வழக்.)
நாவுரி — நாழியும் உரியும். (நன். களவ. உரை.) [நாடுரியெண்பது இக்காலத்து நாவுரியென மரீஇயிற்று.]
நாவுழலை—விடாய். (வழக்.)
நாவூறு—நாவேறு. (வழக்.)
நாவேறு—நாத்தோடம்.
நாழி—1. அம்பறாத்தூணி. (பரிபாடல்.) 2. உட்டுளைப்பொருள். (சூ. நிக. அ: சு.) 3. ஒரு படி. (உ-ம்.) "உண்பதுநாழியுடுப்பதுநான்கு முழம்" (நல்வழி.) 4. ஒருமுகத்தளவுகருவி. (உ - ம்.) "தோற்றஞ்சான்ஞாயிறுநாழியாவைகலுங்-கூற்றமளந்துநுங்காஞண்ணும்" (காலடி. செல்வநிலை.எ.) 5.நாழிகை.(சிந்தா.) 6.நாணுழி. 7. பூரட்டாதிநாள். (சூ. நிக. கக. ழகரவெ. உ.)
நாழிகை–1. நாடா. (உ-ம்.) "நெய்கைநுண்ணூனுழிகையினிரம்பாநின்றுசுழல்வாரே" (சிந்தா.முத்தி. கஎஉ.) 2. விளாடியறுபதுகொண்ட காலம். (உ-ம்.) "எண்ணிறைமீனநோக்கிநாழிகையெண்ணி" (திருவிளை. மெய்க்கா. உ0.)
நாழிகைக்கணக்கர் — 1. கடிகையார். (சிலப். அரும்பத.) 2. நாழிகைவட்டிலிடுவோர். (சிலப். அரும்பத.)
நாழிகைப்பறை — நாழிகையறியவடிக்கும் ஒருவகைத்தோற்கருவி.சிலப்.அரங்.உஎ.உரை)
நாழிகைவட்டில் – நாழிகையறிவிக்கும் வட்டில். (சிலப். அரும்பத.)
நாழிகைவேண்பா — அரசர்க்கு நாழிகை தோறுஞ்சொல்லும்வெண்பா. அக்காலவழக்குப் போலும்.
நாள்—1. ஓரிரவும் பகலுங்கொண்டதினம். (உ-ம்.) "ஒருநாளுணவை"(நல்வழி.) 2. காலம். (உ-ம்.) "நாழி"பார். 3. காலை, விடியற்காலம். (உ-ம்.) "நாண்மோர்மாறும்" பெரும்பா. ககo.)
நானகம்— இலாமிச்சு. (வைத்தியபரிபா.)
நாளம்–1. உட்டுளை. (உ-ம்.) "கழுநீர்நாளத்தாளிஞலொருத்தியுண்டாள்" (இராமா. உண்டாட்.கக.) 2. பூந்தண்டு. 3. பொன்னரிதாரம். (2, 3-வைத்தியபரிபா.)
நாளாம்—இலாமிச்சை. (வைத்தியபரிபா.)
நாளவை— நாளோலக்கம். (உ-ம்.) "செம்மனாளவையண்ணுந்துபுகுதல்" (பு ற நா. டுஉ.)
ஓலக்கம்-சபை.

நாளாயிநீதோர்—வைத்தியர். (உ-ம்.) "நாளாய்ந்தோர்-தீரனிவனென்பார்சிலரிந் நூலப் பழீச்சுத்-தேரனிவனென்பார்சிரித்து" (தைல. கடவுள்வாழ்த். சு.)
நாளி—கள். (வைத்தியபரிபா.)
நாளிகம் — 1. தாமரை. 2. வள்ளிக்கிழங்கு. 3. வள்ளிக்கொடி. (1, 2, 3-வைத்தியபரிபா.)
நாளிகேரபாகம்–செய்யுட்பாகம் நான்கனு ளொன்று. (கம்பரந். கூகூ. உரை.)
நாளிகேரம்—தென்னை. (சூ. நிக. ச: கஉ.)
நாளிநுக்கை–நாளோலக்கவிருக்கை. (உ-ம்.) "பெருநாளிருக்கைவிழுமியோர்குழீஇ" (மதுரைக்காஞ்சி. டுஉடு.)
நாளினி—புளிமா. (வைத்தியபரிபா.)
நாளும்—எப்பொழுதும். (இராமா.அயோத்தியா. மந்தாரை. சூழ்ச்சிப். கச.)
நாளை—மற்றைநாள். (உ-ம்.) "நாளைநாளையென்பீராயின்" (கபிலரகவல்.)
நாளைக்கு–இன்றைக்கு அடுத்தநாள். (உ-ம்.) "இருமடங்கு"பார்.
நாளைநின்று — நாளைவிட்டு மற்றைநாள். (வழக்.)
நாளோலக்கம்—காலை ஓலக்கவிருப்பு. (பதிற்று.)
நாளோலை-- சாதகம். 2. முகூர்த்தவோலை. (உ-ம்.) "குறித்தநாளோலைவிட்டார்" (பெரிய பு. தடுத்தாட். கூ.)
நாற்கட்வுளர் — மநுக்கள் பதினல்வருள் எழாவது வைவைச்சுதமநுவின் ஆட்சியாகிய இக்காலத்து ஆதித்தியர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என நான்கு வகுப்பினராயிருப் பவர்; இவர்: முறையே பன்னிருகோடியர் பதினொருகோடியர் எண்கோடியர் இருகோடியர் என முப்பத்துமுக்கோடி தேவராவர் இவ்வாறும் மற்ற மநுவந்தரங்களிலேயும் பற்பல நாம வகுப்பினராயும் பற்பல தொகையினராயும் வகுத்து எண்ணப்படுவார்கள். (திரு-கு.)
நாற்கணம்–உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என்பன. (நன். கருகூ. உரை.)
நாற்கதி—தேவர், நரகர், மனிதர், விலங்கு என்பன. (சூ. நிக. கஉ: கச.)
நாற்கவி—நாலுவிதக்கவி; அவை: ஆசு, சித்திரம், மதுரம், வித்தாரம் என்பன. (சூ. நிக. கஉ: உக.)
நாற்கவிராசநம்பி — புளியங்குடியில் நாற்கவிகளோயும் பாடவல்லராகிய அகப்பொருளிலக்கணம்பாடிய ஒரு சமணப்புலவர். (உ-ம்.) "புவிராசர்போற்றும்புலவர்களுளிற் - றவிராச

கற்றித்தமிழ்நாற் - கவிராச, நம்பியகப்பொருள் விளக்கவுரைநாட்டமுக்கட-டும்பிமுகன்மூனே" (அகப்பொ-பா-காப்பு.)

நாற்காலி — 1. ஒருவகையாசனம். 2. நாற் கான்மிருகம். (வழக்.)

நாற்குணங்கன் — சீவகாருண்ணியம், ஈசுர பத்தி பாசவைராக்கியம் பிரமஞானம் என்னுங் குணங்கள். (உபதேசக்கட்டளை. சா0.)

நாற்குணம்—ஆடூஉக்குணம்நான்கு; அவை: அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறைவு என்பன. (சூ. நிக. கஉ: கசு.) மகடூஉக்குணம் நான்கு; அவை: நாணம், மடம், அச்சம், பயிர்புஎன்பன. (சூ.நிக.கஉ: கசு. சஎ.)பயிர்ப்பு-பயிலாதபொருட் கண்ணருவருப்பு)

நாற்கோணம்—நாலுமூலை. (வழக்.)

நாற்சந்தி—நாற்றெருக்கூடுமிடம். (உ-ம்.) "ஆவணம்"பார்.

நாற்பது—1. ஒரு பிரபந்தம்; அது: காலமு மிடமும் பொருளுமாகியவிவற்றளொன்றனை. நாற்பதுவெண்பாவாற்கூறுவது. (உ-ம்.) "நாற் பது" (இலக்கணவி. அடுக.) 2. நான்குபத்து. (நன்னூ. நான்கன்மெய்யே.) என்னுஞ்சூத்திர வுரையிற்பார்.

நாற்பான்—நாற்பது. (உ-ம்.) "நானூற்பது" பார்.

நாற்பொருள் — அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் பொருள்கள். (உ-ம்.) "நாற் பொருட்பயத்தோடெழுமதந்தழுவி" (நன். சு.)

நாற்பொன்—ஆடகம் கிலிச்சிறை சாதரூபம் சாம்பூநதமென்னு நால்வகைப்பொன். (சூ.நிக. கஉ: கஅ.)

நாற்றம்—1. கந்தகம். (உ-ம்.) "வேந்தனேடு நாற்றங்காதம்"(வைரா. கூசு.) 2. கள். (பிங்கல. ககசசு.) 3. தோன்றுதல். 4. புழுகுமுதலியன. (உ-ம்.)"ஓரூஉச்,கொடியியனல்லார்குரனுற்றத் தூற்ற-மூடியுதிர்பூந்தாது" (கலி. அஅ.) [ஆகு பெயர்.] 5. மணத்தல். 6. வசம்பு. (வைத்திய பரிபா.) 7. வாசனை (உ-ம்.) "நாற்றநாட்டத் தறுகாற்பறவை" (புறநா. எ0.) (3, 5-சூ. நிக. கக: நகரவெ. கசு.)

நாற்றி—1. நான்மடங்காக்கி. (உ-ம்.) "எட் டானேநாற்றியிரட்டியவிவைமற்றெறி திலரப் பெரும்புனற்கங்கை" (தணிகை. புராணவரலா. சஅ.) 2. நான்மடங்கு. (உ-ம்.) "நாற்புடைய் நாற்றியே" (சிந்தா. காந்தரு. எடு.)

நாற்றிசை—நான்கு திக்குகள்; அவை: கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்பன. (உ-ம்.) "மௌவல்-வெதிக்கொடியுநாற்றிசை யுந்தாய்ப்படர. (காஞ்சிப். நாட்டுப். கசை.)

நாற்றிய—கவித்த. (பரிபாடல்.)

நாற்று—மூலை பயிர். (வழக்.)

நாற்றுதல்—தூக்குதல். (உ-ம்.)"மலையருவி வீழ்வதுபோனற்றுவீரால்" (சிவரக. சிவமுனி. கஉ.)

நாறஞ்-சடைச்சிச்செடி. (வைத்தியபரிபா.)

நாறல்-1. நாறுதல். (உ-ம்.) "நாற்றப்பாழ்த் துணி" (அரிச்ச. சூழ்வினை. கக.)

நாறி-1. கற்சுழை. 2. நன்னரி. 3. மோந்து. (சிந்தா.) (1, 2-வைத்தியபரிபா.)

நாறிய—பரந்த. (பரிபாடல்.)

நாறு—1. நாற்று. (உ-ம்.) "நறவுபாய்ந்திட நாறுவளர்ந்தவே"(அரிச்ச.நாட்டு.கக.)(சிந்தா.) 2. தெரிநிலவினைப்பகுதி.

நாறுகட்டி-பெருங்காயம்.(வைத்தியபரிபா.)

நாறுகரநீதை-சிவகரத்தையென்பர்.(உ-ம்.) "நாறுகரந்தையணிகருவைக்காபாலி" (திருக் கருவைவெண்பாவந்தாதியிற் காண்க.)

நாறுதல்—1. தோற்றுதல். (உ-ம்.) "நாறும் வடக்கயிறுவெண்ணரம்பாவென்பு" (தாயு.சச்சி தாநந்த. உ.) 2. மணத்தல். 3. மூளைத்தல். (உ-ம்.) "கல்வித்துநாருமையின்ஞ" (இன்ஞ. உஎ.) (2, 3-சூ. நிக. கக: நகரவெ. எ.)

நாறுபு—நாறி. (பரிபாடல்.)

நாறுமதம்—புழுகு. (சிந்தா.)

நான்—இருதிணையிருகூற்றுத் தன்மையொ ருமையில்வரும் ஒருபெயர். (உ-ம்.)"நானுரென் னுள்ளமார்" (திருவாசகம். கோத்தும்பி. உ.)

நான்காம்வேதம்—அதர்வம். (சூ. நிக. கo. உசு.)

நான்கு—நாலு. (உ-ம்.) "நான்குதோ-ளுந்தி யினுலகளித்தாற்கென்றுன்னுவாள்" (இராமா. சூர்ப்பணகை. கஉ.)

நான்குவகைப்பெண்கள்—பத்மினி,சித்தினி, சங்கினி, அத்திநியென்னும் நால்வகைப் பெண் கள். (உ-ம்) "காமநூல்சாற்றுநான்குவகை நலார்" (திருவிளை. காட். உசு.)

நான்மணிமாலை — வெண்பாவுங் கலித்து றையும் விருத்தமும் அகவலுமாக அந்தாதித் தொடையாலாற்பது பாடப்படும் ஓர் பிரபந்தம். (உ-ம்.) "வெண்பாக்கலித்துறைவிருத்தமகவல்-பின்பேசுமந்தாதியினாற்பதுபெறி- னான்மணி மாலையாகுமனநவில்வர்" (இலக்கணவி. அஉக.)

நான்மருப்பியானையூர்தி—இந்திரன். (சூ. நிக. க: ககக.)

நான்மாடக்கூடல்—மதுரை. (உ-ம்.) "வன் றிறல்வருணன்விட்டவாரியைவிலக்கவீசன்-மின்றிழ்சடையினின்றுநீங்கியமேகநான்குங்-குன்றுபோனிவந்துநான்குகூடமாக்கூடலாலே

யன்றுநான்மாடக்கூடலானதான் மதுரைமூதூர்" (திருவிளை. நான்மாட. உசு. [நச்சினார்க்கினியார் நான்மாடக்கூடலென்பதற்கு நான்குமாடங்கூடலின் நான்மாடக்கூடலாயிற்றென்றும்; அவை: திருவாலவாய், திருநள்ளாறு, திருமூடங்கை, திருநடுவூர் என்றும், அல்லது கந்திகரியமால் காளி ஆலவாய் என்றுங் கூறுவர். கலி. கஉ.]

நான்முகப்புல்—ஒருபுல். (வைத்தியபரிபா.)

நான்முகன்—1. அருகன். (நன்னூல். எழுத்தியல். க.) 2. பிரமன். (உ-ம்.)"அரிநான்முகன் வணங்கு" (அரிச்ச. பாயிர. கூ.)

நான்முகன்றேவி — 1. சரசுபதி. 2 மிநோசிலை. (1, 2-வைத்தியபரிபா.)

நானம்—1. அறிவு. 2. நெய். (சிலப்.) 3. புழுகு. 4. பூசுவன. 5. முழுகுதல். 6. வாசனை. (1, 3-சிந்தா.) (4, 5, 6-பிங்கல. கஎஉ.)

நானமாலி—கெவுரி. (வைத்தியபரிபா.)

நானுங்கள்ளி—இலைக்கள்ளி. (மலையக)

நானிலம் — 1. நால்வகைநிலம்; அவை: குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென்பன. இப் பகுப்புப்பற்றிப் பூமிக்கு நானிலமெனப் பெயர்கூறுவர். (சூ. நிக. கஉ: கச.)

நி.

நி—இன்மை, உறுதி, எதிர்மறை, ஐயம், சமீபம், நிச்சயம், நிலை, பேறு, பூரணம், மிகுதி என்னுமிவைகளைக்காட்டுமோ ருபசர்க்கம். (உ-ம்.) "நிமலன்-இன்மைகுறித்துவந்தது; ஏனைய வந்துழிக்காண்க.

நிக்கந்தன்—அருகன். (உ-ம்.) "நிக்கந்தன் கோட்டம்நிலாக்கோட்டம்புக்கெங்கும்" (சிலப். கனத்தி. கஙு.)

நிக்கிரகன்—அழிப்பவன். (வழக்.)

நிக்கிரகத்தானம் — தருக்கவாதத்தின் கட்பேசத்தெரியாமையாகிய தோல்வித்தானம். (சி. சி. அளவை. கஙு. சிவஞா.)

நிக்கிரகம்—1. கீழ்ப்படுத்தல். 2. தண்டம், தண்டனை. (உ-ம்.) "அந்நியர்காரியமறிந்தே யநுக்கிரகநிக்கிரகமமைக்கின்முர்க்கே" (சிவரக. கணபதிவந்த. கஎ.)

நிக்கிரகித்தல்—தண்டித்தல்.(சிவஞாநபோ. க. பாண்டி.)

நிக்குரோதம்—காட்டாமணக்கு. (வைத்தியபரிபா.)

நிகடம்—சமீபம். (காஞ்சிப். இரண்டாங்காண்டம். காப்பு.)

நிகண்டம்—உடையின்மை. (சி. சி. பரபட். நிகண்டவா. உ.) [நி-எதிர்மறை; கண்டம்-உடை.]

நிகண்டவாதம்—ஒரு சமயம். (வழக்.)

நிகண்டவாதி — சமணரில் ஒருவகையான்; இவன்: ஆண்மாச்சரீரமெங்கும் வியாபித்தறியுமென்றும், எட்டு, பதினேழு, ஆறுகுணங்களை விடுகிறதே முத்தியென்றுஞ்சொல்வன். (சி.சி. ச: கள. மூகம். சி. சி. அ: கஉ. நிரம்ப.)

நிகண்டவாதிமதநூல் — கால்லம் உயிர் தன்மை தநம் அறம்முதலிய பத்தும் ஒருவராற் படைக்கப்படாது அநாதியுள்ளனவென்றுசொல்லுமதநூல். (த. நி. போ. உஎச.)

நிகண்டு — 1. சொற்பயன்விளக்கு நூல். (இருநிறப்பெயர்.நன்னூல்.பாயிர. முதனூல். கருத்தன் என்னுஞ்சூத்திரவுரையிற் காண்க. 2. தொகுதி. கூட்டம்எனினுமாம். 3. வேதாங்கமாறிலொன்று. (சூ. நிக. கஉ: நிசு.)

நிகமநம் — உறுதிப்படுத்தி முடிவுகூறல். தருக்கசங்கிரகத்திற் காண்க.

நிகமம்—1. கடைவீதி. (உ-ம்.) "நீண்டவந்நிகமம்புக்கநிமலன்மேலார்வம்வைத்து" (கந்தபு. ததீசியுத். அகூ.) 2. நகரம். (உ-ம்.) "தமதுநிகமங்கடல்போன்மருங்குவரக் - கடங்கள்கடந்து" (பிர. காண்ட. ச: கூக.) 3. வேதம். (உ-ம்.) "நிகமமெனிலொன்றுமற்றுநாடொறு" (திருப்பு. கசநி.) நியமமாகவுணர்தற்கருவி என்க.

நிகரீ—1. உவமையுருபுகளிலொன்று. (நன்னூல். போலப்புரைய என்னுஞ்சூத்திரத்திற் காண்க. 2. சமானம். (உ-ம்) "நிகருமேலுமின்முகியேயமர்தருநிமலன்" (கந்தபு. ததீசியுத். கநிஎ.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. பிரகாசம். (உ-ம்.) "நிகர்மலர்நெல்லொடுதூஉய்ப்பகன்மாய்ந்த" (சிலப். கனத். உ.) 5. போர். (உ-ம்.) "கோதையர்"பார்.

நிகரீக்கும்—மாறுபடும். (ஐங்குறு.)

நிகரீத்தல்—1. ஒப்பாதல். 2. மாறுபடுதல். (உ-ம்.) "பல்லிதழ்நீலமொடுநெய்தனிகர்க்கும்" (ஐங்குறு. உ.)

நிகரீதல்—ஒப்பாயிருத்தல். (வழக்.)

நிகரீப்பு—ஒப்பு. (வழக்.)

நிகரீபக்கம்—சபக்கம். (உ-ம்.) "நிகரில்பக்கம்"பார்.

நிகரீவம்—எண்மாநனத்திற்பன்னிரண்டாந்தாநம். (சி-லி. ஞாந. உநி.)

நிகரீவு—ஒப்பு. (வழக்.)

நிகா—ஒருவமச்சொல். (உ-ம்.) "நேரநிகரவன்னவின்ன – வென்பவும்பிறவுமுவமத்திருபே" (நன். கூசுஎ.)

நிகரம்—1. கூட்டம். (உ-ம்.) "பொடிபடப் படவுடைப்பனபுகர்முகக்கரிநிகரமே" (பாரத. அணிவரு. சூ.) 2. நி என்னு மெழுத்து.

நிகரா — பகையாத. (உ-ம்.) "தன்னெடு நிகராவென்னெடுநிக" (ஐங்குறு. சுஎ.)

நிகராட்சி — விசுத்தியென்னுமாதாரத்திற் குரிய சுவேதபத்மதளம் பதினறனுளொன்றில் நிற்கும் ஏ யென்னு மக்கரத்தினதிதேவதை. (சி. சி. அ: உக. மறை.)

நிகரி—பகைத்து. (உ-ம்.) "நிகரா"பார்.

நிகரிடுதல்—ஒப்பிடுதல். (வழக்.)

நிகரில்பக்கம்—விபக்கம். (உ-ம்.) "மூன்று பக்கம்பக்கநிகர்பக்கநிகரில்பக்கமெனத் - தோன்றும்பக்கத்துணிபொருளுக்கிடமாமுவமை நிகர்பக்க – மான்றபொருள்சென்றடையாதவிடமா நிகரில்பக்கமுத-லேன்றவ்ரண்டும்பொருளண்மைக்கிடமாமொன்றுபொருளிள்ளும்" (சி. சி. அளவை. கூ.)

நிகலம்—தோண்மேல். (சூ. நிக. உ: கூஉ.)

நிகழ் — தெரிநிலவினைப்பகுதி. (உ - ம்.) "ஈங்ஙனமிவ்வாறுநிகழ்தன்மையெல்லாம்" (சிவரக. அபுத்திபூ. கச.)

நிகழ்காலம்—வர்த்தமானகாலம். (உ - ம்.) "நின்றிடுநிகழ்காலத்தினிமலனுக்கன் பு செய்வார்" (சிவரக. பாயிர. கஙூ.)

நிகழ்காலவிலக்கு— நிகழ்காலம்பற்றிவரும் முன்னவிலக்கென்னுமணி.(தண்டி.சூஉ.உரை)

நிகழ்காலவினையெச்சம்–செயவென் வாய்பாட்டுவினையெச்சம்.

நிகழ்ச்சி–1. ஒளி. 2. ஒழுக்கம்.(பரிபாடல்.) 3. சம்பவம். (உ - ம்.) "பெறுவரெனுநிகழ்ச்சி பொய்யோ"(பாரத.இருட்.உசூ.)4.மநக்கிளர்ச்சி. (உ-ம்.) "நிகழ்ச்சியின்மைந்தரீண்டிநீண்முளை சாத்தினுர்கள்"(பெரியபு.தடுத்தா.கக.)5.வர்த்தமாநகாலம். 6. விருத்தி. (சைவப்பி. உடு.)

நிகழ்த்தல்—1. செய்தல். (உ-ம்.) "அந்தநன்னடமேநினைந்தொழினிகழ்த்தலாகும்" (திருவாத. திருவம். சு.) 2. சொல்லுதல். (உ-ம்.) "நீபடைத்திடுகெனநிகழ்த்தி"(சூர்மபு. அட்டமூர். கசு.)

நிகழ்த்துதல் — 1. சொல்லுதல். (உ - ம்.) "எறிகடற்சேதுவினிராமநாதனே – நிறுவியகாதையைநிகழ்த்துகென்னவே" (சேதுபு. அவையட. க.) 2. நடப்பித்தல்.

நிகழ்தல் — 1. ஒளிசெய்தல், விளங்குதல். (பிங்கல. ககஙூ.) (பதிற்றுப்.) 2. நடத்தல்.

நிகழ்வு — 1. சம்பவிப்பு. 2. நிகழ்காலம். (உ-ம்.) "இறப்பெதிர்வுநிகழ்வெனக்காலமூன்றே" (நன். ஙூஅங.)

நிகளம்—1. சங்கிலி. (உ-ம்.) "நிகழங்கால் விட்டநினைவு" (தனிப்பாடற்றிரட்டு.) 2. நீர்க்கடம்பு. (வைத்தியபரிபா.) 3. மலம். (உ-ம்.) "நிகளமறுக்குமிந்தமயம்" (அருணகிரிபு. அருத்தவ. சுக.) 4. விலங்கு. (சூ. நிக. எ: உக.)

நிகற்பம் — ஒரெண்; அது: கற்பம் பத்து. (பிங்கல. உஉஎங.)

நிகற்புதம்—அற்புதம் பத்துக்கொண்டது. (பிங்கல. உஉசுக.)

நிகாதம்—வஞ்சகம் (உ-ம்.) "நிகாதன்"பார்.

நிகாதன்—வஞ்சகன். (பிங்கல. அளஅ.)

நிகாயம்—1. கூட்டம். (சூ. நிக. அ: ச.) 2. மருதஞ்சார்ந்தவூர். (சூ. நிக. ஙி: சo)

நிகாயன்—கடவுள், காயமில்லாதவன்.

நிகாரணம்—காரணமற்றது. (வழக்.)

நிகாரம்—பனி. குறுக்கல்விகாரம். (பிங்கல. எசு.)

நிகவா—பிரமிஎன்னுமோர்பூடு. (வைத்தியபரிபா.)

நிகிததந-வசியமுதலிய அட்டகருமங்களால் இம்மையிலின்பமும் மறுமையிற் றுன்பமுங் கொடுப்பவன். (உ-ம்.) "நல்வசியாதியாவிம்மையின்பம்வெக்துயரங்குதவுமவனிகிதகுரு" (வேதா. சூ. கசு.)

நிகிதம்—இசமின்மை. (உ-ம்.) "விகிதமான இதத்தைநீக்கலானிகிதமாயிற்று" (வேதா. சூ. கசு. உரை.)

நிகிநுட்டம்—நீசம். (உ-ம்.) "நிகிருட்டவிடயத்திலேதனக்குத்தானேயொப்பா யிருக்கிறசித்தமானது" (உபதேசம். க. உரை.)

நிகிலம்–எல்லாம். நிகலநிகமாகமம் என்பது வழக்குரையறிக.

நிகு—மஞ்சள். (வைத்தியபரிபா.)

நிகுஞ்சம்—குகை. (சூ. நிக. ஙி: கச.)

நிகும்பம்—நேர்வாளம். (வைத்தியபரிபா.)

நிகும்பலை—இலங்கையில் இந்திரசித்து யாகம்பண்ணின இடம். (இராமா. யுத்தகா. நிகும்பலைப்படலம்.)

நிகும்பன்—கும்பகன்னன்மகன். (இராமா. யுத்தகா.)

நிகேசரம்—ஒரு மரம். (வழக்.)

நிகேதநம் — 1. தேவர்கோயில். (உ - ம்.) "வெள்ளியானிகேதநத்தைவிருப்பினல் விதித்தோன்" (சேதுபு. இராமநா. சச.) 2. வீடு. (உ-ம்.) "நிதிநிகேதநங்களெங்கும்" (பெரியபு. திருநாட். ஙூ.)

நிசீசந்தேகம்—சந்தேகமின்மை. (சி. சி. க உo. சிவாக்.)

நிசீசம்—நித்தம். (உ-ம்.) "நிச்சலுமீசனன் பர்" (திருவிளை. நரட்டுப். கூக.)

நிசீசயம்—1. உறுதி. (உ-ம்.) "நிச்சயம்மெ ணுங்கவசந்தான்" (இராமா. ஆரணிய. கரன் வதைப். கசஉ.) 2. மெய். (பிங்கல. கஅ0க.)

நிசீசயித்தல்—உறுதிப்படுத்தல். (வழக்.)

நிசீசயிப்பு—நிச்சயித்தல். (வழக்.)

நிசீசலம்—1. அசையாத இலக்கு. (உ-ம்.) "சலம்"பார். (பாரத. வாரணவத. நிகு.) 2. அசைவின்மை.

நிசீசலன்—1. அசைவற்றவன். 2. கடவுள்.

நிசீசல்—நித்தமும். (உ-ம்.) "நிச்சலுமீர்த் தாட்கொள்வோன்வாழ்க" (திருவாச.திருவண். கூக.) [நித்தல்-நிச்சல் என்றுயிற்று.]

நிசீசலை — 1. சலநமற்றசத்தி. (சி. சி. உ: ஞாநப்.) 2. பூமி. (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நிசீசளை—தாளி. (மலையக.)

நிசீசாயகம்—நிச்சயிப்பது. (சி. சி. உ: சுo. சிவாக்.)

நிசீசித்தம்—1. மநோலயம். 2. விசாரமின் மை.

நிசீசித்தல்—நிச்சயித்தல். (வழக்.)

நிசீசிதம்—நிச்சயிக்கப்பட்டது. (சி. சி. ச: உஎ. ஞாநப்.)

நிசீசிந்தன் — 1. அருகன். (சூ. நிக. க: க.) 2. எண்ணமற்றவன். (வழக்.)

நிசீசியம்— } உள்ளி.(வைத்தியபரிபா.)
நிசீசிரம்— }

நிசீசுவாசம் — 1. சதாசிவமூர்த்தியுடைய அகோரமுகத்தினின்றுற்பவித்த ஐந்தாகமங்க ளொன்று; இதற்குக் கிரந்தசங்கியைகோடி. (சைவச. பொது. கூகஎ. உரை.) 2. சுவாச மின்மை, மூச்சடக்குகை.(சி. சி. ச:அ. ஞாநப்.)

நிசீசேட்டை—சேட்டையொழித்திருத்தல். (சி. சி. ச: அ. சிவாக்.)

நிசீசேடம்—சேடமின்மை. (சி. சி. உ: நிகு. சிவாக்.)

நிசக்கல்லு-சீதாங்கபாஷாணம்.(வைத்திய பரிபா.)

நிசம்—மெய். (வழக்.)

நிசயம்—1. திரட்சியாகியவுண்டை. (பெரி யபு. மூழுநீறுபூ. உ.) 2. வியூகவிரி மூப்பது ளொன்று. (வள். எசுஎ. பரி. குறி.)

நிசவான்—மெய்யன். (வழக்.)

நிசா—இரவு. (பிங்கல. உஉக.)

நிசாகசம்-வெள்ளாம்பல்.(வைத்தியபரிபா.)

நிசாகம்—மஞ்சள். (வைத்தியபரிபா.)

நிசாகரன்—1. சந்திரன். (பிங்கல. உஉறி.) 2. சேவல். (வைத்தியபரிபா. கருப்பொ.)

நிசாசரம்-1.இரவில்நடமாடுவன. 2.கூகை. 3. பாம்பு.

நிசாசரர்—1. அசுரர். 2. இராக்கதர். (1,2-சூ. நிக. க: சுசு, சுச.)

நிசாசரி—1.இராட்சதத்திரி.(உ-ம்.)"நீடிருஞ் சாபம்பெற்றநிசாசரிவனமீதாமால்" (கூர்ம பு. இராமன. கஅ.) 2. கூகை. (பிங்கல. உகூகூ.)

நிசாடு—மஞ்சள். (வைத்தியபரிபா.)

நிசாநந்தம்—மநோலயமான யோகாப்பியா சத்திலுலுண்டாகு மாநந்தம். (உ-ம்.) "மநோ லயயோகத்தினில்வந்துதித்த–லேதமறுநிசாநந் தம்" (வேதா-சூ. கூச.) [யோகத்திற்காட்சியா கியகுறியைக் காண்பானுகிய மநஞ்சேர்ந்தொ டுங்கினவிடத்து அவ் விரண்டுமின்றி வரும் பயன் நிசத்தைமுன்னிட்டுவருதலால் நிசாநந் தம் என்றுயிற்று.] (வேதா-சூ. கூறு. உரை.)

நிசாபதி—1. கர்ப்பூரம். (வைத்தியபரிபா.) 2. சந்திரன். (சூ. நிக. க: நுஅ.)

நிசாபிசா—மரமஞ்சள். (வைத்தியபரிபா.)

நிசாபுட்பம்—1. செவ்வாம்பல். 2. பனி. 3. வெள்ளாம்பல். (1, 2, 3-வைத்தியபரிபா.)

நிசாளம்—ஒரு கட்பறை. (உ-ம்.) "நிசாளந் துடுமைசிறுபறையடக்கம்" (சிலப். அரங்கேற். உஎ. உரை.) [சதுரகராதிகாரர் நிசாணம் என எழுதுவது, பொருந்தாது.]

நிசி—1. இரா. (உ-ம்.) "சிவநிசிப்பீடுஞ்சொல் வேன்"(பிர. காண். பஞ்சாட். சஉ.) 2. இருள். (சூ. நிக. க: அஉ.) 3. கத்தூரிமஞ்சள். (உ-ம்.) "ஆரநிசிபுட்கரம்" (தைல. தைலவ. நிகு) 4. பொன். 5. மஞ்சள். (4, 5-சூ. நிக. கக. சகர வெ. கூ.)

நிசித்தண்ணீர்—நீராகாரம். (வைத்திய பரிபா.)

நிசிசரர்—1. அசுரர். 2. இராக்கதர். இரவிற் சஞ்சரிப்பவர்.

நிசிதம்—1. இகழ்ச்சி. (வழக்.) 2. கூர்மை. (சூ. நிக. எ: ககசு.)

நிசிதர்—1. அசுரர், இரவிற்சஞ்சரிப்பவர். 2. ஈசர். (1, 2-வழக்கு.)

நிசுலம்—அலரி. (வைத்தியபரிபா.)

நிசுவாசம்-நிச்சுவாசம், நீழ்விடுகிறசுவாசம்.

நிசுளம்—நிசுநம்.

நிசுநம்—நீர்க்கடம்பு. (மலையக.)

நிசேதம்—நிடேதம். (உ-ம்.) "நிசேதமில யன்மாலீசன்" (மச்சபு. பிரமுக. கூ.)

நிசை—இரவு. (உ-ம்.) "திசையடைந்து கதிரிரவியென்னும்வகைசீறிமாறுபொரு தெவ்வரா–நிசையழிந்துவெளியாக" (பாரத. இராய சூய. சறி.)

நிட்கம்–1. இருபதுகுன்றியெடைகொண்ட பொன். (மிருச.ருகூ.) 2. வராகனிடை. (உ-ம்.) "கற்பூரமிவையாறின்பொடியிறைத்தோ ரைந்துநிட்கம்" (தைல. தைலவ. கஙருி.)

நிட்களசிவம்—அவயவமிலாத ரூபம்யிருக்கிற சிவம்.

நிட்களசிவன்–இலயசிவன். (பௌட்.கஅ.)

நிட்களதத்துவம்—சிவதத்துவம். (சி. சி. க: சுருி. ஞாநப்.)

நிட்களம்—வடிவில்லாதது. (சி. சி. உ: எச. மறை.) [கலையில்லாதமையாற்பெற்றபெயர்.]

நிட்களர்—சிவன். (சி-வி. ஞாந. ச. உரை.)

நிட்களன்–இலயசிவன்.(சி.சி.க:சுருி.ஞாநப்.)

நிட்காமியம்—1. சொர்க்காதிபோக இச்சையின்றித்தன்னிடத்திலமைந்துநிற்றல். (உ-ம்.) "நிட்காமியதவஞாநத்தினுக்கென்றறியே" (வேதா-சூ. கஎக.) 2. விருப்பின்மை.

நிட்காரணம்—காரணமின்மை. (சி. சி. ச: சஎ. மறை.)

நிட்கிராமணம்—குழந்தையை வெளிக்கொண்டுபோதல்; இது: நாலாமாசத்துட்செய்ய வேண்டுங்கிரியை. (பராசர. உக, உஉ. திருவானைக். கோச்செங். அச.)

நிட்குடி — ஏலம். (உ-ம்.) "நிட்குடிசாதியிராநெய்" (தைல. பாயிர. ருிஎ.)

நிட்சேபம்—புதையல். (மகாபாரதம். பாயிரம். கூ. உரை.)

நிட்டம்—இருத்தல். (சி. சி. உ: ருிசு.சிவாக்.)

நிட்டுரைபத்தினை–இருகையும் முட்டியாக மூடிக்கொண்டு அந்தமுட்டிகளேயே அங்குட்டங்களே யுள்ளடக்கிப்பிடித்தல். (சி-லி. கிரி. உகூ. உரை.)

நிட்டூரம்—கொடுமை. (உ-ம்.) "நிட்டூரநிராகுலநிர்ப்பயனே" (கந்தனலங்.)

நிட்டூரன்—கொடியவன். (வழக்.)

நிட்டை — 1. அசையாமை. 2. அழிவு. 3. இக்கட்டு. 4. உறுதி. 5. சமாதி. 6. சரித்திரமுடிவு. 7. சாதகம். 8. நம்பிக்கை. 9. நன்னடை. 10. நிலைபரம். 11. முடிவு. 12. மோட்சம். 13. வாழ்நாள். 14. விரதம். (5, 12-சி. சி. அ: உச. ஞாநப்.) ஏனையவற்றிற்குதாரணம் வந்துழிக்காண்க.

நிட்பலம்–1. அவரை. 2. மொச்சைப்பயறு. (1, 2-வைத்தியபரிபா.)

நிட்பாவம் — 1. அவரைப்பிஞ்சு. (உ-ம்.) "மணப்புளிநிட்பாவத்தோ-டுச்சிதமுருங்கையாகுமுரையிச்சாப்பத்தியமென்றே" (தைல. தைலவ. ருிருி.) 2. மொச்சைக்கொட்டை. (வைத்தியபரிபா.)

நிட்பிராபஞ்சம்–பிரபஞ்சமல்லாதது. (உ-ம்.) "நித்தநிர்மலசுகநிட்பிரபஞ்சப்பொருளே" (தாயு. பரசிவவணக்கம். கூ.)

நிட்பிரமாணம்–பிரமாணமல்லாதது. (சி.சி. சூ: கூ. ஞாநப்.)

நிட்பிரயோசநம் — பிரயோசநமல்லாதது. (சி. சி. சூ: கூ. ஞாநப்.)

நிடதம்–1. அட்டமலையிலொன்று. (சூ. நிக. கஉ: எஎ.) 2. இணைக்கைபதினைந்துவகையுளொன்று; அது: முட்டியாகவிரண்டுகையுஞ் சமஞ்செய்வது.(உ-ம்.)"நிடதமென்பதுகெறிப்படக்கிளப்பின்–முட்டியிரண்டுகையுஞ் சமமாகக்கட்டிநிற்குங்காட்சித்தென்ப" (சிலப். அரங்கே. கஅ. உரை.) 3. தேயமைம்பத்தாறிலொன்று. (நைடதத்திற்காண்க.)

நிடதர்கோன் — நளன். (உ-ம்.) "நிடதர்கோன்புகழ்ச்சரிதை" (நைடத. பாயிர.)

நிடாடம்—ஆந்தை. (வைத்திய. கருப்பொ.)

நிடாதன்—சூத்திரப்பெண் சோரமார்க்கமாகப் பிராமணனைக்கூடிப் பெற்றபிள்ளை.(உ-ம்.) "சந்தவம்மடவார்சோரந்தனின்மறையோனைக்கூடி – நந்திடவுயிர்த்தமைந்தனிடாதனென்று ரைப்பர்நல்லோர்" (சூத. சிவமா. கஉ: கக.)

நிடாதா—ஒருவகைச்சாதி. (உ-ம்.) "வேனனென்பவன் மாதாமகனை மிருத்துவின்மேடத்தால் தானம் தவம் யாகமுதலிய புண்ணியச்செய்கைளே ஒருவருங் செய்யக்கூடாதென்று ஆஞ்ஞாபித்தனன். அதனையறிந்த விருடிகள் பற்பல புத்திகளேச்சொல்லியுங்கேளாமையால் அவர்க்குக்கோபமூண்டு தருப்பையிலடித்தனர். அதனாலரசனுயிர்துறக்கச்சனங்களொருவரையொருவர்வருத்திப் பொருளே யபகரிக்கத்தொடங்கினர். அதுகண்டவிருடிகள் அரசனில்லாமையாலன்றே இத்தீங்குகள் நேர்ந்தனவென்றுவருத்தமுற்று அரசுசெயவோர்புத்திரநிமித்தம் வேனனின் தொடையைக்கடைந்தனர். அதிலிருந்து கருநிறமும், விகாரமுகமும், குறுத்தசரீரமுங்கொண்டு ஒரு மனுடன்றோன்றி, நானென்னசெய்யவேண்டுமென்று முனிவரைவினவ, அவர்கள் (நிஷீத) உட்காரு என்றனர். அதனால் அவன் நிஷாதன் என்னும் பெயர் பெற்றனன். அன்றுமுதல் நிடாதா என்னுமொருவகைச்சாதி யுலகத்திலுண்டாயிற்று" (கூர்மபு. தக்கனேச்சபித். சு. உரை.)

நிடாலம்–நெற்றி. (வைத்தியப. கருப்பொ.)

நிடேகம்—1. கருத்தரித்தல். (குமாரசாமி.) 2. தெளித்தல். (பரா. மிரு. உக.)

நிடேததிரவியங்கள்—விலக்கப்பட்டதிரவியங்கள்; அவை: மதுபலாண்டு முதலியவை.

(வேதாரூ.உச.உரை.)பலாண்டு-ஈரவெங்காயம்.

நிடேதம்—விலக்கு. (பராமி. சசு.)

நிடேதித்தல்—1. மணவாளனும் மண்வாட்டியும் முதற்கூடுதல். 2. விலக்கல். (சி-லி. ஞாந. அ. உரை.)

நிண்ணம்—உறுதி. (வழக்.)

நிணக்கும்—கட்டும். (புறநா.)

நிணத்தல்—1. கொழுத்தல் 2. முடைதல். (சூ. நிக. க: உஅ.)

நிணந்து—பிணித்து. (உ-ம்.) "நிணந்தெனெஞ்சநிறைகொண்டகள்வனே" (சிந்தா. பதுமை. கசசு.)

நிணம்—கொழுப்பு. (உ-ம்.) "நிணங்கருகிச் சுறுநாறுமூடையினும்" (அரிச்ச.மயான. ஙடி.)

நித்தம்—1. அநவரதம். (திருவிளை. தீர்த்த வி. உஅ.) 2. நிருத்தம். (பரிபாடல்.) 3. நிலையுடைமை. (உ-ம்.) "அநித்தநித்தமோர்ந்து" (திருவிளை. திருமண. ககஙக.)

நித்தல்—நித்தம். (உ-ம்.) "அம்புயன்மாலவனித்தலத்தனென்ரறற்றும்" (மரு-தி. ஙஎ.)

நித்தலம்—முத்து. (உ-ம்.) "நத்தளித்தவெண்டீ-யவனித்தலத்தண்வயன்மருதூரன்"(மரு-தி. ஙஎ.)

நித்தன்—1. அருகன். (சூ. நிக. க: ஙக.) 2. ஆத்துமா. 3. எப்போதுமுள்ளவன். (உ-ம்.) "அறிவிலனமூர்த்தனித்தனாகாதி குணங்களோடும்" (சி. சி. ச: ஙஅ.) 3. சிவன். (உ-ம்.) 'நித்தனுகமவேதங்கணிகழத்திடுங்கல்விச்சாலை' (சிவரக. நைமிச. உ0.)

நிநீதியகநமம்—சட்கருமங்கள். (நித்தியகன்மவிதி என்னுநூலிற்காண்க.)

நித்தியகலியாணி—1. பார்வதி, அழியாத மங்களத்தையுடையவள் என்றபடி. 2. வாடாமல்லிகை. (வைத்தியபரிபா.)

நித்தியசகலம்—இருவகைச்சகலாவத்தையுளொன்று. (சி. சி. ச: ஙக. சிவாக்.)

நித்தியசிராத்தம்—எப்பொழுதுஞ்செய்யுஞ் சிராத்தம். (நித்தியமேயெனநிகழ்சிராத்தமும்" என்னுஞ் சேதுபு. சேதுபல. கஙசு-ம் செய்யுளாற் பெறப்படும்.

நித்தியசிலேட்டுமரோகம்—ஒருவகைச் சிலேட்டுமரோகம்; அது: வெள்ளோக்காளம், சுரம், இருமல், தேகஞ்சுட்கித்தல், எரிச்சல், நிறுநிறுத்துக்கீழேவிழுதல், குரற்கம்மல், வார்த்தையின்மை என்னுமிக்குணங்களையுண்டாக்கும். (சீவரட். ககசா.) [நித்தியம்-கெடாமை.]

நித்தியப்பிரளயம்—1. சமஸ்தபிராணிகளுடைச் சுழுத்தி. 2. நால்வகையொடுக்கத்துளொன்று. (கூர்மபு. பதிக. ஙஙு. உரை.)

நித்தியம்—1. அழியாமை. (உ-ம்.) "நித்தியகல்யாணி"பார். (சிவரகசி. தேவிநாட்டி. சு.) 2. எப்போதும். (உ-ம்.) "நித்தியசிரார்த்தம்" பார்.)

நித்தியப்பழத்தி—மீளாதகதி. (வழக்.)

நித்தியமோட்சம்—நித்தியமுத்தி. (வழக்.)

நித்தியயோகம்—திநயோகம்; அவை: அதிகண்டம், அரிடணம், ஆயுஷ்மான், ஐந்திரம், கண்டம், சாத்தியம், சித்தம், சித்தி, சிவம், சுகர்மம், சுபம், சுப்பிரம், சூலம், சோபநம், சௌபாக்கியம், திருதி, துருவம், பரிகம், பிரமம், பிரீதி, வச்சிரம், வரியான், விட்கம்பம், விதிபாதம், வியாகாதம், விருத்தி, வைதிருதி என்பன. (பஞ்சாங்கத்திலறிக.)

நித்தியர்—என்றுமுள்ளவர். (சைவவி. க.)

நித்தியவிநோதம்—அருகன் முக்குடையினொன்று. (சிலப்பதிகாரம். காடுகொண்காதை.க. அடியிற்காண்க.)

நித்தியன்—1. கடவுள். 2. சிவன். (உ-ம்.) "நீலகந்தரநித்தியநிர்க்குணநின்மலாவருள்வாயே" (சிவரக. தேவிநாட்டியம். சு.)

நித்தியாங்கங்கள்—நித்தியத்துக்கு உரிய அங்கங்கள்; அவை: நித்தியகர்மலோபம் வந்தபோது அதற்குப் பரிகாரஞ்செய்தலும், அட்டபந்தனசலநம்வந்தால் மீளவுமவ்வட்டபந்தனஞ் சாத்தலும், மார்கழிமாதத்திற் திருதாபிஷேகமுதலாகப் பன்னிரண்டுமாசத்திலும் மாதபூசை பண்ணுதலும், சம்வற்சரிகப்பிராயச்சித்தமாகப் பவித்திரஞ்சாத்தலு முதலாயின. (சைவச. பொதுவி. உஉ. உரை.)

நித்தியானந்தம்—மோட்சம். (வழக்.)

நித்தியானந்தன்—கடவுள். (வழக்.)

நித்திரம்—கண்டங்கத்தரி.(வைத்தியபரிபா.)

நித்திராலு—நித்திரைகொள்வோன். (உ-ம்.) "நீளரவினங்களாளித்திராலுவை-மீளவுங்கொல்லுவான்" (பாரத. வாரணாவத. அ.)

நித்திரை—கண்படை; அது: மாயையாக்கை பதினெண் குற்றத்தொன்று. (உ-ம்.) "மெத்தையிற்படுத்தல்நித்திரைக்கழகு" (கொன்றை வேந்தன்.)

நித்திலல்—நொச்சி. (வைத்தியபரிபா.)

நித்திலம்—முத்து. (உ-ம்.) "நீலம்வைரம் வைரியநித்திலஞ்செம்-கோலந்திகழுந்துகிர்" (அரிச்ச. நாட்டு. கo.)

நித்திறம்—கண்டங்கத்தரி.(வைத்தியபரிபா.)

நிதகம்—நீர்முள்ளி. (வைத்தியபரிபா.)

நிதநம்—1. அழிவு. 2. பிறந்தநாளுக்கேழாநாள்.

நிதம்பம்–1. அல்குல். 2. கற்பரிபாஷாணம். (வைத்தியபரிபா.) 3. மலைப்பக்கம். (1, 3- சூ. நிக. கக: தகரவெ. ருி.)

நிதரிசநம்—1. சாட்சியணி; அஃது: ஒரு பிரகாரம் நிகழ்வதாகிய ஒரு பொருளுக்குரிய பிரயோசநமானது பிறிதொருபொருளுக்கு நன்மையாவது தீமையாவது புலப்படநிகழ்வதாகச் சொல்லப்படுமது. (உ-ம்.) "ஒருவகைநிகழ்வதற் கொத்தபயன்பிறிதிற்சூப்–புகழ்மைதீமையென் றிவ்புலப்பட – நிகழ்வதாயினிதரிசநமதுவே" (தண்டி.அசு.) [குவலயாநந்தகாரர். ஒருபொருள் தன்செய்கையால் மற்றொருபொருளுக்கு நற்பயனுவது தீப்பயனுவதுகாட்டுவது நிதரிசநமென்பர்.] 2. காணப்படாமை.

நிதலம் — கீழேழுலகினொன்று. (சூ. நிக. கஉ: எக.)

நிதாநம்—1. இடம். (திருவிளை. வேதத்துக்குப்பொரு. உஅ.) 2. உத்தேசம். 3. கடவுண்மணி. (சூ. நிக. சு: ச.) 4. நிரவியம். (சூ. நிக. சு:கூ.) 5. நிச்சயம். 6. படை. (பிங்கல.கருபஉ.) (2, 5-வழக்.)

நிதாநித்தல் — 1. உத்தேசித்தல். 2. நிச்சயித்தல். (1, 2-வழக்.)

நிதாநிப்பு—மதிப்பு. (வழக்.)

நிதி–1. சங்கநிதிபதுமநிதிகள். 2. நிரவியம். (உ-ம்.) "நிகரிலதுவினவினோர்தமக்குமுத்தி நிதிகுடங்கைதனில்வந்ததாகுமன்றே" (சிவரக. சிவடண்டி. சக.) 3. நிரள், பெரும்பொருள். (உ-ம்.)"நிலம்பொறுக்கலாதசெம்பொனீணிதி" (சிந்தா. நாம. கூஎகூ.) 4. நிறைவு. 5. பொன். (உ-ம்.) "நிதியிழந்தனம்" (அரிச்ச.மயாந.சுகூ.)

நிதிக்கிழவன்—குபேரன். (பிங்கல. ககஙரு.)

நிதித்தியாசநம்—வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்த்தற்குள்ள உபாயம் மூன்றனுளொன்றுகிய தெளிதல். (வள். ஙருசு. குறிப்பு.)

நிதித்தியாசநயோகபஞ்சகம் – மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம், மகாயோகமென்பன. (வி-ணி. ருிஎ.)

நிதிநிதிகம்—கண்டங்கத்தரி. (வைத்தியபரிபா.)

நிதிப்போதி — கிழிக்கட்டு. (சூ. நிக. கக: ழகரவெ. க.)

நிதியம்—1. நிரவியும். (உ-ம்.) "உற்றுண்டாகியநிதியம்" (அரிச்ச. சூழ்வினை. கஅஉ.) 2. பொருட்டிரள். (உ-ம்.) "நிலந்தினக்கிடந்தநிதியமோடனைத்தும்" (மலைபடு. ருிஎருி.)

நிதியின்கிழவன்–சங்கப்புலவருளொருவன். (சிலப்பதி.)

நிந்தகன்—பழிசொல்வோன். (வழக்.)

நிந்திகம்–கண்டங்கத்தரி. (வைத்தியபரிபா.)

நிந்தனம்—நிந்தனை. (வழக்.)

நிந்தனை—நிந்தை. (உ-ம்.) "நிந்தனைசெய்தொழுகுவார்" (திருவிளை. விருத்தா. கருி.)

நிந்தித்தல்—இகழ்தல். (வழக்.)

நிந்திதம்—இகழ்ச்சி. (வழக்.)

நிந்திதன்—பழிக்கப்பட்டவன். (வழக்.)

நிந்திப்பு—இகழ்ச்சி. (வழக்.)

நிந்தை—நிந்திப்பு. (வழக்.)

நிந்தையுவமை—உவமையையிகழ்ந்துவமிப்பது. (வரலாறு.) "மறுவுடைத்திங்களெயொப்பெனின்முகஞ்சிறப்புடைத்து" (தண்டியல.)

நிபதேசம்–கோரோசனை.(வைத்தியபரிபா.)

நிபந்தப்பத்திரம் — அரசஞக்கினையாலே வாணிகஞ்செய்பவர்முதலானவர்களால், தேவர்கட்கேனும், அந்தணர்முதலோர்கட்கேனும், மாதந்தோறும் அல்லது வருடந்தோறும் இவ்வளவுபொருள் கொடுக்கத்தக்கதென்று எழுதப்பட்டுக் கொடுக்கப்படுவது. (மிருச. ஙக.)

நிபந்தம்–கட்டளை, நியதி. (உ-ம்.)"பூசனைக்கங்கண்வேண்டுநிபந்தமாராய்ந்துளான்" (பெரியபு. திருவாரூர். ககு.)

நிபந்தநம் — கட்டுதல். நி-உபசருக்கம். 2. வீணையின்வலிக்கட்டு.

நிபந்தனை—எற்பாடு. (வழக்.)

நிபம்–1. காரணம். (இராமா. பாலகா. பரசராமப். கடு.) 2. நீர்ச்சாடி. 3. வேம்பு. (2, 3-வைத்தியபரிபா.)

நிபாகம்—சமைத்தல். (வழக்.)

நிபாதம்—1. பதித்தல். (உ-ம்.) "நிராதார மாகிக் – கரையிலருட்பரன்றுவிதாசத் திநி பாதத்தாற்கழிப்பன்மலம்" 2. விடுகை. (சி. சி. உ: ருசு. சிவாக்.) 3. விழுதல். (1, 3-சி. சி. அ: உ. உரை.) நி-உபசருக்கம்.

நிபிடம்–1. நெருக்கம். (உ-ம்.) "தண்டெத்ர சாமர-நிபிடமிடவந்து" (திருப்பு. கசடு.) 2. மிகுதி. (சி. சி. உ: அ0. சிவாக்.)

நிபுணத்துவம்—விவேகம். (வழக்.)

நிபுணதை—சாமர்த்தியம். (சி. சி. உ: ருிஎ. சிவாக்.)

நிபுணர்—கல்வியறிவினர். (வழக்.)

நிம்பகம்—வேம்பு. (வைத்தியபரிபா.)

நிம்பசேதம்—முடக்கொற்றான். (வைத்தியபரிபா.)

நிம்பத்தின்சளி — வேப்பம்பிசின். (உ-ம்.) " ஈருளிகாட்டுள்ளிநிம்பத்தின்சளி " (தைல. தைலவ. ககருி.)

நிம்பம் — 1. எலுமிச்சம்பழம். (வைத்திய பரிபா.) 2. வேம்பு. (உ-ம்.) "அங்குநின்றவர் நிம்பவலங்கலானவணங்கியே" (திருவா. த. குதிரை. ச.)

நிம்பிரிந்து—கோபித்து. (உ-ம்.) "அலர்ந்த வந்தாமரையல்லிப்பாயைப்புலந்துகண் சிவந்த னபோன்றுநிம்பிரிந்து" (சிந்தா.இலக். ஈசஅ.)

நிமம்—நியமம். (உ-ம்.) "நிமமுடனித்த முத்தியென்றிட" (த. நி. போ. உடுகூ.)

நிமலம்—அழுக்கின்மை. (உ-ம்.) "அமலத் தொல்பெயராயிரத்தாழியா-னிமலப் பாதம்" (இராமா. கர. கடு.)

நிமலர் — 1. காலதத்துவத்திருக்குமோரு ருத்திரர். (வி-ணி. உஎச.) 2. சுத்தர்.

நிமலன்—1. கடவுள். (உ-ம்.) "நிகமம்"பார். 2. சுத்தன்.

நிமி-சூரியகுலத்தரசரிலொருவன், நிமிச்சக்ர வர்த்தி.(இராமா.பாலகாண்ட.திருவவதா. கூ0.)

நிமிட்டல்—கிள்ளல். (வழக்.)

நிமிடம்—ஓர் காலநுட்பம். (உ-ம்.) "நாடொ ணுதிநிமிடமொன்றின்" (சேதுபு.இராமநா. ச.)

நிமிண்டுதல்—கிள்ளல். (வழக்.)

நிமித்தகாரணம் — 1. கத்துருத்துவவேது வாயிருப்பது. 2. யாதொன்றுசமவாயிகாரண மும் அசமவாயிகாரணமுமன்றுய் மற்றுங்கார ணமாமது என்பர். (தர்க்கபரி. கூ.)

நிமித்தகாரணன்—எதுக்கர்த்தா. (வி-ணி.)

நிமித்திகன் — வருங்காரியஞ்சொல்வோன். (சூ. நிக. உ: உஉ.)

நிமித்தசூடாமணி—ஒருசகுநநூல். (வழக்.)

நிமித்தத்துவம்—ஏது.

நிமித்தம்—1. காரணம். (உ-ம்.) "எந்தை யோர்விளையாடலினிமித்தமாங் கெழுந்தே" (சிவரக. மேரு. உக.) 2. சகுநம். (சிந்தா.) 3. நிமித்தகாரணம். 4. பல்லிமுதலியவற்றின்குறி. (உ-ம்.) "இனிதுற்றநிமித்தமுமெய்கிலதால்" (சிவரக: கணபதிவந். எ.) 5. பொருட்டு; இது: நான்காம்வேற்றுமைப்பொருளில்வரும்.

நிமித்திகப்புலவன்—அரசர்க்குறுதிச்சுற்றத் தொருவன், புரோகிதன்.

நிமித்திகன்—சகுநஞ்சொல்வோன்.(சிந்தா.)

நிமித்தியம்—நிமித்தம். (சி.சி. க: க. நிரம்ப.)

நிமித்தீகரித்தல்—நிமித்தமாகக்கொள்ளுதல். (சி. சி. அ: கக. ஞாநப்.)

நிமிர்—தெரிநிலைவினைப்பகுதி. (உ-ம்.)"நிமிர் சுடர்" (நான்மணி. கூஎ.)

நிமிர்ச்சி—1. உயர்ச்சி. 2. நிமிர்வு. 3. நீட்சி.

நிமிர்த்தல்—நிமிர்த்துதல். (வழக்.)

நிமிர்த்துதல்—1. உயர்த்துதல். 2. நீட்டல். (உ-ம்.) "இக்கோணைஞாநவெரியால்வெதுப்பி நிமிர்த்து" (சி. சி. கo: உ. ஞாநப்.) 3. பிரித்தல். (உ-ம்.) "மூடங்கலேநிமிர்த்துவாசித்து" (திருவிளை. யானையெய். அ.)

நிமிர்தல் — 1. உயர்தல். (உ-ம்.) "நிமிரச் சமையக்கொட்டியவாலரிப்புழுக்கலும்" (திருவிளை. குண்டோ. சு.) 2. ஓடல். (சூ. நிக. க: சஉ.) 3. நீளல். (உ-ம்.) "அற்புதமாய்ச்சிவந்து நிமிர்ந்தகண்றவயில்விழிக்கணைகள்"(கோயிற்பு. பதஞ்சலி. உசு.) 4. நுடங்குதல். (பத்துப்பா.) 5. வளர்தல். 6. வளைவுமாறல்.

நிமிர்ந்து—இடையிட்டு. (பரிபாடல்.)

நிமிர்ப்பு—நிமிர்ச்சி. (வழக்.)

நிமிர்வு — நிமிர்தல். (வழக்.)
நிமிரல் —

நிமிரின்—நடப்பின். (புறப்பொ.)

நிமிளை—அஃது: இரசிதநிமிளை, வெள்ளி நிமிளை, கருமாநிமிளை, காகநிமிளை, பொன் னிமிளை, சத்திநாதலோகநிமிளை, துரைசி நிமிளை, வெண்கலநிமிளை, லோகநிமிளைஎனப் பலவகைப்படும். (வைத்தியபரிபா.)

நியக்குரோதம்—ஆலமரம். (சூ. நிக. ச: கச.)

நியசீசநீதேகம் — வைதரணி மேருவைச் சேர்ந்து பெற்றமகள். (கூர்மபு. தக்க.சபி. உச. உரை.)

நியசித்தல்—வைத்தல், பதித்தல். (சி.சி.க: அ. மறை.)

நியத்துவம்—வைத்தல். (வழக்.)

நியதம்-இன்றியமையாமை.(தருக்கசங்.சo.)

நியதி—1. ஊழ். (சூ. நி. அ: ஈக.) 2. நித்திய கருமம். (உ-ம்.) "மாநுடர்புனலின்மூழ்கிவாய்க் கவேநியதிமுற்றி" (அருணகிரிபு. வலம்புரி.ரு.) 3. முறைமை. (பிங்கல. உஉoசு.) 4. வித்தியாதத்துவமேழினொன்றுய் மாயையிலே நின்று காலதத்துவத்துக்குப்பின்றேன்றி ஆன்மாக்கள் அவரவர் செய்தகன்மம் அவரவரே யேறுது குறையாது நுகருமாறு நியமிக்குமொரு தத்துவம். (உ-ம்.)"நியதிபின்றேன்றிக்கன்மநிச்சயம் பண்ணிநிற்கும்" (சி. சி. உ: நுடு.)

நியதித்தல்—நியதிசெய்தல். (வழக்.)

நியதிதத்துவம்—வித்தியாதத்துவமேழினொன்று. (நியதி. ச. பார்.)

நியந்தா—ஆளுகிறவன். (சி.சி.க:சஅ.சிவாக்.)

நியமகம்—நியமம். (த. நி. போ. ககக.)

நியமச்சிலேடை—சிலேடையணியுளொன்று; அது: பலபொருள்களுக்கியையுமாறு சிலே டித்ததைத் தேற்றேகாரம்புணர்த்தி ஒன்றற்கு நியமமாக்குவது. (தண்டி. எசு. உரை.)

நியமச்செயல் — நித்தியத்தத்துவம். (உ-ம்.) "தேரினடக்குங்கதிர்மறையச்செய்யுநியமச்செயலாற்றி" (சேதுபு. வேதாள. உகூ.)

நியமத்தர்—நியமக்காரர். (வழக்.)

நியமநம் — 1. அடக்குதல். (சி. சி. நி: கூ. சிவாக்.) 2. ஏற்பாடு. (சி. சி. உ: நிடு. சிவாக்.) 3. முறை. 4. வகைப்படுத்தல். (உ-ம்.) "வ்ளக்குறவுணர்வினியமனஞ்செய்வானெவன்" (கூர்மபு.பிரகிருதி.உ.) 5. வேம்பு. (வைத்தியபரிபா.)

நியமம் — 1. அட்டாங்கயோகத்தொன்று; அது: தவம், மநமுவந்திருத்தல், கடவுளுண்டென்னும் விசுவாசம், பாவத்திற்குபயந்து தேடியபொருளைச் சற்பாத்திரருக்குக்கொடுத்தல், தன்னின்மூத்தோரை வழிபடல், உயிர்க்குறுதி பயக்கும் உண்மைநூல்களைக் கேட்டல், குலம், செல்வம், அதிகாரம் முதலியவைகளினுலே கெர்வமின்றியடங்கி யொழுகுதல், தக்கனவுந்தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்துமாம். (சைவவி. உகூ.) 2. இடம். (பிங்கல. எகக.) 3. கடைவீதி. (உ-ம்.) "வாணிகருறையுள்சூழ்நியமம்" (திருவிளை. நகர. சுகூ.) 4. கோயில் 5. தெரு. 6. நிச்சயம். 7. நியதி. 8. நெடுந்தெரு. (சூ. நிக. நி: சஎ.) 9. மருதநிலத்தூர், நகரம். (சிந்தா.) (4, 5, 6, 7, 9-பிங்கல. கூஎஉஎ.)

நியமவிலக்குச்சிலேடை—சிலேடையணியுளொன்று; அது: நியமஞ்செய்துகூடிய சிலேடையை வேறொன்றிற்குங்கூறி அந்நியமத்தை விலக்குவது. (தண்டி. எசு. உரை.)

நியமவுவமை—இதற்கிதுவே யொப்பென வேகாரம் புணர்த்துரைப்பது. (வ-று.) "வேயே கரமொப்பது"

நியமித்தல் — 1. ஏற்படுத்தல். (வழக்.) 2. தொழிற்படுத்தல். (உ-ம்.) "எவ்வாறுநியமிக்கப்படும்" (கூர்மபு. பிரகிருதி. உ.) 6. பிறப்பித்தல். (சூ. நிக. கூ: உ.)

நியமிப்பு—நியமித்தல். (வழக்.)

நியர்க்கியம்—பொரியரிசி. (வைத்தியபரிபா.)

நியாசம்—ஒருவன் திருடர்முதலியவர்களால் அபாயப்படுமென்னுமச்சத்தால் தன்னுடைய எருதுமுதலிய காலிகள் வெண்கலப்பாத்திரம் முதலானவைகளை நம்பத்தக்க ஒருவன் அயலூருக்குப்போகும்போது அவன் வந்தபின்னர் அவனிடத்திலொப்விக்கவேணுமென்று சொல்லி அவனுடைய வீட்டாரிடத்திற் கொடுப்பது. (மிருச. ககக.) 2. வேம்பு. (மலையக.) 3. வைப்பு. (சைவ. பொது. கூஉகூ. உரை.)

நியாதம்—1. நியாசம். (உ-ம்.) "பண்ணி நியாதம்பரசிவன்றன்பாதமுண்ணினைக தெ கன்றுளும்" (சைவச. பொதுவி. கூஉகூ.) 2. வேம்பு. (வைத்தியபரிபா.)

நியாமகசத்தி—போகத்திற்குரிய சிவர்களை நியமப்பட ரட்சிக்குஞ்சத்தி. (வேதா. சூ. நுo. உரை.)

நியாமகம்—ஏற்பாடு. (சி. சி. உ: நிடு. சிவாக்.)

நியாமகன்—கட்டளையிடுவோன். (வி-ணி.)

நியாமிகை—இச்சாசத்தி. (சி. சி. கூகூ. ஞாநப்.) [நியமம்பண்ணுதலாற்பெற்றபெயர்.]

நியாயசூடாமணி — தருக்கநூலினொன்று. (வழக்.)

நியாயசூத்திரம் — அட்சபாதராற் செய்யப்பட்ட ஒரு சாத்திரம். (மச்சபு. முகவுரை.)

நியாயபோதநி — தர்க்கசாத்திரங்களினொன்று. (வழக்.)

நியாயம் — 1. நீதி. (சூ. நிக. அ: சச.) 2. பரதத்தின்பொது இலக்கணங்களாகிய இருபது பேதங்களுளொன்று. (உ-ம்.) "அங்ககாரம்"பார். 3. வேதப்பொருளை நிச்சயித்தற்கு அநுகூலமாகிய பிரமாணமுதலியவைகளை அறிவிப்பது. (சைவவி. உகூ.) இவ்வாறன்றி, வைதீகசாத்திரங்கள் மூன்றினொன்று; தருக்கம். இந்நூல்: பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசநம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தானம் ஆகப் பதினுலு பதார்த்தங்களுள்ளனவென்றும், இதிற்பதார்த்தலக்கணங்களும் முத்தியிலக்கணமும் வைசேடிகநூலிற் கூறியவாறே கூறப்படும். ஈசுரன் செய்விப்பனென்றுங் கூறும். இதனைச்செய்தவர் அக்கபாதர். (சி. பி. கை. அகூ.)

நியாயமலைவு — தருக்கசாத்திரவழுவினொன்று; அது: தீர்ப்புவினங்காமல் மயங்கப்பேசுதல்.

நியாயவாதி—நியாயவாதங்கூறுவோன்.

நியாயவான்—நீதிமான். (வழக்.)

நியுத்தர் — அரசனுல் பொருள்கொடுத்தன் முதலான உபகாரங்கள் செய்யப்பட்டவராகி விவகாரவிசாரணை செய்தற்பொருட்டுச்சபையிலிருக்கும் பண்டிதர். (மிருச. எo.)

நியுதம்—இலட்சம். திவாகரம் கஉ-ஆவதிற் காண்க.

நியூநம்—1. குறைவு. (உ-ம்.) "நியூநாதிகங்கள்" (சி. சி. உ: உஅ.) 2. தோல்வித்தானம் இருபத்திரண்டில் பதினேராவது; அது: தன்னுற் சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையினிலைபெறுத்தி மூறுப்புக்களை முற்றக்கூறுது சிலவறுப்புக்கள் குறைவுபடக்கூறுதல். (சி. சி. அளவை.)

நியோகதற்றம்—எதிரியின் மேல்வித்தன மறியாமை. (உ-ம்.), "எதிரிதன்மேல்வித்தன மறியாமை-யிசைப்பருநியோககுற் றந்தான்" (த. நி. போ. ஈ0ச.)

நியோகம்—செலுத்தல். (பரா. மி. எ0.)

நியோகித்தல் — ஏவுதல். (சி. சி. உ: எச. சிவாக்.)

நிர் — எதிர்மறையல்லது அபாவத்தை நிச்சயத்தைக்கருதுமோ ருபசர்க்கம்.

நிர்க்குண்டி—வெண்ணெய்சி. (சூ. நிக. ச: உரு.)

நிர்குணம் — 1. குணமின்மை. 2. மாயை யோடுகூடாத பிரமம். (த. நி. போ. கூகூ.)

நிர்குணன்—கடவுள். (உ-ம்.) "சோதிநிர்க் குணநிரஞ்சனன்" (சிவரக. காயத்திரி. சு.) சாத்துவிகம், இராசதம், தாமதமென்னுங் குணங்களோநீங்கிநிற்பவன். (சிவஞாந போத விருத்தி. கூ: ஈ.)

நிர்சரம்—சைநத்திற்சொல்லப்படும் சத்த பதார்த்தங்களுளொன்று. (த. நி. போ. கஈ.)

நிர்சலம்—அசைவின்மை. (சி. சி. அ: உஉ. ஞாநப்.)

நிர்சலயோகி—யோகசக்கியாசி, சர்வகரு மங்களையும்விடுத்துச் சலநமில்லாத சமாதியை யுற்று எவன்நிர்ச்சலமாயிருக்கின்றானோஅவன். (கூர்மபு. வருணா. சா0. உரை.)

நிர்சலை—சலநமற்றசத்தி. (சி. சி. க: சஎ. ஞாநப்.)

நிர்சீவன் — சைநத்திற் சொல்லப்படுஞ் சத்தபதார்த்தங்களிலொன்று. (த.நி.போ.கஈ.)

நிர்ணயம்—1. நிச்சயம். (வி-ணி.) 2. நியாய நூலிற்சொல்லப்பட்ட பிரமேயம்முதலிய பதி னாறு பதார்த்தங்களுளொன்று; அஃதாவது: அவ தாரணஞாநம். (சி. பி. கை.)

நிர்ணயித்தல்—தீர்மானித்தல். (வழக்.)

நிர்த்தத்துவன்—தத்துவாதீதன். (சங்கற்பநி. மாயாவா. ஈ.)

நிர்த்தாரணம்—ஆதாரமற்றது. (பி-வி.)

நிர்த்துகம்—கஷாயம். (உ-ம்.) "மருதநிலத்தா ற்றுநீர்நிர்த்துகத்திற்காம். (தைல.பாயிர.உசு.)

நிர்த்தேசம்—1. காண்பித்தல்.(உ-ம்.)"வாழ்த் துவணக்கொடுவத்துநிர்த்தேசமென மூன்று" (வேதா. சூ. அ.) 2. விரித்துக்கூறல்.

நிர்த்தேசித்தல்—நிர்த்தேசம்பண்ணல். (வே தா. சூ. அ: உரை.)

நிர்நாமம் — அருகர்கூறுமட்ட குணத்தொ ன்று. (த. நி. போ. உஎஉ.)

நிர்ப்பிரதீட்சை—மலபரிபாகமுடையவராய வழியும் தீட்சைக்குப்பின் ஒருதலையான் வழு வின்றி அநுட்டிக்கக்கடவனவாகிய சமயாசாரங் களே யநுட்டிக்கும் ஆற்றலுமறிவுமிலராயிரு க்கு மற்றைக்கருமங்களோடுகூடச் சமயாசா ரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து நித்தியக்கருமமாத்திரையில் இயன்றமட்டும்அதி காரமுடையராகச் செய்யுந்தீட்சை. இதுசமயம் விசேடம் நிருவாணமென மூன்றுவகைப்படும்; அவற்றுள்: சமயமும் விசேடமும் ஒரோவொன் றேயாம் ஏனை நிருவாணதீட்சை தேகாந்தத் தின் முத்தியைப்பயக்கு மசத்தியோநிருவாண மெனவும் அப்பொழுதே முத்தியைப்பயக்குஞ் சத்தியோநிருவாணமெனவும் இருவகைப்படும். [சமயாசாரசுத்தியோடு செய்யப்படும்நிருவாண தீக்கையும் அதற்கங்கமாயுஞ் சுதந்தர மாயுஞ் செய்யப்படுஞ் சமயவிசேடங்களும் நிர்ப்பிர தீட்சையெனவறிக.] சி. சி. அ: ச. சிவஞா.)

நிர்ப்பிரபாவனை— மகேச்சுரிய பாவனை. (கூர்மபு. வருணா. சஈ. உரை.)

நிர்ப்பிரமம்—நிர்ப்பிரதீட்சை. (உ-ம்.)"பால் றொடுவாலிசர்விருத்தர்பனிமொழியார் பலபோ கத்தவர்வியாதிப்பட்டவர்க்குப்பண்ணுஞ் – சில மதுநிர்ப்பிரஞ்சமயாசாரத்திற்கழ்சுத்திசமயியுத்தி ரர்க்குநித்தத் – தேலுமதிகாரத்தையியற்றித்தா னுமெழினிரதிகாரையெனின்றிரண்டாய்வி ளங்குஞ் – சாலநிகழ்தேகபாதத்திறைசத்திய நிருவாணமெனச்சாற்றுங்காலே" (சி.சி.அ:ச.)

நிர்ப்பிரமை—நிர்ப்பிரதீட்சை. (சி. சி. அ: ச. ஞாநப்.)

நிர்ப்புதம்—அற்ப்புதம்பதின்மடங்கு கொண் டது. (உ-ம்.) "அயுதஞ்சகமொருகோடிஅற்புத நிர்ப்புதமணந்தம்" (சிவரக. விசையை. கஉ.)

நிரம்பாத்தூக்கம்—தூங்கல். (சூ.நிக.க:எ.)

நிரம்பாமென்கொல்—மழலை. (சூ.நிக.க0:கூ.)

நிர்மிதம்—சிருட்டிக்கப்பட்டது. (த.நி.போ. ககரு.)

நிர்மலம்—களங்கமின்மை. (உ-ம்.) "கரு மருவுகாயத்தைநிர்மலமதாகவே" (தா யு. தே சோ. க.)

நிர்மலதை — மலரகிதமாயிருக்குந்தன்மை. (சி. சி. உ: க. சிவாக்.) மலம்-அழுக்கு.

நிர்மாணம்—செய்கை. (வழக்.)

நிர்மாலியம்—நிருமாலியம். (வி-ணி.)

நிர்மிதம்—நிருமிதம். (வழக்.)

நிர்மூலம்—நிருமூலம். (வழக்.)

நிர்வசநம்—பேசாதிருத்தல். (வழக்.)

நிர்வத்தியம்—இயற்றப்படுவது.(பி-வி. கஉ. உரை.)

நிர்வாகம்—நிருவாகம். (வழக்.)

நிர்வாணம்—1. நிருவாணம். 2. மோட்சம். (சைவச. ஆசாரிய. சுசை. உரை.)

நிர்வாணி—நிருவாணி. (வழக்.)

நிர்விக்கினம்—இடையூரில்லாமை. (உ - ம்.) "நிர்விக்கினபரிசமாத்தி" (சி.சி.பாயிர.க. சிவாக்.)

நிர்விகர்ப்பக்காட்சி — சாமானியமாக ஒரு வஸ்துவைக்காண்பது. (சி.சி.அளவை.க.சிவாக்.)

நிர்விகற்ப்பகம்—விகற்பமில்லாதது. (சி.சி. அளவை. க. சிவாக்.)

நிர்விகற்பம்—வேறுபாடின்மை. (வி-ணி.)

நிரக்கம்—சுட்டறிவின்மை. (உ-ம்.) "நிரக்கம்பெருகி" (கோயிற்பு. நடராச. கசு.)

நிரகங்கிருதி — புறவிவகாரம். (வேதா. சூ. கசஅ. உரை.)

நிரங்கிருதி—நிரகங்கிருதி. (உ-ம்.) "உண்டிலையென்னுமலகங்கிருதிநிரங்கிருதியுமல்" (வேதா. சூ. கசஅ.)

நிரங்குசம்—கட்டுப்படாமை. (வி-ணி.)

நிரஞ்சநம்—1. இரசகர்ப்பூரம். (வைத்தியபரி.) 2. நிறைவு. 3. மயக்கமின்மை. (திருவிளை. தீர்த்தவி. எ.) 4. மோக்கம். 5. வெளி. (2, 3, 5-பிங்கல. ஙஎஒ.அ.)

நிரஞ்சநன்—1. அருகன். (சூ. நிக. க: ஙி.) 2. மறைப்பில்லாதவன், கடவுள். (உ-ம்.) "நிர்விகற்பன்நிர்த்தத்துவன்நிரஞ்சநன்" (சங்கற்ப நி. மாயாவா. ஙூ. அடி.)

நிரஞ்சநி—பார்வதி, மயக்கமில்லாதவள். (வழக்.)

நிரத்தம்—கூடாமை. (சி. சி. அளவை. க. சிவாக்.)

நிரத்தல் — 1. கூடியொழுகுதல். (உ-ம்.) "நேராநிரந்தவர்நட்பு" (வள். அஒக.) 2. நிரல்படக்கோத்தல். (உ-ம்.) "நிரந்தினிதுசொல்லுதல்" (வள். சுசஅ.) கலத்தலுமாம்-நிரந்தரிக்குஞ் சடையார். புகலுரந்தாதியிற்காண்க. 3. நிறைதல். (உ-ம்.) "தறுமுதிண்காம்பினத்துணமெங்கணும்-நிறைநிரிமுழுவதுநிரந்த நீண்முகில்" (சேதுபு. கந்தமா. உஉ.) 4. பரத்தல். (சிந்தா.)

நிரத்தி—நிறைவித்து. (உ-ம்.) "பள்ளமேடுநிரத்திப்படாமழை" (சேதுபு. அக்கினிதீர்.கூஉ.)

நிரதம்—எப்போதும். (உ-ம்.) "வரதனேநிரதமேத்தெடுப்பாம்" (சூதை. ஞாந. க: ஙி.)

நிரதிகாணதீட்சை — ஒருவகைத்தீட்சை. (சி. சி. பாயி. ஙூ: ஞாநப்.)

நிரதிகாணம்-ஆதாரமின்மை. (சி.பி.கை.எ.)

நிரதிகாணன் — ஆதாரம்வேண்டாது நிற்பவன். (சி. சி. அ: உ. ஞாநப்.)

நிரதிகாரதீக்கை—நிர்ப்பீசதீட்சை. (சி. சி. அ: சு. மறை.)

நிரதிகாரம்—நிரதிகாரதீட்சை. (சி. சி. அ: சு. சிவாக்.)

நிரதிகாரன்—பக்குவமற்றவன். (வழக்.)

நிரதிகாரி-பரமகர்த்தா. (உ-ம்.) "முன்கூறிய நிரதிகாரியாயியபரமகர்த்தாவுக்கு" (சி. சி. க: ஙூஅ. மறை.)

நிரதிகாரை—ஒருதீட்சை; இது: சமயிக்குப் பூசையாதியில் அதிகாரங்கொடாததும் புத்திரகனுக்குப் பிரதிட்டைமுதலிய தன்மஞ்செய்தற்கு அதிகாரங்கொடாததுமான தீக்கை. (உ - ம்.) "எழினிரதிகாரையெனநின்றிரண்டாய்விளங்கும்" (சி. சி. அ: சு.)

நிரந்தம்—குரங்கு. (உ-ம்.) "கோசலேச்சனிரந்தவினங்கொடுகோதிலாநெறிகொண்டகுரம்பினில்" (சேதுபு. சேதுவந். சசு.)

நிரந்தரம்—எப்பொழுதும். (உ-ம்.) "பொன்னிரந்தரம்வைகுமார்பிறைபுரிவுகொண்டு" (சேதுபு. கவிதீர்த்த. சு.)

நிரந்தரான்—கடவுள். (வழக்.)

நிரந்தரி—பார்வதி. (வழக்.)

நிரந்தரித்தல்—நிறைதல்.

நிரந்தரியன்—பூரணவியாபி. (வா சு தே. ககூசு.)

நிரந்தரம்—தவாரமின்மை. (வழக்.)

நிரந்து—1. ஒழுங்குபட்டு. (ஐங்குறு.) 2. பரந்துநின்று. (பரிபாடல்.)

நிரநுயோச்சியம்-உடன்படாமைக்குரியது. (உ - ம்.) "நிரநுயோச்சியாதுயோகம்" (சி. சி. அளவை. கசு. மறைஞா.)

நிரம்பம்—ஒத்தல். (உ-ம்.) "நிரம்பமில்யாக்கை" (கலி. கூசு.)

நிரப்பு-1. சரித்திரம். (உ-ம்.) "நெருநலுங்கொன்றதுபோலுநிரப்பு" (வள். கoசுஅ.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

நிரப்புதல்—நிறைத்தல். (வழக்.)

நிராபி—மஞ்சள். (வைத்தியபரிபா.)

நிரம்பான்—1. அருகன். (சூ. நிக. க: சு.) 2. சிவன். நக்கன் என்னும் பெயராற்கொள்க. 3. வத்திரமில்லாதவன்.

நிரம்பல் — நிறைவு. (உ-ம்.) "நிருத்தன்சடைமேனிரம்பாமதியன்" (திருவதிகைவீரட்டம். தேவாரம்.

நிரம்பவழகியர்-சேதுபுராணஞ்செய்தஒரு நூலாசிரியர்.

நிரம்பாச்சொல்—நிரம்பாமென்சொல்.

நிரம்பாத்தூக்கம்—தூங்கல். (சூ. நிக. க: எ.)

நிரம்பாமென்சொல்—மழலைமொழி. (சூ. நிக. கo: க.)

நிரம்பியபுட்பம்— } வாழை. (வைத்திய
நிரம்பியம்— } பரிபா.)

நிரம்புதல்—நிறைதல். (உ-ம்.) "நிரம்பல்" பார்.

நிரயம்–நரகம். (உ-ம்.) "கெவ்வாய்நிரயத்து வீழ்த்துமால்" (இன்னிசை. கசு: சு.)

நிரல்—வரிசை, ஒழுங்கு. (உ-ம்.) "நேரின மணியைநிரல்படவைத்தாங்கு" (நன். பொதுப் பா. கசு.)

நிர்வதி—எல்லையின்மை.

நிரவயன்—கடவுள். (வழக்.)

நிரவல்—நிரவுதல். (வழக்.)

நிரவுதல்—நிரம்புதல். (வழக்.)

நிரனிறை—1. ஒழுங்காகநிறுத்தல். (வழக்.) 2. நிரனிறையணி. (உ-ம்.) "ஏதுநுட்பமிலேச நிரனிறை" (தண்டி. உசு.)

நிரனிறையணி — முன்னர் வைக்கப்பட்ட சொற்பொருள்களோடு பின்னர்வைக்கப்படுஞ் சொற்பொருள்கள் முறையேசேர்ந்து பொருள் படுமாறு வரிசையாகநிறுத்திப் பாடப்படுமணி. (தண்டி. சுசு.)

நிரனிறைவழு — செய்யுள்வழுவிலொன்று; அது: நிரன்முறை பிறழவைப்பது. (தண்டி. சொல்லணி. கஅசு.)

நிராகரணம்— } மறுத்தல். (சி. சி. அ: கச.
நிராகரித்தல்– } நிரம்ப.) மூன்றுமொன்
நிராகரிப்பு— } றே.

நிராகாராத்தியாநசமாதி — வடிவறுதியாகச் செய்யப்படு மொருவகைச்சமாதி. (சி. சி. அ: ஙச. ஞாநப்.)

நிராகாரபாவநை — மகேச்சுரியபாவநை. (கூர்மபு. வருணு. சஙு. உரை.)

நிராகாரம்—1. உபவாசம். 2. நிராகரிப்பு. 3. வடிவமில்லாதது. (த. நி. போ. உ0டு.)

நிராகாரன்—1. கடவுள். 2. சூக்குமசரீரன். (1, 2-வழக்.)

நிராசம் — 1. எதிரிடை. 2. நம்பிக்கையின்மை. 3. விடுதல்.(உ-ம்.)"வந்துழிக்காண்க"

நிராதாரசமாதி—ஆதாரமற்றசமாதி. (சி. சி. ச: ஙசு. மறை.)

நிராதாராசிவயோகம்—ஒருவகைச் சிவயோகம். (சி. சி. அ: ங. சிவாக்.)

நிராதாரதீக்கை — விஞ்ஞாநகலர் பிரளயாகலர்களுக்குச்சிவன் குருவடிவின் மறைந்து நில்லாது நேரேசெய்யுந்தீக்கை. (சி. சி. அ: உ: சுப்.)

நிராதாரம்–1. அந்நுவயவெதிரேகங்களால் நேநிநேதிசெய்து அறிவித்தல் வேறுபடுத்தல் நித்தியமாக்கல் சொரூபநிச்சயம்பண்ணல் இவற்முற்றத்துவங்களே வேறுக்கிச் சமாதிபொருந்திக் குருவாற் றன்னைக்கண்டு தானுந்தனக்குயிராயிருக்க அருளைக்கூடுவது. (உ-ம்.) "ஓதாருநிரா-ஆதாரநிராதாரமீதாநமெனமூன்றுமுயிர்க ளிறைவனடியடையுநெறி" (சிவப்.) 2. ஆதரவின்மை.

நிராதாரன்–1. ஆதாரமற்றவன். 2. கடவுள். (1, 2-வழக்.)

நிராமயம்—நோயின்மை. (உ-ம்.) "நிராமய பரமாநந்தநிருத்த" (திருவிளை. வரகுண. உஉ.)

நிராமயன்–1. சிவன். (உ-ம்.) "ஆகமம்"பார். 2. நோயில்லாதவன்.

நிராமாலு—விளாமரம். (வைத்தியபரிபா.)

நிராயுதன்—1. அருகன். (சூ. நிக. க: ஙு.) 2. ஆயுதமில்லான்.

நிராலம்பசாலம்பம்–சிவத்தியானம். (சி.சி. க: ருச. ஞாநப்.)

நிராலம்பம்—1. ஆதாரம்வேண்டாதது. 2. யசர்வேத உபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.)

நிராலம்பன்–கடவுள், பற்றுக்கோடில்லான்.

நிராலம்பசிவத்தியாநம்—ஞாநம். (சி.சி.அ: கஅ. ஞாநப்.)

நிராலம்பித்தல்— பற்றுக்கோடின்மைகாட்டல். (சி. சி. அ: ஙo. ஞாநப்.)

நிரியாசம்—பிசின்; அது: குங்குலியமுதலியன. (உ-ம்.) "தப்புபலநிரியாசம்" (லைதல. டாயிர. உஅ.) (சிந்தர.)

நிரியாணம்—1. சாவு. 2. யானைக்கடைக்கண். (சூ. நிக. ங: எ.)

நிரீக்கணம் — நிரீட்சணம் அட்டசுத்தியிலொன்று, ஆதித்தன், அக்கினி, சந்திரன்என்னு மூவரும் முறையே வலக்கண்ணும் நெற்றிக்கண்ணும் இடக்கண்ணுமா வாராதலால், வலக்கண்ணிஞலே அதனை உலர்த்தினதாகவும் நெற்றிக்கண்ணிஞலே தகித்ததாகவும், இடக்கண்ணிஞலே அமுதங்கொண்டு நனைப்பதாகவும் பாவிப்பது. (சைவச. பொதுவி. கருடு. உரை.)

நிரீச்சுவராசாங்கியம்–சூனியவாதம். (வழக்.)

நிரீச்சுவராசாங்கியன்–புருடன்சந்நிதியிலே மாயைதானே தநுகரணபுவநபோகமாய்த் தோன்றுமென்று சொல்லுபவன். (சி-பி.)

நிரீச்சுவரவாதம்—நிரீச்சுவராசாங்கியம்.

நிரீச்சுவரவாதி — சிருட்டிகர்த்தா வில்லையென்று சாதிக்கிறவன். (சி. சி. க: க. சிவாக்.)

நிரீட்சணசுத்தி—கண்ணூறுகழிப்பு.

நிரீட்சணம்—1. பார்வை. 2. பார்வையின்மை. 3. மதிப்பு. (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நிரீட்சமாணம்–1. நம்பிக்கை. 2. பார்த்தல். (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நிரீட்சித்தல்—பார்வை பார்த்தல். (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நிரீட்சிதம்—காணப்பட்டது. (வழக்.)

நிரீட்சிதர்—1. அருளடைந்தவர். 2. பார்க்கப்பட்டவர்.

நிருகேதுகம் — ஏதுவில்லாதது, யாதொரு ஏதுவுமில்லாமல் வருவது. (சி.சி.அ:உ.சிவாக்.)

நிருச்சுவாசம்—சுவாசமடக்குதல். (சிவதரு. எ: கசஅ.)

நிருசன் — வாதராயணனுக்கும் அகூந்தரிக்கும்பிறந்த ஒரு மகன். (த. நி. போ. கடுக.)

நிருணயம்—1. ஆராய்வு. 2. தீர்ப்பு. 3. நிச்சயம். 4. நியமிப்பு. (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நிருணமன்—1. அருகன். 2. கடவுள்.

நிருணித்தல்—நிண்ணயம்பண்ணல். (வழக்.)

நிருத்தம்—1. கூத்து; அது: கலைஞாகமறுபத்துநான்கினுளொன்று. (உ-ம்.) "எந்தை-யந்தமிலாவாகந்திருத்தமளித்தருளென்று" (கோயிற்பு. பதஞ்சலி. க.) 2. பதம்பிரித்தல். 3. பற்றில்லாமை. (சிவதரு. அ: கூசு.) 4. வேதங்களின் சொற்களுடைய பொருளை யறிவிக்குமொரு வேதாங்கம். (சைவவி. உo.)

நிருத்தமாது —நாடகக்கணிகை. (சூ. நிக. உ: சுசு.)

நிருத்தன்–1. சிவன். (உ-ம்.) "ஆகமம்"பார். 2. நடிப்போன்.

நிருத்தாநுஷ்டம் — கூத்துவிகற்பங்களுக்கமைந்த வாச்சியக்கூறுகளுளொன்று; அது: நிருத்தத்துக்குவாசித்தல். (சிலப்.அரங்கே.கசஉரை.)

நிருத்தி–1. அர்த்தம்பண்ணுதல். (பி-வி.சுகூ.) 2. பதச்சேதம்பண்ணிவிளக்குதல்.

நிருத்தியலங்காரம்—பிரிநிலை நவிற்சியணி. (குவலயா.)

நிருதர் — இராட்சதர். (உ-ம்.) "நிருதர்ச் செற்றோய்" (கூர்மபு. சுவேதவரா. நி.) [நிருதி குலத்திற்பிறந்தவர்களென்பது.]

நிருதி–1. இராக்கதத்தி. (இராமா. ஆரணிய கா. சூர்ப்பந. கஙஎ.) 2. தென்மேற்றிசைப்பாலன். (சூ. நிக. கஉ: எக.) 3. நிவிர்த்திகலையிற் பிருதிவிதத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) 4. பகலினிகழும் பன்னிரண்டாமுகூர்த்தம். (விதாந. குணகுண. எகூ. உரை.) 5. மூதலெழுவள்ளலிலொருவன். (சூ. நிக. உ: உகூ.) 6. மூலம். (விதாந. குணகுண. எகூ. உரை.)

நிருபசரிதம்—உபசாரமில்லாதது. (சி.சி. க: சுஅ. ஞாநப்.)

நிருபம்—1. கட்டளை. (வழக்.)

நிருபன்—அரசன். (சூ. நிக. உ: கஉ.)

நிருபாதநவாதி– மூதற்காரணத்தினின்றும் பிரபஞ்சந்தோன்றவில்லையென்னுமவன். (சி. சி. க: நு. ஞாநப்.)

நிருபாதானம்—மூதற்காரணமில்லாதது. (சி. சி. வரலாறு. எ-ஆம் பக்.)

நிருபாதிகம்–உபாதியற்றது, தடையற்றது. (சி. சி. பாயிரம்.)

நிருமலன்—1. அருகன். (உ-ம்.) "நிருமலன் றண்மூலங்கழிதல்செய்யாதுய் மி னென் னினும்" (திருநூற். நிசை.) 2. சிவன். (சூ. நிக. க: எ.) 3. மலத்தொடக்கற்றவன். (உ-ம்.) "நிருமல ரஞ்சனைசேய்பணிமாலத்தர்" (மறைசை. நிஎ.)

நிருமாணம்—நிருமிப்பு. (வழக்.)

நிருமாலியம் — பூசித்துக்கழித்தபொருள். (வழக்.)

நிருமித்தல்–1. ஆராய்தல். (பிங்கல.கூஎகூo.) 2. உண்டாக்குதல். (உ-ம்.) "மயன்நிருமித்ததவியவவ்விமானஞ்சாத்தி"(திருவிளை. இந்திரன் பழி. அகூ.)

நிருமிதம்—1. நியமிப்பு. (வழக்.)

நிருமிதி—சிருட்டி. (உ-ம்.) "இலதுகாத்தனிருமிதியிச்சைசெய்திநிகழ்நடமாகுமன்றே" (கோயிற்பு. பதஞ்சலி. சுசு.)

நிருவகித்தல்—1. தாங்குதல். 2. நிலைப்படுத்தல். (1, 2-வழக்.)

நிருவாகம்—1.காரியத்தையியற்றப்போதிய சத்தியுடைமை. 2. காரியப்படுத்துதல், நிறைவேற்றுதல். (1, 2-வழக்.)

நிருவாகி— காரியமுடிக்குஞ் சமர்த்தன். (வழக்.)

நிருவாகித்தல்—நிருவகித்தல். (வழக்.)

நிருவாணதீட்சிதர்–சமயதீட்சை நிருவாணதீட்சை விசேஷதீட்சை யென்னும் மூன்றும் பெற்றுக்கொண்டு சந்தியாவந்தகம் சிவலிங்கபூசையென்னு மிரண்டனையு ஞாநபூசையு மநுட்டிப்பவர். (சைவவி. கூஉ.)

நிருவாணதீட்சை–மூவகைச் சிவதீட்சைகளிலொன்று; அஃது: ஆறு அத்துவாவைச் சோதித்துநீக்கி ஆணவமாவைத் திருவடியிலேகூட்டுந் தீட்சை. இத்தீட்சை அசத்தியோநிருவாணமெனவுஞ் சத்தியோநிருவாணமெனவு மிருவகைப்படும். அவற்றுட் சத்தியோநிருவாணதீட்சைபெற்றோர் பெற்றபொழுதே சரீரம்நீங்கி முத்தியைப்பெறுவர். அசத்தியோநிருவாண தீட்சைபெற்றோர் தீட்சையிற் சஞ்சிதமும் ஆகாமியமுஞ்சோதித்துச் சரீரம்நிற்பதற்கேது வாய்ப் புசிக்கப்படும் பிராரத்தகன்மஞ் சோதிக்

கப்படாமையால் ஆயுள்முடிவில் சரீரம் நீங்கி முத்தியையடைவர், (சைவச. ஆசாரி: சூஉ. உரை. (சித். பிர.)

நிருவாணம்—1. இருக்குவேத உபநிடதங்களுளொன்று. (கூர்மபு.அட்டமூ. உசு. உரை.) 2. உடையின்மை. 3. நிருவாணதீட்சை. (சைவச. ஆசாரி. சூஉ. உரை.) 4. பிறப்பொழிபு.

நிருவாணி—1. அருகன். 2. ஆறத்துவாவையுங்கடந்தஞானி. (ஒழிவி. அருள. கo. (சி. சி. அ: நி. ஞாநப்.) 3. சிவன். (1, 3-நக்கன்பார்)

நிருவிகற்பக்காட்சி—பெயர்முதலியவற்றுற் பகுத்தறிதலின்றி இஃது ஒன்றுதோன்றுநின்ற தெனப் பொருளின் உண்மைமாத்திரையே யறியுஞாநசத்தி. (சி. சி. அளவை. கூ. சிவஞா.)

நிருவிகற்பசமாதி—ஒரு யோகநிலை. (சி.சி. கo: ச. ஞாநப்.) [விகற்பமில்லாதசமாதியென் பது பொருள்.]

நிருவிகற்பப்பிராமீதி — விசேடணத்தோடு கூடுதலின்றிப் பொருண்மைமாத்திரத்திற்றோய்ந்து இஃதொன்றெனத்தோன்றுமறிவு. (சைவப்பி. கூ.)

நிருவிகற்பம்—நிருவிகற்பக்காட்சி. (சி. சி. அளவை. கூ. சிவஞா.)

நிருவிடயாநந்தம் — விடயாநந்தம்போலத் தோற்றுதெதிரீடற்ற விடத்திற்றோன்றுமாநந்தம். (உ-ம்.) "கூடார்-நிருவிடயாநந்தசுகம்" (ஒழிவி. அருள. ஙகூ.)

நிருபசுபந்தம்—யாகமிருபத்தொன்றி லொன்று. (அபிதாநசி. யாகங்கள்பார்.)

நிருபணம்—சொல்லுதல். (சி. சி. சூ: எ. சிவாக்.)

நிருபாதிகம்—உபாதியற்றது. (சி. சி. சூ:எ. சிவாக்.)

நிருபித்தல் — நிச்சயித்தல். (சி. சி. ச: நி. சிவாக்.)

நிருபிதம்—நிச்சயிக்கப்பட்டது. (சி.சி.ச:நி. சிவாக்.)

நிரோதுகம்—ஏதுவின்றிவருதல். (சி. சி. க: க. சிவாக்.)

நிரை—1. ஒழுங்கு. (உ-ம்.) "திரைநிரை வணங்குந்தில்லை" (கோயிற்பு. பதஞ்சலி.அடு.) 2. நிரையசை.(உ-ம்.)"நிரையதுமூன்றுதானே நிலக்கணம்" (சூ. நிக. கஉ: கூசு.) 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. பசு. (சூ. நிக. ஙு: கஉ:) 5. பசுக்கூட்டம். (உ-ம்.) "தொறுக்கொண்டவரு யிற்தொறுநிரையுங்கவர்சூரன்" (பாரத. அருச் சுனன்றீர். சு.) 7. வரிசை. (உ-ம்.) "நிரைமணி மோலிசூடிநேரலர்வணங்கியேத்த" (கூர்மபு. அந்தக. அ.)

நிரைகவர்தல் — சத்துருக்கள், காலிகளைக் கவர்தல்; அது: புறப்பொருட்டுறையிலொன்று. வெட்சிமாலைசூடிச்செல்வோர்செய்வது. (சூ. நிக. கஉ: கூஉ.)

நிரைக்கிளம்பி—சூலாடி. (வைத்திய. கருப் பொ.)

நிரைதல்—மறைப்பு. (வழக்.)

நிரைத்த—இடைவிடாத. (சிந்தா.)

நிரைத்தல்—1. ஒழுங்காய்நிறுத்தல்.(உ-ம்.) "மூட்டநித்திலநிரைத்தபந்தரினைகைத்தசீரரி முகத்தகால்" (பாரத. இருட்டிண.) 2. கோத்தல். (திருமுரு. கசு. அடி. உரை.)

நிரைதல்—ஒழுங்குறநிரவுதல். (வழக்.)

நிரைநிறை—நிரனிறை. (வழக்.)

நிரைபு—குற்றுகரமுற்றுகங்களோடு நிரையசை ஒருசொல்விழுக்காடுபட விசைந்துவருவது. (உ-ம்.) "இருவகையுகரமோடியைந்தவை வினேநேர்புநிரைபுமாகுமெனப" (தொல். பொருள். ஙகசு.)

நிரையணி—அவுரி. (வைத்தியபரிபா.)

நிரைமீட்டல் — பகைவர்கள்கவர்ந்த காலிகளைத் திரும்பக்கவர்தல். (பாரத. நிரைமீட்சிச் சருக்கம்பார்.)

நிரையசை — குறிலிணைந்துங் குறினெடி லிணைந்துங் குறிலிணையொற்றடைந்துங் குறினெடிலொற்றடைந்தும் வருமசை. (உ-ம்.)"குறி லிணைகுறினெடிற்றனித்தொற்றடைத்து - நெறிவருநிரையசைநான்குமாகும்" (இலக்கணவி. எகச.)

நிரையம்—நரகம். (உ-ம்.)"அந்தமற்றநிரை யத்தழுத்தென்பான்" (சிவரக. நக்கிகேசுரர்நம னுக்கு. சு.)

நிரையொன்றுசீரியத்தளை—நிரையீற்று இயற்சீர்முன்நிரைமுதலியற்சீர்வந்தொன்று வது. (யா. காரிகை. உறுப். எ. உரை.)

நிரோட்டம்—மிறைக்கவியிலொன்று; அது: இதழ்முயற்சியாற் பிறக்குமுயிரும் மெய்யும் உயிர்மெய்யுமின்றிவரப் பாடப்படுவது. (உ-ம்.) "சித்திரப்பா"பார். [நிர் - இன்மை. ஒட்டம் - உதடு.]

நிரோதகம் — மறைப்பு. (சி. சி. உ: அச. சிவாக்.)

நிரோதநம்—அழுதலின்மை.

நிரோதம்—ஆணவமலம். (சி. பி. சை. சிவப் பிர. உ: உ. உரை.)

நிரோதித்தல்.— தகைதல், தடைப்படல். (வி-ணி. உஅடு.)

நிர்ணாதினி—பன்னிரண்கலைகளிலேழாவது; அது: அர்த்தசந்திரகலைக்குமேல் மூன்றங்குலம்

வியாபகம். வடிவு-திரிகோணம். தேவதை-சதாசிவன். தத்துவம் சாதாக்கியம். (சி-லி. கிரி. கூ-ஆம். உரை.)

நில்—தெரிநிலேவினேப்பகுதி.

நில்லாதநிலே—நிலேயாதநிலே. (உ-ம்.) "நில்லாதநிலேயிது" (சேதுபு. கடவுள்வாழ்)

நில்லாமை—அநித்தியம். (இராமா. ஆரணிய. மாரீச. உஉஉ.)

நில்லிகா—நிற்க. (பரிபாடல்.)

நீலக்கடம்பு—ஒருபூடு. (வைத்தியபரிபா.)

நிலக்கடலே—வேர்க்கடலே. (வழக்.)

நிலக்கணம்-செய்யுட்பொருத்தத்தில்வருங் கணப்பொருத்தத்துளொன்று; அது: மூற்றும் நிரையாய்வருவது. (இலக்கணவி. அ00.உரை.)

நிலக்கரி—பூமியிலிருந்தெடுக்கப்படு மொருகரி. (வழக்.)

நிலக்கறையான்—ஒருகறையான். (வழக்.)

நிலக்காரை—ஒரு மூட்செடி. (வழக்.)

நிலக்காளான்—ஒரு காளான். (வழக்.)

நிலக்கிழங்கு—நிலப்பனேக்கிழங்கு. (வைத்தியபரிபா.)

நிலக்குமிழ்—ஒரு செடி. (வழக்.)

நிலக்கூந்தல்—எலிச்செவிப்பூடி. (வைத்தியபரிபா.)

நிலக்கோட்டை—ஒருபூடு. (வைத்தியபரி.)

நிலத்தாமரை—முட்செவ்வந்தி. (வழக்.)

நிலத்துத்தி—ஒரு துத்தி. (வழக்.)

நிலத்துளசி—ஒரு துளசி. (வைத்தியபரி.)

நிலநெல்லி—ஒரு நெல்லி. (வழக்.)

நிலப்பயிர்—பெண். (வைத்தியபரி. கருப்பொ.)

நிலப்பலா—வேர்ப்பலா. (வைத்தியபரி.)

நிலப்பனை—ஒருபூடு, நிலப்பனேக்கிழங்கு. (வைத்தியபரிபா.)

நிலப்பாகல்—
நிலப்பாகை—
நிலப்பாலே—
} ஒருபூடு. (வைத்தியபரி.)

நிலப்பாலை—அம்மான்பச்சரிசி. (வைத்தியபரிபா.)

நிலப்பிளப்பு—கமர். (புகலூரந்தாதி. கஉ.)

நிலப்புழு—ஒரு புழு. (வழக்.)

நிலப்பூ—நால்வகைப்பூவினொன்று. (உ-ம்.) "கொடிப்பூ" பார்.

நிலப்போட்டு—1. ஒருவகைக்காளான். 2. மண்ணேத்தேய்த்திடுந்திலதம். குழவிகட்கு முழுக்காட்டினவுடனிடுவது. (வழக்.)

நிலம்—1. இடம்; அது: குறிஞ்சி, முல்லே, மருதம், நெய்தல் என நால்வகைப்படும். (சூ. நிக. கஉ: கச.) 2. கள்ளி. (மலேயக.) 3. பூமி. (உ-ம்.) "அடியிட்டநிலங்கிளேத்து" (திருவிளே. மாயப். கஎ.)

நிலம்பி—கொசுகு. (வைத்தியபரிபா.)

நிலம்பு—தாளி. (வைத்தியபரிபா.)

நிலமகன்—செவ்வாய். (சூ. நிக. க: சு0.)

நிலயம்—நிலேயம். (வழக்.)

நிலவடலி—சிறுபனே. (வழக்.)

நிலவல்—ஒளிசெய்தல். (உ-ம்.) "நிலவவாண்டினுக்" (பெரியபு. திருக்குறிப்பு. எஉ.)

நிலவறை—கீழறிலே. (பிங்கல. சுசு0.)

நிலவாகை—1. நில ஆவிரை. 2. நிலப்பாகல். (1, 2-வைத்தியபரிபா.)

நிலவாழை—ஒரு பூடு. (வழக்.)

நிலவி—நிலேபெற்று. (சிந்தா.)

நிலவிந்தை—ஒரு பூடு. (வழக்.)

நிலவிழுது—நிலப்பனே. (வைத்தியபரிபா.)

நிலவிளா—நிலவிளாத்தி. (வழக்.)

நிலவிளாத்தி—ஒரு மரம். (வழக்.)

நிலவீரியம்—பூநீறு. (வைத்தியபரிபா.)

நிலவு—1. ஒளி. 2. சந்திரப்பிரபை. (உ-ம்.) "நிலவுகாலுநெடுங்குடைமன்னவன்" (அரிச்ச. வேட்டஞ். க.) 3. சந்திரன். (உ-ம்.) "நிலவைப்புனைந்தசெஞ்சடைநின்மலன்" (கந்தபு. தக்கே உத். உஎ.) 4. தெரிநிலேவினேப்பகுதி. 5. நிலே பெறுதல். (உ-ம்.) "நீரொலித்தன்னநிலவுவேற்றூனேயொடு" (மதுரைக். ஙுசுங்.) (புறநா.)

நிலவுதல்—1. ஒளிசெய்தல். 2. மண்ணுதல். (புறப்பொ.) 3. விளங்குதல். (உ-ம்.) "மாவானிலவுநிலமங்கைவார்குழல்" (வாண. உச0.)

நிலவுமரி—நிலவுமரிப்பூடி. (வைத்தியபரி.)

நிலவேம்பு-கிரியாத்துச்செடி. (வைத்தியபரி.)

நிலவேர்—பூநாகம். (வைத்தியபரிபா.)

நிலன்—நிலம். (உ-ம்.) "கன்னலுஞ்செந்நெலும்புல்லுமாநிலனுங்கழிந்துபுறங்கிடக்கநடந்துபோய்" (திருவிளே. விடையி. கூ.) போலி.

நிலா—1. ஒளி. (சிலப்பதி.) 2. நிலவு. (உ-ம்.) "புன்-முறுவலென்னமுகிழ்த்தது வெண்ணிலா" (பெரியபு. தடுத்தாட். கசு0.)

நிலாமணக்கு—ஒரு பூண்டு. (உ-ம்.) "சுகபலேநிலாமணக்காயில்" (தைல. தைலவ. ககசு.)

நிலாமணி—சந்திரகாந்தம். மணி-கல்.

நிலாமுகி—நிலாமுகிப்புள். (வழக்.)

நிலாமுகிப்புள்—சகோரம். (பிங்கல. உசுங0.)

நிலாவிரை—ஓராவிரை. (வைத்தியபரிபா.)

நிலாவுதல்—நிலவுதல். (வழக்.)

நிலியர்—நிற்பாயாக. (புறநா.)

நிலீயர்—நிலேபெறுவாயாக. (புறநா.)

நிலுமாகன்—ஞாந இந்திரிய தத்துவத்திருக்கும் பஞ்சருத்திரரிலொருவன். (வி-ணி. உஎஉ.)

நிலை—1. இடம். (பிங்கல. எகக.) 2. கதவு நிலை. (உ-ம்.) "வன்னிலைக்கதவநூக்கி" (திருவிளை. அங்க. அ.) 3. சரியையுமுதலிய நான்கு பாதம். 4. தன்மை. (உ-ம்.) "கொழுஞ்சூட்டருந்தியதிருந்துநிலையாரத்து" (பெரும்பா. சசு.) 5. நிச்சயம். (வழக்.) 6. நிற்றல். (புறநா.) (ஆகுபு.) 7. நிலைபரம். (உ-ம்.) "நிலையிலாவுலகினிடைநிற்பனவும்" (இராமா. மாரீசன்வதை. உ.) 8. நிலைமை. (உ-ம்.) "நிலைமையுறுமற்றையதாய்நின்றவடவேங்கடத்தின்" (சேதுபு. திருநாட்டு. க.) 9. தெரிநிலைவினைப்பகுதி. 10. பூமி. (பிங்கல. சசஅ.) 11. பொழுது. (உ-ம்.) "அந்நிலையிடுபோர்காண்பாரினவருங்கேட்க" (திருவிளை. அங்க. கஅ.) 12. யுத்தநிலை; அவை: பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடமென நால்வகைப்படும். (சூ. நிக. கஉ: ஙக.) நிலை என்பதனைச் சிந்தாமணியில் ஒருவகையிசைப்பாட்டென்பர். (சிந்தா.)

நிலைகலங்குதல்—தடுமாறல். (வழக்.)

நிலைஇ—நிலைபெற்று. (பத்துப்பா.)

நிலைஇய—நிலைபெற்றன. (சிலப்பதி.)

நிலைஇயர்—நிலைபெறுவதாக. (பத்துப்பா.)

நிலைத்தமை — நிலைத்திருக்குந் தன்மை. (உ-ம்.) "அகநிலைத்தமைபுறத்தினுங்தெரிக்குமாறனைய" (சேதுபு. நைமிசா. கஉ.)

நிலைத்திணை-நடையில்லது. (தொல்.மொழிமரபு. கஙஉ.)

நிலைத்தல்—1. உறுதிகொள்ளல். 2. நிலைபெறுதல். 3. நிற்றல். (1, 2, 3-வழக்.)

நிலைத்தேர்— அலங்காரத்துக்குச் செய்து தெருவில் ஓரிடத்தே நிறுத்தப்பட்டிருக்குந் தேர். (திருவிளை. திருமணப். சுஉ.)

நிலைதல்—நிலைப்படல். (வழக்.)

நிலைதளம்பல்—நிலைதளரல். (வழக்.)

நிலைநிற்றல்—நிலைபெறுதல். (வழக்.)

நிலைநிறுத்துதல்—நிலைப்படுத்துதல். (வழக்.)

நிலைநீங்காமை — ஆணைமை. (சூ. நிக. க. அ: சஎ.)

நிலைநீர்—நீர்நிலை. (உ-ம்.) "கூவணீணிலைநீர்களும்" (திருவிளை. அங்கக்.எ.) [இலக்கணப்போலி.]

நிலைப்படச்செய்தல்—தாபித்தல். (சூ.நிக. கூ: உஅ.)

நிலைப்படுதல்—நிலைநிற்றல். (வழக்.)

நிலைப்பாடு—உறுதிப்பாடு. (வழக்.)

நிலைப்பித்தல்—உறுதிப்படுத்தல். (வழக்.)

நிலைப்பு — திரங்கொள்ளுதல். 2. நிலை. (1, 2-வழக்.)

நிலைபரம்—நிலைமை. (உ-ம்.) "இன்பமுறுபாக்கியங்கணிலைபரமென்றுன்னுகின்றநெஞ்சன்வஞ்சன்" (சிவரக. சிவதன்மா. ச.)

நிலைபெறுத்தல் — நிலைநிறுத்துதல், நிலைபெறச்செய்தல். (சி. சி. கூ: ச. சிவஞாந.)

நிலைபேறுத்துதல்—நிலைபெறுத்தல்.

நிலைபேறுதல்—திரங்கொள்ளுதல்.

நிலைபேறு—அசையாமை. (வழக்.)

நிலைமண்டலவாசிரியப்பா — ஒருவகை யாசிரியப்பா; அஃது: எல்லாஅடியுமளவொத்து நாற்சீரடியாகவருது. (யா-காரிகைசெய்யு. கஉ. உரை.) [நிலைமண்டலம் - நின்றவாறுநிற்றலையுடைய மண்டலம். மண்டலம் - நாற்சீரடியொத்துவருவது.]

நிலைமாறுதல்-1. இடமாறுதல். 2. எழுத்துமுதலிய மாறிநிற்றல். (வர - று.) "வைகாகி" "வைசாகி"

நிலைமை—1. இயல்பு. 2. நிலை. 3. புகழ். (உ-ம்.) "நில்லாவுலகத்துநிலைமைதூக்கி" (பொருந. உஎசு.) [நிலைபெருந்தன்மையுடைத்தாகலின் புகழை நிலைமையென்றார்; இது: ஆகுபெயர்.] 4. மெய். (பிங்கல. கஅ0ங.)

நிலைமொழி—புணருமிருமொழிகளுள் முதலில்நிற்கு மொழி. (நன். கநிக. உரை.)

நிலையங்கி-உடன்மூற்றுமூடுகிற சட்டை. (வழக்.)

நிலையம்—இருப்பிடம். (வழக்.) 2. தேவர் கோயில். (சூ. நிக. நி: நி0.) 3. மருதநிலத்தூர். (சூ. நிக. நி: ச0.)

நிலைமைப்பத்திரம் — வித்துவான்கள் முதலானவர்களுக் குரிமையேற்படுத்தி யவ்வுரிமை சித்திப்பதற்காக எழுதப்படுவதாம். (மிரு. ச. ஙஙூ.)

நிலையல் — நிலைபெற்றுநிற்றல். (உ-ம்.) "நிகழ்ந்ததுகூறினிலையலுந்தினையே" (தொல். பொருள். சச.)

நிலையாமை—அநித்தியம். (உ-ம்.) "நிலைநிலையாமைநோக்கி" (திருவிளை. ஙகரப். க0நி.)

நிலையியற்பொருள் — ஓரிடத்தேநிற்குந் தன்மையையுடையபொருள். (சி. சி. க: நிச. சிவஞாந.) அசரம்.

நிலையிற்படுமவத்தை- சாக்கிரத்தாதமாகியலாடத்தாதத்தே நிகழுமைந்தவத்தை; அது: ஒருபண்டத்தைமறந்தவன் அந்தப்பண்டங் காணதபொழுது பிராணவாயுவுமியங்காமல் மூச்சித்திருந்த அவதரநிலையிற்படுமவத்தையில் சாக்கிரதாரியாதீதமும், அந்தப் பிராணவாயு இயங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்தறிவோமென்றுநின்ற அவதரநிலையிற்

படிமவத்தையிற் சாக்கிரத்துரியமும், அவ்விடத்திலன்றே போயிலேனென்று நினைவெழுந்திருந்த அவதரநிலையிற் படிமவத்தையிற் சாக்கிர சுழுத்தியும், இன்ன இடத்தன்றே பண்டம் வைத்தோமென்று விசாரப்பட்டநிந்த அவதரநிலையிற்படிமவத்தையிற் சாக்கிர சொப்பனமும் அத்தப்பண்டம்வைத்த இடத்திற்சென்று கண்டது நிலையிற்படிமவத்தையிற் சாக்கிரசாக்கிரமுமாம். இந்தநிலையிற்படிமவத்தைக்குக் கருவிகள் சுத்ததத்துவங்கள். (சிவப்பிர. வியாக்.)

நிலையுடைமை—எண். என்றபெயர். (சூ. நிக. அ: ச0.)

நிவசதி—வீடு. (வைத்தியபரிபா.)

நிவசநம் — புடவை. (வைத்தியபரி. கருப்பொ.)

நிவக்கும்—ஒங்கும். (ஐங்குறு.)

நிவத்தல்—உயர்தல். (திருக்கோ. கூடு. உரை.)

நிவந்த—1. மேலான. (உ-ம்.)"ஒளிறிலஞ்சியடைநிவந்த" (மதுரை. உசஅ.) 2. வளர்ந்த. (உ-ம்.) "நறுநீர்ப்பொய்கையடைகரைநிவந்த" (சிறுபா. சுஅ.)

நிவந்தது—எறிற்று. (பரிபாடல்.)

நிவந்து—1. எறி.(சிந்தா.) 2. ஒங்கி.(புறநா.)

நிவப்பு—1. உயர்வு. (உ-ம்.) "உருத்திரபாகந்தன்னைநிவப்புடனுரைத்ததில்லை" (கூர்ம பு. தக்கவே. எ.) 2. ஒக்கம். (உ-ம்.) "நிரைசெலனிவப்பிற்கொண்மூமயங்கி" (கு. பா. டுo.) 3. மேடு. (உ-ம்.) "நிவப்புமண்" (அரிச்ச.காட்டு. கூo.) 4. வளர்ச்சி. (உ-ம்.) "மால்வரைநிவந்த சேணுயர்வெற்பில்" (திருமுரு. கஉ.)

நிவர்த்தகன்—வேதமோதுஞ்சாதியிருவரிலொருவன்; இவன்: சங்கரனுபதேசிகன். (த. நி. போ. கஙடு.)

நிவர்த்தநம்—1. இருநூறுமுழ நீளமகலங் கொண்டது. 2. திரும்புதல். (உ-ம்) "வந்துழிக் காண்க"

நிவர்த்தித்தல்—மறுத்தல். (சி. சி. சு: க. சிவாக்.)

நிவர்தல் — உயர்தல். (உ-ம்.) "பொன்னிவரம்பலவா" (ம-தி. கூகூ.)

நிவறல்—கூடுதல்.(உ-ம்.)"வந்துழிக்காண்க"

நிவறுதல்—நிவறல்.

நிவாசம்—இருப்பிடம். நி-உபசருக்கம்.

நிவாதகவசர்—தோயமாபுரத்தசுரர். (மகாபாரதம். நிவாதகவசகால. கடு: உஉ.)

நிவாதம்—காற்றின்மை. (வழக்.)

நிவாரணம்—1. பிராயச்சித்தம். 2. போக்குதல். (சி. சி. உ: அச. சிவாக்.)

நிவி—மாமரம். (வைத்தியபரிபா.)

நிவிர்த்தி—1. இல்லாமை. (சி. சி. அளவை. க. சிவாக்.) 2. சாந்தியாதீதகலையிற் சுத்திதத்துவத்திலிருக்கும் ஐந்து புவனங்களுளொன்று. (சி-திரி. உக. உரை.) 3. திரும்புதல். 4. துறவு. 5. நிவிர்த்திகலை. (3, 5-சி. சி. உ: எசு. ஞானப்.) [தன்னிடத்தடைந்த பக்குவர்க்குச் சங்கற்பங்களை விடுவித்துத் திருப்புவிக்கையால் இப் பெயர்பெற்றது.]

நிவிர்த்திகலை — பஞ்சகலைகளுளொன்று; அது: மூலாதாரந்தொடங்கி உந்திக்குமேல் எண்விரலளவுநிற்பது. அதற்கு மண்டலம், அக்கினி, ஆதாரம், மூலாதாரமுஞ்சுவாதிட்டானமும், பிரகாசம் சொரிதழற்கொழுந்து, மலம் மாயாமலம். அவத்தை சாக்கிரம். மாத்திரை மூன்று. மந்திரம் இருபேயமுஞ் சத்தியோசாதமும். பதம் ஓமோ முதல் மாதேவாந்தமாக இருபத்தெட்டு. வன்னம் கூஷகாரம். புவனம் காலாக்கி முதல் வீரபத்திரர்முடிவாகநூற்றெட்டு. தத்துவம் பிருதிவி. தெய்வம் பிரமா. தொழில் சிருட்டி. (சிவப்பி. வியாக். பொது. உக. கஙo.)

நிவிர்த்தாளம் — நவதாளத்தொன்று. (சூ. நிக. கஉ: கoஉ.)

நிவேசனம்—1. இடம். (தைல. தைலவ.) 2. ஊர். (சூ. நிக. டு: கூடு.)

நிவேதநம்—தேவர்க்குச்சமர்ப்பிக்குநைவேத்தியம். (வழக்.)

நிவேதித்தல்—நைவேத்தியஞ் செய்தல். (திருவிளை. மூர்த்திவி. உஎ.)

நிழத்த—சருக்க, சுருங்க. (பரிபாடல்.)

நிழத்தல்—1. இல்லையாக்கல். (உ-ம்.)"அருவிமாமலைநிழத்தவும்" (பொருந. உகூடு.) 2. உள்ளதன்றுணுக்கம்.(தொல்.சொல். கூகo. உரை.) 3. ஒய்தல். (மதுரைக். கoகூ.) 4. நோக்குதல். (பத்துப்பா.)

நிழல்—1. அருள். (பத்துப்) 2. ஒளி. (பிங் கல. கஙகஎ.) 3. குளிர்ச்சி. (ஐங்குறு.) 4. சாயை 5. செல்வம். 6. தெரிநிலைவினைப்பகுதி. 7. விம்பம். (உ-ம்.) "நிழன்மேவியிருவென்று" (கோயிற்பு. இரணியவன்.) (2, 3, 4-சூ. நிக. கக: ஞகரவெ. உ.)

நிழலல்—நிழலுதல்.

நிழலவை—நிழலையுடைய. (பரிபாடல்.)

நிழலுதல்—நிழல்செய்தல்.

நிழற்றல்—1.ஒளிவிடல். சிந்தா.)2.நிழற்றுதல்

நிழற்றுதல்—1. சொல்லுதல். 2. நிழல்செய்தல், ஒளிசெய்தல். (உ-ம்.) "பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற" (சூ. நிக. காப்பு.) (ஐங்குறு.)

நிழன்ற—நிழல்செய்த. (பத்துப்பா.)
நிழலுவல்—ஒரு நாவல். (வழக்.)
நிற்கல்—நிற்குதல். (வழக்.)
நிற்த—நிற்பேன். (புறப்பொ.)
நிற்கை—நிற்குதல். (பழமலையந்தாதி. உற்கைக்குமாறு என்னு முதற்குறிப்புள்ளகவியிற் காண்க.)
நிற்பன — அசரம்; அது: மரமுதலியன. (உ-ம்.) "உலகினிடைநிற்பனவுநடப்பனவு நெறியினீன்த" (இராமா. மாரீசன்வதை. உ.)
நீற்பின்—நின்றால். (புறநா.)
நிற்பு—நிற்றல். பு-தொழிற்பெயர்விகுதி.
நிற்றர—நிற்றலைச்செய்ய. (பத்துப்பா.)
நீற்றல்—1. ஒழிதல். நெருநலளவும்வருத்திய பிணிஇன்றுநின்றது என்பது வழக்கு. நன்னூல். உருபுபுண. இயல்பின் விகாரமுமென்னுஞ்சூத்திரவுரையிலறிக. 2. நிலைநிற்குதல். (உ-ம்.) "என்றுமழுக்காறிகந்தானுமிம்மூவர்-நின்றபுகழுடையார்" (திரிகடுக.) 3. நிற்குதல்.
நிறத்தல்—நிறங்கொள்ளுதல். (வழக்.)
நிறம்—1. ஒளி, இயல்பு. (திருக்கோ. நிஅ. உரை.) 2. குணம். (சூ. நிக. அ: எகூ.) 3. சரீரம். (உ-ம்.) "செல்வங்கல்வி-நிறங்கலவாவீடுதரும்" (சேதுபு. அகத்தி. தீர். சு.) 5. மார்பு. (காஞ்சிப்பு. காப்பு.)6 வண்ணம். (உ-ம்.)"நிறக்தருங்குழலறிவையையிறுத்திவாளவுணர்" (பாரத. குருகுல. கஉ.) (சூ. நிக. அ: உசு.)
நிறீஇ—நிறுத்தி. (பத்துப்பா.)
நிறுஉம்—நிறுத்தும். (ஐங்குறு.)
நிறுத்தம்—நிறுத்துதல். (பத்துப்பா.)
நிறுத்தமை—பிரதிட்டைசெய்தல். (உ-ம்.) "இராகவனீடிலிங்கம் – பிறியாமைநிறுத்தமை பேசுவனென்றுபேசும்" (சேதுபு. இராமனருச். நி.)
நிறுத்தல்—1. தாபித்தல். 2. நிறுக்குதல், தூலைநிறுக்குதல். 3. நிறுத்தல்.(உ-ம்.)"வந்துழிக்காண்க.
நிறுப்பான்—1. தராசு. (பிங்கல. சசஎடு.) 2. தூலாராசி. (சூ. நிக. க: சுடு.) 3. நிறுப்பவன். (வழக்.)
நிறுப்பு—1. தாபிப்பு. 2. நிறுத்தல்.
நிறுவல்–1. நிலைபெறுதல். (உ-ம்.) "பூண்டபெரும்புகழ்நிறுவி" (இராமா.சடாயுகாண்.ஙக.)
நிறுவுதல் –1. நாட்டல். 2. நிறுத்தல்.
நிறை — 1. ஆடுக்குணம் நான்கினுளொன்று. (சூ. நிக. கஉ: கசு.) 2. கற்பு. (திருவள். வாழ்க்கைத்துணை. எ.) 3. சால்பு. (உ-ம்.) "நிறையுடைமைநீங்காமைவேண்டின்" (வள். கடுசு.) 4. தராசு. (பிங்கல. கசுஎடு.) 5. தூலாராசி. (சூ. நிக. க: சுடு.) 6. நிறுத்தலளவு.(மணிமே.) 7. தெரிநிலைவினைப்பகுதி. 8. நிறைவு. (உ-ம்.) "நிறைமொழிமாந்தர்"(கள்.உஅ.) 9. நீர்ச்சால். (சூ.நிக.எ:சுசு.) 10. தூறுபலம்.(சூ.நிக.எ:அக.)
நிறைதடம்–அட்டமங்கலத்தொன்று; அது: பூரணகும்பம். (திருவிளை. திருமணப். சுஎ.)
நிறைத்தல்—நிறையச்செய்தல். (வழக்.)
நிறைதநதூறு—சீந்தில். (வைத்தியபரிபா.)
நிறைதல்—1. திருத்தியாதல். 2. பூரணப்படுதல். (சூ. நிக. அ: கடு.) 3. பெருகுதல். (உ-ம்.)"நிறைதலோடுகுறைதலாபு" (சிவரக.க. கணபதிவந். ககூ.)
நிறைந்திடல்—நிறைதல். (சூ. நிக. அ: கடு.)
நிறைமொழி — 1. அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடுமொழி. (உ-ம்.) "வள். 28" 2. மந்திரம்.
நிறையறிகநவி—தராசு. (வழக்.)
நிறைவு—1. செறிவு. 2. பூரணம். (பிங்கல. உஅ.) 3. மிகுதி. (வழக்.)
நிறைவேறல்—சபலம். (சூ. நிக. நிக:)
நின்மலசாக்கிராம் — ஆசாரியராலே ஞானதீட்சைபெற்றுத் திரிபதார்த்தஉண்மையறிந்து சிந்தித்துத்தெளிந்து கருவிகள்நீங்க விசாரித்து நிற்பது. (சித்தா. கட். கடுஎ.) இருதயத்திலே மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னுமைந்துடனுங்கூடிநின்ற பாஷியகரணங்களினுலே காணப்பட்ட சத்தாதி பிரபஞ்சத்தையெல்லாஞ் சிவாகாரமாகவும் விஷயசுகங்களைச் சிவானந்தமாகவுங்கண்டு நீற்பது. (சி. சி. ச: ஙசு. சிவாக்.) பிரபஞ்சமநித்தியமெனத் தோன்றி ஆசாரியனுக் கிரகத்தினுலே பற்றுகப்புகுந்து பொறிபுலன்மேலிட்ட பசுகரணங்கள் சிவகரணங்களாயிருக்கை. (சிவப். கட். ச.)
நின்மலசிவம் — மலத்துடன்கூடாதசிவம். (சதாசிவரூபாம். க.)
நின்மலசிற்சத்தி—மலத்துடன்கூடாத ஞானசத்தி. (சி. சி. நிட: நி. ஞானப்.)
நின்மலசுழத்தி — தத்துவநீங்கி மேலான கேவலந் தானுய்நிற்பது. (சித்தா. கட். கடுஎ.)
நின்மலசொப்பனம் — கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடவேசற்றுப் பதைப்புண்டாவது. (சித்தா. கட். கடுஎ.)
நின்மலதுரியம் —கேவலம்நீங்கி அருளினுலே தன்னையுங்கண்டு அருளையுங்கண்டு அவ்வசத்தாய் நிற்பது. (சித்தா. கட். கடுஎ.)
நின்மலதுரியாதீதம்–சிவத்தைத்தரிசித்துச் சிவானந்தத்திலழுந்தல் (சித்தா. கட். கடுஅ.)
நின்மலம்—அழுக்கின்மை. (சிவப்பிரகாசம். க: க. உரை.)

நின்மலன்—1. அருகன். (உ-ம்.)"நீடுமலர்ப் பிண்டிநின்மல" (திருநூற். நிடு.) 2. சிவன். (உ - ம்.) "நின்மலனென்றிக்கண்ணினெருப் பெழ" (மச்சபு.ஆதிசிருட்.கூ.) 3. மலமற்றவன். (உ-ம்.) "நின்மலாபோற்றிபோற்றி"(திருவாச. திருச்சத. சுக.) [நிர்என்னும் வடமொழியின் சிதைவு.]

நின்மலாதீதாவத்தை--சுத்தாவத்தை. (சி. சி. ச: ஈஎ. சிவாக்.)

நின்மலாவத்தை–சுத்தாவத்தையின் காரிய மாகிய வோரவத்தை. (சித்தா. கட்..கடுஎ.) மேலாலவத்தை; கேவலாவத்தை சகலாவத்தை களிரண்டையுங் கீழ்முறைமையில்விட்டுச் சுத் தாவத்தையை மேன்முறையிற்றீண்டி முத்தி சிவத்துவாபி வியத்திமுறைமையி லுண்டாம் பொருட்டு, இதயத்தினின்றும் புருவமத்திய நுனிமட்டில் கண்டத்தினின்றும் பிரமாந்திர நுனிமட்டில் புருவமத்தியினின்றும் துவாத சாந்த நுனிமட்டில் ஒரொட்டாக இதயத்தி னின்றும் துவாதசாந்தநுனிமட்டிற்றுன்இவை களிற்போய்த்தங்குவது. இது சதேகை லிதே கையென விருவகைப்படும். அவற்றுள் சதே கை சீவன்முத்தித்தன்மையின் நிட்டையைப் பொருந்தியிருத்தல். விதேகை முத்தியடைந்த காலத்துச் சுவாந்தாநுபூதியைத் தியாகித் திருத்தல். (சி. சி. ச: ஈடு. மறை.)

நின்மாலியம்—நிருமாலியம்.(உ-ம்.)"நவமா நின்மாலியந்தீர்த்தம்புசியாதிருந்துமி லோம்" (சிவரக. தேவர்முறை. கஉ.)

நின்றவிடந்தீஞ்சார்ன் — குருவிச்சி; அது: புல்லூரி என்பர். (வைத்தியபரிபா.)

நின்றன்று—நின்றது. (பரிபாடல்.)

நின்றீயல்—நிற்றல். (உ-ம்.) "உறையொடு நின்றீயல்வேண்டுமொருங்கே" (கலி. கசடு.) [தொழிற்பெயர்த்திரிசொல்.]

நின்று–1. ஓரசைச்சொல். (உ-ம்.) "சொல்லி நின்றுன்" சொன்னன் என்பது பொருள். 2. எப்பொழுதும். (பரிபாடல்.) 3. நின்றது. (ஐங்குறு.)

நின்றுசிணுங்கி — சிறியாணங்கை. (வைத் தியபரிபா.)

நின்றுபயனின்மை — நூற்குற்றம் பத்தி னொன்று. (நன்னூல். பாயிர. குன்றக்கூறல் என்னுஞ்சூத்திரம்பார்.)

நின்றும்—ஐந்தாம்வேற்றுமையினீக்கவுருபு களினொன்று. (உ-ம்.) "ஊர்தியினின்றுமிழ்ந் தான்"

நின்றுவற்றல்–ஒருசொல் எழுவாய்முதலிய வைபெறுதுநிற்றல்.(தொல்.சொல்.உடு.சேநா.)

நினவ—நின்னுடையன. (புறநா.)

நினை—நினைந்து. (மணிமேக.)

நினைத்தல்—1. ஆலோசித்தல். 2. தியானித் தல். (1, 2-வழக்.)

நினைப்பணி— ஒருபொருளைக்கண்டவுடன் ஒப்புமையான் மற்றொரு பொருளினைவுண்டா வதைக்காட்டுமணி. (குவல. அ.)

நினைப்பு–நினைக்குதல்; அது: உடற்குற்றம் பதினெட்டினொன்று. (சூ. நிக. கஉ: ககஅ.)

நினையல்—நினையாதேகொள். (சிந்தா.)

நினைவு — 1. எண்ணம். (உ-ம்.) "செய்வா ராலினமுகளுந்திருநாடுபெறநினைவோ" (பார த. திருட்டிண. நி) 2. கருத்து. (உ-ம்.) "நினை வுவேறற்று" (சிவரக.வரலா.ஈஎ.) 3. நினைப்பு. உ - தொழிற்பெயர்விகுதி. 4. வருத்தம். (சிந்தா.)

நீ.

நீ — 1. ஒருமுன்னிலை ஒருமைப் பெயர். (உ-ம்.) "நீயிருக்கெடுவிற்கையாஞரியனவனி ருக்க" (பாரத. திருட்டிண. கசநி.) 2. தெரி நிலைவினைப்பகுதி. 3. விடு. (பரிபாடல்.)

நீக்கப்பொருள்–ஐந்தாம்வேற்றுமைப் பொ ருள்களிலொன்று; அது: மலையினின்று நீங்கி னன் என்பதிற்போலவரும். (நன்.உகக.உரை.) [பிரிவையுண்டாக்குந்தொழிலின்றிப் பிரிவை மாத்திரந் தன்னிடத்துடைய பொருளென் பது.]

நீக்கம்–1. நீக்கல். 2. நீங்குகை. 3. பிரிப்பு. (சிவஞானபோத. க. சூத்திரம்.)

நீக்கல் — 1. அகற்றல். (உ-ம்.) "தாக்கு" பார். 2. கொல்லல். (வள். கொல்லாமை.கo.) 3. தள்ளல். 4 நீக்கம், பிரிவுஎன்க. 5. மாற்றல். 6. விடல். (3, 5, 6-வழக்.)

நீக்கவுருபு — நீக்கப்பொருளைத்தருமுருபு; அஃது: ஐந்தாமுருபு.

நீக்கு—1. நீக்கல். (சூ. நிக. அ: சசு. மூலம் பார்.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

நீக்குதல்—1. அகற்றுதல். 2. கொல்லல். (உ-ம்.) "நீக்கல்"பார். 3. விடுதலையாக்குதல். (1, 3-வழக்.)

நீகம்—தவளை. (சூ. நிக. ங: எஎ.)

நீகாரம்—1. ஆணவமலம். (சி-லி.ஞாந.சூ.) 2. பன்னி. (உ-ம்.)"நீகாரமழைபொழிய"(பாரத. காண்டவ. ககூ.)

நீகான்—மாலுமி. (உ-ம்.)"உடங்கமர்தலைவ னீசாலெஞ்துளவூர்களெங்கும்" (சேதுபு. திரு நாட். கூஉ.)

நீங்கல்—நீங்குதல், பிரிதல். (உ-ம்.) "ஒங்குலகந்துயர்நீங்க" (கோயிற்பு. வியாக். க.)

நீங்கள்—ஒருமுன்னிலேப்பன்மைப்பெயர். (உ-ம்.) "நீங்களுரைசெய்வதெவன்" (திருவிளை. அங்க. உ.)

நீங்காமை—பிரியாமை. (வள். பொறையுடைமை. ச.)

நீங்கியிஞர் - நீங்கினர். (சிந்தா.) இ-அசை.

நீங்குதல்—நீங்குதல். (வழக்.)

நீச்சத்தானி—இரசம். (வைத்தியபரிபா.)

நீச்சு-நீந்துதல். (உ-ம்.) "நீச்சினினிலேத்து நிற்குநீலமென்கொடிபோனின்ருர்" (அரிச்ச. சூழ்வினை. ச.)

நீச்சுப்பிரமேகம்—ஒருவகைப் பிரமேகரோகம்; அது: கள்ளேஒத்த நீரிறங்குதல் வெளுத்தநீழ்வடிதல்முதலிய குணங்களேயுண்டாக்கும். (ஸ்வரட். கூஉ0)

நீசக்கிரகம்—1. இராகு கேது. 2. உச்சத்திற்கேழாமிடக்கிரகம்.

நீசகாதி—கீழ்சாதி. நீசம்-தாழ்வு.

நீசத்தானம்—1. இழிந்த இடம். 2. உச்சத்திற் கேழாமிடம்.

நீசபங்கராசயோகம் — (சோதிட.) ஒரு யோகம். (வழக்)

நீசம்—1. ஈனம், இழிவு. (உ-ம்.) "நீசமுயர்வாம்நோக்கங்கணேர்ந்தால்" (ஞானவா. தேவபூ. நிஉ.) 2. உச்சத்திற்கேழாமிடம். 3. மஞ்சள். (வைத்தியபரிபா.)

நீசர்—கீழ்மக்கள். (சூ. நிக. உ: நிசு.)

நீசன்—ஈனன். (இராமா.மிதிலேக்காட்.கoகூ.)

நீஞ்சுதல்—நீந்துதல். (வழக்.)

நீட்சி—நீளம். (வழக்.)

நீட்சிமை—நெடுமை. (வழக்.)

நீட்டம்—நீளம். (உ-ம்.) "நீட்டமிக்கதோர் சிலேயினன்" (கந்தபு. சூரபன்ம. அநி.)

நீட்டல்—1. ஈதல். (உ-ம்.) "நெடியவன் குறியகைநீரினீட்டினன்" (இராமா. பாலகா. வேள்வித். ஈகூ.) 2. நீட்டுதல்.

நீட்டலளவு— } நான்களவையுளொன்று;
நீட்டலளவை- } அது:கோல்முதலியவற்றுளத்தல். (நன்னூல் எண்ணலெடுத்தலென்னுஞ்சூத்திரத்திற் காண்க.)

நீட்டலளவையாதுபெயர்—நீட்டியளத்தற்குரிய கருவியின்பெயர். அதனுளைக்கப்படுவதற்கு வழங்கப்படுவது. (வ-நூ.) தடி. (நன். உகo. உரை.)

நீட்டித்தல்—1. தாமதித்தல். 2. நெடும்பொழுதுசெல்லல். (1, 2-வழக்.)

நீட்டினவிரல்தறித்தான் — கிரந்திநாயகம். (வைத்தியபரிபா.)

நீட்டு—1. நீட்டுதல். 2. தெரிநிலேவினேப்பகுதி. 3. நீளம். (1, 2-வழக்.)

நீட்டுதல்—1. ஈதல். (உ-ம்.)"நீட்டல்"பார். 2. நீளமாச்செய்தல். (வழக்.)

நீடம்—பறவைக்கூடு. (இராமா. ஆரணிய. கார்கால. ககக.)

நீடல்—நீளல். (வழக்.)

நீடாணம்—கறி. (சூ. நிக. சு: உசு.)

நீடிக்கை—நீடிப்பு. (வழக்.)

நீடித்தல்—நெடுகுதல். (வழக்.)

நீடிப்பு—நீடித்தல். (வழக்.)

நீட்டின்று—கொடித்தது. (புறப்பொ.)

நீடு—நீடித்தல். (உ-ம்.) "நெடுஞ்செல்வ நீடின்றியாங்கேகெடும்" (வள். நிசுசு.) [மூதனிலேத்தொழிற்பெயர்.] நெடுநேரம் என்பர். (சிந்தா.)

நீடுதல்—1. நிலேத்திருத்தல். 2. நீளுதல். 3. நெடுங்காலத்திற்கிருத்தல். (உ-ம்.) "நீடுதவில்லேயின்றேநிருபதிசன்னிமன்றல்-கூடுதலிவர்க்குண்டாகும்" (பாரத. திரௌபதி.) (1, 2-வழக்.)

நீடுநினைத்திரங்கல்—அகப்பொருட்பிறையிஞன்று; அது: தலேவன்கூட்டம்வாயாது காலம் நெடிதாகத்தலேவியைநோக்கி நினேந்திரங்கல். (வாண. கசு. முகம்.)

நீடூரம்—பாஷாணம். (வைத்தியபரிபா.)

நீண்டது—நெடியது. (வழக்.)

நீண்முடி—அரசன். (உ-ம்.) "நின்றமாமன்னர்க்கெலாநீண்முடியிலக்கமாஞன்" (சிந்தா. நாமக. உநிஅ.) ஆகுபெயர்.

நீத்தம்—1. ஆழம். (பரிபாடல்.) 2. தண்ணீர் விட்டான். (வைத்தியபரிபா.) 3. வெள்ளம். (உ-ம்.) "நிலேயுடைக்கவிநீத்தமக்நீத்தமே" (இராமா. ஆற்று. கூ.)

நீத்தல்—1. துறத்தல். (வள். நீர்த்தர்பெருமை. 2. நீக்கல். (உ-ம்.) "தோழியைநீத்தென்னேமுன்னேதுறந்து" (திருக்கோ. உகo.)

நீத்தவன் — 1. அருகன். (சூ. நிக. க: கூ.) 2. துறந்தோன். (வழக்.)

நீத்தார் — முற்றத்துறந்தமுனிவர். (உ-ம்.) "ஒழுக்கத்துநீத்தார்பெருமை" (வள். உக.)

நீத்திட—பெருக்கிட. (சிந்தா.)

நீத்தினுணி—காமப்பால். (வைத்திய. கருப்.)

நீத்து — 1. நீந்துதல். (உ-ம்.) "யானேக்கு நீத்துமுயற்குநிலே" (யாப். காரிகை. செய். நி. உரை. 2. பெருக்கம். (ஐங்குறு.) (பத்துப்.)

நீதச்சிலேசுதம்—நீலாஞ்சனம். (வைத்தியபரிபா.)

நீதகம்—நீர்வள்ளி. (வைத்தியபரிபா.)

நீதபரிமளம்—சீதாங்கபாடாணம். (வைத்தியபரிபா.)

நீதம்—நன்னெறி. (உ-ம்.)"நீதம்பெறுமறை யோனிமையவர்மானபணிமுடியா" (சிவரக. வேதபாத. சூ.) 2. நீதி. (உ-ம்.) "பொல்லாத சேயெனிற்றும்தள்ளனீதமோ" (தாயு. சுகவாரி கூ.)

நீதவான்—நீதமுள்ளவன். (வழக்.)

நீதன்—நீதிமான். (உ-ம்.)"நீதன்வஞ்சநெறி மைதன்னினீடு" (சேதுபு. சீதைகுண்ட. கூ.)

நீதி—1. நன்னெறி. 2. நியாயம், பலருஞ் சுகமடையநடத்துமுறை. (சைவப்பி. சுக.) 3. முறைமை. (உ-ம்.) "நீதியிஞனித்தியநைமித்திகாமியத்தினிறுத்தி" (சி. சி. அ: நி: நிரம்ப.) (சிந்தா.) (1-வழக்.)

நீதிசாத்திரம்—கலைஞானமறுபத்துநான்கனு ளொன்று. (வழக்.)

நீதிசாரம்—1. ஒரு நூல். 2. பிருதுவிதத்து வத்தில் குபேரதிக்கிலுள்ள பத்துபுவனங்களு ளொன்று. (சி. சி. அ: எ. மறை.)

நீதிசானுபன்—சதருத்திரரிலே குபேரதிசை யிலிருக்கும் தசருத்திரரிலொருவர். (வி-ணி. உஎ0.)

நீதிநூல்—நீதிகளையுணர்த்துநூல். (உ-ம்.) "யாப்பின்மன்னியநன்றிதன்னைவிடுத்த தீமை யிதற்குயிர் - நீப்பதேபரிகாரமென்றிடுநீதிநூல ருடாதைதாய்" (சேதுபு. சங்கதீ. உ0.)

நீதிநெறி—1. ஒரு நூல். 2. சன்மார்க்கம்.

நீதிநெறிவிளக்கம்—குமரகுருபரசுவாமிக ளாற் செய்யப்பட்டவோர்நூல்.

நீதிமான்—நீதியுள்ளவன். (வழக்.)

நீந்துதல்—நீந்துதல். (சூ. நிக. நி: உசு.மூலம்.)

நீந்தினமிதந்தன. (புறப்பொ.)

நீந்துதல்—1. கடத்தல். (உ-ம்.) "பிறவிப் பெருங்கடனீந்துவர்நீந்தா - ரிறைவனடிசேரா தார்" (வள். கo.) தாற்பரியம். 2. நீந்தல்.

நீப்பு—1. துறவு. 2. பிரிவு. (1, 2-வழக்.)

நீபம்—1. உத்திரட்டாதிநாள். 2. கடம்பு. (உ-ம்.)"அமைச்சரோடுமெங்நீபமாவனம்புகுந்து" (திருவிளை. திருநக. கண்ட. உ0.) 3. காரணம். (பிங்கல. சுஎசுஉ.) 4. வெண்கடம்பு. (வைத்தியபரிபா.)

நீம்—நீவிர். (உ-ம்.) "நீமெம்வென்றிக்களிற் றுனடி ழு" (சிந்தா. விம. சரு.) [திசைச்சொல் லென்பர்.

நீம்பல்—வெடியுப்பு. (வைத்தியபரி.)

நீமம்—ஒளி. (சூ. நிக. அ: உஉ.)

நீயல்—நீங்கற்பாலையல்லை. (பரிபாடல்.)

நீயா—விடாத. (பரிபாடல்.)

நீயிர்—நீவிர். (உ-ம்.) "நீயிர்கள்வாய்மையை நிகழ்த்துமென்னவே"(கந்தபு.சூரனகர்புரி.கஅ)

நீயேன்—விடேன். (உ-ம்.) "நீயேனென்ற தெவன்கொலன்னுய்" (ஐங்குறு. உஉ.)

நீர்—1. ஒரு முன்னிலைப்பெயர். (உ-ம்.) "முழுமதிமுகத்திணைமுனிந்துநீர்பட்ட மங் கைப் – பழுமரமுதலஞ்ஞாநப்பாறையாக்கிடமி னென்ன" (திருவிளை.அட்டமா.கூ.) 2. கடல். (உ-ம்.)"நீர்வழங்கும்பண்டத்தால்" (நான்மணி. அதி.) 3. கழியிடம். (உ-ம்.)"பௌவநீர்ச்சாய்க் கொழுதி" (கலி. எசு.) 4. குணம். (உ-ம்.) "நீர கத்தேதமைநினையுமன்பிலோர்" (கந்தபு. கட வுள்.) 5. தண்ணீர். (உ-ம்.) "நீர்பகற்றுயிலா தகம்" (தைல.பாயிர.நுஅ.) 6. தன்மை.(உ-ம்.) "செந்நீர்பசும்பொன்" (புறநா.கூ.) 7. தெரிநிலை வினைப்பகுதி. 8. பூராடநாள். (சூ.நிக.க: எசு.)

நீர்க்கடம்பு—ஒருமரம். (சூ. நிக. கக. வகர வெ. உ.)

நீர்க்கடன்—திலதர்ப்பணம். (உ-ம்.) "சீபார்க்களத்தில்யாண்பொருதுபொன் றிலு லெம்பியரா-னீர்க்கடனுந்தீக்கடனுஞ்செய்விப் பீர்"(பாரதவெண்பா.) உதகக்கிரியையென்பர். (சிந்தா.)

நீர்க்கண்டகி—நீர்முள்ளி. (உ-ம்.) "கூவிள நீர்க்-கண்டகியீரண்டுடைமூக்கண்டங்கி தவஞ் சூரி" (தைல. தைலவ. கசுநி.)

நீர்க்கணம்—செய்யுட்பொருத்தத்துளொன் றுகிய கணப்பொருத்தத்துளொன்று; அஃது: ஆதிநேராய் வருவது. (இலக்கண வி. உ00. உரை.)

நீர்க்கம்மல்—ஒரு நோய். (உ-ம்.) "அமரம்" பார்.

நீர்க்கமலிலி—ஒரு நீர்ப்பூண்டு, அல்லி. (வைத்தியபரிபா.)

நீர்க்காக்கை—நீர்க்காகம். (சூ.நிக.க: சுஙூ.)

நீர்க்காசம்—ஒரு நோய். (வழக்.)

நீர்க்கால்சலாகை—சந்திரகாந்தக்கல். (சூ. நிக. சு: கக.)

நீர்க்கிழவன்—வருணன். (உ-ம்.) "தொண் ணகர்மேனீர்க்கிழவன்வரவிடுத்தகடல்சு வறத் தொலைத்தவாறும்" (திருவிளை. பதிகம். ச.)

நீர்க்கீழ்—உதயத்திற்குநாலாமிராசி. (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நீர்க்குடம்—பூரணகும்பம்; இஃது: அட்டமங் கலத்தொன்று. (திருவிளை. திருமணப். கசஙூ.)

நீர்க்குண்டி-வெண்ணெச்சி.(வைத்தியபரி.)

நீர்க்தும்பி—நீர்முள்ளி. (மலையக.)
நீர்க்துமிழ்–நீர்மொக்குள். (சூ. நிக. நி: உநி.)
நீர்க்துமிழம் — வெள்விழியில் சங்கம்பழம் போல் கொப்புளத்தையுண்டாக்கும் ஒருவகைக் குமிழ்ரோகம். (சீவரட். உசுசு.)
நீர்க்துளரி—கல்லாரச்செடி. (பெரிய பு. தடுத்தா. கஎசு. உரை.)
நீர்க்துறிஞ்சா—ஒருசெடி.(வைத்தியபரிபா.)
நீர்க்துன்று—நத்தை. (வைத்தியபரிபா.)
நீர்க்கோழி—ஒருவகை நீர்வாழுங்கோழி.
நீர்க்கோன்—வருணன். (உ-ம்.) "நீர்க்கோ னெல்லேதாழ்ந்து" (திருவிளை. நான்மாட.உக.)
நீர்கள்—நீர். கள்-அசை. (சிந்தா.)
நீர்சங்கு—சங்கு. (மலையக.)
நீர்சால்–தண்ணீர்பூரிக்குஞ்சால். (சூ. நிக. எ: சுசு.)
நீர்சித்திரம்—நீரடிமுத்து. (உ-ம்.) "நீர்ச்-சித்திரம்போலியரணந்தந்திபீசம்" (தைல. தைலவ. கசசு.)
நீர்சின்னி—ஒரு பூண்டு. (வைத்தியபரி.)
நீர்சுண்டி—கொடிநெட்டிச்செடி. (வைத்தியபரிபா.)
நீர்சுறுக்கு—நீர்க்கடுப்பு, ஒரு பிணி.
நீர்சூலை—அண்டவாயு. (வைத்தியபரி.)
நீர்சேம்பு—ஒரு பூடு. (வழக்.)
நீர்த்தல்–நீராதல். (உ-ம்.) "ஏட்டொன்முய் நீர்க்கவடி" (தைல. தைலவ. கூஉ.)
நீர்த்து—தன்மையுடையது. (புறநா.)
நீர்த்தகைகதவு — ஓ என்று பெயர். (பிங் கல. சுஎக.)
நீர்நாயி—நாய்மீன். (உ-ம்.) "நீர்நாய்கௌ வியநெடும்புறவாலே" (சிலப். நாடுகாண். எக.)
நீர்நாள்—பூராடம். (சூ. நிக. க: எசு.)
நீர்நிலை—1. குளம். (சூ. நிக. நி: உசூ.) 2. நீர்நிலையாயுள்ளதடாகமுதலியன. (உ-ம்.) "நீங் குநீளுயிர்பிலனுடல்புரண்டனனீர்வேட்-டாங் குநீர்நிலைதேவானுயிரனெழுந்தான்" (திரு விளை. அந்தக்குழி. சு.)
நீர்நெட்டி—ஒரு பூடு. (வழக்.)
நீர்நெநுப்பு—கல்லுருவி. (வைத்தியபரி.)
நீர்நொச்சி—ஒரு நொச்சி. (வைத்தியபரி.)
நீர்ப்பகண்டை—ஒரு பூடு. (வைத்தியபரி.)
நீர்ப்பஞ்சு—கடற்காளான். (வைத்தியபரி.)
நீர்ப்பத்தர்—அம்பணம். (சூ. நிக. எ: நிஅ.)
நீர்ப்படுவன்—ஒரு நோய். (வழக்.)
நீர்ப்படை–புறப்பொருட்டுறையிலொன்று; அது: கண்டுகொல்கொண்டகல்லினை நீர்ப்படுத் தித்தாய்மைசெய்தலும்,பின்னப்பெயரும்மீடும் எழுதிநாட்டியவழிநீராட்டுதலுமாம். (தொல். பொரு. சுஅ. உரை.)
நீர்ப்பதுமம்— இமைரோகபேதத்தொன்று; அது: இமையிற்றடிப்பையும் அதிக நீர்ச்சுரப் பையுமுண்டாக்கும். (சீவரட். உசுஅ.)
நீர்ப்பரிசை—ஆமை. (வைத்தியபரிபா.)
நீர்ப்பறவை—நீரில்வாழும் பட்சி; அவை: கின்னரப்புள் முதலியன. (பிங்கல. கூகூஎச.)
நீர்ப்பனை—புல்லாமணக்கு.(வைத்தியபரி.)
நீர்ப்பாசி — வைப்புப்பாடாண முப்பத்தி ரண்டிலொன்று.
நீர்ப்பாம்பு—நீர்க்கோத்தை. (உ-ம்.) "அஞ் சாப்புறங்கிடக்குநீர்ப்பாம்பு" (மூதுரை.)
நீர்ப்பு—நீர்த்தல். பு-தொழிற்பெயர்விகுதி.
நீர்ப்புடையன்—ஒரு பாம்பு. (வழக்.)
நீர்ப்பூ — நால்வகைப்பூவிலொன்று; அது: நீர்நிலைகளிலுண்டாகும்பூ. (உ-ம்.)"கொடிப்பூ"
நீர்ப்பூண்டு—நீர்முள்ளி. (வைத்தியபரி.)
நீர்ப்பூல்—நீர்பபூலா. (வழக்.)
நீர்மட்டம்—சரிமட்டம்பார்க்குங்கருவி.
நீர்மாங்காய் — மாங்காயடைகாய். (வைத் தியபரிபா.)
நீர்மாடம்—பள்ளிஓடம். (உ-ம்.) "ஓங்குநீர் மாடமொடுநாவாயியக்கி"(சிலப்.ஊர்காண்.எசு.)
நீர்மீட்டான்—தண்ணீர்மிட்டான். (வைத் தியபரிபா.)
நீர்முகம்—இறங்குதுறை. (உ-ம்.) "நீர்முகந் திகழ்நீரிது" (சேதுபு. கோடி: நி.)
நீர்முள்ளி—ஒருமுள்ளி. (உ-ம்.) "ஐங்கோல நீர்முள்ளி" (தைல. தைலவ. கஉநி.)
நீர்மேனெநுப்பு—கொட்டைப்பாசி. (மலை யக.)
நீர்மை—1. இயல்பு, தன்மை. (உ-ம்.) "நெ நெங்கடலுந்தன்னீர்மைகுன்றும்" (வள். கல.) 2. ஒளி. (உ-ம்.) "நெடுநீர்வார்குழைகளோந் தென" (நெடுநெல். கஉக.) 3. குணம். (திருக் கோ. கல. உரை.)
நீர்வண்டு—நீரில்வாழ் வண்டு. (வழக்.)
நீர்வல்லி—1. நீர்வள்ளி. (வைத்தியபரிபா.) 2. வெற்றிலைக்கொடி. (உ-ம்.) "முடக்கற்முன் காகக்கரிப்பனீர்வல்லியங்க – மவிழிலைச்சுரதந் திங்களாம்படிவகைக்கிறுத்து" (தைல.தைலவ. கூசு.)
நீர்வலயம்—பூமி. (உ-ம்.)"எரிமணிச்சூட்ட ராநெற்றி-மருவுநீர்வலயமுதலியவுலக மனைத் தையும்" (கூர்மபு. கக்கவமி. உசு.)
நீர்வழக்கை—ஒரு நீர்ப்பூடு. (உ-ம்.) வந்து ழிக்காண்க.

நீர்வள்ளி — வெற்றிலைக்கொடி. (உ - ம்.) "நெய்த-லல்லிமூலகநீர்வள்ளி" (தைல. தைல வ. கசா.)

நீர்வாத்து—ஒரு பறவை. (வழக்.)

நீர்வாரம் — 1. நிணையரிசி. 2. நீர்வஞ்சி (1, 2-வைத்தியபரி.)

நீர்வாழ்வன – எழுவகைப்பிறப்பிலொன்று; அது: மீன்முதலிய நீர்ஜந்துப்பிராணி.

நீர்விட்டான்—தண்ணீர்விட்டான். (வைத்தியபரிபா.)

நீர்வினைவமை – உப்பு. (சிந்தா.)

நீரசம்—1. தாமரை. 2. மாதுளை. (1, 2-(வைத்தியபரிபா.)

நீரடி—நீரடிமுத்து. (வைத்தியபரிபா.)

நீரடிழத்தம்—நீரடிமுத்துப்பருப்பு. (உ-ம்.) "நீரடிமுத்தமொலிபோகி" (தைல. தைலவ. கசஉ.)

நிரணிமாடம்—நீர்மாடம். (உ-ம்.) "நீரணி மாடத்துநெடுந்துறைபோகி"(சிலப்.நாடுகாண். உகரு)

நீரத்தி—ஒரு மரம். (வழக்.)

நீரதம் – நீரின்மை. (உ-ம்.) "நீரதநெறியில் வாவிநிறைந்தநீரென்னநின்முன்" (பாரத. திரௌபதி. ரு.)

நீரம்—1. தீர்த்தம். (உ-ம்.)"அற்றுநாலுகுளிர் நீரமுறைகூறினேம்" (சேதுபு.பாலோடை. க.) 2. நீர். அம்-சாரியை.

நீரரண்–அகழ்; அது: நான்கரணிஞெனறு. நான்காவன:—நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண். (வள். அரண். உ.)

நீராமகனீர் — நீரில்வாழுந் தெய்வப்பெண் கள். (உ - ம்.) "நீதியிற்புகல்பகலெலா-நீராமக ளிர்" (பாரத. கிருட்டிண. அசு.)

நீரலரி—ஒருவகைச்செடி. (வைத்தியபரி.)

நீரவர்—அறிவுடையார். (உ-ம்.) "நிறைநீர நீரவர்கேண்மைபிறைமதிப் – பின்னீரபேதை யார்நட்பு" (வள். எசஉ.)

நீராழிவு—ஒரு நோய். (வழக்.)

நீராகாரம் — பழஞ்சோற்றுநீர். (பதார்த்த குணசி.)

நீராசநம் — நீராஞ்சநம். (திருவிளை. ககரப். கo.)

நீராஞ்சநம்—ஆலாத்தி. (உ-ம்.) "எஞ்சலி லாத்தீபநீராஞ்சநத்தட்டியேந்தி"(சிவரக.பசாசு மோசந. கசு.)

நீராமம்—ஒரு நோய். (வழக்.)

நீராமை — 1. கடலாமை. 2. சலக்கூர்ம ரோகம். (சீவரட். கஉo.)

நீரிது—நீர்மை. (சிந்தா.)

நீரிழிநோய் — நீரிழிவு. (உ-ம்.) "நோய்க் குட்டம்"பார்.

நீரிழிவு—நீர்ப்பாடு, மூத்தரரோகம். (உ-ம்.) "மூக்கடைப்புட்காந்திநீரிழிவுகுன்மம்" (தைல. தைலவ. கசo.)

நீருடும்பு—ஒருடும்பு. (வழக்.)

நீருதிபாசம்—கடற்பாசி. (வைத்தியபரி.)

நீருபம்—1. ஆகாயம். 2. உருவமற்றது. 3. காற்று. (1, 2, 3-வழக்குண்டுபோலும்.)

நீருமரி—ஒரு பூடு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

நீருள்ளி—வெண்காயம். (வைத்தியபரிபா.)

நீருளாரை—ஓர் பூடு, நீராரை. (வைத்திய பரிபா.)

நீருற்றமிர்தம்—புளிங்கறி. (உ-ம்.) "அண் பன்னீருற்றமிர்தக்- தாம்பாலவரைநாட்டித்தந் தூட்டியர்வார்" (சிந்தா. குணமா. எஅ.)

நீரோட்டி—ஒரு மரம். வழக்குண்டு.

நீரொலி—ஓரொலி. (வழக்.)

நீரோற்றம்—சலதோடம். (உ - ம்.) "அதி துர்ப்பலம்"பார்.

நீரொட்டி—நீராரை. (வைத்தியபரிபா.)

நீரோம்பல் — 1. பேய்க்கடுக்காய். 2 நீர்க் கடம்பு. (1, 2-வைத்தியபரிபா.)

நீரோநகம்—தாமரை. (வைத்தியபரிபா.)

நீல்—1. நீலம். (உ-ம்.) "நிரந்தநீண்முகில். (சேதுபு. கந்தமா. உஉ.) விகாரம். 2. வாதம். (உ-ம்.) "நோக்குமிவைமூன்றுநீலாதிமூன்று" (தைல. பாயிர. சஉ.)

நீலக்கடிப்பிணை — குதம்பைபோல்வதோர் பணி. (சிந்தா. நாமக. உசுசு. உரை.)

நீலக்கத்தரி—ஒரு வழுதுணை. (வழக்.)

நீலக்கல்—நீலரத்தினம். (வழக்.)

நீலக்காரம்—தூரசு. (வைத்தியபரிபா.)

நீலக்காலி—அவுரி. (வைத்தியபரிபா.)

நீலக்கிராந்தை—விஷ்ணுகிராந்தை.

நீலக்கொண்டி–புல்லாமணக்கு. (வைத்திய பரிபா.)

நீலகண்டசிவாசாரியர் — வேதாந்தசூத்தி ரத்திற்குப் பாடியஞ்செய்தவர். (அபிதாநகோ.)

நீலகண்டன்—1. சிவன். (உ-ம்.) "தொலை யாதசெல்வநீலகண்டனே" (சிவரக. கத்தரிப்பூ. கசு.) 2. தூரசி. 3. முருங்கை. (2, 3-வைத்திய பரிபா.)

நீலகந்தி — ஒருவகை மாணிக்கம். (சிலப். அரும்பத.)

நீலகம்–1. காருப்பு. 2. தூரசு. (1, 2-வைத் தியபரிபா.)

நீலகமலம்—நீலோற்பலம். (வைத்தியபரி.)

நீலகாசம்—கண்ணேயுளொன்று. (வழக்.)

நீலகிரி — அட்டமலையிலொன்று. (சூ. நிக. கஉ. எஎ.)

நீலதரு—தெங்கு. (வைத்தியபரிபா.)

நீலநிதி—குபேரனவநிதிகளிலொன்று. அமர நிகண்டிற்காண்க.

நீலப்பைங்குடம்—பச்சைக்குப்பி. (உ-ம்.) "நீலப்பைங்குடந்தொலைச்சி" (பெரும்பா. கூஅஉ.)

நீலபத்திரம்—கருங்குவளை. (வைத்தியபரி.)

நீலபதுமம்—நீலோற்பலம். (வைத்தியபரி.)

நீலபம்—1. தேனீ. 2. முகில். (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நீலபாடாணம்—ஒரு பாடாணம். (வழக்.)

நீலபுட்பம் — 1. அவுரி. 2. எட்டிமரம். 3. விட்டுணுக்கரந்தை. (1, 2, 3-வைத்தியபரி.)

நீலம்—1. ஒருநிறம். (உ-ம்.) "நீலச்சிகண்டியி லேறும்பிரான்"(கந்தரல.உசு.) 2. கருங்குவளை. (பிங்கல.கூ0கடி.) 3. கறுப்பு. (சூ.நிக.அ: உஉ.) 4. காற்று. (பிங்கல. உச.) அம் - சாரியை.) 5. செங்கழுநீர்க்கிழங்கு. (உ - ம்.) "சாந்து"பார். (தைல. தைலவ. சசு.) 6. துத்தம். 7. நஞ்சு. (பிங்கல. உசு0அ.) 8. நவமணியிலொன்று. (உ-ம்.) "காரொளிபரப்புநீலம்" (திருவிளை. நான்மாட. கo.) 9. நீலக்கட்டி. (வழக்.) 10. நீலப்பட்டு. (கலி. எஉ.)

நீலம்பாரித்தல் — விடமுதலியவற்றால் சரீரம் நீலவண்ணமாதல். (வழக்.)

நீலமண்டலம்—சீற்றீச்சமரம்.(வைத்தியபரி)

நீலமணி—1. கண்ணிற்கருமணி. (வழக்.) 2. நீலரத்தினம். (சூ. நிக. சு: சு.) 3. பனைமரம். (வைத்தியபரிபா.)

நீலமருந்து —அவுரி. (வைத்தியபரிபா.)

நீலமாதகம்—கையாந்தகரை.(வைத்தியபரி)

நீலமார்க்கம்—கையாந்தகரை. (வைத்தியபரிபா.)

நீலலோகிதம் — கருமையுஞ் செம்மையுங் கலந்தவடிவம். (உ-ம்.) "சோதியு-ணீலலோகித நிலவுமேருவைப் - போலுமிக்கதோர்புருடனிற் பதே" (சேதுபு. சிவதீர். எச.)

நீலலோகிதன் — 1. சிலலோகத்தில் மகாதேவனரண்மனையில் மேற்குவாயிற்காவலன். (வி-ணி.) 2. சிவன். (உ-ம்.) "அன்பினீலலோ கிதாவுலகநாதா-செய்யசீரிராமநாதா" (சேதுபு. இராமநாத. ஙக.) 3. நியதிதத்துவத்திருக்கு மோருருத்திரர். (வி-ணி. உஎச.)

நீலவருணம்—1.சத்தமுகிலிலொன்று; அது: தீப்பொழிவது. 2. நீலநிறம்.

நீலவழுதலை—நீலச்சத்தாரி. (வழக்.)

நீலன் — 1. ஒரு வானரப்படைத்தலைவன். (இராமா. சேதுபந்த. கூஅ.) 2. சனி. (சூ. நி.க: சுஙூ.)

நீலா—அவுரி. (வைத்தியபரிபா.)

நீலாங்கம்—மலைத்தேள். (வைத்தியபரி.)

நீலாங்து—புழு. (வைத்தியபரிபா.)

நீலாஞ்சநம்—1. ஒரு கற்கதிரவியம்.(உ-ம்.) "கற்பூரம்"பார். 2. கல்லீயம். 3. துருசு. 4. கறுப்புக்கல். (2, 3, 4-வைத்தியபரிபா.)

நீலாம்பரன்—பலபத்திரன்.(சூ.நிக.கக:கo.)

நீலாம்புசம்—கருங்குவளை.(வைத்தியபரி.)

நீலாம்புரி—ஓரிராகம். (வழக்.)

நீலாராட்சி—மணிபூரகத்தாகமாகிய நாபிக் குரிய் பத்மதளங்கள் பத்தினுள் ஒன்றினிற்கு மட்சரத்தினதிதேவதை.(சி.சி. அ: உக. மறை.)

நீலி — 1. அவுரி. (தைவ. தைலவ. ஙக.) 2. சருநொச்சி. (வைத்தியபரிபா.) 3. கறுப்பு. (பிங்கல. ஙஎஙச.) 4. காளி. (உ-ம்.) "அத்தரி" பார். 5.தூர்க்கை.(சூ.நிக.க:சo.) 6.பழையனூர் வணிகன் மனைவி. இவள்சரிதம், (அபிதாகோ சத்திற்பார்.) 7. பார்வதி. (உ-ம்.) "நீதழைந்தது யோகமம்பிகைநீலி யென்பதுபாவமே" (சௌந்தரி.) 8. மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம். (வைத்தியபரிபா.)

நீலிகை—அவுரி. (வைத்தியபரிபா.)

நீலிதம்—நீலநிறம். (உ-ம்.) "நீலிதவுடையா டையுடுத்தாள்" (பாரத. அருச்சுனன்றவநிலை. கருஅ.)

நீலிநி—அவுரி. (வைத்தியபரிபா.)

நீலோற்பலம்—கருங்குவளை. (உ-ம்.)"படர் பூங்குவளைநாண்மலரோநீலோற்பலமோ"(இரா மா. மிதிலைக். சுருு.)

நீவரம்—நாடு. (பிங்கல. சருஎ.)

நீவல்—நீவுதல். (உ-ம்.) "நிறஞ்செய்கோசி கனுண்சேநீவிநீவாதவல்குல்"(இராமா.கோலங் காண். கங.)

நீவாரம்—குளநெல். (சூ. நிக. ச: சo.)

நீவி—1. ஒருதெரிநிலைவினையெச்சம்.(உ-ம்.) "மாசறுசுடர்நுதனீவி" (சூ. பா. கஅஉ.) 2. கொய்சகம். (உ - ம்.) "நீவிநிதம்பவுழத்தியர்" (பெரியபு. ஆனாயநா. உ.) 4. சீலை. (உ-ம்.) "நீவியின்றியிக்நெற்றியங்கண்ணுதல்" (கந்தபு. தக்கியுத். ருசு.) 5. தடைத்து. (பத்துப்பா.) 6. வஸ்திரமுடிச்சு. (சி. சி. அ: கஉ. சிவாக்.) 7. நீங்கி. (பதிற்றுப்.)

நீவியம்—சீலை. (சூ. நிக. எ: கூஅ.)

நீவிர் — ஒரு முன்னிலைப்பெயர். (உ - ம்.) "நீவிர்வண்வந்தபகலும்"(சிவரக.தாருக.உஅ.)

நீவுதல்—1. உருவிவிடுதல். (தணிகைப்பு. காட்டுப். ககங.) 2. கழுவுதல். (உ-ம்.)"நீவிநித் திலம்பரத்தியருணக்குவெய்தல்" (பெரியபு. திருக்குறி. சு.) 3. தடவுதல். (உ-ம்.) "நீவிப் பூசும்-வெய்யபிடித்தைலாதிகளுக்கு" (சைதல. பாயிர. உசை.) 4. துடைத்தல், நீங்குதல். "நீவல்" பார்.

நீழல் — நிழல். (உ - ம்.) "வடத்தினீழல்" (அரிச்ச. மயா. நு.)

நீள்—1. உயரம். 2. நீளம். 3. தெரிநிலை வினைப்பகுதி. (உ-ம்.) "நீள்பரணி" (விதாக. குணகுண. எ.) (1, 2-விகாரம்.)

நீள்சடையோன்—கொன்றை. (வைத்திய பரிபா.)

நீளம்—நெடுமை. (உ-ம்.) "பேசத்திருவார்த் தையிற்பெருநீளம்பெருங்கண்களே" (திருக் கோ. கஅங)

நீளல்—1. உயர்தல். (உ-ம்.) "நீளுங்குடி" (வள். கஅஉ.) 2. ஓடுதல். (பிங்கல. உசுஅ.) 3. நீளுதல். (திருவிளை. திருநகரங். கசு.)

நீளி—1. நீளத்தையுடையது. (உ-ம்.)"நெடுந் தருநீளிகள்" (கந்தபு. அங்கிநிமுகா. கஅச.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. நெடியன். இ-விகுதி.

நீளிடை—சேய்மை. (சூ. நிக. அ: கஉ.)

நீளித்தல்—1. தாமதித்தல். 2. நீளுதல்.

நீளிப்பு—நீடிப்பு. (வழக்.)

நீளியது—நெடியது. (வழக்.)

நீளியன்—நெட்டையன். (வழக்.)

நீளுதல்—நீளலின்பொருளெல்லாங்கொள்க.

நீற்றல்— } எரியிட்டு நீறச்செய்தல்.
நீறுதல்— } (வழக்.)

நீற்றுப்பூசனி—ஒரு கொடி.

நீறடுதல்—வீபூதியுத்தூளநமாகப்பூசுதல்.

நீறு—1. தெரிநிலைவினைப்பகுதி. 2. புழுதி. (உ-ம்.) 'நீறடங்குதெருவினவன்சாறயர்மூதூர்' (சிறுபாண். உஅக.) 3. விபூதி. (உ-ம்.)"மந்திரமா வதுநீறு" (தேவார. திருநாற்றுப்பதிகம்.) [ஜீவி னையை நீறச்செய்தலாலிப்பெயர் பெற்றது.]

நீறுதல்—நீறுதல். (வழக்.)

நீறுபடுதல்—1. அழிதல். 2. நீறுதல்.

நீறுபூத்தல்—சாம்பற்பொடித்தல். (வழக்.)

நீன்மை—நீலம். (உ-ம்.) "நீன்மைமேனிய னேமியந்தடத்துறைநிறைநீர்" (சேதுபு. விதூம. க.)

நீனிறவியலகம்—கடல். (ஐங்குறு.)

நு.

நுக்குடம்—காஞ்சிரை. (மலையக.)

நுகம்—1. கணையமரம். (உ-ம்.) "கொடு நுகத்தழீஇயபுதவின்" (பெரும்பா. கஉஎ.) 2. நுகத்தடி. (உ - ம்.) "பளிக்குநுகம்பிணைத்து" (இராமா. பாலகா. கார்முக. ககு.) 3. பாரம். (உ-ம்.) "எழுவர்பூண்டவீகைச்செந்நுகம்"(சிறு பாண். ககங.) (சிந்தா.) 4. வலி. (உ - ம்.) "தெவ்வர்தேளடநுகம்படக்கிடந்துநூழிலாட்டி" (மலைபடு. அஎ.)

நுகர்து—நுகர்வேன். (உ-ம்.)"அஞ்சலோம்பு நின்னணிநலநுகர்கென" (சு. பா. கஅக.) சு-தன்மையொருமைவிகுதி.

நுகர்ச்சி—1. அநுபவம். (உ-ம்.) "தெய்ய வுலகத்தநுகர்ச்சியில்லெனின்" (புறநா. உகச.) உண்ணுதல் முதலியவநுபவம் என்பர். 2. நுகர்தல், உண்ணல். (ஐங்குறு.)

நுகர்ச்சியின்மையணி—ஒருபொருளினநு பவத்திற்குவராமையை அதனின்மைக்கு ஆதா ரமாகக்கூறுமணி. (குவல. ககங.)

நுகர்ச்சியிலுலகம்—வீடு. (உ-ம்.)"நோற்ற வன்வலையைநீங்கிநுகர்ச்சியிலுலகநோக்கி-யாற் றுறப்போதறேற்றுமழிய மோபெரியமோ காண்" (சிந்தா. நாமக- ஙசை.)

நுகர்தல்—1. அநுபவித்தல். (உ-ம்.) "தண டந்தரு-மினிமைநுகர்ந்தமடந்தையும்" (தேகா யிற்பு. பதஞ்சலி. சஉ.) 2. புசித்தல். (உ-ம்.) "அம்பிகையோடுநுகர்ந்துகளித்தனள்" (சிவரக. தேவிமேருயிலே. கo.)

நுகர்பு—நுகர்ந்து. (பரிபாடல்.)

நுகர்வு—நுகர்ச்சி. (வழக்.)

நுதும்பு—நொங்கு. (உ-ம்.) "பீனநுகும்பன் னசினமுதிர்வராலோடு" (புறநா. உசக.)

நுகை—சிவதைவேர். (வைத்தியபரிபா.)

நுகைத்தல்—1. இளக்குதல். 2. தளர்த்தல்.

நுகைதல்—1. இளகுதல். 2. தளர்தல்.

நுகைப்பு—நுகைத்தல். (உ-ம்.) "வந்துழிக் காண்க"

நுகைவு—1. இளக்கமானது. 2. தளர்வு. (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நுங்கல்—விழுங்கல். (உ-ம்.) "பாயும்வெம் புகைநுங்கான்" (சேதுபு. சேதுச. ஙஉ.)

நுங்கள்—உங்கள். (உ-ம்.) "உமைத்தெர தித்தசாபத் – துப்பறநோக்கிநுங்கடொல்லுரு நல்கி" (திருவிளை. அட்ட. கo.)

நுங்கு—1. தெரிநிலைவினைப்பகுதி. 2. பனையி னிளங்காய். (உ-ம்.) "தோட்டநுங்கிற்றெளே யுறழூக்கினே" (இராமா. கரன். அ.)

நுங்குதல்—விழுங்குதல். (உ-ம்.)"இந்தஞ் சேர்கானகத்தைநுங்குமெரிபோல்"(பிர.காண். ஙக: உo.)

நுங்கை–1. உன்றங்கை. (உ-ம்.) "நுங்கை-கையிழந்ததென்மாயமோ" (கந்தபு. சூரன்றண்ட. உரு.) 2. உன்முய். (உ-ம்.) "நுங்கையுமே ருவினிருந்தாள்" (கந்தபு. சயந்தன்சன. கு.)

நுசுப்பு — இடை. (உ-ம்.) "முற்றுமுகிழ் முலைப்பான்முற்றிமுகங்கறுப்பப் – பற்றுநுசுப் பாள்கருப்பம்படைத்தனளே" (பிரமோ.காண். கு: கo.)

நுசை—சிவதை. (உ - ம்.) "கொள்ளிரவு தோணிபுளிகண்ணிநுசை" (தை தல. தைலவ. கoகூ.)

நுட்பம்–1. கரந்துறைகோள்களுளொன்று. (சிலப்.நாடுகொண்.கoஉ. உரை.) 2. நுட்பவணி. (உ - ம்.) "தெரிவுவேறுகிளவாதுகுறிப் பினுந் தொழிலினுந் – அரிதுணர்வினைத்திறநுட்பமாகும்" (தண்டி. சுகூ.) 3. நுண்ணம. (சூ. நிக. அ: கக.)

நுட்பவணி — தெரிந்தவேறுகச்சொல்லப்படாமல் குறிப்பினுலாவது தொழிலினுலாவது அதுமித்து அரிதாக அறியத்தக்க செய்கைத் திறமுடைய அணி; அது: குறிப்புநுட்பம், தொழில்நுட்பமென விருவகைப்படும். (தண்டி. சுகூ. உரை.)

நுடக்கம்—அசைவு. (ஐங்குறு.)

நுடக்கி—ஒன்றுகக்கரைத்து. (சிந்தா.)

நுடக்கிய – கழுவின. (உ-ம்.) "கள்ளடுமகளிர்வள்ளநுடக்கிய" (பெரும்பா. கூகூகூ.)

நுடக்கு—மூடச்சு, நுடக்கம். (வழக்.) (பரிபாடல்.)

நுடக்குதல்—மாய்த்தல். (உ-ம்.) "பொங்குபிசிர்நுடக்கிய" (பதிற்று. எஉ.)

நுடங்கல் — அசைந்துவருதல். (உ - ம்.) "சூழ்முகத்தினி-னேக்கிற்சந்திற்செருகநுடங்கலான்" (சேதுபு. சேதுச. கூகூ.)

நுடங்கி—அசைந்து. (பத்துப்பா.)

நுடங்கு—1. நுடக்கம். 2. தெரிநிலைவினைப் பகுதி.

நுட்ங்குதல்—1. ஆடல், அசைதல். (உ-ம்.) "மின்னினன்னமருங்குல்போல்நுட ங்கி நின் றுள்" (இராமா. உலாவியல். கூ.) 2. துளவல். (உ-ம்.) "நுடங்கித்தயங்குமே" (அரிச்ச. நகர. கo.) 3. மூடங்கல், வளைதல். (ஞானமிர்தம்.)

நுண்ணுரிமை—நுட்பம். (வழக்.)

நுண்ணியது—நுண்மையானது. (வழக்)

நுண்ணியம்–நுண்ணறிவுடையேம்.(உ-ம்.) "நுண்ணியமென்பாரளக்குங்கோல்" (வள். எகo.)

நுண்மணல் — மெல்லியமணல். (உ - ம்.) "மீதேநுண்மணலிறைத்து" (திருவாத. மண்சுமந்த. கூ.) ஈண்டுநுண்மை-மென்மைகுறித்து நின்றது.

நுண்மை-1.கூர்மை,நுண்ணறிவு.என்பதிற் காண்க. 2. நுட்பம், சிறுமை. (உ - ம்.) "நுண்டுளிகண்டாருமருவி"(கோயிற்பு. பதஞ்சலி. சச.)

நுணக்கம்—நுணங்கல். (வழக்.)

நுணகம்—பொன். (வைத்தியபரிபா.)

நுணங்கல்—1. நுட்பமாதல். (உ - ம்.) "நுணங்கியகேள்வியிலோர்" (பெரியபு. தடுத்தாட். கச.) 2. நுண்மையாதல்.

நுணங்கியோர்—அறிவுடையோர். (உ-ம்.) "யாப்பும்பாட்டுந்தூக்குந்தொடர்புஞ்செய்யுளோர்க்கிற்றென்பதுணங்கியோரே" (யாப். காரிகை.)

நுணங்கு–1. நுண்மை. (ஐங்குறு.) (புறநா.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

நுணங்குதல்—1. நுண்மையாதல். 2. மெலிதல். (உ - ம்.) "நுணங்குவாலுமறுப்பூண்டு" (விவேகசிந்தாமணி.)

நுணலல்—தவளை. (உ - ம்.) "நுணலுந்தன் வாயாற்கெடும்" (பழமொழி.) நுணலெனவும் வழங்குவர். (ஐங்குறு.)

நுணலை—தவளை. (சூ. நிக. கூ: எஎ.)

நுணவம்–நுணை. (உ-ம்.)"நறவுவாயுறைக்கு நாகுமுதிர்நுணவம்" (சிறுபா. நிக.)

நுணவு—1. தணக்கு. 2. நுணை. (சிறுபா. நிக. உரை.) ஆக்குறுக்கம். உகரம்-சாரியை.

நுணவை—1. எண்ணெலை. 2. மரா. (1, 2-சூ. நிக. கக: ணகரவெ. உக.)

நுணை—தணக்கு. (சூ. நிக. ச: உச.)

நுணுகுதல்—தடவுதல்.(வழக்குப்போலும்.)

நுணுப்பூக்கிரந்தி—ஒருவகைநோய்.(உ-ம்.) "தொக்கண்ணியெழும்புநுணுப்பூக்கிரந்திமுதனெய்தொலையும்" (தைல. தைலவ. கoசு.)

நுணுமஞ்சள்—ஆத்தி. (வைத்தியபரிபா.)

நுணுவுதல்—தடவித்தெரிதல்.(வழக்குப் போலும்.)

நுணுக்கம் — 1. கூர்மை. 2. நுண்மை. (பிங்கல. உஉசு.)

நுணுகீகல் — நுண்மையாக்கல். (உ - ம்.) "திரிகடு" சo. பார்.

நுணுக்கி—கூரிதாக்கி. (சிந்தா.)

நுணுக்கு–1. அற்பம். (வழக்.) 2. தெரிநிலை வினைப்பகுதி.

நுணுக்குதல்—நுணுக்கல். (உ-ம்.) "நூறு கொட்டிநுண்மணல்விராய்நுணக்குநொருபால்" (திருவானைக்கா. திருநீற்றுத்திரு. கச.)

நுணுகி—மெலிந்து. (உ-ம்.)"தோணுணுகி" (புறநா. கூசு.)

நுணுது—1. நுண்மை. (பிங்கல. உஉசு.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

நுணுதுதல்-1. கூர்மையாதல். 2. நுண்மையாதல். (1, 2-வழக்.)

நுணுங்கல்—நுண்மையாதல். (வழக்.)

நுணுங்து—1. நுண்மை. (சூ. நிக. அ: ககக.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

நுதம்புதல்—நனைந்தழுக்காதல். (வழக்குப் போலும்.)

நுதல்-1. சென்னி. (உ-ம்.) "குடுமிகளைந்த நுதல். (புறநா. எஎ.) 2. சொல். 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. நெற்றி. "சிந்தூரம்" பார். 5. புருவம். (சூ. நிக. உ: கூஎ.)

நுதலணி—இலம்பகம். (பிங்கல. கஉ00.)

நுதலல்—1, குறித்தல். (சூ. நிக. அ: கூடி.) 2. சொல்லல். (உ-ம்.) "வந்துழிக்காண்க"

நுதலிப்புகுதல் — தந்திரயுத்தி மூப்பத்திரண்டனுளொன்று; அஃது: இதுசெய்யின் இப்படியாகுமென்று கருதிப்புகுதல். (உ - ம்.) "நுதலிப்புகுதலோத்துமுறைவைப்பே" (நன். பாயிர. கச.)

நுதலுதல்—நுதலல். (வழச்.)

நுதி—1. தலை. (கலி. கoக. உரை.) 2. நுனி. (உ-ம்.) "திருக்கரத்தினகநுதியால்" (கோயிற்பு. பதஞ்சலி. கூஉ.) 3. முன்பு. (திருக்கோ. கூசo. உரை.) (சிந்தா.)

நுதுத்தல்—அவித்தல். (உ - ம்.) "நெய்யாலெரிநுதுப்போமென்றற்றூற்கௌவை யாற்—காமநுதுப்போமெனல்" (வள். ககசஅ.)

நுதுப்பு—நுதுத்தல். (வழக்.)

நுந்த—செலுத்த. (ஞானமிர்தம்.)

நுந்தல்—பொழிதல். (உ - ம்.) "கட்புனன் மிகநுந்த" (கோயிற்பு. நடராச. சஎ.)

நுந்துதல்—1. தள்ளுதல். (உ-ம்.) "பிடர் பிடித்துநுந்துகின்றதவைகேட்ப" (சேதுபு. கத்துரு. உ.) (திருவாச. கோத்தும்பி. கo.) 2. தூண்டுதல். (உ-ம்.) "நுந்தாவொண்சுடரே" (திருநாவு. தேவாரம்.)

நுந்தை—உன்றந்தை. (உ-ம்.) "எம்மைக் காக்குந்தலைவனேநுந்தையன்றே" (தாயு. தேன் முக. கo.) (ஐங்குறு.)

நுபம்—எருக்கு. (வைத்தியபரிபா.)

நுபுவநுந்தி—ஆமையோடு. (வைத்தியபரி. கருப்.)

நும்—1. ஒரு சாரியை. (உ-ம்.) "நிரலேதம் நும்சார" (நன். உசசு.) 2. விரவுத்திணைமுன்னிலைப்பன்மையில்வருமோர் விகாரப்பெயர்.

நும்பி—உம்பி.

நும்பியீர்—உந்தம்பியீர். (உ-ம்.) "நும்பியீறப்பினையொழிப்பதற்கேதுவுண்டெனை" (பாரத. நச்சுப்பொ. நிகூ.)

நும்மோர்—உம்மவர். (வழக்.)

நுமர்—உம்மவர். (உ-ம்.) "அம்மலர்வாட்கணல்லாயெல்லிவாய்நுமராடுவதே" (திருக்கோ. கநிகூ.)

நுமள்—உம்மவள். (நன்னூல். பெயரியல்.) கிழமுதலாகளென்னுஞ் சூத்திரவுரையிற் காண்க.

நுமையனுர்—நுந்தையனுர். (சிந்தா.)

நுரை—1. நீர்முதலியவற்றினுரை. (உ-ம்.) "நுண்டம்" பார். 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. வெண்ணெய். (உ ம்.) "நீந்துயிர்கலக்கிநுரை தெரிந்து" (பெரும்பாண். கநிநி.)

நுரைத்தல்—நுரைக்குதல். (வழக்.)

நுரைப்பீர்க்கு—ஒரு பீர்க்கு. (வழக்.)

நுரையாம்பூச்சி—ஒரு பூச்சி. (த. நி. போ. ககக.)

நுரையீரல்—ஈரவிஞ்ஞ்வகை. (வழக்.)

நுவணம்—நுவணை.

நுவணை—1. கல்விநூல். (சூ. நிக. கக: வகர வெ. உ. 2. திணைப்பிண்டி, தினைமா. (உ-ம்.) "உண்ணுநர்த்தடுத்தவிடிநுண்ணுவணை" (மலை படு. சசநி.) 3. நாட்பம். (சூ. நிக. கக. வகர வெ. உ.) 4. மா. (பிங்கல. ககஎ.)

நுவல்-1. சொல். 2. தெரிநிலைவினைப்பகுதி.

நுவல்கை—சொல்லுதல். (வழக்.)

நுவலல்—1. சொல்லுதல். (உ-ம்.) "ஈகை நுவல" (புறநா. உசு.) 2. விரும்பல். (ஞானமி.)

நுவலாச்சொல்—நுவலாநுவற்சி. (உ-ம்.) "மாறியிகழ்மொழிவண்புகழாய்நுவலாச் சொல் வரும்" (வீரசோ. அலங்கா. கூஉ.)

நுவலாநுவற்சி—புகழாப் புகழ்ச்சியென்னுமணி; அஃது: ஒருபொருளைப் பழித்தாற்போலப் புகழ்வது. (தண்டியல். பொருளணியி. அஉ.)

நுவலுதல்—நுவலல். (உ-ம்.) "வெய்திழையேலெனநுவலா (இராமா. ஆரணிய. சூர்ப்பநகிப். கூசு.)

நுவலுழித்தோற்றம்—பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக்காரணமான நிரைகண்டோர்வரவும் ஊரிலுள்ளோர்கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர்வரவும். (தொல். பொரு. நிஅ.)

நுவற்சி—சொல்லுகை. (வழக்.)

நுவறல்—சொல்லல். (உ-ம்.) "நோக்குநெடும்பாரவர்க்குநோன்புலவான்றலையவர்க்குதவறல்கேட்டா-மீக்கணிலைவிழியளவா" (சேதுபு. காயத். சு.)

நுவறிய —அராவின. (உ-ம்.) "நுணங்கற நுவறிய நுண்ணீர்மாஅம" (மலைபடு. கூடு.)

நுழல்-கொற்றுகம்,ஓர்பூண்டு.(வைத்தியபரி)

நுழுதல்—கோதுதல். (உ-ம்.) "மயிர்நுழுதி மருங்குயர்ந்த" (பெரியபு. ஆனாய. கடு.)

நுழுந்துதல்—நுழுவுதல். (வழச்.)

நுழுவல்—நுழுவல். (வழக்.)

நுழுவு—தெரிநிலைவினைப்பகுதி.

நுழுவுதல்—நுழுவுதல். (வழக்.)

நுழை—1. சிறியவழி. (உ-ய்.) "பின்னியண்ணபிணங்கரிணுழைதொறும்" (மலைபடு. கூஎக.) 2. துவாரம். (தைல. தைலவ.) 3. நுண்மை. (சூ. நிக. அ: கக.) 4. தெரிநிலைவினைப்பகுதி.(உ-ம்.)"மழைநுழைவரையென" (திருவிளை. நாக. அ.) 5. பலகணி, சாளரம். (பிங்கல. கூஅ0.)

நுழைச்சல்—நுழைத்தல். (வழக்.)

நுழைகல்லா—நுழையாத. (புறநா.)

நுழைத்தல்—நுழைவித்தல். (வழக்.)

நுழைதல்—1. கழிதல். (உ-ம்.) "வடபெருங்கோட்டுமலர்ப்பொழிணுழைந்து" (சிலப். நாடுகாண். கூடு.) 2. செல்லுதல். (உ-ம்.) "பார்த்தகண்நுழையாவாகபரந்திருளகான்றவன்றே" (திருவிளை. நான்மா. க.)

நுழைவு—1. கூரியபுத்தி. 2. நுண்மை. (உ-ம்.) "நொசிவுநுழைவுநுணங்குநுண்மை" (தொல். சொல். கூஎச.)

நுளம்பு—ஓர் பறவை. (பிங்கல. உகூகூ.)

நுளம்புதல்—அசட்டைபண்ணல். (வழக்குப்போலும்.) நுளுப்புதலென்றுங்கூறுவர்.

நுளை—1. ஈரம். (வழக்.) 2. நுளைச்சாதி. (சிறுபாண். கடுஅ. உரை.)

நுளைச்சி—நெய்தனிலப்பெண். (சூ. நிக. உ: எஉ.)

நுளைச்சியர்—நெய்தனிலத்துத் தாழ்ந்த பெண்டிர். (உ-ம்.) "தழுவுசீர்நுளைச்சியர்தசும்பிற்சேலுடன் - விழுங்கிழலெண்ணியே விற்க" (சேதுபு. கந்தமா. அஎ.)

நுளைத்தியர்—பரத்தியர். (தொல். பொரு. உ0. உரை.)

நுளைமகள்—நுளைச்சாதியிற்பிறந்தமகள். (உ-ம்.)"நுதிவேலெஞ்கினுளைமகளரித்த"(சிறுபா. கடுஅ.)

நுளையர்—நெய்தநிலத்துத்தாழ்ந்த ஆடவர். (உ-ம்.) "நுளையர்நுளைச்சியர்பரதர்பரத்தியர்" (அகப்பொ. அகத்தி. உச.)

நுன்—உனது. (உ-ம்.) "நம்பகின்பெருமை நுன்னிடையொடுங்க" (கருவூர்த்தேவர் திருவிசைப்பா.) (சிந்தா.)

நுனி—1. நுண்மை. (உ-ம்.) "நூலோடு போனநுனிகூர்நோலாருஞாநமுநிவீர்" (சேதுபு. பாலோடை. சசு.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. மூனை. (வள். வலியறிதல். சு.)

பகாரம்—1. அலங்காரம் (உ-ம்.) "விகார முறாசூரன்பகாரமுயிர்வாழ்வும்விநாசமுறவே லங்கெறிவோனே" (திருப்பு. கஅசு.) 2. பகரம்.

பகாவின்பம்—வீட்டின்பம். (சிவதரு.)

பகி—பகலில்வரும் பதினைந்தாமுகூர்த்தம். (கூர்மபு. பிரமவிபு. ஈ: உரை.) [விதானமாலையுரைகாரர் பாக்கியமென்பர்.]

பகிடி — 1. பரிகாசம். 2. விகடம். (1, 2-வழக்.)

பகிர்–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. பகுப்பு. (இராமா. பாலகா. திருவவதார. அஅ.) 3. பிளப்பு. (உ-ம்.) "திங்களின்பகிர்புரைநுஞ்சம்" (திருவிளை. நாக. கடி.) 4. வெடியுப்பு. (வைத்தியபரிபா.)

பகிர்ச்சி—பகுப்பு. (தொழிற்பெயர்.)

பகிர்தல் — பங்கிடல். (உ-ம்.) "பாழுக்குயான்வளர்த்தேன்கிள்ளையைப்பழம்பால்பகிர்ந்தே" (தனிப்பா. உ-ம். ஈஎசு.)

பகிர்விடல்—பிளவாதல். (வழக்.)

பகிரங்கம்—1. மறைப்பின்மை. 2. வெளி.

பகிரண்டம்—1. அடத்தின்வெளி. 2. பேரண்டம். (உ-ம்.) "ஆதியாயண்டபகிரண்டத்தும்புறத்தும்" (அரிச்ச. பாயிர. நி.)

பகிரதன்—சூரியகுலஓரரசன், கங்கையைவரவழைத்தவன். (இராமா.பால. அகலிகைப்.சஈ.)

பகிரதி—கங்கை. (உ-ம்.) "பாருவகையினுலாளுதற்கிருந்தான்பகிரதிமகன்" (பாரத. குருகுல. கூச.) பகிரதன்பொருட்டுப்பூமியில்வந்ததனாற் பகிரதியென்றுமாது.

பகிரோனல்—அச்சக்குறிப்பு. (வழக்.)

பகு—தெரிநிலைவினைப்பகுதி.

பகுத்தல்–1. ஈதல். (உ-ம்.) "நைவேத்தியம்" பார். 2. பங்கிடல்; இது: வணிகரெண்குணத்தொன்று. (உ-ம்.) "செழுங்கோள்வாழையகவிலைப்பகுப்பும்" (புறநா. கசுஅ.) 3. வெட்டல். (சூ. நிக. கூ: உசை.)

பகுதல்—1. ஈளைத்தல். 2. பிரிதல்.

பகுதி—1. இயல்பு. [பிரகிருதியென்பதின் விகாரம்.] 2. ஒருவகைச்சந்தம்; அஃது: அடியொன்று ஒன்பதெழுத்தாய்வருவது. (வீரசோ. யாப். ஈஈ உரை. 3. சொன்முதனிலை. (நன்னூ. பதவிய. உ.) 4. பங்கு, பிரிவு. (வழக்.) 5 படை. (பிங்கல. கடுஅ.) 6. வேறு. (ஞானமி.)

பகுதிக்கிளவி–பக்கச்சொல். (உ-ம்.) "தகுதியும்வழக்குந்தழீஇயினவொழுகும், பகுதிக்கிளவியுரைநிலையிலவே" (தொல். சொல். கஎ. சேநா.)

பகுதிகட்டுதல் — 1. இறைகொடுத்தல். 2. பங்கிடுதல்.

பகுப்பு—1. பகுத்தல். 2. பகுதி. 3. பிரிவு. (1, 2, 3-வழக்.)

பகுபதம் — பகுக்கப்படுமியல்புடையபதம். (உ-ம்.) "பகாப்பதமேழும்பகுபதமொன்பதும் - எழுத்தீருகத்தொடருமென்ப" (நன். கஈ஦.)

பகுவபஞ்சம் — உபநிடத முப்பத்திரண்டிலொன்று. (வழக்.)

பகுவாய் — 1. தாழி. 2. பிழா. 3. பிளந்தவாய். (உ-ம்.)"பல்பொறிப்பகுவாய்ப்படம்புடைபரப்பிப்" (திருவிளை. நாக. கடி.)

பகுளம் — இருட்டிணபக்கம். (வழக்குண்டு போலும்.)

பகூதகம் — உலகிலெவ்விடத்துமடைந்து நடக்கப் பலமுள்ளவர்களுக்கு நியமிக்கப்பட்ட சந்நியாசம். (கைவல். கசஅ.)

பகை–1. ஆறுநரம்பு, மூன்றுநரம்பென்பர். (சிலப்பதி.) 2. சதுருத்தாரம்; அஃது: ஆறு

மிடம். (விதாந. மரபியல். ச. உரை.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 5. பகைவன். (உ-ம்.) "பகை முன்னர்வாழ்க்கைசெயலும்" (திரிகடு. ச.) 6. விரோதம். (உ - ம்.) "எக்காலம்பகைமுடித்துத் திரௌபதியுங்குழல்முடிக்கவிருக்கின்ரு ளே" (பாரத. இருட்டிண. உஉ.)

பகைஞர்—சத்துருக்கள். (இராமா. பாலகா. நகரப். கக.)

பகைத்தல்—பகைகொள்ளல். (வழக்.)

பகைத்தானம்—ஆருமிடம். (விதாநமா.)

பகைத்தோடை—முரண்டொடை. (யாப். காரி. உறுப். ககூ.)

பகைநரம்பு—நரம்பிசையாற்பிறந்த பொல்லமை; அவை: அதிர்வு, ஆர்ப்பு, கூடம், செம்பகை யெனநான்கு. (சிலப். வேனிற். உஎ, உகூ.)

பகைநாள்—செய்யுட்பொருத்தம்பொருந்தாநாள். (உ-ம்.) "சொல்லியநாண்மூவொன்பதாகத்துணிந்தொன்று - புல்லியமூன்றைந் தேழ் பொருந்தாவாம்" (வெண்பாப் பாட்டியலிற் காண்க.) இவ்வாறன்றி, ஆதிரைபரணியாரலாயிலியமூப்பூரங்கேட்டைதீதுறுவிசாகஞ்சோதிசித் திரை மகமீராறும். சுபகாரியத்துக்காகா என்பர்.

பகைப்படல்—விரோதமாதல். (வழக்.)

பகைப்பு—பகைத்தல். (வழக்.)

பகைமுன்னெதிர்நுன்றல்—பகைவர்க்கு முன்னெதிர்த்தல்; அஃதி: எண்வகை வெற்றியிலொன்று. இதற்குக்காஞ்சிவேய்தலுண்டு. (சூ. நிக. கஉ: கூஉ.)

பகைமேற்செல்லல்—மாற்றரைப்பொரப் போதல்; அஃது: எண்வகைவெற்றியிலொன்று. (சூ. நிக. கஉ: கூஉ.)

பகைமை—பகைத்தனம். (வழக்.)

பகையாளி—பகைஞன். (வழக்.)

பகைவர்—சத்துருக்கள். (உ-ம்.) "பரிகிதன் பெரும்பகைவர்மேல்விடுத்தலில்" (பாரத. இருட்டின. அசு.)

பகைவர்க்கம்—காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்களாறும். (வள். சசு. அதி.)

பகோளம்—வானவுண்டை, வானவட்டம்.

பங்கசிரீடம்—பன்றி. (வைத்தியபரிபா.)

பங்கசாதம்—தாமரை. (உ-ம்.) "பங்கசாத பரிமளங்கொள்பாதரா சசூநுவே" (பாரத. வாரணவதச். ககூ.) பங்கம்-சேறு. சாதம்-உற்பத்தி.

பங்குசை—ஒரு பாலாரிட்ட தேவதை. (வி-ணி. உகூஅ.)

பங்கணி—பங்கம்பாலை. (வைத்தியபரி.)

பங்கப்பிரபை—ஏழுநரகங்களுளொன்று. (சிந்தா. முத்தி.)

பங்கம்—1. அழிவு. (உ-ம்.) "அற்பங்கமுற வருமருணன்" (இராமா. சடாயுகாண். அ.) 2. குற்றம். (உ-ம்.) "பங்கமில்சீரருண்முகிக்குப்" (கோயிற்பு பாயி. உசு.) 3. சேறு (உ-ம்.) "பங்கமுகந்தலைமோத" (மு-தி. சுடு.) 4. தோல்வி. (உ-ம்.) "சொற்பங்கமுறநிமிரிசையின்சும்மையை" (இராமா. சடாயு. அ.) 5. பின்னம். 6. மூடம். அம்-சாரியையென்க. 7. வத்திரம். 8. வெட்கம். (திருவிளை. தருமிக்குப். அஉ.) (5, 7, 8 சூ. நிக. கக: வகரவெ. ச.)

பங்கமிபாலை—பங்கம்பாளை.

பங்கம்பாலை—1. ஆதிதின்னுப்பாலை 2. வட்டத்திருப்பி. (1, 2-வைத்தியபரிபா.)

பங்கயம்—1. தாமரை. (உ-ம்.) "உனையு மடர்த்தபங்கயம்" (மு-தி. ஙக.) 2. தாமரைவடிவினதாகிய ஒருவகை ஆயுதம். (உ-ம்.) "மணிமலர்ப்பங்கயத்தண்டம்" (கந்தபு. விடைபெறு. ஙகூ.)

பங்கயன்—பிரமன். (உ - ம்.) "பங்கயன் முகுந்தனும்பரமென்றுன்னியே" (கந்தபு. கட வுள்வாழ். டு.)

பங்கயநாள்—உரோகணி. (உ-ம்.) "சத்தமி பஞ்சமிபங்கயநாள்" (விதாந. குலகுண. கூ.)

பங்காரம்—பொன். [தெலுகு.] வங்காரமெனவும் வரும்.

பங்காளம்—1. ஒரு தேயம். வங்காளம் எனவும் வரும். 2. ஒரு புருஷராகம்; இதன்: மனைவிகள். தந்நியாசி, காம்போதி, கௌளி, அதிதேவதை. விநாயகர். (வி-ணி. உகக.)

பங்காளன்—பங்காளி. (வழக்.)

பங்கி—1. ஆண்மயிர். (உ-ம்.) "விந்தாசலத்தின்மிகைபெறிலங்கமிளிர்பங்கிவெங்கதமிகும்-கொந்தாரழற்கு" (ஏகாதசி. உருக்குமாங். சஉ.) 2. கஞ்சா. (உ-ம்.) "பங்கிச்சாறுமூட்டி" (தைல. தைலவ. கo டு.) சடைக்கஞ்சாவுக்கும் பெயர்கூறுவர். 3. சாதிலிங்கம். (வைத்தியபரிபா.) 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. பிறமயிர். (சூ. நிக. உ: கoக.)

பங்கிகவாசம்—நண்டு. (வைத்தியபரிபா.)

பங்கிடுதல்— } பகிர்தல் செய்தல். (வழக்.)
பங்கித்தல்— }

பங்கிவிதை—கஞ்சாவிதை. (வைத்தியபரி.)

பங்கீடு—பங்குசெய்தல். (வழக்.)

பங்கு—1. கூறு. 2. சனி. (உ-ம்.) "சகட்டினப்போழ்ந்து-பங்குவேறினும்" (பிரமோ. கூ: உ.) 3. பாகம். (உ-ம்.) "பங்குலவுகோதையுந்தானும்" (திருவாச. திருப்பொன். கூ.) 4. பாதி.

5. மூடம். (4, 5-பிங்கல. கூஎசகூ.)

பங்குசம்—தலைக்கோலம். (பிங்கல.கஉ 0உ.)

பங்குநன்—அருச்சுநன். (உ-ம்.) "பங்குநன் பெருந்தீர்த்தநீர்படிவதற்காக" (பாரத. அருச் சுநன்றீர். சுவ.)

பங்குநி—1. உத்திரநட்சத்திரம். (உ-ம்.) "உலக்கையதனைபெங்குநியந்தத்திற்கு"(விதா ந. குணகுண. உக.) 2. ஒரு மாதம். பங்குந என்னுமாரியபதம் தமிழிலே பங்குனிஎன வழங் கும் என்பர்.

பங்குபடுதல்—பின்னப்படல். (வழக்.)

பங்குரை—அதிவிடயம். "சதி"பார்.

பங்கூரம்—1. அதிவிடயம். 2. மரமஞ்சள். 1, 2-வைத்தியபரிபா.)

பங்கேசம்—தாமரை.

பங்கேருகம் — தாமரை. (உ-ம்.) "பங்கே ருகத்துமலர்" (அரிச்ச. மயாஉ. உச.)

பச்சடி—ஒரு கறி. (பிங்கல. கசஉடு.)

பச்சரீசி — 1. அம்மான்பச்சரிசி. (உ-ம்.) "பிரமிவிளாபச்சரிசிபீலைசங்குவேளை" (தைல. தைலவ. கசுடு.) 2. அவியாமற்குத்தினவரிசி. (உ-ம்.) "பச்சரிசிப்பொங்கல்" (வழக்.)

பச்சன்னியம்—மரமஞ்சள். (வைத்தியபரி.)

பச்சாதாபம் — 1. இரக்கம். (வழக்.) 2. செய்ததகுற்றத்திற்கு மனஸ்தாபம். (உ-ம்.) "கூறுமறையருட்கூலென்றதற்கேபச்சாத்தா பமெய்தி" (சிவரக. பாச்சிய. கூ.)

பச்சிமம்—1. பின். 2. மேற்கு. (உ-ம்.) "பச்சிமத்தடைந்தபரிதி" (சிவரா.உற்பவ.உசு.)

பச்சிலை — 1. ஒரு மரம். (உ-ம்.) "பச்சிலை மதுரஞ்சடை" (தைல.தைலவ.டுக.) 2. பச்சை யிலை. (திருவிளை. இசைவாதுவெ. கூச.)

பச்சிலைப்பாம்பு—ஒரு பாம்பு. (வழக்.)

பச்சிலையோனி—பச்சோந்தி. (வழக்.)

பச்சிறைச்சி—பச்சையிறைச்சி, வே வா யிறைச்சி. (வழக்.)

பச்சேனல்—பச்சையாயிருத்தல். (வழக்.)

பச்சேனவு—ஈரம். (வழக்.)

பச்சை—1. அவியாதது. 2. இளமை, பச் சைப்பிள்ளை. 3. ஈரம். 4. உடம்பிற்குத்தும் பச்சைக்கோலம். 5. ஒருநிறம், பசுமை. (உ-ம்.) (உ-ம்.) "பச்சையாலிலையோ" (பாரத.திருட்டி. அ0.) 6. ஒருபுதர்; அது: வாசனைப்புதர். 7. தோல். (உ-ம்.) "பச்சைநல்யாழ்"(புறநா.ககூச.) 8. பச்சைக்கற்பூரம். (தைல. தைலவ. கூச.) 9. பண்டம். (சிந்தா. காந்தருவ. கூகo. உரை.) 10. புதன். 11. மரகதம். (உ-ம்.) "பைஞ்சுட ரெறிக்கும்பச்சை" (திருவிளை. நான்மா. கo.) 12. வங்காளப்பச்சை. (தைல.தைலவ.கூஎடு.) 13. விட்டுணு. (1, 2, 3, 4-வழக்.) (6, 10, 13-பிங்கல. கூஎடுக.)

பச்சைக்கருப்பூரம்–ஒருவகைக்கருப்பூரம். (வழக்.

பச்சைக்குதிரை — சூரியனுடைய பசுங் குதிரை. (உ-ம்.)"ஞாலங்காவலுடையவனெரு காட்பச்சைக்கோடகங்கரப்ப" (சேதுபு. வே தாள். சுடு.)

பச்சைக்கோம்பு—இஞ்சி.(வைத்தியபரி.)

பச்சைநாடன்—ஒருவிதவாழை. (வழக்.)

பச்சைநாபி—ஒரு மருந்து. (வழக்.)

பச்சைநிறநிற்களன்—தருஞி. (வைத்திய பரிபா.)

பச்சைப்பசேரெனல்– மிகுபசுமையா யிருத்தல். (வழக்.)

பச்சைப்பயறு – பசும்பயறு, பாசிப்பயறு. (வழக்.)

பச்சைப்பாம்பு—பச்சிலைப்பாம்பு. (வழக்.)

பச்சைப்பாலன்—இளங்குழந்தை (வழக்.)

பச்சைப்புழு—ஒருபுழு. (வழக்.)

பச்சைமயன்—திருமால். (வழக்.)

பச்சைவில்–1. இந்திரதனு, 2. மன்மதன் வில். (1, 2-வழக்.)

பசோந்தி—கோம்பி. (பிங்கல. உடுஅ.)

பசந்தல் — 1. காமமுதலியவற்றாற் பொன் னிறப் புள்ளியுண்டாதல். (உ-ம்.) "உங்களங் கம்பத்தியைப்போற்பசப்பதுரை செய்யுமே" (புகலூரந்தாதி. நங்களங்கம்என்ற முதற்குறிப் புக்கவியிலுரை) 2. பசுமையாதல்.

பசந்து — 1. பச்சைவண்ணமாய். (உ-ம்.) "ஒளிநிறம்பசந்துதோன்றி" (திருவிளை. யானை யெய். உஎ.) 2. பொன்னிறங்கொண்டு. (சிலப் பதி.)

பசப்பல்—பசப்புதல். (வழக்.)

பசப்பு—1. பச்சைநிறம். 2. பசலை. (திரு வள். பசப்புறுபருவரல். கo.)

பசப்புதல்—மயக்கல். (வழக்.)

பசபசத்தல்—தினவெடுத்தல். (வழக்.)

பசபசப்பு—
பசபசெனல்– } பசபசத்தல். (வழக்.)

பசமருத்தித்தம்—மரமஞ்சள்.(வைத்தியபரி.)

பசலை — 1. காமமுதலியவற்றாலுண்டாம் பசப்பு. (உ-ம்.) "வித்தங்குபுரைவெற்றிவெயர் வரப்பசலைவிம்ம" (இராமா. உலாவியல். கசு.) 2. கொடிவயலைக்கீரை. (பதார்த். சிந்தா. சுடுச.) [வயலை-பசலையென மருவிற்று.] 3. பொன்னிறம். (உ-ம்.)"பாழூர்நெருஞ்சிப்பசலை வான்பூ" 4. வருத்தம். (முல்லைப்பாட்டு.)

பசவ்வியம்—புல். (வைத்தியபரிபா.)

பசள்—பலாமரம். (வைத்தியபரிபா.)

பசரி—ஒரு கீரை. (வழக்.) வழுவழுப்பும் புளிப்புமுள்ளது.

பசலை — வசலைக்கொடி; அது: கொடிப் பசலை அல்லது வெள்ளைப்பசலை, சிவப்புப் பசலை, துலுக்கப்பசலை அல்லது கோழிக்கீரை, பேய்ப்பசலை, வழுக்கைப்பசலையெனப் பல வகைப்படும். (வைத்தியபரிபா.)

பசறை—சிறுபசலைக்கீரை.(பதார்த்த.சிந்தா. சுருங்கி. உரை.)

பசாசம்—1. இணையாவினைக்கைமுப்பத்து மூன்றுவகைகளுளொன்று; அது: பெருவிரலுஞ்சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்றுவிரலும் தம்மிற்பொலிந்துநிற்பது; அஃது: அகங்கிலப் பசாசம், முகங்கிலப்பசாசம், உதிர்கிலப்பசாசமென மூன்றுவகைப்படும். (சிலப். அரங்கேற்று. 18. உரை) 2. இரும்பு. (உ-ம்.) "காந்தங் கண்டபசாசத்தவைபே" (சிவஞானபோ. சூ.) 3. பேய். (உ-ம்.) "மயாநம்"பார்.)

பசாசன்—பேயன். (வழக்.)

பசாசு—பேய். (சூ. நிக. க: சுருங்கி.)

பசாநம்—ஒருநெல். (வழக்.)

பசாரி—சந்தை. [பார்சி.]

பசி — 1. உணவைத்தகிக்கும் அக்கினி. 2. தெரிகிலவினைப்பகுதி. 3. பசித்தல். (உ-ம்.) "பவகோடியினைத்தினிலும்பசிப்பிணி யாரிடருழந்து" (சிவரக. பசாசுமோசன. கஉ.)

பசித்தல்—பசிகொள்ளல். (வழக்.)

பசிதம்—திருநீறு. (சைவவி. கூஅ.) [சிவத்துவத்தைவிளக்குவதாற் பெற்றபெயர்.]

பசிப்பாழி—உடம்பு (உ-ம்.) "பசிப்பாழி மூலமறுப்பார்" (சைவச. பொது. சூஉக.)

பசிப்பு—பசித்தல். (மணிமேக.)

பசிரி—ஓர்பூடு; அது: குதிரைப்பசிரி, பெரும் பசிரி, வரட்பசிரி எனப் பலவகைப்படும். (சூ. நிக. ச: கூருரு)-ல் பாவிரியென்றுபெயர்கூறுவர்.

பசு— 1. அநாதிபாசபந்தமுடைய ஆன்மா. (சைவப்பி. நிருக.) [பச்-பந்தித்தல். உ-செயப்படுபொருள் விகுதி.] 2. ஆன். (சூ.நிக.க:கக.) 4. யாகத்துக்குரிய ஆடு. (உ-ம்.) "சாகபசுநியாயம்"பார்.

பசுகாயத்திரி — பலியிடப்படு மிருகத்துக்குபதேசிக்கு மந்திரம்.

பசுங்கதிர்த்தே—சந்திரன்.(சூ.நிக.க:நிருக.)

பசுங்கரந்தை — பச்சைக்கரந்தை, ஒரு பூண்டு. (வழக்.)

பசுங்குழவி—இளம்பிள்ளை. (உ-ம்.) "ஒரு வாதபசுங்குழவியுடனிருத்தி" (திருவிளை. பழி பஞ். எ.)

பசுங்கொடி—அறுகு. (வைத்தியபரிபா.)

பசுங்கொற்றன்—ஒருகொற்றன், ஓர் பூடு.

பசுங்கோரை—ஒருபுல். (வழக்.)

பசுஞானம் — மாமூதலிய நான்குங் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குக்கருவியாய் வேறுநிற்பனவென்றறிந்து நீங்கிநின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவினுண்மையை ராய்ந்தார்க்கு இனிதுவிளங்குவதாகிய ஆன்ம சொரூபஞானம். (சி. சி.)

பசுண்டி—சீரகம். (வைத்தியபரிபா.)

பசுத்துவம்—ஆன்மதத்துவம்.

பசுதரிசனம்—ஆன்மதரிசனம்.(சிந்தா. வழக்.)

பசுதரும்ம—1. இட்டிமூதலியதரும்ம.(காஞ்சிப்பு. சத்ததானப். எ.) 2. மூப்பத்திரண்டறம். (காஞ்சிப்பு.கழுவாய்ப். உகூஅ-ஆவதுகவிமுதல், உசுக-ஆவது கவிவரை காண்க.)

பசுதன்மம் — ஆன்மபுண்ணியம், இட்டி மூதலிய தருமம். (உ-ம்.) "ஒருபசுவன்மேனுள்-முன்னர்செய்தபசுதன் மந்தன்னில்" (சிவரக. பசாசு. உ0.)

பசுந்தினை செவ்வித்தினை. (உ - ம்.) "பசுந்தினைமூரல்பாலொடும்பெறுகுவீர்" (பெரும்பா. ககூஅ.)

பசுநா—பராய்மரம். (சூ. நிக. ச: உ0.)

பசுநீகாரம்—ஆணவமலம். (ஞானமிர்தக் கட்டளைபிற் காண்க.)

பசுபதி—சிவன். (உ-ம்.) "பாலலோசனன்" பார்.

பசுபந்தம்—ஒரு யாகம். (வழக்.)

பசுபுண்ணியம்—ஆன்மாக்கட்குச்செய்யுந் தருமம். இட்டியாதிதருமங்களும், மூப்பத்திரண்டு தருமங்களுமாம். முறையே (காஞ்சிப்பு. சத்ததானப். எ-ஆவது கவியிலும், கழுவாய்ப் பட. உகூஅ-ஆவது முதல், உசுக-ஆவது கவி வரையிலுங்காண்க.

பசுபோகம்—விடயவிம்பிதமாகிப் போக ரூபமாகிய புத்தியின் சாயையின் சம்பந்தத்தினாலே பசுவின் சிற்சத்தியிலாகின்ற உணர்ச்சி விளக்கம், அப்போகஞ் சுகமுந் துக்கமுமென விருவகைப்படும். (சைவப்பி. சுருக.)

பசும்பதம் — விளைந்தநெல்லும் பறிக்குங் காய்களும்; இதற்கு: அரிசியும் கறியுமென்று பெயர். (உ-ம்.) "பண்ணியமட்டியும்பசும்பதங் கொடுத்தும்" (பட்டின. உ0கூ. உரை.)

பசும்பயறு—பாசிப்பயறு. (வழக்.) (வைத்தியபரிபா.)

பசும்பிடி—பச்சிலைமரம். (சூ. நிக. ச: கூக.)

பசும்புற்றரை—சாட்டுவலம் என்றுபெயர். (சூ. நிக. நி: உக.)

பசும்பொன்—1. ஒட்டற்றபொன், மாற்று உயர்ந்தபொன். (உ-ம்.) "பாணன்சூடியபசும் பொற்றுமரை" (புறநா. கசக.) 2. இளிச்சிறை யென்னும் பொன். (மதுரைக். சகo.)

பசுமம் — திருநீறு. (சைவப்பி. கூஅ.) [பாவங்களைநீருக்கலால்.]

பசுமாந்தகம்—நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவநங்களு ளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) [இது அக்கினிதிக்கிலுள்ள பத்துப்புவநங்களு ளொன் றென்று விளங்குகின்றது. (சி.சி. அ: எ. மறை.)

பசுமெழுக்கு–புதுமெழுக்கு. (உ-ம்.) "பாகு குத்தபசுமெழுக்கில்" (பட்டினப்பாலை. கசுசு.)

பசுமை — 1. செவ்வி. (உ - ம்.) "பசுந்தா மரைத்தாள்" (திருநூற். உகூ.) 2. பச்சை. (சூ. நிக. அ: உக.) "பசுந்தாட்பாம்பிணற்புரி நூல்" என்னும், (திருவிளை. திருவால. உo-ம் செய்யுட்பாகத்திலுள்ள பசுமையென்ப தற்கு இளமையென்று பொருள்கூறுவர்.

பசுமைவெளியுப்பு—வீனையலுப்பு. (வைத் தியபரிபா.)

பசுவம்—கோரோசனை. (வைத்தியபரிபா.)

பசுவின்றக்காளி — ஒருபூண்டு. (வைத்திய பரிபா.)

பசேரெனல்–பச்சைநிறமாயிருத்தல். (வழக்)

பசை—1. ஒட்டும்பசை. (வழக்.) 2. செந் தளிப்பு. (உ-ம்.) "ஈராண்டுமழையின்றிப்-பசை யில்கருப்புவரத்தளர்வான்" (சேதுபு. வேதாள. உo.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. பற்று. (திருவிளை. அன்னக்குழியும். எ.)

பசைகாரம்–காரங்கூட்டியபசை. தட்டார் குழூஉக்குறி.

பசைதல்–அன்புகொள்ளல். (உ-ம்.) "பசை தல்பரியாதாமேல். நாலடி.)

பசைந்தார்—சிநேகிதர். (சூ. நிக. உ: நிஉ.)

பசையாப்பு—பற்றுகியதொடர்ச்சி. (உ-ம்.) "உன்பாதகமலந்தொழுவேங்கள்பசையாப் பவி ழப்பணியாயே" (சிந். பதுமை. எஎ.)

பசைவு—1. அன்பு. 2. நட்பு. (1,2-வழக்.)

பஞ்சக்கிலேசம் — ஐவகைக் குற்றங்கள்; அவை: அவிச்சை, அகங்காரம், அவா, வெறுப்பு, வெறுப்பு என்பன. (வள். கூஅ. பரி.) [பஞ்சம்-ஐந்து. கிலேசம் குற்றம்.]

பஞ்சக்கிலேசி — அசுமிதம் - அகங்காரம், அவித்தை, அவா, இராகம், துவேஷம் என்னு மைந்து கிலேசத்தையுடைய புருடன். (சி. சி. உ: நிகூ. ஞாநப்.)

பஞ்சக்குரோசவெல்லை–காசியிலோரிடம். (உ-ம்.)"தேவதேவவிசுவேசசெகமேழினுக்குங் குருநாத–பாவநாசமாகாசிப்பதிநாயக நின்கிரு பையினுல்-ஓவுவரியபாதகங்களொழிப்பான்பஞ் சக்குரோசத்தை - ஆவபிரதக்கணஞ் செய்தே னருளவேண்டுமடியேற்கே"(காசிரகசிய.பஞ்சக்குரோசபிரதட்சணவத்தியாயம்.)

பஞ்சகக்ச்சம்—பிராமணர்முதலோர் உடை யில்வரும் ஐந்துவகைமடிப்பு. கச்சம் - உடையி னுனி. (வழக்.)

பஞ்சககாயம்–தேன், நெய், பால், வாழைக் கனி, சர்க்கரை. (வைத்தியபரிபா.)

பஞ்சகஞ்சுகம்—காலம், கலை, நியதி, வித் தை, இராகம் என்னு மைவகைப்போர்வை. (உ-ம்.) "பஞ்சகஞ்சுகன்"பார்.

பஞ்சகஞ்சுகன் — இராகம், காலம், கலை, நியதி, வித்தையாகிய ஐந்து கஞ்சுகத்தை யுடைய புருடன். (சி. சி. உ: நிகூ. ஞாநப்.)

பஞ்சகதி—மயூரகதி, மல்லகதி, வாநரகதி, விடபகதி, வியாக்கிரகதியென்று குதிரைகளுக் குச்சொல்லப்பட்ட ஐவகைக்கதிகள். (சூ. நிக. கஉ : சசு.)

பஞ்சகந்தக்கொத்து — ஞாநசத்தியாகிய விஞ்ஞாநகந்தம், வாசநாசமுகமாகிய சமஸ்கார கந்தம், சுகபுத்தி, துக்கபுத்தி உபேட்சாபுத்திக ளாகிய வேதநாகந்தம், சத்தசமூகமாகிய சம்ஞா கந்தம், மூர்த்தபூத சமூகமாகிய ரூபகந்தமென் னுமித்தொகுதி. இவை நாற்பத்து மூன்று வகைப்படும். (சி. சி. சு: நி. ஞாநப்.)

பஞ்சகந்தம் — பௌத்தமதத்தார் கொள்ளு மைந்துகந்தங்கள்; அவை: விஞ் ஞாநம், சமஸ்காரம், வேதநை, சம்ஞாரூபம் என்னு மைவகைக் கந்தங்கள். (சி. சி. சு: நி. ஞாநப். பெரியபுரா. திருஞானசம்பந்த.கூகஉசு.) சமஸ்காரம்-செய்கை. சம்ஞை-குறிப்பு. என் றறிக. கந்தம்-கொத்து அல்லது கூட்டம்.

பஞ்சகந்நிகள்—அகவிகை, சீதை, தாரை, திரௌபதி, மண்டோதரி என்னும் ஐந்து கந்நியர். (அபிதாநசி.வழக்.) வேறுகூறுவர்சிலர்.

பஞ்சகம்—ஐந்தின்கூட்டம். (வழக்.)

பஞ்சகம்மாளர்—கன்னார், கொல்லர், சிற் பர், தச்சர், தட்டாரென்பவர். (சிற்பர் - கல் வினையர் (பிங்கல. எகூச.)

பஞ்சகருத்தாக்கள்—அயன், அரி உருத்தி ரன், சதாசிவன், மகேசன் என்னுமைவகைக் கருத்தாக்கள். (வழக்.)

பஞ்சகமம்—ஆடாதோடை, சீந்தில், கண் டங்கத்தரி, கையாந்தகரை, பெரும்பலா.(வைத் தியபரிபா.)

பஞ்சகருவி–தோல், தினை, நரம்பு கஞ்சம், மிடறு எஞ்ஞருவிகள். (பிங்கல. கூகச.)

பஞ்சகலியாணம்–(அருகச) சுவாக்காவதரணம், மந்திராபிடேகம், மகாப்பிரஸ்தாநம், கேவலோற்பத்தி, பரிநிர்வாணம்என்னுமைவகைக் கலியாணங்கள். (திருநூற். சு. உரை.).

பஞ்சகலாசுத்தி — பஞ்சகலைகளாலாகுஞ் சுத்தி. (சி. சி. அ: நு. ஞாநப்.)

பஞ்சகலாபிமாநிகள்—பஞ்சகலைகளேஅபிமாநிக்கும் பஞ்சசத்திகள்.(சி.சி. அ: சு. சிவாக்.)

பஞ்சகலியாணி — ஒருவகைக் குதிரை. (உ-ம்.) "தலைவால்வியனுரமென்ற விம்மூன்று – மொருவியவுறப்போரைந்தினும்வெள்ளோயுள்ளதுபஞ்சகலியாணி" முன்னடிகளிற்கூறிய வெட்டனுள் மூன்றென்க. (திருவிளை. நரிபரியா. ககo.)

பஞ்சகலை–ஐவகைக்கலை; அவை: நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, யென்பன. (சிவஞாணசித்தியார். அ-ஆம் சூத். எ, அ, கூ கவிகளிலுரை.)

பஞ்சகவ்வியம்—விதிப்படிகூட்டியமைக்கப்பட்ட கோசலம், கோமயம், தயிர், நெய், பாலென்பவைகளின் தொகுதி. (உ-ம்.) "பாறயிரானநெய்யாற்பஞ்சகவ்வியத்தாலீசற்கு"(சேதுபு. இராமதாத. சமு.)

பஞ்சகற்பம் — கடுக்காய்த்தோல், கத்தூரி மஞ்சள், நெல்லிப்பருப்பு, மிளகு, வேப்பம் வித்து. (வைத்தியபரிபா.)

பஞ்சகாசம்—ஐந்துவகைக்காசரோகங்கள். (தைலவ.)

பஞ்சகாயம்—திரிபலையும், வெங்காயமுங் காயமும். (வைத்தியபரிபா.)

பஞ்சகாலம் — கருப்புக்காலம், அஃகுவிலை குறைந்தகாலம். (வழக்.)

பஞ்சகாரகம்—காயம், வெள்ளுள்ளி, வெங்காயம், கடுகு, வெந்தயம். (வைத்தியபரிபா.)

பஞ்சகாரம்–நவட்சாரம்,எவட்சாரம், சத்திசாரம், அவச்சாரம், சதலிச்சாரம். (வைத்தியபரிபா.

பஞ்சகாவியம்—ஐவகைக்காவியம்; அவை: சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. (வழக்.)

பஞ்சகிருத்தியம்—திருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னுமைந்தொழில்கள். இவ்வைந்தொழிலும் ஒவ்வொன்றுக் கைவைந்தாய் இருபத்தைந்தாகுமாம். திருட்டி; சத்திகள்படைப்பு, உயிர்ப்படைப்பு, பாசங்களின்படைப்பு, எண்பத்தாறாயிரத்து நூறு யோநிபேதங்கள் நாடோறுஞ்செய்யும்படைப்பு என ஐந்தாம். திதியும், சங்காரமும்; முன்சொன்ன ஐவகையும், வளர்ப்பதுவும், ஒடுக்குவதுமாம். திரோபவம்; பிரபஞ்சம் மெய்யாகவும் சிவன் பொய்யாகவுஞ்செய்தல், தத்துவங்களிலே செலுத்தல், தத்துவங்களோடேகூடியதியச்செய்தே யறிவிக்கும்பொருளைக் காட்டாதுவிடல், கன்மமேயுருசிப்பித்தல் என ஐந்தாம். அநுக்கிரகம்; தன்னையுணர்த்து முறைமை, மாணும் மழுவும் சதுர்ப்புயமும் திரிநேத்திரமுமாகிய தன்வடிவுகொண்டு முன்னின்று இரட்சித்துவிடுதல், தன் வடிவுகாத்து மாணிடரை வெளிப்பட்டு இரட்சித்தல், மானுடர்முதலாயினோர்க்குப் பக்குவமுகுதியாலே வேடம் மாறித்தோன்றி மெய்யறிவித்தல், மந்திர முதலியவற்றிலே அதுக்கிரகித்தல் என ஐந்தாம். (த-பிர. உசா.)

பஞ்சதயிபாட்டகாதநம்–அபரமுத்தித்தாநத்தொன்றுகிய ஒருத்திரர்பதம். (சிவதரு.)

பஞ்சகூடம் — ஆமை. (வைத்தியபரிபா.)

பஞ்சகோசக்தகை — தேகம்; அது: பஞ்சகோசத்தாலானது. (கைவல்.)

பஞ்சகோசதாதான்மியம் — அந்நமயம், ஆநந்தமயம், பிராணவயம், மநோமயம், விஞ்ஞாநமயம் ஆகிய இவ்வைந்தையுந் தானெனல்; இவற்றுள்: அந்நமயகோசதாதான்மியம் - நான் பருத்தேன் இளைத்தேனென்பது. ஆநந்தமயகோசதாதான்மியம் - நானறியேனென்பது பிராணமயகோசதாதான்மியம் - எனக்குப்பசிகிறது தாகிக்கிறது என்பது. மநோமயகோசதாதான்மியம்–நான் சங்கற்பித்தேன் விகற்பித்தேன் என்பது. விஞ்ஞாநமயகோசதாதான்மியம்-நான்கர்த்தா போக்தாவென்பது.(உபநி.கூஎ.)

பஞ்சகோசம் — அந்நமயம், ஆநந்தமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞாநமயம் ஆகிய பஞ்சகோசம்என்பன.(வாசுதே.எடு.) [கோசம் போல ஆத்மாமையறியவொட்டாமல் மறைத்தலாற் பெற்றபெயர்.] (சிவஞானசித். சு. சூத். உசா.) கோசம்-உறை.

பஞ்சகோமாதாக்கள்—நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமநை என்பனவாகிய தெய்வப் பசுக்கள். (கோயிற்பு.இரண்யவன்ம. சு. உரை.)

பஞ்சகோலம்–சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலி, திப்பிலிமூலம் என்பன. (வைத்தியபரிபா.)

பஞ்சகௌடம் — கௌடதேயத்தினைந்து பகுதி; அவை: உற்கலம், கானுகோபிஜம், சாரசந்து, சுத்தகௌடம், மாந்தலை என்பன. (அபிதாநசிந்தாமணி.)

பஞ்சகௌவியம்—பஞ்சகிரவியம். (உ-ம்.) "பாங்கினுறப்பஞ்சகௌவியமஞ்செனுமமிர்தம்" (சிவரக. நாரத. சு.)

பஞ்சசத்தி—பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னுமை வகைச் சத்திகள்; அவற்றுள்: பராசத்தி, பரசிவத்திலாயிரத்தொருகூறான நிட்கள சிவனுடனேகூடிக் கிருத்தியத்தைத் திருவுள்ளத்திலடக்குஞ்சத்தி. ஆதிசத்தி; பராசத்தியிலாயிரத்தொருகூறு வலியையுடைத்தாய்ப் பெத்தமுத்திகளில் வியாபிக்குஞ்சத்தி. இச்சாசத்தி; ஆதிசத்தியில் ஆயிரத்தொருகூறு வலியையுடைத்தாய் வடிவைப்பிரேரிக்குஞ்சத்தி. ஞானசத்தி; இச்சாசத்தியிலாயிரத்தொருகூறு வலியையுடைத்தாய்ப் பஞ்சகிருத்தியத்தை நடத்துஞ்சத்தி. (சதாசிவரூபம். கூ. உரை.)

பஞ்சசயநம்—அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர் இவைகளினாற் செய்யப்படுஞ்சயநம். (சூ. நிக. கஉ: ச0.)

பஞ்சசன் — ஓரசுரன். இவனைத் திருமால் கொன்று அவனெலும்பைக்கடைந்து பாஞ்சசந்நியமென்னுஞ் சங்கமாகக்கொண்டார்.(அபிதாநகோ.)

பஞ்சசாதநம்—ஆசநமும், யோகபட்டமும், தண்டும், கமண்டலமும், செபமாலையுமாகிய ஐந்து சாதநங்கள். (சி. சி. பர. மாயா. கடு.)

பஞ்சசாதாக்கியங்கள்—நிட்களமான பஞ்சசத்திகளிடத்திலும் சர்வான் மாக்களுக்கும் நியாநபூசைநிமித்தமாகச் சிருட்டிக்கப்பட்ட ஐந்துசாதாக்கியங்கள்; அவை: சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்தருசாதாக்கியம், கன்மசாதாக்கியம் என ஐந்துவகைப்படும்; அவற்றுள்: சிவசாதாக்கியம் முதல் நான்கு சாதாக்கியமும் இலிங்காகாரமாகவே யிருக்கும். கன்மசாதாக்கியம் ஒன்றுமே சிவலிங்கமும் பீடமுமாயிருக்கும். (சி. சி. உ: எஎ. மறை.)

பஞ்சசாந்தி—ஒருமந்திரம். (உ-ம்.) "பண்ணமர்பவமானத்தைப்பஞ்சசாந்தியை" (சே து பு. இராமநாத. சஎ.)

பஞ்சசிகம்—நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவநங்களுளொன்று; இது: வாயுதிக்கிலுள்ள பத்துப் புவநங்களுளொன்றென்பர். (சி-லி. கிரி. உக: அ. உரைகாரர்.)

பஞ்சசிகி — சத உருத்திரரிலே வாயுதிக்கினிருக்கும் சத உருத்திரரிலொருவர். (வி-ணி. உஎ0.)

பஞ்சசிகை—சௌளம்பண்ணுதுவிடுமைந்திடம். (வழக்.)

பஞ்சசுத்தி — பூதசுத்தி, தாநசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னுமைவகைச்சுத்திகள்; அவற்றுள்: பூதசுத்தி, பூதபரிணமதேகத்தைச்சுத்திசெய்தல் - அஃதாவது, பிருதிவிமுதலிய பஞ்சபூதங்களாகிய வித்துடையதும், படைத்தல் காத்தல்களைச்செய்யும் பிரமவிஷ்ணுக்களால் உண்டாக்கப்பட்ட மூலையுடையதும், விருப்புவெறுப்புச் சோதிட்டோமயாகமுதலிய தருமம் பிரமகத்திமுதலிய அதர்மம், அநித்தம், அசுத்தம், துக்கமென்னுமிவற்றிற்குக் காரணமாகிய மோகமென்னும் இவைகளாகிய வேருடையதும், சத்தகோடி மகாமந்திரங்களாலும் போஷிக்கப்படுவதும், கலைமுதலிய தத்துவங்களாகிய நிலையுடையதும், காரணதன்மாத்திரைகளாகிய மகாசாகைகளும் ஞாநேந்திரிய கன்மேந்திரங்களாகிய உபசாகைகளுமுடையதும், சாரியதன்மாத்திரையாகிய சத்தாதிவிடயங்களைப்பற்றும் வடிவாகிய வியாபாரங்களைத் தளிராகவுடையதும், புத்திகுணங்களாகிய தன்மம் ஞாநமுதலிய எட்டின் விகாரங்களாகிய முன்னூற்றுபாவங்களின் கூட்டத்தைப் பூவாகவுடையதும், புத்திதத்துவத்திற் றோன்றும் சித்தத்தால் அவதானிக்கப்படும் பொருள்களையே பழமாகவுடையதும், புருடனுகிய பறவையினுலே அநுபவிக்கப்படுவதும், போகவிடயமாகிய சரீரத்தையும், போககிரியையின் கர்த்தாவாகிய ஆன்மாவையும் இரசமாகவுடையதும், மேலுக்கும் வேருடையதும், கீழ்நோக்குங் கொம்பருடையதுமாகிய சரீர ஆலமரூபத்தைத்தியாநித்து—கும்பகம், பூரகம், இரோசகமென்னுமிவற்றின் பகுப்புகளாற் பஞ்சகலாமந்திரங்களைப் பிருதிவிமுதலிய தத்துவங்களோடிருக்குங் கந்தமுதலிய குணங்களினிலையோடு முறைப்படி சேர உச்சரித்து, பத்திரமுதலியன ஒழிந்தபாவனையினாலும், உலர்ந்தபாவனையினாலுந்தெளித்து நீருக்கி, ஒழிந்தபாவனையினாலும், சுத்தாகாச சொரூபபாவனையினாலும், சத்தியானனைக்கப்பட்ட மந்திரமயமான வேறு சரீரமுடையவனுகித் தன்னிருதயத்திலே துவாதசாந்தத்தினின்றுஞ் சோதிலிங்கமாவாகித்துப் பாவனையினால்வந்த மலர்முதலியவற்றிற் புறம்புபோலருச்சித்து, நாபிகுண்டத்தக்கிரியின் ஞாநாக்கினியையவைத் தோமஞ்செய்து சிவார்ப்பணம்பண்ணி அச்சிவனைப் புறத்தேவந்து பூசனைகொண்டருள அநுமதிகோடலாம். [இதுவேறு பிரகாரமாகவுங்கூறப்படும்.] தாநசுத்தி: அஸ்திரமந்திரங்களினாலே தாளத்திரயஞ்செய்து அங்குநின்றுமிடையூறகற்றி அஸ்

திரமந்திரத்தால் எம்மருங்குஞ் சொலிக்கும் அக்கினிவண்ணமாகிய மதியையும், கவசமந்திரத்தால் அகழையுஞ்செய்து, சத்திமந்திரத்தால் மேலுங்கீழுஞ் சத்திகளினிறைவாகப் பாவித்துச் சிவலிங்கத்துக்குமுன் மண்டலமிட்டுப் பூமிதேவியைச் சகலாபரணசகிதையாகத் தியானித்த, இருதயமந்திரத்தாற் கந்தமுதலியவற்றைக்கொண் டருச்சித்து அஸ்திரமந்திரத்தினாலே திக்குபந்தஞ்செய்தலாம். திரவியசுத்தி: சுவர்ணமுதலியவற்றுளியற்றிய அருக்கியமுதலிய பாத்திரங்களே அஸ்திரமந்திரத்தாற்கழுவி விந்தமிர்தமாகிய நீரை வௌஷடந்த இருதயமந்திரத்தானிறைத்துத் திரவியங்களிட்டுப் பஞ்சப்பிரமமுதலிய மந்திரங்களான் முறைப்படிபூசித்துச் சங்கிதாமந்திரத்தாலபிமந்திரித்துத் திக்குபந்தகரமும் அவகுண்டநமுஞ்செய்து தேநுமுத்திரைகொடுத்து அருக்கியசலத்தாலே தன்னையும் பூசோபகரணங்களையும் புரோட்சித்து, கவசத்தாலப்பியுக்கணமும் இருதயத்தால் அபிமந்திரித்தலும் கவசத்தால் அவகுண்டநமும் தேநுமுத்திரையால் அமிர்தீகரணமுஞ்செய்து, புஷ்பத்தாலருக்கிய நீரெடுத்துத் திருமஞ்சகுடத்தின் கண்ணிட்டுத் தேநுமுத்திரை கொடுத்தலாம். மந்திரசுத்தி: தன்னுருத்திற் சிவாசநமும் மார்பிற்சிவமூர்த்தியும் நியசித்துச் சந்தநதிலகமிட்டு மூலத்தாற் சிரசிலே புட்பமிட்டு ஆன்மபூசைசெய்து, குறில், நெடில், அளபெடையெண்ணும் மாத்திரைகளின் முறைப்படி பிரணவவாதியாகவும் நமோந்தமாகவும் மந்திரங்களே யுச்சரித்தலாம். இலிங்கசுத்தி: ஸ்நாநவேதிகையில் விரித்த வஸ்திரத்தினுலே சடுத்தாசநங்கற்பித்து இலிங்கத்தை யெழுந்தருளப்பண்ணி அந்த ஸ்நாந வேதிகையில்வைத்து விதிப்படி பூசித்து, நின்மாலியங்கழித்து, இலிங்கத்தையும் ஆவுடையாரையும் அலம்பிச் சாமாநியாக்கியத்தாலுஞ் சுத்தோதகத்தாலும் அபிஷேகஞ் செய்து, தைலமுதல்அருக்கியசலமீருகமுறைப்படி யபிஷேகஞ்செய்து, திருவொற்றுடைசாத்திப் பீடத்திலெழுந்தருளப்பண்ணி ஓர்புஷ்பஞ் சாத்துதலாம். (இப்பஞ்சசுத்தி புறப்பூசையின்கட் பஞ்சசுத்தி.) இனி அகப்பூசையின்கட் பஞ்சசுத்திகளாவன: பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி யென்பனவாம். அவற்றுள்; பூதசுத்தியாவது: பூதம்-சூக்குமபூதம் என்பது மூப்பத்தாறுதத்துவங்கள் நாமமல்ல, அவையனைத்துஞ்சடம், அவையுந்தாமாகக் காரியப்படமாட்டாவென்றறிதலாம். ஆன்மசுத்தியாவது: அப்படியறிதல் திருவருளானன்றி ஆன்மபோதத்தாலன்றென்றறிதலாம். திரவியசுத்தியாவது: ஆன்மபோதத்தாற் ருனேயறிதற்குச் சேட்டையில்லையென்று கண்டதுசொண்டே ஆன்மாவுக்கறிவில்லையென்றறிந்து, கண்டு கேட்டுண்டுயிர்த்துற் றறிவதெல்லாம் திருவருளென்றறிதலாம். மந்திரசுத்தியாவது: ஐந்தெழுத்தைச் சிகாரமுதலாகமாறி அதனுண்மையை விசாரித்தறிதலாம் இலிங்கசுத்தியாவது: பதியெங்கும் பூரணமாய்ப் பசுபாசங்களிரண்டினும் பிரிவறநின்று அவற்றைச் சேட்டிப்பித்துநின்ற தன்மையறிந்து, அத்தலைய சிவம் இலிங்கத்தினுமெழுந்தருளியிருக்குமென் றறிதலாம். (திருவாத. திருப்பெருந்துறை. எ0 உரை.) புறப்பூசையிலேசெய்கிற தானசுத்திக்குப் பதிலாக அகப்பூசையிலே ஆன்மசுத்தியென்னுர்; அகப்பூசைக்கு ஆன்மா தானமாதலில்.

பஞ்சஞானன் — புத்தன். (வழக்.)

பஞ்சணை—படுக்கையாயமெத்தை. (உ - ம்.) "பத்தினிமண்டபத்திற்போவார்பஞ்சணை மிசையேபோவார்?" (சிவரக. விசையை. உச.)

பஞ்சதசகம்—பதினைந்து. (வழக்.)

பஞ்சதசசிராத்தம்— அந்தியேட்டிமுதலிய கிரியைகளுளொன்று. (சைவச. பொது வி. உகக. உரை.)

பஞ்சதசம்—பதினைந்து. (வழக்.)

பஞ்சதசாட்சரி— பதினைந்தட்சரத்தாலாய ஒரு மந்திரம். (சி. சி. பாயிர. ஞாகப்.)

பஞ்சதசி—அமாவாசி, பௌர்ணமை.(உ-ம்.) "பதினுண்கிருநான்குபஞ்சதசிதையின்முதலுள்" (சைவச. பொதுவி. கஉ.)

பஞ்சதந்திரம்—1. ஒரு நூல்; அஃது: அசம்பிரேட்சியகாரித்துவம், அர்த்தநாசம், சந்திவிக்கிரகம், சுகிர்லாபம், மித்திரபேதம் என்னுமை வகைத் தந்திரங்களையுடையது. 2. பரீட்சாதந்திரம், பேததந்திரம், மித்திரகாரியதந்திரம், வஞ்சநாததந்திரம், விசுவாசதந்திரம். (வி-ணி. உகஉ.)

பஞ்சதரு — பஞ்சதாரு, கற்பகமுதலியன. (சூ. நிக. ச: உ.)

பஞ்சதன்மாத்திரை—சத்த ஸ்பரிச ரூப ரச கந்தமென்னுமைந்து தன்மாத்திரைகள்;இவை: பூதாதிகவாங்காரத்திற் ருேன்றுவன. (சிவஞானசி. உ. சூத். சுச.)

பஞ்சதாரை—சருக்கரை. (வைத்தியபரி.)

பஞ்சதாளம் — ஐவகைத்தாளம்; அவை: சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம் என்பன. (சங்கீதநூலிற்காண்க.) பொருட். நிகண்டிலறிக.

பஞ்சதிரவியம்— 1. கொசலம், கோமயம், தயிர், பால், நெய் என்பன. (வழக்.) 2. மூல படுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம் என்பன; இவற்றுள் மூலபடுதிரவியமாவது: மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம். காடுபடுதிரவியமாவது: தேன்கூடு, தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி. நாடுபடுதிரவியமாவது: செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விழநீர். நகர்படுதிரவியமாவது: அரசன், பித்தன், கருங்குரங்கு, யானை, கண்ணுடி. கடல்படுதிரவியமாவது: உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை. (சூ. நிக. கஉ: ௬௯, ௭௭, ௭௮.) காடுபடுதிரவியத்தில் சீதன்கூடு ஒன்றென்றார். பிங்கலத்தில் அதனைநீக்கிச் சூடாமணியில் இறடியென்றார். இறடி-கருந்தினை. 3. சீரகம், சண்பகப்பூ, கோட்டம், அதிமதுரம், ஏலம் (வைத்தியபரிபா.)

பஞ்சதிராவிடம்—திராவிடம், கர்நாடம், கூர்ச்சரம், மகாராட்டிரம், தெலுங்கமென்பன. கர்நாடம் - தமிழ்தெலுங்குதேசங்கட்கிடையிலுள்ளது. (அபிதாநவி.)

பஞ்சதீர்த்தங்கள் — ஐவகைத்தீர்த்தங்கள்; அவை: ஆரிடதீர்த்தம், தேவதீர்த்தம், பிசீர்தீர்த்தம், மானிடதீர்த்தமென்பன. (சைவச. பொதுவி. சுசு. உரை.)

பஞ்சதுந்துபி—சஞ்சக்கருவி, கண்டக்கருவி, தூளிக்கரு, தோற்கருவி, நரம்புக்கருவி, என்னுமைவகை வாத்தியம். (கோயிற்பு. நடராச. அ: உரை.)

பஞ்சதூபம் — அகில், கருஞ்சீதாரி, குந்துருக்கம், குக்குலு, சூடன்கற்பூரம். (சிவதரு.)

பஞ்சநகம்—1. ஆமை. 2. புலி. 3. யானை. (வைத்தியபரிபா.)

பஞ்சநதி—உடும்பு. (வைத்தியபரிபா.)

பஞ்சநதி—திருவையாறு. (பெரியபு. திருநாவுக். ௯௯௯.)

பஞ்சநமக்காரம்—(அருக) ஓர் நமக்காரம். (சிந்தா. பதுமை. கஉ. உரை.)

பஞ்சநிம்பம்—1. ஐவகைவேம்பு. நல்வேம்பு, மலைவேம்பு, நிலவேம்பு, கருவேம்பு, சிவனுர்வேம்புஎன்பன. 2. வெப்பிலை, பட்டை, பழம், பூ, வேர் என்றுங்கூறுவர். (வைத்தியபரிபா.)

பஞ்சப்பள்ளி—ஒரு திருப்பதி. (திருவாச. கீர்த்தி. ௬௯.)

பஞ்சப்பிரமசடங்கமூர்த்தி — சதாசிவன். (சி. சி. க: அ. சிவாக்.)

பஞ்சப்பிரணவகலைகள்—அகார, உகார, மகார, விந்துநாதங்கள். (சி. சி. ச: ௬. ஞாநப்.)

பஞ்சப்பிரமசடங்கதேவர் — பதிஞெருமந்திரதேவர். (சைவச.பொதுவி. நிஉ அ உரை.)

பஞ்சப்பிரமசடங்கம் — பதிஞெருமந்திரம். (சைவவி. ௬௯உ.)

பஞ்சப்பிரமம்—1. சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசாநம் என்னும் மந்திரங்கள். (வி-ணி. ௬௯.) 2. யசுர்வேத உபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.)

பஞ்சப்பிரமமந்திரசரீரி — சதாசிவன். (கூர்மபு. வருணு. கஉ. உரை.)

பஞ்சப்பிரமவடிவு — பஞ்சப்பிரமமந்திர வடிவு. (சி. சி. க: நிக. சிவஞா.)

பஞ்சப்பிரமை — பேதப்பிரமை, கர்த்தவ்வியப்பிரமை, சங்கப்பிரமை, விகாரப்பிரமை, ஜகப்பிரமைஎன்பன; இவற்றுள் பேதப்பிரமை: பிரமமும் பரமேசுவரனும் வேறென்பது. கர்த்தவ்வியப்பிரமை: கர்த்திருத்துவாதீகம் வாஸ்தவமென்பது. சங்கப்பிரமை: சரீரத்திரய அவிச்சின்னனுகிய ஆத்மாவைச் சங்கனுய்க் காணப்படுகிறது. விகாரப்பிரமை: சகத்துக்குக் காரணமாகிய பிரமத்தை விகாரியென்பது. ஜகப்பிரமை: காரணமானபிரமமன்றி இந்தச் சகத்துச் சத்தியமென்பது. (வாசுதே.௬௯க.)

பஞ்சப்பிராணன்—பஞ்சபூதங்களின்சேர்க்கையான இரசோகுண முதலியவற்றினின்றும் பிறந்து கிரியாதாரபேதங்களில்ஐந்து வகைப்பட்டிருக்கும் பிராணவாயு; இஃது: இருதயத்தாநத்திலிருந்து பசிதாகங்களை உண்டாக்கும்போது பிராணனென்றும், குதத்திலிருந்து மலசலவிசர்ச்சநஞ்செய்யும்போது அபாநனென்றும், நாபியிலிருந்து அந்தபாநாதிகளைப் பசநமாக்கும்போது சமானனென்றும், கண்டத்திலிருந்து மூச்சுவிடும்போது உதாநனென்றும், சரீரமெங்குமின்று உணவுகளைச் சகல நாடிகளிலுமிழுக்கும்போதுவியாநனென்றும் பெயர்பெறும். (விசார. ௬௯ங.)

பஞ்சபக்ஷ—ஐவகைப்பக்ஷங்கள்; அவை: நக்கத்தபத்திரை, சுரபி, சுகீலை, சுமீனை என்பனவாம். (சிவதருமோத். கோபுரவி. கஉ.)

பஞ்சபட்சி— 1. எழுத்திற்பொருத்தமறியும் ஐந்துபட்சி; அவை: வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்பன. அவைகட்குமுறையே எழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ என்பன. (சூ. நிக. கஉ: ௬உ.) 2. வைப்புப்பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.

பஞ்சபட்சிக்காதல்—ஒருசாத்திரம். (வழக்.)

பஞ்சபலோதகங்கள் — எருமிச்சம்பழச்சாறு, குழஞ்சிப்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, மாதுளம்பழச்சாறுஎன்பன.

(சைவச. பொது. நிகச. உரை.)

பஞ்சபாடாணம்—ஐவகைப் பாடாண்டம் (வைத்தியபரிபா.)

பஞ்சபாண்டவர்—பாண்டுவினைந்து புத்திரர்; அவர் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்பவர். "பாரதம்"பார்"

பஞ்சபாணம்–மன்மதாத்திரமைந்து; அவை: மூல்லை, அசோகு, வநசம், சூதம், நீலம் என்பன. அவை முறையே தைக்குமிடம் உச்சி, நெற்றி, நெஞ்சு, மூலை. குய்யம் என்பன. (உ-ம்) "பஞ்சவரினடுப்பிறந்தோன்பஞ்சவன் பேரவையெய்திப்பஞ்சபாண - வஞ்சகன்செய்" (பாரத. அருச்சுநன்றீர். நகூ.)

பஞ்சபாணன்—மன்மதன். (உ-ம்.) "பாதி யிரவினிற்பஞ்சபாணனுர்த்தம்பகைவனுர்க்கமைத்தநந்தவநத்திற்புக்கான்" (சிவரக. அபுத்தி பூ. கக.)

பஞ்சபாணவத்தை — மன்மதாத்திரத்தி லுண்டாமைந்துபாதி; அவை: சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பன. (சூ. நிக. கஉ: நுo.)

பஞ்சபாதகம் — ஐந்து தோசகம்; அவை: களவு, கள்ளுணண், குருநிந்தை, கொலை, பொய் என்பன. (உ-ம்.) "பஞ்சபாதகன்" (சூ. நிக. சஉ: நகூ.)

பஞ்சபாதகன் – பஞ்சபாதகஞ்செய்வோன். (வழக்.)

பஞ்சபூதசீசரம்து–தாழகம், வீரம், கௌரி, வெள்ளை, லிங்கம். (வைத்தியபரிபா.)

பஞ்சபூதம்—ஐந்துபூதம்; அவை: பிருதிவி, அட்பு, தேயு, வாயு, ஆகாயம். (சூ.நிக.கஉ:சஉ.)

பஞ்சபேதி— அன்னபேதி, மாங்கிசபேதி, சத்திரபேதி, பரிசபேதி, தூமபேதி.(வைத்திய பரிபா.)

பஞ்சம்—1. ஐந்து. 2. கருப்புக்காலம், சிறு வீலைக்காலம். (1, 2-சூ. நிக. கஉ: ஞகரவெ. ச.)

பஞ்சமகாயக்கியங்கள்— பஞ்சமகாயாகம், அக்கினிகருமம், தேவபூஜை, பிதிர்பூஜை, விருந்தோம்பல், வேதாத்தியயநம். (கூர்மபு. வருணு. நகூ. உரை.)

பஞ்சமந்திரதநு — சாதகருடைய தியான பூசைகள்நிமித்தமாக உபசாரமாய்ச் சிவனுக்குக் கற்பிக்கப்பட்ட ஐந்துமந்திரமாகிய தேகம். (சி. சி. க: நுக: சிவாக்.)

பஞ்சமந்திரம்—ஐந்துமந்திரங்கள். (உ-ம்.) "பஞ்சமந்திரதநு"

பஞ்சமம்—ஒரு பண்; அது: தேவாரப்பண் களிலே, பகவ்லேயோதும்பண்பத்திலொன்று. 2. கந்தருவமத்திமதூளைக்கு அடுத்ததூளை. (பெரியபு. ஆநாய. உச. உரை.) 3. சத்ததாளத் தொன்று.

பஞ்சமர்—ஐந்தாஞ்சாதிக்காரர். (வழக்.)

பஞ்சமலம் — ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாநசத்தி என்னுமைந்து மலங்கள். (சி. சி. உ: அஎ. ஞாநப்.)

பஞ்சமி–1. அவிட்டமுதலைந்துநாள், அவிட்டபஞ்சமியாம். 2. ஐந்தாந்திதி.

பஞ்சமிலேவவாதம்–சிற்றுமணக்கு.(வைத்தியபரிபா.)

பஞ்சமுகன்—சிவன். (சூ. நிக. க: எ.)

பஞ்சமுத்திரைகள்–1. ஆசாரியர்களுக்குரிய ஐந்து சிந்நங்கள்; அவை: திருநீறு, உருத்திராக்கமாலை, பூணூல், உத்தரீயம், உட்டினிடம் என்பன. (சைவச. ஆசாரிய. சரு. உரை.) 2. பதுமம், சங்கம், மகரம், சக்கரம், தண்டமென்னும் ரேகைரூபமான முத்திரைகள். (உ-ம்.) "திருவடிவிற்றிருப்பஞ்சமுத்திரையுங்கிழ்ந்திலங்க" (பெரியபு. மானக்கஞ். உச, மாவிரதச் சமைத்தோர்மேனியிற்றிரிக்குமடையாளமாகியமுத்திரை)

பஞ்சமூர்த்திகள்—சதாசிவன், மகேசுவரன், ருத்திரன், விட்டுணு, பிரமன் என்பவர். (சி. சி. க: சுo. சிவாக்.)

பஞ்சமூலம் — ஐவகைமூலம்; அவை: சிறு பஞ்சமூலம், பெரும்பஞ்சமூலம்என விருவகைப்படும். 1. சிறுபஞ்சமூலம்-திப்பிலிமூலம், சித்திரமூலம், செவ்வியம, சுக்கு, பேரரத்தை என்பன. 2. பெரும்பஞ்சமூலம்–தழுதாழை, பாதிரி, பெருங்குமிழ், வாகை, வில்வம்என்பன். (வைத்தியபரியா.)

பஞ்சமூலி—வெள்ளெருக்கு, மாவிலிங்கம், சித்திரமூலம், புனல், முருங்கை என்பன. (வைத்தியபரிபா.) புனல்என்பது வாலுளுவை யென்றூர்.

பஞ்சயாகம்—1. கன்மயாகம், செபயாகம், ஞாநயாகம், தபோயாகம், தியாநயாகம்என்பன. (சிவதரு.) 2. தெய்வவேள்வி, பிரமவேள்வி, பூதவேள்வி, மானிடவேள்வி, தென்புலத்தார் வேள்வி என்பன. (பிங்கல. நகநு.)

பஞ்சயோகம்—அபாவயோகம், பரிசயோகம், பாவயோகம், மகாயோகம், மந்திரயோகம் என்பன. (வேதா. சூ. உஅ.)

பஞ்சரத்தினம்—ஐவகையிரத்தினம். (உ-ம்.) "மைந்துறுசெம்மணிமுத்துவாள் வைரம்பஞ் யொளிவழங்குநீலமைந்து" (திருவிளை.மாணிக்கம்வி. எச.)

பஞ்சரம்—1. கூடு. 2. செருந்திமரம்.(1,2-சூ. நிக. கக: ஞகரவெ. க.)

பஞ்சராத்திரம் — வைணவமதத்தொன்று; அது: சோமுகாசுரன் வேதங்களைக் கவர்ந்தகாலத்தில் திருமாலினுலந்திரவிலருள்ப்பட்டநூல். (உ-ம்.) "மாசில்பஞ்சராத்திரத்தின்வழி நடப்போர்" (ஏகாதசி. காலநிர்ணய. கஅ.) பாஞ்சராத்திரம் எனவும் வழக்குண்டு.

பஞ்சரிடிகோத்திரம்—அகத்தியர், காசிபர், கௌசிகர், கௌதமர், பாரத்துவாசர் என்பவர் கோத்திரம். (சைவச்.பொதுவி. சகநடு. உரை.)

பஞ்சரித்தல்—1.கெஞ்சிக்கேட்டல்.(உ-ம்.) "பஞ்சரித்துத்தாவனமேயென" (திருப்பு. நடுஎச.) 2. விரிவாய்ப்பேசல். (வழக்.)

பஞ்சரிப்பு—பஞ்சரித்தல். (வழக்.)

பஞ்சநுத்திரம் — அதர்வசிகோபநிடதம், அதர்வசிரோபநிடதம், காலாக்கிநிருத்திரோபநிடதம், கைவல்லியோபநிடதம், சுவேதாச்சுவதரோபநிடதம் என்னுமைந்துபநிடதங்கள். (கந். நவ. கஅ.)

பஞ்சலக்கணம் — 1. இலக்கணமைந்து; அவை: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. 2. புராணபஞ்சலக்கணம்; அவை: "மணித்திரள்பதிகடண்மாநிலவரைப்பிற்-றணிப்பில்பல்லுலகமுந்தத்துவகையும்-மன்னமுன்னுள்வகுத்தவிர்த்தாநந்தமும், அன்னவையெடுங்குறுமடைவுமன்வந்தரத்-தியற்கையும்புலவரிருடியர்மரபும் மயக்கறமிவ்வி ருவகையினர்சரிதமும் என்னும் புராணவிலக்கணமைந்தே" (கூர்மபு. பாயிரம். உரை.)

பஞ்சலவணம் — ஐவகையுப்பு; கல்லுப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு, வேலையலுப்பு, கெந்தப்பொடியுப்பு. (வைத்தியபரிபா.)

பஞ்சலாங்கலதானம்—ஐந்து கலப்பைகளைக் கொடுக்குந்தானம். (உ-ம்.) "பஞ்சலாங்கலதானத்தின்பகுதியைச்சுருக்கிச்சொன்னேம்" (கூர்மபு. தான. முரை. சுச.)

பஞ்சலிங்கம் — சுயம்புலிங்கம், காணலிங்கம், தெய்விகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம் என்பன. (சிவாலயதரிசனவிதியிற் காண்க.)

பஞ்சலீலை—ஆலிங்கநம், சும்பநம், தாடநம், மைதுநம், நகவர்ணனை. (த. நி. போ. உநுக.)

பஞ்சலோகம்—1. ஐந்துலோகம்; அவை: இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி. (பிங்கல. கஉசச.) திரிகடுகு, செவ்வியம், கொடிவேலி யென்று வைத்தியபரிபாடை அகராதியிற்கூறுவர்.

பஞ்சவடி—1. ஒருதலம்; அது: கோதாவரிக் கரையில் நாசிகாத்திரியம்பகத்துக் கணித்தாயுள்ள் ஒருஇடம்.(உ-ம்.) "குன்றின்-பாங்கருளதாலுறையுள்பஞ்சவடிமைஞ்ச" (இராம. அகத்தி.நுஎ.)[பஞ்சவடம்-ஐந்துஆலமரங்கள்.] வடத்தையுடையதுவடி. 2. மயிர்ப்பூணூல். (பெரியபு. மானக்கஞ்ச. உகூ.)

பஞ்சவர் — 1. பாண்டியர். (உ-ம்.) "செருமான்பஞ்சவரேறே" (புறநா.நுஅ.)"பஞ்சவன்" பார். 2. பாண்டுமைக்கள். (உ-ம்.) "பஞ்சபாணம்" பார்.

பஞ்சவர்தூதன்—கிருட்டிணன்.

பஞ்சவலக்கம்—அத்தி, அரசு, ஆல், பூவரசு, வேல் என்பனவற்றின் பட்டை. (வைத்தியபரிபா.)

பஞ்சவன்—பாண்டியன். (உ-ம்.) "பஞ்சவனிடத்தமணரேவிவிட்டமதயானைவிழ" (திருஆலா யாலையெய். க.) பஞ்சதிராவிடத்தையுமுடையவனென்பர்.

பஞ்சவன்னக்கிளி — ஓரினக்கிளி; அஃது: ஐந்துவண்ணமுடையது. (வழக்.)

பஞ்சவன்னம் — ஐந்துவன்னம்; அவை: கருமை,செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை, என்பன (தி. சி. க-ஆம்சூத். உஉ. உரை.)

பஞ்சவாசம் — ஐவகைவாசம்; அவை: இலவங்கம, ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பன. (உ-ம்.) "பன்னலங்கொள்கனிபலபண்டமும்பஞ்சவாசம்பரிமளகந்தமும்-மின்னலங்கொள்காளாஞ்சிபொற்பள்ளயம்"(சிவரக. தேவிநாடடியம். கநு.) (சூ. நிக. கஉ: கூநு.)

பஞ்சவாதனம் —அநந்தாசனம், கூர்மாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனம் என்பன. (சி. சி. பர. மாயா. கரு.)

பஞ்சவாயுக்கள் — கிருகரன், கூர்மன், தனஞ்சயன், தேவதத்தன், நாகன் என்பன. (சி. சி. பர. மாயா. கடு.) அபானன், உதானன், சமானன், பிராணன், வியானன் என்பன. (சைவச. பொதுவி. உகூக. உரை.)

பஞ்சவிஞ்சதி—இருபத்தைந்து. (ஞானமிர்தம்.)

பஞ்சவிடயம் — பஞ்சப்பொறியினுலறியப்படுவன; அவை: இரசம், உரூபம், கந்தம், சத்தம், பரிசம் என்பன. (வழக்.)

பஞ்சவிதசாத்தியம்—லௌகிக, வைதிக, ஆதியாத்மீக, ஆதிமார்க்கீக, மாந்திரிக மென்பன. (த. நி. போ. கச.)

பஞ்சவிதவட்டகர்கள்–அதிகுய்யாஷ்டகர், குய்யாகுய்யாஷ்டகர், குய்யாஷ்டகர், பௌத்திராஷ்டகர், லோகபாலாஷ்டகரென்னுமிவர். (வி-னி.)

பஞ்சவில்வம்— நித்தியகன்மநெறியிற் காண்க.

பஞ்சா—மகமதியருடையவிழாக்களிற்கொண்டாடுமொருசிந்நம். (வழக்.)

பஞ்சாக்காரம் — 1. ஐந்தெழுத்து. 2. பஞ்சாக்கரம்; அது: ஐந்தெழுத்தாலாய ஒரு மந்திரம். [பஞ்சாக்கரத்தின் பேதமாகிய எட்டெழுத்து முதலியனயும் பஞ்சாக்கரமெனவும் வழங்கப்படும்.] கொடிக்கவியிற்காண்க. (சிவஞானசித்தியார் சுபக்கம்.காப்பு.சிவஞா.உரை.)

பஞ்சாக்கினி—1. உதராக்கினி, சூரியதாபாக்கினி, தவாக்கினி, நிதாககாலாக்கினி, இரவிகாந்தாக்கினிகள். (வீ-ணி. கருசு.) 2. தவஞ்செய்வோர் நிற்குமைந்தக்கினி; அது: நாற்றிசைக்கும் நான்குதீக்குண்டம் மேலே சூரியன். (சி. சி. அ: கக. மறை.) நிதாகம்-மூதிர்வேனில்.

பஞ்சாக்கிநிக்கொடி — வேலிப்பிரண்டை, காட்டுக்கருணை, மரள், புளிநறளை, நறளைக் கிழங்கு. (வைத்தியநூல்களிலறிக.)

பஞ்சாங்கக்கூர்மை — ஆமை. (வைத்திய பரிபா.)

பஞ்சாங்கநமஸ்காரம்— காற்கைதலேயென்னும் பஞ்சாங்கமும் பூமியிற்படிய வணங்கல். (சிவாலய. கo.)

பஞ்சாங்கடாலன் – பஞ்சாங்கநிரூபிதத்திற் கண்டபலன். (உழக்.)

பஞ்சாங்கம்—1 ஐந்துறுப்புக்கள். (உ-ம்.) "அட்டாங்கபஞ்சாங்கத்திறத்தெழுநன்று பணிந்தெழுந்த"(சிவரக.கணபதிவந்தனை.கக.) 2. காலத்திநங்களாகிய வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னுமைந்து. (சூ. நிக. கஉ: கூகூ.)

பஞ்சாங்கி — பஞ்சாங்கஞ்சொல்வோன். (வழக்.)

பஞ்சாங்துலம்–ஆமணக்கு. (வைத்தியபரி)

பஞ்சாசது — ஐம்பது. (சி. சி. உ: நிஎ. சிவாக்.)

பஞ்சாசயம் — ஆமாசயம், இரத்தாசயம், கர்ப்பாசயம், சலாசயம், மலாசயம் என்பன.

பஞ்சாசற்பாவம்—ஐம்பதுபாவம்; அவை: காரணமாயுள்ளது பதின்மூன்று, காரியமாயுள்ளது பத்து, இந்திரியபந்தம் பதிஞென்று, ஆங்காரம் எட்டு, புத்தி எட்டு. இவைபோகத்துக்குத்தாரகமாகிய புத்திதத்துவத்திலே அந்தப் போகத்திற்கேற்க உண்டான பாவத்தை உண்டாக்குங்குணம்; அவற்றுள் காரணம் பதின்மூன்றுவன: ஞானேந்திரியகன்மேந்திரியமாகிய புறக்கரணம் பத்தும், மநம்புத்தி அகங்காரமாகிய மூன்றந்தக்கரணமும். காரியம் பத்தாவன–பஞ்சபூதமும் பஞ்சதன்மாத்திரைகளும். இந்திரியம் பதிஞென்றுவன–ஞானேந்திரியகன்மேந்திரியங்களும் மநமும். அகங்காரமெட்டாவன–தைசதம், வைகாரிகம், பூதாதி, தமம், மோகம், மகாமோகம், தாமிச்சிரம், அந்தாமிச்சிரம். புத்தி எட்டாவன–தன்மம், ஞாநம், வைராக்கியம், ஐஸ்வரியம், அதன்மம், அஞ்ஞாநம், அவைராக்கியம், அநைஸ்வரியம். (சதாசிவ.)

பஞ்சாசியம் — சிங்கம். (வைத்தியபரிபா.) பஞ்சம் விரிவு. அசியம்-வாய், முகமுமாம்.

பஞ்சாக்கரி — ஒரு மந்திரம். (த. நி. போ. உகூறி.)

பஞ்சாடித்திநுக்கை—ஒரு மீன். (ஒருகுழூஉக்குறி.)

பஞ்சாணியம்—மரமஞ்சள்.(வைத்தியபரி.) பஞ்சாங்கியமென்றுங்கூறுவர். (வேதெருரு வைத்திய அகராதியில்.)

பஞ்சாத்திகாயம்—ஐந்துவகையான அத்திகாயங்கள்; அவை: சீவாத்திகாயம், அசீவாத்திகாயம், தர்மாத்திகாயம், அதர்மாத்திகாயம், ஆகாசாத்திகாயம் என்பன. (த.நி.போ.உஎசு.)

பஞ்சாஸ்திரமந்திரங்கள் — அகோராஸ்திரம், சிவாஸ்திரம், சுரிகாஸ்திரம், பாசுபதாஸ்திரம், வியோமாஸ்திரம் என்பன.(வி-ணி.கூக.)

பஞ்சாதாரம்–ஐந்தாதாரம். (சி. சி. அ: கூo. ஞாநப்.)

பஞ்சாந்தகன்—சதருத்திரரிலே வாயுதிக்கினிருக்கும் சதருத்திரரிலொருவர். (வி-ணி. உஎo.)

பஞ்சாநநம்—சிங்கம் பஞ்சம்-விரிவு. ஆநநம்-முகம். (சூ. நிக. கூ: உ.)

பஞ்சாமிர்தம்—ரசபஞ்சாமிர்தம். (சிவரகசி. பலிபீட. கூ.) பலபஞ்சாமிர்தம் சைவவிரு விடையிலறிக.

பஞ்சாமிலம் — இலந்தை, எலுமிச்சை, நெல்லி, புளியாரை, மாதுளை சேர்ந்தது. ஆமிலம்-புளிப்பு.

பஞ்சாமுதம்—பஞ்சாமிருதம். (வழக்.)

பஞ்சாயீ—திரட்கோரை.(பிங்கல.உகூகூச.)

பஞ்சாயம் — 1. ஐந்துபேர்கூடிய நியாயசங்கம். 2. முத்தக்காசு. (வைத்தியபரி.)(வழக்.)

பஞ்சாயுதன்–விட்டுணு. (உ-ம்.) "திண்ணிய நேமிவலம்புரிவாள்கதைசிலைப்புடைநாய்கனும்' (பாரத. பதின்மூன்றும்போர். உஉச.)

பஞ்சார்ச்சகம்–ஐந்தருக்கம்; அவை: இந்திரவில், தூமம், பரிவேடம், வித்பாதம் என்பன. இவற்றுள்வருந்தோடதத்தைப் பஞ்சார்க்கதோடமென்பர்.

பஞ்சாநுடபத்திரம் — தன்கைப்பத்திரமுதலிய பத்திரங்களில் கொடுத்தவன் வாங்கின

வன் சான்றினரிருவர்வரைபவன் ஆகிய இவ் வைவரு மேவரையப்பட்டிருக்கும் பத்திரம். (மிருச. கடு.)

பஞ்சாலம்—ஒரு தேயம். (பாரதம்.திரௌ பதிமா. கூஉ.)

பஞ்சாவத்தை—ஐந்தவத்தை; அவை: சாக்கிரம், சுழுத்தி, சொப்பநம், துரியம், துரியாதீதம். (சிவஞானசித். சு-ஆம் சூத். கூஉ, கூகூ.)

பஞ்சாவயவம்—மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு, உபநயம், நிகமநம் என்பன. (தி. சி. அளவை. கக. சிவாக்.)

பஞ்சாவாணபூசை — பஞ்சப்பிரமசடங்க தேவர் பதிஞ்ஞருவரையும், வித்தியேசுரர்எண்மரையும், கணேசுரர் எண்மரையும், உலோகபாலர் பதின்மரையும், அவர்களுடைய ஆயுதங்கள் பத்தையும் பூசித்தல்; அது: பிரமாங்கங்களேத் தளங்களிலும், வித்தியேசுரர்களேத் தளாக்கிரங்களிலும், கணேசுரர்களேப் பீடத்தின்கண்டத்திலும், உலோகபாலர்களேக் கீழ்ப் பீடத்திலும், தசாயுதங்களே ஆதாரசிலேயின் மேலும் பூசித்தலாம். இவற்றுள் வித்தியேசுரர் எண்மராவார்: அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், சிகண்டி. கணேசுரர் எண்மராவர்: நந்தி, மாகாளர், பிருங்கி, கணபதி, இடபம், கந்தர், பார்வதி, சண்டர். உலோகபாலர்பதின்மராவார்: இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விட்டுணு. உலோகபாலராயுதம் பத்தாவன: வச்சிரம், சத்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, சூலம், பதுமம், சக்கரம். (சைவச. பொதுவி. நுஉ, நுஉக. உரை.)

பஞ்சான்மா — அந்தரான்மா, சிவான்மா, தத்துவான்மா, பூதான்மா, மந்திரான்மர என்பன. [திராவிடமகாபாஷியத்தில் அத்துவிதச் சொற்குப் பொருளுரைவிடத்திலே நன்குகாணலாம், ஈண்டுறைப்பின் விரியுமென்க. யான் ' அச்சிட்டிருக்கிற அத்துவிதவாக்கியத் தெளிவுரையிலுங்காண்க.]

பஞ்சி—1. சோம்பு. 2. தூறு. 3. பஞ்சபூதம். (த. நி. போ. ககஅ.) 4. பஞ்சு. (உ-ம்.) "மருங்குலாரடி-பஞ்சிதேய்ப்புண்டன" (கந்தபு திருநாட்டு. நு0.) 5. வெண்டுகில் (உ-ம்.) "அவிர் பஞ்சி" (சிந்தா. இலக். கூஅஎ.) (1, 2-வைத்தியபரிபா.)

பஞ்சிகை — 1. கணக்கு. 2. பஞ்சாங்கம். (1, 2-வழக்.)

பஞ்சிநாண்—உபவீதம். (உ-ம்.) "பஞ்சிநாண் களேதோன்மார்பும்" (திருவிளை. நகர. அகூ.)

பஞ்சிற்றெடர்—நூனுனி. (சூ.நிக.சு:உக.)

பஞ்சீகரணக்கிரமம் — ஒரு பூதரூபத்தை இரண்டாக்கி ஒரு பாதி அந்தப்பூதமாகவேயிருக்க நின்றபாதி நாலாகி எஞ்சிநின்ற நாலு பூதங்களிலும் அந்நியோந்யம் வியாபித்திருக்கை. (தி. இ. உ: சுடு. சிவாக்.)

பஞ்சீகரணம் — பஞ்சபூதவமிசகூட்டம், பஞ்சபூதங்களாலுண்டான தேகஸ்திதி.

பஞ்சீகிருததூலபூதங்கள் — ஆகாயமுதலிய தூலபூதங்கள் ஒவ்வொன்று இரண்டுபாகமாய் அதில் ஒருபாகம் நிற்க மற்றையொருபாகமும் ஒவ்வொன்று நான்காகி அவ்வப் பாகங்களின் நிசாம்சத்தைவிட்டு இதரபூதங்களுடனே கூடுவது; இந்த ஸ்தூலபூதங்களிடத்தில் ஈசுவர வீட்சண்யத்தால் தூலபிரபஞ்சமுண்டாயிற்று. (வாசுதே அ.)

பஞ்சீகிருதபூதம் — பஞ்சீகிருததூலபூதம். (உ-ம்) "உரைத்திடுபூதங்களோரொன்றுதன்னிலோர்நான்கதாகி — விரித்திடுபூதங்களொரு நான்கினுள்ளுமேவுமதைமெய்ம்மை வேதம்-தெரித்திடுமாமுனிவர்பஞ்சீகிருத மெனவிரித்தறிவார்" (கூர்மபு. பிரகிருதி. கடு. உரை.)

பஞ்சு—1. சூதாடுவோர்வசங்கிருங் குழூஉக் குறியிலொன்று. (உ-ம்.) "பஞ்செனவுரைசெய்வர்பாலேயென்பர்" (கந்தபு. கயமுகனுற்பத்தி. கசுஎ.) 2. பருத்திப்பஞ்சுமுதலியன. (உ-ம்.) "சந்திரகாந்தத்தனேச்சூழ்பஞ்சுதனில்"(சைவச. பொது. ககசு.)

பஞ்சுநீலப்பாணி—தூரிசி. (வழக்.)

பஞ்சுரம்—1. ஒருபண், பகற்பண்களிலொன்று, சேவாரத்திற்காண்க. 2. குறிஞ்சியாழ்த்திறம். (பிங்கல. கசுஎஅ.)

பஞ்சுருத்தானி—ஒரு குருவி. வழக்குப்போலும்.

பஞ்சேந்திரியம்—ஐம்பொறி; அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. (உ-ம்.) "பஞ்சேந்திரியங்களிவற்றிலுமம் - பன்னுகாதுடல்கண்ணுக்குப்பகர்ந்திடுமூக்கென்றுகு - மன்னவைகட்கேளாநேந்திரியப்பேரமையுமாதோ' (மச்சபு. பிரமமூச. கo)

பஞ்சை — 1. இரப்போன். 2. பலவீனன். (1, 2-வழக்.)

பஞ்சைக்கியம் — ஐந்துவித ஐக்கியங்கள்; அது: ஈசுவரனுடைய தூலசரீரமாகிய விராட்டைப்பார்த்தால், சீவனுடையதூலசரீரம்விராட்டிலே அடங்கினபடியால் இவனுக்குத்தூலசரீரமில்லேயென்பதும், ஈசுவரனுடைய சூக்குமசரீரமாகிய இரணியகர்ப்பத்தைப்பார்த்தால் இவனுடைய சூக்குமசரீரமதிலடங்கினபடி

யால் இவனுக்குச்சூக்குமசரீரமில்லை யென்பதும், ஈசுவரனுடைய காரணசரீரமாகிய மாயையைப்பார்த்தா லிவனுடைய காரணசரீரம் அதிலடங்குகிறபடியால் இவனுக்குக் காரணசரீரமில்லையென்பதும், ஈசுவரனைப் பார்த்தால் இவனுமவனிடத்திலடங்குகிறபடியால் இவன் வேறில்லை யென்பதும், ஈசுவரசாட்சியாகிய பிரமத்தைப்பார்த்தால் இவன்சாட்சி அதிலடங்குகிறபடியால் அது வேறில்லை என்பதுமாம். (உபதேசம்.)

பஞ்சையன்—1. எளியவன். 2. பலவீனன். (1, 2-வழக்.)

பஞ்சோபசாரம்—உற்சவாதிகளிலே செய்யப்படும் மூவித உபசார வகைகளுளொன்று; அவை: மண்சம்பந்தமான கந்தமூலபலன்கள், சுகந்தபுட்பாதிகள், பணிகாரம், அன்னம், அடைகாயாதிகளென்னும் பார்த்திவோபசாரமும், சலசம்பந்தமான நீர், பால், தயிர், வஸ்திராதிகளென்னும் ஆப்பியோபசாரமும், அக்கினிசம்பந்தமான உலோகாதி ஆபரணங்கள், தீபங்கள் கண்ணாடியென்னுந் தைசசோபசாரமும், வாயுசம்பந்தமான தூபம், சாமரம், மயில்விசிறி, யாதிகளென்னும் வாய்வோபசாரமும், ஆகாசசம்பந்தமான மணியோசை, மந்திராதிகள் என்னும் வைகாய சோபசாரமுமாம். (சிவதரு. க: கூஅ. உரை.)

பஞ்ஞீல்—மக்கட்பரப்பு. (சூ. நிக. உ: அச.) பிங்கலத்திற் பஞ்ஞீலியென்பர்.

பஞ்ஞீலி — திருப்பஞ்ஞீலி என்னுமொரு சிவதலம். (தேவாரத்திற்பார்.)

பஞ்சமம்—தொகுதி. (உ-ம்.) "பன்னூறடுக்கியவேறுபடுபஞ்சமம்" (புறநா. சுஉ.) மக்கட்டொகுதியென்பர் பதிற்றுப்பத்தில். பஞ்சமம் என்றுங்கூறுவர்.

பட்கை—பாம்பின் மேல்வாயினேர்பல்; அது: காளி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பட்சகன்—பேருண்டியன். (வழக்.)

பட்சணம்—தீன்பண்டம். (வழக்.)

பட்சணி — 1. உண்போன். 2. தெரிநிலை வினைப்பகுதி. (1-வழக்.)

பட்சணித்தல்—உண்டல். (வழக்.)

பட்சணீயம்—உண்ணத்தகுபொருள். (வழக்.)

பட்சணை—இரை. (வழக்.)

பட்சதாபம்—பரிதாபம். (வழக்.)

பட்சநிரீத்தேசம் — இடத்தைக்குறித்தல். (சி. சி. இரு: க. சிவாக்.)

பட்சபாதம்—ஓரம். (வழக்.)

பட்சபாதி—பட்சபாதஞ்செய்கிறவன். (வழக்.)

பட்சம்—1. பக்கம். 2. பதினைந்துநாளெனக் கருதப்படுமொருகுறிப்புமொழி. (உ-ம்.) "அமிர்தக்குமரி" பார். [பிரதமைமுதல் பதினைந்துநாளென்பதுபற்றிவந்தகுறிப்பு. 3. பிரியம். (வழக்.)

பட்சவாதம்—பாரிசவாதம். (வழக்.)

பட்சவாதி—ஓரவாரஞ்செய்பவன். (வழக்.)

பட்சி — 1. தெரிநிலைவினைப்பகுதி. 2. பறவை. இறகையுடையது.

பட்சிசாத்திரம் — பஞ்சபட்சியைக் குறித்தறியுநூல். (வழக்.)

பட்சித்தல்—உண்ணல். (வழக்.)

பட்சிப்பு—பட்சித்தல். (வழக்.)

பட்சியிராசன்— பறவைவேந்தனாகிய கலுழன். (வழக்.)

பட்டகம் — 1. ஆடுதின்னுபாளை. 2. புழுக்கொல்லிச்செடி. (1, 2-வைத்தியபரிபா.)

பட்டங்கட்டி—பட்டவர்த்தனன். (வழக்.)

பட்டங்கட்டுதல்—பட்டமணிதல். (வழக்.)

பட்டசாலை— பட்டத்திற்குவைக்கிற மாளிகை. சாலை-மாளிகை.

பட்டஞ்சூட்டுதல்—1. அரசரைக்குரவரைப் பட்டாபிடேகம்பண்ணி முடிசூட்டல். 2. பட்டப்பேர்கொடுத்தல். (1, 2-வழக்.)

பட்டஞ்சூடுதல் — 1. அபிஷேகமடைதல். 2. பட்டமடைதல். (வழக்.)

பட்டடை—1. அடைகுறடு. (பிங்கல. கசுகூச.) 2. இசைக்கரணங்களெட்டினொன்று. (பெரிய பு. ஆஞ்ய. உரி.) 3. தானியவுறைவிடம். (வழக்.)

பட்டத்துரை—பட்டவர்த்தன். (வழக்.)

பட்டத்தேவி—அரசி. (வழக்.)

பட்டப்பேர்—1. குலமுறைப்பேர். 2. பட்டஞ்சூட்டப்பட்டபேர். (1, 2-வழக்.)

பட்டம்—1. கவரிமா. 2. காற்றடிப்பட்டம். 3. குளம். (உ-ம்.) "பாவநாசமெனவுண்மொழி தருமபட்டமொன்று" (சேதுபு. பாவநாச. கூ.) 4. சதுக்கமுதலியபட்டம். தூண் முதலியவற்றிற்காண்க. 5. சீலை. தைல. தைலவ. 6. நெற்றிப்பட்டம். (உ-ம்.) "பட்டப்போதகம்தேர்பரியாளெனும்படையுடைப்பாஞ்சாலர்" (பாரத. படையெழுச்சி. கூ.) 7. பதவி. 8. பெருங்கொடி. (வைத்தியபரிபா.) 9. பொன். 10. மரக்கலவகை. 11. வழி. 12. வாள். (சூ. நிக. கக: டகரவெ. கசு.) 13. விலங்கின்படக்கை. (1, 7, 8, 9, 10, 11, 12-பிங்கல. கூஎசுo.) (1, 4-வழக்.)

பட்டமங்கை — ஒருதிருப்பதி. (திருவாச. கீர்த்தி. சுஉ.)

பட்டமணிந்தாள்-பட்டந்தரித்தாள். (சிந்தா)

பட்டயம் — செப்புத்தகடுமுதலிய தகட்டி லெழுதிக்கொடுக்கிற சாசனம். (வழக்.)

பட்டர் — ஆதிசைவர்க்குரியவொருபெயர். (வழக்.)

பட்டவர்த்தனர் — பட்டந்தரித்த வ ர சர். (உ-ம்.) "மகுடவர்த்தனருடன் பட்ட வர்த்தனரு டனுள்ளார்" (பாரத. படையெழுச்சி. எ.)

பட்டன் — 1. ஆதிசைவனுக்குரியபெயர். 2. சிவபிரான். (உ - ம்.) "பட்டனுக்கென்னைத் தன்பாற்படித்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே" (திருப்பல். .)

பட்டன்று—பட்டது. (புறநா.)

பட்டனம் — கடற்கரையிற் பலதீவிற் பண் டம் விற்குமூர். (சூ. நிக. நு: ஈஎ.)

பட்டா—1. பட்டயம். 2. பாட்டமதமுரை த்த ஒராசிரியன். (வேதா. சூ. ச. உரை.) 3. வண்டிற்சில்லுகளுக்குப்போடப்படுமோரிரும்பு வளையம். 4. வாள். [இந்துஸ்.] (1, 3-வழக்.)

பட்டாங்கு-1. இயல்பு. (உ-ம்.) "பட்டாங்கி லுள்ளபடி" (நல்வழி.) 2. உண்மை. (பிங்கல. ஈஅ0ஈ.)

பட்டாசிரியன்--ஒருசமையவாசிரியன், பாட் டமதவாசிரியன்.

பட்டாணி — 1. ஒரு குருவி. 2. ஒரு சாதி யான். [இந்துஸ்.] 3 ஒருவகைப்பயறு, பட் டாணிப்பயறு. (1, 3-வழக்.)

பட்டாதாரி—நிலத்துக்குரியவர். (வழக்.)

பட்டாபிடேகம் — பட்டந்தரித்தற்கு ரி ய வபிடேகம். (வழக்)

பட்டாரகர்—1. கடவுளர். (உ-ம்.) "அருத் தருமத்தரையாதிபட்டாரகராம்பரிசே" (திரு நூற். கநு.) 2. குருக்கள். (சைவவி.)

பட்டாரகன் — 1. அரசன். 2. கடவுள். (திருநூற். கநு.) 3. குரு. (சைவவி.)

பட்டாளம்-படைவகுப்பு (ஓர்குழூஉக்குறி.)

பட்டி — 1. அட்ட வ ணை. வியாபாரிகள் வழக்கு. 2. இடம். 3. பூச்செடி. (சோழதேசத் திற் சிலவிடங்களின் மிகுதியாகவுண்டு.) 4. ஒருவிதசிங்கிச்சை. (தைலவ.) 5. களவு. (சூ.நிக. க: நுஅ.) 6. சிற்றூர். 7. சீலை. (பிங்கல.கஎஈ.) 8. நாய். 9. பசுக்கொட்டில். (பிங்கல. ஊஅஅ.) 10. படல். 11. வாலையென்னுமோர்கருவி. (தைல.தைலவ.) 12. விக்கிரமாதித்தன்மந்திரி. (2,8,9-பிங்கல.ஊஅஎ.) (3,6,8,10,12-வழக்.)

பட்டிக்காடு—காட்டுக்குள்ளூர். (வழக்.)

பட்டிகட்டல்—மெல்லியசீலையைத்தசைப்படி பாளமாகக்கிழித்துத் தைலத்தில்நனைத்து அவ யவங்களிற் சுற்றப்படுவது. (தைல. தைலவ. கஉஅ.)

பட்டிகர்—திருடர். (பிங்கல. அஎசு.)

பட்டிகள்—பட்டிகர். (வழக்.)

பட்டிகை—1. அரைநாண். 2. ஏடு. (உ-ம்.) "பாறுமப்பொருண்மேற்கொண்ட பட்டி கை" (பெரியபு. திருஞாந. அகநு.) 3. சுவர்த்தலத் தின்சித்திரக்கம்பி. (வழக்.) 4. தெப்பம். 5. தோழிலிடும்யோகபட்டம். (உ - ம்.) "தோழி லிடும்பட்டிகையும்" (பெரியபு. மானக்க. உஈ.) 6. மூலக்கச்சு. (1, 4, 6-சூ. நிக. கக: டகரவெ. உஉ.)

பட்டிசம்—ஒரு ஆயுதம். (உ-ம்.) வந்துழிக் காண்க.

பட்டினப்பிரவேசம் — நகரிவலம்வருதல். (வழக்.)

பட்டிடை—நந்தியாவட்டம்.(வைத்தியபரி.)

பட்டிநி—உணவற்றிருத்தல். (உ-ம்.) "பட் டிநிகொண்டு" (சேதுபு. மங்கல. சச.)

பட்டிமண்டபம் — வித்தியா ம ண் ட ப ம். (உ-ம்.) "மகதநன்னாட்டுவாள்வாய்வேந்தன்- பகைப்புறத்துக்கொடுத்த பட்டிமண்டபமும் " (சிலப். இந்திரன்விழ.கo, ஈo உ.) கம்பருங்கலே தெரிபட்டிமண்டபம் என்றார்.

பட்டிமாடு — கொண்டிமாடு, பயிரழிக்கும் மாடு. (வழக்.)

பட்டிமை—1. களவுத்தன்மை. 2. வஞ்சம். (உ - ம்.) "பட்டிமையுருக்கள்கொடுபாறலரிது" (கந்தபு. சதமுகன். எ.) மை-விகுதி.

பட்டியல்—திண்ணைவிளிம்புக்கல். (வழக்.)

பட்டினம்—1. ஊர். (சூ. நிக. நு: ஈசு.) 2. கடற்றுறையையடுத்த நகரம். (உ-ம்.) "பொன் மலர்க்கைதைவேலிசூழ்வேலைப்புறத்தொருபட் டினத்துள்ளான்" (தி ரு வி ளை. வன்னியுங் இணறு. உ) 3. நெய்தனிலத்தூர். (சூ. நிக. நு: ஈஈ.)

பட்டினவர்—நெய்தனிலமாக்கள்.

பட்டீச்சுரம் — ஒரு தலம். (உ-ம்.) "பழை யாற்றுபட்டீச்சுரத்தாய்போற்றி" (தே வா ர. திருவீரட்டாந சு. திருநாவு.)

பட்டு—1. ஒரு பருத்தி. 2. சிற்றூர். (பிங் கல. சஎசு.) 3. பட்டுப்புடவை. (உ-ம்.) "பட்டி சைந்தவல்குணங்கை" (திருவிளை.வளைய.ஈச.) 4. துகில். (சூ. நிக. எ: சுஈ.)

பட்டுக்கள்—வேதார்த்தத்தின் மகிமையைத் துதிப்பவர்கள். (வேதா. சூ. ஈ. உரை.)

பட்டுநூற்காரர் — ஒரு சாதியார். மதுரை யின் மிகுதியுள்ளார். (வழக்.)

பட்டுநூற்பூச்சி—ஒரு சிலம்பி. (வழக்.)

பட்டுப்பருத்தி — ஒருவகைப்பருத்தி, செம் பருத்தி. (வழக்.)

பட்டுப்பூச்சி—ஒரு சிலம்பி. (வழக்.)
பட்டை—மரத்தோல். (வழக்.)
பட்டைக்காறை—மாதருடைய ஒரு கழுத்தணி. (வழக்.)
பட்டைச்சாராயம்—வெள்வேலம் பட்டையைக்காய்ச்சி யிறக்குமோர்பாகம். (வழக்.)
பட்டைப்பெல்லி—பட்டைப்பிடி.
பட்டையம்—1. பட்டயம். ஐகாரம்போலி. 2. வாள்.
பட்டோலிகா — எழுதப்பட்ட ஒருவகைச் சீட்டு.
பட்டோலை — 1. அட்டவணை. (வழக்.) 2. அரசர்விடுந்திருமுகம். [இது பட்டோலிகா வென்னுஞ்சொல்லில் இக என்னுமெழுத்துக்கள்கெட்டும் ஆ ஐயாகத்திரிந்தும் வந்தது என்பர்.] 3. காரியக்குறிப்பெழுதுமோலை. (உ-ம்.) "பண்ணியபாவமெங்கள்பட்டோலைக் குட்படுமோ" (சிவரக. கத்திரிப்பூ. ஈக.)
பட—ஒருவமவுருபு. (உ-ம்.)"மலைபடவரிந்து" (சிந்தா. நாமக. உஎ.) 2. மொய்ப்ப. (புறநா.)
படக்குப்படக்கெனல்— 1. அச்சக்குறிப்பு. 2. ஈரடுக்கொலிக்குறிப்பு. (1, 2-வழக்.)
படகம் — 1. ஒரு வாச்சியம், இரணபேரி யென்பர். (உ-ம்.) "படகமாகுளிமுன்னுகும்" (சேதுபு. இராமன. சுருே.) (சூ. நிக. எ: ஈக) 2. கவரிமா. (சூ. நிக. ஈ: உக) 3. தம்பட்டம். (உ-ம்.) "சாதிவங்கமிரதிகளாற்படகமிரண்ட கமிணையும்"(தைல. பாயிர. உஉ.) 4 திரைச்சீலை. (வழக்.) 5. பற்படகம். 6. விஷ்ணு கரந்தை. (5, 6-வைத்தியபரிபா.)
படகாரன்—1. ஓவியன். 2. நெய்வோன். (1, 2-வழக்.)
படத—ஒருவகை மரக்கலம். (உ-ம்.)"சோங்கு"பார்.
படதுடி— கூடாரம். (வழக்.)
படங்கன்—ஒருமீன். (வழக்.)
பதுமாவதி—ஒரு நதி. (வழக்.)

பதுமிநி– நால்வகைப்பெண்களிலொருத்தி. (உ-ம்.) "பதுமிநிசித்திநிபகர்ந்தசங்கினி-யிதமுறுமத்தினியென்னுநால்வருள்" (கொக்கோக நூலிலறிக.)

பதுமிநிகாந்தன்—சூரியன். (வழக்.)

பதுழகம்—ஓரிருக்கை. (உ-ம்.) "பதுழகமுற்கட்டிதமேயெரப்படி, யிருக்கைசம்புடமயமுகஞ்சுவத்திகந்-தனிப்புடமண்டிலமேகபாத, முளப்படவொன்பதுமாகுந், திரிதரவில்லாவிருக்கையென்ப" (சிலப். வேனிற்கா. உசூ. உரை.)

பதுமை—1 இலக்குமி. (உ-ம்.) "பாகைமொழிப்பதுமைகோன்" (சேதுபு. சேதுபல. உ0.) 2. ஒரிதழ்த்தாமரை.(தைல.தைலவ.கூசூ.) 3. காளி. (பிங்கல. கசக.)

பதை—1. பதைத்தல். (உ-ம்.) "பதைபடுமமணர்காலபடரெனப்படரிற்பட்டார்" (திருவிளை.யானையெ.கo.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

பதைத்தல்–1. அஞ்சல். (வழக்.) 2. அவத்தைப்படல், துடித்தல். (உ-ம்.) "பாவியேமகனேயென்பள்பதைப்பள்" (அரிச்ச.மயாந.கள.)

பதைப்பு—பதறுதல். (வழக்.)

பதைப்ப—அசைய. (ஐங்குறு. கநிசூ.)

பதைபதைத்தல்—பதைபதைப்பு. (உ-ம்.) "பதைபதைத்துப்பைந்தொடியாள்பதறிவீழ்ந்தாள்" (அரிச்ச. மயாந. சஉ.)

பந்தகம் — கட்டு. (பிங்கல. கூளஎஅ.) கப்பிரத்தியமென்பர்.

பந்தயிலம் — பந்தமெரித்திறக்குமெண்ணெய். (வழக்.)

பந்தநம்—கட்டு.(உ-ம்)"இரக்ஷாபந்தனம்" (வழக்.)

பந்தனை—1. கட்டு. 2. பந்தித்தல். (உ-ம்.) "பந்தனைசேர்பிரபஞ்சப்பற்றினைவிட்டோ.ரு

ளத்திற்பதியாதனே" (சிவரக. கணபதியுடன் கடவு. க.) 3. மகள். (சூ. நிக. உ: அக.)

பந்தம் — 1. அழகு. (பிங்கல. ககூசக.) 2. உண்டை, திரள். (பிங்கல. உஉகூ.) 3. உறவு, சுற்றம். (பிங்கல. கூ00.) 4. ஏற்பாடு, நியமம். 5. கட்டு. (உ-ம்.) "மாயபந்தமாவினேயையாள" (இராமா. கரன். நிசு.) 6. கயிறு. ஆகுபெயர் போலும். 7. சம்பந்தம். (உ-ம்.) "உன்னலருஞ் சுருதிசம்பந்தமுத்திசம்பந்தமுலோகபந்த - மென்னவருளாநங்கள்" (வேதா-சூ. நிஅ.) 8. தளை; இஃது: யாப்புறுப்பெட்டினுளொன்று. (உ-ம்.) "பந்தமடிதொடைபாவினங்கூறுவன்" (யாப்பருங்கலக்காரிகை. தற்சிறப். க.) 9. நீக் கொளுத்தும்பந்து. 10. தொடர். 11. மதில். (பிங்கல. சுஉகூ.) 12. மயிர்முடி, ஆண்பான் மயிர்முடி. (பிங்கல. கoஎகூ.) 13. மலம். (சி. சி. அ: உ. சிவஞா.) 14. விலங்கு. {4,9,10-வழக்.)

பந்தயம்—ஓட்டம், சூதாடவைக்கும் பொருள். (வழக்.)

பந்தர்—1. ஒரு பட்டினம். 2. நீழல்.(உ-ம்) 'பன்மலரடுக்கியநன்மரப்பந்தரிலவந்திகையின்' (சிலப். நாடுகாண். கூ0.) 3. பந்தல். (உ-ம்.) "கமைதருபுட்பவிதானப்பந்தர்" (சிவரக. தேவியிமய. கக.) 4. பாசத்துக்குள்ளானவர்கள்.

பந்தாம் — கரண்டகபாடாணம். (வைத்தியபரி.)

பந்தரி—பிடாலவணம். (வைத்தியபரி.)

பந்தல்—பந்தர். (வழக்.)

பந்தவரிசை—குதிரைப்பற்பாடாணம். (வழக்.)

பந்தன்—1. ஒரு வாணிகன்; இவன்போலில் ஒளவை பந்தனந்தாதியென்னுநூல் பாடினுள். (தனிப்பாடலிற் பார்.) 2. சீர்பந்தபாடாணம். (வைத்தியபரி.)

பந்தி—1. ஒருசந்தம்; அஃது: அடியொன்று பத்தெழுத்துக்கொண்டு வருவது. (வீரசோ. யாப்பு. கூக. உரை) 2. ஒழுங்கு. (உ-ம்.) "பந்தித்திக்கும்பெறத்தோன்றியவேதப்பதியன்" (மறைசை. அசு.) 3. குதிரையானேமுதலியநிற்குஞ்சாலே.(உ-ம்.)"பாடலங்கரிவைகியபந்தியும்" (அரிச்ச. நகர். கூ.) 4. கூட்டம். (வழக்.) (இராமா. எழுச்சிப். நிநி.) 5. வரிசை. (சூ. நிக. சு: கூசு.) 6. தெரிநிலேவினேப்பகுதி.

பந்தித்தல்—1. கட்டல். (பிறவினேத்தொழிற்பெயர்.) 2. பொருந்தல். (உ-ம்.) "அந்தத்திசையாந்தம்பூருவதிக்கிற்-பந்திக்கு மென்றுளத்திற்பார்" (சைவச. பொது. சசஉ.)

பந்து — 1. உறவு. (பிங்கல. கூ00.) அம்-கண்டைக்குறை. 2.எறியும்பந்து.(உ-ம்.)"பந்தணேவிரலாள்" (திருவாசகம்.) 3. திரட்சி. (பிங்கல. உஉகூ.) (அம்-கடைக்குறை.) 4. மட்டத்துருத்தி (உ-ம்.) "சிவிறி"பார்.

பந்துத்துவம்-பந்துக்களின்றன்மை.(வழக்)

பந்துவராளி ஓரிராகம். (வழக்.)

பந்தையம்—பந்தயம். அ, ஐ-போலி.

பந்நகம்—1. சீதரங்கபாடாணம். 2. பாம்பு. (உ-ம்.) "பந்நகாபரணு" (திருவிசைப்பா.)

பந்நகவைரி—கருடன். (சூ. நிக. கூ: நிஉ.)

பநசம்—பலாமரம். (உ-ம்.) "பள்ளமேற் பநசக்கனியூறல்" (அரிச்ச. நாட்டு. நிக.)

பநசயித்தி—அரசு. (வைத்தியபரி.)

பநையன் — 1. ஒருநோய். 2. ஒரு பாம்பு. 3. ஒரு மீன். (வழக்குப்போலும்.)

பநிலம்-வாதரோகம். (உ-ம்.) "பநிலவர்க்கமிலே" (தைல தைலவ. தள.)

பப்பரப்புளி-பெருக்கமரம்.(வைத்தியபரி.)

பப்பரம்—தேயமைம்பத்தாறி லொன்று. (இராமா. எழுச்சிப். கூஅ.)

பப்பரர்—பப்பரதேயத்தார். (உ-ம்.) "பப்பரர்நெருங்கிச்சீறி" (அரிச்ச. சூழ்வி. கூக.)

பப்பளி—பப்பாளிமரம். (வைத்தியபரி.)

பப்பளிச்சேலை—ஒருவகை வண்ணச்சேலை. (வழக்.)

பப்பளிப்பால் —ஒரு பால். (வைத்தியபரி.)

பப்பாதி—பாதிபாதி. (உ-ம்.) "பயந்தார்வடிவிற்பப்பாதி" (பாரதம்.இராயசூய. கூச.)

பப்பாளி—பப்பளி. (வைத்தியபரி.)

பப்பு—1. ஒப்பு. (சூ. நிக. கக: சகரவெ. கஉ.) 2. பரப்பு. (உ-ம்.) "பப்பறவீட்டிருந்து" (திருவாச. திருப்பள்ளியெழு. சு.)

பப்புருவாகனன்—அருச்சுனனுக்குச் சித்திராங்கதையிடத்திற்பிறந்த பிள்ளே. (உ-ம்.) "பன்னளினெடும்போகம்பயின்றபின்னர்ப் பப்புருவாகனனென்னும்பைதற்றிங்களன்னுனே" (பாரத. அருச்சு. நீர்த். சகூ.)

பப்புவர்—புகழ்வோர். (பிங்கல. அசுசு.)

பப்நு—நிவிர்த்திகலேயிற் பிருதுவிதத்துவத்திலுள்ள நூற்றெட்டுப்புவனங்களுளொன்று. (சி-லி. நிரி. உக. உரை.)

பம்—விண்மீன். (சூ. நிக. க: எக.)

பம்பத்திகாயம்—பஞ்சாஸ்திகாயம். (உ-ம்.) "குணிப்பின்றியைந்தாம்-பம்பத்திகாயம்பணித்தபிரான்" (திருநூற். உகூ.)

பம்பம்—திராய். (வைத்தியபரி.)

பம்பரம்—ஒரு விளையாட்டுக்கருவி. (பிரபுலிங்கலீலே. விமலகதி. சக.)

பம்பல்—1. தளி. (உ-ம்.) "பானந்தனே யொத்துவிழுந்ததுமாரிப்பம்பல்" (அரிச்ச.

நாட்டு. ச.) 2. பரந்தவடிவு. (சூ. நிக. அ: நி.)

பம்பா—தட்சணத்தில் ஒரு பாய்கை, பம்பை. (இராமா. ஆரணிபிறப்புநீங்கு. கூ.)

பம்பிகை—பீர்க்கு. (வைத்தியபரி.)

பம்பு—1. ஒலித்தல். (உ-ம்.) "பம்புசில்லரி பரிபுரத்தாட்டுணைபரித்தாள்"(ஏகாதசி.உருக்குமாங். சுருபி.) 2. தொகுதி. 3. வேடிக்கை. (உ-ம்.) "நம்பனடியவர்குநல்காத் திரவியங்கள்-பம்புக்காம்பேய்க்காம்" (ஔவை பாடல்.)

பம்புதல் — 1. ஆரவாரித்தல். (பம்புபார்.) 2. எழுச்சி. (சூ. நிக. கூ: கூஅ.) 3. நெருங்கல். (உ-ம்.) "பசுமுதனீடுதருப்பம்புநெமிசத்தில்" (மச்சபு. பிரமமுக. க.) 4. பரந்தவடிவு. (சூ. நிக. அ: நி.)

பம்பை—1. ஒரு வாச்சியப்பொது. (சூ.நிக. எ: சகூ.) 2. சுருண்டகீழ்விழாமல் தூராயிருக்கின்ற தலைமயிர். (உ-ம்.)"நெடுஞ்சடைகரந்திட நெறித்தபம்பையும்" (பெரியபு. திருநீல. கஉ.) 3. பம்பா என்னும் பொய்கை. (உ-ம்.) "பம்பையின்கரைகண்டனன்" (சேதுபு.சேதுவந்த.ச.) இது சுக்கீரீவனிருந்தமலைக்கு சமீபத்துள்ளது. (இராமா. சரிப்பிறப்பு. கூ.) 4. மூங்கிலநிலப்பறை. (சூ. நிக எ: சகூ.)

பம்மல்—1. செம்மூதல். (உ-ம்.) "பறந்தன ரமரரஞ்சிப்பலபெரும்பிணத்தின்பம்மல்"(இராமா. கும்பகருணன்வதை. கஎகூ.) 2. மந்தாரம். 3. மந்திப்பு. (2, 3-வழக்.)

பம்முதல்—பம்மல். (வழக்.)

டீயன்—பையன். (போலி.)

பய—பைய, மெல்ல. (உ-ம்.) "பூண்கோடே மொழியாற்பயக்கூறினுள்" (சிந்தா.குணமாலை. நிகூ.) போலி.

பயங்கரம்–அச்சம். (உ-ம்.) "ஆனவதிபயங்கரங்கூர்பெருநரகிலடுங்கூற்றினுலேசன்னல்" (சேதுபு. தனுக்கோ. கநி.)

பயங்கரி — ஒரு யோகினி, காளியென்பர். (வி-எண். உசக.)

பயங்கொளி—பயங்கொள்பவன். (வழக்.)

பயசி—திருநாமப்பாலை. (வைத்தியபரி.)

பயசு—1. நீர். (சூ. நிக. க: நிசா.) 2. பால். (உ-ம்.) "ஊற்றும்பயசாலிழை"(தைல. தைலவ. நிகூ.)

பயணம்—பிரயாணம். (உ-ம்.) "வல்லவலத்திசையாகிற்பொருளேசேரும்வருபயணம் போதலுறும்" (குடிநூல். கஉ.)

பயத்தல் — 1. கொடுத்தல். (உ-ம்.) "இம்மூன்று-நன்மைபயத்தலில" (திரிகடு. கo.) 2. சித்தித்தல், கிடைத்தல். (சூ. நிக. கo. சுசா.) 3. படைத்தல். (உ-ம்.) "பயந்திடுஞ்சத்தியாதி" (சி. சி. க: சுo. சிவஞா.) 4. பயன்றரல். (வழக்.)

பயதம்—வண்டு. (வைத்தியபரி.)

பயந்தன்று—கொடுத்தது. (ஐங்குறு.)

பயந்தாள்—தாய். (சூ. நிக. உ: எசு.)

பயந்தோர்ப்பழிச்சல்—தலைவியைப் பெற்றுரைத்தலைவன்வாழ்த்தல். (வாண.கூஉ.மூகம்.)

பயநீதோன்-பிதா.(நம்பியகப்.ஒழிபியல்.சு.)

பயப்படல்—அச்சமுறல். (வழக்.)

பயப்பாடு–அச்சம். (உ-ம்.) "தக்கஞனவன் மநத்துப்பயப்பாடில்லாமல்" (கூர்மபு. தக்க. வேள். கச. உரை.)

பயப்பு — 1. நிறம். (பிங்கல. ககூசஎ.) 2. பசப்பு. ய-போலி. 3. பயன். (உ-ம்.) "பயவாக்களரனையர்" (தொல். சொல். கூoஉ. உரை.)

பயம்—1. அச்சம். (உ-ம்.) "பயமுணர்த்த" (அரிச்ச. மயாந. ச.) 2. இன்பம். (பரிபாடல்.) 3. குளம். (சூ.நிக.நி:உகூ.) 4. குறி. (உ-ம்.)"சத்திபதிங் - தாம்பயத்தின்பேதமாராய்ந்து" (சைவச. ஆசாரிய. உச.) 5. சுதை. 6. நீர். 7. பயன். (உ-ம்.)"முன்னையுழ்வினைப்பயத்தினும்"(இராமா.மந்திரசூநி.) 8. பழம். (புறப்பொருள்வெ.) 9. பால். (5, 6, 8 சூ. நிக. கக: யகரவெ. கூ.)

பயம்பு—1. குழி. (உ-ம்.) "கரந்துபம்பொகுங்கும்பயம்புமாருளவே" (மலைபடு. ககூக.) 2. பள்ளம். (சூ நிக. நி: சுக.) 3. மட்டுக்குழி. (உ-ம்.) "சூழ்பயம்பினகத்தொளித்தொடுங்கி" (பெரும்பாண. கஅ.) 4. யானைபடுகுழி. (சூ. நிக. கூ: கூ.)

பயநதி—திருநர்மப்பாலை. (வைத்தியபரி.)

பயல்—1. சரிபாதி. (உ-ம்.) "பயல்செய்மேனிப்பெருந்தகை" (சூத். ஞாந. ககூ: க.) 2. பள்ளம். (சூ. நிக. கக: ரகரவெ. உசு.) 3. பையல், சிறுவன். (உ-ம்.) "பையலோடிணங்கேல்" (கொன்றைவேந்தன்.)

பயலைமை—பசலைத்தன்மை. (உ-ம்.)"நோயும்பயலைமையுமீதூரவெம்போல்" (நாலாயிர. இரண்டா. வாயுந். க.)

பயலி—பசலி. (வழக்.)

பயலை—பசலைக்கீரை. (வழக்.)

பயற்றுங்காய்—ஒரு காய். (வழக்.)

பயறு—1. ஒரு தானியம்; அது: எலிப்பயறு, கறுப்புப்பயறு, சடைப்பயறு, சிறுபயறு, தட்டைப்பயறு, துலுக்கப்பயறு, நரிப்பயறு, நன்னிப்பயறு, மின்னிப்பயறு, பெரும்பயறுஎனப் பலவகைப்படும். (வைத்தியபரி.) 2. (சித்திரை நாள். (சூ. நிக. க: எகூ.)

பயன்—1. உரைவகைபதிணென்கிலெனன்று. (நன்னூ. பொதுப். உக.) 2. நீர். பிங்கல. (நிக.

(இறுதி-போலி.)3.நெஞ்சினெடுத்ததோர்மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானெய்வது. (திருக்கோ. க. உரை.) 4. பலன். (உ-ம்.) "பிறங்குகங்கை-யாறுதனின்மூழ்குபயனடைந்திவர்" (ஏகாதசி. உருக்குமா. கஉ.) 6. பால். (வைத்தியபரி.)

பயன்படுதல்—பிரயோசனமாதல். (வழக்.)

பயனிலசொல்லல் — பிரயோசனமில்லாத பேச்சுப்பேசல். (உ - ம்.) "பல்லார்முனியப்பயனிலசொல்லுவான்" (வள். ககக)

பயனிலாள்—வேசி. (சூ. நிக. உ: சுச)

பயனிலி—வீணன். (வழக்.)

பயநிலை—பயன்முடிவு. (வழக்.)

பயனுரைத்தல்—உரைசொல்லல்.

பயனுவமம் — பயனைப்பற்றிவருமுவமை; அது: கற்பகவள்ளல் என்முற்போல்வது. (நன். உகசு. உரை.)

பயனுவமை—பயனுவமம். (வழக்.)

பயனை-சிற்முமுட்டிவேர், பேராமுட்டிவேர். (உ-ம்.) "ஆமலகம்"பார். (தைல.தைலவ. கo.)

பயாநகம்—நிவர்த்திகலையிற்பிருதிவிதத்தவத்திலுள்ள நூற்றெட்டுப்புவநங்களு ளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.)

பயாநகன் — சதருத்திரரி னிருதிதிக்கினிருக்கும்சதருத்திரரிலொருவன்.(வி-ணி உஎo.)

பயிக்கம்—பிச்சை. (உ-ம்.) "பாவியேனறியாதேபாழ்நிற்பயிக்கம்புக்கெய்த்தவாறே"(தேவார. திருவாரூர்ப்பழமொழி. அ. திருநாவு.)

பயித்தியம்—பைத்தியம், அறிவுப்பிறழ்ச்சி. (வழக்.)

பயிந்தரி—ஏகம்பபாடணம். (வைத்தியபரி.)

பயிர் — 1. அருவருப்பு. (உ-ம்.) "பயிரிலாநரம்பின்கீதம்பாடியதொடங்கினளே" (சிந்தா. சுரமஞ். நிசை.) 2. அழைப்பு. பத்துப்பா. (குறிஞ்சி.) 3. இடும்பயிர். (உ-ம்.) "பருவத்தேபயிர்செய்" (ஆத்திசூடி.) 4. ஒலி. (உ - ம்.) "பயிரொன்றுகலியுஞ்சங்கும்"(இராமா.உலாவியற். அ.) 5. தெரிநிலைவினைப்பகுதி (உ-ம்.) "ஆன்கணங்கண்டுடையிர்குரல"(கு-பா.உகஅ.)6.பயில். 7. பறவைக்குரல். 8. மிருகங்களுள் ஒன்றை மற்றொன்று அனமத்குமோரோலை. (உ - ம்.) "கூடமினல்லேறுமடமானுகுபினேபயிர ழைப்பின்" (புறநா. கருஎ.) யானைக்குரியபரிபாடை என்பர் (சிந்தாமணியில்.) (5, 6, 7-சூ. நிக. கக: யகரவெ. ச.)

பயிர்த்தல்-ஒலித்தல். (பிறவினைத்தொழிற்பெயர்.

பயிர்தல்—ஆராய்தல். (உ-ம்.) "கடவுன்-றுய்த்தலேமந்தியைக்கையிடுப்பயிரும்" (புறநா. கருஅ.)

பயிர்ப்பு — 1. பயிலாதபொருளில்வருமருவருப்பு; இது: மகடூஉக்குணம் நான்கினொன்று. (உ-ம்.) "நாண்மடமச்சம்பயிர்ப்பென்னுமிவை நமூவ" (கோயிற்பு. பதஞ்சலி. கஅ.) இதற்கு மனங்கொளாத்தன்மையென்னுர் சிந்தாமணியில். 2. பிசின். (உ - ம்.) "பலவின்பயிர்ப்புறுதீங்கனி" (கலி. நுo.)

பயிரவி — 1. பைரவி, உமை. (உ - ம்.) "தநம் பார். (ம-தி.எச.) 2. முடக்கொத்தான். (வைத்தியபரி.)

பயிரி—ஒரு கீரை. (வழக்.)

பயிருகம்—பழம்பாசி. (வைத்தியபரி.)

பயிருகம்—அழைக்கும். (சிந்தா.)

பயில் —1. சைகை, சூழ்உக்குறி. (வழக்.) 2. சொல். 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. பழக்கம். (பெரியபு. கண்ணப்பநா. கசகூ.)

பயில்வித்தல்—பழகுவித்தல். பிறவினைத் தொழிற்பெயர்.

பயில்வு—1. செய்கை. 2. பயிற்சி. (1, 2-வழக்.)

பயிலல் — 1. சொல்லுதல். 2. நடத்தல். 3. நிகழ்தல். 4. செருங்கல். (உ-ம்.) "மந்தியுமறியாமரண்பயிலடுக்கத்து" (திருமுரு. சஉ.) 5. பழகல். (1,2,3,5 உ-ம்.)"வந்துழிக்காண்க.)

பயிலியம்—குப்பைமேனி. (வைத்தியபரி.)

பயிலுதல்—1. செல்லுதல். (உ-ம்.) "பாயவாள்விழியருவிபரவசராயெதிர் பயில்வார்" (கோயிற்பு. பதஞ்சலி. ககக.) 2. செறிதல். (புறநா.) 3. சேவித்தல். (உ - ம்.) "ஆரிடமாம்பரிசநம்பயில" (கோயிற்பு. பதஞ்சலி. கo.) 4. பயிலல். (உ - ம்.) "சோலையிற்பயிலுங்குயிலையும்" (பாரத. இந்திரப். உo.) 5. வளைதல். (உ - ம்.) "உலகம்பயிலும்புகழ்போற்சிலம்பாமாமதியூர்கொண்டதே" (வாண. உகச.)

பயிற்கி—பழக்கம். (வழக்.)

பயிற்றல்—கற்பித்தல். (உ-ம்.) "யாக்கை-மூத்தவிஞருவன்வைகிமுனையவாள்பயிற்றி வாழ்வான்" (திருவிளை. அங்கம். உ.)

பயிற்றி— பலகாற்செய்தல். (ஐங்குறு.) பல காற்கூறி என்பர் புறநானூற்றில்.

பயிற்றுதல்-1. படிப்பித்தல். பயிற்றல்பார். 2. பழக்குதல். (பெரியபு. தடுத்தாட். கஅஎ.)

பயிறல் — 1. எடுத்தலோசை. (பிங்கல. உகoகூ.) 2. சொல்லுதல். 3. பயிலுதல். (2, 3-(உ-ம்.) வந்துழிக்காண்க.)

பயினி--1. பிசின். (உ-ம்.) "கப்பிணர்மரத்திற்காலும்பினதாய்" (திருவிளை. இந்திரன்பழி. கசு.) 2. சிதையப்புகுமரக்கலத்தைத்திருத்

தஞ்செய்யுங்கருவிகள்; அல்லது திருத்தஞ்செய் கைகள். (பரிபாடல்.)

பயிலார்—பயிலுதலுள்ளவர். (உ-ம்.) "பலசமயத்தின்கண்ணும்பயினர்செய்வணக்கமெல்லாம்" (காரோ. திருநாட். உள.)

பயினன்—சேடன். (உ-ம்.) "பயினன்மேல் வருகல்லென" (பாரத. சம்பவ. ககக.[போலி.] பையினன்-அழகியசூரியனுமாம்.

பயினி — இணக்கம். (சூ. நிக. அ: க.) 2. பயினிப்பூ. (பத்துப்பா. குறிஞ்சி.)

பயை—அதர்மத்தின்புத்திரர் மூவரிலொருவன். (வி-ணி. உருள.)

பயோகநம்—ஆலாங்கட்டி. (வைத்தியபரி.)

பயோட்டிணி — விருட்சபர்வதத்துதித்த இருநதிகளிலொன்று. (வி-ணி. உஉக.)

பயோதராப்பத்து — ஒரு பிரபந்தம்; அது: மூலையினைப்பத்துச் செய்யுளாற் கூறுவது. (இலக்கணவி. அருஉ. உரை.)

பயோதரம்—1. மூலை (உ-ம்.) "பயோதர வேசையர்" (அரிச்ச. நகர. கூ.) 2. மேகம். (சூ. நிக. க: கூக.)

பயோதிகம்—கடனுரை. (வைத்தியபரி.)

பயோவிரதம்—ஒருமாதமட்டும்வரை பசுக்கோட்டத்துறைந்து பால்மாத்திரமுண்டுசெய்யுமோர் விரதம். (வழக்.)

பரீக்கம்—1. ஒளி. 2. வீரியம்.

பரீக்கன்—1. சிவன். (உ-ம்.) "வணங்குமன்பர்க்குப்பிறவியாமூலவித்தைவறுத்தேயணங்குருவகைசெய்வதாற்பர்க்கராமொருபேரிணங்கிநின்றதக்கவர்க்கு" (சிவரக. காயத்திரி. கூ.) 2. சூரியன். (பிங்கல. உகo.)

பரீணசாலை — இலைகளாலும் புற்களாலும் வேயப்பட்டகுடிசை. (கோயிற்பு. வியாக். கச. உரை.)

பரீணி — 1. முருக்கமரம். (வைத்தியபரி.) 2. வல்லாரை. (தைல. தைலவ. சுசு.)

பரீத்தா—பத்தா. (சி.சி. அ: கூசு. சிவாக்கிர.)

பரீபணம்—பாவட்டை (தைல.தைலவ.கூக.)

பரீவஸ்வரி—பிரியவிரதன்குமாரரெழுவரிலொருவன். (த-நி. போ. கூகo.)

பரீவதாசலீ—மலையரசன். (கூர்மபு.திருக்கல். கக. உரை.)

பரீவதீரீக்கம்—மத்திமவிரணவெரான இறை. (த-நி. போ. கூஉசு.)

பரீவம் — பருவம். பக்குவத்திற்கும் பொழுதிற்கும் பெயர். (பிங்கல. கூஎகஉ.)

பரக்கழிவு—பழி, அபகீர்த்தி. (உ-ம்.) "பரக்கழிவிதுநீபூண்டாற்புகழைபயர் பரிக்கற்பாலார்" (இராமா. வாலிவதை. எக.) புரக்கழிவிதுநீ. என்றும்பாடம். புரக்கழிவு-அபகீர்த்தி.

பரக்தும்—பரவும். (புறநா.)

பரகதி — மோட்சம். (உ-ம்.) "பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்பரகதிகொடுத்தருள்செய்யும்"(திருவாச.அருட்பத். அ.) [பர-மேல்; கதி-அடைதற்குரியவிடம்.]

பரகாயப்பிரவேசம்—யோகசித்தர்கள்தங்கள் தேகத்தைவிட்டு அந்நியதேகத்திற்செல்லுதல். (சி. சி. அ: கூஉ. சிவாக்.)

பராகாயம்—பிறகாயம் (உ-ம்.) "பரகாயத்தினண்ணுதல்வான் – புலத்தினியங்கலிச் சித்தபோகமனைத்துந்தானிருக்குங்-தலத்தினினைந்தபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர்"(திருவிளை. அட்டமா. உருி)

பராகீயம்—பிறர்க்குரியது. (வள். நகக. பரி.)

பராகீயை—பிறர்க்குரியவள். (வழக்.)

பராங்கி—1. இலவங்கம். 2. கண்டுபராங்கி. (1, 2-வைத்தியபரி.)

பராங்துன்று—திருப்பராங்குன்று. (உ-ம்.) "திருமாவிருன்குடிவாணர்பராங்குன்று" (கந்தரந். க.)

பரஸ்பரவிரோதம்—ஒன்றற்கொன்று விரோதம். (சைவப்பி. சo.) பரற்பரவிரோதம் எனவும் வழங்கும்.

பரசம்பந்தம்—அறுவகையாகம சம்பந்தங்களுளொன்று; அஃது: அநந்தேசுரர்க்குஞ் சதாசிவர்க்குமுண்டான வாகமசம்பந்தம். (சி-லி. சரி. உ.)

பரசம்வித்து—அந்நியத்தையறிதல். (சி.சி. அ: கூச. ஞாநப்.)

பரசமயகோளரி—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். (உ-ம்.) "பார்குலவுதனிக்காளஞ்சிங்கமெல்லாம்பரசமயகோளரிவந்தாணென்றூத" (பெரியபு. ஞாந. கூoச.)

பரசமயம்—பிறசமயம். (உ-ம்.) "அல்லாதபரசமயவலகைத்தேர்விண்டகல" (சேதுபு. கடவுள்வா. ககூ.)

பரசரீரம்—ஆன்மாக்களின்மூவகைச்சரீரங்களுளொன்று; அஃது: அநந்தேவராற் கலக்குண்ட பாகமாகிய காரணசரீரமும் கலாதிகளாகிய கஞ்சுகசரீரமும் மூக்குணங்களாகிய குணசரீரமும் என மூவகைப்படும். (சி. சி. ச: உக. சிவாக்.)

பராசதி—அந்நியசாதி. தருக்கசங்கிரகத்திலறிக.

பரசாரணம்-நீட்டுதல்.(சி.சி.உ:நுசு.சிவாக்.)

பரசிராமன்—மழுவுடையிராமன்; இவன்: சமதக்கினியும் இரேணுகையும் தந்தைதாயாகத் திருமாலவதாரம். (காஞ்சிப்பு. இரேணுகே. உ.)

பரசிவதத்துவம்–பரஞாதம். (சி. சி. உ: எச. ஞாநப்.)

பரசிவம் — *சத்தியொடுங்கிறதற்கிடமாய் நின்றதத்துவம்; இது: தத்துவமெலாங்கடந்த முடிவிலேநின்றது.* (உ-ம்.) "ஒடுங்குநாளினில யனரியுருத்திரன்மகேசன் – நெடுஞ்சதாசிவன் விந்துநாதஞ்சத்திநெறியே-யடங்கிடம்பரசிவத் தினிற்பரசிவமேனத்துங்- கடந்ததத்துவமுடிவி லேநின்றதுகருதி" (அருணசலபு.திருமலே.நி.)

பரசிவமூர்த்தி–சதாசிவம். (சி-லி. ஞாந. கூ.)

பரசு—1. கோடாலி, மழுப்படை. (சூ. நிக. எ: உ.) 2. தெரிநிலேவினேப்பகுதி.

பரசுகம்—மோட்சாநுபவம். (வழக்.)

பரசுதல்—துதித்தல். (உ-ம்.) "சண்டேசன் மூள்பிரசமலரிறைத்திறைஞ்சிப்பரசு வா மே" (சேதுபு. கடவுள்வா. கஉ.)

பரசுபாணி — 1. சிவன். (சூ. நிக. எ: எ.) 2. பரசுராமன். பரசு-மழு.

பரசுராமன்– திருமாலவதாரத்திலொன்று. (பரசிராமன்பார்.)

பரசுவம்—பிறர்பொருள். (வழக்.)

பரசோப்பநம்–(வேதாந்தம்) சர்வசிருட்டி, சர்வதிதி, சர்வசங்காரம்என்னு மூன்று உபாதியுடன்சம்பந்தித்த காலபரம். (ஞாநக்கட்டளே. தற்பதமநநம்.)

பரசோதபம்—பரசாக்கிரம், பரசொப்பநம், பரசுழுத்தியென்னு மூன்றவத்தையுங் கண்டு கழன்று மேலாய்நின்று விளங்கிய சுத்தஅறிவு. (ஞாநக்கட்டளே. தற்பதமநநம்.)

பரசோமசித்தாந்திகள் — வித்தியாபுவநப் பேற்றினேயே முத்தியென்பவர். (கூர்ம. பல வகை. கஙு. உரை.)

பராஞ்சுடர்—சுயம்பிரகாசக்கடவுள். (உ-ம்.) "பரஞ்சுடர்முக்கட்பரமன்"என்னு முதற்குநிப் புக்கவி. (திருக்கருவைக்கவித்துறையந்தாதி.)

பராஞ்சை—காளமுதலியவற்றின்தொனி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பராஞ்சோத்—1. கடவுள். 2. சிவன்.(உ-ம்.) 'பவமாயங்காத்தென்னேயாண்டுகொண்டபரஞ் சோதி' [பரம்-மேலான, சோதி-ஒளி.]

பராஞ்சோதிமகாழநிவர்— சத்தியஞாநதரிசிகள் மாணாக்கர். (கோயிற்பு. சந்தாநகுரவர் வரலாறு.)

பராஞாநம் — பதிஞாநம். (சி. சி. கஉ: எ. நிரம்ப.) இதுவே மெய்ஞ்ஞாநமென்பது.

பராடு—கரடு. (பிங்கல. கூகூஅ. அது, காலி லுள்ளது.)

பரண்—1. இதணம். (பிங்கல. எகஙு.) 2. மேற்றட்டு. (வழக்.)

பரணம்—பரண். (அம்-சாரியை.)

பரணர்–ஒரு சங்கப்புலவர். (பதிற்றுப்பத்து. ஞ்o.)

பரணி — 1. அடுப்பு. (உ-ம்.) "தரணிசசிவேள்வித்தீசாற்றும்பரணிகளிலிட்ட வெடாமுன்" (தைல. பாயிர. உஞ்.) 2. ஒருநாள். (உ-ம்.) " பூராடமுத்திராடம்பூசஙீள்பரணி " (விதாந. குணகுண. எ.) 3. ஒரு பிரபந்தம்; அஃது: ஆயிரங்களிற்றைக்கொன்றவீரனேத் தலேமகனாகக்கொண்டு கடவுள்வாழ்த்துங்கடை திறப்பும் பாலேநிலமுங் காளிகோவிலும் பேய்களோடு காளியும் காளியோடுபேய்களுஞ் சொல்லக்கருதியதலேவன் சீர்த்திவிளங்கலும் அவன் வழியாகப் புறப்பொருடோன்ற வெம்போர் வழங்கவிரும்பலு மென்றிவையெல்லா மிருசீ ரடியொழித்தொழிந்த மற்றையடிகளானீரடிப் பஃறுழிசையாற்பாடப்படுவது.(உ-ம்.)"கடவுள் வாழ்த்துக்கடைதிறப்புரைத்தல்..... வுளமகிழ்பரணியுரைக்கப்படுமே" (இலக்கண வி. அஙகூ.) 4. கோய், ஒருபாத்திரம். (சூ. நிக. எ: ஙகூ.) 5. முருக்கமரம். (வைத்தியபரி.)

பரணை–தண்ணீர்விட்டான்கிழங்கு.(உ-ம்.) "அழுக்கிரி"பார். (தைல. (தைலவ. சஉ.)

பரத்தநத்து—பரக்க. (பரிபா.)

பரத்தநமை–பரத்தையைநுகர்பவன்றன்மை. (மணிமே.)

பரத்தர்—தூர்த்தர். (உ-ம்.) "வறுமொழியாளரொடுவம்பப்பரத்தரொடு" (சிலப். கொலைக்கள. சுஙு.)

பரத்தல்–1. சப்பையாதல். (உ-ம்.) "பரியவு தடன்பரியபல்லன்பரந்து – முருவழிந்தமூக்குடையானும்" (சைவச. ஆசாரிய. கஉ.) 2. பரவுதல். (உ-ம்.) "தண்ணீர்பரக்கவிட்டு" (தைல. பாயிர. ஙக.)

பரத்தன்–பரத்தையைநுகர்பவன்.(சிலப்பதி)

பரத்தி—1. நெய்தனிலப்பெண். (சூ. நிக. உ: எஉ.) 2. தெரிநிலேவினேப்பகுதி.

பரத்தியர்—நெய்தனிலத்துப்பெண்டிர். (உ-ம்.) "நூளேயர்நூளேச்சியர்பரதர்பரத்தியரள வரளத்தியர்" (அகப்பொ. அகத்திணே. உச.)

பரத்திரி—வேற்றுப்பெண். (வழக்.)

பரத்துவம்—1. கடவுட்டன்மை. 2. முன்மை. (தருக்கசங்கிரகத்தில்நிக.)

பரத்துவன்—பரத்துவாசன். (உ-ம்.) "பரத்துவனுறைவிடத்தளவும்" (இராமா. மீட்சி. உசுச.)

பரத்துவாசன்—1. சத்தவிருடிகளிலொருவன். (உ-ம்.) "பரதநாதவேதகீதபரத்துவாசனென்பான்" (பாரத. வாரணு. ஙஉ.)

பரத்தை — 1. ஒரு செடி. (வைத்தியபரி.) 2. வேசி. (சூ. நிக. க: சுசை)

பரத்தையிற்பிரிவு — தலைமகன் பரத்தையிடத்துப்பிரிதல்; அது: வாயில்வேண்டல் வாயின் மறுத்தல், வாயினேர்விக்தல், வாயினேர்தல் என நான்கு வகைப்படும். (அகப்பொ. கற்பியல். நி. உரை.)

பரதகண்டம்—நவகண்டத்தொன்று. (மணிமே. பதிக. உஉ.)

பரதகன்—சதருத்திரரி லக்கிநிதிக்கிலிருக்குக் தசருத்திரரிலொருவர். (வி-ணி.)

பரதசாத்திரம்—நடநூல். (வழக்.)

பரதத்துவப்பொருள்—பரதத்துவமாயுள்ள பொருள். (உ-ம்.) "அத்தனேபரதத்துவப்பொருளென்று. (திருவிளை. விடையி. கூ.)

பரதத்துவம் — அதிருக்குமத்துவம்; அது: "தத்துவந்தூலருக்கபாங்களுமாகிநிற்கும்" என்பதனுற் பெறப்படும். (சி. சி. உ: எக.)

பரதத்துவன் — தததுவங்களைக்கடந்த சிவபிரான். (உ-ம்.) "அத்தன்பரதத்துவன்" (கோயிற்பு. வியாக்கி. உகூ.)

பரதந்திரம்— சுதந்திரமின்மை, மற்றொரு வரைச்சார்ந்திருப்பது. (சி. சி. க: ஙகூ சிவஞா)

பரதந்திரியம்—பரதந்திரம். (சி. சி. பாயிர. நி. ஞாநப்.)

பரதநூல்—பரதசாத்திரம். (உ-ம்.)"தென்ன ரேறனையாயதுபசததுறெரிந் திலெ யெனச் சொன்னனன்" (திருவிளை. கான்மா. நி.)

பரதம்—1. இலட்சங்கோடி கோடாகோடி. 2. கூத்து. (உ-ம்.) "பணித்தல்"பார். 3. நவகண்டத்தொன்று. (உ-ம்.) "பாடல்சால்சிறப்பிற்பரதத்தோங்கிய" (மணிமே. பதிக. உஉ.) 4. பரதநூல். (உ-ம்.) "பாவமோடராகந்தாளமிம்மூன்றும்பகர்ந்திடுமுறையாற்பரதம்" (திருவிளை. கான்மாறி. அ.)

பரதர் — 1. நெய்தனிலமாக்கள். (உ-ம்.) "குணுங்கர்"பார். 2. செட்டிகள். (மதுரைக்காஞ்சி. ஙகஎ.) 3. வைசியர். (உ-ம்.) "அரசகுமரரும்பரதகுமரரும்" (சிலப். இந்திரவிழ. கடுஅ.)

பரதவர்—நெய்தனிலத்துச்சாழ்ந்த ஆடவர். (உ-ம்.) "பரதவர்நெய்தலே" (அரிச்ச. நாட்டி. நி.அ.) பட்டினவர் என்பர் சிலப்பதிகாரத்தில்.

பரதவநடம்—பாரதவருடம், பரதகண்டம். (திருவிளை. மேருவைச். உ0.)

பரதவனீ—துழையன். (பதிற்றுப்பத்.)

பரதவித்தல்—பரிதபித்தல். (உ-ம்.)"பாலன்வந்திலனென்றேங்கிப்பரதவித் திருகண்டாரை-காலநொந்துருகி" (அரிச்ச. மயாந. கூ.)

பரதன்—1. இராமன்றம்பி. (உ-ம்.) "பரதனெனப்பெயர்பன்னினனன்றே"; (இராமா. திருவவ. கஉக.) 2. சந்திரகுலத்தோரரசன். (உ-ம்.)"பரதனென்றொருபார்த்திவன்"(பாரத. குருகுல. உசு.) 3. நடநம்பயின்றோன்.(வழக்.)

பரதன்மம்—1. அந்நியாசாரம். 2. பரோபகாரம் (1, 2-வழக்.)

பரதாபம்—பரிதாபம். (வழக்.)

பரதாரம்—பிறர்மனை. (உ-ம்.) "ஆசில்பரதாரம்" (இராமா. .)

பரதி—நாடகி. (வழக்.)

பரதுக்கதுக்கன்—பிறவுயிருக்குநேருந்துன்பத்தைத் தனக்குநேர்ந்ததுபோற் கொண்டிரங்குகிறவன். (உ-ம்.) "பழுதிலாவருளிலூலே பரத்துக்கதுக்கனுகி" (சி. சி. பர. சனத்திராந். உ.)

பரதேகம்—சூக்குமசரீரத்துக்குள்ளிருக்கும் ஒரு வடிவாகிய சிவத்துவபஞ்சகரூபம். (சி. சி. சு: கo. ஞாநப்.)

பரதேசம்—பிறதேயம், அந்நியதேசம். (பிரபுலிங்கலீலை. பிரபுதே. ககூ.)

பரதேசி—1. ஓரிடத்துநிலையில்லாமற் சஞ்சரிப்பவன். 2. கலைகணில்லாதவர். (உ-ம்.) "இவர்பரதேசிகாவலரென்றடிவீழ்ந் தேத்தி" (திருவிளை. அங்கம்வெட். உஎ.) 3. பிறதேசத்தான்.

பரதேவதை—அந்தரியாமியாகிய கடவுள். (த. நி. பே. ககo.)

பரதோவர்—வேறொன்றுகொண்டுவருமோ. (சி. சி. அள. க. சிவாக்.)

பரந்தவட்டம் — பரந்தவட்டிகை, சேமக்கலம். (வழக்.)

பரந்தாமம்—வைகுந்தம். பரந்தாமன்பார்.

பரந்தாமன்—திருமால். (உ-ம்.) "பாங்குடனேதனக்குயிராந்தளபமெளலிப்பரந்தாமன்றனைநினைந்தான்பார்த்தனுக" (பாரத. அருச். நீர். நிஉ.)

பரந்து—மிக்கு. (பரிபாடல்.)

பரந்துகெடுதல்—எங்குஞ்சுழன்றுகெடுதல். (உ-ம்.) "இரந்துமுயிர்வாழ்தல்வேண்டிற்பரந்து-கெடுகவுலகிற்றியான்" (வள். கoசூஉ.)

பரநாதம் — 1. அநாதிக்கிராந்தவித்துபரசிவம். (கந். நவ. சுநி.) 2. நிட்களமான ஒரு தத்துவம்; இது: சிவதத்துவத்திலடங்கும். (சி. பி. கை.)

பரநாமத்திலை — மாவிலிங்கிலை. (தைல. தைலவ. நிஎ.)

பரப்பல் — 1. பரம்பச்செய்தல். 2. பரவுதல். (1, 2-வழக்.)

பரப்பாழ் — பரமாகிய சூனியப்பொருள். (உ-ம்.) "மூப்பாமூம்பாழாய்முடிவிலொருசூனியமாய்" (பழங்கவி.)

பரப்பிரணவம்—வாச்சியமான சத்தியஞானாதியிலட்சணம். (த. நி. போ. உகஎ.)

பரப்பிரமசந்நிதி — சிவசந்நிதி. (உ-ம்.) "பார்முழுதும்பரப்பிரம–சந்நிதி" (கோயிற்பு. வியாக்கி. நி.)

பரப்பிரமம்—1. அதர்வணவேத உபநிடதமூப்பத்தொன்றனுளொன்று. (கந். நவ. கஅ.) 2. கடவுள். 3. சிதம்பரம். (உ-ம்.) "சித்தம்பரமூத்திப்பரப்பிரமம்" (கோயிற்பு. வியாக். உகூ.) [மகாமாயைக்குமேலாதலில்.] 4. சுத்தப்பிரமந்தன்னிடத்திலுள்ளதாகிய சத்தி விசரும்பித்துத்தன்னேவியாபிக்க அவ்வியாபகத்துக்குள்ளிருந்தபோதுபெறும் பெயர். (நாநாசீவவாதக்கட்டளை. முதலாவது.) 5. தற்பதவிலக்கியார்த்தமான பிரமத்தின் சட்டவித பரியாயநாமங்களுளொன்று. (உ-ம்.) "ஈசனெனுன்றிடுமூவகையதிட்டாநனியம்பருமொருபரப்பிரமம்"(வேதாசூ. நிகூ.)

பரப்பிரமவிந்து–வாலரசம்.(வைத்தியபரி.)

பரப்பு — 1. கடல். (உ-ம்.) "சேதுக்கதைவடசொற்பரப்பை" (சேதுபு. அவையட. ச.) 2. திரள். (உ-ம்.) "பின்தாழ்படர்சடைப்பரப்பும்" (கோயிற்பு.நடராச. கஙூ.) 3. பூமி.(உ-ம்.) "பரப்பினடிப்படுவதொரு-மேருவியும்" (கோயிற்பு. வியாக்கி. சு.) 4. விசாலம். (உ-ம்.) "பழுத"பார்.

பரப்புதல் — 1. பரம்பச்செய்தல். (உ-ம்.) "எங்கும்பாயிருள்பரப்பும்" (நைடத. சுயம்வர. கூ.) 2. பரவுதல்.

பரபக்கம்—பிறர்மதம்.(சி.சி.காப்பு.மறை.)

பரபத்தி—சிவபத்தி. (வழக்.)

பரபதம் — 1. மேலாகியபொருள். (உ-ம்.) "தற்பரம்"பார். 2. மேர்ட்சம். (உ-ம்.)"மழுவாற்றுண்டித்திகழ்தவனேப்பரபதத்துளிருத்தித் தானும்" (சேதுபு. கடவுள்வா. கஉ.)

பரபரத்தல்–1. தினவு. (வழக்.) 2. தீவிரப்படல். (உ-ம்.) "பஞ்சாக்ஷரத்தைப் - பரபரப்பா வெண்ணுதபாவம்" (அருணகிரியந்தாதி.)

பரபரப்பு—பரபரத்தல். (வழக்.)

பரபரோனல்—சீக்கிரக்குறிப்பு. (வழக்.)

பரபாகம்—பிறர்சமைத்தது. (வழக்.)

பரபாவனைபுரிதல்– பிரமகிட்டைகூடுதல். (கூர்மபு. வருணச். உ0. உரை.)

பரப்பூட்டம்—குயில். (சூ. நிக. கூ: நிசூ.)

பரபுருடார்த்தம் — முத்தி. (மகாவாக்கியவுரை. பாயிர. க.)

பரபோகம் — 1. சிவபோகம், பேரின்பம். (உ-ம்.)"பரபோகம்பெறலாமெனப்பகர்ந்தான்" (கோயிற்பு. வியாக். ச.) 2. சுத்தமாயா காரியமாகிய சுத்ததத்துவபுவநங்களில் வித்தியேசுரர் முதலாயினோர் புசித்திருக்கும்போகம். (உ-ம்.) "பவமாய்க்கடலிலழுந்தாதவகையெடுத்துப்பரபோகந்தய்ப்பித்து" (சி. சி. அ: உசூ. மறை.)

பரம்–1. அத்திமரம். 2. உடல். 3. கடவுள். (உ-ம்.)"பந்தமறவந்தமில்பரங்குஞவென்றே" (திருவாத. திருப்பெரு. உச.) 4. கவசம். 5. குதிரைக்கல்லணை. 6. சிதம்பரம். (உ-ம்.) "சுத்தம்"பார். [எல்லாப்பொருட்கு மேலாதலில்.] 7. சுத்தசிவன். (உ-ம்.) "பரம்பிரமமிவனென்றும்" (சி. சி. கூ: எ. ஞாநப்.) 8. நிட்களம். (சி. சி. க: நிநி. மறை.) 9. பரசம்பந்தம்.(சி-லி. சரி. உ.) 10. பரமாநந்தவெல்லைக்குக் கீழ்ப்பட்டதோரியல்பு. (தத்துவப். பதி. ச. உரை.) 11. பாரம். 12. பிரமாயுட்காலம்; அது: பிரம ருடம்நூறுகொண்டது. (உ-ம்.) "பரார்த்தம்" பார். 13. பிரயோசநம். (உ-ம்.) "சைவத்-தாநம் பலவுந்தொழுந்தற்பரமாகிவந்தேம்'(திருவிளை. கல்லாணை. அ.) 14. மறுமை. (சௌந். கூ.) 15. முன்பு. 16. மேலானது, சிரேட்டமானது. 17. மோக்கம். (2,4,5,11,15-பிங்கல. கஎஅஎ.)

பரம்பரம்—வமிச பாரம்பரை. (வழக்.)

பரம்பரன்—கடவுள், சிவன். (உ-ம்.) "அடியேற்கெம்பரம்பரனே" (திருவாச. திருச்சத. நி.) [மேலோர்க்கும்மேலோன் என்றபடி.]

பரம்பராகரணம்–ஒருகாரியம் பிறத்தற்குக் காரணமாயிருக்குமொன்றைப் பிறப்பிக்கக்காரணமாய் முன்னிற்குங்காரணம். (சி. சி. நி: க. சிவாக்.)

பரம்பராசாதநம் — உடனுபயோகமாகாத கருவி. (வாசுதேவ. கo அ.) [பசித்தவர்களுடைய பசியைப்போக்கித்திருத்தியாக்குவதற்கு உழவுமுதலியபயிர்களிவ்வகைச்சாதநமாம்.]

பரம்பராதீனத்துவம்— ஒன்றையொன்று சார்ந்துவருந்தன்மை.(சி. சி. அள. கஙூ. சிவாக்.)

பரம்பரை — ஒன்றின்பிறிதொன்றுகத் தொடர்ந்துவருதல். (உ-ம்.) "ஈண்மாவின்பரம்பரையுநிவந்தோங்குந்திதிய தனி னிகழ்த்திடானேல்" (சேதுபு. தராசார. கூஎ.)

பரம்பிரமம்–சொரூபசிவம். (சி. சி. கஉ: எ. (சிவஞா.)

பரம்பு—1. கழனிதிருத்தும்பலகை (உ-ம்.) "எங்கணும்பரப்படிப்பவர்பற்பல கோடியே" (அரிச்ச. நாட்டு. கஙூ.) 2. தெரிநிலவிஞைப் பகுதி. 3. விசாலம். (வழக்.)

பரம்புதல்—விசாலித்தல். (வழக்.)

பரம்பொருள்— மேலானவஸ்து. (உ - ம்.) "எங்குமாம்பரம்பொருளேயாமும் வணங்குதுமே" (மகாவாக்கியம். பாயிரம். க.)

பரமகஞ்சபரிவிராசகம்-அதர்வவேதஉபநிடதமுப்பத்தொன்றனுளொன்று.(கந்.நவ.கஅ.)

பரமகஞ்சம் — 1. நால்வகைச்சந்நியாசங்களுள்மேலாயது; அது: நிட்டைபுரியும்பக்குவர்க்குடையது.(உ-ம்.)"குலவுறுசந்நியாசங்குடிசகம் பகூதகஞ்ச, நலமிகுபரமகஞ்சமேயென்றைநான்கதாம்" (சூத. ஞாந. சு: உ.) 2. யசுர்வேத உபநிடதமைம்பத்தொன்றனுளொன்று. (கந். நவ. கஅ.)

பரமகஞ்சரீ—சந்நியாசஆச்சிரமத்தார் அறுவகையருளொருவர். (கூர்மபு. வருணச். சஅ. உரை.) [நாரதபரிவிராசகோபநிடதப்படி சந்நியாசம் அறுவகையாகக்கொள்ளப்படும்]

பரமகதி—மோக்கம். (வழக்.)

பரமகாருத்தா-சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ சர்வாநுக்கிரகமாகிய மூன்றுகுணங்களேயொருவராற்றருதலின்றித் தனக்கியல்பாகவுடையவன். (சி. சி. அ: கள. மறை.)

பரமகருத்தன்—பரமகர்த்தா. (வழக்.)

பரமகாட்டை—பதினேந்துநிமிடமாகிய காட்டையென்னுங் காலவளவையினுஞ் சிறியது. (உ-ம்.) "அணிமா"பார்.

பரமகாரணம் — முதற்காரணம். (உ-ம்.) "ஈண்டுக்கூறியமுறற்காரணமேயாம்; அது: பரமகாரணம், உபாதானகாரணம், சமவாயிகாரணம்எனவும் பெயர்பெறும். (கூர்மபு திருக்கல். அ. உரை.)

பரமகாரியம் — 1. தேவகாரியம். 2. மகாகாரியம். (1, 2-வழக்.)

பரமசாந்நித்யலிங்கம்— சிவஞ்சாந்நித்தியமாகும் லிங்கம். (உ-ம்.) "படியினிற்புண்ணியதீர்த்தம்பரமசாந்நித்தியலிங்கம்" (சிவரக. வரலா. ருஉ.)

பரமசித்தி—முத்தி. (வழக்.)

பரமசைவம்—துவாதசாந்தத்துக்கப்பால் தத்துவங்களைக் கடந்திருப்பவர். (சி-லி. கிரி. கூ.)

பரமசிவன்—இலயபோக வதிகாரமென்னு மூன்றவத்தையினும் முறையே அருவம், அருவுருவம், உருவம் என்னு மூன்று திருமேனி கொண்டு சத்தன், உத்தியுத்தன், பிரகிருத்தன் எனவும் சிவன், சதாசிவன், மகேசன் எனவும் பெயர்பெற்று நிற்பவர்; இவர்: சுத்தமாயாபுவநாந்தஞ்சஞ்சரிப்பர். இவர்க்கு மகேசுரமூர்த்தியிறவாயுள்ளதிருமேனிசுதந்தரவடிவம் இவர் சுத்தமாயையின் ஏதேசத்தைக்கலக்கிச் சுத்ததத்துவங்களைத்தோற்றுவிப்பர். (சிவஞாந பா. உ0.)

பரமசுந்தரி–தருமதேவதை. (சூ.நிக.க: ஙக.)

பரமஞானம்—ஒருசிவநாமம். (உ-ம்.) "பெயரெமக்குப்-பரபதம்பரமஞானம்பராற்பரம்" (கோயிற்பு. பதஞ்சலி. சுசு.)

பரமண்டலம்—மோட்சதானம். (கிறிஸ்த்தவர் வழக்கு.)

பரமததிராகரணம் — இராமநாதாசாரியர் செய்த ஒருநூல். (சி. சி. பாயிர. க. மறை.)

பரமப்பிரயோசநம்— } மோட்சம்.(சி. சி.
பரமபதம்— } பாயிர.க.சிவாக்.)

பரமபந்தம்–பெரியபந்தம். (உ-ம்.)"எனவே இவ்வாக்குக்கள்ப்ரமபந்தமென்பதாயிற்று" (சி. சி. க: உசு. சிவஞா.)

பரமபாகவதன்—வைட்டிணவ சந்நியாசி. (வழச்.)

பரமபிரகிருதி–(வேதாந்தம்) பிரமம். (சி.சி. உ: எஙூ. மறை.) பிரகிருதி-ஈண்டு இயல்பு.

பரமபுருடன்—ஈசுவரன். (த. நி. போ. ஙஙூ.)

பரமம் — 1. ஆத்மா. (உ-ம்.) "அகிலசத்தியுடைத்தாயநந்தமானபரமம்" (ஞாநவா. மநத்தின். கூ.) 2. பரப்பிரம்ம. 3. மகாமேன்மை. 4. மிகமேலாகியது. (உ - ம்.) "தீர்த்தங்களெவைக்குமேலாய்- மன்னலாற்பரமதீர்த்தமெனப் பெயர்வழங்கலாகும்" (திருவிளை. தீர்த்த. கக.) 5. அத்திமரம். (வைத்தியபரி.)

பரமபதற்காரணம்—அசுத்தமாயை.(சி.சி. உ: ருஐ. சிவஞா.)

பரமரகசியம்—1. அந்தரங்கவுண்மை. 2. ஒரு நூல். (1, 2-வழக்.)

பரமலோகம்—சிவலோகம். (வழக்.)

பரமவங்கிசகம் — ஒருவகைச் சந்நியாசம். (சி. சி. அ: கக. மறை.)

பரமவிராசன்— ஏகாதிபதி. (வழக்.)

பரமன்—1. அந்தரியாமி. (த.நி.போ.கஙஐ.) 2. சிவன். (உ - ம்.) "பரமனேமதித்திடாப்பங்கயாசனன்" (கந்தபு. கடவுள்வா. கூ.) 3. சீர்பந்தபாடாணம். (வைத்தியபரி.)

பரமாகாயம்—துவாதசாந்தப் பெருவெளி. (திருவிளை. வேதத்துக்குப். ஙக.)

பரமாங்கிசம் — உபநிடதமுப்பத்திரண்டிலொன்று. (வழக்.)

பரமாணு—அதிசூக்குமவணு (உ - ம்.) "மூன்றுபரமாணுவத்தனையதிற்புனைகுவாரமலனுவார்" (சேதபு. பிரமசுண்ட. ஙஎ.)

பரமாத்துமர்– காலத்தத்துவத்திருக்குமோருருத்திரர். (வி-ணி. உஎச.)

பரமாத்துமா—1. ஈசுவரன். (த. நி. போ. ஙஙூ.) 2. சுழுத்திக்குச்சாட்சியாயிருக்கும் பிரமசைதந்நியம். (நாநாசீவவாதக்கட்டளை.)

பரமாத்மன்—பிரமம். (த. நி. போ. ககக.)

பரமாநந்தம்—பாயசம். (வி-ணி. வழக்.)

பரமாநந்தகூபம் — சிதம்பர தசதீர்த்தத் தொன்று; இது: கநகசபைக்குக்கிழக்கே யுள்ளது. (கோயிற்பு..)

பரமாநந்தம் — சிவபோகம், பேரின்பம். (உ-ம்.) "அற்புத-வெள்ளமும்பரமாநந்தவெள்ளமும்" (திருவிளை. விடையில. உஅ.)

பரமாநந்தவாழ்வு—சிவம். (உ-ம்.) "மாநாதிகளுக்கெட்டாதபரமாநந்தவாழ்வினையங் கோரிலிங்கமணலாற்கூப்பி"(சேதுபு.கடவுள்வா.கஉ)

பரமாநந்தன்—1. ஆநந்தரூபசத்தியுடனே சர்வாநந்தசுழுத்தியையடையும் பிரமம். (நாநாசீவவாதக்கட்டளை.) 2. சிவன்.

பரமாநம்—பரமாந்நம். (வழக்.)

பரமாநுபவம் — மேலானவநுபவம்; அது: அசிபதசோதகநயென்க.

பரமார்த்தம் — 1. சிரேட்டமானகருத்து. 2. செல்வத்திற்சிரேட்டமானது.

பரமார்த்தவித்து — உண்மையறிந்தவன். (சி. சி. ச: கூடு. சிவாக்.)

பரமார்த்தன்—சதருத்திரரில் இந்திரதிக்கிலிருக்குந் தசருத்திரரிலொருவன். (வி-ணி. உசுக.)

பரமார்த்திகம் — 1. உண்மை. (சி. சி. உ: சுடு.சிவாக்.)2.பரமார்த்தமுடையது.(சைவவி.)

பரமான்மா-இதரபதார்த்தவச்சிந்நவான்மா. (தருக்கசங்கிரகத்திலறிக.

பரமகவுப்பு—கறியுப்பு. (வைத்தியபரி.)

பரமத்தர்—தநுவாதிகளைநீக்கி நேயத்தழுந்தினோர். (ஒழிவி. அருளவ. கள. உரை.)

பரமத்தி—சாயுச்சியமுத்தி. (சி. சி. க: உசு. சிவஞா.)

பரமேச்சுரன்—பரமேச்சுவரன். (வழக்.)

பரமேச்சுரி—பரமேசுவரி, பார்வதி. (வழக்.)

பரமேச்சுவரன்—1. நியதிதத்துவத்திருக்குமோருருத்திரன்.(வி-ணி.உஎச) 2. பரமேசன்.

பரமேச்சுவரி—1. ஒரு யோகினி. (வி-ணி. உசக.) 2. பரமேச்சுவரி.

பரமேசன்—பரமேசுவரன். (வழக்.)

பரமேசுவரன்—சிவன்.சுச்சுரநாமஞ்சிவனுக்கென்பதைப் பிங்கலநிகண்டு கூசு-ல் காண்க.

பரமேசுவரி—பார்வதி. (சி. சி. உ: உடு. நிரம்ப.)

பரமேட்டி—1. அருகன். (சூ. நிக. க: உ.) 2. சிவன். (உ-ம்.)"பண்ணியனுன்மறைவிரித்தபரமேட்டி" (திருவிளை. மெய்க். அ.) மேலான இடத்திருப்பவன்என்பதுபொருள். 3. பிரமன். (பிங்கல. நடுசு.)

பரமோபதாநம்—மேலானமுதற்காரணம். (சி. சி. க: நுள. சிவாக்.) [பரம-உபதாநம்.]

பரர்—1. அன்னியர். (வழக்.) 2. பகைவர். (சூ. நிக. உ: நுசு.)

பரல்–1. பருக்கைக்கல். (உ-ம்.) "கைத்தலம் புடைத்துநக்குக்கல்லும்வெம்பரலும்வாரி"(திருவிளை. பன்றி. மூலை. சு.) சுக்கான்கல்லென்பர் (பத்துப்-பொருநரா.

பரலோகம்–1. மறுலோகம். (சி.சி.ஞாநப்.) 2. மோக்ஷம். (உ-ம்.) "பரனேயேத்தவல்லார்களே சிவலோகமேபதியாவரே" (சிவரக. தேவியுடன் கடு.)

பரவசம்—1. தன்வசமாயிருத்தல். (உ-ம்.) "ஆநந்தபரவசனுய்-வாழ்ந்து" (கோயிற்பு.பதஞ்சலி. நடு.) 2. மூர்ச்சை. (வழக்.)

பரவசவிலக்கு—ஓரணி; அது: தன்வசமல்லாமற் காதலியவசமாநிற்றல் கூறிவிலக்குவது. (தண்டிய. பொருளணி. சாரூ. உரை.)

பரவணி—வமிசம். இஃதோர் வழக்குண்டு போலும்.

பரவணிகாரன் – தலைமுறைதலைமுறையாயிரித்துக்காரன். (வழக்குண்டுபோலும்)

பரவணிப்பட்டம்—தலைமுறைப்பட்ட வரிசைப்பெயர்.

பரவர்—வேளாளர். (வழக்.)

பரவல்—1. சொல்லுதல்.(பிங்கல. உ00உ.) 2. பரவுதல். (சூ. நிக. நடு: சுo.) 3. பல்லாண்டு கூறல். (பரிபாடல்.) 4. புகழ்தல். (உ-ம்.) "பரவலருங்கொடைக்குகின்றன் பணிக்குடைக்கும்" (இராமா. சடாயுகாண். உசு.)

பரவாகீசுவரர்—ஒரு சிவபேதம். (சி. சி. உ: எச. ஞாநப்.)

பரவாகீசுவரி—ஒருசத்திபேதம். (சி. சி. உ: எச. ஞாநப்.)

பரவாசுதேவன் — ஆதிவிட்டுணு. (த. நி. போ. கசச.)

பரவாதி–புறச்சமயி. (உ-ம்.) "பறந்துபுக்குப் பரவாதிகடென்னும்படிநாசஞ்செய்து" (திருஞாற்.நடுக.)

பரவாமை—சொல்லுடியாமை. (உ-ம்.) "தாவநிரும்படிபாசுரோச்சாபங்கள்பலவிட்டார்" (கோயிற்பு. பதஞ்சலி. உசு.)

பரவித்தை — உபநிடதவித்தை. (உ-ம்.) "அபரவித்தை"பார்.

பரவிந்து—உன்மநாகலாதிகாரியப்பிரபஞ்சமொரு பிரதேசத்து உண்டாயொடுங்கின மகாமாயையினதோரிடம். (சி. சி. உ: எச. ஞாநப்.)

பரவிப்பார்த்தல் — புடைபடவொற்றியாராய்தல். (சி. சி. உ: ககூ. சிவஞாந.)

பரவு—பரவல், வணங்கல். (உ - தொழிற் பெயர் விகுதி.

பரவுக்கடன்—நேர்கடன்; அது: தெய்வத்தை வழிபட்டுக்கொடுக்கும்பலி. (வழக்.)

பரவுடம்பு—புரியட்டகதேகத்துள் அதிசூக்குமவுருவாய்நிற்குங்கலையாதிமண்ணந்தமாயுள்ள உடம்பு. (சி. சி. ச: க0 சிவஞா.)

பரவுதல்—1. சொல்லுதல். (உ-ம்.) "பரவருமணிகள்விளங்கிய" (திருவாத. திருப்பெரு. கூ.) 2. துதித்தல். (உ - ம்.) "கைதொழுதிரந்துவேண்டிப்பரவிமீண்டு" (திருவிளை. மெய்க்கா. உக.) 3. விலாசமாயிருத்தல். (உ - ம்.) "சிற்பரவுஞ்சாக்கிரத்தில்" (உபதி. கக.)

பரவுதும்—வேண்டுதும். (பரிபாடல்.)

பரவெளி—பரமாகாயம். (காஞ்சிப்பு. சனற்குமார. உகூ.) மகாசூன்யமென்றுங்கூறுவர்.

பரவையழது—உப்பு. (வைத்தியபரி.)

பரவை—1. இலக்குமிகூத்து. 2. உப்பு. 3. கடல். (உ-ம்.) "உம்பர்நாயகன்-பரவையிற்செறித்தென" (பாரத. வாரணவதசு.) 4. சுந்தரர்மனைவி. (உ-ம்.) "பேர்பரவை" (பெரியபு. தடுத்தாட் கசஅ.) 5. பரத்தல். (உ - ம்.) "பரவைவெங்கதிர்ச்செல்வன்" (சிந்தா. நாமக. கூசு.) 6. பிரபலம். (வழக்.) (1, 2-பிங்கல. கூஎஅ.)

பரவையாழ்—பேரியாழ். (சிந்தாம.)

பரற்பரவிநோதம் ஒன்றற்கொன்றுவிநோதம் (வழக்.)

பரன்—1. அந்தரியாமி. (த. நி. போ. க0.) 2. உயர்வுடையோன். (சைவப்பி. உகூ.) 3. சிவன். (உ - ம்.) "வெந்தசாம்பரும்பூசுமோபரனெனுமேலோன்" (ஞானப. தத்தீசியுத். க.)

பராக்கியை—ஓருவடமொழிநூல்.

பராக்கிரதம்—தள்ளப்பட்டது. (வழக்.)

பராக்கிரமசாலி—வீரமிக்கோன். (வழக்.)

பராக்கிரமம்—வீரம். (சூ. நிக. அ: உகூ.)

பராக்கிரமன்—வீரன். (வழக்.)

பராக்கிரமி—1. பராக்கிரமன். 2. தெரிசிலவினைப்பகுதி.

பராக்கிரமித்தல்—வீரங்காட்டல். (வழக்.)

பராக்கு—அசட்டையாயிருத்தல், வேறுபுலனுற்றிருத்தல். (திருவிளை. மண்சும. கo.)

பராக்குநுபி—எதிர்முகசிற்சத்தி. (சி. சி. அ: கூஅ. ஞாநப.)

பராகண்டம்—அசட்டை, பராமுகம். (வழக்குண்டுபோலும்.)

பராகம்—1. நாய்த்துளசி. 2. சந்தனம். 3. புழுதி. (உ-ம்.) "எழுதருஞ்சேனாபராகம்விண்படர்ந்து" (கூர்மபு. தக்கன்வமி. சo.) 4. பூந்தாது. (சூ. நிக. கக: ரகரவெ. எ.) (1, 2-வைத்தியபரிபா.)

பராகரணம்—1. தள்ளுதல். 2. நிந்தித்தல்.

பராகரித்தல்—தள்ளுதல், நிந்தித்தல். (வழக்.)

பராசத்தி—ஆன்மாவினிடத்திலே சிவனுக்கு ஒப்பாக முத்திரித்திக்கும்பொருட்டு மலநீங்குமுன் தடைபட்டிருந்தபேரறிவு பெருந்தொழிலாகிய சிவதத்துவவிருத்தி விளக்கமென்னுமநுக்கிரகத்தைப்பண்ணுஞ்சத்தி; இது: இச்சாஞானக் கிரியையெனமூன்முய்ச் சிவனுக்குச் சமவேதசத்தியெனப்படும். (சி. சி. க: கூஉ. சிவஞா.)

பராசத்திதத்துவம்—பரவிந்து. (சி. சி. உ: எச. ஞாநப்.)

பராசநம்—கொலை. (வழக்குண்டுபோலும்.)

பராசநன்—கொலைசெய்வோன். (வழக்.)

பராசயம்—தோல்வி. (வழக்.)

பராசரம்—உபபுராணம் பதினெட்டினொன்று. 2. தருமநூல் பதினெட்டினொன்று. (பிங்கல. சசடு, சசசு.)

பராசரன்—ஓரிருடி; இவர்: சத்திமாமுனிக்குப்புங்கனூர் புலச்சியிற்றிற்பிறந்தபுத்திரர். (வி-ணி. உடு.)

பராசிதம்—சிவன் கைவாள். (உ - ம்.) வந்துழிக்காண்க.

பராசியம்—பலரறிந்தது. (வழக்.)

பராத்தம்—பரார்த்தம். (வழக்.)

பராதீநம்—சுதந்தரமற்றது. (வழக்.)

பராதீநர்—சுதந்தரமில்லாதவர். (உ - ம்.) "மிக்கபராதீநர்களேயுலகமெலாம்" (உபதி. டுடி.)

பராந்நம்—1. பகலிற்பூர்வாந்நத்தின் பின் வரும் ஆறுநாழிகை. (வருஷாதி.) 2. பிறர் கொடுத்தபோசநம்.

பராநுகூலம்—பிறர்க்கநுகூலம். (வழக்.)

பராநுகூலி—பிறர்க்குபகாரி. (வழக்.)

பராபத்தியம்—பாரபத்தியம். (வழக்.)

பராபரம்—1. சகளநிட்களம். (சி. சி. க: டுடு. மறை.) 2. சிவம், பராபரவஸ்து. (உ-ம்.) "பகலிரவென்றறியாதபராபரமாய்"(அரிச்ச. பாயிர. ச.) 3. நடுத்தரம். முன்பிணையிருப்பதுஎன்ற படியாம். மேல்கீழ். (சி. சி. அ: உ. சிவாக்.)

பராபரவஸ்து—மேல்கீழாயிருக்கும் பொருள்; அது: கடவுள்.

பராபரன்—1. உயர்வுந்தாழ்வுமுடையோன். (சைவப்பி. உகூ.) 2. பரமேசுவரன், பராசத்திக்குமேலானவன். (உ-ம்.) "பராவுதேவர்பராவுதூயபராபரன்னடிபற்றி" (சி. சி. பர. உலோகாயதமதமறு. உகூ. உரை.)

பராபரி—ஒழுங்கு. (இந்துஸ்.)

பராபரித்தல்-
பராபரிப்பு— } ஒழுங்குபடுத்தல். (வழக்.)

பராபரை—ஒரு சிவசத்தி; இது: ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தியெனமுத்திறப்படும். (சைவச. பொது. எச. உரை.)

பராபவ—வியாழவட்டமாகிய அறுபதுவருடங்களில் நாற்பதாவதாண்டு. (வழக்.)

பராபவம் — அவமானம். (சி. சி. உ: உக. சிவாக்.)

பராபூதி—1. குய்யாட்டகரிலொருவர். (வி-ணி. உஎக.) 2. ஐம்பத்தோருருத்திரரிலொருவர். (வி-ணி. உஎசு.) 3. பிரதிட்டாகலையில் அப்புதத்துவத்திலிருக்கும் எட்டுப்புவனங்களுளொன்று. (சி-லி. கிரியா. உக. உரை.)

பராபேட்சம்—பரசிவஅபேட்சையுள்ளது. (சி-லி. ஞாந. கூ.)

பராமரிசம் — பராமரிசம். (சி. சி. க: எ0. சிவாக்.)

பராமரிசம்— ஆராய்ச்சி. (தர்க்கசங்கிரகத்திலறிக.)

பராமரிசித்தல்—ஆராய்தல். (வழக்.)

பராமரித்தல் — 1. ஆதரித்தல். 2. ஆராய்தல். (1, 2-வழக்குண்டு.)

பராமரிப்பு—விசாரிப்பு. (வழக்.)

பராமாங்கிசம்—உபநிடத முப்பத்திரண்டிலொன்று. பரமாங்கிசமெனவும் வழங்கும். (பொருட்டொகை. நிகண்டு.)

பராமுகம்–1. அசட்டை. (வழக்.) 3. எதிர்நோக்காதது. (சி. சி. உ: சுடு. சிவாக்.)

பராயீ—ஓர் மரம். (பிங்கல. உஎஎச.)

பராய்த்துறை — ஒரு திருப்பதி. (உ - ம்.) "தென்பராய்த்துறையாய்சிவலோகா" (திருவா. செத்திலா. ச.)

பராவணம்—பற்று. (உ-ம்.) "பராகந்தபராயணனுய்" (கோயிற்பு. பதஞ்சலி. கூ.)

பராயணர் — 1. பராயணர், குறிக்கொள்வோர். (சூ. நிக. உ: சக.) 2. வேதாத்தியயநர்.

பரார்த்ததேவப்பிரார்த்திகம்–பிறர்க்காகத் தேவாராதனைசெய்தல்; இது: தயாவிருத்தி பதினெண்கிளையொன்று.

பரார்த்தம் — 1. ஆயிரங்கோடாகோடி. 2. பிறர்க்காகத்தக்கது, பிறர்பொருட்டு.(சைவப்பி. கக.) 3. வேதனது ஆயுட்காலமாகிய ஒருபாதி; அஃது, அவனுடைய ஐம்பதுவருடங்கொண்டகாலம். (உ-ம்.) "உரைத்தவிருபரார்த்தமுமே மலரயனுக்காயுள்ளவுரைக்குங்காலம், விரைக்கமலத்தயன்மானத்தாங்கலவயும்விளம்பிய வாண்டொருநூற்றென்ப,வரைத்தபரமிருதினி லொருபாதிபரார்த்தமெனவகுப்பரீண்டு, நிரைத்துவருகாலங்கள்பிறழாமலுரைப்பனெனி நிகழ்தலுற்றான்" (கூர்மபு. பிரமாயு. உ)

பரார்த்தலிங்கம்–சிவன்சங்காரகாலம்வரையுஞ் சாந்நித்தியராயிருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப்பெறும இலிங்கம்; அது: சுவாயம்புவலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மாநுடலிங்கம என ஐவகைப்படும். (சைவச. பொது. சாகூ. உரை.) சுவாயம்புவம்-சுயம்பு.

பரார்த்தவநுமானம்—
பரார்த்தானுமானனம்— } பிறர் பொருட்டாமநுமானம்; அது: தானுணர்ந்தபொருளை நுமித்துணர்ந்து பிறரையுணர்த்துதற்குப் பிரயோகிக்கும் அநுமானவாக்கியம். (சைவப்பி. கக.)

பராரை—பருத்த அரை. (உ-ம்.) "பராரையாலகிழன்மருங்குமறைமுதல்" (திருவிளை. அட்டமா. உ.)

பராவதம் — வாலுளுவை (வைத்தியபரி.)

பராவுசிவர்—சஞ்சரிக்கிற சிவன். (உ-ம்.) "உயிரின்பற்றறுத்துப்பரத்தையடைபராவுசிவரன்றே" (சி. சி. அ: கூடு. சப்பிர.)

பராவுதல்—1. சஞ்சரித்தல். "பராவுசிவர்" பார். 2. சொல்லுதல். 3. துதித்தல். (2,3-பரவுதல பராவுதலென வந்ததென்க.

பராற்பரநாதம்—உன்மனை. (சி. சி. உ: எச. ஞாநப்.)

பராற்பரம்—ஒரு சிவநாமம். (உ-ம்.) "பரம ஞாநம்"பார்.

பராற்பரவிந்து — சமகை. (சி. சி. உ: எச. ஞாநப்.)

பரி–1. அச்சுவினி. (உ-ம்.) "சகடம்" பரி அன்பு. (சூ.நிக.அ: கூகூ.) இரில உகர்ஞதாகி 3. உயர்ச்சி (சூ. நிக அ. அ.) 4. குதிரை (தைல. தைலவ. கஙச.). 5. குதிரை. (உ-ம்.) "வாம்பரி" (அரிச். நகரஏ. பி.) 6. குதிரை நடை. (உ-ம்.) "சதஷ்பரியகதிமாவும்" (புறநா. பிடி.) 7. சுமத்தல. 8. செலவு, (உ-ம்.) "நிமிர் பரியமாதாங்கவும்" (புறநா. கச.) 9. தெரிநிலை வினைப்பகுதி. 10. வருத்தி. (தைல. தைலவ. கஉ.) 11. பாதுகாத்தல். 12. பெருமை. (பிங்கல. உஉஎடி.) 13. மாயம். (பிங்கல. கூஎஅகூ.) 14. பிரிவு. (உ - ம்.) "பக்கநீர்ங்கினர்பரிபுலம்பினெனை" (சிலப். நாடுகாண். உஉசு.) 15. கருத்து. 16. விரைவு. (7, 11, 15, 16-சூ. நிக. கக: ரகரவெ. அ.)

பரிக்கந்தி — அழுக்கிராக்கிழங்கு. (தைல. தைலவ. எகூ.)

பரிக்காரர்—1. குதிரைக்காரர். 2. யானைக்

காரர். (உ-ம்.) "இடறுதல்" பார். (பெரிய பு. திருநாவு. கக0.)

பரிக்கிரகசத்தி–1. ஒன்றையுண்டாக்குதற் கண்கருத்தனுக்குவேண்டியிருக்குஞ் சத்திகளு ளொன்று. (சி. சி. க: ருகூ. சிவாக்.) மாயை யென்பர். பரிக்கிரகம் - அங்கீகரித்தல்.

பரிக்கிரகம் — 1. அங்கீகரித்தல். (உ-ம்.) "பரிக்கிரகசத்தி" பார். 2. எடுத்துக்கொள்ளுதல். (சி. சி. ஞாநப்.)

பரிக்கிரகித்தல்—கைக்கொள்ளல். (வழக்)

பரிக்தும்—தாங்கும். (புறநா.)

பரிக்கை—பரீட்சை. (வழக்.)

பரிகசித்தல்—சிரித்தல். (திருவாச. நீத்தல் விண். சஅ.)

பரிகம் — 1. அகழ். 2. ஆசீவிஷமென்று சொல்லப்படும் ஏழு யோகத்தொன்று; அது: ஆதித்தனுஞ்சந்திரனுங்கூடினநாளான அமாவாசைச்சு ஒன்பதாம்நாள். (உ - ம்.) "வெய்யோன்மதியுடன்சேர்நாட்டிரண்டு விரோத மொன்பான்-செய்யபரிகம்" (விதாந.குணாகுண. கூச.) 3. நித்தியயோகத்தொன்று. (விதாந. பஞ்சாங். உச.உரை.) 4. மதிலுண்மேடை. 5. வேலடி.(பிங்கல. கஎகூ0.) (1,4.சூ.நி.உ:சச.)

பரிகரம் – நாற்புறத்துந்தொழில்செய்வோர் தொகுதி. (சிந்தாம.)

பரிகாரங்குராலங்காரம்-கருத் தடையடை கொளியணி. (குவல. உரு.)

பரிகராலங்காரம்— கருத் துடையணி. (குவல. உச.)

பரிகரித்தல் — நீக்குதல். (உ-ம்.) "சோசக காய்நீரைப்பரிகரித்து" (தைல.தைலவ.கூகச.)

பரிகாயச்சித்தம்பண்ணல். (வழக்.)

பரிகரிப்பு—விலக்கல். (வழக்.)

பரிகலசேடம் — பெரியோருண்கலத்தின் மிகுதி. (வழக்.)

பரிகலம்—உண்கலம். (உ - ம்.) "நல்லபரிகலந்திருத்தி" (திருவிளை. விருத்த. உச.)

பரிகாகரணம்—பரிகாரம். (உ-ம்.) "பண்போவிஃதோர்பரிகாசகமே" (சேதுபு. விவாகப். கூக.)

பரிகாசம்—விளையாட்டு. (வழக்.)

பரிகாமுத்திரை—ஆகாரத்தில்லாத குற்றத்தைப்போக்கும் முத்திரை; அது: வலக்கைப் பெருவிரல் மூக்கைத்தொட அதன் நுனியில் இடக்கைப்பெருவிரலைச் சாணளப்பதுபோலத் தொட அவ்விடக்கைச்சிறுவிரலுனியை நாபியில் வைத்தல். (சைவச.பொது.கூஉ.உரை.)

பரிகாரநிகண்டு—வைத்தியநிகண்டு. (வழக்.)

பரிகாரம் — 1. பரிகரித்தல், நீக்குகை. 2. பிராயச்சித்தம். (உ-ம்.) "பரிகாரமயுஞ்செயினு மாகா-தென்றனன்" (சேதுபு. கத்துரு.) 3. வைத்தியம். (1, 3-வழக்.)

பரிகாரி—1. ஈவிதன். (வழக்.) 2. வைத்தியன். (உ-ம்.) "வண்டுறைச்சாலைமலைப்பரிகாரி வந்தால்" (தனிப்பா. உ: ருகூஉ.)

பரிகை–1. அகழியையடுத்தவாரியுள்ளுயர் நிலம். (பிங்கல. சுருகூ.) 2. அன்பு. 3. பரிகாமுத்திரை. (உ - ம்.) "பரிகையெனுமுத்திரையைப்பண்ணிகை" (சைவச. கூஉ.)

பரிச்சதம்– மூடி. (வைத்தியபரி.)

பரிச்சாத்தினர்—குதிரைராவுத்தர். (உ-ம்.) "குலாவுவாம்பரிச்சாத்தினர்வரும்பெருந்தன் மைகூறுவாம்" (திருவாத. குதிரை. கo.)

பரிச்சித்து — அருச்சுனன் பௌத்திரனும், அபிமன்புத்திரனுமாகியவோரரசன். (பாரதத் திற்காண்க.)

பரிச்சிந்நம்—கண்டிக்கப்பட்டிருக்குந் தன்மை, கண்டிப்பு. (சி. சி. சு: கத. சிவாக்.)

பரிச்சேதகம்—அளவிடுகை. (உ - ம்.) வங் கழிக்காண்க.

பரிச்சேதத்திரயம்—காலபரிச்சேதம், தேசபரிச்சேதம், வஸ்துபரிச்சேதம் என்பன; அவற்றுள்: காலபரிச்சேதம் ஒருகாலத்துண்டு ஒருகாலத்தில்லையென்பது, தேசபரிச்சேதம் ஒருதேசத்துண்டு ஒருதேசத்திலில்லையென்பது, வஸ்துபரிச்சேதம், ஒருவஸ்து இதுவாகும் ஒருவஸ்து இதுவன்று என்பது. (த.நி.போ.கoஎ.)

பரிச்சேதநம் — இலக்கியச்செய்யுட் கூறுபாடு.

பரிச்சேதம்—1. நிதார்த்தமானபகுத்தறிவு, பகுத்தறிகை. (வழக்.) 2. தூற்கூறுபாடு, அத்தியாயம். (பிங்கல. உoசுஅ.) 3. பரிச்சேதத்திரயம்.

பரிச்சேதித்தல் — 1. அளவிடுதல். (சி. சி. உ: ருசு. சிவாக்.) 2. சேர்ந்தறிதல். (உ - ம்.) "ஆன்மசித்தத்தியான துபுத்தியின்விருத்தியோடேகூடிவிஷயத்தைப்பரிச்சேதிக்கிற போது பிரமையாம்" (சி. சி. அளவை. க. சிவாக்.)

பரிசக்குவீறு—நாகபச்சை. (வைத்தியபரி.)

பரிசதன்மாத்திரை-பரிசவுணர்வின்மூலம். "வாயுவின்பரிசதன்மாத்திரையினின் வழியே நின்றுந் – தேயுமுக்குணங்களோடுஞ்செறித்திடும்" (மச்சபு. பிரமமுக. கரு.)

பரிசதீட்சை — ஒருவகைத்தீட்சை; அது: பரிசவேதியினுலே தாமிராதி லோகங்களைப் பரிதித்தழற் கனிம்பைநீக்கிப் பொன்னுக்குவது போல ஆசாரியர் தமதுகையைச் சிவன்கையாகப்பாவித்து அங்ஙனமே யருச்சனைசெய்து அதனைச்சீடனதுதலையில்வைத்து எங்கும் பரி

சித்து அவனதுபாசத்திரயத்தைநீக்கி அவனைச் சிவனுக்குதல். (சைவச. ஆசாரிய. சுருபூ. உரை.)

பரிசந்நியம்–மேருகிரி, பொன்மலை. (சூ. நிக. பூ: கஙூ.)

பரிசநம் — 1. அடிமை. (உ-ம்.) "திருத்தபணிப்பரிசநமுமிகவுங்க" (கோயிற்பு. பதஞ்சலி. கூ.) 2. உறவு, சுற்றம். (சூ. நிக. உ: நிகூ.) 3. தொடுதல். (சூ. நிக. க: கூசு.) 4. பரிவாரம். (உ-ம்.) "பரிசநம்பின்புசெல்ல" (சி. சி. உ: கூறி. சுப்ர.) ஏவல்செய்வோர்.

பரிசநர்—ஏவல்செய்வோர். (உ-ம்.) "பல்லவர்"பார்.

பரிசநவேதி – இழிந்தலோகங்களைப்பொன்னுக்குமருந்து. (உ - ம்.) "பரிசதீட்சை"பார். (வைத்தியபரி.)

பரிசநன்—காற்று. (உ-ம்.) "உலவிறண்டினிற்பரிசநன்மதலையும்" (பாரத. பதின்மூன. கஉசு.)

பரிசநை—பழக்கம். (வழக்.)

பரிசம்—1. கற்பாஷாணம். (உ-ம்.) வந்திழிக்காண்க. 2. தொடுதல். (பிங்கல. உகஙூ.) இது: பஞ்சதன்மாத்திரைகளிலொன்று. பெண்ணின்பிதா மாதாக்களுக்குக்கொடுக்கிற வெகுமானம். (வழக்.)

பரிசமைந்து — உஷ்ணம், கடிநம், சீதம், சிதோட்டணம்,மிருதுஎன்பன.(வாசுதே நிகு.)

பரிசயம்–பழக்கம். (சி. சி. உ: கo. ஞாநப்.)

பரிசவேதி — பரிசநவேதி. (சி. சி. அ: கூ. சிவாக்.)

பரிசாரகம் — ஏவல்வேலை. (உ-ம்.) "சாற்றதுகூலமினுர்பரிசாரகஞ்சார்வுற்றால்" (சிவரக. ஞானவாலன் கலியாண. கூ.)

பரிசாரகன் — ஏவல்செய்வோன். (வழக்.)

பரிசாரகி—தாதி. இ-பெண்பால்விகுதி.

பரிசாரம்—பரிவாரம். (வழக்.)

பரிசித்தல்—தீண்டல். (உ-ம்.) "செம்பிற்காணலுறுங்களிம்பிரதகுளிகைபரிசிக்கக்கழியும்" (சி. சி. கக: நி.)

பரிசிப்பு—பரிசித்தல். (வழக்.)

பரிசில் — 1. ஈகை, பிறர்கையிலேற்றபொருள். (பத்துப்பா. சிறுபாணற்.) 2. வெகுமதி. (உ-ம்.) "ஒதிமந்தருபரிசினேருறுகடையாளே" (சேதுபு. விதூம. அஉ.)

பரிசிலர்—இரந்துவந்தோர். (உ-ம்.) "பரிசிலர்க்கருங்கலஞ்சவும்" (புறநா. கச.)

பரிசிலாளர்—இரப்போர். (உ-ம்.) "ஏத்திய பரிசிலாளர்க்கெண்ணியவனேத்துஞ்சும்"(அரிச்ச. சூழ். கூஉ.)

பரிசின்மாக்கள்—பரிசிலர். (புறநானூ.)

பரிசீலநம்—அப்பியாசம். (சைவப்பி. சo.)

பரிசு — 1. ஈகை. 2. நற்குணம். (உ - ம்.) "பத்திமையும்பரிசுமிலா" (திருவாச. கண்ட. எ.) 3. விதம். (உ - ம்.) "கண்டபரிசுரைப்பேனென்ன" (பிரம-காண். சிவராத்திரிமகி. க.) 4. வெகுமதி. (உ - ம்.) "கையிலென்சிலபரிசுகொண்டெதிர்காணுவேன்" (சிவரக. தேவியுடன். கூ.)

பரிசுத்தம் — 1. தூய்மை. (உ-ம்.) "இனிதருத்தப்பெற்றேர்பரிசுத்தராயின்பவீட்டினிலெய்துவரால்" (சிவரக. தேவிநாட்டி. கசு.)

பரிசுத்தர்—சுத்தர். (வழக்.)

பரிசுத்தவான்—பரிசுத்தன். (வழக்.)

பரிசுத்தன்—சுத்தமுள்ளோன். (வழக்.)

பரிசுத்தாவி—சுத்தமான ஆவி. [கிறீஸ்து.]

பரிசுத்தி–பரிசுத்தம். (சி. சி. அ: நி. ஞாநப்.)

பரிசுத்தை—பரிசுத்தமுள்ளவள். (வழக்.)

பரிசேடம்—ஒழிவு. (சி. சி. எ: ச. சிவாதீ.)

பரிசேடித்தல்—சேடமாகநிற்றல். (சி. சி. அ: கo. ஞாநப்.)

பரிசை—கேடகத்திலெழுதுபேதம். (சூ. நிக. எ: கஅ.)

பரிசோதகர்—முற்றுஞ்சோதிப்பவர். பரி-உபசருக்கம். சோதகர் சோதிப்பவர். (காஞ்சிப்பு. திருநெறிக். ச.)

பரிசோதனை—பூரணசோதனை. (வழக்.)

பரிசோதித்தல்—முற்றுஞ்சோதித்தல். (வழக்.)

பரிசோபித்தல் — அலங்காரமாயிருத்தல். (வி-ணி. உசுங.) பரி-உபசர்க்கம்.

பரிசோபை—அலங்காரம். (வி-ணி.)

பரிட்சித்தல்—ஆராய்தல். (வழக்.)

பரிணதம்—உருத்திரிதல். (சி. சி. ச: உஙூ சிவாக்.)

பரிணதவேதாந்தி—பிரமந்தானேபிரபஞ்சமாய்ப் பரிணமித்துத் தானுயிருக்குமென்னும் வேதாந்தி; இவன்: பிரபஞ்சப்புவனப்பேற்றினையே முத்தியென்பன். (சி.சி.ச:உக.சிவாக்.)

பரிணதி—திரிசு. (சி. சி. உ: க. ஞாநப்.)

பரிணதை—விவாகஞ்செய்தவள். (வழக்.)

பரிணமித்தல் — வேறுபடுதல். (வி-ணி.)

பரிணயம் — கலியாணம். (வழக்குண்டு போலும்.)

பரிணமசரீரம் — ஒன்றுதிரிந்துண்டான சரீரம்.

பரிணமம்—திரிபு, வேறுபாடு; அது: பால் தயிராவதுபோல்வது. (உ-ம்.) "செயல்பரிணமமன்று" (சி. சி. க: உச.)

பரிணமவாதகைவன்—உயிர்கெட்டுக்கூடி அரனடியிலொன்றுய்ப்போமென்பவன். (கந்த பு. நவ. நி.)

பரிணமவாதி — சீவன்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணமமாய்த்தோன்றி அறிவிச்சைசெயல்களோடைந்து தீயுஞ்சூடுபோலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மையுற்றுப் பல வேறுவகைப்பட்டுநிற்குமென்று வாதிக்கிறவன். (சி. சி. ச: சு. சிவஞாந.) முத்தியில் உயிர் கெட்டுநிற்கக்கூடிய அரனடியில் ஒன்றுய்ப் போமென்னுமதத்தன். (சி. சி. கக. கூ. ஞாநப்.)

பரிணமாலங்காரம்—ஆரோபிக்கப்படும் உபமாநம் பிரகிருதகாரியத்திற்கு உபயோகமாக நிவந்தனைசெய்யப்பட்டு, இயல்பிற் றனக்கு அக் காரியத்தில் உபயோகிக்கப்படுந் தன்மையில்லாமையால் உபமேயமாகத்திரிந்து அக்காரியத்திலுபயோகப்படுவது. (குவல. சு.)

பரித்தல் — 1. அட்குதல். (உ-ம்.) "பண்பகுதறவைமேற்கொண்டிந்தியம்பரித் தலின்றேல்" (வேதாரணியபு. விசுவாமித்திரர் மேநகை. கூஅ.) 2. ஏந்துதல், தாங்குதல். (உ-ம்.) "படைமூவாறும்பரித்தசெங்கையர்" (திருவிளை மெய்க்கா. உசு.) 3. சுமத்தல். (உ-ம்.) "பாரகர் பரிக்க" (சி. சி. உ: கூறு.) 4. தரித்தல். (உ-ம்.) "சனகர்" பார்.

பரித்தவை—ஓடியவை. (சிந்தா.)

பரித்தியாகம்—முற்றும்விடுத்தல். (வழக்.)

பரிதபி—தெரிநிலைவினைப்பகுதி.

பரிதபித்தல்—துக்கித்தல். (வழக்.)

பரிதபிப்பு—பரிதபித்தல்.

பரிதல்—1. அறுத்தல். (உ-ம்.) "செந்தறித்தெங்கியவெண்மகத்தனியானதளைபரிந்து" (தி ரு மு ற். நி.அ.) 2. அன்பு. 3. இரங்கல். வருந்துதல் என்பர். பரிபாடலில். 4. ஓடிதல். (சூ. நிக. கூ: ஙக.) 5. ஓடுதல். (புறநா.) 6. வருந்திக் காத்தல். (இ-ம்.) "பரியினுமாகாவாம்" (வள். கூஎசு.) 7. வெட்டல். (சூ. நிக. கூ. உசு.) (2,3-சூ. நிக. கக: நாரமெல்லை)

பரிதாநம்—மைதுனம். (வழக்.)

பரிதாபப்படுதல்—பரிதாபித்தல். (வழக்.)

பரிதாபம்—1. இரக்கம். (உ-ம்.) "பரிதாபத் தோ-டெம்பியரென்செய்தாரென்றிறை வனுமினேந்துசோர்ந்தான்" (ட... நச்சுப்பொய். உறு.) 2. வெப்பம். (பாரத. வீஷ்மகால. க.)

பரிதாபி — 1. தயருறுவோன். (வழக்.) 2. வியாழவட்டமாகிய அறுபதாவருடங்களில் நாற்பத்தாறும் வருடம். (வருஷாதிநூல்.)

பரிதி—1. சக்கராயுதம். (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ். க.) 2. சூரியன். (உ-ம்.) "பரிதி நன்மரபில்வருபார்த்திபன்" (அரிச்ச.காப்பு.உ.) 3. தேர்ச்சில். 4. பரிவேடம். 5. யாகமேடை, அல்லது யூபத்தறி. (கந்தபு. வேள்விப். கூ.) 6. வட்டம். (உ-ம்.) "இளங்கதிர்ப்பரிதிசூட்டியியற்றியதென்னலாமே" (சிந்தா.காந்த.கூறு.) (3, 4, 6-பிங்கல. கூஎகக.)

பரிதிபங்குடிங்து—சக்கரவாகப்புள். (உ-ம்.) "கோட்டகம்பரிதியங்குடிங்குகூடமே" (இரகு. நாட்டு. சஅ.)

பரிது — பரியது, எனினும்பரிது எனினுமொக்கும். (வள். கூ0-ஆம் அதி. கூ.)

பரிந்த—அருத்த. (பத்துப். மதுரைக். சுஅ0-ஆம் அடி.)

பரிந்து—1. ஏற்றுக்கொண்டு. (பரிபாடல்.) 2. தணிந்து. (புறநா.)

பரிநிவிர்த்தி—தேகத்தினின்று ஆன்மா முற்றத்துறந்து இனிப் பிறவாதிருத்தல்.

பரிப்பு — 1. இயக்கம். (உ-ம்.) "அஞ்ஞாயிற்றுப்பரிப்பும் (புறநா. கூ0.) 2. பரித்தல். சுமத்தல் பு-தொழிற்பெயர்விகுதி.

பரிபக்குவம்—ஏற்றபக்குவம். (சி. சி. எகூ. ஞாநப்.)

பரிபக்குவமலபிரளயாகலர்—சிவாநுக்கிரகம்பெற்றுப் பதி பதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் ஸ்ரீகண்டவீரபத்திரர் முதலிய அபர மந்திரேசுவரர்கள் புவநவாசிகளென்னும் அபரமுத்த சிவன்களாயும்போயிருப்பவர். (சி. சி. ஞாநப்.)

பரிபக்குவவிஞ்ஞாநகலர்— சிவாநுக்கிரகம் பெற்றுப் பதி பதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் அணுசதாசிவர் அநந்தாதிகள் மந்திரர்கள் புவநவாசிகளென்னும் பரமுத்த சிவன்களாயும்போயிருப்பவர்கள். (சி.சி.ஞாநப்.)

பரிபவம்—1. எளிமை. (சூ. நிக. அ: நுஎ.) 2. அவமாநம். (உ-ம்.) "தம்பியரன்றுணர்வறியாமையினவைக்கணுரைத்தமாற்றம்-பரிபவமோ" (பாரத. கிருட்டிண. கஅ.) 3. துன்பம். (உ-ம்.) "இன்னம்பரிபவவீளவுபாரான்" (திருவிளை. இந்திரன்பழி. நுஎ.)

பரிபாகம் — 1. அடுத்தல், சமைத்தல். 2. ஏற்றபக்குவம்.

பரிபாகி—ஏற்றபக்குவன். (வழக்.)

பரிபாடல்—எட்டுத்தொகையுள் ஐந்தாவது தொகையாகிய ஒருநூல்; இது: கடைச்சங்கப் புலவர்களாலியற்றப்பட்ட எழுபது பரிபாடல் களையுடையது. [ஒருவகைப்பாவின்பெயராகிய பரிபாடலென்பது அப்பாவாலாகிய நூலுக்குப் பெயராயிற்று.]

பரிபாடை—சங்கேதம். குழூஉக்குறி. (உ-ம்.)

"பேர்கொண்டசைவபரிபாடை சேக்கிழார்" (பிள்ளைத்தமிழ். காப்பு. ரு.)

பரிபாலகன்—காப்போன். (வழக்.)

பரிபாலநம்— பரிபாலம். (வழக்.)

பரிபாலநன்—காப்போன். (வழக்.)

பரிபாலம்—காவல். (வழக்.)

பரிபாலன்—காப்போன். (வழக்.)

பரிபாலி — 1. காப்போன். இ-விகுதி. 2. தெரிநிலைவினைப்பகுதி.

பரிபாலித்தல்—காத்தல். (வழக்.)

பரிவாதம்—பழிச்சொல். (பிங்கல. உ0எஎ.)

பரிபுடம்—நூறெருப்புடம். (வைத்தியபரி.)

பரிபுரம்—பாதகிண்கிணி. (சூ. நிக. எ: உரு.)

பரிபூதம்—பரிசுத்தம். பூதம்-புனிதம்.

பரிபூர்த்தி—நிறைவு. (வழக்.)

பரிபூரணத்துவம்-பூரணத்தன்மை.(வழக்.)

பரிபூரணதை—திருப்தி. (வழக்.)

பரிபூரணம் — 1. எங்குநிறைதல். (சி. சி. சு: க. மறை.) 2. திருத்தி. (வழக்.)

பரிபூரணன் — எங்குநிறைந்தோன். (மகாவாக்கியம். சு. உரை.) 2. பரமானந்தன். சித்ரூபசத்தியுடனேகூடிச் சர்வப்பிரசாசமென்னுஞ் சொப்பனாவஸ்தையை அடையப்போதுபெறும் பெயர். (நாநா. கட்.) 3. மிகுதிருத்தியுடையவன். (சைவப்பி. உஅ.)

பரிபூரணி—பார்ப்பதி. (வழக்.)

பரிபூரணித்தல்—பரிபூரணமாதல் (ஞானக்கட்டளை. அநுபதமநநம்.)

பரிமகம்—அசுவமேதம். (உ-ம்) "பரிமசஞ் செய்வான்வேண்டி" (திருவிளை. புராண வரலா. கஎ.)

பரிமணி—கரந்தை. (வைத்தியபரி.)

பரிமளகந்தி—வியாதன்முய். (பாரதத்திற் காண்க.)

பரிமளசேறு—பரிமளக்குழம்பு. (வழக்.)

பரிமளம்-மிகுமணம்; இது: அட்டபோகத்தொன்று. (உ-ம்.) "புரியிட்டம்பெறுபரிமளகளபம்புகுசாலே" (சிவரக. தேவிமேருகயி. ககூ.)

பரிமளி—கரந்தை. (வைத்தியபரி.)

பரிமளித்தல்— } 1. சமாளித்தல். (வழக்.)

பரிமளிப்பு— } 2. மிகமணத்தல்.

பரிமா—குதிரை. (வைத்தியபரி.)

பரிமாணம்—அளவு. (தருக்கசங்கிரகத்திற் காண்க.)

பரிமாவடிப்போர்—குதிரைப்பாகர். (சூ. நிக. கக: தகரவெ. உ கூ.)

பரிமாறுதல்—1. திரிதல். (சைவச.பொது. கூ0உ.. உரை.) 2. கொடுத்துமாறுதல். (வழக்.)

பரிமிதம்—அளவுபட்டது. (சி. சி. க: சுசு. ஞாநப்.)

பரிமுகவம்பி—குதிரைமுகவோடம். (உ-ம்.) "பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியும்"(சிலப்.புறஞ் சேரி. கஎசு.)

பரிமேதம்—அசுவமேதயாகம். (உ-ம்.) "சயம் பெருகும்பரிமேதந்தரும்பேறுதருமிங்நீர்" (சேதுபு. பலதீர்த். கச.)

பரிமேலழகர் — திருவள்ளுவர் குறளுக்கு உரைசெய்தவோர்ந்தணக்கவிஞர். (வழக்.)

பரிமோகநம்—மயக்கு. (வழக்கு.)

பரிய — 1. பெரிய. (திருவிளை. திருநகர. கூஎ.) 2. வருந்தி. (பரிபாடல்.)

பரியகம்—1. காற்சரி. 2. கைச்சரி. 3. பாதகிண்கிணி. (உ-ம்.)"பரியகநூபுரம்பாடகஞ்சதங்கை"(சிலப்.கடலாடு.அச.) (1,2-சூ.நிக.எ:உரு.)

பரியங்கம்—சட்டில். (உ-ம்.) "அத்தனுமம் பிகையு-முத்தமபரியங்கத்தணைமீதினி லுறை போதில்" (சிவரக. தேவிமேருகயில. கச.)

பரியந்தம்—எல்லை. (சூ. நிக. அ: ககூ.)

பரியநுயோச்சியோபேட்சணம்—தோல் வித்தானம்இருபத்திரண்டனுளொன்று; அது: மறுத்துரைத்தற்குத்தக்கதாகப் பிரதிவாதி கூறிய வாக்கியந்தோன்றுதலேயறிந்தாவது அறியாமலாவது மறுத்துரையாதுவிடுதல். (சி. சி. அளவை. கச. மறை.) [பரியநுயோச்சியம் - உடன்படாதற்குரியது; உபேட்சணம் - விருப்பின்மை.]

பரியம்—பரிசம். (சிந்தா.)

பரியல் — இரங்குதல். (உ-ம்.) "பரியல் வேண்டா" (புறநா. கஎஉ.)

பரியவாசநம் — முடிவு. (சி. சி. உ: சo. சிவாக்.)

பரியவசிதம் — நிச்சயம்பண்ணுகிறது. (சி. சி. உ: க. ஞாநப்.)

பரியன்—மகத்துக்குமகத்தானவன். (உ-ம்.) "நேரியனுய்ப்பரியனுமாயுயிர்க்குயிராய்"(சி. சி. அ: உஅ. மறை.)

பரியாசம் — 1. ஓமம். (வைத்தியபரி.) 2. பரிகாசம். (வழக்.)

பரியாநம்-சேணம்.(உ-ம்.) வந்துழிக்காண்க.

பரியாப்தம் — போதுமானது. (சி. சி. கக: கூ. சிவாக்.)

பரியாபிதம்—போதுமெனல்.

பரியாமல்—அறியாமல்.(புறப்பொருள்வெ.)

பரியாமை—பற்றுச்செய்யாமை.(புறப்பொருள்வெ.)

பரியாயச்சொல்—கருதியவொருபொருள் குறித்தமறுசொல். (உ-ம்.) "பரியாயம்" பார்.

பரியாயசந்தேகம்-அற்பசந்தேகம். (வழக்.)
பரியாயநாமம்—வேறுபெயர். (வி-ணி.)
பரியாயம் — 1 ஒன்றற்குரியன. (உ - ம்.) "பொருகணைப்பரியாயப்பே– ரத்திரமென்பதா விக்கழிவுசெய்திடுதலாலே"(சேதுபு. சங்கரப. சக.) 2. பரியாயவணி. (உ-ம்.) "கருதியகிளவாதப்பொருடோன்றப் – பிறிதொன்றுரைப்பது பரியாயம்மே" (தண்டி. எ0)
பரியாயவணி—பரியாயம்பார்.
பரியாலோகம் — பிறிதினவிற்சியணி. (குவல. உகூ.)
பரியாலோசநம்— } பெரியவாலோசனை.
பரியாலோசனை– } (சி. சி. அ: நி. ஞாநப்.)
பரியாளம்—பரிவாரம். (உ-ம்.) "வீரசையந் தநம்போர்வேழம்வெம்பரியாளங்க – டூரையிட மின்றியீண்ட" (சேதுபு. சங்கரபா. அகூ.)
பரியும்—அழியும். (சிந்தாம.)
பரியூ—பரிக்.நி. (பரிபாடல்.)
பரிவட்டணை—எண்வகைக் கலைத்தொழில் களிலொன்று; அது: வீக்கினகரம்பை அவிரலாலும் புறவிரலாலுங்கரணஞ்செப்து தடவிப் பார்த்தல். (கூர்மபு அட்டமூ. க. உரை.)
பரிவட்டம்—1. ஆடை. (பிங்கல. கஉஎகூ.) 2. விக்கிரகத்தினுடை. (உ - ம்.) "பரிவட்டத் தொகைதிருவாபரணம்பயிலறைகள்" (சிவரக. சேவி. மேருகயிலை. கசு.) மரபு-வழக்கு.
பரிவருத்தநம்—மாற்றுதல். (உ-ம்.) "பார்க வர்முறையிற்கொள்ளும்பரிவருத்தநம்போற்பா டுங்-கார்கெழசரும்பிணீட்டம்" (சேதுபு. திரு நாட்டு. எக.)
பரிவருத்தனை — 1. பருவருத்தநம். 2. பரி வருத்தனையணி. (உ-ம்.) "பொருள்பரிமாறுதல் பரிவருத்தனையே" (தண்டி. அநி.)
பரிவருத்தனையணி–ஓரலங்காரம். (தண்டி. அநி. உரை.)
பரிவாசம்—தங்குதல். (வழக்.)
பரிவாதகன்—வழக்காளி. (வழக்.)
பரிவாதம்—பழிச்சொல். (சூ. நிக. கo: ச.)
பரிவாதினி—வீணைகளினிருபத்திரண்டு பே தத்தொன்று. (வி-ணி. உஉo.)
பரிவாரதேவதை—ஏவற்றேவர். (வழக் குண்டு.) பரிவாரம் பார்.
பரிவாரம்–1. சூழ்ந்திருக்குந்தேவர். (உ-ம்.) "மற்றைப்பரிவாரத்தார்மாலியந்தானும்" (சைவ ச. பொது. சசுக.) 2. சூழ்வோர். (பிங்கல. அசநி.)
பரிவிந்தகன் — முன்னேன் யணமுடியா திருக்க முடித்தபின்னேன்.
பரிவிருத்தி — ஒருபொருள்கொடுத் தொரு பொருள் வாங்குதல். (வழக்.)
பரிவு-1. அன்பு. (உ-ம்.)"பாகனேயசொல்லி யொடுதம்பிபரிவிற்பின்போக" (இராமா.அகத். நுசு.) 2. இன்பம். (உ-ம்.) "பரிவுபொங்கவந் தெடுத்தணைத்து" (பாரத. சம்பவ. க.) 3. துன் பம். (சூ நிக. கச: ரகரவெ. ஙசு.)
பரிவேட்டித்து—சுற்றி. (வி-ணி.)
பரிவேட்பு—வட்டம். (பதிற்றுப்பத்து.)
பரிவேடணம்—சூழுதல். (வழக்.)
பரிவேடபுடம்—விதிபாதபுடத்துக்கு ஆறு ராசிகூட்டிநின்ற நிலை. (விதாந. குணகுண. நுசு. உரை.)
பரிவேடம்-1.சந்திரசூரியரைச்சூழத்தோன் றும் வட்டம். (சூ. நிக. க: கூகூ.) 2. சூழ்தல். 3. பரிவேடபுடம். (உ-ம்.) "விதிபாதமாமுரைசே ரப்பரிவேடமாம்" (விதாத. குணகுண. நுசு.)
பரிவேடிப்பு—பரிவேடம். (சிந்தா.)
பரிவை – நந்தியாவட்டம். (வைத்தியபரி.)
பரீஇ—விழுந்து. (உ - ம்.) "ஈழிந்ததெங்கி ணெண்பழம்பரீஇ" (திருவிளை. நாட்டு. சo.)
பரீக்கை —தான்விவகரிக்கும்பொருளினிவ் விலக்கணமுண்டோவின்றெனப் பார்த்தல்; அது: போதப்பிரகாரம் மூன்றினொன்று. உத் தேசம், இலக்கணம், சோதனை என்பனவாம். (திருவிளை. தடாதகைப். நுசு.)
பரீகம்—பரிகம், நித்தியயோகத்தொன்று. (விதாநமாலை. பஞ்சாங்க. உசஉரை.)
பரீகாசம்—பரிகாசம். (வழக்.)
பரீட்சகர்—பரீட்சிக்கிறவர். (சைவப்பி.ஙகூ.)
பரீட்சணம்—சோதனை. (வழக்.)
பரீட்சித்தல்–ஆராய்தல், சோதனை. (வழக்.)
பரீட்சை — இலக்கியத்திற்கு இலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோவென் றாராய் தல். (தர்க்கபாஷை.) சோதனை என்பது மிதுவே
பரு–1. சிலந்தி. (வழக்.) 2. பருமை. (உ-ம்.) "பருச்சுழியின்மிதக்குமதகரி"(சேதுபு. நாட்டு. கஉ.) 3. தெரிநிலைவினைப்பகுதி.
பருக்கல்— } பருத்தல். (வழக்.)
பருக்குதல்– }
பருக்கை — 1. சோறு. (உ-ம்.) "பருக்கை யிலாக்கூழுக்கிலக்கறியில்லையென்பார்க் கும்" (ஒரு தனிக்கவி.) 2. பருக்கைக்கல். (சூ. நி. நி: கநி.) 3. பளிங்கு. (சூ: நிக. சு: கஉ.)
பருக்கைக்கல்—பருக்கைபார். (வழக்.)
பருகல் — 1. குடித்தல்; அது: நால்வகை யுணவினொன்று. (சூ. நிக. கஉ: ககூ.) 2. விழுங் கல். (பத்துப். பொருநரா. கoச.)

பருதுதல்—பருகல். (சூ. நிக. சு: ஙக.)

பருங்காயம்—பெருங்காயம். (உ-ம்.) "பருங் காயங்குட்டிலவங்கஞ்சாதிக்காய்" (தைல. தைலவ. எஎ.)

பருங்குறிஞ்சி — பெருங்குறிஞ்சி. (உ - ம்.) "மூடக்கற்றுன் றூதுவளைபருங்குறிஞ்சி" (தைல. தைலவ. எகூ.)

பருஞ்சாய்—சடாமாஞ்சில். (உ-ம்.) "பருஞ் சாய்கோரைகாவிசம்பங்கிகுட்டம்" (தைல. தைலவ. கூஅ.)

பருணிதர்-புலவர். (இராமா.மிதிலைக்கா.கoசு.)

பருத்தல் — 1. அதிகரித்தல். 2. தடித்தல். (உ - ம்.) "பாவனைமகாகத்தாலேபருத்தெழுமகம தாகும்" (ஞாநவா.ஞாநவி்ன். அ.) 3. பெருத்தல்.

பருத்தவள்ளிகை—மல்லிகை. (வைத்தியபரிபா.)

பருத்தி—ஓர் செடி; அது: காட்டுப்பருத்தி, செம்பருத்தி, சாவிப்பருத்தி, பட்டுப்பருத்தி, பூப்பருத்தி, பேய்ப்பருத்தி, மலைப்பருத்தி, வெள்ளைப்பருத்தி, உம்பம்பருத்தி, குப்பைப் பருத்தி, இலாடன்பருத்தி, நாடன்பருத்தியெனப் பலவகைப்படும். (உ - ம்.) "பருத்தியிலை மொட்டிரண்டைப்பாலிலை ரத்துண்ண" (பதார்த்தகுணசி.)

பருத்திபன்னுதல்—பஞ்சுநூற்றல். (வழக்.)

பருந்தலை- 1. பெரியதலை. 2. பெருமையிற் சிறந்தோன். (வழக்.)

பருந்தின்வீழ்வு-சூத்திரநிலை நான்கிலொன் று; அஃது: ஓரிடத்துச்சூத்திரம் பின்பலவிடத் துச்சூத்திரத்தை யவாவினிற்பது. (உ-ம்.)"ஆற் றொழுக்கரிமாநோக்கந்தவளைப்-பாய்த்துப்பருந் தின்வீழ்வண்ணசூத்திரநிலை" (நன்.பாயிர. ஙகூ.)

பருந்து—ஒரு பறவை; அது: கரும்பருந்து அல்லது பறைப்பருந்து, குடுமிப்பருந்து, பெரும்பருந்து, செம்பருந்து, முகவெள்ளைப் பருந்து எனப் பலவகைப்படும். (உ-ம்.) "பருந் தின்வீழ்வு"

பருந்தேக்கு-பெருந்தேக்கு. (உ-ம்.)"வாகை புன்குசண்பகம்பருந்தேக்கு" (தைல. தைலவ. ஙகூடு.)

பருப்பதம்—1. ஸ்ரீசைலம். (உ-ம்.) "பருப் பதமிறைஞ்சிவிழிசோதிபயில்வித்து"(கோயிற் பு. இரணிய. கள. 2. மலை. (உ-ம்.) "பலகோடி பருப்பதக்கோடொத்து" (அரிச்ச. நாட்டு. எ.)

பருப்பம்—1. பருத்தல். 2. பருமை. (1, 2-வழக்.)

பருப்பித்தல்—பரிதாக்கல்.

பருப்பு—1. அதிகப்படல். பு-தொழிற் பெயர் விகுதி. 2. பயற்றம்பருப்பு. (உ-ம்.) "பருப் புப்பொருப்பைப்பிதிர்த்திட்டு" (சிவரக. மாநத. டு.) துவரம்பருப்பு முதற்பலவகைப்படும். 3. பருமை. (சிந்தா.)

பருப்புக்கீரை—ஒரு பூடு. (வழக்.)

பருப்பொருள் — நுண்மையற்றபொருள். (உ-ம்.)"துகடீர்புலவர்யான்மொழிந்தபருப்பொ ருடானும்விழுப்பொருளாம்" (யாப். காரிகை. அவையடக். உ.)

பருமட்டம்—பருமட்டு. (வழக்.)

பருமட்டு—செவ்வையின்மை, பரும்படி. (வழக்.)

பருமம்—1. ஒப்பனை. (உ-ம்.) "துமித்தல்" பார். 2. கவசம். (உ-ம்.) "கற்றைக்கதிர்போற் பருமம்புறங்கௌவிமின்னை"(திருவிளை.மாயப். கச.) 3. குதிரைக்கலணை. (பிங்கல. கசுகக.) 4. பெருமை. (உ-ம்.) "பாவடிப்பருமயானே" (கூர்மபு அந்தகா. உச.) 5. மூவாறுகோவை மணி. (சூ. நிக. எ: உஎ.)

பருமல்—கப்பற்பாய்கட்டுமரம். ஒரு குழூஉக் குறி.

பருமன்—பருத்தவன். (வழக்.)

பருமித்தல் — 1. அலங்கரித்தல். (உ - ம்.) "முத்தம்பரிமித்திடைதேய்த்து"(கூர்மபு.அந்த காசு. டுங.) 3. சிரமஞ்செய்தல். (சூ. நிக. கு: சஙக.) 3. பண்ணுறுத்தல். (உ-ம்.) "பருமித்த களிற்றிலனும்" (ஈந்தா. காந்தரு. உo.)

பருமிதம் — 1. இறுமாப்பு. 2. சிரமம். 3. மகிழ்ச்சி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பருமை — 1. பருப்பம். 2. பரும்படியான தன்மை. (1, 2-வழக்.)

பருவதம்—1. ஓர் மீன். (ஒரு குழூஉக்குறி போலும்.) 2. மலை. (உ-ம்.) "பாவபருவதங்க ளெல்லாம்" (சிவரக. அபுத்திபூருவ. சு.)

பருவதவர்த்தனி—பார்ப்பதி, இராமேசுரத்தி லெழுந்தருளியிருக்கிற அம்பிகையின் பெயர்.

பருவதாசிரியம்—சரபப்பட்சி. (உ-ம்.) வந் துழிக்காண்க.

பருவந்து—வருந்தி. (உ-ம்.) "பருவந்துபாழ் படுதலின்று" (வள். அகூ.)

பருவநான்து—வாலை, சருணி, பிரவிடை, விருத்தை (வைத்தியபரி.)

பருவம் — 1. அமாவாசி, பௌர்ணமை. வழக்குண்டு. 2. இருது; அது: வசந்தருது, கிரீஷ்மருது, வருஷருது, சரற்றுது, ஏமந்தருது, சிசிருது என அறுவகைப்படும். (உ-ம்.) "பருவ மாறியபருவத்தில்வையையீர்பரந்துவருவ தாகி யும்" (திருவிளை எல்லாம்.கஉ.) (பிங்கல.கoங.) 3. இளமை. (உ-ம்.) "பருவச்சோலைத்தரியி டமதனைநண்ணி" (இராமா. சூர்ப்பநகை. எ.)

4. நிலைமை. (வள். சகு-ஆம் அதி. உ) (வழக்.) 5. பக்குவம். (உ - ம்.) "அருப்பருவமடைதலு மே" (சி. சி. அ: க0.) 6. பெருநாள். (மகமதியர் வழக்கு.) 7. வயது. (உ-ம்.) "பன்னிருபருவத் தென்முன்" (பிர-காண். சிவதாந. அ.) 8. விரல் களின் வரை. (வி-ணி.)

பருவமலைவு— ஒருகாலத்திற்குரியதை மற் றொருகாலத்துக்குரியனவாகக்கூறுவது. (தண் டியல. கஎள. உரை.)

பருவமாதல் — 1. இருதுவாதல். 2. தகுதி யாதல். (வழக்.)

பருவமேழ—பேதைமுதலேழுபருவம். (சூ. நிக. உ: நிஅ.)

பருவயோனி—கரும்பு. (வைத்தியபரி.)

பருவரல்—துன்பம். (உ - ம்.) "விண்ணவர் பருவரலுழப்ப" (கூர்மபு. அட்டமூர். ககூ)

பருவருதல்—துன்பப்படல். (வழக்.)

பருவல்—பருத்தது. (வழக்.)

பருவாகை-ஒருமரம். (உ-ம்.) "அமுக்கிரி" பார். (தைல. தைலவ. சஉ.)

பருவி—திலேலை. (வைத்தியபரி.

பருவு—பரு. உகரஞ்சாரியை. (வழக்.)

பருஉ — 1. பருமை. (சூ. நிக. அ: கூ.) 2. பறித்தல். (பிங்கல. உகஉக.)

பருஉக்கை — வண்டியில் அச்சுமரத்தின் மேல் நெடியவாயிரண்டுபக்கத்து நெடுகக்கிடக் கும் பருமரங்கள். (பத்துப். பெரும்பா. சஅ.)

பரேச்சாப்பிராரத்தம் — ஒருவகைப் பிரா ரத்தம்; அது: ஓருவரொருகாரியஞ்செய்ய அத னுலவரை ஆக்கினை அபராதமென்று இராசாங் கத்தோர் சொல்ல அதற்கொருவர் வினைமுத லியவற்றலுறுமிருபயனுமாம். (சி. சி. உ: கஉ. மறை.)

பரோம்புழதை-மலையெருக்கம்பூ முதலியன. (பத்துப். குறிஞ்சி. கூசு.)

பரை — 1. ஆண்மபோதமடங்கினவிடத்து முற்றேன்றிய இச்சாஞாநக்கிரியைகள் விரி யாது நீங்கினவிடம். (ஒழிவி. சக.) 2. ஐந்து மரக்கால்கொண்ட ஓரளவு. (ஒரு வழக்குண்டு.) 3. ஐவகைச்சிவசத்திகளுளொன்று; அது: சுத் தான்மாக்களுக்கு அளவிறந்த தெய்வீகம் பொ ருந்திய ஞாநத்தால் சிவனுடைய பரிபூரண முள்ளளவும் அறிந்து உபரதியைக்கொடுக்குந் தன்மையாகிய அநுக்கிரகம்பண்ணுவது. (சதா சிவ. சு0.) 4. நைட்டிதீட்சை. (சி. சி. அ: நி. ஞாநப்.) 5. மூவகைச்சிவசத்திகளுளொன்று; அஃது: இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ் ணைஎன நான்குவிதப்படும். (சைவச பொதுவி. எசை. உரை.)

பரைதேரிசநம் — சூரியப்பிரகாசத்தைக் கண்ட கண் புடைபெயர்ந்துநோக்காது அச் சூரியப்பிரகாசத்தி லேகீபாவமாய்நிற்பதுபோல அருளென்றுந் தானென்றுஞ் சிறிதுந்தோன் றாது அவ்வருளே தானுய் நிற்பது.

பரைநாதம்–நெல்லிக்காய்க்கெந்தி. (தைல. தைலவ.)

பரையோகம்–– தற்போதமொழிந்த சுத்த நிலை. (ஒழிவி. யோக. உ0. உரை.)

பரோட்சஞாநம்–சற்காரிய பரிபாகத்தினுல் சொற்காதி போகம்போலப் பிரமமொன்றுண் டென்னு மாப்தவாக்கிய நிச்சயபுத்தி. (உபதிட தம்.)

பரோட்சத்துவம்—காட்சியின்மை.(வழக்.)

பரோட்சம் — அதிரிசயமானவை, பிரத்தி யட்சமாகாதது. (சைவப்பி. ஈச.)

பரோட்சநுபதேரிசநம்— பரோட்சரூபத் தைச் தரிசித்தல். (சி. சி. அ: கூ0. ஞாநப்.)

பரோபகாரம்—பிறர்க்குபகாரம். (வழக்.)

பரோபகாரன்—பரோபகாரி. (வழக்.)

பரோபகாரி—பிறர்க்குபகாரி. (வழக்.)

பரோன்முகி — எதிர்முகசித்சத்தி. (சி. சி. அளவை. க. சிவாக்.)

பல்—1. ஆயுதக்கருக்கு. அரிவாட்பல் லென்க. 2. நங்கூரநாக்கு. (ஒரு குழூஉக்குறி.) 3. பல். (சூ. நிக. உ: கூகூ.) 4. பல.

பல்கணி—பலசணி. (சூ. நிக. நி: நிச.)

பல்கல்–பெருகல். (திருவிளை. பாயிர. க.)

பல்கலை - பல அம்சங்கள். (உ-ம்.) "பத்தி ரட்டியினீரண்டொழிந்தபல்கலையோன்" (பா ரத. குரு தல.) நி. (கலை, அமிசம், கூறு, பங்கு என்பன ஒரு பொருளாம்.)

பல்காயனர் — ஒரு இலக்கண ஆசிரியர். (காரிகையுரையிற்காண்க.)

பல்கால்–அடிக்கடி. (திருவிளை.மூர்த்திவி. ஈக.) பல்கால், பலகால் இரண்டுமொன்றேயா மென்க.

பல்காற்பறவை–வண்டு. (உ-ம்.) 'பல்காற் பறவைகளேசெத்தோர்க்கும்'(பெரும்பா.சஅசை.)

பல்குதல் — பலுகுதல். (உ - ம்.) "பல்கிய விரும்பிணன்" (பிரமோத். சஞ்சா. உக.)

பல்சந்தமாலை–பத்துமுதலாக நூறுஈறுகப் பல்சந்தமுடையதாகி வருவதொரு பிரபந்தம்; இது: நேரிசைவெண்பாநூறு அந்தாதியாகவந் தால் வெண்பாஅந்தாதியென்றும், கலித்துறை நூறு அந்தாதியாகவந்தாற் கலித்துறையந்தாதி யென்றுஞ்சொல்லப்படும். (உ-ம்.)"பத்தந்தாதி நூறந்தம்பல்சந்தமாலையாம்"(வெண்பாப்.செய் யு. கூ.)

பல்பஞ்சாமிர்தம்-இரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டி அமைக்கப்பட்ட வாழைப்பழம், பலாப் பழம், மாம்பழமென்பவைகளின் தொகுதி. (சைவப்பி. கo0.)

பல்பல–பலபல. (கன்னூர.உயிரீற்றுப்.உo)

பல்லகி—சேங்கொட்டை. (வைத்தியபரி.)

பல்லக்கு–சிவிகை. (உ-ம்)"எழுவாப்பல்லக் காளாக்கிஞன்பல்கலேதேர்வேந்தனும்" (இன் னிசை. கச.)

பல்லணம்—குதிரைக்கல்லணை. (பிங்கல. கசுகசு.)

பல்லதி—சேங்கொட்டை. (வைத்தியபரி.)

பல்லம்—1. அம்பு. (உ-ம்.) "வேடர்பல்ல முயிர்நிலேவாயிற்பட்டமான்" (அரிச்ச. மயாந. சஉ.) 2. ஓரெண். 3. கரடி. 4. குதிரைக்கல் லணை. 5. சேங்கொட்டைமரம். 6. சேமரம். (2, 3, 4-சூ. நிக. கக: லகரவெ. கஎ.) (5, 6-வைத்தியபரி.)

பல்லரணை—ஒரு நோய். (உ-ம்.) "மூரல்-இடத்திலடர்காலொடுபல்லரணையுங் கொப்ப ளிக்கவாறும்" (தைல. தைலவ. உ.)

பல்லவத்தீநு–அசோகமரம்.(வைத்தியபரி.)

பல்லவம் — 1. தளிர். (சூ. நிக. ச: சஎ.) 2. தேயமைம்பத்தாறினொன்று. (திருவி ளே. திருமணப். எச.) 3. பதத்தினேருறுப்பு; அது: முதலிலுள்ளது.

பல்லவர்–1. கீழ்மக்கள். (சூ. நிக. உ: நுச.) 2. தார்த்தர். (சூ. நிக. உ: சநு.) 3. பலர். (உ - ம்.) "பல்லவராயரருகுநின்றபரிசனராங் கணங்கடமை" (சிவரக. நந்திகரை. கூ.)

பல்லவி—இசைப்பாட்டினேருறுப்பு. முத லிலுள்ளது. (வழக்.)

பல்லவை—1. பலசபை. 2. பலபொருள். (வழக்.)

பல்லாங்குழி—பலவாகுங்குழி; அது: ஒரு விளேயாட்டுப் பலகையிலுள்ளன.

பல்லாண்டு —1. பலவருஷம். 2. வாழ்த்து. (உ-ம்.)"பாவையர்பல்லாண்டிசைப்ப" (இராமா. திருவவ. சுகூ.)

பல்லாண்டுகூறுதல்– இன்னும்பலவருடம் வாழ்கவென்று வாழ்த்துச்சொல்லுதல். (சூளா மணி. அரும்பத உரை.)

பல்லாதகம்–
பல்லாதம்—
பல்லாதகி—
} சேமரம். (வைத்தியபரி.)

பல்லார்—பலர். (வள். பயனில். க)

பல்லி—கெஞுளி. (உ-ம்.) "சாகாட்டாரம் பொருந்தியசிறுபெண்பல்லிபோல" (புறநா. உரிகூ.)

பல்லிக்கை–
பல்லிகி -
பல்லிகை —
} சேங்கொட்டை. (வைத்தியபரி.)

பல்லிச்சாத்திரம்—கெவுளிநூல். (வழக்.)

பல்லிப்பூடு— கொல்லேப்பல்லி யென்னு மோர்பூடு. (வைத்தியபரி.)

பல்லினம்—
பல்லினர்—
} சதுரக்கள்ளி. (வைத்திய பரி)

பல்லுக்கீட்டுதல்–அலகுபூட்டுதல். (வழக்.)

பல்லுகம்—1. கரடி (சூ. நிக. கூ: உo.) 2. பெருவாகை. (வைத்தியபரி)

பல்லுங்கம்—மூங்கில் (வைத்தியபரி.)

பல்லுறுசெங்கலை — குதிரைப்பற்பாஷாணம். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பல்லூகம்—கரடி (சூ. நிக. கூ: உo.)

பல்லேலம்—வாவி. (சூ. நிக. நு: உகூ.)

பல–1. அநேக. (உ-ம்.) "நல்வினேயுழந்து பலநல்லுறவெடுத்தும்" (பிரமோத். பஞ்சா. கூஅ.) 2. சிவலோகத்திற் பச்சிமதிசையோலக் கஞ்சேவிக்கும் துவாதசமுக்கியகணைக்கர கண் ணியரிலொருவன். (வி-ணி) 3. நிவிர்த்திகலே யிற் பிருதிவ்தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவநங்களுளொன்று; இது: வருணதிக்கிலுள்ள பத்துப்புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை)

பலகடி—கவடி. (வைத்தியபரி.)

பலகணி—சாளரம். (சூ. நிக. நு: நுச.)

பலகறை —கவடி. (உ-ம்.) "பணிலமொத்த பலகறை" (அரிச்ச. மயாந. கூ.)

பலகாரம்-யானேமேற்றவிசு.(சூ.நிக.எ:உo.)

பலகேசரம்—தென்னே. (வைத்தியபரி.)

பலகை — 1. கேடகம். (சூ. நிக. எ: கஅ.) 2. தொட்டிப்பாடாணம். (வைத்தியபரி.) 3. மரமுதலியவற்றாலாயபலகை. (வழக்.)

பலகைக்கள்ளி—ஒருவகைக்கள்ளி. (வழக் குண்டுபோலும்.)

பலகைமரம் — நெய்வார்கருவிஞென்று. (ஒரு குழூஉக்குறி.)

பலகையுரு—வளேயலுப்பு. (வைத்தியபரி.)

பலசீசரீடம்—குன்றி. (வைத்தியபரி.)

பலசந்தமாலே–பொருட். நிகண்டு. பப்பத் துச்செய்யுள் ஒவ்வொருசந்தமாகதூறுசெய்யுட் கூறுவது. பதிற்றுப்பத்தந்தாதி யெனினுமாம்.

பலசாடவம்—மாதளே. (வைத்தியபரி.)

பலசாலி—பலமுள்ளோன். (வழக்.)

பலசிரேட்டம்—மாமரம். (வைத்தியபரி.)

பலண்டு — 1. வெங்காயம். (தைலவ.) 2. வெள்ளேப்பூண்டு. (வி-ணி.)

பலண்டுறுகபாடாணம் – விளைவுபாஷாண மூப்பத்திரண்டிலொன்று. (வைத்தியபரி.)

பலண்டுறுகம் — பலண்டுறுகபாஷாணம்.

பலத்தல்—வன்மையாதல். (வழக்.)

பலத்தியம்– } திரிபலை. (வைத்தியபரி.)
பலத்திரயம்– }

பலதூசு—புளியாரை. (வைத்தியபரி.)

பலதேவன் — பலபத்திரன். (உ-ம்.) "பல தேவன்-சுட்டியப்புனற்பழிச்சியேதுவாரகை த் தொல்பதியிடஞ்செல்வான்" (சேதுபு. இலக் கும. உகூ.)

பலப்படல் — 1. சூலாதல். 2 திரப்படல். 3. பயன்படல். (1, 2, 3-வழக்.)

பலப்பல — பலபல. (நன்னூ. உயிரீற்று. உ0. உரை.)

பலப்பித்தல்—பலப்படுத்தல். (வழக்.)

பலப்பிரமதநர்—சூரியமூர்த்திக்கு ஈஸ்பர ராகிய உக்கிரர் இவர்பாசத்தைநீக்கு மீஸ்பரர். (சி-லி. ஞானப். சு. உரை.)

பலப்பிரமதநி — 1. சாந்திகலையிற் சுத்த வித்தியாதத்துவத்திலிருக்கும் ஒன்பது புவநங் களுளொன்று. (சி-லி.கிரி உக. உரை.) 2 பலப் பிரமதநருடையசத்தி. (சி-லி. ஞாந. சு.உரை.)

பலப்பிரேதம்—திப்பிலி. (வைத்தியபரி.)

பலபடப்புனைவணி—ஓரலங்காரம்; அஃது: ஒருபொருளிற்பலரும் பலதருமங்களால் பொ ருள்களோ ஆரோபித்தலும் ஒருவரே ஒருபொரு ளில் விடயபேதங்களால் ப ல பொருள்களோ யாரோபித்தலுமாம். [வ-று.] "ஆரணங்காணெ ன்பர்-திருக்கோ·முகம்" எனவும், வில்லிற்குவி சயன்கல்விக்குச்சேடன்எனவும்வரும்" (வழக்.)

பலபண்டம்—1. பண்ணியம். (சூ. நிக. சு: சுஉ.) 2. பலபொருள்.

பலபத்திரன்—பலதேவன். (உ-ம்.) "காழு லக்கைகொள்கைப்பலபத்திரன்"(சேதுபு.இலக் கும. கூ.)

பலபத்தம்—வலோற்காரம். (வழக்.)

பலபல—பற்பல. (நன்னூ. உரைமீற்று. உ0. உரை.)

பலபலெனல்—ஒலிக்குறிப்பு. (வழக்.)

பலபாண்டம்—அரிதாரம். (வைத்தியபரி.)

பலபூரகம்– } மாதுளை. (வைத்தியபரி.)
பலபூரம்— }

பலபெயர்த்திரிசொல் – செந்தமிழ்நிலத்து மொழியாகிக் கற்றோர்க்குமாத்திரம் பொருள் விளக்கி யொருபொருளைக் குறித்துவரும் பல பெயர்ச்சொல். [வ-று.] "கிள்ளை,சுகம்,தத்தை என்பன, கிளி என்னும் ஒருபொருள் குறித்த பலபெயர்த்திரிசொல். (நன். உஎஉ. உரை.)

பலபொருட்சொற்றொடரணி — ஓ ர ல ங் காரம்; அது: பலபொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக்கூறுதல்.

பலபொருளுதறித்தவொருவினைத்திரிசொல்– செந்தமிழ்நிலத்துமொழியாகிச் செய்யுட்கேயு ரியதாய்க்கற்றோர்க்குமாத்திரம் பொருள்விளக் கிப்பலபொருடருமொரு வினைச்சொல்.(வ-று.) "வரைந்தான்என்பதுநீக்கினான், கொண்டான் என்னும்பலபொருள்குறித்தவொரு வி னை த் தி ரி சொல்" (நன். உஎஉ. உரை.)

பலபொருளுதறித்தவோரிடைத்திரிசொல் — செந்தமிழ்நிலத்துமொழியாய்ச்செய்யுட்கேயுரி யதாய்க்கற்றோர்க்குமாத்திரம்பொருள்விளக்கிப் பலபொருடருமோ ரி டை ச் சொ ல்.[வ-று.] "கொல்என்பது, ஐயமும்அசைநிலையுமாகியபல பொருள்குறித்த ஓரிடைத்திரிசொல்" (நன். உஎஉ. உரை.)

பலபொருளுநுறித்தவொருரித்திரிசொல்–அரி தாணர்பொருளாய்ப் பலபொருடருமோ ரு ரி ச் சொல். [வ-று.] "கடிஎன்பது, காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் மூத லிய பலபொருள்குறித்த ஒருரித்திரி சொ ல்" (நன். உஎஉ. உரை.)

பலபொருவுவமை—ஒருபொருட்குப் பல வுவமையையெடுத்துக் கா ட் டி வ து. [வ-று.] "வேலுஞ்சேலும்போலும்விழி" (தண்டி ய ல. கூ0. உரை.)

பலபொருளொருசொல் — பல அருத்தங் கொள்ளுஞ்சொல். (உ-ம்) "பகவனேபீசன்மா யோன்" (சூ. நிக. கக. ககரவெ. க.)

பலம் — 1. ஆதாயம். (வழக்.) 2. காய். 3. கிழங்கு. 4. சேராங்கொட்டை. (வைத்திய பரி) 5. சே னை. 6. நிறையளவிலொன்று. (பிங்கல. கஎகூ) 7. பயன். (உ-ம்.) "பலமருந் தற்கங்கோரங்கமேயும்" (கொலைமறு. சு.) 8. பழம். 9. வலிமை. 10. வெட்பாலை. (தைல. தைலவ. ககஉ.) (2, 3, 5, 7, 8, 9-சூ. நிக. கக: லகரவெ. சு.)

பலம்பலா—சிற்றாமுட்டி. (வைத்தியபரி.)

பலம்பழம்—சேங்கொட்டை. (வைத்திய பரிபா.)

பலமீலாமரம் — அவகேசியென்று பெயர் கூறுவர். (சூடாமணிநிகண்டில்.)

பலமை—குன்றிமணி. (வைத்தியபரி.)

பலர்பால் — ஆண்பன்மையையும் பெண் பன்மையையுமாகிய இருவர்பாற்கும் பொதுப் பன்மையுங்காட்டிநிற்பது. (நன்னூ. வினையி யல். எ: உரை.)

பலறிசொல்—1. பெருஞ்சொல். (சூ.நிக. கo: க.) 2. உயர்திணைப்பன்மைச்சொல் (நன் னூ. வினை யி. அ.) 3 பிரசித்தவார்த்தை. (வழக்.)

பலாமன்—பலபத்திரன். (வழக்.)

பலலோத்திரம்–வெள்ளிலோத்திரம். (வைத்தியபரி.)

பலலம்—பிண்ணாக்கு. (வைத்தியபரி.)

பலவத்தர்–பரிசமாத்திராதத் துவத்திருக்கு மோருருத்திரர். (வி-ணி.)

பலவத்து—பலத்தையுடையது. (சி.சி.உo: சo. சிவாக்.)

பலவந்தம்—பலபந்தம். (வழக்.)

பலவயிற்போலியுவமை—ஒரு வாக்கியப் பொருளினுலே மற்றைவாக்கியப் பொருளுவ மிக்கப்படுதாய்ப் பலவிடங்களிலேயுவமவருபு வெளிப்பட்டுநிற்கவருவது. (தண்டி. கூo. உரை.)

பலவறிசொல்—அ, ஆ, வ-எனவருமிறுதி யையுடைய அக்கூற்றுமூன்றுசொல். (உ-ம்.) "அ,ஆ,வ,எனவரூஉமிறுதி - யப்பான்மூன்றே பலவறிசொல்லே" (தொல். சொல். கூ.) [பல வற்றையறிதற்குகாரணமாகியசொல்என்பது.]

பலவன்—ஒருமருந்துப்பூண்டு; அது: வெடி பலவன், பேய்ப்பலவன் என இருவகைத்து. (வைத்தியபரி.)

பலவான்—பலசாலி. (வழக்.)

பலவிகரணர் — சந்திரமூர்த்திக்கு ஈஸ்வர ராகிய மகாதேவர். (சி-லி. ஞாந. சு. உரை.)

பலவிகரணி–1. சாந்திகலையிற் சுத்தவித்தி யாதத்துவத்திருக்கும் ஒன்பது புவநங்களு ளொன்று. (சி-லி. கிரியா. உக. உரை.) 2. பலவி கரணரதுசத்தி. (ஞாந. சு. உரை.) [பலத்தை விசேஷமாய்ச்செய்வது என்பது பொருள்.]

பலவிருக்சகம்–பலாமரம். (வைத்தியபரி.)

பலவின்கூட்டத்தும்கிழமை—பலவகைப் பொருள்களது தொகுதியென்னுற்போல்வரும் பலபொருட் கூட்டத்தற்கிழமை. (நன். கூoo. உரை.)

பலவின்பால்—அஃறிணைப்பன்மைப்பால். (நன். உஅo. உரை.)

பலவினீட்டம்-பலபொருட்கூட்டம்.(உ-ம்.) "ஒன்றன்கூட்டம்பலவின் கூட்டம்" (நன். கூoo.)

பலவினைச்சிலேடை — சிலேடையணியு ளொன்று; அது: பலவினைபற்றிவருவது. (தண்டி. எசு. உரை.)

பலவினைத்திரிசொல்—சென்தமிழ்நிலத்து மொழியாய்க் கற்றோர்க்குமாத்திரம் பொருள் விளக்கி ஒருபொருள்குறித்த பலசொல்லாய் வரும்வினைச்சொல். [வ-று.] "படர்ந்தான்சென் றான்என்பனபோயினுனென்னும் ஒருபொருள் குறித்தபலவினைத்திரிசொல்(நன்.உஎஉ.உரை)

பலவு—பலாமரம். (உ-ம்.) "பாடலநெடும் பலவுபைங்கமுகு" (திருவாத.திருப்பெரு.கஉ.)

பலவுறுதிநமணி—பலவிலேபெற்ற அழகிய மாணிக்கம். (மலைபடி. நிகசு.)

பலன்—1. இந்திரனுற்கொல்லப்பட்டவோ ரிராட்சதன். 2. இலாபம். (பிங்கல. கஎகூசு.) 3. ஈரவெண்காயம். (வைத்தியபரி.) 4. சதருத் திரரிலே வருணதிக்கினிருக்கும் தசருத்திரரி லொருவன். (வி-ணி.) 5. பலராமன். (உ-ம்.) "என்றப்பலற்குக்கடல்வண்ணனியம்பினனே' (பாரத. அருச்சுனன்தீர். அo.) 6. பழம்.(உ-ம்.) "செம்பொற்கிரியைத்தனிவலம்வரவரந்தப் பலனேக்கரிமுகன்வசமருளும்பொற்பத னுலே" (திருப்பு. கடிo.) [னகரம்-போலி.] 7. பிரயோசனம். (வழக்.)

பலா—1. ஒருமரம்; அது: வருக்கைப்பலா, ஈரப்பலா, சிறுபலாவெனப் பலவகைப்படும். (உ-ம்.) "பலாமாவைப்பாதிரியைப்பார்"(தனிப்பா. .) 2. சிற்றுமுட்டி. (உ-ம்.) "அசுவகந்தி பலாலாட்சை" (தைல. தைலவ. உசு.)

பலாகாரம்—பழமுதலியபோசனம். (வழக்.)

பலாங்கம்—ஒருமீன். ஒருகுழூஉக்குறி போலும்.

பலாசம்—1. இலை. (பிங்கல. உஅoசு.) 2. ஈரப்பலா. (பிங்கல. உoஎடி.) 3. பச்சைநிறம். அம்-சாரியை. (பிங்கல. கூஎகூசு.) 4. புரசு. (உ-ம்.) "பலாசக்கோல்கையுந்தாங்கி" (திருவிளை. நகர. அசு.) 5. புனமுருக்கு. 6. முருங்கை. (5, 6-வைத்தியபரி.)

பலாசாக்கியம்—பெருங்காயம். (வைத்தியபரிபா.)

பலாசு—புனமுருக்கு (சூ. நிக. சு: உசு.)

பலாண்டு—ஈரவெங்காயம். (வைத்தியபரி.)

பலாதம்—
பலாதவம்– } பூனைக்காலி. (வைத்தியபரி.)

பலாதிக்கம்—ஆதிக்கமான பலனுடையது. (சி. சி. அ: ககூ. மறை.)

பலாந்தம்—மூங்கில். (வைத்தியபரி.)

பலாபலம்—நயநட்டம். (வழக்.)

பலாபலன்—பலாபலம். (வழக்.)

பலாமடக்கீரைதலம்—ஒருவகைத்தைலம். இதனிலக்கணம் (தைல. தைலவ. உடி, உசு-ஆம் கவிகளிற்பார்.)

பலார்கம்—பிரயோசனத்துக்குரியது.(சி.சி. அ: டி. ஞாந.)

பலார்த்தம்–அரைப்பலம்.(தைல.தைலவ.)

பலார்த்தி—பலத்தில் விருப்பு. (சி. சி. உ: நிஅ. சிவாக்.)

பலாரோனல்—விடியற்குறிப்பு. (வழக்.)

பலாலம்—வைக்கோல். (உ-ம்.) "நெற்பதரப்பலாலத்திற்பலன்றரும்" (சங்கற்ப. நிராகரணம்.)

பலாற்காரம்—வலோற்காரம். (வழக்.)

பலி—1. காகம். 2. திருச்சமதமுநிவரின் கோபாக்கினியிற்றோன்றினவன்; இவன்: விநாயகப்பெருமானருளினாலே சுகிலம், சுபிலம், சுவிர்த்தியென்னும் பொன், வெள்ளி, இரும்பு என்பவற்றாலாய கோட்டைகளைப்பெற்று னென்றும், அவற்றுள் சுகிலத்தை, வச்சிரதமிட்டிரன் என்னுங்குமாரனுக்கும் சுபிலத்தை வீமகாயன்என்னும் புத்திரனுக்கும் சுவிர்த்தியைக் காளகூடனென்னுங் குமாரனுக்கும் கொடுத்துத் திரிலோகங்களிலும் முறையே வசிக்க வைத்தானென்றும் அவர்களம்மதில்களோடெழுந்துதிரிந்து பகைவரையழித்துவந்தனரென்றும் பார்க்கவபுராணஞ்சொல்லும். (கூர்ம பு. தக்கன்வமி. சஅ. உரை.) 3. சாம்பல். (சூ. நிகண்டில் வெண்பலியென்றார். அடைமொழியை நீக்கினர்போலும். 4. பலிப்பது. 5. பிச்சை. (உ-ம்.) "துறவடைந்தோர்க்கருத்துபலி" (திருவிளை. மெய்க்கா. க0.) 6. பூசை. (உ-ம்.) "பாரினடச்சும்பலிநடவாப்பழஞ்சேதிமத்தில்" (சேதுபு. வேதாளவர. உரு.) 7. போசநம். (உ-ம்.) "சிஞ்சினி"பார். (1, 3-பிங்கல. கஎகரு.)

பலிகை—பிண்ணாக்கு. (வைத்தியபரி.)

பலிச்சக்கரவர்த்தி—மாவலியென்றபெயர். (வழக்.)

பலிசை—இலாபம். (புறப்பொருள்வெ.)

பலித்தல்—1. இலாபம். (பிங்கல. கஎகூ.) 2. பலத்தைக்கொடுத்தல். (உ-ம்.) "வயலிடுந்தழையுந்தின்னுமருந்தும்பின்பலிக்குமாபோல்" (சி. சி. உ: கஎ.) 3. வாய்த்தல். (உ-ம்.) "யாண்டும்பலித்திடாப்பணியுமுண்டோ" (சேதுபு. வேதாள. ருக.)

பலிதம்—1. பலிப்பது. (வழக்குண்டு.) 2. மயிர்நரை. (உ-ம்.) "பலிதரோகலட்சணம்" (சீவரட். உகூ.)

பலிநம்-காய்த்திருக்குமரம். (சூ.நிக.சு:நிஉ.)

பலிப்பிரியம்—நிவிர்த்திகலையிற் பிருதிவித்தத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப் புவநங்களுளொன்று; அது: ஈசாநதிக்கிலிருக்கும் பத்துப் புவநங்களுளொன்று. (சி-லி.சிரியா.உ.உ கஎ.)

பலிப்பிரியன்—ஈசாநதிக்கினிருக்கும் தசருத்திரரிலொருவன். (சி-னி. உஎ0.)

பலிப்பு—பலித்தல். (உ-ம்.) "பக்கநோக்கிப் பலிப்பறிந்தெங்களும் மிக்கசெந்நெலும்வெண்ணெலும்மீத்திருர்" (அரிச்ச. நாட்டு. கூஅ.)

பலிபீடம்—பலிசெலுத்தும்பீடம். (உ-ம்.) "பலிபீடத்தினுமைபாகனுண்டிகைக் கொண்பானன்றே" (சிவரக. பலிபூட. கக.)

பலிபுட்டம்—காக்கை. (பிங்கல. உசுகஎ.)

பலியரி—சிற்றுமுட்டி. (வைத்தியபரி.)

பலிநி—1. காய்த்திருக்குமரம். 2. கோங்கு. 3. ஞாழல். (பிங்கல. உசுஅஉ.) 4. நாணற்றூது. (உ-ம்.) "கர்ப்பூரம்"பார். 5. மிளகு. (தைல. தைலவ.) (1, 2-வைத்தியபரி.)

பலுகல்— பெருகுதல். உகரஞ்சாரியை.
பலுதுதல்-

பலை—1. சிற்றுமுட்டி. (உ-ம்.) "ஏமபுட்பி" பார். (தைல. பாயிர. உச.) 2. வெப்பம் பசிதாகத்தையோட்டுவதென்றுசொல்லப்படுமொருமந்திரம்; இது: விசுவாமித்திரரால் தசரதராமருக்கு மிலக்குவற்கும் உபதேசிக்கப்பட்டுள்ளது. (உ-ம்.) "அதிபலையுஞ்சேர்த்துஇரண்டுமுபதேசித்தாரென்பர்" (இராமர. தாடகை வதைப். கஅ.)

பலையுறுதைலம்—சிற்றுமுட்டித்தைலம்; இதனிலக்கணம்: (தைல. தைலவ. உஎ-ல் காண்க.)

பலோத்தமை— கொடிமுந்திரிப்பழம்.
பலோர்த்தனம்— (தைல. தைலவ.)

பலோநகம்—பாதிரி. (வைத்தியபரி.)

பலோற்காரம்—வலோற்காரம். (வழக்.)

பவ்வம்—பௌவம், கடல். (உ-ம்.) "பவ்வவுலகத்தவர்பழிக்கவுரையென்றான்" (பிரமோ: சேமந்தனி. நிசை.) (பேலி.)

பவ்வியம்—பக்குவம். (சிந்தா.)

பவ்வியை—யானைத்திப்பிலி. (வைத்தியபரிபா.)

பவ்வியன்—கோமேதகத்தீவுக்கதிபதி. (தநி. போ.)

பவ—வியாழவட்டமாகிய அறுபதுவருடங்களிலே எட்டாம் வருடம். (வருஷாதிநூல்.)

பவணந்தி—நன்னூலென்னு மிலக்கணநூல்செய்த ஓராசிரியன். (உ-ம்.) "பவணந்தியென்னுநாமத்திருந்தவத்தோனே" (நன். சிறப்புப்பா.)

பவணம்—பவணலோகம். (உ-ம்.) "பத்தாம் பவணத்தோரெழுகோடியெண்ணெண் பாணிலக்கம்" (திருநூற். கூஉ.) [இது பத்தெடுக்காயுள்ளதென்றும் எழுகோடியே எழுபத்திரண்டு நூறுயிரஞ் சொலாயங்களிதிலுள்ளனவென்றுங்கூறுவர்.] சிந்தாமணியில் நாகலோகமென்றார்.

பவணர்—அருகசமையத்தவராற் சொல்லப்படும் ஒரு தேவர். (திருநூற். நிகழ. உரை.)

பவணை—கழுகு. (சூ. நிக. ஈ: நிச.)

பவநம்—1. அரசர்கோயில். (பிங்கல.சுநிஉ) 2. இடம். (தைல. பாயிரம். கூ.) 3. இராசி. (உ-ம்.) "சங்கரனூர்திராமந்தங்கியபவநந்தன்னில்" (சேதுபு. இராமனரு. அஅ.) 4. காற்று. 5. நாகலோகம். (திவாசரம். நி: ஈ.) 6. பூஞை. (பிங்கல. உநிசஅ.) 7. பூமி. சூ. நிக. நி: எ. 8. வாயு. (தைல. பாயிர. கூ.) 9. வீடு. (பிங்கல. சுசுகூ.)

பவநவாயி—பவநவாசல். (வழக்.)

பவநன்—காற்று. (உ-ம்.) "பண்னிருகரத்துவள்ளல்பவநனைக்குறிப்பாளேக்கி" (கந்தபு.சூரபன்மன்வதை. சடு.)

பவநாசநம்—பாம்பு. (உ-ம்.) "உருப்பவநாசநவாய்த்தேரை" (மறைசை. சுஈ.)

பவநாசனீ—கடவுள். (வழக்.)

பவபூதி—ஒருவடமொழிப்புலவன். (வ்ழக்.)

பவம்—1. ஒரு காரணம்; இது: பூர்வபக்கப் பிரதமைப்பிற்கூறும் பூர்வபக்கபஞ்சமி முற்கூறும் பூர்வபக்க அட்டமிபிற்கூறும் பூர்வபக்கத்துவாதசிமுற்கூறும் பௌரணமுற்கூறும். அபரபக்கச்சதுர்த்திமுற்கூறும் அபரபக்கச்சதமிபிற்கூறும் அபரபக்க ஏகாதசிமுற்கூறும். (விதாக. பஞ்சாங்க. உகூ.) 2. பாவம். (உ-ம்.) "சொல்லரும்பவமலெதொலைந்தது" (சிவரக. மேரு. நி.) 3. பிறப்பு. (உ-ம்.) "பவக்கருமங்குலத்தமெய்யன்பர்க்குவீடு" (ம-தி. சஅ.) 4. மேன்மை.

பவமாநம்—ஒருமந்திரம். (உ-ம்.) "நண்ணுசீருருத்திரத்தைநமகமார்சமகந்தன்னே பண்ணுமர்பவமாநத்தைப்பஞ்சசாந்தியைமுன்னுகவெண்ணுமாமந்திரங்களியம்புவானிரயமெய்தான்" (சேதுபு. இராமநாத. சஎ.)

பவமானன்—1. தீக்கடைகோலினின்றுந்தோன்றுமக்கினி. (உ-ம்.) "அரணிதனிற்பிறந்தவழல்பவமானன்" (கூர்மபு.முனிவ. கo.) 2. வாயு. (உ-ம்.) "பவமாநநாட்டின்வரம்பிலாவரிசைமேவும்" (சேதுபு. இராமநாத. நிகூ.)

பவர்—1. அட்டமூர்த்திகளிலொருவர். (கந்தபு. கணங்கள்செல். கக.) 2. ஆர். (உ-ம்.) "பவரிற்செறியநிரைத்தருளுஞ்" (பாரத.திரௌபதி. சஎ.) 3. கொடி. (உ-ம்.) "நெடுங்கொடியுழிஞைப்பவரொடுமிடைந்து" (புறநா. எசு.) 4. சலமூர்த்தியீஸ்வரராகிய சேட்டர். (சி-லி. ஞாக. ச. உரை.)

பவர்க்கம்—நரகம். (உ-ம்.) "பவர்க்கமேவிலா" (சேதுபு. கவிதீர். கூ.)

பவரு — சூரியனது துவாதசராகூஷ்தர்களாகிய மெய்காவலருள் ஒருவர். (வி-ணி. உசடு.)

பவளக்கால்—1. ஒரு புள். 2. ஒரு பூடு.

பவளக்குண்டு—கடுக்காய். (வைத்தியபரி.)

பவளக்குறிஞ்சி-ஒருபூண்டு.(வைத்தியபரி.)

பவளச்சோளம்—ஒரு சோளம். (வழக்.)

பவளதீர்—குருதி. (சிந். முத். அஎ.)

பவளநெடுங்குறிஞ்சியோன் — வயிரவன். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பவளப்புற்றுப்பாடாணம்—ஓர்வகைப் பாடாணம். (வைத்தியபரி.)

பவளப்பூண்டு—ஒருபூண்டு.(வைத்தியபரி.)

பவளப்பூல்—பவளப்பூலா.

பவளப்பூலா—ஒருசெடி. (வைத்தியபரி.)

பவளம்—நவமணியிலொன்று (உ-ம்.)"பவளமால்வரையினிலவெறிப்பதுபோல்" (திருவாத. காப்பு.)

பவளமநோசிலை—ஒருசரக்கு. (வழக்.)

பவளமல்லிகை — ஒருமல்லிகை. (வைத்தியபரி.)

பவளவங்காரவாச்சி—ஒருபூண்டு. (வைத்தியபரி.)

பவன்—1. உருத்திரனுடைய வியூகர்மூவரிலொருவர். (சேதுபு. சங்கரதீர். கக: உரை.) 2. சிவன். (உ-ம்.) "பவன்பிரமசாரியாகும்" (கி.கி. உ: எஎ.) [உற்பத்திகளேப்பண்ணுவிக்கையால் வந்தபெயர்.] 3. மகேசுரனுடைய அழுகையிலுதித்த எழுவரிலொருவர். (கூர்மபு.அட்டமூ. கஉ,கஙு. உரை.) [இவருக்குவடிவம்நீரென்ப.]

பவனி—உலாப்போதல். (உ-ம்.)"பள்ளி"பார்.

பவனிக்காதல்—பவனிவந்தலைமகன்மேற் கொண்ட காமத்தாலவன் சிறப்பைப் பிறரோடுரைத்துத்தலைவிவருந்துவதாகக்கூறுவதொரு பிரபந்தம். (தொன். உஅங. உரை.)

பவாநி — 1. காவிரியாற்றின் கிளைநதி. 2. கோயம்புத்தூர்க்கருகில் ஒரூர். 3. துர்க்கை. (உ-ம்.)'பவானியடிசிந்தனையில்வந்தனைசெய்தே' (சிவரக. தாருக. கஉ.) 4. பார்வதி. (உ-ம்.) "பவானிமுதலாப்புகலுந்தனிநாமங்கள்செப்பி" (சிவரக. கணபதியுடன்கடவு. எ.)

பவி—நீர். (வைத்தியபரி.)

பவிடியம்—1. எதிர்காலம். 2. சிவபுராணங்கள் பத்தினொன்று; அது: சம்ஸ்கிருதபாஷையிலே மூப்பத்தோராயிரங் கிரந்தமுடையதாய்ப்பிரமாவானவர் சூரியனுடைய மான்மியத்தை மநுவுக்குரைத்தபின்னர் அவர்மநுவுக்கு அகோரகர்ப்பத்திலே உலகமுளதாமுறைமையையும் சிருட்டிபேதமுதலியவைகளேயும் உரைத்ததாக வுணர்த்துவது. (கந். நவ. உடு.)

பவித்திரகம்–1. அத்திமரம். 2. அரசமரம். 3. தருப்பைப்புல். 4. நெய். (1, 2, 3, 4-வைத்தியபரி.)

பவித்திரம் — 1. சிலசமயங்களில் நாலாம் விரலிலேயணிந்துகொள்ளுந்தருப் பைப் புல் மோதிரம் 2. சுத்தி. (உ-ம்.) "பழுதுபுகுந்தது தீரப்பவித்திரமாஞ்செயல்புரிந்து" (பெரியபு. கண்ணப்ப. கஙகக.) 3. சுத்ததத்துவம். (சி. சி. உ: எ0. ஞாநப்.) 4. தேன். 5. நெய். 6. பாவத்தைநீக்கிமோட்சத்தைத்தருவது. (உ-ம்.) "பன்னரும்புனிதமானபவித்திரமாகிநிற்கும்" (திருவிளை. தீர்த்தவி. உக.) 7. பூணூல். (உ - ம்.) "பவித்திரோற்சவம்" 8. யாகத்திலேபிரயோகிக்கப்படும் ஒரு புல்லு. (4,5,8-வைத்தியபரி.)

பவித்திரமோதிரம்—பவித்திரமுடிச்சாய்ச் செய்த மோதிரம். (வழக்.)

பவித்திரவான்–பவித்திரன்— சுத்தியுள்ளவன். (வழக்.)

பவித்திராபவித்திரம்—சுத்தாசுத்தம். (சி. சி. உ: எ0. ஞாந.)

பவித்திரி — 1. சுத்தன். இ-விகுதி. 2. தருப்பை. (வைத்தியபரி.)

பவித்திரிகணம்—நெய். (வைத்தியபரி.)

பவித்திரை–தூய்மையுள்ளவள். (திருவிளை. மலயத்துவச. கஎ.)

பவிதம்—மிளகு. (வைத்தியபரி.)

பவிதுர்மகதி—இருக்கக்கூடும். (சி. சி. ச: கஙு. சிவாக்.)

பவினி—நாணல். (வைத்தியபரி.)

பவுட்கரம் — ஓராகமம். இதற்கு உமாபதி சிவாசாரியர் உரைசெய்திருக்கிறார் துறைசையாதீனத்திலிருக்கிறது.

பவுசு — வாழ்வு. (வழக்.)

பவுண்டரம் – வீமன்கையிற்சங்கு.(பாரதத்திற்காண்க.)

பவுண்டரிகம்—ஓர்யாகம். (உ-ம்.)"பரிமேதமாயிரத்தோடயுதபவுண்டரிகத்தாக்கம்" (சேதுபு. தராசார. கூஅ.)

பவுத்திரன்—பௌத்திரன். (உ-ம்.) "புத்திரன்சேயானமுறையாற்பவுத்திரனென்றறையும்பெருமடைந்துள்ளான்" (சேதுபு. முத்தீர்த்த. கசு.)

பவுத்துவம்—மரகதம். (வைத்தியபரி.

பவுதிகப்பிரமசாரி—கங்காகல்யாணகாலமட்டும் விரதம்நியமித்துத் துறவியாயிருக்கிறவன். (சி. சி. அ: நி. ஞாநப்.)

பவுதிகம்—பௌதிகம், பூதவிகாரம்.

பவுதிகீதீட்சை — ஒரு தீட்சை. (சி. சி. அ: ச. ஞாநப்.)

பவுந்திரம் — பகந்திரம்; அது: அண்டப்பவுந்திரம், கொடிப்பவுந்திரம், மூலப்பவுந்திரமெனப் பலவகை. (வைத்தியநூலிலறிக.)

பவுர்ணமீ—பவுரணை. (வழக்.)

பவுரணை—பௌரணை, உவா.

பவுரம்—பவுரணை. (உ-ம்.) "பவுரத்திற்பகனல்லகோள்மூர்த்தம்பெறவசந்தங் கொள்க" (விதாந. தெய்வ. எ.) [பவுரணைஎன்பது பவுரமென விகாரமாயிற்று.]

பவுரி—கூத்தின்விகற்பம். (உ-ம்.) "பதியாயிருந்ததேகப்பவுரிகுலை-யாமலே" (தாயு. சித்தர்க. ச.)

பவுரிசம்—வேஷம். (வழக்.)

பவேசம் — வித்தியாகலையிற் புருடதத்துவத்திலிருக்கும் ஆறு புவநங்களுளொன்று. (சி. லி. கிரியா. உக. உரை.)

பவோற்பவன்—பன்னிருருத்திரரிலொருவன். (வழக்.)

பழக்கம் — 1. அறிமுகமாதல். 2. பயிற்சி. பழக்கங்கொடியதுபார் என்பது ஒழிவிலொடுக்கம். 3. வழக்கம். (1, 3-வழக்.)

பழக்குதல்–1 பயிற்றல். 2. வழக்குஞ்செய்தல். (1, 2-வழக்.)

பழகல்—பழகுதல். (சூ. நிக. க: சகு.)

பழதுதல்–1. பயிலல். 2. வழங்குதல்.(1, 2-வழக்.)

பழங்கண்—1. இளைப்பு. (சூ. நிக. க: சுக.) 2. ஒலி. (சூ. நிக. கக: றகரவெ. கச.) 3. துன்பம். (உ-ம்.)"முனிவரிமையவர்தம்பழங்கணீங்க" (சிவராத். கடவுள். அ.)

பழங்குடி–தொன்றுதொட்டுமேம்பட்டு வருகின்றகுடியின்கட்பிறந்தவர்.(உ-ம்.) "வழங்குவதுள்வீழ்ந்தக்கன்னும்பழங்குடி–பண்பிற்றலைப்பரிதலின்று" (வள். கஙுடு.)

பழஞ்சரக்கு — 1. பழையமருந்துச்சரக்கு. (வழக்.) 2. பிராரத்தவினை. (உ - ம்.) "கூடற்பதியிலேபுகுந்தளவில்வறிதேதீயபழஞ்சரக்கும் புதுச்சரக்கும்பணியற்றேனே" (மதுரைப்பதிற்று. சகு.) குறிப்பு.

பழஞ்சொல்—பழமொழி. (பிங்கல. எ: உ0உடு.)

பழப்பாசம்—கருஞ்சீரகம். (வைத்தியபரி.)

பழப்பேசி—செப்புநெரிஞ்சில். (வைத்தியபரிபா.)

பழம்–1. கனி. (உ-ம்.)"பழச்சுமையிஞ்ஞை" (திருவாச. திருப்போற். சடு.) 2. தேசிப்பழம். (வைத்தியபரி.)

பழம்பஞ்சுரம்–ஒருபண். (பிங்கல. கஙுகக.)

பழம்பாசம்—கருஞ்சீரகம். (வைத்தியபரி.)

பழம்பாசி—ஒரு பூடு. (வைத்தியபரி.)
பழம்பேசி — செப்புநெருஞ்சில். (வைத்தியபரி.)
பழம்பொருள் — 1. கடவுள். (உ-ம்.) "முப்பொருளாம்பழம்பொருள்" (சிவரக. கணபதி வந்தனை. உரை.) 2. பழயபொருள். (வழக்.) 3. புதையல்.
பழமலை—விருத்தாசலம். (சிவரகசி. கந்தி கே. கக.) விருத்தாசலபுராணத்திலுமதிக.
பழமுன்னீப்பாலை—ஒரு மரம்.
பழமை — 1. பூருவம். (பிங்கல. உஉ0அ.) 2. மரபுபற்றிவருகை. (வழக்.)
பழமொழி — 1. அறிவாற்சிறந்து காலங் கண்டு பிரபஞ்சஇயற்கையைச் சாட்சாத்காரமா யுணர்ந்தபெரியோர்கூறிய ஞானம் நிறைந்தமுதுமொழிகள். (ப-மொ.) 2. ஒரு நீதிநூல்; இது: சங்கமருவியநூல்.
பழவினை—ஊழ்வினை. (நாலடி. தீவினையச். கூ.)
பழனம்—1. பொய்கை. (உ-ம்.) "மலங்குமிளிர்செறிவித்றளம்புசடிந்திட்டபழனவாளைப்பரூஉக்கட்டுணியல்" (புறநா. சுக.) 2. மருதநிலம். (பிங்கல.றுகசுக.) 3. வயல்.(உ-ம்.) "இச்சொற்பழனப்பாஞ்சாலர்க்கிறைவன்புதல்வனியம்புதல்கேட்டு"(பாரத.திரௌபதி. கூஉ.)
பழனி—திருவாவினன்குடி. (வழக்.)
பழி—1. குற்றம். (பிங்கல. கஅசுக.) 2. தீவினை. (உ-ம்.) "ஒருவற்குயற்பாலதோரும் பழி" (வள். சo.) 3. நிந்தை. (உ-ம்.)"பாபமும் பழியும்பூண்டுபடிக்கொருபொறையாய்நின்றூர்" (கந்தபு. தநீசியுத். கசஅ.) 4. தெரிவிலைவினைப்பகுதி.
பழிகாரன்—பழிவாங்குவோன். (வழக்.)
பழிகிடத்தல்—யாதொன்று பெறுவதற்குப் பட்டினிகிடத்தல். (வழக்.)
பழிகூறல்—தூற்றல்; அது: மும்மொழியினொன்று. (சூ. நிக. கஉ: எ.)
பழிச்சல்— } துதித்தல். (பிங்கல.உ0oஎ.)
பழிச்சுதல்— }
பழிச்சொல்—பழிமொழி. (வழக்.)
பழிசை—பழித்தலையுடையது. (கலி. கo சு. உரை.)
பழித்தல்—நிந்தித்தல். (சூ. நிக. கo: ச.)
பழிதாரா—பழிக்கப்படாத. (புறநானூ.)
பழிப்பு — 1. குற்றம். (புறப்பொருள்வெ.) 2. நிந்தை. (உ-ம்.) "பழிப்பருநலனும்பண்பும்" (இராமா. உலாவிய. அ.)
பழு—1. ஏணிப்பழு. (வழக்.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. பிசாசு. (உ-ம்.) "பழுவும்டாந் தளுமுளப்படப்பிறவும்" (குறிஞ்சிப். உருக.) 4. வ்லா. (சூ. நிக. கூ: ருஉ.) 5. விலாவெலும்பு. (திருவிளை. காட்டு. உக.)
பழுக்கக்காய்ச்சுதல்—பொன்னணியைப்பழுப்பாகக் காய்ச்சல். (ஒரு சூழ்உக்குறி.)
பழுக்காய்—பாக்கு. (திருவிளை. குண்டோதர. கூ.)
பழுத்தல்—1. அடிப்படல். (உ-ம்.) "கொற்பழுத்தெரியும்வேலார்" (சிந்தா. கோவிந்.உஎ.) 2. கனிதல். (உ-ம்.) "எட்டிப்பழத்தாயினுமாமோவறை"(நல்வழி) 3. சிவந்திருத்தல்.(உ-ம்.) "பழுக்குமந்தப்பாக்கியத்தோர்படியெடுத்து" (கைவல். .) 4. முதிர்தல். (உ-ம்.) "கொலைபழுத்தொழுகுதேமி" (கூர்மபு. அந்தகா. நு.) 5. முற்றுப்பெறல். (உ-ம்.) "மற்பழுத்தகள்ளமார்பத்திடங்கொண்டுவைக" (சிந்தா. கோவிந். உஎ.)
பழுது—1. குற்றம். (உ-ம்.) "பழுதில்காவிரிநாட்டின்பரப்பெலாம்" (பெரியபு. திருநாட்டு. கூ.) 2. சிதைவு. (உ-ம்.) "பழுதுறற்கெளிதே" (இராமா. கரவ. அஅ.) 3. பதனழிவு. (வழக்.) 4. பொய். (பிங்கல. கஅஅசு.) 5. மிடி. (உ-ம்.) "பழுதின்-றீற்றுவிருப்பிற்போற்றுபுநோக்கி" (பொருந. கநo, கநுக.)
பழுதை—கயிறு. (பிங்கல. கநுகூ.)
பழுநிய—1. பருவமுதிர்ந்த. (உ-ம்.) "வண்டுபடப்பழுநியதேனுர்த்தாற்றத்து" (மதுரைக். சஎநு.) 2. முற்றுப்பெற்ற. (உ-ம்.) "நைவளம்பழுநியபாலவல்லோன்" (குறிஞ்சி. கசசு.)
பழுப்பு—1. அரிதாரம். (சூ. நிக. சு: கஅ.) 2. ஒருநிறம். (வழக்.) 3. நென்பு, பழு. (உ-ம்.) "பத்திகுயின்றிட்டபழுப்பேபணியிற்பாதம் வைத்து" (கந்தபு. வள்ளியம்மை. நுo.) 4. பழுத்தல். (பு-தொழித்பெயர்விகுதி.)
பழுபாகல்—1. ஒருபாகல். (வழக்.) 2. தும்பை. மலையக.)
பழமரம்—1. ஆலமரம். (உ-ம்) "இலைத்தலையபழுமரத்தின்மிசை" (திருவிளை. பழியஞ். அ.) 2. பழுத்தமரம். வினைத்தொகை.
பழவம்—1. காடு. (உ-ம்.) "பழவநாட்குவளைச்செவ்விக்கண்பனிபரந்து" (இராமா. சூர்ப்பநகை. கூ.) 2. சோலை. (உ-ம்.) "மிடைந்தபழுவத்தொடுவிலங்கலைமருப்பால்" (திருவிளை. மாயப். அ.)
பழைசு—பழையது. (வழக்.)
பழைமை—1. தொன்மை. (சூ.நிக.அ:சநு.) 2. நட்டாரது பழையசாந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். (வள். அக. அதி.) [காரணப்பெயர் காரியத்திற்காயிற்று.]

பழையது — 1. பழமையுள்ளது. 2. பழஞ் சாதம். (1, 2-வழக்.)

பழையர்–1. கள்விற்பவர்.(உ-ம்.)"பழையர் தம்மனையன்பழநறை" (இராமா.காட்டுப்.நு0.)

பழையன்–ஒருகுறுநிலமன்னன். (மதுரைக் காஞ்சி. நு0அ.)

பழையோள்—காடுகொள்.(திருமுரு.உரை.)

பள்–1. ஒருசாதி. (வழக்.) 2. பள்ளென்னு மொருபிரபந்தம். முக்கூடற்பள்ளுக்க. இதனை உழத்திப்பாட்டென்பர்.

பள்ளச்சி— } பட்பெண். (வழக்.)
பள்ளத்தி— }

பள்ளம் — 1. குழி. (பிங்கல. சஅஅ.) 2. தாழ்ந்தநிலம். (உ-ம்.) "பள்ளங்கண்டவருபுனல் போல்" (திருவிளை. வலையல். ச.)

பள்ளர்—ஒருசாதியார். (வழக்.) இவர் மருத நிலமாக்கள்.)

பள்ளாடு—பள்ளையத்தாடு. (வைத்தியபரி.)

பள்ளி — 1. இடைச்சேரி. (உ-ம்.) "பண் ணுப்பெயர்த்தன்னகாவும்பள்ளியும்" (மலைபடு. சருக.) 2. இருப்பிடம். (உ-ம்.) "அறத்துறை விளங்கியதவோர்பள்ளியும்" (சிலப். ஊர்காண். கக.) 3. ஊர். 4. ஒருசாதி; இது: (சோழதேச வழக்கு.) 5. கோவில். 6. சாலை. (புறநா.) 7. சிற்றூர். 8. நித்திரை. (உ-ம்.) "பாற்கடலிற் பள்ளிகொள்வான்" (கோயிற்பு. பதஞ்சலி. உ.) 9. பட்பெண். (வழக். உழத்திப்பாட்டிலரிக.) 10. பள்ளிக்கூடம். (பெரியபு. சிறுத்தொண். உஉ.) 11. மக்கட்படுக்கை. 12. மருதநிலத்தூர். (சூ. நிக. நு: சச.) 13. மூவிலைவாசம். 14. விலங்குதுயிலிடம். (3, 5, 6, 7, 11, 12, 13, 14-பிங்கல. கூஅ00.)

பள்ளிக்கணக்கர்— பள்ளிக்கூடத்தில் கெ டுங்கணக்குக் கற்போர். (வழக்.)

பள்ளிக்கூடம் — சிறுவர் கல்விபயிலிடம். (வழக்.)

பள்ளித்தாமம்–திருப்பள்ளித்தாமம். (பெரி யபு. கழற். நு.) திருக்கோயிலிற்சாத்துமலர்க்கு மாலைக்கும்பெயர். பள்ளி - கோயில். தாமம்-மலர், மாலை.

பள்ளியறை—சயனவறை. (தேவாலயத்திற் சுவாமி யம்பிகை சயனவறை. வழக்.)

பள்ளியெழுச்சி — 1. தெய்வத்தைத் துயி லெழுப்புகை யாகப்பாடும்பதிகம்.(திருவாசகம், திருவாய்மொழியிற்காண்க.)2. நித்திரைவிழித் தெழல்.

பள்ளிவாசல்—துலுக்கர்கோயில், ஒருகுழூ உக்குறி.

பள்ளு—உழத்திப்பாட்டாகியபிரபந்தம்.

பள்ளை — 1. ஆடு. (சூ. நிக. கூ: கச.) 2. பன்னையாடு, ஒருசாதியாடு. (பிங்கல. உசஅள.)

பள்ளையம்–சிறுதெய்வங்கட்குப் படைக்கப் பட்ட பலி. (சிலதேசவழக்கு.)

பளக்கு-கொட்புளம்.(சிவதரு.க:இயல்.கூ0.)

பளகர்–மூடர். (உ-ம்.)"பருந்திரைகொள்ள மெய்வீழ்வதுகாணும்பளகர்களே" (திருநூற.சு0.)

பளகு—குற்றம். (உ-ம்.) "பளகறுத்துடை யான்கழல்பணிந்திலபரகதிபுகுவானே" (திருவாச. திருச்சத. கூநு.)

பளபளத்தல்— } ஒளிக்கொள்ளுதல்.
பளபளப்பு— } (வழக்.)

பளபளனெல்—ஒளிக்குறிப்பு. (உ-ம்.)"பள பளனெனமெய்யையுரப்பாக்கும்" (பதார்த்த. கஉ0உ.)

பளாபளா—ஓரதிசயக்குறிப்பு. [இந்துஸ்.]

பளிங்கறை — பளிங்குப்பாறை. (உ-ம்.) "தண்டலைமருங்கும்பளிங்கறைசூழ் தலங்களி னும்" (சேதுபு. திருநாட். சு.)

பளிங்கு–1. கர்ப்பூரம் (சிந்தா.) 2. சுக்கிரன். (சூ. நிக. க: கூஉ.) 3. படிகம். (பிங்கல. கஉஉசு.)

பளிச்சுப்பளிச்செனல்— } ஒளிக்குறிப்பு:
பளிச்சென்னல் — } (வழக்.)

பளிதம்—1. கருப்பூரம். (உ-ம்.) "மருமிகுந் திடுபளிதகுங்குமம்" (சிவரக. சுகமுனி. உகூ.) 2. பல்லம்என்னுமோரெண். (சூ. நிக. கக: ளகரவெ. ச.)

பளீர்பளீரெனல்—ஒளிக்குறிப்பு. (வழக்.)

பளீரிடுதல்—பளிச்சிடுதல். (வழக்.)

பளீரெனல்—ஒளிக்குறிப்பு. (வழக்.)

பஹுவு—பாரம். [தெலுகு.]

பற்குநன்—அருச்சுனன். (உ-ம்.) "பார்த்த னருச்சுனன்கரியோன்விசயன்பாகசாதனி சவ் வியசாசிபற்குணன்பா–ரேத்துதனஞ்சயன் கிரீடி சுவேதவாகனனெனுநாமம்"(பாரத. அருச்சுனன் றீர். சச.)

பற்சீவி—பல்விளக்கி. (சிந்தா.)

பற்படகம்— } ஒருமருத்துப்பூடி.(பதார்த்த
பற்படம் — } குணசி. கூகூள.)
பற்படாகம்– }

பற்பணம்—ஒரு பலம். (தைலவ.அகராதி.)

பற்பதம்–மலை. (உ-ம்.) "கடல்போற்குணத் தெம்பற்பதமே" (திருநூற். கூ.)

பற்பநாபன்—விஷ்ணு. (சூ. நிக. க: கஉ.)

பற்பம்—1. தாமரை. 2. தூள். 3. பதும புராணம். (சூ. நிக. கஉ: ககக.) 4. விபூதி. (உ-ம்.) "பற்பந்திரிசூலம்" (திருப்பு. சகக.) (1, 2- சூ. நிக. கக: றகரவெ. கச.)

பற்பல—பலபல. (சூ. நிக. கஉ: ஙூ.)

பற்மராகம் — பதுமராகம். தகரவொற்று றகரவொற்றுக மருவியது.

பற்மாசநம் — பதுமாசநம். (திருமந்திரம். ஆதனம். க.)

பற்மீரகம்—நீருகுகை. (வழக்.)

பற்மீகரித்தல்—பற்மமாக்கல். (வழக்.)

பற்றகற்றி — பாத்திரஞ்சுரண்டுங் கருவி. (தைலவ. அகராதி.)

பற்றம்—கற்றை. (சித்தா.)

பற்றல் — 1. அடித்தடித்துச்செய்தல். (பரிபாடல்.) 2. தொடர்தல். (உ-ம்.) "பற்றியபழியினீங்கி" (திருவிளை. மாய. ஙஎ.) 3. பிடித்தல். (பிங்கல. உகசுச.)

பற்றலர் — சத்துருக்கள். (உ - ம்.) "பற்றலரைக்கண்டாற்பணிவாரே" (வாக். சு.)

பற்றலிலியர்—பற்றுதொழிக. (புறநா.)

பற்றவைத்தல்–பொருந்தவைத்தல்.(வழக்.) தீபமியற்றிவைத்தல் என்பர்.

பற்றற்றார்—முனிவர். (வழக்.)

பற்றற்றான்—கடவுள். (உ-ம்.) "பற்றுகபற்றற்றான்"(வள். ஙூ0.) [எல்லாப்பொருளையும் பற்றிநின்றே பற்றற்றவனென்பது.]

பற்றுக்கை — அம்புகட்டுங்கயிறு. (சூ. நிக. எ: சு.)

பற்றுசு—கம்மியர் வெள்ளி பொன்முதலிய வைகளை யிணைத்தற்கிடுவதொன்று. இதற்கு ஆசென்றும் பெயர். (நன்னூல்விருத்தியுரை. உயிரீற்று. கஉ: உரை.) (கம்மியர் வழக்கு.)

பற்றார்—பகைவர். (சூ. நிக. உ: ஙூ.)

பற்றாள்—அறியாள். (பரிபாடல்.)

பற்றற்றல்—பற்றியவிடம் விடாது நிற்றல். (உ - ம்.) "பற்றுற்றிப்பற்றியார்வெல்வதரண்" (வள். எசஅ.)

பற்றி—1. குறித்து. (உ-ம்.) "அதைப்பற்றி யெனக்கென்னசொன்னான்" (வழக்.) 2. பற்றுசு.

பற்றிநும்பு—அள்ளு. (சூ. நிக. எ: கறு.)

பற்றினார்—உறவினர். (சூ. நிக. உ: ஙூ.)

பற்று—1. அறிதல். (உ-ம்.) "பற்றருசின் மயவம்பாமும்பர்" (கோயிற்பு. திருவிழா. கச.) 2. அன்பு. (சூ. நிக. அ: ஙூ.) 3. ஆசை; அது: பெற்றதன்மேனிகழுமாசை. (உ-ம்.) "பற்றுர் வஞ்செற்றமுதலாக" (சிந்தா. முத்தி. ககஉ.) 4. இடம். (பரிபாடல்.) 5. ஒட்டு. உனக்கு மெனக்கும் பற்றில்லை. 6. செல்வம். (உ-ம்.) "பற்றற்றகண்ணும்" (வள். நிஉக.) 7. தொழில்லை வீனைப்பகுதி. 8. தொடக்குறுதல். (நி. சி. க: ஙூக. ஞாந.) 9. தொடர்ச்சி. 10. பற்றுசு. ஒருகுழூஉக்குறி. 11. பற்றியவிடம். (உ-ம்.) "பற்றுற்றிப்பற்றியார்வெல்வதரண்" (வள். எசஅ.) [ஆகுபெயர்] 12. பற்றுக்கோடு. (உ-ம்.) "பரிந்தோம்பிப்பற்றற்றேமென்பர்" (வள். அஅ.) 12. பிடி. 13. வாரப்பாடல். (சிலப். ஊர்காண். கருடு. உரை.) (5, 9, 12-வழக்.)

பற்றுக்கோடு—1. ஆதாரம். (உ-ம்.) "பற்றுக்கோடுநின்பதமன்றியிலை"(மதுரையந்தாதி) 2. பற்றுக்கோல். (வழக்.)

பற்றுக்கோல்—ஊன்றுகோல். (வழக்.)

பற்றுதல்—1. அன்புசெய்தல். (சூ. நிக. எ: ஙூ.) 2. பிடித்துக்கொள்ளுதல். (உ-ம்.) "உலகைபற்றி" (அரிச்ச. மயாந. உ.) 3 பொருந்துதல். 4. மனத்துக்கொள்ளுதல். (உ-ம்) "பற்றுகபற்றற்றருன்பற்றினை" (வள். ஙூடு0.) 5. வாங்கல். (3, 5-வழக்.)

பற்றுப்பத்திரம்—கடன்வாங்கினவன் சில பொருள்கொடுத்தபோது தனிகன் அந்தப்பொருளைப்பற்றினதற்காக எழுதிக்கொடுக்கும் பத்திரம். (வழக்.)

பற்றை—1. காந்தள். (பிங்கல. உஅகூ.) 2. சிறுதூறு.

பறக்கடித்தல்—துரத்துதல். (வழக்.)

பறக்குதல் — பறத்தல். (உ-ம்.) "பறக்கும் பருந்து. (மறைசையந். அஅ.)

பறங்கி–1. ஒருபாடை. 2. ஒருமேகவியாதி. 3. பூசனி. (வைத்தியபரி.) இஃதோர் கொடி.

பறங்கிக்கிழங்கு — சீனக்கிழங்கு. (வைத்தியபரி.)

பறங்கிக்கூர்மை—காசிச்சாரம். (வைத்தியபரிபா.)

பறங்கிச்சாம்பிராணி–ஒருமருந்து. (வைத்தியர் வழக்.)

பறங்கித்தழை—அன்னதாழை.(வைத்தியபரிபா.)

பறங்கிப்பட்டை—சீனக்கிழங்குப்பட்டை. (வைத்தியபரி.)

பறங்கிப்பாஷாணம் — ஒரு பாஷாணம். (வைத்தியர் வழக்கு.)

பறங்கிப்பேட்டை—ஓரூர். (வழக்.)

பறங்கியாமணக்கு — ஓராமணக்கு. (வழக்குப்போலும்.)

பறட்டை—தழைவற்றது, செழிப்பற்றது. (வழக்.)

பறட்டைக்கீரை—ஒருவிதக்கீரை, (வழக்.)

பறண்டுதல்—சுறண்டுதல். (வழக்.)

பறத்தல்—1. அவசரம்பண்ணல். 2. ஆகாயத்திற் சிறகினாற்செல்லுதல். (உ-ம்.)"அன்னமிரிந்துபறக்க" (அரிச்ச. நாட்டு. நி0.) 3. தூசி

முதலியகிளம்புதல். 4. விரைவாயோடல். (உ-ம்.) "பறந்துபுக்குப்பரவாதிகடின்னும்படி ந ர கு" (திருமூற். நிக.) (1, 3-வழக்.)

பறத்தி–பறத்தல். (தி-தொழிற்பெயர்விகுதி.)

பறதை—செங்கத்தரி. (வைத்தியபரி.)

பறந்தலை — 1. சுடுகாடு. (பிங்கல. சுஉகூ.) 2. பாசறை. (புறநா.) 3. பாழிடம். (உ-ம்.) "யாங்கணும்பரந்தவோங்கிரும்பறந்தலை" (மணிமே. சக்கரவாள. கூசு.) 4. போர்க்களம். (பிங்கல. சுஉஉ.)

பறப்பன்—1. அவசரக்காரன். (வழக்.) 2. விருச்சிகம். (உ-ம்.) "போனுன்பறப்பன்மூள்ளு றுத்திப்புதல்வன்பதைப்பப்பொறாகி" (சேது பு. அநுமகுண். கச.)

பறப்பு—1. பறத்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

பறப்பை—பட்சிவடிவம். (உ-ம்.) "மூற்று நாடியவிருத்திரைராணியின்முறையா–லுற்ற வங்கியைவேதிகைப்பறப்பைமேலுய்த்து" (கந்தபு. வேள்விப். கூ.)

பறபறெனல்—1. ஓரடுக்கொலிக்குறிப்பு. 2. விரைவுக்குறிப்பு. (1, 2-வழக்.)

பறம்பர்—சோல்வினைஞர். (பிங்கல. அகo.)

பறம்பு–1. மலை. (பிங்கல. சகடு.) 2. மூலை. (சூ.நிக.உ: கo.) பாரியென்னும் வள்ளன்மலைக் குங்கூறுவர். (பத்துப். சிறுபாணுற்றுப்படையி லறிக.)

பறல்—பறத்தல். (உ - ம்.) "விரிசிறைப்பற லின்கடுமையாலெய்தி" (பாரத. இந்திரப். உக.)

பறவாதி — பேராசைக்காரன். (வழக்குப் போலும்.)

பறவை–1. அவிட்டநாள். (உ-ம்.) "பணிதரு பெண்ணைமரக்கால்பறவையும்பத் தி ரை யும்" (விதாந. குணகுண. கசு.) 2. குக்குடசர்ப்பம். (உ - ம்.) "பறவைமாகாசம்வீழ்ந்துபலவுடன்ப தைப்பபோன்றும்" (சிந்தா. பதுமை. ககஅ.) 3. பருந்து. (உ-ம்.) "திருமலிவித்துப்பறவை படித்து" (கோயிற்பு. நடராச. நிசு.) 4. பறத்தல். (உ-ம்.) "சிறியதெள்குதுள்ளிக்-கருடனூர்க் குப்பறவைகற்பிப்பதென" (அ ரி ச் ச. பாயிர. கஉ.) 5. புள். (உ-ம்.) "மிக்கநரைப்பறவையும்" (சிவரக. நந்திகேசுர. க.)

பறவைவேந்தன்–கருடன். (சூ.நிக.கூ:நிஉ.)

பறழ் — 1. அணில், கீரி, எலி, நாவி, நரி, குரங்கு, நாய், புலி, முயல், வெருகு, பன்றி, ஆடு, மான் என்பனவற்றின்குட்டி. (சூ. நிக. கூ: கூஎ.) 2. பருப்பு. (தைலவ.)

பறவை—பறட்டை. (வழக்கு.)

பறஅக்குநுது–கொல்லன்உலைமூக்கு. (உ-ம்.) "பறஅக்குருகினுயிர்த்தலுமுயிர்த்தனன்" (கலி. நிச.)

பறி—1. கொள்ளை. (வழக்.) 2. தெரிகிலை வினைப்பகுதி. 3. பறித்தல். விகுதிகுறைந்தது. 4. பொன். (உ-ம்.) "பொற்கொல்லர்பொன் னைப்பறியென்றலும்" (சே ந ா. சொல். கள. உரை.) 5. மீன்களாவாரியெடுப்பதாகியகூடை. (உ-ம்.) "குறியிறைக்குரம்பைப்பறியுடைமுன் றில்" (பெரும்பாண். உசுடு.)

பறிக்குதல் — 1. பறித்தல். 2. தோண்டல், குழிபறிக்கிறுன். 3. வலாற்காரமாய்க்கவர்தல். (1, 2, 3-வழக்.)

பறிதுதல்—கடந்தோடுதல். (வழக்.)

பறித்தல்—1. கொய்தல். (திருவிளை. தரு மிக்குப். ஈசை.) 2. பறிக்குதல். (சூ. நிக. கூ: உசு.) 3. பிடுங்கல். (உ-ம்.) "பகன்" பார். (பிங் கல. எ: உகடுஎ.)

பறிதல்—1. ஓடிப்போதல், பறிந்திட்டான். (வழக்.) 2. ஒழுகுதல். (உ-ம்.) "செம்புனல் பறிந்த" (திருவிளை. தண். உக.) 3 நீங்குதல். (திருவிளை. நகரப். கடு.) 4. போதல். (உ-ம்.) "எதிர்ப்பர்பின்பறிவர்நேர்போயெழு ந் து வா னே றுபோல-வதிர்ப்பர்" (திருவிளை. அங்க. ககக.) 5. வெளிப்படல், கதிர்பறிந்திருக்கிறது. (வழக் குண்டு.)

பறிதலையர் — சமணரிலோர் விகற்பிகள். (திருவிளை. பாண்டியன்சுர. கஉ.)

பறிப்பு–பறித்தல். பு-தொழிற்பெயர்விகுதி.

பறிமுறை—விழுந்துமூளைத்தன்முறைமை. (குறுந்தொகை.)

பறியல்-பறிப்பு. அல்-தொழிற்பெயர்விகுதி.

பறிவு—பறிதல். உ-தொழிற்பெயர்விகுதி.

பறிவை — 1. சீந்தில். 2. நந்தியாவட்டம். (வைத்தியபரி.)

பறுணி — 1. கொள்ளு 2. சீந்தில். 3. பெருங்குமிழ். 4. பெருங்குரும்பை. 5. வல்லாரை. (தைலவ.) (1, 2, 3, 4-வைத்தியபரி.)

பறை—1. இறகு. (உ-ம்.) "பறைவிரித்துரு னைத்தபோது" (சே தா பு. பாவபாச. நூடு.) 3. ஓரளவு. (ஓர் தேசவழக்கு.) 4. ஓரளவுகருவி. (உ-ம்.) "நிறைக்கோற்றலாத்தர்பறைக்கட்பரா ரையர்" (சிலப். ஊர்காண். உoஅ.) 5. சொல். (பிங்கல. நூஅoஉ.) 6. பறத்தல். (சிந்தா.) 7. வாச்சியப்பொது. (உ-ம்.) "நிறையோசைபெற்ற பறையோசையற்று" (அரிச்ச. மயாந. உஉ.)

பறைச்சி—பறைப்பெண். (வழக்.)

பறைசீவி—1. கொள். (வைத்தியபரி.) 2. சிறுநன்னரி. (மலையக.)

பறைதல் — 1. சொல்லல். (உ-ம்.) "பறையரைப்பறையரென்றுபறைந்திடு மனிதர் கேளீர் – பறையர்தம்மலத்தைத்தின்றபன்றியைப் புசிப்பதென்னே" (கொலைமறுத்தல். எ:உரை.) 2. தேய்தல். (உ-ம்.) "பார்வையாத்தபறைத் தாள்விளவின்" (பெரும்பா. கூறு.) 3. நீங்கல். (சிவதத்துவவிவேகம். பாயிரம்.)

பறைந்தன — 1. அழிந்தன. (சிந்தா.) 2. நீங்கின. (புறநா.)

பறைப்பருந்து—கரும்பருந்து. (வைத்தியபரி.)

பறைப்பூச்சி—ஒரு சிலந்திப்பூச்சி. (வழக்குண்டுபோலும்.)

பறையர்—ஒருசாதியார். (கொலைமறுத்தல். எ. உரை.)

பறையலது—பலகறை. (சிந்தா.)

பறைவு — 1. சொல்லுதல். (உ-தொழிற்பெயர்விகுதி. 2. தெரித்தல். (உ-ம்.) "பிறங்கொளிவராகற்பம்பறைவுற்றவரைந்தவாறும்" (கூர்மபு. பதி. ச.)

பன் — 1. ஒரு புல். (உ-ம்.) "பன்பாய்" (ஒரு தேசவழக்கு.) 2. சொல்லல். (உ-ம்.) "பன்னருஞ்சிறப்பில்" (நன். பாயிரம்.) [மூதனிலைத் தொழிற்பெயர்.] 3. தெரிநிலைவினைப்பகுதி.

பன்பாய்—ஒருவகைப்புற்பாய். (ஒரு தேச வழக்கு.)

பன்மணிமாலை — கலம்பகத்துச்சுச்சொல்லப்பட்டஉறுப்புக்களுள் ஒருபோகும், ஊசலும் அம்மானையுமின்றியேனையுறுப்புக்களெல்லாம் வரப் பாடப்படுமொரு பிரபந்தம். (இலக்கண வி. அகச.)

பன்மாண்—பலகாலும். (பரிபாடல்)

பன்மை–1. ஒன்றன்மை. (நன்னூல்.வினையிய. நி.) 2. பலவாகியதன்மை. மை-பண்புப் பெயர்விகுதி.

பன்மைப்பால்—பலவின்பால். (நன்னூ. பெயரிய. அ.)

பன்மைப்பொதுப்பெயர்—பன்மைப்பால் கட்குரிய பொதுப்பெயர். [வ-று.] "கொதைகள்" (நன்னூ. பெயரிய. உஎ.)

பன்மொழித்தொகைத்தொடர்—பலமொழிஎளைத்தொடர்ந்துநிற்குந் தொகைநிலை. (உ-ம்.) "செந்நிறக்குவளை" (நன்னூ. பொதுவிய. ஈச.)

பன்றி—ஒரு மிருகம்; அஃது: ஊர்ப்பன்றி, காட்டுப்பன்றி, முட்பன்றியெனப் பலவகைப்படும். (சூ. நிக. ஈ: கக.) கொடுந்தமிழ்நாட்டிலொன்று. (உ-ம்.)"பன்றியருவாவதன்வடக்கு" (நன்னூ. பெயரிய. கசு. உரை.)

பன்றிக்காரணம்—ஒரு காரணம். (வழக்.)

பன்றிக்குறும்பு–நிலப்பனை.(வைத்தியபரி.)

பன்றிக்கோவ்வை — ஒரு கொவ்வை. (வைத்தியபரி.)

பன்றித்தகரை–ஒருதகரை.(வைத்தியபரி.)

பன்றிநெல்—ஒரு நெல். (வழக்குண்டுபோலும்.)

பன்றிப்பறை—குடப்பறையென்று பெயர் கூறுவர். (பிங்கலத்தில்.)

பன்றிப்புல்— ஒருவகைப்புல். (வழக்குண்டுபோலும்.)

பன்றிப்பொறி—பன்றியெந்திரம். (சிந்தா.)

பன்றிமொத்தை — சிறுகுறிஞ்சா. (வைத்தியபரி.)

பன்றிவாழை—ஒரு வாழை. (சோழதேசத்துண்டு.)

பன்மா—பலபடி. (பதிற்றுப்.)

பன்னகம்–1. பாம்பு. 2. சீதரங்கபாடாணம். (வைத்தியபரி.)

பன்னகம்—துளசி. (வைத்தியபரி.)

பன்னகுடி—பன்னசாலை. (உ-ம்.) "பாவைமைந்தனெனுபன்னகுடிமன்னினரே"(சிவரக. தாரு. கறு.)

பன்னசாலை—இலைவீடு. (உ-ம்.) "பன்னசாலைபழமைப்படவமைத்து" (சிவரக. தாருக. ககூ)

பன்னத்தண்டு–நெய்வார்கருவியிலொன்று. (வழக்.)

பன்னம்—இலை. (உ-ம்.) "விதங்கெழுமலர் நீர்பன்னமென்கனிவழங்குவாரை" (சேதுபு. இராமநாத. உறு.)

பன்னல் — 1. சொல். 2. நெருக்கம். 3. பருத்தி. (1, 2, 3-சூ. நிக ஈக: னகரவெ. கசு.)

பன்னகம்—துளசி. (வைத்தியபரி.)

பன்னஙந்து — தண்டிகை மேல்விதானம். (வழக்கு.)

பன்னஙந்துழி— பன்னஞ்சுகுழியுள்ளவோர் விளையாட்டுத்தட்டு. மரூஉமொழி. (வழக்கு.)

பன்னசி—ஒரு துளசி. (வைத்தியபரி.)

பன்னடை—நெய்யரி. (சூ. நிக. ச: கஉ.)

பன்னி— 1. சணல். (வைத்தியபரி.) 2. மனைவி. (உ-ம்.) "வேளாளன்பன்னியாய்"(பிரமோத். ஈ: கஈ.)

பன்னிரண்டு—ஒரெண். (வழக்.)

பன்னீர்—ஒரு வாசனைநீர். (வழக்.)

பன்னீர்மரம்—ஒரு பூமரம். (வழக்.)

பன்னு—நெற்கதிரறிவாளின் கொத்துவரி. (வழக்.) அரிவாட்குப் பன்னுவைத்துக்கொடு.

பன்னுதல்—1. சொல்லல். (உ-ம்.) 2. நெருங்கல். 3. பஞ்சுபன்னல். (வழக்.) (1, 2-"பன்னல்"பார். (உ.கார்ஞ்சாரியை.)

பன்னை — 1. ஒரு செடி. 2. கருப்பூரம். 3. சூடன். 4. தண்ணீர்மிட்டான்கிழங்கு. (2,3,4-வைத்தியபரி.)

பன்னென்று — பதினென்று. உம்மைத் தொகை.

பனங்கட்டி–பனைவெல்லம். (வழக்.) (வைத்தியபரிபா.)

பனங்கீரை—ஒரு கீரை. (வழக்.)

பனங்துடை — பனையோலையாற் செய்யப்பட்டவுண்கலம். (புறநா.)

பனங்கோரை—ஒருபுல். (வழக்.)

மனங்கோவை—ஒரு கோவை. (வைத்திய மூல. அகராதி.)

பனசம்—பலா. (சூ. நிக. ச: கக.)

பனசபித்தி—அரசு. (வைத்தியபரி.)

பனந்தாமன்–1. சோன். (சூ. நிக. க: கஅ.) 2. பலதேவன். (சூ. நிக. க: கஎ.) இருவருக்கும் பனம்பூமாலையுண்டாதலாலிப்பெயரென்க.

பனந்தாழை—ஒருகற்றுழை.(வைத்தியபரி)

பனம்பாரனர்—அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரிலொருவர். (தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம் முகத்திற்காண்க.)

பனம்பிடுக்கு—பனம்பூ. (வைத்தியபரி.)

பனம்புடைபல்—பனைமாலை. (பதிற்றுப்.)

பனம்பூ—ஆண்பனைப்பாளை. (வழக்.)

பனரை–நெய்க்கொட்டான்.(வைத்தியபரி)

பனவம்—சிறுதம்பட்டம். வழக்குண்டுபோலும்.

பனவர்—பார்ப்பார். (உ-ம்.) "பவனர்கையிற்ககைக்குப்பைகணிறைவித்து" (திருவீழி. வரகுணனுக்கு. சு.)

பனவி — பிராமண்ஸ்திரி. (உ-ம்.) "தூயவருந்தநிபெயர்கொள்பனவியாகி" (ஞானவா. லீலிகதை. உரு.)

பனுட்டு—பனையினதுதீங்கட்டி. (நன்னூ. உயிரீற்றுப். நிகூ.) ஆ-காண்டிகையுரை.

பனி — 1. அச்சம். 2. குளிர்ச்சி. (உ-ம்.) "நின்றன்பனிக்குடைக்கும்பொறைக்கும்–நெடும்பண்புதோற்ற" [இராமா. சடாயு. உக.) 3. துக்கம். 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. நடுக்கம். 6. நீர். (உ-ம்.) "சலீரபணியுருப்பநின்றரைப்பான்" (கூர்ம. தக்கன்வமி. உக.) 7. நோய். 8. பெய்யும்பனி. (உ-ம்.) "பனியானனைந்துவெயிலாலுலர்ந்து" (அரிச்ச. மயாநகா. உக.) (1, 2, 3, 5-பிங்கல. சுஅ0சூ.)

பனிக்கஞ்சி—தாமரை. (வைத்தியபரி.)

பனிக்கதிர்—சந்திரன். (உ-ம்.)"வெம்பினை பனிக்கதிரல்லீரீ" (கந்தபு. ஆற்று.உ.ச.)

பனிக்காலம்—மார்கழிமுதலிய நான்கு மாசம். (சூ. நிக. க: அஎ.) முன்பனி, பின்பனி யெனவிருவகைப்படும்.

பனிக்தும்—நடுங்கும். (புறநா.)

பனிக்கூர்மை — 1. இந்துப்பு. 2. சிந்துலவணம். (1, 2-வைத்தியபரி.)

பனிச்சா–கஞ்சாங்கோரை. (வைத்தியபரி.)

பனிசை — 1. கஞ்சாங்கோரை. 2. காட்டத்திமரம். 3. பின்னிமுடிக்கு மயிர்ச்சுருள்; அஃதாவது: ஐம்பாலிலொன்று. (சீவகசிந்தாமணி.) (1, 2-வைத்தியபரி.

பனித்தல் — 1. இடைவிடாது மழைபெய்தல். (பிங்கல. சுசு.) 2. துளித்தல். (உ-ம்.) "கண்பனிப்ப" (கூர்ம. திருக்கல். நுஎ.) 3. நடுங்கல். (உ-ம்.) "வரைக்குலம்பனிப்பவார்த்திட்டு" (கந்தபு. ஏம. ககூ.) 4. துன்பம். (சூ.நிக. அ: எசு.)

பனித்து — பனிகொண்டு, பனிபெய்யப்பட்டு. (சிலப்பதி.)

பனித்துண்டம் — பனியையுடையதுண்டமாகிய பிறை. (உ-ம்.) "பனித்துண்டஞ்சூடும் படர்ச்சடையம்பலவன்" (திருக்கே. நகூஉ.)

பனிதாங்கி—ஒருபூடி. (வைத்தியநூ.)

பனிநத்தை—ஒருநத்தை. (வைத்தியநூ.)

பனிநீர்—ஒரு வாசனைநீர். (வழக்.)

பனிப்பகை—சூரியன். (சூ. நிக. க: நிரு.)

பனிப்பயறு–ஒருபயறு. (பதார்த்தகுணசி.)

பனிப்பருவம்—பனிக்காலம் இருவகை. (உ-ம்.) "பனிக்காலம்"பார்.

பனிப்பு—1. நடுக்கம். (உ-ம்.) "தலைப்பனிப்பு" (திருவிளை. விருத்தகு. உ0) 2. பனித்தல், தொழிற்பெயர்விகுதி.

பனிப்புழு—பனியிலுண்டாகும்புழு.(வழக்.)

பனிப்பூடு—ஒரு பூண்டு. (வைத்தியநூ.)

பனிமலை — இமயமலை. (பிரபுலிங்கலீலை. கைலாயகதி. உஎ.)

பனிமேக்கம்–பனியைப்பெய்யுமேகம். (காஞ்சிப்பு. கழுவாய்ப்படலம்.நுசுஅ.)

பனியவரை—ஓரவரை. (வழக்.)

பனியேதிர்பருவம் — முன்பனி. (தொல். அகத். எ.)

பனுக்குதல்—தெளித்தல். (வழக்.)

பனுவல்—1. இசைப்பாட்டு. (புறநா.) 2. கல்விநூல். (வள்ளீத்தூர்பெ. க.) 3. ஆராய்ச்சி. (சிந்தா. கோ. நுசு.) 4. சொல். 5. பஞ்சிநூல். (4, 5-சூ. நிக. கச: னகரவெ. கூ.)

பனுவலாட்டி—பாரதி. (சூ. நிக. க: நுடு.)

பனை — 1. அதுடநட்சத்திரம். (பிங்கல. உடுநி.) 2. ஒரு மரம்; அது: அலகு, கூன்தற் பனை, தாழிப்பனை, நிலப்பனை எனப்பலவகைப் படும். (வைத்தியபரி.)

பனைக்கொடியோன்—1. பலபத்திரன். (பிங்கல. கசச.) 2. வீடுமன். (பாரத.)

பனைசதி—அரசு. (வைத்தியபரி.)

பனைமடல்—பனைமட்டை. (திருக்கோவை. எசை.)

பனைமீன்—யானைமீன். (பிங்கல. உசுஉ0.)

பனையன்—1. ஒரு பாம்பு. இதனைப் பனையேறியென்றுங்கூறுவர். (வழக்.) 2. ஒரு மீன்; அது: பனைமீனென்பர்.

பனைவட்டு—பனைவெல்லம். (வழக்.)

பா.

பா — 1. கப்பு. 2. தூய்மை. 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. நெசவுபா. (வழக்.) 5. பஞ்சி நூல். 6. பரப்பு 7. பரவுதல். 8. பருகுதல். 9. பாட்டு; அது: வெண்பாமுதலியனவாம். 10. பாம்பு. (பிங்கல. உ0கங.) 11. பூனைக்காலி. (1, 2, 8-காஞ்சிப்பு. திருவேகமப்ப. சஅ.) (6, 7, 9-சூ. நிக. கக: வகரவெ. கஙா.) (10,11-வைத்தியபரி.)

பாக்கம்–1. ஊர்ப்பொது. (பிங்கல. சளடு.) 2. நெய்தனிலத்தூர். (பிங்கல. டுகூஅ.) 3. மருத நிலத்தூர். (சூ. நிக. டு: ச0.)

பாக்கல்—பாவுகல். (வழக்.)

பாக்கழி—மருதயாழ்த்திறன்வகையிலொன்று. (பிங்கல. நிக. கஙஅங.)

பாக்கன்—பூனை. (சூ. நிக. ங: உசு.)

பாக்காநூல்-பாவினூல்.(ஒருகுழூஉக்குறி.)

பாக்கி — வாங்கியதுபோக எஞ்சிநின்றது. [அராபி.]

பாக்கியத்தானம் — செம்மத்துக்கொன்பதாமிடம். (சோதிட. வழக்.)

பாக்கியம்— 1. காஷாயம். (வைத்தியபரி.) 2. செல்வம். (வழக்.) 3. புண்ணியம். (உ-ம்.) "பாக்கியம்புரிந்திலாப்பரதன்" (இராமா. மந்தரைசூ. டுங.)

பாக்கியலட்சுமி — அட்டலக்குமியிலொருத்தி; இவள்: செல்வந்தருவள். (தமிழ்ச்சொல் லகராதி மூதறற்புத்தகத்திலறிக.

பாக்கியவதி—செல்வி. (வழக்.)

பாக்கியவான்—1. செல்வன். 2. புண்ணியவான். (1, 2-வழக்.)

பாக்த — 1. எதிர்காலத்தைக்காட்டுமொரு தெரிநிலைவினையெச்சவிகுதி. (உ-ம்.) "வான் பான்பாக்கினவினையெச்சம்பிற" (நன். ஙசஙூ.) 2. துவர்க்காய். (சூ. நிக. ச: கo.)

பாகஎக்கியம்—அஷ்டகம், பார்வணம், ஸ்பாலிபாகம், சிரார்த்தம், மாசிகம், சர்ப்பபலி, ஈசாநபலி, ஆக்கிரஹாயண முதலிய எக்கியங்கள். (அபிதானகோ.)

பாககம்—பிரிக்குந்தொகை. (வழக்.)

பாகசம்—ஒருவகையுப்பு. (ஊவத்தியநூ.)

பாகசாத்திரம்–மடைநூல்; அது: நளபாகம், வீமபாகமென இரண்டுபாகநூல் வழங்குகின்றவென்பர். (சிறுபாணாற்றுப்படை.)

பாகசாதநன்—இந்திரன். (சூ. நிக. க: கஙூ.) பாகன்என்னும் அசுரனைக்கொன்றவன்.

பாகசாதநி—பாகசாசனி. (உ-ம்.) "பார்த்தனருச்சுனன்காரியோன்விசயன்பாகசாதநி" (பாரத. அருச்சுனன்றீர். சச.)

பாகசாலை–மடைப்பள்ளி.(சூ.நிக.டு: டுடு.)

பாகதம்—எல்லாநாட்டுமொழி. (வழக்.)

பாகதாரி—சமையற்காரன். (வழக்.)

பாகப்படுத்தல்–1. சமைத்தல். 2. பக்குவப்படுத்தல். 3. பங்குசெய்தல்.

பாகப்படுதல்-1. சமைக்கப்படுதல். 2. பக்குவப்படுதல். 3. பங்குசெய்தல். (1, 2, 3-பாகம் பார்.

பாகம் — 1. ஒரு கணிதம். 2. ஒருவகைத் தோற்கருவி. (உ-ம்.) "தகுணிச்சம்"பார். 3. கற்கண்டு. (வைத்தியபரி.) 4. சமைத்தல். 5. நான்குமுழங்கொண்டவளவு. 6. பக்குவம். (உ-ம்.) "மூலமாயறிவுமுழுதினையுமறைக்கும்-பாகமாம்வகைகின்று" (சிவப்பிரகா. உ: உ.) 7. பங்கு. (உ-ம்) "நம்பாகமுங்கொடுவல்லே-யிங்குவீருகென்றலும்" (கந்தபு. பிரமயாகப். கக.) 8. பாதி. (சூ. நிக. அ: கடு) 9. பிச்சை. (சூ. நிக. கக: கரவெ. கஙா.) (4, 5-வழக்.)

பாகர் — யானை, குதிரை முதலியவற்றை நடத்துவோர். (உ-ம்.) "பாகனேயரசன்குறிப்பிலுலேவ" (பாரத. குருகுல. கஙூ.)

பாகரம்—பிரபாகரம். (உ-ம்.) "சாறுவாகம் பாகரமுஞ்சாற்றும்பாஞ்சராத்திரநூன் – மாறுசெய்யும்பாட்டமுள" (கூர்மபு. திருக்க. சக.) பிரபாகரன்என்பவனுற்செய்யப்பட்டநூல் பிரபாகம். (சிவஞானபாடியத்திற் காண்க.)

பாகல்—1. ஒருவகைக்கொடி. (தைல. தைலவ. கஅ.) அது: காட்டுப்பாகல், கொம்புப்பாகல், கொல்லம்பாகல், நரிப்பாகல், நாய்ப்பாகல், நிலப்பாகல், பழுபாகல், பேய்ப்பாகல், மிதிப்பாகலெனப் பலவகைப்படும். 2. பலா. (உ-ம்.)

"பரிமளப்பாகலிற்கனிகளைப்பீறிநற்படியி னிட்டேகுரக்கினமாடும்" (திருப்பு. கசுஅ.) 3. வெட் பாவட்டை. (வைத்தியபரி.)

பாகலம்—யானைநோய். (சூ. நிக. ஙு: கூ.)

பாகவதம் — விஷ்ணுபுராண நான்கனு ளொன்று. (உ-ம்.) "காருடம்"பார்.

பாகவதர்—விட்டுணுசமயத்தவர். (சூ. நிக. உ: ஙு.)

பாகன்–1. குதிரைமுதலியஙடத்துவோன். (உ-ம்.) "பாகர்"பார். 2. புதன். (சூ நிக.க:சுக.) 3. விருத்திராசுரன் தம்பி; இவன்: இந்திரனுற் கொல்லப்பட்டவன். (அபிதானகோ.)

பாகனெடுசொல்லல்—தலைவன் றன்னைத் தேடிவந்தபாகனைநெடுதலைவி செலவைக்காட்டிக் கூறல். (வாணன். உஅ. முகம்.)

பாகாரி—இந்திரன். (உ-ம்.) "படிகொள் பல்வரைப்பறையெலாமறிந்தபாகாரி" (சூ த. முத். க: கூ.)

பாகி—பக்குவன். (வழக்.)

பாகித்தல்—பங்கிடுதல். (வழச்.)

பாகியசௌசம்—புறச்சவுசம். (உ-ம்.) "உரைத்தசவுசமிருவகையாலுடம்பின்மண்ணு திகளிட்டு - வரைத்தவிதியின்படிநீரின்மண்ணு வதுபாகியசவுசம்" (சூத. ஞாந. கஙு: கஙு.)

பாகியதிரிசியாநுவித்தசவிகற்பசமாதி — கடாதிவிஷயமுகத்துள் ஒன்றனைக்குறித்து அதனுடையநாமரூபமான மயாங்கிசங்களிரண்டையும்பிரித்து அதனுள ஸ்திபாதிப் பிரியமென்னுஞ் சச்சிதாநந்தப் பிர்மாங்கிசத்திரயங்களே யதுசந்தாநஞ்செய்வது. (வி-ணி)

பாகியபோகம்—வெளிப்போகம். (உ - ம்.) "அசுத்ததத்துவத்திலுண்டாகியபோகமானது (பாகியம்.) (சி-லி. ஞாந. உ0. உரை.)

பாகியம்–1. பரைபூசையிலொன்று.(உ-ம்.) "அரும்பரைபூசைபாகியமாப்பியந்தரமெனவிரண்டாகும்" (சூத. சிவமான். நி: உ.) 2. புறம்பு. (உ-ம்.) "பாகியேந்திரியம்"

பாகிரீ—ஐங்காயம். (வைத்தியபரி.)

பாகீரதி—கங்கை. (பாரத. தீர்த்தயா. எ.)

பாது—1. கற்கண்டி. 2. குழம்பு. 3. சருக்கரை. 4. தலைப்பாக்கு. (வழக்.) 5. பங்கு. அம்கெட்டுநின்றது. 6. பால். 7. பாக்கு. (உ - ம்.) "தெளிந்தபையுட்பாகுசென்றவே" (சிந்தா. கேமசரி.சுஅ.)8.பாகன்.(உ-ம்.)"வினைத்தேரும் வயமாவும்வெம்பாகும்விழவெய்து" (பாரத. நிறைமீட்சி. கடு.) (1, 3-வைத்தியபரி.) (2. சூ. நிக. கக: ணகரவெ. அ.)

பாதுகசி—பதிஞன்காமன்வந்தரத்து ருவதி. (அபிதாநசிந்.)

பாதுடம் — அரசிறை. (சூ. நிக. கூ: நிசு.) சிந்தாமணியிற் கையுறைபென்பர்.)

பாதுதம்—கருஞ்சீரகம். (வைத்திபபரி.)

பாதுதாயன் — பிராமணத்தி சூத்திரனைக் கரவிற்கூடிப்பெற்றபிள்ளை. (உ-ம்.) "பந்தணி விரலார்செங்கைப்பரிப்பனமான்பின்னேனை - யுந்துசோரத்திற்கூடவுதித்தவன்பாகுதாயன்" (சூத. சிவயான். கஉ: உ0.)

பாதுபடுதல்—பகுக்கப்படுதல். (வழக்.)

பாதுபாடு—பகுப்பு. (உ - ம்.) "முன்னூற் பாற்படுபொருளுஞ்சைவப்பாகுபாடுணர்ந்து" (சிவரக. பாயிர. உக.)

பாதுவன் — மடையன். (பெரியபு. திருநாவுக்கர. வசனத்திலறிக.)

பாதேக்கியம்—பிதிர்பூசை. (வழக்.)

பாகை–1. இராசியளவு, ஒருராசிக்குபாகை. ஙo.) 2. ஒரு கால அளவு. 3. தலைப்பா. [தெலுகு.] 4. வட்டத்தின் முந்நூற்றறுபதிலொருபங்கு. (1, 2, 3-சோதிடக்களஞ்சியத்திலறிக.

பாங்கம் — பலண்டுறுகபாடாணம். (வைத்தியபரி.)

பாங்கர்—1. இடம். (சூ. நிக. நி: சுடு.) 2. ஓமை. (உ - ம்.) "பாங்கர்மராமம்பல்பூந்தணக்கம்" (குறி-பா. அடு.) 3. கணவர். (சிந்தாமணி, எஉ.) 4. தோழர். (உ-ம்.) "பண்ணேயுமாய முந்திரளும்பாங்கரும்"(இராமா.திருவவ.ககஅ) 5. பக்கம. (உ-ம்.)"ஈசன்பாங்கரந்தரியங்கில்லாமல்" (சிவரக. நக்கிரண. நி.) 6. பாங்கர்க்கொடி. (உ-ம்.) "பாங்கருழல்லையும்" (கலி. ககக.) (பாங்கர்பூ. கலி. கo ஙு.)

பாங்கற்கூட்டம் — பாங்கனுற்கூடுங் கூட்டம். (உ-ம்.)"இடந்தலைப்பாடொங்கற்கூட்டம்" (அகப்பொ. களவிய. எ.)

பாங்கன் — தோழன். (ஐங்குறுநூறு.) பக்கத்திற் பிரியாதிருப்பவன். உரிமையன் என்று பொருளாம்.

பாங்கனறிவலவனையுற்றதுவினுதல்--பாங்கன் றலைவனதுள்ளமுந்தோளும்வாடிய வேறுபாட்டைக்கண்டு நினக்கிவ்வேறுபாடுற்ற காரணம் என்னையென்று வினுதல். (வாண. சo. முகம்.)

பாங்கனறனமநத்தழங்கல் – பாங்கன்றன்னுள்ளே யழுங்கல். (வாண. சசு. முகம்.)

பாங்கி–தோழி. (உ-ம்.) "பாங்கியர்மருங்குசூழ" (பெரியபு. தடுத்தாட். ஙஙவ.) [பக்கத்திற் பிரியாதிருப்பவள், உரிமையாள் என்றுபொருளாம்.]

பாங்கிமதியுடம்பாடு—பாங்கிதலைவி வேறு பாட்டைக்கண்டு புணர்ச்சியினுண்மையறிந்து ஆராய்ந்து தன்மதியுடம்படுதல்; அது: முன்னுறவுணர்தல, குறையுறவுணர்தல், இருவருமுள வழியவன்வரவுணர்தல் என மூவகைப்படும். (உ-ம்.) "முன்னுறவுணர்தல்குறையுறவுணர்தலிருவருமுளவழியவண்வரவுணர்தலென-மிருருமூன்றுவகைத்தேபாங்கிமதியுடம்பாடு" (அகப்பொ. கள. உஉ.)

பாங்கிற்கூட்டல் — தலைவன் தலைவியை ஆயத்தச்செலுத்துதல். (வாண. சுஉ. முகம்)

பாங்கு — 1. அழகு. (சூ. நிக. அ: உச.) 2. இடம். (பிங்கல. எகக.) 3. உரிமை, உரித்து. (சூ.நிக.அ:சஎ.) 4. உறவு. (சிந்தாமணி.சுருக.) 5. நற்குணம் (உ-ம்.) "பாங்கிலுனீங்கலாகாப் பதஞ்சலியென்னுநாமந்தாங்கி" (கோயிற்பு. பதஞ்சலி. எருி.) 6. பக்கம். (உ-ம்.) "பாங்கோடிச்சிலைவளைத்து" (பெரியபு. தடுத்தா. கசசு.) 7. பாங்கன். (இறைய.) 8. யோக்கியம். (வழக்.)

பாங்குமம்—கருஞ்சீரகம். (வைத்தியபரி.)

பாச்சல்—எழுச்சி. (பிங்கல. உகஅள.)

பாச்சான்—கள்ளி. (வைத்தியபரி.)

பாச்சி—பால்; இது: மழலைப்பிள்ளைகூற்று. (வைத்தியபரிபாடையிற்கூறியுள்ளார்.)

பாச்சிகை — பாச்சிகை, சூதாடுகருவி. [தெலுகு.]

பாச்சுருட்டி—பாச்சுற்றி. (வழக்.)

பாச்சுற்றி—தறிமரம். (நெய்வார்வழக்கு.)

பாச்சை—ஒரு செந்து. (வழக்குண்டு.)

பாசகத்தம் — நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவநங்களு ளொன்று. (சி-லி. கிரி. உச. உரை.)

பாசகம்—மடைத்தொழில். (வழக்.)

பாசகர்—மடையர். (சூ. நிக. உ: ஈஎ.) பாசகத்தைச்செய்பவர்.

பாசகர்ணன்—சுமாலியென்னும் அரக்கன் மகன். (அபிதானகோ.)

பாசகரன் — 1. நமன். 2. வருணன். 3. விநாயகன். (இம்மூவருக்கும்பாசத்தைக்கையிற் றரிக்கலுடமையால் வந்தபெயரென்க.

பாசகன்—சமையற்காரன். (வழக்.)

பாசகுசுமம்—இலவங்கம். (தைல. தைலவ. சுச.)

பாசஞாநம் — நால்வகைவாக்கின் பகுதியாகிய வேதம், சாத்திரம், மிருதி, புராணம், கலைஞாநமாகிய சொற்பிரபஞ்சமும் நிலமுதல் நாதமீறுகிய பொருட்பிரபஞ்சமுமென்னு மிவை பற்றிநிகழுமேகதேசஞாநம்; இது: பதிஞாநம் விளக்குதற்கு ஏதுவாமுகத்தாற்பயனுடையது. (உ-ம்.) "வேதசாத்திரமிருதிபுராணகலைஞாநம்விரும்பசபைவைகரியாதித்திறங்கண் மேலாநாதமுடிவாணவெலாம்பாசஞாநம்" (சி.சி.க: உ. சிவஞா.)

பாசடம்—வெற்றிலை. (வைத்தியபரி.)

பாசண்டசாத்தன்-தொண்ணூற்றறுவகைச் சமையசாத்திரத்தருக்கக்கோவையில் மிகப்பயின்ற ஐயனென்னுங்கடவுள். (சிலப். கனத். தி. கடி.)

பாசண்டம்—பாசண்டமதம். (வழக்.)

பாசண்டமதம்—வேதத்தைப்பிரமாணமாகக் கொள்ளாத புறச்சமயிகள். (வழக்.)

பாசண்டர்— பாசண்டமதத்தினர்.
பாசண்டிகர்— (வழக்.)

பாசத்தன் — சதருத்திரருள் வருணதிக்கினிருக்கும் தசருத்திரரிலொருவன். (வி-ணி. உஎ0.)

பாசத்திராயம்—ஆணவம், மாயை, கன்மமாகிய மும்மலம்.

பாசதரன் — 1. நமன். 2. வருணன். 3. விநாயகன். பாசகரன்பார்.

பாசதரிசநம்—பிரபஞ்சதரிசநம். (சி. சி. அ: உஅ. நிரம்ப.)

பாசநம்—1. உண்கலம். 2. உறவு. 3. பாத்திரம். (உ-ம்.) "வாசனையூட்டிமிக்கமலர்விரையடித்தனூரீர்ப்பாசநத்தமைந்தபாங்கர்" (பெரியபு. தடுத்தா. கடி.) (1, 2- பிங்கல. ஈஅ0அ.)

பாசபஞ்சகம்—பஞ்சபாசம். (சி. சி. அள. ருி. சிவாக்.)

பாசம்—1. அவிச்சை. (உ-ம்.) "பின்ரேய்ந்து பாசமடங்கினன்" (திருவிளை. நான்மாட. கஅ.) 2. அன்பு. 3. ஆணவமலம். (த-நி.போ.கஅ.) 4. ஊசித்துளை. 5. கயிறு. (உ-ம்.) "பற்றுவாகெடும்பாசத்தினென்குரர்" (இராமா. கரன். கசு.) 6. கவசம். (பிங்கல. கசு0எ.) 7. சீரகம். (வைத்தியபரி.) 8. நமனுயுதம். (உ-ம்.) "சூலம்பிடித்தெமபாசஞ்சுழற்றித்தொடாந்துவருங்காலன்றனக்கு" (கந்தரலங்.) 9. பதிக்கும் பசுவுக்குமுள்ள தாரதம்மியங்களைச் சற்றுந்தெரியவொட்டாமல் மறைத்துநின்றமலம்; இஃது: ஆணவம், காமியம், மாயேயம், வைந்தவம், திரோதசத்தி என ஐவகைப்படும். (சி.பி.கை.) 9. பிசர்சம். (சூ.நிக.க. சடி.) (2, 4, 9-பிங்கல. ஈஅ0எ.)

பாசநகம்—அகில். (வைத்தியபரி.)

பாசவர்—இலையமுதிடுவார். (உ-ம்.) "பாசவர்வாசவர்" (சிலப். இந்திர. உசு.) [கயிறு திரித்துவிற்பாரும் பச்சிறைச்சி சூட்டிறைச்சி

விற்பாருமாம் என்பர் சிலப்பதிகார உரையா சிரியர்.]

பாசறை–1. பசிய இலைகளால் வேயப்பட்ட சிறுவீடு. (உ-ம்.)"பாசறைமுழுதுமொருபெருங் கடவுட்பரிமளமொல்லெனப்பரப்பி" (பாரத. குருகுல. கஉ.) 2. பாடிவீடு. (உ-ம்.) "பாசறை யல்லதுநீயொல்லாயே" (புறநா. ஙக.)

பாசனபேதி — செப்புநெருஞ்சில். (வைத் தியபரி.)

பாசனம்—புளிப்பு. (வைத்தியபரி.)

பாசாங்கு—மாரீசம். (வழக்.)

பாசாங்குக்காரன்–பாவனைக்காரன்.(வழக்.)

பாசாங்குசதரன்—விநாயகன். (திவாகரம். தெய்வப்.)

பாசானபேதி—செப்புநெருஞ்சில். (வைத் தியபரி.)

பாசி—1. கற்சுவர்முதலியவற்றிலே ஈரத்தி னூற் பச்சனவாய்த்தோன்றுவதொன்று.(வழக்) 2. இழக்கு. (உ-ம்.) "பாசிச்செல்லாது"(புறநா. உஉக.) [பிராசி என்பது பாசி என்றுயிற்று.] 3. சடைச்சி. (சூ. நிக. ச: சுங.) 4. நமன். பாசத்தையுடையவன் என் பது பொருளாம், வருணனுக்கும் விநாயகருக்குமாம். 5. நாய். (பிங்கல. உருக.) 6. நீர்ப்பாசி. 7. நெட்டி. 8. பசுமையுடையது. (ஐங்குறுநூறு.) 9. மீன். பாசிக்குத்தகையென வழக்குண்டு. (6,7-வைத் தியபரி.)

பாசிதம்—(கணிதம்.) (வழக்.)

பாசிப்பயறு—ஒருவகைப்பயறு. (வழக்.)

பாசிப்பாசம்–பச்சைக்கயிறு. (சிந்தாமணி. சஅங.)

பாசிபந்து–ஒருகையணி.(வழக்.)[இந்துஸ்.]

பாசிலை—1. பச்சிலை. (பெரியபு. ஆனாயநா. கடி.) 2. வெற்றிலை. (உ-ம்.) "பாசிலைசுருட்டி மைந்தன்கொடுக்கியபரந்துமின்னுந் – தூசுலா வல்குறீண்டித்துயிற்கண்கள்விழித் த தே தா ற் றும்"- (சிந்தா. விமலை. ஙஙக.)

பாசு–1. பசுமை. 2. மூங்கில். (1,2-சூ. நிக. கக: சகரவெ. கஉ.)

பாசுபதசாத்திரம் – அதிமார்க்கதூன்மூன் றினுளொன்று. (சி. சி. சி. உ: எங. மறை.)

பாசுபதம்–1. அதர்வவேத உபநிடதமுப்பத் தொன்றனுளொன்று. (கந் நவ. ஙஅ.) 2. அதி மார்க்கதூன்மூன்றினொன்று; இதில்: ஆன்மாக் கள்பலவாய் நித்தமாய் வியாபகமாய் கா ர ண காரிய சையோகத்தாற்றோன்றும் ஞானத்தால் தனித்தனி வேறுபாடுடையவென்றும், இவ் வான்மாக்களுக்காணவமில்லையென்றும்,மாயை கன்மங்கள் என்றிரண்டு பாசங்களுள்ளன வென் றும், பாசங்களாற் சுகதுக்கங்களை பநுப விக்குமென்றும், வைராக்கியமுண்டாய்ச் சாத் திரத்திற்கூறுமுறையே நீட்சைபெற்ற ஆன் மாக்களிடத்தே பரமேசுவரனுடைய ஞானமுத லியகுணங்கள் சங்கிராகந்தமாய்ப் பற்றுமென் றும், அப்பொழுது குடும்பபாரத்தைப் புத்திர ரிடத்துவைத்துத் துறவறத்திற்செல்வார்போல ஈசுவரனும் தன்னதிகாரத்தொழிவு பெற்றிருப் பனென்றுங்கூறப்படும். (சி. பி. கை.) 3. ஒரு விரதம். (சி. சி. அ: ஙஉ. சிவாக்.) 4. சைவத்தி லுட்சமயங்கள் ஆறனுளொன்று. (சி. சி. உ: எங.ஞாநப்.) 5. பசுபதியுடையபாணம்.(உ-ம்.) " பைந்தொடிபாகன்பாசுபதமுனக்குதவுமென் றான்" (பாரத. அருச். தவ. எஉ.) பாசுபதாத் திரம்எனவும் வழங்குவர்.

பாசுபதர்—ஆறுவகைச்சைவசமயிகளிலொ ருவர்; இவர்: சிவனேத்திருநீறுஞ்சடையுந்தரி த்தமூர்த்தியாய்க் கொள்பவர். (சி. சி. பாயிர. ச. ஞாநப்.)

பாசுபதி–மாயையேசகத்து பாதாநகாரண மென்று வாதிப்பவன். (சி. சி. க: ஙஙு. சிவாக்.)

பாசுரம்–1. பாட்டு. (சி. சி. க: சச. சிவஞா.) 2. வாசகம். (சூ. நிக. கo: ங.)

பாசுரர்–ரூபதன்மாத்திராதத்துவத் திருக்கு மோர்புவநாதிபதி. (வி-ணி. உஎஉ.)

பாசுவசுரோணி—காட்டாமணக்கு.(வைத் தியபரி.)

பாஞ்சசந்நியம் — 1. கிருட்டிணன்சங்கு. (பிங்கல. கஙஅ.) 2. வலம்புரியாயிரஞ்சூழப்பட் டது. (சூ. நிக. ங: எங.)

பாஞ்சராத்திரம்—விஷ்ணுசமயத்தி னொரு பகுதி; இது: வாசுதேவனுற்செய்யப்பட்டது. இ°ந்து: இருபத்துநான்காந்தத்துவம் வாசுதேவ னென்றொரு பொருளுண்டென்றும், அந்தப் பரம்பொருளினின்றுகிருட்டிணனும், அநிருத் தனும், மகரத்துவசனும், ரௌகிணேயனும் என நான்கு வியூகர்கள் சகத்தைப்படைத்தற் பொருட்டுத்தோன்றினரென்றும்,இந்தநான்கு வகுப்பினுற் சடமுஞ்சித்துமாய வெல்லாவுலக மும் படைக்கப்பட்டனவென்றும், வேதாந்த வாதிகள் நால்வரிலே பரிணமவாதிகள் சொல் வதுபோலே எல்லாம் வாசுதேவன் வடிவென் றும்,வேதங்களினுறுதிப்பயனில்லை பாஞ்சராத் திரத்தி னு று தி ப் ப ய னு ண் டெ ன் றும், ஆகையால், பாஞ்சராத்திரத்தின் முறையே நீட்சைசெய்துகொண்டு வாசுதேவனை வழி பட்டுவாசுதேவன்வடிவில் இலயமாதலேமுத்தி யென்றுங்கூறும். (சி. பி. கை.)

பாஞ்சராத்திரி — நாராயணர் தன்னைவழி பட்டவர்களுடைய பந்தத்தைநீக்கி அவர்களை விரசாநதியிலே மூழ்குவித்துச் சுத்தர்களாக்கி வைகுண்டத்திலே சாரூபத்தைக்கொடுப்பர் என்பன். (கந். நவ. ச.)

பாஞ்சராத்திரிகன் — பாஞ்சராத்திரமதத் தோன். (வழக்.)

பாஞ்சாலம்—தேயமைம்பத்தாறினொன்று. (உ-ம்.) "தளங்கில்பாஞ்சாலமிக்கனவட்டம்" (திருவிளை. நரிபரி. ௪0ச.)

பாஞ்சாலர்—பாஞ்சாலதேயத்தார். (பாரத. திரௌபதிமா. ஈஉ.)

பாஞ்சாலி—திரௌபதி.(பாரத.சூதுபோர்ச். உஈச.)

பாட்சா—தூருக்கத்தலைவன். [துலுக்கு.]

பாட்டம்—பாட்டாசாரியரால் வார்த்திக ரூபத்திற்செய்யப்பட்ட ஒரு மதம்; இந்தமதத் திலே வேதம் நித்தியமாய் அநாதியாய் சுயம்பு வாய்த் தோற்றமுடிவின்றி ஓரியல்பாய் நாதப் பிரம்மமாய் அழிவில்லாததாயிருக்குமென்று சொல்லப்படும். (த. நி. போ. கஈச.)

பாட்டன்—1. பாட்டமதத்தான். 2. மூதாதை. (பிங்கல. கஈறி.)

பாட்டாசாரியம்—பாட்டாச்சாரியர் வேதமே தெய்வமென்று ஏற்பதித்திய கொள்கை. (பாகியமதம்.)

பாட்டாசாரியன்—கன்மத்துக்கீடாக யோனி மாறுதென்றும் அயோனியாகவே செனிக்கும தொழிந்து அச்சுமாறுதென்றும் எவ்விடத்தும் ஆன்மாவியர்த்தமாய்நின்றறியுமென்றும் எக்கி யாதி கன்மங்களைச்செய்து மறுபிறப்பிலே சுவர்க்கத்தையடைவதே மூத்தியென்றுஞ் சொல்லுவோன். (சி. சி. உ: சக. உரை.)

பாட்டாளி—1. பாடுவோன். 2. வேலைப்பிரயாசி. (1, 2-வழக்.)

பாட்டி—1. ஒருசார்விலங்கின்பெண் பொது. 2. நரி நாய் பன்றியிவற்றின் பெண். 3. பாட்டன்மனைவி. (இராமா. அங்கதன்றூ. ஈஉ.) 4. பாடுவாள். (வழக்.) (1, 2-சூ. நிக. ஈ: ஈச, ஈசு.)

பாட்டியமி—பாட்டியம், பிரதமை. (வழக்.)

பாட்டியர்—பாணிச்சியர். (உ-ம்.) "பாணர் வருகபாட்டியர்வருக" (மதுரைக். எசஈ.)

பாட்டியல்—ஒரு நூல். வெண்பாப்பாட்டியல் முதலியவை. அ-செய்யுட்பொருத்த விலக்கண முதலியவையுணர்த்தும்.

பாட்டு—1. இசைப்பாட்டு. (உ-ம்.) "வண்டு பாட்டமர" (கூர்ம பு. தக்கன்வமி. உறு.) 2. செய்யுள். (சூ. நிக. ௪0: உஈ.) 3. சொல். (நன்னூல்விருத்தி. ஈசo.) 4. பட்டு. (உ-ம்.)"பாட்டரும்பகடுவீழ்ந்த" (சிந்தா. கோவிந். உஅ.) [விகாரம்.]

பாட்டுக்காரன்—பாடுவோன். (வழக்.)

பாட்டுடைச்செய்யுள் — பலபாக்களோடு உரைப்பாட்டையும், இசைப்பாட்டையுமுடைய இயலிசைநாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்.

பாட்டுடைத்தலைவன்—பாட்டுநாயகன். (இலக்கணவி. பொருளதி. பாட்டியல். ஈசு. உரை.)

பாட்டுநாயகன்—கவியுடைத்தலைவன்.

பாட்டை—வழி. (வழக்.)

பாடக்கிடம்—பங்கம்பாளை. (வைத்தியபரி.)

பாடகம்—1. காலணியிலொன்று. (உ-ம்.) "பாடகச்செம்பதுமலர்ப்பாவையர்" (இராமா. திருவவ. சுஉ.) 2. தெரு. (பிங்கல. சுசஅ.) 3. பற்படகம். (வைத்தியபரி.)

பாடகர்—பாடுவோர். (வழக்.)

பாடசாலை—பள்ளிக்கூடம். (வழக்.)

பாடணம்—சம்பாடணை. (உ-ம்.) "நயவாய் மைப்பாடணமன்பருள்" (சேதுபு. பிரமகத்தி. எஈ.)

பாடநம்—பாடுதல். (வழக்.)

பாடம்—1. அழுத்தம். 2. இரத்திநமுதலிய வற்றினொளி. 3. ஒளி. (சிந்தாமணி. கஅஈ.) 4. சேரி. (பிங்கல. சுசறி.) 5. படித்தல். 6. மேலதாங்கி. (வைத்தியபரி.) 7. மூலவாக்கியம். (சிவஞானபாடி. .) (1, 2, 5-வழக்.)

பாடம்போற்றல்—மூலபாடங்களை மறவாமற் பாதுகாத்தல்; இது: நூல்கேட்போரியல்பு ளொன்று. (உ-ம்.)"பாடம்போற்றல்கேட்டவை நினைத்தல்" (நண். சக.)

பாடமாக்குதல்—பாடம்பண்ணுதல். (வழக்.)

பாடரி—மதபானம். (வைத்தியபரி.)

பாடல்—1. சங்கீதம். (உ-ம்.) "நம்புபாட லாடலேநயந்துணர்ணினைஞர்கொலோ" (சிவரக. கணபதிமறு. சு.) 2. பாகல். (வைத்தியபரி.) 3. பாட்டு. (திருவிளை. தருமிக்குப். கூசு.) 4. பாடுதல். (உ-ம்.)"மறைகலந்தவொலிபாடலொ டாடலராகி" (தேவார. பிரமபுர. சு. சம்பந்த.) 5. பெருமை. (காஞ்சிப்பு. திருநகரப். கூசு.) அல்-சாரீரியபோலும். 6. வாசித்தல். (பிங்கல. உ0ச0.)

பாடல்பயிலிடம் — பட்டிமண்டபம். (பி. நிகண். சுஈகூ.)

பாடலம்—1. குதிரை. (உ-ம்.) "பாடலங் கரிவைகியபந்தியும்" (அரிச்ச. நகர. உ.) 2. சேறன்குதிரை. (பிங்கல. எசுச.) 3. பாகினி

மரம். (உ-ம்.) "பாடலநெடும்பலவு" (திருவாத. திருப்பெரு. கஉ.) 4. மழைக்காலத்துப்பழுக்கு நெல். 5. சிவப்பு. (சூ. நிக. கக: டகரவெ. ககூ.)

பாடலாவதி–ஓர்நதி; இது: இருகூபர்வதத்திலுற்பத்தியாகிறது. (அபிதானகோ.)

பாடலி — 1. ஒரு நெல். (வழக்குண்டுபோலும்.) 2. கள். 3. பாதிரிமரம். (2, 3-வைத்திய பரிபா.)

பாடலிபுத்திரம்—ஒரூர். (பெரியபு. திருநாவுக். ஈஅ.)

பாடலை—1. ஒரு மரம். 2. தூர்க்கை. 3. பாடலிபுரம். மரூஉ. (1, 2-(உ-ம்.) வந்துழிக்காண்க.)

பாடவம்—1. களிப்பு. (உ-ம்.) "பாடவநிலையினர்பலருஞ்சுற்றினர்" (இராமா. காரன். நிக.) 2. சமர்த்து.(உ-ம்.) "ஏடநீயென்செய்தாயாலித்திறமியம்புகின்றாய்-நாடுறுபழியு மொன்ஞாநகையையுநாணுயின்று – பாடவமுரைப்பது" (பெரியபு. இயற்ப. கஅ.)

பாடவன்—பாடுபவன். (வழக்.)

பாடவுரை — உரையெழுதுமிடத்து எடுத்தெழுதிய மூலமும் தானெடுத்துக்கொண்ட பாடத்திற்குபபிறர் வேறுவகையாகச்சொல்லுவரென்று காட்டலும். (நன். பொது. உக. இராமா.)

பாடவை—மிதுனவிராசி. (பிங்கல. உஎக.)

பாடற்பயம்—பாடலின்பம். (பரிபாடல்.)

பாடற்றொழில்கள் — யாழின்கண்வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடையென்னு மிசைக்கரணங்களெட்டும்; பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, வீளையாட்டு, கையூழ், குறும்போக்குஎன்னுங் கலைத்தொழில்களெட்டும், மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னு மைந்தும் பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணமுதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். (வள். நுஎகூ. பரி.)

பாடன்மகள் — பாடுவாள் பாணர்பெண். (வழக்.)

பாடா—பங்கம்பாளை. (வைத்தியபரி.)

பாடாண்டிணை — புறப்பொருட்டிணையிலொன்று; அஃது: எட்டுவகைப்படும். (தொல். பொரு. அ0. உரை.)

பாடாணத்தாபநம் — ஒருகல்லைத்தாபித்து இறந்துபோனவரிலொன்மாவை யதின் மந்திரத்தால்வரித்துச்செய்யுமிறந்தோர்க்கானகிரியை. (சைவச. பொது. உகூக. உரை.) **பாடாணம்**-கல்.

பாடாணம்–1. கல். (உ-ம்.)"ஊன்றுமெழிற் பாடாணம்" (ஆசௌள. கநிசு.) 2. நச்சுச்சரக்கு; அது: பிறவிப்பாடாணம், வைப்புப்பாடாணம் என விருவகை. (வைத்தியபரி.)

பாடாணவர்தசைவம்—அகச்சமய மாறனுலொன்று; அஃது: ஆன்மா முத்தியிலும் சகசமலநீங்காது கல்லுப்போலக்கிடக்குமெனக்கூறுவது. (சி. சி. உ: எகூ. சிவஞா.)

பாடாணவாதசைவன் — ஆன்மாமுத்தியிலும் சகசமலநீங்காது கல்லுப்போலக்கிடக்கும் என்பன். (கந். நவ. நு.)

பாடாணவாதி---பாடாணவாதசைவன். (சி. சி. அ: கஉ. நிரம்ப.)

பாடாந்தரம்—1. பலபாடை. 2. பாடபேதம். (1, 2-வழக்.)

பாடி — 1. சேணை. (சூ. நிக. உ: அஉ.) 2. நகரம். (சிலப். உரைபெறுகட்டுரை. கூ.) 3. நாடு. 4. பாசறை. 5. பாடுபவள். இ-பெண்பால் விகுதி. 5. பாராட்டி. (பரிபாடல்.) 6. பூமி. (ஆசிரியநி. ஈ: நு.) 7. முல்லைநிலத்தூர். (3, 4, 7-சூ. நிக. கக: டகரவெ. எ.)

பாடிகம்—படிகலிங்கம். (கோயிற்பு. பதஞ்சலி. சசு. உரை.)

பாடித்தல்---சொல்லுதல். (உ-ம்.) "சேடித்தவந்தனஞ்சிவனுக்குமூலத்தைப்-பாடித்தேயாகுதியைப்பண்" (சைவச. பொது. உகநு.)

பாடிதம் — சொல்லல்; அது: பிறர்கேட்கச் சொல்லல். (உ-ம்.) "மாநதமுமந்தமும்பாடிதமுமெனமந்திரந்தான்மூன்றுமூன்று – மோநமூறமநத்தகத்தேவாயகத்தேபிறர்கேட்கமொழிதலாகும்" (தணிகைபு. அகத்தியனருள். களக.)

பாடியகாரர்—1. பதஞ்சலிமுனிவர்.(பி-வி.) 2. பேருரைகாரருமாம்.

பாடியம் — விருத்தியுரை. (சிவஞானபோதப்பாடியம்.)

பாடிரம் — 1. சந்தனம். 2. தித்தகாகம். 3. மூங்கிலரிசி. (1, 2, 3-வைத்தியபரி.)

பாடிவீடு-பகைமேற்சென்றோருறைவிடம். (சூ. நிக. நு: ஈகூ.)

பாடினம்—சித்திரமூலம். (வைத்தியபரி.)

பாடினி—பாடுவாள். (உ-ம்.) "பாடினியணியாள்" (புறநா. உசஉ.)

பாடீகம் — 1. சந்தனம். (வைத்தியபரி.) 2. தித்தகாகம். 3. முகில். 4. மூங்கிலரிசி. (2,3,4, (உ-ம்.) வந்துழிக்காண்க.

பாடீநம்—சித்திரமூலம். (வைத்தியபரி.)

பாடீரம் — சந்தனம். (உ-ம்.) "இரத்தை" பார். (தைல. தைலவ. நுஉ.) [பாடிரத்திற் கூறியபொருளெல்லா மிதற்கும்வரும்.]

பாடு—1. அநுபவிக்கை. (சிவரக. நந்திகே சுரர்நமனு. ச.) 2. இடம். (சூ. நிக. கக: டகர வெ. கூ.) 3. உண்டாகுகை. படு என்பதன் முன்னீண்டதென்பர். 4. உதயத்திற்கு ஏழாமிடம். (உ-ம்.) 'கொடியோருதயத்தும்பாட்டினு நிற்கிற்சேய்கூற்றுவன்பாற்கடிதேயணுவுறும்' (விதாந. சாதக. கூ.) 5. ஒசை. (உ-ம்.) "அவ லெறியுலக்கைப்பாடுவிறந்த" (பெரும்பா. உஉசு.) 6. ஒரேழாம்வேற்றுமையுருபு. (உ-ம்.) "பின்பாடளேதேமுழைவழியுழியுளி" (நன். கூஐஉ.) 7. கேடு. (பிங்கல. கூஅகஐ.) 8. சுயகாரியம், அவன்பாடுபோர்ப்பான்.(வழக்.) 9. தகுதி. (உ-ம்.) "பகையாகும்பாடறியாதானேயிரவு" (நான்மணி. நிகு.) 10. துயில். (உ-ம்.) "பாடின்றிப்பசந்தகண்பைதல்பனிமல்க,வாடுபு" (கலி. கசு.) 11. தெரிநிலைவினைப்பகுதி. 12. பக்கம். (உ-ம்.) "கூட"பார். 13. படுக்கை.(உ-ம்.)"பன்ளுளாயினும்பாடுகிடப்பே" (மணிமே. உதய அம்பல. கநுஅ.) 14. பெருமை. (உ-ம்.) "பாட்டெள்ளும்பாடெய்தும்பாட்டேயுள" (நான்மணி. சுஉ.) 15. மூறைமை. (உ-ம்.)"பாடறிந்தொழுகும்பண்பிலுரே"(புறநா. ககஎ.) 16. வருத்தம். 17.வேலை.(வழக்.)ஐங்குறுநூற்றிலியலென்பர்.

பாடுகிடத்தல் — வரங்கிடத்தல். (உ-ம்.) "பாசண்டச்சாத்தற்குப்பாடுகிடந்தாளுக்கு" (சிலப். கனுத்திற. கநு.)

பாடுதல்—1. இராகம்பாடுதல். (திருவிளை. இசைவாது. சு.) 2. கவிசெய்தல். (திருவிளை. சங்கப்பலகை. க.) 3. வாசித்தல். (உ-ம்.)"பாடுதலெனினும்பாடல்எனினுமொக்கும்" (பிங்கல. உஙக0.)

பாடுநர்—புலவர். (உ-ம்.) "பாணர்பாடுநர் பரிசிலர்" (புறநா. ககூறு.)

பாடுவாள்—பாடுவிச்சி. (வழக்.)

பாடுவிச்சி—பாடன்மகள். (சூ.நிக.உ:சுறு.)

பாடை—1. ஆசந்தி. (உ-ம்.)"ஒவுநாளுணர் வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேல்"(தேவார. திருப்பாண்டிக்கொடுமுடி. கூ. சுந்தர.) 2. சொல்லு. (ஆ-நி. கo: க.) பதிணெண்பாடைக்கும்பெயர். 3. பருத்தி. (வைத்தியபரி.) 4. வட்டத்திருப்பி. (தைல. தைலவ.)

பாடைதூலத்தார்ன்—பாகல். (வைத்தியபரி.)

பாண்—1. இசைப்பாட்டு.(திருவிளை. விறகுவிற்ற.அ.) 2. கள். (வைத்தியபரி.) 3. தாழச்சி. (சிந்தா.) 4. பாணச்சாதி. (உ-ம்.)"பாணுவப்பப் பசிதீர்த்தனன்" (புறநா. உகூக.) (திருக்கோவையார். சஅகூ.) 5. பாழ். (உ-ம்.) "திறந்த பாண்கோயிலெய்தி" (சேதுபு. வேதாள. கூஎ.)

பாண்டம்—1. பாத்திரம், கொள்கலம். (சூ. நிக. எ: சுஎ.) 2. மட்கலம். (வழக்.)

பாண்டரங்கம்–திரிபுரதகநத்திற் செல்லுங் காலையில் தேர்நடத்தியபிரமன் கலைமகள் பிரிவாற்றாது வருந்துதலைநோக்கி இறைவன் வெண்ணீறணிந்து அவன்முன்னின்றாடிய ஆட்டம்; இஃது: ஆறங்கமுடையது. (உ-ம்.) "ஏறமர்கடவுண்மூவெயிலெய்வுழிக்.....படிநிலைதிரியாப்பாண்டரங்கம்மே"(கலி.க.உரை.)

பாண்டரங்கன் — சிவன், பாண்டரங்கநடனத்தையுடையவன். (வழக்.)

பாண்டரம் — 1. செஞ்சுண்ணாம்பு. 2. மல்லிகை. (1, 2-வைத்தியபரி.)

பாண்டல்—பாழ்த்துப்போனது. (வழக்.)

பாண்டவர்–பாண்டுபுத்திரர். (உ-ம்.)"பாண்டவர்கள்புரிந்ததவப்பயனுகியவதரித்து" (பாரத. இராசசூய. க.)

பாண்டவேயன்–பாண்டுவமிசத்தான். (வழக்.)

பாண்டி—1. ஒருதேயம். (உ-ம்.) "பாண்டிநாடென்றபின்னர்" (திருவாத.திருவம்பல.சு.) 2. ஒருவிளையாட்டு. 3. பண்ணுன்குகுழிப்பலகை. (வழக்.) 4. மூங்கில். (வைத்தியபரி.)

பாண்டிகன்—பள்ளியெழுச்சி பாடுவோன்.

பாண்டித்தியம்—கல்வியறிவின்றிறம். (வழக்.) துமக்கு எந்நூலிலேபாண்டித்தியமுண்டு.

பாண்டிமண்டலம்—பாண்டியனாடு.(உ-ம்.) "வளம்படியும்வயற்பாண்டிமண்டலத்துண்டு" (சேதுபு. நாட்டுச். சு.)

பாண்டியம் — 1. அறிவுடைமை. (வழக்.) 2. பாண்டியன்றேயம். (மரூஉ.)

பாண்டியர்தலின்பழையவிராஜதானி — கொற்கைநகரம். (மணிமே.)

பாண்டியன்– தமிழ்நாட்டு மூவேந்தரிலொருவன். (உ-ம்.) "சேரன்"பார்.

பாண்டிரம்—ஆல். (வைத்தியபரி.)

பாண்டில் — 1. அகல். (சூ. நிக. எ: சுகூ.) 2. எருது. (உ-ம்.) "காலிரும்பகடுபோக்குங் கரும்பெரும்பாண்டிலீட்டம்"(பெரியபு.நாட்டுச. உச.) 3. கஞ்சதாளம், கைத்தாளம். (உ-ம்.) "நுண்ணுருக்குற்றவிளங்கடர்ப்பாண்டில்" (மலைபடு. ச.) 4. கட்டில். (பிங்கல. கசுசுகூ.) 5. கண்ணுடி. (புறப்.மாலை.) 6. கிண்ணி.(உ-ம்.) "கழற்பாண்டில்" (புறநா. கஎ.) 7. தேர்வட்டை. (உ-ம்.) "வையமும்பாண்டிலும்" (சிலப். ஊர்காண். கசுஅ.) 8. நரையெருது. (உ-ம்.) "வாண்முகப்பாண்டில்" (சிறுபாணு. உசுo.) 9. பண்டி. (உ-ம்.) "மலகாயமென்னுஞ்சூத்தி

ரப்பாண்டிலிறுமிறும்" (மறைசை. சுசை.) 10. மூங்கில். 11. வட்டம். 12. வாகநம். 13. வாகை மரம். (10, 11-பிங்கல. எஅங.) (9, 12-வைத்தியபரி.)

பாண்டில்விளக்கு—கால்விளக்கு. (உ-ம்.) "பாண்டில்விளக்கிற்பரூஉச்சுடரழல" (நெடுநல். கஎடு.)

பாண்டிற்காசு — வட்டக்காசு. (ஐங்குறுநூறு.)

பாண்டிற்பொலங்கலம்—வட்டமாகச் செய்த பொன்னணி. (ஐங்குறுநூறு.)

பாண்டீரம்—ஆல். (வைத்தியபரி.)

பாண்டு—1. ஒரு நோய். (தைல. தைலவ.) 2. சிறுபூளை. (வைத்தியபரி.) 3. திருதராட்டிரனுக்குத்தம்பியும், ஐவர்களுக்குத்தந்தையுமான ஓரரசன். (உ-ம்.) "பாண்டுபுத்திரர்க்கோறுமென்றருளிலாப்பாவியர்துணிட்தாரே" (பாரத.நச்சு.) 4. வெள்ளை. (உ-ம்.) "பாண்டுகம்பளந்துளக்கியதாதலின்"(மணிமே.பாத்திரமரபு. உகூ.)

பாண்டுகம்–காமாலை. (வைத்தியநூல்களிற் காண்க.)

பாண்டுகம்பளம்—இந்திரன் ஆசனம். இதன் அசைவால் இந்திரன் உலகச்செய்திகளை அறிவானெண்ப. (அபிதாநசி.)

பாண்டுரம்—1. ஒரு நோய். 2. ஒரு மரம். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பாண்டுரை—பாதிரிமரம். (வைத்தியபரி.)

பாண்டுரோகம்—பாண்டுவியாதி. (வழக்.)

பாண்டுலா—கறிப்புடோல்.(வைத்தியபரி.)

பாண்டூர்—ஓரூர். (உ-ம்.) "பாண்டூர்தன்னிலீண்டவிருந்தும்" (திருவாச. கீர்த்தித். எ0.)

பாண்டை—ஊழ்த்தநாற்றம். (வழக்.)

பாண்மகள் — பாடுவாள். (திருவிளை. இசைவாதுவெ. ஈச்.)

பாண்மகன் — பாணஞுகியமகன். (உ-ம்.) "கைவளம்பழுநியநயந்தெரிபாலை-கைவல்பாண்மகன்கடனறிந்தியக்க" (சிறுபாண். ஈஎ.)

பாணச்சி—பாணத்தி. (வழக்.)

பாணத்தி—பாணப்பெண். (வழக்.)

பாணம் — 1. அம்பு. (சூ. நிக. எ: நி.) 2. திப்பிலி. (உ-ம்.) "பாணந்தன்மூலம்" (தைல. தைலவ. கச.) 3. நாடகவகைபத்திலொன்று. 4. பட்டு. (சூ. நிக. கக: ணகரவெ. சு.) 5. மழைவண்ணக்குறிஞ்சி. (சூ. நிக. ச: உக.)

பாணம்பழை–வண்ணக்குறிஞ்சா. (வைத்தியபரி.)

பாணர்—1. தையற்காரர். (வழக்.) 2. பாடுவோர்.(பிங்கல.அகடு.) 3. வைசியன் பிராமணப் பெண்ணைப்புணரப்பிறந்தவர். (அபிதாநசிந்.)

பாணல்—வெற்றிலை. (வைத்தியபரி.)

பாணலிங்கம்–பாணனென்னுமொரு அன்பனாலே பூசிக்கப்பட்டலிங்கம்; இது: கண்டகிநதியிலெடுக்கப்படும். (சைவப்பி. கக.)

பாணன் — 1. ஒரு சாதியான், யாழ்வாசிதலையுடையவன். (ஐங்குறுநூறு.) 2. காட்டாமணக்கு. (வைத்தியபரி.) 3. பலியின்புத்திரன். (மணிமே.) 4. பாழாகியவன். (உ-ம்.)"ஓர்பார்ப்பெனப்-பாணனேன்" (திருவாச. திருச்சத. சச) [அம்பலவாணன், மன்றவாணன், குன்றவாணன் என்பவற்றில் வாழ்நன்என்பது வாணனென நின்றுற்போல பாழ்நன்என்றது பாணன் என நின்றது.]

பாணை—பருத்தசட்டி. (வழக்.)

பாணைத்தடி—சிலம்பக்கம்பு. (வழக்.)

பாணி — 1. அழகு. 2. அன்பு. 3. இசை. 4. இதெதலும் ஏற்றலுஞ்செய்வதாய்க் கையிடத்துள்ள இந்திரியம். (காநாசி.) 5. இலேச்சாறு. 6. ஊர். 7. ஊர்சேர்சோலை. 8. ஒசை. (உ-ம்.) "ஈர்ந்தண்முழவின்பாணிததும்ப"(புறநா.ககூச) 9. கரண்டகபாடாணம். 10. கள். 11. காடு. 12. காலம். 13. கூத்து. (பிங்கல.சசசச.) 14. கை. (உ-ம்.) "பாலலோசநவாலபோசநபாலமானுறுபாணியாய்" (ஏகாதசி. உருக்கு. சசு.) 15. சருக்கரை. 16. செசால். (பிங்கல. உ00உ.) 17. தாமதம். (சிந்தா.விமலை. சக.) 18. தாளம். (உ-ம்.) "மண்ணைமமூழவின் பண்ணைதீயா - ழொண்ணுதல்விறலியர்பாணிதூங்க" (பொருந. ககo.) 19. தெரிகிலேப்பகுதி. 20. நாடு. 21. நீர். (உ-ம்.)"வழுதுணங்காய்நனைபாணியிலிங்கமீதுவார்ந்து" (சிவரக. அபுத்திபூ. உறு.) 22. பலபண்டம். 23. பழச்சாறு. 24. பற்று. 25. பாட்டு. (உ-ம்.) "மாயோன்பாணியும்" (சிலப். கடலாடு. கூடு.) 26. வாச்சியப்பொது. இன்னும்வைத்தியபரிபாடையிற்கரும்புக்குங்கூறுவர்.(2,3-பிங்கல.ஈஅகஉ.) (5,9,10,15,23-வைத்தியபரிபா.) (6,7,8,11,12,14,20,21,22,24-சூ.நிக.கக:ணகரவெ.கச.)

பாணிக்கிரகணம் — கைப்பற்றல், மணச்சடங்கு. (பராசர. மி. கo.)

பாணிரம்—தாமரை. (வைத்தியபரி.)

பாணித்தல் — 1. பாவித்தல். (வழக்.) 2. பொழுதுநீட்டித்தல். (உ-ம்.) "பரமருன்னிடத்தருள்சுரந்திடவுநீபாணித்தல்பயனன்றுல்" (சிவரக. தேவிமேருக. உஉ.) 3. மதித்தல். (உ-ம்.) "பரர்சரன்மதலேகேட்டப்பாண்மைபாணிப்ப" (சேதுபு. இராமதீர். அக.)

பாணிதம் — கருப்பஞ்சாறு, 2. கற்கண்டு. (1, 2-வைத்தியபரி.)

பாணிநி—ஒரு சமஸ்கிருத இலக்கணநூலா சிரியன். (உ-ம்.) "வடமொழியைப்பாணிநிக்கு வகுத்தருளி" (அபிதாநகோ.)

பாணிநீயம்—ஒரு வடமொழி இலக்கணம். பாணிநிமுநிவராற்செய்யப்பட்டது. (அபிதாந கோச.)

பாணிப்பல்லி—வலம்புரிக்கொடி. (வைத் தியபரி.)

பாணிப்பு—பாணித்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

பாணிப்பூ—இலுப்பைப்பூ. (வைத்தியபரி.)

பாணிழகம்—கைமுகம்; அது: சுட்டுவிரலும் பெருவிரலும்நீங்கின இடம். (சிந்தா.)

பாணியம்—வலம்புரிக்கொட்டை. (வைத் தியபரி.)

பாணிநகம்—தாமரை. (வைத்தியபரி.)

பாத்தகம்—பேராமுட்டி. (வைத்தியபரி.)

பாத்தம்—மருது. (வைத்தியபரி.)

பாத்தல்—1 கொடித்தல். 2. பங்கிடுதல். (உ-ம்.) "பாத்நாண்" (வள். உகூ.)

பாத்தி—1. சிறுசெய். 2. பங்கு. 3. பாய்ச்சுநீ ரொருபாலுஞ்செல்லாது நிற்கக்கட்டுஞ் சிறு வரம்புகளையுடைய பள்ளம். (உ-ம்.) "பாத்தி படுவள்ளிப்படுகுழியில்வந்திடலால்" (கந்தபு. வள்ளி.சஉ.) 4. வீடு. (1,2,4-பிங்கல.ஈஅகரி.)

பாத்திப்படுத்தல்—வளருநிலத்திலே நிலை பெறச்செய்தல். (உ-ம்.) "பகைவரைப்,பாத்திப் படுப்பதோராறு" (வள். சசுடு.)

பாத்திபம்—புளிமுட்டி. (வைத்தியபரி.)

பாத்தியத்தன்—பாத்தியன். (வழக்.)

பாத்தியத்திரவியங்கள்—வெண்கடுகு,இலா மிச்சம்வேர், சந்தனம், அறுகு என்னு நான்கு மாம். (சைவவி. கூஎ.)

பாத்தியம்—1. உரிமை. 2. சம்பந்தம். 3. பகுக்கப்பட்டது. பாத்து-பகுப்பு. 4. பாத மலம் பக்கொடுக்குநீர். (உ-ம்.) "பார்த்திவன் றனைப்பார்த்தவன்பாத்தியமுதலாஞ்-சீர்த்தநல் லுபசாரமுண்செய்தபின்" (சேதுபு. விதூம. கூஉ.) 5. பிணை. (2, 5-வழக்.)

பாத்தியல்—தண்ணீர்விட்டான். (வைத் தியபரி.)

பாத்தியன்—1. உரியவன். 2. பிணைகாரன். (1, 2-வழக்.)

பாத்திரச்சுரை—ஒரு சுரை. (வழக்.)

பாத்திரம்—1. இரப்போர்கலம். (உ-ம்.) "பங்கயன்றலையாற்செய்தபாத்திரங்கையிலேந் தும்" (சேதுபு. இராமநாத. எo.) 2. உண்கல முதலியகலங்கள். (வழக்.) 3. சற்பாத்திரம். (உ-ம்.) "தரிக்கவினிப்பாத் திராபாத் திரந்தாதாவோ-டுரைப்பாமதாதாவையும். (சைவ ச. பொது. சகஎ.) [பா-பாவக்கடலினழுந்தி னோர். திரம்-சிவனது திருவடியாகிய கரையி லிருத்துவோன்.] 4. தகுதி. (உ-ம்.) "உன்ன ரும்பாதபூசைக்குரியபாத்திரமானேன்" (சிவ ரக. மாநத. கக.)

பாத்திரவதம்—கருங்காலி. (வைத்தியபரி.)

பாத்திரவான்— } தகுதியோன். (வழக்.)
பாத்திரன்— }

பாத்து—1. கஞ்சி. 2. சோறு. (உ-ம்.) "அட் டேயிட்டெண்பாத்துகைவேத்தியமாக" (சிவரக. அபுத்திபூ. உடு.) 3. பகுத்திடல். (1,3-சூ.நிக. கக: தகரவெ. கஈ.)

பாத்துதல்—பங்கிடுதல். (உ-ம்.) "பாத்துண் ணுந்-தன்மையிலாளரயலிருப்பும்" (திரிகடி.கo)

பாத்துற்றன—பிரிவுற்றன. (கலி. கஈக. உரை.)

பாத்மகற்பம்—பதுமகற்பம். (கோயிற்பு. இரணிய. ஈக. உரை.)

பாத்மம்—பாத்மகற்பம். (உ-ம்.) "பான்மை தருங்கற்பமிதுபாத்மமெனும்பரி சு ணர்ந்து" (கோயிற்பு. இரணிய. ஈக.)

பாதக்காப்பு—செருப்பு. (சூ. நிக. எ: சுஈ.) பாதங்காப்பு என்றுங்கூறுவர்.)

பாதகடகம்—பாடகம். (சூ. நிக. எ: உசு.)

பாதகம்—1. தடுப்பது. (சைவப்பி. உ.) 2. துரோகம். (வழக்.)

பாதகன்—துரோகி. (வழக்.)

பாதகாணிக்கை—பாதத்தினடியில்வைத்து வணங்கப்பெறுந்தக்கிணை. (வழக்.)

பாதகி—துரோகி. (உ-ம்.) "பாதகியினைய மாற்றம்பகர்தலும்" (கந்தபு. மகாகா. உசு.)

பாதகிண்கிணி—நூபுரம். (பிங்கல. நிக. ககஅஉ.)

பாததூறு—பாதுகை. (வழக்.)

பாதச்சந்—வாக்குத்தாநத்தச்சந். (விதாந.)

பாதச்சாயை—மிதித்தவடிநிழல். (வரு ஷாதிநூல்பார்.)

பாதச்சிலை—தூண்டாங்குமடிக்கல். (இரா மா. மயேந்திர. உஈ.)

பாதசத்துவரம்—1. அரசமரம். 2. ஆலங் கட்டி. (1, 2-வைத்தியபரி.)

பாதசத்துவம்—அரசு. (வைத்தியபரி.)

பாதசரம்—ஒரு காலணி. (வழக்.)

பாதசன்—நான்காம்வருணன். (உ-ம்.) "பாத சன்கலியிற்பாங்காம்" (ஆசௌள. கஅ.)

பாதசாரம்—நிரகமன்றன்றுநிற்குநிலை.

பாதசாலம்—காலணிப்பொது. (சூ. நிக. எ: உசு.)

பாதஞ்சலம் — இயமநியமாதி அட்டாங்க யோகத்தால் மநோநிச்சலசித்தியாமென்றுசொ ல்லுமொரு சாத்திரம்; இது: பதஞ்சலிபகவான் சொன்னது. (சி. சி. உ: எகூ. மறை.)

பாதஞ்சலிகர் — பாதஞ்சலநெறிநிற்போர். (த. நி. போ. கசூ.)

பாதஞ்சலியம்—பதஞ்சலி செய்த நூல். (வழக்.)

பாததீட்சை — பாதமுத்திரைகொடுத்தல்; இது: தீட்சைவகையிலொன்று. (வழக்.)

பாதநீதனம்—தொழுவம். (உ-ம்.) வந்தூழிக் காண்க.

பாதநம்—1. இழிதல். 2. தூக்கத்தாற்றலை சாய்த்தல். 3. விழுதல்.(உ-ம்.)வந்தூழிக்காண்க.

பாதபம்—மரம் (உ-ம்.) "ஒளிகூர்பலை யுடைப்பாதபங்களுமே" (பாரத. அருச்சுநன் றவ. குசு.) [பாதவத்திற்குள்ள பொருள்கள். இதற்கும்வரும்.] காலாணிரைக்கிரகிப்பது.

பாதபரிசம்—சீதரங்கபாஷாணம். (வைத் தியபரி.)

பாதம் — 1. இராகு. (உ-ம்.) வந்தூழிக் காண்க. 2. ஐந்தாம் ஆறும்மாதத்திற் கருவழி தல். (ஆசௌ.) 3. கால்; இது: கருமேந்திரிய மைந்திலொன்றுமாம். (உ-ம்.) "அவர்பாதம் வணங்கினற்கு" (ம-தி. கமo) 4. காற்பங்கு. (உ-ம்.)"செய்கசெபமாலைநூற்றெட்டிலுற்பாதி யுறச்-செய்ய லுமாம்பாதத்துஞ்செப்" (சைவச. பொது. கசச.) 5. சாியையுதலிய நாலுநிலைக் கும் பொதுப் பெயர். (சிவஞான போ. சிறப்புப்.) 6. செய்யுட்களினடி. (யாப். காரி கை. செய். அ) 7. தடை. (சைவப்பி. உறு.) 8. நீர். (உ-ம்.) "உறுபோரஞ்சிப் பாதத்தில்வீழ் வோர்" (பாரத. பதினெட். கஙச.) 9. பாகம், பங்கு. 10. பூரட்டாதி. (உ-ம்.) "பாதம்புனல் பதத்தின்" (விதாந. குணை. உசு.) 11. வட்டத் தின்நான்கிலொன்று. 12. வியதிபாதம். உ-ம்.) "சூலமதிபரிவிட்கம்பம்பாதமரவுகண்டம்"(விதா ந. பஞ்சா. உஅ.) 13. விழுதல். (சிவஞாநசி. அ: உகூ)

பாதாசம்–சுத்திசெய்தரசம்.(வைத்தியபரி.)

பாதாட்சை—பாதுகை. (வழக்.

பாதாதம்—பாதரசம். (வழக்.

பாதாம்—மலையத்தி. (வைத்தியபரி.)

பாதபோகணம்–அரசமரம்.(வைத்தியபரி.)

பாதலத்தம்பி—நிலக்காளான். (தைல. தை லவ. எஉ.)

பாதலம்—1. சூரியனிற்குமிராசிக்கு நாலா மிராசி. (சோதிட.) 2. பாதாளம். (பாரத. இராயசூய. உச.)

பாதவம்–மரம். (சூ. நிக. ச: சச.) 2. மலை. (சூ. நிக. நு: கக.)

பாதளம்—பாதலம். (வழக்.)

பாதாதி—பதாதி. (வழக்.)

பாதாதிகேசம் — பாதந்தொட்டுக்கேசபரி யந்தமாகக் கலிவெண்பாவாற்பாடுவது. (இலக் கணவி. அகூடு. உரை.)

பாதார்த்தம்–எட்டிலொன்று. பாதம்-கால். அர்த்தம்-பாதி.

பாதாளகங்கை—கீழுலகநதி. (வழக்.)

பாதாளகிரகணம்–காணக்கிரகணம்.(வழக்)

பாதாளம் — 1. கீழுலகம். 2. சூரியனிற்கு மிராசிக்கு நாலாமிராசி. 3. நரகம்.(சூ.நிக.நு:ச.)

பாதாளழலம்—1. ஆடுதின்னிப்பாளை. 2. கறையான். 3. கோரைக்கிழங்கு. 4. சிறுநெ ருஞ்சில். 5 சீந்திற்கொடி. (1, 2, 3, 4, 5-வைத்தியபரி.)

பாதாளழலி — 1. நெருஞ்சில். 2. பாதாள மூலியென்னுமொருவகைச்செடி. (உ-ம்.) "பா தாளமூலிபடருமே" (நல்வழி. உகூ.) 3. புழுக் கொல்லி. (1, 3-வைத்தியபரி.)

பாதாளயோகம்–சுக்கிரன்வியாழத்திலிருக் கப் பன்னிரண்டுக்குடையவன் உச்சஞ்சி பாக்கியாதிபதியுடன்கூடிநின்றுற் பிரதாகயோ கமாம்; இஃது: ஐம்பத்தேழுவயதுக்குமேற் பன் னிரண்டுவருடம் நல்லயோகமென்பர். (சோதி டக்கட.)

பாதாளவஞ்சநம் — பூமிக்குட்பொருளைத் தெரியக்காட்டும் மை. (வழக்.)

பாதாளவிலாசநிதள் — பாதாளத்திலிருக் கும் எட்டிலட்சங்கங்கிகள். (த.நி.போ. கூஉக.)

பாதி—1. அரை. (உ-ம்.) "பாதியிரவினில்" (சிவரக. அபுத்திபூ. கக.) 2. துண்டு. (உ-ம்.) "மூறிப்பாதி" (அரிச்ச. மயாந. சக.) 3. பங்கு. (பிங்கல. உஉச0.) 4. பாதியாயிருக்கிறவன். (உ-ம்.)"மடந்தைபாதியே"(திருவாச.அருட்.க.)

பாதிக்கப்படுதல்—கெடுக்கப்படுதல். (சி. சி. அள. க. சிவாக்.)

பாதிடுதல் — 1. பங்கிடுதல். (உ-ம்.) "கண் டோர்யார்க்கும்பாதிடுமரவோர்போல்" (கோ யிற்பு. பசஞ்சலி. அஉ.) 2. பாதீடு, செறித்தல்.

பாதித்தல்—கூறுசெய்தல். (சி. சி. உ: அள. சிவாக்.)

பாதிதம்—தடுக்கப்பட்டது.(சைவப்பி.உ0.)

பாதிரம்–1. மலையாத்தி. 2. மூங்கில். (1, 2-வைத்தியபரி.)

பாதிரி–1. கிறீஸ்தவகுரு. ஒருகுழூஉக்குறி. 2. பாதிரிமரம். (உ–ம்.) "பலாமாவைப்பாதிரியைப்பார்" (ஔவைபாடல்.) 3. மூங்கில். (சூ. நிக. ச: கஙூ.)

பாதிரிக்கூட்டம்–பாதிரிவேர், வில்வவேர், குமிழவேர், தழுதாழைவேர். (உ–ம்.) "இருசேரகம்"பார்.

பாதிரியம்—ஒருநோய். (உ–ம்.) "இருநெறியின்றெறிப்பு"பார். [அது செவிடுபோலும்.]

பாதீடு—1. காத்தல். 2. செறித்தல். (சூ. நிக. கூ: ஙூக.) 3. பகுத்திடல். (உ–ம்.) "தந்துநிறை பாதீண்டாண்டுக்கொடையென" (தொல். பொரு. நிஅ.)

பாதுகம் — 1. தொடுதோல், செருப்பு. 2. பாதுகை. (இராமா. கிஷ்கிண்டகாண்.)

பாதுகாசித்தி—அந்தரத்தில்நடத்தல். [நீர்மேல் மிதியடியில் நடத்தல் என்பர்.] (உ–ம்.) வந்தழிக்காண்க.

பாதுகாத்தல் —காத்தல். (சூ. நிக. கூ: ஙூ.)

பாதுகாப்பு— }
பாதுகாவல்– } பாதுகாத்தல். (வழக்.)

பாதுகை–1. அறுபத்துநாலுகலைகளிலொன்று; அது: செருப்பைத்தொட்டு நினைக்கில் நினைத்த இடத்திற்சேர்ப்பது. (சௌந். கூ0. உரை.) 2. சிறுசெருப்படை. (தைல. தைலவ. கஙஙி.) 3. மிதியடி. (உ–ம்.) "பாதபங்கயமுப நிடப்பாதுகைசூட" (திருவிளை. எல்லாம். சு.)

பாதேந்திரியம்—கமநாதிகிரியைகளைச் செய்யுமிந்திரியம். (வாசுதே.)

பாதை — 1. தடை. (சைவப்பி.) 2. மரக்கலம். (சூ. நிக. எ: ஙிக.) 3. வழி (சிவரக. தேவர்முறை. உ0.)

பாதைக்கீரை—பாகல். (வைத்தியபரி.)

பாதோசம்—தாமரை. (வைத்தியபரி.)

பாதோந்நூதம்–மல்யுத்தத்திற்குரிய எண்வகைக் கரணங்களுளொன்று; அது: காலினுற்றூற்கியெறிவது. (கூர்மபு. தமோ. கஙூ. உரை.)

பாதோதம்—தாமரை. (வைத்தியபரி.)

பாந்தநம்—அரவு. (வைத்தியபரி.)

பாந்தம்—1. ஒழுங்கு. (வழக்.) 2. பகரவீறு. (உ–ம்.) "பாந்தஞ்-செலவொடுவரவும்" (நன். கசஙி.)

பாந்தல்—பதுங்கல். (சூ. நிக. ச: கசூ.)

பாந்தவம்—பாந்தவியம். (வழக்.)

பாந்தவியம்—பந்துத்துவம். (வழக்.)

பாந்தள் — 1. பாம்பு. (உ–ம்.) "பஂறலைப் பாந்தளேந்தி" (இராமா. கார்கால. உ.) 2. பெரும்பாம்பு. (உ–ம்.) "பழுவம்பாந்தளும்" (சு-பா. உஙி.)

பாந்தன்—வழிச்செல்வோன். (உ–ம்.) "அபராந்தர்பாந்தராகி" (இரகு. திக்கு. உஉ.)

பாந்து — 1. அளை. (வழக்.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

பாந்துதல்—பதுங்குதல். (வழக்.)

பாநகம்-பருகுதற்குரியஒருவகைநீர். (வழக்.)

பாநசியர்—மடையர். (சூ. நிக. உ: கூஎ.)

பாநபாத்திரம்–1 அறுபத்துநாலு கலைகளிலொன்று; அஃது: ஒருரகத்தில் நினைத்தபாகமெல்லாந்தருவது. (சௌந். கூ0. உரை.) 2. குடிக்கும்பாத்திரம்.

பாநம்—1. அமுதம். (உ–ம்.) "பம்பல்"பார். 2. கள். (சூ. நிக. சு: கூ0.) 3. குடித்தல் (உ–ம்.) "நாதன்பூசனையமிர்தபாநம்போலும்" (சிவரக. பாக்கி. கஙூ.)

பாநி—பருகுவோன். (வழக்.)

பாநிக்குருச்சி—சீநக்காரம். (வைத்தியபரி.)

பாநியம்—1. பாநீயம். (உ–ம்.) "அங்நாதிபாநியாந்தம்" (சைவச. பொது. சசஅ.) 2. பாற்சோறு. (உ–ம்.) "தீவினைப்பயஞ்மாளராப் பருகுபாநியம்போல்" (மதுரைப்பதிற்று. சுஅ.)

பாநியவல்லி—வலம்புரிக்கெடி. (வைத்தியபரிபா.)

பாநியாமலகம்—நெல்லியினேர் பேதம். (வழக்குப்பேரலும்.)

பாநீயம்—1. ஏலம், சந்தநம், பச்சைக்கர்ப்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ என்பவைகளிடப்பெற்றசலம். (சைவவி.) 2. நீர். (உ–ம்.) "பாதாளபூமியாதாரமீனபாநீயமேலேவயலூர" (திருப்பு. கூஉகூ.) 3. பருகுவன.

பாநு–1. ஒளி. 2. சிற்பநூன்முப்பத்திரண்டிலொன்று. (பொருட். நிகண்டி.) 3. சூரியன். (உ–ம்.) "பாநுவுங்கடலிற்புக்கான்" (அரிச்ச. மயாக. கூ.) 4. தக்கன்மகள். (அபிதாநசிந்.)

பாநுகம்பன்—ஆயிரமுகமும் ஈராயிரங்கைகளுமுடையவனுய் நூற்றைம்பது கணவீரர்க்கதிபனுய்ச் சிவசந்நிதியிற் சங்கவாத்தியமூழக்குஞ் செல்வத்தைப்பெற்றவன். (கூர்மபு. திருக்கல். நிநி. உரை.)

பாநுபலை—வாழை. (வைத்தியபரி.)

பாநுமதி—விக்கிரமார்க்கன்மனைவி. அவன் சரித்திரத்திற் காண்க.

பாநுமாநு — ரூபதன்மாத்திராதத்துவத்திருக்குமோரு ருத்திரன். (வி–ணி. உஎஉ.)

பாநுமைந்தன் — 1. கன்னன். 2. சனி. 3. சுக்கிரீவன். 4. நமன். இந்நாலுவருஞ் சூரியனுக்குப் பிறந்தவர்கள்.

பாப்பாசீசி-ஒருவகைத்தொடுதோல்.(வழக்)
பாப்பாயம்--கோட்டம். (வைத்தியபரி.)
பாப்பாரநாகம்—பறைநாகம். (வழக்.)
பாப்பு—பிராமணசாதி. (வழக்.)
பாப்புப்பகை—கருடன். (பரிபாடல்.)
பாபக்கினம்—எள். (வைத்தியபரி.)
பாபக்கிரகம்—அசுபக்கிரகம்; அவை: ஆதித்தனும், அபரபக்கச்சந்திரனும், இராகுவும், கேதுவும், சனியும், செவ்வாயும், ஆதித்தனுடன் கூடிநின்றபுதனுமாம். (விதாமானமா. மரபிய. உ.)
பாபகரை—ஒரு நதி. (வி-ணி. உகூ0.)
பாபத்தி—வேட்டை. (சூ. நிக. க: கூடு.)
பாபத்து—விஷயக்குறிப்பு. [அரபி.]
பாபநட்சத்திரம் — சுபகாரியங்கள்செய்யலாகாத நட்சத்திரங்கள்; அவை: திருவாதிரை, கேட்டை, ஆயிலியம், பரணி, கார்த்திகை, பூரம், பூராடம், பூரட்டாதியென்பன. (விதாந. பஞ்சாங்க. கசு. முகம்.)
பாபம்—பாவம். (உ-ம்.) "பழி"பார்.
பாபழர்த்திகள்-வேடர். (சூ. நிக. உ: சுஅ.)
பாபராசி—அசுபராசி; அவை: மேடம், சிங்கம், விருச்சிகம், மகரம், கும்பம் என்பன. (விதாநமாலை. பஞ்சாங்கம். கசு.)
பாபரோகம்—ஊழால்வருநோய். (வழக்.)
பாபி—பாவி. (வழக்.)
பாபிட்டன்—பாவஞ்செய்வோன். (வழக்.)
பாபிட்டை—பாவஞ்செய்பவள். (வழக்.)
பாபு—மேன்மைப்பொருளில்வருமோர் பட்டப்பெயர். [தெலுங்கு.]
பாபை—ஒருநதி. (வி-ணி. உகூ0.)
பாம்பரணை—ஓரரணை. (வழக்.)
பாம்பாட்டி — அந்தணன் சூத்திரகன்னியைப்புணரப் பிறந்தவன். (அபிதானசிந்.)
பாம்பாட்டிச்சித்தர் — ஒரு சித்தர். (அபிதாநகோ.)
பாம்பினசீசுப்பல்—இதற்குத்தட்டமென்றுபெயர். (சூ. நிக. ங: சகூ.) இந்தப்பல் காளி, காளாத்திரி, இயமன், இயமதூதியென நான்கு வகைப்படும்.
பாம்பு-1. அரவு. (உ-ம்.) "பருந்தின்சிறை நிழலுற்றதுபாம்பின்கணம்" (சிவரக. நைமிச. கூடு.) 2. ஆயிலியம். (உ-ம்.) "ஜம்பாணழஞற் பதிற்பாம்பெரடரனமுதாம்" (விதாந. குணகுண. உசு.) 3. கரை. (சூ. நிக. கக: மகரவெ: கசு.) 4. சர்ப்பமூகூர்த்தம். (உ-ம்.) "அரண்பாம் பதுடம்" (விதாந குணு. எகூ.) 5. நாகப்பூச்சி.
பாம்புக்கண்ணி — சங்கங்குப்பி. (தைல. தைலவ. கoசு.)
பாம்புக்கல் – பாம்பின்விடத்தையிழுக்குங்கல். (வழக்.)
பாம்புக்குத்தச்சன்–கறையான்.(மயூரகிரிக் கோவையிலறிக.)
பாம்புகொல்லி-ஒருபூண்டு.(வைத்தியபரி)
பாம்புணிக்கநுங்கல்-விடத்தைப் போக்குமொருவகைக்கல்.(தொல். சொல். கூடு. சேநா.)
பாம்புமோசீசை — ஒரு பூண்டு. (வைத்தியபரி.)
பாம்புரி — 1. அகழி. (சூ. நிக. டு: சச.) 2. ஒருமதிலுறுப்பு; அது: கீழேபுறப்படப்படுத்தது. (உ-ம்.) "தாமரைப்-பன்மலர்க்கிடங்குசூழ் பசும்பொற்பாம்புரிக்-கன்னிமூதெயில்" (சிந். பது. அடு.) 3. பாம்புச்சட்டை. உரி-தோல்.
பாம்புவிரல்—நடுவிரல். (வழக்.)
பாமக்கிநம்—கந்தகம். (வைத்தியபரி.)
பாமகள்—சரச்சுவதி. (உ-ம்.) "பண்டுநான் பூசைசெய்தபாமகள்போலுநீயே" (ஞாநவா. லீலை. எச.)
பாமதம்—வாலுளுவை. (வைத்தியபரி.)
பாமம்—1. ஒளி. (உ-ம்.) வந்துழிக்காண்க. (சூ. நிக. அ: உஉ-ல்.) வாமம்என்னூர். 2. பரப்பு. (உ-ம்.) "பாமமாகடல்கிடங்காக" (இராமா. அரசிய. எ.)
பாமரம்—அறிவின்மை. (உ-ம்.) "பாமரமட வாரின்மேனோர்பகருநம்மையுங்காமல்" (சிவரக. வில்வலன். கஎ.)
பாமரர் — அறிவீனர். (திருக்குற்றால. மந்தமாருத. கூசு.)
பாமரன்—அறிவீனன். (உ-ம்.) "பாமரனுக்கிதிற்புத்திவாரா" (சிவரக. சிவகிண்டிவநபால. சஉ.)
பாமன்-சூரியன். (உ-ம்.) வந்துழிக்காண்க.
பாமா—சிரங்கு. (சீவரட். கடு0.)
பாமாரி—கந்தகம். (வைத்தியபரி.)
பாமிநி—பெண். (உ-ம்.) வந்துழிக்காண்க.
பாமை—1. சிரங்கு. (தைல. தைலவ. எக.) 2. விரணம். (தைல. தைலவ. கசo.)
பாய் — 1. தெரிநிலைவினைப்பகுதி. (உ-ம்.) "பாயொளிப்பரிதியும்" (கூர்மபு. தக்கன்வேள். சஉ.) 2. படுக்கும்பாய். (உ-ம்.) "பாயாருநீயுமல்லாற்பின்னையேதுநட்பாமுடலே" (பட்டணத்தடி பா.) 3. பரப்பு. முதனிலைத்தொழிற் பெயர். (பிங்கல. உஉகஅ.)
பாய்க்கோரை—ஒரு புல். (வழக்.)
பாய்ச்சல்—பாய்தல். (வழக்.)
பாய்ச்சி—பாய்ச்சிக்கை. (வழக்.)
பாய்ச்சிக்கை — சொக்கட்டான்முதலிய வற்றின் கவறு. (வழக்.)

பாய்ச்சு — 1. தெரிநிலைவினைப்பகுதி. (பிறவினைப்பகுதி.)

பாய்ச்சுதல் — 1. உட்செலுத்துதல். (வழக்.) 2. பாயச்செய்தல். (1, 2-பிறவினைத்தொழிற் பெயர்.)

பாய்ச்சுவலை — ஒரு வலை. (வழக்.)

பாய்த்தல் — பாயச்செய்தல். (பிறவினைத் தொழிற்பெயர்.

பாய்த்தி — பாய்ச்சி. (உ-ம்.) "தேன்பாய்த்தி நிரம்பிய" (திருவாச. திருவண். கஎங.)

பாய்த்து — 1. தெரிநிலைவினைப்பகுதி. 2. பாய்ச்சல். (உ-ம்.) "தவளைப்பாய்த்து" (நன். ஈஅ.)

பாய்த்துதல் — பாய்ச்சுதல். (வழக்.)

பாய்தல் — 1. குத்தியுருவுதல். (உ-ம்.) "அழுக்கடையாநெஞ்சருகமும்மலங்கள்பாயும்" (திருவாச. திருத்தசா. எ.) 2. தாண்டல். (பிங்கல. உகஅசு.) 3. நீர்முதலியபாய்தல். (உ-ம்.) "உதிரம்பாய" அரிச்ச. மயா. உ.) 4 பரத்தல். (பரி பாடல்.) 5. முட்டல். (வழக்.) கடாக்கள்பாய்கின்றன.

பாய்தீதென — பாய்ததாக. (பத்துப்பாட்டு.)

பாய்பு — பாய்ந்து. (பரிபாடல்.)

பாய்மரம் — கப்பலிற் பாய்தூக்குமரம். (உ-ம்.) "பாய்மரக்கொடிபோல்" (மதுரையிற்தாதி.)

பாய்மா — 1. குதிரை. (புறப். மாலை.) 2. புலி. (1, 2-சூ. நிக. கக: றகரவெ. கசு.)

பாய்விரி — பசளை. (வைத்தியபரி.)

பாய — பரப்பிய. (சிந்தா.)

பாயசம் — 1. பரமான்னம். (பாலபாட.) 2. பால். 3. பாற்சோற்றிச்செடி. (2, 3-வைத்தியபரி.)

பாயசான்னம் — வேண்டிய அரிசியும் அதிற் பாதிகொண்ட பயற்றம்பருப்பும் அரிசியின் இருமடங்கேனும் மும்மடங்கேனும் நான்மடங்கேனும் பாலுங்கூட்டிப்பாகம்பண்ணப்பட்டது. (சைவசு. பொது. நிசசா. உரை.)

பாயம் — 1. நீர். (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. புணர்ச்சியைக்கருதுங்கருத்து. (உ-ம்.) "கூர்ஞ் சேறுடிபவிரும்பல்குட்டிப்–பன் மயிர்ப் பிணை போடுபாயப்போகாது" (பெரும்பா. கூசஉ.) 3. மநத்துக்குவிருப்பமானவை. (உ-ம்.) "பாயம் பாஉ" (சு-பா. நிஅ.)

பாயரங்கம் — பகிரங்கம். (த.நி.போ.கசநி.)

பாயல் — 1. துயில். (உ-ம்.) "பாயல்பெறே என்படர்கூர்ந்து" (கலி. கூஎ.) 2. மக்கட்படுக்கை. (உ-ம்.) "பங்காதிப்பாயலோ" (பாரத. கிருட்டி. அ0.)

பாயலுணர்த்தி — எழுப்பி. (ஐங்குறுநூறு.)

பாயிரம் — முகவுரை, வரலாறு. (நன். பொதுப். க. உரை.)

பாயிருக்கை — பரந்தவிருப்பு. (உ-ம்.) "இருந்துபுறஞ்சுற்றியபெரும்பாயிருக்கையும்" (சிலப். இந்திரவி. நிகூ.)

பாயினர் — பரந்தார். (புறப். மாலை.)

பாயு — குதம்; இது: மலசலாதிகளை வெளியே தள்ளுவது. (நாஞ்சீ.) கன்மேந்திரியமைந்தனுளொன்று. (ஞானமி.)

பாயுடையவர் — சமணர். (உ-ம்.) "பாயுடையவர்விடவிடநாகப்படிவுகொண்சிசரன்" (திருவிளை. நாக. அ.)

பாயுநு — பாயு.

பாரி — 1. உரோகிணிநாள். (திவாகர. முதலா.) 2. சேர்ப்பலகைப்பரப்பு. (உ-ம்.) "கால் பார்கோத்துஞாலத்தியங்கும்" (புறநா. கஅடு.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. பாறை. (உ-ம்.) "பார்முதிர்பனிக்கடல்கலங்கவுள்புக்கு" (திருமுரு. சடு.) 5. பூமி. (உ-ம்.) "பாரிடந்தெடுத்த மாவினையபாழியாய்" (இராமா. கவந்த. உகூ.) 6. வண்டிப்பார். (வழக்.) 7. வன்னிலம். (உ-ம்.) "கரவெண்ணும், பார்தாக்கப்பக்குவிடும்" (வள். கoசுஅ.)

பாரிக்கவம் — உபபுராணம் பதினெட்டினொன்று. (வழக்.)

பாரிக்கவன் — சுக்கிரன். (உ-ம்.) "பாரிக்கவனென்னுமாசான்" (கந்தபு. கந்தவிரத. நி.)

பாரிகவி — 1. சிறுதேக்கு. 2. வெள்ளருகு. (1, 2-மலையக.)

பாரிகல்பத்தியம் — இரவினிகழும்பதினெஞரா முகூர்த்தம். (விதாந.குணகுண.எகூ, உரை.)

பாரிச்சட்டம் — வண்டியச்சின் மேலிடுசெட்டம். (வழக்.)

பாரிசி — பாரசீகம். பாரிசதேசமென்பர்.

பாரித்தல் — 1. ஆராய்தல். 2. நோக்குதல். 3. வணங்கல். (சூ. நிக. கூ: ககூ.) 4. விசாரித்தல். (உ-ம்.) "பார்த்திடினருளேயெல்லாம்" (சி. சி. க. கூஎ.) (1, 2-வழக்.)

பாரித்தன் — அருச்சுனன். (உ-ம்.) "பாராளக்கன்னனிகற்பார்த்தனைமுன்கொன்று" (பாரத. கிரு. கூடு.) [பிரதைக்குப்புத்திரனென்றபடி.]

பாரித்திட்ட — பரந்த. (சிந்தா.)

பாரித்திபசித்தி — தூலனுதல், சூக்குமனுதல், பாலனுதல், யௌவனனுதல், விருத்தனுதல், நாநாசாதிரூபமெய்தல், பிருதிவிபுறமாக நான்கு பூதத்திற்றேகந்தரித்தல், நித்தியசுகந்தம் போகித்தல் ஆகிய இவ்வெட்டும். (வி-ணி.)

பாரித்திபம் — பார்த்திவம். (வழக்.)

பாரித்திவ — வியாழவட்டமாகிய அறுபது வருடங்களிற் பத்தொன்பதாவதாண்டு. (வழக்.)

பார்த்திவம் — 1. பிருதுவிசம்பந்தமானது.

(சி.சி.க: உஅ. சிவாக்.) 2. பூமி. (சூ.நிக.நி:அ.)

பார்த்திவலிங்கம் — மண்ணுற்செய்யப்படுமிலிங்கம்; இது: க்ஷணிகலிங்கம் பன்னிரண்டு வகையினென்று. க்ஷணிலிங்கம்-பூசித்தவுடன் விடப்படுமிலிங்கம். சைவவினுவிடையிற் சிவலிங்கவியலிற் காண்க.

பார்த்திவன் — 1. அரசன். (உ-ம்.) "பரிதி நன்மரபில்வருபார்த்திவன்"(அரிச்ச.பாயிர உ.) 2. பூமியில் வசிக்கிறவன்.

பார்த்திவி—சீதை. பூமியிற்பிறந்தவளென்பதாம். (வழக்.)

பார்ப்பதி — 1. பார்வதி. (திருவிளை. வரகுணனுக்குச். உஉ.) 2. பெருநெருஞ்சில். (வைத்தியபரி.)

பார்ப்பனத்தி—பிராமணத்தி. (வழக்.)

பார்ப்பனமாக்கள் — பார்ப்பார். (உ-ம்.) "வேதப்-பனுவலுக்குத்தவத்தினுக்கு மூரிய வேள்விப்பார்ப்பனமாக்களினிடையேபாண்டு மைந்த-ரநுவருங்கொண்டுமாரியிருந்ததன்மையறிந்து" (பாரத. திரௌபதி. சகூ.)

பார்ப்பனி — பிராமணப்பெண். (உ-ம்.) "உயிரைப்புறங்கொடுத்த-பண்ணீரமழலைமொழிப்பார்ப்பனியைக்கண்ணுற்றான்"(திருவிளை. பழியஞ். கo.)

பார்ப்பார்—பிராமணர். (உ-ம்.) "பார்ப்பார்தவரேசுமந்தார்பினிப்பட்டார்" [வேதாந்தத்தையேபொருளென்று மேற்கொண்டுபோர்ப்பாரென்றவாறு.]

பார்ப்பார்முவகைக்கடன்–தேவர், முனிவர், தென்புலத்தார் ஆகிய மூவர்க்கும் முறையே செய்யப்படும்வேள்வியும், வேதமோதுதலும், மகப்பெறுதலும். [வ-று.] "மூன்றுகடன்கழித்தபார்ப்பானும்" என்னும் (திரிகடு. கூச-ஆஞ் செய்யுளாற்பெறப்படும்.

பார்ப்பாறுதொழில் — ஈதல், ஏற்றல், ஓதல், ஒதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன. (காஞ்சிப்: ஒழுக்கப்பட. கூறு.)

பார்ப்பான்—1. ஈசன். (பரிபாடல். 2. ஒரு பூடு. (வைத்தியபரி.) 3. பிராமணன். (உ-ம்.) "சாம்பியழியவதென்பார்ப்பானென்ன" (திருவிளை. மாபாத. உஅ.) 4. வியாழன். (உ-ம்.) "பார்ப்பானுறுகிற்பெருமழையாம்" (வி தா ந. உற்பாத. கச.)

பார்ப்பான்பூண்டு — ஒரு பூண்டு. (வைத்தியபரி.

பார்ப்பினி–பார்ப்பனி.(உ-ம்.)'முனிவர்பார்ப்பினிகள்பலரீண்டி'(கோயிற்பு.பதஞ்சலி.கடு.)

பார்ப்பு—1. கோட்டில்வாழ்விலங்கின் பிள்ளை. 2. தவழ்சாதியின்பிள்ளை. 3. பறவைக்குஞ்சு. (உ-ம்.) "பரிசயப்படுதண்சததளப்பொகுட்டுப்பார்ப்புறைபள்ளிவிட்டகலா" (பாரத. ரசசசூ. உக.) 4. பார்த்தல். பு-தொழிற்பெயர் விகுதி. 5. பிரமசாதி. (வழக்.) 6. பிராமணத்துவம். (உ-ம்.) "பார்ப்பாயவேடங்கட்டி"(சி.சி. சூ: உச. மறை.). 7. விலங்கின்பிள்ளை. (1,2,7-சூ. நிக. கூ: கூஎ, கூஅ, சo.)

பார்பதி–பெருநெருஞ்சில். (வைத்தியபரி.)

பார்மகள்—பூமிதேவி. (உ-ம்.) "நேரிந்து பார்மகள்முதுகிற" (இராமா. கரன். அசு.)

பார்மகன்சாரி—கர்ப்பூரம்.

பார்மிசைநடந்தோன்—புத்தன். (பிங்கல. ககூச.)

பார்வணம் — யாகமிருபத்தொன்றினொன்று.

பார்வதம்—வாலுளுவை. 2. வேம்பு. (1, 2-வைத்தியபரி.)

பார்வதி — 1. உமை. (கூர்மபு. திருக்கல். கசு.) [பர்வதராசன்புத்திரியென்பதுபொருள்.] 2. பெருநெருஞ்சில். (வைத்தியபரி.)

பார்வதிலோசநம்—புறத்திற்குரியநாற்பத்தொரு தாளங்களிலொன்று. (திருவிளை. கான்மாறி. அ. உரை.)

பார்வதேயம்—மலையிற்பிறப்பன. (வழக்.)

பார்வல்—1. குஞ்சு. 2. பார்த்தல். (உ-ம்.) "பார்வலிருக்கை" (புறநா. கூ.)

பார்வற்பாசறை—காவற்பாசறை. (பரிபாடல்.)

பார்வை–1. ஆராய்வு. 2. கண். (சூ. நிக. உ. கசு.) 3. பார்த்தல். (உ-ம்.) "பார்வைச்செயலங்குனவாம்" (சிவரக.நந்திகண. கஉ.) 4. பார்வைமிருகம்.(உ-ம்.)"பார்வையாத்தபறைத்தாள்விளவி-னீழன்மூன்றினிலவுரற்பெய்து" (பெரும்பா. கூறு.) 5. மேல்விசாரிப்பு. (வழக்.)

பார்வைக்காரர் — நோய்தீர்க்கமந்திரங்கணித்துப்பார்ப்போர். (வழக்.)

பார்வைத்தகடு — துறப்புவாய்தற்றகடு. (வழக்.)

பார்வைப்படல்— கண்ணுக்குப்புலப்படல். (உ-ம்.) "பரர்பார்வைப்பட்டாற்பலியர்செபங்கள்" (சைவச. பொது. கசக.)

பார்வைபார்த்தல்—நோய்தீர்க்கமந்திரமுச்சரித்தல். (வழக்.)

பாரகம்—1. இடுதிரைச்சீலை. (பிங்கல. கஉசுச.) 2. தோணி. (சூ.நிகண்டில்,பாரமென்றுர். பாரகம் எனவும் வழக்குண்டு.) 3. பூமியிடம்.

பாரகர்–1. கரைகண்டவர்.(உ-ம்.) (கோயிற்பு. நடராச. கூகூ.) 2. சுமப்பவர். (உ-ம்.) "பார

கர்பரிக்கக்கொட்ட"(சி. சி. உ: கூறி.) 3. நாயகர். (உ-ம்.) "ஒப்புடையமநத்தின்றாய்ப்பாரகர்பாரி யர்வாழுமுறையுளெங்கும்" (அ ருண கி ரி பு. நகர. கசு.)

பாரகன்—1. இரட்சிக்கிறவன். (சிவதரு.) 2. தாங்குமவன். (சிவதரு.)

பாரகிதை—வாதுளாகமம். (சி-லி. சரி. உ.)

பாரங்கம்—இலவங்கப்பட்டை. (வைத்திய பரிபா.)

பாரங்கி—1. கண் டபா ரங் கி. (தைல. (தைலவ.)

2. சிறுதேக்கு. (வைத்தியபரி.)

பாரங்கு—1. சாட்டுப்பருத்தி. 2. சிறுதேக்கு. (1, 2-வைத்தியபரி.)

பாரசவம்—ஆயுதப்பொது.

பாரசவன்—பார்ப்பானுக்குச் சூத்திரச்சி பெற்ற பிள்ளை. (உ - ம்.) "சூத்திரர்தங்கன்னி தனைச்சுருதிமறைபவனலரைச்சூட்டித் தே ாய வாய்த்தவன்பேர்பாரசவன்" (அ ருண கி ரி பு. வலம்புரி. கoறி.)

பாரசிகை—பருந்து. (சூ. நிக. கூ: நிசை.)

பாரசிகம்—பாரிசதேயம். (உ - ம்.) "பலர் புகழுங்கோரக்கமக்ஞ்சிங்களமலயம்பாரசீகம்" (திருவிளை. மாணிக்கம். எஅ.)

பாரணம்—1. உண்டல். (உ-ம்)"ஆழிப்புவி-பாரணனுமத்தவேணியைத்தாங்கிய பா ல்வி டையே" (மறைசை. கூஅ.) 2. உபவாசமிருந் துண்ணல். (உ-ம்.) "நியமமாற்றியினிதுபார ணம்புரிவதியல்பேயன்றே"(சிவரக. சிவகண்டி வனபாலன். கூஎ.)

பாரணை—பாரணம். (வழக்.)

பாரத்துவாசம்—1. வ லிய ன். (பிங்கல. உகூசஉ.) 2. ஒரு வடநூல்.

பாரத்துவாசன்—1. துரோணாசாரியன். (பிங்கல. எகூஉ.) 2. பரத்துவாசமுனி. (பாரத. வாரணவ. கூஉ.)

பாரதந்திரியம்—பராதீநம். (வழக்.)

பாரதம்—1. இரதம், பரதரசம். (வைத்திய பரி.) 2. பாரதரது சரித்திரத்தைக்குறித்துச் செய்யப்பட்டநூல். (உ - ம்.) "நாடாமுதலுன் மறைநான்முகனுவிற் - பாடாவிடைப்பாரதம்ப கர்ந்தேன்" (வள்-மா. உ.) [மூவிவர்கள்சீர்தூக் கிப்பார்க்கையில் இந்நூல் வேதங்களினும் பெ ரியது பாரமுமுடையதாயிருத்தலால் மகா என் னுமடைமொழிகொடுத்து மகாபாரதமென்று சொல்லப்படும் என்று வேதவியாசர்சொல்லிய படி கொள்ளலுமாம்.] 3. பாரதவருடம்.(உ-ம்.) "பாரதத்துள்ளாரவனிகிளைத்துமற்றும்பஃறெ ழிலும்புரிந்து" (கந்தபு. அண்டகோ. சகூ.)

பாரதர்—குருகுலவேந்தர். (சூ.நிக.உ:கசு.) [பரதனென்னுஞ்சந்திரகுல அரசன் ம ரபி ற் பிறந்தவர்களென்றபடி.]

பாரதவருடம்—ப ரத கண் ட ம். (உ-ம்.) "பாரதம்"பார்.

பாரதன்—1. குருகுலவேந்தரிலொருவன். (உ-ம்.) "பாரதம்"பார். 2. கூத்தாடி, பரதசம் பந்தமுடையவன்.

பாரதி—1. சரசுவதி. (உ-ம்.) "மாசில்கவி யிற்பாரதிநீ" (கூர்மபு.திருக்கல்.கூறி.) [பாவிற் பிரியமுடையவள்.] 2. மரக்கலம். (சூ. நிக. எ: நிக.)

பாரதிதீபம்—ஒரு நிகண்டென்பர்.

பாரப்பழி—மிகுகுற்றம். (வழக்.)

பாரபட்சம்—ஓரவாரம். (வழக்.)

பாரபத்தியம்-1.மேல்விசாரணை.[தெலுகு]

பாரம்—1. இரதம். (வைத்தியபரி.) 2. கடமை. 3. கநம். (உ-ம்.) "பாரக்குடர்மிடைபாச டை"(இராமா.கரன்.கச.) 4.கரைப்பொது. 5. கவசம். 6. சுமைப்பொருள். (ஞாநமிர்தம்.) 7. குதிரைச்சேணம். 8. சுமை. 9. செய்யத்தக்கது. (உ-ம்.) "பாரமீசன்பணியலதொன்றிலார்"(பெ ரியபு. திருக்கூட். கூ) 10. துலாமிருபத்தெட் டுக்கொண்டது, ஒருவகை நிறை. 11. தோணி. 12. பருத்திப்பூ.(உ-ம்.)"பாரம்பீரம்பைங்குருக் கத்தி"(கு-பா. கூஉ.) 13. பூமி. 14. பொறுமை. 15. வருத்தம். (4, 5, 6, 7, 11, 13, 14-சூ.நிக. கக: ரகரவெ. உக.) (2, 8, 15-வழக்.)

பாரம்பரம்—கிரமங்கிரமமாய் வ ரு வ து. (வழக்.)

பாரம்பரியம்—இடையிட்டல்லாதகிரமம். (சி. சி. க. சடு. ஞாநப்.)

பாரம்பரை—பாரம்பரியம். (வழக்.)

பாரமரம்—மாமரம். (வைத்தியபரி.)

பாரமார்த்திகசீவன்—கூட்டத்தன். (நாநாசி. கச.)

பாரமார்த்திகம்—பரமார்த்தமுடையது. (சைவவி.)

பாரமார்த்திகன்—கூடத்தனது பரியாயநா மங்களுளொன்று. (உ-ம்.) "தாவரும்பாரமார்த் திகன்றுரியன்" (வேதாரு. நிஉ.)

பாரமேகாரிக்கியம்—சிவபூசைமுடிவிலே சிவபிரானேயெழுந்தருளச்செய்யும்போது கொ டுக்குமர்க்கியம். பராமுகார்க்கியம் என்பதுமிது வே. (பூசைவிதியிலதிக.)

பாரமேசுபரிபாவனை—பிராமிபாவனை. (கூர்மபு. வருணு. சஙூ. உரை.)

பாரகேசுரம்—சதாசிவமூர்த்தியுடையஈசான முகத்தினின்றுற்பவித்த இருபத்தெட்டாகமங்

களுளொன்று, கிரந்தசங்கியை பன்னிரண்டி லட்சம்; இதனைக்கேட்டவர் சீதேவி, உசநர். (சைவச. பொது. ஈகூள. உரை.)

பாரமேசுவராநுபம்—விசுவரூபம். (கந்தபு. திருவிளை. அமை. குறிப்பு.)

பாரமேட்டிசந்நியாசம்—இருவகைச் சந்நி யாசங்களுளொன்று. (கூர்மபு. வருணா. சம. உரை.)

பாரமேட்டிசந்நியாசி — புலன்களை யுள்ள டக்கி யோகத்தைச்செய்து மு த் தி யடைய விரும்புவோன். (கூர்மபு. வருணா. சம. உரை.)

பாரவதம் — புரூப்பொது, விகாரம். கரும் புரூ. (சூ. நிக. ஈ: சுக.)

பாரற—தட்டற. (உ-ம்.) "பாவீற்றிருந்த கலைபாரறச்சென்றகேள்விக் – கோவீற்றிருந்த குடிநாட்டணிகூறலுற்றேன்" (சிந். நாமக. க.)

பாராகம்—உபநிடதமுப்பத்திரண்டி லொன் று. (பொருட். நிகண்டி.)

பாராசரி—சுக்கிரன். (அபிதானகோ.)

பாராச்சரியம்—தருமநூல் பதினெட்டிலொன் று. (பொருட். நிகண்டில், பாராசரமென்பர்.)

பாராசாரி—பெருங்குதிரை. [அரபி.]

பாராட்டல்—1. கொண்டாடுதல். (உ-ம்.) "பற்றற்றகண்ணும்பழமைபாராட்டுதல்" (வள். நிஉச.) 2. பலகாலுஞ்சொல்லுதல். (உ - ம்.) "பயனில்சொற்பாராட்டுவானை" (வள். ககூசு.) 3. மெச்சுதல். [பாராட்டுதலுக்குள்ளபொருள் கள் இதற்கும்வரும்.]

பாராட்டின்று—கொண்டாடியது. (புறப். மாலை.)

பாராட்டு—1. அணைக்கை. 2. ஆடம்பரம். 3. கொண்டாட்டம். (உ-ம்.) "புலவலகைநிறை யத்தேக்கிப்பாராட்டித்தர" (சிவராத். கடவுள். ச.) 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. புகழ்ச்சி. (1, 2, 5-வழக்.)

பாராட்டுக்காரன்—புகழ்வோன். (வழக்.)

பாராட்டுதல்–1. உபசரித்தல், சிறப்பித்தல். (வழக்.) 2. ஓராட்டுதல். (உ-ம்.) "மைந்தரைத் தாங்கித்தாயார்மகிழ்ந்துபாராட்டு மா சை" (அருணகிரிபு. திருநாட். கச.) 3. புகழ்தல். (உ - ம்.) "பரமனுக்கன்பரானவடியர்பாராட்டு வாரென்று" (சிவரக. பரயிர. உ0.)

பாராட்டுநீதாயீ-ஐவகைத்தாயரிலொருத்தி. (சூ. நிக. கஉ: சச.)

பாராயணம்—நியமமாகப்படித்தல். (உ-ம்.) "வேதபாராயணப்பனுவன்மூவர்செய்பனு வல துபகரவோ" (தாயு. சச்சி. .)

பாராயணர்—குறிக்கொள்வோர். (சூ. நிக. உ: சம.) நியமமாகக்கற்றதையறிவின் கண்ண மையப்பழகுவோர் என்பது கருத்தாகக்கொள்க. (வழக்.)

பாராயணி—சரச்சுவதி. பாராயணஞ்செய் வோன். (வழக்.)

பாராநுகம்—மலை. (வைத்தியபரி.)

பாராவதம்—1. கருங்காசி. (வைத்தியபரி.) 2. கரும்புரூ. (சூ. நிக. ஈ: சுக.)

பாராவலியம்—பாராவளியம். (வழக்.)

பாராவளியம்—வளைதடி. (வழக்.)

பாராவாரம்—1. கடல். (உ-ம்.) "பாராவா ரந்தனைப்பணிவன்" (சேதுபு. சேதுவந். உசு.) 2. கரை. (1, 2-பிங்கல. ஈஅகஅ.)

பாரி—1. உதயத்திழ்கேழாமிடம். (விதாந. மரபி. ச உரை.) 2. ஒருவள்ளல்; இவன்: மூவ லுக்கொடிக்குத்தேர்கொடுத்தோன். (உ - ம்.) "பிறங்குவெள்ளருவிவீழுஞ்சாரற்–ப றம் பி ற் கோமான்பாரியும்" (சிறுபாண். ஈஈ.) 3. கட் டில். 4. கடல். 5. கள். 6. கோட்டம். (மலை யக.) 7. தெரிநிலைவினைப்பகுதி. 8. நல்லாடை. 9. பருத்தது. (வழக்.) 10. பூந்தாது. (வைத் தியபரி.) 11. பூமி. (பிங்கல. ஈஅகஈ.) 12. மனைவி. (உ-ம்.) "பாரகர்"பார். (3, 4, 5, 8, 12. சூ. நிக. கஈ: ரகரவெ. கo.)

பாரிக்கை—பாரிப்பு. கை-தொழிற்பெயர் விகுதி.

பாரிகாரர்—இராக்காவற்காரர். (சி. சி. ச: ஈஉ. சிவாக்.)

பாரிசநாதர் — சைநமதத்தில்முத்திபெற்ற வரிலொருவர். (த. நி. போ. உஎசு.)

பாரிசம்—பக்கம். (சூ. நிக. சு: சுசு.)

பாரிசவாதம்—பாரிசவாயு. (வழக்.)

பாரிசவாயு—ஒரு நோய். (வழக்.)

பாரிசாதம்–1. ஐந்தருவிலொன்று. (சூ.நிக. ச: உ.) 2. பவளமல்லிகை. 3. முருக்கு. (2, 3-வைத்தியபரி.

பாரிசேடநியாயம் — மூவரில் இருவரல்ல ரென்றால் ஒழிந்த ஒருவனென்றறியுநியாயம். (வி-ணி.)

பாரிசேடம் — ஒழிபென்னுமளவை: அது: சகத்துக்குக்கர்த்தா மாயையும் கன்மமும் ஆன் மாவுமல்லவெனவே சிவனே கர்த்தாவென்றது மித்தறிதல். (சி. சி. அளவை. க. மறை.) [இது அதுமானத்திலடங்குமென்பர்.]

பாரிடம்—1. பூதம். (உ-ம்.) "பாறுபாரிடங் கள்பைத்தகூளிமொய்த்தவே" (திருவிளை. தண்ணீ. உக.) 2. பூமியிடம். பார்-பூமி.

பாரித்த—எடுத்துச்சொல்லிய. (வி-ணி.)

பாரித்தல்—1. அதிகரித்தல். 2. உண்டாக் கல், உருவாக்கல். (சூ. நிக. க: உ.) 3. காத்தல்.

(உ - ம்.) "பாசமாம்பற்றறுத்துப்பாரிக்குமாரிய னே" (திருவாச. சிவபுரா. சுச.) 4. பரப்புதல். (பிங்கல. உகஎக.) 5. பருத்தல். (உ.ம்.) "பா ரிக்குமாரமுலையுமையாட்கும்" (மறைசையந்.) 6. பாரமாதல். 7. வளர்த்தல். (உ-ம்.) "பகலென் னும்பண்பின்மைபாரிக்குநோய்" (வள். அதிக.) 8. வெளிப்படுத்தல். (உ - ம்.) "தம்பதியென் றுரைபாரித்தான்" (கோயிற்பு. திருவிழா. உ.)

பாரித்திரம்—முருங்கை. (வைத்தியபரி.)

பாரித்துரைத்தல்– விரித்துரைத்தல். (உ-ம்.) "பயனில-பாரித்துரைக்குமுரை"(வள். ககங.)

பாரித்தேன் — பரக்கக்கூறினேன். (சிந்தா மணி. சுங.)

பாரிநாதம்—பற்படாகம். (வைத்தியபரி.)

பாரிப்பு–1. அடியிடுதல். (திருக்கோ.கஙஉ.) 2. அதிகரிப்பு. 3. ஒருப்பாடு. (உ-ம்.) "கனித் தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக் கண் ஓ" (திருக்கோ. கஙஉ.) 4. பருத்தல். (உ-ம்.) "பாரிக்குமாரமுலையுமையாள்" (மறைசையந்.)

பாரிபத்திரம் — 1. முருக்கு. 2. வேம்பு. (1, 2-வைத்தியபரி.)

பாரிபாவியம்—கோட்டம். (தைல.தைலவ. சுசு.)

பாரியம்—1. கடுக்காய். 2. முருக்கு. (1, 2-வைத்தியபரி.)

பாரியாத்திரம்— ஒரு மலை. (திருவிளை. மாணிக்கம்வி. எஎ.)

பாரியாள்—1. பருத்தவள். 2. மனையாள். (1, 2-வழக்.)

பாரிவரிணம்—முள்ளங்கி. (வைத்தியபரி.)

பாரீஸ்வநாதன்—சைநமதத்திற் சொல்லப் படும் இருபத்துநான்கு தீர்த்தகரரிலொருவன். (த. நி. போ. கங.)

பாரு—மருந்து. (வைத்தியபரி.)

பாருடியம்—1. பாருவஸியம், அகில். (வைத் தியபரி.) 2. கொடுமை. (உ-ம்.)"தண்டபாருடி யம், வாக்குப்பாருடியம்" என்பது வழக்குண்டு போலும்.

பாரை — 1. இருப்புலக்கை. (தைல. பா யிர. உ0.) 2. ஒருமீன், அஃது: ஒட்டாம்பாரை, கட்டாம்பாரை, கண்ணிப்பாரை, காசாம்பரை, செங்கண்ணிப்பாரை, தோற்பாரையெனப் பல வகைப்படும். (ஒருகுழூஉக்குறி.) 3. கடப்பாரை. (உ-ம்.)"பாரைக்குநெக்குவிடாப்பாறைபசமரத் தின்-வேருக்குநெக்குவிடும்" (நல்வழி. கங.)

பாரைக்கோல் — 1. மீன்குத்தி. (பி. நிக. கசுசo.) 2. வழக்கிற் கடப்பாரைக்குக்கூறுவர்.

பால் — 1. இடம். (உ-ம்.) "பால்கடோறும் பரந்து" (அரிச்ச. நாட். உச.) 2. இயல்பு. 3. எழுனருபு. (உ-ம்.) "உன்பாலடைந்தேனுலகு டையமாதாவே"(உலகம்மையந்தாதி.) 4. கள்ளி முதலியவற்றிலிருந்து வெண்ணிறமும் நீர்த் தன்மையுடையதாய்வருவதொன்று. (வழக்.) 5. குணம். 6. திக்கு. 7. நிலம். (உ-ம்.) "பால் வரைகிளவியும்" (தொல். சொல். ககo.) [வன் பால் மென்பால் என்பவாகலின் நிலத்தைப் பாலென்றார்.] 8. பக்கம். 9. பகுதி (உ - ம்.) "ஆண்பால்" 10. பங்கு. (சூ. நிக. கக: லகர வெ. உங.) 11. பசுமுதலியவற்றின்முலையி லிருந்து வெண்ணிறமும் நீர்த்தன்மையு ஞ் சுவையுடையதுமாய் வருவதொன்று. (உ-ம்.) "ஆனிரும்பாலும்" (திருவாத. மந்திரி. அ.) 12. பழவினை. (ஐங்குறுநூறு.) 13. பாதி. 14. விதி. (உ-ம்.) "பாறரவந்தபழவிறற்ரூயம்" (புறநா. எரு.) 15. வெண்மை. (உ-ம்.) "பால் கொண்டநிழல்" (திருவிளை. மாயப். கஅ.) (2, 5, 6, 8, 12-பிங்கல. ஙஅஉஉ.)

பால்பகாவஃறிணைப்பெயர் — ஒருமைப் பன்மைகளைக்காட்டும் விகுதியில்லாத அஃறி ணைப்பெயர். (உ-ம்.) "பால்பகாவஃறிணைப்பெ யர்கள்பாற்பொதுமைய" (நன். பெய. உச.)

பால்புங்கு–தட்டைப்புங்கு.) வைத்தியபரி.)

பால்மாரிக்கை – சோம்பு. (வைத்தியபரி.)

பால்யம்–பாலப்பருவம். (சி.சி.சு:கூ. சிவாக்.)

பால்யன்—பாலன். (சி. சி. உ: கூறு. சுப்ர.)

பால்வரைதெய்வம்—எல்லார்க்கு மின்பத் திற்குக்காரணமாகிய இருவினையையும் வகுப் பது.(உ-ம்.) "பால்வரைதெய்வம்வினையேபூத-ஞாயிறுதிங்கள்" (தொல். சொல். நிஎ. சேநா.)

பால்வழ—ஒருபாற்சொல் அத்திணைக்கண் ஏனைப்பாற்சொல்லோடுமுடிவது. (தொல். சொல். கக. சேநா.)

பால்வற்றிப்பழத்தான்–ஈசுரமூலி. (வைத் தியபரி.)

பாலகம்—1. எள்ளு. (தைல.) 2. கோட் டம். (வைத்தியபரி.)

பாலகன்-1.காப்போன்.(வழக்.)2.குழந்தை. (உ-ம்.) "பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிட" (திருப்பல்லாண்டு. 3. சதருத்திரரில் அதோமு கத்திருக்கும் தசருத்திரரிலொருவன். (வி-ணி. உஎo.) 4. புத்திரன். (உ-ம்.) "என்னேயிந்தப் பாலகனிறந்தானென்ஞ" (அரிச்ச.மயாந. அ.)

பாலகி—புத்திரி. (வழக்.)

பாலகில்லர்–ஒருமுனிவகூட்டத்தார்.(உ-ம்.) "பண்டயன்பயந்தருள்பாலகில்லரும்"(இராமா. அகத்தி. கூ.)

பாலடை—1. ஒரு பூடு; அது: சித்திரப்பாவடைஎன்றும், பாலடைச்செடிஎன்றும் வைத்தியபரிபாடையிற் கூறினர். குழந்தைகளுக்குப் பாலூட்டுகிறசங்கு. 2. பாலகப்பை. 3. பாலுறட்டி. (2, 3-வழக்.)

பாலத்தாபநம் — பழுதுபட்ட கோயிலைத் திருத்தற்காக அதனுள்ளிருந்தசுவாமியை வேறிடத்துக்கொண்டுவந்து தாபித்தல். (வழக்.)

பாலதனயம்—கருங்காலி. (மலையக.)

பாலநம் — 1. காத்தல். 2. பாற்சோறு. 3. வெள்ளாயன்னம். (வழக்.)

பாலநன்—காப்போன். (வழக்.)

பாலம் — 1. ஆறுமுதலியவற்றின்மேலே போக்குவரவுசெய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் பாதை. (வழக்.) 2. நெற்றி. 3. பூமி. (பிங்கல சசஅ.) 4. மழு. (2, 4-சூ. நிக. கக: லகரவெ. உஉ.)

பாலர்—1. இடையர். 2. காப்பவர். 3. பாலப் பருவப்பிள்ளைகள். (வழக்.)

பாலவம்—பஞ்சாங்கத்திலொன்றுகிய ஒரு கரணம். (பஞ்சாங்கத்திலறிக.)

பாலவரை—ஓரவரை. (வழக்.)

பாலவாயம் — வைடூரியம், நிகண்டுகளில் வாலவாயம் என்று கூறினர்.

பாலன் — 1. இடையன். பாலர் என்னும் பன்மைப்போல இஃதொருமைப்பெயரென்க. 2. ஏழுவயதுக்குட்பட்டவன். (உ-ம்.) "பாலனுயிழிவதாயும்" (சி. சி. உ: கூகூ.) 3. காப்போன். 4. செய்யுளுக்குரியதாகப்பொருத்த மைந்தனுளொன்று. (உ-ம்.) "இறைவன்பேர்-முன்னெழுத்துப்பாலன்" (வெண்பாப். இரு.)

பாலனேக்காத்தர்ள்—மணித்தக்காளி. (வைத்தியபரி.)

பாலாசம்—இரதம். (வைத்தியபரி.)

பாலாரிட்டதேவதை—பதினாலுவயதுவரையுள்ள பாலகரைப்பிடித்துத்தனது விகாரத்தைக்காட்டிப் பலிபூசைகொள்ளுந் தேவதை. (வி-ணி. உகூஅ.) சீவகசிந்தாமணி. நாமகளிலம்பகம். உஅ0-ஆங்கவியுரையில் பாலாரிட்டம் பன்னீராண்டளவுமுண்டெனவுரைத்தார்.

பாலி—1. ஆல். 2. ஒருபாடை. 3. ஓர்யாறு. (காஞ்சிப்.நாட்டு.கசு.) 4. கள். (பிங்கல.ககசசு.) 5. செம்பருத்தி. 6. தெரிந்திலேவினைப்பகுதி. 7. பாற்பசு. இ-விருதி. (1, 5-மலையக.)

பாலிகம்—பாலித்தல். (வேதாரூ. கூ. உரை.)

பாலிகை—1 அம்பு. (மலையக.) 2. உதடி. 3. சுத்திப்பிடி. (சிந்தாமணி. சுசஉ.) 4. படைவாளின்மூட்டி. (சூ. நிக. கக: லகரவெ. சு.) 5. பெண்பிள்ளை. (வழக்.) 6. முளைப்பாலிகை. (திருவிளை. திருமணப். சுகூ.) 7. வட்டம். (2, 5, 7-பிங்கல. கூஅஉக.)

பாலித்தல் — 1. அருளுதல். 2. காத்தல். (1, 2-வழக்.)

பாலிதம்—பெருந்தேக்கு. (வைத்தியபரி.)

பாலிதன்—வளர்ப்புப்புத்திரன். (வழக்குண்டு போலும்.)

பாலியம்—1. இளமை. 2. ஏழுவயதுக்குட்பட்ட பருவம். (1, 2-வழக்.)

பாலியர்—ஏழுவயசுக்குட்பட்ட பிள்ளைகள். (வழக்.)

பாலிரல்—வெட்பாலை. (வைத்தியபரி.)

பாலிறுவி—முருக்கு. (வைத்தியபரி.)

பாலுகம்—கருப்பூரம். (வைத்தியபரி.)

பாலுண்ணி — சரீரத்திலுண்டாகிற குமிழ் வடிவு (வழக்.)

பாலேயம் — கழுதை. நிகண்டில் வாலேய மென்றார்.

பாலை — 1. ஒரு குருவி. (வழக்குண்டுபோலும்.) 2. ஒரு கொடி; அவை: கொடிப்பாலை, உசிப்பாலை, ஏழிலைப்பாலை, கறிப்பாலை, குடசப்பாலை, கடுக்காய்ப்பாலை, திருநாமப்பாலை, நிலப்பாலை, பூப்பாலை, வீழுப்பாலை, வெட்பாலை, எனப் பலவகைப்படும். (வைத்தியபரி.) 3. ஒரு மரம். (சூடா. கக: லகரவெ. எ.) 4. பதினாறு வயசிற்கு மேற்படாதவளாகிய பெண். (கொக்கோ. ச: உ.) 5. பாலைத்தன்மை. (உ-ம்.) "பாலை நின்றபாலைநெடுவழி" 6 பாலைத்திணை. (சூடா. கஉ. கூறு.) 7. பாலைநிலம். (உ-ம்.) "பாலைநெடுவழி" 8. பாலைப்பண். (உ-ம்.) "இன்றீம் பாலைமுனையின்" (பெரும்பா. கஅ0.) 9. பாலைப்பூ. (உ-ம்.) "தில்லைபாலைகல்லிவர்முல்லை" (சூ. பா. எஎ.) 10. பாலைமரப்பட்டை. (உ-ம்.) "அழுக்கிரி" பார். 11. பாலையாழ். (உ-ம்.) "தைவளம்பழுநியபாலைவல்லோன்" (சூ-பா. கசசு.) 12. புநர்பூசநாள். (வீமசேநர். உள்ள.) 13. பொருள்வயிற்பிரிதல். (மதுரைக். கூகச.) 14. மிருகசீரிடநாள். (பிங்கல. உசகூ.) (5, 7-சிறு பா. கக.)

பாலைக்கருப்பொருள்-பாலைநிலத்திற்குரிய பொருள்; அது: கன்னியாகியதெய்வமும், விடலையும், காளையும், மீளியும், எயிற்றியுமாகிய உயர்ந்தோரும்: எயினரும், எயிற்றியரும், மறவரும், மறத்தியருமாகிய தாழ்ந்தோரும்: புழுவும், பருந்தும், எருவையும், கழுகுமாகியபுள்ளும்: செந்நாய்யாகிய விலங்கும், குறும்பாகிய ஊரும், குழியுங்கூவலுமாகிய நீரும், குராவும்,

மராவும், உழிஞையுமாகியபூவும், பாலையும், ஓமையும், இருப்பையுமாகியமரமும், வழிபறித்தனவும், பதியிற்கவர்ந்தனவுமாகிய உணவும், தடியாகியபறையும், பாலையாழாகிய யாழும், பஞ்சுரமாகியபண்ணும், போர்புரிதலுஞ் பகற்சூறையாடலுமாகிய தொழிலுமெனப் பதிஞ்ன்குவகைப்படும். (உ-ம்.) "கன்னிவிடலை..... .....பகற்சூறையாடல்பாலைக்குரிப்பொருளே" (அகப். அகத்திணை. உக.)

பாலைக்கிழத்தி—தர்க்கை. (உ-ம்.) "நவமி தனிலிளாத்திடுமேனெடும்பாலைக்கிழத் தியருணயந்து" (சேதுபு. தராசார. உகூ.)

பாலைசான்றசுரம்—பிரிவாகிய உரிப்பொருளமைந்த அருநிலம். (உ-ம்.)"பாலைசான்றசுரஞ் சேர்ந்தொருசார்" (மதுரைக். கூகச.)

பாலைத்திணை — ஐந்திணைகளுளொன்று; அது: பாலைமுதற்பொருள், பாலைக்கருப்பொருள், பாலை உரிப்பொருளென மூன்றுவகைப்படும். (உ-ம்.) "குறிஞ்சிப்பாலைமுல்லைமருதநெய்தலென்றிணைக்கெய்தியபெயரே" என்பதனுற் பெறப்படும். (அகப். அகத்திணை. சு.)

பாலைநிலம் — ஐந்நிலத்தொன்று; அது: நீரும் நிழலுமில்லாச் சுரமுஞ் சுரஞ்சார்ந்தவிடமும். (அகப். அகத்திணை. கூ.)

பாலைப்புறம்—சுரநடை, முதுபாலை என விருதுறையாம். இவ்விரண்டனையும், நம்பியகப்பொருள் ஒழிபியல் கூறி-ஆவது சூத்திரத்தில் அகப்புறப்பெருந்திணையென்றார்.

பாலைமுதற்பொருள்—பாலைத்திணைக்குரிய முதற்பொருள்; அது: சுரமுஞ் சுரஞ்சார்ந்தவிடமுமாகிய நிலமும், வேனிலும் நண்பகலும் பின்னியுமாகிய பொழுதும் என இருவகைப்படும். (அகப். அகத்திணை. உச. உரை.)

பாலையாழ் — பாலைநிலத்தியாழ். (அகப். அகத்திணை. உக.)

பாலையுரிப்பொருள்—பாலைத்திணைக்குரிய உரிப்பொருள்; அது: பிரிதலும் பிரிதல்நிமித்தமுமென இரண்டு வகைப்படும். (அகப். அகத்திணை. உறு. உரை.)

பாலொடுவை—கொடிப்பாலை. (வைத்தியபரிபா.)

பாவகச்சேர்க்கையணி—ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்ற இரண்டு கருத்துக்களையங்கமாகக்கொண்டுவருமணி. (குவல. கoசு.)

பாவகத்தோற்றவணி — கருத்து தயமங்கமாகவிளங்குமணி. (குவல. கoறு.)

பாவகம்—1. தியாகம். (உ-ம்.) "பாவகமிறந்தகாதன்"(கோயிற்பு. இரணியவ. எக.) 2. தோற்றம். (திருவிளை. சரிபரியா. உஎ.) 3. பாவனை, அபிநயம். (உ-ம்.) "பாவகம்பலபல காட்டியபரிசும்" (திருவாச. கீர்த்தி. அஉ.)

பாவகன்— 1. அக்கினி. (தைல. தைலவ. கசுறு.) 2. அக்கினிதேவன். (உ-ம்.)"பாவகனஞ் சக்கரந்துணித்தாய்" (ம-தி. சுகூ) 3. மின்னலினின்றும்பிறக்குமக்கினி. (உ-ம்.) "அழன்றுவீசு மின்னிடத்திற்பிறந்தவழல்பாவகன்" (கூர்மபு. முனிவ. அ)

பாவகாரி—பாவஞ்செய்வோன். ஒருமைப் பெயர். (மணிமே.)

பாவகாரிகள்—பாவஞ்செய்பவர்கள். (உ-ம்.) "இதுவேபுணர்ப்பென்றுசூழ்ந்திசைந்து - பாவகாரிகள்பண்டுபோற்பழித்தழல்வளர்த்தார்" (திருவிளை. மாயப். ச.)

பாவகி—முருகன். (பிங்கல. கசo.)

பாவசந்தியலங்காரம்—பாவகச்சேர்க்கையணி. (குவல. கoசு.)

பாவசபளாலங்காரம் — பலகருத்துக்கள் மேன்மேலாக உண்டாகுமணி. (குவல. கoஎ.)

பாவட்டம்—பாதிரி. (வைத்தியபரி.)

பாவட்டா—ஒரு கொடி. [இந்துஸ்.]

பாவட்டை—1. ஆடாதோடை. 2. திரணைச்செடி; அது: கரணைப்பாவட்டை, வெட்பாவட்டையென விருவகைப்படும். (வைத்தியபரி.)

பாவட்டைச்சக்களத்தி—ஒருசெடி; இது: பாவட்டைபோன்றிருப்பதென்பர்.

பாவண்ணம் — தூற்பாவண்ணம். (உ-ம்.) "அவற்றுட், பாவண்ணஞ்சொற்சீர்த்தாகி தூற்பாற்பயிலும்" (தொல். பொரு. நூஎ.)

பாவத்திரயம்—ஞாதவிகிருதிபாவம், மோகவிகிருதிபாவம், வர்த்தநாவிகிருதிபாவமென்னு மூப்பாவங்கள். (வி-ணி.)

பாவதத்திதன் — பண்பின் முதனிலையோடும், ஆண்பெண்முதலாகிய பெயரோடும் மகரவகாரமும் சிறுபான்மையுகரமும் பொருந்திவருவது. (உ-ம்.) "மூட்டாதுகூறியபல்வகைப் பண்பின்முதனிலையுங்-கட்டானவாண் பெண் முதலியநாமமுங்கைகலந்து - மட்டார்மலர்க்குழலாய்தன்மைகாட்டியமையுகரந்-தட்டாமனிற்ப தவேபாவதத்திதன்றண்டமிழ்க்கே" (பி-வி. கூச.)

பாவநம்-1. உற்சவபேதஞானகனுளொன்று; அது: துவசாரோகணமின்றித்தொடங்கித்தீர்த்தவாரியளவுஞ்செய்யப்படுவது. 2. எண்ணம். 3. சருசனதுமாநம். 4. சுத்திசெய்தல். 5. தவம். 6. தியாநம். 7 தூபம். 8. தாய்மை. (உ-ம்.) "பாவநஞ்செய்வோருனையில்"(துறைசையசு.) ஏனையவற்றிற்குதாரணம் வந்துழிக்காண்க.

பாவநாகந்தம் – பஞ்சகந்தங்களுளொன்று; அது: அருள், அவாவின்மை, தவவிருப்பம், இனியவைகூறல், மெய்மைகூறல், பயனுளகூறல், அறமுரைத்தல், வணக்கம், ஈகை, தவஞ்செய்தல் ஆகியநற்குணம்பத்தும்; தீயசிந்தனை, ஆசை, கோபம், கடுஞ்சொல், பொய்யுரை, பயனில்சொல், கோட்சொல், களவு, கொலை, வீண்செய்கை ஆகிய தீக்குணம்பத்துமாம். (சி. சி. பரபட்ச. டுடி. உரை.)

பாவநாசம் — 1. ஒரு தலம்.; இது: திருக்குற்றாலத்திற்கு தெற்கேயுள்ளது. 2. பாவநீக்குதல்.

பாவநாத்திரயம் — சமுசயபாவனை, அசம்பாவனை, விபரீதபாவனை என்பன. (வாசுதே. கசுக.)

பாவநி–1. கங்கை. 2. துளசி. 3. பசு. (1, 2, 3-வைத்தியபரி.)

பாவனை — 1. அதர்வணவேத உபநிடதத்தொன்று. (கந். நவ. கஎ.) 2. சிந்தனை. (திருவிளை. அட்டமாசித்தி. உக.) 3. தியானம். (உ-ம்.) "தீர்த்தல்"பார். 4. தெளிதல். (நன்னூல்விருத்தி. பாயிரவுரை.) 5. பாவநாகந்தம். (உ-ம். "ஒங்குருவம்வேதனையுளக்குறிப்புப்பா (வனைமெய்–தாங்குணர்வென்றைந்தாங்கந்தம்" (மணிமே. பாவத்திற. கூ. உரை.) 6. "ம" என்னுமக்கரத்தினதிதேவதை. (சி.சி.அ:உக. ம்றை)

பாவனைபண்ணுதல் — 1. பாசாங்குபண்ணல். 2. பாவித்தல். (1, 2-வழக்.)

பாவபதம் — பிராதிபதிகம். (பி. வி. சூஉ உரை.)

பாவம்—1. அக்கிரமம். (உ-ம்.) "சொல்லரியபாவியிவற்கண்டபாவம்" (சிவரக. சிவதன்மா. எ.) 2. (பரதம்) அவிநயம்; அவை: வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பியோனவிநயம், களித்தோனவிநயம், வெயிற்றலைப்பட்டோனவிநயம், நஞ்சுண்போனவிநயம், வெப்பினவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையானவிநயம், இன்பமுற்றோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், அஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கியோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணேவுற்றோனவிநயம், தலேகோவுற்றோனவிநயம், அழற்றிறம்பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், என இருபத்துநான்கு வகைப்படும். (திருவிளை. மாறியாடின. அ. உரை.) 3. அறிவு. (உ-ம்.) "அகமினதுபாவர்பாவங்கள்" (வேதா. சூ. கஅ.) 4. ஐம்பது. (த. நி. போ. உகஅ.) 5. ஒன்றிலேயொன்றுண்டாகுகை, பிறத்தல். (சி. பி.) 6. சிவமாகியதத்துவமும் சதாசிவமாகியமூர்த்தியுஞ்சேர்ந்தது. (சித்தா.சாரா. ஞாந. கூ.) 7. தியானம். (சூ. நிக. கக: வகரவெ. கசு.) 8. நரகம். (பிங்கல. சருடு.) 9. நோக்கம், அபிப்பிராயம். (உ-ம்.)"என்னபாவமற்றென்னையின்றென்சொலாதுலகே" (பாரத. தற்சிறப்பு. டுடி.) 10. பாவனை. (ஞானமி.) 11. மெய்ப்பாட்டுக்குறிப்பு. (தண்டியலங். எ-ஆம் சூத்.) இது, தொல்காப்பியத்தில் எண்வகைப்படுமென்றார். 12. விலக்கப்பட்டதீவினைவடிவமாய்த் துக்கசாதனமாயிருப்பது; அவை: ஈசுவரதூஷணம், சீவவிரோதம், துரோகம், காமம், உலோபம், கார்ப்பணியம், மற்சரம், வஞ்சகம், மதம், அநாதரம், கோபம், அசூயை, பொய், குறளை, கடுஞ்சொல், கொலை, களவு, வியபிசாரம், நன்றிமறத்தல், புலாலுண்ணல், கள்ளருந்தல், ஆசௌசம், நித்தியகருமலோபம் முதலியன. (வி-ணி. உஉக)

பாவம்பத்து— மனத்திற்றோன்றுவனமூன்று, வாக்கிற்றோன்றுவனநான்கு, உடம்பிற்றோன்றுவனமூன்று. (மணிமே. பௌ. உஉஉகூ.)

பாவழலம்–ஆணவமலம். (த.நி.போ.கஅஉ.)

பாவல்–1. பரவுதல். 2. பாதகுறடு. (சூ.நிக. எ: சுஉ.)

பாவலர்—பாவில்வல்லவர். (உ-ம்.) "பாவலர்க்கொடன்றியும்" (சிவரக. கணபதிமறு. க.)

பாவநபம் — கன்மரூபம். (சி. சி. உ: ஙகூ. சிவாக்.)

பாவனைநான்கு—மைத்திரீ, கருணை, முதிதை, உபேக்ஷையென்பன; இவை: மகாபிரற்மாக்களாலநுட்டிக்கப்படுவதாதலின் பிரற்ம விகாரபாவனையென்று கூறப்படும். (பௌ.)

பாவவாரம்—ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்கள். (விதாந.)

பாவாகாரம்—பரசிவம், சதாசிவம் என்னுமிரண்டுஞ்சேர்ந்த உருவம். (சி-லி. ஞாந. கூ.)

பாவாடை—1. ஆடாதோடை. 2. திரணைச்செடி. 3. நிலத்தில்விரிக்குஞ்சீலை. 4. பெண்களாடை. (1, 2-வைத்தியபரி.) (3, 4-வழக்.)

பாவாடைப்பூ—இலுப்பைப்பூ. (வைத்தியபரி.)

பாவாடையழது–ஒருவகை நைவேத்தியம். (வழக்.)

பாவாணர்—புலவர். (உ-ம்.) "தமிழ்ப்பாவாணர்செவிநுகர்பேரமுதமாக" (சேதுபு. அவையடக். கஉ.)

பாவாற்றி—நெய்வார்குச்சு.(சூ.நிக.எ:நிஎ.)

பாவி—1. தீயோன். (உ-ம்.) "தாக்கு"பார். 2. தெரிநிலவினைப்பகுதி. 3. வரக்கடவது. (உ-ம்.) "ஆவியார்நிலைபெறுபவர்நீதிகூரிய வான்புகழன்றிப் – பாவியானதங்கணுகுமுதொழியினும்" (பாரத. சூதுபோ. எச.)

பாவிகம்—பாவிகாலங்காரம்; அது: கவிஞனுடையகருத்திலே காப்பியங்களிலே அமைந்துதோன்றுங்குணம். (உ-ம்.)"பாவிகமென்பது காப்பியப்பண்பே" (தண்டி. அக.)

பாவித்தல்—1. உளஞ்செய்தல். (உ-ம்.) "வேறுவேறுலோகமுமழுவுரைகரந்த – சித்தசாமிகணீற்றினைச்சிதறினர்பாவித்து" (திருவிளை. இரசவாத. உச.) 2. தியானித்தல். (சி. சி. சு: எ. நிரம்ப.) 3. பாவனைசெய்தல், ஒன்றையொன்றுகப்பாவனைசெய்தல். 4. பொய்யாய் நடித்தல். (வழக்.)

பாவித்தீரம்—மூன்றுலகம். (உ-ம்.)வந்துழிக்காண்க.

பாவிதம்—1. கலப்பு. 2. சங்கற்பித்தல். 3. பாவிப்பு. (1, 2, 3-வழக்குண்டுபோலும்.)

பாவிதன்—பாவிக்கப்பட்டவன். (சி. சி. அ: ககூ. சிவாக்.)

பாவிப்பு—பாவனை. (வழக்.)

பாவியம்—அருகம். (உ-ம்.) "பாவியமல்லாததுரைப்பான்" (சைவச. ஆசாரிய. கஎ.)

பாவியர்—1. தீவினையாளர். 2. பாவகத்தையுடையார். (ஞானமி.)

பாவியாதல்—உண்டாதல், வருதல். (சி. சி. க: சுச. சிவாக்.)

பாவிரி—பசளை. (வைத்தியபரி.) (சூ. நிக-ல். பசிரியென்பர்.)

பாவிருச்சர்—இருக்குவேதம் ஓதுகின்றவர்கள். (அபிதாநசிந்.)

பாவின்புணர்ப்பு — சித்திரக்கவிகளுளொன்று; அது: நால்வர்நான்கடிக்கு ஈற்றுரை சொன்னல்தான் அடிக்கு முதல் பாடிப்பொருண்முடிப்பது. (உ-ம்.) "பாதமயக்கேபாவின் புணர்ப்பே" (யாப்பருங்கலம். செய்யு. ககூ.)

பாவினம் — நால்வகைப்பாக்களுக்கு இனமாகவரும் தாழிசைதுறைவிருத்தங்கள். (யாப். காரிகை.)

பாவு—தெரிநிலவினைப்பகுதி.

பாவுதல்—1. தளவரிசைசெய்தல். 2. நாற்றுவிடல். 3.பரப்புதல். 4.விரித்தல்.(1,2,3,4-வழக்)

பாவை—1. அசுரர்கள் போர்க்கோலத்தையொழிந்துமோகிக்க இலக்குமி மோகினிவடிவங்கொண்டாடிய ஆட்டம்; இது: இரண்டங்கமுடையது. (உ-ம்.)"திருவின்செய்யோளாடிய பாவையும்" (சிலப். கடலாடு. சுக.) 2. கண்ணிற்பாவை. (உ-ம்.) "புரப்போர்புன்கண்பாவைசோர"(புறநா. உகநி.) 3. கொல்லியம்பாவை. (உ-ம்.) "ஒப்பரும்பாவைபோன்றுறையுமென்பவே" (சிந்தா. நாமக. ககூஅ.) 4. சித்திரப்பாவை. (நன்னூ. பொதுப். சஅ.) 5. பதிமை, பிரதிமை. 6. பெண், உவமை. (ஆகுபெயர்.)

பாவைக்கூத்து—பாவைபோட்டுதல்.(உ-ம்.) "தோற்பாவைக்கூத்தும்" (சி. சி. சு: உச.)

பாவோடல்— } நெய்வார்தொழிலிலொன்று. (வழக்.)
பாவோடுதல்- }

பாவோதயம் — பாவகத்தோற்றமென்னுமணி. (குவல. கஅநி.)

பாழ்—1. அழிவு. 2. கெடுதி. 3. சூனியம். (உ-ம்.)"இறும்பாழ்வினைந்தகஞ்சொல்லில்" (ஒழிவிலொ. சத்திநி. உஎ.) 4. தெரிநிலைப்பகுதி. 5. நட்டம். 6. பாழ்நிலம். (சூ. நிக. நி: உசு) 7. புருடன். (பரிபாடல்.) 8. வறுமை. (புறப்-மாலை.) (1, 2, 4, 5-வழக்.)

பாழ்க்குதல்—சூனியமாக்கல். (வழக்.)

பாழ்த்தல்—பாழாகுதல். (வழக்.)

பாழ்நிலம்—காப்பு. (சூ. நிக. நி: உசு.)

பாழ்படுதல்—அழிதல். (வழக்.)

பாழாக்கல்— } அழித்தல். (வழக்.)
பாழாக்குதல்- }

பாழாதல்—அழிதல். (வழக்.)

பாழி — 1. அகலம். (சூ. நிக. அ: கஉ.) 2. ஆசாயம். (உ-ம்.) வந்துழிக்காண்க. 3. ஊர். (பிங்கல. நாநி.) 4. சயநம். (சூ. நிக நி: நிஅ.) 5. நிறகுளம்; இது: திசைச்சொல். (நன்னூ. பெயரி. ககூ. உரை.) 6. பகைவூர். (சூ. நிக. கக: ழகரவெ. உ.) 7. பதம். (சூ. நிக. கo: கூ.) 8. பாழ். 9. பெருமை. (உ-ம்.) "பாழ்வெஞ்சிறையுவணமும்" (உபதேச. சூராதி. கூ.) 10. மூங்கர்வாசம். (உ-ம்.) "எங்குமமணர்பாழிகளாய்" (பெரியபு. தண்டி. ச.) 11. மூழைஞ்சு. (உ-ம்.) "பாழிமால்வரையெறிதிரை" (கந்தபு. நகர. கூ.) 12. வலி. 13. விலங்கின்பகுக்கை. (8, 12, 13-பிங்கல. நிக. ஈஅஉகூ.)

பாழுக்கிறைத்தல் — பயனற்றநிலத்துக்கு நீரிறைத்தல். (உ-ம்.) "ஏழைத்தொழும்பனேனைத்தனியோகாலமெல்லாம் – பாழுக்கிறைத்தேன்" (திருவாச. திருத்தோ. ககூ.)

பாளச்சீலை—மருந்துபூசிக்காயவைத்தபுடவை. ஒரு குழூஉக்குறி.)

பாளம் — 1. உலோகக்கட்டி. 2. சிலையின்கிழிவு. 3. வெடியுப்பு. (வைத்தியபரி.) (1, 2-வழக்.)

பாளி—பாசறை. (பிங்கல. சுஉச.)

பாளித்தியம்-ஒருநூல்.(யாப்.காரி.க.முகவு.)

பாளிதம் — 1. கண்டசருக்கரை. 2. கருப்பூரம். (பிங்கல. கஙடுக.) 3. குழம்பு. 4. சந்தநம். (தைல. தைலவ. கசச.) 5. சோறு. 6. பட்டுப்புடவை. (1, 3, 5, 6-சூ. நிக. சக: ளகரவெ. நி.)

பாளீபாஷை — வடமொழிப்பகுதியாகவுடைய பாஷைகளுள் முந்தியது. (மணிமே.)

பாளை—கமுகு, தெங்கு, பனைமுதலியவற்றில் வரும்பாளை. (உ-ம்.) **"பாளையோதியொருதிங்கள்பார்த்தனள்"** (சிவரக. மேரு. உகூ.)

பாளையகாரன் — 1. அரசர்க்குக்கீழ்ச் சிலசேனையோடும் ஒவ்வோர்புரங்கட் கதிகாரியாயிருப்போன். 2. படைத்தலைவன். பாளையம்-படை. (1, 2-வழக்.)

பாளைப்பருவம்-பாலப்பருவத்திற்குமுந்தியகருவிலொருபருவம். (பன்னூற்றிரட்டு. கஙஙு.)

பாளையம்—1. படை. 2. பாசறை. (பிங்கல. சூஉச.) (1, 2-வழக்.)

பாற்கடல்— சத்தசமுத்திரத்தொன்று. "பாற்கடலாரமுதங்கெழுமித்தழைத்து" (அரிச்ச. நாட்டுப். உ.)

பாற்கடற்பிறந்தாள்—இலக்குமி. (சூ. நிக. க: ஙச.)

பாற்கரம் — உபநிடதமுப்பத்திரண்டிலொன்று. (பொருட்டொகை நிகண்டி.)

பாற்கரன்—ஆதித்தன். (சூடா. க: நிநி.)

பாற்கரியபவாதம் — ஏகான்மவாதம் நான்கு வகையுளொன்று; இது: பிரமமேசடமுஞ்சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது என்றும், அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமையினுற்பந்தமாயிற்றுஎன்றும்,பரமார்த்தத்திலொரு பொருளேயென்றும், வேதாந்தஞானத்தான் உடம்பிற்குவேறுகிய ஆன்மரூபம் விளங்குமென்றும் வாதிக்கும்வாதம். (சி.சி.பா.)

பாற்கரியன்—மாயையிற்பிரபஞ்சந் தோன்றுவதில்லைப் பிரமத்தினின்றுந்தோன்றுமென்பவன். (சி. சி. க: உஅ. முகம்.)

பாற்கரியோன்—தேவேந்திரன். (தைல. தைலவ. கக.)

பாற்குநம்-
பாற்குநி— } உத்திராநாள்.(பிங்கல.உநிஙு.)

பாற்கேண்டை-ஒருமீன். ஒருகுழூஉக்குறி.

பாற்கோவ்வை—ஒரு கொவ்வை. (வழக்.)

பாற்சுண்டை—ஒருவகைச்சுண்டை. (வழக்.)

பாற்சுறு—ஒரு சுறுமீன். ஒரு குழூஉக்குறி.

பாற்சொற்றி—1. பாற்சோற்றிச்செடி.(பிங்கல. உஅகக.) 2. பொற்றிக்கீரை. (1, 2-வைத்தியபரி.)

பாற்பரியாயம்—பாலின் நிலைமை. (மணிமேகலை.)

பாற்பீர்க்கு—வெள்ளைப்பீர்க்கு. (வைத்தியமூ. அகராதி.)

பாற்புறண்டி–சிறுஅம்மான்பச்சரிசி.(வைத்தியபரி.)

பாற்மகற்பம்–பதுமகற்பம். (உ-ம்.) **"நவின்றகற்பத்-தெடுத்தகலேழாங்கற்பம் பாற்மகற்பம்"** கூர்மபு. பிரமா. கக.) [பாத்மம், பாற்மம் என்றுயிற்று.]

பாற்றல்—நீக்குதல். (உ-ம்.) **"ஆசமநமாகுமறலினெடுகூட்டுதலும் – பாசத்தைப்பாற்றும் பதிக்கு"** (சைவச. நிகூசு.)

பாற்று—உரியது. (உ-ம்.) **"செல்வமொன்-றுண்டாகவைக்கற்பாற்றன்று"** (நாலடி. க: க.)

பாற்றுத்தம்—வெண்டித்தம். (வழக்.)

பாற்றுளி—சுக்கிலம். (உ-ம்.) **"பாற்றுளி பவளநீர்பருகி"** (சிந்தா. முத்தி. அஎ.)

பாற—உதர. (சிந்தாமணி. கசக.)

பாறல்–1. அடிப்பறிதல். (வழக்.) 2. இடபவிராசி. (பிங்கல. உஎ0.) 3. எருது. (சூ.நிக.ஙக: கச.) 4. ஓடல். (உ-ம்.) **"பட்டிமை"**பார். 5. நீங்கல். (உ-ம்.) **"பயிலுறுபாவங்கள்பாறப்பெற்றுளாய்"** (சிவரக. சிவனடியார். உகூ.)

பாறு—1. கழுகு. (உ-ம்.) **"பாரிடங்கள்"** பார். 2. பருந்திலொருபேதம். (பாரதம். பதினேழும். நிநி.) 3. பாறல். (உ-ம்.) **"பாறிலுயிர்"** (வேதா. சூ. கஙஙு.) [முதனிலைத்தொழிற்பெயர்.] 4. தெரிநிலைவினைப்பகுதி.

பாறுதல் — 1. அடிப்பறிதல். (வழக்.) 2. ஓடுதல். (உ-ம்.) **"பதுமுகனேக்கொடுபோகும் பத்துமுகன்போற்பாறுதலும்"** (சேதுபு. வேதாள. கச.)

பாறை — 1. கற்பாறைமுதலியன. (உ-ம்.) **"பாரைக்குநெக்குவிடாப்பாறைபழுமரத்தின்–வேருக்குநெக்குவிடும்"** 2. ஓடுதல். ஐ-தொழிற்பெயர் விகுதி.

பாறையுப்பு—ஒருப்பு. (வைத்தியநூல்களிலறிக.)

பான்–1. ஒருதெரிநிலைவினையெச்சவிகுதி. (உ-ம்.) **"உண்பான்வந்தான்"** 2. பத்தினேர்திரிபு. (உ-ம்.) **"ஒருபான்"**

பான்மயக்கம் — ஒருபாற்குரியசொல் வேறொருபாற்குரிய சொல்லுடன் வழங்கல்.

பான்முட்டான்–ஒருமீன். ஒரு குழூஉக்குறி.

பான்முடங்கி — ஒரு பூடு; அது: வேலிப்பருத்தி. (வைத்தியபரி.)

பான்மை—1. ஊழின்றன்மை. (திருக்கோவை. இயற்கைப்புணர்ச்சியுரை.) 2. குணம்.

(சூ. நிக. அ. எக.) 3. தகுதி.(உ-ம்.)"ஆனபான் மையிலோர்தவிசிருத்தினன்" (க ந் த பு. பிரம யாக. கo.) 4. தன்மை. (உ-ம்.)"ஒன்றுமறியாத பான்மையறிவுயிர்க்குண்டோ" (இன்னிசை. கடி.)

பான்மையிற்று—பருதியுடையது. (சிந்தா மணி. கஎங.)

பானம்—1. கள். (பிங்கல. ககசசு.) 2. பருகுதல். (பிங்கல. ககடுஎ.)

பானல்—1. கருங்குவளை. (உ-ம்.) "பானல் பூத்தவெள்ளத்துப்பெரியகண்ணர்" (இராமா. உலாவிய. ச.) 2. கள். 3. மருதநிலம். (சூ. நிக. டு. கூஉ.) 4. வயல். (பிங்கல. டுஎக.) 5. வெற்றிலை. (2, 5-வைத்தியபரி.)

பானுள் — 1. நடுயாமம். (உ-ம்.) "குன்று குளிர்ப்பன்னகூதிற்பானுள்" (நெடுநல். கஉ.) 2. பாதிராள். (தைலவ.)

பாணிதம்—சர்க்கரை. (வைத்தியபரி.)

பாணியவல்லி — வலம்புரிக்கொடி. (வைத்தியபரி.)

பாணிறவண்ணன்—பலபத்திரன். (உ-ம்.) "நீணிறவண்ணனென்றுநெடுந்துகில்கவர்ந்து தம்முன்-பாணிறவண்ணனுங்கிற்பழியுடைத்தென்றுகண்டாய்" (சிந்தா. நாமக. கஅo.)

பாணுபலை—வாழை. (வைத்தியபரி.)

பாணை—மிடா. (சூ. நிக. எ: சுடு.)

பாணைவெடிச்சான்—பிளவைக்கொல்லி. (வைத்தியபரி.)

பி.

பிக்கம்—இருவேலி. (வைத்தியபரி.)

பிக்கு—1. குழப்பம். (வழக்.) 2. பிசகு. (உ-ம்.) "பிக்குச்சொல்லாமலேகொக்குப்படக்கவே" (திருக்குற்றாலக்குறவஞ்சி.)

பிகபந்து—மாமரம். (வைத்தியபரி.)

பிகம்—குயில். (பிங்கல. உகூகூஅ.)

பிகாரகம்— } மாமரம். (வைத்தியபரி.)
பிகவல்லபம்– }

பிகன்—பசலை. (வைத்தியபரி.)

பிகாங்கம் — ஒரு புள். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிகாநந்தம்–வசந்தகாலம், குயிலுக்கு ஆனந்தந்தருவதாகிய காலமென்க. (வழக்.)

பிகி—பெண்குயில். (வைத்தியபரி.)

பிகு–1. இறுக்கம். 2. பெலன். (1, 2-வழக்.)

பிகுதல்–தளர்ந்ததைவலிதாக்குதல். (வழக்.)

பிகுப்பட்டை–குதிரைமேற் சேணங்கட்டும் வார். (வழக்.)

பிகுவு—பிகு. (வழக்.)

பிங்க—வித்தியாகலையில் வித்தைதத்துவத்திலிருக்கும் இரண்டு புவநங்களுளொள்று. (சி-லி. கிரி. உக. உரை.)

பிங்கம்—பூஞை. (வைத்தியபரி.)

பிங்கல — 1. பிங்களஎன்னும் வருடம். 2. வித்தியாதத்துவத்திருக்கு மாசாரியதசகரிலொருவன். (வி-ணி. உஎச.)

பிங்கலகேசி — சமாலிபுத்திரி, அக்கிரகேசன் தேவி. (அபிதாநசிந்.)

பிங்கலந்தை—பிங்கலன் என்பவனுற்செய்யப்பட்ட நிகண்டு. (வழக்.)

பிங்கலம்—1. பிங்கலமென்னு நிகண்டு. (நன்னூல். உரியியல். ககூ.) 2. பித்தளை.(வைத்தியபரி.) 3. பொன். (சூ.நிக.கக: ஙகரவெ. டு.) 4. பொன்மைநிறம். (சூ.நிக.அ:உக.) 5. வடக்கு. (5-உதாரணம். வந்துழிக்காண்க.)

பிங்கலலோகம்—பித்தளை.(வைத்தியபரி)

பிங்கலன்–1. குபேரன். (உ-ம்.) "நிதிக்குப் பிங்கலன்பதத்துக்கிந்திரன்நிறத்நிற்கந்தனென்றிவரோரை" (திருப்பு. கூஙூ.) 2. சதருத்திரரில் அக்கினிதிக்கிலிருக்கும் தசருத்திரரிலொருவன். (வி-ணி. உஎo.) 3. பிங்கலந்தையென்னும் நிகண்டுசெய்த ஒராசிரியன். பிங்கலமுனிவர் என்றும் பெயருண்டு. (அபிதாநகோ.)

பிங்கலாட்சன்—கன்மேந்திரியதத்துவபஞ்சகத்திலிருக்கும் பஞ்சபுவனபதிகளிலொருவர். (வி-ணி. உஎஉ.)

பிங்கலை—ஆந்தை. (சூ. நிக. கூ: சுo.) 2. ஒரு பாலாரிட்டதேவதை. (வி-ணி. உகூஅ.) 3. பத்துநாடிகளிலொன்று; இது: சுழிமூனையிலேதோன்றி யிடைநாடியோடு கத்திரிக்கோல் போலப் பக்கமாறி வீணைதண்டுக்கு வில்லு நாணிட்டாற்போலக் கபாலத்தைச்சுற்றிக் குதிரைமுகமாய் நாசியளவும் நிற்கும். (த. வி.) 4. பார்வதி. பொன்னிறமுடையவள் என்றபடி. 5. பார்வதிதேவியின்றோழியாரிலொருத்தி, கவரி வீசுபவள். (அபிதாநசி.)

பிங்கள—1. நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்துள்ள நூற்றெட்டுப்புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) இது: அக்கினிதிசையிலுள்ள பத்துப்புவநங்களு ளொன்முக விளங்குகின்றது. (சி. சி. அ: மறை.) 2. வியாழவட்டமாகிய அறுபதுவருடத்தில் ஐம்பத்தோராவதாண்டு.

பிங்களம்—களிம்பு. (வழக்.) (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிங்களர் — கைலாசமேற்குவாயிற்காவலர்· வாயுதிக்கிலிருப்பவர். (அபிதாநசிந்.)

பிங்களன்–அயோகவப்பெண் பார்ப்பானைக் கூடிப்பெற்ற பிள்ளை. (உ-ம்.) "அயோகவப் பெண்பார்ப்பாற்கீன்றசேய் பிங்களன் பேர்" (சூத. சிவமா. கஉ: கஉ.)

பிங்களித்தல்—அருக்களித்தல், அருவருத்தல். (வழக்.)

பிங்களை—தென்திசையானைக்குப் பெண்யானை. (உ-ம்.) "அட்டதிக்கயங்களின்பிடிகள்" பார். (அபிதாநசி.)

பிங்காசி—அவுரி. (வைத்தியபரி.)

பிங்கி—வன்னிமரம். (வைத்தியபரி.)

பிங்குசம்—பின்குச்சம். (உ-ம்.) "கணிப்புதுமலர்ச்செஞ்சூட்டுநுதற்குளக்கந் நிமாதர்-மணிக்கருங்கதப்பிள்காந்தட்பிங்குசம் வழுவ" (இரகு. நாட்டு. நிற0.) [விகாரம்.]

பிச்சடம்—1. ஈயம். 2. துத்தநாகம் (1, 2-தைத்தியபரி.)

பிச்சம்—1. ஆண்மயிர். (சூ. நிக. கக: சகரவெ. சு.) 2. இருவேலி. (மலையக.) 3. இறகு. (உ-ம்.) "பிணிப்புறுகொடிகளிற்பிச்சமேல் விரித்-தணிக்குலமஞ்ஞைகளகவியாலுவ" (சேதுபு. கந்தமா. ஙசை.) 4. காஞ்சிரை. (வைத்தியபரி.) 5. பீலிக்குட்டை. (சூ. நிக. கக: சகரவெ. சு.) 6. வெண்குடை. (உ-ம்.) "பிச்சவெண்குடையார்பலர்" (திருவிளை. நரிபரி. ஙஉ.)

பிச்சர்—பித்தர், மருளர். (வழக்.)

பிச்சாடநம்–இரக்குதல். (உ-ம்.)"பிச்சாடநவமணிமாலை"

பிச்சாந்தேகி — மூன்றுவருணத்துப் பிரமசாரிகள் பிச்சையேற்கும்போது கூறும் வாக்கியங்கள். இவ்வாக்கியங்களுடன் அந்தணர் பவதிச்சொல்லை முதலிலும், அரசர் பவதிச்சொல்லை யிடையிலும், வைசியர் பவதிச்சொல்லைக் கடையிலும் வைத்துக்கூறியேற்பது மரபு. (காஞ்சிபு. ஒழுக்க. கஉ.)

பிச்சி–1.ஒருமல்லிகை. சோழதேசத்திற் சாதிப்பூவென்பர்.2.சிறுசண்பகம்.(வைத்தியபரி.)

பிச்சிலம்—1. ஆண்மம். 2. ஈரம். 3. கஞ்சி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிச்சு—1. பித்து. (உ-ம்.) "பெரும்பிச்சுத் தரும்பெருமான். (திருவாச. அடைக்கல. ங.) 2. மயல். (உ-ம்.) "பெரும்பிச்சையளித்தகல்வார்" (கோயிற்பு. பதஞ்சலி. உக.) 3. மூளை. (பி. நிக. கூஎ.)

பிச்சை—1. இரப்பு. (உ-ம்.) "பின்பிச்சைகொண்டுவா" (கோயிற்பு. பதஞ்சலி. உக.) 2. வத்தகுக்கொடி. 3. வாழை.(2,3-வைத்தியபரி.)

பிச்சைதாலுவகை — சாந்தாநிகபிச்சை, கணபிச்சை, மாதுகரிபிச்சை, அயாசகபிச்சை என்பனவாம். [வ-று.] "சாந்தாநிகபிச்சைதக்க கணமாதுகரி-யாய்ந்தார்க்கயாசகமுமாம்" என்னுஞ்செய்யுளாற்பெறப்படும். (சைவச. பொது. உறுஎ.)

பிசக்கு — 1. பிசகு. (வழச்.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

பிசக்குதல்—தடுத்தல்.

பிசகடி—தடை. (வழக்.)

பிசகம்–எட்டிக்கொட்டை.(வைத்தியபரி.)

பிசகு—1. ஆட்சேபம். 2. தப்பிதம். 3. தெரிநிலைவினைப்பகுதி. (1, 2-வழக்.)

பிசகுதல் — 1. தவறுதல். 2. விலகுதல். (1, 2-வழக்.)

பிசங்கம்–பொன்மைகலந்தசிவப்பு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிசங்கல்—நலங்கல், வருந்தல். (வழக்.)

பிசங்கு—தெரிநிலைவினைப்பகுதி.

பிசங்குதல்—நலங்கல். (வழக்.)

பிசண்டம் — மிருகத்தின்முதுகு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிசண்டிலன்–பெருவயிறுள்ளவன். (வழக்.)

பிசநம்—செஞ்சந்தநம். (மலையக.)

பிசம்—1. இறகு. 2. தாமரைவளையம். (உ-ம்.) "அமிர்தை"பார்.

பிசல்—எருத்துத்திமில். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிசவீயம் —பருத்தி. (வைத்தியமூ.அக.)

பிசறல்—கலத்தல். (வழக்.)

பிசறுதல்—1. கலத்தல். 2. செறிவித்தல். (சி. சி. உ: நிஉ. ஞாநப்.)

பிசாசி—சடாமாஞ்சில். (வைத்தியபரி.)

பிசாசகை–ஓர்நதி; இது: இருக்ஷபர்வதத்திலுற்பத்தியாவது. (அபிதாநசி.)

பிசாசம்—1. பேய். (பிங்கல. உ0க.) தூலதேகத்திற்குவிதித்த ஆயுளினளவை மூடியுமுன்றேகநீங்கி வாயுவினுருவடைந்து, காலவளவைநோக்கியிருக்கும் அந்தரான்மா என்பர். (அபிதாநசி.) 2. பேய்க்கரும்பு. (மலையக.)

பிசாசர்—ஒருவிதத் தேவவகுப்பினர். (அபிதாநசி.)

பிசாவப்பிரியம்—வேம்பு. (வைத்தியபரி.)

பிசாசன்–1.இராவணசேநாதிபதிகளுளொருவன்; இவன்: இலக்குமணராற் கொல்லப்பட்டவன். (இராமா. மந்திரப். சஉ.) 2. பேய்க்குணமுடையோன். (வழக்.)

பிசாசி — சடாமாஞ்சில். (தைல. தைலவ. ககக.)

பிசாசிகை-ஙிணற்றுப்பெண்தவளை.(உ-ம்.) வந்துழிக்காண்க.

பிசாசு—1. சடாமாஞ்சில். (தைல. தைலவ. கூஎ.) 2. பிசாசம். (பிங்கல. உ0கூ.)

பிசாதம் — தூதகம். (உ - ம்.) வந்துழிக் காண்க.

பிசாரம்—வேம்பு. (வைத்தியபரி.)

பிசி—1. அரும்பொருள். 2. சோறு. 3. நற் பொருள். (பிங்கல. நிக. உ0நிஅ.) 4. பொய். 5. பொன். (சூ. நிக. சு: க.) (1, 2, 4-கக: சகர வெ. கூ.)

பிசிதம்—1. ஊன். (உ-ம்.) "பிறவியிற்பெ ரியநோக்கிற்பிசிதமுண்டெழலும்பெற்றி" (இரா மா. நாகபாச. கூஎ.) 2. சதகுப்பை. 3. நீர். 4. வேப்பு. (3, 4-சூ. நிக. கக: ணகரவெ. கூ.) (2-வைத்தியபரி.)

பிசிதர்—அசுரர். (உ - ம்.) "பிசிதர்தம்வாய் நிணங்கக்க" (கந்தரல. அஅ.)

பிசிதவுணர்—பிசிதாசநர். பிசிதம்-ஊன்.

பிசிதாசநர்—இராக்கதர். (உ-ம்.) "அருமாத வர்பிசிதாசநரமுதாசநர்" (சேதுபு. இராமனரு. கருஎ.)

பிசிர்—1. ஊற்றுநீர். (பரிபாடல்.) 2. திவலை. (உ-ம்.) "வரைமருள்புணரிவான்பிசிருடைய" (பதிற்றுப். உ: க.) 3. பாண்டிநாட்டிலுள்ள தோரூர். (உ-ம்.) "தென்னம்பொருப்பனண்ணு மெள்ளும்-பிசிரோனென்பதிவனுயிர் ராம்புன னே" (புறநா. உகஞ்.) 4. மழைத்துளி. (பதிற் றுப்பத்து.)

பிசிர—துளியாகச்சிதற. (பதிற்றுப்பத்து.)

பிசிராந்தை—ஒரு புலவன். (உ-ம்.)"இரும் பிசிராந்தையடியுறை" (புறநா. சுஎ.) கோப் பெருஞ்சோழனண்பனென்று கூறுவர். (அபி தாநசி.)

பிசின் — 1. சாம்பிராணி. 2. நீர்வஞ்சி. 3. பஞ்சிநூல். 4. மரப்பிசின். 5. வெட்டுக்குருத்தி. (1, 2, 3, 4, 5-வைத்தியபரி.)

பிசினி—1. பசை. 2. கள். (வைத்தியபரி.)

பிசினேறி—ஒரு மரம். (வழக்.)

பிசு—பருத்தி. (மலையக.)

பிசுக்கு—1. விலக்குறியபொருளைப்பெற்ற பின், சிறிதுவாங்குதல். (வழக்.) 2. பீர்க்கு. (வைத்தியபரி.)

பிசுகம்—உத்தாமணி, வேலிப்பருத்தி. (தைல. தைலவ. உக.)

பிசுகுதல்—கொசறுதல். (வழக்.)

பிசுநூலம்—பருத்தி. (மலையக.)

பிசுநத்தநம்—லோபத்தன்மை (வழக்.)

பிசுநம்—1. உலோபம். (வழக்.) 2. புறங் கூறல். (சூ. நிக. கo: கூ.) 3. பருத்தி. 4. மஞ் சள். (3, 4-வைத்தியபரி.)

பிசுநன் — 1. உலோபன். 2. கோளன். 3. பொய்யன். (சூ. நிக. கக: சகரவெ. கo.)

பிசுநி—பிசுநன்.

பிசுபிசுத்தல்— பிசுபிசுப்பு.
பிசுபிசுப்பு— (வழக்.)

பிசுபிசெனல்—பிசுபிசுப்புக்குறிப்பு.(வழக்.)

பிசுமத்தம்— வேம்பு. (மலையக.)
பிசுமந்தம்—

பிசுலம்—1. நீர்க்காகம். 2. பிஞ்சு. (1, 2-வைத்தியபரி.)

பிசுனம் — பருத்தி. 2. மஞ்சள். (1, 2-வைத்தியபரி.)

பிசூகம்—வேலிப்பருத்தி. (மலையக.)

பிசைதல்—குழைத்தல். (உ-ம்.)"சூடர்மாலை யிட்டுடல்பிசைந்ததே" (கூர்மபு.தக்கவமி.எகூ.)

பிசைவு—சேர்த்துக்கலத்தல். (வழக்.)

பிஞ்சகம்—1. கொலை பிஞ்சம் பிஞ்சகமென வந்தது. 2. தலைக்கோலம். பிஞ்ஞகம் என்பது பிஞ்சகமென மருவினதாம்.

பிஞ்சகன் — 1. கொலைகாரன். 2. சிவன். (சூ. நிக. க: கூ.)

பிஞ்சநம் — பஞ்செஃகும்வில். எஃகுதல்-நொய்தாக்கல்.

பிஞ்சம்—1. இறகு. (பிங்கல. உகூகச.) 2. கொலை. 3. சத்திசாரணை. (வைத்தியபரி.)

பிஞ்சாரம்—1. அரிதாரம். (வைத்தியபரி.) 2. கருமைகலந்தசிவப்பு. 3. பொன். 2, 3. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிஞ்சலம்—தருப்பை. (வைத்தியபரி.)

பிஞ்சாநம் — பொன். (உ-ம்.) வந்துழிக் காண்க.

பிஞ்சிதை—கொட்டையின்பிஞ்சு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிஞ்சு—இளங்காய். (உ-ம்.)"பிஞ்சபூவுடன் கவர்ந்தான்" (சிவரக. கத்தரிப்பூ. உச.)

பிஞ்சை—1. பிஞ்சு. 2. மஞ்சள். (வைத் தியபரி.)

பிஞ்சோலம் — இலைமுதலியவற்றுனெழு மொலி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிஞ்ஞகம்—தலைக்கோலம். (உ-ம்.) "கொன் றைகமழ்மூடியோனும்பிஞ்ஞகத்தைப் பின்னல் படுசுஞ்சியாக்கி" (பாரத.அரிச்சுநன்றவ. அகூ.)

பிஞ்ஞகன்—சிவன். (உ-ம்.) "பெண்ணெரு பாகம்வைத்தபிஞ்ஞகனுருவுகாட்டும்" (கூர்மபு. காப்பு.) [தலைக்கோலத்தையுடையவனென்ற படி.]

பிஞ்ஞை—பின்னை, நப்பின்னை. (சிலப்.)

பிட்குதல்—பிள்ளச்செய்தல். (வழக்.)

பிட்சகர்—யாசகர். (பராச.)

பிட்சு—யசுர்வேதஉபநிடதத்தொன்று.(கந். கலு. கஅ.)

பிட்டகை—யாசகர். (வழக்குண்டி.)

பிட்டங்கொற்றன்—ஓர்வள்ளல்.(அபிதாநசி.)

பிட்டபேடணநியாயம்—சகத்திரநியாயங்களொன்று. (மீமாமிசையிலறிக.)

பிட்டம்—1. இடித்தமா. (தைலவ. பாயிரம். உஅ.) 2. சகுநம். 3. மாவு. (சூ. நிக. கூ: உரு.)

பிட்டர்—ஆடுதின்னுப்பாளை. (வைத்தியபரி.)

பிட்டல்—பிட்குதல். (உ-ம்.) "பிட்டெலிரு பிளவெனவிழுவுதிரமுகனிபெருக" (அருணகிரிபு. அருந்தல. கஙூ.)

பிட்டி—சகுநப்பக்கம், வழக்கம்.

பிட்டிமம்—ஏலம். (மலையக.) (வைத்தியபரி.)

பிட்டிலம்—

பிட்டு—ஒருவகைச்சிற்றுண்டி. (உ-ம்.) "பிட்டினவிற்றுண்பேற்கு" (திருவாத. மண். உரு.)

பிட்டை—அண்டவாதம். (வழக்.)

பிடக்கு—வைத்தியன். (உ-ம்.) "பிணியர்க்குரியபிடக்குளத்தையொப்பர்" (தைல. பாபிர. ச.)

பிடகம்—1. ஆதிபுத்தனுடைய தண்ணங்காரன்முதலிய இருபத்துநான்கு புத்தர்கள்மரபில் உபதேசக்கிரமத்தாற்செய்யப்பட்டநூல்; அது: விநயபிடகம், சூத்திரபிடகம், அபிதன்மபிடகம்எனப் பலவகைப்படும். (தக்ஷி. நி. போ. கஙக.) [புத்ததன்மசங்கம் என்னும் மூன்றுமணிகளும் யாதோரிடையூறின்றி இருத்தற்கு உடலுய்க்கூடைபோலுதலின் பிடகமாயிற் றென்பர்.] (மணிமே. உசரு.) 2. கல்விநூல். (பிங்கல. நிக. உ0ருஅ.) 3. கூடை. (மணிமே.)

பிடகர்—வைத்தியர். (உ-ம்.) "பிடகர்சொல்வார்" (தைல. தைலவ. கஙூ.)

பிடகன்—1. புத்தன். 2. வைத்தியன்.

பிடகை—கூடை. (உ-ம்.) "கொம்பனார்கள் பூம்பிடகைகொண்டனைய" (பெரியபு. திருக்குறிப்பு. ருங.) குடலையென்றுங்கூறுவர். பூக்கட்டு என்பர். (பத்துப். நெல்நல்வாடையில்.)

பிடங்கம்—பெருவெள்ளரி.(வைத்தியபரி.)

பிடங்து—ஆயுதங்களின் பிற்பக்கம். (வழக்.)

பிடர்—புறங்கழுத்து. (உ-ம்.) "அடங்குபிடர்க்குளமைந்தவுளைத்திரள்" (சிவரக. தேவியியமம். கஙூ.)

பிடர்த்தலை—பிடர். (பிங்கல. நிக. கo஧o.)

பிடரி—பிடர். (வழக்.)

பிடவம்—1. ஒருசெடி, நுட்டிப்பிடவம். (உ-ம்.)"பிடவமுமையிலையும்"(சிலப். புறஞ்சை. ருஙஅ.) 2. ஒரு மரம். பிடா என்பது பிடவம் என வந்ததென்பர்.

பிடவு—பிடவம். (சிலப்.) பிடாச்செடிஎன்பர் பதிற்றுப்பத்தில்.

பிடவூர்—சோழநாட்டிலுள்ளதோரூர்.(உ-ம்.) "நெடுங்கைவேண்மானருங்கடிப்பிடவூர்" (புறநா. ஙஎருஐ.)

பிடா—ஓர்மரம். (உ-ம்.) "மருதுபோதிபிடா ளெலுமை. (காஞ்சிப்பு. சனற்குமார. சு.)

பிடாரம்—வைத்தியவாகடம். (வழக்.)

பிடாரன்—பாம்புபிடிப்போன். (வழக்.)

பிடாரி—காளி. (வழக்.)

பிடி—1. ஏலம். (வைத்தியபரி.) 2. ஓட்டகம், யானை, கவரி இவற்றின்பெண். (சூ. நிக. கூ: ஙூ.) 3. கிரகிப்பு. 4. கைப்பிடி. (உ-ம்.) "சினடியார்தமக்கொருபிடியாகம்"(சிலப்.பசாசமோசா. கூரு.) 5. நால்விரல்கொண்ட அளவு. 6. தெரிகிலேவினைப்பகுதி. (உ-ம்.) "கைப்பிடிசூலம்பாசமுடையகாலன்" (சிவரக. சிவதன்மா. உகூ.)

பிடிகம்—பிள்ளைக்கையளவு.(சூ.நிக.எ:உச.)

பிடிதருவி—வெற்றிலை. (வைத்தியபரி.)

பிடிச்சராவி—கம்மாளர்கருவியிலொன்று. ஒரு குழூஉக்குறி.

பிடிச்சீலை—கையிற்பிடிக்கிறதுணி. (தைல. தைலவ.)

பிடித்தபிடி—பற்றிக்கொண்டநிலை, விடாப்பிடி. (வழக்.)

பிடித்தம்—வேலைசெய்யாநாட்குப் பிடிக்கப்படுங்காசு. (வழக்.)

பிடித்தல்—1. உட்கொள்ளல், மனத்துக்கிணங்கல். (வழக்.) 2. பற்றல். (உ-ம்.) "சூலம்பிடித்தவீரன்றன்னை"(சிவரக.கத்நிரிப்பூ. கருு.)

பிடித்தாவி—பிடிச்சராவி. (வழக்.)

பிடிதது—கைப்பிடியிலுள்ளது. (உ-ம்.) "தொடிபடுபுழுதிகஃசாவுணக்கிற் பிடித்தெருவும்-வேண்டாதுசாலப்படும்" (வள். கoஙஎ.)

பிடித்தென்றைப்பேசுதல்—பிதற்றுதல். (பிங்கல. உoஎஅ.)

பிடிதம்—பிச்சை (சூ. நிக: கக.)

பிடிப்பு—1. சுளுக்கு. 2. பிடித்தல். (1, 2-வழக்.)

பிடிபடுதல்—1. அகப்படுதல். 2. தெரிதல். (1, 2-வழக்.)

பிடிபாடு—அகப்படுதல். (வழக்.)

பிடிமானம்—1. அன்பானபற்று. 2. உலோபம். 3. கையிருப்பு. (1, 2-வழக்.)

பிடியல்—1. சீலை. (வைத்தியபரி.) 2. நல்லாடை. (உ-ம்.) வந்துபுகிக்காண்க.

பிடியாளி—பலபத்தமாகப்பிடித்தஆள்.(வழக்)

பிடிவாதக்காரன்—பிடிவாதி. (வழக்.)

பிடிவாதம்—கொண்டதுவிடமை. (வழக்.)
பிடிவாதி—கொண்டதுவிடாதுநிற்போன். (வழக்.)
பிடுக்கு—பீசம். (வழக்.)
பிடுங்கல்—1. கவர்தல். (வழக்.) 2. பறித்தல். (பி. நிக. உகடுஎ.)
பிடுங்குகீரை—தண்டுக்கீரை. (வழக்.)
பிடுங்குதல்—பிடுங்கல். (பி. நிக. உசடுஎ.)
பிண்டக்காப்பு—காப்பதற்குரிய சோற்றுத்திரளை. (வழக்.)
பிண்டகநமம்-பிதிர்க்கிடும்பிண்டக்கிரியை. (வழக்.)
பிண்டகன்—பிதிர்பிண்டமிடுவோன். (வழக்.)
பிண்டகோசம்—வாசனைப்பிசின். (வைத்தியபரி.)
பிண்டசன்—யாசகன். (வழக்.)
பிண்டதன்—பிதிர்பிண்டமிடுவோன்.
பிண்டது—பிளந்தது. (உ-ம்.) "பிண்டது பாரும்" (திருவிளை. யானையெய். கூக.)
பிண்டப்பிரதானம்—பிதிர்க்குப் பிண்டத்தைத் தானஞ்செய்தல். (வழக்.)
பிண்டப்பொருள்—1. குவிக்கப்பட்ட பொருள், தொகுக்கப்பட்டபொருள். (நன்னூ. பெயரிய. இகூ. உரை.) 2. சடப்பொருள்.
பிண்டபாகர்—தந்தைமுதல்மூவர். (பராமி. சுடு.)
பிண்டபுட்பம்—1. அசோகு. 2. செவ்வந்தி (1, 2-வைத்தியமூ. அக.)
பிண்டம்—1. உடல். (பிங்கல. கூகச.) 2. உண்டை. (பிங்கல. கூஅகூஉ.) 3. எண்வகையெச்சத்துளொன்று; அது: உறப்பின்றிப்பிரிப்பது. (உ-ம்.) "உறப்பில்பிண்டமும்" (புறநா. உஅ.) 4. கருப்பம். 5. கவளம். 6. சோறுகண்டு. 7. செவ்வந்தி. 8. சோறு. (சோற்றுத்திரளையென்றூர் புறப்பொருள்வெண்பாமாலையுரையில்.) 9. தொகைச்சூத்திரத்துக்குமுன்புரைக்கும் பிண்டசூத்திரம். (நன்னூ. பாயிர. உ0.) 10. பலபொருட்டொகுதி. (தொ. சோ. கூ0.) 11. பிச்சை. (சூ. நிக. கக: தகரவெ. சு.) 12. பிண்டதேவரைக்குறித்துப்பிண்டித்திடுமுணவு. (உ-ம்.) "ஒன்றுகாதலொடுகூடுகொண்டதொருபிண்டநல்கில்" (சேதுபு. பாவநாச. அ.) இவ்வுணவு விளாங்கனிப்பிராமணமாகஇடுவதென்பர். 13. மாமிசம். 14. வெல்லம். (4, 5, 8-வழக்.) (6, 7, 13, 14-வைத்தியபரி.)
பிண்டரோடணம்—காரத்தை. (வைத்திய பரிபா.)
பிண்டவுரை—பொழிப்புரை. (யாப். காரி. க. உரை.)

பிண்டவிருத்தி—சரீரத்தை விருத்திசெய்தற்கிரியை (உ-ம்.) "அங்கப்பிராசனம்" பார்க்க.
பிண்டாகழலம்—ராமரைவேளையம். (வைத்தியபரி.)
பிண்டாண்டம்—அண்டமும் பிண்டமும். பிண்டம்-சரீரம்.
பிண்டாப்பிரம்-ஆலங்கட்டி. (வைத்தியபரி.)
பிண்டாயசம்—உருக்கு. (வைத்தியபரி.)
பிண்டாரி—கொள்ளைக்காரன். [தெலுகு.]
பிண்டி—1. அசோகமரம். (உ-ம்.) "பொலம்பூம்பிண்டிநலங்கிளர்கொழுநிழல்" (சிலப். நாடுகாண். உக.) 2. ஒற்றைக்கை; இது: புறக்கூத்திற்குரியது. (சிலப். அரங்கேகே. கஅ.) 3. குவிக்கப்பட்டது, தொகுக்கப்பட்டது. 4. தினைமா. (சூ.நிக. சு: உடு.) 5. நெல். 6. தெரிநிலவினைப்பகுதி. 7. பிண்ணாக்கு. 8. புகர்பூசம். (சூ. நிக. க: எ0.) 9. மா. (5, 7, 9-வைத்தியபரி.)
பிண்டிகை—ஆசுகம். (வழக்.)
பிண்டித்தல்—குவித்தல், தொகுத்தல்.
பிண்டித்து—திரண்டு. (சிந்தாமணி.)
பிண்டிதகம்—மருக்காரை. (வைத்தியபரி.)
பிண்டிதம்—சாணைச்செடி. (வைத்தியபரி.)
பிண்டிபாலம்-ஓர்ஆயுதம். (உ-ம்.) "அடுத்தபிண்டிபாலந்தலைஎடுத்தடித்திடுவீர்" (சிவரக. நாரதஉபதேச. தச.) சீவகசிந்தாமணியில், குலேயிலே பீலிகட்டப்பட்டு எறிவதோர் படையென்பர்.
பிண்டியான்—அருகன். (உ-ம்.) "உண்மையெனத்தடுமாற்றறநூலுரைத்தபிண்டியானுக்கிடமாண்டு" (திருவிளை. மாயப். கூ.)
பிண்டிரம்—மாதுளை. (வைத்தியபரி.)
பிண்டிவாளகம்—குக்குருக்கம். (மலையக.)
பிண்டீகரணம்—உண்டையாக்கிடுகை. (வழக்.)
பிண்டீகரம்—தொகுப்பு. (உ-ம்.) வக்காழிக்காண்க.
பிண்டீதகம்—மருக்கொழுந்து. (வைத்தியபரிபா.)
பிண்டீரம்—மாதுளை. (வைத்தியபரி.)
பிண்டோற்பத்தி—தக்தையின்றாதுவுடனிருந்தவுயிர் தாயின் கருப்பையிற்புக்குக் குழவியாகிப் பின் பூமியிற்பிறப்பது. (அபிதாகர.)
பிண்ணாக்கு-எள்ளுமுதலியவற்றினையரைத்து (வழக்.)
பிண்ணாக்குக்கீரை—ஒருகீரை. (வைத்தியமூ. அக.)
பிண்ணாக்குப்பூண்டு—ஒருபூண்டு. (வைத்தியமூ. அக.)

பிண்ணியாக்கம்—குந்திருக்கம். (மலையக.)

பிணக்கம்—பிணங்கல். (பிங்கல. ககூக0.) அம்-சாரியை.

பிணக்கன்—மாறுபாடுடையவன். (உ-ம்.) "களிமடி.....பிணியனேழை" (நன் ஙூக.)

பிணக்காடு—சுடுகாடு. (சூ. நிக. நு: நுக.)

பிணக்கு—1. ஊடல், ஆடவர் மாதர் கலவிக்கு முன்னிகழுங்கலகம். 2. ஒரு பொருளைப்பற்றி இருவர்க்குளாறுபாடு. (உ-ம்.) "பிணக்கறுக்கு-மூத்தோரையில்லாவவைக்களனும்" (திரிகடு. க0.) 3. நெருக்கம் (உ-ம்.) வந்துழிக்காண்க. 4. தொழிலேவினைப்பகுதி.

பிணக்குதல்—சலகஞ்செய்தல். (வழக்.)

பிணங்க—நெருங்க. (உ-ம்.) "மாந்தர்பிணங்கவேட்டான்" (சிந்தா. குணமாலை. உகஙூ.)

பிணங்கல்—1. கலகித்தல். (சி. சி. ச: எ. சிவாக்.) 2 சூழம்புதல். 3. நெருங்கல். 4. பின்னல். 5. மாறுபடுதல். (2, 3, 4, 5 வழக்.)

பிணங்கு—தொழிலேவினைப்பகுதி.

பிணங்குதல்—1. சூழம்புதல். 2. சண்டை செய்தல். 3. நெருங்கல். 4. மாறுபடுதல். (உ-ம்.) "உலகிலில்லாநெறிகொண்டுபிணங்குகின்ற திருமறைமுனிவரே" (பெரியபு. தடுத்தாட்:சசூ.) 5. பின்னல். (1, 2, 3, 5 வழக்.)

பிணப்பறை—சாப்பறை. (உ-ம்.) "மணப்பறையும்பிணப்பறையாய்" (திருவிளை. பழியஞ்சு. ச0)

பிணம்-1. சவம். (உ-ம்.) "காக்கையுவக்கும் பிணம்" (மூதுரை.) 2. பேய். (பிங்கல உ0கூ.)

பிணம்வீழ்களம்—போர்க்களம். (சூ. நிக. நு: நுக.)

பிணர்—1. கோங்கு. (வைத்தியபரி.) 2. சருச்சரைவடிவு. (சூ. நிக. அ: சூ.)

பிணராம்—சர்க்கரை. (வைத்தியபரி.)

பிணவு—கவரிமா, நாய், புல்வாய், பன்றி யிவற்றின்பெண்பொது. (பிங்கல.நிக. உடுஎசூ.) விலங்கின்பெண். (மணிமேகலை.)

பிணவேடில்-பிணநாற்றம். (பட்டணத்தா. பொது. ஙூக.)

பிணை—பிணவு. (சூ. நிக. கூ: ஙூச.)

பிணைப்பிள்ளை—பெண்பிள்ளை. (உ-ம்.) "கோயிற்பிணைப்பிள்ளைகாள்" (திருவாச. திருவெண். க0.)

பிணி—1. தளை. (உ-ம்.) "விரகொடுவளை சங்கடதருவெம்பிணிகொடு" (திருப்பு. நுஙூஅ. மதுரைக்காஞ்சியிலுங்காண்க. 2. துன்பம். (உ-ம்.) "சிந்தைவேரூயினர்பிணியிற்றேம்பிஞர்" (பிரமோ. பஞ்சா. உகூ.) 3. நோய். (உ-ம்.) "பாத்துணலில்லாருழைச்சென்றுணவின்ஞமூத்தவிடத்துப்பிணியின்ஞ" (இன்ஞ. உக.) 4. பகிப்பிணி. (கலித்தொகை. உ0.) 5. பந்தம். (உ-ம்.) "பல்லுயிர்க்கும்-பேதஞ்செய்யும்பிணியவிழ்த்து" (திருவிளை.உலவா. கசூ.) 6. தொழிலேவினைப்பகுதி. (உ-ம்.) "சிறுகிண்கிணி" பார்.

பிணிக்குதலம்—விலங்கு. (உ-ம்.) "பிணிக்குலத்தகவயிற்பிறந்தநோய்கெடுத்-தணித்தகையுடம்பென" (சிந்தா. பதுமை. எ.)

பிணித்தல்—1. கட்டல். (உ-ம்.) "மணிக்கயிற்றூற்பிணித்திழுத்தார்" (சிவரக. சிவதன் மா. நு.) 2. தொடுத்தல். (பரிபாடல்.)

பிணித்தோர்-நோயுற்றோர். (மணிமேகலை.)

பிணிப்பு—கட்டு. (உ-ம்.) "பிணிப்புறுகொடிகளில்" (சேதுபு. கந்தமா. ஙூச.)

பிணிமார்—சேர்த்தற்கு. (உ-ம்.) "தூரவுச்சினந்தணித்துபெருவெளிற்பிணிமார்" (மலைபடு. ஙூஉக.)

பிணிமிதித்தல்—நெய்வார்தொழிலி ஞென்று. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிணிமுகத்திறை—கருடன். (உ-ம்.) "பிணிமுகத்திறையைநோக்கி" (சேதுபு. பாலோடை. உசூ.) பிணிமுகம்-பறவை.

பிணிமுகம்-1. அன்னம். (பிங்கல.உஙூஉ.) 2. பறவைப்பொது. 3. மயில். 4. முருகக்கடவுளின்யானை. (பத்துப்பாட்டு.) (2, 3-சூ. நிக. க: ணகரவெ. ஙூ.)

பிணியகம்-காவலிடம். (உ-ம்.) "பிறர்பிணியகத்திருந்துபீகொழ்முற்றி" (பட்டின. உஉஉ.)

பிணியன்—நோயாளன். (உ-ம்.) "பிணியனேழை" (நன். ஙூக.)

பிணியாளி—நோயாளி. (வழக்.)

பிணை—1. ஆசை. 2. ஒட்டகம், கவரிமா, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானை முதலியவற்றின் பெண். 3 கட்டு. மூதனிலத் தொழிற்பெயர். 4. பூமாலை. (உ-ம்.) "வெறிகொண்டமுல்லைப்பிணைமீது" (பெரியபு. கண்ணப்ப. நுஎ.) 5. மரச்கூட்டம். (பரிபாடல்.) 6. மான். (உ-ம்.) "பிணையனவிழியினர்" (அரிச்ச. விவாக. கச0.) 7. பதிற்பொருள். (உ-ம்.) "நான்பிணையென்றுதாழ்ந்தான்" (திருவிளை. இந்திரன்மூடி. நுஎ.) 8. மூட்டுவாய். (புறப்பொ. வெ) (1, 2-சூ. நிக. க: ணகரவெ. நு.)

பிணைக்காரன்-பிணைகாரன். (வழக்.)

பிணைத்தல்—1. இணைத்தல். 2. கட்டல். 3. தொடுத்தல். (1, 2, 3-வழக்.)

பிணைதல்—1. இணைத்தல். (உ-ம்.) "தண்கயமாமிகளிரொடுகைபிணைத்து" (புறநா. உசஙூ.) 2. கலத்தல். (வழக்.) இருபறவையும் பிணைந்துகொண்டிருந்தன.

பிணைப்படுதல் — பதிலாயிருப்பதற்கு உத்தரவாதியாயுட்படல். (வழக்.)

பிணைப்பு—இணைப்பு. (வழக்.)

பிணைய—தழுவ. (புறப்பொ-வெ.)

பிணையல்—1. இரட்டைக்கை; அது: அஞ்சலிமுதலாகப் பதினேந்துவகைப்படும். (உ.-ம்.) "பிண்டியும்பிணையலும்"(சிலப்.அரங்கே.சஅ.) 2. இரட்டை. 3. கதவுமுதலியவற்றிலிடுமிணைப்புச்சலாகை. 4. மாலை; அது: மலர்களின் முளிரண்டையும் எதிரெதிரே ஒன்றன்மேலொன்றுகப் பிணைத்துவைத்துக் கட்டுகின்றசரம். (பெரியபு. தடுத்தாட். கஅ. உரை.) (2,3-வழக்.)

பிணையன்மாலை — மலர்களின் முளிரண்டையும் ஒருங்குசேர்த்து பிணைக்குஞ்சரம். (உ-ம்.) "தூமலர்ப்பிணையன்மாலை" (பெரியபு. தடுத்தாட். கஅ. உரை.)

பிணையாளன்– } பதிலுத்தரவாதத்திற்குட்
பிணையாளி— } பட்டவன். (வழக்.)

பிணையூஉ—கைகோத்து. (உ-ம்.) "சீர்மிகு நெடுவேட்பேணித்தழூஉப்பிணையூஉ"(மதுரைக். சுகசை.)

பிணைவு–1. இணைவு. 2. புணர்ச்சி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பித்தக்கிராணி-ஒருநோய்.(உ-ம்.)"கிராணி" பார்.

பித்தக்கிறுகிறுப்பு — பித்தத்தினல்வருஞ் சுழற்சி. (வழக்.)

பித்தகம் — நவமணிக்குற்றத்தினொன்று; அது: கிளிநிறம். (திருவிளை. மாணிக்க. சுஎ.)

பித்தகாசம்—ஒரு காசம். (உ-ம்.) "காசம்" பார்.

பித்தகாமாலை–ஒருநோய், பித்தத்தாலுண்டாகுங் காமாலை. (வழக்.)

பித்தகாலம்–பித்தத்தினதிகாரகாலம்,காலை நேரமென்பர்.

பித்தகுன்மம்—ஒருவகைக்குன்மம். (உ-ம்.) "அட்டகுன்மம்"பார்.

பித்தசாந்தி—பொன்னுங்காணி. (வைத்தியபரி.)

பித்தசுழற்றி—பித்தக்கிறுகிறுப்பு.(வழக்.)

பித்தசிலேட்டுமம்— } ஒருநோய், பித்தத்
பித்தசிலேற்பனம்– } தோடுகலந்த சிலேற்பனம். (வழக்.)

பித்தசுரம்—ஒரு சுரம். (வைத்தியமூ அக.)

பித்தசூலை—ஒரு சூலை. (உ-ம்.)"சூலை"பார்.

பித்தசோகை — ஒருவகைநோய், பித்தத்தால்வருஞ் சாமாலையென்பர். (வழக்.)

பித்தநாடி—நடுவிரலுடி. (குருநாடி. ஈஎ.)

பித்தப்பிளப்பு–பித்தவெடிப்பு; இது: கால் களினுண்டாகுவது. (வழக்.)

பித்தம்–1. காயுருவி. 2 பிரம்பு. 3. மயக்கம். (சூ. நிக. அ: சுசு.) 4. மூப்பிணியிலொன்று; அஃது: அருசிப்பித்தம், இரத்தபித்தம், கரும்பித்தம், சயபித்தம், வறட்சிப்பித்தம் எனப் பல வகைப்படும். (வைத்தியமூ.அக.) (1, 2-வைத்தியபரி.)

பித்தரோசனம்—பூவரசமரம். (வைத்தியபரிபா.)

பித்தல்—வாய்பிதற்றல். (தைல. தைலவ. ககஎ.)

பித்தலாட்டம்–ஒன்றைமற்றொன்றுமுய்க்காட்டல். (வழக்.)

பித்தவாயு—ஒரு வாயு. (வழக்.)

பித்தளை — செம்பு நாகமுமுகலந்தது. இவ்விரண்டுங்கலந்திருப்பதனல், திருவிளையாடற் புராணம், இரசவாதஞ்செய்தபடலத்தில், ஈரூ-ஆவது கவியில், புணர்ப்பாற்றொயும்பித்தளை என்றார்.

பித்தன்—1. சிவன். (திருவாசகம். திருச்சாழல். கூ.) 2. பைத்தியசாரன். (சிவப்பிர.பெரிய நாய்கி சலித்துறை. உ.)

பித்தாதிசாரம்–ஒருநோய்; அது: உவாந்திப் பிராந்தி. (வழக்.)

பித்தாந்தம் — பித்தமுடிபு, பெரும்பித்தம். (சி. சி அ: சுசு. சிவஞாந.)

பித்தி—1. பங்கு. 2. பின்புறம். (வழக்.)

பித்திகம்—1. பிச்சி. (உ-ம்.) "செவ்வியரும் பின்னங்காற்பித்திகத்து" (நெடுநல். சஅ.) 2. செண்பகப்பூ. (வைத்தியபரி.)

பித்திகாமார்ச்சாலநியாயம்— ஒரு வகை நியாயம். சுவரிலிருக்கும் பூனை எந்தப்பக்கங் குதிக்குமென்பது தெரியாது.

பித்திகை—1. கருநாகை. (வைத்தியபரி.) 2. சிறசண்பகம். (மலையக.) 3. சுவர்த்தலம். (உ-ம்.) "சாளரவொழுக்கப்பித்திகைமாடம்" (திருவிளை. திருநகரங்கண்ட. ஈஈ.) அண்டச் சுவரென்றுங்கூறுவர். (பிங்கல. நிகண்டில்.)

பித்து—1. சரற்பித்து. 2. சுகதுக்கமோகங்கள். (உ-ம்.) "வருஞ்சுகதுக்கமோகப்பித்தினின் மயங்கி" (சி. சி. உ: திஅ. சிவாஞா.) 3. பித்தம். அம்-கெட்டுநின்றது. 4. பைத்தியம். (உ-ம்.) "பித்தாக்கொண்டார்போற்பிதற்றுகிறீர்" (கந்த பு. வள். கoஅ.) 5. மோகம். (உ-ம்.)"பித்தினில் லாட்சேர்ந்தபேதையுமேயாவன்" (சிவரக. வில் வலன். சo.)

பித்தை—1. ஆண்மயிர். (உ-ம்.) "பித்தை வயிரியம்" (திருவிளை. மாணிக்கம். ஈறி.) 2.

மயிர். (உ-ம்.) "நிலவுதூற்றன்னபித்தைநெடுந்தவர்" (கூர்மபு. பதிக. ருக. உரை.)

பிதரம்—ஈணல். (வைத்தியபரி.)

பிதற்றல்—பலகாற்பேசல். (சூ.நிக.கக.ரூ.)

பிதற்று — 1. பிதற்றல். தெரிநிலைவினைப் பகுதி. 2. மயக்கவார்த்தை. (வழக்.)

பிதற்றுதல்–விடாதுபேசல். (சூ.நிக.கo:எ.)

பிதா–1. சிவன். (பிங்கல. கூசை.) 2. தந்தை. (சூ. நிக. உ: எடு.) 3. பிரமன். (உ-ம்.) "வாணி தன்னெடுந்திருமிகவிருந்தபிதாவெனும் பெரியதேவன்" (சிவரக. நைமிச. கக.) 4. நாரை. (சூ. நிக. ரூ: சுஉ.)

பிதாபிதா—பாட்டன். (வழக்குண்டு.)

பிதாமகன்—1. பாட்டன். (சூ.நிக உ:எடு.) 2. பிரமன். (சூ. நிக. க: கடு.)

பிதிகம்—பெருங்குரும்பை. (மலையக.)

பிதிகாரம் — பதிற்செய்கை. பிரதிகாரம் பிதிகாரமென்றுய்தென்பர். (திருநாவுக்.தேவா. பொது. தசபுராணத்தடைவு. க.)

பிதிர்—1. கதை. 2. காலநுட்பம். (பிங்கல. ரூஅருடு.) 3. சுணங்கு. (உ - ம்.) "பொற்பிதிரணிந்துவீங்கும்புணர்முலை" (கூர்மபு. பதிகம்.) 4. தந்தைவழியின் பிதாமுதலோர். 5. திவலை. 6. பிதா. பிதிர்கருமஞ்செய்தான். 7. தெரிநிலை வினைப்பகுதி. (1, 2, 5-பிங்கல. ரூஅருடு.) (4, 6-வழக்.)

பிதிர்காலம் — சிரார்த்தபுண்ணிய காலம்; அது: பதினெண்நாழிகைதொடங்கி யிருபத்து நாலு நாழிகைபரியந்தம்.

பிதிர்த்தல்—உதிர்த்தல். (உ-ம்.) "பருப்பு" பார்.

பிதிர்தருப்பணம் — பிதிரர்களைக்குறித்துச் சுட்டுவிரலடியினுல் எள் ருநீர் குசையுடன் தருப்பணஞ்செய்தல். தருப்பணம் - உவப்பித்தல்.

பிதிர்தல்—சிதறல். (உ-ம்.) "பிதிர்ந்ததெம் மனத்தையூர்ப்பிறங்கல்" (இராமா. திருவவ. எக.)

பிதிர்திதி— } பிதிர்நாள், அமாவாசை.
பிதிர்தினம்– } (வழக்.)

பிதிர்தீர்த்தம் — தேவதீர்த்தமுதலிய பஞ்சதீர்த்தங்களுளொன்று; அது: தர்ச்சனி, அங்குட்டங்களினுவாகவிடுநீர். (சைவச. பொது. சுசு. உரை.)

பிதிர்தேவர்–தென்புலத்தார். (வழக்குண்டு.)

பிதிர்நாள்—1. பிதிர்த்தினம். 2. மகநாள். (பிங்கல: உசஅ.)

பிதிர்யாகம்—ஐம்பெருவேள்வியிலொன்று; அது: நீர்க்கடனுற்றல். (வள். அஎ. பரி.)

பிதிர்வதம்—சுடலை. (உ-ம்.) "வெந்திறற் பிதிர்வதத்தில்வேண்டியபொருளுமுண்டோ" (சேதபு. வேதாளவர. நுo.) (சூ. நிக. நு: நுரூ.)

பிதிரர் — ஒரு தெய்வச்சாதி; அவர்க்கிடக்: தென்திசை. (வள். சரூ. பரி.)

பிதிராரீச்சிதம்-பிதிரர்வழிப்பட்டது.(வழக்)

பிதிர்வு—பிதிர்தல்.

பிதிராட்சனை—பிதிரார்ச்சிதம்.

பிதுக்கம்—பிதுங்கல். (வழக்.)

பிதுக்கல்—பிதுங்கச்செய்தல். (வழக்.)

பிதுக்கு—தெரிநிலைவினைப்பகுதி.

பிதுக்குதல்—பிதுக்கல். (வழக்.)

பிதுகம்–நவமணிக்குற்றத்தொன்று; அது: தாமரைநிறம். (திருவிளை. மாணிக்கம்வி. சுஎ.)

பிதுங்கல்—உள்ளடங்காமற் புறப்படல்.

பிதுங்குதல்—பிதுங்கல். (வழக்.)

பிதுர்—பிதிர். (வழக்.)

பிதுர்யாநம்—சூரியனதுதெற்குவீதியாகிய தக்கிணயநமார்க்கம். (கூர்மபு.பிரமா.சஉரை.)

பிதுரம்— இடி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிந்தல்—பிற்படல். (உ - ம்.) "ஏவல்பிந்தவினன்றுசென்றேற்றமார்" (சேதபு. தேவிபுர. சக.)

பிந்து—1. சத்திதத்துவம். (சி. சி. உ: நுo. சிவாக்.) 2. சுத்தமாயை.(வி-ணி.உ.) 3. புள்ளி.

பிந்துசரசு—ஓர் பொய்கை; இது: கர்த்தமப் பிரஜாபதிக்கு வரந்தந்த விஷ்ணுமூர்த்தியின் கண்ணீர் அவ்விடத்தில்விழுந்தமையால் உண்டானது. (அபிதாநசி.)

பிந்துசாரம்—ஒரு விஷவைத்தியநூல்.

பிந்துதல்—பிந்தல். (வழக்குண்டு.)

பிந்நகநம் — கீழ்வாயிலக்கத்தைச் சமமாக்கி அவ்விலக்கத்தாற்றுக்கிவந்த இலக்கத்தை மறுமுறையும் பெருக்கல்.

பிந்நகம்—பேதம். (வழக்.)

பிந்நகநுத்தா—வேறுவினைமுதல்.

பிந்நதுணநம்—கீழ்வாயிலக்கத்தைப் பெருக்கல்.

பிந்நதசங்கிலிதம்—கீழ்வாய்க்கூட்டல்.

பிந்நபதச்சிலேடை — பிரிமொழிச் சிலேடையணி (தண்டி. எடு. உரை.)

பிந்நபேதகம்– } விரோதம். (வழக்.)
பிந்நபேதம்— }

பிந்நம் — 1. கீழ்வாயிலக்கம். 2. சிதைவு. 3. தடை. 4. தவறு. 5. பழுது. 6. வேறுதல். (சூ. நிக. அ: சுடு.) (2, 3, 4, 5-வழக்.)

பிநாகபாணி—சிவன். (சூ. நிக. க: கூ.)

பிநாகம்—சிவன். வில். (அபிதாநசி.)

பிநாகி — 1 ஓரிருடி. (அபிதாநசி.) 2. சதருத்திரரில் இந்திரதிக்கினிருக்கும் தசருத்திர

ருளொருவர். (வி-ணி. உசுக.) 3. சிவன். (உ-ம்.) “பிநாகிமுன்னெதிர்மறமாம்பிடகர்செல்வர்” (தைல. தைலவ. கங.) 4. நிவிர்த்திகலையில் பிருதிவிதத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) [அது கிழக்கிலுள்ள பத்துப்புவனங்களுளொன்றென்று விளங்குகின்றது. (சி.சி.அ:ஏ. மறை.] 5. பிநாகினி என்னுமொரு நதியென்பர். (அபி தாநசி.) 6. புவர்லோகத்திலிருக்கு மகேச்சுவரரின் மாநசோற்பவரான ஏகாதசருத்திரரிலொருவர். (வி-ணி. உசஉ.)

பிநாகிநதி—பெண்ணையாறு. (அபிதாநசி.)

பிநாகிநி—பிநாகிநதி. (வழக்.)

பிநாகேகி—ஐம்பத்தோரு ருத்திரரிலொருவர். (வி-ணி. உசஎ.)

பிப்பலாசநம்—யானை. அரசிலையை அசனமாகவுடையது.

பிப்பலி-திப்பிலி.(உ-ம்.)“அம்பட்டை”பார்.

பிப்பலிகை—அரசமரம். (வைத்தியபரி.)

பிப்பலை—திப்பிலி. (வைத்தியபரி.)

பிப்பிகை—பல்லழுக்கு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிப்பிலம்—அரசு. (வைத்தியபரி.)

பிப்பிலாதநன்-ஒருமுனிவன்.(அபிதாநசி.)

பிப்பிலி-யானைகருஞ்சில்.(வைத்தியபரி.)

பிப்பிலி:த்தி-பெருங்கருஞ்சில்.(மலையக.)

பிபாசிதன்—தாகங்கொண்டவன். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிபாசு—பிபாசிதன்.

பிபாசை-தாகம். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிபாலிகை—அரசமரம். (வைத்தியபரி.)

பிபீலவாதம்—பரமாணுபிரபஞ்சத்துக் காரணமெனல். பைபீலவாதம் என்பர்.

பிபீலி—
பிபீலிகா— } எறும்பு. (வி-ணி. உஉகூ.)

பிபீலிகாநியாயம்—ஒருவகை நியாயத் தீர்ப்பு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிபீலிகாவாதம்—பிபீலவாதம்.

பிபீலிகை—பிபீலி. (பிங்கல. உருகூஎ.)

பிம்பகம்-1. கோவைக்கனி.(வைத்தியபரி.)

பிம்பப்பிரதிவிம்பம்—பிம்பமும் பிரதிவிம்பமும். (வழக்.)

பிம்பம்—1. கோவைக்கனி.(வைத்தியபரி.) 2. பிரதிவிம்பத்திற்குமூலமாயுள்ள வடிவம்.

பிம்பி—கோவை. (தைல. தைலவ. எ0.)

பிம்பிகை—கோவைக்கனி.(வைத்தியபரி.)

பியீத்தல்-
பியிதல்— } 1. பிரித்தல். 2. பிள்ளுதல். (1, 2-வழக்குண்டுபோலும்.)

பியீப்பு—பிய்த்தல்.

பியல்—தோள். (உ-ம்.) “பிள்ளைபியலின் மேற்கொள்ள”(பெரியபு.சிறுத்தொண்ட.நுகூ.)

பியாகடை—ஓரிராகம். (வழக்.)

பியாரம்—ஆடுதின்னுப்பாளை. (வைத்திய பரிபா.)

பியாலிகை—அரசமரம். (வைத்தியபரி.)

பியூன்—சேவகன். [அராபி.]

பிரமவீணை—வீணைகளினிருபத்திரண்டு பேதத்தொன்று. (வி-ணி. உஉ0.)

பிரமவுப்பு-காரியுப்பு. (வைத்தியபரி.)

பிரமவேதாளி—சுத்தவித்தியாதத்துவத்திருக்குமொரு புவனம். (வி-ணி. உஎசு.)

பிரமாண்டம்—பிரபஞ்சம். (உ-ம்.)“ருத்திரலோகத்தின்மேல்பிர்மாண்டம்ஊர்த்தகடாந்தம் ஒருயோசனையளவாயிருக்கும்” (வி-ணி.) [பிரமன்உதிக்கப்பெற்றமையால் இவ்வண்டம் பிர்மாண்டமெனப்படும். (கூர்மபு. பிரகிரு. உக. உரை.]

பிரமாரிப்பணம்—பிரமத்திலொப்பித்துவிடுதல். (த. நி. போ. நூருசு.)

பிர-தோற்றமிருதிமேன்மைவிரைவு இவைகளைக்காட்டு முபசருக்கம்.

பிரக்கதம்—வலம்புரிக்காய்.(வைத்தியபரி.)

பிரக்ஞாமாநந்தம்—ஒருவர்சொன்ன அர்த்தம் புத்தியிற்பதியாமலிருக்கிறது. (வாசுவே. கசஅ.)

பிரக்கிநை—
பிரக்கியாதம்— } அறிவு. (வழக்.)

பிரக்கியாதி—கீர்த்தி. (வழக்.)

பிரக்கிரமம்—துவக்கம். (வழக்.)

பிரக்கிராகம்—1. தராசுக்கயிறு. 2. பிடித்தல். (1, 2-வழக்குண்டுபோலும்.)

பிரக்கிரீடிதம்—கிரீடை. (வழக்.)

பிரக்கேந்தம்—ஆடுதின்னுப்பாளை. (வைத்தியபரி.)

பிரகசிதம்—பெருநகை. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிரகடநம்—வெளிப்படுத்தல். (வழக்.)

பிரகடம்—பகிரங்கம். (வழக்.)

பிரகடித்தல்—வெளிப்படையாய்த்தோற்றல். (வழக்.)

பிரகடிதம்-வெளிப்படல்,வெளிப்படுத்தல்.

பிரகத்தன்—சகதேவன்குமரன். (அபிதாநசிந்.)

பிரகதாரண்ணியம்-
பிரகதாரணியம்— } ஒரு உபநிடதம். (கந். நவ. கங.)

பிரகதி-1.கத்தரிச்செடி. 2.கண்டங்கத்தரிச்செடி. 3. சூரியனது துவாதசராசிகூதர்களாகிய மெய்காவலருளொருவன். (வி-ணி. உசநி.)

4. வழுதுணைச்செடி. (1, 2, 4-வைத்தியபரி.)

பிரகந்நளா — அருச்சுனன் பேடியுருக் கொண்டு மச்சநாட்டிருந்தகாலத்து வைத்துக் கொண்டபெயர்.(அபிதாநசி.) (பாரத.நாடுகேரக். கக-ஆங்கவியில், பிருகந்நளையென்றார்.

பிரகம்பிதம்–அசைவு. பிர-என்பது சருக்க மென்பர்.

பிரகமநம்–செல்கை. பிர என்பது பசருக்க மென்பர்.

பிரகாணம்—அத்தியாயம். (வழக்.)

பிரகாரம்—அடித்தல், கொல்லுதல். (இராம. ஆரணிய. மாரீசன்வதை. கக.)

பிரகரிகம்—அகில். (வைத்தியபரி.)

பிரகரித்தல்–சங்கரித்தல். (சி-பி. கை. கச.)

பிரகலாதன்–இரணியன்மகன். (அபிதாநசி)

பிரகலை—கீதவுறுப்புளொன்று. (சிலப்.)

பிரகற்பதி — 1. தருமநூல் பதினெட்டி ளொன்று. (பொருட். நிகண்டிற்காண்க.) 2. தேவகுரு; இவன்: பிரமமானசபுத்திரருள் ஆங் கீரசன்மகனுன வியாழன். (அபிதாநகோ.)

பிரகாகி—நீர்முளளி. (வைத்தியபரி.)

பிரகாசகர் — ஞாநேந்திரிய தத்துவத்திலி ருக்கும் ருத்திரரிலொருவர். (வி-ணி. உ-கூஉ.)

பிரகாசம்–1. ஒளி. (தாயுமான.பாயிரம். க.) 2. விளக்கம். (வழக்.)

பிரகாசத்துவம்—பிரகாசமான தன்மை. (சி. சி. உ: நுள. சிவாக்.)

பிரகாசநம்—1. பிரகாசம். 2. வெளிப்படுத் தல். (1, 2-வழக்.)

பிரகாசநுத்திரர்— பிருதிவிதத்துவத்திற் குபேரதிக்கிலுள்ள பத்துப்புவநங்களு ளொன் று. (சி. சி. அ: எ. மறை.)

பிரகாசி — 1. பிரகாசன். 2. பிரகாசத்தை யுடையது. (சி. சி. உ: அள. சிவாக்.)

பிரகாசித்தல்—1. ஒளிசெய்தல். 2. பிரப லியமாதல். 3. விளங்குதல். (1, 2, 3-வழக்.)

பிரகாசிதம் — பிரகாசம். (சி. சி. க: கூச. சிவாக்.)

பிரகாசியன்—பிரகாசமுடையவன். (சி.சி. வரலாறு.)

பிரகாண்டம்— } மரம். (வைத்தியபரி.)
பிரகாண்டரம்– }

பிரகாமியசித்தியோகம் — கழுத்தமுசற் கண்மட்டாக மேருத்திலேவழியாக அக்கினியை யேற்றி யாருண்டுநோக்கின்மண்ணிலெத்தனை காலம் புதைந்திருந்தாலுமிருக்கும்பிறப்புமறும். (த. நி. போ. கூஎஉ.)

பிரகாமியம் — பிராகாமியம், ஒரு சித்தி. (உ-ம்.)"பரகாயம்"பார்.

பிரகாரம்—1. அடித்தல். (சி. சி. ச: கூடு. சிவாக்.) 2. கோயின்முதலியவற்றின்வீதி. 3. சுற்றுமதில். 4. விதம். (1, 2, 3, 4-வழக்.)

பிரகிருதபிரளயம் — உலகநாசப்பிரளயம். (வழக்.)

பிரகிருதம்—உண்டாக்கப்பட்டது. (வழக்.)

பிரகிருதி — 1. இயல்பு. (வழக்.) அவனு டையபிரகிருதி அவ்வளவு. 2 ஒருவகைச்சந் தம்; அஃது: அடியொன்று இருபத்தொரு அசையுடையதாய் நான்கடிகொண்டு வருவது. (வீரசோ. யாப்பு. கூகூ. உரை.) 3. பிரபஞ்சமூல மாயிருக்குமாயை; அது: மூன்றிலெனன்று. (சி. சி. க: கக. உரை.)

பிரகிருதித்தத்துவம்— குணதத்துவத்திற்கப் பால் நூறுயோசனைகொண்ட பதுமஸ்தாநம். (சித்தா. சாரா. ஞாநபா. உகூ.)

பிரகிருதிநிலையசிரீகண்டர் — சிரீகண்டத் திரயத்திலொருவர்; இவர்: பிரகிருதியினது அக்கிரத்துநிலையர். (சி. சி. க: நுச. ஞாநப்.)

பிரகிருதிமாயை — அசுத்தமாயையது தூல பரிணாமமாய்த்தோன்றுமாயை; இதினின்றுங் குணதத்துவமுதலிய போக்கியதத்துவம் இரு பத்துநாலுந்தோன்றும். (சி. சி. க: கக. சிவஞா.)

பிரகிருதிவிகிருதிகள் — 1. பிரகிருதியினு டைய விகாரங்கள். 2. பகுதிவிகுதிகள். (நன் னூ. பதவி. சூ. உரை.)

பிரதஞ்சம்—ஒருபலம். (உ-ம்.) "பிரகுஞ்ச மொன்றினுக்கொருபாணிதற்கம்புபெய்" (தை ல தைலவ. ச.)

பிரதுடி—காட்டுமல்லிகை. (வைத்தியபரி.)

பிரதத்தம்—மான்கொம்பு. (வைத்தியபரி.)

பிரதோபம்—கோபம். பிர-என்பது பசருக் கம், அதிகமென்னும் பொருளாம்.

பிரசீசந்நகூபம்—கரப்புநீர்க்கேணி. (மணி மே. அரும்பத.)

பிரசீசனை–கேட்டல். (சி. சி.சிவாக்.உரை.) அவையடக்கத்தின்பின்வரலாற்றிற்காண்க.

பிரசீசிந்நம்—வீஞ. (வழக்.)

பிரசீசிநம் — அதர்வணவேத உபநிடதத் தொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.)

பிரசீசினை—பிரசினை.

பிரசகநம்—இலையுணுமிருகம். (உ-ம்.) வங் துழிக்காண்க.

பிரசகம்—பிரசகநம்.

பிரசங்கம்—1. கலத்தல். பிர-உபசருக்கம்.) 2. விரித்துப்பொருளுரைக்கை. 3. வெளிப் படுத்தல், பிரபலியமாக்குதல். (1, 2-வழக்.)

பிரசங்கி — 1. தெரிநிலைவினைப்பகுதி. 2. வியாக்கி. (வழக்.)

பிரசங்கித்தல்–1. விரித்துப்பொருளுரைத்தல். 2. பிரபலியப்படுத்தல். (1, 2-வழக்.)

பிரசங்கை — செய்யத்தக்கன. (உ - ம்.) "வாரப்பிரசங்கை" (விதாந. பஞ்சா. கo.முகம்.)

பிரசண்டம் — 1. வித்தியாகலையில் ராக தத்துவத்திலுள்ள ஐந்து புவனங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) 2. வீரம். (வழக்.) 3. வேகம்.(உ-ம்.)"சண்டப்பிரசண்டவேகமுடன்" (பாரத. இராயசூயம். கஉ.)

பிரசண்டர்–1. இராகதத்துவத்திலிருக்கும் பன்னிரண்டு ருத்திரரிலொருவர். (வி-ணி. உஎச.) 2. சிவலோகபச்சிமதிசை யோலக்கஞ் சேவிக்குந் துவாதசமுக்கிய கணக்கிரகண்ணி யரிலொருவர். (வி-ணி. உசுச.)

பிரசண்டவாயு—பலத்தகாற்று. (வழக்.)

பிரசண்டன் — 1. வலியன். 2. வீரன். 3. வேகி. (1, 2, 3-வழக்.)

பிரசத்தம்—நித்தியம். (வழக்.)

பிரசத்தன்—பாலடை. (வைத்தியபரி.)

பிரசத்தி — 1. கிருபை. பிர என்பது உப சருக்கமென்பர். 2. சம்பந்தம். (சி. சி. சு: கூ. சிவாக்.) 3. வலி. (வழக்.)

பிரசந்நம்—1. காட்சி. 2. தெளிவு. 3. வெளிப்படுதல். (உ-ம்.) "பூசையிற்பிரசந்நமூர்த்தியானவீசாநராகும்" (சிவரக. நந்திகேசுர. கடு.) (1, 2-வழக்.)

பிரசந்நன்—வெளிப்படையாகத் தோற்றப் பட்டவன். (வழக்.)

பிரசந்நை–வெளிப்படுஞ்சத்தி.(சி-லி. ஞாந. சு. உரை.)

பிரசம் — 1. கள். (சூ. நிக. சு: உக.) 2. தேன். (உ-ம்.)"எம்மான்பிரசமலர்ப்பதமல்லாற் பிறிதொன்றுண்டோ" (சிவரக. சிவதன்மா. கசு.) 3. தேனீ. (பிங்கல. உசுஅசை.) 4. வண்டு. (சூ. நிக. சு: சுசை.) 5. வேங்கை.(வைத்தியபரி)

பிரசயம்—1. குவை, கூட்டல். (சி. சி. அ: சு. சிவாக். 2. வேதத்திற்குரியவிசைகளுளொன்று; அது: விலங்கிச்சொல்வது. (பாரத. இந்திர. சுஅ: சடகோப. உரை.)

பிரசவபந்தநம்–பூந்தண்டு. (வைத்தியபரி.)

பிரசவம்—1. சந்ததி. 2. பிள்ளைப்பேறு. 3. பிறப்பித்தல். 4. பிறப்பு. (1, 2, 3, 4-வழக்.)

பிரசவித்தல்—பிறத்தல். (வழக்.)

பிரசா—பிரசை. (வழக்.)

பிரசாசநம் — ஆளுதல். (வழக்குண்டு போலும்.)

பிரசாதக்கிருது — சதருத்திரரிலே குபேர திசையிலிருக்குந் தசருத்திரரிலொருவர். (வி-ணி. உஎo.)

பிரசாதகம் — நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களு ளொன்று. (சி-வி. கிரி. உக. உரை.) [இது குபேரதிக்கிலுள்ள பத்துப்புவனங்களு ளொன் றென விளங்குகின்றது.](சி. சி. அ: எ. மறை.)

பிரசாதம் — 1. அநுக்கிரகம். (சி. சி. அ: சுஅ. சிவாக்.) 2. திவ்விய அமுது. (வழக்.) 3. நிவேதநப்பொருள். (உ - ம்.) "அனையதெம் பெருமான்பிரசாதம்" (சிவரக.தேவிகாட்டியம். கசு.) 4. பிரசாதம். (உ-ம்.) "அட்டகலாப்பிர சாதரூபம்" (சி. சி. பாயிர. க.)

பிரசாதனம்—கொக்கு. (வைத்தியபரி.)

பிரசாந்தன் — 1. காலதத்துவத்திலிருக்கு மோருருத்திரர்.(வி-ணி. உஎச.) 2. விம்பாகமங் கேட்ட ஒருவன். (த. நி. போ. கடுக.)

பிரசாந்தி—அமரிக்கை, சாந்தம். (வழக்.)

பிரசாபகன்—அரசன். (உ-ம்.) வந்துழிக் காண்க.

பிரசாபத்தியம்—1. இரவில்நாழுமெட்டா முகூர்த்தம். 2. பகலில்நாழுமொன்பதாமுகூர் த்தம். 3. பிரமசரியம் நான்குவகையுளொன்று. (சி. சி. அ: கக மறை.) 4 பெண்கள்சுற்றமும் ஆண்கள்சுற்றமும் ஒத்துத்தீமுன்னர்க் கொடுக் குமணம்.. (1,2 வித்தாந.குணகுண.எகு. உரை.)

பிரசாபத்தியலோகம் — பிரசாபதிகளினு டையலோகம். (சி. சி. உ: நுஅ. சிவாக்.)

பிரசாபதி—1. அரசன். பிரசைகட்குத்தலை வன். 2. ஆண்குறி. 3. ஆதிப்பிராமணனுக்குப் பிறந்தவன்; இவனுக்கு அட்டவசுக்கள் பிறந் தார்கள். (வி-ணி. உடுசு.) 4. பிரமன். (2, 4 வழக்.)

பிரசாமம்—சமாதானம், மநவமைதி.(வழக்.) பிர-உபசர்க்கம்.

பிரசாரணம்—விசாரித்தல். (வழக்குண்டு போலும்.)

பிரசாரணை—பிரஸ்தாபம். (வழக்.)

பிரசாரம்–1. விஸ்திரிக்கப்பட்டது. (சி. சி. அளவை. கசு. சிவாக்.) 2. வேங்கைமரம்.(வைத் தியமூ. அக.)

பிரசாரி—வாயுலோகம். (உ-ம்.) வந்துழிக் காண்க.

பிரசித்தம் — 1. அறிவிப்பு. 2. கீர்த்தி. 3. விளக்கம். 4. வெளிப்படை. (1, 2, 3, 4-வழக்.)

பிரசித்தன்– வெளிப்படையாயிருக்கிறவன். (சி. சி. க: கள. ஞாநப்.)

பிரசித்தி—1. புகழ்பரவல். 2. வழக்கும் பரந்துநிகழும்நிகழ்ச்சி. (சைவப்பி. கூடு.)

பிரசிநம்—கேள்வி. (சி. சி. உ: சுஅ. சிவாக்.)

பிரசிதை—வினை. (சி. சி. சு: நு. சிவாக்.)

பிரசுரம்—அறிவிப்பு. (வழக்.)
பிரசுரன்—சுக்கிரன். (பிங்கல. உகஉ.)
பிரசூதம்—பிள்ளைபெறுதல். (வழக்.)
பிரசூதவாயு—கருப்பவாயு. (வழக்.)
பிரசூதி—1. உற்பத்தித்தானம். (சி-லி. ஞான. எ.உரை) 2. ஏகாதசபதிவிரதையருளொருத்தி. (வி-ணி. உகஉ) 3. சுவாயம்புமநுவுக்குச் சதரூபையிடத்துப்பிறந்த பெண்; இவளிடத்தே: சிரத்தை, இலக்குமி, திருதி, துட்டி, புட்டி, மேதை, கிரியை, புத்தி, இலச்சி, வபுசு, சாந்தி, சித்தி, கீர்த்தி, கியாதி, சதி, சம்பூதி, மிருதி, பிரீதி, கமை, சந்நதி, அருகூயை, அருந்ததி, சுவாகை, வசுந்தரை என இருபத்துநாலுபெண்கள் பிறந்தார்கள். (கூர்மபு. தமோ. சூ. உரை.) 4. பிள்ளைபெறுகிறவள். (வழக்.)
பிரசூதிகாவாயு—கருப்பவாயு. (வழக்.)
பிரசூதிகை—பிள்ளைபெற்றிருக்கிறவள்.
பிரசூதை—பிள்ளைபெற்றிருப்பவள் (வழக்.)
பிரசூநம்—1. கனி. 2. புட்பம். (1, 2-வைத்தியபரி.)
பிரசேசரீ—பிரமனுற்சிருட்டிக்கப்பட்ட ஒருவகுப்பார். (சைவப்பி. ருஅ.)
பிரதேசன்—ஒருவாயு. (த. நி. போ. ஙசஉ.)
பிரசேநன்—ஒருவாயு. (வி-ணி. உகருரு.)
பிரசை—1. குடிசனம். 2. பிள்ளை. 3. மெருகன்கிழங்கு. (தைலவ.) (1, 2-வழக்.)
பிரசோதிநி—கண்டங்கத்தரி (வைத்தியபரி.)
பிரசோற்பத்தி, பிரசோற்பதி—வியாழவட்டமாகியஅறுபதுவருடத்தின் ஐந்தாவதாண்டு. (பஞ்சாங்.)
பிரஞ்சம்—மாமூட்டம். (உ-ம்.) "புத்திப்பிரஞ்சம்வாராமற்சிறிதொருவழிகாட்டுக" (சிவசமவாத வுரைமறுப்பு.)
பிரஞ்ஞத்துவம்—உணர்ச்சி. (வழக்.)
பிரஞ்ஞம்—அறிவு. (வழக்.)
பிரஞ்ஞன்—அறிஞன். (வழக்.)
பிரஞ்ஞா—அறிவு. பிரஞ்ஞாபங்கமென்னும் வழக்குரையிற்காண்க.
பிரஞ்ஞாவான்—ஞானமுடையவன். (சி. சி. அ: ருரு. ஞானப்.)
பிரஞ்ஞானம்—சைதந்நியம் (வாசுதே. உகஅ.)
பிரஞ்ஞை—1. அறிவு. 2. மூற்காலத்திலுண்டாகிய வியாபாரத்தை யறியாநிற்குமறிவு. (சி. சி. அ: உஅ. மறை.)
பிரட்சாளநம்—சுத்திசெய்தல். (வி-ணி. சருக.)
பிரட்சேபணம்—மல்யுத்தத்திற்குரிய எண்வகைக்காரணங்களுளொன்று; அது: இழுத்து வீழ்த்துவது. (கூர்மபு. தமோ. கஙு. உரை.)
பிரட்டம்—தள்ளுபடி. சாதிப்பிரட்டமானஞ் ஏனும் வழக்குரையிற்காண்க.
பிரட்டன்—1. புரட்டுக்காரன். (வழக்.)
பிரட்டு—புரட்டு. (வழக்.)
பிரடை—மூறுக்காணி. [தெலுகு.]
பிரண்டாசம்—சுத்தரசம். (வைத்தியபரி.)
பிரண்டை—ஒருகொடி. (வைத்தியபரி.)
பிரணதன்—1. சமர்த்தன். 2. வணக்கமுள்ளவன். (1, 2-வி-ணி.)
பிரணம்—பழமை. (உ-ம்.) வந்துழிக்காண்க.
பிரணயகலகம்—கலவியிற் பிணங்கல். (வழக்.)
பிரணயம்—கலவி. (வழக்.)
பிரணவகலாகலாதீது—நாத விந்து மகார உகார அகாரங்கள். (சி. சி. அ: கஙு. ஞானப்.)
பிரணவம்—அகர உகர மகர அபரவிந்து அபரநாதங்களாகிய பஞ்சாக்கிரம். (சி. சி. அ: ஙு. மறை.) இப்பிரணவம்; சமட்டிப்பிரணவம், வியட்டிப்பிரணவமென விருவகைப்படும். சமட்டிப்பிரணவமாவது ஓம் என்பது; அது: தொகுத்துச்சொல்வது. "தோட்டம்" என்பதுபோல. வியட்டிப்பிரணவமாவது; அகார உகார மகாரமென நிற்பது; அது: பகுத்துச்சொல்வது. "வாழை, சமுசு" என்பதுபோல. (கந். நவ.) இப்பிரணவவரலாற்றை நன்குவிரித்து அபிதானகோசத்திற் கூறியிருக்கின்றார். ஆண்டுக்காண்க.
பிரணவநடம்—கடவுள். (வழக்.)
பிரணிதம்—சொல்லுதல். (சி. சி. அளவை: கஙு. சிவா.)
பிரத்தம்—1. ஓரளவை; அது: குடுவம் நாலு கூடினது. (வேதா. சூ. ஙு. உரை.) 2. விசாலமானவிடம். (பாரத. இந்திரப்பிர. கச.)
பிரத்தாநம்—பிரயாணம். (வழக்.)
பிரத்தாபநம்—நியமித்தல். (வழக்.)
பிரத்தாபனை—வெளிப்படுத்தல். (வழக்.)
பிரத்தாபம்—1. அறிவித்தல். 2. புகழ்ச்சி. 3. வெளிப்படுத்தல். (1, 2, 3-வழக்.)
பிரத்தாரம்—1. தாளப்பிரமாணம் பத்தினொன்று. (பொருட்டொகைநிகண்டிற்காண்க) 2. வடிவு. (சி-லி. கிரி. கூ. உரை.)
பிரத்திகான்மா—கூடஸ்தன். (வேதா. சூ. ருஉ. உரை.)
பிரத்திட்சம்—பிரத்தியட்சம். (வழக்.)
பிரத்திதம்—கேட்கும்பொருள்.
பிரத்தியக்கதரிசநம்—கண்ணுற்கண்ட காட்சி. (வழக்.)
பிரத்தியக்கப்பிரமாணம்—பிரத்தியட்சப்பிரமாணம்.

பிரத்தியக்கம்—காட்சியளவை.

பிரத்தியக்கு—1. அந்தர்முகம். (சி.சி.க:சுச. ஞாந.) 2. மேற்கு. (பிங்கல. கசு.) 3. வேறு. (வழக்.)

பிரத்தியக்குநுபம்—திரும்பியபார்வை. (சி. சி. கக: க. ஞாநப்.)

பிரத்தியக்குநுபி — திரும்பியமுகசிற்சத்தி. (சி. சி. அளவை. சு. ஞாநப்.)

பிரத்தியங்கம் — 1. உடம்பின் அப்பிரதாநமானவுறுப்பு; அவை: மார்புங், கண்டமும், ஸ்தநங்களும், தோள்களும், நாபியும், மத்தகமும், பாதங்களும், அங்குலிகளும், ஊருக்களும், மூழந்தாள்களும். சேணக்கால்களுமாம். (சி. சி. க: சஎ. சிவாக்.) 2. பரதத்தின்பொதுலக்கணங்களுளொன்று. (திருவிளை. கான்மாறி. அ. உரை.)

பிரத்தியச்சேதநம்—பிரத்தியகாத்மஞாநம். (உ-ம்.) "மநோலயத்தைமருவுபோதம்பங்கற்ற பிரத்தியச்சேதநமாகும்" (ஞாநவா. உத்தாலக. கூ.)

பிரத்தியட்சப்பிரமாணம்— பிரத்தியட்சப் பிரமிதியின்கருவி. (சைவப்பி. சு.)

பிரத்தியட்சப்பிரமிதி—இந்திரிய சம்பந்தத்தாற்றோன்றுமறிவு. (சைவப்பி. சு.)

பிரத்தியட்சப்போலி — பித்தம், பலம், தூரம், இருள்முதலிய குற்றங்களோடுகூடிய இந்திரியம். (சைவப்பி. கூ.)

பிரத்தியட்சம்—காட்சிப்பிரமாணம்; அஃது: இந்திரியப்பிரத்தியட்சம், மாநதப்பிரத்தியட்சம், தன்வேதகைப்பிரத்தியட்சம், யோகப்பிரத்தியட்சம் என நான்கு வகைப்படும். (சைவப்பி. சு.)

பிரத்தியபகாரம் — நீமைக்குத்தீமைசெய்தல். (வழக்.)

பிரத்தியபம் — 1. அறிவு. 2. ஆணை. 3. கீர்த்தி. 4. தியாநம். 5. நம்பிக்கை. 6. நிச்சயம். 7. நோக்கம். 8. வழக்கம். (1,2,3,4,5,6,7,8-(உ-ம்.) வந்துழிக்காண்க.)

பிரத்தியபிஞாநம் — மீண்டுணர்வு. (சி. சி. பரப. நிகண்ட. அ. உரை.)

பிரத்தியம்—1. குறுக்கு. 2. விருதி. (உ-ம்.) வந்துழிக்காண்க.)

பிரத்தியயபஞ்சகம்—ஐந்து ஞாநேந்திரியம்; அவை: சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பன.

பிரத்தியயம் — 1. தூலரூபமாய்ப்போக்கிய தசையையடைந்த தர்மாதிகள்; அது: சித்திகள் எட்டு துஷ்டிகள் ஒன்பது அசத்திகள் இருபத்தெட்டு புத்திமாற்றங்கள் ஐந்து என ஐம்பதுவகைப்படும். (சி-லி. ஞாநபா. கசு. உரை.) 2. வடமொழிவிகுதி.

பிரத்தியாகாரம் — சீவவுபாதியைநீக்கிப் பிரபஞ்சவுபாதியைச் சிவசொரூபமாகநோக்கல்; இஃது: அட்டயோகத்தொன்று.(பி.நிக.சஎச.)

பிரத்தியாலீடம்—விற்றெடுத்து அம்பு எய்வார்க்குரிய நால்வகை நிலையிலொன்று; அது: வலக்கான் முன்வைத்து இடக்கான் மண்டலித்துநிற்கு நிலை. (திருவிளை. யானையெய். கூ0. உரை.)

பிரத்தியாபான்மா —ஒவ்வோரான்மா. (சி. சி. க: உகூ. சிவாக்.)

பிரத்தியுத்தரம்— } மறுமொழி. (வழக்.)
பிரத்தியுத்தாரம்— }

பிரத்தியுதவி— } கைம்மாறு. (வழக்.)
பிரத்தியுபகாரம்— }

பிரத்தியும்நன்—விட்டுணுவினுடைய வியூகர் மூவரிலொருவன். (சேதுபு. சக்கரதீர்த். கக. குறிப்பு.) அபிதாநசிந்தாமணியில், கண்ணனுக்குருக்குமணியிடத்திற்பிறந்த புத்திரனென்பர்.

பிரத்தியூடன்—அட்டவசுக்களிலொருவன். (உ-ம்.) "அட்டவசுக்கள்" பார். (அபிதாநசிந்.)

பிரத்தியேகபதாந்நுவயம்—ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பது. (வள். நிகண்ட. பரி. குறிப்பு.)

பிரத்தியேகம் — தனிமை. (வழக்.)

பிரத்தியேகமவத்தாநம் — தனித்தனியிருப்பு. (சி. சி. உ: கூ0. சிவாக்.)

பிரத்தியேகாத்துமன்—கூடஸ்தன். (த.நி. போ. ககக.)

பிரத்தியோகம்—மநவேற்றுமை. (வழக்.)

பிரத்துதம்—உபமேயம்.

பிரத்துதாங்காரலங்காரம்-வருணியமாகிய வோர் வரலாற்றை வருணிக்குங்காலையில், மற்றொரு வருணியமாகிய இட்டமான வரலாறு விளங்குமணி. (குவல. உஅ.)

பிரத்துவஞ்சாபாவம்— } அழிவுபாட்டபா
பிரத்துவமீசாபாவம்— } வம். (பி. வி. ககக. உரை.)

பிரத்யக்—அறிவு. (சி. சி. உ: நிகூ. சிவாக்.)

பிரத்யாநம் — நினைவு (உ-ம்.) வந்துழிக்காண்க.)

பிரதக்—தனி. (சி. சி. அளவை. க.)

பிரதக்கணம்—பிரதக்ஷிணம். (வழக்.)

பிரதக்ஷிணம் — வலம்வருதல். (சி. சி. கo: நி. மறை.)

பிரதக்கு—1. தனிமை. 2. வேறு. (சி. சி. எ: ச. சிவாக்.)

பிரதநம்—படையிலோர்தொகை; அது: வாகிநிமூன்றுகொண்டது. இதனைப்பிரளயமென்பர். (பிங்கல. கசுசசு.)

பிரதநி—அகாகதத்திற்குரிய இதழ் பன்னிரண்டில் இரண்டாமிதழிலுள்ள அக்கரத்தினதிதேவதை. (சி. சி. அ: உக. மறை.)

பிரதனை—பிரதநம்.

பிரதமசிருட்டி—பூருவசிருட்டி. (வழக்.)

பிரதமம்—1. ஆரம்பம். (வி-ணி.) 2. முதன்மை. (1, 2-வழக்.)

பிரதமமகாப்பிரளயம்—ஐவகைச் சங்காரங்களினைந்தாவது; இது: சாந்தியதீதகலையிலடங்கிய தத்துவபுவநங்களின் சங்காரம். இச் சங்காரஞ்செய்பவர் சதாசிவன். (சி. சி. க. குறிப்பு.)

பிரதமமகாசிருட்டி—அநாதிமுத்த பரசிவன் சுத்தமாயையிலிருந்து பொருட்பிரபஞ்சமும் சொற்பிரபஞ்சமுமாயிருக்கின்ற சுத்ததத்துவமைந்தையும் சுத்தபுவநங்களையும் சுத்தபோக்கியப்பொருள்களையும் சுத்த சுத்தாசுத்த அசுத்தாத்துவ வாசகமெல்லாருக்கும் தனித்தனி வேண்டப்படுகின்ற நாதரூபபரதேகங்களையும் சுத்தாத்துவாவிற்குரிய சூக்கும ஸ்தூலதேகங்களையும் சுத்தாத்துவவாசிகளாகிய அணுசதாசிவர் வித்தியேசர் மந்திரர் முதலிய தேகிகளையும் வேதாகமங்களையும்படைப்பது. (சைவப்பி. நுவ.)

பிரதமாவிபத்தி—முதலாம்வேற்றுமை.

பிரதமை — 1. கடிக்காய். (வைத்தியபரி.) 2. முதல். (வழக்.) 3. முதற்றிதி. (பஞ்சாங்.)

பிரதரிசிப்பித்தல்—1. செவ்வேகாட்டுதல். (சி. சி. ஞாநப்.) 2. சொல்லுதல். (சி. சி. அளவை. க. சிவாக்.)

பிரதவேதநா—சூரியனது துவாதச ராட்சதர்களாகிய மெய்காவலருளொருவர். (வி ணி. உசடு.)

பிரதாநம் — 1. கடிக்காய். (வைத்தியபரி.) 2. தலைமைப்பொருள். (பி. வி. உக.) 3. பிரகிருதி. (சி. சி. உ: எசு. சிவாக்.) 4. மூலம், (வழக்.)

பிரதாநன் — 1. முதன்மையாகிய தாநவதிகாரி. (வழக்.)

பிரதாநி—முக்கிய அதிகாரி, (வழக்.)

பிரதாநிகம்—அதிகாரம். (வழக்.)

பிரதாபதி — பாண்டு, பிரதைக்குநாயகன். (பாரத. சம்பவ. உறு.)

பிரதாபம் — 1. பிரகாசம். (உ-ம்.) "திகழ் பிரதாபமௌலி" (சேதுபு. வேதாளவரத. சக.) 2. வீரம். 3. வெப்பம். (1, 2-வழக்.)

பிரதாபி—பிரகாசரூபி. (உ-ம்.) "சிவஞானந்தப்பிரதாயியானசித்து" (இவ்வுதாரணவிடம் விளங்கவில்லை.)

பிரதாரம்—கடத்தல். (வழக்.)

பிரதாநம் — பிரகிருதிதத்துவம். (ஞாஞமிர்தம்.)

பிரதி—வேறுனது, எதிராயுள்ளது. (வழக்.)

பிரதிக்கிராகம்—1. உபகாரம். (வி-ணி.) 2. ஏற்றல். (த. நி. போ. உசு.)

பிரதிக்கிராகிப்போர் — தாகம்வாங்குவோர். (சி. சி. உ: கக. சிவாக்.)

பிரதிக்கிணை—நேர்த்திக்கடன். (வழக்.)

பிரதிகம்—அவல். (வைத்தியபரி.)

பிரதிகாசம் — பரிகாசம். (வழக்குண்டு போலும்.)

பிரதிகாதம்—மோதுதல். (உ-ம்.) வந்துழிக் காண்க.)

பிரதிகாலன் — சதருத்திரரிலே குபேரதிசையிலிருக்குந் தசருத்திரரிலொருவன். (வி-ணி. உஎ0.)

பிரதிகிருதி—பதிற்செய்தல். (வழக்.)

பிரதிகூலம்—1. எதிர். 2. மாறுபாடு. (1, 2-வழக்.)

பிரதிகை — ஒரு வீணை; இது: தும்புருவுக்குரியது. (வி-ணி. உஎ0.)

பிரதிசங்கிதாக்கிரமம்—} ஒரு விடயத்தை
பிரதிசங்கிதைமுறை—} வேறுவேறு வகுத்துக்கூறுமுறை. (சிவஞாநபோதப்பாஷ்ய மூலவுரை.)

பிரதிசந்தாநம்—துதி. (வழக்.)

பிரதிசிதுவை—உண்ணு. சிதுவை-நா.

பிரதிஞ்ஞாகாரி—தோல்வித்தாந மிருபத்திரண்டுவகையுள் முதலாவது; அது: பிரமாணம் முதலியவைகளாலே சாதிக்கத்தக்கதென்று தன்னுல் விரும்பிச்சொல்லப்பட்ட பொருளைச் சாதித்துமுடியாது அப்பொருட்குக் கேடுறுமாறு மாறுபேசுதல், பிரதிவாதிகூற்றுக்களை அங்கீகரித்துக்கொண்டு தன் கொள்கைகளை விடுதல். (சி. சி. அளவை. மறைஞா. உரை.)

பிரதிஞ்ஞாசந்நியாசம் — தோல்வித்தாநம் இருபத்திரண்டில் நாலாவது; அது: தன்னுலே கூறப்பட்டமேற்கோள் பிரதிவாதியாலேமறுக்கப்பட்டுழி, அதனைமுற்றும் விட்டுவிடுதல். (சி. சி. அளவை: மறைஞா. உரை.)

பிரதிஞ்ஞாந்தரம்—தோல்வித்தாந மிருபத்திரண்டுவகையுளிரண்டாவது; அது: தன்னுலே முன்னர்க்கூறப்பட்ட பிரதிஞ்ஞை, பிரதிவாதியாலே மறுத்துரைக்கப்பட்டுழி அதனைச்சாயாமல் வேறொரு பிரதிஞ்ஞையைக் கூறுதல் (சி. சி. அளவை: மறைஞா. உரை.)

பிரதிஜ்ஞாவிரோதம் — தோல்வித்தாநம் இருபத்திரண்டுவகையுள் மூன்றாவது; அது: தன்னுலேசொல்லப்பட்ட மேற்கோளுக்குச்சம் பந்தமில்லாத வேறேரேதுவினைக் கூறுதல். (சி. சி. அளவை. மறைஞா. உரை.)

பிரதிஜ்ஞை—மேற்கோள். (அளவை. மறைஞா. உரை.) பக்கத்தைச் சாத்தியமுடையதாக வுணர்த்துவது என்பதாம்.

பிரதிட்டம்—1. தாபநம். (வீ-னி.) 2. வியூகத்தின் மூப்பதுவிரியுளொன்று. (வள். எசுள. பரி. குறிப்பு.)

பிரதிட்டாகலே—பஞ்சகலேயி லொன்று; அஃது: அப்புதத்துவமுதல் பிரகிருதியீருக இருபத்துமூன்று தத்துவங்களே யுடையதாகி யும், சீகண்டபுவநமுதல் அமரேசபுவநமீருக ஐம் பத்தாறு புவநங்களேயுடையதாகியும், விட்ணு வையதிதெய்வமாயுடையதாகியும், வாமதேவம் சிரசுஎன்னு மிரண்டுமந்திரங்களேயுடையதாகி யும், மகேசுரனென்னும்பதமுதல் அரூபின் அரூபின் என்னும் பதமீருக இருபத்தொரு பதங்களேயுடையதாகியும், ளகாரமுதல் டகார மீருக இருபத்துநாலெழுத்துக்களேயுடையதா கியும் இருப்பது. (உ-ம்.) "வந்திமெந்திரமிர ண்டுபெதங்கண்மூவேழ்வந்நங்கணுலாறுபுரமைப் பத்தாறு-தந்திடிந்தத்துவங்க ளிருபத்துமூன்று தரும்பிரதிட்டாகலேமாலதிதெய்வந் தானும்" (சி. சி. அ: எ. மறை.)

பிரதிட்டேசன்–பிரதிட்டாசத்திக்குச் சத்தி மானுயிருக்கிறசிவன். (சி. சி. அ: உ. சிவாக்.)

பிரதிட்டை—1. ஒரு சத்தி. 2. சாந்தியாதீத கலேயில் சத்திதத்துவத்திலிருக்கும் ஐந்து புவ நங்களுளொன்று. (சி-லி. ஞிசி. உக. தாற்.) 3. சுவாதிட்டாநத்திற்குரிய பத்மதளம் ஒன்றி லிருக்கும் வ என்னுமட்சரத்தினதிதேவதை. (சி.சி.அ:உரை.) 4. தாபநம். (வழக்.) 5. பஞ்ச கலேகளுளொன்று. (சி. சி. அ: எ. மறை.) [தன்னையடைந்த ஆன்மாக்கட்குச் சங்கற்ப விசற்பங்களே விசேடித்து நிலேநிறுத்தலாற் பெற்றபெயர்.]

பிரதிதிநம்—நாடோறும். (வழக்.)

பிரதிநிதி—பதிலாகவற்பட்டவன். (வழக்.)

பிரதிபதம்—பரியாச்சொல். (வழக்.)

பிரதிபந்தகம்—கட்டுப்பாடு. (வழக்.)

பிரதிபந்தத்திரயம்–பூதப்பிரதிபந்தம், வர்த் தமாநப்பிரதிபந்தம், ஆகாமியப்பிரதிபந்தமென் பன. (வாசுதே. கசசு.)

பிரதிபந்தம்–1. கட்டுப்பாடு. 2. பூர்வகாரிய மும், இனிமேல்நடக்குங்காரியமும், இப்போது நடக்குங்காரியமும் பூர்வப்பழக்கம்வாராமல் சிந் தனேசெருகிறது. (வாசுதே. கo௧.)

பிரதிபலித்தல் — சாயைதோன்றல். (கைவல். தத்துவவி. ரூஉ. உரை.)

பிரதிபாத்தியம்–அறையப்படல்.(வேதா.சூ. கூ. உரை.)

பிரதிபாத்தியர் — சித்தாந்தப்படித்தப்பட்ட வர். (சி. சி. பாயிர. உ. சிவாக்.)

பிரதிபாதகம் — காரியங்களேப்பிறப்பிக்கு மது. (பௌட்.)

பிரதிபாதநம் — சொல்லுதல். (சி, சி. டுடு: அ. சிவாக்.)

பிரதிபாதிகம்—அறையுந்தன்மை. (வேதா. சூ. கூ. உரை)

பிரதிபாதிதம்—சொல்லப்பட்டது. (சி. சி. டுடு: அ. சிவாக்.)

பிரதிபாலிகசீவன்–தைசதன். (த.நி. போ. கo௧.)

பிரதிபாவக்பாவம்–சொல்லுகிறது. (சி. சி. பாயிர. ரூ. சிவாக்.)

பிரதிபிந்நம் — ஒவ்வொன்றும் வேறுயிருத் தல். (சி. சி. உ: அள. சிவாக்.)

பிரதிபிம்பம் — கண்ணுடிமுதலியவற்றிற் றேன்றுநிழல். (வி ணி.)

பிரதிபுருடபிந்நம் — ஒவ்வொரு புருடனுக் கும் வேறுயிருத்தல். (சி. சி. வரலாறு.)

பிரதிபேதநம்—பிரித்தல். (வழக்.)

பிரதிபை—மூக்காலத்தையுமிருந்திருப்ப தாகிய பிரஞ்ஞை. (சி. சி. ச: உஅ. மறை.)

பிரதிபோதம் – கற்பித்தல். (வழக்.)

பிரதிமாநம் — யூகம்கொம்பினடு. (சூ.நிக. ரூ: எ.)

பிரதிமை—விக்கிரகம். (வழக்.)

பிரதியத்தநம் — 1. எதிரிடை. 2. சிறைப் படுத்தல். 3. பழிவாங்குதல். 4. விருப்பம். இவற் றிற்குதாரணம் வந்தழிக்காண்க.

பிரதியுபகாரம்—பிரத்தியுபகாரம். (வழக்.)

பிரதியோகம்—எதிரிடை. (வழக்.)

பிரதியோகி — 1. எதிர். (சி. சி. உ: டுஅ. சிவாக்.) 2. எதிரி. (சி. சி. ரூ: ச. சிவாக்.)

பிராதிராத்திரம்—இராவுக்கிரா. (வழக்.)

பிரதிரூபம்—பிரதிமை. (வழக்.)

பிரதிலோமகன்—பிரதிலோமன். (வழக்.)

பிரதிலோமர் — இழிந்தவருணத்தாடவன் உயர்ந்தவருணத்துப்பெண்ணேப்புணரப் பிறந் தவர்; இவர்: சூதன், மாகதன் வைதேககன், அயோகவன், க்ஷத்தா, சண்டாளன்என அறு வகையர். (சைவச.)

பிரதிலோமன்—நாற்குலத்தில் இழிகுலத் தாணு முயர்குலப்பெண்ணுங்கூடிப் பெற்ற

ள்ளை. (சூ. நிக. உ: சு0.)

பிரதிவாதி—எதிர்வாதி. (வழக்.)

பிரதிவிடயம்—விடயந்தோறும். (சி. சி உ: சுக. சிவாக்.)

பிரதிவிம்பம்–பிரதிபிம்பம், கண்ணுடிமுத லியவற்றிற்றேன்றும் வடிவம். (வழக்.)

பிரதிவிம்பவாதி — சூரியன் கடசலத்தில் பிரதிவிம்பம்போலப் பிரமமும் தேகோபாதிக ளாகியபேதத்தால் நாகாவாய்த்தோன்றிச் செக மாமென்று சொல்லுகிறவன். (த.நி.போ.கஎ.)

பிரதிவிம்பித்தல் — போலியுருத் தோற்று தல். (வழக்.)

பிரதீதி—அறிவு. (சி. சி. உ: நுசு. சிவாக்.)

பிரதீபநிருவாணவாதி — கந்தமைந்துமறக் கெடுகைமுத்தியென்பவன். (சி சி. அ: கஉ. ஞாநப்.)

பிரதீபாலங்காரம்—எதிர்நிலையணி; அது: பிரசித்தமான உவமானத்துக்கு எதிராக உவ மேயத்தன்மை கூறுதல். (குவல. சு.)

பிரதீரம்—கரை. (வழக்.)

பிரதேசம் — 1. அந்நியதேசம். 2. இடம். 3. தேசம். (சி. சி. சு: ககூ. மறை.) (1,2-வழக்.)

பிரதேசன்—உபஸ்தமாகியகன்மேந்திரியத் தின் தேவதை. (த. நி. போ.)

பிரதை–குந்திதேவி. (பாரத. சம்பவ. உநு.)

பிரதோடகாலம்–திரயோதசிதிதியிற் பொ முதத்தமிக்குமுன்மூன்றேமுக்காநாழிகைதொ டங்கி அத்தமித்து மூன்றேமுக்காநாழிகைபரி யந்தமுள்ளநேரம். (பிரமோத். பிரதோடமகி மையிற் காண்க.)

பிரதோடம்—பிரதோடகாலம். (உ–ம்.) "பங் தந்தீர்பிரதோடத்தின் பூசையின் பலனும்" (பிர மோத். பஞ்சாட். நுி.)

பிரப்பங்கோரை—ஒருபுல். (வழக்குண்டு.)

பிரப்பம்பாய் — பிரம்பினுறச்செய்த பாய். (சூ. நிக. எ: நுநு.)

பிரபு — 1. சு று ணி ஒவ்வொன்றதாகக் கொள்கலத்திற் பல்லுணக்கள் பரப்பிவைப்பன வாம்.(சூ. நிக. சு: கஅ.) 2. பேருண்டி. (சூ. நிக. சு: உகூ.)

பிரபஞ்சத்துவயம்—சாஸ்திரப்பிரபஞ்சம், அசாஸ்திரப்பிரபஞ்சம் என்பன; அவற்றுள்: ஆத்துமப்பிரமவிசாரமே சாஸ்திரப் பி ர ப ஞ் ச மாம். அது: ஞாநாதிசாதநத்தால் ஆத்துமசா க்ஷாத்காரமானதற்கு மேல்விடத்தக்கது. அசா ஸ்திரப்பிரபஞ்சம் தீவிரமென்றும், மந்தம் என் றும் இருவகைப்படும். அவற்றுள் தீவிரப்பிர பஞ்சமாவது காமக்குரோதிகமாம். மந்தப்பிர பஞ்சமாவது மநோகற்பிதகமாம். (வி–ணி.)

பிரபஞ்சதை—பிரபஞ்சத்தன்மை. (சி. சி. கo: ச. சிவாக்.)

பிரபஞ்சநன்—காற்று. (சூ. நிக. க: சஎ.)

பிரபஞ்சம்—உலகம். (வழக்.)

பிரபஞ்சமூலம்—மூலப்பிரகிருதி.

பிரபஞ்சவாதனை—இலௌகிகாப்பியாசம். (வழக்.)

பிரபஞ்சவாழ்வு — இலௌகிகவாழ்க்கை. (வழக்.)

பிரபஞ்சவியாபாரம்–இலௌகிககாரியம். (வழக்.)

பிரபஞ்சவிநத்தி — மாயாகாரியவிருத்தி, உலகச்செய்கை.

பிரபஞ்சன்–மனமாதி அந்தக்கரணங்களைச் சேட்டிப்பிக்கிற சீவசம்பந்தவாயுக்கள் நான் கனுளொன்று. (த. நி. போ.)

பிரபஞ்சி–பிரபஞ்சத்தையுடையது. (சி. சி. உ: நுo. ஞாநப்.)

பிரபத்தி—மார்ச்சாலசிசுவைப்போலத் தன் செயலறச்சிவன்வழித்தாநிற்கை. (சி. சி. கo: க. சிவாக்.)

பிரபதநம்– விழுதல். பிர-உபசருக்கம்.

பிரபந்தங்கள்தொண்ணூற்றறு—தொண் ணூற்முறுவகைப் பிரபந்தங்கள்; அவை: சாத கம், பிள்ளைக்கவி, பரணி, கலம்பகம், அகப் பொருட்கோவை, ஐந்திணைச்செய்யுள், வருக் கக்கோவை, மும்மணிக்கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அநுராகமாலை, இரட்டைமணி மாலை, இணைமணிமாலை, மூவ்மணிமாலை, நான் மணிமாலை, நாமமாலை, பலசந்தமாலை, பன்மணி மாலை, மணிமாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச் சிமாலை, வ ரு க் க மா லை, மெய்க்கீர்த்திமாலை, காப்புமாலை, வேனின்மாலை, வசந்தமாலை, தா ரகைமாலை, உற்பவமாலை, தானைமாலை, மும் மணிமாலை, தண்டகமாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக்கரந்தைமஞ்சரி, போர்க்கெழுவஞ்சி, வரலாற்றுவஞ்சி, செருக்களவஞ்சி, கா ஞ் சி மாலை, நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பை மாலை, வாகைமாலை, வாதோரணமஞ்சரி, எண் செய்யுள், தொகைநிலைச்செய்யுள், ஒலியலந் தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, உலா, உலாமடல், வ ள மடல், ஒருபாவொருபஃது, இருபாவிருபஃது, ஆற்றுப்படை, கண்படை நிலை, துயிலெடைநிலை, பெயரின்னிசை, ஊ ரின்னிசை, பெயர்நேரிசை, ஊர்நேரிசை, ஊர் வெண்பா, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கம்பத்து, தசாங்கத்தயல், அரசன்விருத்தம், நயநப் பத்து, பயோதரப் பத்து, பாதாதிகேசம், ஒ கசாதிபாதம், அலங்

காரபஞ்சகம், கைக்கிளை, மங்கலவள்ளை, தூது, நாற்பது, குழமகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறிவுறூஉ, வாயுறைவாழ்த்து, புறநிலைவாழ்த்து, பவனிக்காதல், சூறைத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு, ஊசல், எழுகூற்றிருக்கை, கடிகைவெண்பா, சின்னப்பூ, விருத்தவிலக்கணம், மூதுகாஞ்சி, இயன்மொழிவாழ்த்து, பெருமங்கலம், பெருங்காப்பியம், காப்பியம் என்பனவாம். இத் தொண்ணூற்றாறு பிரபந்தங்களின் விவரத்தை அப்பெயர் முதலெழுத்தைக்கொண்டு அகராதிமுறையாகப்பார்க்கில், இத்தமிழ்ச்சொல்லகராதியிற் காணலாம்.

பிரபந்தம்—தொடர்பு.

பிரபல்லியம்—பிரபலம். (வழக்.)

பிரபலசுநுத்தி—உபநிடதம். (சைவச. ஆசிரிய. உக. உரை.)

பிரபலம்—பிரசித்தம். (வழக்.)

பிரபலன்—பேருயர்ந்தவன். (வழக்.)

பிரபலியம்—பிரபல்லியம். (வழக்.)

பிரபவ—வியாழவட்டமாகிய அறுபது வருடங்களிலேமுதலாவதாண்டு. (வருஷாதிநூல்.)

பிரபவம்—ஆதாரம். (உ-ம்.) வந்துழிக்காண்க.)

பிரபா—1. சூரியன்றுவாதசகலையிலொன்று. (வீ-ணி.) 2. தண்ணீர்ப்பந்தல். (உ-ம்.) "பிரபாதடாகாதிக்கிரியாசம்ஸ்காரங்களும்" (சி. சி. உ: நிஅ. சிவாக்.)

பிரபாகரம் — 1. சைமினிசூத்திரங்கட்குச் சபரமுனிவராற்செய்யப்பட்ட பாடியமதம் பற்றிப் பாட்டாசாரிய மாணாக்கனாகிய பிரபாகரன் செய்தவழிநூல். (சிவஞாந.பா.) 2. மீமாஞ்சை மதம் இருவகையுளொன்று; அது: கன்மஞானசத்தின் அபூருவமென ஒன்று தோன்றிநின்று பயன்கொடுக்குமென்றும், வைசேடிகம்போலப் பாடாணம்போற்கிடப்பதே முத்தி யென்றுங் கூறும். (சிவஞாந. பா.) [பிரபாகரன் என்பவனுற் சொல்லப்பட்டமையின் பிரபாகரம் என்னும் பெயர்த்து.]

பிரபாகரன் — 1. ஒரு நூலாசிரியன். 2. சூரியன். ஒளிக்கு ஆதாரமாயிருப்பவன் என்பதாம். 3. வேதமே பிரமமென்றும், சமாதியில் மண் சிலேபோலிருக்கவேண்டுமென்றுஞ்சொல்லுகிறவன். (சி. சி. அ: கடி. மறை.)

பிரபாகீடம்—மின்மினி. (வைத்தியபரி.)

பிரபாசம் — பிரதிட்டாகலையிலப்புதத்துவத்திருக்கும் எட்டுப்புவனங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.)

பிரபாசன்—1. அட்டவசுக்களிலொருவன். (பொருட்டொகைநிகண்டிற்காண்க.) 2. விச்சுவகன்மன்றந்தையும் யோகசித்தியின் நாயகனுமானவன். (வி-ணி. அபிதாநசி.)

பிரபாநரீ—வித்தியாதத்துவத்திருக்கு மாசாரிய தசகரிலொருவர். (வி-ணி.)

பிரபாவம் — 1. பிரகாசம். (வி-ணி.) 2. மகிமை. (சி. சி. உ: சுருபி. சிவாக்.)

பிரபாவர் — சிவலோகத்துத்தரதிசை யோலக்கஞ்சேவிக்குந் துவாதசமுக்கிய தேவதைகளிலொருவர். (வி-ணி.)

பிரபு—பெருமையிற்சிறந்தோன், தலைவன்.

பிரபுகீனர்—நியதிதத்துவத்திலிருக்குமோருருத்திரன். (வி-ணி.)

பிரபுத்தர் — காலதத்துவத்திருக்குமோருருத்திரர். (வி-ணி.)

பிரபுத்தனம்—மேம்பாடு. (வழக்.)

பிரபுத்துவம்—பிரபுத்தன்மை. (வழக்.)

பிரபுலிங்கலீலை—ஒரு நூல்; இது: சிவப்பிரகாசரென்பவராற் செய்யப்பட்டது.

பிரபூதி — சதருத்திரரி லிந்திரதிக்கினிருக்குந் தசருத்திரரிலொருவன். (வி-ணி.)

பிரபேதம்-விதம். (வழக்.) பிர-உபசருக்கம்.

பிரபை—1. ஒளி. 2. திருவாசி. (1, 2-வழக்.)

பிரபோதசந்திரோதயம்—ஒருநூல்; இது: தமிழில் திருவேங்கடசாமியென்பவராற் செய்ததத்வேதாந்தநூல். (அபிதாநசி.)

பிரபோதநம்—போதித்தல். (வழக்.)

பிரபோதம்—அறிவு. (வழக்.)

பிரபோதிகை — போதிப்பது. (சி. சி. உ: க. ஞாநப்.)

பிரம்பம்—கோவை. (வைத்தியபரிபா.)

பிரம்பு—1. அரிசி. (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. பிரப்பங்கிழங்கு. (தைல. தைலவ. சுருபி.) 3. பிரம்புக்கொடி. (வைத்தியபரி.)

பிரமக்கியாநம் — பிரமஞாநம். (வைத்தியபரிபா.)

பிரமக்கியாநி—பிரமஞாநி. (வழக்.)

பிரமக்கிரந்தி — ஒருவகைமுடிச்சு; அது: பிராமணரது பூணூலினுவே முடியுமுடிச்சு. (சைவச. ஆசாரிய. சுரு. உரை.)

பிரமகத்தி — பிராமணக்கொலை. (உ-ம்.) "ஏமலிசிலையிராமற்கிராவணப்பிரமகத்தி" (சேதுபு. சேதுசரு. க.)

பிரமகபாலம்—பிரமன்றலையோடு.(வழக்.)

பிரமகற்பம் — பிரமன்வாழ்நாள்; அஃது: ஆயிரங்கோடாகோடிவருடம். பூரியம்பத்துக்கொண்டது பிரமகற்பமென்பர். (பிங்கலநிகண்டில்.)

பிரமகன் — மூர்த்தியாதிபிரமசுவரூபி. (சி-லி. ஞாந. உ.) (மூர்த்தியாதி பிரமம் என்

தது: மூர்த்திப்பிரமம், தத்துவப்பிரமம், பூதப் பிரமம், பிண்டப்பிரமம், கலாப்பிரமம், பதப் பிரமம் என்பனவாம்.)

பிரமகாதகன்—பிராமணக்கொலைபாதகன். (வழக்.)

பிரமகாயத்திரி — ஒருமந்திரம். (உ - ம்.) "மன்னியமூச்சவித்துமுக்காற் பிரமகாயத்திரி யைமநத்திஞேதி" (காசிகா. இல்லொ. கூகூ.)

பிரமகீதை—பிரமன்செய்த உபநிஷத். தமிழில்-தத்துவராயர் மொழிபெயர்த்துக்கூறினர். (அபிதாநசி.)

பிரமகுலம்—பிராமணசாதி. (வழக்.)

பிரமகைவர்த்தநம்—சூரியபுராணம். (உ-ம்.) "இரவிதன்கதைபிரமகைவர்த்தமாம்" (கந்தபு. பாயிர. ருடு.)

பிரமசம்புபத்ததி – பதினெண் பத்ததியில் ஒருவகைப்பத்ததி. பத்ததி-ஒழுங்கு.)

பிரமசரிதன்—பிரமசாரி. (வழக்.)

பிரமசரியம் — நால்வகையாச்சிரமங்களுள் முதலாவது; அது: நைட்டிகம், பௌதிகமென விருவிதமாம். (சி. சி. அ: கக. மறை.)

பிரமசாபாலம் — உபநிடதத்திலொன்று. சாபாலமென்றும் பெயர். (அபிதாநசி.)

பிரமசாயை—பிரமகத்தி. (உ-ம்.) "வலாரி தன்னைப்பிடித்ததுபிரமசாயை" (திரு வி ளை. இந்திரன்பழிதீர்த். ருஅ.)

பிரமசாரி — 1. பிரமசரியமதநட்டிப்போன். 2. வீடுமன். (சூ. நிக. உ: கசு.)

பிரமசாவர்ணி—கo-ஆம் மநு. (அபிதாநசி.)

பிரமசூத்திரம் — வேதாந்தாந்த சூத்திரம்; இது: வியாசர்செய்தது. (அபிதாநசி.) 2. முப்புரிநூல். மந்திரத்துடன் அணியுநூல்என்பது கருத்து. பிரமம்-மந்திரம்.

பிரமசைதந்நியம்—1. கடவுள். 2. பிரம ஞாநம். (1, 2-வழக்.)

பிரமஞாநி—தேவஞாநமுள்ளோன். (வழக்.)

பிரமண்டை—பேய்மிரட்டி. (வைத்தியபரி.)

பிரமணேசன்—ரௌரவாகமங்கேட்ட ஒருவன். (த. நி. போ.)

பிரமத்தம்—மதிமயக்கம். (வழக்.)

பிரமத்தி—பிரமகத்தி. பிரமத்தி என மருவியது. (வழக்.)

பிரமதகணம் — சிவலோகத்திலே மகாதேவன்கோவில் வடக்குவாசற்காவலனுகிய மகாகாளனுக்கூடியிருக்குங்கணம். (உ-ம்.) "கறை மதியெயிற்றுச்சங்குகந்நன்முன்னு ன வென்றிப்-பிரமதகணமும்'(திருவிளை.மெய்க்கா.உரு)

பிரமதண்டம்—1. ஆதித்தியனின்றநாளுக்குப் பதினேந்தாநாள். (உ - ம்.) "பாகஞ்செறி சுடர்மண்ணியநாளாதியேழுபத்தும்— மோகந் தரும்பதினேந்திருபத்தொன்றுமூன்முறையே-பூகம்பழுற்கப்பிரமதண்டங்கொடியென்றுபொல்லா - யோகங்கணல்வினேக்காகாதென வுரையொண்ணுதலே" (விதாந. குணு. ஙசு.) 2. குருக்கு. (மலையக.)

பிரமதண்டு—1. ஒருபூண்டு; அது: குருக்கு. (வைத்தியமூ. அக.) 2. பிரமதண்டம். அம்சாரியையின்றி வந்தது.

பிரமதநம்—1. கடைதல். 2. கொலை. (1,2-வழக்.)

பிரமதம்—1. சந்தோஷம். 2. வெறி. (1,2-வழக்.)

பிரமதாயம் — பிராமணருக்குக்கொடுக்கும் நன்கொடைப்பொருள். (பதிற்றுப்பத்து.)

பிரமதாலயம்—நரகம் (வைத்தியபரி.)

பிரமதிநம்—இரண்டாயிரந்தேவயுகங் கொண்ட காலம். (சி-லி. ஞாந. உசு. உரை.)

பிரமதீதம்—தயிர். (வைத்தியபரி.)

பிரமதீர்த்தம்-சிதம்பரதசதீர்த்தத்தொன்று; இது: திருக்கோயிலுக்கு வடமேற்கே திருக்காளஞ்சேரியில் உள்ளது. (கோயிற்பு.)

பிரமதேவன்–பிரமன். (உ-ம்.) "பிரமதேவனுறுமிடமுறைவளாங்குப்பிரமனுமுவந்துவாழும்" (மச்சபு. ஆதிசி. சு.)

பிரமநாடி—சுழுமுகைநாடி. (உ-ம்.) "கோதறுமக்தநாடியையே-தென்பொலிபிரமநாடியென்றுரைப்பர்" (சூத. ஞாநயோ. கக: எ.)

பிரமப்பிரளயம்—பிரமதேவருடையநாசாவஸ்தாகாலம். (வாசுதேவ.)

பிரமப்பொழுது — பிராமிமுகூர்த்தம். (உ-ம்.) "பிரமப்பொழுதத்திலெழுந்துபிராணியுண்ணி" (சேதுபு. அமுததீர். கக.)

பிரமபத்திரம்– } பிரமபத்திரி, புகையிலை.
பிரமபத்திரி— } (வைத்தியமூ. அக.)

பிரமபதம் – } பிரமலோகம். (வழக்.)
பிரமபதவி– }

பிரமபிங்கை—வெளளரி. (வைத்தியபரி.)

பிரமபுரம் — சீகாழிப்பதி. (திருஞானசு. தேவார. ஏகபாதம். க.)

பிரமபுராணம் — பதினெண்புராணங்களுளொன்று; அஃது: உலகிருட்டியையும், மநுவந்தரங்களையும், சூரியசந்திரகுலத்து அரசர்களையும், சூரியன்பொருட்டும், சிவபெருமான் பொருட்டும், சகநாதர்பொருட்டும்உள்ள திருக்கோயில்களையும், திருநந்தவநங்களையும், சகநாதமான்மியத்தையும் உணர்த்துவது. (கந். நவ.)

பிரமம்—1. அக்கினி. 2. ஆதித்தன். 3. இருடி. 4. உபநிடதம் தூற்றெட்டிலொன்று. 5. கலக்

கம். (சூ. நிக. அ: நிநி.) 6. சந்திரன். 7. சிவன். 8. சுத்தசிவமத்தியநிர்த்தசிவம். (சி. சி. கஉ: எ. ஞாநப்.) 9. சுத்தமாயை (சி. பி. கை) 10. திருமால். 11. நடி. (சூ. நிக. சு: கூசு.) 12. பஞ்சமாவெச்சத்தொன்று; அது: வேதமோதல். 13. பதினெண்புராணங்களி லொன்று. 14. பிரமமணம். (இலக்கணவி. சஅநி. உரை.) 15. பிரமன். 16. மந்திரம். 17. முத்தி. 18. யாகம். 19. வேதம். உதாரணங்காட்டாதொழிந்தன வற்றிற்கு (சூ. நிக. கக: ரகரவெ. கஅ-ல்காண்க. (4, கசு. அபிதாநசி.) அபிதாநகோசத்தில், ஏகமாய்ச் சச்சிதாநந்தமாய் உலகந்தோன்றி யொடுங்குதற்கிடமாயுள்ள கடவுளென்பர்.

பிரமமணம்—எண்வகைமணங்களுளொன்று; அஃது: ஒத்தகோத்திரத்தாளும் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங்காத்தால் அவற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளாய்ப் பூப்புவுய்திய வளைப்பெயர்த்து இரண்டாம் பூப்புவுய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக்கொடுப்பது. (உ-ம்.) "கயலேர்மலருண்கண்கங்நிப்பூப் பெய்தி-யயல்பேரணிகலன்கள்சேர்த்தி-யியலினிரலொத்தவந்தணற்குநீரிற்கொடுத்தல்-பிரமமணமென்னும்பெயர்த்து" (இலக்கணவி. சஅநி. உரை.)

பிரமமீமாஞ்சை — உபநிடதங்களை யுற்றுநோக்கி வியாசமுநிவரியற்றிய சூத்திரரூபமாகிய ஒரு வேதாந்தநூல். (சைவச. ஆசாரிய. உக. உரை.)

பிரமயுனி — பதினெண்சித்தரி லொருவர். (அபிதாநசி.)

பிரமழலி—பிரமி. (மலையக.)

பிரமயாகம்—ஐவகையாகங்களி லொன்று; அது: வேதமோதல். (வள். அள. பரி. குறிப்பு.)

பிரமரி — ஆதிப்பிரமத்திற்கு நினைவாற்றோன்றிய பிரமர்பதின்மர் என்பர். (பரிபாடலுரை.)

பிரமாந்திரம் — உச்சித்துவாரம்; இஃது: அர்த்தசந்திரநிரோதினி நாதநாதாந்தகலைகள் நான்கிற்கும் ஸ்தாநம். சத்திதத்துவம்வரையில் வியாப்தி. (சி-லி. கிரி. கo.)

பிரமரம்—வண்டு. (சூ. நிக. கூ: சுசு.)

பிரமாசனர்—தபோதனர். (சிந்தா.)

பிரமராட்சதன்— } அவமரண மடைந்த
பிரமாட்சதை— } பிராமணனுவி யெடுக்குமிராட்சதப்பேய்.

பிரமராட்சதைழலம்— காசிவேர். (வைத்தியாநுபந்த. அக)

பிரமரி — 1. புறக்கூத்திற்குரிய வாடலு ளொன்று. (சிலப்.) 2. சுழலல். (சூ.நிக.கூ:சக.)

பிரமலோகம்—சத்தியலோகம்; இது: மேலுலகத்துளொன்று. (அபிதாநசி.)

பிரமவான் — சீவன்முத்தர் நால்வகையரி லொருவர்; இவர்: சமாதிஞாநத்தையடைந்திருந்து தேசசஞ்சாரஞ்செய்தற் பொருட்டு உணவுமுதலியவற்றை நினைப்பவர். (கைவல். தத்துவ. கூக. உரை.)

பிரமவரிட்டன்—நால்வகைச் சீவன்முத்தரி லொருவர்; இவர்: சமாதியிலதிதமானவர். (கைவல். தத்துவ. கூக. உரை.)

பிரமவரியான்—சீவன்முத்தர்நால்வகையரி லொருவர்; இவர்: சமாதிஞாநத்தை யடைந்திருந்து சிடன்முதலிய வேற்றோராலுணர்பவர். (கைவல். தத்துவ. கூக. உரை.)

பிரமவருத்தநம்—செம்பு. (வைத்தியபரி.)

பிரமவித்தியை—யசுர்வேத வுபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்ட. உசு. உரை.)

பிரமவித்து–1. சீவன்முத்தர் நால்வகையரி லொருவர்; இவர்: லோகோபகாரநிமித்தஞ் சற்கருமமனுஷ்டிக்கிறவர். (உ-ம்.)"வானிகர்பிரமவித்து" (கைவல். தத்துவ. கூச.) 2. வெள்ளைப் பாஷாணம். (வைத்தியபரி.)

பிரமவுப்பு—கரியுப்பு. (வைத்தியபரி.)

பிரமன்–1. தொண்டி, வறட்சுண்டி. (வைத்தியபரி.) 2. பிரமதேவன். (உ-ம்.)"பிரமன்மால் காணப்பெரியோன்காண்க" (திருவா. திருவண்ட. கூஅ.) இவன் வ்ரலாறு குறிகளெல்லாம் (அபிதாநசிந்தாமணியிற்காண்க.) 3. பிரகிருதிமாயை. (கூர்மபு. பிரகிருதி. நி. உரை.) [தான்வளர்ந்தும் விரிந்தும் பூதங்களைவளர்த்தலால் வந்த பெயர்.]

பிரமனுளி—உரோகணி. (சூ. நிக. க: சுஅ.)

பிரமா — 1. ஞாநம். (சி. சி. அளவை. க. சிவாக். 2. பிரமதேவன்.

பிரமாகாணம் — பிரமாணம். (சி. சி. அளவை. க. சிவாக்.) [பிரமைக்குக் காரணமென்ற படி.]

பிரமாங்கம்—பஞ்சப்பிரமசடங்கதேவர்பதி லொருவர். (உ-ம்.) "பிரமாங்கம்வித்தேசர்பே ணுகணமெண்டிக்-குரமொடுகாப்போர்படைகளும்" (சைவச. பொது. நிஉஅ.)

பிரமாஞ்சலி— இருகையுங்குவித்து நெஞ்சிடைவைத்து வணங்கல். (உ-ம்.) வந்துழிக்காண்க.)

பிரமாண்டதாரகர்—உருத்திராதிகள். (சி. சி. க: உசு. மறை.)

பிரமாண்டநிலயஸ்ரீகண்டர்– ஸ்ரீகண்டத்திரயத்துளொருவர்; இவர்: பிரமாண்டத்து நிலையர். (சி. சி. க: நிசு. ஞாநப்.)

பிரமாண்டநிலையபிரமா—"குணநிலையபிரமா"பார். (சி. சி. க: சுஎ. ஞாநப்.)

பிநமாண்டநிலையவிட்டுணு—"குணநிலையவிட்டுணு"டார். (சி. சி. க: சுஎ. ஞாநப்.)

பிரம்மாண்டபுராணம் — பதினெண்புராணத்தொன்று. (அபிதாநசி.)

பிரமாணஞ்செய்தல்–சத்தியம் பண்ணுதல். (வழக்.)

பிரமாணஞ்ஞன் — பிரமாணத்தையறிந்தவன். (சி. சி. அளவை. ருை. சிவாக்.)

பிரமாணம்–1. அளவை. (சி. சி. அளவையி. க. சிவாக்.) 2. ஆணை, சத்தியம். (சூ. நிக. கo: கo.) 3. எல்லை. யோசனைப்பிரமாணமுண்டு. (வழக்.) 4. நிலை. (உ-ம்.) "பால்போலுந்-தாய்மையுட்டோன்றும்பிரமாணமிம்மூன்றும் வாய்மையுடையார்வழக்கு" (திரிகடு. கூஎ.) 5. பிரமிதியினதுகருவி.(தருக்கசங்கி.) 6 மேற்கோள். (சிவாலயதரிசனவிதி.)

பிரமாணன்—மெய்யன். (வழக்.)

பிரமாணிக்கம்—பிரமாணிகம். (வழக்.)

பிரமாணிக்கன் -- உண்மையுள்ளவன். (வழக்.)

பிரமாணிகம்—1. உண்மை. 2. திருட்டாந்தம். (1, 2-வழக்.)

பிரமாணித்தல்--1. அளவிடல். 2. பிரமாணமாகக்கொள்ளல். (1, 2-வழக்.)

பிரமாதம்—1. தவறல். (உ-ம்.) "தண்டினர்திரித்தகுடுமித்தலையர்சாரப் – பெண்டுகணடக்கைபிரமாதமெனவஞ்சி" (இராமா. அசுவமேத. ருகூ.) 2. வருத்தம். (உ-ம்) "மரணப்பிரமாதமெனக்கில்லையாம்" (கந்தரல. உக.)

பிரமாதா–அறிபவன். (உ-ம்) பிரமிதிபார்.

பிரமாதாமகன்—மூப்பாட்டன். (வழக்.)

பிரமாதி—வியாழவட்டமாகிய அறுபதுவருடங்களிலே பதின்மூன்றும் வருடம். (வருஷாதிநூல்.)

பிரமாதீச — வியாழவட்டமாகிய அறுபது வருடங்களிலே நாற்பத்தேழாம்வருடம். (வருஷாதிநூல்.)

பிரம்மாநந்தம்—பரமாநந்தம். (வழக்.)

பிரமாயு—பிரமகற்பம். ஆயு-ஆயுள்.

பிரமாயுகாலம்—நூறுபிரமவருடங்கொண்டது. (சைவ. பி.)

பிரமாயுதம்–பத்திலட்சம்.(வழக்குபோலும்.)

பிரமாரண்ணியம்–வேதாரணியம். பிரமம்-வேதம்.

பிரமி—ஒருபூண்டு. (தைல.தைலவ.கசுருை.)

பிரமித்தல்–அதிசயத்தாலும் அச்சத்தாலும் திகைத்தல். (வழக்.)

பிரமிதி–அளத்தல், பிரமாதாபிரமேயத்தை ஜயந்திரிபின்றியுள்ளபடியறிதல்.(சைவப்பி.கூ)

பிரமிப்பு—பிரமித்தல். (வழக்.)

பிரமியம்—1. ஒரு பூண்டு. 2. ஒரு வியாதி. 1, 2-வைத்தியமூ. அக.)

பிரமிநட்டம் — மல்யுத்தத்திற்குரிய எண்வகைக் கரணங்களுளொன்று; அது: உடம்பு முழுதினும் இறுகப்பிடித்து விழுத்தியுழக்குவது. (கூர்மபு. தமோ. கசு. உரை.)

பிரழகத்துவம்—ஆதிக்கம் (வழக்.)

பிரழகம்—உத்தமோத்தமம். (வழக்.)

பிரழகர்-முதலானவர். (சி.சி.அ.கஉ.ஞாநப்.)

பிரழதல்–பொருமிக்கழிதல். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிரழடன்—மடையன். (வழக்.)

பிரமேகம்—மேகவியாதி. (வழக்.)

பிரமேயம்—அளக்கப்படும் பொருள், அறியப்படும் பொருள் (சி. சி. அளவை. க. சிவாக்.)

பிரமை—1. அறியாமை. 2. பைத்தியம். 3. மயக்கம் (வைத்தியாநுப. அக.) (1. 2. வழக்.)

பிரமோசாந்தி—சூரியன் முன்னடிக்கும் அப்சரஸ்திரிகளிலொருத்தி. (வி-ணி.)

பிரமோத்தரகாண்டம்—ஒரு நூல்; இது: வரதங்கபாண்டியன் செய்யப்பட்டது.பஞ்சாக்கர முதலியவற்றின் மகிமைகளை விரித்துக் கூறுநூல். (அபிதாநசி.)

பிரமோதநி—மல்லிகைக்கொடி. (வைத்திய பரி.)

பிரமோதம்—இஷ்டமான வஸ்துவை அநுபவித்தபிறகு வருகிற சந்தோஷம். (வாசுதே.) மிகவுஞ்சந்தோஷம். (வி-ணி.)

பிரமோதூத—வியாழவட்டமாகிய அறுபது வருடங்களிலே நான்காவதாம் வருடம். (வருஷாதி.)

பிரமோபநிடதம்— நூற்றெட்டுபநிடதங்களிலொன்று. அது யசுர்வேதத்திலுள்ளது.

பிரமோபதேசம்–ஞாநோபதேசம். (உ-ம்.) "பிரமோபதேசம்பெறுதலேபாங்கு" (சைவ. ஆசாரிய. கூடு.)

பிரமோற்சவம் — கோயில்களில் வருஷத்திற்கொருதரம் நடக்கும் விசேஷ உற்சவம்.

பிரயத்தனம் — பிரயத்தினம், முயற்சி (தருக்கசங்கி.)

பிரயாகம்—கங்கையமுனை கூடுமிடம்.

பிரயாகை—1. ஒருநதி. (உ-ம்.)"மறைபுகழ் பிரயாகைதன்னின்மாசகீர்ப்படிந்த தூயோர்" (காசிகா தேவர்கள் பிரம. உக.) 2. கங்கையும் யமுனாவும் கூடுமிடத்துள்ள ஒரு புண்ணியத்தலம். (அபிதாநசி.)

பிரயாசம் — 1. உழைப்பு. 2. வருத்தம். (1,2-வழக்.)

பிரயாசி—1. பிரசாசைக்காரன். 2. பிரயாசைக்காரி. (1, 2-வழக்.)

பிரயாசை—பிரயாசம். (வழக்.)

பிரயாணம்—பயணம். (வழக்.)

பிரயுக்தம்-உண்டாவது. (சி. சி. டு:க. சிவாக்.)

பிரயுத்தம்—முகாந்திரம். வழக்குண்டுபோலும்.

பிரயுத்தி-பிரயோசநம்.வழக்குண்டுபோலும்.

பிரயுதம்—பத்திலட்சம்.(பிங்கல. உடகுசு.)

பிரயோகம் — 1. உதாரணம். பிரயோகங் காட்டு. 2. ஏவல்.பாணங்களைப்பிரயோகஞ்செய்தான். 3. செலுத்தல். (வி-ணி.) 4. மருந்துசெய்தல். (1, 2, 4-வழக்.)

பிரயோகவிவேகம்—ஒரு தமிழிலக்கணநூல் (அபிதாநசி.)

பிரயோகித்தல்—1. செலுத்தல். 2. முயலல். (1, 2-வழக்)

பிரயோச்சியகர்த்தீநுத்துவம்—ஏவப்படுகிறது. ஏவப்பட்டுச்செய்தல். (சி. சி. க: க. சிவாக்.)

பிரயோச்சியம் — ஏவப்படுதல். (உ - ம்.) வந்துழிக்காண்க.

பிரயோச்சியன்—1. அடியான். ஏவப்படுபவன் என்பது பொருள். 2. இயற்றுதற்கருத்தா. (பி. வி.)

பிரயோசகம்—ஏவுகிறது.(உ ம்.)வந்துழிக்காண்க.

பிரயோசகன்—வேலை செய்விக்கிறவன்.

பிரயோசனம்—பயன். (வி-ணி.)

பிரயோசனன்—பரோபகாரி. (வழக்.)

பிரரோகம்—தளிர். (வைத்தியபரிபா.)

பிரரோகி—வறட்சுண்டி. (வைத்தியபரிபா)

பிரலம்பம்—அசைவு. பிர-உபசருக்கம்.

பிரலம்பன்—ஓரசுரன் (அபிதாநசி.)

பிரலாபசந்நி—அலறுசந்நி. (வைத்தியம்.)

பிரலாபம் — 1. தூக்கம். 2. புலம்புகை. (வழக்.)

பிரலாபித்நல்—புலம்பல் (வழக்.)

பிரலோடநம்—உருளுதல். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிரலோபம் — காமம். (உ-ம்.) வந்துழிக்காண்க.

பிரவசநம்—பிரசங்கம் பண்ணுதல். (வழக்.)

பிரவஞ்சம்—உலகம். (வழக்)

பிரவஞ்சன்—பிரபஞ்சன். ஒருவாயு; பிரபஞ்சன்பார்.

பிரவணன்—காமிகாகமங்கேட்ட ஒருவன். (த. நி. போ.)

பிரவத்தகம்—செயல். (வழக்.)

பிரவர்த்தகம் — நடத்துகிறது. (சி. சி. உருள. சிவாக்)

பிரவர்த்தகன்—பிரவருத்தகன்.

பிரவர்த்தநம் — 1. சொல்லுதல். (சி. சி. டுகூ. (சிவாக்.) 2. நடக்கை (வி-ணி.) 3. முயற்சி. (வழக்.)

பிரவர்த்தநை-முயற்சி.(வேசா.கூ.அ.உரை.)

பிரவர்த்தம்—பிரவர்த்தித்தல். (த.நி.போ. கசா.)

பிரவர்த்தர்—மகேசுவரர். (த.நி.போ. கசுடு.)

பிரவர்த்தி—முயற்சி. (வழக்.)

பிரவர்த்திக்கிறது—தொழிற்படுகிறது. (சி. சி. க: சுஉ. (சிவாக்)

பிரவர்த்நித்தல் — சேட்டித்தல், முயற்சி பண்ணல். (உ-ம்.) "பிராணன்முதலாகியஐந்து வாயுக்களும் யாதொரு அநங்காரத்தத்துவத்தினாலே நிததம் வியாபாரங்களிலே பிரவிர்த்திக்கின்றனவோ." (சி. சி. ஞாந. கள. உரை.)

பிரவராசைவர்—எழுவகைச்சைவர்களுளொருவர்; அவர்: சிவதீக்ஷை பெற்ற அநுலோமர். (சைவச. பொது. சகுடு. உரை.)

பிரவரம் — வரிசம். (உ-ம்.) "ஐந்துசைவ இருடிகளின்கோத்திரங்களும் அவரதுகிளைக் கோத்திரங்களும் ஒத்தபிரவரமாயின்" (பெரியபு. தடுத்தாட். க0. உரை.)

பிரவருத்தகன் — முயற்சி செய்வோன். (வழக்.)

பிரவருத்தநம்—முயற்சி. (வழக்.)

பிரவருத்தித்தல்—முயறல். (வழக்.)

பிரவாகம்—1. இடையறாமல்வரும் பெருக்கு வெள்ளம் (சி. சி. உ: க0. மறை.)

பிரவாகாநர்த்தி — ஆற்றிலே முன்னேவந்த தண்ணீரோடிப்போகப் பின்னேயுமொழியாமல் வருவது. (சி. சி. க: சுசு. சிவாக்)

பிரவாகி—தக்ஷப்பிரமன் புத்திரிகளுளொருத்தி (வி-ணி.)

பிரவாகித்தல்—பெருக்கெடுதல்.

பிரவாகேசுரவாதி—ஈசுவரன் ஒரு ஆண்மாமுத்தனுளுல் அவனிடத்திலே அதிகாரத்தை வைத்துத்தான் பரமற்றிருப்பன் அவனும் பின்னொருவன் முத்தனுளுல் அவன் கையிலே யதிகாரத்தை வைத்துப்பரமற்றிருப்பன் என்று கூறுமதஸ்தன். (த. நி. போ. சகக.)

பிரவாசநம்—பிரதேசவாசம். (வழக்.)

பிரவாசம் — 1. குழந்தையை எடுத்துக் கொண்டு ஆலயத்திற்குச் செல்லுங்கிரியை. (உ-ம்.) "அந்நப்பிராசநம்" பார். 2. சொற்பகால அந்நியதேசவாசம்.

பிரவாதம் — 1. ஊர் வழக்குப் பேசுதல். (வழக்.) 2. காற்று.

பிரவாரணம்–தடை. பிர-உபசருக்கம். வாரணம்-தடை

பிரவாலம்–இளந்தளிர். (வைத்தியபரிபா.)

பிரவாளம்—பவளம். (வைத்தியபரிபா.)

பிரவிக்யாதி—கீர்த்தி. (வழக்.)

பிரவிசாரம்—பரதத்தின் பொது இலக்கணங்களாகிய இருபது பேதங்களுளொன்று. (உ-ம்.) "அங்ககாரம்" பார்.

பிரவிடை—பெண்பருவம் நான்கிலொன்று பிரவுடை யென்பது பிரவிடையெனமருவி வழங்குகின்றது. (கந்தபு. இந்திரபுரி. கூகூ.)

பிரவிர்த்தசிவம்—சகளராகியசிவம். (சி. சி. சூ: ககூ. ஞாநப்.)

பிரவிர்த்தர்–அதிகாரசிவன். (சி. சி. பாயிர: க. சிவாக்.)

பிரவிர்த்தித்தத்துவம்—ஈசுரதத்துவம். (சி.சி. க: சுடு. ஞாபப்.)

பிரவிருத்தி — 1. செய்கை. 2. முயற்சி. (1, 2-வழக்.)

பிரவிருத்தித்தல்—முயற்சித்தல். (வழக்.)

பிரவிருத்திமான்—பிரவிருத்தியுடையவன்.

பிரவிருத்தியர்த்தம்—பிரவிருத்தியின் பொருட்டு. (சி. சி. கூ: நிசு, சிவாக்.)

பிரவிருத்திவிஞ்ஞானம்—உருவக்கந்தத்தைச் சவிகற்பமாகவுணரும் உணர்வு. (சிவஞாநபா.)

பிரவீணன்—சமர்த்தன். (திருவிளை. திருவாலவா. நி.)

பிரவுடை—பேரிளம்பெண். (உ-ம்.) "தரித்தவாலதருணபிரவுடை, வீருச்சையாகும்வியன்பருவங்களின்" (கந்தபு. இந்திரபுரி. கூகூ.)

பிரவேசகம்—முயற்சி. (வழக்.)

பிரவேசகன்—பிரவேசிக்கிறவன்.

பிரவேசப்படுத்தல்—பிரவேசிப்பித்தல்.

பிரவேசம்—1. தொடங்கல். 2. முயற்சி. 3. தோற்றம். (1. 2. 3. வழக்.)

பிரவேசித்தல்-1. உட்செல்லல். 2. தொடங்கல். 3. தோற்றப்படல். (1, 2, 3-வழக்.)

பிரவேசிதன்—பிரவேசிக்கிறவன். (தத். நி. போ.)

பிரவை—பிரபை, ஒளி. (வழக்.)

பிரளயகைவல்லியம்—பிரளயவிடுதி. (சி. சி. சூ: சஅ. ஞாநப்.)

பிரளயசொரூபம் — பிரளயவடிவு; அது: நித்தியப்பிரளயம், அவாந்தரப் பிரளயம், தினப் பிரளயம், பிரமப்பிரளயம், அத்தியந்தப்பிரளயம் என்று ஐந்துவிதமாயிருக்கும். (வாசுதே. உஅஉ.)

பிரளயம் — 1. உலகவொடுக்கம். அழிவுகாலம். (உ-ம்.)"மண்புனறீக்கால்வானமழியமாப் பிரளயத்தில்" (மச்சபு. மாச்சா. எ.) இப்பிரளயம் நித்தப்பிரளயம், நைமித்திகப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், ஆத்யந்தபிரளயம் என நான்கு வகைப்படும். (அபிதாநசிந்தாமணியில் விவர நன்குகாண்க. 2. படையிலோர் தொகை. அதுவாகினி மூன்று கொண்டது. பிங்கல. சூசசு.) 3. வெள்ளம். (பி. நிகண். எசு.)

பிரளயர்–பிரளயாகலர். (த. நி. போ. கசுஎ.) ஆணவமலம், கன்மம், இரண்டுடன்கூடிய ஆன்மாக்களென்க.

பிரளயாகலர் — ஆணவகன்மமென்னுமிரண்டுமலமுமுடைய ஆன்மாக்கள், பிரளயகாலத்திற்கலைநீங்கப் பெறுபவர். (சிவஞா. சித். அ: உ.)

பிரளல்—புரளல். (வழக்.)

பிரளயம்—பிரளயம்.

பிரற்றல்—எடுத்தலோசை. (பி. நி. உகoசு.)

பிராக்கியன்—அறிவுள்ளவன். (வழக்.)

பிராக்ஞன்—பிராஞ்ஞன்

பிராகபாவம்—முன்னபாவம். (தருக்கசங்.)

பிராகாமியம்—அட்டசித்திகளுளொன்று; அது: இச்சித்ததிவ்வியரூபமான ஸ்திரீகளனேகரை மநச்சங்கற்பத்தினுலுண்டாக்கி யெல்லாருடனும் ஏககாலத்திலே அப்படிப்பட்ட ரூபங்களைக்கொண்டு கூடியிருக்கை. (சி. சி. உ: நிஅ. சிவாக்.)

பிராகாரம்–சுற்றுமதில். சூ. நி. க. நி: சூஉ.)

பிராகிருதசநம்—கடைத்தரமான மனிதர். (சி. சி. அ: கூகூ. சிவாக்.)

பிராகிருதசிருட்டி–பிரமசங்கற்பமின்றி பிராகிருத சம்பந்தமாயுண்டாகிய சிருட்டி; அது: மகத்துவ சிருட்டி, தன்மாத்திரைச் சிருட்டி, இந்திரிய சிருட்டி என மூன்று வகைப்படும். (கூர்மபு. பலவகை. எ. உரை.)

பிராகிருததேகம்–பிரகிருத சம்பந்தமுள்ள தேகம் (சி. சி. அ: கஉ. சிவாக்.)

பிராகிருதப்பிரளயம்—பிரகிருதியில் சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களும் சம்பந்தப்பட்டு நின்றகாலம். (உ-ம்.) "பிரகிருதிக்குமுன்புகன்ற–வீரியமூக்குணமுந்தூக்குபொற்றுலாவெனச்சமமேயின சிறப்பின்-வருபிராகிருதப்பிரளயமாகும்" (கூர்மபு. பிரகிரு. கூ.)

பிராகிருதம்—1. அழியத்தக்கது. 2. ஒழுங்கற்றவடமொழி. (உ-ம்) "பிராகிருதமொழியிற் பயின்றுவருதலால்" (நன். எகூ. விருத்தி.) 3. பிரகிருதசம்பந்தம். (சி. சி. சூ: கூ. சிவாக்.)

பிராகிருதர்—ஆற்றலு அறிவும் காதலுமில்லாதவர். (சி. சி. பாயிர. கூ. சிவஞா.) பூமியிற் செனித்த மேற் சொப்பநத்தில் ஞானம்போல அறிந்தறியாமலும், கிளிஞ்சிலை வெள்ளியென்று அறிவதுபோல விபரீதஞ்நமுமாய் அதனுலே தேகாதிஸ்ளோயான்மாவென்றும் பிரகிருதிசந்நியவஸ்துக்களேயே பரமென்றுமெண்ணுபவர். (சி. சி. பாயிர. கூ. சிவாக்.)

பிராதுசவிரை-பிறுவிரை. (வைத்தியபரிபா)

பிராங்கணம் } ஒரு பறை (வழக்குண்டு
பிராங்கம் } போலும்.

பிராசங்கம்—தொழுவம். (உ-ம்.) வந்துழிக் காண்க.

பிராசநம்—சோறாட்டல். (உ-ம்.) "அந்நப் பிராசநம்" பார்.

பிராசயம்—ஆதி. (பிங்கல. உஉசஎ.)

பிராசாதசட்சுலோகி — ஒரு சம்ஸ்கிருத நூல் என்பர்.

பிராசாதம்—ஒரு மந்திரம். (திருவானேக். கோச்செ. எகூ.)

பிராசாதமந்திரம்—ஸ்ரீகண்டராலே சுப்பிரமணியசுவாமிக்குபதேசிக்கப்பட்டதென்றுசொல்லப்படுகிற ஒரு மந்திரம்; அது: இருபது, பதினறு, பன்னிரண்டு, பத்து, ஒன்பது, எட்டு, ஆறு, ஐந்து கலேகளேயுடையதாய் எட்டு விதமாயிருக்கும். (சி-லி. கிரி. எ.) சித்தாந்த சாராவலியிற்காண்க.

பிராசாபத்தியம் — 1. உரோகணிநட்சத்திரம். 2. ஒருவகைவிவாகம். (பிங்கல. கசoக.) 3. ஒரு விரதம். 4. பகலில்வருமொன்பதாமுகூர்த்தம். (கூர்மபு. பிரமனு. கூ. உரை.) 5. பிரமசரியம் நான்கனுளொன்று. (சி. சி. அ: கஉ. மறை.)

பிராசி—கிழக்கு. (சூ. நிக. நு: நு.)

பிராசீநபநசம்—வில்வம். (வைத்தியபரி.)

பிராசீநம்—1. பங்கம்பாளே. (வைத்தியமூ. அ.) 2. பழமை. (வழக்.)

பிராசீநர்—முன்னேர். (பி. வி.) (வழக்.)

பிராசேசம்—பிரதிட்டாகலேயிற்புத்திரத்துவத்துள்ள எட்டுப்புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.)

பிராசேபம்—பகலில்வருமொன்பதாமுகூர்த்தம். (கூர்மபு. பிரமனு. கூ. உரை.)

பிராசோதனி—கண்டங்கத்தரி. (மலேயக.)

பிராஜ்ஞத்துவம்—அறிவின்றன்மை.

பிராஜ்ஞம—பிராஜ்ஞத்துவம்.

பிராஜ்ஞன்—அறிவன. (வழக்.)

பிராட்டி—தலேவி. (உ-ம்.) "எம்பிராட்டிக்கு மெல்லியராஞர்" (பெரியபு. திருக்குறிப்புத். கூறு)

பிராட்டுவிவாகன் — அந்தணன், சத்திரியன், வைசியன் இவர்களிலொருவனும், மறையோதல் மீமாஞ்சைக்கேள்வி இவற்றையுடையவனும், இலக்கணமுதலிய கருவிநூல்கள் பதினெண் விவகாரபதங்கள் இவற்றையுணர்ந்தவனும், பொறுமை குலமேன்மை நடுவுநிலேமை முதலானகுணங்கள் மதிநுட்பம் இவற்றையுடையவனுமாயிருந்து விவகாரநிச்சயஞ்செய்பவன். (மிரு. ச.)

பிராணத்தியாகம் — சீவனேக்கொடுத்தல். (வழக்.)

பிராணம்—1. காற்று. 2. சீவன். (1, 2-வழக்.)

பிராணமயகோசம் — சூக்குமசரீரத்தில் பிராணனுங் கன்மேந்திரிய மூன்கூடினது. (வாசுதே.)

பிராணவாயு — பத்துவாயுக்களிலொன்று; இது: மத்தியத்திலேதோன்றிச் சித்திரநாடியிலேவிழுந்து மூலாதாரத்திலேஒடி ஒன்றுதித்து நாபிச்சக்கரத்திலே அங்கெங்குமுட்டி இடைபிங்கலேயிலேஒடிக் கபாலத்தைச்சுற்றி நாசியிலே பன்னிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலம் பாழேபறந்து எட்டங்குலம் நின்று தானின்ற இடத்திலேதாக்கும். நாழியொன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமியங்கி இரவுபகலற்பதுநாழிகைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறுசுவாசமியங்கி இதிலேஎழாயிரத்திருநூறுசுவாசம் பாழேபறந்து பதினேழாயிரத்து நானூறு சுவாசம் உள்ளேயடங்கும். (த. வி.)

பிராணவான்மவாதி — பிராணவாயுவேஆன்மாவென்பவன். (சி. சி. கூ: சு. சிவாக்.)

பிராணன்—1. உயிர். (வழக்.) 2. பிராணவாயு. (பிங்கல. கூகூ.)

பிராணாதிபஞ்சகம் — பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என்னுமைந்து வாயுக்கள்.

பிராணாயாமம்—பிராணவாயுவைத்தடுத்தல்; அது: ரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று பகுதியையுடைத்து. (உ-ம்.) "சொன்னபிராணாயாமமொருகாற்செய்திடிற்பாவந்தொலேந்து நீங்கும்" (காசிகா. இல்லொ. கூகூ.) [பிராணவாயுவையுள்ளேயடக்கலாற் பெற்றபெயர்.] ஆயாமம்-ஒடுக்கம்.

பிராணி — சீவனுடையது. (உ-ம்.) "மண்ணுக்கல்லிற் பிராணிபடும் வருந்தவேண்டாவென்றுரைத்தார்" (பெரியபு. தண்டி. கூ.)

பிராத்தநை—நேர்கடன். (வழக்.)

பிராத்தி — அட்டசித்தியிலொன்று. (திருவிளே. அட்டமா. உஉ.)

பிராத்தித்தல்-பிராத்தனை செய்தல். (வழக்.)
பிராத்திப்பு—பிராத்தனை.
பிராதக்காலம்—சூரியோதயத்திற்குமுன் ஐந்துநாழிகை வரையில் நிகழுங்காலம். (சைவவி.)
பிராதமீமீயம்—முதன்மை. (வழக்.)
பிராதமிகர்—வானோர்கணமொன்பதினெருவர்; இவர்: கடவுட்டிருவுளப்படியே இராச்சியசம்பந்தமான சாதாரண நன்மைகளே நடத்துந்தன்மைபெற்றோர்.
பிராதமிகன்—முன்பிறந்தோன். (வழக்.)
பிராதர்—மூதாக்கள். (வழக்.)
பிராதா—சகோதரன் (உ-ம்.) "பேசுமிரு பிரசவத்தும்பெண்பிறந்தார் பிராதாப்பெற்ற பிதா." (ஆசௌச. கடு.)
பிராதிபதிகம்—பெயர்ப்பகாப்பதம். (பி.வி.)
பிராபதிகன்—அக்கினி. (உ-ம்.) வந்துழிக் காண்க.
பிராதிபாசிகம்—தோற்றுகிறது. (சி. சி. சு: கூ. சிவாக்.)
பிராதிரு—சகோதரன். (உ-ம்) வந்துழிக் காண்க.
பிராது—முறைப்பாடு. (வழக்.)
பிராத்தவாக்கியம்—பித்தர்வாக்கியம். சி. சி. அ: உள. ஞாநப்.)
பிராத்தன்—மூடன். (வழக்.)
பிராத்தி—1. கழிதல். 2. மயக்கம்; அது: மனப்பிரமை. (வைராக்கிய ச. கூஉ.)
பிராத்திமதலங்காரம்-மயக்கவணி (குவல. கூ.)
பிராத்தியம்—சுற்றுள்ளதேசம். (வழக்.)
பிராத்து—மதிமயக்கு. (சி. சி. அ: கள. நிரம்ப.)
பிராப்தம்—கிடைத்தது. (சி. சி. கூ: சுஉ. சிவாக்.)
பிராப்தி—மனசினுலே நினைத்தபதார்த்தங்களெல்லாம் முன்னே வந்திருக்கை. (சி. சி. உ: இஅ. சிவாக்.)
பிராப்பியம்-அடைதல், அடையத்தக்கது. (சி. சி. உ: எக. சிவாக்.)
பிராபவம்—முதன்மை. (வழக்.)
பிராபாகரம்—பிரபாகரமதம். (வழக்.)
பிராமணத்தி—பார்ப்பனத்தி. (வழக்.)
பிராமணப்பாம்பு—பிராமணநாகம். (சித்தராரூ.)
பிராமணர்—பார்ப்பார்; இவர்: பலவிதமர்வர் அபிதானசிந்தாமணியில்விரிவாக எடுத்துரைத்தனர். ஆண்டுக்காண்க.
பிராமணி—பார்ப்பனி. (வழக்.)

பிராம்மம்—பிரமசரியம் நான்குவகையுளொன்று. (சி. சி. அ: கூ. மறை.)
பிராமாணிகத்வம்—பிரமாணத்தினுற் பெறப்படுந்தன்மை
பிராமாணியம்—பிரமாணமாந்தன்மை. (சி. சி. அளவை. ருி. சிவஞா.)
பிராமி—1. சரச்சுவதி. (சூ. நிக. க: ஈருி.) 2. மாகாவைரவன் சத்தி. (வி-ணி. உசு.)
பிராமீபாவனை—சிவமெருமானே யான் மாவுக்குப் பரமான்மாவாய் அக்கினிக்குச் சூடு போலுள்ள பராசத்தி சமேதராய் விளங்கும் பரசிவப்பிரமமென்று தியானித்துவழிபடுதல். (கூமபு. வருணச். சஈ. உரை.)
பிராமீமுகூர்த்தம்—சூரியனுதிக்க ஐந்து நாழிகையுண்டென்னுங்காலம். சி. சி. அ. உஈ. சிவாக்.)
பிராமீயம்—1. தலைப்புறம். 2. பிரமலோகம். (சிவதரு.)
பிராமுட்டிவேர்—1. சித்தாமுட்டி. 2. மயிர்மாணிக்கம். (1, 2 வைத்தியபரிபா.)
பிராயச்சித்தசமுச்சயம்-ஒரு நூல். (வழக்.)
பிராயச்சித்தம்—1. சாந்தி. 2. தண்டனை. (1, 2-வழக்.)
பிராயம்—வயது. (வழக்.)
பிராயோபவேசம்—மரணம் வரையும் பசியாயிருத்தல். (உ-ம்.) "துன்னமராற்பிராயோபவேசத்தாலத்தணர்க்காய்த்தொறுவுக்காதலின்னுயிர்விட்டோர்தமக்கும்" (கூர்மபு. சூத காரு. உஎ.)
பிரார்த்தனை-பிரார்த்தநம், வேண்டுகோள். (வழக்.)
பிராரத்தகன்மம்—அநுபவத்திற்கு வந்த கன்மம். (வழக்.)
பிராரத்தகன்மவாதனை—அநுபவத்திற்கு ஊழ்வினைப்பயன். (வழக்.)
பிராரத்தம்-சஞ்சிதத்திலேபரிபக்குவத்தைக் குறித்ததற்கேற்றதநுகரண புவனபோதங்களையுண்டாக்கிப் புசிப்பிப்பது; அது: தீவிரம், மந்தம், சுபதம் என மூவகைப்படும். (சி. சி. உ: கூ. மறை.) [இச்சாபிராரத்தம், அனிச்சாபிராரத்தம், பாவிச்சாபிராரத்தம் என்றுஞ்சொல்லப்படும்.]
பிராரத்தவாதனை-இப்போதநுபவித்தற்கு கன்மப்பயனுகிய வாதனை. (வழக்.)
பிராரத்தவினை—அநுபவிக்குழ்வினை. (வழக்.)
பிராரத்துவம்—பிராரத்தம். (வழக்.)
பிராரம்பம்—1. எய்தப்படுவது. (பி. வி.) 2. தொடங்கல். (வி-ணி.)

பிராறு—நிறைபுனல். (சூ. நி. டு. உசு.)

பிரான்—1. எசமானன், தலைவன். (வழக்.) 2. எப்பொருட்குமிறைவன், கடவுள். 3. சிவன் (உ-ம்.) "பவனெம்பிரான்பனிமாமதிக்கண்ணிவிண்ணோர்பெருமான் - சிவனெம்பிரானெண்ணெயாண்டுகொண்டானென்சிறுமைகண்டு – மவனெம்பிரானென்னைநானடியேனென்னவிப்பரிசே - புவனெம்பிரான்றெரியும்பரிசாவதியம்புகவே" (திருவாச. திருச்சத. கூ.)

பிரி—பிரியென்னேவலுந் தெரிநிலைவினைப் பகுதியும். 2. வெருகு. (வைத்தியமூ. அகரா.)

பிரிச்சல்—பிரிக்குதல். (வழக்.)

பிரிசல்—வேறுபாடு. (வழக்.)

பிரிசாதிநி—ஓர் யோகினி. (வி-ணி. உசக.)

பிரித்தல்—1. குலைத்தல். 2. கூறுசெய்தல். 3. நீக்கல். (உ-ம்.) "பிதப்பு"பார் (1, 2-வழக்.)

பிரிதல்—1. கட்டுவிடல். 2. கூறுபாடாதல். 3. நீங்கல். 4. வேறுபடுதல். (1, 2, 3, 4-வழக்.)

பிரிதி—பிரீதி. (வழக்.)

பிரிதிகி—வழுதலை. (வைத்தியபரிபா.)

பிரிந்திசைக்கதுளை—அம்போதரங்கம். (யாப். காரிகை. செய்யு. கூ. உரை.)

பிறிந்திசைத்தல் — வேறுபட்டிசைத்தல். (உ-ம்.) "உயர்திணைமருங்கிற்பாற்பிரிந்திசைக்கும்" (தொல். சொல். சூ. சேநா.)

பிரிந்திசைத்துளைஎல்—சலிப்பாவிஞ்ஞையியெனன்று. (யாப்பகாரிகை. செய்யு. க. உரை.)

பிரிந்திசைத்தூங்கல்-வஞ்சிப்பாவிஞ்ஞையியெனன்று. (யாப். காரிகை. செய்யு. க. உரை.)

பிரிந்தேன—பிரிய. (ஐங்குறு.)

பிரிமே—பிரிவாயாக. (ஐங்குறு.)

பிரிநிலை — பலவற்றுளொன்றைப்பிரித்துக் கொள்வது; இஃது: இடைச்சொற்பொருளினுமொன்று. (நன்னூ. இடையி. கூ.)

பிரிநிலையுயர்வுநவிற்சியணி— பேதகாதிசயோக்தியலங்காரம்; அது: பலரிடத்திருக்குங் கம்பீர முதலிய தருமங்களினும் கர்ணிக்கப்படுகிறவனிடத்துள்ள அவற்றின் மேன்மைதோன்றுவதற்காகவிதுவேறென்று பிரித்துச்சொல்வது. (குவல. உச.)

பிரிநிலையேச்சம்–பிரிநிலைப்பொருளில்வருமெச்சம். (நன்னூ. பொதுவி. கூ.)

பிரிப்பு–1. குலைப்பு. 2. பகுப்பு. (1, 2-வழக்.)

பிரிபொருட்சொற்றொடர் — செய்யுட்காகாவென்று விலக்கப்பட்ட ஒன்பது வழக்குகளுளொன்று; அஃது: ஒருசெய்யுளின் சொற்கள் முழுவதும் ஒருபொருளாக உரைக்கப்படாது பிரிந்து தோன்றவருவது. (இலக்கணவி. சுகூக, சுகூங.)

பிரிமொழிச்சிலேடை — சிலேடையணி வகையுளொன்று; அது: பிரிக்கப்பட்டுப் பல பொருள்பயக்குஞ் சொற்களாலாய தொடர். (தண்டி. எடு. உரை.)

பிரியகம்–1. கடம்பு. (மலையக.) 2. வேங்கை மரம். (வைத்தியபரி.)

பிரியங்சந்தேசம்—சண்பகமரம். (வைத்தியபரிபா.)

பிரியதரிசிநி–வன்னிமரம். (வைத்தியபரி.)

பிரியப்படுதல்—அன்புவைத்தல். (வழக்.)

பிரியம்—1. அன்பு. (உ-ம்.) "பூசனைபிரியமுற்றியற்றியுற்றுளான்" (சிவரக. ஞானவாலன் வயி. கச.) 2. உவகை. (சூ. நிக. அ: சூ0.) 3. விருப்பம். (உ-ம்.) "சிவபத்தன்"பார்.

பிரியவிரதன்—சுவாயம்புமநுவின் குமாரரிலொருவன்; இவனுக்கு: அக்கி, நிதிருவன், மேதாதி, திதிவபுஷ்கந்த, ஜோதிஷ்கந்த, தருதிமந்த, பாவஸ்வரீ என ஏழுகுமாரருண்டு. (தபி. போ.)

பிரியன்—1. கணவன். (உ-ம்.) "பின்னுட்பிரியன்பிரியையென்றுயினம்" (தனிப்பாட.) 2. பிரியமுள்ளவன். (உ-ம்.) "முருகநீயுமைமூவரும்பிரியராநமக்கே" (சிவரக. தாருக. கூ.)

பிரியாம்பு—மாமரம். (வைத்தியபரி.)

பிரியாமை—நீங்காமை. (வழக்.)

பிரியேனேன்றல் — அகப்பொருட்டுறைக்கிளவியிலொன்று; அது: தலைமகன் றலைமகளுக்கு நிற்பிரியேனென்று வற்புறுத்திக்கூறுதல். (வாண. உகூ. மூகத்.)

பிரியை — 1. பெண். (சூ. நிக. உ: நுசு.) 2. மனைவி. (உ-ம்.) "பிரியன்"பார்.

பிரிவினை—1. பிரிவு. 2. வேறுபாடு. (1, 2-வழக்.)

பிரிவு—1. பிரிதல். (உ-ம்.) "சிவனுளத்திலம்மைநீபிரிவாற்றிலா - யுமையைவிட்டரனீங்கிலானனை-யுனையழைப்பதெவ்வாறரோ" (சிவரக. தேவியுடன். உக.) 2. வேற்றுமை.(வழக்.)

பிரிவுழிக்கலங்கல்—அகப்பொருட்டுறைக்கிளவியிலொன்று; அது: தலைவிபிரிந்தவிடத்துத்தலைவன் கலங்கிக்கூறுதல். (அகப்பொ. கள. கசு.)

பிரிவுழிமகிழ்ச்சி — அகப்பொருட்டுறைக்கிளவியிலொன்று; அது: தலைவிபிரிந்துபோகுழிப்போகின்றதன்மையைக்கண்டு தலைவன் மகிழ்தல். (அகப்பொ. கள. கடு.)

பிரீதி—இச்சை, பிரியம். (வழக்.)

பிரீரிபாகன்—குய்யாட்டகரிலொருவர். (வி-ணி. உஎ.)

பிரு—கத்திரி. (மலையக.)

பிருகச்சாபாலம்—அதர்வவேத உபநிடத முப்பத்தொன்றனுளொன்று. (கந். நவ. கஅ.)

பிருகதாரணியம்—யசுர்வேத உபநிடதமைம் பத்தொன்றனுளொன்று. (கந். நவ. கஅ.)

பிருகதீ — 1. கத்தரிச்செடி. (மலையக.) 2. விசுவாவசு என்னுங்கந்தருவனுடைய வீணை யின்பேர். (கூர்மபு. வருணு. க. உரை.) 3. மா மரம். (வைத்தியபரி.)

பிருகந்நளை—அருச்சுனன் பேடிவடிவெடுத்த நாட் பூண்டபெயர். (உ - ம்.) "பேதையர்நடம் பயிற்றுவிப்பேன்பெயர்பிருகந்நளை யென்ப" (பாரத. நாடுகர. ககூ.)

பிருது—1. ஓரிருடி; இவர்: பிரமாவினிருத யத்திற்பிறந்தவர். (உ - ம்.) "என்ன வெயியம னுதுபிருகுமாமுனிவனென்போன்" (சிவரக. வில்வலன். ககூ.) 2. சுக்கிரன். (காஞ்சிப். வீராட் டகா. சச.) 3. வருணன்சேய். (உ-ம்.) "ஆழிநீ ரரசாம்வருணனேயவன்சேயறிவுசால்பிருதுவந் நாளில்" (சேதுபு. சடாதீ. ககூ.)

பிருதுசாபத்தியம் — ஒரு வடமொழிநூல். (சி. சி. அ: உள.மறை.)

பிருதுசுதன்—1 சுக்கிரன். (திவாகர.)

பிருதுடி—1. நெற்றி. (பிங்கல. சூ. நிகண்.) 2. புருவம். (ஞானமிர்தம்.)

பிருங்கம்—1. கையாந்தரை. (உ-ம்.) "பிருங் காமலகம்" (தைல.) 2. வண்டு. (வைத்திய பரிபா.)

பிருங்கராகம் — ஒருவகைத்தைலம்; அது: கரிசாலைச்சாறும் நல்லெண்ணெய்யுஞ்சேர்த்து எரித்து வடிப்பது இதனிலக்கணம் தைல. தைலவ. ஙக-ம் கவியிற்பார்.

பிருங்கலாதனீ — பிரகலாதனுக்குப் பெய ரென்பர். (பரிபாடலுரை.)

பிருங்காமலகதைலம்—ஒருவகைத்தைலம் இதனிலக்கணம். தைல: தைலவ. உஅ-ம் கவி யிற்பார்.

பிருங்கி—1. ஏகாதச முக்கிய கணேசுவரரி லொருவர். (வி-ணி. உசுசு.) 2. ஓரிருடி. (பிரபு லிங்கலீ. கைலாயக. சகூ.)

பிருட்டம்—1 அரைத்தமா. (வைத்தியபரி.) 2. இடுப்பின்பூட்டு. (சீவரட். ச. சகனம்.) 3. பிற்பக்கம். (வழக்.)

பிருடை—சுழலாணி. (வழக்.)

பிருத்தியத்துவம்—ஊழியம். (வழக்.)

பிருத்தியர்—அடிமைகள். (சி. பி. கை.)

பிருதிவி—1. ஐந்துபூதங்களிலொன்று; இது: கந்ததன்மாத்திரையிற்றோன்றுவது; இதன் கூறுமயிர், என்பு, சோல், நரம்பு, தசையென் பன. வடிவுநாற்கோணம், நிறம் பொன்மை, குணம் கடினம், சுபாவம் இடத்தல், தொழில் முரித்தல் பொறுத்தல், குறிவச்சிரம், தேவதை பிரமா, மந்திரம் சத்தியோசாதம், கலைநிவர்த்தி, தூலபஞ்சாட்சரம் நகரம், சூக்குமபஞ்சாட்சரம் அகரம், இதற்குச்சத்த, பரிச, உரூவ, ரசம் என்னும் நான்கும் பொதுக்குணம், கந்தம் சிறப் புக்குணம். (சி. பி. கை.) 2. பூமி. (கூர்மபு. தக்கனேச்சபி. சூ. உரை.) [பிருதுமன்னன் அரசாட்சியைக் கைக்கொண்டபோது பிரசை களெல்லாரும் வந்து அரசனே? பூமிதேவிதுந் தந்தை யிறந்தமையால் ஓஷதிகளைத் தனக் குள்ளே யிழுத்துக்கொண்டனள் அகளுல் ஆகாரமின்றி வருந்துகின்றேம் என்று முறை யிட்டனர் அதனைக்கேட்ட பிருதுராசன் கோ பங்கொண்டு அசநவமென்னும் வில்லையுங் தேவபாணங்களையுங் கையிலெடுத்துப் பூமியி லெதிர்த்தான்; பூமிதேவியானவள் பயந்து பசு ரூபத்தைத்தரித்தோடினள் இவனும் பின்றெ டர்ந்து வருவதையறிந்த பூமிதேவி என் பிரா ணனைக்கொல்லாமல் விடவேண்டுமென்று அப யமிட்டு அரசனே? ஒரு கன்றையுண்டாக்கிக் கொடுப்பையேல் ஓஷதிகளையெல்லாம் பாலாக் கிக்கொடுப்பேனென்ன அரசனதற்கிசைந்து இந்திரன் சந்திரன் முதலாயினோரைக் கன்று களாக்கி ஓஷதிகளை யெல்லாம் பாலாகக்கறந்து வேண்டியவளங்களையுமுண்டாக்கிப் பூமிதேவி யையுங்கொல்லாமல் முன்போல வைத்துக் கார்த்தான் அதனாற் பூமிக்குப்பிருதிவியென்னு நாமமுண்டாயிற்று.]

பிருதிவிதத்துவபுவநம்நூற்றெட்டு—பிருதி விதத்துவத்திலுள்ள நூற்றெட்டுப்புவனங்கள்; அவை: இந்திரதிக்கில் கபாலீசன், அசன், புத் தன், வச்சிரதேகன், பிரமத்தநன், விபூதி, அவ் வியன் சாத்தா, பிஞனி, திரிசோதியன் என்ற உருத்திரர்கள் பத்து. அக்கினிதிக்கில் உருத்தி ரன், உதாசநன், பிங்கலன், காதகன், அயன், சுவலன், தகனன், வெப்புரு, பிரகாந்தகன், கூடியாந்தகன் என்ற உருத்திரர்கள் பத்து. இயமதிக்கில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கத்திரு, காலன், தன்மன், சங் யோத்தா, வியோக்கிருதன் என்ற உருத்திரர் கள் பத்து. நிருதிதிக்கில் நிருதி, மாரணன், அரந்தர், குரூரகிருட்டி, பயாந்தகன், ஊர்த்து வகாயன், விரூபாக்ஷின், தூமிரு, லோகிதன், தெங்கிருட்டிணன் என்ற உருத்திரர்கள் பத்து. வருணதிக்கில் பெலன், அதிபெலன், பாசஹஸ்தன், மகாபெலன், சுவேதா, செயபத் திரன், தீர்க்கவாகு, செலாந்தகன், வடவா முகன், தீமான் என்ற உருத்திரர்கள் பத்து.

வாயுதிக்கில் சீக்கிரன், லகு, வாயுவேகன், தீக்ஷணன், சூக்குமன், க்ஷயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபத்தி, மேகவாகனன் என்ற உருத்திரர்கள் பத்து. சுபேரதிக்கில் நிதீசன், ரூபவான், தன்னியன், சௌமியன், சௌமிய தேகன், பிரபத்தனன், சுப்பிரகடன், பிரகாசன் இலக்குமிவரன், சோமேசன் என்ற உருத்திரர்கள் பத்து. ஈசானதிக்கில் வியாத்தியாதீபன், ஞானபுகன், சருவன், வேதபாரகன், மாத்திருவிருத்தன், பிங்கலாக்ஷன், பூதபாவன், பெலிப்பிரியன், சருவவித்தியாதிபன், தாதா என்ற உருத்திரர்கள் பத்து. அண்டகடாக ஒட்டுக்கீழே விட்டுணுதிக்கில் அநந்தன், பாலகன், வீரன், பாதாளாதிபதி, விப்பு, இடபத்துவசன், உக்கிரன், சுப்பிரன், உலோகிதன், சருவன், என்ற உருத்திரர்கள் பத்து. அண்டகடாகத்தின் மேலே பிரமதிக்கில் சம்பு, விபு. கெணுதியக்ஷன்' திரியக்ஷன், திரிதேசகவாதகன், சதவாசகன், விவாகன், நபன், பீபசு, விவக்ஷணன் என்ற உருத்திரர்கள் பத்து. ஆகிய இந்த நூற்றுவரும் இந்திராதியரான உலோகபாலர் பெலத்தையுமடக்கி அவர்களவர்களாற் பூசிக்கப்பட்டுக்கொண்டிருப்பார்கள் இவர்கள் புவநம் நூறு. காலாக்கினி, கூர்மாண்டர், ஆடகேசுரர், பிரமா, விட்டுணு, உருத்திரன் ஆகிய இவர்கள் புவநம் ஆறு. அண்டகடாகத்துக்கு மேலே சூக்குமபிருதிவியில் பத்திரகாளி, வீரபத்திரர்கள் ஆகிய இவர்கள் புவநம் இரண்டு. (இது கந்த புராண உரையிற்கண்டது.) [நூற்றெட்டுப் புவநநாமங்கள். சிவஞாநசித்தியார் சுபக்கம் எட்டாஞ்சூத்திரம் ஏழாஞ்செய்யுள் மறைஞாநதேசிகருரையிலும்; தத்துவப்பிரகாசம்: கஞ்சம் செய்யுளுரையிலும், சித்தாந்தசாராவலி. கிரிபாதம் உக-ம் சுலோகவுரையிலும் பிறவற்றிலுந் தேர்ந்து கண்டுகொள்க.]

பிருதிவிதத்துவம்—மூப்பத்தாறு தத்துவங்களுளொன்று; அது: நிவர்த்திகலையிலுள்ளது. (சி. லி. நிரி. உக. உரை.)

பிருதிவிபூதவாதிமதம் — பிருதிவியென்னும் பூதமே பிரமமென்று வாதிப்பவன் மதம். (த. நி. போ. உஎக.)

பிருதிவிழார்த்தி — அட்டமூர்த்திகளிலொருவர். (சி. லி. சரியா. ஙஙு. உரை.)

பிருதிவியண்டம்—பூமியண்டம். (வழக்.)

பிருது—1. அயோத்திநகரிலிருந்த ஒரு சக்கரவர்த்தி. (அபிதாநசி.) 2. ஒருதீர்த்தம். (உ-ம்.) "பிற்பகற்கலைமடமகடன்புனல்பிருது" (சேதுபு இலக்கும. சு.) 3. சூரியகுலத்தரசரிலொருவன்; இவன்: வேனன் என்பவனுடைய புத்திரன். (உ-ம்.) "பிருதுவென்னுமணி மவுலிப் பெரியோன்றன்னேப்பெற்றனஞல்" (கூர்மபு' தக்கனேச்சபி. சு.)

பிருதுமாநம்—யானைக்கொம்பினடி. (பிங்கல. உசஉஉ.)

பிருதுவிகை—ஏலம். (மலையக.)

பிருதூதரம்—ஆட்டுக்கடா. (வைத்தியபரி.)

பிருதை—பிரதை, பாண்டுராசனுமனையானவள். குந்தியென்றும்பெயருண்டு. (அபிதாநசி.)

பிருந்தம்—1. விலங்கின்கூட்டம். (சூ. நிக. ஙு: சஉ-ஆம்பாட்டில் விருந்தமென்றார்.) 2. துளசி. (வைத்தியபரி.) 3. பதின்மூன்றுதாநமாகிய விந்தம். (சி. லி. ஞாந. உநி.)

பிருந்தாவனம்—யமுநாநதிக்கு மேற்கிலே மதுராபுரிக்குச்சமீபத்திலே துளசிவனம். கண்ணன் பத்தர்களுக்கருள்புரிதானமென்பர். (அபிதாநகோ.)

பிருந்தை—1. சலந்தரன் மனைவி. (காஞ்சிப். சலந்தராரீ. யக.) 2. துளசி. சலந்தரன் மனைவியெலும்பின் சாம்பலின் மூலத்தகாரணத்தால் பிருந்தையெனப் பெயராயினது. (காஞ்சிப்பு.)

பிரேட்சை—1. அறிவு. 2. ஆடல். 3. காண்டல். 4. புத்தி. 5. மரக்கொம்பு. (1, 2, 3, 4, 5-ம்.) வந்துழிக்காண்க.

பிரேடணம்—போதல். (வழக்.)

பிரேடயன் — சூத்திரன் பட்டப்பெயர். (பராசர. உக.)

பிரேத்தியபாவம்—தேகவியோகமானதின் மறுபடி.

பிரேதக்குழி — பிரேதத்தை யடக்குங்குழி. (வழக்.)

பிரேதக்குறி—சவக்குறி. (வழக்.)

பிரேதகருமம்—பிரேதகாரியம். (வழக்.)

பிரேதகாரியம்—அபரக்கிரியை. (வழக்.)

பிரேதகிருகம்—கோரி. (வழக்.)

பிரேதகிருத்தியம்—பிரேதகருமம். (வழக்.)

பிரேதகும்பம் — பிரேதத்துக்குடைக்கும் குடம். (வழக்.)

பிரேதசமஸ்காரம்—பிரேததகநக்கிரியை. (உ-ம்.) "பிரேதசமக்காரத்தோடுபிறங்குசபிண்டீகரணம்" (திருவாலா. கோச்செ. கடு.)

பிரேதநதி—நரகம். (வழக்குண்டுபோலும்.)

பிரேதநீர்க்காரகன்—சவஞ்சமப்போன்.

பிரேதபக்கம்—அபரபக்கம். (வழக்.)

பிரேதபதி—நமன். (வழக்.)

பிரேதபுரம்—யமபுரம். (வழக்.)

பிரேதபூடணி—ஓர்யோகினி. (வி-ணி. உசக.)

பிரேதம்—1. தெற்கு. 2. பிசாசம். (சூ. நிக. க: சடு.) 3. பிணம். (உ-ம்.) "சஞ்சாரம்"பார். 4. பிதிர். 5. பின். (உ-ம்.) பிரேதபக்கம். (1,4-வழக்.)

பிரேதராட்சசி—துளசி. (வைத்தியபரி.)

பிரேதலோகம்–பிதிர்திசை. (வழக்குண்டு போலும்.)

பிரேதவநம்—மயானம். (வழக்.)

பிரேயம்—கள். (வைத்தியபரி.)

பிரேரககாண்டம்—பிரேரகாண்டம், சுத்த தத்துவம். (ப-பாச. ஙக.)

பிரேரகம்–ஏவுதல். (சி. சி. உ: எ0. மறை.)

பிரேரகன்—ஏவற்கர்த்தா. (சி. சி. உ: டு0. ஞாநப்.)

பிரேரகாசாரியன்—மூவகை யாசாரியரிலொருவன்; இவன்: சைவத்திற்கு யோக்கியர்களாகியமாணக்கர்களே உமக்கு அருள்செய்தற்கு யோக்கியர்களாகிய ஆசாரியரிவரென்று காட்டி அவரை யடையும்படி செலுத்தியுய்விப்பவன். (சைவச. ஆசாரிய. உகூ. உரை.)

பிரேரகாண்டம்—சுத்ததத்துவங்கள். (சி. சி. ச: ஙகூ. சிவாக்.)

பிரேரகாவத்தை–1. இருதயத்திருக்கின்ற பிரணவபஞ்சகலாரூப சிவத்துவமைந்தும், கலை முதல்வித்தியாதத்துவமேழும், ஆன்மதத்துவத்துக்குள் அந்தக்கரணநாலும், புறக்கரணமைந்துள் ளுருவாதிக்குசிதமாயிருக்கிற சட்சு ஒன்றும், தன்மாத்திரைகளோடொற்றுமையாயிருக்கின்ற பூதங்களோந்தினுள் நேத்திரத்துக்குசிதமாயிருக்கின்ற அக்கினி ஒன்றும் ஆகப்பதினெட்டுத் தத்துவமுஞ்சீவியாநிற்பது (ப-பாச. உஉ.) 2. கேவலாவத்தையைத்தீண்டாது சகலாவத்தை மாத்திரத்தைத் தீண்டிநிற்பது. (சி. சி. ச: ச0. ஞாநப்.)

பிரேரகாவத்தையிற்றுரியம்–சின்மாத்திரமாய்த் தன்னேக்காண்டல். (கூர்மபு. அரியய. கக. உரை.)

பிரேரக்காவத்தையிற்றுரியாதீதம்—சிவத்திற்கொப்பாகச் சிவத்துவாபி வியத்திமானுகத் தன்னேக்காண்பது.(கூர்மபு.அரியய.கக.உரை.)

பிரேரணம்—
பிரேரணை— } ஏவுதல்.(உ-ம்.)"சிவப்பிரேரணையின்றி யிற் ரூ னே யொன்றையுமறியாதாகையால்" (சி. சி. எ: உ. சிவாக்.)

பிரேரோவத்தை—ஆன்மாக்கிரியைகளே நடத்துமவத்தை. (வழக்.)

பிரேரித்தல்—1. சாதகர்ணிக்கு மாறுசெலுத்தல். (சி. சி. க: டுஅ. சிவஞா.) 2. தோற்றுவித்தல். (சி. சி. க: டுஅ. மறை.)

பிரேரிதம்—ஏவற்பட்டது. (வழக்.)

பிரேரியம்—செலுத்தப்படுவது. (சி. சி. ஙூ: ஙூ0. ஞாநப்.)

பிரேரியர்—ஏவற்பட்டவர், செலுத்தப்பட்டவர். (சி. சி. உ: ஙூ. ஞாநப்.)

பிரை—உறை. (உ-ம்.) "பாலினிற்பிரை போல" (திருவிளை. நாக. உஉ.)

பில்கல்–1. கொப்புளித்தல். (உ-ம்.) "நஞ்சு பில்கெயிற்றுப்புத்தேணுணேப்பள்ளிமீது"(கந்தபு. அசமுகிநகர். உசு.) 2. வழிதல். (உ-ம்.) "கணங்களுடற்குருதிபில்கியோட" (கூர்மபு. அந்தகாசுர. ஙஉ.)

பில்கி–சிறுதுவலையாகவிட்டு. (சிந்தாமணி.)

பில்குதல்—பில்கல்.

பில்லடை—சஃகுல்லி, ஒருணவு. (பிங்கல. ககஉ.)

பில்லணை—மாதர்காலணியிலொன்று. (வழக்.)

பில்லி–1. சூனியவித்தை. (வழக்.) 2. பூஞை. [தெலுங்கு.]

பில்லிக்குதாயன்—இலாமிச்சை.(மலையக.)

பில்லிப்படை—பில்லிப்பேய்ப்பரிகலம். (வைத்தியமூ. அக.)

பில்லியத்தி—பெருநெருஞ்சில். (வைத்தியபரிபா.)

பிலகரி—ஓரிராகம். (பொருட்டொகை நிகண்டு.)

பிலகாரி—பெருச்சாளி. (வைத்தியபரி.)

பிலசம்—1. கருஞ்சீரகம். (வைத்தியமூ அக.) 2 பெருஞ்சீரகம். (வைத்தியபரி.)

பிலஞ்சுலோபம்–ஏறும்பு. (சூ.நிக.ஙூ:எசு.)

பிலத்துவார்ம்—பாதாளவழி. (வழக்.)

பிலம்—1. கீழுறை. (சூ. நிக. டு: கச.) 2. குகை. (உ-ம்.) "பிள்ளைவெண்பிறையெயிற்ற பிலவாய்மறலியை"(கூர்மபு.தக்கன்வேள்.ஙடு.) 3. பாதாளம். (உ-ம்.) "எரிகுண்டநின்றுமகன் பிலத்தெழுவானெனப் – பைத்தநாஞ்சிலுள்வாயும்" (திருவிளை. நாக. சு.)

பிலம்பி–குச்சித்தமரத்தை. (வைத்தியபரி.)

பிலவ–வியாழவட்டகாகிய அறுபதுவருடங்களிலே மூப்பத்தைந்தாவதாண்டு.(வருஷாதி.)

பிலவங்க—வியாழவட்டமாகிய அறுபது வருடங்களில் நாற்பத்தோராவதாண்டு. (வருஷாதிநூல்.)

பிலவங்கம்–1. குரங்கு. (பி. நிக. உடு0சு.) 2. தவளை. 3. தேரை. (2, 3-வைத்தியபரி.)

பிலவம்—1. ஆடு. (வைத்திபரி.) 2. வாகை. (வைத்தியமூ. அக.)

பிலன்—பிலம். (உ-ம்.)"பிலனுறவழுத்தும்" (கந்தபு. திருவிளையாட். உகூ.) னகரம்போலி.

பிலாக்கு—ஒரு மூக்கணி. (வழக்.)

பிலாசீசை—கடற்றவளை. (பரதர் குழூஉக் குறிபோலும்.)

பிலாவநம் — நினைத்தல். (சி லி. கிரி. கரு. உரை.)

பிலாளகம்—புழுகுசட்டம். உ-ம்.) "நாப்பி லாளகமிரத்தம்" (தைல. தைலவ. நிகூ.)

பிலி—பூனைக்காஞ்சொறி. (தைல. தைலவ. கoகூ.)

பிலிற்றல் — 1. கொப்பளித்தல். (உ - ம்.) "தேன்பிலிற்றுநீர்மையதாய்" (வ-மா. கூ.) 2. சிந்தல். (உ-ம்.) "பெருக்கடையமுதத்தண்டுளி சிறிதுபிலிற்றிஞன்பிவிற்றிடலோடும்" (திருவிளை. நாகமெ. உஉ.) 3. தூற்றல். (வழக்.)

பிலுக்கன்–ஆடம்பரமுடையோன். (வழக்.) இவன் வெறும்பிலுக்கன்.

பிலுக்கு—ஆடம்பரம். (வழக்.)

பிலுக்குதல்—ஆடம்பஞ்செய்தல். (வழக்.)

பிலுகம்—செங்குன்றி. (வைத்தியபரி.)

பிலுபிலுத்தல்—ஈரடுக்கொலிக்குறிப்பு. (வழக்.)

பிலுபிலெனல் — ஓரீரடுக்கொலிக்குறிப்பு. (வழக்.)

பிழம்பு–திரட்சி. (உ-ம்.) "நகைமணிமகுட கோடிநள்ளிருட்பிழம்பைநக்கி" (நைடத. சுயம் வர. கூ.)

பிழா—1. ஓலைக்கலம். (வழக்.) 2. தட்டுப் பிழா. (உ-ம்.) "மலர்வாய்ப்பிழாவிற்புலரவாற்றி" (பெரும்பா. உஎசு.) 3. நீரிறைக்குங்கருவிகளி லொன்று. (சிலப்.)

பிழார்—இறைகூடை. (சூ. நி. எ: நிஅ.)

பிழி—1. கள். (சூ. நி. சு. உகூ.) 2. தேன். (உ-ம்.) "பின்னுமோர்சிருட்டிக்காகப்பிழிநுகர்ந் தறுகால்பாடும்" (கூர்மபு.) பலவ. சூ.)

பிழிதல்—சாரம்வடிதல். 2. பிசைதல். (உ-ம்.) "பிழிந்தார்களுடற்குருதிபில்கியோட" (கூர்மபு. அந்தகா. கூஉ.)

பிழியர்—கள்விற்போர். (சூ. நிம. கூ: கூசு.)

பிழியல்—தேன். (சிந்தாமணி.)

பிழிவு-1. பிழிதல். 2-தொழிற்பெயர்விகுதி.

பிழுக்கை — ஆடு முதலியவற்றின் மலம். பிழுக்கை வாரியும்பால் கொள்வர். (சுந்தரமூ. தேவாரம். திருவொற்றியூ. க.)

பிழை—1. குற்றம். (உ - ம்.) "பிழைபுரியா தேன்றன்னே" (பிர-காண். சிவதாந. கூ.) 2. சிறுமை. (உ-ம்.)"பிரகலாதன்-பிழைபடவைது வேதமுநிவரன்பெயர்ந்துபோனன்" கூர்ம பு. அந்தகா. அடு. 3. தவறு. (உ-ம்.) பிழையாவரி டத்ததுபேசுதிரே"(சிவரக.நந்திகணங்கள். கசு) 4. தெரிநிலைவினைப்பகுதி.

பிழைக்கடை — பிழக்கடை மருவிவழங்கு கிறது. மலமூத்திராதி பிழைநீக்குமிடம்; அது: வீட்டின் பின்புறமாம்.

பிழைக்கை—பிழைத்தல். (உ-ம்.) பிழைக் கையிலைக்கொடி. புகலூரந்தாதி; உழைக்கை யிலை என்னுமுதற்குறிப்புள்ள கவியிலறிக.

பிழைத்தல்—1. உய்தல். (உ-ம்.) "தேவரீ ரித்-தவமேவுமுருவெடுத்தேயுறைதலிந்தத்தர ணியெல்லாங்கண்டுபிழைத்திடத்தான்கண் டீர்" (சிவரக. சிவதன்மா. கo.) சீவசம்பண்ணு தல். (வழக்.) 3. தவறுசெய்தல். (உ-ம்.) "அந் நிலைபிழைத்ததீயோன்"(திருவிளை.அங்கம்.அ.)

பிழைப்பித்தல்—பிழைக்கச்செய்தல். (வழக்.)

பிழைப்பு—1, உயிர்க்கை. 2. சீவனம். 3. தவறு. 4. வாழ்வு. (உ-ம்.) "சீறும்பிழைப்பை" (திருவாச. நீத்தல். சகூ.) (1,2,3 வழக்.)

பிழைபாடு—பிறைபடுதல். (வழச்.)

பிள்ளுதல்—வெடித்தல். பிள்ளல். (வழக்.)

பிள்ளை—1. அணில், கீரி, பூனை, முயல்என் பனவற்றிற்காம். (சூ.நிக.கூ: சo.) 2. இளமைப் பருவமுடைய குழந்தை (பிங்கல. அகூஅ.) 3. கரிக்குருவி. (பிங்கல. உகூ, சகூ.) 4. காசம். (சூ. நிக. கூக-ளகரவெ. ம.) 5. கிளி. (சிந்தா.) 6. குரங்காதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை. 7. தெங்குகமுகிவற்றின்கன்று.(சூ.நிக.கூ:கூஅ.) (வழக்.) 8. நாயெழிந்தவற்றிற்காம். (சூ. நிக. கூ: கூஅ.) 9. பறவைக்குஞ்சு. (சூ. நிக. கூ: எo.) 10. மகன். (உ - ம்.) "வெம்பிடும்பிள்ளையைப் பார்த்து (தனிப்பா. சிவப்பிரகா. கூ.) 11. வயிர வன். (சூ நிக. க: உஎ.) 12. வெளாளரிலொரு வகையார் பட்டப்பெயர். கங்கையின் பிள்ளை யாயினதாலிப்பெயர் கூறுவர்.

பிள்ளைக்கட்டி—கருப்பங்கட்டி. (வைத்திய பரி.)

பிள்ளைக்கவி—ஒரு பிரபந்தம்; அது: செய் வங்கொலையகற்றிக்காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாராணை, அம்புலி யென் னுமிவ்வேழுறுப்புடன் ஆண்பாற் பிள்ளையா யின் சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னுமிம் மூன்றுறுப்பையும், பெண்பாற் பிள்ளையாயின் கழங்கு, அம்மனை, ஊஞ்சல் என்னுமூன்று றுப்பையுஞ்சேர்த்துப்பத்துறுப்புக்கும்பப்பத்து ஆசிரியவிருத்தத்தால் பலசந்தமாய்ப் பாடப்படு வது. பிள்ளைபிறந்தமாத மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதி

னேக்கு, பதினேழு, பத்தொன்பது இவைகளிலும், ஐந்தாமாண்டிலும், ஏழாமாண்டிலும், இக்கவிகேட்பிக்கப்படும். (இலக்கணவி. அ0சூ)

பிள்ளைக்கற்றழை—ஓர் கற்றழை. (வைத்தியபரி.)

பிள்ளைக்கிணறு—உட்கிணறு. (வழக்.)

பிள்ளைக்கைவலை — சிறுவலையல். இதற்குப்பிடிகம் என்று பெயர் கூறுவர். (சூ. நிக. எ: உச.)

பிள்ளைத்தக்காளி—மணத்தக்காளி. (வைத்தியபரி.)

பிள்ளைத்தமிழ் — பிள்ளைக்கவி. (இலக்கணவி. அ0சூ. உரை.)

பிள்ளைத்தாய்ச்சி—கருப்பஸ்திரி. (வழக்.)

பிள்ளைநிலை—போரிற் சென்றறியாத மறமக்கள் தாமே செய்யுந்தறுகணுண்மை (உ-ம்.) "வருவார்தாங்கல்வாழ்வாய்த்துக்கவிழ்தலென்றிருவகைப்பட்டபிள்ளைநிலையும்" (தொல். பொரு. சூ0.)

பிள்ளைபன்மை—மகார். (சூ. நிக. உ: அக.)

பிள்ளைப்பாட்டு — பிள்ளைக்கவி. (வழக்.)

பிள்ளைப்பிறை — இளம்பிறை (பிரபுலிங்கலீ. பிரபுதே. ஙக.)

பிள்ளைப்பூச்சி — உழுவான் என்கிற ஓர் பூச்சி. (வழக்.)

பிள்ளைமை — பிள்ளைக்கண்மை (உ-ம்.) "பிள்ளைமைவிளம்பினேபேதைதீயெனு" (இராமா. மந்திர. எஉ.)

பிள்ளையாட்டு —பிள்ளைப்பருவத்தோனைக் கொண்டாடிய வாட்டு. (உ-ம்.) "வாண்மலைந்தெழுந்தோனைமெய்ந்துபறைதூங்கநாடவற்கருளியபிள்ளையாட்டும்" (தொ. பொரு. சூ0.)

பிள்ளையார் — 1. இளையபிள்ளையாராகிய முருகக்கடவுள். (உ-ம்.) "பேராட்டிசீராட்டும் பிள்ளையார்கழல்போற்றி" (கோயிற்பு.பாயிர.எ.) 2. திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர். (உ-ம்.) 'புகலியின்மேலெழுஞ்செருங்காதல்பிள்ளையார்' (பெரியபு. திருஞான. கூசஎ.) 3. விநாயகர். (உ-ம்.) "பிள்ளையார்புராணம்" பார்.

பிள்ளையார்சுழி — ஊமையெழுத்து. ஒரு விஷயத்தை யெழுதுவோரெல்லாம் விக்கினநிவிர்த்தியாக, வ இதனையே முதலிலெழுதிக் கொள்வர்.(வழக்.)இதனைச்சத்திசிவவடிவமென்பர் பெரியார்.

பிள்ளைவங்கு–பாய்மரநிற்குங்குழி. ஓர்குழூஉக்குறி.

பிளகு—கமுகுவேர். (வைத்தியபரி.)

பிளத்தல் — 1. அறுத்தல். 2. போழ்தல். (1, 2-வழக்.)

பிளப்பு—1. பிளத்தல். பு-தொழிற்பெயர் விகுதி. 2. வெடிப்பு. (வைத்தியபரி.)

பிளவு-1.கீற்று.(பெரியபு.திருக்குறிப்பு.கஎ) 2. கொட்டைப்பாக்கு. (தைல. தைலவ.கஙஙி.) 3. துண்டு. 4. பிளப்பு. (உ-ம்.) "செழுமதிப்பிளவுவேய்ந்ததேவும்" (திருவீளை. அட்ட. கூ.) 5. வெடிப்பு. 6. வெடியுப்பு. (வைத்தியபரி.) (3, 5-வழக்.)

பிளவை—1. பிளக்கப்பட்டதசை. (உ-ம்.) "பைங்ஙிணப்பிளவை" (மலைபடு. கஎசு.) 3. வெடித்தபுண்; அஃது: இறைப்பிளவை, இராசபிளவை, உச்சிப்பிளவை, கும்பப்பிளவை, பக்கப்பிளவை, பனிச்சைப்பிளவையெனப் பல வகைப்படும். (வைத்தியமூ. அக.)

பிளாச்சி— } வரிச்சு: (வழக்.)
பிளாச்சு– }

பிளி—1. களஞ்சி. 2. கள். (1, 2-வைத்தியபரிபா.)

பிளிச்சி—சீனக்காரம். (வைத்தியபரி.

பிளிர்த்தல்—கொப்பளித்தல். (உ-ம்.) "வீளையுகஞ்சளைந்தொளிர்வனபிளிர்வன" (திருப்பு. ஙிஅ.)

பிளிற்றல்–கொப்பளித்தல்.(சூ.நிக.க:சுஙி.)

பிளிறல்—1. ஆரவாரம். (பிங்கல. உகசு.) 2. ஒலித்தல்.(உ-ம்.)"பிளிறியோடும்பிடியன்னபெற்றியாள்" (இராமா. கரன். உக.) 3. கீண்டல். (சூ. நிக. க: உஙி.)

பிளிறு — 1. எழுத்திலாவோசை. (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. தெரிநிலைவினைப்பகுதி. (உ-ம்.) "பெரியதாருகவருமுரித்தலைவோரநுப்பியபிளிறடற்-கரியுரித்து" (சிவரக. தேவியுடன்குமா. க.) 3. பேரொலி. (திருவீளை. அன்னக்கு. கஎ.)

பிற்துளம்—திருவாதிரை. (பரிபாடல்.)

பிற்கூறு—பிற்பகுதி. (வழக்.)

பிற்கொழுங்கோல்—உத்திரட்டாதி. (சூ. நிக. க: எஅ.)

பிற்பக்கம்—அபரபக்கம். (பரிபாடல்.)

பிற்படுதல்—பின்போதல். (வழக்.)

பிற்பாடு—பிறகு. (சிலப்.)

பிற்றல்—பின்றுதல். (வழக்.)

பிற்றி—பிந்திப்போனது. (வழக்.)

பிற்றை — 1. பிறகு, பின்பு. (புறநானூ.) 2. பின்னைநாள். (உ-ம்.) "பிற்றையிற்றுறந்தேகினுன்மதிக்குலப்பெருமான்" (சேதுபு. மங்கலதீ. அஎ.)

பிற்றைநிலை–வழிபாட்டுநிலை. (புறநானூ.)

பிற—1. அசைச்சொல். (உ-ம்.) "யாகாபிற பிறக்கரோபோமாதிகும்" (நன். இடை. உஉ.)

2. தெரிநிலைவினைப்பகுதி. 3. மற்றையவெனப் பொருள்படுமோரஃறிணைப்பன்மைப் பெயர். (நன்னூ. பெயரிய. உரை.)

பிறக்கடியிடல்--ஓடல். (தொல். பொரு. சூ0. உரை.)

பிறக்கணித்தல்- } இகழ்தல், நிந்தித்தல்.
பிறக்கணிப்பு— } (வழக்.)

பிறக்கம்—1. தொகுதி. (உ-ம்.) "மாமணிப் பிறக்கம்" (திருவாச. திருவண்ட. கஉச.) 2. மான்கொம்பு. (வைத்தியப்ரி.) 3. மலை. (பாரத. இந்திரப்பி. உறு.)

பிறக்கி—அடுக்கி. (உ-ம்.) "சூடுகோடாகப் பிறக்கி" (பொருந. உசஙூ.)

பிறக்கிட்டு—கொண்டையிலே முடித்து. (உ-ம்.) "நீர்திரண்டன்னகோதைபிறக்கிட்டு" (மதுரைக். நிசஉ.)

பிறக்கிடல்-1. பின்றல். (சூ. நிக. கூ: கறு.) 2. புறங்கொடுத்தல். (உ-ம்.) "மீதூலாவுமதிக் குடைமாரவேள்வேகமோடுபிறக்கிட" (சேதுபு. கத்துரு. கசச.)

பிறக்து—1. அசைச்சொல். (உ-ம்.) "பிற" பார். 2. தவறு, வழு. (சூ. நிக. கூ: கச.) 3 பின். (உ-ம்.) "பெரும்புவநத்திற்குநிகர்பிறிதில்லை யெனப்பிறக்கிற்கொண்டே" (வேதாரணியபு. இந்திரன்பாவஞ்சிந்திய. கச.) 4. பிறப்பேன்-தன்மையொருமைவினைமுற்று. (புறநானூ.) 5. பின்புறம். (உ-ம்.)"தசையினீடுபிறக்கிஞான் மழைதாங்கிநின்றதுதருமமே" (சேதுபு. சங்க தீ. கo.) 6. வேறு. (உ-ம்.) "அசைவிலூக்கத்து நசைபிறக்கொழிய" (சிலப். இந்திரவிழ. கூறு.) [இதனை வடமொழிச்சிதைவென்பர்; அது: பொருந்தாமையுணர்க.]

பிறக்குதல்—1. உண்டாதல். (சூ. நிக. கo: ஙசு.) 2. உற்பவித்தல். சீதைபிறக்க இலங்கை யழிந்தது. (வழக்.)

பிறகரீசம்—அகில். (மலையக.)

பிறகளை—மற்றையவை. (சிந்தா.)

பிறகிடல்—பின்றல். (பிங்கல. ககஙஙசு.)

பிறகு—1. பின்பு. 2. பின்புறம். (1, 2-வழக்.)

பிறகுத்தம்—வஞ்சிக்கொடி.(வைத்தியபரி.)

பிறங்க—பெருக்க. (புறப்பொ. வெ.)

பிறங்கடை—பிள்ளை. (உ-ம்.) "பிறங்கடை சேர்கருப்பமெலாங்கெடுக்கும்" (சேதுபு. துரா சார. உறு.)

பிறங்கல்—1. உயர்ச்சி. (பிங்கல. களசo.) 2. ஒளித்தல். 3. ஒளிசெய்தல், விளங்கல். (இராமா. பாலகா. திருவவதார. எக.) 4. செறிதல். (உ-ம்.) "பெற்றியசோலைப்பிறங்கிருள்வா ரண்மின்பேதையின்னும்" (வாண. உஉச.) 5. திரள். (உ-ம்.) "மென்றினைப்பிறங்கலும்" (சிந்தா-நாம. ககக.) 6. நிறைதல். 7. பெருமை. 8. மலை. (மணிமேகலை.) 9. மிருதி. (சூ. நிக: அ: எ.) (2, 6, 7-சூ. நிக. கக: றகரவெ. உ.)

பிறங்காது—பேராது.(சிந்தா.நாமக.களஙி.)

பிறங்கி—பெருத்து. (சிந்தா.)

பிறங்கிய—மிகுந்த. (புறப்பொ-வெ.)

பிறங்கு—தெரிநிலைவினைப்பகுதி.

பிறங்குதல்—1. உயர்தல். (உ-ம்.) "அறம் பூண்டார்-பெருமைபிறங்கிற்றுலகு"(வள்.உசு) 2. ஒளித்தல். (உ-ம்.) "பிறங்கெக்கலக்கும்-வித்தினர்போலவிடையுரவிடுத்தனர்" (தணிகை. களவு. உஙசு.) 3. நிறைதல். (சூ. நிக. அ: கறு.) 4. பிரகாசித்தல். (உ-ம்.) "பிறங்குங்கோலான். (திருவிளை. பழியஞ்சின. கஅ.) 5. பொிதாதல். (பத்துப்பாட்டு.) 6. வளர்தல். (சிலப்.) மிகுதலுமாம் என்பர். 7. வெளிப்படல். (உ-ம்.) வந்து முழிக்காண்க.

பிறசாதனம்—தேக்கு. (வைத்தியபரி.)

பிறசாரணி—கொடியார்கூந்தல். (மலையக.)

பிறத்தல்—பிறக்குதல். (உ-ம்.)"கறங்கு"பார்.

பிறத்திப்பூரம்— } நாயுருவி. (வைத்திய
பிறத்தியகபர்ணி— } பரிபா.)

பிறதகி—காிமுள்ளி. (வைத்தியபரி.)

பிறதேமம்—கடுக்காய். (வைத்தியபரி.)

பிறந்தகம்—தாய்மனை. (வழக்.) பிறந்த என்பது அகரந்தொகுத்தலாயிற்று.)

பிறந்தை—1. சுபாவம் (உ-ம்.) வந்தூழிக் காண்க. 2. துன்பம். (உ-ம்.) "பிணிக்குடையு முடற்சுமக்கும்பிறந்தைநீங்கி" (சிவராத். கட வுள். கஅ.) 3. பிறப்பிடம். (பரிபாடல்.) 4. பிறப்பு. (உ-ம்.) "வல்லமோன்பும்வரமும்பிறந்தையும்" (சேதுபு. பாலோடை. கறு.)

பிறநிறச்சார்பு — அரதநக்குற்றமைந்தனுளொன்று. (உ-ம்) "தராசம்"பார்.

பிறநூன்முடிந்ததுதானுடன்படுதல்-தந்திரயுத்தி மூப்பத்திரண்டனுளொன்று; அது: பிறநூலின் முடிந்தமுடிபைத் தானங்கீகரித்தல். (உ-ம்.) "பிறநூன்முடிந்ததுதானுடன்படுதற்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல்" (நன். கச.)

பிறப்பார்—நாய்வேளை.(வைத்தியமூ.அக.) (வைத்தியபரிபாடையில் தைவேளை என்பர்.

பிறப்பித்தல்—1. உண்டாக்கல். (சூ. நிக. கூ: உ.) 2. சிறப்பித்தல். 3. வெளிப்படுத்தல். (2, 3-வழக்.)

பிறப்பிலான்—பிறப்பிலி.

பிறப்பிலி—1. கடவுள். 2. சிவன். (பி. நிக. கூச.) எந்நூலும் யோனிவாயிற்பிறந்ததாகக்கூற வில்லை யென்றறிக.

பிறப்பிறப்பில்லான்—கடவுள். (உ-ம்.) அருணகிரியந்தாதியில், "எல்லார்பிறப்புமிறப்பு மியற்பாவலர்தஞ் - சொல்லாற்றெரிந்தேநஞ் சோணைச-ரில்லிற் – பிறந்தகதையுங்கேளேம் பேருலகில்வாழ்ந்துண்- டிறந்தகதையுங்கேட்டி லேம்" எனக்கூறுமாறுகாண்க.

பிறப்பு — 1. அச்சம். (பிங்கல. கஅருஉ.) 2. உற்பத்தி. (உ-ம்.) "பிறப்பையுமிறப்பையும் பிரிந்தான்" (பாரத. திருட். எஎ.) 3. சாதி. (வழக்.) உயர்ந்தபிறப்பிற்பிறந்தவன். 4. துவக்கம். (உ-ம்.) வந்திழிக்காண்க. 5. தோற்றம். (உ-ம்.) "இப்பிறப்பிலழுந்தாவகையெனையாண் டவன்" (திருக்கோ. கஉச.) 6. நெருக்கம். (பிங்கல. கூஅசo.) 7. பயம். (சூ. நிக. அ: நுடு.)

பிறமயிர்—பங்கி. (சூ. நிக. உ: கoக.)

பிறர்—அந்நியர். (உ-ம்.) "கேட்டோர்க்குப் பரிபவமென்பதுபிறராற்பட்டாலன்றே" (பார த. திருட். கஅ.)

பிறர்க்குப்பொருள்வரவையுவத்தல்-
பிறர்கருமத்திற்குடன்படல்—
பிறர்கருமமழிக்கவிரைதல்—
பிறர்செல்வம்போறுத்தல்—

இந்நான்குந்தயாவிருத்தியெட்டினுள்வொன்று. (பொருட்டொகை நிகண்டிற்காண்க.)

பிறர்தம்மதமேற்கொண்டுகூள்வு—நூன்மதமேழினொன்று; அது: பிறமதத்தையங்கீகரித்துத் தள்ளிவிடுதல். (உ-ம்.) "பிறர்தம்மத மேற்கொண்டுகூளவே" (நன். பாயிர. கக.)

பிறர்துயர்க்கிரங்கல்—தயாவிருத்தியெட்டினொன்று. (பொட்டொகை நிகண்டிற்காண்க.)

பிறர்துயர்காத்தல் — அறமுப்பத்திரண்டினொன்று. (பொருட்டொகைநிகண்டிற்காண்க)

பிறர்நூற்குற்றங்காட்டல்—நூன்மதமேழினொன்று; அது: பிறருடைய நூலிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டுதல். (உ-ம்.) "பிறர் நூற்குற்றங்காட்டலேனைப்- பிறிதொடுபடா அன்றன்மதங்கொளலே" (நன். பாயிர. கக.)

பிறர்பொருட்டானுமானம்—பரார்த்தானுமானம். (சி. சி. அள. அ. சிவஞா.)

பிறானுமானம் — பிறர்பொருட்டானுமானம். (சி. சி. அள. அ: சிவஞா.)

பிறையாந்தீர்த்தல்—பிறருடைய சந்தேகந் தீரல்; அது: தயாவிருத்தியெட்டினொன்று. (பொருட்டொகைநிகண்டிற் காண்க.)

பிறரோகி—வறட்சண்டி. (மலையக.)

பிறவி—1. உற்பத்தி. 2. கன்மமலம். (உ-ம்.) "பிறவிமாயா-விருளெலாமிரிக்கலாகும்" (சி.சி. பாயிர. நி. ஞானப்.) [ஆகுபெயர்.] 3. சகோதரம். (1, 3-வழக்.)

பிறவிவினை—சாதகன்மம். (உ-ம்.) "தையலார்களொருநூறுதநயர்ப்பயந்தாரவர்தமக்குச்- செய்யும்பிறவிவினைமூடித்து" (சேதுபு. அநுமகுண்ட. உடு.)

பிறவினை—பிறகருத்தாவின்புடைபெயர்ச்சியாய்த் தொழிற்படுஞ்சொல். (உ-ம்.) "பிறவினை விகுதி"

பிறவு—பிறப்பு. (உ-ம்.) "ஏனைப்பிறவாய்ப் பிறந்திறந்தெய்த்தேனை" (திருவாச. திருவம். கச.)

பிறழ்ச்சி—பிறழ்தல். சி-தொழிற்பெயர் விகுதி.

பிறழ்தல்—1. ஒளிசெய்தல். 2. சொல்லல். (பி. நிக. உoo கூ.) 3. திரும்புதல். (உ-ம்.) "நாளெனப்பிறழுமீன்கள்" (கந்தபு. ஆற்று. கூஅ.) 4 நடுக்கம். 5. விளக்கம். (உ-ம்.) "பிறழ்பூங்கரும்பின் றிணியார்வரிசிலை" (திருநூற். அஎ.) 6. வேறுதல். (1, 4, 6-சூ. நிக. கக: ச.)

பிறழ்ந்து—திகைத்து. (பரிபாடல்.)

பிறழ்வு — பிறழ்ச்சி. உ-தொழிற்பெயர் விகுதி.

பிறழிய—முரிந்த. (பத்துப்பாட்டு.)

பிறழும்—புரமூம். (ஐங்குறு.)

பிறன்—அந்நியன். (வள். கசஎ.)

பிறன்கோட்கூறல்—தந்திரயுத்தி முப்பத்திரண்டனுளொன்று; அது: தன்னூலிற்பிறனது கோட்பாட்டைக்கூறுதல். (உ-ம்.) "தானெடுத்துமொழிதல்பிறன்கோட்கூறல்" (நன். கச.)

பிறுகாண்டம்—சரகண்டபாடாணம். (வைத்தியபரி.)

பிறுண்டு—வேறிடம். (தொல். சொல். க. சேநா.)

பிறுழட்டி—1. சித்தாமுட்டிவேர். 2. சாயவேர் என்றுஞ்சொல்வர். 3. மயிர்மாணிக்கம். (1, 2, 3 வைத்தியபரி.)

பிறித்தல் — 1. பங்குபடுத்தல். 2. வேறுபடுத்தல். (1, 2-வழக்.)

பிறிதல்—1. நீங்குதல். 2. வேறுபடல். (1,2-வழக்.)

பிறிதாராயிச்சியணி— விபாவநாலங்காரம். (குவல. கூச.)

பிறிதின்கிழமை—தன்னோடொற்றுமையில்லது. (நன்னூ. பெயரிய. சகூ. உரை.)

பிறிதினவிற்சி—பிறிதினவிற்சியணி; அது: வருணிக்கவேண்டும்பொருள் அதற்குரித்தான

சொல்லாற் கூறப்படாது மாமகிழ்விக்கும்படி மற்றொருவிதத்தாற் கூறப்படுவது. (உ - ம்.) "கருதுபொருளுக்குரித்தாம்விதத்தின்றிக்காட்டன்மற்றை, ஒருவிதத்தென்னிற்பிறிதினவிற்சி" (குவல. உகூ.)

பிறிதினியைபுநீக்கியவிசேடணம்-பிரிதோடியைபுநீக்கியவிசேடணம். (சி. சி. பாயிர. க. சிவஞா.)

பிறிது—வேறு. (ஐங்குறு.)

பிறிதுபடுபாட்டு — சித்திரகவியிலொன்று; அஃது: ஒரு செய்யுளைத்தொடையும் அடியும் வேறுபட உரைப்பச்சொல்லும்பொருளும் வேறுபடாது வேறொருசெய்யுளாகப் பாடுவது. (இலக்கணவி. நிகழ.)

பிறிதுமொழிதல்—கருதியபொருளை மறைத்து அதனைப் புலப்படுத்தும்பொருட்டு, அது போன்ற பிறிதொன்றனைச்சொல்வது.(தண்டி. நிக. உரை.)

பிறிதோடுபடாறன்மதங்கொளல்—நான்மதமேழிலொன்று; அது: பிறர்மதத்திற்குடன்படாஞகித் தன்மதத்தைக்கொளல். (நன்.பாயிர. சக.)

பிறிப்பு—பிரிப்பு. (வழக்.)

பிறியகம்—1. கடம்பு. 2. ஞாழல். 3. வேங்கை. (1, 2, 3-வைத்தியப.)

பிறிவித்தல்–விடுவித்தல். (உ-ம்.) "பிறிவிப்பான்மலங்களெல்லாம்பின்னுயிர்கருளிஞலே" (சி. சி. எ: ச.)

பிறிவினை—பிரிவினை. (வழக்.)

பிறிவு—பிரிவு. (உ-ம்.) "பிறிவிலன்மலத்திஞலெம்வியாபிகேவலத்திலான்மா" (சி. சி. ச: ஈஅ.)

பிறை—1. இணையாவினைக்கை மூப்பத்து மூன்று வகையுளொன்று; அது: பெருவிரலைப் பின்வாங்கிநீட்டி மற்றையவிரல்களை முன்ஞகை நீட்டுதல். [சிலப்பதிகாரவுரையாசிரியர் இளம் பிறையென்ப.] 2. வாலசந்திரன். (உ - ம்.) "பிறைகலந்தபிரமாபுரமேவிய" (தேவார. பிரம புர. கூ. சம்பந்த.)

பிறைசூடி—சிவன். (உ-ம்.) "பித்தாபிறைசூடீ" (தேவார. திருவெண்ணெ. க. சுந்தர.)

பிறைதொழுகேன்றல் — அகப்பொருட்துறைக்கிளவியிலொன்று; அது: பிறையைக் காட்டித்தான்றெழுதுநின்றுநீயும் இதலை த் தொழுவாயாகவெனத்தோழி தலைமகளதுபுணர்ச்சிநினைவறியாகின்றல். (திருக்கே. கூள. மூகம்.)

பிறைமலர்—அகத்தி. (வைத்தியபரி.)

பிறைமுகவாளி— } அர்த்தசந்திரபாணம்,
பிறைமுகாத்திரம்– } பிறைவாயம்யென்றுங்கூறுவர்.

பிறையிநம்பு—அரிவாள். (சிந்தா. நாமக. நிடு.)

பிறேகி—வறட்சண்டி. (மலையக.)

பிறேசனம்—புரசமரம். (வைத்தியபரி.)

பின்–1. ஏழனுருபிலொன்று. (உ-ம்.) "பின்பாடூளதேமுழைவழியுழியுளி" (நன். பெயரிய. சகடு.) 2. பின்பு. (உ-ம்.) "மூடிப்பமூடித்துப்பின்பூசுவபூசி"(நீதிநெறி. கூ0.) வழியென்றுமாம்பின்னென்னும் பொருடரும். (சூ. நிக. அ: சக.) 3. தெரிநிலைவினைப்பகுதி.

பின்தூமீ—பின்சிகை. (வழக்.)

பின்கோக்கி — ஆபரணக்கடைப்புணர்ப்பு. (வழக்.)

பின்சிகை—பஞ்சசிகையிலொன்று; அது; பிடரிற்கிடக்கு மயிர்முடி. (வழக்.)

பின்பகல்—அந்திக்காலம். (உ - ம்.) "பின்பகற்பிறர்த்தேருநெஞ்சமுமேமுற்றுய்" (கலி. எசு.) உச்சிக்குப்பின்என்றுமாம். (புறப்பொ-வெ.)

பின்பற்றல்— } பின்றொடர்தல். (உ - ம்.)
பின்பற்றுதல்– } "எமக்கிடுமெமக்கிடுமெ னப்பின்பற்றியே" (திருவிளை. வளை. உஅ.)

பின்பனி–ஆறுபருவத்தொன்று; அது: மாசிபங்குனி. (சூ. நிக. க: அஎ.)

பின்பனியுரிமை– உலவைக்காற்று வீசலும் பல புறவினமுங் கான்கோழியுமகிழ்தலுங் கோங்குமிலவம்பூத்தலும் பேரிந்து பனையிவை பழுத்தலும் பருத்திவெண்சுளைவெடித்தலு மாகும் என்பர்.

பின்பிறந்தாள்—1. இலக்குமி. 2. தங்கை. (1, 2-வழக்.)

பின்பிறந்தோன்—தம்பி. (வழக்.)

பின்பு—பின். (உ-ம்.) "பின்பக்கொடிமன்னுபமந்நியனைப்பெற (கோயிற்பு.வியாக்கி.உக.)

பின்முடுதுவேண்பா — பின்னிரண்டடியு முடுக்காய்வரப்பாடும் வெண்பா. (வழக்.)

பின்முரண்–இண்டாஞ்சீரும் நான்காஞ்சீரு முரணத்தொடுப்பது. (யாப்-காரிகை. ஒழிபிய. நி. உரை.)

பின்முலம்—சித்தாமுட்டி. (வைத்தியபரி.)

பின்மொழிநிலையல்–பின்மொழிக்கட் பொருணிற்பது. (உ-ம்.) "முன்மொழிநிலையலும் பின்மொழிநிலையலும்"(தொல். சொல். சகக.)

பின்மோனை–இரண்டாஞ்சீர்க்கண்ணு மிறுதிச்சீர்க்கண்ணுமோனைவருவது.

பின்வருநிலை — ஓரலங்காரம்; அஃது: ஒரு செய்யுளிலே முன்வந்தசொல்லும் பொருளுந்

தனித்தனியாயினுங் கூடியாயினும் பலவிடங்களிலே பின்னும் வருவது; இது: சொற்பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, சொற்பொருட்பின்வருநிலையென மூவகைப்படும். (உ-ம்.) "முன்வருஞ்சொல்லும்பொருளும்பலவயிற்-பின்வருமென்னிற்பின்வருநிலையே" (தண்டி. சக.)

பின்வருவிளக்கணி — ஆவர்த்தீபகாலங்காரம்; அது: விளக்கணியில்விளங்குந் தருமத்தினெற்றுமையை ஆங்காங்குத் திரும்பக்கூறல். (குவல. கசு.)

பின்றல்—பிறகிடல். (சூ. நிக. கு: கடு.)

பின்று—பின்னாள். (வழக்.)

பின்றுதல்—பின்றல்.

பின்றை—1. பின்பு. (உ-ம்.) "இங்கிதுபோய பின்றையிறுதிசெய்கணிச்சியொன்று" (கந்தபு. தக்கியுத். கoஉ.) 2. பின்னாள். (பிங்கல. உஅடு.)

பின்றொடரி—1. திசைப்பூண்டு. 2 ஆடையொட்டி. (1, 2-வைத்தியபரி.)

பின்றொன்றல் — தம்பி, பின்றோன்றுதலுடையவன். (வழக்.)

பின்னகம்—1. பேதி. (வைத்தியபரிபா.) 2. மயிர்முடி. (உ-ம்.) "ஆண்பான்மயிர்முடியென்பர்" (பிங்கல நிக. கoஎகூ.)

பின்னடைப்பன்—பசுநோயிலொன்று. (வழக்.)

பின்னணி — பிற்படை, கூழை. (சூ. நிக. உ: அகூ.)

பின்னதுநிறுத்தல் —தந்திரயுத்திமுப்பத்திரண்டிலொன்று; அஃது: ஒருபொருட்குக் கருவியாய் முன்வைத்தற்குரியதை முன்வைத்தற்கிடம்பெறுதாயின் அப்பொருளின் பின்னே அதனைவைத்தல். (உ-ம்.)"முன்மொழிந்துகோடல்பின்னதுநிறுத்தல்" (நன். கச.)

பின்னம்—பின்பு. (உ-ம்.) "மள்ளர்-பின்னந்தண்டஞ்செய்தனர்கேட்க" (திருவிளை. பழியஞ். உசு.)

பின்னர்—1. பிறகு. (உ-ம்.) "பின்னருமேசெப்புகின்றான்" (சிவரக. அபுத்தி. கு.) 2 பின்னோன். (சிலப்பதி.)

பின்னல்–1. ஒன்றைவிட்டொன்றுபிரிக்கக்கூடாதபடி சிக்குண்டிருத்தல். (உ-ம்.) "ஞாயவெள்ளியம்பலத்துளாடுங்-கனைகழனிழலிற் பின்னி" (திருவிளை. பழியஞ். உ.) 2. சடை. (சூ. நிக. உ: கoஉ.) 3. பின்னப்பட்டது.(வழக்.) 4. பின்னுதல், கயிறுமுதலியவற்றைப்பின்னலென்க. 5. முடைதல், பாய்முதலியவற்றை முடைதலென்க.

பின்னவர்—சூத்திரர். (சூ. நிக. உ: உசு.)

பின்னவன்-தம்பி. (உ-ம்.)"பின்னவன்பெற்றசெல்வமடியனேன்பெற்றதன்றே" (இராமா. கைகேசிசூழ்வி. கக0.)

பின்னி—தங்கை. (உ-ம்.) "வசிட்டமுனிக், கற்பார்தருபின்னியைமன்னுமணக்கடனு லுடனுநெறிகண்டனனே"(சேகாயிற்பு. வியாக்கி. உகூ.)

பின்னிசுவு — பின்னுக்குவளைக்குந்தம்பவாதம். (சீவரட். கசுடு.)

பின்னிடல்— } பின்னேபோதல். (உ-ம்.)
பின்னிடுதல்– } "செம்மசாகரந்தனைப் பின்னிடப்பெறலாம்" (சிவரக. சிவனடியார். எ.)

பின்னியாக்கம்—குந்துருக்கம். (மலையக.)

பின்னியாசம் –பெருங்காயம். (வைத்திய பரிபா.)

பின்னுதல்—1. கூறல். (ஆசிரியநி. கo: க.) 2. தெற்றல். (வழக்.)

பின்னை—1. இலக்குமி. (சூ. நிக. கக: ணகர வெ. சு.) 2. இளையவள். (உ-ம்.)"வெள்ளிமலையெடுத்தலகைமூன்றுங் – காவலோன் பின்னை" (இராமா. சூர்ப்பநகை. ஙகூ.) 3. பின்பு. (உ-ம்.) "யானுமிங்கிருந்தனன் பின்னையாரிருந்துமென்" (கந்தபு. சூரன்றண்டஞ். கஅ.) 4. பின்னாள்.

பின்னைகேள்வன்—திருமால். (சூ. நிக. க: கசo.)

பின்னைநாள்—பின்னாள், மறுநாள்.(சூ.நிக. க: அகூ. உரை.) ஐ-சாரியையென்றார். (சீவக சிந்தாமணியுரையில்.)

பின்னோன்—1. தம்பி. (சூ. நிக. உ: எஎ.)

பினத்தல்— } பிதற்றுதல். (வழக்.) **பினற்**
பினத்துதல்– } றுதல்எனவுங் கூறுவர்.

பினாகபாணி—சிவன். (சூ. நிக. க: கூ.)

பினோர்—பின்னோரென்பதிடைக்குறையாயினது.

பினை–பின்னை என்பது இடைக்குறையாயினது. தொல்காப்பியம் உரிச்சொல்லியலில், பினையென்பதற்குப் பெட்பின்பொருளாகிய புறந்தருதலென்றும், பெட்பின் பொருளாகிய விரும்புதலென்று முரைகூறினர்.

பீ.

பீ—1. அச்சம். (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. மலம். (நன்னூ. உயிர். உஅ.)

பீக்கம்–எட்டிக்கொட்டை.(வைத்தியபரி.)

பீக்கருவேல்—ஒரு மரம். (வைத்தியபரி.)

பீக்கலாட்டம்—தொந்தரவு. [தெலுகு.]
பீக்கலரத்தி–சங்கங்குப்பி. (வைத்தியபரி.)
பீக்கை—வசளை. (வைத்தியபரி.)
பீச்சல்—கழிச்சல். (வழக்.)
பீச்சாக்கத்தி— } சிறியகத்தி. (வழக்.)
பீச்சாங்கத்தி— }
பீச்சாங்குழல்—மலசலம்வாங்குமோர் சூத்திரக்குழல். (வழக்)
பீச்சுவிளாத்தி — ஒருநாற்றமுள்ள விளாமரம். (வழக்.)
பீசகணிதம் — வீசகணிதம், ஒரு சோதிடநூல். (வழக்.)
பீசணி—ஒரு யோகினி. (வி-ணி.)
பீசநியாயம்–மூலநியாயம்; அது: பிசாங்குரநியாயமென்பர். (உ-ம்.) "தாலபீசநியாயம்"பார்.
பீசம் — 1. சபீசதீட்சை. (சி. சி. அ: ஞாநப்.) 2. சுக்கிலம்; இவன்: நீசபீசத்திற்குப் பிறந்தவன்என வசும்வழக்குண்டு. 3. தாமரைப் பூச்சுருள். 4. பிடிக்கு. (உ-ம்.) "கோரிசம்"பார். 5. பீசாட்சரம். 6. மூலம். (உ-ம்.) "பீசநியாயம்" பார். 7. விதை. (2, 3, 7-வைத்தியபரி.)
பீசாங்குரநியாயம்—சகத்திர நியாயங்களுளொன்று; அது: காரணமிதுவதுவென முற்பிற்பாடு வரையறுக்கப்படாவழக்கு. (உ-ம்.) "தாலபீசநியாயம்"பார்.
பீசாட்சரம்—மூலவெழுத்து. (வழக்.)
பீசி—பீசத்தையுடையது. (வழக்.)
பீசைப்புல்–ஒருபுல்.(வழக்குண்டுபோலும்)
பீஞ்சல்—பீச்சுவிளா. (வைத்தியபரி.)
பீட்டை—இளஞ்சூல். (சூ. நிக. ச: கூஅ.)
பீடணவைரவன் — சிவலோகக்கோட்டை உத்தரவாசலிற் சாமுண்டியென்னுஞ் சத்தியுடன்காக்கைவாகனத்தில் தனக்குச்சமானமான கோடிபடர்களுடன் கூடியிருப்பவன்.(வி-ணி.)
பீடணி–ஒருபாலாரிட்டதேவதை.(வி-ணி.)
பீடநம்—பீடை. (உ-ம்.) வந்துழிக்காண்க.
பீடம்—1. ஆசனம். (உ-ம்.) "பீடஞ்செய் தாமரையோன்பெற்றபின்னையை" (திருக்கோ. கூக.) 2. சிவசத்தி. (சைவவி.)
பீடி—தெரிநிலைவினைப்பகுதி.
பீடிகை — 1. அணிகலச்செப்பு. (பிங்கல. கஎடுஅ.) 2. ஆசனம் 3. கடைவீதி. 4. பூந்தட்டு. 5. முகவுரை. (வழக்.) (2,3,4-பிங்கல.கூஅசஉ.)
பீடித்தல்– } தூண்புறுத்தல். (வழக்.)
பீடிப்பு— }
பீடு–1. குறைவு. [தெலுகு.] 2. பெருமை. (சூ. நிக. அ: கo.) 3. வலி. (ஞானமிர்.)
பீடை—1. துன்பம். (சூ. நிக. அ: எகூ.) 2. நோய். (வழக்.)
பீத்து—வீம்பு. (வழக்.) சும்மா பீத்தாதே.
பீத்துதல்—வீம்புபேசுதல். (வழக்.)
பீத்தை—நாடா. ஒரு சூழஉக்குறிபோலும்.
பீதக்கதலி– } செவ்வாழை. (வைத்திய
பீதகதலி— } பரிபா.)
பீதகந்தம்—பன்றி. (வைத்தியபரி.)
பீதகம்—1. அரிதாரம். 2. இருவேலி. 3. சாந்து. 4. தேன். 5. பித்தளை. 6. பொன். 7. பொன்னிறம். 8. மஞ்சள். 9. வெட்டிவேர். (சூ. நிக. கக: தகரவெ. ககூ.) (6,7-சூ நிக.சு:உ.) (1, 2, 3, 4, 5, 7, 8-வைத்தியபரி.)
பீதகன்—வியாழன். (பிங்கல. உகூஉ.)
பீதகாட்டம்–செஞ்சந்தனக்கட்டை. (வைத்தியபரி.)
பீதகாபேரம் — 1. பித்தளை. 2. மஞ்சள். (1, 2-வைத்தியபரி.)
பீதகாரம்— } வேங்கை. (வைத்தியபரி.)
பீதகாரகம் - }
பீதசந்தநம்–பொதியையிலுண்டானசெஞ்சந்தனம். (வைத்தியபரி.)
பீதசம்பகம்—ஒருவகைச்சண்பகம்.(வைத்தியபரி.)
பீதசாரகம்—வேங்கை. (வைத்தியபரி.)
பீதசாரம்—1. சந்தனம். (மலையக.) 2. செவ்வள்ளி. 3. வேங்கைமரம். (2, 3-வைத்தியபரி.)
பீதசாரி—சந்தனம். (வைத்தியபரி.)
பீதசாலம்–வேங்கைமரம்.(பிங்கல.உசுசுடு)
பீதத்துநு—மரமஞ்சள். (வைத்தியபரி.)
பீதத்துநுமம்—தேவதாரம்.(வைத்தியபரி.)
பீதத்துவயம்–கஸ்தூரிமஞ்சள்,கப்புமஞ்சள் என இருவகைமஞ்சள். (தைல. தைலவ. கூகூ.)
பீததாரு—1. செம்புளிச்சை. 2. தேவதார மரம். 3. புன்னை. (1, 2, 3-வைத்தியபரி.)
பீதநம்—1. அரிதாரம். 2. குங்குமம். (1,2-வைத்தியபரி.)
பீதநேகம்—பித்தளை. (வைத்தியபரி.)
பீதிநி—மூவிலைப்புன்னை. (வைத்தியபரி.)
பீதபீசம்—வெந்தயம். (வைத்தியபரி.)
பீதபூதம்—கொம்மட்டிமாதளை.(வைத்தியபரிபா.)
பீதபூதி—செம்மல்லிகை. (வைத்தியபரி.)
பீதபூரம்—கொம்மட்டிமாதளை.(வைத்தியபரிபா.)
பீதம்—1. அரிதாரம். 2. சந்தனம். 3. நால்வகைச்சாந்திலொன்று. 4. பொன். (சூ. நிக. சு: உ.) 5. பொன்னிறம். 6. மஞ்சள். (3, 5-பிங்கல. கூஅசச.) (1, 2, 6-வைத்தியபரி.)
பீதமணி—புட்பராகம். (வைத்தியபரி.)
பீதழகம்-கொம்மட்டிமாதளை.(வைத்தியபரி)

பீதயூகி—செம்மல்லிகை. (மலையக.)
பீதராகம்–1. தாமரைநூல். (வைத்தியபரி.) 2. பொன்னிறம். பீதம்-பொன். ராகம்-நிறம்.
பீதரோகணி—ஒருமருந்து. (வைத்தியபரி பாடையிலே பிருகாளனப். பெயர்கூறுவர்.)
பீதரோசனை — ஒரு மருந்து. (வைத்திய. பரிபா.)
பீதலகம்– } பித்தளை. (வைத்தியபரி.)
பீதலம்— }
பீதவண்ணம்—கடுக்காய். (வைத்தியபரி.)
பீதன்–அச்சமுள்ளோன். (சூ. நிக. உ: சச.)
பீதனேகம்—பித்தளை. (வைத்தியபரி.)
பீதாம்பான்–திருமால், பொன்வத்திரமுள்ளவன். (சூ. நிக. க: கசு.)
பீதாம்பரி— } பார்வதி. (உ-ம்.) வந்துழிக்
பீதாம்பரை– } காண்க.
பீதாரு—வெள்வேல். (வைத்தியபரி.)
பீதி—பயம். (உ-ம்.) "பீதிக்கிடமாயிருள் சூழ்பெருங்காடென்றுமுளதால்" (ஞா ந வா. மனத்தின். கசு.)
பீதிகை—செம்மல்லிகை. (வைத்தியபரி.)
பீதை—1. பொன்னிறப்பூவுளமருதோன்றி மரம். 2 மஞ்சள். (1, 2-மலையக.)
பீநீதோல் — மீந்தோல், மேற்றோல், மீந்தோலென்பது இக்காலத்துப்பீந்தோலென மருவிவந்தது. (நன்னூ. உயிரீற். உஅ. உரை)
பீநக்கி—நாக்குப்பூச்சி. (வைத்தியபரி.)
பீநசக்கிருதம்—ஒருவகைத்தைலம். அதனிலக்கணம் "இரத்தமூரோசநம்" என்னுஞ்செய்யுளிற் காண்க. (தைல. தைலவ. கoக.)
பீநசக்குறட்டை—ஒருபூடு. (வைத்தியபரி.)
பீநசத்தர்ச்சியம்—பீநசக்கிருதம். (தைல. தைலவ. கoக.)
பீநசத்தைலம்–நல்லெண்ணெய், நொச்சிச்சாறு, இவற்றோடு பிறவுஞ்சேர்ந்து வடிக்கப்படுந்தைலம். அதன்விவரம் "எண்சுரசஞ்சாலை .....பீநசநோய்க்கியமன்மன்னே" (தைல. தைலவ. அசு-ல் காண்க.)
பீநசம்–ஒருவகைநோய். (தைல.தைலவ. உ.)
பீநத்துவம்—பருத்திருத்தல். (சி. சி. அள அளவை. க. சிவாக்.)
பீநாற்றமரம்– } பெருமரம். (வைத்திய
பீநாறி— } பரிபா.
பீநாறிச்சங்கு—ஒருசெடி. (வழக்.)
பீநிசம்—பீநசம். (வழக்.)
பீமசேநன் — வீமனுக்கொருபெயர். (அபி தாநசி.)
பீமநாதன்—1. அகங்காரத்திற்கு அபிமான தேவதை. (சி. சி. உ: எக. சிவாக்.) 2. கைலாயத்தில் நிருதிதிக்கிலிருக்கிற காவலாளி. (அபி தாநசி.)
பீமபாகம்—பீமபாகம், நளபாகம் என்னும் பாகவகையிலொன்று. (வழக்.)
பீமபீடம்—சத்திபீடங்ளுளொன்று. (அபி தாநசி.)
பீமம்–1. அச்சம். (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. வித்தியாகலையிற் புருடதத்துவத்திருக்கும் ஆறு புவநங்களுளொன்று. (சி-லி. கிரியா. உக. உரை.)
பீமர் — 1. சிவமூர்த்தியின் திருநாமங்களுளொன்று. (அபிதாநசி.) 2. ராகதத்துவத்திருக்கும் பதினேருருத்திரரிலொருவர். (வீ-ணி. உஎச.)
பீமராதி—பிறந்த எழுபத்தேழாமாண்டினே ழாமாதத்தேழாமிரவு. (இஃதொருகண்டமென்பர். (சோதிட.)
பீமருபி—ஒருபாலாரிட்டதேவதை. (வி-ணி. உகூஅ.)
பீமன் — 1. சதருத்திரரிலே வருணதிக்கினிருக்கும் தசருத்திரரிலொருவன். (வீ-ணி.) 2. சிவன்; இது: சகத்திரநாமத்திலொன்றென்பர். 3. பாண்டுமைந்தரிலொருவன். (பாரதத்திலறிக.) 4. விதர்ப்பதேசத்தரசன். (நளன்கதையிலறிக.)
பீமேசுவரம்—1. பிரதிட்டாகலையில்ஆகாயதத்துவத்திலிருக்கும் எட்டு புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. உரை.) 2. வசவர் பூசித்ததலம். (அபிதாநசி.)
பீமை–ஒருசத்தி. தண்டியென்னுமசுரனைச் சங்காரிக்கப் பீமை என்னுஞ்சத்தியாயவதரித்தவளென்பர். (அபிதாநசி.)
பீர்–1. அச்சம். (பிங்கல. கஅடுஉ.) 2. பசலைநிறம். 3. பீர்க்கு. 4. மூலப்பால். 5. தூளி. (வழக்.) 6. வெளுத்தல். (சிந்தா.) (2, 3, 4-சூ. நிக. கக: ரகரவெ. கடு.)
பீர்க்கு—ஒருகொடி; அது: கருக்குப்பீர்க்கு, நுரைப்பீர்க்கு, பெய்ப்பீர்க்கு என மூன்று வகைப்படும் (வைத்தியபரி.)
பீர்விடல் — பெருக்கெடுத்தல். (உபதே. விபூதி. ஙஅ.)
பீரம்—1. பீர்க்கு. (பிங்கல. உகூஅ.) 2. பூவரசமரம். 3. வாகைமரம். 4. வீரம். (2, 3, 4-வைத்தியபரி.)
பீரீடுதல் — பீரிடல், பால் நீர் இவைகள் கம்பிபோலப்பாய்தலென்க.
பீரீதம்—சதகுப்பை. (வைத்தியபரி.)
பீரு — 1. அச்சமுள்ளோன். (சூ. நிக. கக: ரகரவெ. உச.) 2. புருவம். (வைத்தியபரி.)

பீநகம்—1. ஆந்தை. 2. கரடி. (1, 2-வைத்தியபரி.)

பீநகன்—அச்சமுடையோன். (சூ. நிக உ: சசை.)

பீநகா—பீதரோகிணி. (வைத்தியபரி.)

பீநநீத்தி-தண்ணீர்விட்டான்கிழங்கு.(உ-ம்.) "செங்குவளையலர்பீருதந்தியதிமதுரம்" (தைல. தைலவ. நிகண்.)

பீரை—பீர்க்கு. (உ-ம்.) "பீரைநாதியசுரையிவர்மருங்கின்" (புறநா. ககச.)

பீரோடல்— } பால் இரத்தமுதலியன பெ
பீரோடுதல்— } ருக்கெடுத்துப் பாய்தல்.

பீலி—சிற்றூலவட்டம். (சூ. நிக. எ: கஅ.) 2. சிறுகிங்கம். 3. பறைப்பொதி. (சூ. நிக. எ: சகஉ.) 4. பனங்குருத்து. 5. பெருஞ்சவளம். 6. மயில். 7. மயிற்றோகை. (உ-ம்.) "பீலிகட்டியதன்மீதுமொய்த்தொளிபிறங்கு" (அரிச்ச. வேட்டசூ. எ.) 8. மேல. 9. மாதர் காலணியிலொன்று. (சிலப்பதி.) 10. வாய்க்கால்போற் றண்ணீர்பாய்தற்கு மரமுதலியவற்றாற்செய்யப்படுங்கருவி, பத்தல். (4,10 வழக்.) வைத்தியபரிபாஷையில் நத்தையோட்டிற்குங் கூறுவர். (2, 5, 8-பிங்கல. கஅசசு.)

பீலிக்கதஞ்சக்கதுடை — பிச்சம். (பிங்கல. கருங்கச.)

பீலிக்கதஞ்சம்—இதற்குத்தொங்கல்என்பர். (சூ. நிக. கக: ஙகரவெ. க.)

பீலிக்துடை—மயிற்றோகைக்குடை, இதற்குச் சுழல்எனப் பிங்கலநிகண்டிற் கூறுவர்.

பீலிகை—எறும்பு. (வைத்தியபரி.)

பீலித்தண்டு-பிண்டிபாலம். (சூ.நிக.எ:கo.)

பீலிப்பட்டை — பயிர்க்குநீரிறைக்கும் பூட்டை. (வழக்.)

பீலு—எறும்பு. (உ-ம்.) "பீலுவாதி"பார்.

பீலுவாதம் — பைபீலவாதம். பைபீலம்-எறும்பு.

பீலுவாதி—பைபீலவாதி.

பீவரம்—ஆமை. (உ-ம்.) வந்துழிக்காண்க.

பீவரி—1. அமுக்கிரா. 2. பசு. 3. பருவப்பெண். 4. பெண்இளி. (1, 2, 3, 4-வைத்தியபரி.)

பீழித்தல்-வருந்துதல். (உ-ம்.) "அறிவிலார்தாந்தம்மைப்பீழ்க்கும்பீழை – செறுவார்க்குஞ் செய்தலரிகா" (வள். அசஙக.)

பீழை-துன்பம். (உ-ம்.) "பிரிவின்கட்பீழை தருவதொன்றில்" (வள். அஙகக.)

பீள்—1. கருப்பம். (உ-ம்.) "பீளுமீரலும் பித்துநீள்குடர்களும்பிளக்க" (அரிச்ச. வேட்டஞ்செ.சஎ.) 2. பயிரிளங்கதிர்.(சூ.நிக.ச:கூஅ.)

பீளை—கண்ணழுக்கு. (உ-ம்.) "பீளைகால் விழிக்கிழவரை" (திருவி. எல்லா. கசு.)

பீளைசாறி—ஓர்பூடு. (வழக்குண்டுபோலும்.)

பீற்றல்—கந்தை. (வழக்.)

பீறல்—1. கந்தை. (வழக்.) 2. கிழியல். (உ-ம்.) "பீறற்கீலேயிதாருக்கென்று" (அரிச்சந்திர. சூழ். கக.)

பீறு—1. கிழிவு. (வழக்.) 2. தெரிநிலைவினைப் பகுதி.

பீறுகை—பீறுதல்.

பீறுதல்—1. கிழிதல். 2. கீறுதல். (1, 2-வழக்.)

பீனம்—1. கொடிப்பாசி. (வைத்தியபரி.) 2. பருமை. 3. பாசி. (2, 3-சூ. நிக. கக: னகரவெ. கo.)

பு.

புக்ககம்—மாமியார்வீடு. (வழக்.)

புக்கநம்—குலைத்தல். (உ-ம்.) வந்துழிக்காண்க.

புக்கல்—புகுதல். அல்-தொழிற்பெயர் விகுதி.

புக்கி—பராய்மரம். (மலையக.)

புக்கில்—1. பகலிடம். (உ-ம்.) "துகளறுகேள்வியுயர்ந்ததோர்புக்கில்" (புறநா. உஉக.) 2. வீடு. (சூ. நிக. நு: நுக.)

புக்கீமோ—செல்வீராக. (உ-ம்.) "ஐயமைந்தன்றனைத்தாகப்புக்கீமோ" (கலி. எஅ.)

புக்த—பீறுய்ப்பாலை. (வைத்தியபரி.)

புக்தத்திநுப்பி—வட்டத்திருப்பி. (வைத்தியபரி.)

புக்குப்புக்கெனல்—அக்கினி சுவாலித்தற் குறிப்பு. (வழக்.)

புக்தம்—உணவு. (சி. சி. உ: நுசு. சிவாக்.)

புகட்டல்—1. அறிவுறுத்தல். 2. உட்புகுத்தல். 3. ஊட்டுதல். (உ-ம்.) "அமுதுதன்வாய்செவிதிறந்துபுகட்ட" (திருவிளை.விடையே.ச.) (1, 2-வழக்.)

புகட்டுதல்—புகட்டல்.

புகர்—1. அழகு. (உ-ம்.) "புகர்வெள்ளோகர்தங்கோட்டம்" (சிலப். கநாத்திற. கo.) 2. இரத்தக்கறை.(உ-ம்.)"செழும்புகர்வேல்விழித்தேனினஞ்சூழ்" (தஞ்சை. உஅக.) 3. கபில நிறம். (சூ. நிக. அ: உக.) 4. குற்றம். (பிங்கல. கஅசுஉ.) 5. சுக்கிரன். (உ-ம்.) "பனை"பார். 6. சோறு. (பிங்கல. கக0உ.) 7. நிறம். (சூ. நிக. அ: உசு.) 8. பொறி. (உ-ம்.) "புகர்மதவேழ

மூட்டிப்போர்வீரையாடி" (திருவீரை. உக்கிர பா. அவ. ஈக.)

புகர்முகம்—யானை. (பி. நிக. உசகஉ.)

புகர்நாள்—வெள்ளி. (வைத்தியபரி.)

புகர்வு—உணவு. (புறநா.)

புகரோன்—சுக்கிரன். (உ-ம்.) "புகரோனை யவனழைத்து" (அரிச்ச. நகர்நீங். உங.)

புகல்—1. உடல். 2. உபாயம். (வழக்.) 3. குதிர். 4. சொல். 5. தஞ்சம். (உ-ம்.) "போரி மைக்கிலலதேதுபுகலென்றுபுகலா" (சிவரக. தாருக. உறு.) 6. தெரிநிலேவினைப்பகுதி. (உ-ம்.) "தாமதமுளதோபுகலென்றான்" (சிவரக. விசையை. கசு.) 7. புகுதல். (உ-ம்.) "விருந்தினர்"பார். 8. விருப்பம். (உ-ம்.) "சுரும்பார் கண்ணிப்பெரும்புகன்மறவர்" (மதுரைக் ருஙசு.) 9. வெற்றி. (1, 3, 4, 9-சூ. நிக. கக: தகரவெ. அ.)

புகல்வு—மனச்செருக்கு. (உ-ம்.) "மாறு பொருதோட்டியபுகல்வின்" (குறிஞ்சி. கஙறு.)

புகல—மகிழ. (சிந்தா.)

புகலல்—சொல்லுதல். (உ-ம்.)"எமக்கிவை புகலுற்றான்" (கூர்மபு. வருணச். சு)

புகலி—சீகாழி. (உ-ம்.) "தடமதிற்புகலிசார்ந் தார்" (திருஞான. திருவம்பலச. உசு.)

புகலிடம்—1. அடைக்கலமாமிடம். (திருக் கோ. சஉ. உரை.) 2. ஊர். (பிங்கல. சஎறு.)

புகலுதல் — 1. புகலல். 2. விரும்பல். (புறநா.)

புகலூர்—ஓரூர். (உ-ம்.) புகலூரந்தாதிபார்.

புகவு—உணவு. (உ-ம்.) "அகநாட்டண்ணல் புகவே" (புறநா. உசக)

புகழ்—கீர்த்தி. (உ-ம். "வீரிவருபுகழ்மே வரிச்சந்திரன்" (அரிச்ச. பாயிர. உ.) 2. தெரி நிலேவினைப்பகுதி. (உ-ம்.) "நெடுமாயன்முதல மரர்புகழ்வேதம் - பணிந்திறைஞ்சுநிமலன் றன்னே" (சிவரக. கச்திரிப்பூ. கச.)

புகழ்ச்சி—கீர்த்தி. (உ-ம்.) "மங்கலவினேக ளெல்லாம்புகழ்ச்சியாற்பொலிந்து தோன்ற" (பெரியபு. தடுத்தாட். கக.)

புகழ்ச்சிமாலே—அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கியவஞ்சிப்பாவால் நல்லாரது சிறப் பைக்கூறுமொரு பிரபந்தம். (உ-ம்.) "மயக்கவ டிபெறவஞ்சிப்பாவால்வியத்தகுநல்லார் வீழுச் சீருரைதல்புகழ்ச்சிமாலே"(இலக்கணவி.அசுசு.)

புகழ்ச்சோழநாயனார் — அறுபத்துமூவரி லொருவர். (பெரியபுராணத்திலறிக.)

புகழ்தல் — 1. உயர்த்துக்கூறல். (உ-ம்.) "புகழ்ந்தவைபோற்றிச்செயல்வேண்டும்" (வள். நிகஅ.) 2. புசித்தல். (உ-ம்.) "உண்டளிபால் போலுய்த்தனவும்புகழாதிகழ்வான்" (கோயிற் பு. வியாக்கிர. உச.)

புகழ்தலுவமை—உவமையணிவகையு ளொரு ன்று; அது: உவமேயத்தினேவாழாவிடுத்து யாதேனுமொரு மேன்மைகாட்டி உவமானத்தி னேப் புகழ்ந்துசொலுவது. (தண்டி. ஈ0. உரை.)

புகழ்ப்பூ—பொன்னுவிரை. (வைத்தியபரி.)

புகழ்பொருள்—வர்ந்நிக்கப்படுவது. அஃதுவ மேயம்.

புகழ்பொருளுவமையணி—இதரவிதரவுவ மாலங்காரம்; அது: முன்னதிலுபமானமாகச் சொன்னதைப் பின்னதிலுபமேயமாக்கியும் உபமேயமாகச்சொன்னதையுபமானமாக்கியுஞ் சொல்லுதல். (தண்டி. ஈ0. உரை.)

புகழ்மை—புகழுடைமை. (உ-ம்.) "பொச் சாப்பார்க்கில்லேப்புகழ்மை" (வள். நிஙஈ.)

புகழ்மைநிதரிசநம்—நிதரிசநவணியி னொன்று. (தண்டி. அங. உரை.) ஒரு பொரு ளுக்குரிய பிரயோசனம் பிறிதொருபொரு ளுக்கு நன்மையாவது தீமையாவது புலப்பட நிகழ்வது.

புகழ்வு—புகழ்ச்சி. உ-விகுதி.

புகழ்வோர்—துதிப்போர், வந்தியரென்றும் பெயர். (பிங்கல. அசுசு.)

புகழாப்புகழ்ச்சி — ஓரலங்காரம்; அது: பழிப்பதுபோலும் பான்மைபிலுல் ஒரு பொரு ளுக்குமேம்பாடுதோன்றச்சொல்லுவது.(உ-ம்.) "பழிப்பதுபோலும்பான்மையின்மேன்மை புல ப்பட மொழிவதுபுகழாப்புகழ்ச்சி"(தண்டி.அஉ)

புகழாவாகை—1. மனச்செருக்கு. (பச்துப் பா.) 2. அகத்தி. (உ-ம்.)"புகழாவாகைப்பூவின்" (பெரும்பாண். கoகூ.)

புகழாளன்—கீர்த்திரிடையோன். இயவுள் என்று நிகண்டிற் கூறினர்.

புகழவமை—உவமையைப்புகழ்ந் துவமிப் பது. [வ-று.] "சிவன்சடையிற்றங்கும்பிறை யேயின்னுதற்கொப்பு" புகழ்தலுவமைபார்.

புகழேந்தி-ஒட்டக்கூத்தர்காலத்திலேபாண் டியன் சமத்தானத்து வித்துவாஞகவிளங்கிய ஒரு தமிழ்ப்புலவர். (அபிதாநசி.)

புகள்—அகத்தி. (வைத்தியபரி.)

புகற்சி—விரும்பல். (திருவானேக். நைமி சப்ப. கஎ.)

புகற்றுதல் — விரும்பச்செய்தல். (உ-ம்.) "மாந்தரையுள்ளம்புகற்றுமே" (சிந்தா. குண. உo.)

புகற்றும்—விரும்பப்பண்ணும். (சிந்தா.)

புகறல்—குறித்தல். (சூ. நிக. அ: ஈநி.)

புகள்று–1. மகிழ்ந்து. (சிந்தா.) 2. விரும்பி. (உ-ம்.) "செருப்புகன்றெடுத்தசேணுயர்நெடுங் கொடி" (திருமுரு. கூஎ.)

புகாமை—பிரவேசியாமை. (வழக்.)

புகார்-1.ஆற்றுமுகம்,கழிமுகம்.(உ-ம்.)'புகா அர்ப்புகுந்தபெருங்கலம்' (புறநா.ஙo.) 2. காவி ரிப்பூம்பட்டினம். (உ-ம்.) "புகார்க்குவேந்தன்– றன்னியகண்சூழிவீட்டித்தென்னவற்கு மறவா கைதந்தவாறும்" (திருவிளை. பதிகம். அ.)

புகிய—புக. (சிந்தா.)

புகுடி—1. புருவம். (சூ. நிக. உ: கூஎ.) 2. மாதர்காதணியிஞென்று. [தெலுகு.] இதைப் பூடியென்று கூறுவர்.

புகுத்தல்— } உட்செலுத்துதல். (வழக்.)
புகுத்துதல்– }

புகுதல் -- 1. உட்பிரவேசித்தல். (உ - ம்.) "பார்மன்னன்புகும்போதில்லில்"(சி.சி.ச:ஙூஉ.) 2. சம்பவித்தல். (பெரியபு. எறிபத்தநா. ஙூஅ.) 3. தொடங்கல். (நன்னூ. பாயிர. நுதலிப்புகுதல்.) 4. நுழைதல். (உ-ம்.) "சித்தம்புகுந்துநித்திக்கவல்ல" (திருவாச. திருப்பொற். கடு.) 5. மேற்கொளல். (பரிபா.)

புகுதி — 1. சம்பவிப்பு. தி-தொழிற்பெயர் விகுதி. 2. நுழைதல். (இராமா. இரணியன் வதைப். சுஙூ.) 3. நுழைவாயில். (உ-ம்.) வந்து ழிக்காண்க.

புகுபுகெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

புகுமுகம்புரிதல்—நோக்கிற்க் கெதிர்நோக் குதல். (உ-ம்.) "காண்டன்முந்துறுத்தகூற்றுக் கைக்கிளைதலைவனெய்தப் – பூண்டதன்காதலு ட்டிப்புகுமுகம்புரிந்தநங்கை - நாண்டகநுதல் வேரோடகைமுகங்கரந்து"(தணிகை. களவுப. சுஙூ.)

புகூஉ—புகுந்து. (மணிமே.)

புகை—1. தூபம்; இது: தெண்கீழ்த்திசைப் பாலன்குறியாம். 2. தெரிநிலைவினைப்பகுதி.

புகைக்கப்பல்–புகையின் பலத்தாலோடுங் கப்பல். (வழக்.)

புகைக்குண்டு — நச்சுப் புகைபுகைக்குங் குண்டு. (வழக்.)

புகைசீசல்—1. இருமல். 2. புகையெழும்பு தல். (1, 2-வழக்.)

புகைத்தல்—புகையச்செய்தல். (வழக்.)

புகைதல்—1. சினக்குறிப்பு. (பிங்கல. கூஎசை.) 2. புகையெழல். (வழக்.) 3. மனமெரி தல். (உ-ம்.) "புண்வேற்புடையிற்புகைந்தாணு ருவியாதுநோக்காள்" (சிந்தா. பதிக. அ.)

புகைநிட்காரணம் — எவட்சாரம். (வைத் தியபரி.)

புகைப்பித்தல் — புகையச்செய்தல். பிற வினைத்தொழிற்பெயர்.

புகைப்பு — புகைத்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

புகைமடக்கி–வெண்காரம்.(வைத்தியபரி.)

புகையாற்றி — ஒட்டடை. (வழக்குண்டு போலும்.

புகையிலை—ஒரு செடி. (வழக்.)

புகையுறை —ஒட்டடை. (வழக்குண்டுபோ லும்.)

புகையுட்டுதல்—புகைபிடிப்பித்தல்.

புகையூல்—ஒட்டடை. (வைத்தியபரி.)

புகைவு— புகைச்சல். (வழக்.)

புங்கம்—1. அம்பு. (உ-ம்) "புலவர்சொற் றுறைபுரிந்தவும்போன்றனபுங்கம்" (இராமா. கும்பகருணன்வதை. உஉடு.) 2. அம்புக்குதை. (சூ. நிக. கக: ஙகரவெ. க.) 3. உயர்ச்சி. (உ-ம்.) "நாட்டியப்புங்கமும்" (சிவரக. தேவிநாட்டியம். உக.) 4. சிறுதுகில். (பிங்கல. கூஎஅ.)

புங்கவம்—ஏறு. (பரிபா.)

புங்கவர்—வானோர், உபசாரச்.

புங்கவன்—1. அருகன். (உ-ம்.) "புங்கவன் பூரணன்புத்தன்புராதனன்" (திருப்பு. ற். ஙக.) 2. சிரேட்டன். (உ-ம்.) "ஞாநிபுங்கவனுரைத் தான்" (பிரமோத். பஞ்சா. கூஎ.) 3. புத்தன். (பிங்கல. கஙச.)

புங்கவி — செய்வப்பெண். இ-பெண்பால் விகுதி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

புங்கி—1. மூட்காவேளை. (தைல. தைலவ. எசு.) 2. மூட்காவேளைவேர். (உ-ம்.) "அமுக் கிரி"பார்.

புங்கு—புங்கமரம். (வைத்தியபரி.)

புச்சம்—1. தேள். 2. வால். (உ-ம்.) வந்து ழிக்காண்க.

புச்சி—எருக்கு. (வைத்தியபரி.)

புசங்கேசர்—ஐம்பத்தொருருத்திரரி லொ ருவர். (வி-ணி.)

புசல்—பெருங்காற்று. (வழக்.)

புசி—தெரிநிலைவினைப்பகுதி.

புசிகரணம்–போசநபதார்த்தம், புசித்தற்கு காரணமானது. (வழக்.)

புசித்தல்—உண்ணல். (உ-ம்.) "நின்மாலி யம்"பார். 2. வினைப்பயனனுபவித்தல்.

புசிப்பன—உண்டற்குரியன. (வழக்.)

புசிப்பாளி—அநுபோகி. (வழக்.)

புசிப்பித்தல்—1. உண்பித்தல். 2. வினைப் பயனநுபவிக்கச்செய்தல்.

புசிப்பு—1. அநுபவிப்பு. 2. புசித்தல். (1, 2-வழக்.)

புசுண்டர்–இவர் காகவடிவமாயிருந்தவொரு முனிவர்; இவர்: வசிட்டரைக்கண்டவுடன் தாம் சதுரயுகங்களிலேகண்ட அதிசயத்தையுந் திருமால்பலமுறை அவதரித்துங்கூறிஉம்மைப் போல எட்டு வசிட்டரைக் கண்டேன் எனவுங் கூறினவர். (அபிதாநசி.)

புசை — முதலா மிரண்டா மூன்று மேழா மெட்டா மொன்பதாமிராசி. (சோதிடக்கட.)

புஞ்சம்–1. திரட்சி. (உ-ம்.) "புஞ்சவாளுடுக் களன்னநித்திலம்" (திருவிளை. நான்மாட. கo.) 2. தூற்குஞ்சம். (வழக்குண்டுபோலும்.)

புஞ்சவநம்–வாமதேவமந்திரத்தால் ஆயிரம் அல்லது நூற்றெட்டுத்தரமோமஞ்செய்து, அந்த மந்திரத்தினுலேயே ஆண்மகவுபிறக்கும் படி ஆலந்தளிர், பால், உளுந்து இவைகளைக் கொண்டு கருப்பவதியின் நாசியிற்பிளியுங் கிரியை (திருவிளை. உக்கிர. கo. உரை.) ஆலந் தளிர் அல்லது ஆலமுகிழுமாம். இது கருப்ப முண்டாகிய இரண்டுமெதி நான்குமதியிற்செய் வது.

புஞ்சிகை — ஆலங்கட்டி. (வைத்தியபரி.)

புஞ்சிசுகேசி—ஒரு தேவதாகணிகை. (த. நி. போ.)

புட்கம்—மூக்கிரட்டை. (வைத்தியமூ.அக.)

புட்கரசிவை — காமரைக்கிழங்கு. (வைத் தியபரி.)

புட்கரபாகம்–மேடசிங்கதநுக்களுக்கு இரு பத்தோராம்பாகமும், இடபகன்னிமகரங்களுக்கு பதினுலாம்பாகமும், மிதுநதுலாகும்பங்களுக்கு இருபத்துநாலாம்பாகமும், கற்கடகவிருச்சி கமீநங்களுக்கு ஏழாம்பாகமுமாயுளளது. (விதாந. குணகுண. ககஙo.)

புட்காம்—1. ஆகாயம். 2. ஒரு தலம்; இது: வடநூலிலுள்ளது. (அபிதாநகோச.) 3. ஒரு நாரை. 4. கோஷ்டம். (தைலவரு. சு.) 5. சத்த தீவினொன்று. (சூ. நிக. கஉ: சுகூ.) 6. தாமரை. (வைத்தியபரி.) 7. தீர்த்தம். (அபிதாநசி.) 8. நடநசாத்திரம். (உ-ம்.) வந்துழிக்காண்க. 9. நிறைவு. 10. நீர். 11. பருந்து. 12. பாண்ட மூகம். 13. பிரதிட்டாகலேயி லப்புதத்துவத்தி ருக்கும் எட்டுப்புவநங்களுளொன்று. (சி-லி. கிரியா. உக. உரை.) 14. யானைத்துதிக்கை நுனி. 15. வாள். (1, 3, 6, 7, 9, 10, 11, 12, 14, 15-சூ. நிக. கக: டகரவெ. உசு.)

புட்காரி — சிவலோகத்தி லுத்தரதிசையில் ஓலக்கஞ்சேவிக்கும் துவாதசமுக்கிய தேவதை களிலொருவர். (வி-ணி.)

புட்கரன் — 1. குய்யாட்டகரிலொருவன். (வி-ணி.) 2. வருணன்மகன். (அபிதாநசி.)

புட்கரிணி—தடாகம். (வழக்.)

புட்கலம்–நாலுகவளம்போசநத்துக்கு அல் லது நாலுவாய்போசநத்துக்குத்தக்க பிச்சை என்பர். (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. புட்கலா வர்த்தம். (சூ. நிக. கஉ: எடு.)

புட்கலாவர்த்தம் — சத்தமுகிலிலொன்று; அது: பொன்பொழிவது. (உ-ம்.)"மைக்குலத்தி னிற்புட்கலாவர்த்தமாமெனவே" (பாரத. குரு குல. உஅ.)

புட்கலை—ஐயனார் தேவிகளிலொருத்தி. (உ-ம்) "பூரணைக்கிறைவாவோலம்புட்கலை கணவாவோலம்" (கந்தபு. மகாகாள. உ.)

புட்கலைமணாளன்—ஐயனார். (கந்தபு. மாகா காள. உ.)

புட்குத்திநுப்பி — வட்டத்திருப்பி. (வைத் தியபரி.)

புட்டகம் -சீலை, கப்பிரத்தியமென்பர்.

புட்டம் — 1. சாகம். 2. சீலை. 3. நிறைவு. (1, 2, 3-சூ. நிக. கக: டகரவெ. கசு.)

புட்டி — 1. சந்திரனது சோடசகலைகளி லொன்று. (வி-ணி.) 2. பருமை. (வழக்.) சரீ ரம் புட்டியாயிருக்கிறது. 3. வெல்லம், பனங் கட்டி. (வைத்தியபரி.)

புட்டில் — 1. அம்பறுத்தூணி. (பிங்கல. கடுசசு.) 2. இறைகூடை. (சூ. நிக. எ: நிசு.) 3. குதிரைக்குணவுகட்டுங்கருவி. (சிந்தா.) 4. கெச்சை. (உ-ம்.) "வினங்கொளிப்பக்கரையமை ந்த-தாரும்புட்டிலும்" (சிந். கக். உகசு.) 5. தக் கோலத்தின்காய்: அது: புட்டில்போறலினப் பெயர்பெற்றது. (உ-ம்.) "அம்பொதிப்புட்டில் விரைஇக்குளவியொடு" (இருமுரு. ககக.) 6. விரலுறை. சீவகசிந்தாமணியிலே விரற்சரடு என்பர்.

புட்டுத்திநுப்பி—ஒருசெடி. (வைத்தியபரி.)

புட்டை—அங்கவாதம். [தெலுகு.]

புட்பகம்–1. அன்னபேதி. 2. குபேரனூர்தி, புட்பகவிமானம். (சூ. நிக. கஉ: கசஉ.) 3. சகா தேவன்சங்கு. (அபிதாநசி.) 4. மூக்கிரட்டை. (1, 4-வைத்தியபரி.)

புட்பகாசீசம் — அன்னபேதி. (வைத்திய பரிபா.)

புட்பகாதகம்—மூங்கில். (வைத்தியபரி.)

புட்பகிரி — மேற்றிசைக்கடலில் வருணன் வீளையாடுமோர்மலை. (உ-ம்.) வந்துழிக்காண்க.

புட்பகீடம்–தேன்வண்டு. (வைத்தியாநுப.)

புட்பகேசி—உமை. (கோயிற்பு. பதஞ்சலி. சுo. உரை.)

புட்பசரன்—காமன். பூவாளி என்பதற்கு பிரதிநாமமென்க.

புட்பசாசநன்—காமன். புட்பவில்லு மதனுக்குண்டு என்பதை ஆசிரியநிகண்டு, முதலாவதுதொகுதி சுவது கவியிலறிக.

புட்பசாமரம்—தாழை. (வைத்தியபரி.)

புட்பசாரம்—பூந்தேன். (வைத்தியபரி.)

புட்பசூநியம்—அத்திமரம். (வைத்தியபரி.) அரசு, ஆல், பலா, இத்தியமுதலியவற்றிற்குங் கூறுவர்.

புட்பத்தீரவம்— } பூவில்வடிக்குநீர். (திர
புட்பத்தீராவகம்— } வம்-நெகிழ்ச்சிப் பொருள்.)

புட்பதந்தம்—வடமேற்றிசையானை.

புட்பந்தழநிவர்—ஒருமுநிவர். (அபிதாநசி.)

புட்பதந்தன்—கைலையிலிருந்தகணநாதன். (அபிதாநசி.

புட்பந்தயம்—தேனீ. (வைத்தியபரி.)

புட்பபலம்—விளாங்கனி. (வைத்தியபரி.)

புட்பபாதகம்—மூங்கில். (வைத்தியபரி.)

புட்பம்—1. ஒரு கண்ணோய். 2. புட்பகம். (உ-ம்.) வந்துழிக்காண்க. 3. பூ. (உ-ம்.)"மங்கள மாகுந்தெய்வவாசபுட்பாதிமல்க" (சிவரக. நைமிச. உஉ.) 4. மகளிர்சூதகம் 5. வாழை. (வைத்தியபரி.) (1, 4-வழக்.)

புட்பமஞ்சரிகை—நீலோற்பலம். (வைத்தியபரி.)

புட்பரதம்—பூந்தேன். (வழக்.)

புட்பரா[illegible]1. பூந்தேன். 2.பூந்தேர்.(வழக்.)

புட்பராகம்—நவமணியிலொன்று, புருடராகம் [illegible]ச்சி.)

புட்ப[illegible]ம்பு—பூந்தாது. (வைத்தியபரி.)

புட்பலம்—விளாங்கனி. (வைத்தியபரி.)

புட்பலாவன்—சாலியனுக்கும் பார்ப்பினிக்கும்பிறந்து பூக்கொய்து மாலைவிற்போன். (மிரு. ச.)

புட்பவதி—இருதுவானவள். (வழக்.)

புட்பவாகநன்—அருகன், தாமரைப்பூவை வாகனமாகவுடையவன்.

புட்பவிமாநம்—பூந்தேர். (வழக்.)

புட்பாகம்—மூக்கிரட்டை. (வைத்தியபரி.)

புட்பாசநன்—பிரமன். (வழக்.)

புட்பாசநி—1. இலக்குமி. 2. சரஸ்வதி.

புட்பாசவம்—தேன். (வைத்தியபரி.)

புட்பாஞ்சலி—இணைக்கை பதினேந்துவகையுளொன்று; அது: இரண்டுகையுங்குடங்கையாய்வந்தொன்றுவது.(சிலப்.அரங்.அ.உரை.)

புட்பிகை—பூத்தவள். (வழக்.)

புட்பித்தல்—பூத்தல். (வழக்.)

புட்பேந்திரம்—சண்பகம். (வைத்தியபரி.)

புடகம்—1. இலக்கலம். 2. தாமரை. (1, 2-வைத்தியபரி.)

புடபேதம்—1. ஆற்றுவளவு. 2. நகரம். (உ-ம்.) வந்துழிக்காண்க.

புடம்—1. சுத்தம் (வழக்.) 2. புறம். (பிங் கல. ககூசுக.) 3. பொன்முதலானசரக்குகளை நெருப்பு வெய்யில் தாங்கியமுதலானவைகளாற் சுத்தம்பண்ணல்; இது: காடைப்புடம், கவுதாரிப்புடம், குக்குடப்புடம், வராகப்புடம், கசப்புடம்எனப் பலதிறப்படும்.

புடல்—புடோல். [தெலுங்கு.]

புடவி—பூமி. (உ-ம்.) "புடவியினிடத்தின் மிக்கவண்ணியபூமியான—அடவி யொன்று" (சிவரக. நைமிச. கஎ.)

புடவிழலம்—சிறுகுரட்டை.(வைத்தியபரி.)

புடார்ச்சுநபுரம்—திருக்குற்றாலம்; இது: இருபத்தொருநாமத்துள் ஒன்று. (திருக்குற்றாலத்தலபுராணம். புராணவியல். கசு.)

புடாரழலை—செந்நாயுருவி. (வைத்தியமூ. அக.)

புடிகை—ஏலம். (வைத்தியபரி.)

புடை—1. அடிப்பு. (வழக்.) 2. அருகு. (உ-ம்.) "எம்மருங்கும்பூதகணம்புடைநெருங்கும்பெருமையும்" (பெரியபு. திருவாரூர். சசு.) 3. அன்பு. (திருவிளை. வெள்ளையானை. உசு.) 4. இடம். (சூ. நிக. நி: சுநி.) 5. ஒலி. (உ-ம்.) "புரிநாண்புடைபிற்புறங்காண்ட லல்லால்" (கலி. கநி.) 6. ஓரேழனுருபு. (நன்னூ.பெயரி. சுநி.) 7. இணற்றினுடையபுடைப்பு. 8. தெரிநிலைவினைப்பகுதி. 9. பக்கம். (உ-ம்.) "ததும்பி விம்மிப்-புடைபரந்து" (அரிச்ச. பாயிர. கo.)

புடைகெடப்போகியசெலவு—நிரைகோடற்குஎழுந்தோர் ஆண்டுநின்று மீண்டுபோய்ப் பற்றூர்புலத்து ஒற்றர்உணராமற் பிற்றைஞான்றுசேறலும், நிரைமீட்டற்குஎழுந்தோர்ஆண்டு ஒற்றப்படாமற்சேறலும். (தொல். பொருள். நிஅ. பேராசி.)

புடைகொள்ளல்—புடைத்தல். (வழக்.)

புடைத்தல்—1. அடித்தல். (உ-ம்.) "கோட்டினுற்புடைத்ததன்றே" (பெரியபு. திருவாரூர். உஎ.) 2. ஒலித்தல். (உ-ம்.) "நீளிருந்ததடக்கைவரிவிணுண்புடைப்ப" (கூர்மபு. தக்கன்வமி. நிக.) 3. குட்டுதல். (உ-ம்.) "இருகரத்தினுற் செந்நியுறப்புடைத்தவர்" (பிரமோத். உ. நிக.) 4. குத்தல். (சூ. நிக. க: உக.) 5. சூளகமுதலியவற்றூற்கொழித்தல். 6. தகர்த்தல். (உ-ம்.) "புங்கவனிவளைபுடைத்து" (திருவிளை.வளை.உஎ.) 7. பருத்தல். 8. பறவைசிறகடித்தல். (சூ. நிக. க: எo.) 9. வீங்குதல். (5, 7, 9-வழக்.)

புடைநூல்—சார்புநூல். (உ-ம்.) "இருவர் நூற்குமொருசிறைதொடங்கித்-திரிபுவேறு டையதுபுடைநூலாகும்" (நன்னூ.பாயிர.அ.)

புடைப்ப—தடிப்ப. (திருவாலவா.யத்திரு.)

புடைப்பு—புடைத்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

புடைபடல்—அணுகல். (உ-ம்.) "புடைபட்டிருப்பதென்றுகொல்லோ"(திருவா.புணர்ச்.க)

புடைபெயர்ச்சி — 1. நிலைமாறுகை. 2. வினைநிகழ்ச்சி. (இலக்கணச்சுருக்கத்திலறிக.)

புடைபெயர்த்தல்—புடைபெயர்ச்சி. (திருவானைக். ஞானவு. கஎ.)

புடையல்—மாலை. (உ-ம்.) "இரும்பணம் புடையல்" (புறநா. கூகூ.)

புடையூஉ—கொட்டி. (உ-ம்.) "உயர்நிலையி தணமேறிக்கைபுடையூஉ" (மலைபடு. உoச.)

புடைவை—சீலை (சூ. நிக. எ: சுகூ.)

புடோதகம்—தெங்கு. (வைத்தியபரி.)

புடோல் — ஒரு கொடி; அது: கொத்துப்புடல், நாய்ப்புடல், பன்றிப்புடல், பேய்ப்புடல் என நான்குவகைப்படும். (வைத்தியமூ. அக.)

புண் — 1. ஊன். (சூ. நிக. ஈ: சச.) 2. விரணம். (உ-ம்.)"காலதண்டத்தாற்புண்ணுறப்படுவான்" (சிவரக. நாரதருபதேச. கஉ.)

புண்டரம்—1. கழுகு. (சூ. நிக. ஈ: ருசு.) 2. நெற்றிக்குறிகள்; அவை: திரிபுண்டரம், ஊர்த்துவபுண்டரம் என இருவகைப்படும். 3. வங்காளத்துக்குமேற்கிலுள்ளநாடு (அபிதாநசி.) 4. வெண்கரும்பு. 5. வெண்டாமரை. (4, 5-வைத்தியபரி.)

புண்டரிகம்—தாமரை. (உ-ம்.) "புண்டரிகப்போதுறையும்புத்தேளிறுமாப்பும்" (திருவிளை. வெள்ளையா. கச.)

புண்டரித்தல்-புண்டரமாய்ப்பூசுதல்.(உ-ம்.) "வெள்ளியதிருநீற்றையுந்திருநுதலிற் புண்டரித்து" (திருவிளை. அங்கம். கடி. உரை.)

புண்டரீகம் — 1. கழுகு. 2. தாமரை. 3. தெண்கீழ்த்திசையானை. 4. புலி. 5. வண்டு. 6. வெண்டாமரை. (2, 6-வைத்தியபரி.) (1,3, 4, 5-சூ. நிக. கக: ணகரவெ. கசு.)

புண்டரீகை—ஒரு நதி. (வி-ணி. உகூ.)

புண்டவம்—சாரணை. (வைத்தியபரி.)

புண்டாரம்—வெண்கரும்பு.(வைத்தியபரி.)

புண்ணியகந்தம்—சண்பகம்.(வைத்தியபரி.)

புண்ணியகாரம்-குங்கிலியம்.(வைத்தியபரி)

புண்ணியகோடி — வரதராசப்பெருமாள் சிவலிங்கபூசைசெய்த ஆலயம். (உ-ம்.) "புண்ணியகோடியிதிரிமிசையேபொருவிலா வேதியுத்தரத்தில்" (கந்தபு. திருநகர. சுஎ.)

புண்ணியசரவணம் — சோலைமலைக்கருகிலுள்ளதோர் பொய்கை (அபிதாநகோ.)

புண்ணியசாந்தம்—1. சாணம். 2. திருநீறு. (1, 2-பிங்கல. கஎடுங, கஎடுச.) புண்ணியசாந்து எனவுங்கூறுவர்.

புண்ணியத்தானம்—1. உதயத்திற்கொண்பதாமிடம். (சோதிடநூ.) 2. புண்ணியதலம். (வழக்.)

புண்ணியத்தொற்றம்நான்கு—தவம், ஒழுக்கம், கொடை, கல்வி என்பன. (சூ. நிக. கஉ: கஎ.)

புண்ணியதீரணம்—வெண்டருப்பை. புண்ணியங்கட்குபயோகமாயிருத்தலால் இப்பெயர் பெற்றதென்பர்.

புண்ணியபத்திரை—யமபுரஞ்செல்லும்வழியிலுள்ள நதி. (அபிதாநசி.)

புண்ணியபூமி—புண்ணியசேத்திரம்.(வழக்)

புண்ணியம் — 1. உதயத்திற்கு ஒன்பதாமிடம். (சோதிட.) 2. நலமானது. (சைவப்பி.) 3. நீத்தவர்க்குச்செய்யுமுபசாரமொன்பது. (அபிதாநசி.) 4. விதிக்கப்பட்ட வினைவடிவமாய்ச் சுகசாதனமாயிருப்பது; அது: புத்தி, கருணை, சிநேகம், நீதி, பொறை, அடக்கம், ஆசாரம், இலச்சை, சிரத்தை, கொல்லாமை, மெய்மை, கள்ளாமை, காமியாமை முதலியனவாம்.

புண்ணியழதல்வன் — புத்தன் (சூ. நிக. கூக: கஅ.)

புண்ணியழர்த்தி — 1. சிவலிங்கம். (சி. அ: ஙகூ. சிவாக்.) 2. புத்தன். (சூ. நிக. க: கஅ.)

புண்ணியமேழ — எழுவகைப்புண்ணியங்கள்; அவை: நகங்கிருதி, தானம், விரதம், சிநேகம், நயபோசநம், கமை, உற்சாகம் என்பன. (பொருட்டொகைநிகண்டிலறிக.)

புண்ணியமொன்பது—ஒன்பதுவகைப் புண்ணியங்கள்; அவை: எதிர்கொளல், பணிதல், ஆசநத்திருத்துதல், தாள்கழுவுதல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல்என்பன.(சூ.நிக.கஉ:கஅ.)

புண்ணியவதி—ஒரு நதி. (வி-ணி. உகூ.) 2. புண்ணியவாட்டி. (வழக்.)

புண்ணியவர்சநம்—கிரியைகட்குமுதலிலே சுத்தமாகச்செய்வது. (திருவானைக்.கோச்.ஙகூ.)

புண்ணியவாட்டி—புண்ணியவதி. (வழக்.)

புண்ணியவாளன்—தருமவான். (வழக்.)

புண்ணியவான் — புண்ணியன். (உ-ம்.) "சிவபூசைபுரிபுண்ணியவானே" (சிவரக. தேவர் முறை. கடி.)

புண்ணியன்—1. அருகன். (சூ. நிக. க: உ.) 2. சிவன். (உ-ம்.) "போதகனுகித்தேற்றம்புண்ணியன்புலேனன்செய்த–தீ த க மு ண ர் ந் து" (திருவிளை. அங்கம்.க0.) 3. தருமவான்.(வழக்.)

புண்ணியாக்கம்–குந்துருக்கம். (வைத்திய மூ. அக.)

புண்ணியாகவாசநம் — ஆசூசநிவாரணம். (உ - ம்.) "விதிவழியேபுண்ணியாகவாசஞ்செய்து" (நாகைக்காரோ. புண்டரீகமூநி. கக.)

புண்ணியை—1. துளசி. (வைத்தியபரிபா.) 2. புண்ணியவதி. (வழக்)

புண்ணீர்—இரத்தம். (உ - ம்.) "ஆனையின் புண்ணீருண்ணவடித்தகாருடற்பேய்" (திருவி. யானையெ. கூசு.)

புண்படுதல் — 1. புண்ணுதல். 2. மநோவுண்டாதல். (1, 2 வழக்.)

புணர்—1. தெரிநிலைவினைப்பகுதி. 2. புதுமை. (பிங்கல. கசுநிசு.)

புணர்க்கையான்—மாயத்தையுடையவன். (உ-ம்.) "புணர்கிலாப்புணர்க்கையானே" (திருவா. திருச்ச. எ0.)

புணர்ச்சி—1. இணைக்கம். 2. எழுத்துமுதலியவற்றின்சந்தி. நன்னூ. உயிரீற். க. உரை.) 3. ஓரிடத்திருத்தல். (உ-ம்.)"புணர்ச்சிபழகுதல் வேண்டா" (வள். எஅநி.) 4. சையோகம். (1, 4-பிங்கல. கூஅநிஉ.)

புணர்ச்சிகிமாலை—தண்டகமாலை; அது: வெண்பாவான் மூந்நூறுசெய்யுட்கூறுவது.

புணர்ச்சிபிரிவின்மகிழ்தல் —தலைவன் புணர்ச்சியால் மகிழ்தல். (வாண. கஅ. முகம்.)

புணர்ச்சிவிகாரம்—நிலைமொழியீறும் வருமொழிமுதலும் ஒன்றேடொன்று புணருங்காலத்தவரும். தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்கள். (நன்னூ. பதவியல். சூ. உரை.)

புணர்த்தல்–1. இணைத்தல். 2. இயைவித்தல். 3. உபாயஞ்செய்தல் 4. புணரச்செய்தல். (1, 2, 3, 4-வழக்.)

புணர்த்துதல்—புணர்த்தல்.

புணர்தல்—1. இணங்கல். 2. இணைதல். 3. எழுத்துச்சந்தித்தல். 4. கலத்தல். (தஞ்சைவா. உகசு.) 5. சார்தல். (உ-ம்.) "திரயோதசி புணருமாலேவேளை" (சிவரக. சிவடிண்டிவதபாலன். சநி.) 6. தோய்தல், படுதல். (உ - ம்.) "பணியின்மென்முலைமேற்பனிமாருதம்–புணரவாருயிர்வெந்துபுழுங்குவாள்' (இராமா. சூர்ப்ப. எஎ.) (1, 2-(உ-ம்.) வந்துழிக்காண்க.

புணர்நிலை—ஓரலங்காரம்; அது: தொழில் குணமென்னுமிவை காரணமாக இருபொருளுக்கு முடிக்குஞ்சொல்லாக ஒருவாசகம் புணர்ந்து நிற்கச்செல்லுமோ ரலங்காரம். (உ - ம்.) "வினைபண்பெனவிவையிருபொருட் கொன்றேபுணரமொழிவதுபுணர்நிலையாகும்.(தண்டி. பொருளணி. கூக.)

புணர்ப்பு–1. இணைப்பு. (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. உடல். (சூ. நிக. உ: அநி.) 3. உபாயம். (உ-ம்.) "பாவகாரிகள்"பார். 4. தூண்டு. (புறநா.) 5. மாயம். (திருக்கோவை. கஎ.)

புணர்மார்—கூட்டுதற்கு. (உ-ம்.) "பாடல் கொளப்புணர்மார்" (நெடுநெல். சுஎ.)

புணர்வு—1. இசைப்பு. 2. கலவி. (1, 2-சூ. நிக. கக: ணகரவெ. க.)

புணரி — 1. அலை. (பட்டினப்பாலை. கஎ. அடியுரை.) 2. கடல். (பி.நி. நிஅசை.) 3. கரை. (சூ. நிக. கக: ணகரவெ. கசு.)

புணருதல்--புணர்தல். உகரஞ்சாரியை.

புணை–1. தெப்பம். (உ-ம்.) "சிவநாமமெனுநற்புணைபிடித்தால்" (திருவாத. திருப்பெரு. க0.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 4. மரக்கலம். (சூ. நிக. எ: நுக.) 5. மூங்கில். (வைத்தியமூ. அக.)

புத்தகம்—1. ஏடு. (திருவிளை.வாதவூரடிகள.எ.) 2. சித்திரப்படம். (சூ. நிக. எ: எக.) 3. மயிலிறகு. (வைத்தியபரி.)

புத்தசைத்தியம்—பௌத்தவித்தியாசாலை. (சிலப். நாடுகாண். கச. உரை.)

புத்தப்புதியது—மிகப்புதியது. (வழக்.)

புத்தம் — புத்தமதம்; இது: புறச்சமயமாறிலொன்று.

புத்தர்—பௌத்தசமையத்தார்; இவர்: விஞ்ஞாநமயகோசமயஞன்மாவென்பர்.

புத்தன்—1. அருகன். (உ-ம்.) "புங்கவன்" பார். [அறிவுடையோனென்பது பொருள்.] 2. திருமால். (பிங்கல. கூஅநிநி.) 3. புத்தன். (சூ. நிக. கக: தகரவெ. உச.) 4. புதுமைசெய்பவன். (வழக்.)

புத்தாத்தீரி– } அரிநெல்லி. (வைத்திய
புத்தாரி— } பரிபா.)

புத்தி—1. அந்தக்கரணத்தொன்று; அது: இப்பியன்றுவெள்ளியெனநிச்சயிப்பது. (சித்தாந்தப்பிரகாசிகையிற்காண்க. 2. உளளம். (உ-ம்.) "புத்தியின்விருப்பிலர்" (பிரமோத். பஞ்சா.உகூ.) ஆகுபெயர். 3. தக்கன்புத்திரிகளிலொருத்தி. (வி-ணி.) 4. போகம். (காஞ்சிப்பு. பூப்புராரிகோ. எ.) 4. விநாயகக்கடவுளின் சத்திகளிருவரிலொருத்தி. (அபிதாநகோ.)

புத்திகுணமெட்டு–தருமம், ஞாநம், வைராக்கியம், ஐஸ்வரியம், அதன்மம், அஞ்ஞாநம்,

அவைராக்கியம், அநைசுவரியம் என்னுமெண் வகைக் குணம்; இவை: எழுபதுபேதப்படும் என்பர். (சதாசிவரூபம் என்னுநூலில்.)

புத்தித்துவம் — புத்திதன்மை. துவம்-தன்மை.

புத்திதத்துவம்–மூப்பத்தாறு தத்துவங்களு ளொன்று; அது: அகங்காரத்துக்குமேலே பத்துப்பங்கதிகமான வோர்தத்துவம். பத்துக்கோடி கோடியோசனைப்பிரமாணமுள்ளது. (சி-லி. உக.)

புத்திதம் — காஞ்சிரை. (வைத்தியபரி.)

புத்திமற்காரியம்–சேதநப்பொருளாற்செய்யப்படுங் காரியம். (சி. சி. க: கஅ.)

புத்திமான்—சேதநன். (சி. சி. க: கஅ.)

புத்தியட்டகமுதல்வர் — புத்திதத்துவத்திலுள்ள எட்டுச்சூக்குமபுவநங்களினது தலைவர்களாகிய அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகாட்சர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டியென்னு முருத்திரர்கள்: (உ-ம்.) "இந்நிசேர்புத்தியட்டகமுதல்வரும்வந்தனர்" (கந்த பு. கணங்கள்செல். கo.)

புத்தியறிதல்—1. பெண்கள் இருதுவாதல். 2. விரகறிதல். (1, 2-வழக்.)

புத்தியிந்திரியம்—ஞானேந்திரியம்.(சி. சி. உ: சுக.)

புத்திரகம்—1. ஒருமரம். (உ-ம்.) வந்துழிக் காண்க.

புத்திரகன் — தாதமார்க்கமுஞ்செய்து சிவபூசையும் அக்கினிகாரிய முதலாயினவுஞ் செய்கிறவன். (சி.சி. அ: சு. மறை.)

புத்திரகாமேட்டி — புத்திரனேக்குறித்துச் செயயும் யாகம். இட்டி-யாகம்.

புத்திரகிருதன் - - புத்திரனாக அங்கீகரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவன். (உ-ம்.) வந்துழிக் காண்க

புத்திரசாரி—காஞ்சிரை. (வைத்தியபரி.)

புத்திரசீவம் — ஒருமரம். இதன்மணிகள் மாலையாகக்கோத்துக் கழுத்திலணியப்படும். (உ-ம்.) வந்துழிக்காண்க.

புத்திரசுவீகாரம் —பிறர்பிள்ளையைத் தன் பிள்ளையாகக்கல். (வழக்.)

புத்திரசேன்னி—தாளி. (வைத்தியபரி.)

புத்திரத்தானம்–உதயத்திற்குமூன்றுமிடம். (சோதிட.)

புத்திரதீபம்—புத்திரதீபமணி.(சி.சி.பாயிர. க. சிவாக்.)

புத்திரதீபமணி—படிகமுதலிய மணிகள் போல் மாலையாகக்கோத்து அணியத்தக்கதொன்று. (சி. சி. பாயிர. க. ஞானப்.)

புத்திரநேறி — புத்திரமார்க்கம். (சி. சி. அ: கஅ. சிவாக்.)

புத்திரமார்க்கம்—புறத்தொழிலகத்தொழிலென்னும் அருவுருவத்திருமேனியையோக்கிச் செய்யும் வழிபாடு. (உ-ம்.)"புத்திரமார்க்கம்..." (சி. சி. அ: உo.)

புத்திரயாகம்—புத்திரகாமேட்டி. (வழக்.)

புத்திரர்—1. சமயதீட்சையுஞ் விசேடதீட்சையும்பெற்றுச் சலத்திலே ஸ்நாநம்பண்ணி மந்திரதேவர்முதலாயினோர் தர்ப்பணத்தை விதிப்படிசெய்து சிவார்ச்சனையை மூடித்து அக்கினிகாரியஞ்செய்து சிவத்நியாநம் பண்ணி அதிதிகளுக்குப் பாத்தியாதி தூபதீபங்களாற் பூசைசெய்து அந்நமூட்டி ஆசாரியருஞ்சாதகரு மேவியதைச்செய்பவர். (சைவச. மாணக்க. உரு, உசு, உஎ, உஅ. உரை.) 2. பிள்ளைகள் இருவர்கள் பன்னிருவகையராக அபிதாநசிந் தாமணியிற் கூறினமை காண்க.

புத்திரர்பன்னிருவர்—ஔரசன், க்ஷேத்திரன், தத்தன், கிருத்திரிமன், கூடோற்பந்நன், அபவித்தன், காணீநன், சூகோடன், கிரீதன், பௌநர்ப்பவன், சுவயந்தத்தன், பாரசவன் என்னும் பன்னிருபுத்திரர். (மிருச.) [இந்தப்புத்திரருட் சமசாதி மனைவியரிடத்திற் பிறந்த ஔரசன் முக்கியபுத்திரன்; ஏனையர் கௌணபுத்திரர்கள் இவருள் ஔரசன் தத்தன் இவர்களல்லாதபுத்திரர் பதின்மரையுங் கலியுகத்திலே கௌணபுத்திரர்களாகவுங்கொள்ளுவதில்லை. (மிருச.)

புத்திரவதி — புத்திரனைப்பொருந்தியவள். (வழக்.)

புத்திரவேடணை — பிள்ளையிச்சை; இது: ஈடணை மூன்றினொன்று. (தத்துவக்கட்டளையிலறிக.) ஈடணை-ஆசை.

புத்திரன்—மகன். (சூ. நிக. உ: அo.) புத்தென்னுநரகத்தைநீக்கிக் கரையேற்றுகிறவன்.

புத்திரன்—முள்ளிச்செடி. (வைத்தியபரி.)

புத்திரி—1. கறிமுள்ளி. 2. கீழ்காய்நெல்லி. 3. மகள். (சூ. நிக. உ: அக.) (1, 2-வைத்தியபரிபா.)

புத்திரிணி—கீழ்காய்நெல்லி. (வைத்தியபரி.)

புத்திரின்சாரி—காஞ்சிரை. (மலையக.)

புத்திரீந்திரியம்—புத்தியிந்திரியம். (வழக்.)

புத்து—1. ஒரு நரகம். (இராமா. பாலகா. திருவவதா. கூடு.) 2. புதிது. (உ-ம்.) "புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ" (திருவாச. திருவெ. கூ.)

புத்துநுணி—எட்டி. (வைத்தியபரி.)

புத்துவணி—காஞ்சிரை. (மலையக)

புத்தேள்—1. தெய்வம். (உ-ம்.) "புத்தேளுலகத்தற்று" (புறநா. உஉ.) 2. புதுமை. (உ-ம்.) "புத்தேள்வண்டும்"(திருவிளை.தருமிக்கு.கூஉ.)

புத்தேளிர்—தேவர்கள். (உ-ம்.) "புத்தேளிர் வாழுமுலகு" (திருக்குறள். சு-ஆம் அதி. அ.)

புத்தேன்—காஞ்சிரை. (மலையகராதி.)

புதப்பிரியம்—மரகதரத்தினம். புதனுக்குப் பிரியமுள்ளதென்பர். (வழக்.)

புதர்—1. அறிஞர். (சூ. நிக. உ: அ.) 2. தூறு. 3. தேவர் (உ-ம்.) "புதர்களுநினையாரெனில்" (சிவர. தாருக. கo.) 4. புல். 5. புலவர். (திருவிளை. மாணிக்க. ஙக.) (2, 4-வழக்.)

புதல்—1. சிறுதூறு. (உ-ம்.) "மலர்ப்புதன் மானப்பூவேய்ந்து"(மதுரைக்.நிஙஅ.) 2. தூறு. (உ-ம்.) "பைம்புதலெருக்கி" (முல்லை. உநி.) 3. நாணல். (வைத்தியபரி.) 4. புருவம். (பிங்கல. கoநிஎ.) 5. புல். (பிங்கல. ஙஅஙநி.)

புதல்வன்—1. மகன். (உ-ம்.) "தனிப்புதல்வன்றனையணைத்தும்" (சைவச.ஆசாரிய. அஎ.)

புதல்வி—மகள். (உ-ம்.) "வேலுடைப்-பொருப்பரங்குணர்வுறப்புதல்விதன்மிசை"(கந்தபு. கடவுள். கஉ.)

புதவம்—1. அறுகு. (உ-ம்.) "புதவமொடு செருந்தி"(பட்டின. உசஙூ.) 2. வாயில். (உ-ம்.) "நன்னெறிப்புதவம்பலவுள" (சிலப். காடுகா. கஉஙூ.) அம்-சாரியைகொண்டு கதவிற் குங் கூறுவர்.

புதவாரம்—புதன்கிழமை. (வழக்.)

புதவு-1. அறுகு. (உ-ம்.) "புல்லரைக்காஞ்சி புனல்பொருபுதவின்" (மலைபடு. சசஙூ.) பிங்கலத்தில் ஓர்வகைப்புல்லென்பர். 2. கதவு.(உ-ம்.) "புனலம்புதவின்" (புறநா. உச.) 3. கோபுர வாயிற்கதவில் விட்டுப்புகும்வழி. (சூ. நிக. நி: சநி.) 4. வாசல். (உ-ம்.) "கோழிசேக்குங்கூடுடைப்புதவின்" (பெரும்பாண். நிஉ.)

புதன்—1. அறிஞன். 2. ஒருகிரகம். (உ-ம்) "சல்லியன்"பார். 3. ஒரு வாரம். (வழக்.) 4. தேவன். 1, 4-(உ-ம்.) வந்திழிக்காண்க.

புதா—1. கதவு. (சிந்தா.) 2. பெருநாரை. (உ-ம்.) "புள்ளும்புதாவும்வெல்போர்வேந்தர்" (சிலப். நாடுகாண். கஙஎ.)

புதிது—புதியது. (வழக்.)

புதிநம்—நூதனம். (வழக்.)

புதிதுணல்—புதுப்பிரயோசனத்தைச் சுபதிதம்பார்த்துண்ணல். (வழக்.)

புதியர்—
புதியவர்—
} விருந்தர். (சூ. நிக. உ: சo.)

புதியனபுகுதல்—முற்காலத்தில்லனசிலபிற்காலத்திலக்ஷணமாதல். (நன்னூ உரியிய.உசு.)

புதியோர்—புதியவர். (வழக்.)

புதினு—ஒரு பூடு. (வைத்தியபரி.)

புது—மைவிகுதி தொக்குநின்ற ஒருபண்புப் பெயர்.

புதுக்கல்—
புதுக்குதல்—
} சுத்திசெய்தல், புதுப்பித்தல். (உ-ம்) "விதிமுறையாங்கடம்புதுக்கி" (தைல. அதுபந். சுக.)

புதுச்சரக்கு—ஆசாமியம். (உ-ம்.) "பழஞ்சரக்கு"பார்.

புதுச்சேரி—ஒரு பட்டினம். (வழக்.)

புதுசு—புதிது. (வழக்.)

புதுப்பித்தல்—புதிதாக்கல். (வழக்.)

புதுமை 1. அதிசயம். (வழக்.) 2. நூதனம். (சூ. நிக. அ: சநி.) 3. மிகுதி. (சூ. நிக. அ: எ.)

புதுமைசெய்தல்—அற்புதஞ் செய்தல். (வழக்.)

புதுவது—புதியது. (புறநா.)

புதுவை—புதுச்சேரி. (ஒரூர் வழக்.)

புதுவைச்சேதிராயன்—வெண்ணெய்ச் சுடையப்பிள்ளை குமாரன். இராமாயண மரங் கேற்றும்போது இவனைப்பாம்புகடிக்க உடனே கம்பரால் விடமீங்கப்பெற்றவன். (அபிதாநசி.)

புதுவோர்—புதியமாந்தர். (உ-ம்.) "குதியவு நெடியவுமூழிழிபுதுவோர்"(மலைபடு. உஅஅ.)

புதை—1. அம்புக்கூட்டு. (உ-ம்.) "ஞாயிறெறும்புதைநிறீஇப்" (பட்டின. உஅஅ.) 2. சரீரம். (சூ. நிக. உ: அநி. 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. மறைவு. (வழக்.) புதைபொருளாயிருக்கின்றது.

புதைத்தல்—1. சேமித்தல். (சூ. நிக. கூ: ஙூச.) 2. தாழ்க்குதல். (வழக்.) 3. போர்த்தல். மலைநாட்டுவழக்கு. (சிலப்பதி.) 4. மறைத்தல். (வைத்தியபரி.) 5. மூடுதல். (உ-ம்.) "உள்ளமாழாந்ததமோகுணம்புதைப்பவுரையவிந்திருத்தலும்" (கூர்மபு. தமோ. உ.)

புதைத்துவைத்தல்—சேமத்தின் பொருட்டுத் தாழ்த்திவைத்தல். (உ-ம்.) "ஆழப்புதைத்திவைத்தால்வருமோதும்மடிப்பிறகே" (கந்தர. உo.)

புதைதல்—1. அத்தமயநமாதல். (உ-ம்.) "புதையப்படுங்கதிரும்" (விதாந. குணகுண. கூஉ.) 2. ஆழமாதல். 3. சேமிக்கப்படல். 4. பதிதல். 5. மறைதல். (2, 3, 4, 5-வழக்.)

புதைப்பு—1. சேமம். 2. தாழ்ப்பு. 3. மறைவு. (1, 2, 3-வழக்.)

புதையல்—1. புதைத்திராலியம். 2. புதைப்பு. (1, 2-வழக்.)

புத்தி—1. அறிவு. (உ-ம்.) "புத்தியாலுயர் புதன்" (பாரத. குருகுல. சு.) 2. புத்தி. (உ-ம்.)

"வள்ளவனுர்புந்திமொழிந்தபொருள்" (வ.மா. சச.) 3. புதன். (உ-ம்.)"புந்திதருங்கணன்மான் றலெண்ணேமுப்பூரஞ்செங்கை" (வி தா ந. குணகுண. கஙு.) 4. மனம். (சி. சி. சு: உஅ. ஞானப்.) ஆருபெயர்.

புந்தித்தம்-காஞ்சிரை. (வைத்தியபரி.)

புந்தியர்—அறிவாளிகள். புந்தி-அறிவு.

புநாகம்-1. கோழிக்கீரை. 2. புன்னையின் விசேடம். (உ-ம்.) "நந்திநறவுநறும்புந்நாகம்" (குறிஞ்சி. கூக.)

புநர்ச்சாரணை—செபம். (வி-ணி.)

புநர்சேநநம்—மீண்டுபிறத்தல். (வழக்கு.)

புநர்தம்—புநர்பூசம். (உ-ம்.) "வியாழந்தரும் பரிபூசம்புநர்தம்விளக்குமகம்" (விதாந. குணகுண. கசை.)

புநர்நவம்-வெண்சாரணைக்கிழங்கு.(மதைல. தைலவ.)

புநநுத்தம்-தோல்வித்தாநம் இருபத்திரண்டில்பதின்மூன்றுவது; அஃது: அநுவாதமின்றி முன்சொன்ன சொல்லினேயாவது பொருளினேயாவது பின்னுங்கூறுதல். (சி. சி. அளவை. [புநருத்தம், புந-பின்னர்;உத்தம்-சொல்லுதல்]

புநநுத்தாநம் — மறுபடி யெழுந்திருத்தல். (சி. சி. கூ: சு. சிவாக்.)

புநநுத்தி—இரட்டித்துச்சொல்லல். (சி. சி. சு: கூடு. சிவாக்.)

புநிதம்—1. சுத்தம். (உ-ம்.) "பூமலர்த்தொடையுமீண்டப்பொலிந்ததப்புநிதவீதி" (ஞ்சபு. சதீகியுத். அ) 2. புநர்பூசம். (சூ. நிக. க: ஙo.)

புநிதன்—1. அருகன். (உ-ம்.) "பொருளன் புநிதன்புராணன்புலவன்" (சிலப். காடுகாண். கஙகூ) 2. சுத்தன்.

புநிதை—சுத்தியடைந்தவள். (உ-ம்.) "இருவதையாய்ப்புநிதையாய்வந்தேற்றவஞ் சலிப்பாலெய்தி" (கோயிற்பு. பதஞ்சலி. எச.)

புபுட்சு—போகத்திலிச்சையுள்ளவன். (சி. சி. உ: நுசு. சிவாக்.)

புபீ—ஓரொலிக்குறிப்பு. (வழக்.)

பும்சத்துவம்—புருடதத்துவம். (சி. சி. உ: சுக. சிவாக்.) அஃதாவது: கலை, காலம், நியதி, வித்தை, ராகம் ஆகிய ஐந்து தத்துவங்களிலும் கட்டப்பட்டவனுய் ஆன்மா கன்மமலங்களைப் புசிக்கும் வல்லமையடைகை என்பர். (சி-சி. ஞாந. கடு.)

பும்சத்துவமலம்— ஆன்மாவைக் கஞ்சுகம் போல ஆவரித்து ஏகதேசவிருத்திபண்ணிக் கொண்டு நிரியுங்கலை காலம் நியதி வித்தை ராகம் ஆகிய ஐந்து தத்துவச்சட்டையின்சேர்க்கை. (சி-லி. ஞாந. கடு.)

பும்விநகம்—கத்தூரிநாவி. (வைத்தியபரி.)

புமான்—1. ஆண்மகன். (சூ. நிக. உ: நுஎ.) 2. புருடதத்துவம். (உ-ம்.) "சித்தொடுபுமான கந்தைமுந்நிலைச்சீவனென்ப" (ஞாநவா. ஞாந விண். க.)

புயத்தல்—பிடுங்கல், பறித்தல். (மணிமே.)

புயீக்கல்—பறித்தல். (உ-ம்.) "சின்மயன் ருளிற்சூழ்ந்தசிந்தையைப்புயக்கலாற்ருன் - மென்மெலப்பிந்திப்பிந்திவிண்ணைதிமூன்னுகின்ருன்" (தணிகை. ககக.)

புயகம்—பாம்பு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

புயங்கநடம்—புயங்கநிருத்தம். (கோயிற்பு. நடராச. கஅ. உரை.)

புயங்கம்-1. பாம்பு. (உ-ம்.)"வாரியுமலையு நிலனுமற்றெவையுந்தாங்குபுயங்கம்" (பிரமோத். பிரதோஷ. அ.) 2. புயங்கநடகம். (உ-ம்.) "புனிதபுயங்கமுயங்கியபொழுது" (கோயிற்பு. பதஞ்சலி. சஉ.)

புயங்கன்—சிவன். (உ-ம்.) "போற்றியோ நமச்சிவாயபுயங்களேமயங்குகின்றேன்" (திருவாச. திருச்சத. சுஉ.) புயங்கம்-பாம்பு.

புயம்—தோள். (உ-ம்.) "துன்றுநறுந்தொடைப்புயத்து" (பிரமோ. சிவராத்திரி. க.)

புயல்-1. பெருங்காற்று. (புசல் என வழக்குண்டு.) 2. மழை. (புறநா.) 3. மேகம். (உ-ம்.) "மணித்தே-ரென்றுதையம்புயன்மூடிய தேர் நின்றியம்பிடுமே" (மறைசை. கூக.)

புயவதுப்பு—கலம்பகத்திலேறுறுப்பு.

புயாந்தரம்—மார்பு. (வைத்தியபரி.)

புரகரன்-சிவன். (திருவிளை. இந்திரன்முடிமே. கஎ.)

புரசாம்-முன்னிட்டு. (சி. சி. சு: எ. சிவாக்.)

புரசம்—அக்கினிதேவன்கைச்சங்கு. (உ-ம்.) வந்துழிக்காண்க.)

புரசு—பலாசமரம். (வைத்தியபரி.)

புரசை — யானைக்கழுத்திலிடுமிறுகளிலொன்று. (உ - ம்.) "புரசைநாகமுன்கடவினன்" (பாரத. குரு. உஎ.)

புரட்சி — புரளுதல். சி-தொழிற்பெயர் விகுதி.

புரட்டல்—1. குமட்டல். 2. சுருட்டல். 3. திருப்புதல். 4. மாறுபடுத்தல். (1, 2, 3, 4-வழக்.)

புரட்டன்—மாறுபாடுசெய்பவன். (வழக்.)

புரட்டாசி—புரட்டாதி. (வழக்.)

புரட்டாதி-1. ஒரு மாதம். (சூ. நிக. க: அஎ. உரை.) 2. பூரட்டாதி. (பிங்கல. உசுச.)

புரட்டி — 1. புரட்டன். 2. புரட்டுக்காரி. (1, 2-வழக்.)

புரட்டு — 1. திருப்பு. 2. தெரிநிலைவினைப் பகுதி. 3. பொய். 4. மாறுபாடு. (1,2,3,4-வழக்.)

புரட்டுதல்—புரட்டல். (வழக்.) உருட்டல் என பத்துப்பாட்டிலறிக.

புரட்டை — 1. புரட்டாசிமாசம். (உ-ம்.) "இட்டகலஞ்செக்குச்சத்தமிகந்நியைவை புரட்டை"(விதாந. குணகுண. உசு.) 2. பூரட்டாதி. (சூ. நிக. க: எஅ)

புரணம்—1. அசைதல், துடித்தல். (உ-ம்.) "தகுதிரண்மங்கைநெடுங்கயறிருநயனங்கள் செறிந்திடு-புரணமும்"(கோயிற்பு.பதஞ்சலி. சக.) 2. பூரணம். (வைராக்கியச. உசு.)

புரணி—ஊண். (பிங்கல. கஎடு.)

புரத்தல்—1. ஈதல். 2. உண்டாக்கல். (புறநா.) 3. காத்தல். 4. வணங்குதல். (பிங்கல. ஈஅடுஅ.) (1, 3-சூ. நிக. க: வகரவெ. உ.)

புரந்தரம்—தோள். (வைத்தியபரி.)

புரந்தரன்—இந்திரன். (உ-ம்.)"கொள்ளேன் புரந்தரன்மாலயன்" (திருவாச. திருச்ச. உ.) [பகைவர்ஊரைஅழிப்பவன்என்றும்பகைவர் உடலையழிப்பவன்என்றும்பொருள்கூறுப.]

புரப்பரியை-அரசிச்செடி.(வைத்தியபரி)

புரப்பு—காப்பு. பு-தொழிற்பெயர்விகுதி.

புரம் — 1. இராசதானி. (சூ. நிக. டு: ஈசு.) 2. உடல். (பிங்கல. ஈஈச.) 3. ஊர். (சூ. நிக. டு: ஈடு.) 4. மருதநிலத்தூர். (சூ. நிக. டு: சo.)

புரவலன்—1. அரசன். (உ-ம்.) "புண்ணியந்திரண்டியாக்கைப்புரவலன்வந்தா னென்ன" (அரிச்சந். சூழ்வினை. கச.) [புரத்தலில் வல்லவன் என்றபடி.] 2. காப்போனுக்கும்பெயர். 3. கொடையாளன். (சூ. நிக. உ: சஅ.)

புரவி — 1. குதிரை. (உ-ம்.) "பகடு"பார். 2. மீனகநம். (உ-ம்) "பெருங்கலேயெனுமிகற் புரவிவீரனே" (பாரத. குருகுல. டுஎ.)

புரவிசயன்-சிவன். (உ-ம்.) "வாள்விசயன் புரவிசயன்றனைநோக்கிமன்னுதவம் புரிந்ததுவும்"(பாரத. புட்பயாத். டு.) [திரிபுரத்தையழித்தவரென்றபடி.]

புரவிமேதம்—அசுவமேதம். (உ-ம்.)"விருப்புறுவேள்விதம்முண்மேம்படும் புரவி மேதம்" (திருவிளை. மூர்த்திவி. அ.)

புரவிவட்டம்—வையாளிவீதி. (சூ. நிக. டு: சசு.)

புரவு—1. அரசு. (உ-ம்.) "முன்பிறந்தசூரனுக்குப்புரவுநல்கி" (உபதேச. சூரா. எக.) 2. கொடை. (சூ. நிக. க: கூ.) 3. புரத்தல். உ-தொழிற்பெயர்விகுதி. 4. விளைநிலம். (உ-ம்.) "புரவுத்தொடித்துண்குவையாயினும்" (புறநா. உசo.)

புரள்—புரளல். (உ-ம்.) "நெடியதோருடலம் புரள்பட" (திருவிளை. நாக. கஎ.)

புரளல்—புரளுதல். (உ-ம்.) "பிணை"பார்.

புரளவிடல்—நீங்கவிடுதல். (உ-ம்.) "பொருளாகமம்புல்லார்புரளவிடல்" (வள். எடுடு.)

புரளி—1. கரவடம். 2. பொய். (1, 2-வழக்.)

புரளுதல் — 1. உருளுதல். 2. கலக்கல். 3. சொற்பிறழ்தல். 4. மாறல். (1, 2, 3, 4-வழக்.)

புராணசுரம் — நெடுநாட்பட்ட காய்ச்சல். (தைலவ. தைலவ. சo. உரை.)

புராணம்—1. பழம்பொருள். (உ-ம்.) "பொடியணிபுராணப்புத்தேட்புண்ணியனருளிலுலே" (திருவிளை. மெய்க்கா. கஎ.) ஆகுபெயர். 2. பழமை (சூ. நிக. அ: சடு.) 3. வேதவாக்கியப்பொருள்களை வலியுறுத்திவிரித்து அறிவிப்பதாய், உலகத்தின தோற்றமும், ஒடுக்கமும், மதுவந்தரங்களியல்பும், மூனிவரராசர் கண் மரபும், இவர்கள்சரித்திரமுங்கூறும்நூல்;அது: பிரமம், பதுமம், கைணவம், சைவம், பாகவதம், பவிடியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்; லிங்கம், வராகம், காந்தம், வாமனம், மச்சம், கூர்மம், காருடம், பிரமாண்டம் எனப் பதினெண்வகைப்படும்.(சைவ. வி.) ஆகுபெயர். [இப்புராணங்களைச் சிவபிரானிடத்திலிதேதருமர், அவரிடஞ் சனற்குமாரமுனிவரும், அவரிடம் வியாசமுனிவரும், அவரிடஞ் சூதமுனிவரும், அவரிடம் பற்பலமுனிவருங் கேட்டனர். (அபிதானசிந்தா.) இவையன்றி உபபுராணம் பதினெட்டுள்ளன.

புராணலக்கணம்—புராணத்துக்குரிய லக்கணம்; அவை: உலகத்தோற்றம், ஒடுக்கம், மதுவந்தரம், மூனிவரராசர்மரபு, அவர்கள் சரித்திரங்களென்பன. (கூர்மபு. முகவுரை.)

புராணன்—1. அருகன். (உ-ம்.) "பொருளன்புனிதன்புராணன்புலவன்" (சிலப். நாடுகாண். கஎக.) 2. சிவன். (உ-ம்.) "புராணனீதந் தருளாதே" (திருவாச. குழைத்தபத்து. கo.)

புராணி—பட்டை.(தைல. தைலவ. கசுடு.)

புராணிகன் — 1. புராணஞ்செய்தோன். 2. புராணந்தேர்ந்தோன். (1, 2-வழக்.)

புராணியை—மரப்பட்டை.(வைத்தியபரி.)

புராதநம்—பழமை. (உ-ம்.) "புகன்றநாமகளோநோக்கிப்புராதநவீலைசொல்வாள்" (ஞாநவ. லீலை. எடு.)

புராந்தகன்—புரதகநன், சிவன். (சூ. நிக. க: சு.)

புராரி—சிவன். (உ-ம்.) "பொன்னவிர்கடுக்கைவேய்ந்தபுராரியை" (கூர்மபு. அந்தகா. கூ.)

புரி—1. ஆசை. 2. இராசதாகி. (சூ. நிக. நி: ஈசு.) 3. ஊர். 4. கட்டு. 5. கயிறு. 6. சங்கு. (வைத்தியபரி.) 7. சருள். 8. செய்தல். 9. தெரி நிலைவினைப்பகுதி. 10. மருதநிலத்தூர்.(சூ.நிக. நி: சo.) 11. மிகுதி. (உ-ம்.) "புரிகதிர்பொன் செய்மாலை"(சிந்தா.பதுமை. கஅள.) 12. முயக்குதல். (உ-ம்.) "புரிநாண்புடையிற்புறங்கண்டல்லா" (கலி. கடு.) 13. வேறுபட்டி. (உ-ம்) "புரிதிரிபதியா" (கலி. ஈஈ.) 14. வைக்கோற்புரி. (உ-ம்.) "எரிசேர்புரிபோலுருவினையே னும்" (திருநூற். சுஎ.) (1, 3, 4, 5, 6, 8-சூ. நிக. கக: ரகரவெ. அ.)

புரீஇ—விரும்பி. (பரிபா.)

புரிசை—மதில். (உ-ம்.) "திரைவரைகள் புரிசைமுதற்புறஞ்சூழ்வ" (பெரியபு. சம்ப ச)

புரிசைக்கிழார்—மூதுமொழிக்காஞ்சி செய்தவர். (அபிதாநசி.)

புரித்த—விரும்புவித்த. (சிந்தா.)

புரித்தன — 1. அழுத்தின. 2. பூரித்தன. (1, 2-சிந்தா.)

புரிதல்—1. ஆராய்தல். (உ-ம்.) "அறம்புரிந்தனன்செங்கோணூட்டத்து" (புறநா. ஈடு.) 2. கற்பித்தல். (உ-ம்.) "புரிந்தபுவியார்நிற்கபோயொளிக்குநிட்டையுடன்"(ஞாநவா. ஞநவிண. ஈடு.) 3. செய்தல். (உ-ம்.) "சாற்றுதற்கரிய நிமலைதன்னையாராதனைபுரிதல்" (சூத. சிவமா. நி: சு.) 4. தெறித்தல். (உ-ம்.) "பொட்டெமலி திருநுதலும்புரிந்தமுரிந்திசைந்தசைந்த-மட்டெமலிகருங்குழலும்"(கோயிற்பு. பதஞ்சலி. ககஈ.) 5. மிகுதல். (சிந்தா.) 6 வளைதல். (புறநா.) 7. விரும்புதல் (உ-ம்.) "நயம்புரிந்துறையுநர்" (புறநா. கசடு.)

புரிந்த—மிக்க. (பரிபா.)

புரிந்தார்—சிநேகிதர், மேவினர். (சூ. நிக. உ: நிஉ.)

புரிநூல்—மூப்புரிநூல். (உ-ம்.) "திகழிடை வெண்கோவணமேன்-மருவரையும்புரிநூலும்" (கோயிற்பு. பதஞ்சலி. கக.)

புரிமணை — பாண்டம்வைக்குமணை, புரிய ணை. (தைல. பாயிர. ஈஉ. முகம்.)

புரிமோகம்—1. சம்புநாவல். 2. விளாத்தி. (1, 2-மலையக.)

புரியட்டகம்—புரியட்டகசரீரம். (சி. சி. உ: நிo. சிவாக்.)

புரியட்டகாயம்— சூக்குமதேகம். (சி. சி. உ: ஈசு. ஞாநப்.)

புரியட்டருபம்—சூக்கும உடம்பு. (உ-ம்.) "சிவஞானசித்தியாரில், பூதநாசரீரம்" என் னு முதற்குறிப்புச்செய்யுளிற்காண்க.

புரியணை—புரிமணை. (உ-ம்.) "பொருந்தாப்பாத்திரத்தூருசுமக்கும்புரியணைபண்ணுவரே" (தைல. பாயிர. ஈஉ.)

புரியம்—கூத்து. (பி. நிக. கசசடு.)

புரிவு — 1. அன்பு. (சூ. நிக. அ: ஈஈ.) 2. ஆசை. (உ-ம்.) "உணர்வின்புரிவுற்றிருளிர்வோனே" (அருணகிரிபு. அருணசலோதய. அஅ.)

புரிவுற்ற—பின்னுதலுள்ள. (உ-ம்.) "புணர்ந்தவர்முயக்கம்போற்புரிவுற்ற கொடியொடு". (கலி. ஈஉ.)

புரீடணம்—பூடம்.

புரீடம் — 1. உழுந்து. (வைத்தியபரி. 2. மலம். (ஆசாரக்கோவை.)

புரீடமம் —உளுந்து. (வைத்தியபரி.)

புரு —அதிகம். (உ-ம்.) "புருகூதன்"பார்.

புருகுசீசனி—அறுவகைச் சக்கிரவர்த்திகளிலொருவன். (சூ. நிக. கஉ: நிடு.)

புருகூதன்—இந்திரன். (உ-ம்.) "புருகூதன் காதலம்புதல்வனருந்தவம்புரிதல்கண்டு"(பாரத. அருச்சுநன்ற. நிசு.) யாகத்தில் அதிகமாக அழைக்கப்படுவன் என்பது பொருளாம். புரு-அதிகம்.

புருடகாரம்—ஆண்மை. (வழக்.)

புருடகாலம்—முப்பத்தைந்து வருடகாலம். (மிருக.)

புருடசூக்கம்—புருடசூக்தம் என்னுமொரு மந்திரம். (உ-ம்.) "அவமில்புருடசூக்கத்தை" (சூத. எக்கி. பூ. சஉ: கடு.)

புருடசூக்தம்—இருக்குவேதத்தில் பத்தாம் மண்டலத்தில் தொண்ணூற்றுநான்கீதமாயுள்ளது.

புருடத்துவம்—ஆண்டன்மை. (வழக்.)

புருடதத்துவம் — வித்தியாதத்துவமேழினொன்று; அது: கலைமுதல் ராகமீறுகிய ஐந்து தத்துவங்களினாலும் சட்டப்பட்டவனுய் ஆன்மா போத்திருத்துவமுடையனாகு மவதரம். (சி-லி.ஞாந.கடு. உரை.) [இத்தப்புருடதத்துவமென்பது தீக்ஷைசெய்யும்போது கலைமுதலைந்து தத்துவச்சட்டையின் சேர்க்கையாகிய பும்சத்துவமென்னும் மலத்தினின்றும் இவனை நீக்கிச் சோதிக்கும்பொருட்டு இருபத்தைந்தாவது தத்துவமென்று கணக்கிட்டமையால் தத்துவவரிசையிற் படிக்கப்பட்டது. உண்மையாகத்தத்துவமல்ல ஆகையாற் புருடதத்துவத்திற் சொல்லிய புவநங்களுக்கு இராகதத்துவத்தில் வாசஞ்சொல்லப்பட்டது.]

புருடநட்சத்திரம்—ஆண்நட்சத்திரம்; அவை: பரணி, கார்த்திகை, உரோகிணி, புகர்பூசம், பூசம், அத்தம், அணுடம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி என்பன. (விதாந. பஞ்

சாங்க. கசு. உரை.)

புருடநாளீ–இரேவதிநாள். (பிங்கல. உசுடு.)

புருடப்பிரமாணம்—நான்குமுழம் (வழக்.)

புருடம் — 1. தற்புருடமந்திரம். (உ - ம்.) "உருட்டிப்புருடத்தோமாங்கிதனில் வைக்க" (சைவச. பொது. கஎ0.) 2. தற்புருடமுகம். (உ-ம்.) "புருடங்கீழ்த்திசை" (சைவச. பொது. சசுஅ.) 3. புருடப்பிரமாணம், நான்குமுழம். 4. புன்னை. (வைத்தியபரி.)

புருடமிரு—தண்ணீர்விட்டான். (வைத்தியபரிபா.)

புருடமேதம் — மனுடபலியிடுகின்றயாகம். (இராமா. பாலகா. மிதிலைக்கா. கஉ0.)

புருடர்–ஆடவர். (சூ. நிக. கக: டகரவ. சகூ.)

புருடராகம்—புட்பராகம். (உ-ம்) "மாத்திகழ்புருடராகம்வயிடூரியம்வயிரந்தாமும்" (திருவிளை. மாணிக்கம். சஎ.)

புருடலக்கணம்—ஆடவரிலக்கணம்; அது: சாமுத்திரிகவிலக்கணத்தொன்று.

புருடவாகநம்–பல்லக்கு, நரவாசனம்.

புருடவாகநன்–குயவன். (சூ.நிக. க: உகூ.)

புருடன்–1. ஆண்மகன். (வழக்.) 2. ஆன்மா தனக்குள்ள இச்சாசத்தியையும், ஞாநாசத்தியையுங், கிரியாசத்தியையுந் தனக்கு உடம்பாகப்பொருந்திக் கன்மத்துக்கு ஈடாக விடயங்களை யறுதியிட்டுப் புசிக்கத்தக்கதாக வருகிற அவதரம். 3. கணவன். 4. சீவான்மா. 5. செவியுற்றிருக்குநரம்பு; இது: தசநாடியிலொன்று. (வைத்தியபரி.) (3, 4-வழக்.)

புருடார்த்தம்—புருடர் அடைதற்குரியபொருள்; அவை: அறம்பெருளின்பம்வீடென்னும் நான்குமாம்.

புருடோத்தமநம்பி–சிவமூர்த்தியைப் பாடிக் கதிபெற்றவர்; இவர்: பாட்டு ஒன்பதாந்திருமுறையிற் சேர்த்திருக்கிறது. (அபிதாநசி.)

புருடோத்தமம்–வாலேரசம். (வைத்தியபரி.)

புருடோத்தமன்—1. சிரேட்டன். (வழக்.) 2. நிருமால். (உ-ம்.) "புருடோத்தமன்மணிமார்பமும்பிரிந்தே" (சேதுபு. சேதுமா. உசு.)

புருண்டி—மல்லிகை. (வைத்தியபரி.)

புருதம்—பொன் (வைத்தியபரி.)

புருபீரு—தண்ணீர்விட்டான். (மலையக.)

புருமோதம்–1. சமட்டுரோவல். 2. விளாத்தி. (1, 2-வைத்தியபரி.)

புருவம்—நெற்றிப்புருவம். (உ-ம்.)"விற்புருவத்திடன்முறிவர்விழியிலக்காவிடும்" (கோயிற்பு. பதஞ்சலி. உசு.)

புருவமத்தியம்–இலாடத்தாநம். (திருவிளை. வெள்ளியம். கூ.)

புருவை — 1. ஆடு. (சூ. நிக. கூ: கசு.) புறநானூற்றிற் பெண்ணுடென்பர். 2. இளமை. (சூ. நிக. அ: உஎ.)

புருணகத்தி—சிசுவதை. (வீ-ணி.)

புருணகம்–
புருணம்— } கருப்பத்திலிருக்கின்ற சிசு. (வைத்தியபரி.)

புருத்தியர்—வேலைக்காரர். (வீ-ணி.)

புருமத்தியம் — புருவநடு. (சி. சி.. ச: கூஉ. சிவாக்.)

புருரம்—புருவம். (சூ. நிக. உ: கூஎ.)

புருரவ — விசுவதேவதைகளு ளொன்று. (வீ-ணி.)

புருரவன் — அறுவகைச் சக்கிரவர்த்திகளி லொருவன். (சூ. நிக. கஉ: டுடு.) புரூரவர் என்றும் பெயருண்டு.

புரை—1. அறிவு. (உ-ம்.) "புரையிலாப்பூரியர்கள்" (வள். கூகசு.) 2. இரகசியம். 3. உட்குளை. (சூ. நிக. அ: சு.) 4. உயர்ச்சி: 5. உவமையுருபு (உ - ம்.) "தேங்கமழ்தளிர்புரை செய்மேனி" (பிரமோத். பஞ்சா. உஅ.) 6. குடில். 7. குழிப்புண். 8. குற்றம். (உ-ம்.) "அருந்ததியேமுதலாயபுரைதீர்கற்பின்மங்கையரை" (காசிகாண். இல்லொ. கசு.) 9. தெரிநிலைவினைப் பகுதி. 10. தேவாலயம். (பதிற்று.) 11. பன்னசாலை. (இராமா. பாலகா. திருவவதார. சக.) 12. வீடு. (4, 12-சூ. நிக. க: ரகரவெ. உஎ.) (2, 7-வழக்.)

புரைக்கேறல்—புரையேறல். (வழக்.)

புரைசீசல் இழைப்பு. வழக்குண்டுபோலும்.

புரைசல்—சச்சரவு. (வழக்.)

புரைசு — புரசு. (வைத்தியபரி.) [இதுபோலி.]

புரைசை—புரோசை.

புரைத்தல்—மறைவுவெளிப்படல். (உ-ம்.) வந்துழிக்காண்க.

புரைதல் — 1. இழைத்தல். 2. ஒப்பிடல். (உ-ம்.) "துகிற்புரையும்வாய்" (பாரத. அணிவகு. கூ.)

புரைபடல்—வருந்துதல். (பரிபா.)

புரைமை—உயர்ச்சி. (உ - ம்.) "மன்பதைகாக்குநின்புரைமைநோக்காது" (புறநா. உகo.)

புரைய—ஒருவமையுருபு. (நன்னூ.பொதிவிய. கசு.)

புரையுநர்—ஒப்பார். (உ-ம்.) "புரையுநரில்லாப்புலமையோயென" (திருமுரு. உஅo.)

புரையேறல்—
புரையேறுதல்— } புரைக்கேறல். (உ - ம்.) "கள்வாய்மடுத்துப்புரையேறி" (கூர்மபு. கடவுள். சு.) [துவாரநெறியாலுட்புகுதலென்றபடி.]

புரையோர்–1. கீழோர். (சூ. நிக. கக: மகரவெ. கரு 2. திருடர். (பிங்கல. அகரா.) 3. மேலோர். (உ-ம்.)"வசையில்வான் றுணைப்புரையோர்கடம் பொடு" (குறிஞ்சி. உ0கு.)

புரைபு—ஒத்த. (பதிற்றுப்.)

புரைவது—பொருந்துவது. (பரிபா)

புரோக்கணம்—தெளித்தல். (சைவச. பொது. கருகு. உரை.)

புரோக்கித்தல்–புரோக்கணம்பண்ணுதல். (உ-ம்.) "புரிமூலத்தாலேநிரீக்கணம்புரோக்கி" (சைவச. பொது. கருசை)

புரோக்கிதம்–சொல்லப்பட்டது. (சி. சி. அ: உரு. சிவாக்.)

புரோகதி—நாய், முன்னடப்பது. (சூ. நிக. க: உரு.)

புரோகிதத்துவம்–வருங்காரியஞ்சொல்லுந் தன்மை (வழக்.)

புரோகிதர் — வருங்காரியஞ்சொல்வோர். (உ-ம்.) "இறைவனமைச்சார்புரோகிதரொடு" (சேதுபு. அதும. கஙு.)

புரோகிதன் — அரசர்பஞ்சகுழுவி ளொரு வன்; அவன்: வருங்காரியஞ்சொல்லுவோனுங் கிருத்தியம் பண்ணுவிப்போனுமாகிற பார்ப் பான்.

புரோகை–பொதியையிற்பிறந்தவோர் நதி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

புரோசநன் — 1. குபேரனுக்கு வாகனமா யிருக்கும் நரன். (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. திரியோதனனுக்கொருமந்திரி.(பாரத.வாரணா வத. க0எ.)

புரோசர்–குறுநிலமன்னர்.(சூ. நிக. உ: உக.)

புரோசன்–ஐந்தாம்வசுவின் மகன். (வி-ணி. உருசு.)

புரோசு— புரோகிதன். (உ-ம்.) "புரோசு மயக்கி-மல்லலுள்ளமொடு" (பதிற்று. எ0.)

புரோசை—புரசையினைப் புரோசையென வுங்கூறுவர். யானைக்கழுத்திடுகயிறு என்பர். (சிந்தா.)

புரோட்சணம்—
புரோட்சணை—
புரோட்சித்தல்–
} நீர்தெளித்தல். (வழக்.)

புரோட்சிதம்—சுத்தஞ்செய்தல். (வழக்.)

புரோதம்—குதிரைமூக்கு. (உ-ம்.) "அரு நிறப்புரோதமும்" (இரகு. யாகப். எ.)

புரோவாதம்—வழிமொழிதற்கு முன்னர்ப் பெறப்பட்டது. (வள். கூஉ. பரி. குறிப்.)

புரோற்கீதம்—புரோத்கீதம்

புரோற்கீதம்–சதாசிவமூர்த்தியுடையஈசான முகத்தினின்றுற்பவித்த எட்டாகமங்களி ளொன்று; இதற்குக் கிரந்தசங்கியை மூன்றி லக்கம்: உபதேச கவசாகமமுதல் ஆதோத்தி யமீறுயுள்ள பதினாறு. (சைவச. பொது. கூகஎ. உரை.)

புல்-1. அறுகாள். (சூ.நிக.க:எச.) 2. தருப் பைப்புல். (கந்தல. பாயிர. ககூ.) 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. பனை. (மலையக.) 5. புணர்ச்சி. (சூ. நிக. கக. லகரவெ. க0.) 6. புல்லரிசி. (உ-ம்.) "நுண்புல்லடக்கியவெண்பலெயிற்றியர்" (பெரும்பா. கூச.) 7. புல்லு. (உ-ம்.) "போக்கரிதிவ் வழகையெலாம்புல்லிடையேயுகுத்தீரே" (இராமா. சூர்ப்பந. கஉரு.) 8. புலி. (உ-ம்.) "புல்லடி வெகுளிவேகப்புழைக்கைமேல்" (பிர-காண்.ச: ச0.) 9. புறக்காழ். (இலப்பதி.) 10 புன்மை. (உ-ம்.) "புல்லாளன்" (சிந். மண்மகளி. உகஎ.)

புல்கல்—புல்லுதல்.

புல்குதல்—புல்கல்.

புல்லகண்டம்—சருக்கரை.(வைத்தியபரி.)

புல்லகம்-துதலணி.(உ-ம்.)'தொய்யகம்'பார்.

புல்லமை—அற்பம். (வைத்தியபரி.)

புல்லம்—1. இடவிராசி. (சூ. நிக. க: சுச.) 2. எருது. (சூ. நிக. கு: கச.)

புல்லர்—கீழ்மக்கள். (சூ. நிக. உ: நுச.)

புல்லல்—1. அமைதல், பொருந்தல். (சூ. நிக. அ: சகூ.) 2. கூடுதல். (உ-ம்.) "திண்மை" பார் 3. சார்தல், கிட்டல். (சூ. நிக. கு: சஙு.) 4. புணர்தல். (உ-ம்.) "புல்லியகாலையில்" (பிர. காண். பஞ்சாட். உசு.) 5. பொருந்தல். (உ-ம்.) "கன்னலுஞ்செறிசெங்நெலும்புல்லுமாநிலங் கழிந்து" (திருவிளை. விடையி. கு.)

புல்லறிவு–அற்பவறிவு. (வள். புல்லறிவாண்மைபார்.)

புல்லன்–1. அற்பன். புல்-அற்பம். 2. பயன் படாதவன். (உ-ம்.) "மல்லிகார்ச்சுனவரையின் பாங்கர்மன்னு – மெல்லியினின்மேவுபுல்லன்" (சிவரக. கத்தரிப்பூ. உஉ)

புல்லாங்குழல்–ஓரு தகுழல். (வழக்.)

புல்லாடவன்—புல்லாற்செய்த ஆடவன் வடிவம்; இது: திணைப்புனத்திற் செய்திருப் பது. (உ-ம்.) "புல்லாடவனையறியாதிரையெனப்போந்தடித்து" (தணிகை. களவு. சகடு.)

புல்லாநீதி--புல். (மலையக.)

புல்லாமணக்கு--ஓராமணக்கு. (வழக்.)

புல்லார்—பகைவர். (பிங்கல. கூசஎ.)

புல்லி—1. புறவிதழ். (சூ. நிக. ச: நுக.) 2. பூவினிதழ். (வைத்தியபரி.)

புல்லிகை—ஒருவகைப்பூண்டு. (உ-ம்.)"ஞாலியன்மென்காதிற்புல்லிகைச்சாமரை" (கலி. கூசு.)

புல்லிங்கம் — ஆண் பால். (பி. வி. சாரு. உரை.)

புல்லிதழ்—பூவின்புறவிதழ். (உ - ம்.) "புல்லிதழ்பூவிற்குமுண்டு" (நாலடி.)

புல்லிது–புன்மைத்து. (உ–ம்.) "புல்லிதுபுல்லிதுபுனத்தைக்காத்திடல்" (கந்தபு.வள்.அகழ்.)

புல்லிபம்—புலிநகரை. (வைத்தியபரி.)

புல்லிய—1. தாழ்ந்தன. (உ–ம்.) "மலையும் புல்லிய" (இராமா. சூர்ப்பந. சை.) 2. பிரிவில்லாத. (பரிபா.)

புல்லியம்—புலிநகரை. (வைத்தியபரி.)

புல்லியர் — கீழ்மக்கள். புல்லார், புல்லியர் இரண்டு மொன்றென்க.

புல்லினத்தார்–ஆட்டிடையர். (உ–ம்.) "எல்லாவிஃதொன்றுகூறுங்குறும்பிவர், புல்லினத்தார்க்கும்" (கலி. கoஎ.)

புல்லு—1. புதல். உகரஞ்சாரியை. (பிங்கல. ஈஅசுடு.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

புல்லுக்குருவி—புற்குருவி, ஓர்விதகுருவி. (வழக்.)

புல்லுச்செதுக்கி — செதுக்குப் பாரை. (வழக்.)

புல்லுதல் — 1. பொருந்தல். (சூ. நிக. அ: சக. 2. தழுவுதல். (உ–ம்.) "எதித்தனண்மோக்துபுல்லியேந்தினள்" (திருவிளை. உக்கிரபாண்டியன்றிருவவ. கடு.) 3. புணர்தல். (வள்.புலவிதுணுக்கம். சு.)

புல்லுநர்—மேவினர். (சூ. நிக. உ: டுஉ.)

புல்லுநுவி–மரங்களிலுங் கீரைப்பாத்திகளிலுமுண்டாயிருக்கு மொருவிதபூடி. (வழக்.)

புல்லூதியம்—பனை. (வைத்தியபரி.)

புல்லூரி—புல்லுருவி. (வழக்.)

புல்லூருபுரு–நியதித்துவத்திருக்குமோருருத்திரர். (வி-ணி.)

புல்லெனல்—1. ஒளிமழுங்கல். (சூ. நிக. அ: உடு.) 2. பொலிவழிதல். (உ–ம்.) "புல்லெனட்டில்" (சிறுபாணாற்று. கஙஉ.)

புல்லை — வெண்மைகலந்தசிவப்பு. (வழக்.)

புல்வரத—ஒருபயிர். வழக்குண்டுபோலும்.

புல்வாயி-1.ஒருவகைமான்.(உ–ம்.)"புல்வாய்கவ்வியுழையேகவரி-சொல்வாய்நாடிற்பிணையெனப்படுமே"(தொல். பொரு. சூகங.) 2. கலைமான். (சூ. நிகண். ங: உஉ.) 3. மான். (உ–ம்.) "புலிமூலைப்பால்புல்வாய்க்கன்றருத்தியிடும்பசிநோய்தீர" (திருவிளை. இந்திரன்பழி. எஉ.)

புல்விரியன்— ஒரு பாம்பு. (வழக்.)

புலக்தும்—பிணங்குவாள். (ஐங்குறு.)

புலகன்— பிரமனது வியாநவாயுவிற்பிறந்த ஓரிருடி. (வி-ணி.)

புலங்கிநீ—த என்னு மட்சரத்தினதிதேவதை. (சி. சி. அ: உக. மறை.)

புலங்கோளி—விடயி. (இலக்கணவிளை.)

புலத்தல்—1. கல்வியிற்பிணங்கல், புணர்ச்சிக்கியையாததுபோலிருத்தல். 2. நொந்துகூறல். (வாண. உருகூ. முகம்.) 3. வெறுத்தல். (உ–ம்.) "செலவுகடைக்கூட்டுதிராயிற்பலபுலந்து" (பொருந. களரு.)

புலத்தவிருக்கம்–பெருமரம்.(வைத்தியபரி)

புலத்தியன்—ஓரிருடி; இவர்: பிரமமானசபுத்திரர். (அபிதாநகோ.) இவர் மரபினர் இராவணன் முதலோர்.

புலந்து—வெறுத்து. (பத்துப்பா.)

புலப்படல்—புலப்படுதல், விளங்குதல். (உ–ம்.) "மற்றதுகட்புலப்படலால்" (கோயிற்பு. பாயிர. உஉ.)

புலப்படுத்துதல் — விளங்கப்பண்ணுதல். (வழக்.)

புலப்படுதல்—புலப்படல், வெளிப்படுதல். (ஐங்குறு.)

புலப்பம்—பிதற்றுதல். (வழக்.)

புலப்பாடு—புலப்படுதல். (வழக்.)

புலம்—1. அறிவு. (உ–ம்.) "புலவரையிறந்தபுகழ்சாரூன்றல்" (புறநா. உக) 2. இடம். (உ–ம்.) "புலங்கெடவிறுக்கும்வரம்பிறுனை" (புறநா. ககசு.) 3. ஒலிமுதலெம்புலன். (உ–ம்.) "புலம்வென்ற-புன்மையில்காட்சியவர்" (வள். களச.) 4. திக்கு.(உ–ம்.)"தென்புலவாழ்நர்க்கு" (புறநா. க.) 5. தேயம். (உ–ம்.) "அவுபாசநம்" பார். 6. நுண்மை. (உ–ம்.)"கண்ணெனும்புலங்கொள்வாயுஞ்சிக்கெனவடைத்தேன்"(இராமா. உலாவிய. சை.) 7. மேட்டுநிலம். (வழக்.) 8. வயல். (உ–ம்.) "வித்துமிடல்வேண்டுங்கொல்லோவிருந்தோம்பி-மிச்சின்மிசைவான் புலம்" (வள். அறு.)

புலம்ப—1. தனிப்ப. உ–ம்.) "வேரற்-பூவுடையலங்குசினைபுலம்பவேர்கீண்டு" (திருமுரு. உகூஅ.) 2. வாட. (ஐங்குறு.)

புலம்பல்—1. இரங்கல். (இராமா.சூர்ப்பந. கoஅ.) 2. ஒலித்தல். (சூ. நிக. கo: சஎ.) 3. வருந்தல். (உ - ம்.) "வேழப்போரினம்புலம்பிஞற்போல்" (சிந். காந்த. ஙகஅ.)

புலம்பலர்—வேரூர். (சிந்தா.)

புலம்பன்—நெய்தனிலத்தலைவன். (சூ. நிக. உ: எங.)

புலம்பு — 1. ஒலித்தல். தல்-விகுதியின்றி வந்தது. 2. அச்சம். (பிங்கல. கஅடுஉ.) 3. குற்றம். (சிந்தா.) 4. தனிமை. (உ–ம்.)"புல்லென்றகளம்போலப்புலம்புகொண்டமைவாளோ"(கலி.

ரு.) 5. தன்பம்.(உ-ம்.) "பூமிசையேற்றினேன் புலம்பறுகின்றேன்" (மணிமே. மந்திர. கரு.) 6. தெரிநிலேவினேப்பகுதி. 7. நகக்கம். (திவா கர. கக-ஆவது.) 8. புலம்பல். அல்-விகுதி யின்றிவந்தது.

புலம்புதல்-1. அழுதல்.(வழக்.) 2. ஒலித்தல். (உ - ம்.) "புலம்புதலெனினும்புலம்பலெனினு மொக்கும்" 4. பிதற்றுதல். (வழக்.) 5. பேசுதல். (தைல. பாயிர. கள.)

புலமகள்—நாமகள். (உ-ம்.) "அண்ணலங் கதிரலமரப்புலமகணகவே" (சிந். இலக். உசுக.)

புலமாக்கல்—அறிவித்தல். (உ-ம்.) "மேல்-நெறியெனும்புலமாக்கியவெந்தையை"(திருவா ச. திருச்சத. கூஉ.)

புலமினுக்கி—விளக்குமாறு. (தைல.பாயிர. ககூ.)

புலமை—மெய்ஞ்ஞாநம். (உ-ம்.) "புரையுந ரில்லாப்புலமையோயென" (திருமுரு. உஅ0.) [பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளையெல் லாமொருங்கேகொண்ட பேரறிவுடமையென் பர் சரவணப்பெருமாளையர்.]

புலமையோர்—புலமையோர், கவிஞர்; இவர்: கவி, கமகன், வாதி, வாக்கியென நால்வகைப் படுவர்.

புலர்காலை—சங்காகாலம். (உ-ம்.) "புலர் காலைமாயைமேவிப்பொருந்தும்" (சிலப்பி ர. வியாக். பொது. கசு-ஆம் பக்.)

புலர்ந்தல் — 1. உலர்த்தல். (பெரியபுரா. தடுத்தாட். கசு.) 2 பூசுதல். (சூ. நிக. கு: கரு.)

புலர்த்துதல்—புலர்த்தல்.

புலர்தல் — 1. உலர்தல், புலருதலெனினு மொக்கும். (திருமுருகா கஅக-ஆம் அடி.) 2. தெளிதல். (உ - ம்.) "புலர்ததுபொழுதுநல்லா ணெஞ்சமும்புலர்ந்ததன்றே" (சிந். பதுமை. உகூஉ.) 3. வாடல். (வழக்குண்டுபோலும்.) 4. விடிதல். (உ-ம்.) "2"பார்.

புலர்வு — 1. புலர்தல். உ-தொழிற்பெயர் விகுதி. 2. வாடுகை (வழக்.) 3. விடிவு.

புலரி—விடியல். (உ-ம்.) "புலரிக்காலெயெல் லொளி" (பிரமோத்தரகாண்ட. சு: சo.)

புலருதல்-1. காய்தல். (உ-ம்.)"பள்ளியுளீரம் புலராமையேறற்க" (ஆசாரக்.) 2. வாடுதல். (வழக்.) 3. விடிதல். (திருவிளை.வரகுண.சo.)

புலவ—புலாலுற்றநாற. (பதிற்றுப்.)

புலவர்—1. அறிஞர். (உ-ம்) "புலர்வர்பூத தல்யாளையொடுபுணர்தேர்பண்ணவும்" (புறநா. கூஉ.) 2. கம்மாளர். 3. கவிவாணர். 4. குறுநில மன்னர். (உ-ம்.) வந்தடிதாழ்ந்தாண்க. 5. கூத்தர். 6. தேவர். (உ-ம்.) "புனைசடைமுடியினர்புலவ ரோவெனை" (இராமா.சடாயுகா. ககூ.) 7. புதன். (2, 3, 5, 7-சூ. நிக. கக: லகரவெ. க.)

புலவல் — 1. புலத்தல். (உ-ம்.) "போரெ திர்ந்தாற்றுப்புலவனீகூறியென்" (கலி. அகூ.) 2. புலால்நாற்றம்நாறுதல். (உ - ம்.) "உறலுறு குறுதிச்செருக்களம்புலவ" (பதிற்றுப் பத்து. அசு: க.)

புலவன்—1. அருகன். (உ-ம்.) "பொருளன் புனிதன்புராணன்புலவன்" (சிலப். நாடுகாண். களகூ.) 2. அறிஞன். புலம்-அறிவு. 3. கம்மா ளன். (உ-ம்.) "புலவனதுளங்கொடு" (கந்தபு. தெய்வ. உரு.) 4. கவிவாணன். 5. கூத்தன். 6. தேவன். 7. தேவேந்திரன். (சூ.நிக.க:ககூ.) 8. பாடுவோன். 9. புதன். 10. (சூ. நிக.க:உசு.) ஏனையவற்றிற்குதாரணம் புலவர் என்பதிற் காண்க. ஒருமைப்பன்மைவிகுதியின் பேத மின்றிப் பொருளின்பேதமில்லை.

புலவா—பூலா. (மலையக.)

புலவி–1. ஊடலின்முதிர்வு. (உ-ம்.)"கலவி வித்தாகவூடிக்கட்புனல்குளிக்குநல்லார் - புலவி தீர்செவ்விநோக்கிப்புணர்மூலப்போகந் துய்த் து"(திருவிளை.நகர. கoரு.) 2. கூடியுங்கூட்ட மின்மை. (சூ. நிக. கு: சஅ.) 3. வெறுத்தல். (ஐங்குறு.)

புலவிநீட்டம்—தூனி. (சூ. நிக. கு: கள.)

புலவு—1. ஊன். (உ-ம்.) "புலவுவாய்ப்புலி முதல்யாவையும்" (அரிச்ச. வேட்டஞ். க.) 2. குருதி. (உ-ம்.) "கூந்தல்புலவுத்தோய" (சிந் தா. நாமக. உசுச.) [ஆகுபெயர்.] 3. நரகம். (பிங்கல. சருரு) 4. புலால்மணம். (உ - ம்.) "புலவுமணற்பூங்கானல்" (பட்டின. கூச.) 5. முடைநாற்றம். (சூ. நிக. கு: சசு.)

புலவுதல்—வெறுத்தல். (உ-ம்.) "புலவுதி மாதோநீயே" (புறநா. உகூக.)

புலவுநி—வெறுத்தி. (புறநா.)

புலன்—1. அறிவு. (உ-ம்.)"எப்புலனுமோர் ந்தவன்" (திருவிளை. விருத்தகு. கo.) 2. இந் திரியம். (ஞாஞமி.) இந்திரியவுணர்ச்சியுமாம். 3. கருத்து. (வழக்.) 4. கழனி. (திருநூற்.) 5. பஞ்சப்புலன்.(உ-ம்.)"கரணம்"பார். 6. பாட்டு. (உ-ம்.) "காமனுங்கனியவைத்தபுலன்கரைகண் டு" (சிந்.நாமக. கூசக.) [ஆகுபெயர்.] 7. வனப் பெட்டிவெனறு. 8 விடயம். (உ-ம்.) "மரண மனைத்தும்புலன்விலைகாணூ" (கோயிற்பு. நட ராச. உஉ.)

புலனி—ஞண்டு. (வைத்தியபரி.)

புலனெறிவழக்கம்—புலனெறிவழக்கு. (உ-ம்.)"பாடல்சான்றபுலனெறிவழக்கம்"(தொ ல். ருகூ.)

புலநெறிவழக்கு— புலவராற்று வழக்கம். (தொல். பொரு. ஈ: உரை.)

புலனெடுக்கல்-விடயங்களின்வழிமனசைப் போகவொட்டாமற் திருப்புதல். (உ - ம்.) "சக மார்க்கம்புலனெடுக்கி" (சி. சி. அ: உக.)

புலாகம்—சோற்றுத்திரளை. (உ - ம்.) வந்துழிக்காண்க.

புலாகி—மரம். (வைத்தியபரி.)

புலால்—1. ஊன் முதலியன. (உ-ம்.) "புலான்மறுத்தல்" 2. வெடில். (உ-ம்.) "புலால் கமழ்-நீராட்டி" (கோயிற்பு. பாயிர. எ.)

புலால்கட்டி — கடலின் மீன்முதலியவற்றைத்தடுப்போன். ஒரு குழூஉக்குறி.

புலானீர்—இரத்தம். (சூ. நிக. ஈ: சரு.)

புலி—1. ஒருமிருகம். 2. சிங்கவிராசி. 3. தொடரி. (வைத்தியபரி.) 4. நால்வகைச்சாந்தி ஒன்று. 5. வேங்கைப்பட்டை. (தைல. தைலவ. எசு.) (1, 2, 4-பிங்கல. ஈஅசுஈ.)

புலிக்கான்முநி— வியாக்கிரபாத முனிவர். (கோயிற்பு. பதஞ்சலி. எஎ.)

புலிக்கொடியோன்—சோழன். (பிங்கல. எசஎ.)

புலிங்கம்–1. ஊர்க்குருவி. (வைத்தியபரி.) 2. தீப்பொறி. (உ - ம்.) "மயிர்ப்புறந்தொறும் புலிங்கம்வந்தடைந்தன" (கந்தபு. சூரன் றண்ட. எ.)

புலித்தடுக்கி—புலித்தொடக்கி.

புலித்தொடக்கி — 1. இண்டு. (பிங்கல. உஅஎ.) 2. கற்றுழை. 3. தொடரி. இதனை புலிதொடக்கிஎன்றுங்கூறுவர். (1, 2-மலையக.)

புலித்தோலுடையோன்—சிவன். திவாகரமுதலாவது.

புலிநீதம்—தேயமைம்பத்தாறி லொன்று; அது: மிலேச்சதேசம். (பொருட்டொகை நிகண்டிலறிக.)

புலிநீதன்—மிலேச்சன். (உ-ம்.) வந்துழிக்காண்க.

புலிநகக்கொன்றை–ஒருகொன்றை. இதற்குப் பகன்றையென்னும் பெயருண்டு (தனியூர்ப்புராணம். பாயிரம். விநாயகவணக்கச்செய்யுளிலறிக.) (மணிமேகலை.)

புலிநடலை—ஆனைத்தடிப்பு.(வைத்தியபரி.)

புலிப்பாணி–போகரிஷியின்மாணாக்கராகிய சித்தர்; இவர்: புலியை வசப்படுத்தினமையாலு நீரைத்திரட்டிக்கையிற்கொண்டமையாலு மிப்பெயர்பெற்றனர்.(வைத்தியஞ்சாலமிவைகளில் வல்லவர். (அபிதான.)

புலிப்போறிப்போர்வை—புலியினது வலியையுடையகவசம். (உ - ம்.) "புலிப்பொறிப் போர்வைநீக்கி" (சிந். நாமக. உஈஎ.)

புலிபம்—பொன்னுவிரை. (மலையக.)

புலிழகச்சிலந்தி—ஒரு விடசெந்து. (வழக்குண்டுபோலும்.)

புலிழகப்பூச்சி–ஒருபூச்சி; அது: புலிமுகச்சிலந்தியென்பர்.

புலிழநி — வியாக்கிரபாதமுனிவர். (உ - ம்.) "தெரிவுறநீடும்புலிமுனியோனும்" (கோயிற்பி. கடரா. ஈடு.)

புலியுகிரி—புலித்தொடக்கி. (மலையக.)

புலியுறுமி— ஒரு பறை. புலியுறுமுவதுபோலொலித்தலாலிப்பெயர் பெற்றது.

புலியூர்–சிதம்பரம். (உ-ம்.)"மருவுதல்"பார்.

புலீச்சரம் — திருப்புலீச்சரம். (உ - ம்.) "அருண்மேவும்புலீச்சரமும் – பற்றும்பெருமானையும்" (கோயிற்பு. வியா. உஉ.)

புலு—பத்து. (உ-ம்) வந்துழிக்காண்க.

புலுட்டுதல்—கருக்குதல். (உ-ம்.) "வழக்குண்டுபோலும்.

புலுட்டை—
புலுண்டல்—
புலுண்டுதல்–
} தழைவற்றது. (வழக்குண்டுபோலும்.)

புலுதம் — 1. அளபெடை. (யாப். காரி. உறுப்பிய. க. உரை.) 2. ஒற்றெழுத்து. (சூ. நிக. கஐ: ஈஈ.) 3. காலதசப்பிரமாணத்தொன்று; அஃது: இலகு மூன்றுகொண்டது.

புலை—1. அசுத்தம். (மணிமே.) 2. ஊன். (பிங்கல. ஈஎடு.) 3. பறையன். (உ - ம்.) "நலமென்றபுலைமலமருந்துஞ்சூகரமாய் வருவன் (சிவரக பசாசுமோசன.கஈ.) 4. புன்மை, தாழ்வு. (உ-ம்.) வந்துழிக்காண்க. 5. பொய். (உ - ம்.) "கள்ளங்கொலைகட்புலைகாமமென்றைந்து மற்றூர்க்கு" (அரிச்ச. நாட். சு.)

புலைச்சி—1. எவட்சாரம். (வைத்தியபரி.) 2. புலைப்பெண். (உ-ம்.) "கண்ணில்லாளொரு புலைச்சி" (பிரமோ. காண். ஈ: ஈ.)

புலைச்சேரி—பறைச்சேரி. (உ-ம்.) "அவ்வாறுசெறிமனைகள்புலைச்சேரிசுடுகாடாகும்" (சிவரக. பசாசுமோசன. உஉ.)

புலைஞரி–1. சண்டாளர். (சூ. நிக. உ: ஈச.) 2. பறையர். (வழக்.)

புலைத்தனம்—1. கொலைக்குணம். 2. புன்குணம். (1, 2-வழக்.)

புலைத்தி–புலைமகள். (உ-ம்.) "முருகுமெய்ப்பட்டபுலைத்திபோல" (புறநா. உடுஈ.)

புலைத்தொழில்—1. கொலைத்தொழில். 2. புன்முழில். (1, 2-வழக்.)

புலைப்பாடி—புலைச்சேரி (பெரியபு. திருநாளைப். சு.)

புலைமகளீ—புலைப்பெண். (வழக்.)

புலைமகன்—புலையன். (வழக்.

புலைமை—புலைத்தன்மை, கீழ்மை. (உ-ம்.) "புறங்கடைநின்றுன்செய்தபுலைமை" (திருவிளை. அங்கம். கூ.)

புலையர்—1. கீழ்மக்கள். (வழக்.) 2. சண்டாளர். (உ-ம்.) "பிணங்கள்சுடுங்கடும்புலையர்" (அரிச்ச. மயாந. கூடி.)

புலையன்—1. கீழ்மகன். (வழக்.) 2. சண்டாளன்; இவன்: பார்ப்பனத்திவயிற்றிற்சூத்திரனுக்குப்பிறந்தபிள்ளை. (உ-ம்.) "அந்தணர்கன்னிதோளையணைதலுமவனப்போது-வந்தவண்புலையன்" (அருணகிரிபு. வலம்பு. ககக.)

புலோமசித்து—இந்திரன். புலோமன் என்னும் அசுரனைச்செயித்தவன்.

புலோமசை—இந்திராணி; இவள்: புலோமன்குமாரி. (உ-ம்.) "பொன்னவிர்திதலைமூலசுமந்தொல்கும்புலோமசை" (கூர்மபு. பிரகிருதி. க.)

புலோமன்—1. இந்திராணியின்றந்தை. (உ-ம்.) "புலோமசை"பார். 2. ஒரு தானவன்; இவன்: இந்திரனுற்கொல்லப்பட்டவன்.

புலோமை—1. ஒரு அசுரன். 2. காசிபன் மனைவி. (அபிதாநசிந்.)

புவநசமம்—புவனத்திற்பிறந்தது. (சி-லி. ஞாந. அ: உரை.)

புவநம்—1. உலகின்பொது. (உ-ம்.) "புவநமலிபோகங்கள்பொருந்துமருந்தவம்புரிந்தால்" (கோயிற்பு. வியாக். ச.) [பிருதிவித்தத்துவத்தில் நூற்றெட்டு, அப்புதத்துவத்தில் எட்டு, தேயுதத்துவத்தில் எட்டு, வாயுதத்துவத்தில் எட்டு, ஆகாயதத்துவத்தில் எட்டு, தன்மாத்திரையில் நான்கு, சன்மேந்திரியத்தில் ஒன்று, ஞாநேந்திரியத்தில் ஒன்று, மநத்தில் ஒன்று, அகங்காரத்தில் ஒன்று, புத்தியில் எட்டு, பிரகிருதியில் எட்டு, புருடனில் ஆறு, இராகத்தில் ஐந்து, நியதிமுதலியதத்துவத்தில் எட்டு, மாயையில் எட்டு, சுத்தவித்தையில் ஒன்பது, ஈசுவரத்தில் எட்டு, சாதாக்கியத்தில் ஒன்று, சத்தியில் ஐந்து, சிவத்தில் பத்து ஆகப்புவநங்கள் இருநூற்றிருபத்துநான்கென்ப. (சி. சி. அ: எ, அ, கூ-உரை.] 2. நீர். (தைல. தைலவ. கடகூ.) 3. பூமி. (1, 3-பிங்கல. கூஅசுசு.)

புவநாத்துவா—ஆறத்துவாக்களிலொன்று. (சி. பி. கை. சு.)

புவநி-பூமி. (உ-ம்.)"புவநிமாந்தருக்கின்னருள்சுரந்திடும்பொறையால்" (பிர-காண்.கடி:நி.)

புவநை—ஒரு சத்தி, பார்வதி. (காஞ்சிப்பு. நகரப். சுகூ.)

புவர்லோகம்—புவலோகம். (வழக்.)

புவலோகம்—சந்திரசூரியர் முதலியோர் வசிக்கும்பதம். (உ-ம்.) "புவலோகங்கடந்துபோய்ப்புண்ணியருக்கெண்ணிறந்தபோக மூட்டும்" (திருவிளை. மலயத்துவச. உஅ.)

புவன்—சிவன். (உ-ம்.) "பிரான்"பார். [தானேயுண்டானவன் என்றபடி.]

புவி—1. தேர். (உ-ம்.) "கைத்தநுவோடுந்தியோன்கதுமெனப்புவிக்கணுற்றுன்" (கந்தபு. சூரபன். வதை. உகூச.) 2. பிருதிவிதத்துவம். (வை தீ. அகூ.) 3. பூமி. (உ-ம்.) "நிறையிரும்புவியைமுன்போனிலெபெறநிறுவிற்றன் றே" (கூர்மபு. அந்தகா. சு.)

புவித்விநிக்கம்—பெருவாகை. (வைத்தியபரிபா.)

புவிபீநு-தண்ணீர்விட்டான்.(வைத்தியபரி.)

புவியாடம்—இரசகர்ப்பூரம்.(வைத்தியபரி.)

புழது—மேலவெருகு. (உ-ம்.) "அழுக்குபட்டலமரும்புகழமல்சாரல்" (மேலபடி. உகக.)

புழப்பு—பொன்னுவிரை. (வைத்தியபரி.)

புழல்—1. உட்பொய். (உ-ம்.) "பூழிபூத்தபுழற்காளாம்பி" (சிறுபாண. கஙசா.) 2. சலதாரை.(வழக்குண்டுபோலும்.) 3. தூள.(உ-ம்.) "புழற்றலைப்புகர்க்கலையுருட்டி" (புறநா. கடிஉ.) 4. தூளையுடைப்பொருள். (சூ. நிக. அ: சு.) 5. மீன். (பிங்கல. உசுஉஎ.)

புழு—1. கிருமி. (உ-ம்.) "காயமெலாம்புழுகெளியகக்வித்தபுண்ணும்" (பிர. காண். கூ: உ.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

புழக்கம்—1. உட்டணம். 2. பொறுமை. (1, 2-வழக்.)

புழக்கல்—1. அரிசி. (உ-ம்.) "செம்பொன்வண்ணப்புழுக்கலாநிமிர்ந்தசோறு"(திருவிளை. நாட். கூஉ.) [தொழிலாகுபெயர்.] 2. அவித்தல். (வழக்.) 3. சோறு. (உ-ம்.) "குய்யுடைப்புழக்கல்" (கந்தபு. மார்க். ககக.) உணவுஎன்பர். சிந்தாமணியில். 4. மூதிரைப்பண்டம். (உ-ம்.) "ஞாலே"பார்.

புழக்கு—1. அவிப்பு. 2. இறைச்சி. (உ-ம்.) "யாமைப்புழுக்கின்"(புறநா. உகஉ.) 3. குழம்பு. (பெரும்பா. ககூடி. உரை.) 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. புழுக்கியவுணவு. (உ-ம்.)"எறிகுத்திற்றியேற்றுமின்புழுக்கே" (பதிற்றுப்பத். உ: அ.) [மலைநாட்டுவழக்கு.]

புழக்குத்தல்—புழுவரித்தல். (வழக்.)

புழக்குத்தி—கொண்டலாத்தி, ஒருகுருவி. (வழக்.)

புழக்குத்துதல்—புழுவரித்தல். (வழக்.)

புழக்குதல்—அவித்தல். (வழக்.)

புழக்கை—1. அடிமை. (வழக்.) 2. புழுக்குதல். (ஐ-தொழிழ்பெயர்விகுதி.

புழக்கைச்சி—அடிமைப்பெண். (வழக்.)

புழக்கையன்—அடிமை. (வழக்.)

புழக்கோத்தி—புழுக்குத்தி.

புழக்கோல்லி—ஆதிதின்னுப்பாளை. (வைத்தியபரி.)

புழது—1. அம்புக்குப்பி. (பிங்கல. கருசுஉ.) 2. காவிப்புழுகு. (உ-ம்.) "ஓவில்கருப்பூரங்குங்குமம்புழுகுசந்தனக்காப்புடனேசாத்தி" (சிவரக. பசாசுமோசந. கக.)

புழுதசம்பா—ஒரு நெல். (வழச்.)

புழுதப்பூனை—காவிப்பிள்ளை. (தனியூர்ப் புராணம் பாயிரத்திலறிக.)

புழுங்கல்—1. உட்டணமாதல். 2. சினக்குறிப்பு. (உ-ம்.) "புற்று"பார். 3. புழுக்கின தானியம். (1, 3-வழக்.)

புழுங்கலரிசி—அவித்தநெல்லரிசி. (வழக்.)

புழுங்குதல்—1. அவித்தல். 2. உட்டணித்தல். 3. புழுங்கல். சினக்குறிப்பு. (பிங்கல. கஅஎச.) 4. பொய்யவிதல்செய்தல். 5. பொருமைப்படல். 6. மனங்கொதித்தல். (உ-ம்.) "வெங்கணைவிடுத்துனின்றெதிர்புழுங்கினனே" (கூர்ம பு. தக்க. வமி. நுஎ.) 7. வருந்தல். (இராமா. கரன்வதை. உ.) (1, 2, 4, 5-வழக்.)

புழுத்தல்—1. புழுத்துப்போதல். 2. புழுவுண்டாதல். (1, 2-வழக்.)

புழுதி—பராகம், தூள். (சூ. நிக. சு: உ0.)

புழுப்பகம்—மூக்கிரட்டை. (வைத்தியபரி.)

புழுப்பகை—வாய்விளங்கம். (தைல. தைலவ. சுசு.)

புழுப்பு—புழுத்தல். ப-தொழிற்பெயர்விகுதி.

புழுமேய்சீசல்—
புழுமேய்தல்—
புழுவேட்டு—
புழுவேட்டுதல்—
} புழுவரித்தல். (வழக்.)

புழை—1. உட்டுளை. (உ-ம்.) "புழைக்கை" (பிங்கல. உஉஅச.) 2. ஏவறை. (சிலப்.) 3. துவாரம். (உ-ம்.) "புண்ணிலாம்பெரும்புழையிற்கனலுழைந்தாலென" (இராமா. கையடை. கக.) சிறியவழி. என்பர் மணிமேகலையில். 4. வயலிற்கடைமடை. (உ-ம்.) "மழைக்குரலென மயிலகவவார்செனைற், புழைக்கடைப் புனலுலத்தொழுகும்பொற்பிற்றே" (சிந்.கசக.நிஅ.)

புழைக்கடை—வயலிற்கடைமடை. (சிந்தா.)

புழைக்கை—1. துதிக்கை. (உ-ம்.) "யாளிகரிபுழைக்கைமுகந்தொன்றற்கொன் றூட்டியூட்டி" (திருவிளை. இந்திரன்பழி. எஉ.) 2. யானை. (உ-ம்.) "புல்"பார். 3. யானையாளி. (ஆ. நி. கூக.)

புள்—1. அவிட்டநாள். (உ-ம்.) 'புகருடை வாரத்துட்புட்பனைபூசருமரோகிணியும்'(விதாந. குணு. சு.) 2. கணந்துட்புள், ஒரு பறவை. (சிலப்.) 3. பறவைப்பொது. (உ-ம்.) "புள்ளலம்பிய" (அரிச்ச. நாட்டு. உகூ.) 4. மதுபானம். (பரிபா.) 5. வண்டு. (உ-ம்.) "புள்ளார்மலர்பொழில்சூழ்தணிகேசன்" (தனிப்பா. 2-ஆம் பாக. சசக.) 6. வேள. (உ-ம்.) "புட்கைபோகியபுன்றலைமகாரோடு" (மலைபடு. உருகூ.) 7. வாஸ்வமூகூர்த்தம். (உ-ம்.) "அரண்பாம்பநுடமகம்புட்புனலாடி" (விதாந. குணு. எகூ.)

புள்ளடி—1. அரதனக்குற்றமைந்தனுளொன்று. (உ-ம்.) "கீற்று"பார். [பறவையின்பாத வடிவுபோலிருப்பதென்பது,காகபாதமென்பதுமிது.] 2. உரைகல். 3. ஒரு பூடு. 4. புள்ளின் பாதம். (2, 3, 4-வழக்.)

புள்ளம்—1. அரிவாள். (உ-ம்.) "புள்ளங்கள் சுற்சங்கிற்றீட்டுவார்" (அரிச்ச. நாட். சருி.) 2. கொடுவாள். (பிங்கல. கருருஅ.)

புள்ளரசு—கருடன். (உ-ம்.) "கடவுளவிர் சடைமேற்கட்செவியஞ்சாதே-படர் சிறைய புள்ளரசைப்பார்த்து" (நன்னெறி. கூ.)

புள்ளி—1. அரதனக்குற்றமைத்தனுளொன்றிய விந்து. (உ-ம்.) "தராசம்"பார். 2. ஆய்தம். (யாப். காரிகை. உறுப்பி. க. உரை.) 3. இலக்கப்புள்ளி. 4. ஒற்றெழுத்து. (உ-ம்.) "புள்ளியீற்றின்மூன்"என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திலறிக. 5. ஒற்றெழுத்துமேலிடும் புள்ளி.(உ-ம்.)"புள்ளிவிட்டவ்வொடு"என்னுஞ் சூத்திரத்திலறிக. 6. நண்டு. 7. பல்லி. 8. மதிப்பு, அல்லது உயர்ச்சி. அடையாளமுமாம். (6, 7-வைத்தியபரி.) (3, 8-வழக்.)

புள்ளிக்கணக்கு-மதிப்பிடுங்கணக்கு.(வழக்)

புள்ளிக்காரன்—பணக்காரன். (வழக்.)

புள்ளிநீர்—சுக்கிலம். (உ-ம்.) "புள்ளிநீர் வீழ்ந்தது" (சிந். முத்தியி. அசு.)

புள்ளிமான்—ஒருமான். (வழக்.)

புள்ளியம்—சிறுகுறிஞ்சா. (வைத்தியபரி.)

புள்ளிரி—சந்தனம். (வைத்தியபரி.)

புள்ளிவண்டு—கழுதைவண்டு. (வழக்குண்டு போலும்.)

புள்ளு—சிறுபுள்ளடி. (வைத்தியபரி.)

புள்ளுவம்—வஞ்சகம். (சூ. நிக. அ: சுஅ.)

புள்ளுவமகனர்—வேடன். (சிந்தா.)

புள்ளுவர்—1. கீழோர். (பிங்கல. அளஉ.) 2. பாலைநிலமாக்கள். (சூ. நிக. உ: சுஎ.) 3. வஞ்சகர். (உ-ம்.) "பொன்னேய்நெய்யொடுபாலுமுதண்டொருபுள்ளுவன்" (நாலாயி. பெரி

யாழ். அ-ஆம் பத்-தன்னேர். க.) 4. வேடர். "புள்ளுவர்கையினுமுய்யும்புள்ளுள" (திருமுத்தி. அஅ.)

புளகப்பாலி — சிறுவாலுளுவை. (வைத்தியபரி.)

புளகம்—1. அரிதாரம். (வைத்தியபரி.) 2. கண்ணுடி. (உ-ம்.) "செம்பொற்புளகத்திளஞாயிறுசெற்றகோயில்" (திருக். கநக. கஎக.) 3. சோறு. (பிங்கல. கூஅசுஎ.) 4. மயிர்சிலிர்த்தல். (உ-ம்.) "நீர்சொரியாநிற்பக்கண்புளகங் - களங்கந்தர" (ம-ருதி. நிஎ.)

புளகித்தல்–
புளகிதம்—
புளகிப்பு—
} மயிர்சிலிர்ப்பு. (வழக்.)

புளகு—புளகம். (உ-ம்.) "மயிர்புளகரும்ப" (சிவரக. வரலா. சு.)

புளப்பாகல்—சிறுவாலுளுவை. (மலையக.)

புளி—1. அறுசுவையிலொன்று. (நன்னூ. உயிரீற்று. உரை.) 2. புள்ளி. (உ-ம்.) "தயிர்ப்புளி மொய்த்ததோணலார்முழுதுமீண்டினர்" (திருக். கோவிக். கநி.) [விகாரம்.] 3. புளியமரம். (உ-ம்.) "மேனிசுந்தரிபரிக்கந்திபுளி" (தைல. தைலவ. எகூ.) 4. தெரிகிலேவியேவப்பகுதி.

புளிக்கறி—புளிங்கறி. (நன்னூ. உயிரீற்று. உரை.)

புளிக்கீரை—ஒரு கீரை. (வழக்.)

புளிச்சகாயிமரம்—ஒருமரம், புளிச்சற்காய்மரம். (வழக்குண்டுபோலும்.)

புளிச்சை—ஒரு செடி. (வழக்.)

புளிஞ்சேறு — புளியோதநம். (நன்னூ. உயிரீற். உரை. உரை.)

புளிஞர்—வேடர். (சூ. நிக. உ: சுஅ.)

புளிந்தல்—புளிப்பு. (வழக்.)

புளிதம்—தசை. (சூ. நிக. கூ: சச.)

புளிந்தயிர்—புளித்தயிர். (வழக்.)

புளிந்தன்—வையெயப்பெண்ணைக் கரவினுலே மன்னன்கூடிப்பெற்றபிள்ளை, வேடன். (உ-ம்.) "நாய்கர்க்கநியைக்கரவின்மன்னன் - பொருந்தவந்துதித்தபிள்ளைபுளிந்த னென்று ரைக்கும்பேரான்" (சூத. சிவகா. கஉ: கஅ.)

புளிநடலை—புளிநறளை. (மலையக.)

புளினம் — மணற்குன்று, மணற்றிட்டை. (உ-ம்.) 'இரதத்திரள்புளிநம்' (இராமா.கர.கூச.)

புளிநர்—வேடர். (உ-ம்.) "புடைசூழ்ந்தார் புளிநரே" (திருவிளை. மாபாதக. கஙூ.)

புளிநறளை—புளிமதுரை. (வைத்தியபரி.)

புளிப்பு — புளிக்கை, ஒருசுவை. (உ-ம்.) "நன்னூர்-சுலவப்புளிமுன்" என்னுஞ்சூத்திரத்திரவுரையிலறிக.

புளிமதுரை—புளிநறளை. (மலையக.)

புளிமா—1. ஒருமாமரம்; இதன்காய் இருப்பைக்காய்போற் சிறியதாயிருக்கும். 2. நிரை நேராய்வருஞ்சீர்க்குவாய்பாடு. (உ-ம்.) "தேமா புளிமாகருவிளங்கூவிளம்" (யாப். காரிகை. உறு. சு.)

புளிமாங்கனி — நிரைநேர்நிரையாய்வருஞ் சீர்க்கு வாய்பாடு. (யாப்காரி. உறுப். சு.)

புளிமாங்காயி — நிரைநேர் நேராய்வருஞ் சீர்க்கு வாய்ப்பாடு. (யாப். காரி. உறுப். சு.)

புளிமாதளை—ஒரு மாதளை. (வழக்.)

பொதுஞாநம்—சவிகற்பக்காட்சி. (உ - ம்.) "பொதுஞாநம்வந்தணுகி" (கோயிற்பு. இரணிய. கூஅ.)

பொதுத்தல்—தூளித்தல். (வழக்.)

பொதுத்தன்மை—பொதுவியல்பு. (வழக்.)

பொதுத்திணை — இருதிணைக்கும் பொதுச்சொல். (வழக்.)

பொதுநலம் — 1. பலருக்கும் பொதுவாய நன்மை. (வழக்.) 2. பொருள்கொடுப்பார்பலர்க்கும் பொதுவாய சிற்றின்பவாசை. (உ - ம்.) "பொதுநலத்தார்புன்னலந்தோயார்" (வள். சுகநி.)

பொதுநிறம்—பலநிறக்கலப்பு. (வழக்.)

பொதுநீங்குவமை — உவமையணி வகையுளொன்று; அது: தண்ணெனப்போன்றவைகளெல்லாம்வென்று மேம்படுதல்பற்றி யொரு பொருளினைத்தானே தனக்கு நிகராகுமென்று மேம்பாடுதோன்றக்கூறுவது. (தண்டி. கூ0.)

பொதுநோக்குதல் — எல்லாரையு மொருதன்மையராக நோக்குதல். (உ - ம்.) "பொதுநோக்காள்வேந்தன்" (வள். நிஉ அ.)

பொதுப்பண்—இரவும்பகலும் பாடப்படும் பண்கள்; அவை: செவ்வழி, செந்துருத்தி, நிருத்தாண்டகமென்னுமூன்றுமாம்.(தேவார.)

பொதுப்பாயிரம்—எடுத்துக்கொண்ட நூலுக்கும் ஏனைய சகல நூல்களுக்கும் பொருந்துமாறு நூற்றிறன்முதலிய இலக்கணங்களே நூன்முகத்துப்பொதுவாகக்கூறும் பாயிரம். நன். கூ.)

பொதுப்பெண்—பொதுமகள். (வழக்.)

பொதுப்பெயர்—திணை பாலிடங்களைக் குறித்துப் பொதுவாய்வரும் பெயர்.

பொதுபொதுப்பு — பொதுபொதெனல்.

பொதுபொதெனல்—வரவரமிகுதியாதல். (வழக்.)

பொதும்பர்—1. இளமரக்கா. (உ-ம்.) "குயினுழைபொதும்பர்" (பெரும்பா. கூஎச.) 2. சோலை. (உ-ம்.) "மாடுறுபொதும்பர்போய்மலர்கொய்து" (கந்தபு. மார்க்கண். அ0.) 3. மரச்செறிவு. (பிங்கல. உஅநிசு.) 4. மரப்பொந்து. அர் என்பது போலியாய்வந்தது.

பொதும்பு — 1. குறுங்காடு. (சிந்தா.) 2. சோலை. (உ-ம்.) "ஆசறுபொதும்பினும்" (கந்தபு. மார்க்கண். அக.) 3. புகலிடம். (உ - ம்.) "வினையேன்மநமஞ்சிப்பொதும்புறவே" (திருவாச. நீத்தல். கூநி.) 4. பொந்து. (பிங்கல. உஅநிகூ.)

பொதுமகள்–வேசி. (உ-ம்.)"பொற்புடைய பொதுமகளாப்புகல்வரிதாம்பொலிவின தாய்" (கோயிற்பு. பசஞ்சலி. உசு.)

பொதுமை—பொதுத்தன்மை. (உ-ம்.) "பொதுமைபார்க்கினன்றிதுகருமமென்னீயர்கின்றதறிவிலார்போல்" (இராமா. மாயாசீதை. எக.)

பொதுமொழி—பொதுச்சொல். (நன்னூ. பெயரி. உ.)

பொதுவதுமாநம்–பொருந்துவனவும் பொருந்தாதனவுமாய் நீக்கமாகச் சொல்லப்படும் அநுமாநவேதுக்கள் நான்கனுளொன்று; அது: யானைமேலிருந்தோன் காளமூத அந்தஓசை கேட்டவன் சாதநமாயுள்ள காளத்தோடே சாத்தியமாயுள்ள ஓசைகேட்குந்தோறும் அந்த இடத்தே யானையுண்டென்றறிவதுபோல்வது. (சிவஞாநபோ. க. பாண்.)

பொதுவர்—இடையர். (உ-ம்.) "பொதுவர் மனைவளர்ந்தமாலேயொருவருக்குந்தெரியாதிங்குன்மாயை" (பாரத. கிருட். கூஉ.)

பொதுவன்—1. நடுவாயிருப்பவன். (வழக்.) 2. முல்லைநிலத்துத்தலைவன். (உ-ம்)"தாளாண்மைகூறுபொதுவனமக்கொருநாள்"(கலி.கo க.)

பொதுவறுசிறப்பு—தனக்கேயுரியசிறப்பு. (சிலப்பதி.)

பொதுவி — முல்லைநிலப்பெண். (சூ. நிக. உ: எo.)

பொதுவிதி—பொதுவானநியமிப்பு.(வழக்.)

பொதுவியர்–இடைச்சியர்.(பிங்கல.நிசசு.)

பொதுவியல்பு—வேற்றுச்சாதிப்பொருண்மாத்திரையிற் செல்லாது தன் சாதிப்பொருட்

கெல்லாம் ஒப்பநிலைபெறுந்தன்மை. (சி.சி.அள. நி. சிவஞா.)

போதுவில் — அம்பலம். பொதியில் என மருவிற்று.

போதுவினை— பொதுவாக வரும் வினை. (தொல். சொல். நிச. சேநா.)

போதுவெழுத்து—தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவாய்வழங்கு மெழுத்து. (நன்னூ. பெயரி. கஎ.)

போதுளல்—1. செழித்தல். (உ - ம்.) வந்து ழிக்காண்க. 2. தழைத்தல். (உ - ம்.) "இருள் படப்பொதுளியபராரைமராத்து" (திருமுரு. கo.) 3. நெருங்கல். (உ - ம்.) "பொருவினறு மலர்பொதுளந்தண்டலைசூழ்" (சிவராத். கட வுள். கக.)

போதுளுதல்—பொதுளல்.

போந்தர்—ஒருவகைநீர்ப்புள். (உ-ம்.) வந்து ழிக்காண்க.

போந்தி—மொத்தி. (வழக்.)

போந்து—மரப்பொந்து. [தெலுகு.]

போந்தைக்கோல் — ஒருவகைப் பற்றுக் கோல். (வழக்குண்டுபோலும்.)

போப்புரு–காலதத்துவத்திருக்குமோருருத் திரர். (வி-ணி. உஎச.)

பொம்மல்—1. சோறு. (வைத்தியபரி.) 2. பொம்மை, பாவை. (உ - ம்.) "பொம்மலாட்ட மென்றேயிரு" (பட்டினத்தடிகள்பா.) 3. பொருமல். (வழக்.) 4. பொலிவு. (பிங்கல. உஉகூக.)

பொம்மெனல் — 1. அநுகரணவோசை. (சூ. நிக. கo: சஅ.) 2. விரைவுக்குறிப்பு.(உ-ம்.) "பூநனைகூந்தன்மாதர்பொம்மெனப் புகுந்து மொய்த்தார்" (இராமா. உலாவிய. க.)

பொம்மை—பிரதிமை. (வழக்.)

பொய் — 1. அசத்தியம், இல்லதுகூறல். (சைவப்பி.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. நிலையாமை. (உ - ம்.) "பொய்க்குடிவாழ்க்கையைப் போகவிட்டு"(திருநூற். கூ.) 4. மரப்பொந்து. (பிங்கல. உஅடுகூ.)

பொய்க்குதல்—1. பொய்செல்லுதல். 2. பொய்யாய்ப்போதல். (1, 2-வழக்.)

பொய்க்கூடு—சரீரம். (வைத்தியபரி.)

பொய்க்கை—1. ஒரு மீன். (வழக்குண்டு போலும்.) 2. பொய்த்தல். கை-தொழிற்பெயர் விகுதி.

பொய்க்கோலம்—போலிவேடம். (உ-ம்.) "பொய்க்கோலஞ்செய்யவொழியுமோ"(நாலடி. தாயதன்மை. கூ.)

பொய்கை—1. குளம், நீர்நிலை. (பிங்கல. கoச.) 2. மாணிடராக்காதநீர்நிலை.(உ-ம்.)"வண் டார்குவளையவாவியும்பொய்கையும்" (சிந். நாமக. கூoஅ.)

பொய்கையார்—ஒரு புலவர். (யாப். காரி. உறுப்பி. எ. உரை.)

பொய்கையாழ்வார்–ஒரு ஆழ்வார். (பாரத. சிறப்புப்பா. கூ. உரை.)

பொய்த்தல்—1. பொய்சொல்லல். (உ-ம்.) "பொய்த்தறொன்றுதருமனின்றுபுகலில்" (சேதுபு. இராமதீர்த்த. சுசை.) 2. பொய்யாதல். (உ-ம்.) "பெருவஞ்சினமும்பொய்த்திடாதோ" (பாரத. கிருட்டி. கூ.)

பொய்த்தலை—போலித்தலை. கன்னமிடுங்கள்ளர் அக்கன்னவாயிலின்வழியே தலைபோல ஒன்று செய்துவிடுவது. (உ - ம்.) "கைத்தலங் கண்ணுக்களவுகாண்பானொருவன் – பொய்த் தலைமுன்னீட்டியற்றும்போந்து" (நாலடி.)

பொய்தல் — 1. மகளிர்கூட்டம். (உ - ம்.) வந்துழிக்காண்க.) 2. மகளிர்விளையாட்டு. (உ-ம்.) "பொய்தலாடியபொய்யாமகளிர்" (ஐங்குறு. கஅக.) 3. சிற்றில். (பரிபாடல்.) 4. விளையாட்டு. (உ-ம்.)"எழுவாற்பொய்தார்பலர்"(இராமா. கரன்வதை. கூஅ.)

பொய்நீர்—கானல். (வழக்.)

பொய்ப்பு—1. பொய்சொல்லல். (வழக்.) 2. பொய்த்தல். (உ-ம்.) "பொய்ப்புறுமவத்தை யெண்ணிப்போத்திருப்பசுவென்றேது-மொப் பருஞ்சீவர்க்கு" (வேதா. சூ. சுடு.)

பொய்ப்பூ-பிஞ்சுபிடியாதபூ.(வைத்தியபரி)

பொய்படுதல்–புரைபடுதல், பிணஞ்காமை. (வள். பேதமை. சு.)

பொய்பாராட்டல் — அகப்பொருட்டுறைக் கிளவியிஞன்று; அஃதாவது: ஒருவர்மாட்டில்லதுமுள்ளதுங்கூட்டிக் கொண்டாடுதல். (வாண. கூ. மூகம்.)

பொய்மை—பொய். (தண்டி. பொருள். சுக உரை.)

பொய்யடி—வெருட்டு. (வழக்.)

பொய்யடிமையில்லாதபுலவர்–அறுபத்து மூவர் நாயன்மார்களிலொருவகையர்.(பெரியபு.)

பொய்யன்—பொய்சொல்வோன். (உ-ம்.) "பொய்யர்தம்பொய்யனேமெய்யார்மெய்யை" (திருவாச. திருப்பொற். கஉ.)

பொய்யாப்புள் — சலாங்கு என்றுபெயர். (பிங்கல. உஉகூக.)

பொய்யாமை — 1. தவறுமை. (வழக்.) 2. பொய்மொழிகூறுமை. (உ - ம்.) "பொய்யாமையண்ணபுகழில்லையெய்யாமை - யெல்லாவறமும் தரும்" (வள். உகூசு.)

போய்யாமொழிப்புலவர்—1. ஒரு புலவர், தஞ்சைவாணன்கோவை செய்தவர். 2. திருவள்ளுவர்.

பொரி–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. நெல் முதலியவற்றின்பொரி. (வழக்.) 3. பொருக்கு. (உ-ம்.) "பொரியாரைத்தேமா" (ஐங்குறு. நாட். உ0.) 4. வெண்காரம். (உ - ம்.) "கடுகைப்பொரி வறலிலாம்பொடி" (தைல. தைலவ. கடவுரி.)

பொரிக்கறி—பொரியல். (வழக்.)

பொரிகாரம்–1. வெண்காரம். 2. படிகாரம். (1, 2-வைத்தியபரி.)

பொரித்தல்–1. குஞ்சுபிறப்பித்தல். 2. பொரியச்செய்தல். (1, 2-வழக்.)

பொரிதல்—1. பொரியாதல். 2. பொருக்கு வெடித்தல். 3. மெல்ல ஒலித்தல். (உ-ம்.) "வேதலபொரிதல்-அரிகரைதல்'(தைல.பாயிர.குறிப்பு)

பொரிப்பூண்டு — 1. கரப்பான் பூண்டு. (மலையக.) 2. வயற்சுள்ளி. (வைத்தியபரி.)

பொரிபொரிசீசான் — வெடிபலவன். ஓர் பூண்டு.

பொரிமலர்—புன்கு. (வைத்தியபரி.)

பொரிமா—பொரியரிசிமா. (வழக்.)

பொரியரிசி—பொரித்த அரிசி. (வழக்.)

பொரியல்—1. பொரிக்கறி. 2. பொரிதல். (1, 2-வழக்.)

பொரிவிளாங்காயி — பொரிமாத் திரளை, பொரியரிசிமாமுதலியவற்றுற்றிரட்டின விளாங்காய்போலத்திரட்சிசெய்தவுணவுப்பொருள். (வழக்.)

பொரீஇ — ஒப்பித்துப்பார்த்து. (உ - ம்.) "வண்ணமுந்துணையும்பொரீஇயெண்ணுது" (சூ-பா. சுகை.)

பொரீஇயன்று—உவமித்தது. (புறப்பொ-மாலை.)

பொரு—தெரிநிலைவினைப்பகுதி. (உ - ம்.) "அயிலேப்பொருகூர்விழிபாலுறவே" (சிவரக. கணபதிவந்தன. சு.)

பொருக்கு—1. சீக்கிரக்குறிப்பு. 2. பொருக்காய்வெடிக்கும் வண்டல். (1, 2-வழக்.)

பொருக்கென—விரைந்து. (உ-ம்.) "புண்ணியநகராரோடும்பொருக்கெனக்கோயிலெய்தி" (திருவிளை. நான்மாடக். சுகை.)

பொருக்கெனல்—சீக்கிரக்குறிப்பு. (உ-ம்.) "பூதர்கலக்கியபோர்நிலைகண்டுபொருக்கென்ன" (சேதுபு. தேவிபு. சுசை.)

பொருகளம்—போர்க்களம். (சூ.நிக.குறி:சுஎ.)

பொருட்காட்சியணி–காட்சியணியி லொரு வகை. (குவல. சுகை. பார்.)

பொருட்கை — பொருளுறக்காட்டுங்கை. (சிலப்.)

பொருட்செல்வம்–பொருளால்வருஞ் செல்வம். (வள். அருளுடை. சு.)

பொருட்செல்வி—இலக்குமி. பொருளின் செல்வி என இன்சாரியையுடன் சேர்த்து. (சூ. நிக. சு: சுகை-ஆம் கவியிற்கூறினர்.)

பொருட்டு–1. காரணம். (சூ. நிக. அ: சுசு.) 2. நிமித்தமெனப்பொருள்படுமோர் நான்காம் வேற்றுமைச்சொல்லுருபு. (உ - ம்.) "அன்பன் பொருட்டொருவடிவங்கொண்டு" (திருவிளை. மெய்க்கா. உசு.) 3. பொருளையுடையது. திவிகுதி. (பரிபாடல்.)

பொருட்டொடர்நிலைச்செய்யுள் – தொடர்நிலைச்செய்யுளிரண்டனுளொன்று; அது: காப்பியமென்றும், பெருங்காப்பியமென்றும் இரண்டுவகையாக வழங்கப்படும்.(தண்டி.சு.உரை.)

பொருட்படுத்தல்–1. ஒருபொருளாக மதித்தல். 2. பயன்படுத்தல். (1, 2-வழக்.)

பொருட்படுதல்—பயன்படுதல். (வழக்.)

பொருட்பிறிதின்கிழமை–பொருட்பெயரில் வரும் பிறிதின்கிழமை. (நன். பெயரி. சுஉ. உரை.)

பொருட்பின்வருநிலை—பின்வருநிலையென்னும் அலங்காரத்திலொருவகை. (தண்டி. சுசு. உரை.)

பொருட்பெண்டிர்—விலைமகளிர். (உ-ம்.) "பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கம்"(வள். சுசுசு.)

பொருண்மயக்கம்—தன்பொருளிற்றீராது பிறிதொன்றன் பொருட்கட்சென்று உறுபேற்றசொல்லும் உருபுநோக்கிய சொல்லும் சிறுபான்மை தம்முளியையுடைத்தாதல்.(பி-வி. கடவுரி. உரை.)

பொருண்முடிபு—1. பயனிலை. 2. விஷய முடிவு. (1, 2-வழக்.)

பொருண்மொழிநகை—ஓரலங்காரம்; அஃது: ஒன்றற்கொன்றுமுரணிய சொற்பொருட்டொடராய் வருவது. (வ-நூ.) "செல்வர்-விருத்தராயிளையவருமாய்மழவுமாய்வேடங்கொண்டடலேற்றி - லொருத்தராய்விளையாடிய" இதில் விருத்தர்முதலிய மூவுருக்கொண்டவர் ஒருவராய் நின்றெனப் பொருண்முரணுய் வந்தவாறுகாண்க. (திருவிளை. காண்மாறி. சு. உரை.)

பொருண்மை—1. பொருட்டன்மை. மைவிகுதி. 2. பொருள். (உ-ம்.) "புனிதசிவாகமப் பொருண்மைபொருந்தவாய்ந்து" (சேதுபு. கடவுள்வா. சுசு.)

பொருணி—கள். (வைத்தியபரி.)

பொருணிலை—பயனிலை. (நன்னூல். பெயரியல். எழுவாய்ச்சூத்திரவுரையிற்காண்க.)

பொருத்தம் — 1. இணக்கம். 2. சம்மதம். 3. தகுதி. (உ - ம்.) "பொருத்தமின்மையேன்" (திருவா. திருச்சத. கூகூ.) (1, 2-வழக்.)

பொருத்தல்—பொருத்துதல். (வழக்.)

பொருத்து—1. இசைப்பு. 2. இணக்குகை. 3. சந்து. 4. தொழிலேவினைப்பகுதி. (1, 2, 3, 4-வழக்.)

பொருத்துதல்—1. அமைத்தல். 2. உடன்படித்தல். 3 ஒப்புரவாக்கல். 4. கொளுத்தல். 5. பிணைத்தல். 6. பொருந்தச்செய்தல். இவை கள் வழக்கிலறிக.

பொருதல்—1. அலைமோதல். 2. ஒப்புதல். 3. சூதாடல். 4. தடவுதல். (உ-ம்.) "விற்றொழிலும்வாட்டொழிலும்வீணைபொருதொழிலும்" (சிக். கோவி. உசா.) 5. தாக்குதல். 6. தும்பை. (வைத்தியபரி.) 7. போர்செய்தல். (உ - ம்.) "காக்கையின் கணங்-பொருதுவீவன" (இராமா. கரன். எ0.) (1, 2, 3, 5-வழக்.)

பொருதுதல்—1. இணைத்தல். 2. பொருந்தல். 3 போர்செய்தல். (1, 2, 3-வழக்.)

பொருநீ—பொருநுதல். (உ-ம்.) "பொருநக்கடிமை" (நன்-மெய்யீ. நூ. உரை.) [மூதனிலைத் தொழிற்பெயர்.]

பொருநீதம்—பொருநைநதி. (சூ.நிக.நூ:உஉ.)

பொருநர்—வேதகாரர், கூடைமுதலிய பின்னுவோர். (சூ. நிக. உ: கூஉ.)

பொருநர்தல்—1. அடித்தல். 2. அமைவு. (சூ. நிக. அ: சகூ.) 3. இயைதல். 4. ஒன்றவாழல். 5 கலத்தல். 6. சம்மதித்தல். (உ-ம்.) "மெல்லியனீபொருந்தலின்றிவிலக்கிடுவையெனுங்கருத்தால்" (சேதுபு. பிரமகத். கச.) (1, 3, 4, 5-வழக்.)

பொருநர்தலர்—பகைவர். (பிங்கல. கசஎ.)

பொருநர்தாமை—1. இயையாமை. 2. வெறுப்பு. (1, 2-வழக்.)

பொருந்துதல்—1. தங்குதல். (உ-ம்.) "பொருந்துதருனேபுதுமை" (நன்னெறி. கஉ.) 2. பொருந்தல். (வழக்.)

பொருநர்—1. அரசர். 2. எதிர்த்துப்பொருவோர். 3. நாடகர். 4. புகழ்ந்துபாடுவோர். (1, 2, 3, 4-சிலப்பதி.)

பொருநராற்றுப்படை—முடத்தாமக் கண்ணியாரால் இருநூற்றுநாற்பத்தெட்டடிகளையுடையதாய் பாடப்பட்டதொன்று. (பத்துப்.)

பொருநன்—1. அரசன். 2. உவமிக்கப்படுவோன். (உ-ம்.) "சூர்மருங்கறுத்தமொய்ம்பின் மதவலி-போர்மிகுபொருந" (திருமுரு. உஎசு.) [பொருவப்படுமவன் பொருநனெனநின்றது.] 3. ஒப்பற்றவன். (உ - ம்.) "வரைத்தாளருவிப் பொருப்பிற்பொருந" (மதுரைக். சஉ.) [தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு.] 4. இணைப்பாணன். (உ - ம்.) "பொருநர்க்காயினும்புலவர்க்காயினும்" (சிறுபாண். உ0கூ.) 5. குறிஞ்சிநிலத்தலைவன். (பிங்கல. நூஉநி.) 6. தலைவன். 7. திண்ணியன். 8. நாடகன். 9. படைவீரன். 10. புகழ்ந்துபாடுவோன். (சூ. நிக. கக: ரகரவெ. உஅ.) 11. பொருபவன். (உ - ம்.) "பொருநர்த்தேய்த்தபோரருவாயில்" (திருமுரு. சுகூ.) (1, 6, 7, 8, 9-பிங்கல. கூஅகூசு.)

பொருநுதல்—மற்றொருவர்போலவேடங் கொள்ளும் பொருநரது தொழில். (நன். மெய்யீற். நூ. உரை.)

பொருநை—தாமிரபர்ணி. (உ-ம்.) "பொருநையாறுடையமாறன்" (திருவிளை. மாயப். கூ.) இது: மேற்கே சேரனாட்டுக்குஞ் செல்லுகிறதென்பர். (அபிதானசே.)

பொருநைநாடன்—பாண்டியன். (உ - ம்.) "கண்டனன்பொருநைநாடன்" (திருவிளை. மெய்க்கா. சப.)

பொருப்பர்—குறிஞ்சிநிலவேடர். (கந்தபு. கடவுள்வா. கஉ.)

பொருப்பு—மலை. (உ - ம்.) "பொருப்பிலே பிறந்துதென்னன்புகழிலேகிடந்து" (பாரத. பாயிர. கூ.)

பொருபொருத்தல்—மறவெறிச்சற்படல். (வழக்.)

பொருபொறனல்—ஒறொலிக்குறிப்பு. (வழக்.)

பொரும்பி—சுழலாவாரை. (வைத்தியபரி.)

பொரும்பிலாவேர்—1. மலைவேர். 2. வட்டத்திருப்பி. (1, 2-வைத்தியபரி.)

பொருமல்—1. அழுதல். (பிங்கல. உ0சஉ.) 2. வீங்கல். (வழக்.)

பொருமிநாதம்—இரசகர்ப்பூரம். (வைத்தியபரி.)

பொருழகவெழினி—ஒருவகைத்திரை. (சிலப்.)

பொருழுதல்—பொருமல். (வழக்.)

பொருவ—ஒருவமவுருபு. (தண்டி. பொருள். கூகூ.)

பொருவாயி—ஒரு மீன். பரதர்வழக்குப்போ

பொருவிலி—சிவன். (சிவதரு.) [லும்.

பொருவு—1. ஒப்பு. (உ-ம்.) "பொருவிலதபவநீங்கி" (கோயிற்பு. பதஞ்சலி.) 2. தொழிலேவினைப்பகுதி.

பொருவுதல்—ஒத்தல்.

பொருள் — 1. அருத்தாபத்திப்பிரமாணம். (உ-ம்.) "அளவைகாண்டல்கருதலுரையபாவம் பொருளொப்பாரென்பர்" (சி. சி. அள. க.) 2. உடைமைப்பொருள். (உ - ம்.) "கைப்பொருடன்னின்மெய்ப்பொருள்கல்வி" (ஔவை.) 3. உண்மைப்பொருள். (உ - ம்.) "பிறிவிலதாய்ப்பொருளாகி" (கோயிற்பு.பாயிர.கூ.) 4. காரியம். (உ - ம்.) "துணிபெவனேபொருள்விளங்கச்சொல்லெண்ணுன்" (சேதுபு. பிரமகத். உஉ.) 5. குணம். 6. சம்பத்து, நிகரானபுண்ணியம். (சிவரக. நந்திகே. நம. கரு.) 7. சொற்பொருள். (வழக்.) 8. பலபண்டம். 9. பிள்ளை. (உ - ம்.) "பொருளும்யாழும்விளரியும்பூவையும் – மருளநாளுமழலேவழங்குவாய்" (இராமா. நிந்தனைப். கூ०.) 10. பொன். 11. மோக்கம். (உ - ம்.) "பண்டுகண்டேயறியாப்பொருளீயவென்பாக்கியத்தால்" (திருநூற். உ.) 12. வஸ்து. 13. வாய்மை. 14. விலக்குறப்பினுளொன்று. (சிலப்பதி.) (5, 7, 8, 10, 12, 13-சூ. நிக. கக: ரகரவெ. கக.)

பொருள்கோள்—செய்யுட்கொள்ளும்பொருள்கோள்; அது: யாற்றுநீர்ப்பொருள்கோள் முதலிய எட்டுவகைப்படும். (நன். சகக.)

பொருள்செயல்–பொருளீட்சம்பாதித்தல். (வள். எசு-ஆம் அதி.)

பொருளணி—பொருளான்வரு மலங்காரம். (தண்டி.)

பொருளல்லவர்—ஒருபொருளாக மதிக்கப்படாதார். (உ-ம்.) "பொருளல்லவரைப்பொருளாகச்செய்யும்-பொருளல்லதில்லை பொருள்" (வள். எநிக.)

பொருளன்—1. சிவன். (உ-ம்.) "பொருளனேபுனிதா" (திருவாச. அருட். கூ.) [மெய்யன் என்றபடி.] 2. பொருளையுடையவன். (வழக்.)

பொருளாதுபெயர்—முதற்பொருளின் பெயரைச் சினைப்பொருட்கு வழங்குவது. (நன். பெயரி. கூகூ. உரை.)

பொருளால்வரும்பெயர் — சுற்றம் எண்குழூஉ பொருண்முதலியவற்றுன்வரும் பெயர். (நன்னூ. பெயரிய. ககூ.)

பொருளாள் — 1. பொருளாந்தன்மையையுடையாள். (உ-ம்.) "பிறன்பொருளாட்பெட்டொழுகும்பேதைமை" (வள். கசக.) 2. பொருளையுடையவள். (வழக்.)

பொருளானந்தம்—சொற்பொருட்குற்றம், பொருணிலதிரிந்துவருவது. (யாப். காரிகை. ஒழிபி. கூ. உரை.)

பொருளிலக்கணம் — அறம்பொருளின்பமென்பவைகளைவிளக்குமிலக்கணம்; அ ஃ து: அகப்பொருள் புறப்பொருளென விருவகைப்படும்.

பொருளீட்டல்— பிராமணரல்லார்க்குரிய தொழில். (வழக்.)

பொருளுரை — 1. காரியவார்த்தை. 2. மந்திரம். (1, 2-சிந்தா.)

பொல்–பொல்லுதல். முதனிலைத்தொழிற்பெயர்.

பொல்லம்பொத்தல்–தைத்தல். பொல்லம் எனவும் வழங்குகிறது. (உ - ம்.) "பொல்லம்பொத்திய" (பொருந. அ.)

பொல்லர்—1. சக்கிலியர். (வழக்.) 2. தையற்காரர். (சூ. நிக. உ: கூகூ.)

பொல்லாங்கு–1. குற்றம். (பிங்கல. கஅசுஉ.) 2. கேடு. (வழக்.)

பொல்லாது—ஆகாதது. (உ - ம்.) "சுண்டுநின்றேகல்பொல்லாது" (இராமா. தைலமாட். ககூ.)

பொல்லாநிலம்—சகதிநிலம். (பிங்கல. சுஎசு.)

பொல்லாப்பிள்ளையார்- திருவெண்ணெய்நல்லூரின்கணுள்ள சிவாலயத்திலெழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுள். (சைவச. காப்பு. உரை.) உளியினுற்பொள்ளாத பிள்ளையார், சுயம்புமூர்த்தியாம்.

பொல்லாப்பு—பொல்லாங்கு. (வழக்.)

பொல்லாமணி—துளைக்காதமணி. (உ-ம்.) "யானெண்பொல்லாமணியே" (திருவாச.திருச்சதகம். கo.) [பொள்ளாமணி-பொல்லாமணியென்றுயிற்று.]

பொல்லாமை—1. பழுது. (சி. சி. உ: அo. சிவஞா.) 2. பொல்லாங்கு. (சிந்தா.)

பொல்லார்—1. தீயோர். (உ-ம்.) "வன்கட்சேலப்பொல்லார்" (திருவிளை. விருத். கச.) 2. பொல்லாப்பிள்ளையார். (உ-ம்.) "வெண்ணெய்நல்லூர்ச்சிவாலயத்துட் – பொல்லார்தாள்யாஞ்சூடும்போது" (சைவச. காப்பு.) [பொள்ளார்-பொல்லாரென்றுயிற்று.]

பொல்லு–பதர். (பிங்கல. உகூஎஅ.) உகரஞ்சாரியையென்க.

பொலம்—1. அழகு. (உ - ம்.) "பொலந்தாரினர்"(இராமா. கரன. கூகூ.) 2. பொன். (உ-ம்.) "பொலந்தொட்டில்சேர்த்தார்"(கந்தபு.புதல்.கூ)

பொலனீர்—பொலம்.

பொலி — 1. தூற்றுநெற்குவியல். (வழக்.) 2. தெரிநிலைவினைப்பகுதி. (உ - ம்.) "மண்ணினிற்பொலியிந்திரகோபம்"(அரிச்ச.நாட்டு.இ.)

பொலிக்கடா— பொலிகடா (வழக்.)

பொலிகடா–பொலியெருமைக்கடா.(வழக்)

பொலிசை—இலாபம். (வழக்.)

பொலிதல்–1. எழுச்சியாதல். 2. சிறத்தல். 3. செழுத்தல். 4. தாராளமாதல். 5. பருமையாதல். 6. புணர்தல். 7. பூரிப்பு. 8. பெருக்கல். 9. மிகுதல். (உ-ம்.) "மண்ணிற்பொலியிந்திரகோபமலிந்ததோன்ற" (அரிச்ச. நாட்டு. நு.) 10. விளங்குதல். (உ - ம்.) "சீதைவாண்முகம் பொலிய" (இராமா. அயோமுடி. சு.) (1, 2, 3, 4, 5, 6, 7, 8-வழக்.)

பொலிந்த—சிறந்த. (புறநா.)

பொலிய–தண்பம்மீங்கியின்பம்மிகழ.(உ-ம்.) "பொன்னுடைவளநகர்பொலிய" (சிக். நாமக. உகூஎ.)

பொலியேறுது—மாப்பிளைமாடு. (வழக்.)

பொலிவு—1. அழகு, சிறப்பு. (உ - ம்.) "பொன்னேயன்னவிலிங்கபூசைநெபொலிவிலேடுபுரிந்து" (சிவரக. தேவியுடன். கச.) 2. பக்குவம். (உ-ம்.) "பொய்விரவாமெய்ப்பொலிவினர் யாரும்" (கோயிற்பு. நடராச. உங.) 3. பொலிதல். (வழக்.) 4. மிகுதி. (புறப்-மாலை.) 5. விளக்கம். (உ-ம்.) "பொய்மைமாறியபத்தியும்பொலிவுகுன்றுவாத்" (திருவிளை. நாட்டு. நுகூ.)

பொலுதுதல் — நீர்பறிதல். (வழக்குண்டு போலும்.)

பொலுபொலுத்தல்–
பொலுபொலுப்பு—
பொலுபொலெனல்–
} உதிருதல்.(வழக்.)

பொழிதல்—1. ஈதல். (சூ. நிக. கூ: க.) 2. நிறைத்தல். (சி. சி. அ: கசு.) 3. மழைபெய்தல். (உ-ம்.)"பொன்மழை"பார். 4. மிகச்சொரிதல். (உ-ம்.) "பரூஉக்குறைபொழிந்தநெய்க்கண்வை யைபொடு" (மலைபடு. கசுஅ.)

பொழிப்பளபெடை—முதற்சீர்க்கண்ணும் மூன்றுஞ்சீர்க்கண்ணுமளபெடைவரத் தொடுப்பது. (யாப். காரிகை. உறுப்பி. ககூ. உரை.)

பொழிப்பியைபு — முதற்சீரு மூன்றுஞ் சீருமியைபாக வொன்றத்தொடுப்பது. (யாப். காரிகை. உறுப்பிய. ககூ. உரை.)

பொழிப்புத்தீராட்டல்— பொழிப்புரை யுரைத்தல். (யாப். காரிகை. க.உரை.)

பொழிப்புமுரண்–முதற்சீர்க்கண்ணும்மூன்றுஞ்சீர்க்கண்ணு முரண்வரத் தொடுப்பது. (யாப்-காரிகை. உறுப்பி. உ0. உரை.)

பொழிப்புமோனை–முதற்சீர்க்கண்ணுமூன்றுஞ்சீர்க்கண்ணு மோனைவரத்தொடுப்பது.(யாப்-காரிகை. உறுப்பி. உ0. உரை.)

பொழிப்புரை—தொகுத்துரைத்தல்.

பொழிப்பெதுகை — முதற்சீர்க்கண்ணும் மூன்றுஞ்சீர்க்கண்ணும் எதுகையவரத் தொடுப்பது. (யாப்-காரிகை. உறுப்பி. உ0. உரை.)

பொழியும்—தங்கும். (உ-ம்.) "இன்குரற்றளிமழைபொழியுந்தண்பரங்குன்றில்" (மதுரைக்கா. உசுங.)

பொழில்—1. சோலை. (உ - ம்.) "சீதவார் பொழினமிசாரணியத்தைச்சேர்ந்து" (பிர. காண். பஞ்சாட். க.) 2. நாடு. (சூ. நிக. நு: கூ.) 3. பூமி. 4. பெருமை. (1,3,4-பிங்கல. ஈஅகஎ.)

பொழிவு—பொழிதல். உ-தொழிற்பெயர் விகுதி.

பொழுது — 1. அகப்பொருளிற் சொல்லப்பட்ட முதற்பொருளின் பாகுபாடிரண்டனுளொன்று; அது: பெரும்பொழுது சிறுபொழுதென விருவகைப்படும்; பெரும்பொழுது: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறுமும், சிறுபொழுது: மாலை, யாமம், வைகறை, ஏற்படுகாலை, நண்பகல் என ஐந்தாயும் பகுக்கப்படும். (நம்பியகப் பொருள் அகத்திணையியலிற் காண்க.) 2. காலம். (உ-ம்.)"பட்டப்பகற்பொழுதை"(தாயுமா. கருணைகரக். சு.) 3. சூரியன். (உ - ம்.) "பகற்செயும்பொழுதெழும்போழுது" (திருவிளை. விடையி. கக.)

பொழுதுவணங்கி — ஓர் பூச்செடி; அது: சூரியகாந்தி. (வைத்தியபரி.)

பொழுதோடுபுணர்தல் — வணிகரெண்குணத்தொன்று. (பொருட்டொகை நிகண்டு.)

பொள்ளல் — 1. அப்பவருக்கம். (பிங்கல. ககஅ.) 2 பொத்தல். (உ-ம்.) "பொள்ளலுடலினலந்தீதுபுந்திசெய்யார்" (ஞானவா. பஞ்சவிந்திரன். உ.) 3. பொள்ளுதல், தொழிற் பெயர். 4. மரப்பொந்து. (பிங்கல. உஅநுங.)

பொள்ளாமணி—துளையாதமணி. (வழக்.)

பொள்ளுதல்—1. கல்லுமுதலியனபொளிதல். 2. கிழிதல். 3. பொந்துபோதல். (2, 3-வழக்.)

பொள்ளெனல் — 1. ஓரதுகரணவோசை. (சூ. நிக. க0: சஅ.) 2. சீக்கிரக்குறிப்பு. (உ-ம்.) "பொள்ளெனமேகமேழும்" (திருவிளை. நான்மா. சு.)

பொளி–1. உளிப்படிவு, கன்முதலியகொத்துதல். 2. துளை. 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. வரம்பு. (1, 2, 4-வழக்.)

பொளிதல்—1. கன்முதலியகொத்தல். 2. துளைத்தல். (1, 2-வழக்.)

பொளிவு—பொளிதல். உ-தொழிற்பெயர் விகுதி.

பொற்கலனிநக்கை — பொற்பண்டாரம். (பிங்கல. கஉசஎ.)

பொற்காசு—1. கொள்ளு. (வைத்தியபரி.) 2. பொன்னின்காசு. (வழக்.)

பொற்காரை—ஒரு கழுத்தணி. (வழக்.)

பொற்கிழி–பொன்முடிச்சு.(உ-ம்.)"அலங்கு பொற்கிழியேயாணவகத்திஞன்" (தணி கை. நந்தியுப. கசசு.)

பொற்கையான்மாறன்—ஒரு பாண்டியன்; இவன்: சரிதம் அபிதாநசிந்தாமணியிற்காண்க.

பொற்கொல்லன்—கம்மாளன், தட்டான். (வழக்.)

பொற்கோள்—பிரகஸ்பதி. (உ - ம்.) "எரி பசும்பொற்கோள்வந்து" (திருவிளை. உக்கிர. திருவவ. கக.)

பொற்சபை—கநகசபை, சிதம்பரத்திலுள்ளது. (வழக்.)

பொற்சரிகை — பொன்னூல்போற் செய்தது. (வழக்.)

பொற்சீந்தில்–ஒரு சீந்தில். (வைத்தியபரி.)

பொற்ப — பொற்புக்கொள்ள, பொலிவுற. (உ-ம்.) **"புருவம்வண்புறவடிபொற்ப"** (பாரத. குரு. கூடு.) அழகுபெற என்பர் பரிபாடலில்.

பொற்பாளம்—பொற்றகடு. (வழக்.)

பொற்பிதிர் — பொன்சிதறினற்போற் பரந்த பசலை. (உ-ம்.) "பொற்பிதிரணிந்துவீங்கும் புணர்முலை" (கூர்மபு. பதிக. சு.)

பொற்பு–1. அழகு. (உ-ம்.) "பொற்புடைய தமிழ்பாடும்புண்ணியர்"(திருவாத. திருப்பெரு. உஉ.) 2. ஒப்பனை. (சூ. நிக. கக: றகரவெ. கச.) 3. பக்கரை. (சிந். சாந். எடு.) 4. பொலிவு. (சூ. நிக. அ: சசு.)

பொற்புறுத்தல்—அலங்கரித்தல். (பிங்கல. ககடுச.)

பொற்பூச்சு—மலாம்பூச்சு. (வழக்.)

பொற்ற —அழகிய. (உ-ம்.) "பொற்றசடையந்தணிர்புராணவரலாறு-சொற்றனம்" (சூத. சிவமா. உ: க.) நல்ல என வுரைத்தனர்.(சிந்தா.)

பொற்றலைக்கரிப்பாள்—பொற்றலைக் கையாந்தகரை. (வைத்தியபரி.)

பொற்றலைக்கையாந்தகரை– பொற்றலைக் கரிப்பான். (வைத்தியபரி.)

பொற்றது — பொற்றலைக்கையாந்தகரை. (வைத்தியபரி.)

பொற்றமரை — பொன்னுருவத்தர்மரை. அதனையுடைமை யாற்றீர்த்தத்துக்கும் அப்பெயராயிற்று. (திருவிளை. தீர்த்தவி. கூச.)

பொற்றூலம் — பொன்னுலகம். (உ - ம்.) "பொற்றூலத்தமரர்" (சேதுபு. திருநாட். கச.)

பொற்றவல்லி—சீந்திற்கொடி. (தைலவ.)

பொற்றிக்கீரை–ஒருகீரை. (வைத்தியபரி.)

பொற்றேகராசம்–பொற்றலைக் கரிப்பான். (தைல. தைலவ. கஙக.)

பொற்றை–1. சிறுமலை. (சூ. நிக. டு: கஉ.) 2. மலை. (உ - ம்.) "பொற்றையின்சிறைதடிந்தவன்" (கந்தபு. கயமுகனு. ச.)

பொற்றொடி — 1. பெண், அன்மொழித்தொகைப்பெயர். 2. பொன்வளை. (உ - ம்.) "போதரிக்கண்ணினைப்பொற்றொடித்தோள்" (திருவாச. திருப்பொற். கஉ.)

பொறமை–1. பிறர் செல்வமுதலியவற்றைக்கண்டு சகியாமை. (பிங்கல. கஅகூ0.) 2. பொறையின்மை. (வழக்.)

பொறி — 1. அடையாளம், முத்திரை. 2. அறிவு. (உ - ம்.) "சேராமற்பொறிகேளாமற் செவி" (திருப்பு. கடு0.) 3. இயந்திரம். (உ-ம்.) "வந்தெறிபொறிகள்வகைமாண்புடைய" (மணிமே. உஅ.) 4. இலக்குமி. (சூ. நிக. க: ஙசு.) 5. எந்திரம். (சூ.நிக.கக: றகரவெ. கூ.) 6. எழுத்து. (சூ. நிக. கூ: கஉ.) 7. ஓழுங்கு. (உ-ம்.) "பொறி கொண்டபுள்ளினம்" (கலி. கஉஙூ.) 8. கையிரேகை. 9. செல்லம். (உ - ம்.) "பொறிகெடுநாணற்றபோழ்தே" (நான்மணிக். சடு.) 10. ஞாநேந்திரியமுதலியன. (உ-ம்.) "பொறிபுலனுதிபோதந்தருவதென்" (சி. சி. ச: ஙூ. சிவாக்.) 11. திரட்சி. (உ-ம்.) "புன்கொடிமுசண்டைப் பொறிப்புறவான்பூ" (நெநெல். கஙூ.) 12. தீப்பொறி. 13. தெரிநிலைவினைப்பகுதி. 14. தேமல். (உ - ம்.) "தனபாரமும்மேலாமெனவோங்கிடமாப்பொறிசிந்திட" (திருப்பு. டுஉக.) 15. தேர். (உ-ம்.) வந்துழிக்காண்க. 16. நல்வினை. (சிந்தா. கனகமா. கஎ0.) 17. பட்டம். (உ-ம்.) "பொன்னகருள்வேந்தன்பேராற்பொறியும்பெற்றான்" (சிந்தா. கஙக. உஙசு.) [ஆகுபெயர்.] 18. பீலி. (திருமுரு. ஙo஑ஙூ.) 19. புள்ளி. (உ - ம்.) "பல்பொறிப்பகுவாய்ப்படம்புடைபரப்பி" (திருவிளை. நாக. கடு.) 20. பொலிவு. (பிங்கல. உஉஙூ.) 21. மரக்கலம். 22. வரி. (சிந். கன. கடு0.) 23. வலி. (உ-ம்.) வந்துழிக்காண்க. 24. விளக்கம். (உ-ம்.) "பொறிவரிவராலினமிரிய" (சிந். நாமக. கடு.) (1, 8, 12, 21-பிங்கல. ஙஅகூஅ.)

பொறிக்கல்—1. சிலாநாகக்கல். (உ - ம்.) வந்துழிக்காண்க. 2. சுக்கான்கல். (வழக்.)

பொறிக்குதல்—பொறித்தல். (வழக்.)

பொறித்த—வைத்த. (உ - ம்.) "வடபுலவிமயத்துவாங்குவிற்பொறித்த" (சிறுபாண். சஅ.)

பொறித்தல் — 1. எழுதுதல். (பிங்கல. உகஉச.) 2. சித்திரமெழுதல். 3. பதித்தல். 4. பொதியச்செய்தல். (2, 3, 4-வழக்.)

பொறித்து—அடையாளமாகஇட்டு. (உ-ம்.) "புலிபொறித்துப்புறம்போக்கி" (பட்டின. கஙஙு.)

பொறிதல்—1. பதிதல். 2. விழல். (1, 2-வழக்.)

பொறிப்ப—தெறிப்ப. (சிந்தா.)

பொறிப்பு—பொதித்தல். (வழக்.)

பொறியமலம்—புன்கு. (வைத்தியபரி.)

பொறியரை—சிறுபுள்ளடி. (வைத்தியபரி.)

பொறியிலார்—1. அறிவிலார். பொறி-அறிவு. 2. கீழ்மக்கள். (சூ. நிக. உ: ஙுச.)

பொறியிலி—1. அறிவிலி. (உ-ம்.) "வன்செருவிற்போற்றுதொளித்தபொறியிலேன் றன்முன்னந்தோற்றுமல்" (கந்தபு.இரணியன்பு. கூ.) 3. விதிகேடன். (வழக்.)

பொறிவு — பொறிதல். உ-தொழிற்பெயர் விகுதி.

பொறுக்கல்—தாங்குதல். (உ-ம்.) "அதுபொறுக்கு-மன்றுளதென்றுன்" (கோயிற்பு. பதஞ்சலி. சுஅ.)

பொறுக்கு—தெரிநிலவினைப்பகுதி.

பொறுக்குதல்—பொறுக்கல். (வழக்.)

பொறுத்தல் — 1. இணங்கியிருத்தல். 2. சகித்தல். 3. சாந்தமாயிருத்தல். 4. சுமத்தல். (பிங்கல. ககஎஅ.) 5. தாமதித்தல். 6. மாட்டிக்கொள்ளுதல். (1, 2, 3, 5, 6 வழக்.)

பொறுத்தான்—காவினவன். (உ-ம்.) "சிவிகைபொறுத்தான்" (வள். கஎ.)

பொறுதி — 1. தாமதம். 2. பொறுமை. (1, 2-வழக்.)

பொறுப்பாளி—பொறுப்புக்காரன். (வழக்.)

பொறுப்பித்தல் — 1. உத்தரவாதஞ்செய்வித்தல். 2. சுமத்துதல். 3. முட்டுக்கொடுத்தல். (1, 2, 3-வழக்.)

பொறுப்பு—1. சென்மாகம். 2. பாரம். 3. பிரதாகம். 4. பொறுத்தல். 5. பொறுமை. 6. முட்டு. (1, 2, 3, 4, 5, 6-வழக்.)

பொறுமை—பொறுதி. (வழக்.)

பொறை—1. கருப்பம். 2. சிறுகுவடு. (புறநா.) 3. சுமை. (உ-ம்.) "பொறையுயிர்த்து" (பொருந. கூஙக.) 4. துறுகல். 5. பாரம். (உ-ம்.) "பொறையிலதிதுவெனப்புகலும்" (கூர்மபு. தக்கன்வமி. ககக.) 6. பூமி. 7. பொறுமை. 8. மலை. (உ-ம்.) "குறும்பொறைநன்னுடு" (சிறுபா. கஙக.) 9. வலிமை. (உ-ம்.) "போதகாதிபன்முதலேவாயிடைப் பொறை தளர்ந்து" (பாரத வேத்திரகீய. க.) (1, 4, 6, 7-சூ. நிக. ககக: றகரவே. ககக.)

பொறைசாலி — பொறுமைமிகுந்தவன். (வழக்.)

பொறைநிலை—மனத்தினையொருவழிநிறுப்பது. (சிலப்.)

பொறையன்—1. சேரன். (பிங்கல.எசருை.) 2. தருமராசன். (சூ. நிக. உ: கச.)

பொறையிலான்—வேடன். (சூ.நிக.உ:சுஅ.)

பொறையுயிர்த்தல்—மகப்பெறுதல். (உ-ம்.) "பொறையுயிர்த்திட்டமாயைப்புணர்ப்பிஞலசோதையோடும்" (கூர்மபு.கண்ணனவ. கூங.)

பொறையுயிர்த்து—சுமையை இளைப்பாறத்தள்ளி (உ-ம்.) "தறைதுறைதொறும்பொறையுயிர்த்தெழுகி" (பொருந. உஙகூ)

பொன்—1. அழகு. (உ-ம்.) "இப்பொற்கோயிற்புகழ்மாலே" (கோயிற்பு. பாயிரம். உஅ.) 2. இரும்பு. 3. இலக்குமி. 4 உலோகவகைகளுளொன்று. 5. ஒரு நாணயம். (வழக்.) 6. சூரியன். (சிவஞாநபோ. ககஎ: உ-ஆம் அதி.) 7. பஞ்சலோகப்பொது. 8. வியாழன். (2, 3, 7, 8-பிங்கல. கூஙகஙக)

பொன்செய்கொல்லர்—தட்டார். (சூ.நிக. உ: உக.)

பொன்மயம்—பொற்பிரகாசம். (வழக்.)

பொன்முயிர்க்கொன்றை—ஒரு கொன்றை.

பொன்மலை—1. இமையமலை. (திருவிளை. இரசவாத. அ.) 2. மாமேருமலை.

பொன்மழை—புட்கலாவர்த்த முகில்பொழியுமழை.(உ-ம்.)"பொன்மழைபொழிந்துவாழ்க" (திருவாத. திருவுடி. கூடு.)

பொன்முகுட்டை—1. பங்கம்பாலை. 2. வட்டதிருப்பி. (1, 2-வைத்தியபரி.)

பொன்முடியார்—கடைச்சங்கப்புலவருளொருவர். (திருவள்ளுவமாலை.)

பொன்மொழுது—ஒருவகைமெழுகு. (வழக்.)

பொன்மை — 1. பொன்னிறம். (சூ. நிக. அ: உக.) 2. பொன்னின்றன்மை. மை-தன்மையையுணர்த்தும் விகுதி.

பொன்வகை—பொன்வகுப்பு; அவை: ஆடகம் கிளிச்சிறை சாதரூபம் சாம்பூநதமென்பன. (சூ. நிக. கஉ: கஅ.)

பொன்வண்டு—பொன்னிறவண்டு. (வழக்.)

பொன்வண்ணக்குறிஞ்சி — பீதையென்று பெயர். (பிங்கல. உசுகஎ.)

பொன்வண்ணத்தந்தாதி—சேரமான் பெருமாணுயஞரால்அருளப்பட்ட ஒரந்தாதி.

பொன்வண்ணக்காரிளை—கெந்தகம் (வைத்தியபரி.)

பொன்வாய்ப்புள்—சிச்சிலிக்குருவி. (சூ. நிக. கூ: நிஅ.)

பொன்வித்து—நாகமணல்.(வைத்தியபரி.)

பொன்விளைமாக்கள்—தட்டார். (சூ. நிக. உ: உகூ.)

பொன்றல்—சாதல். (உ - ம்.) "பொன்று முடல்கன்றுமுன்" (கோயிற்பு. பாயிர. உஅ.)

பொன்றுவல்லி—சீந்திற்கொடி. (உ - ம்.) வந்துழிக்காண்க.

பொன்றுதல்—பொன்றல்.

பொன்னகர்—சுவர்க்கம். (நைடத. நளன் றூது. அகூ.)

பொன்னப்பிரகம்—ஒரப்பிரகம். (உ - ம்.) "அப்பிரகம்"பார்.

பொன்னம்பர்—ஒரு மருந்து. (உ-ம்.)"அம் பர்"பார்.

பொன்னரிதாரம்—ஓரிதாரம். (உ-ம்.) "அரிதாரம்"பார்.

பொன்னரிமாலை—ஆபரணவகையுளொன் று. (உ - ம்.) "சுந்தரவிமானத்திற்பொன்னரி மாலை" (சிவரக. சுகமுநி. கo.)

பொன்னவன் — 1. இரணியன். 2. வியா ழன்.

பொன்னன்—பொன்னுடையவன். (வழக்.)

பொன்னுங்கண்ணி — பொன்னுங்காணி. (வைத்தியபரி.)

பொன்னுங்கோட்டை—பூவந்தி. (வைத் தியபரி.)

பொன்னுந்தட்டான் — ஒரு சிறிய பறவை. (வழக்.)

பொன்னும்பழம்– நெய்க்கொட்டான்பழம். (வைத்தியபரி.)

பொன்னும்பூவேர்—ஆவிரைவேர். (வைத் தியபரி.)

பொன்னுவிரை–ஒருசெடி. (வைத்தியபரி.)

பொன்னி—காவிரிநதி. (சூ. நிக. நி: உஉ.)

பொன்னித்துறைவன்—சோழன். (சூ.நிக. உ: கூக.)

பொன்னிமிசை–சடைச்சிமுதலிய பலவகை கூறுவர். (வைத்தியபரி.)

பொன்னிறமாட்சி–பொன்னிமிசை. (வைத் தியபரி.)

பொன்னுக்குவீங்கி—கூகைக்கட்டு.(வைத் தியபரி.)

பொன்னுரை — பொன்னின்றேய்மானம். (வழக்.)

பொன்னுலகு–தேவலோகம். (சூ.நிக.நி:கூ.)

பொன்னுமத்தை—ஒருவித உளமத்தை. (வைத்தியபரி.)

பொன்னேயில்வட்டம்— அருகனிருக்கு மிடம். (சிந்தா.)

பொன்னேயிற்கோன்–அருகன். (பிங்கல. கஙக.)

போ.

போ—1. அசைச்சொல். (உ - ம்.) "எரியி னன்னசெந்தலையன்றில்– பிரியின்வாழாதென் போ" (நன். இடையி. உஉ. உரை.) 2. தெரி நிலைவினைப்பகுதி.

போக்கடி—
போக்கடித்தல்– } இழத்தல். (வழக்.)

போக்கணம்—இலச்சை, இவன் போக் கணங்கெட்டவன். (வழக்.)

போக்கம்—பொலிவு. (சூ. நிக. அ: சசு.)

போக்கல்—1. நாட்டல். 2. போக்குதல். (1, 2-வழக்.)

போக்கன்—1. துட்டன். போக்கு-குற்றம், போதல். 2. வழிச்செல்வோன். (வழக்.)

போக்காடு — சாவு. காடு-தொழிற்பெயர் விகுதி.

போக்கி—கட்டி. (பரிபாடல்.)

போக்கிடம்—சேர்கதி. (வழக்.)

போக்கியகன்மம்—ஒருவகைக்கன்மம். (சி. சி. உ. ஙகூ. ஞாந.)

போக்கியகாண்டம்— ஆன்மதத்துவமாகிய இருபத்துநான்கு தத்துவங்கள். (சி. சி. உ: எo. சிவஞாந.) [ஆன்மாக்கட்குப் போக்கியமாகிய வஸ்துக்களைப் புசிப்பிக்கையாற் பெற்றபெயர்.]

போக்கியதத்துவம்–சிருட்டிமுறைபற்றிக் குணதத்துவமுதல்வைத் தெண்ணப்படும் இரு பத்துநாலு தத்துவங்கள். (சி. சி. க: ஙகூ. சிவஞா.)

போக்கியப்பொருள்– அனுபவப்பொருள். (வழக்.)

போக்கியம் — 1. அனுபவிக்கப்படுவது. (சி-லி. ஞாந. எ.) 2. செல்வம். 3. போக்கிய காண்டமாகிய புத்தியாதி. (உ-ம்.) "உருவினைக் கொண்டுபோகபோக்கியத்தன்னல்செப் பல்" (சி. சி. ச: ஙகூ. சிவஞா.) 4. மூவகைக்கன்மக் களிலொன்று. (சி. சி. உ: ஙகூ. ஞாநப்.)

போக்கியாசத்தி–போத்திருத்துவம். (சி. சி. உ: அo. ஞாநப்.)

போக்கியார்—கடைச்சங்கப்புலவருளொரு வர். (திருவள்ளுவமாலை.)

போக்கிரி—போக்கிலி. [தெலுகு.]

போக்கிலி—ஒழுங்கில்லாதவன். (வழக்.)

போக்கு — 1. இடம். 2. இளமரக்கன்று. (பிங்கல. ங்கo.ச.) 3. கழிப்பு. 4. குற்றம். (பிங்கல. கஅசுக.) 5. செலவு. 6. தெரிநிலை வினைப்பகுதி. 7. நடை. 8. பழக்கம். 9. போகச்செய்தல். 10. மீட்சி. (சிந்தா.) 11. வழி. (பிங்கல. சஎக.) (1, 3, 5, 6, 7, 8, 9-வழக்.)

போக்குதல்—1. உணர்த்தல். (சிந்தா.) 2. அழித்தல். 3. அனுப்புதல். 4. செலுத்தல். 5. விடுதல். (2, 3, 4-வழக்.)

போக்தவ்வியம்—புசிக்கத்தக்கது. (சி. சி. ச: அ. சிவாக்.)

போக்தா—புசிப்பது. (சி. சி. உ: உ. சிவாக்.)

போக்தீருத்துவம்–போத்திருத்துவம்; அது: போகதுகர்ச்சிக்கு வினைமுதலாதற் றன்மை. (உ-ம்.) "நின்றுபோத்திருத்துவத்தைநிகழ்த்தி" (சி. சி. உ: அo. சிவஞா.)

போககாண்டம்–வித்தியாதத்துவம். (சி. சி. உ: எo. சிவஞா.)[மிச்சிராத்துவாவாகிய ஏழு தத்துவத்திலும் பொருந்திய ஆன்மாக்களுக்குப் போகத்தைக்கொடுத்துப் புசிப்பிக்கையாற்பெற்றபெயர்.]

போககாமி—போக இச்சையுடையவன். (சி. சி. அ: ருி. ஞாநப்.)

போககாரிகை — உக்கிரச்சோதியாசாரியர் செய்த ஒரு சார்புநூல். (சி. சி. அ: கச. மறை.)

போகசக்தர் — போகத்திலே பற்றினவர். (சி. சி. உ: அக. சிவாக்.)

போகசக்தி–சிவன்போகியானபோது அவரோடு நிற்குஞ்சத்தி. (சி. சி. உ: எருி. மறை.)

போகசமித்திரு — புசிப்பிக்கிறது. (சி. சி. உ: எo. சிவாக்.)

போகசமித்திருகாண்டம்– போககாண்டம். (சி. சி. உ: எo. சிவஞா.) [ஆன்மாவுக்குச்சகாயமாய்நின்று போகத்தை யுண்டாக்குவதென்பது.]

போகசிவன்–சுத்தமாயையானது சிவசத்தியினலே யுத்தியோகிக்கப்படும் அவதரத்துச் சிவன். (சி. சி. க: சுச. சிவஞா.)

போகட்டும் — போய்விடட்டும். (உ - ம்.) "பொல்லாததுபோகட்டும்" (தேவாரம்.)

போகடல்—போகவிடல். (சிந்தா.)

போகடுதல்—போகவிடுதல்.

போகணி—ஒரு பாத்திரம். (வழக்.)

போகத்தானம்—உடல். (வழக்.)

போகதத்துவம்—சதாசிவதத்துவம்; அது: சிவசத்தி மகாமாயாகாரியப்பிரசவாமிமுகயோகியிர்த்தியத்திலே யுத்தியுத்தையாய் இஃதிப்படியா மிஃதிப்படியாகாது இதுகாரணமிதுகாரண மிதுகாரிய மிதுபிரயோசநம் என்றும், இச்சாஞாநத்தைப்பண்ணும் இச்சாசக்தி சவிகற்பஞாநசத்தியிற் பின்னிதை நாண்பண்ணுகிற்பனென்று ஞாநக்கிரியாசத்தொழிலொத்த கிரியாசத்தித்தொழிலேப்பண்ணிக் கிரியாசத்தி ரூபியாயிருந்துள்ள அளவிற்பெறும் பெயர். (சி. சி. க: சுருி. ஞாநப்.)

போகபூமி—1. கருமபலபூமி; இது: அறுவகைப்படும். (சூ. நிக. கஉ: சுருி.) 2. தேவலோகம். 3. விளைநிலம். (1, 2, 3-வழக்.)

போகபோக்கியம்-அனுபவப்பொருள்.(வழ)

போகம்—1. ஆநந்தம். (உ-ம்.) "தேசமலிதரப்பொதுவார்சிவபோகமிகவிளைவான்" (கோயிற்பு. பாயிரம். கூ.) 2. ஐம்பொறிவாயிலாகஐம்புலவிடயங்களேப் பொருந்தத்துய்க்குந் தொழில், அனுபோகம். (உ-ம்.) "போகமுந்தவமுமெங்கும்" (பெரியபு. திருநாட். ஙக.) 3. நால்வகை வியூகத்திலொன்று; அது: சதுரங்கசேனையை ஒன்றுக்குப்பின்னொன்றுக நிறுத்துவது. (வள். எஎள. பரி. குறிப்பு.) 4. பாம்பினுடல். (சூ. நிக. கக: கஅ.) 5. விளைவு. (வழக்.)

போகம்பண்ணுதல் — 1. அனுபவித்தல். 2. புணர்தல். (1, 2-வழக்.)

போகர் — 1. ஒரு சித்தர். (பொருட். நிகண்டி.பதினெண்சித்தர்பார்.) 2. சதாசிவன் சூட்சுமமிருத்தியத்தைப் பண்ணிக்கொண்டு இருந்தக்கிரியாசத்தி தூலபஞ்சகிருத்தியத்திலே உன்முகமாய் விந்துவை யதிட்டித்துஞாநசத்தியாயும், கிரியாசத்தியாயும் இருந்தபோது பரசிவன்பெறும் பெயர். 3. தேவர். (உ - ம்.) "மேலமர்போகரும்" (கோயிற்பு. இரணியவன்மச். கஅ.)

போகல் — போகுதல், இரண்டுமொன்று. போகுதல்பார்.

போகவதி–நல்லனுபவமுடையவள்.(வழக்.)

போகாங்கபூசை — போகாங்கம், லயாங்கம் என்னுமிருவகையுட் போகாங்கம் சிவகணதிபர்க்குச்செய்யும் பூசை. (சைவச.)

போகார்க்கம்—போகத்திற்குரியபொருள். அர்க்கம்-பொருள்.

போகார்த்தம்—போகநிமித்தம். (சி. சி. உ: உ. சிவாக்.)

போகாவதிபரிச்சேதகம்—போகமுடிவை யளவிடுகை. (சி. சி. உ: ருசு. சிவாக்.)

போகி—1. இந்திரன். (உ-ம்.) "போகியோடமராற்றியேயன்னவன்புறந்தந் – தேதகவேதுரந்து" (கந்தபு. தநீசியுத். கஙஙு.) 2. ஒரு பெருநாள். 3. கார்போகிவிதை. (தைல.தைலவ.கசு.) 4. சுகமனுபவிப்போன். 5. தெரிநிலை வினைப்பகுதி. 6. பாம்பு. (உ-ம்.) "வரதமுமாது

ளங்கபலம்போகிசெபமாலைமணமலி நீ லோ ற் பலமுடையார்" (சி வ த ரு. பரிகார. கூ0.) 7, போகத்தையுடையவன். (உ - ம்.) "போகியா யிருந்துயிர்க்குப்போகத்தைப்புரித லோ ரார்" (சி. சி. க: நி0.) 8. போய். (உ-ம்.) "போகிநங் கண் - மையலங்களிற்றுவேந்தன்மைந்தனுக்கு ரைமினென்றான்" (சிந்தா. பதுமை. உசசு.) (2, 4-வழக்.)

போகிடைகழி—பெரிய இடைகழி. (உ-ம். "பிழைவாயிற்போகிடைகழி"(பட்டின. கசச.)

போகித்தல்—போகிப்பு.

போகிப்பு—1. அனுபவித்தல். 2. புணர் தல். (1, 2-வழக்.)

போகிய-1. ஒழிந்த. (புறநா.) 2. முற்றுப் பெற்ற. (உ-ம்.) "நரம்பிற்-கேள்விபோகியநீள் விசித்தொடையல்" (பொருந. கஅ.)

போகில்—1. கொப்பூழ். (பிங்கல. கoகo.) 2. பறவை. 3 பூவரும்பு. (2, 3-வைத்தியபரி.)

போகிவல்லபம்— சந்தனம். (வைத்தியபரி.)

போகிவாசம்-சந்தனமரம். (வைத்தியபரி.)

போது—1. நீட்சி. (உ - ம்.) "போகுயரஞ் சநக்குன்றம்" (கூர்மபு. தக்கன்வமிச. உகூ.) 2. போ பகுதிக்குச்சாரியையெபற்றவந்த வினைத் தொகை. (உ - ம்.) "உடைந்துபோகுபடை வெள்ளம்" (இராமா. இலங்கையழி. ககூ.)

போதுதல்-1. அழித்தல். (வழக்.) 2. செல் லல். 3. நீளம். 4. நேர்மை. (2, 3, 4- சூ. நிக. கக: கரவெ. கஅ.)

போதை — போதல். கை-தொழிற்பெயர் விகுதி.

போகோட்டோம் — போகவொட்டோம். (சிந்தா.)

போங்கம் —மஞ்சாடிப்பூ.(குறிஞ்சிப். எசு.)

போசககன்மம்—புசிக்கப்படுங்கன்மம். (சி. சி. உ: உக. ஞாநப்.)

போசகம்—புசிக்கப்படுவது (சி.சி.ஞாநப்.)

போசநகத்தூரி — நாரத்தங்காய். (வைத் தியபரி.)

போசநம்—உணவு. (தைல. தைலவ. கூசு.)

போசம்—1. அகத்தி. (வைத்தியபரி.) 2. ஒரு தேசம். (வழக்குண்டுபோலும்.)

போசசம்பு — ஒரு வடமொழிக்காவியம். (அபிதாநகோ.)

போசர்—யாதவருளொருசாரார். (அபிதாந கோ.)

போசன்—1. அரசமாது சோரமாக வேறோ ரரசனைப்புணர்ந்து பெற்றபிள்ளை. (சூதசங்கி தையிற் காண்க.) 2. ஓரரசன். (உ - ம்.) "போ சன்கவிஞருக்கேபோதப்பரிந்தளித்தத் - தூ சி லாக்கீர்த்திபெற்றான்சேமேசா" (முதுமொழி வெண்பா.)

போசாதீபன் — கஞ்சன். போசகுலத்துக் கதிபனென்பதாம்.

போசிவல்லபம்-சந்தனம்.(வைத்தியபரி.)

போட்டி—எதிரிடை. (வழக்.)

போட்டிக்காரன்—எதிரிடைக்காரன் (வழக்.)

போட்டிக்கை—போட்டி. (வழக்.)

போட்டு — போகவிட்டென்பது. (உ - ம்.) "ஒள்ளிகலரக்கர்போட்டோடுநாள்" (சேதுபு. கந்தமா. கஅ.)

போடகம்-1.அம்மைக்கொப்புளம்.(வி-ணி.) 2 தெரிவிக்கிறது. (சி. சி. உ: சுஉ. சிவாக்.)

போடகன்-காப்போன், போஷகன்.(வழக்.)

போடணம்-
போடணை— } காப்பு. (வழக்.)

போடம்—தேயம் ஐம்பத்தாறிலொன்று.

போடல்—1. அடித்தல். 2. எறிதல். 3. போகவிடல், நழுவவிடல். (உ - ம்.) "ஒள்ளிக லரக்கர்போட்டோடுநாள்" (சேதுபு. கந்தமா. கஅ.) 4. வைத்தல். (1, 2, 4-வழக்.)

போடி — சம்புநாவல்மரம். (வைத்தியாது. அக.)

போடித்தல்-
போடிப்பு— } ஆதரித்தல், போஷித்தல். (வழக்.)

போடியன்—ஆதரிக்கப்பெற்றவன். (வழக்.)

போடுதல் — 1. அணிதல் 2. இடுதல் 3. ஈனுதல். (1, 2, 3-வழக்.)

போணம்—சோறு. (வைத்தியபரி.)

போதந்து—போந்து. (பரிபாடல்.)

போத்தியன் — போதிக்கப்படத் தக்கவன். (சி-லி. ஞாந. சூ.)

போத்திரம் — 1. இடியேறு. 2. கொழு. 1, 2-(உ-ம்.) வந்துழிக்காண்க.

போத்திராயுதம்—பன்றி. (வைத்தியபரி.)

போத்திரி-
போத்திரு- } புசிக்கிறவன், அநுபவிப்ப வன். (பிங்கல. உறுoஉ.)

போத்திருதா — போக்தாவாகுந் தன்மை. (சி-லி. ஞாந. சூ.)

போத்திருத்துவம்—அநுபவத்துவம், போக நுகர்ச்சிக்கு வினைமுதற்றன்மை.(சி. சி. உ: அo: சிவஞா. உரை.)

போத்து-1. எருமை காட்டா குதிரை பசு புலி புல்வாய்ப்பூனை மயில் மரை யானை இவற்றி ஞண் சலசாதியுமாம். (பிங்கல. உறுருஎ, உறுருஅ.) 2. செம்போத்து. (வைத்தியபரி.) 3. மரக்கன்று. (பிங்கல. உஎகஉ.) 4. விலங்கி ஞண். (பிங்கல. உறுருறு.)

போதகம்—1. அப்பவருக்கம். (பிங்க. ஈகூ0டு.) 2. இளமை. (சூ. நிக. அ: உஎ.) 3. உபதேசம், போதித்தல். 4. காஞ்சிரை. 5. சிங்கம். 6. பசளை. (மலையக.) 7. புலி. 8. மரக்கன்று. (பிங்கல. உஎகூஉ.) 9. யானை. (உ - ம்.) "பட்டப்போதகந்தேர்பரியாளெனும் படையுடைப்பாஞ்சாலர்" (பாரத. படையெழுச். ஈ.) 10. யானைக்கன்று. (பிங்கல. உசகஈ.) (5, 7-சூ. நிக. ஈ: ஈகூ.) (4-வைத்தியபரி.)

போதகன்–1. ஆசிரியன். (உ-ம்.) "விஞ்சை மீந்தபோதகன்மனைக்குத்தீங்குபுந்திமுன்னுகச் செய்த" (திருவிளையங்க. கக.) 2. போதகாசாரியன். (இலக்கணக்கொத்து. பாயிரம்.)

போதகி—பெண்ணுர்க்குருவி. (உ-ம்) வந்துழிக்காண்க.

போதநம்—அறிவித்தல். (வழக்.)

போதனை—போதிப்பு. (வழக்.)

போதப்பிரகாரம்—அறிவகை; இஃது: இலக்கணம், உத்தேசம், பரீக்ஷையென மூவகைப் படும். (பொருட்டொகை நிகண்டு)

போதம்—1. ஞானம். (உ - ம்.) "போதமாந்தன்வலியைப்பொத்திநின்ற"(திருவிளை.அங்க. உஅ.) 2. மரக்கலம். (சூ நிக. எ: நிக.)

போதர்வான்—போதருவான். (உ-ம்.) "புறநகர்மணமகளெருவன்போதர்வான்" (சிந்தா. கஎக. சுஉ.)

போதரல்—போகுதல். (வழக்.)

போதரவு— } 1. உபசரணை. 2. பேணுதல்.
போதரிப்பு– } (1, 2-வழக்.)

போதருதல்—போதரல்.

போதல்–1. அகலல். 2. அழிதல். 3. செல்லல். (உ-ம்.) "உமைசிங்கவாகனமேறிப்போதன்மேயினுள்" (சிவரக. தேவிநாட்டிய. உ.) 4. நீளல். (1, 2, 4-வழக்.)

போதலிப்பு—போதித்தல். (வழக்.)

போதவாகன் — தோணியோட்டுவோன். (வழக்.) தோணியைவாகனமாகவுள்ளவன்.

போதவான் — அறிவுடையோன். (சி. சி. அ: உள. நிரம்ப.)

போதன்—1. அருகன். (சூ. நிக. க: க.) 2. அறிவுடையோன். 3. பிரமன். (சூ. நிக. க:கநி.)

போதா—1. பெருநாரை, நாரை. (உ-ம்.) "போதா-வன்னமுளபொன்னிவளோடன்பின்வீளையாட" (இராமா. அகத். நிஅ.) 2. போதாத. (உ-ம்.)"இடம்போதாவகைநெருங்குமன்னுயிர்கள்" (கோயிற்பு. வியாக்கிர. எ.)

போதாநீதம்—போதமுடிவு.

போதாநீதன்–கடவுள், ஞானமுடிவாயிருப்பவன்.

போதாமை—குறைவு. (வழக்.)

போதாயநர்—ஒரு முனிவர். (அபிதாநசி.)

போதாயநீயம்—உபநிடதமுப்பத்திரண்டிலொன்று. (பொருட். நிகண்டு.) வேதாங்கமாகிய கற்பவகையுளொன்று என்பர். (மணிமேகலையுரையில்.)

போதி—1. அரசமரம். (உ-ம்.) "பாசிலைப்போதியணிதிகழ்நீழல்" (சிலப். நாடுகாண். கக.) 2. ஞானம். (பெரியபு. திலலவா. க.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. மலை. (பிங்கல. சகநி.)

போதிகன்—ஆன்மா. (உ - ம்.) "ஐம்பூதந்தன்னையும்போதிகன்றன்னையும்"(கந்தபு.மார்க். உசஉ.)

போதிகை—குறுந்தறி. (வழக்.)

போதிசத்துவர்—புத்தராகவருதற்குரியோர். (உ-ம்.) "புத்தராகுமாண்பினேர்போதிசத்துவர்கடாம்" (நீலகேசி. மொக்கல. கஈ.)

போதித்தல்– } போதகஞ்செய்தல். (வழக்.)
போதிப்பு – }

போதியது—போந்தது. (வழக்.)

போதியவன்—தக்கவன். (வழக்.)

போதிவேந்தன்–1. புத்தன். போதி-அரசு. (பிங்கல. ககஈ.) 2 மலையரசன். போதி-மலை.

போதின்—போகின். (உ-ம்.) "பாதநிழற்கீழ்நில்லாதேநீங்கிப்போதின்" (சி. சி. கூ: க.)

போது—1. காலம். (சூ. நிக. கக: தகரவெ. ஈ0.) 2. பூ. (உ - ம்.) "போதிஞன்முகத்திறையுறை" (பிரமோத். பஞ்சாட். க.) 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. மலரும்பருவத்தரும்பு. (வள். பொழுதுகண்டிரங்கல். எ.)

போதுசெய்தல் — பக்குவமாய்முறுக்கவிழ்தல். (சௌந். எச.)

போதுசெய்யாமை—காலந்தோறும்வேறுபடாது ஒரு தன்மையதாதல். (உ-ம்.) "போதுசெய்யாநடங்காண" (கோயிற்பு. பாயிரம். கச.)

போதுதல்—1. செல்லல். 2. தகுதியாதல். (உ-ம்.) "தாமதம்புரிந்துகாலநீட்டிப்பதுவும்போதாதென்பான்" (சிவரக. கணபதிகுமரன். உ.) 3. திருத்தியாதல். 4. நீளல். (1, 3, 4-வழக்.)

போதுவன்–போவன். (சி. சி. கூ: க. ஞாநப்.)

போதேன்—போதியவனல்லேன். (உ - ம்.) "பூதியணிசாதனத்தவர்முன்போற்றப்போதேனுயிடினும்" (பெரியபு. சிறுத்தொண்டர்.சநி.)

போர்தை—மயக்கம். (வழக்.)

போதைப்புல்–1. கர்ப்பூரப்புல். 2. காவட்டம்புல். (1, 2-வைத்தியபரி.)

போந்தது—வந்தது. (வழக்.)

போந்தின்றுரோன்–சேரன். (சூ.நிக.க:கஅ.)

போர்த்து—1. இளம்பனை. (வைத்தியபரி.) 2. பனை. (மலையக.) 3. பனைமரலை. (உ-ம்) "முருகவிழாரும்போந்து-மடிமிசைநாற" (திருவிளை. நகர். அக.) ஆதுபெயர். 4. பல்லி. (பிங்கல. ஈகூ0ச)

போர்தை—1. அதுடநாள். (பிங்கல.உரிஞி.) 2. இளம்பனை.(வைத்தியபரி.) 3.பனங்குருத்து. (பொருந.கசாகூ.) 4. பனங்நோடி.(புறப்-மாலை) 5. பனை. (வைத்தியபரி.)

போம் — போகும். (கண்ணூர். வினையியல். உஉ. உரை.)

போம்பல்—நீர்க்கடம்பு (மலைபட.)

போமினம்-போமின். அம்-அசை (சிந்தா.)

போயித்து—போனது. (உ-ம்) "போக்கினீ ரென்னிபோய்த்தென்" (இராமா. சூர்ப்பந. ஈகூ0.)

போர்—1. சதயநாள். 2. நெற்போர்.(உ-ம்.) "பொய்கைநாரைபோரிற்சேக்கும்" (புறநா. உ0கூ.) 3 தெரிநிலைவினைப்பகுதி. 4 யுத்தம். (1, 4-பிங்கல. ஈகூ0எ.)

போர்க்கதவு-இரட்டைக்கதவு.(சிலப்பதி.)

போர்க்களம்—யுத்தகளம். (சூ.நி.க.நிஃசு0.)

போர்ந்தல்-1. பொதிந்துவைத்தல்.(உ-ம்.) "உலகம்போர்த்து" (கூர்மபு. திருக்கல். ஈக) 2 மூடுதல். (உ-ம்.) "தேன்"பரர்.

போர்ப்பு — 1 போர்த்தல். 2. போர்வை. (1, 2 வழக்.)

போர்ப்பை— } பொலி யெருது.
போர்ப்பைக்காளை— } (வழக்குண்டு போலும்.)

போர்போடுதல்—போரடிக்குதல். (வழக்.)

போர்மடநீதை—தூர்க்கை. (வழக்.)

போர்மாந்தம் — அட்ட மாந்தத்தொன்று. (பொருட்டொகை நிகண்டு.)

போர்முகம்—பன்றி. (வைத்தியபரி.)

போர்முள் — சேவலின் கால்முள். (வைத்தியபரி.)

போர்முனை—போர்முகம். (வழக்.)

போர்முட்டுதல்—போருண்டாக்குதல். (வழக்.)

போர்முறுதல்—போருண்டாதல். (வழக்.)

போர்வு—நெற்போர். (ஐங்குறு.)

போர்வை—1. ஆடை. (உ-ம்.)"நீலவெயில் விரிக்குந்தமனரிப்பூர்வைபெழில்பெற வணியுநீல்வானைபோல்" (கூர்மபு. தக்கவதிச. உஎ) 2. உறை. (சிந். நாமக. உகஎ. உரை.) 3. தோல். (சூ. நிக. கூ: சூஉ.) 4. மூடுதல். (வழக்.) 5. மெய்க்கவசம். 6. மேற்போர்வை. (5, 6-சூ.நிக. கக: தகரவெ. ஈகூ0.)

போராடித்தல்—சூடிதறல். (வழக்.)

போரா—வராத. (உ-ம்.) "போராவுலகர்புக்கார்" (திரு திருச்ச. அஎ.) [போதராவென் பதன் விகாரம்பேலும்.]

போராட்டம்—1. தொந்தரைசெய்தல். 2. போர்பண்ணல். (1, 2-வழக்)

போராட்டல்—மற்கட்டல். (வழக்.)

போராடல்—யுத்தம்பண்ணல். (வழக்.)

போராடுதல்—பொருதல். (வழக்.)

போரி — திருப்போரூர். (போரூர்ச்சந்நதி முறையிற்காண்க.

போரிடுதல்—சண்டைபிடித்தல். (வழக்.)

போரித்தனம்—எதிரித்தனம். (வழக்.)

போரூர்-திருப்போரூர், குமரக்கடவுள்தலம்.

போரேற்றுதல்—போரடிக்குதல். (வழக்)

போல்—1 ஒருவமைச்சொல். (உ-ம்.)"வள்ளமேற்பனபோல்வன" (அரிச்சநாட்டு. ருக.) 2. தெரிநிலைவினைப்பகுதி. 3. பதர். (வழக்.) 4. மூங்கில். (மலையக.)

போல்வு—போலுதல். உ-தொழிற்பெயர் விகுதி.

போல—ஒருவமைச்சொல்.(சூ.நிக.அ:எஅ.)

போலல்—போலுதல், ஒத்தல்.

போலா—போன்று. (சிந்தா.)

போலி — 1. ஒன்றோலொன்றிருத்தல். 2. கேலி. (வழக்.)

போலித்தனம்—வெளிவேஷம். (வழக்.)

போலிநடை—வெளிபலங்காரமான நடக்கை. (வழக்)

போலியாள்—வெளிவேடக்காரன் (வழக்.)

போலியெழுத்து-சொல்லுக்கு முதலிலாயினும் இடையிலாயினுங்கடையிலாயினும் ஒரெழுத்து நின்றவிடத்து வேறெழுத்துப் பொருள் வேறுபடாமல் வந்தொத்துநிற்பது. (நன்னூ. எழுத்தி. கஉஉ, கஉங, கஉச.)

போலிவேலை—கள்ளவேலை. (வழக்.)

போலுதல்—உவமையாதல்.

போலும் — 1. ஒக்குமெனப்பொருள்படும் ஒரு வினைச்சொல். 2. ஓரிடைச்சொல். (உ-ம்.) "வடிவென்றகண்ணுய்வநந்தினேபோலும்'(நன்னூ. இடையி. உஉ.)

போவது—போகவேண்டியது. (வழக்.)

போவர்—உணர்த்துவர். (சிந்தா.)

போழ்—1. தகடு. (உ-ம்) "வெள்ளிப்போழ் விலங்கு" (சிந். நாம. சக.) 2. தெரிநிலைவினைப் பகுதி. 3. பிளவு. (உ-ம்.) "மெய்கள்போழ்படத் தாள்விளை" (இராமா. சுரன்வ. அஉ) 4. வகிர். (உ-ம்.) "உறப்புறுபசுங்காய்ப்போழொடு" (பெரும். ஈ0எ.) 5. வார். (புறநா.)

போழ்தல்–பிளத்தல். (உ-ம்.)"அரம்போழவ் வீளக்குறுமகள்" (ஐங்குறு. கஅநு.)

போழ்து–பொழுது. (உ-ம்.) "புதல்வர்"பார்.

போழ்முகம்—பன்றி. (பிங்கல. உரு0உ.)

போழ்வு—பிளப்பு. (உ - ம்.) "மூரம்புகண் ணுடைந்தபரலவற்போழ்வில்"(மலைபடி.ககஅ.)

போழல்—1. பிளக்குதல். (தைல. தைலவ. கக.) 2. வெடித்தல். (வழக்.)

போளம்—நிலக்கடம்பு. (மலையக.)

போளி—அப்பவருக்கத்தொன்று. (வழக்.)

போற்றரவு—போற்றல். அரவு-தொழிற் பெயர் விகுதி.

போற்றல்—காத்தல். (உ-ம்.)"போற்றினரி யவைபோற்றல்கடித்தபின்–தேற்றுதல்யார்க்கு மரிது"(வள். சுகூ.) 2. துடைத்தல். (சிந்தா.) 3. தெளியவறிதல். (உ-ம்.) "அருந்தியற்றதுபோற்றியுணின்"(வள்.கசஉ.) 4. போற் றுதல், துதித்தல். 5. வணங்கல். (உ-ம்.) "மன் றமர்நடமுன்போற்றி" (கோயிற்பு. இரணிய. கoஎ.) 6. விரும்பல் (சிந்தா.)

போற்றலர்–பகைவர். (வழக்.)

போற்றார்—பகைவர். (உ-ம்.)"இடனறிந்து போற்றார்கட்போற்றிசெயின்" (வள். சகூ.)

போற்றி–எதிர்காலவினைமுற்றுய் நீகாத்தல் செய்யென்னும்பொருளிலும், தொழிற்பெயர் முற்றுய்நின்று செயப்பாட்டுவினையாய்ப்போற் றப்படுவதுஎன்னும் பொருளிலும் வியங்கோட் பொருளிலும் வருமொருமொழி. (பெரியபு. இல்லாவாழ். கூ.) விரும்பிஎன்னும் வினையெச் சப்பொருளிலும் வரும். (சிந்தா.)

போற்றிசைத்தல்—வந்தனஞ்சொல்லல், வாழ்த்தொலிசெல்லல். (உ-ம்.)"போற்றிசைத் துப்புரந்தான்" (பெரியபு. திருவாரூர். சக.) "புறந்தருவார்போற்றிசைப்ப"(பெரியபு. மானக் கஞ்ச. கஉ.)

போற்றிப்பஃறொடை — ஒரு நூல். (இரு பா. உ.)

போற்றிமார்–ஒருவகைப்பிராமணர்; இவர்: குடாநாட்டிலுள்ளவர்கள்.

போற்றிய—வாழ்த்துப்பொருளில்வந்த ஒரு வியங்கோள்.

போற்று—1. காப்பு. 2. துதி. 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. போற்றுதல்; இது: மூதனி லைத்தொழிற்பெயர். (பெரியபு. ஞாந. கoo அ.)

போற்றுதல்–1. காத்தல். (உ-ம்.) "வேள்வி யுலகமலராழ்றுந்தண்மைவலவனீ யெய்துவல் லேபோற்றிரென்ஞ" (கந்தபு. அசுரர். சுரு.) 2. துதித்தல். 3. பேணுதல். (உ-ம்.) "ஏற்றநீங் குறுதக்கனக்கடவுளரியாகும்- போற்றியேதனை ச்சூழ்தர" (கந்தபு. பிரமயாகப். கூ.) 4. வணங் கல். 5. வளர்த்தல். (வழக்.) (4, 5-போற்றல் பார்.)

போறல்—போலுதல். (உ-ம்.) "கொங்கை போறலரிது" (தஞ்ச. ககூ.)

போறி—போல்கின்றாய். (ஐங்குறு.)

போனீம்—போலும். (உ-ம்.) "தந்தையைக் கொன்றானைத் - தோளிற்றிருகுவான்போன்ம்" (கலி. கoக.) இது விகாரச்சொல்.

போனறிசின்—போன்றது. இசின்-அசை. (ஐங்குறு.)

போனகத்தி—சமைக்கிறவள். (வழக்.)

போனகம்—1. சோறு. (உ - ம்.) "தெய்வ வாடகமனைச்செல்வப்போனகம்" (பாரத. வார ணவ. ச.) 2. போசநம். (உ-ம்.)"போனகமென் பதுதானுழந்துண்டல்" கொன்றைவேந்.)

போனபோக்கு—கோரிட்டபடி. (வழக்.)

போனம்—1. உணவு. (உ-ம்.) "ஞாநக்கிரி யைநடிப்பவர்க்குமாடோறும் – போனத்தளவே புகிப்பன்றி" (ஒழிவி. சரிதை. சு.) [போனக மென்பதன் விகாரம்.] 2. நிலக்கடம்பு. (வைத் தியபரி.)

போனிறம்—பொன்னிறம். (உ - ம்.) "போ னிறப்புத்திசேனன்" (சிந்த. காந். உகூசு.) [விகாரம்.]

பௌ.

பௌட்கரம்—ஒருபாகமம். [இதற்குவியாக் கியாநஞ்செய்தவர் உமாபதிசிவாசாரியர்.]

பௌட்டிகம்—1. கோமயம். பூமியில் விழு மூன் தாமரையிலையிலேற்பது. (சைவச. பொது. ககூக. உரை.) 2. விருத்திசெய்வது.

பௌடம்—ஒரு தேயம். பொருட்டொகை நிகண்டில், போடமென்றார். போடம்-பௌட மென்றாயதுபோலும்.

பௌடிகம்—1. பதினெண் புராணத் தொன்று. (பொட். நிகண்டு.) 2. முதல்வேதம். (பிங்கல. உoகூo.)

பௌண்டரம்—1. ஒருநாட்டுக்குப் பெய ரென்பர் (அபிதாநகோசத்தில்.) 2. வீமசோ ணுடையவொருசங்கு. (பகவற்கீதை. க: கரு.)

பௌத்தம்—1. அவைதிகசாத்திரங்கண் மூன்றிலொன்று; இது: சௌத்திராந்திகம், வைபாடிகம், யோகசாரம், மாத்தியமிகம் என நான்கு பிரகாரமாய்ப் பிரிதலியாதி புத்தியந்த மான இருபத்துமூன்று தத்துவாத்மகமான பிர பஞ்சம், தீபச்சுவாலையைப்போலசணிகமாத்திர

மென்றுரைக்கும். (த. நி. போ.) 2. புத்தமதம். (வழக்.)

பௌத்தமதம் — புத்தசமயம். (சி. சி. உ: ருகூ. சிவாக்.)

பௌத்தர்—புத்தர்; இவர்: ஞானவிருத்தியாயிய புத்தியே ஆன்மா என்னும் ஞானமுடையவர். (சி. சி. உ: எகூ. சிவாக்.)

பௌத்தன்—புத்தயமையத்தான். (வழக்.)

பௌத்தாகமம்—புத்தர்களுக்குரிய வாகமம்; இது: மூவகைப்படுமென்பர். (மணி மே கலை யுரையில்.)

பௌத்திரம்—1. பரிசுத்தம். (வி-ணி.) 2. புத்திரற்குரியது.

பௌத்திரன்—1. சுத்தன். 2. மகன்மகன்.

பௌத்திராட்டகர்—வஸ்திரிபாதன், ருத்திரகோடி, அவிமுத்தன், மகாபலன், கோகர்ணன், பத்திரகர்ணன், சுவர்ணக்ஷன், ஸ்தாணு என்பவர். (வி-ணி.)

பௌத்திரி—பேர்த்தி. புத்திரன், புத்திரி இவர்கள் மகள். (வழக்.)

பௌத்திரை — 1. ஒரு நதி. (வி-ணி.) 2. பௌத்திரருடையவள். (திருவிளை. மலையத்துவ. கௌ.)

பௌதனன் — புதன்மகன், புரூரவாவென்பவன். (வழக்.)

பௌதிகதீட்சை—உலோகதருமணி தீட்சை. (சைவச. ஆசாரிய. சுஉ. உரை.)

பௌதிகப்பிரமசாரி—பாலியவயதுதொடுத்துக் கங்கா கல்யாணகாலம்வரையும் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன். (சைவச. ஆசா. சுஎ. உரை.)

பௌதிகபாவனை—உருவபாவனை. (கூர்ம. வருணைச். சகூ. உரை.)

பௌதிகம் — 1. சர்க்கலியவிழா ஒன்பதனுளொன்று; அது: ஐந்துநாளளவுள்ளதாகக்கொடியேற்றிப் பலியிட்டு மில்லாமலுஞ் செய்யப்படுவது. 2. கருநெல்லி. (வைத்தியபரி.) 3. பூதங்களாலாயது.(உ-ம்.)"பந்தமாயித்தாயான் மாப்பௌதிகமாகுமன்றே" (சி. சி. சு: கஉ.)

பௌதிகபோகசந்நியாசி—சகுண பாவனையாயிய பௌதிகபாவனையில் நிற்பவன். (கூர்ம புராண. வருணை. சஎ.) உரை.)

பௌதிகயோகி—மூவகையோகிகளுள் ஒருவர். (கூர்மபு. வருணை. சஎ. உரை.)

பௌதிகாசாரியன் — சாதகாசிரியன். (சி. சி. அ: ருஇ. சிவாக்.)

பௌதிகம்—1. உலகம். 2. பூதசம்பந்தம்.

பௌமதேயு — காஷ்டாதியுள்ள அக்கினி. (த. நி. போ.)

பௌமம்—நிலத்திற்பிறப்பன.

பௌமன்—செவ்வாய். (சூ. நிக. க: சுஎ.)

பௌமி—சீதை, பூமிசம்பந்தமாகப்பிறந்தவள்.

பௌரிணமி—
பௌரிணமை—
பௌரணை—
} பூரணை. (வழக்.)

பௌரம்—பட்டினம். புரசம்பந்தமென்பர்.

பௌரவர் — பூருவங்கிசத்தவர், குருகுலவேந்தர். (பிங்கல. எகூஅ.)

பௌராணிகம்—புராணமதம். (வழக்.)

பௌராணிகர்—புராணத்தைமுக்கியமாகக் கொண்டவர். (சி. சி. உ: எகூ சிவாக்.)

பௌருடம்—பௌருஷம்; அது: புருடத்துவம். (வழக்.)

பௌருடேயம்—புருஷராற்கூறப்பட்டது. (சி. சி. அளவை. கூ. சிவாக்.)

பௌரோகித்தியம் — புரோகிதத்தன்மை. (வழக்.)

பௌலத்தியர் — இராவணன், குபேரன் முதலாசேனர். புலத்தியன் மரபினராதலிஞல் வந்தபெயர்.

பௌலோமி — புலோமன்புத்திரி, புலோமசை. (வழக்.)

பௌவநம் — புவநசம்பந்தம். (சி. சி. ருஇ: எ. ஞானப்.)

பௌவம்—1. கடல். (உ-ம்.) "பௌவமூழ்குளுர்" (திருவிளை. அட்டமா. ருஇ.) 2. நீர்க்குமிழி. (உ-ம்.) "பௌவவாரிதி" (கூர்மபு. வருணை. ருஇ.) 3. பூரணை. 4 மரகணம். (3, 4-சூ. நிக. கூ: வகரவெ. கசை.)

பௌவியன்—புட்கரதீபத்தரசன். (வி-ணி.)

பௌளி—1. ஓரிராகம். (பொருட்டொகை நிகண்டு.) 2. பூபாளத்தின் மனைவி.

ம.

ம—1. அசோகு. 2. ஆணவமலம். (காஞ்சிப்பு. பாயிர. சை.) 3. சிவன். 4. பிரமன். 5. பெருங்காயம். 6. விட்ணு. 7. விடகலை. (சி-வி. நிரி. கூ. உரை.) (1, 5-வைத்தியபரி.) (1,3,4,6-(உ-ம்.) வந்தூழிக்காண்க.)

மக்கட்பாப்பு—மன்பதை. (பிங்கல.கூருக.)

மக்கடா—மந்தன். (வழக்.)

மக்கநம்—கேலி. (வழக்.)

மக்கம்—1. எருக்கு. (மலையக.) 2. ஒரு தேயம். (உ-ம்.) "வேரியம்பணைசூழ்மக்கமிக் கொக்கு" (திருவிளை. நரிபரி. கஅருஇ.) 3. நெய்வார்தறி. [தெலுகு.]

மக்கல்—உக்குதல். (வழக்.)

மக்கள்—1. மகார். (உ-ம்.) "மக்களேயிங்கில்லாதவர்" (நளவெண்பா.) 3. மனிதர். (சூ. நிக. உ: அசை)

மக்களித்தல்—1. கலுக்குதல். 2. திரும்புதல். (1, 2-வழக்.)

மக்களிப்பு—மக்களித்தல். (வழக்.)

மக்காச்சோளம்—பெரியசோளம். (வழக்.)

மக்கு — 1. அடைமண். கம்மாளர் வழக்கு. 2. தொழிலேவினைப்பகுதி. 3. மந்தகுணம். (வழக்.)

மக்குதல்—அழிதல். (வழக்.)

மக்குலம்—சிலாசத்து. (வைத்தியபரி.)

மக—1. இளமை. (உ-ம்.) வந்துழிக்காண்க. 2. பிள்ளை. (இராமா. நகர்நீங்கு. ககரு.) 3. மகத்து. (தஞ்சைவாண. பருந்தொன்றுவென்னு முதற்குறிப்புள்ளகவியிற் காண்க.)

மகக்குழை — மாவிலை. (தைல. அநுபந்த. சுக.)

மககம்—ஆமை. (வைத்தியபரி.)

மகட்பாற்காஞ்சி—ஒரு துறை. (புறநா.)

மகடி—ஒரு தூக்குழல். (வழக்.)

மகடூஉ—பெண். (பி. நி. கூசரு.)

மகடூஉக்குணம்—பெண்ணுக்குரிய குணங்கள்; அவை: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. நாணம்: பெண்டிர்க்கியல்பாகவுள்ள தொருதன்மை. மடம்: கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை. அச்சம்: பெண்மையிற் முன் காணப்படாததோர் பொருள்கண்டவிடத்தஞ்சுவது. பயிர்ப்பு: பயிலாதபொருட்கண் அருவருப்புற்றும் நிலைமை. (இறையனா.)

மகண்மயிழுந்தல்—ஒரு துறை. (புறநா.)

மகம்மா—1. அலி. (உ-ம்.) "மைந்தரைப் பார்ப்பனமகண்மாக்குலங்களும்" (சிந்தா. விமலை. கசு.) 2. ஓர் மிருகம்; இது: பெண்கள் மூசம்போல முகத்தையுடையதென்பர். (காஞ்சிபு. நகரேற்றுப. கசு.)

மகத்—1. சிதம்பரம். (உ-ம்.) "இரண்மய கோசமகத்தனிபுண்டரிகம்" (கோயிற்பு. வியாகிர. உகூ.) [பெரிதாதலின் இப்பெயர் பெற்றது.] 2. பெரிது.

மகத்தத்துவம் — மான் என்னுந்தத்துவம். மகதத்துவத்தற்குப் புதியென்று மொருபெயருண்டு. (மணிமேகலை.)

மகத்து—1. அதிகமானது. 2. சாமவேத உபநிடதத்தொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.) 3. (சைவமதத்தில்) சிவதத்துவம். (சி-லி. ஞாந. க.) 4. (வேதாந்தாதி மதங்களில்) பிரமாருதித்துவம். (சி-லி. ஞாந. க.) 5. பெரியவர்.

மகத்துக்கிரந்தி—மகநட்சத்திரத்துவருஞ்சனி. (உ-ம.) "அடையார்தமக்கு-மகத்துச்சனியன்ன சந்திரவாணன்" (தஞ்சைவா.) இவன் மிகத்தின்பஞ்செய்வானென்பர்.

மகத்துதி—மாயாதத்துவத்திலிருக்கும் எட்டுப் புவநங்களுளொன்று. (சி-லி. ஞாந.)

மகத்துவம்—மேன்மை. (உ-ம்.) "புலவீர் காண்மகதத்துவமாமணிகொளிக்கும்" (சிவரக. அபுத்திபூருவ. கூ.)

மகதத்துவம்—அறிவு, புத்திதத்துவம்; இது: மகேசன் புருடனையும் பிரகிருதியையும்நோக்க அவை தததம நிலைகளினின்றும் சலனப்படும். அப்போது பிரகிருதியினின்று தோன்றிற்று. (உ-ம்.) "அன்னதோர்கங்குற்புலரியிலுலகுக்காதியாமநாதியசமகேசன்—புருடன்வளர்பிரகிருதியைநோக்கத்-தங்நிலைகலங்குமதனிடையுதித்ததுயர்மகதத்துவத்தானே" "அனையனன்மகதத்துவதிதினப்புத்திமகான்மதிபிரக்கினை யாண்மாவினைதருங்காதிமேதையீச்சரனென்றுரைப்பர்" (கூர்மபு. பிரகிருதி. எ, அ.)

மகதந்தீராம் — சதபதபூரான் முப்பத்திரண்டிலொன்று. (அபிதாநசி.)

மகதம்—1. தேயம் ஐம்பத்தாறிலொன்று. (சிந்தா.) 2. பதினெண்பாடையிலொன்று. (பொருட்டொகை நிகண்டு.)

மகதர்—மாகதர்.

மகதி—1. திப்பிலி. (வைத்தியபரி.) 2. நாரதருடைய வீணையிலொருபேர். (உ-ம்.) "மகதியாழ்" (சிவரகசி. பாவநாச. உ.)

மகதியாழ்—நாரதமுனிவரதுயாழ். (உ-ம்.) "மகதியாழ்முனிவர்தமதைகேட்டருளின் மைந்தன்" (சிவரக. பாவநாச. உ.)

மகதை—திப்பிலி. (வைத்தியபரி.)

மகதீதரம் — 1. கள. 2. பதநீர். (1, 2-வைத்தியபரி.)

மகப்பாலவார்த்தல்—அநாதப்பிள்ளைக்குப் பாலூட்டல்; இஃது: அறம முப்பத்திரண்டிலொன்று. (பொருட்டொகை நிகண்டு.)

மகப்பெறுவித்தல்—மகவைப்பெறுவித்தல்; இஃது: அறம முப்பத்திரண்டிலொன்று. (பொருட். நிகண்டு.)

மகபதி—இந்திரன். (உ-ம்.) "கயாசுரனைச் சினன்மகபதிமயங்க" (கந்தபு. தநீசியுத்தர. கஙூ.)

மகம்—1. இருபத்தொன்று. (தைலவ.) 2. ஒரு நட்சத்திரம். (சூ. நிக. கக: ககரவெ. உ.) 3. யாகம். (உ-ம்.) "எண்ணிலாமகங்களாற்றிலம்" (பிரமோ. சோமவார. கஉ.)

மகம்பூ—பெருஞ்சீரகம். (வைத்தியபரி.)

மகமதுமார்க்கம்–துலுக்கர்மார்க்கம்.(வழக்.)

மகமாயி—பார்ப்பதி. (உரி.) "மகமாயிபரையாம்" (சிவரக. தாருக. உக.) திருக்கானப்பேரூராலயத்திருக்குந்தேவியாருக்கும் பெயர். (அபி. தாநகோ.)

மகமேரு — மகாமேருமலை. (சி. சி. க: எ0. மறை)

மகமை—தருமக்கொடை. (வழக்.)

மகரக்குழை—மகரகுண்டலம். (உ-ம்.) "சோதிமகரக்குழைசெறிதோளீராறுடையானை" (திருப்போ. சாப்பு. நி.)

மகரக்குறுக்கம்—ணகரனகாரங்களிலொன்றின்முன்னும் வகாரத்தின்பின்னும் வரும் மகரம். (நன். எழுத்தி. சக. உரை.)

மகரக்கொடியோன்—மகரத்துவசன். (வழக்.)

மகரகந்தம் — 1. தேமா. 2. வெண்காயம். (1, 2-வைத்தியபரி.)

மகரகுண்டலம்–காதணியிலொன்று; அது: மகரவடிவாகச்செய்யப்பட்டது (உ - ம்.) "மகரகுண்டலமணித்திருவில்" (அரிச்சபு. நாட்டு. உஎ.)

மகரகேதநன்—மன்மதன். (சூ.நிக.சு: நரி.)

மகரகேது—மகரகேதநன்.

மகாசுகா—வாடாப்பூவுள்ள மருதோன்றி. (வைத்தியபரி.)

மகரசங்கிராந்தி–தைமாசப்பிறப்பு. (வழக்.)

மகாசாலம்—மாமரம். (வைத்தியபரி.)

மகரத்துவசன்—மகரகேதநன்.

மகாதோரணம் — மகரவடிவாகச் செய்யப்பட்ட தோரணம். (உ-ம்.) "கொடிநெருங்கின மகரதோரணங்கள்வெண்குடையொடி சூடிப், படிநெருங்கின"(சிவரக.தேவியிமை.உசு.)

மகாந்தப்பூ—வெந்தயம். (வைத்தியபரி.)

மகரந்தம் — 1. கள். 2. குயில். 3. தேமா. 4. தேன். 5. பூந்தாது. (உ-ம்.) "மாமகரந்தமாகந்தக்-கொம்பெலாமிருந்துகுயி லினங்கூவ" (பாரத. அருச்சுநன்றவ. நிரு.) 6. பூந்தேன். (1, 2, 3, 4, 6-வைத்தியபரி.)

மகரந்தவதி—பாதிரிப்பூ. (வைத்தியபரி.)

மகரந்தாட்டகாசம்–மூலலேச்செடி. (வைத்தியபரி.)

மகரந்தேளகம்— புஷ்பம். (வைத்தியபரி.)

மகரப்பதுவாய்—சுருவினது அங்கசுந்தவாய்போலப்பண்ணின தலைக்கோலம். (உ-ம்.) "திருநுதன்மகரப்பகுவாய்தாழமண்ணுறுத்து" (திருமுரு. உரி.)

மகரம்—1. இராசிசிங்கத்தொன்று. (சூ.நிக. கக: கஉ0.) 2. ஒரு சாயநிறம். (வழக்.) 3. ஓரிராசி. (வருஷாகிநூல்.) 4. ஒருமுழுத்து. (நன்னூ. மெய்யீ. கூகூ. உரை.) 5. குபேரனவநிதிகளுளொன்று. (பொருட். நிகண்டி.) 6. குறங்குசெறியாபரணம். (சிந்தா. நாமத. கசரு. உரை.) 7. சுறுமீன். (உ-ம்.) "மகரசலந்தரனந்தருவேதவநத்தன்" (மஹாறசை. கo) 8 பூந்தாது. (சூ. நிக. கக: ககரவெ. க.) 9. முதலை. (வி-ணி.)

மகரப்பூ—வெந்தயம். (வைத்தியபரி.)

மகாமாதம்—தைமாதம். (வழக்.)

மகரயாழ்—நால்வகையாழிலொன்று; அது: பதினேழு நரம்புகொள்ளப்படுவது. (மணிமே. சிறைக்கோட்ட. உரி. உரை.)

மகரயூகம்—படைவகுப்பிலொன்று.(சூர்ம.பு. தக்க-வமி. சஉ. உரை.) [மகரவியூகம்"பார்.]

மகரரேகை — தநவானிலக்கணம், கையிலிருப்பது.

மகரவலயம்–தலைக்கோலம். (பரிபாடல்.க.)

மகரவாகனன்—வருணன். (வழக்.)

மகரவாயி — மகரவாயாகச்சமைந்த தலைக்கோலம். (கலி. கசுச.)

மகரவாயிமோதிரம்— காலவிரலணியுளொன்று. (சிலப். கடலாடு. அரு. உரை.)

மகரவாழை—காட்டுமல்லிகை. (மலையக.) 2. மருகு என்றபேர். (பி. நிக. உஎக.)

மகரவியூகம்—மகரரூபமாக வகுக்கப்பட்ட படைத்தொகுதி. (உ - ம்.) "வருபடைதன்னை நிறுத்திவிதம்படமகரவியூகமவகுத்து" (பாரத. பதின்மூன்றும்போ. எ.)

மகராகரம்—மகரால்யம்; அது: கடல்.

மகராங்கன்—காமன். (வழக்.)

மகராசழலி—மண்ணீரல். (வைத்தியபரி.)

மகராசன்—1. அரசன். 2. பாக்கியவான். (1, 2-வழக்.)

மகராசி—பாக்கியவாட்டி. (வழக்.)

மகராலயம்—கடல். (உ - ம்.) "இருளார்மகராலயநீர்", (கோயிற்பு. வியாக்கிரபாத. கo.)

மகரி—கடல், மகரத்தையுடையது.

மகரிகை—1. குரங்குசெறியென்னுமணி. (உ - ம்.) "மாதின்மகரிகையங்குபொற்பூண் சூழறுகவானேபோலும்" (கந்தபு.மாயை.நிசு.) 2. யானையணிகளிலொன்று.(உ-ம்.)"மகரிகையுமிருபிணைகளும்விரிநுதன்மருவுகலனெடிமினெனவொளிவிட" (பாரத. பதினராம்போர். உo.)

மகருதம்—கொடிவேலி. (மலையக.)

மகலோகம்–மேலேழுலகிலொன்று; அது: மரீசி, மார்க்கண்டர், சித்தர் முதலியோர் வசிக்கும் பதம்.

மகவாட்டி–குழந்தைப்பிள்ளைக்காரி.(வழக்.)

மகவான்—1. இந்திரன். (பிங்கல. கசுo.) 2. சிவன். (மரு-தி. அ.) [ஒளியையுடையவ னென்றபடி.]

மகவு–விலங்கின்பிள்ளை.(பிங்கல.உருஅசு.) 2. மகன். (உ-ம்.)"மகவிஞசையாவியைக்கொள் ளைகொள்ள" (அரிச்ச. மயாந. உo.)

மகள் —1. புத்திரி. (பி. நிக. கூஉக.) 2. பெண். (உ-ம்.) பூமகள்.

மகளிக்கீரை—ஒரு கீரை. (வழக்.)

மகளிர்—பெண்கள். (உ-ம்.) "வேதியர்மக ளிரேமுதல" (பிரமோ. சிவராத். சு.)

மகளிரான்மலர்மரம் – மகளுக்காரணமாக மலருமரம்; அவை: அசோகு, ஏழிலம்பாலை, குரா, குருக்கத்தி, சண்பகம், பாதிரி, புன்னை, மஞ்சி, மா, முல்லை இவை முறையே உதைக்க, கட்புற, அணைக்க, பாட, நிழல்பட, நிற்கிக்க, ஆட, சுவைக்க, பார்க்க, நகைக்கத் தளிர்த்துப் பூப்பனவாம். (சூ. நிக. கஉ: கoஅ.)

மகன்—1. ஆண்பாற்பிள்ளைப்பொது. (பிங் கல. அகூங.) 2. கணவன். (சிலப்.) 3. புருடன். (உ-ம்.) "நோதகவுண்டோநும்மகனூர்க்கினி" (சிலப். கொலைக்கள. கஎ.)

மகன்மை–1.ஆண்டன்மை. மகன்-புருடன். மை-விகுதி தன்மைப்பொருளுணர நின்றது. 2. புத்திரத்தன்மை. (உ-ம்.) "அரசிளங்குமரற் கேற்பவண்பிஞண்மகன்மைகொண்டார்" (பெரி யபு. தடித்தாட். நு.)

மகன்றில்—ஒரு புள். (உ-ம்.) "சோர்துஞ்றி ருத்தறேற்றுடணேபிரிமகன்றிலொத்தாள்"(சிந் தா. நாமக. உஎகூ.) நீர்வாழ்பறவை என்பர். (புறநா.)

மகனே—மகனுகவுள்ளாய். (புறநா.)

மகா—பெருமைமிகுதி மேன்மையிவற்றை விளக்குமோ ருபசருக்கம். (உ-ம்.) "தேவாதி தேவமகாசிருத்ரகோரசசிசேகரேச" (சிவ ர க. கணபதிவந்தனை. கூ.)

மகாகண்டம்–ஒருபௌத்தநூல்.(மணிமே.)

மகாகணரோகம்—கணரோக பேதத்து ளொன்று; அது: முகம், புறங்கால், புறங்கை என்னுமிடங்களில் மினுமினுப்பு, நகமும்விழி யும் வெளிறல், மயக்கம், மிகுந்தவெதும்பல், உதடு புண்போற்சிவந்திருத்தல் என் னு மி க் குணங்களை யுண்டாக்கும். (சீவரட். உகசு.)

மகாகந்தம்—உள்ளி. (வைத்தியபரி.)

மகாகபித்தம்—வில்வமரம் (வைத்தியபரி.)

மகாகாயம்–பெருவெளி, ஆகாயம். (வழக்.)

மகாகாயன் — திருக்கையிலையின் றெற்கு வாயில்காப்போன். (அபிதாநசி.)

மகாகாலம்—1. நெடுங்காலம். 2. மாமரம். (வைத்தியபரி.)

மகாகாலன்—சிவபிரானுக்கொரு பெயர். (அபிதாநசி.)

மகாகாளம்–1. ஒரு சிவதலம். 2. ஒரு தீர்த் தம். 3. பிரதிட்டாகலையில் தேயுதத்துவத்தி லிருக்கும் எட்டுப்புவநங்களுளொன்று. (சி-லி. நிரி. உக. தாற்.) (சி. சி. அ: எ. மறை.) (1, 2-அபிதாநகோ.)

மகாகாளர்–1. அரிகரபுத்திரர் சேநாபதி. 2. சிவகணத்தலைவர். 3. சிவமூர்த்தத்துளொன்று. (1, 2, 3-அபிதாநசி.)

மகாகாளன்—1. அதிகுய்யாட்டகரிலொரு வர். (வி-ணி. உஎக.) 2. சிவலோகத்திலே மகா தேவனரண்மனையில் வடக்குவாசற் காவலன். (வி-ணி. உசுஙூ.)

மகாகாளி—சத்திகளிலொருத்தி. (வி-ணி. உசுக.)

மகாகாளிசரண்—களாவிழுது. (தைல. தைலவ. ககக.)

மகாகாளேசுவரம்—ஒரு சிவதலம். (அபி தாநசி.)

மகாதும்பி—பெரும்பூசனி. (வைத்தியபரி.)

மகாதும்பிநி — ஒரு பாலாரிட்டதேவதை. (வி-ணி. உசுஅ.)

மகாகேசம்—மனுஷர்கையில் நூறுமுழம். (த. நி. போ. கசுஉ.)

மகாகைலாயம்– சிவபிரான்வீற்றிருப்பது. இதன்விவரம், அபிதாநசிந்தாமணியிற்காண்க.

மகாகோணி—இலட்சங் கோடாகோடி. (வழக்குண்டுபோலும்.)

மகாகோரம் — நரகத்திலொரிடம். (அபி தாநசிந்தாமணியில் அதிகோரமென்றுர்.)

மகாகோளி—ஒரு சுற்கதிரவியம். (உ-ம்.) "வாலுகம்மகாகோளிமஞ்சள்" (தைல. தைலவ. எஎ.)

மகாச்சாரியம்—ஆலமரம். (வைத்தியபரி.)

மகாசகா— } வாடாப்பூவுள மருதோன்றி
மகாசகை– } மரம். (வைத்தியபரி.)

மகாசங்கம்—ஆயிரங்கோடாகோடி.

மகாசங்காரம்–சர்வோபதாந காரணமாகிய மகாமாயையிற் சர்வதத்துவங்களு மொடுங்குஞ் சங்காரம். (சி-லி. ஞாந. உசு. உரை.)

மகாசங்கை–சங்கை பதின்மடங்கு கொண் டது. (த. நி. போ. உறு.)

மகாசண்டன்–நமன்ஏவலாளன். (சிவதரு. எ: கoo.)

மகாசாத்தா–அரிகரபுத்திரன்.(அபிதாநசி.)

மகாசதாசிவன்–இருபத்தைந்து திருமுகத்தை யுடையவனென்றும், சதாசிவமூர்த்திக்கு மேற்பட்டவரென்றுங்கூறுவர். (அபிதாநசி.)

மகாசநம்—1. உயர்ந்தோர். 2. பிராமணர். (1, 2-வழக்.)

மகாசம்பு—பெருநாவல். (வைத்தியபரி.)

மகாசம்மோகநம்–அறுபத்துநாலு கலைகளி லொன்று; அது: விழித்திருப்பவர்களேமெய் மறந்து நித்திரைகொள்ளச்செய்வது. (சௌளந் தரியலகரி. கூ0. உரை.)

மகாசமஸ்தி தாம்—எண்மாநத்திற் பதினெட் டாவது தாநம். (சி. லி. ஞாந. உடு. உரை.)

மகாசாகரம்–சாகரம்பதின்மடங்கு கொண் டது. (த. நி. போ. உடு.)

மகாசாந்தபதும்—ஆறு நாளாயநுட்டிக்கு மோர் விரதம்; அது: முதலுட்சலமும், இரண் டாநாட்கோமயமும், மூன்றுநாட்பாலும், நாலா நாட்டயிரும், ஐந்தாநாணெய்யும், ஆறு நாட் டருப்பையவித்தநீரும் உண் டனுட்டிப்பது. (உ-ம்.) "வந்துழிக்காண்க.

மகாசாலி—பெரும்பீர்க்கு. (வைத்தியபரி.)

மகாசித்தர் — ரைவதகமென்னும் ஐந்தாம் பவநாதார மேகாசிரயபட்டணத்திலிருப்பவர். (வி-ணி. உகூ.)

மகாசித்தன்–கைலாயத்தின் கீழைத்துவார காவலாளி. (அபிதாநசி.)

மகாசுவாலை — விபசாரிகளுடையுமொரு நரகம். (அபிதாநசி.)

மகாசுவாசரோகம்–சுவாசரோக பேதத்து ளொன்று. (சீவரட். டுஅ.)

மகாசுவேதம் — சிறுவாழுவை. (வைத் தியபரி.)

மகாசேநர்—ஐம்பத்தோருருத்திரரி லொரு வர். (வி-ணி. உஎசு.)

மகாசைவர்–வைதிகப்பிராமணர்களுள்ளே சிவதீட்சைபெற்றவர். (சைவவி. கூக.) [இவர் சிவப்பிராமணரிடத்துத் தீட்சைபெற்ற பூசுர ரென்று சிலர் சொல்லுவர்.] (சைவச.)

மகாசோபம்—நூறுகோடி கோடாகோடி. (வழக்குண்டுபோலும்.)

மகாத்துமா—1. அறிஞர். (சி. சி. சு: உஎ. சிவாக்.) 2. பெரியவர்.

மகாத்துதி — வித்தியாகலையில் மாயாதத்து வத்திலுள்ள எட்டுப்புவநங்களுளொன்று. (சி. சி. அ: மறை.)

மகாத்மியம்–மான்மியம். (த.நி.போ.உசஎ.)

மகாதசர் — வித்தியா தத்துவத்திலிருக்கு மோருருத்திரர். (வி-ணி. உஎச.)

மகாதலம்—1. அதிகாரம். (வைத்தியபரி.) 2. கீழேழுலகிலொன்று. (சூ. நிக. கஉ: எக.)

மகாதாநம்—1. சத்கிரியாற்செய்யப்படுந் தாநங்களிலொன்று. (த. நி. போ. உடு) 2. பெருங்கொட்டை. (வைத்தியபரி.)

மகாதிசை — சோதிடத்திலே பலாபலனை யறிவிப்பது. [தசை-திசையென வழங்குகின் றது.]

மகாதிம்பம்—பெருமரம். (வைத்தியபரி.)

மகாதுநுமம்—அரசு. (வைத்தியபரி)

மகாதேசம்—பாதரசம். (வைத்தியபரி.)

மகாதேவம் — நிவிர்த்திகலையில் இருபத் தெட்டுப் புவநங்களுளொன்று. (சி. சி. எ. மறை.)

மகாதேவன்–1. கடவுள், சிவன். சந்திரனை யதிட்டித்திருக்குஞ் சிவமூர்த்தம் என்பர். (அபி தாநசிந்தாமணியில்.)

மகாதேவாஷ்டகர்—குரோதசன், சண்ட சண்டன், சங்வரதன், சோதிபிங்கலன், சுரா கன், பஞ்சாந்தகன், ஏகவீரன், சிகேசன் என் னும் பிரகிருதித்துவத்திருக்கும் அஷ்டகர். (வி-ணி. உஎகூ.)

மகாதேவி—பார்வதி. (வழக்.)

மகாநடம்—தயித்தியர் பட்டணங்களிலொன் றது. (த. நி. போ. கூகூ.)

மகாநடனன்—சிவன். (வழக்.)

மகாநதி— கங்கை. (வழக்.)

மகாநவமி — புரட்டாதிமாசத்துச் சுக்கில பக்ஷ நவமி. (சை. வி.)

மகாநாகம்—1. சுரப்புன்னைமரம். (வைத் தியபரி. 2. பெருஞ்சர்ப்பம்.

மகாநாமீயம்–பிராமணர் செயற்பாலவாகிய சோடச கர்மங்களிலொன்று. (த.நி.போ. உசு.)

மகாநிம்பம்—பெருவேம்பு (வைத்தியபரி.)

மகாநீலம்—கையாந்தகரை. (மலையக.)

மகாநுபாவன்—மகாத்துமன். (வழக்.)

மகாநேமி—காகம். (வைத்தியபரி)

மகாப்பிரகாசசத்தி—அப்பிரகம். (வைத் தியபரி.)

மகாப்பிராணம்—காகம். (வைத்தியபரி.)

மகாபட்சி—ஆந்தை. (வைத்தியபரி.)

மகாபத்திரம்—பனைமரம். (வைத்தியபரி.)

மகாபத்மம் — 1. எண்மாநத்திற்பதினைலா வது தாநம். (சி-லி. ஞாந உடு.) 2. சூரியனது சுதிரையைப்பற்றிக்குமொருசர்ப்பம். (வி-ணி. உசடு.)

மகாபதுமம்–1. குபேரநவநிதியிலொன்று. (பொருட். நிகண்டு.) 2. பத்துக்கோடாகோடி. (வழக்.)

மகாபதுமன்–அட்டநாகத்தொன்று; இது: படத்திலும் முதுகிலும் இராசரத்தநக்கல்லை யொத்த புள்ளிகளையுடையதாயிருக்கும். (சீவ ரட். ஈஉஉ.)

மகாபயை—அதர்மத்தின் புத்திரர் மூவரு ளொருவன். (வி-ணி. உருள.)

மகாபாரதம்—சாரங்கதேவமுனிவரால் வட மொழியிலே ஓரிலக்கங்கிரந்தமாகச் செய்யப் பட்ட பாரதநூல். அகத்தியமுனிவரும் தமிழில் ஆராயிரஞ்சூத்திரமாகச்செய்யப்பட்ட பாரத நூலுமாம். (அபிதாநகோ)

மகாபல—பிர ட்டாகலையில் பிருதுவிதத் துவத்திருக்கும் நூற்றெட்டுப் புவநங்களு ளொன்று. (சி-லி. கிரி உக. தாற்.)

மகாபலலிங்கநாதர்—திருக்கோகர்ணத்தா லயத்திருக்கிற சுவாமிபெயர். (அபிதாநகோ.)

மகாபலம்—1. கொளிஞ்சி. (மலையக.) 2 தூதுவளை. 3. தெங்கு. (2, 3-வைத்தியபரி.)

மகாபலன் — சதாநத்திரரில் வருணதிக்கி லிருக்குஞ் தசருத்திரரிலொருவன். (வி - ணி. உஉ0)

மகாபலி — டலிச்சக்கிரவர்த்தி. (மணிமே. சிறைக்கோட்ட. நிசா. உரை.)

மகாபலை—வில்வம் (வைத்தியபரி.)

மகாபாகன்—பாக்கியமுள்ளவன். (சி. சி. சு: ஈசு. சிவாக்)

மகாபாடியம்—பேருரை. (பி. வி எக.)

மகாபாதகம்—பெரும்பாதகம்; அவை: கொலை, களவு, பொய், கள்ளருந்தல், குருபிர்த்தை யென்பன. இப் பஞ்சபாதகமும், இல்லியன்றி, பிரமக்கொலை, வேதாத்தியயனம்விடுதல்,பிறர்மனைநயத்தன் முதலியனவுங்கூறுவர். (அபிதாநசி.)

மகாபாரதம்–ஒருநூல்; இது: சபாதலக்ஷங் கிரந்தமுள்ளது)

மகாப்பிராகாசசத்தி—அப்பிரகம். (வைத் தியபரி.)

மகாபித்தம்—வில்வமரம் (வைத்தியபரி.)

மகாபுண்ணியை—ஒருநதி.(வி-ணி உஉஉ.)

மகாபூ—பெருஞ்சீரகம். (மலையக.)

மகாபூரி—ஆயிரங்கோடிகோடி கோடா கோடி. (வழக்குண்டுபோலும்.)

மகாபெலா–பேராமுட்டி (மலையக.)

மகாமகம்–மாசிமகத்திற்குருவருநாள், சிங்க ராசியிற் பிருகற்பதி பிரவேசமாயிருக்கும் மாசி மாசத்துப் பௌர்ணிமை; அது: கும்பகோணத் திலேயுள்ள மகாமக தீர்த்தத்திலே ஸ்நாநஞ் செய்தற்குரிய விசேஷபுண்ணியநாள். (அபி தாநசி.)

மகாமநீதிரர்—விஞ்ஞாநகலர்களில் பக்குவ மலர். (சி-லி. ஞாந. ச. உரை.) [அட்டவித்தி யேசுவரரைக்காட்டிலும் தாரதம்மியத்தாற் கொஞ்சங்குறைந்த மலபரிபாகமுள்ளவர்களாய் அவர்களுட் பரிவாரங்களாய்ச் சப்தகோடிபே ருள்ளார்; இவர்கள்: சுத்ததத்துவவாசிகள். இவர் களில் மூன்றரைக்கோடிப்பேர் மலபரிபாகதார தம்மியத்தாலே குருக்களாயிருக்கிறார்கள். இவர் களே யதிகாரமுடிவில் பரமேசுவரர் (சதாசிவர்) குருமூர்த்தியதிட்டாநமின்றி நேரிடத் தாமே யதுக்கிரகம் பண்ணுகிறார். மற்றப்பாதி மூன் றரைக்கோடிப்பேர்களையும் மாயாத்துவாவிலதி காரமுள்ளவர்களாகச்செய்து சங்காரகாலத்தில் குருமூர்த்தியையதிட்டித்து அநுக்கிரகிக்கிறார். இவ்வாறன்றி விஞ்ஞாநகலர்களிற் பக்குவம் வந்தபேர்களில் தீவிரபக்குவம்வந்தபேர்கள் சிவ ஞலே தீட்சைபண்ணிக்கொண்டு மலநீங்கித் தூலமலவாசநைக்கீடாக வைந்தவ தேகிகளாய்த் தூலவித்துவாவியத்தி விளங்கிச் சுத்தவித்தை யிலே யிருக்கின்றார்கள். இவர்கள் சத்தகோடி பேர். இவர்கள் அட்டவித்தியேசுரராலே பிரே ரிக்கப்படுவரென்றும், இவர்கள் மூன்றரைக் கோடி சீவர் குருவையதிட்டித்துச் சகலரை யநுக்கிரகிக்குமிடத்துக்காரணமாயிருந்த மகாப்பிரளயத்திலே மோக்கத்தை யடைவர். மற்ற மூன்றரைக்கோடியரும், சிவன் குருவை யதிட்டியாமல் விஞ்ஞாநகலரையும் பிரளயாகல ரையுமநுக்கிரகிக்குமிடத்துக்காரணமாயிருந்து அதிகாரத்தில் வைராக்கியத்திலேசிருட்டிக்குப் பின்பாக மோக்கத்தை யடைவார்களென்றும் சிவப்பிரகாசவுரையிற்கண்டது. (சி. பி. அ.)]

மகாமாயி—துர்க்கை. (வழக்.)

மகாமாயை—சுத்தமாயை. (சி. சி. சு: நிக. சிவாக்.)

மகாமாரி—ஒரு தேவதை, மூன்றுசிரமுங் கறப்புநிறமு சதுர்ப்புயமுமாயு தங்களுமுள் ளவளென்பர். (அபிதாநசி.)

மகாமீநகம்–யானை. பிங்கலத்திற் பெருமா ணென்றார்.

மகாமுடி—யோனி. (வைத்தியபரி.)

மகாமுத்திரை—ஒருவகைமுத்திரை. (சைவ. பெரிய. நிஉநி. உரை.)

மகாமுநி—1. அகத்தியன். (வழக்.) 2. புத் தன். (சூ. நிக. சு: ஈ.)

மகாமேலம்—கொம்மட்டி.(வைத்தியபரி.)

மகாமேகராசாங்கந்தைலம்—ஒருவகைத் தைலம். (தைல. தைலவ. முகம்.)

மகாமேதை—மருளுமத்தை. (மலையக.)

மகாமேரு—பொன்மலை. (உ - ம்.) "சாற்று மகாமேருவரைச்சிகரத்துற்றுல்" (சிவரக சிவ தன்மா. உக.)

மகாமேருதானம்—சூஷத்திரியனுற் செய்யப் படுந் தானங்களிலொன்று. (த. நி. போ. உடு.)

மகாமோகம்—ஐவகைத் தமோகிருட்டியின் மூன்றுவது. (சி. சி. உ: நிஅ. சிவாக்.)

மகாயுகம்—ஒரு சதுர்யுகம். (கூர்மபு. பிர மா. நு. உரை.)

மகார்—புதல்வர். (உ-ம்.) "மூக்குலத்தரசினு முதன்மையாலுய- ரிக்குலத்திவனலாதில்லைமா மகார்" (பாரத.குருகுல.எடு.) [மக்கட்பான்மை]

மகாரசதூதம்—ஒரு மாமரம். (உ-ம்.) வந்து ழிக்காண்க.

மகாரசம்—ஒரு மரம். (வைத்தியபரி.)

மகாசிங்கி—நாதம். (வைத்தியபரி.)

மகாரதம்—பதினேராயிரந்தேர்க்கு முதற் றேர். கால்வகை யிரதத்தொன்று. (பொருட். நிகண்டு)

மகாரதன்—பதினேராயிரந்தேருக்குத் தலை வன். (வழக்.)

மகாரவுப்பு—கல்லுப்பு. (வைத்தியபரி.)

மகாராட்டிரம்—1. ஒரு தேயம். (மணிமேக.) 2. ஒரு பாடை. (பொருட். நிகண்டு.)

மகாருத்திரன்—மகாசங்கார கருத்தாவாகிய சிவன். (வழக்.) (சிவஞானபோதப்பாயிரவுரையி லறிக.)

மகாரோகம்—குட்டமுதலிய பெருவியாதி. (வழக்)

மகாரௌரவம்—ஒரு நரகம். (பொருட். நிகண்டு.)

மகாலக்குமி—மகாலட்சுமி. (வழக்.)

மகாலய—பிரதிட்டாகலேயி லாகாயதத்து வத்திலிருக்கும் எட்டுப் புவநங்களுளொன்று. (சி-லி. நிரி. உக. தாற்.)

மகாலய அமாவாசை—புரட்டாசிமாசத் தில் அபரபட்சத்தில், கன்னிராசியில் சூரியன் பிரவேசிக்குநாள் மகாலயமெனப்படும். (அபி தாநசி.)

மகாலிங்கோற்பவம்—இருபத்தைந்து மூர்த்தத்தொன்று. (வி-ணி. உகஅ)

மகாலோகம்—மேலேழுலகங்களிலொன்று. இவ்வுலகம் சுவர்லோகத்தின்மேல் இரண்டு கோடி யோசனாந்தத்தில் இருக்கின்றது. இதில் மார்க்கண்டமுனி அதிபதியாகி மரீசிமுதலான முனிவருடனிருப்பரென்பர். (வி-ணி. உடo.)

மகாவக்கிரன்—ஞாநேந்திரிய தத்துவத்தி ருக்கு மைந்தருருத்திரரி லொருவர். (வி-ணி. உஎஉ.)

மகாவன்னி—கமலாக்கினி. (தைல. தைலவ. சு கூ.)

மகாவரி—அரி பதின்மடங்குகொண்டது. (த. நி. போ. உடு.)

மகாவல்லி—1. வசந்தமல்லிகை. (வைத் தியபரி) 2. வில்வம். (மூலிகை.)

மகாவாக்கியம்—அதர்வணவேத உபநிடதங் களுளொன்று. (கூர்மபு. அட்டமூ. உசு. உரை.)

மகாவிடம்—இருதலேப்பாம்பு. (வழக்குண்டு போலும்.

மகாவிடமுட்டித்தைலம்—எட்டிவேர் முத லியவைசேர்த்து வடிக்குந்தைலம். (தைல. தைல வ. எஉ, கூச.)

மகாவிடேவம்—மகாவிசுவம், மேடசங் கிராந்தி யென்பர்.

மகாவிதீதம்—1. ஒரெண். (சூ. நிக. சக: சுரவெ. அ) 2. நளனகரம் (நைடதத்திலறிக.)

மகாவிந்து—அப்பிரகம். (வைத்தியபரி.)

மகாவிரதம்—அதிமார்க்கநூல் மூன்றி லொன்று. இதில் பாசுபதர்கூறியமுறையே, மாயை கன்மங்களுடன் ஆணவமலமு முண் டென்றும், ஆன்மாக்களுக்குப் பெத்தமுத்தியி னும் ஞாநசத்தியேயன்றிக் கிரியாசத்தி யில்லை யென்றும், சாத்திரத்திற்கூறுமுறையேதீக்கை பெற்று, சாத்திரத்திற்கூறியபடியே எலும் பணிகள் முதலிய சரியைகளே யநுட்டிப்போர் முத்தராவரென்றும், இத்தமுத்தருக்குக்கேவல ஞாந சத்திமாத்திரமேயுண்டு. ஞாநக்கிரியை யென்னு மிரண்டுசத்தியும், பரமேசுரனெருவ னுக்கேயென்றும் கூறப்படும். (சி. பி. கச.) 2. சைவத்தினுட்சமயங்களாறனு ளொன்று.

மகாவிரதன்—சிவன் என்புமாலைதரித்த மூர்த்தியாயருள்வரென்பவன். (கந். நவ. நு.) இவன் அகப்புறச்சமயிகளிலொருவன்.

மகாவிருக்கம்—சதுரக்கள்ளி. (மூலிகை.)

மகாவிருத்தி—சேம்பு. (வைத்தியபரி.)

மகாவீரியன்—1. காலதத்துவத்திருக்கு மோருருத்திரர். (வி-ணி.) 2. வித்தியாதத்து வத்திருக்கு மாசாரியதசகரிலொருவர். (வி-ணி.)

மகாவைரவன்—சிவலோக கோட்டைவாச லுட் பூருவவாசலில் பிராம்மியென்னுஞ் சத்தி சமேதராய் அமிசவாகநத்தில் தனக்குச்சமான மானபடர் ஏழுகோடியர்சூழவருபவன். (வி-ணி. உசo.)

மகான்—1. அறுவகையாகசம்பந்தங்களி லிரண்டாவது; அது: அநந்தேசுரர் சீகண்ட ருக்குச்சொல்லிய ஆகமசம்பந்தம். (சி-லி. சரி. உ.) 2. ஆதிருட்டி. (கூர்மபு. பல்வகை. எ.) 3. தூலரூபி. (சி-லி. ஞாநபா. உ.) 4. பிரகிருதி

மாயை. (சி. சி. க: ககூ. சிவாக்.) 5. புத்திதத்துவம். (உ-ம்.) "மகத்துவம்"பார்.

மகி—பூமி. (சூ. நிக. நி: அ.)

மகிகை-மூடுபனி. (உ-ம்.)வந்துழிக்காண்க.

மகிடம்-எருமைக்கடா. (உ-ம்.) "புனல்வால் கடோயமகிடம்புக" (அரிச்ச. நாட். உச.)

மகிடமர்த்தினி — துர்க்கை, மகிடாசுரனைச் சங்கரித்தவள். (வழக்.)

மகிடவாகநன்—யமன். (சூ. நிக. க: கூo.)

மகிடாதரன்—ஓரசுரன்; இவனைத்துர்க்கை சங்கரித்தாள். (வழக்.)

மகிடித்தல்—மக்களித்தல். (வழக்.)

மகிணன்—மகிழ்நன். (உ-ம்.) "வல்லழலிறைத்ததுமகிணன்மேனிமேல்" (பிரமோத். பஞ்சா. உசு.)

மகிந்தகம்—1. எலி. 2. கீரி. 1, 2-(உ-ம்.) வந்துழிக்காண்க.

மகிபதி-அரசன், உலகிற்குநாயகன்.(வழக்.)

மகிபன்—மகிபதி. (வழக்.)

மகிபாலன்—மகிபன்.

மகிமா — அட்டசித்தியிலொன்று; அது: மிகப்பருத்தல். (உ-ம்.) "உவரிஞாலமுதன்மேலென் - றறையுஞ்சிவாந்தமாரூறமூள்ளும் புறவுமகலாதே - நிறையும்பெருமைதனே பன்றே மகிமாவென்னும்நிரம்பியநூல்" (திருவி. அட்டமா. உகூ.)

மகிமை—பெருமை. (உ-ம்.) "ஆலயத்தினின்மகிமைமேதஞ்சொலவரியா" (சிவரக. மேரு. எ.)

மகிழ்—1. ஒரு மரம். (உ-ம்.) "மருது"பார். 2. கள். (உ-ம்.) "மலழையெனமருளுமகிழ்செய்மாடத்து" (பொருந. அச.) [ஆகுபெயர்.] 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. மகிழ்ச்சி. (உ-ம்.) "மகதியாழ்முரிவன்மகிழ்சிறந்தீங்கிவைபுகல்வான்" (கூர்மபு. பிரகிருதி. க.)

மகிழ்ச்சி—1. இன்பம். (சூ. நிக. அ: கூஅ.) 2. களிப்பு, சந்தோடம். (உ-ம்.) "மகமகிழ்ச்சியிற்றன்மைமறந்தனன்" (சிவரக. மேரு. சகூ.)

மகிழ்தல்—களித்தல், சந்தோஷித்தல். (வழக்.)

மகிழ்ந்து—1. உண்டி. (உ-ம்.) "வாங்கமைப் பழுங்யச்சறன்மகிழ்ந்து" (புறநா. கஉக.) 2. விரும்பி. (சிந்தா.)

மகிழ்நன்—1. கணவன். (உ-ம்.) "வசுக்களென்றருந்திமகிழ்நனெண்ணினனே"(பாரத. குருகுல. சுறு.) 2. மருதநிலத்தலைவன். (சூ. நிக. உ: ஏக.)

மகிழம்—மகிழமரம். (பரிபாடல்.)

மகிழ்வு—1. களிப்பு. (உ-ம்.) "இன்பமுமகிழ்வுமெங்கும்"(பெரியபு. நாட்டு. ஙக.உரை.) 2. சந்தோஷம். (உ-ம்.) "வந்தினிதாடப்பெற்றமாந்தர்போன்மகிழ்வினீடி" (சேதுபு. சேதுச். சு.)

மகிளம்—பூவிதழ். (வைத்தியபரி.)

மகிளி—ஒருகீரை. (வழக்.)

மகிளித்தல்—மக்களித்தல். (வழக்.)

மகீநகம்-சாபரயோகி. (உ-ம்.) "மாச்சினைத்தடஞ்சந்தகமகீருகநிழலில்" (பாரத.நச்சு.சசு.)

மகீலதை — நாங்கூழ். (உ-ம்.) வந்துழிக்காண்க.

மகுடா — தாணுவாஷ்டகரிலொருவன். (வி-ணி.)

மகுடம் — 1. சதாசிவமூர்த்தியுடைய தற்புருடமுகத்தினின்றுற்பவித்த ஐந்தாகமங்களிலொன்று; இதற்குக்கிரந்தசங்கியை இலட்சம். (த. நி. போ. கசுo.) 2 பாட்டின்கடையின்பாதியின்மேல் வருவது. (வழக்.) 3. மத்தளமுதலியவற்றின் விளிம்பு. (வழக்குண்டுபோலும்.) 4. மூடி. (உ-ம்.) "நெடுநாளிற்றேடியமகுடம்" (சிவரக. தேவியிமய. சு.)

மகுடயோகம் — ஐந்தாமிடத்திற் குருவும் ஒன்பதாமிடத்திற் பஞ்சமாதிபதியும் பத்தாமிடத்திற் சனியும் இருக்கவரும்யோகம். (சோதிடக்கடல்.)

மகுடவரித்தனர்—பரம்பரையாக முடியணிந்த அரசர். (பா. வெ. கூக.)

மகுடாதிபதி-கேடதாரியானவரசன். (வழக்.)

மகுலம்—மகிழமரம். (வைத்தியபரி.)

மகூலம்—மலர்த்தூள். (வைத்தியபரி.)

மகேச்சுரதத்துவம்-சதாசிவதத்துவத்தில் கிரியையேறி ஞர்நங்குறைந்து இச்சாசத்திரூபியாயிருக்குந் தத்துவம்; அஃது: ஈசுரதத்துவம், அதிகாரதத்துவம் சகளதத்துவம் பிரவர்த்திதத்துவம் எனவும் பெயர்பெறும். (கூர்மபு. வருணு. உ. உரை.)

மகேச்சுரன் — புருடதத்துவத்தையும் பிரகிருதித்தத்துவத்தையும் பிரேரிப்பவராகிய அநந்தேசுரர்; இவர்: "அவ்யக்தமாய் அழிவின்றிப் புனிதமாய் அநந்தமாய் யார்க்குந்தெரிவதாகியெங்குணமுமாய்ச் சிறப்புடனெவற்றினுநிறைந்த கருதரும் பொருளென்று சொல்லப்படுவர்" (கூர்மபு. பிரகிரு. நி. உரை) (உ-ம்.) "எவ்வுயிர்க்கும்வித்தாகுமீசனேமகேசுரனும், செவ்விதருமவனிரண்டாமுருவண்டஞ்செறிந்

தனிற்-றிவ்வியத்தின்முதலுதித்ததேவன் மூன்றுமுருவும், அவ்விறைநான்முகமுறுதலாங்க வனுகாமுருவம்" (கூர்மபு. பிரகிரு. உக.) [தேவர்களெல்லாரிலும் மகத்துவமுடையவராயிருத்தலினல் வந்தபெயர். (கூர்மபு. பிரகிரு. உச.)]

மகேச்சுவரி—பார்வதி, சத்தமாதர்களிலொருத்தி (அபிதாநசி.)

மகேசம்—அப்பிரகம். (வைத்தியபரி.)

மகேசன்—அதிசார அவத்தையிற் பிரவிருத்தித் தொழிலியற்றி உருவமென்னுந் தடத்தக் குறியே குறியாகவுடையவர். (உ-ம்.) "வேதநாயகசங்கரசீவபர்க்கவீமசந்திரவேணி-யாதிருத்ர மகேசவீசாகநின்னருள்புரிவாயென்பாள்" (சிவரக. தேவிநாட்டியம். நி.)

மகேசுரபேதவிக்கிரகங்கள்—கல்யாணசுந்தரர்முதலிய இருபத்தைந்து கேவலமூகூர்த்தங்கள். (த. பி. உ0.)

மகேசுரம்—ஈசுரத்துவம். கன்மசாதாக்கிய ரென்னுஞ் சதாசிவநாயனூர் இச்சையுடன் ஆத்மாநுக்கிரகநிமித்தமாகப் பஞ்சகிருத்தியத்தைத் திருவுளத்தடைத்து அதுக்கிரகிக்குமவதரம். (சதாசிவரூபம்.) 2. சத்திகாரியமான வைந்தவத்தை நடத்தும் வடிவுடையது.

மகேசுரன்—சிவபெருமான் உருவத்திருமேனிகொள்ளும்பொழுது பெறும்பெயர். (சைவவி. ச.)

மகேசுரியபாவனை—சிவப்பொருளாயவ்வியத்தவஸ்துவாகத் தியாநித்தல். (கூர்ம பு. வருணு. சாரூ. உரை.)

மகேசுவரம்-மகேசுரம். (சிவப்பிரகாசக்கட்.)

மகேசுவரர்—அதிகாரசிவன். (சிவபரட்.உச.)

மகேசுவரன்—சாதாக்கியத்தில்பத்திலொரு அம்சமாகத்தோன்றி அசுத்தமாயாகிருத்தியதைப் பண்ணுபவர். (சி. சி. உ: எசு. சிவாக்.)

மகேசுவரி—மகேசுவரற்கானசத்தி. (சி. சி. உ: எடு. சிவா.)

மகேசை—மகேசுவரி. (சி. பி)

மகேந்திரகதலி—ஒருவாழை.(வைத்தியபரி)

மகேந்திரசாலம்—ஒரு மாயாவித்தை; அது: கலைஞாந மறுபத்துநான்கினொன்று. (கழக)

மகேந்திரநகரி—அமராவதி, இந்திரநகர்.

மகேந்திரபுரி—தென்சமுத்திரமத்தியிலிருந்த சூரனுடைய நகரம். (அபிதானகோ.)

மகேந்திரம்—1. ஒரு நகரம்; அது: சூரநகர். (கந்தபு. மகேந்திரஞ்செல். க.) 2. ஒரு மலை. (பொருட். நிகண்டு) 3. பிரதிட்டாகலையில் வாயுதத்துவத்திலிருக்கு மெட்டுப் புவநங்களுளொன்று. (சி-லி. கிரி. உக. தாற்.)

மகேந்திரி—காவல்வைரவன்சத்தி. (சி-லி. கிரி. உசு: தாற்.)

மகேந்திரை—ஒரு நதி. (உ-ம்.) வந்துழிக் காண்க.

மகோததி—கடல். (உ-ம்.) "மகோததியேழுந் தோற்ற" (தட்சணகைலாசபு. புவனேற். கo.)

மகோதயம்—ஒரு புண்ணியகாலம்; அது: தைமாசத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையுந் திருவோணநட்சத்திரமும் விதிபாதயோகமுங்கூடிய காலம். (சைவவி. நிறு)

மகோதரம்—1. ஒரு நோகம், நீர்நோய்; அது: முதலில் வயிற்றை விகாரப்படுத்திப் பின் சகல துர்க்குணங்களையும் பிறப்பிக்கும் (உ-ம்) "மகோதரஞ்சோபைபாண்டுகுன்மக்கட்டியும் போம்" (தைல. தைலவ. கூஉ) 2. பெருவயிறு. (வழக்.)

மகோதரன்—இராவணன்மந்திரிகளிலொருவன். (அபிதாநசி.)

மகோந்நதம்—பனைமரம். (வைத்தியபரி.)

மகோபநிடதம்—உபநிடதமுப்பத்தி ரண்டிலொன்று.

மகோற்கடர்—விநாயகமூர்த்தங்களிலொன்று. (அபிதாநசி.)

மகோற்சவம்—பெரியதிருவிழா. (வழக்.)

மகோற்பலம்—தாமரை. (மூலிகை.)

மகோன்மதம்—மருள்வெறி. (வழக்.)

மகௌகக்கிரமம்—குருபரம்பரைக்கிரமமிருவகையுளொன்று. (சி-லி. சரி. க. அவதாரிகை.)

மகௌகமுறை—வேறுவேறு வகுக்கப்பட்ட பலாத்மாக்களைத் திரட்டிக்கூறுமுறை.(சிவஞாநபா)

மகௌடதம்—1. சுக்கு. 2. திப்பிலி. 3. வசம்பு. (1, 2, 3-வைத்தியபரி.)

மகௌடதி—நன்மருந்து. (வைத்தியபரி.)

மங்கணசித்தர்—ஒரு பெரிய சித்தர் (அபிதாநசி.)

மங்கலம்பம்—மங்கலியம். (உ-ம்.) "சசிதேவி மங்கல்யக்கந்தரட்சா" (கந்தர. உக.)

மங்கல்—1. ஒளியின்மை. (வழக்.) 2. கெடுதல். (உ-ம்.) "தூதர்தமையேபிடித்து மங்க வடித்து" (சிவரக. கத்தரி. பூ. உஅ.)

மங்கல்லியம்—1. சந்தனம். (வைத்தியபரி.) 2. தயிர். (உ-ம்.) "மோதகமிட்டலிபுராதனத் தொன்றேனுமூரிமங்கல்லியத்தான்" (தைல. தைலவ. அக.)

மங்கலகிரி—திருமால் நரசிங்கமூர்த்தியாயிருக்கிற அகோபலம், மங்கலகிரி, சுவாலை என்னு மூன்று தலங்களிலொன்று. (அபிதானகோ.)

மங்கலத்திருநாள்–புத்தன் அவதாரதினத் திற் புத்தர்கொண்டாடப்பட்டதிருநாள். (அபி (தாகசி).

மங்கலத்துகில்—வெண்டுகில். (சிந்தா.)

மங்கலநாயகியம்மை–கும்பகோணத் தால யத்திருக்குத்தேவியார் பெயர். (அபிதாகோ.)

மங்கலநாண்—கழுத்திலணியுமங்கலசூத்தி ரம். (உ-ம்.) "ஒன்றியமங்கலகாணினெளிபோ ற்றி" (கோயிற்பு பாயிர. நி.)

மங்கலப்பாடகர்—கடிகைமாக்கள், சோப நம்பாடுவோர். (சூ. நிக. உ: சஎ.)

மங்கலப்பிரதை–மஞ்சள். (வைத்தியபரி.)

மங்கலம்—1. சிறப்பு. (உ - ம்.) "சைவமங் கலவேதியத்தாபன்"(திருவிளை. விருத்த. கங.) 2. சுபம். (உ-ம்.) "மங்கலந்திகழ்மனையெலாம்" (பாரத. கிருட்டிண. சுஎ.) 3. சோபநம்.(உ-ம்.) "தெங்குமங்கலவரிசைகள்" (திருவிளை.விருத்த கங.) 4. மங்கிலியம். (உ - ம்.) "தோற்றருமங் கலம்புலையன்காணவும்போதுவதோ" (அரிச்ச. மயாந. சச.) 5. வாழ்த்து. (வழக்.) மங்கலம்பா தெல். 6. விவாகச்சடங்கு. (உ - ம்.) "தந்தமர் மங்கலங்காண்பான்"(திருவிளை. விருத்த. கநி.) (அட்டமங்கலமுமாம். அபிதாநசி.)

மங்கலமொழி—1 செய்யுட்களின் முதற் கவியின் முதலில்வரவேண்டு மங்கலச்சொல்; அவை: அமிழ்தம், ஆபரணம், உலகம், எழுத்து, கங்கை, கடல், சீர், சொல், திரு, தேர், நிலம், நீர், பரி, பரிதி, புகழ், புயல், பூ, பொன், மண், மதி, மலை, யானை முதலியன. (இலக்கணவி. எஎச. உரை.)

மங்கலவண்ணி—வெள்ளணி. (சிந்தா.)

மங்கலவள்ளை—உயர்குலத்துதித்தமடவர லெண்ணபாவொன்பதனுல் வகுப்புறப்பாடுதல். (உ - ம்.) "ஒன்பதுவெண்பாவகுப்பாலுயர்குல மங்கையர்ப்பாடுதல்மங்கலவள்ளை"(இலக்கண வி. அஉஅ.)

மங்கலவாரம்—1. செவ்வாய்க்கிழமை. 2. நல்லநாள். (1, 2-ம்.)

மங்கலவாழ்த்து–இடையூறுநீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவது; இது: வாழ்த்தும், வணக்கமும், நுதலிய பொருளுரைத்தலுமென மூவகைப்படும். (சிவஞானசித்தியார் முதலிய நூல்களினுரைமுகத்திற் காண்க.)

மங்கலவெள்ளை—சந்தனம். (மணிமேக.)

மங்கலன்—செவ்வாய். (சூ. நிக. க: சுo.)

மங்கலி—1. நாவிதன். (சூ. நிகண்டிற் சி மங்கலியென்றூர், பிங்கலநிகண்டி மங்கலிய னென்றூர். 2. மங்கிலியதாரி. (வழக்.)

மங்கலியகம்—சிறுகடலை. (உ-ம்.) வந்து ழிக்காண்க.

மங்கலியம்—தாலி, மங்கலநாண். அoச.)

மங்கலியன்—நாவிதன். (பிங்கல. அoச.)

மங்கலை—1. இலக்குமி. 2. உமை. (உ-ம்.) சௌந்தரியல-தருணமங்கலையுனதுசிந்தையென்னு முதற்குறிப்புள்ளகவி. 3. சுமங்கலி. (1, 3-வழக்.)

மங்களகௌசிகம்—ஒரு பண்ணென்றும், ஓரிராகமென்றுங்கூறுவர்.

மங்களநாயகி — திருமங்கலக்குடி, திருக் கண்டியூர், திருநல்லம், திருவாரூர், திருவிடும் பாவனம், திருப்பரிதிநியமம் என்னுந் தலங்களி லெழுந்தருளியிருக்கிற தேவியார்பெயர். (அபி தாநகோ.)

மங்களப்பாடகர்–மங்கலப்பாடகர். (வழக்.)

மங்களம்—மங்கலம். (வழக்.)

மங்களாசாசனத்திரயம் — மங்களவழிபாடு மூன்று; அவை: வாழ்த்து, நமஸ்காரம், வஸ்து நிர்த்தேசம். (வி-ணி. ககூ.)

மங்களாசாசனை–மங்களவழிபாடு, தற்சிறப் புப்பாயிரமென்பர். (அபிதாநசி.)

மங்களை–1. உமை. (உ-ம்.) "சர்வாணி"பார். பார்வதிதேவியின்றேழியரிலொருத்தி. (அபி தாநசி.)

மங்காமைகாத்தான்–ஒருவகைநெல். வழக் குண்டுபோலும்.

மங்கிணி—மிக்கமந்தன். (வழக்.)

மங்கிலம்—காட்டாக்கினி.

மங்கிலியம்—மங்கலியம். (வழக்.)

மங்குங்காலம் — தன்புறுகாலம். (வழக்.) மங்குங்காலமாக்காய்க்கும்.

மங்குசநி—முதன்முறைவரு மேழரைநாட் டுச்சனி. (வழக்குண்டுபோலும்.)

மங்குதல்–1. கெடுதல். (இராமா. அரசியற் ப. உ.) 2. மழுங்கல். (வழக்.)

மங்குல்—1. ஆகாயம். 2. இருள். (உ-ம்.) "மங்குன்மாப்புகை" (புறநா. கoங.) 3. திக்கு. (உ - ம்.) "மங்குல்வானத்துத்திங்களேய்க்கும்" (பெரும்பா. சஅo.) 4. மேகம். (உ-ம்.) "மங்குல் சூழ்விமானமுன்றில்" (பாரத. வாரணு. சுக.)

மங்குல்வாணி—அசரீரி. (உ - ம்) "மங்குல் வாணியுரித்தியமயமேலவருத்தந்தணி மனத் தில்" (அருணகிரிபு. அருந்தவ. ககூஉ.)

மங்குலம்—மங்குளம்.

மங்குலி—இந்திரன். (உ - ம்.) "அமிர்தங் கடைந்தவனஞ்சுமங்குலி" (திருப்பு. நிருங.) மேகத்தையுடையவன்.

மங்குளம்—1. நிறமழுக்கம். 2. பார்வைமந் தம். 3. மந்தாரம். (1, 2, 3-வழக்.)

மங்கை–1. இரசம். 2. கற்முழை. 3. பெண். (உ–ம்.) "ஆமெங்கையரனந்தர்" (அரிச்ச. காசி கா. கஉ.) 4. பெண்களுக்குரியபருவ மேழனு ளொன்று. (சூ. நிக. உ: நிஅ.) (1, 2-வைத் தியபரி.)

மங்கைதீர்க்கம்–மணவாட்டிநாளுக்கு மண வாளனுள் பதின்மூன்றுக்கு மேற்பட்ட நாளா யிருத்தல்; இது: விவாகப்பொருத்தத்து ளொன் று.

மங்கைநாயகி—அகத்தியான்பள்ளி, விசய மங்கையிற் கோயில்கொண்டிருக்குந் தேவியார் பெயர். (அபிதாநகோ.)

மங்கைபாகன் — மங்கைபங்காளன். (சூ. நிக. க: சு.)

மங்கையர்க்கரசியார்–1. கூன்பாண்டியன் மனைவி. 2. திருவேஙிகுடி யாலபத்திருக்குந் தேவியார்பெயர். (அபிதாநகோ.)

மச்சகந்தி –வியாசன்றாய். (பாரத.)

மச்சதேசம்—விராடபுரம். (பாரத.)

மச்சம்–1. சிவபுராணம் பத்தனுளொன்று; அது: சம்ஸ்கிருதபாஷையிலே பதிஞலாயிரங் கிரந்தமுடையதாய் விஷ்ணுவினது மீனவதார மான்மியமும் அவ் விஷ்ணு சலப்பிரளயகாலத் திலே மனுவையும் பிறவற்றையும் ஓர்பேழையி லுள்ளே வைத்து ரட்சித்ததையும் பிரமதிருட் டியும் கிரிபுரத்தசுரர் சங்காரமும் தாரகாசுர னுக்குந் தேவர்களுக்கும் இடைநிகழ்ந்த யுத்த மும் பார்ப்பதியம்மையார் திருக்கல்யாணமும் கந்தசுவாமியின் அவதாரமும் விஷ்ணு அவதா ரமுமாகிய கதைகளே யுணர்த்துவது. (கந். நவ. உஎ.) 2. தேயமைம்பத்தாறிலொன்று. (பொ ருட். நிகண்டு.) 3. பங்குனிமாதம். (உ–ம்.) "பயமார்கடமச்சத்திற்குந்திரிக்குட்பகர் திங் களின்" (தைல. பாயிர. நிசை.) 4. மாற்றுநிதான மறிய வெட்டிவைத்திருக்கும் பதிற் பொன். (உ–ம்.) "வன்மெருண்டர்மச்சம்வெட்டிக்கைக் கொண்டு"(பெரியபு.எயர்.கoகூ.)5.மீன்.(வழக்.)

மச்சகந்தம்–ஸ்நானம். (சி. சி. அ: கஉ. சிவாக்.)

மச்சகழநி—ஒரு சித்தர். (பொருட்-நிகண்டு.)

மச்சயந்திரம்—ஒரு யந்திரம். இதன் விவ ரம், (அபிதாநசிந்தாமணியிற்பார்.)

மச்சரம்–ஒருவன் தன்னினுமதிக பாக்கிய வந்தனுயிருந்தால் அவன் செல்வத்தைப்பார்க் கச் சகிக்காமல்வருகிற சித்தவிருத்தி.(வாசுதே. கூஎ.) 2. பொறுமை. (உ–ம்.) "மச்சரமில்லாத வர்க்குமுந்நூலின்மார்பருக்குமகத்தாஞ் செல் வம்மெச்சுபதி" (சிவரக. கணபதிவந்தனை.கசு.)

மச்சாவதாரம்–மீனவதாரம்; இது: திருமால் தசாவதாரத்துளொன்று. (சூ. நிக. கஉ: கoசு.)

மச்சான்—மைத்துநன். (வழக்.)

மச்சி—பூனைக்காலி. (வைத்தியபரி.)

மச்சிகை—மோர். (உ–ம்.) "மச்சமச்சமச் சிகையெண்மாங்காய்நீக்கே" (தைல. தைலவ. கஙகூ.) [தெலுங்கு.]

மச்சிப்பாசி — பொன்னுங்காணி. (வைத் தியபரி.)

மச்சியம்—1. கடுகுரோகிணி. (மலையக.) 2. மச்சம். (சி. சி. உ: அக. மறை.)

மச்சியாச்சி— } பொன்னுங்காணி. (மலை
மச்சியாத்தி— } யக.)

மச்சு–1. குற்றம். (உ–ம்.) வந்துழிக்காண்க. 2. பூனைக்காலி. (மலையக.) 3. மேனிலை. (வழக்.)

மச்சுப்போதல்—மக்கிப்போதல். (வழக்.)

மச்சுனமை—மைத்துனவுரிமை. (வழக்.)

மச்சுனன்—மைத்துனன். (வழக்.)

மச்சுனி—மைத்துனி. (வழக்.)

மச்சேந்திரநாதர்–நவநாதசித்தரிலொருவர். (சி. பி. கை. கடு.) பொருட்டொகை நிகண்டு சித்தரென்பதின்மர் பார்.

மசிசை–1.பழத்தின்சதை. (உ–ம்.) துன்றிய வதன்பான்மச்சைக்களவில்லை"(ஞாநவா. வில்வ பல. கஉ.) 2. மறு. (வழக்.) 3. மீனம்பர்; இது: கடலிலுண்டாவது. 4. மூளை. (சி. சி. பர. லோ காயதமதமறுதலை.)

மசக்கல்—கசக்குதல். (வழக்.)

மசக்குதல்—1. கலக்குதல். 2. மயக்குதல். (1, 2-வழக்.)

மசக்கை—கருப்பமசக்கு. (வழக்.)

மசக்கைக்காரி—கருப்பஸ்திரி. (வழக்.)

மசகம்—1. கொசுகு. (சூ. நிக. கூ: சுசு.) 2. மயக்கம். (வழக்.)

மசகவரி—கொசுகுவலை. (சிந்தா. காந்தருவ தத்தை. கூசசு. உரை.)

மசகி—அத்திமரம். (வைத்தியபரி.)

மசது — 1. கடலிற்றிசைதெரியாதவிடம். (வழக்குண்டுபோலும்.) 2. வண்டி யச்சுக்கிடு மெண்ணெய்மைக்குழம்பு. (வழக்.)

மசதுதல்—மயங்குதல். (வழக்.)

மசங்குதல்—1. கசங்கல். 2. மயங்கல். (1, 2-வழக்.)

மசம்–1. கொசுகு. மசகமென்பது மசமென வந்ததென்க. 2. கோபம். 3. தொனி. (1, 2-(உ–ம்.) வந்துழிக்காண்க.

மசமசத்தல்– } தினவுகொள்ளல். (வழக்.)
மசமசப்பு— }

மசமசெனல்—மசமசத்தல். (வழக்.)

மசரதம்—பேய்த்தேர். (உ–ம்.)"மசரதமனை யவர்வரமும்வாழ்வும்" (இரர்மா. திருவவதார.

உக.) மசர் பேய்க்கொருநாமமாகக்கூறுவர்.

மசனம்—வருத்தல். (வழக்.)

மசாகம்—குருவி. (உ-ம்.) வந்துழிக்காண்க

மசால்—தீவர்த்தி. [அரபி.]

மசி—தெரிநிலவினைப்பகுதி.

மசிகம்—பாம்பளை. (உ-ம்) வந்துழிக்காண்க.

மசித்தல்—நசித்துக்குழைத்தல். (வழக்.)

மசிதல்—நசித்துக்குழைதல். (உ-ம்.) அப் பங்காமசியஇடி." (தைல. தைலவ. கசுடு.)

மசியல்—மசிக்கப்பட்டது. (வழக்.)

மசிவு—மசிதல். உ-தொழிற்பெயர்விகுதி.

மசுக்காம்—மூங்கில். (மலையக.)

மசுரம்—கடலை. (உ-ம்.) வந்துழிக்காண்க.

மதூரம்—மூட்டுப்பூச்சி. (உ-ம்.) வந்துழிக் காண்க.

மதூரி — 1. சின்னமுத்துப்போலுண்டாவ தொரு நோய். 2. தருக்கர்கல்லறை. (1, 2-வழக்.)

மதூரிகம்—மசூரி.

மஞ்சகம்—1. கட்டில். 2. கொக்கு. (வைத் தியபரி.)

மஞ்சட்கடம்பு—ஒரு மரம். (வழக்.)

மஞ்சட்கல்—ஒரு கல். (வழக்.)

மஞ்சட்காப்பு—மஞ்சட்பொடிச்சாந்து. (வழக்.) தேவியின் அபிடேகதிரவியம்.

மஞ்சட்காமாலை—ஒரு நோய். (வழக்.)

மஞ்சட்காளான்—ஒருவகைக்காளான். (வழக்.)

மஞ்சட்செவ்வந்தி—ஒரு செவ்வந்தி. (வழக்.)

மஞ்சணத்தி— } மஞ்சணுணு. (வைத்திய
மஞ்சணுறி— } பரிபா.)

மஞ்சணை — எண்ணெக்குங்குமம். (வைத் தியபரி.)

மஞ்சநசீசாலை — நீராடுந்தானம். (உ-ம்.) "மாலை"பார். மஞ்சநம்-மூழ்குதல்.

மஞ்சநி —வேலிப்பருத்தி (வைத்தியபரி.)

மஞ்சம்—1. ஆசனத்திலிவருதற்குக் கீழிட்ட படி. (உ-ம்.) "மஞ்சமேறிமணித்தவிசேறினர்" (பாரத. குருகுல. கஉ0.) 2. கட்டில். 3. கொம் மட்டிமாதளை. (வைத்தியபரி.)

மஞ்சம்புல்—ஒரு புல். (வழக்.)

மஞ்சரி — 1. ஒரு பிரபந்தம். (வழக்.) 2. தளிர். (சூ. நிக. கக: ஞகரவெ. கூ.) 3. நாயுருவி. (மலையக.) 4. பூங்கொத்து. (உ-ம்.) "மஞ்சரிப் படலநீங்காவண்டினம்புதுநீராடும்" (சேதுபு. திருநாட். உசுடு.) 5. பூமாலை. 6. முத்து. (5, 6-வைத்தியபரி.)

மஞ்சரிநுபிணி—ஐம்பத்தோருருத்திரசத்தி களி லொருத்தி. (வி-ணி.)

மஞ்சரீகம் — மிருதுவானமருக்கொழுந்து. (வைத்தியபரி.)

மஞ்சலிக்காள் — உருத்திரசடை. (வைத் தியபரி.)

மஞ்சள்—1. அரிசனம்; அது: கஸ்தூரிமஞ் சள், கொச்சிமஞ்சள், கறிமஞ்சள், கிழங்குமஞ் சள், விரலிமஞ்சள், மரமஞ்சள்எனப் பலதிறப் படும். (உ-ம்.) "திரியட்சி"பார். 2. குருவி. 3. தேசிப்பழம். 4. நாயுருவி. மஞ்சள் தேவியின் அபிடேகதிரவியமாதலால், சுமங்கலிகள் கண வர் தீர்க்காயுள்பெற இறைவியைவேண்டியணி வர். காரணுசமத்திற் கூறியிருக்கின்றது. (3, 4, (வைத்தியபரி.)

மஞ்சளலரி—ஓரலரி. (வழக்)

மஞ்சனிளங்கலையன்—ஒருவிதநெல். வழக் குண்டுபோலும்.

மஞ்சன்—மகன். போலி.

மஞ்சா — 1. இலக்கள்ளி. (மலையக.) 2 கட்டில். (சி. சி. ச: உஅ. சிவாக்.)

மஞ்சாக்கிழங்கு—தேசிப்பழம். (வைத்தியபரி.)

மஞ்சாடி—1. இரண்டுகுன்றிமணிகொண்ட நிறை. 2. ஒரு மரம். 3. செவ்வள்ளிக்கொடி. 4. நூணுவேர்ப்பட்டை. (3, 4-வைத்தியபரி.)

மஞ்சாரி—கஞ்சாங்கோரை. (மலையக.)

மஞ்சாலி—வயிரநிறுக்குநிறை. [தெலுகு.]

மஞ்சி—1. படகு. (வழக்குண்டுபோலும்.) 2. பேழை. 3. மரல்நார். (1, 3-வழக்.)

மஞ்சிகம் — 1. தாளிக்கொடி. (மலையக.) 2. பெட்டி. (பிங்கல. கஎநுசு.)

மஞ்சிகனீ-காவிதன்.(உ-ம்.)"குணுங்கர்"பார்.

மஞ்சிகை—1. குண்டலம். (பிங்கல.கஎசை.) (காதணி என்பர். சிந்தா.) 2. கையாந்தகரை. 3. தாளிக்கொடி. 4. பேழை. (சூ. நிக. எ:ஙசு.) (2, 3-மலையக.)

மஞ்சிட்டம்—மஞ்சாடி. (மலையக.)

மஞ்சிட்டி—1. ஒரு செடி. 2. நூணுவேர்ப் பட்டை. (வைத்தியபரி.)

மஞ்சிடலை— } வாழை. (மலையக.)
மஞ்சிபலை— }

மஞ்சிதேவர் — இவர் காசியிலிருந்தபெரு மாள் விக்கிரகத்தை யெழுந்துசென்று எல்லா ருங்காண விசுவநாதலிங்கத்தை வணங்கும்படி செய்தவர், அதுகண்டு அங்கிருந்த வைணவர் கள் சிவதூஷணஞ்செய்யாதடங்கினர். (அபி தானகோ.)

மஞ்சிமம்—அழகு. (உ-ம்.) வந்துழிக்காண்க.

மஞ்சிரம்—காலாழி. (உ-ம்.)வந்துழிக்காண்க.

மஞ்சில் — பழையவரம்பின்வழி. (உ-ம்.) வந்துழிக்காண்க.

மஞ்சிறு —கையாந்தகரை. (மலையக.)
மஞ்சீரகம்–கழற்சிக்கொடி. (வைத்தியபரி.)
மஞ்சு —1. அழகு. 2. ஆபரணம். (சூ. நிக. கக: ஞகரவெ. உ.) 3. இளமை. 4. பனி. 5. மேகம். (உ - ம்.) "மஞ்சலம்பிடியேறென்ன" (அரிச்ச. சூழ். உகூ.) வெண்மேகம் என்பர். (சிந்தா.) 6. யானைமூதுகு. 7. வலி. (1, 3, 4, 6, 7-பிங்கல. ஈகூகக.)
மஞ்சுகம் — கொக்கு. (உ - ம்.) வந்துழிக் காண்க.
மஞ்சுகேசனி — ஒரு தேவதாகணிகஸ்திரி. (வி-ணி. உகூக.)
மஞ்சுவநீதம்— இமயத்தைக் குத்தரதிசையி லுள்ள ஒருமலை, இதிலே ஒரு பெரிய தடாகத் தில், பஞ்சவர்ணமுள்ள தாமரைகளுண்டாகின் றன. (அபிதானகோ.)
மஞ்சுளம் — அழகு, மிருது. (திருவிளை. உக்கிரகுமார. கூடு.)
மஞ்சூரம்—கடலை. (மலையக.)
மஞ்ஞை—மயில். (சூ. நிக. கூ: டு0.)
மஞ்ஞையூர்த்து–மயிலிறகு. (வைத்தியபரி.)
மஞ்ஞையூர்தி — கந்தசுவாமி. (சூ. நிக. க: உசா.)
மட்கல்–1. அழுக்கேறல். 2. ஒளிமழுங்கல். (1, 2-வழக்.)
மட்கலம்–மட்பாண்டம் (பெரிய. அரிவாட். கடு.)
மட்குகை — 1. மண்ணுற்செய்தகுகை. 2. மழுங்குதல். (1, 2-வழக்.)
மட்குதல்—மட்கல். (வழக்.)
மட்சிகம்—ஈ. (உ-ம்.) வந்துழிக்காண்க.
மட்சிகை—மட்சிகம்.
மட்டக்கோல்–மட்டங்கட்டுங்கோல்.(வழக்)
மட்டங்கட்டுதல்–சரியாய்நிறுத்தல். (வழக்.)
மட்டசீசுறு—ஒரு மீன். ஒரு குழூஉக்குறி.
மட்டசுத்தம்—மட்டம். (வழக்.)
மட்டத்தரம்—குறைந்ததரம். (வழக்.)
மட்டத்துருக்கி—ஒருவிதி.(சூ.நிக.எ.சுக.)
மட்டந்தட்டல்—அடக்கல். (வழக்.)
மட்டந்நட்டுதல்—மட்டந்தட்டல். (வழக்.)
மட்டப்பலகை—சமனநிரூவி. (வழக்.)
மட்டம்—1. எல்லை. (சூ. நிக. கக: டகரவெ. உஉ.) அம்-சாரியையாம்) 2. ஒப்புரவு, சமம். 3. ஓளவுகோல். 4. மிதம். 5. மூன்றொத்த டைய தாளம். (சிலப். அரங்கேற்று. கநிக. உரை.) 6. வாலக்குதிரை. (2, 3, 4. 6-வழக்.)
… மட்டலது–ஒருசருவி.(வழக்குண்டுபோலும்.)
… மட்டாயுதம்—வாள். (சூ. நிக. எ: கூ.)
மட்டி–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. பரும் படி. [தெலுகு.] 3. மட்டிக்காரை. 4. மதிகே டன். (3, 4-வழக்.)
மட்டிடுதல்—மட்டுச்செய்தல். (வழக்.)
மட்டித்தல்–1. பூசுதல். (உ-ம்.) "குங்குமஞ் சாந்தமிவைபலவுமட்டித்து" (திருவிளை.மூர்த் தி. உசா.) 2. மட்டுக்கட்டுதல். 3. மண்டலித்தல், வட்டமாக்கல். (2, 3 வழக்.)
மட்டிப்பால்– ஒருவகைச் சாம்பிராணி. (வைத்தியபரி.)
மட்டிப்பு—மட்டித்தல்.
மட்டியம்–சத்ததாளத்தொன்று. (பொருட்-நிகண்டி.)
மட்டிலை—பச்சிலை. (உ - ம்.) "மட்டிலைதக் காளி" (தைல. தைலவ. கசுடு.)
மட்டு—1. அளவு. (உ - ம்.) "மட்டிலாமட வார்" (அரிச்ச. நாட்டு. டு0) 2. உத்தேசம். (வழக்.) 3. எல்லை. (சூ. நிக. கக: டகரவெ. உஉ.) 4. கள். (உ-ம்.) "வெப்புடையமட்டுண்டு" (புற நா. உசா.) 5 காமபானம். (உ - ம்.) "மட்டுடை மண்மகளலர்ந்தபோதினுல்" (சிந்தா. நாமக. சுகூ.) 6. தேன். (உ-ம்.) "மட்டலம்புகோதை யார்" (திருவிளை. வலைய. கூசா.) 7. மதுவைக் குஞ்சாடி. (உ-ம்.) "மட்டுவாய்திறப்பவும்" (புற நா. ககஈ.)
மட்டுக்கட்டுதல்—தடைப்படுத்தல். (வழக்.)
மட்டை–1. உடற்குறை (சூ. நிக. உ: அசு.) 2. பனை முதலியவற்றின்மட்டை. (உ-ம்.) "மட் டைகளப்பங்காமசியவிடி" (தைல. தைலவ. கசுடு.) 3 மூட்டாள். (வழக்.)
மட்டைக்கோரை—ஒரு புல். (வழக்)
மட்டைத்தேள் — பின்னேத்தேள். (வைத் தியபரி.)
மட்பகை — 1. குயவன். 2. மட்கலத்தை யறுக்குமாயுதம். (உ-ம்.) "மட்பகையின்மாணத் தெறும்" (வள். அஅசு.)
மட்பகைஞர்–குயவர். (உ-ம்.) "மட்பகைஞர் திகிரியெனவருவினையின்வாய்ப்பட்டுமம்ம ரெ ய்தி" (கூர்மபு. திருக்கல். கசு.)
மட்பகைஞன்—குயவன். (சூ.நிக.உ:ஈஉஎ.)
மட்பனை—நிலப்பனை. (உ-ம்.) "மாதவனுந் திக்கந்தமட்பனையெருவைதொட்டி" (தைல. தைலவ. கூசா)
மடக்கடி— தந்திரம். (வழக்.)
மடக்கடிபண்ணல் — தந்திரம்பண்ணல். (வழக்.)
மடக்கம்—1. அடக்கம். 2. வளைவு. (1, 2-வழக்.)
மடக்கல் — 1. அடக்கல். 2. வளைத்தல். (1, 2-வழக்.)

மடக்கலங்காரம்–எழுத்துக்களின் கூட்டம் இடைவிட்டும் இடைவிடாதும் பின்னும்வந்து வேறு பொருடரும் அலங்காரம். (சண்டியல. சொல்லணியில்.)

மடக்கியல்—சுரிதகம். (யாப். காரி. செய். கo. உரை)

மடக்கிறல்—ஒருவகையிரும். (வழக்குண்டு போலும்.)

மடக்து—1. ஒரு பாத்திரம்; அது: பேரகல ஏன்ப. (தைலவ.) 2. ஓரலங்காரம், மடக்கலங் காரம். 3. திருப்பு. 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. மடிப்பு, வளைத்தல். 6. மாறிமாறிவருதல். (3, 5, 6 வழக்.)

மடக்குதல்–1. அடக்கல். 2. கீழ்ப்படுத்தல், வளைத்தல். 3. திருப்பல். 4. மாறிமாறிச்செய் தல். (1, 2, 3, 4-வழக்.)

மடக்குடக்கேனல்—ஈரடுக்கெகாலிக் குறிப்பு. (வழக்.)

மடக்குவரி—இறைமேலிறை. (வழக்.)

மடக்கோடி — பெண். அடையடுத்தவாகு பெயர்.

மடங்கடித்தல்—தோற்றோடச்செய்தல். (வழக்.)

மடங்க—இறைஞ்ச. (புறநா.)

மடங்கல்—1. அத்தி. 2. இடி. (உ - ம்.) "கோளிருந்தனவோமடங்கல்கொழுந்து வீட்ட னவோ" (அரிச்ச. இந்திர. உக.) 3. இயமன். 4. இறுதி. 5. இறைஞ்சல். (உ-ம்.) "இகழ்பாடு வோரொருத்தமடங்க" (புறநா. சo) 6. கருணை. 7. கீழ்ப்படிதல். (வழக்.) 8. சிங்கம். (உ-ம்.) "மடங்கலுங்கொண்டுமுடிற்றே" (அரிச்ச. நாட்டு. கஉ.) 9. தாளை. (வைத்தியபரி.) 10. மடங்குதல். 11. யாளி. 12. யுகமுடிவு. 13. வடவாமுகாக்கினி. (உ-ம்.) "ஆழிகிளாந்தெழும் மடங்கலும்" (அரிச்ச.நாட்டு.கஉ.) 14. வியாதி. (2, 3, 6, 8, 9. 10, 11, 12-பிங்கல. ககூகஉ.) ஒடுக்கமுமாம் என்றுர் பரிபாடலில்.

மடங்கற்கோடியோன்—வீமன். (சூ. நிக. க: கசு.)

மடங்து–1. அளவு, பங்கு. (உ-ம்.) "தோற்றி யிமெண்டத்தின்பதின்மடங்குபுனல் சூழம்" (கூர்மபு.பிரமோ.கக.) 2. தெரிநிலைவினைப்பகுதி.

மடங்துதல்–1. அமரல். 2. கீழ்ப்படிதல். 3. சாயல். 4. சணியல். 5. நிலைதளர்தல். (உ-ம்.) "மடங்காவன்பின்வள்ளலைப்பூசைசெய்வான்" (திருவிளை. நான்மா. கஅ) 6. மீளல். (1, 2, 3, 4, 6-வழக்.)

மடத்தனம்—அறியாமை. (வழக்.)

மடதி—ஆலங்கட்டி. (வைத்தியபரி.)

மடந்தை—1. பெண். (உ - ம்.) "மடந்தை யாய்வந்தமாலோன்" (கந்தபு. தக்கியுத். அகு.) மகளெனினுமாம். (புறநா.) 2. பெண்களுக் குரியபருவமேழனுளொன்று. (சூ. நிக. நிஅ.)

மடந்தைப்பருவம்—பெண்களுக்குரிய பதி னுறுவயசுப் பருவம். (சி. சி. அ: கஉ: மறை.)

மடநடை—மென்னடை. (சிந்தா.)

மடப்பம் — 1. ஐஞ்ஞூறு கிராமத்திற்குத் தலைக்கிராமம். (சூ. நிக. நி: கூஎ.) 2. மகளிர் குணங்களிலொன்று. (புறநா.)

மடம்—1. அழகு. (சிலப்.) 2. அறியாமை, அன்றியுங் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. (உ-ம்.)"மடப்பாவைதன்வரமுமென் வரமும்".(பாரத. திருட்டிண. ககூ.) 3. சத்திரம். (உ - ம்.) " திருமுதுகுன்றின்மடமுமியற்றி " (விருத்தாசல. கநி.) 4. முனிவர்வாசம். (சூ.நிக. கக: டகரவெ. கo.) 5. மேன்மை. (புறநா.)

மடமடக்கி–வட்டத்திருப்பி.(வைத்தியபரி.)

மடமடத்தல்–ஈரடுக்கொலிக்குறிப்பு.(வழக்.)

மடமடப்பு—மடமடத்தல்.

மடமடெனல்—மடமடப்பு. (வழக்.)

மடமை–அறிவின்மை; அன்றிப்: பெண்கள் நாற்குணத்துளொன்றுமாம்.

மடல்—1. ஈந்து கமுகு தாழை தெங்கு பனை வாழை யிவற்றின் பூமுடி. (உ - ம்.) "மடல்பெ ரிதுதாழை. (மூதுரை.) 2. உலாமடல், வள மடல்என விருவகைப்படும். (பொருட்டொகை நிகண்டு.) 3. காதின்மடல். (திருவிளை. உக்கிர குமார. கூகூ) 4. பனைமட்டைக்கங்கு. (உ-ம்.) "ஒழிமடல்விறகிற்கழிமீன்சுட்டு" (புறநா.உகூ.) 5. பூவிதழ். (உ-ம்.) "மடலவிழ்கடிகமழைந்தரு மலர்பல" (திருவாத. திருப்பெரு. ச.)

மடலரிதாரம்—ஓரரிதாரம். (வைத்தியபரி.)

மடலித்தல்—1. நெளியல். 2. மடங்கல். (1, 2-வழக்.)

மடலூர்சீச்சி—மடலூர்தல். (சி-தொழிற்பெ யர் விகுதி.)

மடலூர்தல்— பனைமடற்குதிரையிவர்தல்; இஃது: அக்பொருட்டுறையினென்று. (வள். ககச-அ. சூ.)

மடலேறுதல்—மடலூர்தல்.

மடவர்-அறிவிலிகள். (உ-ம்.)"மண்ணுலகின் முறைபுரியாமடவரை"(கோயிற்பு இரணிய.சூ.)

மடவரல்–1. இளம்பெண், மடப்பந்தோன் றுதலையுடையவள். (உ-ம்.) "மன்னியகற்பின ருந்ததியனையமடவரலுமையவள்கேட்டு" (பிர மோ. பிரதோ. க.) 2. மடப்பம். (புறநா. அகூ.)

மடவரலியர்—பெண்கள். (திருவாச. அதி சய. க.)

மடவளீ—அறியாமையுடையாள். (புறநா.)

மடவளாகம்—மதிலின்புறத்திலுள்ள வீதி. (உ-ம்.) "தம்பதிகுன்றத்தூரின்மடவளாகந்தாணுக்கி" (சேக்கிழார்பு. ககூ.)

மடவார்—1. அறிவீனர். (சிந்தா.) 2. பெண்கள். (உ-ம்.) "மடவார்குடைவாவிவிட்டு"(அரிச்ச. நாட்டு. நிக.)

மடவாள்—இளம்பெண். (உ-ம்.) "என்றது கேட்டதுடியிடைமடவாளிளநிலாமுறுவலேரூன்ற" (பிரமோ. ச: கநி.)

மடவியர்—பெண்கள். (உ-ம்.)"தளவநகைமடவியர்கண்மைந்தர்சுற்றம்"(சிவரக. பாக்கிய. சு.)

மடவை — 1. ஒருமீன். (ஒருகுழூஉக்குறி போலும். 2. கடவுமரம். (உ-ம்.) "மதித்தமருப்பிணைசேரெருமைத்தலைமடவையிடைக் கழல்வைப்பார்போன்" (சேதுபு. தேவிபுர. சுச.) 3. தணக்கு. (மலையக.) 4. மடமுடையையெனப் பொருள்படுமொருமுன்னிலையினை. (இறைய.)

மடவைக்கெண்டை — ஒரு மீன். (வழக்குண்டுபோலும்.)

மடவோன்—அறிவில்லாதவன். (புறநா.)

மடற்பீதம் — கௌரிபாஷாணம். (வைத்தியபரி.)

மடற்றுத்தம்—ஒரு தூத்தம். (மலையக.)

மடன் — 1. அறியாமை. 2. அறிவிலான். (1, 2-வழக்.) னகரம் போலி.

மடாதிபத்தியம்—மடத்தலைமை. (வழக்.)

மடாஅ—சேர்த்து. (புறநா.)

மடாரோனல்—ஓரொலிக்குறிப்பு. (வழக்.)

மடி — 1. அடங்கல். 2. இறுதி, கேடு. 3. சோம்பல். 4. தாழை. 5. தாழைவிழுது. (தைல. தைலவ. கஉநி.) 6. புடவை. 7. புலம்பு. 8. பொய். 9. மடங்குதல். (வழக்.) 10. மடிப்பு. (உ-ம்.) "சுருள்பார்" 11. மடிப்புப்புடவை. (உ-ம்.) "தூரியவுநெடியவுமடிதரூஉவிரித்து" (மதுரைக் நிஉ0.) 12. தெரிநிலைவினைப்பகுதி. 13. வயிறு.(உ-ம்)"முருகுணைமடிமேல்வைத்து" (அரிச்ச. மயாந. உ0.) 14. வியாதி. (2, 7, 8-பிங்கல. ஙகஙஙூ.) (1, 3, 4, 6, 14-சூ. நிக. கக. டகரவெ. ச.)

மடிக்குதல்-1. கொல்லுதல். 2. மடக்குதல். (1, 2-வழக்.)

மடிக்சுக்கட்டி — ஒரு புழு. (வழக்குண்டு போலும்.)

மடிசெயீதல்-சோம்பல்செய்தல், பின்னே செய்வோமென்று ஒய்ந்திருத்தல். (உ-ம்.)"பருவமடிசெய்து" (உள். ச0உ அ.)

மடித்தல்—1. கொல்லுதல். (உ-ம்.) "வலித்தாரையுமடித்தான்சிலைபிடித்தான்" (இராமா. கரன்வ. கூ0.) 2. மடிக்குதல். (வழக்.) 3. மடித்திருத்தல், சோம்பியிருத்தல். (உ-ம்) "மடியிலான்செல்வம்போல்" (கலி. ஙநி.)

மடித்தலம்—மடி. (உ-ம்.) "அந்தளிர்க்கையவரிரப்பவண்ணறன்மடித்தலக்-தந்திருக்குமாதை" (திருவிளை. அட்டமா. சு.) தலம்-இடமுமாம்.

மடிதல்—1. அழிதல். (உ-ம்.) "ஞாலமடியுநாளிதுவேயென்னு"(திருவிளை.நான்மாட.கக.) 2. கெடுதல். (சூ. நிக. அ: சுகூ.) 3. சாதல். 4. தலைசாய்தல். கதிர்மடிந்துகிடக்கிறது. 5. துயில்கொள்ளல். (உ-ம்.) "மண்பதையெல்லாமடிந்தவிருங்கங்குல்" (கலி. சுநி.) 6. தொழிலொழிந்திருத்தல். (உ-ம்) "மல்லற்பேரூர்மடியின்மடியா" (பெரும்பா. உநிச.) 7. மடங்குதல். (உ-ம்.) "நவியம்"பார். (3, 4-வழக்.)

மடிநீது — மரவெழுச்சிதவிர்த்து. (உ-ம்.) "துவவுமடிந்துண்டாடியும்" (பட்டினை. கூஙூ.)

மடிப்பிளை—வங்கமணல். (வைத்தியபரி.)

மடிப்பு — 1. மடக்கு. 2. மடித்திருப்பது. (1, 2-வழக்.)

மடிமை—சோம்பு. (வைத்தியபரி.)

மடிய—துயில்கொள்ள. (பத்துப்பா.)

மடியாண்மை—மடியாளுந்தன்மை; அதாவது: சோம்புதலேஉடைமைக்கேதுவாய தாமத குணம். (உ-ம்.) "மடியாண்மைமாற்றக்கெடும்" (வள். சு0கூ.)

மடியின்—தங்கின். (உ-ம்.) "மல்லற்பேரூர் மடியின்மடியா" (பெரும்பா உநிச.)

மடில்—தாழை. (வைத்தியபரி.)

மடிவிடுதல்-மடிதளர்தல்; அது: பசுமுதலிய சினைக்குறிகாட்டல் (வழக்)

மடிவித்தல்—கொல்லல். (வழக்.)

மடிவு — 1. கேடு. 2. சாவு. 3. சோம்பு. 4. மடிதல். (1, 2, 3, 4-வழக்.)

மடு—1. ஆற்றினுட்பள்ளம். (உ-ம்.) "ஆறிடுமேமிமடுவும்போல்" (நன்னெறி.) 2. குளம். (உ-ம்.) "கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவில்" (திருக்கோ. கஉச.) 3. தெரிநிலைவினைப்பகுதி.

மடுக்குதும்—உண்பிக்கும். (புறநா.)

மடுத்தல்—1. அழுத்தல். (உ-ம்.) "ஞானவாரிமடுத்தாந்தம்பொழிந்து" (சி. சி அ: ககூ. நிரம்ப.) 2. உண்ணுதல். (திருவிளை. குண்டோதர. கச.) 3. கலத்தல் (உ-ம்.) "இறைவனின்னருட்கடற்-றுறையின்வாய்மடுப்பவே" (திருவிளை. அட்ட. கஅ.) 4. இறுதல். (உ-ம்.) "வாழுஞிர்த்தலைமடுத்தகழ்ந்துகுடர் மாலையிட்டுலப்பிசைந்ததே"(கூர்மபு. தக்கவ. எகூ.) 5.

தடித்தல், தடைபடல். (வள். அதி. சூசு.ச.) 6. நிறைத்தல். (திருவிளை. குண்டோதர. உக.) 7. பாய்தல். (உ-ம்.) "பொன்னி-மடித்தநீள்வண்ணப்பண்ணே" (பெரியபு. தடுத்தாட். கo அ.)

மடுப்ப—1. உண்ண. (பரிபா.) 2. ஊட்ட. (புறநா.)

மடுப்பு—நிறைத்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

மடை—1. ஆணி. (உ-ம்.) "மடைகலங்கி நிலைதிரிந்தனவே" (புறநா. கூவ.) 2. ஆபரணக் கடைப்பூட்டு. (சூ. நிக. கக: டகரவெ. கo.) 3. சோறு. (உ-ம்.) "மடையுடன்பஞ்சாமிர்தம்பஞ்ச கௌவியமுமாட்டி" (சிவரக. பசாசுமோசன. கo) 4 துவாரம். (வழக்.) 5. நீர்பாயுமடை. (உ-ம்.) "மடைவளர்தண்புறம்பணையில்" (பெரியபு. தடுத்தாட். அகூ.) 6. மூட்டுவாய் (உ-ம்.) "மடைமாணுண்ணிழைபொலியத்தொடை மாண்டு" (நெடுநல். கூசு.)

மடைத்தொழிலாளர்—சமையற்கர்ரர்; இவர்: அரசர்க்குறுதிச்சுற்றத்தாருவர். (பிங்கல. எஎக.)

மடைநூல்—பாகசாஸ்திரம். மடை-சோறு. (சிந்தா.)

மடைப்பள்ளி—அடுக்களை. (பிங்கல. சுகூஉ.)

மடையன் — சமையற்றொழில்செய்வான். (வழக்.)

மண்—1. அணு. (உ-ம்.) "மண்டிணிந்தநிலனும்" (புறநா. உ.) 2. ஒப்பனை. 3. கழுவுதல். முதனிலைத்தொழிற்பெயர். 4. சுதை மண். (உ-ம்.) "கண்ணுள்வினைஞரும்மண்ணீட்டாளரும்" (சிலப். இந்திரவிழ. கூo) 4. பூமி. (உ-ம்) "மண்ணில்வீழ்த்துவணங்கியிருந்தனர்" (அரிச்ச வஞ்சனை. கூ.) 5. தெரிநிலைவினைப்பகுதி. 6. முழவின்மார்ச்சனை. (2, 6-சூ. நிக. கக: ணகரவெ. கக.)

மண்கணை—ஒரு பறை. (உ-ம்.) "மண்கணை முழவம்விம்ம" (கந்தபு. தாரசன்வதை. நிசு.) (பிங்கலநிகண்டிற் குடமுழாவென்றார்.

மண்கல்—செங்கல். (வழக்.)

மண்கடை—1. குழவிக்கூடு. 2. நிலவறை. 3. மண்ணுற்செய்தகுகை இதிற்பொற்கொல்லர் பொன்னுரைக்குவர். (1, 2, 3-வழக்.)

மண்கத்துநோய்—மல்கலராக்கிய சூலை. (சீவரட். உoஅ.)

மண்கிலை—கற்சாவி. (வைத்தியபரி.)

மண்சுதை—சுண்ணம். (வைத்தியபரி.)

மண்டக்கு — முத்தச்சுளிப்பவர்கூளையிழுக்குங்கயிறு. (மண்டக்குக்கயிறென்பர். ஒரு குழூஉக்குறி.

மண்டகம்—அப்பம். (வைத்தியபரி.)

மண்டபம் — தீழ்மண்டபம், மேன்மாடம் இரண்டிற்கும்பெயராம். (உ-ம்.) "சக்கரதீர்த்தக் கரைமேன்மண்டபத்துள்" (அரிச்ச.பாயிர. கசு.)

மண்டம்-1. ஆமணக்கு. (மலையக.) 2. தலை. 3. மண்டை. (1, 3-வைத்தியபரி.)

மண்டரி—படைவீரர். (உ-ம்.) வந்துழிக் காண்க.

மண்டல் — கொருங்கல். (காஞ்சிப்பு. திருநாட். உக.)

மண்டலநிலை-1. இருகாலும் பச்கல்வினைய மண்டலித்துநிற்றல்; இது:சரம்விடுநிலைகான்கினுள்ளொன்று. (சூ. நிக. கஉ: கூo.) 2. தேசிக்கூத்திற்குரியநிலை. (உ-ம்.) "கொண்டதேசிப்பகுதியெல்லாமண்டலநிலையின்வருதகவுடைத்தே" (சிலப். அரங்கேற்று. எடுஉ. உரை)

மண்டலபுருடன்—சூடாமணிநிகண்டு செய்தவாசிரியன்.

மண்டலம் — 1. சூம்பமுதலியனவைக்குமிடம். (உ-ம்.) "புரிநூற்கும்பமண்டலங்கள் மூனிவில்விதானமுறை பிறழாதியற்றி" (பிரமோ. பிரதோ. கூ) 2. கூட்டத்தவர். (உ-ம்.) "அரசமண்டலங்களெல்லாம்" (இரகு. மாலை. கஉஅ.) 3. சக்கரம். (ஆகுபெயர்.) 4 சூரியமண்டலம் முதலியன. (உ-ம்.) "மண்டலம்பொழியமிழ்தின்மெய்ருளிரவேவைத்தோன்" (பாரத. குருகுல. கூ.) 5. தேயம். (வழக்.) (பாண்டிமண்டலம். 6. நாற்பதுநாள்கொண்டது, தைலவருக்கத்தில் நாற்பத்செட்டுநாளென்பர் (உ-ம்.) "இருபெழுது"பார். 7. பூமி. (உ-ம்) "மண்டலத்வினைழுவெனுமரபினுற்றனது" 8. யசுர்வேத உபநிடதங்களுளொன்று. (கூர்மபு அட்டமூ. உசு. உரை.) 9. வட்டம். (உ-ம்.) "மண்டலம்பயிலுரகர்பேருயிர்ப்பினுண்மயங்கி" (தஞ்சைக்கதியுளொன்றென்றுரை.) (அபிதாநசி.) 10. வியூகம் நான்கு வகையிலொருவகை; அது: பாம்பு மண்டலமிடுவதுபோலச் சேனையை நிறுத்துவது. (வள். எகூவ. பரி.) 11. வாசம். (வைத்தியபரி.) 12. விற்றொடுத்து அம்பு எய்வார்க்குரிய நால்வகை நிலைகளொன்று (திருவிளை. யானையெய்க. கo. உரை.) (8,9-பாரத. குருகுல. கூ.)

மண்டலமட்டி—சிற்றிலுப்பை. (வைத்தியபரிபா.)

மண்டலமாக்கள்—அரசர். (உ-ம்.) "உள்வரியென்பதுணர்த்துங்காலை மண்டலமாக்கள் பிறிதோருருவம்" (சிலப். வேனிற். அசு. உரை.)

மண்டலாதிபதி—சகசசுகிராதிபதி. (வழக்.)

மண்டலாதிபன்—மண்டலாதிபதி. (வழக்.)

மண்டலாபிடேகம்–நாற்பதுநாள் மட்டுக்கு நாள்வட்டம்பண்ணு மபிடேகம். (வழச்.)

மண்டலி — 1. ஒருவகைப்பாம்பு. (பிங்கல. ககூகஅ) 2. சீதமண்டலி, ரத்தமண்டலி என விருவகைப்படுமென்பர். (வைத்தியபரி.) (தநி. போ. கஎ0.) 3. தெரிசிலவினைப்பகுதி. 4. நாய். 5. பாம்பு. 6. பூமி. 7. பூனை. (4, 5, 6, 7-சூ. நிக. கக: ணகரவெ. கநி.)

மண்டலிசிதம் — 1. கடுகு. 2. தேன். 3. வேர்வை (1, 2, 3-வைத்தியபரி.)

மண்டலித்தல்–, மண்டலிப்பு – } 1. வட்டமிடல். 2. வட்டம். (1, 2-வழச்.)

மண்டலீகரீ — அவ்வத்தேசத்தையாளு மன்னர். (உ-ம்.) "வாங்கும்வெஞ்சிலைமன்னவகுமாரின்மண்டலீகரினுள்ளார்" (பாரத. படையெழுச்சி. எ)

மண்டலேச்சுவரீ — 1. தாணுவாஷ்டகரிலொருவர். (வி-ணி. உஎகூ.) 2. திருவாரூரிலே கோயிலகொண்டிருக்கிறசுவாமி நிருநாமம். (அபிதாநகோ.)

மண்டலேச்சுவரன் — மண்டலாதிபதி. (வழக்.)

மண்டலேசனீ–மண்டலேச்சுவரன். (வழக்.)

மண்டலேசுரம் — தன்மாத்திராதத்துவத்திலிருக்கும் பத்துப் புவநங்களுளொன்று. (சி. சி அ: எ. மறை.)

மண்டி — 1. இருகாண் முடக்கிநிற்கு நிலை. 2. கள்முதலியவற்றினடிப்பட்டது 3. நிலை கலங்கி. (உ-ம்.) "காண்முதலுனக்கு-மண்டியொருசார்மறுதலைப்ப" (திருவிளை. வலை ய. உகூ) 4. பெரியகடை. 5. மடித்து. (புறநா.) 6. மிக்குச்சென்று. (உ-ம்.) "அறுவேறுவகையினஞ்சுவரமண்டி" (திருமுரு. நிஅ.) மிக்குளன்றூர் பரிபாடலில். (1, 2, 4-வழக்.)

மண்டிகை–அப்பவருக்கம். (பிங்கல. ககஅ.)

மண்டிதம் — சிறுகீரை. (மலையக.)

மண்டிடிய — அடர்த்துச்செய்த. (புறநா.)

மண்டியிடுதல்—மண்டிபோடுதல். (வழக்.)

மண்டிலம்—1. ஓரிருக்கை. (உ-ம்.) "தனிப்புடமண்டிலமேகபாதம்" (சிலப். வேனிற். உசூ. உரை.) 2. குதிரை. 3. சூரியசந்திரமண்டிலம். 4. நாடு. 5. பார்வட்டம். 6. வட்டம். (உ-ம்.) "பரிப்புச்சூழ்ந்தமண்டிலமும்" (புறநா. கூ0.) 7. வட்டமாயோடல், மண்டலமாவோட்டலென்பர். (சூ. நிக. க: சஉ.) (2,3-பிங்கல. ககூக்க.) (4, 5-புறநா.)

மண்டினூர்—மிக்குச்சென்றூர். (சிந்தா.)

மண்டு—மண்டுதல், நிறைதல். (உ-ம்.) "பரமர்மண்டுதவமறைக்குலத்தோர்" (பெரியபு. திருஞாந. நிநி.)

மண்டுகால்—மூட்டுக்கால். (வழக்.)

மண்டுதல்–1. ஆவலாய்ப்பருகல், மிகக்குடித்தல். 2. தாக்கல். 3. நெருங்கல். (உ-ம்.) "விரித்சடைமண்டியலக்கிட" (கோயிற்பு. பதஞ்சலி. சூ0.) 4. மிக்குச்செல்லுதல். (உ-ம்.) "கடன்மண்டழுவத்துக்கயவாய்கடுப்ப" (மலைப. நிஉஅ.) 5. மிகல். (1, 2, 5-வழக்.)

மண்டுகபன்னி–அழிஞ்சில். (வைத்தியபரி.)

மண்டுகம்—1. கீச்சுக்கிட்டம். (வைத்தியர் வழக்கு. மண்டுகசெந்தூரம். 2. தவளை. (சூ. நிக. கூ. எஎ.)

மண்டூரம் — 1. கீச்சுக்கிட்டம். 2. பழஞ் செங்கற்கிட்டம். (1, 2-வைத்தியபரி.)

மண்டை—1 உண்ணுதற்குரிய ஒருவகைப் பாத்திரம். (உ-ம்.) "தண்டெமண்டையுப்பிடித்துக்காவலர்" (மணிமே. சக்கரவாள. கூஉ.) ஒருவகைமண்கலம் என்றூர் சிலப்பதிகாரத்தில். பாணர்கையிலுள்ள ஏற்கும் பாத்திரம் என்றூர் புறநானூற்றில். 2. தலையோடு. (வழக்.)

மண்டைக்காப்பான்—ஒருநோய். (வழக்.)

மண்டைக்குடைச்சல் — தலைக்குத்து. (வழக்.)

மண்டைச்சூலை — ஒருநோய், கபாலசூலை (வழக்.)

மண்டைப்பீனசம்—ஒருநோய். (வழக்.)

மண்டைலம் —ஒருவகைதலம், மண்ணில்வடித்தெடுக்குந்தைதலம்.

மண்டோதரீ — இராவணன்மனைவி. (திருவாச. குயிற்ப. உ.)

மண்ணகம்—சுண்ணாம்பு. (வைத்தியபரி.)

மண்ணரசு— 1. பூமியையுடையவரசர். 2. பூவரசுமரம். (உ-ம்.) "முதிரூழலாற்றிமண்ணரசுமாலுகமென்னும்" (தைல. தைலவ. கஉச.)

மண்ணல் — 1. அலங்கரித்தல். (பிங்கல. ककூநிச.) 2. ஒப்பனை. (சூ. நிக. கூ. நி.) 3. கழுவுதல. (உ-ம்.) "உண்ணுபடியாநளத்துக்கறையைமண்ண" (தண்ணிலைகப்பு. காப்பு. உ.)

மண்ணவர்–மனிதர். (உ-ம்.) "மைத்தகடன்மண்ணவர்கடம்முருவில்வம்மென்" (திருவாத. திருப்பெரு. அ.)

மண்ணா—ஒருமீன். ஒரு குழூஉக்குறிபோலும்.

மண்ணி—பண்ணி. (பத்துப்பா.)

மண்ணியற்று — மண்பாத்திரம், மண்ணுலியற்றப்பட்டது. (வழக்.)

மண்ணில்வேந்தன்—1. அரசமரம். 2. (வைத்தியபரி. 1, 2-மலையக.)

மண்ணிலுதனம்—உவர்மண். (வைத்தியபரி.)

மண்ணீட்டாளர்—ப. குயவர். (உ-ம்.) "கண்ணுள்வினைஞருமண்ணீட்டாளரும்" (சிலப். இந்திரவிழ. கூ0.) 2. சிற்பாசாரியர். (சூ. நிக. உ. கூ0.)

மண்ணீடு—1. சுதையாற்செய்யப்பட்ட பாவை. (மணிமேக.) 2. திண்ணை. (சூ. நிக. நி: நிநி.) 3. வேயாமாடம். (சூ. நிக. நி: நிஉ.)

மண்ணீர்—கழுவுநீர். (உ-ம்.) "மண்ணீருமாகா" (வாக்குண்டாம். கஉ.)

மண்ணுணி—1. ஒரு பாம்பு. 2. விட்டுணு. (1, 2-வழக்.)

மண்ணுதல்—1. அலங்கரித்தல். 2. ஒப்பமிடுதல். (உ-ம்.) "மண்ணுறுமணி" (புறநா. ககஎ.) 3. கழுவுதல். (1, 2, 3-மண்ணல்பார்.)

மண்ணுநுவி—கீழித்தைலம். (வைத்தியபரி.)

மண்ணுறுத்தல்—1. அலங்கரித்தல். (திருமுருகாற.) 2. பண்ணுதல். (பத்துப்பா.)

மண்ணுவனிக்காரம்—அரிதாரம். (வைத்தியபரி.)

மண்ணை—1. அறிவிலான். (உ-ம்.) "அந்தண்மூகன்வதிரன்மண்ணையாய்வருந்துமறிவுபோய" (சேதுபு. இராமநாத. அ.) 2. இளமை. (சூ. நிக. ககஎ: ணகரவெ. கஎ.) 3. பசாசு. (உ-ம்.) "மக்கண்மண்ணைகண்மற்றவையால் வருநோய்கள்" (விருத்தா. கிரிச். கூஅ.) 4. வாலுளுவை. (மலையக.)

மண்ணெலுட்டார்—மண்சுமப்போர், ஒருசாதி

மண்ணெலுநர்—மனிதர். (சூ. நிக. உ: அச.)

மண்ணெடாச்சி—மண்ணீரல். (வைத்தியபரி.)

மண்பொதுத்தந்தை—பிரமன். (உ-ம்.) "வானவர்முதலுவப்பாற்றிமண்பொதுத்தந்தை போறறி" (சிவரக. மைமிச. கசு.)

மண்மகள்—பூமிதேவி. (பிங்கல. எஅ0.)

மண்மகள்புதல்வர்—சூத்திரர். (பிங்கல. எஅ0.)

மண்மாரி—மண்மழை. (வழக்.) எழுவகை மேகத்திலொருமேகம் பொழியுமென்க. (பிங்கல. எக.)

மண்வெட்டி—ஓராயுதம். (இ-ரூவிப்பொருளுணர்த்துமிகுதி.)

மணக்கால்நம்பி—ஒரு வைணவாசாரியர். (அபிதாநகி.)

மணக்குடையர்—இவர் திருவள்ளுவர் குறளுக் குரையெசய்தவர். (அபிதாநகி.)

மணங்கு—1. இருவாட்சி. (மலையக.) 2. ஒரு நிறை. (வழக்.)

மணத்தக்காளி—ஒரு செடி. (வழக்.)

மணத்தல்—1. கமழ்தல். பண்படியாகப் பிறந்தவைதாழிற்பெயர். 2. கூதெல். (காஞ்சிப்பு. பாயி. தணந்தபெருந்தயரன்னு முதற்குறிப் புக்கவி.) 3 மோத்தல். (வழக.)

மணநீத—சேர்ந்த. (புறநா.)

மணபு—வாசனை. (தைல. தைலவ. கசச.)

மணப்பொருந்தம்—விவாகத்திற்குரிய பொருத்தம்; அவை: இராசி, இராசித்தலைவர் இரைச்சு, கணம், ஸ்திரிதீர்க்கம், தினம், மாகேந்திரம், யோனி, வசியம், வேதை என்பன. (சோதிடக்.)

மணம்—1. கலியாணம்; அது: பிரமமணம் முதலாக எட்டுவகைப்படும். (அபிதாநகி.) 2. கூட்டம். 3. வாசனை. (உ-ம்.) "மணங்கமழ்குழலாய்" (அரிச்ச. மயான. கo.) (1, 2-சூ. நிக. கக: ணகரவெ. உக.)

மணமகள்—மணவாட்டி. (வழக்.)

மணமகன்—மணவாளன். (உ-ம்.) "மணமகனேஞெடுங்கௌவையம்புனல்வேலிசூழ்கடிநகர்விடுத்தான்" (திருவிளை. விருத்த. கஙூ.)

மணமலி—மருக்கொழுந்து. (வைத்தியபரி.)

மணமுரசு—விழாமுரசுமாம். (சிலப்.)

மணல்—கருமணல், வெண்மணல் எனப் பலவகைப்படும். (வழக்.)

மணல்வாரி—1. ஒரு நெல். 2. ஒரு புல். (1, 2-வழக்.)

மணலி—1. நாய்ப்பூளை. 2. மணவிக்கீரை. 3. மருக்கொழுந்து. (மலையக.) (1,2-வைத்தியபரிபா.)

மணலிக்கீரை—ஒருபூண்டு. (வைத்தியபரி.)

மணலூர்—1. பாண்டியனகரம். 2. மணிபுரம். (அபிதாநகோ.) 3. சோழநாட்டிலுமோரூர் என்பர்.)

மணலை—ஒரு மீன். (வழக்குண்டுபோலும்.)

மணவண்ணம்—உப்பிலி, ஒருகொடி. (வைத்தியபரி.)

மணவறை—1. பள்ளியறை. (உ-ம்.) "நானத்தீபமுமலியமணவறை" (பிரமோத். பஞ்சா. உக.) 2. விவாகம்பண்ணுமிடம். (திருவிளை. திருமணப். கஅகூ.)

மணவாட்டி—மணமகள். (உ-ம்.) "வந்தமணவாட்டிசிவசிந்தனையுஞ்சைவதவடிவும் நோக்கி" (திருவிளை. விருத்த. கடு.)

மணவாளதாசர்—ஒரு தமிழ்ப்புலவர், திருவரங்கக்கலம்பகஞ் செய்தவர். (அபிதாநகோ.)

மணவாளர்—நாயகர். (உ-ம்.) "சுந்தரசித்தேசுரிதன்மணவாள" (சிவரக. நந்திகேசுரர் நமனுக்கு. கo.)

மணவாளமாமுனி—தென்கலைவைணவாசாரியர். (மணிமேக.) இவர் சரிதச்சுருக்கம், (அபிதாநசிந்தாமணியில் பார்.)

மணவாளி—1. புதுமணப்பெண். 2. மாப்பிள்ளை. (1, 2-வழக்.)

மணவியது—மணமுடையது. (வழக்.)

மணவீசம்—மாதளை. (வைத்தியமூ. அக.)

மணவை—அடுப்பு. (உ-ம்.) "தாழியிட்டமண் வையிட்டைந்தாநாள்" (தைல. தைலவ. எடுத்.)

மணற்காளான்—1. தவளை. 2. மணலிலே முளைக்குங்காளான். (1, 2-வழக்.)


வக்கரித்தல்—திரும்புதல். (வழக்.)

வக்கரை—1. ஓர் தலம். (உ - ம்.) "உம்பரெலாம் வந்தித்தவக்கரையார் மாதுசிவகாமி பங்கர்" என்னுங் கலைசைச்சிலேடைவெண்பாவாலறிக. 2. பக்கரை.

வக்கா–ஓர் பறவை. (குற்றாலக்குறவஞ்சி. கசுக.)

வக்கிரகண்டம்–கரவாளம். (வைத்தியபரி.)

வக்கிரகண்டகம் — இலந்தை, வளைந்த முளளுடையது. (வைத்தியபரி.)

வக்கிரகிரீவம்–ஒட்டகம். கிரீவம்–கழுத்து.

வக்கிரதுண்டம்—1. கருடன் 2. கிளி. வக்கிரம்—வளைவு. துண்டம்—மூக்கு.

வக்கிரதுண்டர்—விநாயகர். விநாயக கவசத்திற்காண்க. (அபிதானசிந்.)

வக்கிரநாசிகம் — 1. ஆந்தை. 2. கிளி. (வைத்தியபரி.)

வக்கிரபாலன்-சூரபன்மனுக்கோர் மந்திரி. (அபிதானசிந்.)

வக்கிரபுட்பம் முருக்கம்பூ. (வைத்தியபரி.)

வக்கிரம்—1. கொடுமை. 2. பொருமை. 3. மடங்குதல். 4. மீளல். 5. வட்டம். 6. வளைவு (1, 3, 4, 5-சூ. நிக. கக: ககரவெ. அ) 2-பிங்கல. கஅகo.) (6-உரிச்சொல். நிக. அ: கநி.)

வக்கிரவத்திரம்–பன்றி. வத்திரம்–மூக்கு. (வைத்தியபரி.)

வக்கிரவாலதி—நாய். வாலதி—நரி.

வக்கிரன்—1. இடைவள்ளலி லொருவன். (சூ. நக. உ: உசு) 2. குரூரன். (வழக்.) 3. சனி. வக்கிரனுஞ் சுக்கிரனும்போல விருகிரூரரென்பது பழமொழி. 4. செவ்வாய். (சூ நிக. கக: கo.)

வக்கிராங்கம்–அன்னம். (சூ. நிக. சு: நிo.)

வக்கிராங்கி — கடுகுரோகணி (வைத்தியபரி.)

வக்து—1. முதனிலைத்தொழிற்பெயர். 2. வழி. அவனிடத்தில் வக்கில்லை யென்பது. உலகவழக்கு.

வக்துதல்—வதக்குதல் (பெரியபு. கண்ணப்ப. கசநி)

வகத்திரம்—வாகை (வைத்தியபரி.)

வகரம்—, வகாரம்— ஒரெழுத்து. (நன்னூ. மெய்யீ கூ.)

வகாரவுப்பு—கல்லுப்பு. (வைத்தியபரி.)

வகித்தல்—சகித்தல். (வழக்.)

வகிர் — 1. தெரிகிலேவினைப்பகுதி. 2. பிளவு. (திருவாச. திருப்பொற். உ.) 3. வழி. (பிங்கல. சூளக.) 4. வார். (சூ. நிக. அ: நிக.)

வகிர்தல்-1. கோதுதல். 2. பங்குசெய்தல். 3. போழ்தல். (1, 2, 3-வழக்.)

வகிரா—எருமை. (வைத்தியபரி.)

வகிருதல்—வகிர்தல்.

வதஞ்சம்—இரவு. (பிங்கல. உஉக.)

வதண்டம்-கவிழ்தும்பை. (வைத்தியபரி.)

வதண்டிகை — கஞ்சாங்கோரை. (வைத்தியபரி.)

வதண்டிமம்-வாலுளுவை. (வைத்தியபரி.)

வதணி —ஒலி. (சூ. நிக. கo: சுசு.)

வதத்தல் — வகைசொல்லல், வகைசெய்தலுமாம.

வதத்தான்—தெய்வம். (வள். கூஅ. ஆம் அதி. எ.)

வதந்துக்காட்டல் — ஒருத்தி. (நன்னூ. பொதுபபா. கசு.)

வதனி—வகுப்பு. தி-தொழிற்பெயர்விகுதி.

வதந்து—வழி. (சூ. நிக நி: கூஉ.)

வதப்பு—1. அழகு. (பிங்கல. ககூசக.) 2. பகுபபு. (வழக்.)

வதுலி—ஓர்மீன்.

வதுள்—சமூத்திராபச்சை.(வைத்தியபரி.)

வதுளப்பிகம்—வஞ்சிக்கொடி. (வைத்தியபரி.)

வதுளம்—மகிழமரம். (சூ நிக சு: கூ.)

வதுளாபரணர்-சடகோபர். (அபிதாநசிந்.)

வதுளி—ஒலி.

வதுளிநாதர்—நவநாதசித்தர்களிலொருவர். (பொருட். நிக.)

வதை—1. இனம். 2. உபாயம். 3. குறுந்தெரு. (சிந்தா) 4. முறை. 5 வதைப்பு. (1, 2, 4-வழக்.)

வதைப்படுத்தல்-, வதையிடுதல்— பங்கிடுதல். (வழக்.)

வதையுளி — அவ்வச்சொன்முடிபே சீர்முடிவாக்கித் தளைகொள்ளிற் றளைகெடுமாதலாற் றளைகெடாவண்ணம் சீர்முடிவுசெய்தது தளைகோடல். (உ-ம்.) ''நிலமிசை நீடுவாழ் வார்'' என்பதில் நிலமிசை யெனவும், நீடு எனவும், வாழ்வார் எனவும், பிரித்துத் தளைகொள்ளிற் றளைகெடுதலும் நிலமிசை யெனவும், நீடுவாழ் எனவும், வார் எனவும் பிரித்துத் தளைகொள்ளிற் றளைகெடாமையு மறிக. (யாப். காரி. ஒழி பி. அ: உரை.) இவ்வகையுளி பிரபந்தமுதலிற் கூறுகின்ற மங்கலச்சொல்லில்வரிற் குற்றமாம். ''வகையுளிசேர்தல்வனப்பின்றுய்நிற்ற'' லென்னும் வெண்பாப் பாட்டியற் செய்யுளாலறிக.

வங்கக்கல்—சுக்கான்கல். (வைத்தியபரி.)

வங்கசேநகம்—வெள்ளகத்தி. (வைத்தியபரி.) வங்கசேனகம் எனவும் வரும்.

வங்கணம்—1. சிநேகம. (உ - ம்.) ''ஒங்கையைக்காணேனேயென்வங்கணச்சிங்கியைக்காணேனே'' (குற்றாலக்குறவஞ்சி. கசுசு.) 2. செங்கத்தரி. 3 சேம்பு. (2, 3-வைத்தியபரி.)

வங்கணன்—சிநேகன். (வழக்.)

வங்கநீறு—ஈயமணல். (வைத்தியபரி.)

வங்கம்—1. ஈயம். 2. கத்தரி. 3. துத்தநாகம் (வைத்தியபரி.) 4. தேயமைம்பத்தாறிலொன்று. (பொருட். நிக.) 5. பதினெண்பாடையிலொன்று. (நன்னூ. பெயரியல. உரை.) 6. நாவாய். 7. வெள்ளி. (1, 2, 6, 7-சூ. நிக. கக: சுரவெ. உ.)

வங்கமணல்—ஈயங்கநீறு. (வைத்தியபரி.)

வங்கர்—1. ஒரு தேயத்தவர். (திருவீளை. திருமணப். எசு.) 2. சண்டாளர். (சூ. நிக. உ: சுசு.)

வங்கனூர் — ஒரு சங்கப்புலவர். இவரை ஆலங்குடிவங்கனரென்பர். திருவள்ளுவமாலையிலறிக.

வங்கா—ஒரு கருவி. (வழக்.)

வங்காரம்—1. உலோகக்கட்டி (பிங்கல. கஉசசு.) 2. பொன் (உ-ம்.) ''வங்காரச்சிலை'' சொகுநாத சேதுபதிவண்ணம் முதலியலறிக.

வங்காரவச்சி -, வங்காரவாசி— ஓர் கீரை. (வைத்தியபரி.)

வங்காளத்திப்பிலி —ஒருதிப்பிலி.(வழக்.)

வங்காளப்பச்சை-ஓர்பூடு.(வைத்தியபரி.)

வங்காளம்-தேயமைம்பத்தாறிலொன்று.

வங்கி—1. கொடிவேலி. (வைத்தியபரி.) 2. மாதர் பழங்கைமேலணியுமோரணி.(வழக்.)

வங்கிசம்—வம்மிசம். (வழக்.)

வங்கிபுரத்தாச்சான் — எழுபத்துநான்கு சிங்காசனாதிபதிகளிலொருவர்.

வங்கிபுரத்துநம்பி—வைஷ்ணவாசாரியர்களிலொருவர்.

வங்கியசூடாமணிபாண்டியன் — இவன் வங்கியசேகரபாண்டியனுக்குமகன். திருவீளையாடற்புராணத்திலறிக.

வங்கியசோழன்–ஒரு சோழன். (அபிதாந சிந்.)

வங்கியதீபபாண்டியன்–ஒரு பாண்டியன். (அபிதாநசிந்.)

வங்கியபதாகன்—ஒரு பாண்டியன். (அபிதநசிந்.)

வங்கியம் — 1. இசைக்குழல். (பிங்கல. கசஉ.அ.) 2. மூங்கில். (வைத்தியபரி.)

வங்கு—1. கழுதைப்புலி. (வைத்தியபரி) 2. மலைமுழை. (பிங்கல. நிஅ.)

வங்குகட்டை—மரக்கலத்தறி. ஒருகுழுஉக் குறிப்பாலும்.

வங்குசம்—கூகைநீர். (வைத்தியபரி.)

வங்குளம்—காற்று. (வைத்தியபரி.)

வங்கூழ்—காற்று. (சூ. நிக. க: சஎ.)

வங்கை—பசை

வச்சகத்தண்டிலம் — வெட்பாலையரிசி. (வைத்தியபரி.)

வச்சகம்—மலைமல்லிகை. (வைத்தியபரி.)

வச்சணந்திமாலை — இது செய்யுளிலக் கணஞ சொன்ன தூல். (அபிதாநசிந்.)

வச்சநாபி—நஞ்சு. (வைத்தியபரி.)

வச்சநி—மஞ்சள். (வைத்தியபரி.)

வச்சயம்—கலைமான. (சூ. நிக. கூ: உஉ.)

வச்சரி—வேம்பு. (வைத்தியபரி.)

வச்சாதுநி—சீந்தில். (வைத்தியபரி.)

வச்சி—காயா. (வைத்தியபரி.)

வச்சியம்—வசிகரித்தல். (பரிபாடல்.)

வச்சிரக்கல்—ஓர்கல். (வைத்தியபரி.)

வச்சிரக்கோட்டம் — காவிரிப்பூம்பட்டி னத்துற் பூவத்தில வச்சிரமிருந்த கோயில். (அபிதாநசிந்.)

வச்சிரகந்தம் - அரிதாரம்.(வைத்தியபரி.)

வச்சிரகம் — தாமரைக்காய். (வைத்திய பரி.)

வச்சிரசித்தன்—கருடன். (வைத்தியபரி.)

வச்சிரசுவாலை -1 கும்பகண்ணன்மனைவி. (அபிதாநசிகா.) 2. மீன். (வைத்தியபரி.)

வச்சிரசேலதம்–கோரைக்கிழங்கு.(வைத் தியபரி.)

வச்சிரத்தலைச்சி—கருவண்டு. (வைத்திய பரி.)

வச்சிரதசநம் -1. எலி. 2. பன்றி. (வைத் தியபரி.)

வச்சிரதந்தன் — 1. இராவணனுக்கோர் மந்திரி. (இராமா. யுத்தகா. மந்திரப். உஅ.) 2 பகதத்தன்புத்திரன். (அபிதாநசிந்.)

வச்சிரதந்தி—ஓர் புழு.

வச்சிரதரன் — இந்திரன். (உ-ம்.) "சத்த மேகங்களும்வச்சிரதரனுமிற் சஞ்சரித்திட வில்லையோ" (தாயுமானவ. பரிபூரண. கஉ.) வச்சிரம் - வச்சிராயுதம். தரன் - தரித்தவன்.

வச்சிரதாரணை—நவதாரணையி லொன்று. (பொருட்-நிக.)

வச்சிரதிலதம்—முத்தக்காசு. (வைத்திய பரி.)

வச்சிரதுண்டன்–கருடன். (வைத்தியபரி.)

வச்சிரநதி — சோணையாற்றின்கரையி லுள்ளநாடு (அபிதாநகோ.)

வச்சிரநிம்பம்—கருவேம்பு. (மலையக.)

வச்சிரப்பசை—ஓர் பசை. (வழக்.)

வச்சிரபாணி -இந்திரன். (சூ. நிக. க: சக.)

வச்சிரபீசகம்—கொடிபபுன்கு.(வைத்திய பரி.)

வச்சிரபீரகம் — கழற்சிக்காய் (வைத்திய பரி.)

வச்சிரபுட்பம்—எட்டி. (வைத்தியபரி.)

வச்சிரம் — 1. அன்றிலேபெதி. 2. எட்டி. 3. குலிசம். 4. சதுரக்கள்ளி. 5 சிற்பநூல் முப் பத்திரண்டிலொன்று. (பொருட்-நிக.) 6. நித் திடயோகத்தொன்று. பஞ்சாங்கம்பார். 7. மர வயிரம். (சித்தா.) 8. வைரமணி. (1, 2-வைத் தியபரி.) (3, 4, 8-சூ. நிக. கக: சகரவெ. கஉ.) 9. வச்சிரப்பசையுமாம்.

வச்சிரமாலி—சண்முகசேனவீரன். (அபி தாநசிந்.)

வச்சிரமுட்டி — மாலியவந்தன்புத்திரன். (அபிதாநகா.)

வச்சிரரசம்—சுத்தரசம். (வைத்தியபரி.)

வச்சிரவாகி — சமணர்கொண்டாடும் ஓர் மாயாசத்தியென்பர்.

வச்சிரவல்லி–1. பிரண்டை. 2. பொழுது வணங்கிபூச்செடி. (1, 2-வைத்தியபரி.)

வச்சிரவாது — சூரன்மைந்தரிலொருவன். (அபிதாநசிந்.)

வச்சிரவிருக்கம்—புல்லுருவி. (வைத்திய பரி.)

வச்சிரன்—1. இந்திரன், வச்சிராயுதத்தை யுடையவன் 2. கண்ணன் பௌத்திரனுகிய அநிருத்தன்புத்திரன். (அபிதாநகோ.)

வச்சிராங்கபாண்டியன்–ஓர் பாண்டியன். (அபிதாநசிந்.)

வச்சிராங்கம்—சதுரக்கள்ளி. (மலையக)

வச்சிராங்கன் — திதியின்றவத்தல்வந்த புத்திரன் (அபிதாநகோ.)

வச்சிராங்கி — தாரகாசுரன் தாய். (அபி தாநசிந்.)

வச்சிராட்சி—பிரண்டை. (வைத்தியபரி.)
வச்சிராதம்—பன்றி. (வைத்தியபரி.)
வச்சிரி —இந்திரன். இ—விருதி.
வச்சை—உலோபம். (உ-ம்.) "கடுவச்சை யன்சிபாலொர்மன்னன். (இராமா. பாலகா. பூக்கொய். ககூ)
வசக்குதல்—படியச்செய்தல். (வழக்.)
வசகம்—கொடிவேலி. (வைத்தியபரி)
வசட்டி—வயிரமண். (வைத்தியபரி.)
வசத்திற்றோதினி—எலுமிச்சை. (வைத்தியபரி.)
வசதி—1. ஊர். 2. நல்லிடம். 3. வீடு. (1, 2, 3-சூ. நிக. கக: சகரவெ. ககூ.)
வசந்தகாலம்—சித்திரை வைகாசிமாதம். (வழக்.)
வசந்ததகுமாகரம்—ஒருபூடி. (வைத்தியபரி.)
வசந்ததரு—மாமரம். (வைத்தியபரி.)
வசந்ததூதம்—1. குயில். 2. மாமரம். (1,2-வைத்தியபரி.)
வசந்தம் — 1. இந்திரமாளிகை. (பிங்கல ககுஅ.) 2. இளவேனில். (பிங்கல. உகுஅ.) 3. ஓர் இராகம். (பொருட்-நிக.) 4. கல்லாபம். (பிங்கல. சoகo) 5. வாசம். (சூ. நிக. கக: நகர வெ. எ.)
வசந்தமலர்—இலவங்கம். (வைத்தியபரி.)
வசந்தமாலை—ஓர் பிரபந்தம். (பொருட்-நிகண்டு.)
வசந்தன் — 1. ஓர் வானரவீரன், இவன் கும்பகன்னனுற் கசக்கிப்பூசிக்கொள்ளப்பட்ட வன். (அபிதாநசிந்) 2. காமன். (பிங்கல.கசடு.) 3. தென்றல். (பிங்கல. உகூ.)
வசந்திகை—தேமல். (பிங்கல. கoஅகூ.)
வசநாவி—யச்சநாபி. (வைத்தியபரி.)
வசநீயம்—வசநிக்கத்தக்கது. அநிர்வசநீயம் பார்.
வசப்படல்—வசமாதல். (சூ. நிக. கூ: உகூ.)
வசப்படுத்தல்—வசமாக்குதல் பிறவினை. (வழக்.)
வசப்படுதல்—வசப்படல்.
வசம்—1. அமைதல். 2. ஒழுங்கு. 3. கீழ்ப்படிதல். 4. கைவசம். 5. வசம்பு. (வைத்தியபரி.) (1, 2, 3, 4-வழக்.)
வசம்பு—ஓர் மருந்து. (வைத்தியபரி.)
வசமாக்கல்—வசப்படுத்தல். (சூ. நிக. கூ: கூo. மூலம்.)
வசமாதல்—வசப்படல்.
வசரம்—கோழி. (வைத்தியபரி.)
வசலை—பசலை; அது, ஓர் கொடி.
வசவதேவர்—ஓர் வீரசைவர். (அபிதாநசிந்.)
வசவபுராணம்—வீரசைவவடியார்கள் மகத்துவங்கூறியநூல். (அபிதானசி.)
வசவி—தட்டை. (சூ. நிக. உ: சுடு.)
வசவு—இழிவுரை. (வழக்.)
வசளை—பசளை. (வைத்தியபரி.)
வசனம்—சொல். (சூ. நிக. கo: கூ.)
வசனித்தல்—சொல்லல். (வழக்.)
வசாரி — 1. நெருப்பு. 2. வசம்பு. (1, 2-வைத்தியபரி.)
வசானியம்—செவ்வியம். (வைத்தியபரி.)
வசி—1. கூர்மை. 2. தழும்பு 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. நீர். 5. பஞ்சாக்கரமந்திர வகையிலொன்று. (தணிகைப். அவையடக். உ.) 6. மழை. (சிலப.) 7. வசியம். 8. வாள். (1, 2, 6, 7-பிங்கல. சoசக.) (8 பிங்கல. நிகண்.) 9. வெள்வெண்காயம். (வைத்தியபரி) பிளப் பென்பர் பத்துப்பாட்டில். இருப்பிடம், குற்றம், சூலம், திரட்சி முதலியவற்றிற்குங் கூறுவர். உதாரணங்காணிற் கொள்க.
வசிகம்—மிளகு. (வைத்தியபரி)
வசிகரணம்—1. கலைஞானமறுபத்துநான்கிலொன்று. (பொருட்-நிக.) 2. மன்மதன்கணையிலொன்று. (சூ. நிக. கஉ : சக.)
வசிகரம்—1. சீந்தில். 2. யானைத்திப்பிலி. 3. வசியம். 1, 2-வைத்தியபரி.) (3-வழக்.)
வசிகரித்தல்— } வசப்படுத்தல். (வழக்.)
வசிகரிப்பு— }
வசிகாரமம் — 1. சிலந்தி. 2. செருந்தி. (வைத்தியபரி.)
வசிட்டர்—ஓர்முநி. இவர் பிரமாவின் மாநசபுத்திரருளொருவர். (அபிதாநசி.)
வசித்தல்—1. கண்டமாக்கல். (பரிபாடல்.) 2. தங்கல். (சூ. நிக. கூ: ககூ) 3. வசியஞ்செய்தல். (வழக்.)
வசித்துவம்—அட்டமாசித்திகளிலொன்று. (பொருட்-நிக.)
வசிதை—வசித்துவம்.
வசிநீது—பிளந்து. (பத்துப்.)
வசிநி—வன்னிமரம். (வைத்தியபரி.)
வசியம்—1. கிராம்பு. (வைத்தியபரி.) 2. வசமாதல், அஃது அட்டகர்மத்தொன்று. அட்டகர்மம் பார்.
வசிரம்—1. ஆனைத்திப்பிலி. 2. கடலுப்பு. (1, 2-வைத்தியபரி)
வசிவு—1. பிளந்துவடுப்படுதல். (பத்துப்.) 2. வழைகல். (பிங்கல ககூசஎ.)
வசீகரணம்—வசிகரணம்.
வசீகரம்—வசிகரிப்பு.

வசீகரன்—வசியஞ்செய்பவன். (வழக்.)
வசீரம்—யானைத்திப்பிலி. (வைத்தியபரி.)
வசு—1. அட்டவசுக்கள். 2. நீர். (வைத்திய பரி.) 3. நெருப்பு. 4. பசுவின்கன்று. 5. பொன். 6. வெள்ளெங்காயம். (வைத்தியபரி.) (1,3,4, 6-பிங்கல. சo.கஉ.) அபிதானசிந்தாமணியில் அநேகருக்குப்பெயராகூறுவர்.
வசுக்கள்—அட்டவசுக்கள. (மணிமே.)
வசுகந்தி தை—நாய்வேளைச்செடி. (வைத்தியபரி.)
வசுகூபம்—அமுரி. (வைத்தியபரி.)
வசுதேவன்—கண்ணபிரான்முதை. (அபிதானசிந.)
வசுதை—மண்ணுலகு. (பிங்கல. சசஅ.)
வசுந்தரை—பூமி. (சூ. நிக. ஞி. எ.)
வசுநரை—புளி. (வைத்தியபரி.)
வசுநாள்—அவிட்டம். (பிங்கல. உகக.)
வசுமதி—பூமி. (சூ. நிக. ஞி: அ.)
வசுவசி— } சாதிபத்திரி.(வைத்தியபரி.)
வசுவாசி— }
வசூரி—ஓர் நோய். (வழக்.)
வசை—1. குற்றம். (சூ. நிக. அ: ஞிஅ.) 2. மலட்டுப்பசு. (சூ. நிக. ஈ: கஉ) 3. இகழ்ச்சி. (வள். உசஅ-ஆம் அதி. அ) பெண், பெண்யானை, மனைவி முதலியவற்றிற்குங்கூறுவர்.
வசைச்சொல்—இகழ்ச்சிச்சொல்.(வழக்.)
வசைத்தல்—வசைத்தல்.
வசைதல்-வசைதல்.(வழக்குண்டுபோலும்.)
வஞ்சகம்—வஞ்சம். வஞ்சகம்பேசேல். (கொன்றைவே.)
வஞ்சகழுடி—ஆமை. (வைத்தியபரி.)
வஞ்சகவெழிப்பு—ஓரலங்காரம். இது: பெயர்முதலியசொற்களால் வர்ணியத்தினது தர்மத்தை மறுத்தல். (விசா. அணியிலக்.)
வஞ்சகன்—வஞ்சிப்போன்.(சூ.நிக.உ:சஅ.)
வஞ்சகாரி—கொடிவேலி. (வைத்தியபரி.)
வஞ்சநவிழ்ச்சியணி—ஓரலங்காரம். இது: ஓர் காரணத்தானிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொருகாரணங்கூறி மறைத்தலாம். (விசா. அணியிலக்கணம்.)
வஞ்சப்பழிப்பணி — ஓரலங்காரம். இது, நிந்தையினிந்தைதோன்றுதலாம் இதனை வடநூலார் வியாஜநிந்தாலங்காரமென்பர். (விசா. அணியிலக்கணம்.)
வஞ்சப்புகழ்ச்சியணி—ஓரலங்காரம்.அது, பழிப்பினும்புகழ்ச்சிதோன்றல், புகழ்ச்சியாற் பழிப்புத்தோன்றல், புகழ்ச்சியாற் புகழ்ச்சிதோன்றலென மூன்றுவகைப்படும். (விசா. அணியிலக்கணம்.)
வஞ்சப்பெண்—காளியேவல்செய்வாள். (சூ. நிக. க: ஈகூ.)
வஞ்சம்—1. அழிவு. (ஞானமிருதம். ஈஉ.) 2. கபடம். (சூ. நிக. கக: ஞகரவெ ஞி.) 3. கொடுமை. 4. பொய். 5. வாள். (3, 4, 5-பிங்கல. சo.கஈ.)
வஞ்சலம்—பாம்பு. (வைத்தியபரி.)
வஞ்சனம்—வஞ்சகம். (வழக்.)
வஞ்சனி—1. இடாகினி (பிங்கல. கஉக.) 2. வஞ்சப்பெண்ணுமாம்.
வஞ்சனை—1. தெய்வப்பெண். 2. பொய். 3. வஞ்சம். (1, 2, 3-பிங்கல. சo.கச.)
வஞ்சி—1. ஒருவகைமரம். (ஐங்குறுநூ) 2. ஓர்கொடி. 3. ஓர்பா. 4. கருவூர், சேரனகரென்பர் பரிபாடலில், சோழனகரென்பர் பெரியபுராணத்தில், இரண்டுமுண்மையேயாம். 5. குடை. 6. சீந்தில். (வைத்தியபரி.) 7. தெரிந்லைவினைப்பகுதி. 8. பகைவர்மேற்செல்லல். 9. பகைவர்மேற்செல்லுவோரணியுமாலை. (சூ. நிக. கஉ: கூஉ.) 10. பெண். 11. மருதயாழ்த்திறத்திலொன்று. (1, 2, 3, 5, 7, 11-பிங்கல. சo.கஞி.)
வஞ்சிச்சீர்—வஞ்சியுரிச்சீர், மூவசைச்சீர்.
வஞ்சித்தல்—வஞ்சனைசெய்தல்.
வஞ்சித்தா—கனிமூன் நிரையும் நேரும் வரின், ஒன்றியவஞ்சித்தளையும், ஒன்றுதவஞ்சித்தளையும் என இருவகையாம். (யாப். காரி. உறுப்பியல். கo.)
வஞ்சித்தாழிசை — இருசீரடி நான்காய், மூன்றுசெய்யுள் ஒரு பொருண்மேலடுக்கிவருவது (யாப். காரி. செய்யுளியல். கச)
வஞ்சித்திணை — அரசன் வஞ்சிப்பூவைத் தலையிலேசூடிப் பகைவருடையபூமியைக் கைக்கொளக் கருதுதல். (புறநா.)
வஞ்சித்துறை — இருசீரடிநான்காய் ஒரு பொருண்மேலொன்றுய்வருவது. (யாப். காரி. செய்யுளியல். கச.)
வஞ்சித்தூக்கு -பரிபாட்டினுறுப்பினுளொன்று. (பரிபாடல)
வஞ்சிதன்—வஞ்சிக்கப்பட்டவன். (வழக்.)
வஞ்சிப்பா — நால்வகைப்பாவினொன்று. (யாப். காரி. செய்யுளியல். க.)
வஞ்சியரவம் — ஓர்துறை. (புறப். வெ. மாலை.)
வஞ்சியுரிச்சீர் — தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனியாய்வருவன. (யாப். காரி. உறுப்பியல். ச.)
வஞ்சிரம்—ஓர் மீனென்பர்.

வஞ்சிவிருத்தம்—மூச்சீரடி நான்குகொண்டுவருவது. (யாப. காரி. செய்யுளியல். கசு.)

வஞ்சிவேந்தன்—சேரன். (சூ. நிக. உ: கஅ.) வஞ்சியென்பது கருவூருக்குப் பெயராதலால், அதனைப் புகழ்ச்சோழராயனூர்புராணத்திற் சோழர்க்குரிய நகரெனக்கூறலான், வஞ்சிவேந்தனென்பது சோழனுக்கு மொரு பெயராம்; இங்ஙனமாதலால் அக்காலத்துச் சேரனுக்கும் அக்காலத்துச் சோழனுக்கும் உரிமையாயிருந்ததென்பது கருதப்படுகிறது.

வஞ்சினக்காஞ்சி — ஓர் துறை. இது அரசன் பகைவரைத் தாழ்வித்தறபொருட்டு இவ்வாறு செய்வேனெனச் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லுதல். (புறநா.)

வஞ்சினம்—சபதம். (சூ. நிக. கo: கo.)

வஞ்சுளம்—1. அசோகு. 2. வேங்கை. (1, 2-வைத்தியபரி.)

வஞ்சுளன்—காக்குருவி. (சூ.நிக.கூ:இஎ.)

வட்க—கெட. (சிந்தா.)

வட்கர்—குற்றம். (புறநா.)

வட்கல்-1. ஒளிமழுங்கல். (சூ.நிக. அ: உடு) 2. வெட்கம் (சூ நிக. அ: சஉ.)

வட்கார்—பகைவர். (சூ. நிக. உ: நிக.)

வட்காரம்—விவடிகாரம். (வைத்தியபரி.)

வட்டக்கிலுகிலுப்பை — ஓர் கிலுகிலுப்பைசசெடி. (வைத்தியபரி.)

வட்டகை—1. பலபுரிசுழ்ந்தவட்டம். 2. சிறுதிண்ணை. (1, 2-வழக்.)

வட்டணம்—பரிதை. சூ நிக. ஏழாவது தொகுதி கடஅவது கவியில் மாவட்டணமென்றார்; முதற்குறையாக வட்டணமென்பார்போலுக.

வட்டணிக்கை- } வட்டமாக்கல் (வழக்)
வட்டணித்தல்- }

வட்டணை—1. தாளம்போடுதல். (சூ. நிக. கூ: நுஉ.) 2. வட்டம். (பிங்கல. உஉஅசு.) 3. வர்த்தனை. (மணிமே.)

வட்டத்திருப்பி—1. ஆதிதின்னுப்பாலை. 2. பங்கமபாலை. 3. பிரண்முசுட்டை. (1, 2, 3-வைத்தியபரி.)

வட்டத்துத்தி—ஒருவகைச்செடி. (வைத்தியபரி.)

வட்டநரிவெருட்டி-வட்டக்கிலுகிலுப்பை. (வைத்தியபரி.)

வட்டப்பாலை—நான்குவகைப்பாலையிலொன்று. (சிலப். ஆய்ச்சியர். சoடி. பக்.)

வட்டம்புல்-காவட்டம்புல்.(வைத்தியபரி.)

வட்டம்—1 ஆலவட்டம். (பத்துப்பாட்.) 2. ஓலைகாள். (சிலப்.) 3. கைம்மணி. 4. சீலை. 5. திரிகை. 6. நாணயமாற்றும்பொழுதுகொடுக்கும் லாபப்பொருள். 7. நீர்ச்சால். 8. நீர்நிலை. 9. பரிசை. 10. பரிவேடம். 11. வாகுவலயம். (4, 8, 9-சூ. நிக. கக: டகரவெ. கசு.) (3, 9-பிங்கல. சoஉக.)(5-வழக்.) வட்டவென்பர்பரிபாட்டில். உடைவடிவு முதலியவற்றிற்கும் பெயர் கூறுவர். உதாரணங்காண்க.

வட்டஞ்பணிணுதல்- தேவதோத்திரத்தை மறுபடி மறுபடி மனனஞ்செய்தல். (வழக்.)

வட்டமடக்கி.—வட்டத்திருப்பி. (வைத்தியபரி.)

வட்டாடல் — 1. ஒருவகை விளையாட்டு, உண்டையுருட்டல் (மண்மே.) 2. சூதாடல். (சூ. நிக. கக: ரகாவெ. கூஅ.)

வட்டாரம்—சுற்றுப்படக்கம். (வழக்)

வட்டி — 1. கடசபலபட்டி. (புறநா.) 2. தெரிந்லெவினைப்பகுதி. 3. முதற்பொருட்கு வரு மூதியம். (வழக்.)

வட்டிகை—1. எழுதுகோல். 2. கூடை. (பிங்கல. கசுஅஎ.) 3. சித்திரம். (சூ. நிக. அ: எசி.) 4. நால்வகைச்சாந்திலொன்று. (சூ. நிக. கூ: கசு.) 5 வர்த்திகை. (1, 5-மணிமே.)

வட்டித்தல்—1. ஆணையிடுதல். (சூ. நிக. கo: கo.) 2 தாளமபோடல். (சூ. நிக. கூ: நுசு.) 3. வட்டமாக்குதல்.

வட்டிந்து—சுழற்றி. (சிந்தா.)

வட்டிப்பூ-1. தாமரைப்பூ.(வைத்தியபரி.) 2. வட்டித்தல். (வழக்.)

வட்டிப்போர்—சுழற்றியெறிவோர். (பரிபாடல்.)

வட்டில்—1. உண்கலம். (வழக்.) 2. ஓர் பாத்திரம். (சூ. நிக. எ: கூஉ)

வட்டிவி — வட்டாடும்போது கொடுக்கும் பந்தயப்பொருள். (இராமா.கிஷ்கிலக்காட்.கஎ)

வட்டு—1. கறிமுள்ளி. (வைத்தியபரி.) 2. சூதாடுகருவி. (வள்.கல்லாமை.க.) 3. திரட்சி. (சூ. நிக. அ: கூ.) 4. நீர்வீசுகருவிகளிலொன்று. (பரிபாடல்.)

வட்டுச்செடி—ஓர் செடி.

வட்டை—முழந்தாளளவாக வீரருடுக்குமோருடைவிசேடம். (சிந்தா.)

வட்டைவை—ஓர் வகை வெற்றிலப்பை. (வழக்.)

வட்டை—வழி. (சூ. நிக. நி: கூஉ.)

வட்புலி—சிங்கம். (வைத்தியபரி)

வடக்கிருத்தல்—மகாப்பிரஸ்தானம்.(செந்தமிழ். தொகுதி. அ. முதற்பகுதி) அது பற்றி கர்மோதார் பதவிவேண்டி வடதிசைநோக்கித் தியானமுற்றிருத்தலாம். (புறநா.)

வடகீது—வடதிசை. (வழக்.)

வடகம்—1. அத்தவாளம். 2. தோல். (1, 2-பிங்கல. சஅசஎ.) 3. வற்றலாகிய ஒருவித உணவுப்பண்டம். (வ ழ க்.) போர்வைக்குங் கூறுவர்.

வடகலை—கிரந்தநூல்கள். (இராமா. பாயிரம்.)

வடகாற்று—வாடை. (சூ. நிக. கக: டகர வெ. கக.)

வடகீழகீது—வடகீழ்த்திசை. (வழக்.)

வடகீழ்த்திசை — வடக்குங் கிழக்குமாய தோர் கோணதிசை.

வடகீழ்த்திசைப்பாலனீ—ஈசானன். (சூ. நிக. கஉ: எசு.)

வடகீழ்த்திசைப்பாலனீதூறி—நாகம். (சூ. நிக. கஉ: அ0.)

வடகீழ்த்திசையானை—சுப்பிரதீபம். (சூ. நிக. கஉ: எசு.)

வடசொல் — ஆரியமொழி. ஆரியத்திற் குரிய சிறப்பெழுத்துத்திரிந்து தமிழில் வந்து வழங்குமொழியை வடசொல்லென்க. நன்னூலிற் பெயரியலிலே பொதுவெழுத்தாலியன்ற மொழியும் வடசொல் என்பது பொருந்தாது.

வடதிசைப்பாலனீ—குபேரன். (சூ. நிக. கஉ: எசு.)

வடதிசைப்பாலனீதூறி—யானை. (சூ நிக. கஉ: அ0)

வடதிசையானை — சார்வபௌமம். (சூ. நிக. கஉ: எசு.)

வடநீதை—வடகாற்று. (பிங்கல. உசு.)

வடபத்தி—ஆல். (வைத்தியபரி.)

வடபரதம் — பரதகண்டத்தி னேர்பிரிவு. (சூ. நிக. கஉ: கூசு.)

வடபால்விதேகம் — வடவிதேகம். (சூ. நிக. கஉ: கூசு.)

வடபாலிரேபதம்—நவகண்டத்தொன்று. (சூ. நிக. கஉ: கூசு.)

வடம்—1. ஆலமரம். (சூ. நிக. ச: கச.) 2. ஒழுங்கு. (ஞானமிருதம்.) 3. கயிறு. (பிங்கல. ககடுக.) 4. வின்ஞாணி. (பிங்கல. கடுஙஎ.)

வடமதுரை — வடநாட்டின்கண்ணுள்ள ஒரு விட்டுணுத்தலம். (அபிதாநகோ.)

வடமர்—வடவர், பிராமணருள் ஒரு வகுப்பினர். இவர் வடக்கிருந்து தென்னாட்டுக்கு வந்தவர்.

வடமலை—1. மகாமேரு. 2. வேங்கடம். இதனைக் குமரக்கடவுள் தலமென்றுந் திருமால் திருப்பதியினென்றென்றுங்கூறுவர்.

வடமீன்—அருந்ததி. (சூ. நிக. க: எகூ.)

வடமுகாக்கினி—ஊழித்தீ. (சூ. நிக. கஉ: ஙக.)

வடமேற்கு—வாயுதிசை. (வழக்.)

வடமேற்றிசைப்பாலனீ—வாயு. (சூ. நிக. கஉ: எக.)

வடமேற்றிசைப்பாலனீதூறி—கழுதை. (சூ. நிக கஉ: அ0.)

வடமேற்றிசையானை—புட்பதந்தம். (சூ. நிக. கஉ: எசு.)

வடமொழி—வடசொல். பார்.

வடலி—ஆளம்பனை. (வைத்தியபரிபா.)

வடவர் — வடநாட்டிலுள்ளோர். (பத்துப் பாட்.)

வடவனல்—வடவாகலம்.

வடவாக்கினி — ஊழித்தீ. இது, கற்பாந்த காலத்தில் உலகையழிக்குந் தீ.

வடவாசுதர் — தேவமருத்துவர். வடவா-வடவை-அச்சுவினி. சுதர்-பிள்ளை.

வடவாநலம்—
வடவாமுகம்—
வடவாமுகாக்கினி—
} ஊழித்தீ. (சூ. நிக. க: ஙக.)

வடவிதேகம்—நவகண்டத்தொன்று. (சூ. நிக. கஉ. கூசு.)

வடவேங்கடம்—ஓர்மலை. இது, தமிழ்நாட்டின் வடக்கெல்லையாகவுள்ளது.(தொல்.பாயிர. நச். உரை.)

வடவை — 1. ஊழித்தீ. 2. எருமை 3. பெண்குதிரை. 4. பெண்யானை. 5. அச்சுவனிக்கும் பெயர். (1, 2, 3, 4-பிங்கல. சஅசஅ.)

வடிந்து — 1. வடக்கு. (உ-ம்.) "வடாது திசைமேனுள்" (இராமா. ஆரணிய. அகத்தீச. சஅ.) 2. வடக்குள்ளது. மரூஉச்சொல். (நன் பெயரிய. க0. உரை.)

வடி—1. கள். (பிங்கல. கசசசு.) 2. கூர்மை. "வடிவேல்" (வழக்.) 3. திருத்தம். (புறநா) 4. தெரிநிலைவினைபகுதி. 5. மாவடு. (ஐங் குறு.) 6. மாவடுவகிர். (திருக்கோவை. கூ.)

வடிக்குதல்—1. களங்கமறுத்தல். 2. வடியச் செய்தல். (, 2-வழக்.)

வடிகயிறு — குதிரைவாய்வடம். (சூ. நிக. எ: உக.)

வடிகாது —தாழ்ந்தகாது. (உ-ம்.) "குழை விரவுவடிகாதாகோயிலுளாய்" (சுந்தரமூ. தேவார.)

வடித்தல்—1. கூர்மையாக்குதல். 2. சுட்டு விரலும் பெருவிரலுங்கூட்டி யாழ்நரம்பை அகமும் புறமு மாராய்தல். (மணிமே.) 3. தெளித்தெடுத்தல். 4. பயிற்றல்.(சிந்தா) 5. வசமாக்குதல். (சூ. நிக. கு: க0.)

வடிதல்-1. நீர்முதலிய ஒழுகுதல். (வழக்.) 2. நீளம். சூ. நிக. அ: கசு.) 3. வற்றுதல். ஆற்றில் நீர்வடிந்தது என்பது (வழக்கு.)

வடிநீந்த—அழகுபெற்ற. (புறநா.)

வடிப்ப—பயிற்ற. (சிந்தா.)

வடிப்பம்—1. அழகு. 2. செப்பம். (1, 2-வழக்.)

வடிப்பு—வடித்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

வடிப்போர்—பயிற்றுவோர். (சிந்தா)

வடிம்பலம்பநின்றபாண்டியன்- இவனை உக்கிரவர்மனென்பர் சிலப்பதிகாரவுரையில்; இவன் கடல்சுவற வேலெறிந்தவுடன் அக்கடல் வற்றி இவன்கால்விளிம்புமட்டாகக் கழுவியது. அதனால் வடிம்பலம்பநின்றுனெனப் பெயராயிற்று. "ஆழிவடிம்பலம்பநின்றுனு" மென நளவெண்பாவிற்கூறுதல் காண்க.

வடிம்பு—1. நுதி. 2. விளிம்பு (திருவால. திருவிளை. கடல்சுவற. சு.) வடிம்பு நண்டுக்கால்விளிம்பெனக்கொள்க.

வடியல்—வடிதல். அது, ஒன்றிலிருந்து நீர்முதலிய வொழுகல். (வழக்.)

வடியா—திருந்தாத. (புறநா.)

வடிவம்-1. உடம்பு. அம்-சாரியை. 2 உருவம். (பிங்கல. கஙஙி.)

வடிவு—1. அல்குல். (பிங்கல. ஈ00சு.) 2. அழகு. (சூ. நிக. அ: சு.) 3. உடம்பு. (சூ. நிக. உ: ஈச.)

வடிவுவமை — உவமையணியினொன்று. (தண்டி. பொருளணி. உசு.)

வடிவெழுத்து — கட்புலனுக்கு விடயமா யெழுது மெழுத்து. (நன். உருபு. உஅ. உரை.)

வடு—1. குற்றம், வசையுமாம். 2. செம்பு. 3. தழும்பு. 4. வண்டு. 5. பிஞ்சு. (பிங்கல. உஅஉஅ.) (1, 2, 3, 4-பிங்கல. சஅ0கூ.)

வடுகச்சி—வடுகப்பெண். (வழக்.)

வடுகநம்பி—ஏழுபத்துநான்குசிங்காதனாதிபதிகளி லொருவர். (அபிதாநசி.)

வடுகநாதன்—வடுகன். பிரமன்றலைகிள்ளியவனென்பர். (அபிதாநசிந்.)

வடுகன்—வயிரவன். (சூ. நிக. க: உஎ.)

வடுகன்றாய்—காடுகாள். (சூ நிக. க: ஙூ.)

வடுகி—காடுகாள் (சூ. நிக. க: ஙூ.)

வடுது — 1. இந்தளாராகம். 2. ஓர் பாஷை. 3. ஓர்வகைக்கூத்து. (சிந்தா.) 4. மருதயாழ்த்திறம். (1, 2, 4-பிங்கல. சஅ2ஐ.)

வடுகேசுவரர் — திருவடுகூரிலிருக்குஞ் சுவாமிபெயர். (அபிதாநகோ.)

வடுப்படுத்தல்-கதுவாய் என்பர். இதற்கு வடுப்படுத்துதல் என்பதே பொருளாம். (பிங்கல. ககூஅசு.)

வடுப்படுத்துதல் — 1. குற்றப்படுத்தல். 2. வசையாக்கல். (வழக்.)

வடை — உழுந்துமுதலியவற்றாற்செய்யும் அடை. (வழக்.)

வண்ணக—வழங்குகை. (சிலப்.)

வண்டத்தனம்—குறும்புத்தனம். (வழக்.)

வண்டம்—தந்தாயுதமென்பர்.

வண்டமை—கருச்சங்கு. (வைத்தியபரி.)

வண்டர்—1. கடிகைமாக்கள். (சூ. நிக. உ: சஎ.) 2. திண்ணியர். (சூ. நிக. உ: ஙo.) 3. துட்டர். (வழக்.)

வண்டாரம் — நாய், மார்பு, முகில் என்பர். (உ-ம.) வரிற்கொள்க.

வண்டல்—1. சேறுமுதலிய அடைதல். 2. மகளிர்விளையாட்டு. (சூ. நிக. க: சு.) 3. விளையாட்டுச்சித்திரில் (ஐங்குறுநூ.)

வண்டலம்—சேறு. அம்-சாரியையென்க.

வண்டன்-1. திண்ணியன். (பிங்கல. அஎo.) 2. துட்டன். (வழக்.)

வண்டனர்—ஓர் முனிவர். (சிந்தா.)

வண்டாலம் — குந்தாலி, (வழக்) கல்லெவெட்டு மோர் கருவி. இதனைக் கூந்தாலி என விகாரமாக்கியுங் கூறுவர்.

வண்டானம்-1. கொய்யடிநாசை. (பிங்கல. உஙஎச.) 2. நாசை (சிந்தா.)

வண்டி—பண்டி. (வழக்.)

வண்டியம்—பேராமுட்டி. (வைத்தியபரி.)

வண்டில் — தேர்முதலியவற்றி னுருளை. (வழக்.)

வண்டு—1. அம்பு. 2. குற்றம். 3. கைவளை. 4. சங்கு. 5. நூல் 6. பூசநாள். 7. வண்டு. (1, 2, 3, 4, 5, 6, 7-பிங்கல. சo2உ.)

வண்டுதூத்தி — ஓர் குருவி. வழக்குண்டு போலும்.

வண்டுகோல்லி—1. சண்பகம். 2. தேவதாரம். (1, 2-வைத்தியபரி.)

வண்டுணமலர்மரம்—1. சண்பகமரம். 2. வேங்கைமரம். (1, 2-வைத்தியபரி.)

வண்டுளம் — நந்தியாவட்டம். (வைத்தியபரி.)

வண்டை—ஓர் செடி.

வண்ணக்கஞ்சாத்தனார் — கடைச்சங்கப் புலவருளொருவர். (வள். மாலை.)

வண்ணக்கழிப்பு—சந்தக்குழிப்பு. (வழக்.)

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா—கலிப்பாவி னொருபேதம். அஃது தரவு, தாழி

சை, அராகம், அம்போதாங்கம், தனிச்சொல், சரிதகம் என்னு மாறுறுப்பினையுங் கொண்டு, வருவது. (யாப். காரி. செய்யுளியல். கக.)

வண்ணம்-1. அழகு. 2 குணம். 3. சந்தம், இது பலவகைப்படும். 4. சாதி. (பத்துப்பாட்.) 5. நிறம். (நன்னூ. வினையிய. உ: உரை.) 6. மூடுகியல். (பிங்கல. உ0அசு.) 7. விதம். (காஞ்சிப். திருவேகம். எ0.) 8. இயற்கையழகென்று கூறுவர். (பரிபா.) (1,.2, 3-பிங்கல. சo0உசு.)

வண்ணமகளீர் — கோலஞ்செய்வாள். (சூ. நிக. உ. சுசு.)

வண்ணமாலை—வர்னமாலை. அஃது அரிச்சுவடி.

வண்ணத்தி — 1. பூநீறு. 2. வண்ணன் மனைவி (வழக்.)

வண்ணத்திப்பூச்சி—ஓர் பூச்சி. (வழக்.)

வண்ணன்—வகாலி. (வழக்.)

வண்ணிகன்—வர்ணிகன், எழுத்துக்காரன்.

வண்ணித்தல்—வர்ணித்தல். (சிந்தா.)

வண்மை—1. உண்மை. 2. கொடை. 3. புகழ். 4. வலிமை. ரு. வளமை. 6. வாகை. (வைததியபரி.) (1, 2, 3, 4, 5-சூ. நிக. கக. ணகரவெ கள.)

வணக்கம்-1. கிழ்ப்படிதல். 2. தொழுதல். (1, 2-வழக்.)

வணக்கல்—வளைத்தல். (வழக்.)

வணக்கு — 1. முதனிலைத்தொழிறபெயர். 2. வழிபாடுசெய்தல் (சி. சி. உ: சுசு.)

வணங்கல்-1. பணிதல். (சூ நிக. கு: சுசு.) 2. வளைதல். (பழமலையர்.)'மெல்லவணங்'கென்னும் முதற்குறிப்புக் கவியிற்காண்க.)

வணங்காமுடியினன் — தூரியோதனன். (சூ. நிக. உ: கடி.)

வணர்—1. நெறிப்பு. (பரிபாடல்.) 2.வளைவு. (சூ. நிக அ: டி.)

வணர்நீது—வளைந்து. (பத்துப்பாட்.)

வணிகம்—வாணிகம் பார்.

வணிகரெண்குணம் — தனிமையாற்றல் முதலியனவாம். (பிங்கல. எஎக.)

வணிகன்—வாணிகன். (வழக்.)

வணிதம்—பலஹர்சூழ்ந்தவட்டம். (வழக்.)

வத்தகம்—1. வர்த்தகம். 2. வெட்பாலை. (வைத்தியபரி.)

வத்தகன்-வர்த்தகன், வியாபாரி. (வழக்.)

வத்தங்கி—ஓர் மரம் (வைத்தியபரி.)

வத்தம் —சோறு. (வைத்தியபரி.)

வத்தமம்—ஆமணக்கு. (வைத்தியபரி.)

வத்தமானம்—வர்த்தமானம், நிகழ்காலம். (வழக்.)

வத்தனை—வர்த்தனை. (வழக்.)

வத்தாக்கீது—
வத்தாலை— } கொம்மட்டி. (வைத்தியபரி.)

வத்தி—1. இரத்தினத்தின்கீழே பதிக்குந் தகடு. ஓர் குழூஉக்குறிபோலும். 2. பரிமளதிரவியங்களைக் கூட்டியரைத்து நீளமாகசெய்த திரி. (வழக்.)

வத்திதீத்தல்— வர்த்தித்தல், பெருகல். (வழக்.)

வத்தியம்—மரணம்.

வத்திரசோதிநி—எலுமிச்சை. (வைத்தியபரி.)

வத்திரதாரு-செம்புளிச்சை.(வைத்தியபரி)

வத்திரம்—1. ஆடை. (சூ. நிக. எ: சுசு.) 2. மூகம. (சூ. நிக. உ: சுசு.)

வத்திரி —தோல்வார்.

வத்திரோணம்-பெருமரம்.(வைத்தியபரி)

வத்து-1. மது. (வைத்தியபரி.) 2. வஸ்து, பொருள. (தர்க்காமிர்தம்.)

வத்துதாரணை — நவதாரணையினொன்று. (பிங்கல. சசுஅ.)

வத்துநிச்சயம்—
வத்துநிர்ணயம்- } பிரபஞ்சகாரணமாய கடவுளுண்டென்றும் அவனினனேயென்றுங் கண்டமுடிவு.

வத்துப்பு—கறியுப்பு. (வைத்தியபரி.)

வத்துபரிச்சேதம் — ஒருபொருளை இஃதாகும் அஃதன்றென்று பகுத்தறிகை.

வத்துவித்தியாபதி—சிற்பநூல் மூப்பத்திரண்டினொன்று. (பொருட்-நிக.)

வத்தூரம்—பொன்னுங்காணி. (வைத்தியபரி.)

வத்தேகீது -1. கொம்மட்டி. 2. வத்தங்கிச் சாயமரம. (வைததியபரி.)

வத்தை—ஒருவித மரத்தோணி. (வழக்.)

வதக்கம்—வாட்டம். (வழக்.)

வதக்கல்—
வதக்குதல்— } வாட்டல். (வழக்.)

வதகம்—மரணம்.

வதங்கல்—
வதங்குதல்— } வாடுதல். (வழக்.)

வதந்தி—வார்த்தை. (வழக்.)

வதம் — 1. கொலை. (வழக்.) 2. விரதம். (சிந்தா.)

வதரம்—இலந்தை. (வைத்தியபரி.)

வதரி—இலந்தை. (சூ. நிக. சு: கஅ)

வதரியாச்சிரமம் — வடநாட்டிலுள்ள ஓர் விட்டுணுத்தலம். (உ-ம்.) "போவதரிதானலும் போய்த்தொழுவோநெஞ்சமே,மாவதரியாச்சிரமத்து" (நூற்றெட்டுத்திருப்பதியந்.)

வதவல்—வாடினது. (வழக்.)
வதனீ–கொலைசெய்வோன். வதம்-கொலை.
வதனம்—முகம். (ஞானமிர்தம். எ.)
வதாங்கம்—நஞ்சு. (வைத்தியபரி.)
வதாலகம்—
வதாலமீ— } ஓர் மீன்.
வதானியன் — வரையாதுகொடுப்போன். (வடமொழிவழக்.) வதான்யம்-வள்ளற்றன்மை.
வதி—1. சேறு (வழக்.) 2. வதஞ்செய்பவன். 3. தெரிநிலைவினைப்பகுதி. 4. வழி. (சூ. நிக. இ: சுஉ.)
வதிதல்—தங்கல். (சூ. நிக. கூ: ககு.)
வதிரன்–செவிடன். (பிங்கல. ககூ0) வெதிரன் எனவும் வரும்.
வதில்—பதில். (வழக்.)
வது-பெண். (வழக்.) வதுவரன்களே யாசீர் வதிக்கவேண்டு மென்பர்.
வதுகை—வைக்கோல். (வைத்தியபரி.)
வதுமரம்—முள்ளிப்பாலை.
வதுவடி—பாலை. (வைத்தியபரி.)
வதுவை—1 கலியாணம். (சூ. நிக. கூ: ச.) 2. கலியாணஞ்செய்தமகள். 3. மணமாலை (2, 3-பத்துப்பாட்.) 4. ஓசம். (பிங்கல. உ0ஈக.)
வதூ—பெண் (நன்னூ. மெய்யீற்றுப. ஈசூ. உரை.)
வதூசரை—ஓர் நதி. (அபிதானகோ.)
வதை–கொலை. இராமா. மிதிலைக்காட்சிப். கஉ0.)
வதைத்தல்—கொல்லல். (பிங்கல. உகஉசூ.)
வந்தலறு—வந்தது. (ஐங்குறுநூ.)
வந்தனம்—1. வணக்கம் 2. வந்தேதம். (புறநா.)
வந்தனித்தல்—வந்தித்தல்.
வந்தனை—வணங்கல். (பிங்கல. ககூஎசூ.)
வந்தி–1. தெரிநிலைவினைப்பகுதி. 2. மலடி. (சூ. நிக. உ: சுசூ.)
வந்திகள்—1. கடிகைமாக்கள். (சூ. நிக. உ: எச.) 2. வந்தியர்.
வந்திசீன்—1. வந்தேன். (புறநா.) 2. வருவாயாக. (ஐங்குறுநூ.)
வந்தித்தல்—1. பங்கம்பாலை. 2. வணங்கல். (1-வைத்தியபரி.) (2-பிங்கல. ககூஎசூ.) 3. வழிபாடுசெய்தல். (தி. சி. உ: உசூ. உரை.)
வந்தித்துநிற்போர்—பாணர். (சூ. நிக. உ: சுச.)
வந்தியர்—1. புகழ்வோர். 2. மலடிகள். (சூ. நிக. கக: நகரவெ. எ.) 3. கடிகைமாக்களுமாம்.
வந்து—காற்று. (பிங்கல. உசூ.)
வந்துறுங்கள்—வந்துறும், வரும். கள்—அசை. (சிந்தா.)
வந்தென—1. வந்தாலுக. 2. வர. (1, 2-ஐங்குறுநூ.)
வநசந்தனம்—1. அகில். 2. தேவதாரம். (1, 2-வைத்தியபரி.)
வநசந்திரிகை—காட்டுமல்லிகை. (வைத்தியபரி.)
வநசீரம்—காட்டுச்சீரகம். (வைத்தியபரி.)
வநசை—இலக்குமி–நிகண்டில், அலர்மகளென்பர்.
வப்பிரம்—ஈயம். (வைத்தியபரி.)
வபதம்—1. சுக்கிலம். (வைத்தியபரி.) 2. சௌளம். (திருவானைக்கா. கோச்செங். ககூக.)
வபை—நிணம், இது; வயிற்றின்நாபிக்குள் வெண்டுகில்போன்றிருக்கும் யாகஞ்செய்வார் ஆட்டினில் இவ்வபையை யெடுத்துக்கொண்டு நெய்யிலிட்டுக் காய்ச்சி ஓமஞ்செய்வர். (திருவிளை. மாணிக்க. ஈச.)
வம்–1 வா. (புறநா.) 2. வாருங்கள். (திருநூற்றந்.)
வம்பம்–சாலங்கபாடாணம். (வைத்தியபரி.)
வம்பமாக்கள்—புதியமாக்கள். (சிலப்.)
வம்பல்—திசை. (பிங்கல. ஈக.)
வம்பலர்—1. அயலவர். (சூ. நிக. உ: ஈசூ.) 2. புதியவர். (சூ. நிக. உ: ச0.) 3 வழிப்போவார். (புறநா.)
வம்பலன்—அயலான். (மணிமே.)
வம்பன்—துஷ்டன். (வழக்.)
வம்பி 1. கருவண்டு. 2. தூட்டை. (வழக்.)
வம்பு — 1. உவமை (ஞானமிர்தம்.) 2. கயிறு. (சிலப்.) 3 நிலையின்மை. 4. புதுமை. 5. முலைக்கச்சு. 6. உஞ்சனை. 7. வாசனை. 8. வீம்பு. (வழக்.) 9. புதிய அழகென்பர் சிந்தாமணியில். (3, 4, 5, 6, 7-பிங்கல. ச0உசூ.)
வம்புத்தனம்—நேரின்மை.
வம்மதி—வருவாயாக. (ஐங்குறுநூ.)
வம்மின்—வாரீர். (புறநா.)
வம்மென — 1. வாருமென்று. (பத்துப்பாட்.) 2. வாவென. (சிந்தா.)
வம்மே—வாருமின். (ஐங்குறுநூ.)
வம்மோ—வா. (ஐங்குறுநூ.)
வமநி—1. அட்டை 2. பருத்தி. (1, 2-வைத்தியபரி.)
வமிசம்–1. சந்ததி. 2 சுற்றம். (1,2-வழக்.)
வயங்கம்–சோதி. (உ-ம்.) "வயக்கமாண்டமுப்புரிசை யன்றிறுத்தவள்ளல்" (காஞ்சிப். சனற்குமார. கூ.)

வயக்குதல்—1. வசக்குதல். 2. வயங்கச் செய்தல். (1, 2-வழக்.)

வயதுண்டம் — கவிழ்தும்பை. (வைத்திய. மூ. அக்.)

வயதுண்டலி — கவிழ்தும்பை. (வைத்திய பரி.)

வயங்கல் — 1. ஒளிசெய்தல். (பிங்கல. கஙஙஅ.) 2. நடத்தல்.

வயசு—வயது. (வழக்.)

வயணம்—வகை, (வழக்.)

வயத்தன்—வசமாயிருப்பவன். (வழக்.)

வயதரம்—கடுக்காய். (வைதிய.மூ.அக.)

வயது — ஆயுள். (உ-ம்.) "நாலிருவயது நண்ணினஞள்கௌரி" (திருவானை.கோச்செங். கஙஙு.)

வயதேற்றி—திப்பிலி. (வைத்தியபரி.)

வயப்படல்—
வயப்படுதல்—
} வசப்படுதல். (வழக்.)

வயப்புலி —
வயப்போத்து—
} சிங்கம். (பிங்கல.உசo஫)

வயம்—1. சாம்பு. (வைத்தியபரி.) 2. கீர். 3. பறவைப்பொது. (காஞ்சிப்.திருநெறிக்.கசு.) 4. வசம. 5. வலிமை. 6. வெற்றி. (பரிபாடல்.) (2, 5-பிங்கல. சo உஎ.)

வயமது—சீந்தில். (வைத்தியபரி.)

வயமம்—அத்தி. (வைத்தியபரி.)

வயமா—1. குதிரை. 2. சிங்கம். 3. புலி. 4. யானை. (1,2,3,4-சூ.நிக. கக யகரவெ.எ.)

வயமான்—புலி. (புறநா.)

வயல்—1. கழனி 2. வெளி. (1, 2-பிங்கல. சo உஅ.)

வயல்சூழ்சோலை—இளமரக்கா. (பிங்கல. உ0சஞ.)

வயல்நெட்டி—ஒருவகை நெட்டி. (வைத்தியபரி.) வயனெட்டியெனவும் வரும்.

வயல்மாதளை—ஒருவகை மாதளை. (வைத்தியபரி.) வயன்மாதளை எனவும் வரும்.

வயல்மெநகு—ஒருவகைமெநகுகன்கிழங்கு (வைத்தியபரி.) வயன்மெநகு எனவும் வரும்.

வயலை—ஓர்கொடி. (உ-ம்.) "வயலைப்பசுங் கொடியும்" (காஞ்சிப். நாட். கசஉ.)

வயவர்—1. படைத்தலைவர். (பத்துப்பாட்.) 2. வீரர். (மணிமே.)

வயவரி—புலிதொடக்கி. (பிங்கல. உசகக.)

வயவன்—1. காரிப்பிள்ளை. (பிங்கல. உஙசஞரு.) 2. தலைவன் 3. திண்ணியன். (சூ. நிக. உ: நு0.) 4. வலியன். 5. வீரன். (2, 4, 5-பிங்கல. சo உகூ.)

வயவு — 1. இச்சை. (பரிபாடல்.) 2. வயாவு, வயாவென்பது ஈற்றயல்குறுகி உகரச் சாரியை பெற்றதென்பர். 3. வலி. (பதிற்றுப்.) 4. வேட்கைநோய். (மணிமே.)

வயவை—வழி. (சூ. நிக. நு: சுஉ.)

வயளை—வயலை.

வயற்களளி—பொரிப்பூண்டு (வைத்திய பரி.)

வயற்கொடுக்கி — ஒருவகைக்கொடுக்கி. (வைத்தியபரி.)

வயற்கோவியன்—ஓர் பாம்பு. (வைத்திய பரி.)

வயற்சுளளி—பொரிப்பூண்டு. (மலையக.)

வயற்செம்பை—ஓர் செம்பை; செம்பை-சிற்றகத்தி. (மலையக.)

வயற்றுத்தி—ஓர் துத்தி. (வைத்தியபரி.)

வயனம்—வசனம். (திருவிளை. மாறியாடி. உஎ.)

வயா—1. ஆசை. 2. கருப்பம். 3. வருத்தம். 4. வேட்கைநோய். (மணிமே.) (1, 2, 3-பிங்கல. சo கூo.)

வயாஅம்—விரும்பும். (ஐங்குறுநூ.)

வயாமது—சீந்தில். (மலையக.)

வயாவு—வயா.

வயான்—காரிப்பிள்ளை. (பிங்கல. உஙசரு.)

வயானம்—பறவை. (சூ. நிக. நு: சுஅ.)

வயிக்கிராந்தம்—குமுதபாஷாணம். (வைதிதியபரி.)

வயிடூரியம்—நவமணியிலொன்று. (சிலப். கசு: கஙஉ. உரை.)

வயிந்தவம்—வைந்தவம்: அது சுத்தமாயை. (சி. சி. க: உரு. உரை.)

வயிர்—1. கொம்பு. (பிங்கல. கஉசுஅ.) 2. கொம்பென்னும்வாச்சியம். (பத்துப்பாட்.) 3. மூங்கில். (ஐங்குறுநூ.)

வயிரகரணி — பெருகெருஞ்சில். (வைத்தியபரி.)

வயிரம்—1. கூர்மை. 2. கோளகை. 3. சினம. 4. தண்டாயுதம் (ஸ்ல கருடன) 5 நவமணியிலொன்று 6. மரவயிரம். 7. வச்சிராயுதம். 8. வலி (1, 3, 5, 6, 7-பிங்கல. சo கூக.) (2, 8-சித்தா.)

வயிரவம்—பைரவம்

வயிரவராதி—1. வடம்புரி. 2. நந்தியாவட்டம். (1 2-வைத்தியபரி.)

வயிரவல்லி—பிரண்டை. (வைத்தியபரி.)

வயிரவளை—நரிப்பயறு. (வைத்தியபரி.)

வயிரவன்—1. வைரவன். (சூ. நிக. க: உஎ.) 2 சிறுகீரை. (வைத்தியபரி.)

வயிரவி—பைரவி.

வயிரவூசி — மணிகளைத் துளையிடுமூசி. (நன்னூ. பெயரிய. உ உரை.)

வயிரவேர் — சாயவேர். (வைத்தியபரி.)

வயிராகம்–வைராக்கியம். (உ-ம்.) "ஊன்று ஞானமோடியர்வயிராக நல்லொழுக்கம்" (பிரபு லிங்கலீ. கைலாச. சசு.)

வயிராவி — ஓர் வைரவசமயவேடத்தன். (வழக்.) பாண்டிநாட்டிற்சிலர் உள்ளார்கள் அவர்கள் வயிராவிப்புலவரெனச் சிலரூர்களிலிருக்கிறார்கள்.

வயிரி—1. வல்லாறு. 2. விரோதி. 3. வைரமுள்ளவன். (1, 2, 3-வழக்.)

வயிரித்தல்— } வயிரிப்பு— } வைரமாதல். (வழக்.)

வயிரியர்—1. கூத்தர். (சூ. நிக. உ: சுஅ) 2. பாணர். (பிங்கல. அகரா.)

வயிரோசனி — சிவதை. (வைத்தியபரி.)

வயிற்றுக்கிராந்தம் — குமுதபாஷாணம். (வைத்தியபரி.)

வயிற்றுவலி— } வயிற்றுளைவு– } வயிற்றெரிவு– } ஓர்வித நோய். (வழக்.)

வயிறு—உதரம் (பிங்கல. கஅசு)

வயிறுவாய்த்தல் — பிரசவித்தலென்னுங் குறிப்புமொழி. (இராமா. ஆரணிய. சடாயு காண். உடு.)

வயிநதேயன்–கருடன். (சூ. நிக. சு: நுஉ.)

வயிலத்தி—உள்ளங்கால். (வைத்தியபரி.)

வயின்—1. இடம். 2. ஏழாம்வேற்றுமை யுருபு. (நன்னூ. பெயரிய. சடு.) 3 முறை. (புறநா.) 4. வயிறு 5. வீடு. (1, 4, 5-சூ. நிக. கக: யகரவெ. சு.)

வயேகடம்—மரமஞ்சள். (வைத்தியபரி.)

வயோதிகம்—விருத்தாப்பியம். (வழக்.)

வயோதிகர்—கிழவர். (வழக்.)

வயோவகவம்—ஈயம் (வைத்தியபரி.)

வர்க்கம்—1. எருக்கலம்பால். 2 வருக்கம்.

வர்ச்சநீயம்—தள்ளத்தக்கது.

வர்ச்சியம்—வருச்சியம். (வழக்.)

வர்ணகம்—1. சந்தனம். 2. இலகமரம். (1, 2-வைத்தியபரி.)

வர்ணம்—குங்குமம். (வைத்தியபரி.)

வர்ணவதி—மஞ்சள். (வைத்தியபரி.)

வர்ணி—பொன். (வைத்தியபரி.)

வர்ணியம்—உபமேயம். (விசாக. அணியிலக் கூ.)

வர்த்தகம்—வருத்தகம், வியாபாரம்.

வர்த்தநம்—வருத்தநம்.

வர்த்தமானம்–1. சிற்றுமணக்கு. 2. நிகழ்காலம். (தர்க்காமிரு.)

வர்த்தளை—பெருகுகை. (வழக்.)

வர்த்தி—வத்தி.

வர்த்திதல்—தங்குதல், (மணிமே.)

வர்மம்—வன்மம் (வழக்.)

வரகு—ஒரு தானியம். (சிலப் ஊர்காண். உகக. உரை)

வரகுணபாண்டியன் — ஓர் பாண்டியன். (அபிதாநகோ)

வரங்கிடத்தல்—வரம்வேண்டிக்கிடத்தல். (மணிமே) "வரங்கிடந்தான்றில்லேயம் பவமுன்றிலம்மாயவனே" எனத்திருக்கோவையாரிலுங் கூறியதறிக

வரட்சி-வாளுசல் சி-தொழிற்பெயர்விகுதி

வரட்சுண்டி—ஓர் செடி. (வைத்தியபரி) இதை நிகண்டில் சமங்கையென்பர்.

வரடம்—1 அன்னம் 2. முல்லை. (1, 2-வைத்தியபரி)

வரண்டகம் — உண்டை, சுவர் முதலிய வற்றிற்குரைப்பர் (உ-ம்.) வரிற்கொன்க.

வரண்டம்–சாலை, தூண்டிறகயிறு முதலிய வற்றிற்குரைப்பர். (உ-ம்.) வரிற்கொன்க.

வரண்டாலு—ஆமணக்கு (வைத்தியபரி.)

வரண்டியம் — பேராமுட்டி. (வைத்தியபரி.)

வரணம்— ஓட்டகம், சூழ்தல், பால், மதில் முதலியவற்றிற்குக்கூறுவர் உதாரணம் வரிற் கொள்க.

வரத்து—வருகை. (வழக்.)

வரதம்—வரந்தருதலாகக் கையமைத்தல் (திருவா நான்மணிமா. கச) இது வரதகம் எனவும் வருமென்பர்.

வரதன்—1 அரி (பிங்கல. கசo) 2. அருகன். (சூ நிக. க: நு.) 3. வரந்தருமவன். (வழக்.)

வரதாரு –தேக்கமரம் (வைத்தியபரி.)

வரதுங்கபாண்டியன்– அதிவீராமபாண்டியன் தமையன். இவனே வரதுங்கராம்பாண்டியன் எனவுங்கூறுவர் (பிரமோத்திர. சிறப்புபாயி.)

வரதை—வரந்தருபவள் (வழக்.)

வரந்தருவான்–வில்லிபுத்தூராழ்வார் குமாரன். (பாரத. பாயிரத்திறகாண்க.)

வரநதி—கங்கை. (சூ. நிக க: சுசு.)

வரப்பு—வரம்பு. (வழக்.)

வரப்புகீகடா—நண்டு. (வைத்தியபரி.)

வரப்புள்—வயல். (பிங்கல. நுஎக.)

வரபலம்—தென்னைமரம். (வைத்தியபரி.)

வரம் — 1. தேவருகை. அது, வேண்டும் பொருள். (பத்துப்பாட்.) 2. நவசக்தியிலொன்று. (பொருட்டொகை நிக.) 3. மஞ்சள். (வைத்தியபரி.) 4. மேன்மை. (உ-ம்.) "சுரநதிமுத லாவரநதிமூன்றும்" (திருவாரூர். நான்மணிமா. கஉ.) 5. ஏர் முதலியவற்றிற்குங் கூறுவர். (உ-ம்.) வரிற்கொள்க.

வரம்பநது—கங்கு. (பிங்கல. நிகண்.)

வரம்பிலாற்றலுடைமை— } கடவுளெண்
வரம்பிலின்பமுடைமை— } குணத்தொன்று. (வள். கடவுள்வாழ்த். கூ. உரை.)

வரம்பு—1. அணை. (வழக்.) 2. எல்லை. (நன்னூ. விருத்தி. உரியிய உ0. உரை.) 3. ஒழுங்கு. 4. வயல்வரம்பு. (3, 4-வழக்.)

வரயோகம்—சுபயோகத்தொன்று, நந்தையுடன்கூடினசதயம், கார்த்திகை, திருவாதிரை, சித்திரை இவை வரயோகமாம். பிரதமை, சஷ்டி, ஏகாதசி யிம்மூன்றும் நந்தையாம். (விதானமாலை. குணகுணப். க0.)

வரர்—தேவர். (பிங்கல. கஎஎ.)

வரருசி-பாணினியிலக்கணத்துக்கு வியாக்கியானஞ்செய்த முனிவர். (அபிதாநசிந்.)

வரல்—வருதல். (உ-ம்.) வரனசைஇயின்னுழுளேன். (வள்.)

வராலாற்றுவஞ்சி — ஓர்பிரபந்தம். இது, குலமுறை, பிறபபு, கீர்த்தி முதலியவற்றை வஞ்சிப்பாவாற்கூறுவது. இலக்கணவிளக்கப் பாட்டியலில். தனிநிலைச்செய்யுள் வகையிலொன்றென்றார்.

வரவு — 1. வணக்கம். (பரிபாடல்.) 2. வருகை. உ-தொழிற பெயர்விகுதி. (நன்னூ. பதவியல். கசு. உரை.)

வரவேதிரிந்திருத்தல்—ஓர் துறை. (புறப். வெ. மாலை.)

வரளல்— } வரட்சி. (வழக்.)
வரளுதல்- }

வரளாரை — ஆரைக்கீரையிலொருவகை.

வரற்கியம் — கோடைக்கிழங்கு. (வைத்தியபரி.)

வரன்—1. அயன். 2. அருகன். (சூ. நிக. க: க.) 3. கணவன். 4. சிவன் முத்தர்களிலொருவன். (கைவல்லியநவ. தத்துவவி. க00.) 5. பரமன். 6. புத்தன். (சூ. நிக. க: கள.) (1, 3, 5-சூ. நிக. கக: சகரவெ. கசு.)

வரன்றல்—கொழித்தல். (பிங்கல. உகநிக.)

வரன்றி—அரித்தி. (சிந்தா.)

வராக்கு—கொம்மட்டி. (வைத்தியபரி.)

வராககரணி—அசுவகந்தி. (தைலவ.)

வராகக்கற்பம்—ஒருகற்பம். (அபிதாநசிந்.)

வராகபுடம்— ஐம்பதெருவைத்தெரிக்கும் புடம். இது, வைத்தியர் வழக்கு.

வராகபுராணம்— பதினெண்புராணங்களிலொன்று. (பொருட். நிக.)

வராகம்—1. நிலப்பனை. (வைத்தியபரி.) 2. பதினெண்புராணத் தொன்று. (பொருட். நிக.) 3. பன்றி. (பிங்கல. உசுஉ)

வராகன்—1. ஓர் நாணயம். (வழக்.) 2. வராகாவதாரமான பெருமாள். (பிங்கல. கசு0.) 3. கூத்தன்குதம்பை. (வைத்தியபரி.)

வராகன்பூடு—கூத்தன்குதம்பை. (வைத்தியபரி.)

வராகனிடை ஒன்பதுபணவிடைகொண்ட நிரை. (வைத்தியசாசங்.)

வராகாதநம் — காலுங்கையும் ஊன்றிக் கவிழ்ந்துநிற்பது. இவ்வாதனம், பொருட்டொகை நிகண்டிற்கூறவில்லை. வந்துழிக்காண்க.

வராகி—1. சத்தமாதருள்ஒருத்தி. (சூ. நிக. கஉ: சுஎ) 2. சிற்றரத்தை. 3 நிலப்பனை. 4. பன்றிமொத்தை. (2, 3, 4-வைதகிபரி.)

வராகிமாலை — வராகியைப் பற்றித்துதிக்கும் பிரபந்தம்.

வராகிவேய்—பன்றிமூள். (வைத்தியபரி.)

வராங்ககம்—இலவங்கப்பட்டை. (வைத்தியபரி.)

வராங்கனை — 1. கூந்தற்பனை. 2. வரமுடையபெண்.

வராங்கி—மஞ்சள். (வைத்தியபரி.)

வராசனம்—சீனமுட்செவ்வந்தி.

வராட்டி—எரு. (வழக்.)

வராடகம்—1. கயிறு. 2. தாமரைக்காய். 3. பலகறை. (2-சூ. நிக. ச: சுo.)

வராடம்- } பலகறை. (சூ. நிக. சு: கஉ.)
வராடி- }

வராலி ஒருவகைமீன். (காஞ்சிப்.நாட்.எஉ.)

வராலகம்- } இலவங்கம். (வைத்திய
வராலம்— } பரி.)

வராலி—பிரமி. (வைத்தியபரி.)

வராளம்—பாம்பு. (வைத்தியபரி.)

வராளி—ஓரிராகம். (வழக்.)

வரானி—பாலை. (வைத்தியபரி.)

வரி—1. இசை. 2. இசைப்பாட்டு. 3. எழுத்து. 4. கடல். 5. கடன். 6. குடியிறை. 7. சந்தித்தெரு. 8. தெரிநிலைவினைப்பகுதி. 9. தேமல். 10. நிறம். 11. நீளம். (சூ. நிக. அ: கசு.) 12. நெல். 13. புள்ளி (ஐங்குறுநூ.) 14. புகர். (பத்துப்பாட்.) 15. வண்டு. (பிங்கல. உசுஅஉ.) 16. விரல் முதலியவற்றினரேகை. (வழக்.) (1, 2, 3, 4, 5, 6, 7, 9, 10-பிங்கல. கூ0கூஉ.)

வரிக்கடை–வண்டி. மறைசையந்தாதியில். (உ - ம்.) "சேறுவரிக்கடை" யென்னு முதற் குறிப்பையுடைய செய்யுளிற் காண்க.

வரிக்குப்பசீசை — நாகப்பசசை. (வைத்தியபரி.)

வரிக்கும்–மீகாலஞ்செய்யும். (ஐங்குறுநூ.)

வரிக்கோசை ஒருவகைக்கோசை.(வழக்.)

வரிகாரம்—பொரிகாரம். (வைத்தியபரி.)

வரிச்சுருள்–செவ்வட்டை.(வைத்தியபரி.)

வரிசந்தி—நாற்றெருக்கூடுமிடம். (பிங்கல சூசூ.)

வரிசி—தூண்டில்.

வரிசை—1. ஒழுங்கு. (உ-ம்.) "வரிசைநீடு யர்மாளிகை" (திருவால. திருவிளை. சக.) 2. சிறப்பு. 3. தரம. 4. மேம்பாடு. 5. நற்சீர். 6. வெருமானம் (திருவிளை. இந்திரன்முடிமேல். வளையறிந். கூஎ.) (2, 3, 4-புறநா.)

வரிசைமகளிர்–ஏறலியர். (பதிற்றுப்பத்.)

வரிசையாளர்—கீழ்க்குடிகள். (பதிற்றுப பத்.)

வரிட்டன் — சீவன்முத்தர்களிலொருவன். (கைவலலிய. தத்துவவி. க00.)

வரித்தல்—1. எழுதுதல். (சூ. நிக. கூ: கஉ.) 2. கடடல. (வழக்.) 3. நியமித்தல். (திருவிளை. இந்திரன்முடிமேல்வளை. உசு.) 4. பூசுதல். (சூ. நிக. கடு.)

வரிதுகம்–சொல்வகை நான்கி லொன்று. அது, முப்பத்திரண்டியலில்வருவது. (சிலப்.)

வரிதல்—1. எழுதுதல். (பிங்கல. உகஉச) 2. கட்டுதல். (வழக.)

வரிப்ப—ஈகலஞ்செய்ய. (ஐங்குறுநூ)

வரிப்பிரேதீதம்—சததபபை.(மலையக.)

வரிப்புறம்— முணல். (சூ. நிக. கூ: உக.)

வரிபரிசி —சீரகம். (வைத்தியபரி.)

வரியன் — சீவன் முத்தர்களிலொருவன். (கைவலலிய. தத்துவவிளக். க00.)

வரிவோட்டி–} ஒருவகை மீன் ஒரு குழு
வரிவோரா—} உக்குறி.

வரிவரி — தண்ணீர்விட்டான் கிழங்கு. (தைலவ.)

வரிவரிமாலி—கற்றுழை. (மலையக.)

வரிவநம்—தில்லைமரம். (மலையக.)

வரிவயமீ—புலி (புறநா.)

வருக்கக்கோவை—ஓர் பிரபந்தம. (பொருட். நிக.)

வருக்கம்-1. இனம். 2. ஒழுங்கு. 3. குலம். 4 வகுப்பு (1, 2, 3, 4-வழக்.)

வருக்கமாலை–ஓர்பிரபந்தம்.(பொருட்.நிக.)

வருக்கமோனை—அடிகள்தோறும் வருக்க வெழுத்துக்கள் மோனையாய்வரத் தொடுப்பது (யாப். காரி. ஒழியியல். கூ.)

வருக்கவேதுகை-அடிகள்தோறும்வருக்க வெழுத்துக்கள் எதுகையாய்வரத்தொடுப்பது. (யாப் காரி. ஒழியியல் கூ.)

வருக்கு—கஞ்சி. (வைத்தியபரி.)

வருக்கை—பலா. (சூ. நிக. ச: கசு.)

வருகம்—1. இலை. 2. பரிவாரம் 3. மயிற் றோகை.

வருகாலம்—எதிர்காலம். (வழக்.)

வருகை—வரவு. (வழக்.)

வருச்சித்தல்-} தள்ளப்படுதல். (வழக்.)
வருச்சியம்—}

வருட்டு—வேம்பு. (வைத்தியபரி.)

வருட்டல்—} வற்புறுத்தல். (சூ. நிக.
வருட்டுதல்-} கூ: கூக.)

வருடகம்—மூடக்கொத்தான். (வைத்திய பரி.)

வருடபுட்பம்—தாழம்பூ. (தைலவ.)

வருடம்—1. ஆண்டு. (சூ. நிக. க: அஅ.) 2. பாரதவருடமுதலிய வருடம். 3 மழை. (சூ. நிக. க: அசு.)

வருடல்—} தடவல். (சூ. நிக. க: கூஉ)
வருடுதல்-}

வருடை—1. ஆடு. (சூ. நிக. கூ: கசூ.) 2. எண்காற்புள். (பிங்கல. உசுஉள.) 3. மேடம். (சூ நிக. கூ: கஅ.)

வருணகம்—1. சந்தனம். 2 திலகமரம். (வைத்தியபரி.)

வருணசிவாசாரியர் — சைவசித்தாந்தபத் தாசிரியர்களிலொருவர். (அபிதானசிந்.)

வருணம்—1. அழகு. 2. குலம். 3. நிறம். (சூ. நிக. அ: உசு.) 4. கீர். 5. பொன்முதலிய வற்றிற்குங்கூறுவர். (உ - ம்.) வரிற்கொள்க. (1, 2, 4-பிங்கல. சoசூ.)

வருணாவதி—மஞ்சள். (வைத்தியபரி.)

வருணாவிநீது—முத்துச்சிப்பி. (வைத்திய பரி.)

வருணன்–1. துவாதசாதித்தரிலொருவன். (பொருட். நிக.) 2. மேற்றிசைப்பாலன் (சூ. நிக. கஉ: எக.)

வருணாஞ்சி—சதயம். (சூ. நிக. க: எஎ.)

வருணானை — வருணிபபு. (தண்டியலங். பொதுவணி. எ.)

வருணி—பொன். (வைத்தியபரி.)

வருணித்தல்—வருணனை.

வருத்தநம்–1. தொழில். 2. பெருகுகை. (1, 2-வழக்.) இன்னும் பலபொருள் கூறுவர்.

வருத்தம்—துன்பம். (வழக்.)
வருத்தல்—
வருத்துதல்— } துன்புறுத்தல். (வழக்.)
வருதல் — 1. அவதரித்தல். (பரிபாடல்.) 2. வளர்தல். (திருவாரூர் நான்மணி. கஉ.)
வருதி—வருவாய். (புறநா.)
வருதியர்—வருக (பத்துப்பாட்.)
வருதும்—வருவோம். (ஐங்குறு.)
வருந்தல்—
வருந்துதல்— } துன்புறல். (வழக்.)
வருந்துரு—கோங்கு. (வைத்தியபரி.)
வருநர்—விருந்தினர். (புறநா.)
வருபுனல்—யாறு. (வழக்.) (புறநா.)
வருமானம்—வரவுப்பொருள். (வழக்.)
வருவல்—வருவேன். (புறநா.)
வருவாய்—வரும்படி. (ஐங்குறுநூ.)
வருவித்தல்—வரச்செய்தல். (வழக்.)
வருதம்—1. இருப்பிடம். 2. கவசம்.
வருதினி–படை. (பாரத. கசு-ஆம்போர். நிரூ.)
வரேண்யம்—குங்குமம். (வைத்தியபரி.)
வரை—1. அளவு. 2. இடம் 3. எல்லை. (புறநா.) 4. எழுத்து. 5. கல். 6. சிகரம். 7. பக்க மலை. (பத்துப்பா.) 8. பெருமலை 9. மலை. 10. மூங்கில். 11. வரைவு. 12. விரலிறை. (1, 9, 10, 11, 12-பிங்கல.) (2, 5, 6-பரிபாடல்.)
வரைக்குடிலம்–வங்கக்கல். (வைத்தியபரி.)
வரைதல்—எழுதுதல். (பிங்கல. உகஉச) 2. கொள்ளல். 3. நீக்கல். 4. விவாகஞ்செய்தல். வரைதல்வேட்கை. (நம்பியக.) (2, 3-சூ. நிக. கக: ககரவெ. கஎ.)
வரைதி—கூறுபடுப்பை (புறநா.)
வரைந்த—எல்லையிட்ட. (பத்துப்பாட்.)
வரைப்பு—1. எல்லை. (சூ நிக அ: கக.) 2. குளம். 3. மதில். (2, 3-பத்துப்பாட்.)
வரைபகவெறிநீதோள்–கந்தன். (சூ. நிக. க: உரு.)
வரையரமகளிர்– மலையில்வாழுந்தெய்வப் பெண்கள். நம்பியகப்பொருளில் இரவுவரல் லிலக்கலிற் காண்க.
வரையறுத்தல் — மதித்தல். (பிங்கல, கஎஎஎ.) எல்லைப்படுத்தலுமாம்
வரையறை–1. அளவு. 2. எல்லை.(வழக்.)
வரையாடு—மலையாடு. (வழக்.)
வரையாமை–நியதியில்லாமை (மணிமே.)
வரையாளர்—நியதியில்லாள். (மணிமே.)
வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்—அகப்பொருட்டுறையினொன்று.
வரைவு—வரைதல்.
வரைவுமலிவு — அகப்பொருட்டுறையி னொன்று
வல்–1. சூதாடுகருவி. 2. வலி. 3. விரைவு. (சூ. நிக. கக. லகரவெ. க0.)
வல்கம்—பட்டை. (தைலவ.)
வல்கி—வீணை. வல்லகி என்றுங் கூறுவர்.
வல்கிதம் — குதிரையைங்கதியினொன்று. (சிந்தா. காந்தருவதத். உகூஉ-கவி உரையில் வற்கிதமென்று கூறியிருக்கிறார்.) அவர்கூறிய ஐங்கதியாவன—"விக்கிதம் வற்கிதம்வெல்லு மூபகண்டம், மத்திமஞ் சாரியோ டைந்து. நிகண்டில் இவ்வாறுகூறுது வேறுகூறுவர்.
வல்சி—1. அரிசி.(திருவிளை. குண்டோதரனுக். கடி.) 2. உணவு. 3. சோறு. (2, 3-பத்துப்பாட்.)
வல்லடி—வல்வந்தம். (வழக்.)
வல்லாங்கு—காளி. (சூ. நிக. க: ஈஅ.)
வல்லாதம்—கொலை.
வல்லபம்—வல்லமை. (வழக்.)
வல்லபன்—வல்லோன். (வழக்.)
வல்லபாசாரியார்-வேதாந்தசூத்திரத்திற்கு வியாக்கியானஞ்செய்தவர். (அபிதாநகோ.)
வல்லபை — விநாயகருக் கோர் மனைவி. (காஞ்சிப். அநேகதங். கூ, க0, கக.)
வல்லம்—1. ஓர் ஊர். (வழக்.) 2. தொண்டைநாட்டில் ஓர் சிவதலம். (தேவார. திருவல்லபதிகம். க.) 3. வாழை. (வைத்தியபரி.)
வல்லமை—வல்லபம்.
வல்லரி—1. கொடி. 2. தளிர். (சூ. நிக. ச: சஎ.) 3. பசுங்காய். 4. பூங்கொத்து. (1, 3, 4-வைத்தியபரி.)
வல்லவன்–1. கணவன். (சூ நிக. உ: எஅ.) 2. வல்லான் (வழக்.)
வல்லவி—1. நாயகி. (சூ. நிக. உ: எசு.) 2. வல்லமையாள். (வழக்.)
வல்லா–வல்லமையில்லாதன. (ஐங்குறுநூ.)
வல்லாங்கு—சதுரப்பாடு. (புறநா.)
வல்லாண்முல்லை—ஒரு வீரனுடைய வீட்டையும்,ஊரையும் இயல்பினையுஞ்சொல்லியவ ஞண்மைத்தன்மையை நன்மைபெருகச்சொல் லுதல். (புறநா.)
வல்லாதா-சேங்கொட்டை.(வைத்தியபரி.)
வல்லாதீமே — வல்லமையில்லாயாயிரு. (ஐங்குறுநூ.)
வல்லாம்–வல்லமையில்லாய் (ஐங்குறுநூ.)
வல்லார்–1. மாட்டாதார். சூ.நிக. உ: சசு.) 2. வன்மையையுடையார். (வழக்.) வன்மையிலாரெனில். ஆ - எதிர்மறைவிகுதிபுணர்ந்து கெட்டது.

வல்லாரை—1. ஓர் பூடு. (வைத்தியபரி.) 2. கேட்டைநாள். (சூ. நிக. க: எடு.)

வல்லாளன்-1. கொங்கணதேசத்துஅரசன் என்றும் விசயநகரத்து அரசன் என்றுங்கூறுவர். (அ பி தா ந சிந்.) 2. வன்மையுள்ளவன். (வழக்.) 3. விநாயகபுராணம் வல்லாளன் முத்தியடைந்தபடலத்திற்காண்க.

வல்லாறு—வல்லவண்ணம். (ஐங்குறுநூ.)

வல்லான்—வல்லவன். (பதிற்றுப்பத்.)

வல்லி-1. அளவு. 2. இடைச்சேரி. 3. உபநிடதம்.(பொருட்டொகை-நி.) 4. கால்வில்லங்கு. 5. கொடிமருந்து. 6. நீங்கல். (சூ. நிக. க: சசு.) 7. படர்கொடி. 8. பலாசு. 9. பிரிதல். (பிங்கல. ககசுஅ.) 10. முருக்கு. (மலையக.) 11. வள்ளிக்கொடி. (1, 2, 4, 7-சூ. நிக. கக: லகரவெ. அ.) (5, 8, 11-வைத்தியபரி.)

வல்லிக்கயிறு—அரைஞாண். (சிந்தா.)

வல்லிகம்—1. கொடி. 2. மிளகு. (1, 2-வைத்தியபரி.)

வல்லிகை—காதணி. (சூ. நிக. எ: உசு.)

வல்லிசம்—மிளகு. (தைலவ.) வல்லீசம் என்றுங் கூறுவர்.

வல்லிசாதகம்—கற்பகத்திற்படர்கொடி. (வைத்தியபரி.)

வல்லிசூரணை புளிவசளை. (வைத்தியபரி.)

வல்லிசை—1. உச்சவிசை. (சூ. நிக. க0: ச0.) 2. பாம்பு. (வைத்தியபரி.)

வல்லியம்-1. இடையரூர்.(பிங்கல. சுசஅ.) 2. செவ்வல்லி. 3. புலி. (சூ நிக. சு: சு.) 4. மஞ்சள். (2, 4-வைத்தியபரி.)

வல்லியை-அமுக்கிராக்கிழங்கு.(தைலவ.)

வல்லிவள்ளி—சித்திரமூலம். (தைலவ.)

வல்லிவாம் —வல்லெழுத்து. (நன்னூ.எழுத்திய. கசு.)

வல்லினமோனை-எல்லாவடிகளின் முதற்கண்ணும் வல்லினவெழுத்துக்கள்வருவது. (யாப் காரி. ஒழிபியல். சூ. உரை.)

வல்லினவேதுகை — எல்லாவடிகளின் முதற்சீர்க்கண்ணும் வல்லினவெழுத்துகளை துகையாய்வருவது. (யாப். காரி. ஒழிபியல். சூ. உரை.)

வல்லுதல்-வன்மையுடைத்தாதல். (வழக்.)

வல்லுநர்—வல்லார். (சூ நிக. உ: சசு.)

வல்லுநையோ-வல்லாயோ.(ஐங்குறுநூ.)

வல்லுவம் — காடு, மணல், வயல் முதலியவற்றிற்குரைப்பார். (உ-ம்.) வரிற்கொள்க.

வல்லுவள்—வல்லாள். (ஐங்குறுநூ.)

வல்லுவை—வல்லாய். (ஐங்குறுநூ.)

வல்லுளி—பன்றி. (சூ. நிக. ங: ககூ)

வல்லோகம்—1. ஆண்குரங்கு. 2. கரடி. (1, 2-வைத்தியபரி.)

வல்லோரம்—பாழ்நிலம்.

வல்லோறு — இராஜாளியென்னும்பறவை. இது பஞ்சபக்ஷிகளிலொன்று.(சூ.நிக.கஉ:ஙஉ.)

வல்லோனல்—அநுகரணவோசை.(சூ.நிக. க0: சஅ.)

வல்லை—1. கடுப்பு. (சூ. நிக. க: ஙகூ) 2. காலவிரைவு.. (சூ. நிக க: அக.) 3. குறுங்காடு. (வைத்தியபரி.) 4. புன்முருக்கு. 5. முருக்கு. 6. பெருங்காடு. (சூ. நிக. ச: நிசு.) 7. வட்டம். (சூ. நிக. அ: உ.) 8 வலிமை. (சூ. நிக. கக: லகரவெ. கஎ.) 9. வன்மையையுடையாய். (புறநா.)

வல்லையம்—ஓர் ஆயுதம். (வழக்.)

வல்லோம்—வன்மையில்லேம். (புறநா.)

வல்லோரோழிப்பு—ஓரலங்காரம். இது, பிறரைய முற்றுவினவிய தஞ்சொல்லி னுண்மைப்பொருளே வல்லோர் அச்சொல்லுக்கு மற்றொருதாற்பரியத்தைக்கற்பித்து மறுத்தல். (விசாகப். அணியிலக். எ. பக்கம்.)

வல்லோன்—வல்லான். (சூ. நிக. உ: சசு.)

வல்வாலோட்டி—ஓர் முட்செடி. (வைத்தியபரி.)

வல்விலங்கு—யானை. (பிங்கல. உசகஉ.)

வல்விலோரி – கடையெழுவள்ளலிலொருவன். (சூ. நிக. உ: உச.) இவனே ஓரியெனவுங் கூறுவர்.

வல்விளாவரிசி-பொரி, அவல் முதலியன (சிந்தா.)

வலக்காரம்—1. பொய். (சூ. நிக. க0: சு.) 2. விரகு, உபாயம். (உ-ம்.) "சிறுவலக்காரங்கள்செய்தவெல்லாம்"(திருகோவை. உஎ.)

வலக்கதம்—சூழ்ச்சி. (புறநா.)

வலங்கமரீ—ஓர்சாதியார். வழக்குண்டுபோலும்.

வலங்கை—1. வலக்கை. 2. வலப்புறம். (1, 2-வழக்.)

வலங்கொள்ளல் — 1. வலம்வருதல். 2. வெற்றியடைதல். (1, 2-வழக்.)

வலசாரி-வலமாய்ச்சுற்றிப்போதல்.(வழக்.)

வலசை—கூட்டம். (வழக்.)

வலஞ்சுழி—திருவலஞ்சுழியென்னுஞ் சிவதலம். இது, சுவாமிமலைக்குச்சமீபமாயுள்ளது.

வலத்தல் — 1. கட்டுதல். (பத்துப்பாட்.) 2 சூழ்தல. (சிந்தா.) 3. சொல்லல். 4. முடைதல். (சூ. நிக. க: உஅ.) 5. வலமாதல். (வழக்.)

வலந்த—1. கட்டின. (புறப்பொ. வெ.) 2. சூழ்ந்த. (புறநா)

வலந்து—கொடுத்து (பரிபாடல்.)

வலந்தது—சூறியது. (சிந்தா)

வலந்தம்—வளைவு.

வலந்திரி—ஓர் கொடி

வலம் 1. ஆணை. (பரிபாடல்.) 2. இடம். (சூ நிக. நி: சுநி) 3 ஏழனுருபு. (நன்னூ. பெயரிய. சநி) 4 வலப்பக்கம் (வழக்.) 5. வலி (புறநா) 6. வெற்றி (சூ நிக. அ: கூஉ.)

வலம்புரி—1. ஓர் மரம். 2. சங்கு வலம்புரியாயிருப்பது. 3. நந்தியாவர்த்தம். 4. வலம்புரி வடிவாகச்செய்ததலைக்கோலம்.(பத்துப்பாட்) (1, 2, 3-சூ நிக. கக: லகரவெ. கஉ)

வலம்புரிக்காய்—ஒருவகை மருந்துக்காய். (வைத்தியபரி)

வலம்புரிப்புல் — ஒருவகைப்புல் (வைத்தியபரி.)

வலம்புரிவிநாயகர் — காஞ்சியிலிருக்கும் ஓர் விநாயகர் காஞ்சிப்புராணத்திற்காண்க.

வலயம்—1 கடல். (பிங்கல. நிஅசு) 2. மீர்நிலை. (பிங்கல. சுoஈ.) 3. பாத்தி. (சிலப்) 4. வட்டம். (சூ. நிக. அ: உ.) 5. வளையல். (பெரியபு. திருநாவுக்காசுநா. கூ.) 5. வாகு வலயம்.

வலவன்—1. சமர்த்தன். (வழக்) 2. திருமால். 3. தேர்ப்பாகன். 4. வெற்றியாளன் (2, 3, 4-சூ. நிக கக: லகரவெ. க.)

வலவா—கட்டாத. (பத்துப்பாட்.)

வலவை—1. இடாகினி. (பிங்கல. கஉக.) 2. காளி. (பிங்கல. கககூ) 3. காளியேவற் பெண். 4. நாணிலி. 5. வல்லபம். (4, 5-சிலப்.) 6. வல்லவள். (வழக்.) 7. வல்லோன். 8 வெற்றியையுடையை. (சிந்தா.) (3, 7-சூ. நிக. கக: லகரவெ கசு.)

வலன்-1. ஓரசுரன். இவனுடம்பு நவமணியாயினதென்பர். (திருவிளை மாணிக்கம்விற்ற படலம். கஅ.) 2. வல்லபன் 3 வலப்பக்கம். 4. வலிமை. 5. வெற்றி. (சூ. நிக. அ: கூஉ.) 2, 3, 4-வழக்.)

வலாகம்—கொக்கு. (சூ நிக. கு: சுசு.)

வலாகை—கொக்கு.

வலாகம—1. குயில். 2. தவளை. (1, 2-வைத்தியபரி.)

வலாத்காரம்—வலாற்காரம். (வழக்.)

வலாரி—இந்திரன், வலனென்னுமசுரனை வென்றவன். (திருவிளை. இந்திரன்பழிதீர்த். நிஅ.)

வலி-அகங்காரம். (பரிபாடல்.) 2. ஓரலங்காரம். அது, தொகைச்சொற்றொடர் புண்டாகத்தொடுப்பது. (தண்டி. பொதுவணி. உசு.) 3. ஓர் நோய் (வழக) 4 தெரிநிலைவினைப் பகுதி. 5. நறுவிலிமரம். (வைத்தியபரி.) 6. பற்றிரும்பு. (பங்கல. ககுoஉ.) 7. வன்மை. (பிங்கல. கஎசுo.) பிங்கலத்தில், ஒலி. கபடம். வலியோன் இம்மூன்றிற்குங் கூறுவர்.

வலிக்கட்டு — வீணையிலேறுபுப்பு. அதற்குத் திவவென்றுபெயர். (சூ. நிக. கo: சசு.)

வலிச்சற்கோடி—ஓர் கொடி (வைத்தியபரி.)

வலிசம்—வளிசம், தூண்டில்.

வலித்த—கருதிச்செய்யப்பட்ட. (புறநா.)

வலித்தது—துணிந்தது. (சிந்தா.)

வலித்தல்—1. இழுத்தல். 2. உடன்படல். (சூ. நிக. கு: நிசு.) 3. கொழுத்தல். 4. தோணி தூண்டல். 5. நிச்சயித்தல். 6 நினைத்தல் (சூ. நிக. அ: சுசு.) 7. பேசல் 8. மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கல். (நன்னூ. உயிரீற். நி.) 9. வலியுண்டாதல். 10. வளைத்தல். (சூ நிக. கு: உசு.) (3, 7-பிங்கல. சoசுக.)

வலித்திடல்-சொல்லல். (சூ. நிக. கo: நி.)

வலிதம்—1. அசைவு. 2. சூழ்வு.

வலிதல்-1. தங்கல். 2. துணிதல். 3. வலிந்துகோடல். (வழக.)

வலிது —வலியது. (வழக்)

வலிதுகோடல் — அருமையிற்கருத்துக் கொள்ளல்.(நன்னூ. உருபுபுணரி. கஅ. உரை.)

வலிப்பு-1. இழுப்பு. 2. வலி. (1, 2-வழக்.)

வலிப்புநீ—வற்புறுத்தி. (சிந்தா.)

வலிமாந்தம்-மாந்தம் எட்டினுள்ளொன்று. பொருட்டொகை. நிக.)

வலிமினம்-துணிவீர். அம்-அசை.(சிந்தா.)

வலிமுகம்—சுரங்கு. (பிங்கல. உநிoசு.)

வலிமை—வன்மை. (வழக்.)

வலிய-தானுக. (பெரியபு.தடுத்தாட்.சுஅ.)

வலியறிதல் — நால்வகை வலிமையையும் அளந்தறிதல்-நால்வகையாவன:-வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி. (வள். சஅ. அதிகாரம்.)

வலியன்— } 1. கரிக்குருவி. (திருவிளை.
வலியான்- } கரிக்குருவிக். உக.) நிகண்டில். வலியான் என்பது வேறுபறவையென்பர். 2. வலிமையுடையான். (வழக்.)

வலியுறுக்கும்—இறுகப்பிடிக்கும்.(புறநா.)

வலியுறுத்தல் — உறுதிப்படுத்தல். சிவஞானபோதம். க-ஆம் சூத்திரம். உ-ஆம். அதிகாரணம் முதலாவதுவெண்பாவுரையிற்காண்க.

வலிவலம் — ஒரு சிவதலம். திருஞானசம் பந்த. தேவாரத்திற் காண்க.
வலீநகம்—தாழை. (வைத்தியபரி.)
வலீநம்—தேள். (வைத்தியபரி.)
வலு — 1. பலம். 2. பற்று. (1, 2-வழக்.) கொசுகுமுதலியவற்றுக்குங்கூறுவர். (உ - ம்.) வரிற்கொள்க.
வலுத்தல்— } பலப்படுதல். (வழக்.)
வலுப்பு— }
வலுவந்தம்—வலாற்காரம். (வழக்.
வலூகம்–தாமரைக்கிழங்கு. வைத்திபரி.)
வலை—1. மீன்முதலியபிடிக்குங்கருவி. (சூ. நிக. எ: நிகு.) 2. யாகபத்தினிகள்நெற்றியி லணிந்துகொள்வது. (புறநா.)
வலைக்கயிறு—சாலம். (பிங்கல. கநிகக.)
வலைக்குஞுக்கு–வலையைத்தாழச் செய்யும் உருண்டை. (ஒரு குழூஉக்குறி.)
வலைகாரன்—வலையன். (வழக்.)
வலைச்சி—நெய்தனிலப்பெண். (வழக்.)
வலைஞ்சேரி—நெய்தனிலத்தூர். (அமுதாம் பிகைப்பிள்ளைத்தமிழ் அவையடக்கத்திலறிக-)
வலைஞர் — நெய்தனிலமாக்கள். (பிங்கல. சுஅ0.)
வலையம்—வலயம்.
வலையர்—வலைஞர். (வழக்.)
வலைவர்–வலையையுடையவர். (ஐங்குறுநூ.)
வவக்காணி–யானையிலத்தி. (வைத்தியபரி.)
வழக்கம்-தொன்றுதொட்டுநடைபெறுதல். (வழக்.)
வழக்கறிதல்–உலகநடையையறிதல். (நன் னூ. பொதுப. சக.)
வழக்காட்டு—ஊடல் (மணிமே.)
வழக்காடுதல்— } வழக்குச்செய்தல்.
வழக்கிடுதல்— } (வழக்.)
வழக்கு–1. அறப்பால் மூன்றனுளொன்று; அது, ஒருபொருளைத் தனித்தனியே யென தெனதென்றிருப்பார் அதுகாரணமாகத் தம் முண்மாறுபட் டப்பொருண்மேற் செல்வது. (வன். உரைப்பாயிரம்.) 2. இயங்குதல். (புறப் பொ. வெ.) 3. வழக்கம். (வழக்.)
வழக்கோரம் — ஒருபகுதியான வழக்கு. (வழக.)
வழகம்—பவளம். (வைத்தியபரி.)
வழங்க—அசைய. (புறநா.)
வழங்கல்— } 1. ஆட்சிபண்ணல். (வழக்.)
வழங்குதல்– } 2. ஈகை. 3 உலாவல். (2,3-(பிங்கல. சஅ0.) 4. சொல்லல. (பிங்கல. உ00கூ.) 5. நடத்தல். (சூ. க்க. கூ: ஈஎ.)
வழங்குநர்—கொடுப்பவர். (பத்துப்பாட்.)
வழங்குதம்—இயங்கும். (புறநா.)
வழட்டுதல்—வழுந்துதல்.
வழப்பம்—வழக்கம். (வழக்.)
வழலுதல்—வழுந்தல்.
வழலை—1. ஓர் பாம்பு. (வழக். 2. சவுக்கா ரம். 3. மூப்பு. (2, 3-வைத்தியபரி.)
வழலையுப்பு-சவுக்காரவுப்பு.(வைத்தியபரி)
வழலைஸாரம்—சுத்தாசம். (வைத்தியபரி.)
வழாநிலை–தினை பா லிடம் பொழுது விஞ இறை மரபு ஆகியவிவைகள் வழுவாதுவழங்கு வன (நன்னூ. பொதுவிய. ஈசு. உரை.)
வழாஅது—பிழையாமல். (புறநா.)
வழாஅல்—வழுவுதல்
வழாறு—நிறைபுனல். (சூ. நிக. நி: உசு.)
வழி — 1. இடம். 2 ஏழனுருபு. (நன்னூ. பெயரிய. சநி.) 3. ஏவல், வழியென்னேவ லென்க. 4. ஒழுக்கம். 5. திரட்சி. 6. தெரிநிலை வினேபபகுதி. 7. பழமை. 8. பின் 9. மக்கட் பன்மை. 10. மகன். 11. மாபு. (சூ. நிக. கக. ழகரவெ. சு.) 12. மார்க்கம். (வழக்.) 13. முறைமை. (பிங்கல. உஉ0சு.) 14. வழிபாடு. (புறநா. கஎ.) (1, 4, 5, 7, 8, 9. 10-பிங்கல. சஅ0சக.)
வழிக்குதல்—வழித்தெடுத்தல். (வழக்.)
வழிக்கொள்ளுதல்–பிரயாணஞ்செய்தல். (திருவிளை. விறகுவிற்ற. சஅ.)
வழிகட்டுதல்—வழிமறித்தல். (வழக்.)
வழிகாட்டி—ஒன்றைமுதலிற் செய்துகாட் டினவன் (வழக்.)
வழிச்செல்வோன் — பதிகன். (சூ. நிக. உ: சஅ0.)
வழித்தடை—சகுனப்பிழை. (வழக்.)
வழித்தல்—வழிக்குதல்.
வழித்தெய்வம் — மரபிற்குரியதெய்வம். (சூ. நிக பாயிர நி.)
வழித்தோன்றல்—மகன். (சூ. நிக. கக: ரகரவெ. கஉ.)
வழிதல்—வடிதல். (வழக்.)
வழிநூல்—நூன்மூன்றனு ளொன்று. (நன்னூ. பொதுப். எ.)
வழிப்படுத்தல்— } உட்படுத்தல், ஒழுங்
வழிப்படுத்துதல்– } காக்கலுமாம்(வழக்.)
வழிப்படுதல்—வழியொழுகல். (நீதிநெறி விளக்கம். சசஅ.)
வழிப்பறித்தல் — ஆறலைத்தல். (சூ. நிக. கூ: உநி.)
வழிபடல்— } 1. வழிபாடுசெய்தல். (திரு
வழிபடுதல்– } விளை. வேதத்துக்குப். கூ.) 2. வணக்கமுமாம்.

வழிபடுவோர் — வழிபட்டு நடப்போர். (புறநா.)

வழிபாடு–1. வழிபடல். (வழக்.) 2. வணக்க முமாம்.

வழிபாடுமறுத்தல்–அகப்பொருட்டுறையி னொன்று. (கபிலியகப். களவியல். இயற்க்கைப புணர்ச்சி. கக்.)

வழிமாண்—ஓரடிக்கண்ணுஞ் சீர்கள் ஒன் றற்கொன்று மறுதலைப்படவருவன. (யாப். காரி. ஒழிபிய. சூ. உரை.)

வழிமொழிய—வழிபாடுகூற. (புறநா.)

வழிமோனை — ஓர் மோனை. (யாப். காரி. ஒழிபிய சூ. உரை.)

வழியல்—வழித்தெடுத்தது (வழக்.)

வழியுணவு — தோட்கோப்பு (பிங்கல. ககoஎ.)

வழியுரைப்போர்—தூதர். (சூ. நிக. உ:ஈக.)

வழியேதுகை—ஓரடிக்கண்ணுமுள்ள சீர் கள் யறைமே லொன்றற்கொன்று எதுகைய ய் வருவன. (யாப். காரிகை. ஒழிபிய. சூ. உரை)

வழிவழி—மேன்மேலும (ஐங்குறுநூ.)

வழு—1. குற்றம். (சூ. நிக. கஉ: கஉஅ.) 2. திணைபாலிடமுதலியன வழுவிவருவது. (நன் னூ. பொதுவிய. உசு.) 3. தெரிநிலைவினைப் பருதி. 4. பாதகம். (புறநா.)

வழுக்கல்—1. அடித்தல். (சூ. நிக. கூ: கoo.) 2. வழுக்குதல். (வழக்.)

வழுக்காய்—இளங்காய். (வைத்தியபரி.)

வழுக்கு—1. தவறு. (சூ. நிக. அ: கூக.) 2. தெரிநிலைவினைபபதுதி. 3. நிணவிசேடம். (ஐங் குறுநூ.) 4 வழும்பு. (சூ நிக. கூ: சசு.) 5. மறத்தல். (சூ. நிக. அ: நிக)

வழுக்குதல்—வழுக்கல் (வழக்.)

வழுக்குப்பசி — ஓர் நீர்பபூடி. (வைத்திய பரி.)

வழுக்கை—தேங்காய்வழுக்கை, இளங்கா யெனபதாம். (வழக்.)

வழுக்கைப்பலா — ஓர பலா. (வைத்திய பரி.)

வழுத்தல்— } 1. வாழ்த்தல். (சூ. நிக. கo:
வழுத்துதல்– } சு.) 2. சொல்லல். (திரு வாலவாய். திருவிளை.)

வழுதலை — வழுதுணை (சூ. நிக. கக: ஙகர வெ.)

வழுதி—பாண்டியன். (சூ. நிக. உ: உo.)

வழுது — 1. பொய். (சூ. நிக. கo: சு.) 2. வைகறைகால். (சூ. நிக. சு: ஙக.)

வழுதுணை — 1. கண்டங்கத்தரி. (உ-ம்.) "வட்டம்வழுதுணையும்போல்வாரும்வாழ்வரே" (நாலடியார். நன்றியில். சு.) 2. வைத்தியபரி பாடையிற் கத்தரியென்பர்.

வழுந்துதல்–வழுந்தல், காய்ப்பேறல் (வழக் குண்டுபோலும்.)

வழும்பு—1. அழுக்கு 2. நிணம். (உ-ம்.) "தீண்டாவழுமபுஞ்சென்றீரும்" (திருவாங்க் கலம்பகம்.) 3. வழுவழுத்தலாகிய அழுக்கு. (1, 3-நாலடி. கயமை. உ.)

வழுவமைதி—திணை பால் இடம் பொழுது வினை யாறை இவை வழுவிவரினும் ஒவ்வொரு காரணத்தா லமைத்துக்கொள்ளத்தக்கன்வாம். (நன்னூ. பொதுவிய. உசு. உரை.)

வழுவமைப்பு—வழுவமைதி.

வழுவல்–1. தவறுதல். (இராமா. அயோத் தியா. குகப்பட. கூக.) 2. நழுவுதல். (வழக்.) 3. வழும்பு.

வழுவழுத்தல்—வழுவழுப்பு. (வழக்.)

வழுவன்சுறு—ஒருவகைமீன். ஓர் குழூஉக் குறிபோலும்.

வழுவாங்கி—ஓர் பூண்டு. (வைத்தியபரி.)

வழுவாடி—காரியத்தை நழுவவிடுகிறவன். (வழக.)

வழுவாமை—தவருமை. (வழக்.)

வழுவி–1. அத்தி. (வைத்தியபரி.) 2. தவறி. வினையெச்சம்.

வழுவு–தவறு. (திருவிளை. தருமிக்குப்.கூசு.)

வழுவுதல்—தவறுதல். (வழக்.)

வழுவை—யானை. (சூ. நிக. கூ: கு.)

வழூஉ—குற்றம் (நன்னூ. பொதுப். கஉ.)

வழூஉச்சொற்புணர்த்தல்— நூற்குற்றம் பத்தினொன்று. (நன்னூ. பொதுப்பா. கஉ.)

வழை—சுரபுன்னை. (பிங்கல. உசுகo.)

வழைசீசு—இளமை. (சிந்தா.)

வழைமது —இளமது. (பரிபாடல்)

வள்—1. காது. 2. கூர்மை 3. பற்றி நம்பு. (பிங்கல. சoசுக) 4. பெருமை. (பத்துப்பாட்.) 5. உலிமை. 6. வளம். 7. வார். 8. வாள். (1, 2, 5, 6, 7, 8 சூ. நிக. கக: ளகரவெ. அ.)

வள்வு—வார். (புறப்பொ. வெ.)

வள்ளடி—செவிமூலம் (வைத்தியபரி.)

வள்ளம்—1. ஒருவகைச் சிறு தோணி. (வழக.) 2. நாழிகைவட்டில். 3. மரக்கால். (2, 3-சூ. நிக. கக: ளகரவெ. கசு.) 4. வட்டில்.

வள்ளல்—1. வண்மை. (சிந்தா.) 2. வரை யாதுகொடுப்போர். இவர். முதல்வள்ளல். இ டைவள்ளல். கடைவள்ளலென மூவராவர். (சூ. நிக. உ: உசு, உசு.) 3. வள்ளிக்கிழங்கு. (வைத்தியபரி.)

வள்ளலார்–ஒழிவிலொடுக்கமெனும் ஞான நூல் செய்தவர். (அபிதாநகோ.)

வள்ளன்மை — வள்ளற்றன்மை. மை—விகுதி.

வள்ளி–1. ஆபரணம். 2. ஓர்கொடி.(வழக்) 3. ஓர்துறை. (புறப். மாலை.) முருகற்குவெறியாடுவதாகிய கூத்தென்பர். 4. ஓர்வகைக்கிழங்கு (ஐங்குறுநூ.) 5. கைவளை. 6. சுப்பிரமணியர் தேவி. (வழக்.) 7. படர்கொடி. 8. வள்ளிப்பூ. (பத்துப்பாட்.) (1, 5, 7-சூ. நிக. கக: எகரவெ. கo.)

வள்ளிக்கண்டம்–சீந்தில். (வைத்தியபரி.)

வள்ளித்தண்டு–பிரம்பின்வட்டம். (சூ.நிக. எ: ககூ)

வள்ளிமணவாளன்—முருகன். (சூ. நிக. க: உச.)

வள்ளிய—செழித்த. (ஐங்குறுநூ.)

வள்ளியம்—1. மிளகு. (வைத்தியபரி.) 2. மெழுகு. (தைலவ.) 3. வள்ளற்றன்மையையுடையோ. (வள். நிகசு)

வள்ளியோர் — வரையாது கொடுப்போர். (உ-ம்.) "வள்ளியோரின் வழங்கினமேகமே" (இராமா. ஆற்றுப். ச.)

வள்ளுரம்—1. தசைப்பொது. 2. பசுவினிறைச்சி. (1, 2-சூ. நிக. கக: எகரவெ. கசு)

வள்ளுவர்—1. ஒரு சாதியார். 2. திருவள்ளுவநாயனார். (1, 2-வழக்.)

வள்ளுவன்—நிமித்திகன். (சிந்தா.)

வள்ளுரம்—ஊன். (சிந்தா.)

வள்ளை—1. உலக்கைப்பாட்டு. (திருவள். மாலை. நி. உரை.) 2. ஓர் கொடி. (வைத்தியபரி.)

வளப்படுத்தல்—சீர்ப்படுத்தல். (வழக்.)

வளப்படுதல்—சீர்ப்படுதல் (வழக்.)

வளப்பம்–1. கொழுப்பு. (சூ. நிக. அ: கo.) 2. வளமை. (வழக்.)

வளப்பாடு—1. பெருக்கம். (பரிபாடல்.) 2. வளமை.

வளம்—1. அழகு. 2 கொழுப்பு. 3. செல்வம். (புறநா.) 4. செழுமை. (சூ. நிக. ழகரவெ. கூ.) 5. தகுதி. 6 நன்மை. (புறப. மாலை. 7. பதவி. 8. பலபண்டம். 9. மாட்சிமை. 10. வருவாய். (ஐங்குறுநூ.) (1, 7, 8-சூ. நிக. கக: எகரவெ கநி.) (2, 5, 9-பிங்கல. சoஙஉ.)

வளமடல்—ஓர் பிரபந்தம இ ர, அறனும் பொருளும் வீடுமென்றுகூறும் அழுன்றுபாட்டின பயனே யெள்ளி மங்கையரைச்சேர்தலான் உளவாகிய மெல்லிய காமவின்பத்தினையே பயனெனக்கொண்டு தனிச்சொல்லின்றி,இன்னிசைக்கலிவெண்பாவாற்றலைமகன் இரந்து குறைபெறுது மடலேறுவதா யீரடியெதுகையாகவரப் பாடுவதாம். (இலக்கணவி. பாட்டிய. கசு.)

வளமை—1. கொழுப்பு. 2. செல்வப்பொலிவு. (வழக்.) 3. மாட்சிமை. (1, 3-சூ. நிக. கக: எகரவெ. க.)

வளமையர்–பூவைசியர். (சூ. நிக. உ: உசு.)

வளர்ச்சி—உயர்தல். (வழக்.) விருத்தியென்றுஞ்சொல்வர்.

வளர்த்ததாய்–செவிலித்தாய். (நடியகப. அகத்திணையிய.) 'செவிலிநற்றாய்தோழியாகி' யென்னுஞ் சூத்திரத்திற காண்க.

வளர்த்தல்—வளரச்செய்தல். (வழக்.)

வளர்த்தி —வளர்ச்சி. (வழக்.)

வளர்த்துதல்—வளரச்செய்தல். (வழக்.)

வளர்தல்—வளருதல். (வழக்.)

வளர்ப்பு—வளர்த்தல் (வழக்.)

வளருதல்—உயர்தல். (வழக்.)

வளவளத்தல்— } பயனின்றிப்பிதற்றல்.
வளவளப்பு— } (வழக்.)

வளவன்—1 சோழன். (சூ. நிக. உ: ககூ.) 2. வளத்தையுடையவன்.

வளவி—வீட்டிறப்பு. (சூ. நிக. நி: நிஉ.)

வளவு–1. கொல்லை. 2. வீடு. (1, 2-வழக்.)

வளன்—வளம். இறுதிபோலியாயினது.

வளாகம்—1. இடம். (சூ. நிக நி: கநி.) 2. தினைப்புனம். (பிங்கல நிஉo.) 3. வளைத்தல். (சூ. நி க. கூ: உசூ.)

வளாய்—1. சூழ்ந்து. (சிந்தா.) 2. விரவி. (பரிபாடல்.)

வளார்—இளங்கொம்பு. (பிங்கல. உளசுக.)

வளாவ—சூழ (பரிபாடல்.)

வளாவல்— } 1. கலத்தல். 2. வளைத்தல்.
வளாவுதல்- } (பிங்கல. கoஙஎ.)

வளி–1. காற்று. (சூ. நிக. க: ச.) 2. சுழல் காற்று. (பிங்கல. சo.)

வளிசம்—தூண்டில். (சூ. நிக. எ: சுஉ)

வளிமறை—கதவு. (புறப்பொ.வெ.மாலை)

வளுந்நல்—தோல்வெளவுதல்.

வளை—1. கங்கணம். (பிங்கல. கஙஎ.) 2. கைவளை. (திருவிளை. வளையல். கூஉ.) 3. சக்கரம. (சூ. நிக எ: உ.) 4. சங்கு. (நைடத. நகரப். க.) 5. தெரிநிலைவினைப்பகுதி. 6. துழைவளை. 7 வீட்டின் மேற்கோவையின் ஒருறுப்பு. (6, 7-வழக்.)

வளைஇ — 1 சூழ்ந்து. (புறநா.) 2 வளைத்து. (பத்துப்பாட்.)

வளைஇய—சூழப்பட்ட. (புறநா.)

வளைத்தல்— } வளைத்தல். (வழக்.)
வளைசல்— }
வளைத்தல் -1. சூழ்தல். (சூ நிக. கூ: உசு.) 2. தடுத்தல். (திருவால. திருவிளை.) 3. வாருதல். (சூ. நிக. கூ: ஙக.)
வளைதடி—ஓராயுதம். (வழக்.)
வளைதல்—1. சூழ்தல். 2. தடுத்தல்.(வழக்.) 3. வளைவு. (சூ நிக. அ: டு.)
வளைநீத—நினைந்த (மணிமே.)
வளைப்பு—1. காவல். (சிந்தா.) 2. வளைத்தல். பு-தொழிற்பெயர்விகுதி.
வளைபோழ்நர்—சங்கறுப்போர். (சூ. நிக. உ: ஙசு.)
வளையகம்—சங்கு. (வைத்தியபரி.)
வளையம்—1. சங்கு. 2. சித்ரங்கபாஷாணம். 3. தாமரையுட்சுருள். (1, 2, 3-வைத்தியபரி) 4. வட்டம். (வழக்.)
வளையல்—கைவளை. (உ-ம்.) (திருவிளை. வளையல்விற்றபடலம்.)
வளையலுப்பு—இருப்பு. (வைத்தியபரி.)
வளையா—தோலாத (புறப்பொ.வெ.மாலை.)
வளையாபதி — ஓர் காவியம். இது, ஐந்து காப்பியங்களிலொன்று. (சிந்தா.)
வளைவு—1. வட்டம். 2. வணக்கம். 3. வளைதல். (1, 2, 3-வழக்.)
வற்கடம் — பஞ்சகாலம். (இறையனாரகப் பொருள். பாயி.)
வற்கடை—குறைவு.
வற்கென்ற—வலிமையுற்ற. (புறப்பொரு. வெ. மாலை.)
வற்கம்—1. கஞ்சி. 2. குதிரைவாயின்வடம். (சூ. நிக. எ: உக.) 3. மரப்பட்டை. (1, 3-(வைத்தியபரி.)
வற்கமாரீகம்—நாயுருவி. (மலையக.)
வற்கரி—1. கரகம். (சூ நிக. எ: சுசு.) 2. குதிரைக்கயிறு.
வற்கலம்— } மரவுரி. (சூ. நிக. எ: எசு.)
வற்கல— }
வற்காலி—1. பச்சோயாடு (பிங்கல.உசஅஎ.) 2. வெளளாடு. (சூ. நிக. கூ: கஅ.)
வற்கிதம்-குதிரை ஐந்தியினொன்று. (சிந்தாம. ஹிந்தருவதத். உகூ.)
வற்து—1. ஆடு. 2. கஞ்சி. (1, 2-வைத்தியபரி.)
வற்துசா—கார்போகரிசி. (வைத்தியபரி.)
வற்துலிகம்—வலியான்குருவி. (வைத்தியபரி.)
வற்சகன் — வசுதேவன்தம்பி. (அபிதானகோ.)
வற்சதாமம்—இளங்கன்று. (வைத்தியபரி.)
வற்சம் — 1. எருமை. 2. பசுவின்கன்று. (பிங்கல. உசசுஅ.)
வற்சமம்—குடசப்பாலை. (வைத்தியபரி.)
வற்சரம்—வருடம். (சூ. நிக. க: அஅ.)
வற்சலம்—கன்றைவளர்க்கும்பசு (பிங்கல. உசசுச)
வற்சலமணி — கோரோசனை. (வைத்தியபரி.)
வற்சலை—1. ஈன்றபசு. (சூ.நிக.உஉ:கஉ.) 2. பலராமன் மகளாகிய அபிமன்யுமனைவி.(அபிதானகோ.)
வற்சை—மலட்டுப்பசு. (பிங்கல. உசசுசூ.)
வற்பம் — 1. பஞ்சகாலம். 2. வன்மை. (மணிமே.)
வற்பு—1. உறுதி. 2. வலிமை. (இராமா. அயோத்தியா. நகர்நீங். கசு.)
வற்புறுத்தல்—வன்மையுற உறுதிப்படுத்தல் (இராமா. அயோத்தி. நகரநீங். கசு.)
வற்றம்—வற்றுதல். அம்-தொழிற்பெயர் விகுதி.
வற்றல்—1. உலர்தல். 2. காய்ந்த உணவுப் பொருள். (நன்னூ. பெயரிய. சூசு. உரை.) 3. வடித்தல். (1, 2, 3-வழக்.)
வற்றலை—ஓர் கிழங்குக்கொடி.
வற்று— } 1. காய்தல். 2. வடிதல். (1,
வற்றுதல்— } 2-வழக்.) 3. வல்லது. (பரிபாடல்.)
வற—வற்ற. (பரிபாடல்.)
வறட்காலம்—சுறப்புக்காலம். (சிலப்.)
வறட்சுண்டி-ஆடுதின்னுப்பாலை.(மலையக.) (நிகண்டிற்சமங்கையென்று பெயர்கூறுவர்.
வறட்டல் — 1. காயச்செய்தல். 2. வறுத்தல் (வழக்.)
வறட்பூல்—ஒரு பூல். (வைத்தியரி.)
வறண்டி — குப்பைமுதலிய வாருங்கருவி. (வழக்.)
வறண்முள்ளி—ஓர் முள்ளி.(வைத்தியபரி.)
வறத்தல் — 1. காய்தல். 2. சுருங்கல். (1, 2-வழக்.)
வறதாரு—கறிமுள்ளி. (வைத்தியபரி.)
வறப்பு—1. குறைவு. 2. வறத்தல். (1, 2-வழக்.)
வறம்— } 1. நீரில்லாமை. 2. வற்கடம்.
வறன்— } (1, 2-புறநா.) 3. வறுமை. (மணிமே)
வறல் — 1. உலர்தல். (பத்துப்பாட்டு.) 2. சுள்ளி. (புறநா.)

வறலாரை — ஓர் ஆரை. (வைத்தியமூ. அக.) வறளாரையுமிது.

வறவு—கஞ்சி. (வைத்தியபரி.)

வறவோட்டி—ஒருவகைப்பூண்டு. (வைத்தியபரி.)

வறள—வற்ற. (பரிபாடல்.)

வறள்வு—
வறளல்—
வறளுதல்—
} வறளுதல். (வழக்.)

வறள்—1. வறட்காலம். 2. வெம்மை. (1, 2- ஐங்குறுநூ.)

வறவற்க—வற்றுதொழிக. (பரிபாடல்.)

வறிஞர் — தரித்திரர். (நாலடியார். செல்வ நிலையா க.)

வறிது - 1. உள்ளீடில்லாதது. (ஐங்குறுநூ.) 2. குறைவு. (பிங்கல. கஅஉ) 3. சிறுமை. (பிங்கல. உஉஎ.) 4. பயனின்மை. (சூ. நிக. அ: எ0.)

வறிதுநகைதோற்றல் — அகப்பொருட் டுறையிலொன்று. (தஞ்சைவாணன். களவி யல். கடி.)

வறியர்—
வறியோர்—
} வறிஞர்.

வறுங்காலம்—வறப்புக்காலம். (வழக்.)

வறுத்தல்—தீயாலுலர்த்தல். (வழக்.)

வறுத்தல்—தீயாலுலர்தல்.

வறுநிலம்—பாழ்நிலம். (வழக்.)

வறுமை—தரித்திரம். (சூ. நிக. அ: சுக.)

வறும்புனங்கண்டுமறுகல்—அகப்பொரு ட்டுறையிலொன்று. வறுங்களாடிமறுகலென் பது மிது நம்பியகப். களவியல். பகற்குறியி டையீட்டு விரியிற்காண்க.

வறும்புனம்—1. பாலைநிலம். 2. விளைவு கொய்புனம். (1, 2-வழக்.)

வறைகள்-1. துவட்டினகறிகள். (சிந்தா.) 2. பொரியல்தள். (பத்துப்பாட்.)

வறையல்—1. துவட்டற்கறி. (வழக்.) 2. பிண்ணாக்கு. (சூ. நிக. சு: உச.)

வன்கட்பிணை—பாலைநிலப்பெண். (சூ. நிக. க: சுஎ.)

வன்கண்—1. அஞ்சாமை. (ஐங்குறுநூ.) 2. கொடுமை. (இராமா. அயோத்தி. நகர்நீங். கசுக.) 3. கொடுமைபார்வை. (வழக்.)

வன்கண்ணர்—வைராக்கியர். (உ-ம்.) மறைசையந்தாதி நிருமலர் என்னுமுதற்குறிப் புள்ள கவியிற்காண்க.

வன்கண்மை—தறுகண்மை. (புறநா.)

வன்கணம்-வல்லெழுத்து (நன்னூ. எழுத் திய. கசு. உரை.)

வன்கனத்தம் — சவசிமுருங்கை. (வைத் தியபரி.)

வன்காய்—கடுக்காய். (வைத்தியபரி.)

வன்கிடை—அருங்கிடை. (வழக.)

வன்கொலை-அருங்கொலை. வலிமை, ஈண் டருமை குறித்துநின்றது. (வழக்.)

வன்சொல்—கடிஞ்சொல். (வழக்.)

வன்சொல்விலக்கு—ஓரலங்காரம். அது, வன்சொற்சொல்லி விலக்குவது. தண்டியலங். பொருளணியிய. விலக்கணிகளுட்காண்க.

வன்பால்—1. குறிஞ்சி. 2. பாலை (1, 2- சூ. நிக. நி: சுசு.)

வன்பு—1. வன்மை. (வழக்.) 2. கார். (புறநா.)

வன்புலி—பெண்மரம். (சூ. நிக. ச: நிஎ.)

வன்புலம்-குறிஞ்சியும் முல்லையும். (புறநா.)

வன்மத்தானம்—உயிர்நிலை. (வழக.)

வன்மம் — வைராக்கிய மனங்கொள்ளல். (வழக்.)

வன்மரம்-அகக்காழ் உள்ளமரம். (சூ. நிக. ச: நிஎ.)

வன்மி —வன்மழுடையவன். (வழக்.)

வன்மித்தல்-வைரங்கொள்ளுதல். (வழக்.)

வன்மிகம்—புற்று. (சூ. நிக. நி: சுo.)

வன்மிகி—ஆன்மிகி. (வழக்.)

வன்மிலி—முதலை. (சூ. நிக. சு: எக.)

வன்மை—1. கடினம். இது, வன்மை ஊற்றிலொன்று. (நன்னூ.உரியிய. சு.உரை.) 2. வலிமை (வழக்.)

வன்னக்கல்—மந்தாரச்சிலை.

வன்னம்—1 எழுத்து. (காஞ்சிப். சனற்கு மார. கஅ.) 2. தங்கம். (வைத்தியபரி.) 3. நிறம். (சிவஞா. போதச அ. சூத். சு. அதி.)

வன்னதபி—1. உமை. (காஞ்சிப சனற் குமார. கஅ.) 2. சரசுவதிக்கும்பெயர்கூறுவா.

வன்னி—1. கிளி. 2. கொடுவேலி 3. தண க்கு. 4. நெருப்பு. 5. பிரமசாரி. 6. வன்னி மரம் (1, 4, 5, 6-பிங்கல. சoசசு.) (2, 3- மலையக.)

வன்னிகர்—பொடுதலை. (வைத்தியபரி.)

வன்னிகர்ப்பம்—மூங்கில. (வைத்தியபரி)

வன்னித்தல்—வர்னித்தல் (வழக.)

வன்னித்தீ—நவச்சாரம். (வைத்தியபரி.)

வன்னித்தும்பை — ஓருதும்பை (வைத் தியபரி.)

வன்னிப்பரியம் — கொடுவேலி. (வைத் தியபரி.)

வன்னிப்பு—வன்னித்தல். (வழக்.)

வன்னியம்—வர்னிக்கப்பட்டது.

வன்னியர்—ஓர் சாதியார். (அபிதாநகோ)
வன்னிலோகம்—செம்பு. (வைத்தியபரி.)
வன்னிவண்ணம் — 1. செந்தாமரை. 2. செவ்வாம்பல். (1, 2-வழக்.)
வன்னெற்று—நத்தைச்சூரி (மலையக.)
வனகந்தம்—காட்டுக்கருணை (வைத்திய பரி.)
வனகவம்—காட்டுப்பசு.
வனசீசாரிபு—மூல்லை நிலம். (சூ. நிக. நு: ஈ0.)
வனசீசுவை—1. நரி. 2. நாவி. 3. புலி (1, 2, 3-வைத்தியபரி.)
வனசங்கடம்—சடலை. (வைத்தியபரி.)
வனசம்—தாமரை. (சூ. நிக. ச: நுசஅ.)
வனசரம்-மூவகை யானையினொன்று. அது வனத்திற்பிறந்த யானை. (பாரத. பதினெருரும் போர். நூரிருதேரினர் என்ற செய்யுளிற் காண்க.)
வனசரர்—1. வனத்திற்சஞ்சரிப்பவர். 2. வேடர்.
வனசரோசனி—காட்டுப்பாகற்தி.
வனசிருங்காடம்-யானைநெஞ்சில். (வைத்தியபரி.)
வனசூகரி — காட்டுபபன்றியின் பெண். (வைத்தியபரி.)
வனசை—1. இலக்குமி. 2. சந்தனம். (வைத்தியபரி.)
வனசோபனம்—தாமரை. (வைத்தியபரி பா.)
வனதித்தம்-குடசப்பாலை.(வைத்தியபரி)
வனதீபம்—சண்பகம். (வைத்தியபரி.)
வனநரம்—குரங்கு. (வைத்தியபரி)
வனப்பிரியம்—குயில. (வைத்தியபரி.)
வனபத்தியம் — பூவாமற்காய்க்குமரம். (வைத்தியபரி.)
வனபதி — பூவாதுகாய்க்குமரம். (சூ. நிக. ச: நுஉ.)
வனபந்தம்—தடாகம். (வைத்தியபரி.)
வனபலம் — யானைத்திபபலி. (வைத்திய பரி.)
வனபிப்பிலி—காட்டுத்திப்பிலி (வைத்திய பரி.)
வனப்பு—அழகு. (சூ. நிக. அ. உச)
வனம்-1. அழகு. (ஞானமிர்தம்.) 2. காடு. 3. ஊர்சூழ்சோலையென்பர். (சூ.நிக.ஈ.நுசஎ-ல்.) 4. சுடுகாடு (சூ. நிக. நு: நுகூ.) 5. துளசி. (சூ. நிக. ச: கூ.) 6. நீர். (சூ. நிக. க: நுஞ.) 7.புற்று. (வைத்தியபரி.) 8. மிகுதி. (சூ. நிக. கக: னகரவெ, கஎ.)
வனமல்லி—காட்டுமல்லிகை. (வைத்திய பரி.)
வனமா—1. கொடுவேலி. 2. முதிரை. (1, 2-வைதத்தியபரி.)
வனமாலி—1. திருமால். (சூ. நிக. க: கஞ.) 2. பிரமி. (வைத்தியபரி.)
வனமுரை—முதிரை. (வைத்தியமூ.)
வனமோசை—காட்டிவாழை. (வைத்திய பரி.)
வனருகம்—தாமரை. (வைத்தியபரி.)
வனலடசுமி—யாழை. (வைத்தியபரி.)
வனவசம்—சந்தனம். (வைத்தியபரி.)
வனவாசம்—நாபி. (வைத்தியபரி)
வனவிலாசினி-ஓர் மகடம். (வைத்தியபரி.)
வனுகி—முயல. (வைத்தியபரி.)
வனிசை—கா.
வனிதை—பெண். (சூ. நிக. உ: நுசு.)
வனீரம்—காட்டுத்திப்பிலி.(வைத்தியபரி.)
வனைதல்—1. அலங்கரித்தல். (சூ. நிக. கூ: நு.) 2. செயதல். (சூ. நிக. க: உ.)

வா.

வா—வாவென்னேவல், அழைத்தல்.(வழக்.)
வாக்கல்—வடிக்கபபட்டசோறு. (புறநா.)
வாக்கடல்—வாதுபண்ணல். (வழக்.)
வாக்காள்—சரஸ்வதி. (சூ நிக. க: ஈநு.)
வாக்கி — 1. நான்குகைப்புலவருள் ஒருவன். இவன்: அறம் பொருள் இன்பம் வீடென்னும நாலவகைப் பொருளைக் கேட்கவிரித்துக் கூறுவோன். (சூ. நிக. ஈஉ: உஉ.) 2. வாக்கையுடையவன். (வழக்) 3. வார்த்து.(சிந்தா.)
வாக்கியதம் — மௌனம, பேச்சொடுங்குதல்.
வாக்கியப்பொருட்கட்சியணி — 1. ஓரலங்காரம். அஃதாவது இரண்டுவாகியார்த்தங்களுக்கு ஐக்கியத்தை யாரோபித்தல்.(விசாக. அணியியல் ககூ.)
வாக்கியம்—1. வசனம். (வழக்.) 2. வினை முதல் செயபபொடுபொருள் பயனிலையோடு முடிந்தசோற்றொடர். செயப்படுபொருளின்றியும வரும.
வாக்கின்குணநாலம்து — மெய்யுரை, நல்வார்தை, இனியகூறல், பயனபடுசொற்கூறல் என்பன. (மணிமே) (பௌத்தமதம.)
வாக்கின்செல்வன்-வியாழன். (திருவிளை. உக்கிரகுமார. சரு.)
வாக்கின்செல்வி—சரஸ்வதி.
வாக்கீசர்—வாகீசர்.

வாக்கு — 1. சொல். (சூ. நிக. க0: உ.) 2. திருத்தம (சிந்தா.) 3. நால்வகைவாக்கு. அவை: சுக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரிஎன்பன. (அபிதாநசி.) 4. பக்கம். (திருவிளை. தடாதகைப். உசு.) 5. மூதனிலைத்தொழிற்பெயர். 6. மூப் பொறியிலொன்று (சூ. நிக. கஉ: நி.) 7. விதம். (வழக்.)

வாக்குதல்—வார்த்தல். (திருவிளை. உக்கிர பாண்டியன்றிரு. சசு.)

வாக்குத்தம்பம்-கலைஞானமறுபத்திலொன்றி லொன்று அது: வார்த்தையைத்தடைபண்ணுதல். (விபாருட்-நிக.)

வாக்குத்தானம்—ஜன்மத்திற்கு இரண்டாமிடம். (ஜாதகமுடையானிற் காண்க.)

வாக்குத்தீக்கை — எழுத்தைத் தீக்கையிலொன்று. (சஞ்சீ. முயலக்குத்தந்திரசு.)

வாக்குபதி — [illegible] (வழக்.)

வாக்குவித்தல்— வார்[illegible]த்தல். (வழக்.)

வாகசம்—[illegible]பாசம். (வைசதியபரி.)

வாகசி — குத்திப்பார்பசசு. (வழக்குணங் போலும்.)

வாகடம்—மைத்திரசாத்திரம். (வழக்.)

வாகடர்—வடநாட்டிலிருந்த ஒரு வைத்திய நூலாசிரியர். இவர்செய்தநூல் வாகடமெனவும் பெயருண்டு. (அபிதானசி.)

வாகம் — 1. குதிரை. (ஆசிரியநி. கூ: சு) 2. செவ்வரை 3. பலண்டுபாஷாணம். (2, 3-வைத்தியபரி.) 4. புயம். 5. வாகனம். (பாரத. அருச்சுனன்றீர்த்த. உஎ.)

வாகரம்—1 கோணுய். 2. சாணைக்கல் 3. தடை. 4. நிச்சயமுதலியவற்றிற்குக்கூறுவர். (உ-ம்.) காணிற்கொள்க.

வாகரன்—1. பண்டிதன். 2. வீரன்.

வாகன்—1. அழகன். 2. காவாள், சுமையாள் (1, 2-வழக்.)

வாகனப்புடவை-புடவைக்கட்டைத் தாங்குஞ் சேலை. (வழக்.)

வாகனம்-ஏறிநடத்தப்படுபவை. (பெரியபு. தடுத்தாட். உ0)

வாகிடி—நீர்ப்பன்றி. (வைத்தியபரி.)

வாகித்தம்—பானைக்குத்துப்பு.

வாகியம்—பாகியம், வெளி. (வழக்.)

வாகிநவன்—சாதுரியன். (வழக்.)

வாகினி — 1. ஓர் தொகை. அது: கணக மூன்றுகொண்டது. (பிங்கல. கசுஎநி.) 2. படை. (பிங்கல. கநி0க.) 3. பாதிரி. (மலையக.)

வாகீகம்—1. பண்டி. 2. பெரும்பறை.)

வாகீசர்—திருநாவுக்கரசு நாயனார். (காஞ்சிப். பாயிரம். கக.)

வாகீசுவரி
வாகீசை— } சரஸ்வதி. (அபிதாநகோ.)

வாகு—1. அழகு. 2. ஒழுங்கு. 3. தோள். 4. பக்கம். (1, 3-சூ. நிக. கக: ககரவெ. கூ.) 2, 4-வழக்.)

வாகுசம்—1. எள். 2. கிளி. (1, 2-வைத்தியபரி.)

வாகுசி—சார்போகரிசி. (வைத்தியபரி.)

வாகுதம்—ஓர் பறவையென்பர்.

வாகுதை—சரஸ்வதிநதி யருகிலுள்ள ஓர் நதி (அபிதாநசிந்.)

வாகுமாலை—ஓர்வகை மாலை. (வழக்.)

வாகுரம்—வலை.

வாகுலம்—மகிழங்கனி. (வைத்தியபரி.)

வாகுலிகன்—அடைப்பைக்காரன்.

வாகுவம்—வஞ்சி. (வைத்தியபரி.)

வாகுவலயம்—தோளணி. (சூ.நிக.எ:உசூ.)

வாகுனி—நீர்க்காய்நெல்லி. (மலையக.)

வாகை—1. ஒழுக்கம். 2. குணம். 3. கொடுத்தல். 4. தயம் 5. தொழில். 6. நிலவாகை. (வைத்தியபரி.) 7. மருதி. 8. ஓர் துறை. இது: வாகைப்பூச்சூடி மாறுபாடுற்ற வேந்தைகொன்று ஆளவாரித்தது. புறப. மாலை. 9 வாகைமரம். (வழக்.) 10 வாகைமாலை. 11. வெற்றி. 1, 2, 3, 4, 5, 7, 11-சூ நிக. கக: ககரவெ. கசூ.)

வாகைமன்றம் — பலபேய்கள் கூட்டங் கொண்டிருக்கும் வாகைமரத்தடி. (மணிமே.)

வாகைமாலை—ஓர்பிரபந்தம். இது: மாற்றாரைவென்றுவாகைமாலைசூடுவது. (பொருட். நிக.)

வாகைமிலைதல் — பகைவரைவென்றோர் வென்றதற்குறிகுறியாகவாகைமலரையணிந்து கொள்ளுதல். (மணிமே.)

வாகையரவம்—ஓர் துறை. இது: வெள்ளைமாலையுங்கருங் குழலையுஞ்செங் கச்சையுமணிந்தது. (புறப. பொ.)

வாங்கம்—கடல்.

வாங்கல்—1. இழுத்தல். 2 ஏற்றுக்கொள்ளல். 3. கீளல். 4. வளைத்தல் 5. வளைவு. (சூ. நிக அ: நி.) (2, 4-சூ. நிக. கக: ஙகரவெ. கூ.) (1, 3-வழக்.)

வாங்கா—ஓர் ஊதுகுழல். (வழக்.)

வாங்கி—சுழலி. (சிந்தா.)

வாங்கு—தெரிநிலைவினைபயகுதி.

வாங்குதல்—வாங்கல்.

வாங்குதும்—1. அலையும். 2. அறும். (1, 2-பரிபாடல்.)

வாச்சி—ஆடாதோடை. (வைத்தியபரி.)

வாச்சியம்—1. பொருள். (உ-ம்) நால்வர் நான்மணிமாலை பெருந்துறை புகுந்து என்ற முதற்குறிப்புள்ள வெண்பாவிலறிக. 2. வாத்தியம்.

வாசகம்—வசனம். (சூ. நிக. கo: ரு)

வாசஞ்செய்தல் —1. இருத்தல். 2. மணங் கூட்டுதல். (வழக்.)

வாசசல்லியம்—1. கஸ்தூரி. 2. எலும்பு. (1, 2-வைத்தியபரி.)

வாசதம் —கழுதை (வைதத்தியபரி.)

வாசந்தம் — 1. ஓடகம். 2. குயில். 3 தென்காற்று. 4. மிருகத்தினிளங்கன்று.(உ-ம்) வரிற்கொள்க.

வாசந்தி—1. குருக்கத்தி. (சூ. நிக. சo: கு.) 2. திப்பிலி. 3. வசந்தமல்லிகை.

வாசபேயம்—ஓர் யாகம். (திருவிளை. தல விசே. கு.)

வாசம்—1. அரிசி. 2. ஆடை. 3. இருப்பிடம். 4. இலாமிச்சை. 5. ஊர். (ஆகிரிய. நிக. கு: உo.) 6. சண்பகம. 7. நாள் (ஆகிரிய. நிக. கo: ரு.) 8. நெய். 9. பஞ்சவாசம். (அபிதான சிந்.) 10. புட்சிறகு. 11. பூமணம். (1, 4, 6, 8-வைத்தியபரி.) (2, 3, 10, 11-சூ. நிக. கக: சகரவெ. கo.)

வாசல்—வாயில். (வழக்.)

வாசவர்—பஞ்சவாசமவிற்போர். (நிலப.)

வாசவன்—இந்திரன். (சூ. நிக. கo: கக.)

வாசவுப்பு—கல்லுப்பு. (வைத்தியபரி.)

வாசனம் — 1. ஆடை. (பிங்கல. கடஎக.) 2. வாசனை. (தெலுங்கு.)

வாசனி—மேற்கட்டி.

வாசனை—1. பழக்கம். (தர்க்கசங்கிர உரை. ரு.) 2. மணம். (வழக்.) 3. யாழ்வாசித்தலென்க. (பெரியபு. ஆனாயநா. ரு.)

வாசா—வாக்கு. (உ-ம்.) "வாசாகயிங்ஙனியமன்றி" (தாயுமான. திருவருள்விலா. சo.)

வாசாங்கியம்—மிளகு. (வைத்தியபரி.)

வாசாதி—ஆடாதோடை. (வைத்தியபரி.)

வாசமநோசரம் — வாக்குக்கெட்டாமை. (வழக்.)

வாசாலகம்— } வாக்குவல்லபம்.
வாசாலம்— }

வாசாலகன்— } வாக்குவல்லவன். (வழக்.)
வாசாலன்— }

வாசாலை—வாக்குவல்லவி. (வழக்.)

வாசி—1. அச்சுவினிநட்சத்திரம். 2. அதிகம். 3 இசைக்குழல். 4. இலாபம். 5. குதிரை. 6. சுவாசம். 7. மாமரம். (வைத்தியபரி.) 8. வாசியென்னேவல். (1, 3, 5, 8-சூ. நிக. கக: சகரவெ. கஉ.) (2, 4, 6-வழக்.) பஞ்சாக்கர பேதங்களிலொன்றுமாம்.

வாசிக்கல்—காக்கைக்கல் (வைத்தியபரி.)

வாசிகந்தம்—ஓர் பூடு.

வாசிகம்—வாக்காறசெய்வது. (திருவிளை. எழுகடல் எ.)

வாசிகன்—தூதன்.

வாசிகை — 1. கோத்தமாலை (பிங்கல. கசுரூo) 2. மாலை (ஆசிரியநிக. சo: ரூo)

வாசிட்டம் — 1. தருமநூல் பதினெட்டினுள் ஒன்று.(பிங்கல. சசரு.)2.இராமருக்கு வசிட்டர்சொன்ன நூல்.)

வாசிட்டலங்காரம்–உபபுராணம் பதினெட்டினுள் ஒன்று. (பிங்கல. சசடு)

வாசித்தல்—1. படித்தல். (பிங்கல. உoக0.) 2. மணத்தல. 3. வீணைமுதலியவாசித்தல். (2, 3 வழக்.)

வாசியாயநீயம் உபநிடத மூப்பத்திரண்டினொன்று (பொருட்-நிக.)

வாசினி—வெண்குதிரை.

வாசிபட்சம்—மாலை (வைத்தியபரி.)

வாசு—இருவேலி

வாசுகம்—சவட்டியுண். (வைத்தியபரி.)

வாசுகி—1. அட்டநாகத்தொன்று. (சூ. நிக. கஉ: எஅ.) 2. திருவள்ளுவமாலைவித்துகரு பெயர். (அபிதானசிந்.) 3. விந்து (வைத்தியபரி.)

வாசுதேவன்—கண்ணன். (சூ. நிக. கக சo.)

வாசுரை — 1 ஆரவு. 2. பூமி. 3. பெண். 4. பெண்யானை. (உ-ம்.) வரிற்கொள்க.

வாசை—ஆடாதோடை.(பிங்கல. உஅசுடு.)

வாஞ்சனம்— } வாஞ்சை. (வழக்.)
வாஞ்சனை— }

வாஞ்சித்தல்— ஆசைப்படுதல். (திருவிளை. தண்ணீர்ப்பந். டு.)

வாஞ்சிதம்—வாஞ்சனம்.

வாஞ்சிலி —விருபபமுள்ளோன். (வழக்.)

வாஞ்சை—ஆசை. (வழக்.)

வாட்கலியன்–திருமங்கையாழ்வார்.(உ-ம்.) 'கட்டவிழ்தார்வாட்கலியன்காப்பு'(நூற்றெட். திருப்பதியந். பாயிரம்.)

வாட்கோசை–செருந்தி.(பிங்கல. உகஙடு.)

வாட்சூலை—ஓர் நோய். (வழக்.)

வாட்டம்—1. குறைவு. 2 சோர்வு. 3. மெலிவு. 4. வாடுதல். (1, 2, 3, 4-வழக்)

வாட்டரவு—வாட்டுதல். அரவு—தொழிற்பெயர் விகுதி.

வாட்டல்—வாட்டுதல்.

வாட்டாழை–கடற்முழை. (வைத்தியபரி.)

வாட்டியம்—1. சந்தனம். 2. புட்பம். 3. மஞ்சள (1, 2, 3-மலையக.)

வாட்டு—1. தெரிநிலை வினைப்பகுதி 2. வதக்கிய பதார்த்தம். வாகரிசிச்சோறும் வழுதுணங்காய்வாட்டுமு. (ஔவை. தனிப்பாடல்.)

வாட்டுதல்–1. துனபுறுவித்தல். 2. வாடப் பண்ணுதல். (1, 2-வழக்.)

வாட்படை—வாள்வீரர்தொகுதி. (சிந்தா.)

வாட்படையாளர்–தூர்க்கை. (பிங்கல.கஉச)

வாட்யாயனி - அதிபலை. இதுபோராமுட்டி. (வைத்தியபரி, அநுபந்த.)

வாடகை—வீடு முதலியவற்றி லிருப்பதற்குக்கொடுக்குங்கூலி. (வழக்.)

வாடபதி—சரீரகொழுப்பு.(வைத்தியபரி)

வாடல்—1. மெலிதல் 2. வதங்கல். (1, 2-வழக்.)

வாடற்க—குறையாதொழிக. (பரிபாடல்.)

வாடாக்குறிஞ்சி -குரவகம். (சூ.நிக சஃஉக.)

வாடாமல்லிகை—ஒரு பூச்செடி. (வழக்.)

வாடாமாலை—பொன்னரிமாலை.(பத்துப.)

வாடாவள்ளி—வள்ளிக்கூத்து. (பத்துப)

வாடிக்கை—வழக்கம (வழக்.)

வாடி—1 அடைப்புள்ளவிடம். (வழக்.) 2. தொட்டால்வாடி. (வைத்தியபரி.) 3. வினையெச்சம். மதில் முதலியவற்றிற்குங்கூறுவர்.

வாடுகி—வெள்ளரி. (வைத்தியபரி.)

வாடுதல்—வாடல்.

வாடுன்—உபபுக்கண்டம். (பத்துப்பாட்.)

வாடை—1. இடைச்சேரி. 2. ஓர் மருந்து. 3. வடகாற்று. 4. வாசனை. (வழக்.)5. வீதி. (சூ. நிக. கக: டகரவெ. கக.) (1, 2 3-பிங்கல. உ0கூச)

வாடைப்பாசறை — ஓர் துறை. இது: பாசறையிடத்துவீரர் நடுக்கமுறவந்த வாடைக்காற்றின் மிகுதிசொல்லியது. (புறப். பொ.)

வாண்டியம் பேராமுட்டி. (வைத்தியபரி)

வாண்மங்கலம்–ஓர் துறை. இது: அரசன் வாளேப்புகழ்ந்தது. (புறப். பொ.)

வாண்மண்ணுநிலை — ஓர் துறை. இது: தீர்த்தத்திலேலே மஞ்சனமாட்டிய வாள்வீரஞ் சொல்லியது. (புறப. பொ.)

வாண்மீன்—ஓர் மீன். (வழக்.)

வாணகநீதி — 1. அரசமரம். (வைத்தியபரி.) 2 ஓர் கந்தகம்.

வாணம் —1. அம்பிற்குப்பெயர்கூறுவர். 2. மத்தாப்பு முதலிய வாணம். (வழக்.)

வாணன்—1. ஓரசுரன். (உ-ம்.) "வாணனரழல் சூழெயில்மாணுமே" (நைடத.நகரப்.கூச) 2. கார்த்திகை. (பிங்கல. உசக.) 3. வாழ்நன் எனவும் பிரித்துரைப்பர். அம்பலவாணன் என்று வழங்குதலறிக.

வாணகம்—அம்பு முதலியவற்றிற்குப் பெயர் கூறுவர். (உ-ம்) வரிற்கொள்க.

வாணக்கம்பு—நிலம்பக்கோல். (வழக்.)

வாணட்கொள்—ஓர் துறை. இது: பகைவர் அரணினைக்கோடலேநினைந்து வாளேப்புற வீடுவிட்டது. (புறப். பொ.)

வாணி—1. அசமதாகம். 2. அம்பு. 3. இந்துப்பு. 4. ஓர்கூத்து. 5. சரஸ்வதி. 6. சொல். 7. மஞ்சிலை. (1, 3-வைத்தியபரி.) (2, 4, 5, 6-பிங்கல. சஅநி0.)

வாணிகச்சம் — வறட்சுண்டி. (வைத்தியபரி.)

வாணிகம்—இலாபம். (வழக்.)

வாணிகவாகை ஓர் துறை. இது வணிகனுடைய ஆறுசெய்தியுமுயர்த்திச் சொல்லியது. (புறப-மாலை.)

வாணிகவெள்ளி ஓர் துறை. இது: பொருளிற் பற்றிலனுபபிறர்மிடியை நீக்கல் கடனுகச்சொல்லியது. (புறப்-மாலை)

வாணிகன்—1. செட்டி. (சூ. நிக. ககஃ டகரவெ. உஉ.) 2. துலாராசி. (சூ. நிக. கஃ சுடு.)

வாணிகேள்வன்–பிரமன். (சூ.நிக.கஃகசு)

வாணிச்சி செட்டிப்பெண். (வழக்.)

வாணிதம்—கள். (வைத்தியபரிபா.)

வாணிபம்—வாணிகம். (வழக்.)

வாணிபர்—வாணிபஞ்செய்வோர். (வழக்)

வாணியன்—1. சூத்திரன் வைசியபபெண்ணைப்புணரப் பிறந்தவன். (அபிதாநசிந்.) 2. பிரமனுமாம்.

வாணிலை–ஓர் துறை. இது: பகைவர்மேற் செலவிரும்பிவாளேந ன்னுளரிலே புறவீடு விட்டது.

வாணினி—1. கூத்தி. 2. விவேகமுள்ளவள்

வாணுள்—உயிர். (சிந்தா.)

வாத்தியம்—கஞ்சக்கருவி முதலிய வாத்தியங்கள். (வழக்.)

வாத்தியான்—உபாத்தியாயன். (வழக்.)

வாத்து—1 ஓர் பறவை. (வழக்) 2. வாஸ்துபுருஷன். (தைலவ.) 3. வாத்து தேவதைகள். இவர்கள் அநேராகஅபிதாநசிந்தாமணியிற்கூறுவர்.

வாத்துசாந்தி–வாத்து புருஷனுக்குச்செய்யுஞ்சாந்தி (வழக்)

வாத்துபோதம்–சிற்பநூல் முப்பத்திரண்டினுன்று. (பொருட். நிக.)

வாத்துமன்—வாஸ்து புருடன். (வழக்.)

வாதக்கடல்—நவட்சாரம். (வைத்தியபரி)
வாதகாப்பான் — ஓர் நோய். (வழக்.)
வாதகாசம்—ஓர் காச நோய். (வைத்தியபரி.)
வாதகி—சத்திசாரம்.
வாதகிராணி—ஓர் கிராணி. (வழக்.)
வாதகுன்மம்—ஓர் நோய். (வழக்.)
வாதங்கினி—ஓர் மரம்.
வாதசகன்—அக்கினி.
வாதசிரோமணி—நவட்சாரம். (வைத்தியபரி.)
வாதசுரம்—வாதத்தால்வந்தசுரம். (வழக்.)
வாதசூலை—ஓர் சூலைநோய். (பொருட்-நிக.)
வாதசோணிதம்—ஓர் நோய்.
வாதநாசனம்—ஆமணக்கு. (தைலவ.)
வாதநாடி — வாதத்தினியல்பைக்காட்டும் ஓர் நரம்பு. (சுறுநாடியிலறிக.)
வாதநிகண்டு—இரசவாதநிகண்டு. (வைத்தியபரி.)
வாதப்பிரமி—மான். (வைத்தியபரி.)
வாதபித்தசூலை—அறுவகைச்சூலையிலொன்று. (பொருட்-நிக.)
வாதபேதம்—பலாசு. (வைத்தியபரி.)
வாதம்— 1. இரும்புமுதலியலோகங்களைப் பொன்னுக்கும்வித்தை. 2. காற்று. 3. தருக்கம். 4. மூவகைப்பிணியிலொன்று. 5. வில்வம். (2, 3-சூ. நிக. கக: தகரவெ. ச.) (4-பொருட்-நிக.) (5-வைத்தியபரி.)
வாதமடக்கி—1. ஓர் மரம். 2. தழுதாழை. 3. நந்தக்காரி. 4. மூடக்கொத்தான். (1, 2, 3, 4-வைத்தியபரி.)
வாதமண்டலி — சுழற்காற்று. மண்டலித்தல்-வட்டமாதல். வாதம்-காற்று.
வாதமயவுப்பு—கறியுப்பு (வைத்தியபரி.)
வாதமிருகம்—கலைமான், காற்றுக்கு வாகனமாகிய மான்.
வாதராக்காஞ்சி—வாதராயணமரம். (வைத்தியபரி.)
வாதராங்கம்—அரசு. (வைத்தியபரி)
வாதராம்—அதிமதுரம். (வைத்தியபரி.)
வாதராவி—சரீரக்கொழுப்பு. (வைத்தியபரி.)
வாதராசன்—நவச்சாரம். (வைத்தியபரி.)
வாதராட்சதன்—ஓர் மரம். (வழக்.)
வாதராயணம் — ஓர் மரம். அது: வாதரக்காச்சி.
வாதராயணன்—வியாசமுனி. (காஞ்சிப். சார்ந்தாசயப். க0.)
வாதலம்—அதிமதுரம். (வைத்தியபரி.)
வாதவைரி—ஆமணக்கு. (மலையக.)

வாதனம் — வாசனம், வத்திரம். (பிங்கல. கஉஎசு.) ஒலிக்கும் வருத்தத்திற்குங்கூறுவர்.
வாதனை—1. தடை. 2. வருத்தம். (வழக்.)
வாதாட்டம்— } வழக்காடல். (வழக்.)
வாதாடல்— }
வாதாட்டுதல்— தருக்கத்திற்குட்படுத்தல். (வழக்.)
வாதாயம்—பச்சிலை. (வைத்தியபரி)
வாதாயனம்—பலகணி. (சூ. நிக. நி: நிசை.)
வாதார்ி—ஆமணக்கு. (வைத்தியபரி.)
வாதாலம் — ஒரு மீன். (வழக்குண்டுபோலும்.)
வாதாவி—ஓரசுரன். (அபிதாநசி.)
வாதி— 1. எதுவும் மேற்கோளுமெடுத்துக் காட்டிப் பிறன்கோளமறுத்துத் தன்மத நிறுத்தப் பாடுபவன். (சூ. நிக. கஉ: உஉ.) 2. கெங்குயுரி பாஷாணம். (வைத்தியபரி.) 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. வாதஞ்செய்பவன்.
வாதிக்குதல்—1. வாதித்தல். 2. வருத்தப்படுதல். (1, 2-வழக்.)
வாதிகம்—சோம்பு. (வைத்தியபரி.)
வாதிகாரம்—வெடிகாரம். (வைத்தியபரி.)
வாதிங்கனம்—சோம்பு. (வைத்தியபரி.)
வாதித்தல் — 1. தர்க்கித்தல். 2. வருத்தப்படுத்துதல். (வழக்.)
வாதிப்பு—வாதித்தல். (வழக்.)
வாதிராசன்—நவச்சாரம். (வைத்தியபரி.)
வாதிரு—காற்று.
வாதிவம்—வஞ்சி. (வைத்தியபரி.)
வாது — 1. சண்டை. 2. தர்க்கம். (1, 2-வழக்)
வாதுமை—ஓர் மரம். (வைத்தியபரி.)
வாதுலி—வெளவால்.
வாதுவர்—1. குதிரைப்பாகர். 2. யானைப்பாகர். (1, 2-சூ. நிக. கக: தகரவெ. உசு.)
வாதுளம் — சிவாகமம் இருபத்தெட்டிலொன்று. (பொருட்-நிக.)
வாதூகம்—சோம்பு. (மலையக.)
வாதூலம்—சுழல்காற்று.
வாதை—1. துன்பம். (வழக்.) 2. வேதனை நோய். (பிங்கல. கசுoசு.)
வாதோரணமஞ்சரி—ஓர் பிரபந்தம். இது: கொலைபுரியானையை யடக்கி வசப்படுத்தினவர்க்கும், எதிருறுகளிற்றை வெட்டியடக்கினவர்க்கும், அதனைப் பற்றிப்பிடித்துச் சேர்த்தவர்க்கும், உள்ளவீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவாற்றொடுத்துப் பாடுவதென்பர். (பொருட்-நிக.)
வாந்தம்—வாந்தி. (வழக்.)

வாந்தி—சத்திபண்ணல். (வழக்.)
வாந்திகோதனி—கருஞ்சீரகம். (வைத்தியபரி.)
வாந்திந்தல்—சத்தித்தல். (வழக்.)
வாந்தியம் — 1. தான்றி. 2. வாலுளுவை. (1, 2-மலையக.)
வாப்பியம்—கோஷ்டம். (வைத்தியபரி.)
வாபம்-1. சௌஞ்செய்தல். 2. நெய்குதல்.
வாபீசம்—சாதகப்புள்.
வாம்பல்—மூங்கில். (மலையக.)
வாமசுக்கிலம்—பொன்னுவிரை. (வைத்தியபரி.)
வாமதந்திரம்—வாமசமயநூல். (வழக்.)
வாமதேவன்-1. ஓர் முனிவன். (காஞ்சிப். புராணவரலா. சு.) 2. சிவன். (சூ. நிக. க: க.)
வாமபுரகோபம்-தூத்தம்.(வைத்தியபரி.)
வாமம்—1. அழகு. 2. இடபக்கம். 3. ஒரு சமயம். (சூ. நிச. கஉ: நிஅ.) 4. ஒளி. (சூ. நிக. அ: உஉ.) 5. குறுமை. 6. சிவனேம்மூகத்தொன்று. (சூ. நிக. கஉ: சசு.) 7. தொடை. (1. 2, 5, 7-சூ. நிக. கக: மகரவெ. உ.) தீமை முதலியவற்றிற்குஉகுறவர்.
வாமரோதயவாஞ்சி—மண்ணீரல். (வைத்தியபரி.)
வாமல்—வாமலோசிகம். (மலையக.)
வாமலூரம்—புற்று.
வாமலோசிகம்—கற்றுழை. (மலையக.)
வாமவர்த்தம் — இடம்புரிச்சங்கு. (வைத்தியபரி.)
வாமன்—1. அருகன். (சூ. நிக. க: க.) 2. சிவன். (பிங்கல. கூசு.) 3. புத்தன். (மணிமே.)
வாமனம்-1. குறள். 2. தென்றிசையானை. 3, பதினெண்புராணத்தொன்று. (1, 2, 3-சூ. நிக. கக: மகரவெ. எ.)
வாமனன்— 1. குறள்வடிவுகொண்ட திருமால், தசாவதாரத்தோன்று. (பெரியபு தடுத்தாட். கo)
வாமனாசாரியர்-மேருமந்தரநீலகேசிசெய்த ஒரு ஜைநநூலாசிரியர். (அபிதாநசி.)
வாமனிதபுரம்-பூர்வத்தில் ஜைநர்வசித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது மைலாப்பூரென்பர். (அபிதாநசி.)
வாமி — 1. பார்வதி. 2. வாமசமயத்தவள். வாமசமயத்தவன். (வழக்.)
வாமை-உமாதேவியின் அட்டமூர்த்தங்களி ளொன்று (சிவபூசைக்கலித்துறையிற் காண்க.
வாய் — 1. இடம். 2. ஊதுகுழல். 3. ஐம்பொறியிலொன்று. (உ-ம்.) "மெய்வாய்கண் மூக்குச்செவியென" (நாலடி. துறவு. க.) 4. சொல்.(உ-ம்.) "வஞ்சியானென்பதனுல்வாய் நேர்ந்தேன்"(யாப் காரி.உ.உரை.) 5.துவாரம், வாயில். (வழக்.) 6. தெரிநிலைவினைப்பகுதி. 7. வடு. (சிந்தா.) 8. வாய்மை. (மணிமே.) 9. விளிம்பு. (சிந்தா.) (1, 2-சூ. நிக. கக: யகரவெ. கஉ.) ஏழாம்வேற்றுமையுருபுமுதலியனவுமாம்.
வாய்க்கால்—1. நீரொழுகுங்கால். (உ-ம்.) "வாய்க்காலனையார்தொடர்பு" (நாலடி. நட்பாராய். அ.) 2. மகநட்சத்திரம்.(சூ. நிக. க: எக.)
வாய்க்கிரந்தி—ஓர் நோய். (வழக்.)
வாய்க்கிருது — அசங்கதவார்த்தை. வாய்சொல். (வழக்.)
வாய்ச்சி — மரஞ்செதுக்கும் ஓர் ஆயுதம். தச்சர் குழூஉக்குறி.
வாய்த்த —1. தப்பாத. 2. வாய்ந்த. (1, 2-சிந்தா.)
வாய்த்தல் — 1. கிடைத்தல். (சூ. நிக. க: சுசு.) 2. சிறத்தல். (வழக்.) 3. பொருந்தல். (கன்னூல். பொதுப்பா. சுஎ.) 4. மாட்சிமை. (பிங்கல. நஎசுஉ.)
வாய்த்தீன்று—வாய்த்தது. (பரிபாடல்.)
வாய்தல்—வாய்தல். (உ-ம்.) "வந்தபின்மனை வியாரும்வாய்தலினின்றுவாங்கி" (பெரியபு. இளையான்குடி. சுக.)
வாய்ப்ப-பொருந்த.(நன்னூ.பாயிரம்.சுஎ.)
வாய்ப்பது—தப்பாதது. (ஐங்குறுநூ.)
வாய்ப்பாடம்—ஏடுபாராமற்சொல்லும் பாடம். (வழக்.)
வாய்ப்பியர்—அகத்தியர் மாணாக்கர். (அபிதாநசி.)
வாய்ப்பு—1. நயம். 2. வாய்த்தல். (1, 2-வழக்.)
வாய்ப்புண் — வாய்க்கிரந்தியாகியவோர் நோய். (வழக்.)
வாய்ப்புள்—நன்னிமித்தம். (சூ. நிக. கo: கக.) நற்சொலென்பர் முல்லைப்பாட்டில்.
வாய்பாடு — சிலசொற்கள்தன்வகைப்படநிற்பது. (நன்னூ. விருத். பதவிய. கo. உரை.)
வாய்பிதற்றல்—வாய்குளறுதல். (வழக்.)
வாய்பூசல்—] வாய்சுத்திசெய்தல்.
வாய்பூசுதல்—] (உ-ம்.) "நீருண்டார் நீரால்வாய்பூசுப" (நான்மணிக்கடிகை. ஈடு.)
வாய்மட்டம்—வாய்வீளையம். (வழக்.)
வாய்மை—1. மெய்மை. (வள். ஈoக.) 2. வாக்கு. (திருவிளை. வெள்ளையானை. உ.)
வாய்மைநான்கு-தக்கம், தக்கநிவாரணம், தக்கோற்பத்தி, தக்கநிவாரணமார்க்கம்.(மணிமே.) ஜைநவழக்கு.

வாய்மொழி—வேதம். (பரிபாடல்.)
வாய்வது — 1. உண்மை. 2. கிடைப்பது. (1-பத்துப்பாட்.) (2. தணிகை. நாட் சரு.)
வாய்வளையம்—வாய்மட்டம். (வழக்.)
வாய்விலங்கம்— } ஓர் மருந்து. (வைத்
வாய்விளங்கம்— } தியபரி.)
வாய்வெருவுதல்—அயர்ச்சியால்வாய்குள றுதல். (இராமா. ஆரணிய. அகத்திய. கு.)
வாயகம் —கூட்டம்.
வாயசம்—காக்கை. (சூ. நிக. ங: சுo.)
வாயசி — செம்மணத்தக்காளி. (வைத்திய பரி.)
வாயடை—உணவு. (பரிபாடல்.)
வாயல்—வாசல். (வழக்.)
வாயலது — புள்ளின்வாயலகு. (பிங்கல. உசுஎ.)
வாயவி—வடமேற்றிசையென்பர்.
வாயவியம் — எழுவகைகானத்தொன்று. அது: பசுநடையினெழுதூளியிற் படிதலாம்.
வாயவீயம்—வாயுசம்பந்தமாயது. (தர்க்காமிர்தம்.)
வாயாடி—வாய்ப்பேச்சில்வல்லபன். (வழக்.)
வாயாளர்—நேர்ந்திலள். (பரிபாடல்.)
வாயில்—1. ஐம்பொறி. 2. கதவு. (சிலப்.) 3. காரணம். 4. திறம். 5. துவாரம். 6. தூது. (அகப்பொருள். விளக். கரு.) 7. பரிகாரம். (ஞானமிர்தம்.) 8. வழி. (சிந்தா.) (1, 2, 3, 4-பிங்கல. சoடுஉ.) (1,5-சூ.நிக.க:லகரவெ.கஎ.)
வாயில்வேண்டல் — அகப்பொருட்டுறையினொன்று. (அகப்பொருள்விளக். அகத்திணை. கரு.)
வாயிலாளர்—வாயில்காபபோர். (சூ. நிக. உ: நிரு.)
வாயில்களாறு—மெய், வாய், கண், மூக்குச்செவி யென்னு மிந்திரியமைந்தும், மன மொன்றுமாம். (மணிமே.) வாயில்களொன்பது அவை. நவதுவாரம். விநாயகாகவலிற்பார்.
வாயிலோர்—1. தமிழ்க்கூத்தர். (சூ. நிக. உ: ஈஅ.) 2. தூதுவர். வாயில்-தூது. 3. வாயில் காப்போர். (வழக்.)
வாயினிலை—ஓர் துறை. இது: அரசனுக்கு என்வர வினைச்சொல்லென வாயிற்காவலனுக்குச்சொல்லியது. (புறப்பொ.)
வாயிற்காட்சி — காட்சிபேதத் தொன்று. அது: இந்திரியக்காட்சி. (சி. சி. சுபக்கம். சூ. உரை.)
வாயு—காற்று. (பிங்கல. உசு.)
வாயுக்குத்து—ஓர் நோய் (வழக்.)
வாயுகோணம்—வடமேற்குமூலை. (வழக்.)
வாயுச்சகன்—அக்கினி, வாயுவைச்சகாயமாயுள்ளவன். மருச்சகன் என்பதுபோலக் கொள்க.
வாயுசூலை—ஓர் சூலை, வாதசூலை. (பொருட். நிக.)
வாயுத்தம்பம்— } அறுபத்துநான்கு கலை
வாயுத்தம்பனம்— } ஞானத் தொன்று. (பொருட். நிக.)
வாயுதாரு—மூங்கில். (உ - ம்.) வரிற் கொள்க.
வாயுபுத்திரன் — 1. அநுமன். (இராமா. கிட்கிந்தா. அனுமப்படல. கஎ.) 2. வீமன். (சூ. நிக. உ: கசு.)
வாயுமூலை—வடமேற்கு. (வழக்.)
வாயுவாகம்—புகை.
வாயுவின்கூறு—பரிசம்உணர்தல் முதலியன. (தர்க்கசங்கிர. கஉ.)
வாயுவு—வாயு. (வழக்.)
வாயுறை—பசுமுதலியவற்றிற்குக் கொடுக்குந்தீனி. (உ-ம்.) "யாவர்க்குமாம் பசுவிற்கொருவாயுறை" (திருமந்திர. இரந்தார்க். உ.)
வாயுறைவாழ்த்து—ஓர் பிரபந்தம். (பொருட். நிக.) இது: முன்னர்த் தாங்கக்கூடாத இழித்துரையாயினும் பின்னர்ப்பெரிதும்பயன் பயக்குமென வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகக்கூறுவது. இதனைப்புறப் பொருள்வெண்பா மாலையிலே ஓர் துறையாகக் கூறுவர்.
வாயுறைவாழ்த்துமருட்பா—மருட்பாகான் கினொன்று. யாப். காரி. செய்யுளிய. கரு. சூத்திர. உரையிலறிக.
வாயூறல்— } 1. அபேகஷித்தல். (உ-ம்.)
வாயூறுதல்— } 'தேனூறுகிளவிக்குவாயூறி நின்றவன் செங்கீரையாடியருளே' (முத்துக்குமாரசுவாமிபிள்ளைத். செங்கீரைப். கு.) 2. வாய்நீரூறுதலுமாம். (வழக்.)
வார்—1. கச்சு. 2. கடைகயிறு. (சிந்தா.) 3. தெரிநிலை வினைப்பகுதி. 4. தோல்வார். (வழக்.) 5. நீர். 6. நீளம். 7. நேர்மை. (1, 5, 6, 7-சூ. நிக. கக: ரகரவெ. கரு.)
வார்க்கதல் — 1. உலோக முதலியவற்றையுருக்கிவிட்டு உருவங்களாக வகுத்தல். (வழக்.) 2. வார்த்தல். (நன்னூ. பாயிர. ஈஅச. உரை.)
வார்க்கோலபுரம்—தோயமாபுரம். (பாரத. நிவாதகவசகால. உரு.)
வார்கொண்டமுலேயம்மை—மேலைத்திருக்காட்டுப்பள்ளியிலிருக்குந்தேவியார் பெயர். (அபிதானகோ.)

வார்சியாயநீயம் — உபநிடத முப்பத்தி ரண்டினொன்று. (பொருட். நிக.)

வார்த்தசாகி—கற்றுழை. (வைத்தியபரி.)

வார்த்தல்—வார்க்குதல். (வழக்.)

வார்த்தாகி—சிறுவழுதலை. (மலையக.)

வார்த்தாபம்—கத்தரி. (மலையக.)

வார்த்திகம்—1. கிழத்தன்மை. (வழக்.) 2. தாளதசபரிமாணம்பத்திலேமார்க்கப்பிரமாண மாறிலொன்று. 3. பொழிப்புரை. சிவஞான போதச்சிறப்புப்பாயிரவுரையிற்காண்க.

வார்த்திகன்—கிழவன். (வழக்.)

வார்த்தை—வசனம். (சூ. நிக. கo: ரு.)

வார்தல்-1. இசைக்கரணமெட்டிலொன்று. (திருவிளை. இசைவாது. ரூஎ.) 2. ஒழுகல். (ஐங்குறுநூ.) 3. நீளல். (சூ. நிக. அ: கரு.) 4. வாருதல். (வழக்.)

வார்ந்த—நேரிதாகிய. (பத்துப்பாட்.)

வார்ப்பு — வார்த்தல். பு-தொழிற்பெயர் விகுதி.

வார்பு—வார்தால். (புறநா.)

வார்வை-தொத்துளிப்பாய்.(பத்துப்பாட்.)

வாரஇராக்துளிகன் — ஞாயிறு (ககவ), திங்கள் (எஇ), செவ்வாய் (ரூஞ), புதன் (உசுவ), வியாழன் (உஉஇ), வெள்ளி (கஅஞ), சனி (கடு) நாழிகைவரையிலுமாம். (வருஷாதி நூல்.)

வாரஇராதுகாலங்கள்—ஞாயிறு (உசுவ), திங்கள் (ரூஞ), செவ்வாய் (உஉஇ), புதன் (கடு), வியாழன் (கஅஞ), வெள்ளி (ககவ), சனி (எஇ), நாழிகைக்குமேல் (ரூஞ) நாழிகை வரையும். (வருஷாதிநூல்.)

வாரக சியம்—கொட்டைக்கிழங்கு. (வைத்தியபரி.)

வாரகம்-1. குதிரை. 2. நிலப்பனை. (வைத்தியபரி.)

வாரகி—கடல். (உ-ம்.) வரிற்கொள்க.

வாரகிருமி—அட்டை. (வைத்தியபரி.)

வாரகீரம்—சீப்பு முதலியவற்றிற்குக்கூறுவர்.

வாரங்கம்—1. ஆயுதப்பிடி. 2. புட்பொது.

வாரசூநீயம்—ஞாயிற்றுக்கிழமையில் அதுஷம், கேட்டை, மகம், விசாகம், பரணி, மிருகசிரமும், திங்கள்கிழமையில்பூராடம், அதுஷம், மகம், பூரட்டாதி, கார்த்திகை, விசாகமும், செவ்வாய்க்கிழமையில் அவிட்டம், சதயம், திருவோணம், கேட்டை, திருவாதிரையும், புதன்கிழமையில் மூலம், திருவோணம், கார்த்திகை, அவிட்டம், அசுவினி, பரணியும், வியாழக்கிழமையில் மிருகசிரம், பூராடம், இரேவதி, புனர்பூசம், பூசமும், வெள்ளிக்கிழமையில் விசாகம், ரோகணி, அவிட்டம், மிருகசிரம், அஸ்தம், அதுஷமும், சனிக்கிழமையில் அஸ்தம், பூசம், புனர்பூசம், உத்திரம், இரேவதியும் வருவனவாம். (வருஷாதிநூல்.)

வாரசூலத்தின்பரிகாரம்—வடக்கு பால், கிழக்கு தயிர், தெற்கு தயிலம், மேற்கு வெல்லம் இவைகளையுண்டேனுங் கொண்டேனுஞ் செல்லவேண்டும். (அபிதாநசிந்.)

வாரசூலம்—திங்கள் சனி கிழக்கு, செவ்வாய் புதன் வடக்கு, வெள்ளி ஞாயிறு மேற்கு, வியாழன் தெற்கு சூலங்களாம். (அபிதாநசிந்.)

வார்டம்—வயல்.

வாரடி—பலகறை. (வைத்தியபரி.) நிகண்டில் வராடியென்பர்.

வாரணபுசை—வாழை. (வைத்தியபரி.)

வாரணம்—1. கடல். 2. கவசம். 3. கோழி. 4. சங்கு. 5. தடுத்தல். 6. யானை. (1, 2, 4, 5-சூ. நிக. கக: ரகரவெ. உரு.) (3, 6-மணிமே.)

வாரணவல்லபை-வாழை. (வைத்தியபரி)

வாரணவாசி—காசி. (திருவிளை. மூர்த்தி. உ.)

வாரணாசி—காசி. (சூ. நிக. கு: சக.) இது: வாரணை அசி யென்னுமிரண்டு நதிகள்கூடுவதால் இப்பெயர் பெற்றது. வாரணை என்பதை வாரணையென்றுங்கூறுவர்.

வாரணாவதம்—துரியோதனன் பாண்டவர்களையிருத்திக் கொல்லுமாறு அரக்குமாளிகையமைத்தவிடம்.(அபிதாநசிந்.) பிரயாகையென்றுங்கூறுவர்.

வாரணை—தடுத்தல். (பிங்கல. உகசுஅ.)

வாரத்தண்டு—கறிமுள்ளி.(வைத்தியபரி.)

வாரபகற்துளிகன் — ஞாயிறு. (உசுவ.) திங்கள். (உஉஇ) செவ்வாய். (கஅஞ) புதன். (கடு) விழாம். (ககஇ) வெள்ளி. (எஇ) சனி. (ரூஞ) நாழிகைக்குமேல் குளிகைகாலம். (அபிதாநசிந்.)

வாரபுசை—வாழை. (வைத்தியபரி.)

வாரம் — 1. அன்பு. 2. இயக்கநான்கனுளொன்று. (சிலப்.) 3. ஏழுகிழமை. இவை: ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி யெனப்படுவனவாம். (அபிதாநசிந்.) 4. கடல். 5. சுரிதகம். (யாப். காரி. செய்யுளிய. கo. உரை.) 6. சொல்லொழுக்கமும் இசையொழுக்குமுடைய பாடல். (சிலப்.) 7. நீர்க்கரை. 8. பங்கு. 9. பக்ஷபாதம்.(சிந்தா.) 10. மலைச்சாரல். (1, 4, 7, 8, 10-பிங்கல. சoநிகி.) சிலப்பதிகாரத்தில், தெய்வப்பாடலென்பர். இன்னும் பலபொருள் கூறுவர்.

வாரம்படல்—பகூபாதமுறல். (சிந்தா.)

வாரல் — 1. அள்ளுதல். 2. ஓலைமுதலிய வாருதல். 3. கவரல். (பிங்கல. கடி00.) 4. மயிர்கோதுதல். 5. வாரற்க. எதிர்மறைவியங் கோள். 6. வாராதே. (ஐங்குறுநூ.) (1, 2, 4-வழக்.)

வாரவிசேஷம் — ஞாயிறு உத்தியோகஞ் செய்ய, திங்கள் விதைவிதைக்க, செவ்வாய் போர்செய்ய, புதன் வித்தியாரம்பஞ்செய்ய, வியாழன் வாதஞ்செய்ய, வெள்ளி மயிர்கழிக்க, சனி தவஞ்செய்ய வுத்தமம். (அபிதாநசிந்.)

வாராக்கதி — மீளாதகதி, அது: மூத்தி. (சிந்தா.)

வாரிக்கம்–ஒரு வடநூல். அது: கணிதநூல் வகைகளிலொன்று. (மணிமே.)

வாராகி–1. ஓர் கிழங்கு. 2. சத்தமாதர்களி லொருத்தி. 3. பெண்பன்றி.

வாராமைக்கழிதல் — ஓர் துறை. இது: நிமித்தம் வேறுபடத் தலைவன் வாராதொழிய அதற்குத் தலைவி வருந்தியது. (புறப்பொ.)

வாரானை—வருகை. ஆனை-தொழிற்பெயர் விகுதி. (நன்னூ. பதவியல். கசூ. உரை.)

வாராவத்தி—கட்டாயமாய்வந்தது. (வழக்.)

வாராவரத்து—அநீதமாய்வருதல். (வழக்.)

வாரி—1. இசைக்குழல். (பிங்கல. கசஉஅ.) 2. கடல். 3. கதவு. 4. சிப்பு. 5. செண்டுவெளி. 6. நீர். 7. நீளமானகோல். 8. பகுதி. 9. மதில். 10. மதிற்சுற்று. 11. யானையைப்படிக்குமிடம். (பத்துப்பாட்.) 12. வருவாய். 13. வழி. 14. வாயில். (சூ. நிக. நி: நிசூ.) 15. விளைவு. (புற நா.) 16. வினையெச்சம். 17. வெள்ளம். (2, 3, 6, 8, 9, 10, 12, 13, 15, 17-பிங்கல. சoநிசூ.) (7-வழக்.)

வாரிகிருமி—அட்டை. (வைத்தியபரி.)

வாரிசம்—1. உப்பு. 2. சங்கு. 3. தாமரை. (1, 2, 3-வைத்தியபரி.)

வாரிசரம்—மீன். (வைத்தியபரி.)

வாரிசாதம்—தாமரை. (வைத்தியபரி.)

வாரிசாமரம்—நீர்ப்பாசி. (வைத்தியபரி.)

வாரித்தல்—தடுத்தல். சூ. நிக. கக: உசூ.)

வாரித்திராம்-1.ஓலைக்குடை. 2.சாதகப்புள்.

வாரிதம்—மேகம்.

வாரிதி—கடல். (பிங்கல. நிஅசு.)

வாரிதித்தண்டு—பவளம். (வைத்தியபரி.)

வாரிதிநாதம்—சங்கு.

வாரிதிவிந்து–கடல்துரை. (வைத்தியபரி.)

வாரிநாதன்—வருணன். வாரி-கடல்.

வாரிப்பிரசாதம்–தேற்றுமரம். (வைத்தியபரி.)

வாரிபரிணி–வள்ளைக்கீரை. (வைத்தியபரி.)

வாரிரசிதம்-வெள்ளிமணல் (வைத்தியபரி)

வாரிரதம்—தெப்பம். வார்-நீர்.

வாரிருகம்—தாமரை. (வைத்தியபரி.)

வாரிவாகம்—மேகம். வாகம்-வாகனம்.

வாரிசம்—1. கடல். 2. தாமரை. (1, 2-வைத்தியபரி.)

வாருகம்—1. ஆற்றுத்தும்மட்டி. 2. வெள்ளரிசி. (1, 2-வைத்தியபரி.)

வாருகோல்—துடைப்பம். (உ-ம்.) "வங்காளமேறினும் வாருகோலொருகாசு மட்டன்றியதிகமாமோ" (குமரேசசதகம்.)

வாருணீடம்–எண்காற்புள். (சூ நிக.கூ:நிகூ.)

வாருணம்—1. அட்டாதசோபபுராணத்தொன்று. (பிங்கல. சூசநி.) 2. கடல். 3. மாவிலங்கு. (வைத்தியபரி.) 4. மேற்கு. (2, 4-பிங்கல. சoநிஎ.)

வாருணி—1. அகத்தியன். வருணன் வீரியத்துக்குபிறந்ததனாலிப்பெயர் வந்ததென்பர். (அபிதாநசி.) 2. ஆட்டாங்கொடி. (தைலவ.) 3. கள். (பிங்கல. கசசூ.) 4. சதயநாள். வருணசம்பந்தமுடையதனாலிப்பெயராயினது. 5.வருணன் குமாரி. (அபிதானசிந்.)

வாருதல்–1. கொள்ளல். (சூ. நிக. சு: கூக.) 2. மயிர்கோதுதல். (வழக்.) 3. யாழ்நரம்புகளைக் கூடத்தழுவல். (பத்துப்பாட்.)

வாருதி—நவச்சாரம்.

வாருவகை—தண்ணீர். (வைத்தியபரி.)

வாரொளை—வாவென. (பரிபாடல்.)

வாரை — 1. ஆவரை. (வைத்தியபரி.) 2. காத்தண்டி. இது: சுமைதடியென்க. (வழக்.)

வால்—1. இளமை. (சிலப்.) 2. சுத்தம். 3. தோகை. 4. பெருமை. 5. மிகுதி. 6. வெண்மை. (1, 2, 3, 4-பிங்கல. சoநிஅ.) 5, 6- சூ. நிக. கக: வகரவெ. கக.)

வால்வெள்ளி—ஓர் நட்சத்திரம். (வழக்.)

வாலகிருமி—பேன். (வைத்தியபரி.)

வாலகில்லர்—
வாலகில்லியர்–பிரமன் மானசபுத்திரனாகிய கிருது என்பவனுக்குப்பிறந்தவர், தாய் கிரியை, இவர்கள் அறுபதினாயிரவர் அங்குஷ்ட அளவினதாகிய தேகத்தைப்பெற்றவர், மகா தவசிரேட்டர், இவர்கள் நாள்தோறுஞ் சூரியரதத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டிருப்பர், இந்திரனைக் கருடனுலவமானப்படும்படி சாபமிட்டவர், இவர்கள் பிரமன் உரோமங்களில் பிறந்தவர்என்றுகூறுவர். (அபிதாநசிந்.) இராமா. ஆரணிய. அகத்தியப்படலத்தில். "பண்டையவயன்றருபாலகில்லரும்" என்றார்.

வாலசிகிச்சை—ஓர் நூல். (சிந்தா.)
வாலதி—விலங்கின்வால். (சூ. நிக. ரு: சஉ.)
வாலபத்திரம்—கருங்காலி. (மலையக.)
வாலபுட்டி—முல்லை. (மலையக.)
வாலம்–1. கந்தைத்துணி. (வழக்.) 2. வால். அம்-சாரியை.
வாலமாலம்—அரிதாரம். (வைத்தியபரி.)
வாலரசம்—சாதிலிங்கத்தில்வடித்த ரசம். (வைத்தியபரி.)
வாலரியுரி—கிளியூறற்பட்டை. (தைலவ.)
வாலவம் — பாலவம். இது புலிக்கரணம். (ஜ்யோதிநூல். நிக. பக்.)
வாலன்—வாலப்பருவன். (வழக்.)
வாலவாயம்–வைரியம். (பிங்கல கஉகக.)
வாலாம்பிகை — திருநெய்த்தானத்திருக்குந் தேவியார் பெயர். (அபிதாநகோ.)
வாலாமை—1. ஆசௌசம். இது: சுத்தமின்மையாம். வால்—தூய்மை. (சிலப்.) 2. மகளிர்சூதகம். (சூ. நிக. அ: எக.)
வாலான்—ஓர் நெல். (வழக்.)
வாலி—1. அலாயுதன். 2. கரிக்குருவி. 3. கிட்கிந்தை மன்னன். 4. குதிரைவாலி. (1, 3-சூ. நிக கக: லகரவெ. உங.) (2, 4-வைத்தியபரி.)
வாலிகை—மணல்.
வாலிதன்று—நன்றன்று. (சிந்தா.)
வாலிசர்—வாலீசர்.
வாலிது–தூயது. (உ-ம்.) "வாலிதாம்பக்கம் இருந்தைக்கிருந்தன்று" (நாலடி. அறிவின்மை. அ)
வாலிபம்—பாலியம். (வழக்.)
வாலிபன் — இளமைப்பருவமுடையவன். (வழக்.)
வாலிய—வெள்ளிய. (ஐங்குறுநூ.)
வாலியம்—பாலியம்.
வாலியோன்—பலராமன். (புறநா.)
வாலீசர்—வாலிபர். (உ-ம்.) "பாலரொடு வாலீசர்" (சி. சி. சு-பக். ச.)
வாலீசுவரர்—குரங்கணின் முட்டத்திலேயிருக்குஞ் சுவாமிபெயர். (அபிதாநகோ.)
வாலு—வாலுளுவையரிசி. (வைத்தியபரி.)
வாலுகப்பிரபை-எழ்நரகவட்டத்தொன்று சுடுமணல்வட்டம் (சூ. நிக. கஉ: எஉ.)
வாலுகம்—1. மணல். (வைத்தியபரி.) 2. வெண்மணல். (பிங்கல. நிகிஉ.)
வாலுகை—வாலுளுவை. (வைத்தியபரி.)
வாலுங்கி—1. கக்கரி. (பிங்கல. உகஙக.) 2. வாலுளுவையரிசி. (வைத்தியபரி.)
வாலுறை—அடுப்பு. (வைத்தியபரி.)
வாலுவர்—மடையர். (பிங்கல. அஉக.)
வாலுளுவை—ஓர் மருந்து. (வழக்.)
வாலூகம்—நஞ்சு. (வைத்தியபரி.)
வாலேபம்—தழுதை. (பிங்கல. உசகஉ.) சூ. நிகண்டில். வாலேயமென்பர்.
வாலை — 1. இரசம். (வைத்தியபரி.) 2. இளமைப்பருவம். (வழக்.) 3. ஓர் சத்தி—வாலாம்பிகைபார். 4. திராவகம் வடிக்கும் பாத்திரம். (வைத்தியபரி.) 5. பன்னிருவயதிற் பெண். (வழக்.)
வாலைசாரம்–சத்திசாரம். (வைத்தியபரி.)
வாலோதபதிகாரம்—சீனக்காரம். (வைத்தியபரி.)
வாவயம்—துளசி. (வைத்தியபரி.)
வாவரியுரி—கிளியூறற்பட்டை. (தைலவ.)
வாவல்—1. கடத்தல். 2. வௌவால். (1, 2-சூ. நிக. கக: வகரவெ. கூ.)
வாவி–குளம். (பெரியபு. தடுத்தாட். ககூங.)
வாவுதல் — தாவுதல். (இராமா. பாலகா. அகலிகைப். ஙூ.)
வாழ்க்கை—1. ஊர். (சூ. நிக. நி: ஙூ.) 2. செல்வம். (சூ. நிக. அ: ஙூ.) 3. மருதநிலத்தூர். (சூ. நிக. நி: ச0.) 4. வாழ்தல். கை—தொழிற்பெயர் விகுதி. 5. வாழ்நாள். (பதிற்றுப்பத்.)
வாழ்க்கைத்துணை—இல்லவள். (சூ. நிக. உ: எக.)
வாழ்கென—வாழ்க. (சிந்தா.) ஈறின்று.
வாழ்ச்சி—வாழ்நாள். (பதிற்றுப்பத்.)
வாழ்த்தல்—துதித்தல். (உ-ம்.) "வாழ்த்த வாயுநினைக்க மடநெஞ்சும்" (தேவார. திருநாவுக்கர. தனித்திருத். எ.)
வாழ்த்து — 1. ஆசீர்வாதம். (காஞ்சிப். ஒழுக்கப். கஉ.) 2. ஓரலங்காரம். (தண்டி. பொருளணி. ஙூ.) 3. சோபனம் பாடுதல். (வழக்.) 4. தெரிநிலைவினைப்பகுதி. 5. மங்களாசரணைமூன்றிலொன்றுமாம். (தண்டி. பொதுவியல். எ.)
வாழ்த்துதல்—வாழ்த்தல்.
வாழ்த்துவிலக்கு — ஓரலங்காரம். அது: வாழ்த்தி தன்னிலைமைகுறித்து விலக்குவது. (தண்டி. பொருளணி. க.)
வாழ்தல்—உயிர்வாழ்தல். (வள். ககஙச.)
வாழ்நர்—வாழ்வோர். (புறநா.)
வாழ்வாட்டி—சுமங்கலி. (வழக்.)
வாழ்விழந்தாள்—அமங்கலி. (வழக்.)
வாழ்வு—சீவிதம். (சிந்தா.)
வாழகம்—குந்திருக்கம். (வைத்தியபரி.)
வாழபுளப்பி—முல்லை. (வைத்தியபரி.)

வாழவந்தநாயகி — திருவாஞ்சியத்திருக்குந் தேவிபெயர். (அபிதாகோ.)

வாழாக்கேடி - விவாக முற்றிருந்தும் வாழாமற் கேடுற்றிருப்பவள். (வழக்.)

வாழி—1. முன்னிலையசை இடைச்சொல். (சூ. நிக. சo: கசு.) 2 வாழியவென்னும் வியங்கோள் ஈறுகெட்டுவாழியெனவும் வரும். (நன்னூ. உயிரீற்றுப். கஅ.)

வாழித்தல்-
வாழிப்பு— } மதர்த்துவளர்தல். (வழக்.)

வாழிய—1. முன்னிலையசைச்சொல். (நன்னூ. இடையிய. உக.) 2. வாழ்த்துப்பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று. (நன்னூ. வினையியல். ககூ.)

வாழியர்—வாழ்க (ஐங்குறுநூ.)

வாழுதல்—வாழ்தல். (வழக்.)

வாழுமோர்—வாழ்பவர். (பதிற்றுப்பத்.)

வாழை—கதலி. (சூ. நிக. ச: கஉ.)

வாழைப்பழத்தி — எருமைநாக்கிப் பூடி. (வைத்தியபரி.)

வாள்—1. ஒளி. 2. வாளாயுதம். (1, 2-பிங்கல. சoநிக.)

வாள்கைக்கொண்டாள் — துர்க்கை. (சூ. நிக. க: சக)

வாள்வரிக்கொடுங்காய் — வளைந்த வரிகளையுடைய வெள்ளரிக்காய். (சிலப்.)

வாள்வீரம்—கூவிளமரம் (பரிபாடல்.)

வாளகம்—வெட்டிவேர். (வைத்தியபரி.)

வாளம்-1. சக்கரவாளகிரிக்கும் பெயர்கூறுவர். 2. சக்கரவாளப்புள். (இராமா. கிட்கிந்தா. பம்பை. உச.) 3. நேர்வாளம் (வைத்தியபரி.) 4. வாள். அம்-சாரியை.

வாளரம்—ஒருவகையரம். (மணிமே.)

வாளவரை—ஓரவரை. (பதார்த்தகுணசிந்எஅஉ.)

வாளா—1. சும்மா, பயனில்லாமை. (திருவிளை. இடைக்காடன் பிணக். எ.) 2. மௌனம். (சூ. நிக. கூ: நுநி.)

வாளாண்மை—1. வாளாற்செய்யும் ஆண்மை. 2. வாளையாளுந்தன்மை. (1,2-வள். சுஉச. உரை.)

வாளாமை—சும்மாயிருக்குந்தன்மை. மைவிகுதி. மௌனமாம்.

வாளி—1. அம்பு. (இராமா. உத்தரகாண்டம். இராவணன்வதை. ககுஅ.) 2. மாதர்காதணியிலொன்று. (வழக்.) 3. வட்டம். (சிந்தா.) 4. வட்டமாயோடல். (சூ. நிக. கூ: சஉ.)

வாளியம்பு—அலகம்பு. (சிந்தா.)

வாளுழவன்—வாட்படைவீரன். (திருவிளை. அங்கம்வெட், கச.)

வாளை — ஓர்மீன். (இராமா. உயுத்தகாண்டம். முதற்போர்ப். உநுசு.)

வாளைகடியன்—விடமுள்ள ஓர்கடற்பாம்பு. (வழக்குண்டுபோலும்.)

வாளேறு—வாள்வெட்டு. (சிந்தா.)

வாற்கோதுமை — ஒருவகைத் தானியம். (வழக்.)

வாற்சல்லியம்—சிநேகம். (வழக்.)

வாறு—அரியாது. (பத்துப்பாட்.)

வாறன்—கப்பலின்கயிறு. ஓர் சூழ்உக்குறி.

வான்—1. ஆகாயம். 2. இடைச்சொல். 3. ஓர் மரம். 4. பெருமை. 5. மழை. 6. மேகம். 7. வலி. (1, 2, 3, 4, 5, 6, 7-பிங்கல. சoசுஉ.)

வான்துணம்—ஒலி. (பரிபாடல்.)

வான்கொடி—வானவல்லி, மின்.

வான்கோழி—ஓர் கோழி. (உ-ம்.) "கான மயிலாடக்கண்டிருந்தவான்கோழி" என்று மூதுரையிற் கூறுவர்.

வான்பயிர் — மழைநீரைநோக்கியிருக்கும் புன்னிலப்பயிர். (வழக்.)

வான்புலம்—உண்மையறிவு. (சிந்தா.)

வான்மிளகு—ஓர் மிளகு. (வைத்தியபரி.)

வான்மீகபலம்—எலுமிச்சை. (வைத்தியபரி)

வான்மீகம்-1. குங்குமப்பூ. (வைத்தியபரி.) 2. வான்மீகியாலியற்றிய இராமாயணம். (வழக்.)

வான்மீகி — இராமாயணஞ்செய்தவோர் முனிவர். (இராமா. பாலகா. நாட்டுப்படலம். க.)

வான்மீகியார் — 1. ஒரு புலவரென்பர். இவர் பாடலொன்று புறநானூற்றிலுள்ளது. 2 மூதற்சங்கத்திருந்த ஒரு சிறந்த தமிழ்ப்புலவர். (அபிதானகோ.) இவர்செய்த நூலை நச்சினார்க்கினியர். தலையாயவோத்தென்பர்.

வான்மீன்—நட்டத்திரம். (பிங்கல. உசுக)

வானக்கல்-1. காக்கைக்கல். 2 வீடுமுதலியவற்றின் அஸ்திபாரக்கல்லென்றுகூறுவர்.

வானகம்-1. தேவலோகம். (உ-ம்) "வானகங்கையுறினும்வேண்டார்" (நாலடி. மானம். கo.) 2. மஞ்சாடி. (வைத்தியபரி.)

வானசாத்திரம்-நாள்கோள்களின்போக்குவரவுமுதலியவற்றையறியுநூல். (வழக்.)

வானட்சத்திரம்—வால்வெள்ளி. (வழக்.)

வானநாடு—1. தேவலோகம் (திருவிளை. இந்திரன்முடிமேல்வளை. ஈஅ.) 2. பொன்னுங்காணி. (வைத்தியபரி)

வானப்பிரத்தம் — 1. இலுப்பை. (வைத்தியபரி.) 2 நான்காசிரமங்களிலொன்று, அது: வனத்திற்றவஞ்செய்தல். (பொருட்டொகை.) வள். சக. உரை. 3. பலாசு. (வைத்தியபரி.)

வானப்பிரத்தன் – வனத்திற்றவஞ்செய்யு மூன்றுமாசிரமி. (அபிதாநசி.)

வானப்பிரத்தி — 1. பூவாதுகாய்க்குமரம். (வைத்தியபரி.) 2. வனத்திற்றவஞ்செய்பவள்.

வானப்பிரியை—இலுப்பைமரம். (வைத்தியபரி.)

வானபத்தி—பூவாதுகாய்க்குமரம். (வைத்தியபரி.)

வானபத்தியம்—பலாசு. (வைத்தியபரி,)

வானம் — 1. வீடுமுதலியவற்றின் அஸ்திவாரம். (வழக்.) 2. ஆகாயம். 3. உலர்மரம். 4. மரக்கனி. 5. மழைமுதலியவற்றிற்கும் பெயர் கூறுவர். (2,3,4-பிங்கல. சஙக.) (5-மணிமே.)

வானம்பாடி—சாதகப்புள். (ஐங்குறுநூ.)

வானமடை—கௌரிபாஷாணம். (வைத்தியபரி.)

வானமாதேவியாண்டான்–நாதமுனிகளை யாசிரியித்த ஸ்ரீவைஷ்ணவர். (அபிதாநசி.)

வானமாமலைஜீயர் — மணவாளமாமுனிகளாலேற்படுத்தப்பட்டவர். (அபிதாநசி.)

வானரக்கொடியோன் — அருச்சுநன். (பிங்கல. எசஙு)

வானரகதி–குதிரைக்கதியைந்திலொன்று. (சூ. நிக. கஉ: சக.)

வானரநேயம்—பழமுண்ணிப்பாலை.(மலை யக.)

வானரப்பகை—நண்டு. (வைத்தியபரி.)

வானரம்—குரங்கு. (பிங்கல. உடுஙசு.)

வானலம்—ஒருவகைத்துளசி. (வைத்தியபரி.)

வானவர்—தேவர். (பிங்கல. கஎஎ.)

வானவரம்பன்–சேரன்.(சூ. நிக. உ: கஅ.)

வானவல்லி—மின்னுக்கொடி. (சிலப்.)

வானவன் — 1. சேரன். (பிங்கல. எசடு) 2. தேவன். (இராமா. சுந்தரகா. காட்சிப் கூ)
